சங்கீதம் – முன்னுரை

பரிசுத்த வேதாகமத்தில் 19-வது நூலாக சங்கீத புஸ்தகம் கோர்க்கப்பட்டுள்ளது. எபிரெய மொழியில் இந்நூலின் பெயர் "செப்பேர் தெகில்லிம்" (**Sepher Tephillim**). இதற்கு "துதிகளின் புஸ்தகம்" என்று பொருள்.

சங்கீதப் புஸ்தகத்தில் மொத்தம் 150 சங்கீதங்கள் உள்ளன. இவை எழுதப்பட்ட காலம் சுமார் கி.மு. 1500-450. பாலஸ்தீன தேசத்திலும் பாபிலோனிலும் சங்கீதக்காரர்கள் சங்கீதங்களை இராகத்தோடு இயற்றினார்கள்.

சங்கீதங்களை இயற்றியோரின் பெயர் அந்தந்த சங்கீதங்களிலேயே காணப்படுகிறது. நூறு சங்கீதங்களை இயற்றியோர் யார் என்னும் விபரம் நமக்குக் கிடைத்துள்ளது.

வரிசை எண்	சங்கீதம் இயற்றியோர்	இயற்றிய சங்கீதங்கள்
1.	மோசே	1
2.	தாவீது	73
3.	சாலொமோன்	2
4.	ஆசாப்	12
5.	ஏமான்	1
6.	ஏத்தான்	1
7.	கோராகின்புத்திரர்	10

மீதமுள்ள 50 சங்கீதங்களை இயற்றியோர் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை தாவீதும் சாலொமோனும் இவற்றில் பெரும்பாலான சங்கீதங்களை இயற்றியிருக்கலாம்.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் சங்கீதங்களைப் பாலஸ்தீன தேசத்திலும் பாபிலோனிலும் இசையோடு பாடிவந்தார்கள். இவற்றையெல்லாம் எஸ்றா சேகரித்து, தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் சங்கீதப் புஸ்தகமாகத் தொகுத்தார்.

எஸ்றா சேகரித்துத் தொகுத்த சங்கீத புஸ்தகத்தின் எபிரெயப் பெயர் "செப்பேர் தெகில்லீம்" இதன்பொருள் துதியின் புஸ்தகம். இந்த எபிரெயப் புஸ்தகத்தில் 150 சங்கீதங்கள் உள்ளன. இவை 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிப்புக்குக் காரணம் தெரியவில்லை. மோசே எழுதிய பஞ்சாகமத்தில் 5 புஸ்தகங்கள் உண்டு. அதுபோல சங்கீத புஸ்தகத்திலும் 5 பிரிவு வேண்டுமென்று எஸ்றா நினைத்து, சங்கீதங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருக்கலாம்.

சங்கீத புஸ்தகத்தின் புள்ளியியல் விபரம்

1. வேதாகமத்தில் 19-ஆவது புஸ்தகம்
2. மொத்த சங்கீதங்கள் - 150
3. மொத்த வசனங்கள் - 2461
4. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் - 160
5. நிறைவேறய வேண்டிய தீர்க்கதரிசனங்கள் - 274
6. வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 2027
7. கேள்விகள் - 164
8. கட்டளைகள் - 413
9. தேவனுடைய கிரியைகள் - 338
10. பொருத்தனைகள் - 124
11. துதியின் வாக்கியங்கள் - 174
12. மனக்குறையை அறிவித்தல் - 118
13. யூதர்களைப் பற்றிய சத்தியங்கள் - 72
14. தேவனைப் பற்றிய சத்தியங்கள் - 865
15. தேவனுடைய வார்த்தையைப் பற்றிய காரியங்கள் - 235
16. சாட்சிகள் - 182
17. வாக்குத்தத்தங்கள் - 97

18. மேசியாவைப்பற்றிய சத்தியங்கள் - 128

19. ஆசீர்வாதங்கள் - 281

20. சங்கீதக்காரர்களைப் பற்றிய குறிப்புக்கள் - 190

21. நீதியின் கிரியைகள் - 78

22. துன்மார்க்கரின் கிரியைகள் - 101

23. பாவங்கள் - 233

24. விண்ணப்பங்கள் - 582

25. விண்ணப்பத்திற்கான காரணங்கள் - 187

சங்கீதங்களைப் பிரிக்கும் முறை

சங்கீத புஸ்தகத்தில் மொத்தம் 150 சங்கீதங்கள் உள்ளன. இவற்றை நான்கு அடிப்படைகளில் பிரிக்கலாம். அவையாவன:

1. முதலாவது பிரிவு - தலைப்புகளின் அடிப்படையில் பிரிக்கும் முறை
2. இரண்டாவது பிரிவு - பொருள் அடிப்படையில் பிரிக்கும் முறை
3. மூன்றாவது பிரிவு - ஆசிரியரின் அடிப்படையில் பிரிக்கும் முறை
4. நான்காவது பிரிவு - பஞ்சாகம அடிப்படையில் பிரிக்கும் முறை

முதலாவது பிரிவு - தலைப்புகளின் அடிப்படையில் பிரிக்கும் முறை

சங்கீத புஸ்தகத்திலுள்ள 150 சங்கீதங்களையும் தலைப்புகளின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள 16 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. நீதிமானின் சங்கீதங்கள் = 9 (சங்கீதங்கள் 1, 15, 84, 91, 92, 101, 112, 128, 131)

2. மோசியாவைப்பற்றிய சங்கீதங்கள் = 19 (சங்கீதங்கள் 2, 8, 16, 21, 23, 40, 41, 45-48, 68, 69, 72, 89, 102, 110, 118)

3. நெருக்கத்தின் ஜெபங்கள் = 20 (சங்கீதங்கள் 3, 4, 6, 12, 13, 17, 25, 27, 31, 38, 43, 56, 57, 70, 80, 109, 120, 123, 130, 143)

4. நியாயத்தீர்ப்பின் சங்கீதம் = 1 (சங்கீதம் 50)

5. நியாயத்தீர்ப்புக்காக ஜெபங்கள் = 11 (சங்கீதங்கள் 5, 7, 28, 35, 58, 59, 79, 82, 83, 94, 140)

6. துதியின் சங்கீதங்கள் = 24 (சங்கீதங்கள் 29, 65, 66, 75, 95-100, 103-105, 107, 117, 134, 136, 145-150)

7. துதித்து ஜெபிக்கும் சங்கீதங்கள் = 11 (சங்கீதங்கள் 9, 19, 30, 33, 64, 67, 71, 86, 106, 138, 144)

8. நம்பிக்கையின் சங்கீதங்கள் = 6 (சங்கீதங்கள் 11, 20, 61, 63, 125, 127)

9. துன்மார்க்கனின் சங்கீதங்கள் = 2 (சங்கீதங்கள் 10, 36)

10. மீட்பின் சங்கீதங்கள் = 4 (சங்கீதங்கள் 18, 34, 124, 126)

11. தேவனுடைய சங்கீதங்கள் = 8 (சங்கீதங்கள் 24, 93, 111, 113-115, 121, 139)

12. ஜெபமும் சாட்சியும் சங்கீதங்கள் = 6 (சங்கீதங்கள் 26, 39, 116, 129, 137, 142)

13. போதக சங்கீதங்கள் = 20 (சங்கீதங்கள் 14, 32, 37, 42, 44, 49, 52-55, 60,73, 74, 76-78, 81, 88, 108, 133)

14. ஜெப சங்கீதங்கள் = 4 (சங்கீதங்கள் 51, 85, 90, 141)

15. சீயோனின் சங்கீதங்கள் = 3 (சங்கீதங்கள் 87, 122, 132)

16. தேவனுடைய வார்த்தையின் சங்கீதம் = 1 (சங்கீதம் 119)

சங்கீதம் – முன்னுரை

இரண்டாவது பிரிவு - பொருள் அடிப்படையில் பிரிக்கும் முறை

சங்கீதபுஸ்தகத்திலுள்ள 150 சங்கீதங்களையும் ஏற்கனவே பிரித்தது போல, பொருள் அடிப்படையில் கீழ்க்கண்ட 15 பிரிவுகளாகவும் பிரிக்கலாம்.

1. போதக சங்கீதங்கள் = 27 (சங்கீதங்கள் 1, 10, 12, 14, 15, 19, 36, 37, 39, 48, 49, 52, 53, 73, 75-77, 82, 87, 90, 112, 115, 119, 122, 128, 133, 139)
2. வழிபாட்டு சங்கீதங்கள் = 9 (சங்கீதங்கள் 8, 29, 47, 50, 67, 93, 95, 116, 134)
3. துதித்து ஸ்தோத்தரிக்கும் சங்கீதங்கள் = 33 (சங்கீதங்கள் 18, 21, 22, 28, 30-34, 40, 66, 68, 92, 97, 98, 100, 101, 103, 104, 108, 111, 113, 117, 124, 126, 136, 138, 145-150)
4. மனம் வருந்தி மன்னிப்புக்கோரும் சங்கீதங்கள் = 8 (சங்கீதங்கள் 6, 13, 32, 38, 51, 102, 130, 143)
5. ஜெப சங்கீதங்கள் = 26 (சங்கீதங்கள் 13, 17, 20, 25, 28, 35, 40, 43, 44, 54-59, 64, 70, 71, 86, 88, 123, 140-144)
6. நம்பிக்கையின் சங்கீதங்கள் = 18 (சங்கீதங்கள் 3, 4,7, 11, 16, 23, 27, 37, 42, 46, 61, 62, 91, 118, 121, 125, 127, 130)
7. சாபமிடும் சங்கீதங்கள் = 6 (சங்கீதங்கள் 35, 58, 69, 83, 109, 129)
8. வரலாற்று சங்கீதங்கள் = 16 (சங்கீதங்கள் 40, 42, 43, 70, 78, 81, 102, 104-107, 114, 124, 126, 129, 132)
9. தேவாலய சங்கீதங்கள் = 29 (சங்கீதங்கள் 4, 11, 15, 19, 23, 26, 27, 30, 33, 44-47, 49, 50, 65, 67, 74, 76, 79, 81, 82, 85, 92, 95, 100, 118, 132, 136)
10. யாத்திரிகரின் சங்கீதங்கள் = 10 (சங்கீதங்கள் 121-123, 125, 127, 128, 130, 131, 133, 134)
11. சிறுதொலைவுகள் அல்லது யாத்திரிகரின் சங்கீதங்கள் = 15 (சங்கீதங்கள் 120-134)
12. புதிர்வகை சங்கீதங்கள் = 9 (சங்கீதங்கள் 9, 10, 25, 34, 37, 111, 112, 119, 145)
13. ராஜரீக சங்கீதங்கள் = 8 (சங்கீதங்கள் 8, 19-21, 24, 29, 61, 101)
14. மனக்குறையை அறிவித்துப் புலம்பும் சங்கீதங்கள் = 8 (சங்கீதங்கள் 31, 41, 60, 74, 79, 102, 120, 137)
15. அல்லேலூயா சங்கீதங்கள் = 22 (சங்கீதங்கள் 104-106, 110-114, 116-118, 134, 135, 145-150)

மூன்றாவது பிரிவு - ஆசிரியரின் அடிப்படையில் பிரிக்கும் முறை

சங்கீத புஸ்தகத்திலுள்ள 150 சங்கீதங்களையும் இவற்றை எழுதிய ஆசிரியர்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட 9 பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. தாவீது = 75 (சங்கீதங்கள் 3-32, 34-41, 51-65, 68-70, 72, 86, 101, 103, 108-110, 122, 124, 131, 133, 138-145)
2. ஆராப் = 12 (சங்கீதங்கள் 50, 73-83)
3. கோராகின் புத்திரர் = 10 (சங்கீதங்கள் 42, 44-49, 84, 85, 87)
4. ஏமான் = 1 (சங்கீதம் 88)
5. சாலொமோன் = 2 (சங்கீதங்கள் 72, 127)
6. மோசே = 1 (சங்கீதம் 90)
7. ஏத்தான் = 1 (சங்கீதம் 89)
8. இயற்றியவரின் பெயரில்லாமல் தலைப்பு மட்டும் = 17 (சங்கீதங்கள் 66, 67, 92, 98, 100, 102, 120-123, 125, 126, 128-130, 132, 134, 135)

9. இயற்றியவரின் பெயரோ அல்லது தலைப்போ அற்றவை = 33 (சங்கீதங்கள் 1, 2, 10, 33, 43, 71, 91, 93-97, 99, 104-107, 111-119, 136, 137, 146-150)

நான்காவது பிரிவு - பஞ்சாகம அடிப்படையில் பிரிக்கும் முறை

சங்கீத புஸ்கத்திலுள்ள 150 சங்கீதங்களையும், எபிரெய மொழியில் ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். மோசே எழுதிய பஞ்சாகமம் போன்று சங்கீத புஸ்தகத்தையும் ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருக்கலாம். அவையாவன:

1. ஆதியாகம சங்கீதம் (1முதல் 41 வரையுள்ள சங்கீதங்கள்) = 41
2. யாத்திராகம சங்கீதம் (42முதல் 72 வரையுள்ள சங்கீதங்கள்) = 31
3. லேவியராகம சங்கீதம் (73 முதல் 89 வரையுள்ள சங்கீதங்கள்) = 17
4. எண்ணாகம சங்கீதம் (90 முதல் 106 வரையுள்ள சங்கீதங்கள்) = 17
5. உபாகம சங்கீதம் (107 முதல் 150 வரையுள்ள சங்கீதங்கள்) = 44

1. ஆதியாகம சங்கீதம் (1-41)

இந்த சங்கீதங்களில் மையக் கருத்தாயிருப்பவன் மனுஷனே. துவக்கம் முதல் முடிவு வரையிலும் மனுஷனுக்குத் தேவைப்படும். தெய்வீக ஆலோசனைகள் இந்த சங்கீதங்களில் இடம் பெற்றுள்ளன.

ஆதியாகமத்தைப் போன்றே, ஆதியாகம சங்கீதமும் மனுக்குலத்தின் மீது தேவனுடைய ஆசீர்வாதத்துடன் துவங்குகிறது. மனுஷன் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் ஆசீர்வாதம் பெறுவான். (ஆதியாகமம் 1-2 ஒப்பிடவும் சங்கீதம் 1)

இதைத் தொடர்ந்து மனுஷனுடைய வீழ்ச்சியும் கீழ்ப்படியாமையும் இடம் பெறுகிறது (ஆதியாகமம் 3-11 ஒப்பிடவும் சங்கீதம் 2-15)

கிறிஸ்துவின் மூலமாக மனுக்குலத்திற்கு கிடைக்கக்கூடிய மீட்பின் நம்பிக்கையுடன் ஆதியாகமும் ஆதியாகம சங்கீதமும் முடிவு பெறுகிறது. (ஆதியாகமம் 12-50 ஒப்பிடவும் சங்கீதம் 16-41)

ஆதியாகம சங்கீதத்தின் கடைசி வசனம் சங்கீதம் 41:13 ஆமென், ஆமென் என்று கூறி முடிவு பெறுகிறது.

2. யாத்திராகம சங்கீதம் (42-72)

இந்த சங்கீதங்களின் மையக் கருத்து இஸ்ரவேல் தேசம். இஸ்ரவேலின் அழிவு, மீட்பர், மீட்பு ஆகியவை இவற்றில் இடம் பெற்றுள்ளன.

யாத்திராகமம் போன்றே, யாத்திராகம சங்கீதமும் அழிவினாலும், மனமுறிவினாலும் ஏற்படும் கதறுதலோடு ஆரம்பமாகிறது. (யாத்திராகமம் 1-3 ஒப்பிடவும் சங்கீதம் 41-42)

தேவனுடைய வல்லமையான கிரியைகளும் மீட்பும் இதைத் தொடர்ந்து வருகிறது. (யாத்திராகமம் 4-15 ஒப்பிடவும் சங்கீதம் 44-50)

இதைத் தொடர்வது இஸ்ரவேலரின் பின்மாற்றமும், எதிரிகளிடம் தோல்வியுறுவதும், அதனால் ஏற்படும் உபத்திரவங்களும் ஆகும். (யாத்திராகமம் 16-27 ஒப்பிடவும் சங்கீதம் 51-55)

இஸ்ரவேலுக்காக தேவன் நடப்பிக்கும் மீட்பின் கிரியை, அவர்கள் மீது தேவனுடைய ஆளுகை ஆகியவற்றுடன் இந்தப் புஸ்தகம் முடிவு பெறுகிறது. (யாத்திராகமம் 19-40 ஒப்பிடவும் சங்கீதம் 56-72)

யாத்திராகமம் சங்கீதம் ஆமென், ஆமென் என்று கூறி (சங்கீதம் 72:19) நிறைவு பெறுகிறது.

3. லேவியராகம சங்கீதம் (73-89)

இந்த சங்கீத புஸ்தகத்தின் மையக்கருத்து தேவனுடைய பரிசுத்தஸ்தலமும், தேவனையும் மனுஷனையும் குறித்த இதன் நோக்கமும்.

மனுஷனுக்கு தேவன் வெளிப்படுத்தும் பரிசுத்த ஸ்தலம், தேவனோடு ஐக்கியமாக இருப்பதன் அவசியம் ஆகியவற்றை விளக்கி இப்புஸ்தகம் ஆரம்பமாகிறது. (லேவியராகமம் 1-7 ஒப்பிடவும் சங்கீதம் 73-83)

சங்கீதம் – முன்னுரை

தேவனுக்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு, மீட்கப்பட்டோர் தேவனுக்கு முன்பாக நடந்து கொள்ளவேண்டிய விதம், தேவனோடு வைத்திருக்க வேண்டிய ஐக்கியம் ஆகியவற்றை இந்த சங்கீத புஸ்தகம் தொடர்ந்து விவரிக்கிறது. (லேவியராகமம் 8-27 ஒப்பிடவும் சங்கீதம் 84-49).

இந்தப்புஸ்தகத்திலுள்ள ஒவ்வொரு சங்கீதமும் தேவனுடைய பரிசுத்தஸ்தலத்தைப் பற்றியும், இத்துடன் மனுஷனுக்கு இருக்கவேண்டிய தொடர்பு பற்றியும் விவரிப்பது, இப்புஸ்தகத்தின் தனிச் சிறப்பு ஆகும்.

மற்ற சங்கீத புஸ்தகங்களைப் போலவே, லேவியராகம சங்கீதபுஸ்தகமும் ஆமென், ஆமென் (சங்கீதம் 89:52) என்று கூறி நிறைவு பெறுகிறது.

4. எண்ணாகம சங்கீதம் (90-106)

இந்த சங்கீத புஸ்தகத்தின் மையக் கருத்து பூமியிலுள்ள இஸ்ரவேலரும் புறஜாதி ஜனங்களும். மனுக்குலத்திற்கு தேவனைத் தவிர வேறு நம்பிக்கை இல்லை. மனுஷன் இந்த உலகத்தில் ஜீவிக்கும்போது நல்ல ஜீவியத்தையும் நல்ல உலகத்தையும் நாடி தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

இஸ்ரவேலரின் பிரயாணம் வனாந்தரத்தில் ஆரம்பமாயிற்று. இதில் அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொண்டார்கள். (எண்ணாகமம் 1-8 ஒப்பிடவும் சங்கீதம் 90)

இதைத் தொடர்ந்து அவர்களுக்கு தேவனுடைய பிரமாணமும் வருங்காலத்திற்குரிய கட்டளைகளும் கொடுக்கப்பட்டன. (எண்ணாகமம் 9-14 ஒப்பிடவும் சங்கீதம் 91-94). இஸ்ரவேலர்கள் இளைப்பாறுதலை எதிர்பார்த்தார்கள் (எண்ணாகமம் 15-26 ஒப்பிடவும் சங்கீதம் 95-100)

இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கு ஆதாரங்கள் (எண்ணாகமம் 27:36 ஒப்பிடவும் சங்கீதம் 101-106).

எண்ணாகம சங்கீதபுஸ்தகம் ஆமென், அல்லேலூயா என்று கூறி நிறைவு பெறுகிறது (சங்கீதம் 106:48).

5. உபாகம சங்கீதம் (107-150)

இந்தப் புஸ்தகத்தின் மையக்கருத்து தேவனும் அவருடைய வார்த்தையும் ஆகும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் மனுக்குலத்திற்கும், இஸ்ரவேலுக்கும், தேவனுடைய வாசஸ்தலத்திற்கும், பூமிக்கும், முழு மனுக்குலத்திற்கும் எல்லா ஆசீர்வாதங்களும் உண்டு (உபாகமம் 8:3).

கீழ்ப்படியாமையினால் மனுஷனுக்கு வருத்தம் வந்தது. இஸ்ரவேல் சிதறிப் போயிற்று. தேவாலயம் அழிந்து போயிற்று. பூமியில் பாடுகள் உண்டாயிற்று. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதினால் மட்டுமே இந்த சாபங்களை அகற்றமுடியும்.

இந்த சங்கீத புஸ்தகத்தில் உட்பிரிவு எதுவும் இல்லை. தேவனுடைய வார்த்தையைப் போல, இந்தப் புஸ்தகம் பரிபூரணமாக முழுமையானது.

சங்கீதம் - தொகுப்புரை

1 அதிகாரம்

நீதிமானின் முதலாவது சங்கீதம் - நீதிமானுக்கும் துன்மார்க்கருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

பொருளடக்கம்

1. ஆசீர்வாதம் பெறுவதற்கு ஐந்து நிபந்தனைகள் - (1:1-2)
2. நீதிமானுக்கு வரும் நான்கு ஆசீர்வாதங்கள் - (1:3)
3. துன்மார்க்கன் - இவன் நீதிமானுக்கு நேர்எதிரானவன் - (1:4)
4. நீதிமானின் முடிவும் துன்மார்க்கனின் முடிவும் - (1:5-6)

1. ஆசீர்வாதம் பெறுவதற்கு ஐந்து நிபந்தனைகள் - (84:11; ஏசா 58; கொலோ 1:23; 2தீமோ 2:12-13)

சங் 1:1 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்

சங் 1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

பாக்கியவான் [Blessed] - אֶשֶׁר - eh'-sher – 835

ஆ.பெ.சொ. - பாக்கியவான், பாக்கியம் - மெய்யான சந்தோஷமும் சமாதானமும் உடையவன் (உபா 33:29; 1இராஜா 10:8; 2நாளா 9:7; யோபு 5:17; சங் 127:5; சங் 128:2; சங் 137:8-9; சங் 144:15; சங் 146:5; நீதி 3:13; நீதி 14:21; நீதி 16:20; நீதி 8:14; நீதி 29:18.)

யாரெல்லாம் பாக்கியவான்கள்?

1. வேதத்தில் தியானமாயிருக்கிறவன் (சங் 1:1; சங் 106:3; ஏசா 56:2)
2. தேவனை அண்டிக்கொள்ளுகிறவர்கள் (சங் 2:12; சங் 34:8; சங் 40:4; சங் 84:12)
3. மீறுதல்கள் மன்னிக்கப்பட்டவர்கள் (சங் 32:1)
4. அக்கிரமத்திலிருந்து விடுபட்டவர்கள் (சங் 32:2)
5. அகங்காரிகளை நோக்காதவர்கள் (சங் 40:4)
6. பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களை நோக்காமலிருப்பவர்கள் (சங் 40:4)
7. சிறுமைப்பட்டவன்மேல்சிந்தையுள்ளவன் (சங் 41:1)
8. கர்த்தருடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி சேர்த்துக் கொள்ளப்படுகிறவன் (சங் 65:4)
9. கர்த்தருடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் (சங் 84:4)
10. கர்த்தரிலே பெலன் கொள்ளுகிற மனுஷன் (சங் 84:5)
11. தேவனுடைய கம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் (சங் 89:15)
12. கர்த்தரால் சிட்சிக்கப்பட்டவன் (சங் 94:12)
13. கர்த்தருக்குப் பயப்படுகிறவன் (சங் 112:1; சங் 128:1)
14. வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார்கள் (சங் 119:1)
15. கர்த்தருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் (சங் 119:2)
16. கர்த்தருடைய வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் (நீதி 8:32,34)
17. ஞானத்திற்கு செவி கொடுக்கிற மனுஷன் (நீதி 8:34)

1 அதிகாரம்

18. உத்தமத்திலே நடக்கிற நீதிமானுடைய பிள்ளைகள் (நீதி 20:7)

19. ராஜா குலமகனாய் இருக்கிற தேசம் (பிர 10:17)

20. கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதி (சங் 33:12)

21. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் (ஏசா 30:18)

22. ஆயிர வருஷ அரசாட்சியில் நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதைக்கிறவர்கள் (ஏசா 32:20)

23. உபத்திரவ காலத்தின் வழியாக ஜீவித்தவன் (தானி 12:12)

சங்கீதக்காரன் மூன்று விதமான பாவிகளைக் காண்கிறான். அவர்கள் துன்மார்க்கன், பாவி, பரியாசக்காரன் என்பவர்களே! (வெளி 4:11)

1. துன்மார்க்கன் (The ungodly) - רָשָׁע - raw-shaw' - 7563.

பெயர்ச்சொல் - துன்மார்க்கன், அநியாயஞ்செய்கிறவன், ஆகாதவன், பொல்லாத மனுஷன் (சங் 1:1-6; சங் 3:7; சங் 73:12; 2நாளா 19:2; யோபு 34:18; ஆதி 18:23-25; சங் 9:17)

2. பாவி (Sinners) - חַטָּא - khat-taw' - 2400

ஆ.பெ.சொ.-பாவி, குற்றவாளி, மகாபாவி, பாவம் செய்கிறவன் (சங் 1:1,5; சங் 25:8)

3. பரியாசக்காரன் (The scornful) - לִיץ - loots - 3887

பெயர்ச்சொல் - பரியாசக்காரன், நிந்தனைக்காரன், இகழ்பவன், பரியாசம் பண்ணுகிறவன், இகழுகிறவன், நிந்திக்கிறவன் - (சங் 1:1; நீதி 1:22; நீதி 3:34; நீதி 9:7)

நீதிமானின் நற்குணங்களை அவன் கிரியைகள் வெளிப்படுத்தும்.

நீதிமானின் கிரியைகள்

1. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருப்பான் (சங் 1:2)

2. இரவும், பகலும் கர்த்தருடைய வேதத்தை தியானிப்பான் (சங் 2)

3. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடக்கமாட்டான் (சங் 1:1)

4. நீதிநெறியில் ஜீவிப்பான் (யாக் 1:22-27)

5. கர்த்தரை விசுவாசித்து ஜீவிப்பான் (2தீமோ 3:16-17)

6. தீர்க்கதரிசன வசனங்களை வாசித்து, அதைக் கைக்கொள்வான் (மத் 24:15; எபே 3:4; வெளி 1:3)

7. ஆவிக்குரிய காரியங்களில் வளருவான் 1பேதுரு 2:1-3; ரோம 10:17

2. நீதிமானுக்கு வரும் நான்கு ஆசீர்வாதங்கள் - (32:6; 33:18)

சங் 1:3 அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

நீதிமான் மரத்தைப்போலவும் துன்மார்க்கன் பதரைப் போலவும் இருக்கிறார்கள். நீதிமான் கனியைத் தந்து செழிப்பான். துன்மார்க்கன் அழிவான் (சங் 1:4; சங் 35:5)

நதி (rivers of water) - פֶּלֶג - peh'-leg - 6388 - நதி, ஆறு

ஆ.பெ.சொ. - நதி, நீர்க்கால், ஆறு, தாரை

நீர்க்கால், வாய்க்கால் (rivers of water) - מַיִם - mah'-yim - 4325 - நீர்க்கால், தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு அமைக்கப்பட்டுள்ள வாய்க்கால்

1 அதிகாரம்

ஆ.பெ.சொ. - ஜலம், நீர், தண்ணீர், நதி, மிஸ்ரபோத், மாயீம், மழை, வெள்ளம், நீரூற்று

"தன் காலத்தில்" என்பது ஏற்ற காலத்தில் என்று பொருள்படும். கனிதருவதற்கு நீர் பாய்ச்சி, மரத்தை பராமரிக்க வேண்டும். நாமும் ஆவிக்குரிய ரீதியாக தொடர்ந்து போஷிக்கப்படும் போது ஏற்ற காலத்தில் பலன் தருவோம்.

"இலையுதிராதிருக்கிற மரம்" - செழிப்பான ஆவிக்குரிய ஜீவியத்தையும் கனிதரும் கிறிஸ்தவ ஜீவியத்தையும் குறிக்கும். (யோவான் 15:1-8)

"அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" - ஆத்துமாவும் சரீரமும் ஆரோக்கியமாக இருக்கும்போது வாழ்வு வளம்பெறும். நீதிமானுடைய கரத்தின் கிரியைகளைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். (யோசு 1:5-9; 1சாமு 2:7-8; 3யோவான் 1:2)

3. துன்மார்க்கன் - இவன் நீதிமானுக்கு நேர்எதிரானவன் - (15:2; 24:3; 37:16)

சங் 1:4 துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள்.

துன்மார்க்கர் எப்படி இருக்கிறார்கள்?

1. காற்றுப் பறக்கடிக்கும் பதர் (சங் 1:4)
2. சீக்கிரமாய் அறுப்புண்டு வாடிப்போகும் புல் (சங் 37:2)
3. அழிந்து போகும் மிருகங்கள் (சங் 49:20)
4. பாம்பாட்டிகள் ஊதும் சத்தத்திற்குச் செவி கொடாத செவிட்டு விரியன் (சங் 58:4)
5. துவண்டு போகிற வில் (சங் 78:57; ஓசி 7:16)
6. மாயை (சங் 144:4)
7. வெள்ளிப் பூச்சு பூசிய ஓடு (நீதி 26:23)
8. கொந்தளிக்கும் கடல் (ஏசா 57:20)
9. வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர் நிலத்திலும் தங்குபவன் (எரே 17:6)
10. வனாந்தரங்களிலுள்ள நரிகள் (எசே 13:4)
11. கெர்ச்சிக்கிற சிங்கம் (எசே 22:25)
12. இரையைக் கவ்வுகிற ஓநாய் (எசே 22:27)

4. நீதிமானின் முடிவும் துன்மார்க்கனின் முடிவும் - (9:17; மத் 25:46; தானி 12:2)

சங் 1:5 ஆகையால் துன்மார்க்கர் நியாயத் தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை.

சங் 1:6 கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்.

2 அதிகாரம்

மேசியாவைப் பற்றிய முதலாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மனுஷர் மேசியாவை மறந்துவிட்டார்கள் - (2:1-3)
2. உபத்திரவமும் ஆயிரம் வருஷ அரசாட்சியும் - (2:4-6)
3. மேசியாவின் பிறப்பும் ஊழியமும் - (2:7-8)
4. மேசியாவின் ஆயிரம் வருஷ அரசாட்சி - (2:9-12)

1. மனுஷர் மேசியாவை மறந்து விட்டார்கள் - (ஏசா 53; மத் 21:42; 27:15)

சங் 2:1 ஜாதிகள்கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்?

சங் 2:2 கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி:

சங் 2:3 அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 1

"ஜாதிகள்கொந்தளித்து, ஜனங்கள் விருதாக் காரியத்தைச் சிந்திப்பானேன்?................." (சங் 2:1-12). இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. அதாவது சங் 2:7-ஐ தவிர, மற்ற வசனங்களில் கூறப்பட்டுள்ள காரியங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

தாவீது இந்த சங்கீதத்தை எழுதினான் (அப் 4:25-26)

ஜாதி (heathen) גּוֹי - go'ee, go'-ee - 1471

ஆ.பெ.சொ.-ஜாதி, புறஜாதி, தேசம், ஜனம், மனுஷர், குடி

ஜாதிகள், ஜனங்கள் என்பது புறஜாதியாரைக் குறிக்கும் (சங் 2:1-2)

கொந்தளிக்கும் ஜாதிகள்

1. புறஜாதியார், புறதேசத்தார்
2. ஜனம் - யூதர்கள் (அப் 4:27)
3. இராஜாக்கள் - புறஜாதி அரசர்கள் (அப் 4:26)
4. ஆட்சியாளர்கள் - யூதமார்க்கத் தலைவர்கள் (அப் 4:26)

துன்மார்க்கரின் கிரியைகள்

1. கொந்தளிக்கிறார்கள்
2. விருதாக் காரியங்களைச் சிந்திக்கிறார்கள்
3. கர்த்தருக்கு விரோதமாகவும் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள் (சங் 2:2)
4. கர்த்தருக்கு விரோதமாகவும் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் ஆலோசனை பண்ணுகிறார்கள் (சங் 2:2)
5. கர்த்தருக்கு விரோதமாகவும் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் விட்டு பிரிந்து போவோம் என்கிறார்கள் (சங் 2:3)

கொந்தளி (rage) רָגַשׁ - raw-gash' - 7283

வினைச்சொல் - கொந்தளி - அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு எதிராக தங்கள் பற்களைக் கடித்து கலகம் பண்ணும் கலகக் கூட்டத்தார்

2 அதிகாரம்

சிந்தி (imagine) - הָגָה - haw-gaw' - 1897

வினைச்சொல் - தியானி, யோசி, கொண்டாடு, சத்தமிடு, சொல், சிந்தி, அலறு, விளம்பு, கூக்குரலிடு, முணுமுணு, வசனி, கூவு, பேசு, புலம்பு, கெர்ச்சி, - சிந்தி (சங் 2:1; சங் 38:12); தியானி (சங் 1:2; சங் 63:6; சங் 77:12; சங் 143:5; யோசு 1:8; ஏசா 33:18); அலறு (ஏசா 16:7; ஏசா 38:14; ஏசா 59:11); முணுமுணு (ஏசா 8:19; ஏசா 59:3); கெர்ச்சி (ஏசா 31:4); விளம்பு (சங் 37:30; நீதி 8:7); பேசு (சங் 71:24); சொல் (யோபு 27:4)

விருதா (vain thing) - רִיק - reek - 7385

பெயரடை - விருதாவான, வெறும் வீணான - விருதா (சங் 2:1; சங் 73:13; லேவி 26:16,20; யோபு 39:16; ஏசா 49:4; ஏசா 65:23; எரே 51:58); வீண் (சங் 4:2; ஆப 2:13); வெறுமை (எரே 51:34)

கர்த்தரும் அவர் அபிஷேகம் பண்ணினவரும் இரண்டு வெவ்வேறு நபர்கள்

மேசியா (anointed) - מָשִׁיחַ - maw-shee'-akh - 4899

ஆண்பால் பெயர்ச்சொல் - மேசியா, அபிஷேகம் பெற்றவர், அபிஷேகம் பண்ணப்பட்டவர் - மேசியா (தானி 9:25-26); அபிஷேகம் பண்ணப்பட்டவர் (1சாமு 2:10,35; சங் 89:51)

அவர்கள் கட்டுகளை...... அவர்கள் கயிறுகளை - கர்த்தர், அபிஷேகம் பண்ணப்பட்டவர் ஆகியோரின் கட்டுகளையும் கயிறுகளையும்.

கட்டுகள் (bands) - מוֹסֵר - mo-sare', mo-say-raw', mo-ser-aw' - 4147

ஆ.பெ.சொ.- கட்டு - கட்டுகள் (சங் 2:3; யோபு 39:5; யோபு 107:14; ஏசா 28:22; ஏசா 52:2; எரே 2:20); கட்டுகள் (சங் 116:16; எரே 5:5; எரே 27:2; எரே 30:8; நாகூம் 1:13)

கயிறுகள் (cords) - עֲבֹת - ab-oth', ab-oth', ab-oth-aw' - 5688

பொதுப்பெயர்ச்சொல் - பின்னல், கயிறு, அடர்த்தியான கிளை, தழை, நுனிக்கிளை - கயிறுகள் (சங் 2:3; சங் 118:27;சங் 129:4; நியா 15:13-14); கயிறுகள் (ஏசா 5:18; நியா 16:11-12); கட்டுகள் (எசே 3:25; எசே 4:8; ஓசி 11:4); பின்னல் (யாத் 28:14-25; யாத் 39:15-18)

2. உபத்திரவமும் ஆயிரம் வருஷ அரசாட்சியும் - (எரே 30:4; ஏசா 2:1)

சங் 2:4 பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.

சங் 2:5 அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப் பண்ணுவார்.

சங் 2:6 நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகியசீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்.

பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் - கர்த்தர்

கர்த்தருடைய தனிப்பட்ட கிரியைகள்

1. பரலோகத்தில் வீற்றிருக்கிறார்
2. மனுஷனின் மாயையான திட்டங்களைப் பார்த்து நகைப்பார்.
3. மனுஷரை இகழுவார் (சங் 2:4)
4. மனுஷரோடு பேசுகிறார்.

2 அதிகாரம்

5. மனுஷரோடு கோபமாயிருக்கிறார்
6. மனுஷரின் பாவங்களுக்காக அவர்களை கலங்கப்பண்ணுவார்.
7. மனுஷரோடு உக்கிரமமாயிருக்கிறார். (சங் 2:5)
8. சீயோன் மீதில் மேசியாவை ராஜாவாக அபிஷேகம் பண்ணுவார். (சங் 2:6)
9. மேசியாவிடம் பேசுகிறார்.
10. ஒரு குமாரனை ஜநிப்பிக்கிறார் (சங் 2:7)
11. மேசியாவிற்கு ஜாதிகளைச் சுதந்தரமாகக் கொடுப்பார். (சங் 2:8)
12. பூமியின் எல்லைகளை மேசியாவிற்கு சொந்தமாகக் கொடுப்பார். (சங் 2:8)
13. இருப்புக்கோலால் சத்துருக்களை நொறுக்குவார் (சங் 2:9)
14. ராஜாக்களை உணர்வடையப் பண்ணுவார் (சங் 2:10-12)
15. நியாயாதிபதிகளை எச்சரிக்கையிருக்க அறிவுரை கூறுவார் (சங் 2:10)
16. கர்த்தரை அண்டிக்கொள்ளுகிற யாவரையும் ஆசீர்வதிப்பார் (சங் 2:12)

"சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்" மேசியாவே தேவனுடைய ராஜா. அவர் தாவீதின் சிம்மாசனத்தில் நித்தியமாக ஆளுகை செய்வார் (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15)

சீயோன் - மோரியாவிற்குத் தென்பகுதியிலுள்ள மலை.

3. மேசியாவின் பிறப்பும் ஊழியமும் - (ஏசா 7:14; 9:6-7; மத் 18)

சங் 2:7 தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்.

சங் 2:8 என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்;

"தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்" மேசியா சுவிசேஷத்தை அறிவிக்கிறார்.

"இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்" - இன்று என்பது நித்திய காலத்தைக் குறிப்பிடாமல், நாம் வாழும் இக்காலத்தையே குறிக்கும்.

சீயோனில் ராஜாவை அபிஷேகம் பண்ணுவதால் ஏற்படும் அநுகூலங்கள்

1. புறஜாதியார் மனந்திரும்புவார்கள்.
2. பூமியின் மீது மேசியா ராஜாவாக ஆளுகை செய்வார்.

4. மேசியாவின் ஆயிரம் வருஷ அரசாட்சி - (ஏசா 2:1; வெளி 20)

சங் 2:9 இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார்.

சங் 2:10 இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கை யாயிருங்கள்.

சங் 2:11 பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்.

2 அதிகாரம்

சங் 2:12 குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

“இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப் போடுவீர் என்று சொன்னார்” (வெளி 19:15; வெளி 2:27-28; வெளி 12:5)

ராஜாக்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள்

1. உணர்வடையுங்கள் (சங் 2:10)
2. எச்சரிக்கையாயிருங்கள் (சங். 2:10)
3. கர்த்தரை சேவியுங்கள் (சங் 2:11)
4. குமாரனை முத்தஞ்செய்யுங்கள் (சங் 2:12)

முத்தம் (Kiss) - נָשַׁק - naw-shak' - 5401

வினைச்சொல் - முத்தமிடு - முத்தஞ்செய் (ஆதி 27:26-27); யுத்தத்திற்கு ஒத்தாசை செய் (1நாளா 12:2; 2நாளா 17:17; சங் 78:9); ஆளுகை செய்யப்படு (ஆதி 41:40); நட்புக்கும் கீழ்ப்படிதலுக்கும் முத்தம் ஓர் அடையாளம் (1சாமு 10:1; 1இராஜா 19:18; ஓசி 13:2)

குமாரன் - தேவனுடைய குமாரன் - அபிஷேகம் பண்ணப்பட்டவர் (சங் 2:7-12; நீதி 30:4; ஏசா 9:6-7)

3 அதிகாரம்

(தாவீது தன் குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையில் பாடின சங்கீதம்)

முதலாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. தாவீது தேவனிடம் தனது மனக்குறையை அறிவிக்கிறான் - (3:1-2)
2. துன்ப நேரத்தில் தாவீதின் நம்பிக்கை - (3:3-6)
3. துன்ப நேரத்தில் தாவீதின் ஜெபம் - (3:7-8)

1. தாவீது தேவனிடம் தனது மனக்குறையை அறிவிக்கிறான் - (74:1,3; 80:4,12; 89:38)

சங் 3:1 கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர்.

சங் 3:2. தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். (சேலா)

“பெருகியிருக்கிறார்கள்”. இஸ்ரவேல் ஜனங்களின் இருதயம் அப்சலோமின் பக்கம் போனது. (2சாமு 15:13)

சேலா என்னும் சொல் சங்கீத புஸ்தகத்தில் 71 தடவைகளும் ஆபகூக் புஸ்தகத்தில் 3 தடவைகளும் (ஆப 3:3,9,13) வந்துள்ளன. 150 சங்கீதங்களில் 39 சங்கீதங்களில் சேலா என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றுள் 31, 39 ஆகிய சங்கீதங்கள் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப் பட்டவையாகும். நான்கு இடங்களில் இந்த சொல் வசனங்களுக்கு நடுவே வந்திருக்கிறது. (சங் 55:19; சங் 57:3; ஆப 3:3,9) நான்கு இடங்களில் 2 சங்கீதங்கள் சேலா என்னும் சொல்லினால் இணைக்கப்பட்டுள்ளன. (சங் 3-4; சங் 9-10; சங் 24-25; சங் 46-47) பொதுவாக சேலா என்னும் சொல் வசனத்திற்கு இறுதியிலே வந்திருக்கிறது.

சேலா என்னும் சொல்லின் பொருள்

1. எபிரெய பாடல்களில் கருத்துக்களை இணைக்கும் இடைச்சொல்
2. செப்துவஜிந்த் கிரேக்க சங்கீதப் புஸ்தகத்தில் சேலா என்னும் சொல் “டையாப்ஸால்மா” **(diapsalma)** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சங்கீதம் பாடுவோர் இவ்விடத்தில் இடைநிறுத்தம் செய்து பின்பு பாடவேண்டும்.
3. கல்தேய மொழியில் “சேலா” என்னும் சொல் “லேயால்மின்” **(lealmin)** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு “எப்பொழுதும்” **(forever)** என்று பொருள்.
4. பாடல் குழுவினர் பாடும்போது, பாடியதைத் திரும்பவும் பாடுவதற்கு “டா காப்போ” **(da capo)** என்னும் சொல்லைப் பயன்படுத்துவார்கள். “சேலா” இச்சொல்லுக்கு இணையானது.
5. எபிரெய மொழியில் “சல்” **(sal)** என்னும் சொல்லுக்கு பாடுவோர் தங்கள் தொனியை உயர்த்திப் பாடுதல் என்று பொருள். “சேலா” என்னும் சொல்லுக்கு இதே பொருளைக் கூறலாம்.

   சேலா **- סֶלָה - seh’-law - 5542**

   வினைச்சொல் - சேலா
6. எபிரெய மொழியில் “சாலா” **(salah)** என்னும் சொல்லுக்கு “வாசிப்போர் தங்கள் வாசிக்கும் சொல்லின் பொருளைத் தியானிக்க வேண்டும்” என்று பொருள்

3 அதிகாரம்

சேலா என்னும் சொல்லும் வசனத்தைக் கவனி, தியானி என்று பொருள்படும்.

7. பாடல்பாடும்போது இடையில் வாசிக்கப்படும் இசையே "சேலா" எனப்படும்.

2. துன்ப நேரத்தில் தாவீதின் நம்பிக்கை - *(20:1; 61:3; 62:1,5; 63:1)*

சங் 3:3 ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.

சங் 3:4 நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார். (சேலா)

சங் 3:5 நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக் கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.

சங் 3:6 எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் பயப்படேன்.

"நான் படுத்து நித்திரை செய்தேன்". தாவீது மக்னாயீமிலே படுத்து நித்திரை செய்தான். (2சாமு 17:275-29)

"பயப்படேன்". கர்த்தர் தனக்கு ஜெயத்தைத் தருவார் என்று தாவீது உறுதியாய் நம்பினான். ஆகையினால் அவன் பயப்படவில்லை. (சங் 3:6-7)

3. துன்ப நேரத்தில் தாவீதின் ஜெபம்

7. கர்த்தாவே, எழுந்தருளும்; என் தேவனே, என்னை இரட்சியும். நீர் பகைஞர் எல்லாரையும் தாடையிலே அடித்து, துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப்போட்டீர்.

8. இரட்சிப்பு கர்த்தருடையது; தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக. (சேலா).

"நீர் பகைஞர் எல்லாரையும் தாடையிலே அடித்து, துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப்போட்டீர்". ஏற்கனவே கர்த்தர் தனக்கு ஜெயம் தந்ததுபோன்று, தாவீது விசுவாசத்தோடு அறிக்கை செய்கிறான். (மாற்கு 11:22-24)

4 அதிகாரம்

(நெகிலோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

இரண்டாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. மூன்று விண்ணப்பங்கள் - ஒரு ஆசீர்வாதம் - (4:1)
2. தேவன் கேட்கும் இரண்டு முக்கியமான கேள்விகள் - (4:2)
3. சமாதானமாயிருப்பதற்கு ஏழு இரகசியங்கள் - ஐந்து கட்டளைகளும் இரண்டு ஆசீர்வாதங்களும் - (4:3-5)
4. மனுஷன் கேட்கும் மிகப்பெரிய கேள்வி - ஒரு விண்ணப்பமும் இரண்டு ஆசீர்வாதங்களும் - (4:6-8)

1. மூன்று விண்ணப்பங்கள் - ஒரு ஆசீர்வாதம்

சங் 4:1 என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

அப்சலோம் தாவீதிற்கு விரோதமாக எழும்பிய காலத்தில், மூன்றாவது சங்கீதம் எழுதப்பட்ட சூழ்நிலையில், தாவீது இந்த சங்கீதத்தை எழுதினான்.

2. தேவன் கேட்கும் இரண்டு முக்கியமான கேள்விகள்

சங் 4:2 மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி, வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள். (சேலா)

உலகம் முழுவதிலும் மூன்றுவிதமான பாவங்கள் அதிகமாக உள்ளன. அவையாவன: 1. தேவனுடைய மகிமையை அவமானப்படுத்துதல் 2. வீணானதை விரும்புதல் 3. பொய்யை நாடுதல்

1. தேவனுடைய மகிமையை அவமானப் படுத்துதல் (ரோமர் 1:21-32) தேவனுடைய விரோதிகள் எல்லோரும் ஒடுக்கப்படும் போது தேவனுடைய மகிமையை அவமானப்படுத்துவது முடிவு பெறும். (1கொரி 15:24-28; எபே 1:10)

2. வீணானதை விரும்புதல் (சங் 4:2; சங் 10:7; சங் 12:2; சங் 39:5,11; சங் 62:9; சங் 94:11; பிர 2; 2இராஜா 17:15; ரோமர் 8:20; எபே 4:17; 2பேதுரு 2:18)

3. பொய்யை நாடுதல் (நீதி 17:4; நீதி 19:22)

3. சமாதானமாயிருப்பதற்கு ஏழு இரகசியங்கள் - ஐந்து கட்டளைகளும் இரண்டு ஆசீர்வாதங்களும்

சங் 4:3 பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.

சங் 4:4 நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். (சேலா)

சங் 4:5 நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமது கிருபையையும், பராமரிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு விசேஷித்தவனாக தெரிந்தெடுத்திருக்கிறார். (சங் 91)

4 அதிகாரம்

"நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்" என்பது எபே 4:26-இல் உள்ள கருத்துக்கு ஒத்துள்ளது. இந்த ஆலோசனை தாவீதை வைராக்கியமாக பின்பற்றுவோருக்கு கொடுக்கப் பட்டிருக்கலாம். *(2சாமு 16:10; 2சாமு 18:5-15)*

ஒருவன் தன்னுடைய பாவங்களிலிருந்து விலகி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தால் மட்டுமே அவனால் நீதியின் பலிகளைச் செலுத்தமுடியும்.

4. மனுஷன் கேட்கும் மிகப்பெரிய கேள்வி - ஒரு விண்ணப்பமும் இரண்டு ஆசீர்வாதங்களும்

சங் 4:6 எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர்; கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

சங் 4:7 அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.

சங் 4:8 சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.

தாவீது அப்சலோமிற்குத் தப்பி ஓடுகிறான். எண் 6:23-26-இல் கட்டளையிடப்பட்டது போன்று தாவீதை ஆசீர்வதிப்பதற்கு அவனோடு ஆசாரியர் யாருமில்லை. *(2சாமு 15:32-37)*

தாவீது தன்னுடைய குமாரனாகிய அப்சலோமிடமிருந்து தப்பித்து ஓடுகிறான். அவனுடைய சொந்த ஜனங்களே தாவீதைக் கைவிட்டுவிட்டு விலகிப் போய்விட்டார்கள். இப்படிப்பட்ட துயரமான சமயத்தில் அவனுடைய ஆத்துமாவில் தேவனுடைய சந்தோஷம் இருந்தது. மனுஷர் பொதுவாக தானியமும், திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தில் சந்தோஷப்படுவார்கள். தாவீதிடம் இருந்த சந்தோஷம் இதைவிட அதிகம். *(உபா 33:28; 2இராஜா 18:32; ஏசா 36:17)*

தாவீது கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருந்தான். அவனுடைய ஆத்துமாவில் அமைதியிருந்தது. ஆகையினால் அவனுடைய ஜீவனுக்கு எதிராக ஏராளமான சதித்திட்டங்கள் எழும்பி வந்த போதிலும், தாவீதினால் நிம்மதியாக சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்ய முடிந்தது. *(2சாமு 17:2)*

5 அதிகாரம்

(நெகிலோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்புக்காக முதலாவது ஜெபம்

பொருளடக்கம்

1. யெகோவா தேவனிடம் ஜெபம் - மூன்று விண்ணப்பங்கள் - அநுதின அர்ப்பணிப்பு - (5:1-3)
2. ஜெபிப்பதற்கான ஆறு காரணங்கள் - தேவனுடைய பண்பு வெளிப்படுகிறது - (5:4-6)
3. தாவீதின் சுபாவம் - தேவனிடம் கேட்கப்படும் இரண்டு வேண்டுகோள்கள் - (5:7-8)
4. தேவனுடைய விரோதிகளின் நான்குவிதமான சுபாவங்கள் - அவர்களுடைய அழிவிற்காக மூன்று வேண்டுகோள்கள் - (5:9-10)
5. மூன்று வேண்டுகோள்கள் - நீதிமானுக்கு வரும் ஐந்துவிதமான ஆசீர்வாதங்கள் - (5:11-12)

1. யெகோவா தேவனிடம் ஜெபம் - மூன்று விண்ணப்பங்கள் - அநுதின அர்ப்பணிப்பு

சங் 5:1 கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும்.

சங் 5:2. நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்.

சங் 5:3. கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.

சங் 5:3 காலையில் பாடப்படும் சங்கீதம். நான்காம் சங்கீதம் மாலையில் பாடப்படும் சங்கீதம். (சங் 5:4,8) சங் 4:8-இல் தாவீது சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்தான் என்று வாசிக்கிறோம். இப்பொழுது தேவனைப் பற்றி தியானிக்கவும், ஜெபிக்கவும் நித்திரையிலிருந்து காலையில் எழும்புகிறான்.

"நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்; என் ராஜாவே, என் தேவனே......". தேவன் தாவீதின் இராஜாவாக இருந்தார். தாவீதை ஆளுகை செய்து அவனுடைய ஜீவியத்தில் அவனை வழிநடத்தினார். கர்த்தர் தாவீதினுடைய தேவனாக இருந்து அவனை இரட்சித்து பாதுகாத்து பராமரிக்கிறார். (சங் 5:2,4-6,10-12)

நாம் ஜெபிக்க வேண்டிய ஏழு வேளைகள்

1. காலையில் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ண வேண்டும் (சங் 5:3; சங் 88:13; சங் 143:8)
2. இரவும் பகலும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும் (சங் 88:1)
3. அந்தி சந்தி மத்தியான வேளைகளில் தியானம் பண்ண வேண்டும் (சங் 55:17; தானி 6:10)
4. இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ண வேண்டும் (லூக்கா 6:12)
5. இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் (1தெச 5:17)
6. எல்லா சமயத்திலும் ஜெபம் பண்ண வேண்டும் (எபே 6:18)
7. ஏற்ற சமயத்தில் ஜெபம் பண்ண வேண்டும் (எபி 4:16)

"காத்திருப்பேன்" [look up] என்று தாவீது கூறுவதுபோல நாமும் ஜெபம் பண்ணும்போது தேவனுடைய சப்தத்தைக் கேட்பதற்காக தேவனையே நோக்கிப்பார்த்து காத்திருக்க வேண்டும். (மாற்கு 6:41; யோவான் 17:1)

5 அதிகாரம்

2. ஜெபிப்பதற்கான ஆறு காரணங்கள் - தேவனுடைய பண்பு வெளிப்படுகிறது

சங் 5:4 நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல; தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை.

சங் 5:5 வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்.

சங் 5:6 பொய்பேசுகிறவர்களை அழிப்பீர்; இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையும் கர்த்தர் அருவருக்கிறார்.

தேவன் பரிசுத்தமானவர். ஆகையினால், அவர் துன்மார்க்கத்தில் பிரியப்படமாட்டார். (சங் 5:4) அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறார். (சங் 5:5) சூதுள்ள மனுஷரை அருவருப்பார். (சங் 5:6) தேவனுக்கு ஒரு ஆத்துமா உள்ளது என்பதற்கு இவை அனைத்தும் ஆதாரமாகும். ஆத்துமா பிரியப்படும், வெறுக்கும், நேசிக்கும், அருவருக்கும்.

தேவன் வெறுக்கும் காரியங்கள்

1. தேவன் துன்மார்க்கத்தில் பிரியமாயிருப்பதில்லை
2. தேவனிடத்தில் தீமை சேர்வதில்லை (சங் 5:4)
3. வீம்புக்காரர் கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்
4. அக்கிரமக்காரர் யாவரையும் தேவன் வெறுக்கிறார் (சங் 5:5)
5. கர்த்தர் பொய்பேசுகிறவர்களை அழிப்பார் (சங் 5:6)
6. இரத்தப்பிரியனை கர்த்தர் அருவருக்கிறார்
7. சூதுள்ள மனுஷனை கர்த்தர் அருவருக்கிறார்

வீம்புக்காரர் (shine)- הָלַל - haw-lal' - 1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்புக்காரர்

வீம்புக்காரர் என்னும் சொல் "ஹலால்" என்னும் எபிரெய சொல்லின் தமிழாக்கமாகும். இச்சொல்லை இரண்டு விதமாக மொழிபெயர்க்கலாம். 1. வீம்புக்காரர் 2. பிரகாசம். இவ்விரண்டு பொருள்களும் வித்தியாசமாக இருந்தாலும் இந்த எபிரெயச்சொல்லுக்கு பரிசுத்த வேதாகமத்தில் இவ்விரண்டு பொருள்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வீம்புக்காரர் (சங் 5:5; சங் 73:3; சங் 75:4) பெருமைபாராட்டுகிறவர் (சங் 10:3; சங் 34:2; சங் 44:8; சங் 49:6; சங் 52:1; சங் 97:7; 1இராஜா 20:11; நீதி 20:14; நீதி 25:14; நீதி 27:1) துதித்தல் (சங் 18:3; சங் 22:22-23; சங் 96:4; சங் 105:45; சங் 106:1,48; சங் 111:1; 1நாளா 16:4, 25,36; 2நாளா 5:13) மேன்மை (சங் 63:11; சங் 64:10; சங் 105:3; சங் 106:5; 1நாளா 16:10)

அக்கிரமம்(iniquity)- אָוֶן - aw'-ven - 205

ஆ.பெ.சொ.-அக்கிரமம், துக்கங் கொள்தல், பாவம், சபித்தல், தீங்கு, பழிசாட்டுதல், துரோகஞ்செய்தல், வருத்தம், அநியாயம் பேசுதல்

பாவத்தில் விழுந்துவிட்ட மனுஷனுடைய இருதயம் பாழ்பட்டிருக்கும். அவனுடைய பாழான இருதயத்திலிருந்து அக்கிரமச்சிந்தையே வெளிப்படும்.

விக்கிரக ஆராதனையோடு இந்த சொல் பயன்படுத்தப்பட்டுள்ள வசனங்கள். (1சாமு 15:23; ஓசி 12:11) அக்கிரகமம், மாயை ஆகிய பொருள்களோடு பயன்படுத்தப்பட்டுள்ள வசனங்கள். (யோபு 15:35; சங் 10:7; நீதி 22:8; சக 10:2)

5 அதிகாரம்

3. தாவீதின் சுபாவம் - தேவனிடம் கேட்கப்படும் இரண்டு வேண்டுகோள்கள்

சங் 5:7 நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன்பணிந்து கொள்ளுவேன்.

சங் 5:8 கர்த்தாவே, என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.

"நானோ" - (சங் 17:15; சங் 26:11; சங் 35:13; சங் 41:12; சங் 55:16; சங் 69:13; சங் 73:2).

மிகுந்தது (multitude)- רֹב - robe - 7230

ஆண்பால் பெயர்ச்சொல் - பெருகுதல், மிகுந்திருத்தல், மகத்துவம், திரளான, தொகை, திரட்சி, பரிபூரணம், திரண்டிருத்தல், அதிகமாக்குதல், பற்பல, வேண்டியமட்டும், பெரியது, எல்லாம், ஏராளம், முதிர், பூரணம், கொடுமை, பெரும்பாலும், குறைவற, மகத்துவம், உக்கிரம், வயது, சென்றது, சகல, அநேகர், பெருக்கம்

ஆயிரக்கணக்கில் பெருகுதல், தேவனுடைய கிருபையும் இரக்கமும் தாவீதினிடத்தில் பெருகியிருந்தது.

கிருபை(mercy)- חֶסֶד - kheh'-sed - 2617

ஆண்பால் பெயர்ச்சொல் - கிருபை (சங் 5:7; சங் 13:5; சங் 18:50; சங் 21:7)

பயபக்தி [fear] - தேவனுடைய சமூகத்தில் நாம் பயபக்தியுடன் காணப்படவேண்டும்.

ஆலயம்(temple)- הֵיכָל - hay-kawl' - 1964

பொதுபெயர்ச்சொல் - ஆலயம், அரமனை, கோவில், சந்நிதி, தேவாலயம்.

தேவனுடைய வாசஸ்தலம் - பரலோக ஆலயம் - பூமியில் தேவன் வாசம் பண்ணும் ஆசரிப்புக்கூடாரம் - தேவன் மனுஷர் மத்தியில் தமது ஆலயத்தில் வாசம் பண்ணுகிறார். (1சாமு 1:9; 1சாமு 3:3)

மத் 6:13-ஆவது வசனத்தில் "எங்களைச் சோதனைக்குட் படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்னும் கருத்துடன் ஒத்துள்ளது.

"......எனக்குமுன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்". கர்த்தருடைய வழி நமது வழியை சீர்ப்படுத்தி நம்மை நேரான பாதையில் வழிநடத்தும்.

4. தேவனுடைய விரோதிகளின் நான்குவிதமான சுபாவங்கள் - அவர்களுடைய அழிவிற்காக மூன்று வேண்டுகோள்கள்

சங் 5:9 அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது; அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள்.

சங் 5:10 தேவனே, அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும்; அவர்கள் தங்கள் ஆலோசனைகளாலேயே விழும்படி செய்யும்; அவர்கள் துரோகங்களினுடைய திரட்சியினி மித்தம் அவர்களைத் தள்ளிவிடும்; உமக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்களே.

5 அதிகாரம்

துன்மார்க்கரின் தீய சுபாவங்கள்

1. உண்மையில்லாதவர்கள் (Unfaithful) துன்மார்க்கர் கூறும் காரியங்களை நம்ப முடியாது. அவர்களும் அதில் ஸ்திரமாக இருக்க மாட்டார்கள். உறுதிப்படுத்து (1நாளா 16:30) நிலைக்கப்பண்ணுதல் (2சாமு 7:13; 1நாளா 17:12; 2நாளா 17:5; சங் 93:1; ஆப 2:12) தாங்குதல் (நியா 16:26) நிலை (யோசு 3:17; யோசு 4:3) நிலைப்படுத்துதல் (2சாமு 7:12; 1நாளா 17:11; 1நாளா 22:10)
2. கேடுபாடுள்ள உள்ளம் உடையவர்கள் (Inwardly wicked)
3. அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழியைப் போன்றவர்கள். (சங் 5:9; ஏசா 22:16; எரே 5:16) பிரேதக்குழி (சங் 5:9; ஏசா 22:16; எரே 5:16) பொல்லாங்கானவைகள் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மாற்கு 7:19-21)
4. நாவினால் இச்சகம் பேசுவார்கள் (சங் 5:9; சங் 12:3; நீதி 26:28; நீதி 28:23; நீதி 29:5)

ஸ்திரப்படுத்து (stable) - כּוּן - koon - 3559

வினைச்சொல் - ஸ்திரப்படுத்து, ஆயத்தப்படுத்து, முஸ்திப்பாக்கு, எத்தனப்படுத்து

(தீய) ஆசை (Inwardly wicked) - הַוָּה - hav-vaw' - 1942

பெ.பெ. சொ. - (தீய) ஆசை, (தீய) ஆவல் - கேடுபாடு (சங் 5:9; சங் 52:7; சங் 55:11) ஆகாதவைகள் (யோபு 6:30) கொடுங்கோல் (சங் 94:20) தீவினை (நீதி 11:6)

קֶרֶב - keh'-reb - 7130

ஆண்பால் பெயர்ச்சொல் - நடுவில், நடுவே, எங்கும், நடுவிலிருந்து, உட்கருத்து, உட்புறத்தில் - உள்ளம் (சங் 5:9; சங் 49:11; சங் 64:6; ஏசா 16:11; எரே 31:33) உள்ளவர்கள் (யாத் 29:13-22; லேவி 1:9-13; லேவி 3:3-14; லேவி 4:8-11; லேவி 7:3; லேவி 8:16-25; லேவி 9:14)

கல்லறை(grave)- קֶבֶר - keh'-ber, kib-raw' - 6913

ஆண்பால் பெயர்ச்சொல் - கல்லறை, குகை, பிரேதக்குழி, புதைக்கிற ஸ்தானம்

"தேவனே, அவர்களைக் குற்றவாளிகளாகத் தீரும்....". இந்த ஜெபத்தில் தேவன் வருங்காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி காண்கிறோம். (சங் 5:4-6) "தேவனே உமது இராஜ்ஜியம் வருவதாக" என்று ஜெபிக்கும்போது, பாவத்தையும் வியாதியையும் கீழ்ப்படியாமையையும், முரட்டாட்டத்தையும், சாபத்தையும் தேவன் அழிக்க வேண்டுமென்று நாம் ஜெபிக்கிறோம். தேவனுடைய இராஜ்ஜியம் வருவதன் நோக்கமேஇதுதான். (1கொரி 15:24-28; யூதா 1:14; சக 14; மத் 25:31-46; வெளி 19:11-20:10)

"....அவர்கள் தங்கள் ஆலோசனைகளாலேயே விழும்படி செய்யும்....". தாவீதின் இந்த ஜெபத்திற்கு அகிதோப்பேலின் மூலமாக பதில் கிடைத்தது. (2சாமு 15:31; 2சாமு 17:14,23)

துரோகம் (transgressions)- פֶּשַׁע - peh'-shah - 6588

ஆண்பால் பெயர்ச்சொல் - துரோகம், மீறுதல், பாதகம், துரோகப் பேச்சு, பாவம், பாதகமார்க்கம், குற்றம், வழக்கு, மீறுதல் - (சங் 5:10; சங் 51:3; நீதி 28:24; ஏசா 43:25)

"....உமக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்களே". தாவீதிற்கு விரோதமாக கலகம் பண்ணுகிறவர்கள் மெய்யாகவே தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணுகிறார்கள். ஆகையினால், கலகக் காரர்கள் தேவனுடைய நியாயத் தீர்ப்புக்களுக்கு உட்படுவார்கள்.

5 அதிகாரம்

5. மூன்று வேண்டுகோள்கள் - நீதிமானுக்கு வரும் ஐந்துவிதமான ஆசீர்வாதங்கள்

சங் 5:11 உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக.

சங் 5:12 கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்து கொள்ளுவீர்.

தாவீது தனக்காக ஜெபம் பண்ணிவிட்டு, (சங் 5:7-8), பின்பு துன்மார்க்கருக்காக ஜெபிக்கிறான். (சங் 5:9-10) அதன்பின்பு தாவீது நீதிமான்களுக்காக ஜெபிக்கிறான். (சங் 5:11-12)

தேவனை நம்பியிருக்கிறவர்களிடத்தில் காணப்படும் முக்கியமான குணங்கள்

1. அவர்கள் தேவனை நம்புகிறவர்கள்
2. அவர்கள் தேவனையும் அவருடைய நாமத்தையும் நேசிக்கிறவர்கள்
3. அவர்கள் நீதிமான்கள் (சங் 5:12)

நீதிமானுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1. அவர்கள் கர்த்தரிடத்தில் அடைக்கலமாக இருப்பார்கள்
2. அவர்கள் கர்த்தரிடத்தில் சந்தோஷமாக இருப்பார்கள்
3. அவர்கள் கர்த்தரிடத்தில் பாதுகாப்பாக இருப்பார்கள்
4. அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள்
5. அவர்களிடத்தில் கர்த்தருடைய காருணியம் இருக்கும் (சங் 5:12)

காப்பாற்றுதல் (defendest)- סָכַךְ - saw-kak', saw-kak' - 5526

விளைச்சொல் - மறைந்திரு, மூடு, மூடிக்கொள்ளு, கவிந்திரு, காப்பாற்று, மூடுகிறவைகளாயிரு, மறைந்துவை, வளைந்து கொள்ளப்பட்டவனாயிரு, அடைத்தவராயிரு, கலக்கப்பண்ணு, கலந்திரு, மறைவிடமாயிரு, மலஜலாதிக்குப் போ - "பாதுகாப்பு" - (சங் 5:11; நாகூம் 2:5) "மூடுதல்" - (யாத் 33:22; யாத் 37:9; யாத் 40:3,21; 1சாமு 24:3; யோபு 40:22; சங் 91:4)

கேடகம் (shield) - צִנָּה - tsin-naw' - 6793

பெண்பால் பெயர்ச்சொல் - கேடகம் - (சங் 91:4; 1சாமு 17:7,41; 1நாளா 12:8,24,34; 2நாளா 11:12; எரே 46:3)

6 அதிகாரம்

(நெகிநோத்தென்னும் வாத்தியத்தில் செமினீத்தென்னும் இராகத்தால் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மூன்றாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. ஜெபம் - ஏழு விண்ணப்பங்கள் - தேவனிடமிருந்து பதில் பெறுவதற்கு பத்துகாரணங்கள் - (6:1-7)
2. ஜெபத்திற்குப்பதில் - விரோதிகளுக்கு வரவேண்டிய மூன்று காரியங்கள் - அதற்கு மூன்று காரணங்கள் - (6:8-10)

1. ஜெபம் - ஏழு விண்ணப்பங்கள் - தேவனிடமிருந்து பதில் பெறுவதற்கு பத்துகாரணங்கள்

சங் 6:1 கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்து கொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்திலே என்னைத் தண்டியாதேயும்.

சங் 6:2 என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன்; என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது.

சங் 6:3 என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது; கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்.

சங் 6:4 திரும்பும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்; உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.

சங் 6:5 மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்?

சங் 6:6 என் பெருமூச்சினால் இளைத்துப் போனேன்; இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்.

சங் 6:7 துயரத்தினால் என் கண்கள் குழிவிழுந்துபோயிற்று, என் சத்துருக்கள் அனைவர்நிமித்தமும் மங்கிப்போயிற்று.

தாவீது ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்து கொள்ளாதேயும்
2. உக்கிரத்திலே என்னைத் தண்டியாதேயும்
3. என்மேல் இரக்கமாயிரும் (சங் 6:2)
4. என்னைக் குணமாக்கும்
5. திரும்பும், கர்த்தாவே (சங் 6:4)
6. என் ஆத்துமாவை விடுவியும்
7. உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்

தாவீது பத்சேபாளுடன் பாவம் செய்த பிறகு அவனுக்கு கொடிய வியாதி உண்டாயிற்று. தேவன் அவன்மீது கோபமாயிருந்தார். தாவீது தன் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டான். (சங் 38:1-15)

"மரணத்தில் உம்மை நினைவுகூர்வதில்லை" சரீரம் மட்டுமே மரிக்கும். ஆவியும் ஆத்துமாவும் மரிப்பதில்லை. (1பேதுரு 3:4) சரீரங்கள் தேவனை நினைவு கூருவதில்லை. (சங் 30:9; சங் 115:17; பிர 3:19-20) ஆவியும், ஆத்துமாவும் மண்ணல்ல. சரீரம் மரித்த பின்பும் இவை இரண்டும் உணர்வுடன் இருக்கும். (சங் 16:10; ஏசா 14:9; மத் 12:40; லூக்கா 16:19-31; எபி 12:23; வெளி 6:9-11)

பாதாளம் - [grave] שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

6 அதிகாரம்

தாவீது தன் துயரத்தில் கூறியவை

1. நான் பெலனற்று இருக்கிறேன் (சங் 6:2)
2. நான் வியாதியாயிருக்கிறேன்
3. என்எலும்புகள்நடுங்குகிறது (சங் 6:3)
4. என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது (சங் 6:2,3)
5. என் பெருமூச்சினால் இளைத்துப் போனேன் (சங் 6:6)
6. இராமுழுவதும் அழுகிறேன்
7. துயரத்தினால் என் கண்கள் குழி விழுந்துபோயிற்று (சங் 6:7)
8. என் கண்கள் சத்துருக்கள் நிமித்தம் மங்கிப்போயிற்று

2. ஜெபத்திற்குப் பதில் - விரோதிகளுக்கு வரவேண்டிய மூன்று காரியங்கள் - அதற்கு மூன்று காரணங்கள்

சங் 6:8 அக்கிரமக்காரரே, நீங்கள் எல்லாரும் என்னைவிட்டு அகன்று போங்கள்; கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.

சங் 6:9 கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்; கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக் கொள்ளுவார்.

சங் 6:10 என் பகைஞர் எல்லாரும் வெட்கி மிகவும் கலங்கிப்போவார்கள்; அவர்கள் பின்னாகத் திரும்பிச் சடிதியிலே வெட்கப்படுவார்கள்.

தாவீது வியாதியாயிருக்கையில் அவனுடைய விரோதிகள் அவனுடைய பாவங்களுக்காக அவனை இகழ்ந்தார்கள். ஆகையினால் தாவீது தன் விரோதிகளைப் பார்த்து "அக்கிரமக்காரரே, நீங்கள் எல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள்" என்று கூறுகிறான்.

"கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்". கர்த்தர் தன் விண்ணப்பத்தைக் கேட்டதாக, தாவீது தன்னைத் தானே உற்சாகப்படுத்திக் கொள்கிறான். தன் விரோதிகள் வெட்கப்பட்டுப் போவார்கள் என்று நம்புகிறான். தன் விரோதிகள் அழிய வேண்டுமென்று தாவீது விரும்பாமல், அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்புகிறான்.

திரும்பு (return) - שׁוּב - shoob - 7725

வினைச்சொல் - திரும்பு, திரும்பப்போ, திரும்பவா, பின்வாங்கு, திருப்பு வா, அளி, மனந்திரும்பு, சாய், மாற்று, ஆறு, மாறு, நீங்கு, வற்றிக்கொள், வற்றிப்போ, தணி, புரள், விலகு, தீர், திரி, மறுபடியும்போ, வடி, திரும்பிச்சேர், அழைத்துக்கொள், திரும்பயனுப்பிவிடு, வை, செல், திரும்பக்கிடை, சீர்ப்படு, திரும்ப சீர்ப்படு, திரும்ப முன் போலிரு, பின்செல், விலகிப்போ, வந்திரு, கொண்டுவா, தள்ளப்படு, சரிக்கட்டு, பின்னிட்டுப்போ, திரும்பிவிடு, தவறு, கிடை, திரும்பவிழு, பின்னிடை, யாகூப், திருப்பப்படு, மாற்றாட்டம் பண்ணு, இன்னமும், திரும்புகிறவர், வரவு, கெடு, நடு, அலையவிடு, பிடுங்கு, தேற்று, திருத்துகிறவன், திரும்பவும் தா, திரும்பப் போடும்படிசெய், அனுப்பிவிடு, திரும்ப அனுப்பு, திரும்பப்பண்ணு, திருப்பிக்கொள், திருப்பிக்கொண்டுவந்தவன், திரும்பவை, செலுத்து, திரும்பச் சேர்த்துக் கொள், பலனளி, நீக்கிவிடு, முடக்கிக்கொள், விலக்கு, கொண்டு போ, பாவநிவர்த்தி செய், கொடுத்துவிடு, சேர், திரும்ப அழைத்துவா, எவ்விதத்திலும், முடக்கு, மறுமொழிசொல், திரும்பத் தன் வசமாக்கிக்கொள், திரும்பஅழை, மறுஉத்தரவுகொடு, திரும்பச் சொல்லு, மறுமொழியாகச் சொல்லு, மறு, திரும்ப எடு, காப்பாற்று, திரும்ப எழுப்பு, திரும்ப போடு, திரும்ப அழைத்துக் கொண்டுவா, தப்புவி, கிடைக்கும்படிசெய், திருப்பிக்கொண்டுவா, கொடு, மறி, திரும்பஒப்புவி, மறுபடியும் அழைத்துப்போ, மறுபடியும் வை, கொண்டுவந்திரு, சரிக்குச் சரிக்கட்டு, தெரிவி, எடுத்துக்கொள், திரும்பப்போகப் பண்ணு, வாங்கு, திரும்ப நிறுத்து, எடு, திரும்பப் பிடி, மறுமொழி, அனுப்பு, தடைபண்ணு, எழுப்பு, மறுஉத்தரவு கொடுக்க ஏவு, ஒப்புக்கொடு, மறுஉத்தரவு சொல்லு, பிரதியுத்தரம்சொல், மழுக்கிப் போடு, திரும்பச் சீர்ப்படுத்து, மறுபடியும் அழைப்பி, உருட்டு, குளிரப்பண்ணு, தடு, திரும்பக் கட்டளையிடு, திரும்ப நடத்திக் கொண்டுபோ, உத்தரவு சொல், திரும்ப உள்ளேவாங்கிக் கொள், திரும்ப அழைத்துப்போ, ஆறுதல் செய், ஆகப்பண்ணு, திரும்பக்கொண்டு வா, திரும்பப்படு - (சங் 19:7; சங் 51:13; ஏசா 1:27)

7 அதிகாரம்

(பென்யமீனியனாகிய கூஷ் என்பவனுடைய வார்த்தைகளினிமித்தம் தாவீது கர்த்தரை நோக்கிப் பாடின சிகாயோன் என்னும் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்புக்காக இரண்டாவது ஜெபம்

பொருளடக்கம்

1. ஜெபம் - எட்டு விண்ணப்பங்கள் - தேவனிடமிருந்து பதில் பெறுவதற்கு பன்னிரெண்டு காரணங்கள் - (7:1-10)
2. தேவனும் துன்மார்க்கனும் - துன்மார்க்கனின் ஏழு விதமான பாவங்கள் - தேவனுடைய ஆறு வழிகள் - (7:11-16)
3. தாவீது தேவனைத் துதிக்கிறான் - (7:17)

1. ஜெபம் - எட்டு விண்ணப்பங்கள் - தேவனிடமிருந்து பதில் பெறுவதற்கு பன்னிரெண்டு காரணங்கள்

சங் 7:1 என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும்.

சங் 7:2 சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவைப் பிடித்துக் கொண்டுபோய், விடுவிக்கிறவன் இல்லாமையால், அதைப் பீறாதபடிக்கு என்னைத் தப்புவியும்.

சங் 7:3 என் தேவனாகிய கர்த்தாவே, நான் இதைச் செய்ததும், என் கைகளில் நியாயக்கேடிருக்கிறதும்,

சங் 7:4 என்னோடே சமாதானமாயிருந்தவனுக்கு நான் தீமைசெய்ததும், காரணமில்லாமல் எனக்குச் சத்துருவானவன் நான் கொள்ளையிட்டதும் உண்டானால்,

சங் 7:5 பகைஞன் என் ஆத்துமாவைத் தொடர்ந்துபிடித்து, என் பிராணனைத் தரையிலே தள்ளி மிதித்து, என் மகிமையைத் தூளிலே தாழ்த்தக்கடவன். (சேலா)

சங் 7:6 கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்தில் எழுந்திருந்து, என் சத்துருக்களுடைய மூர்க்கங்களினிமித்தம் உம்மை உயர்த்தி, எனக்காக விழித்துக் கொள்ளும்; நியாயத்தீர்ப்பை நியமித்திருக்கிறீரே.

சங் 7:7 ஜனக்கூட்டம் உம்மைச் சூழ்ந்து கொள்ளும்; அவர்களுக்காகத் திரும்பவும் உன்னதத்திற்கு எழுந்தருளும்.

சங் 7:8 கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ்செய்வார்; கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ் செய்யும்.

சங் 7:9 துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும்; நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக; நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங் களையும் சோதித்தறிகிறவர்.

சங் 7:10 செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது.

பென்யமீனியனாகிய கூஷ் என்பவன் யார் என்று தெளிவாகத் தெரியவில்லை

கர்த்தர் (LORD)- יְהֹוָה, יְהֹוָה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ.-கர்த்தர், ஆண்டவர், யெகோவா

கர்த்தர் (LORD)- אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்.

7 அதிகாரம்

கர்த்தரிடம் தாவீது ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் விலக்கி இரட்சியும் *(சங் 7:1)*
2. என்னைத் துன்பப் படுத்துகிறவர்களிடமிருந்து என்னைத் தப்புவியும்
3. கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் எழுந்திருந்து, எனக்காக விழித்துக் கொள்ளும் *(சங் 7:6)*
4. என் சத்துருக்களுடைய மூர்க்கங்களிலிருந்து உம்மை உயர்த்தும்
5. நியாயத்தீர்ப்புக்காக விழித்துக் கொள்ளும்
6. கர்த்தாவே, என் நீதியின்படியும், என்னிலுள்ள உண்மையின்படியும் நியாயஞ்செய்யும் *(சங் 7:8)*
7. துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும் *(சங் 7:9)*
8. நீதிமானை ஸ்திரப்படுத்தும்

"சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவைப் பிடித்துக்கொண்டுபோனான்". தாவீதின் விரோதி சிங்கத்திற்கு ஒப்பானவன். சிங்கம் மிருகங்களுக்கு இராஜா. சவுல் தேசத்திற்கு இராஜா. சிங்கம் தன் இரையைப் பிடித்துப் பீறிப்போடும். அதுபோல சவுல் தாவீதைப் பிடித்துப் பீறிப்போடப்பார்க்கிறான். சவுல் 21 முறை தாவீதைக் கொலை பண்ண முயற்சி செய்தான். *(1சாமு 18:1-26:2)*

தாவீது சவுலின் இராஜ்யத்தைப் பிடுங்கி அவனைக் கொலை செய்ய முயற்சி பண்ணினான் என்பது தாவீதின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக தாவீது அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுக்கிறான். இக்குற்றச்சாட்டுக்கள் உண்மையாயின் தன் ஜீவனை ஒப்புக் கொடுப்பதாகக் கூறுகிறான்.

தாவீது மறுக்கும் குற்றச்சாட்டுக்கள்

1. நான் சூழ்ச்சி செய்து இராஜ்யத்தை அபகரிக்கவில்லை
2. நான், சதி செய்து சவுலைக் கொலை செய்யவில்லை
3. என்னோடே சமாதானமாயிருந்த சவுலுக்கு, நான் தீமை செய்யவில்லை *(சங் 7:4)*
4. என் சத்துருவான சவுலை நான் கொள்ளையிடவில்லை *(சங் 7:4; 1சாமு 24:1-22; 1சாமு 26:1-25)*

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையாயின்.....

1. பகைஞனாகிய சவுல் தன் ஆத்துமாவை பிடித்துக் கொள்வான் *(சங் 7:5)*
2. என் பிராணனைத் தரையிலே தள்ளி மிதித்துப்போடுவான்
3. என் மகிமையைத் தூளிலே தாழ்த்துவான்

"கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்தில் எழுந்திரும்" - தாவீது மோசேயைப் போல ஜெபிக்கிறான். (எண் 10:35; சங் 3:7; சங் 9:19; சங் 10:12) எழுந்திரு என்பது "நீர் எழுவீர்" (சங் 94:2; ஏசா 33:10) "விழித்தெழும்பும்" (சங் 35:23; சங் 44:23; சங் 59:5) என்று பொருள்படும்.

"என் சத்துருக்களுடைய மூர்க்கங்களினிமித்தம் உம்மை உயர்த்தி, எனக்காக விழித்துக்கொள்ளும்" என்று கூறி தாவீது தேவனை எழுப்ப வேண்டுமென்று நினைக்கிறான்.

நியாயத்தீர்ப்பிற்காக ஜெபம்

கர்த்தர் நியமித்துள்ள நியாயத்தீர்ப்பிற்காக தாவீது ஜெபிக்கிறான். தேவனுடைய வார்த்தையின் பிரகாரம், இப்பேர்ப்பட்ட ஜெபம் சரியானதே! தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க வேண்டுமென்று நாம் ஜெபிக்க வேண்டும். *(மத் 6:10)*

7 அதிகாரம்

ஜனக்கூட்டம் கர்த்தரைச் சூழ்ந்து கொள்ளும். (மத் 25:41; 2தெச 1:7-10; யூதா 1:14; சக 14; யோவே 3; எசே 38-39) கர்த்தர் அவர்களுக்காக திரும்பவும் உன்னதத்திற்கு எழுந்தருளுவார். (சங் 7:7) அப்பொழுது கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ் செய்வார். (சங் 7:8) கர்த்தர், துன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப் பண்ணி, (சங் 7:9) நீதிமானை ஸ்திரப்படுத்துவார். (சங் 7:9; 1கொரி 15:24)

"நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்" - தேவன் நமது இருதயங்களை சோதித்தறிகிறார். அது துன்மார்க்கமானது. அதிக கேடுள்ளது. (எரே 17:9-10) அவர் நமது உள்ளந்திரியங்களை ஆளுகை செய்கிறார். (யோபு 16:13; யோபு 19:27; சங் 16:7; சங் 26:2; சங் 73:21; சங் 139:13; நீதி 23:16; ஏசா 11:5; எரே 11:20; எரே 12:2; எரே 17:10; எரே 20:12; வெளி 2:23)

தேவனே என் கேடகம். அவர் நீதிமானை இரட்சிக்கிறவர். ஆகையினால் எனது வருங்காலத்தைப் பற்றி கவலைப்படேன். பயப்படேன்.

2. தேவனும் துன்மார்க்கனும் - துன்மார்க்கனின் ஏழு விதமான பாவங்கள் - தேவனுடைய ஆறு வழிகள்

சங் 7:11 தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்

சங் 7:12 அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்; அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்.

சங் 7:13 அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம் பண்ணினார்; தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார்.

சங் 7:14 இதோ, அவன் அக்கிரமத்தைப் பெறக் கர்ப்ப வேதனைப்படுகிறான்; தீவினையைக் கர்ப்பந்தரித்து,பொய்யைப் பெறுகிறான்.

சங் 7:15 குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான்; தான் வெட்டின குழியில்தானே விழுந்தான்.

சங் 7:16 அவன் தீவினை அவன் சிரசின் மேல் திரும்பும், அவன் கொடுமை அவன் உச்சந்தலையின் மேல் இறங்கும்.

தேவனே என் கேடகம். அவர் நீதிமானை இரட்சிக்கிறவர். ஆகையினால் எனது வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்படேன். பயப்படேன்.

"நாள்தோறும்" என்பது எப்பொழுதும் என்று பொருள்படும். பாவத்தை வெறுப்பது தேவனுடைய சுபாவம். (எபி 13:8; மல் 3:6; ரோம 1:18; ரோம 2:5)

துன்மார்க்கன் தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான். (சங் 7:14-16)

உச்சந்தலை, சிரசு என்பது இங்கு மண்டை ஓட்டைக் குறிக்கும். (சங் 7:15; நீதி 26:27) தான் வெட்டிய குழியில் தானே விழுவான்.

3. தாவீது தேவனைத் துதிக்கிறான்

சங் 7:17 நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

உன்னதமானவர் [most high] - עֶלְיוֹן - el-yone' - 5945

சிறந்திருப்பவர், மேன்மையானவர், உன்னதமானவர், மேலானவர், உயர்ந்தவர், மேற்புறமானவர், மேல்நிலையானவர், உயரமானவர்.

இச்சொல் முதன் முறையாக ஆதி 14:18-இல் வருகிறது. சங்கீதத்தில் 22தடவைகள் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சங்கீதம் - தொகுப்புரை

8 அதிகாரம்

(கித்தீத் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மேசியாவைப்பற்றிய இரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மேசியாவின் முதலாவது வருகை - (8:1-2)
2. மேசியாவின் இரண்டாவது வருகை - (8:3-9)

1. மேசியாவின் முதல்வது வருகை - (மத் 21:16)

சங் 8:1 எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ள தாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.

சங் 8:2 பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்.

சங்கீதம் - 8-இன் முதல் வார்த்தை "கர்த்தர்" என்று ஆரம்பித்து கடைசி வார்த்தை "கர்த்தர்" என்று முடிகிறது. (சங் 8:1,9)

கர்த்தர் (LORD) יְהוָֹה, יְהוִֹה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ.-கர்த்தர், ஆண்டவர், யெகோவா

கர்த்தர் (LORD) אֲדֹנָי - ad-o-noy' - 136

ஆ.பெ.சொ.-கர்த்தர், ஆண்டவர்

கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார்

தேவனுடைய நாமம் பூமியிலுள்ள எல்லா நாமங்களுக்கும் மேலாக மேன்மையுள்ளதாக இருக்கிறது. தேவனுடைய மகிமை வானங்களை விட உயர்ந்தது. கிருபையின் காலத்தில் சுவிசேஷத்தின் மூலமாக தேவன் அதிகமாக உயர்த்தப்படுகிறார், மேன்மைப்படுத்தப்படுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 2

"பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்" (சங் 8:2) - இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி மத் 21:16-ல் நிறைவேறியிருக்கிறது.

அஸ்திபாரப்படுத்து (ordained) יָסַד - yaw-sad' - 3245

வினைச்சொல் - அஸ்திபாரப்படுத்து, ஸ்தாபி, ஏற்படுத்து, அஸ்திபாரமாக்கு, அஸ்திபாரம் போடு, தோன்று, அஸ்திபாரப்படு, கட்டளையிடு, உண்டுபண்ணு, நில்லு, முடி, அஸ்திபாரம் போடப்படு, திடமாயிரு, குவியல்செய் - (சங் 8:2; 1நாளா 9:22)

தேவன் குழந்தைகளையும் பாலகரையும் தெரிந்தெடுத்திருப்பதற்கு காரணங்கள்

1. பகைஞனை அழிப்பதற்கு தேவன் குழந்தைகளையும் பாலகரையும் பயன்படுத்தலாம். பழிகாரனை அழிப்பதற்கு தேவன் பிரசங்கத்தையும் சாட்சியையும் பயன்படுத்தலாம். (சங் 8:2; ரோமர் 1:16; 1கொரி 1:18-24; 1கொரி 2:1-4)
2. குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்து தேவன் தம்மை மகிமைப்படுத்தியிருக்கிறார். இதனால் தேவன் பழிகாரரை அடக்கிப் போடுகிறார். (மத் 21:15-16)
3. தேவனுடையசத்தியம் எளிமையாகவும், சுத்தமாகவும் மனுஷருக்கு பாலகர், குழந்தைகள் மூலமாக வெளிப்படுத்தப்படும். (மத் 11:25-27)

8 அதிகாரம்

4. புதிதாய் பிறந்த குழந்தைகள் தாங்கள் வளரும்படி பாலின்மேல் வாஞ்சையாய் இருக்கும். அதுபோல தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய் இருக்க வேண்டும். (1பேதுரு 2:1-2; எபி 5:11-14)

5. பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. (1கொரி 1:18-24).

6. தேவன் ஞானிகளுடைய ஞானத்தை அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குகிறார். (1கொரி 1:19)

7. இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்குகிறார். (1கொரி 1:20)

8. தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது. (1கொரி 1:25)

9. தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. (1கொரி 1:25)

10. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். (1கொரி 1:27)

11. பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். (1கொரி 1:27)

12. உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். (1கொரி 1:28).

13. உலகம் மேன்மையையும் புகழ்ச்சியையும் நாடுகிறது. ஆனால் தேவனோ இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் தெரிந்து கொண்டார். (1கொரி 1:28)

14. மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு தேவன் குழந்தைகளையும், பாலகரையும் தெரிந்து கொண்டார். (1கொரி 1:29-31)

15. தேவனுடைய ஞானமும், தேவனுடைய வல்லமையும் சாதாரண விசுவாசிகள் மூலமாக வெளிப்படவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். இதை மனுஷருக்கும் தேவதூதருக்கும் வெளிப்படுத்துவதற்காக தேவன் குழந்தைகளையும், பாலகரையும் தெரிந்து கொண்டார். (1கொரி 1:30-31; 1கொரி 4:9-14; எபே 3:8-11)

2. மேசியாவின் இரண்டாவது வருகை - (எபி 2:6-8; 1கொரி 15:24-28)

சங் 8:3 உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது,

சங் 8:4 மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.

சங் 8:5 நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.

சங் 8:6 உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

சங் 8:7 ஆடுமாடுகளெல்லாவற்றையும் காட்டுமிருகங்களையும்,

8 அதிகாரம்

சங் 8:8 ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

சங் 8:9 எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது.

தேவனுடைய கரங்களின் கிரியைகள்

வானங்கள் கர்த்தருக்கு உரியவை. அவற்றை தேவன் தமது விரல்களினால் சிருஷ்டித்தார். தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் சொல்லே "தேவனுடைய விரல்" ஆகும். (யாத் 8:19; லூக்கா 11:20) இந்த வசனத்தில் விரல்கள் என்று பன்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளது தேவனுடைய கரங்களைக் குறிக்கும். தேவன் தமது வார்த்தையினால் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அவற்றில் உள்ளவற்றை தேவன் தமது கரங்களினால் உண்டாக்கினார். (சங் 8:6)

தேவனுடைய கரங்கள் உண்டாக்கியவை

1. பூமி (சங் 8:3,6; சங் 90:2; சங் 95:5)

2. வானங்கள் (சங் 8:3; சங் 19:1; சங் 102:25)

3. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் முதலியவை. (சங் 8:3; ஏசா 40:26; ஏசா 45:12; ஏசா 48:13; 2இராஜா 23:5; எபி 1:10)

4. சர்வ சிருஷ்டிகள் (ஆதி 2:7-25; யோபு 26:13; ரோமர் 9:20; 1தீமோ 2:13)

5. எல்லாம் (நீதி 26:10)

தேவன் சந்திரனையும் நட்சந்திரங்களையும் ஸ்தாபித்ததாக தாவீது கூறுகிறான். சூரியனைப் பற்றி தாவீது எதுவும் கூறவில்லை. இதற்குக் காரணம் தாவீது இந்த சங்கீத வார்த்தைகளை இரவில் தியானம் பண்ணியிருக்கலாம். தாவீது இந்த சங்கீதத்தைப் பகலில் தியானம் பண்ணியிருந்தால், அவன் வானத்தில் சூரியனை மட்டுமே பார்த்திருப்பான். பகலில் சந்திரனையும், நட்சத்திரங்களையும் பார்க்க முடியாது. சூரியனைப் பற்றி தாவீது சங் 19:1-6-ல் குறிப்பிடுகிறான்.

ஸ்திரப்படுத்து (ordained) - כּוּן - koon - 3559

வினைச்சொல் - ஸ்திரப்படுத்து, ஆயத்தப்படுத்து, முஸ்திப்பாக்கு, எத்தனப்படுத்து

தீர்க்கதரிசன எண் - 3

"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் ...." (சங் 8:4-8) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியின்போதும், புதிய பூமியிலும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

மனுஷத்துவம்

மனுஷன் என்னும் சொல் வேதாகமத்தில் 2737 தடவைகள் வந்துள்ளன. எபிரெய மொழியிலும், கிரேக்க மொழியிலும் பல்வேறு சொற்கள் "மனுஷன்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

1. மனுஷனுடைய சிருஷ்டிப்பு

(1) தேவன் மனுஷனுடைய உள்ளான மனுஷனை சிருஷ்டித்தார். (ஆதி 1:26-27; ஆதி 5:1-2)

(2) கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். (ஆதி 2:7; ஆதி 3:19)

சங்கீதம் - தொகுப்புரை

8 அதிகாரம்

(3) தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். (ஆதி 1:26,27; ஆதி 5:3; ஆதி 9:6; எண் 33:52; 1சாமு 6:5,11; 2இராஜா 11:18; 2நாளா 23:17; சங் 73:20; எசே 7:20; எசே 16:17; எசே 23:14; ஆமோ 5:26)

சாயல் - צֶלֶם - tseh'-lem - 6754

ஆண்பால் பெயர்ச்சொல் - சாயல், விக்கிரகம், வேஷம், சுரூபம், சொரூபம்.

(4) தேவன் தமது ரூபத்தின்படியே மனுஷனை உண்டாக்கினார். (ஆதி 1:26; ஆதி 5:1,3; ஏசா 40:18; எசே 1:5, 10,13,16,22,26,28; எசே 8:2; எசே 10:1, 10, 21-22) (மத் 22:20; ரோமர் 1:23; 1கொரி 11:7; 1கொரி 15:49; 2கொரி 4:4; கொலோ 1:15; எபி 10:1; வெளி 13:14-15; வெளி 14:9,11; வெளி 15:2; வெளி 16:2; வெளி 19:20; வெளி 20:4)

ரூபம் - דְּמוּת - dem-ooth' - 1823

பெண்பால் பெயர்ச்சொல் - சாயல், ரூபம், ஒப்பு, உருவம்

ரூபம் - εἰκών - eikoon - ஐகோன் - 1504

பெண்பால் பெயர்ச்சொல் - சுரூபம், சாயல், நிழல், சொரூபம், ரூபம்

அ. இஸ்ரவேலரில் அநேகர் தேவனுடைய சரீரத்தைத் தரிசித்திருக்கிறார்கள். (ஆதி 18; ஆதி 32:24-30; யாத் 24:9-11; யோசு 5:13-15; நியா 6:11-23; நியா 13:3-23; 1நாளா 21:16-17; யோபு 42:5; ஏசா 6; எசே 1:26; தானி 7:9-14; தானி 10:5-6; அப் 7:56-59; வெளி 4:2-5; வெளி 5:1-7)

ஆ. மனுஷன் தன் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டான். (எபே 4:22-24; கொலோ 3:10)

இ. உயிர்த்தெழுந்த சரீரத்திற்கு உருவம் உண்டு. (லூக்கா 24:39; பிலி 3:21) அது ஆவிக்குரியது என்று அழைக்கப்படுகிறது. (1கொரி 15:42-44)

(5) தேவன் மனுஷனை பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கினார். (சங் 139:14) மனுஷனுடைய சரீரத்தில் பல்வேறு விதமான இராசயான பொருட்கள் உள்ளன. இரும்பு, சர்க்கரை, உப்பு, கார்பன், அயோடின், பாஸ்பரஸ், சுண்ணாம்பு, கால்சியம் ஆகிய இராசயான பொருட்கள் மனுஷனுடைய சரீரத்தில் உள்ளன.

இவை தவிர மனுஷனுடைய சரீரத்தில் உள்ள மற்ற உறுப்புக்கள்

263 எலும்புகள்

600 தசைகள்

970 மைல் நீளமுள்ள இரத்த நாளங்கள்

காதுகளில் மட்டும் 20,000 முடிகள்

ஒருகோடி நரம்புகள்

வியர்வையை வெளியேற்றுவதற்கு ஒவ்வொரு சதுர அங்குல தோலிலும் 3,500 வியர்வை நாளங்கள் (இவை 40 மைல் நீளமுடையவை)

நமது குடல்களில் உணவுப் பொருட்களை உறிஞ்சுவதற்கு இரண்டு கோடி உணவு நாளங்கள்

நமது நுரையீரலில் 60கோடி காற்று திசுக்கள்

மனுஷன் ஒவ்வொரு நாளும் 2400 கேலன் காற்றைச் சுவாசிக்கிறான்

நமது இருதயம் ஒவ்வொரு மணிநேரத்திலும் 4,200 தடவைகள் துடிக்கின்றன. தினமும் 12டன் எடையுள்ள இரத்தத்தை இரத்தக் குழாய்களுக்குள் செலுத்துகிறது.

8 அதிகாரம்

(6) மனுஷனுக்கு ஒரு ஆத்துமா உள்ளது. மனுஷனுடைய உணர்வு, ஆர்வம், கோபம், ஏக்கம், தாகம் போன்ற எல்லா உணர்வுகளுக்கும் ஆத்துமாவே மூல காரணம்.

(7) மனுஷனுக்கு ஆவி உள்ளது. சித்தம், மனச்சாட்சி, புத்தி, அறிவு, ஞானம் ஆகியவற்றிற்கு மனுஷனுடைய ஆவியே ஆதாரம்.

(8) உள்ளான மனுஷன் என்பது மனுஷனுடைய ஆத்துமாவும் ஆவியும் ஆகும். இது மரிக்காது. நித்தியமானது. 1பேதுரு 3:4)

(9) தேவன்மனுஷனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினார். (சங் 8:5; எபி 2:7)

(10) மனுஷனை பாவமில்லாதவனாகவே தேவன் சிருஷ்டித்தார். ஆனால் பாவம் செய்யக்கூடிய ஆற்றல் மனுஷனிடம் உண்டு. (ஆதி 2:17; ரோமர் 5:12-21; 1யோவான் 3:4)

(11) தேவன் மனுஷனைச் சிருஷ்டித்தபோது அவனுக்கு சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவற்றை உண்டுபண்ணினார். (1தெச 5:23; எபி 4:12)

(12) மனுஷனுடைய சரீரம் மற்ற எல்லா சிருஷ்டிகளுடைய சரீரங்களிலிருந்தும் வேறுபட்டது (1கொரி 15:39)

(13) தேவன் மனுஷனை ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித்தார். (ஆதி 1:26-28; ஆதி 5:2; மத் 19:4)

(14) மனுஷனுடைய பௌதீக தன்மைகளும், ஆவிக்குரிய தன்மைகளும் வேதாகமத்தில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது.

(i) மனுஷனுடைய ஆவியும், ஆத்துமாவும் மண்ணல்ல (ஆதி 2:7)

(ii) மனுஷனுடைய மரணத்தின் போது அவனுடைய ஆவி அவனுடைய சரீரத்தைவிட்டு பிரிந்த போகும். (யாக் 2:26; லூக்கா 8:49-56; லூக்கா 16:22; லூக்கா 23:43; அப் 5:10; 2கொரி 5:8; 2கொரி 12:3-4; பிலி 1:21-24; எபி 12:23; 2பேதுரு 1:13-15; வெளி6:9-11;1இராஜா 17:20-22; யோபு14:10; 2சாமு 12:19-23; பிர 12:7)

(iii) மனுஷனுடைய ஆத்து மாவும், ஆவியும் அவனுடைய சரீரத்தில் இருக்கும். (யோபு 14:22; யோபு 32:8; நீதி 20:27; சக 12:1; 1கொரி 2:11; 1கொரி 7:34)

(iv) சரீரத்தைக் கொல்லமுடியும். ஆத்துமாவை கொல்ல முடியாது. (மத் 10:28; லூக்கா 12:5)

(v) ஆவி உற்சாகமுள்ளது. மாம்சமோ பலவீனமுள்ளது. (மத் 26:38-41)

(vi) மனுஷனுடைய சரீரமும், ஆவியும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (1கொரி 6:20).

(vii) மனுஷனுடைய சரீரமும், ஆவியும் அசுசியாகவும் இருக்கமுடியும். பரிசுத்தமாகவும் இருக்கமுடியும். (2கொரி 7:1)

(viii) உள்ளான மனுஷன் நித்தியமானவன். சரீரம் மரணத்திற் குரியது. (2கொரி 4:16-18)

8 அதிகாரம்

(ix) மனுஷனுடைய சரீரத்தை விட்டு பிரிந்த பின்பும் உள்ளான மனுஷன் உணர்வுடன் இருப்பான். (மத் 10:28; மத் 17:3; லூக்கா 16:19-31; லூக்கா 20:38; யோவான் 11:25-26; அப் 2:27; எபே 3:15; எபே 4:8-10; 2கொரி 5:8; 2கொரி 12:1-4; பிலி 1:21-24; எபி 2:14-15; எபி 12:23; 1பேதுரு 3:4; வெளி 6:9-11)

(x) ஆவி, ஆத்துமா என்பது மனுஷனுடைய சுவாசத்தைக் குறிக்காது. (யோபு 34:14-15) கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களில் ஆவி, ஆத்துமா என்பதற்குப் பதிலாக சுவாசம் என்னும் சொல்லைப் பயன்படுத்தினால் மிகவும் குழப்பமாக இருக்கும். (சங் 19:7; சங் 106:15; லூக்கா 12:19; அப் 23:8-9; ரோமர் 2:29; 2கொரி 2:11; 2கொரி 5:5; 2கொரி 6:20; 2கொரி 7:1; கலா 5:25; 1தெச 5:23; எபி 4:12; எபி 10:38-39; வெளி 6:9-11)

(xi) மனுஷருடைய சரீரங்கள் உயிரோடு இருக்கும்போது அவர்களுடைய ஆத்துமாக்கள் மரிக்க முடியும். (மத் 8:22; எபே 2:1-9; 1தீமோ 5:6; வெளி 3:1)

(xii) நீதிமான்கள் மரித்த பின்பு அவர்களுடைய ஆத்துமாக்கள் நித்திய காலமாக ஜீவிக்கும். (யோவான் 3:16; யோவான் 5:24; யோவான் 6:47,53,63; யோவான் 11:25-26; யோவான் 14:19)

(xiii) துன்மார்க்கரின் சரீரங்கள் மரித்த பிறகும் அவர்களுடைய ஆத்துமாக்கள் உணர்வுடன் இருக்கும்.

(xiv) மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பது ஆத்துமாக்கள் உயிருடன் இருப்பதைக் குறிப்பிடாது. மரித்தவருடைய சரீரங்கள் மறுபடியும் உயிர் பெறுவதைக் குறிப்பிடும். (தானி12:2; யோவான் 5:28-29; 1கொரி 15:35-54; வெளி 20:11-15)

(xv) நீதிமான்கள் மரித்தவுடன் அவர்களுடைய ஆத்துமாக்கள் பரலோகத்திற்குச் செல்லும். (2கொரி 5:8; எபே 3:14-15; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11) அவர்களுடைய சரீரங்கள் கல்லறைகளில் புதைக்கப்படும். (தானி 12:2; யோவான் 5:28-29)

(xvi) துன்மார்க்கரின் சரீரங்கள் கல்லறைகளில் புதைக்கப்படும். அவர்களுடைய ஆத்துமாக்கள் நரகத்திற்குச் செல்லும். (ஏசா 14:9; லூக்கா 16:19-31; வெளி 20:11-15)

(xvii) உள்ளான மனுஷன் இருக்குமிடம் மானிட சரீரம் (யோபு 4:19; யோபு 14:22; யோபு 32:8; சக 12:1; 1கொரி 2:11; 2கொரி 5:1-8; பிலி 1:21-24; 2பேதுரு 1:13-15) ஆத்துமாவும் ஆவியும் சிந்திப்பதை சரீரம் நிறைவேற்றுகிறது. மனுஷன் தன் சரீரத்தின் மூலமாக இந்த உலகத்தைப் பற்றி சிந்திக்கிறான். தன் ஆத்துமாவின் மூலமாக தன்னைப் பற்றி சிந்திக்கிறான். தன் ஆவியின் மூலமாக தேவனைப் பற்றி சிந்திக்கிறான்.

8 அதிகாரம்

(xviii) மனுஷனுக்கு ஒரு சரீரம் உண்டு. ஆனால் அவன் சரீரம் மட்டுமல்ல. அவனுக்கு ஒரு ஆத்துமா உண்டு. ஆனால் அவன் ஆத்துமா மட்டுமல்ல. அவனுக்கு ஒரு ஆவி உண்டு. ஆனால் அவன் ஆவி மட்டுமல்ல. (1தெச 5:23)

(xix) மனுஷனுக்கு சித்தம் உண்டு. இது சுயாதீன சித்தம். (யோவான் 3:16; யோவான் 7:17; ரோமர் 7:18; 1கொரி 7:36-37; 1கொரி 9:17; 2பேதுரு 1:21; வெளி 22:17)

(xx) மனுஷனுடைய சரீரமும், அவனுடைய உள்ளான மனுஷனும் வெவ்வேறாக இருக்குமென்றால் அவனால் தன் சரீரத்தை தரித்துக் கொள்ளவும், களைந்துபோடவும் முடியும். (2கொரி 5:1-8; 2பேதுரு 1:14)

(xxi) சரீரம் மரிக்கும். ஆவி மரிப்பதில்லை (1பேதுரு 3:4)

2. மனுஷனுடைய பரீட்சை

(1) மனுஷனுக்கு பூமியையும், சந்திரன், சூரியன், நட்சத்திரங்களையும் ஆளும் அதிகாரத்தை தேவன் கொடுத்தார். (ஆதி 1:26-28; சங் 8:3-8; சங் 72:8)

(2) மனுஷன் பலுகிப்பெருகி பூமியை நிரப்ப வேண்டும். (ஆதி 1:26-28; ஆதி 9:1)

(3) மனுஷன் தோட்டத்தை பண்படுத்தி எல்லா விரோதிகளிடமிருந்தும் அதைக் காக்க வேண்டும். (ஆதி 2:15)

(4) மனுஷனுக்கு தேவன் ஒரு கட்டுப்பாட்டைத்தவிர மற்ற எல்லா அதிகாரத்தையும் கொடுத்தார். (ஆதி 2:16-17; ஆதி 3:1-3)

(5) மனுஷன் பாவம் செய்யவில்லையென்றால் அவனுக்கு நித்திய ஜீவனும், மகிமையும் கிடைக்கும். (ஆதி 2:16-17; ரோமர் 3:23)

3. மனுஷனுடைய வீழ்ச்சி (ஆதி 3)

(1) தேவன் மனுஷனை பாவமில்லாதவனாக சிருஷ்டித்தார். ஆனாலும் பாவம் செய்யக்கூடிய ஆற்றல் அவனிடம் இருந்தது. (ஆதி 2:16-17; 1யோவான் 3:4)

(2) சாத்தான் சர்ப்பத்தின் மூலமாக மனுஷனை சோதித்தான். (ஆதி 3:1-8; 2கொரி 11:1-3)

(3) பாவம் செய்யுமாறு சாத்தான் ஏவாளை வாஞ்சித்தான். (ஆதி 3:6; 1தீமோ 2:14)

(4) பாவம் செய்யவேண்டுமென்பது மனுஷன் தானாகவே தெரிந்து கொண்ட தீர்மானம். (ரோமர் 5:12-21; 2கொரி 5:17)

(5) தெய்வீக சித்தத்திற்குக் கீழ்ப்படியாமல், தன்னுடைய சொந்த சித்தத்தை தேவனுடைய சித்தத்தைவிட உயர்த்தியதினால் பாவம் மனுஷனுக்குள் வந்தது. (ஆதி 2:16-17)

(6) தேவனுடைய வார்த்தையை விசுவாசியாமற்போனதினால், பாவம் மனுஷனுக்குள் வந்தது. (ஆதி 2:16-17; ஆதி 3:4-6).

(7) தேவனுடைய வார்த்தைக்கு எதிராக கலகம் பண்ணியதினால் மனுஷனுக்குள் பாவம் வந்தது (ஆதி 2:16-17; ஆதி 3:1-8)

8 அதிகாரம்

4. வீழ்ச்சியினால் மனுஷனுக்கு ஏற்பட்ட விளைவுகள்

(1) தேவனிடமிருந்த பிரிக்கப்பட்டான் (ஏசா 59:2)

(2) கோபாக்கினையின் பிள்ளையானான் (எபே 2:1-3)

(3) புத்தியில் அந்தகாரப்பட்டு ஆவிக்குரிய குருடனானான். (எபே 4:18)

(4) மனச்சாட்சியில் துன்மார்க்கம் உண்டாயிற்று (எபி 10:22)

(5) இருதயத்தில் ஏமாற்றும் வஞ்சனையும் உண்டாயிற்று. (எரே 17:9; மாற்கு 7:19-21)

(6) கலகக்காரனாகவும், முரட்டாட்டக் காரனாகவும் ஆனான். (அப் 7:51; ரோமர் 8:7; ஏசா 28:14)

(7) சிந்தைகளில் துன்மார்க்கம் உண்டாயிற்று (ஆதி 6:5)

(8) தேவபக்தியற்றவனாகவும், பேராசைக் காரனாகவும் ஆனான். (யோவான் 8:44; ரோமர் 7:5-23; 1கொரி 6:9; கலா 5:19)

(9) சாத்தானுடைய ஆளுகைக்கு அடிமையானான்.(யோவான் 8:34,44; எபே 2:2; 1யோவான் 3:8)

(10) பாவத்திற்கு ஊழியம் செய்தான் (யோவான் 8:34; ரோமர் 1:18-32; ரோமர் 6:16-23)

(11) பாவத்தில் மரித்தான் (எபே 2:1-9)

(12) நித்திய நரகத்திற்கு நியமிக்கப்பட்டான் (சங் 9:17; மத்25:46; ரோமர் 6:23; எபே 2:12; வெளி 14:9-11; வெளி 20:11-15)

(13) தேவனுடைய மகிமையற்றவனானான். (ரோமர் 3:23)

(14) பாடும், மரணமும் வந்தது (ஆதி 3:17-19; ரோமர் 8:21-23)

(15) தேவனால் சபிக்கப்பட்டான் (ஆதி 3:11-24)

(16) மரணம், பலவீனம் ஆகியவை உண்டாயிற்று (யோபு 4:17-21; சங் 39:4-5; சங் 103:14-15; மத் 6:27; கலா 6:3)

(17) எல்லா மனுஷரும் பாவம் செய்தவர்கள் (ரோமர் 3:9-23)

(18) பிறப்பினாலும், கிரியையினாலும் பாவிகள் (சங் 51:5; ரோமர் 5:12-21; எபே 2:1-3)

(19) பிசாசின் பிள்ளைகள் (மத் 13:38; யோவான் 8:44; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:19)

(20) வியாதி, வேதனை உண்டாயிற்று (யாத் 15:26; உபா 28:15-68; யோவான் 10:10; அப் 10:38; வெளி 21:3-7;22:3)

(21) மனுஷனுடைய ஆயுசு நாள் குறுகிப்போயிற்று. மனுஷனுடைய ஆயுசு நாட்களின் ஒப்புமை.

(i) சஞ்சரிக்கும் பரதேசி (ஆதி 47:9)

(ii) திரும்பச் சேர்க்கக் கூடாதபடிக்கு தரையிலே சுவறுகிற தண்ணீர் (2சாமு 14:14)

(iii) காற்று (யோபு 7:7)

(iv) பறந்து போகிற மேகம் (யோபு 7:9)

(v) நெய்கிறவன் எறிகிற நாடா (யோபு 7:6)

சங்கீதம் - தொகுப்புரை

8 அதிகாரம்

(vi) நிழல் (யோபு 14:2; சங் 144:4)

(vii) பூவைப்போலப் பூத்து அறுப்புண்டு போதல் (யோபு 14:2; சங் 103:15; ஏசா 40:6-8; யாக் 1:10; 1பேதுரு 1:24; சங் 90:5)

(viii) அறுப்புண்டு போன புல் (சங் 37:2; சங் 90:5-6; 1பேதுரு 1:24)

(ix) வாடிப்போகும் பசும்பூண்டு (சங் 37:2)

(x) இல்லாதது போலிருத்தல் (சங் 39:5)

(xi) சொப்பனம் (சங் 73:20)

(xii) நித்திரைக்கு ஒத்திருத்தல் (சங் 90:5)

(xiii) மாயை (சங் 144:4)

(xiv) புகை (யாக் 4:14)

மனுஷனுக்கு வந்த சாபமெல்லாம் புதிய பூமியில் முடிவுபெறும். (வெளி 21:3-7; வெளி 22:3-5) எந்த நாளில் மனுஷன் மரிப்பான் என்று அவனுக்கு தெரியாது. (யாத் 20:12; சங் 91; நீதி 3:16; நீதி 9:11; 1கொரி 11:30; எபே 6:2; 1பேதுரு 3:10-11)

5. மனுஷனுக்கு தேவனுடைய வெளிப்பாடு

(1) தேவன் மனுஷனுக்கு தம்மைப் பற்றியும், தமது சிருஷ்டிப்பு, மனுஷனைக் குறித்து தமது திட்டம் ஆகியவற்றைப் பற்றியும் வெளிப்படுத்தியிருக்கிறார். இதன் மூலமாக மனுஷன் தன் ஆரம்பத்தையும் முடிவையும் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் புரிந்து கொள்ளலாம். மனுஷனுக்கு தேவன் தம்மைப் பற்றி வெளிப்படுத்தியுள்ள வெளிப்பாடே பரிசுத்த வேதாகமம். (2தீமோ 3:16; எபி 1:1; எபி 4:12)

(2) எல்லா சிருஷ்டிகளிலும் மனுஷ சிருஷ்டியே மேலானது.

(i) சிருஷ்டிகளை ஆளுகை செய்யும் அதிகாரத்தை தேவன் மனுஷனுக்குக் கொடுத்தி ருக்கிறார். (ஆதி 1:26-31; சங் 8:3-8)

(ii) மனுஷனை மீட்பதற்காக தேவன் பல கிரியைகளைச் செய்திருக்கிறார். (எபி 1:1-3; 2பேதுரு 3:9)

(iii) முழு உலகத்தையும்விட மனுஷன் மேலானவன் (மாற்கு 8:36)

(iv) மனுஷனை இரட்சிப்பதற்காக தேவன் தமது ஒரேபேறான குமாரனைக் கொடுத்தார் (யோவான் 3:16; வெளி 22:17)

(v) தமது சிருஷ்டிகளை நித்தியகாலமாக ஆளுகை செய்யும் நிலைமைக்கு மனுஷனை மீட்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டம் (தானி 7:18,27; வெளி 5:10; வெளி 22:4-5)

(vi) தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெறும் பொறுப்பை மனுஷனுக்குக் கொடுத்தி ருக்கிறார் (ரோமர் 8:17-18 வெளி 2:27-28; வெளி 5:10; வெளி 22:4-5)

(vii) மீட்பில் தேவன் மனுஷனை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறார். நீதி (1யோவான் 3:7) வாக்குத் தத்தத்தின் மூலமாக பராமரிப்பு (1கொரி 3:22-23; 2கொரி 1:20; எபி 8:6) சுபாவம் (2பேதுரு 1:4) கிரியைகள் (யோவான் 14:12) சுதந்தரம் (ரோமர் 8:17), பாடுகளும்,வருங்காலமகிமையும் (மத் 10:24-25; ரோமர் 8:18; 2தீமோ 2:12; 1பேதுரு 2:21; 1பேதுரு 4:1; வெளி 2:26-27; வெளி 5:10; வெளி 22:4-5).

8 அதிகாரம்

(viii) மனுஷனுக்கு சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவற்றை உண்டாக்கி, அவனை நித்திய ஜீவனுக்கு நேராக வழிநடத்துகிறார்.

6. மீட்பில் மனுஷனுடைய பங்கு

(1) மனுஷன் தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். (மாற்கு 1:15; மாற்கு 16:15-16; லூக்கா 13:3,5)

(2) மனுஷன் மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்க வேண்டும். சுவிசேஷத்தின் பிரகாரம் தன் ஜீவியத்தில் கிரியை நடப்பிக்க வேண்டும். (கொலோ 2:6-7; 2பேதுரு 1:4-10; 2பேதுரு 3:18)

7. மனுஷனுடைய முடிவு

(1) தன்னுடைய முடிவுக்கு மனுஷனே பொறுப்பு. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் அல்லது கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று மனுஷனே தீர்மானம் பண்ணி, தன் முடிவைத் தெரிந்து கொள்கிறான். (மாற்கு 16:15-16; லூக்கா 13:3,5)

(2) சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் தேவனோடு பரலோகத்தில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். (யோவான் 14:1-3; 1தெச 4:13-18; வெளி 5:10; வெளி 22:4-5)

(3) சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் நரகத்தில் நித்திய காலமாக பாடு அனுபவிப்பார்கள். ஏசா 66:22-24; மத் 25:41,46; மாற்கு 9:43-49; லூக்கா 12:5; வெளி 14:9-11; வெளி 20:11-15)

"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" - நினைவுகூருதல், விசாரித்தல் என்பவை தொடர்ந்து கிருபையுடன் நினைவுகூருவதையும், விசாரிப்பதையும் குறிப்பிடும்.

நினைவுகூர் (Mindful) - சங் 8:4 זָכַר - zaw-kar' - 2142

வினைச்சொல் - நினைவுகூர், நினை, நினைத்தருள், நினைவில் வை - நினைவுகள் (சங் 8:4; சங் 111:5; சங் 115:12; 1நாளா 16:15; நெகே 9:17; ஏசா17:10)

"மனுஷகுமாரன்" - இங்கு மனுஷகுமாரன் என்பது மனுஷனையும், பூமியின்மீது மனுஷனுக்குள்ள அதிகாரத்தையும் குறிப்பிடும். இந்த வசனத்திற்கு முன்பு மூன்று முறை இந்த வாக்கியம் வந்துள்ளது. (எண் 23:19; யோபு 25:6; யோபு 35:8) இந்த வாக்கியம் ஒருமையில் 197 தடவைகளும், பன்மையில் 23 தடவைகளும் வந்துள்ளன. சங்கீதம் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் காணப்படும் வசனங்கள் (சங் 80:17; சங் 144:3; சங் 146:3; எபே 2:1; யோவான் 1:51)

மனுஷன் (man) - אָדָם - aw-dawm' - 120

ஆ.பெ.சொ - மனுஷன், ஆதாம், நரஜீவன், மனிதன், ஜனம்.

மனுஷர் (man) - אֱנוֹשׁ - en-oshe' - 582

ஆண்பால் பெயர்ச்சொல் -மனுஷர், சகோதரர், ஜனம், ஊரார், ஆட்கள், கூட்டம், புருஷர், ஆண், மனிதர்

கர்த்தர் மனுஷனை சந்திக்கும் வழிகள்

1. தாமாகவே வருகிறார் (தானி 7:9-14)
2. கிறிஸ்துவை அனுப்புகிறார் (தானி 48:16; யோவான் 3:16)
3. பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார் (யோவான் 16:7)

8 அதிகாரம்

4. தூதர்களை அனுப்புகிறார் (எபி 1:14)

5. தீர்க்கதரிசிகள் மூலமாக (அப் 3:21; எபி 1:1)

6. சொப்பனங்கள், தரிசனங்கள் மூலமாக (தானி 2:28; தானி 4:1-7; தானி 7:1; தானி 8:1)

7. தமது வார்த்தையின் மூலமாக (2தீமோ 3:16; எபி 4:12)

சிறியவனாக்கு (lower) - חָסֵר - khaw-sare' - 2637

வினைச்சொல் - குறைவுபடு, வடிந்து கொண்டிரு, தேவை, தாழ்ச்சியடை, சிறியவனாகு, நிறைந்திரு, அநுபவி, தாகந்தீர் - சிறியது (சங் 8:5) குறைவு (ஆதி 18:28; யாத் 16:18; உபா 2:7; உபா 8:9; பிர 9:8) குறைந்துபோதல் (1இராஜா 17:14; தானி 32:6; தானி 51:14) வடிந்து கொண்டுபோதல் (ஆதி 8:5) தேவை (சங் 23:1; சங் 34:10; உபா 15:8; நீதி 13:25; உன் 7:2; எரே 44:18; எசே 4:17)

தேவதூதர் (angels) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.- தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்.

எலோகிம் என்னும் சொல் தேவன் என்று தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தேவனுக்காக நியாயம் விசாரிப்பவர், (சங் 82:1,6; சங் 97:7; யாத் 22:9) மனுஷர் மத்தியில் தேவன் சார்பாக கிரியை செய்பவர், (ரோமர் 13:1-6; யோவான் 10:34-35) தேவதூதர்கள் (சங் 8:5) ஆகியோருக்கும் "எலோகிம்" என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மனுஷனுடைய ஆளுகை

எல்லா சிருஷ்டிகளுக்கும் மேலாக தேவன் மனுஷனை வைத்திருந்தார். (சங் 8:3) (சங் 8:7-8) உயர்ந்த ஸ்தானமும் வல்லமையும் மனுஷனுக்கு இருந்தது. ஆதாம் ஆதியிலே தேவதூதரை விட உயர்வாக இருந்தான். ஆனால் பாவத்தின் நிமித்தமாக மிகவும் தாழ்ந்த நிலைக்கு வந்து, மரணத்திற்கு உட்பட்டவன் ஆனான். மனுஷன் தேவமகிமை அற்றவனானான். (ரோமர் 3:23) தேவதூதரிலும் சற்று சிறியவனானான். இயேசு கிறிஸ்துவும் மனுஷனான போது, இந்தத் தாழ்மையான நிலையையே தெரிந்து கொண்டார். அதன் பின்பு தேவதூதரிலும் தம்மை உயர்த்தினார். (எபே 1:21-23; பிலி 2:9-11; 1பேதுரு 3:22) இரட்சிக்கப்பட்ட நாமும் கிறிஸ்துவோடு இருக்குமாறு உயர்த்தப்படுவோம். (ரோமர் 8:17-18; எபே 2:6-7; எபே 3:8-11; 2தீமோ 2:12; எபி 2:5-11; வெளி 1:6; வெளி 5:10; வெளி 22:4-6)

"அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்". மனுஷன் தன்னுடைய வீழ்ச்சியினால் இழந்து போன யாவற்றையும் மறுபடியும் பெற்றுக் கொள்வான். மனுஷனுடைய இறுதி மீட்பின் போது இவை மனுஷனுடைய ஆளுகைக்கு மறுபடியும் ஒப்புவிக்கப்படும். (எபி 2:5-11)

மனுஷனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தப்படும் காரியங்கள்

1. கர்த்தருடைய கரத்தின் கிரியை - வானங்கள் (சங் 8:3)

2. சந்திரனும் நட்சத்திரங்களும்

3. கர்த்தருடைய கரத்தின் கிரியை - பூமி (சங் 8:6; சங் 102:25; சங் 104:5)

4. ஆடுமாடுகள் (சங் 8:7)

5. காட்டு மிருகங்கள்

6. ஆகாயத்துப் பறவைகள் (சங் 8:8)

7. மச்சங்களும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளும்

9 அதிகாரம்

(முத்லபேன் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

துதித்து ஜெபிக்கும் முதலாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனை நான்கு விதமாகத் துதித்தல் - (9:1-2)
2. துன்மார்க்கரின் பத்துவிதமான அழிவுகள் - (9:3-6)
3. கர்த்தர் - உலகத்தின் நியாயாதிபதி - நீதிமானுக்கு அடைக்கலமானவர் - (9:7-10)
4. துதித்தல் - துதிப்பதற்குக் காரணங்கள் - (9:11-12)
5. ஜெபம் - ஜெபிப்பதற்குக் காரணங்கள் - (9:13-14)
6. துன்மார்க்கர் தாங்கள் பின்னியவலையில் சிக்கிக் கொள்வார்கள் - (9:15-16)
7. நீதிமானின் முடிவும் துன்மார்க்கனின் முடிவும் - (9:17-18)
8. ஜெபம் - நான்கு விண்ணப்பங்கள் - காரணம் - (9:19-20)

1. தேவனை நான்கு விதமாகத் துதித்தல்

சங் 9:1 கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.

சங் 9:2 உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்; உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

"முழு இருதயத்தோடும்", கர்த்தரைத் துதித்து ஆராதிக்க வேண்டிய ஒரே வழி இதுதான். இதுதான் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கும் உண்மையான ஆராதனை (யோவான் 4:24).

முழு இருதயத்தோடு செய்ய வேண்டிய காரியங்கள்

1. தேவனிடம் திரும்பிவருதல் (எரே 24:7)
2. தேவனைத் தேடுதல் (சங் 119:2,10,58, 145)
3. கீழ்ப்படிதல் (சங் 119:34, 69)
4. துதித்தல் (சங் 9:1;5 சங் 111:1)

தாவீதின் பொருத்தனைகள்

1. கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்
2. உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்
3. உம்மில் மகிழ்ந்து களிகூருவேன்
4. உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்

2. துன்மார்க்கரின் பத்துவிதமான அழிவுகள்

சங் 9:3 என் சத்துருக்கள் பின்னாகத் திரும்பும்போது, உமது சமுகத்தில் அவர்கள் இடறுண்டு அழிந்துபோவார்கள்.

சங் 9:4 நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து, நீதியுள்ளவர் நியாயாதிபதியாய் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறீர்.

சங் 9:5 ஜாதிகளைக் கடிந்துகொண்டு, துன்மார்க்கரை அழித்து, அவர்கள் நாமத்தை என்றென்றைக்கும் இல்லாதபடி குலைத்துப்போட்டீர்.

சங்கீதம் - தொகுப்புரை

9 அதிகாரம்

சங் 9:6 சத்துருக்கள் என்றென்றைக்கும் பாழாக்கப் பட்டார்கள்; அவர்கள் பட்டணங்களை நிர்மூலமாக்கினீர்; அவர்கள் பேரும் அவர்களோடே கூட ஒழிந்துபோயிற்று.

கர்த்தருடைய கிரியைகள்

1. சத்துருக்களை பின்னாகத் திருப்புவார் (சங் 9:3)
2. விரோதிகளை அழிப்பார்
3. நீதிமானின் வழக்கைத் தீர்ப்பார் (சங் 9:4)
4. நீதியாக நியாயம் விசாரிப்பார்
5. ஜாதிகளை கடிந்து கொள்வார் (சங் 9:5)
6. துன்மார்க்கரை அழிப்பார்
7. அவர்கள் நாமத்தை இல்லாதபடி குலைத்துப் போடுவார்
8. சத்துருக்களைப் பாழாக்குவார் (சங் 9:6)
9. பட்டணங்களை நிர்மூலமாக்குவார்
10. துன்மார்க்கரின் பேரை ஒழிந்து போகப் பண்ணுவார்

3. கர்த்தர் - உலகத்தின் நியாயாதிபதி - நீதிமானுக்கு அடைக்கலமானவர்

சங் 9:7 கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்; தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார்.

சங் 9:8 அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார்.

சங் 9:9 சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.

சங் 9:10 கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்.

தீர்க்க தரிசன எண் - 4

"கர்த்தரோ என்றென்றைக்கும் இருப்பார்; தம்முடைய சிங்காசனத்தை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம்பண்ணினார்..............." (சங் 9:7-12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பின்போது இது நிறைவேறும். (வெளி 20:11-15)

கர்த்தர் நியாயந்தீர்ப்பார். நீதி செய்வார். (அப் 17:31 ; வெளி 20:11-15)

"சகல ஜனங்களுக்கும் செம்மையாய் நீதிசெய்வார்", எல்லா தேசங்களின் மீதும் கர்த்தரும் கிறிஸ்துவும் நீதியாய் ஆளுகை செய்வதை இந்த வசனம் குறிப்பிடும் (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14, 18-27; சக 14; வெளி 11:15; வெளி 11:15; வெளி 20:4-10)

4. துதித்தல் - துதிப்பதற்குக் காரணங்கள்

சங் 9:11 சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.

சங் 9:12 இரத்தப்பழிகளைக்குறித்து அவர் விசாரணை செய்யும்போது, அவைகளை நினைக்கிறார்; சிறுமைப் பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்.

தாவீது கூறும் கட்டளைகள்

1. சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுவார்கள்
2. அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்

9 அதிகாரம்

ஆயிர வருஷ அரசாட்சியில் கர்த்தருடைய நாமத்தை எப்போதும் தொழுது கொள்ளுவார்கள். கீர்த்தனம் பண்ணுவார்கள். (ஏசா 2:2-4; சக 14:16-21; மல் 1:11)

"சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தர்" - கர்த்தர் இன்னும் சீயோனில் வாசமாயிருக்க வில்லை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலிருந்து கர்த்தர் நித்திய காலமாக சீயோனில் வாசமாயிருப்பார். (ஏசா 2:2-4; ஏசா 52:7; எசே 43:7; எசே 48:35; சக 14:9, 16-21; லூக்கா 1:32-33; வெளி 11:15;வெளி 19:11-21). வெளி 19:11-21).

வரலாற்றின் மிகப்பெரிய மிஷினரி ஊழியம். ஆயிர வருஷ அரசாட்சியில் நடைபெறும். அப்போது இரட்சிக்கப் பட்டவர்கள் கர்த்தருடைய செய்கைகளை ஜனங்களுக்கு அறிவிப்பார்கள். "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்". (ஏசா 11:9)

தேவன் நீதிமானுக்கு நீதிசெய்வார். துன்மார்க்கரையும் அக்கிரமக்காரரையும் நிர்மூலம் பண்ணுவார்.

5. ஜெபம் - ஜெபிப்பதற்குக் காரணங்கள்

சங் 9:13 மரணவாசல்களிலிருந்து என்னைத் தூக்கிவிடுகிற கர்த்தாவே, நான் உம்முடைய துதிகளையெல்லாம் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் விவரித்து, உம்முடைய இரட்சிப்பினால் களிகூரும்படிக்கு,

சங் 9:14 தேவரீர் எனக்கு இரங்கி, என்னைப் பகைக்கிறவர்களால் எனக்கு வரும் துன்பத்தை நோக்கிப்பாரும்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. எனக்கு இரங்கும் (சங் 9:14)
2. எனக்கு வரும் துன்பத்தை நோக்கிப் பாரும்
3. எழுந்தருளும் கர்த்தாவே (சங் 9:19)
4. மனுஷன் பெலன் கொள்ளாதபடி செய்யும்
5. ஜாதிகள் உம்முடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்படக்கடவர்கள்
6. மனுஷருக்கு பயமுண்டாக்கும் (சங் 9:20)

தாவீதின் விண்ணப்பத்திற்கு காரணங்கள்

1. உம்முடைய துதிகளையெல்லாம் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் நான் இஸ்ரவேலருக்கு விவரிக்க வேண்டும் (சங் 9:13).
2. உம்முடைய இரட்சிப்பினால் நான் களிகூரவேண்டும்
3. ஜாதிகள், தாங்கள் தேவனல்ல என்றும், தங்களை மனுஷரென்றும் அறிய வேண்டும் (சங் 9:20)

இரண்டு விதமான வாசல்கள்

1. மரணவாசல்கள் - மரணத்தை உண்டு பண்ணும் வாசல் (சங் 107:18; ஏசா 38:10; எபி 2:14-15)
2. சீயோன் குமாரத்தியின் வாசல்கள் - இஸ்ரவேலர் கூடும் இடம் - ஜீவனைப் பற்றிய சத்தியங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடம் - மரண வாசல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். (சங் 9:13)

6. துன்மார்க்கர் தாங்கள் பின்னிய வலையில் சிக்கிக் கொள்வார்கள்

சங் 9:15 ஜாதிகள் தாங்கள் வெட்டின குழியிலே தாங்களே விழுந்தார்கள்; அவர்கள் மறைவாய் வைத்த வலையில் அவர்களுடைய காலே அகப்பட்டுக் கொண்டது.

சங் 9:16 கர்த்தர் தாம் செய்த நியாயத்தினால் அறியப்படுகிறார்; துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக்கொண்டான். (இகாயோன், சேலா.)

9 அதிகாரம்

"கர்த்தர் தாம் செய்த நியாயத்தினால் அறியப்படுவார்", மனுஷனுக்கு வரும் எல்லா துன்பங்களையும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று கூறமுடியாது. ஆயினும் தேவனுடைய கிருபையை மறுதலிக்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்டு. பூமியில் தமது நீதியை நிலைநிறுத்தவும் தமது சித்தத்தை நிறைவேற்றவும் தேவன் தேவைப்படும்போது தமது நியாயத்தீர்ப்பை மனுஷர் மத்தியில் அனுப்புவார். அதற்கான காரணத்தையும் விவரிப்பார். நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம், சோதோமின் அழிவு ஆகியவை இதற்கு சான்றுகள் (வெளி 6; வெளி 8; வெளி 9; வெளி 16)

"துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக்கொண்டான்", துன்மாக்கரின் கிரியைகள் எல்லாம் அவர்களுக்கு விரோதமாகவே இருக்கும்

"இகாயோன்" - தியானம் பண்ணுதல் - இதில் துன்மார்க்கரின் முடிவுபற்றி கூறப்பட்டுள்ளது. மனுஷன் இதைத் தியானிக்க வேண்டும். (சங் 9:15-18)

7. நீதிமானின் முடிவும் துன்மார்க்கனின் முடிவும் - (மத் 25:46; வெளி 20:11-15; ஏசா 66:22-24)

சங் 9:17 துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்.

சங் 9:18 எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை; சிறுமைப் பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப்போவதில்லை.

தீர்க்கதரிசன எண் - 5

"துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப் படுவார்கள்.........." (சங் 9:17-18) - இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேறியிருக்கிறது. துன்மார்க்கரில் கடைசியானவன் நரகத்தில் தள்ளப்படும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவுபெறும்.

எளியவர்களும் சிறுமைப்பட்டவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும். பரலோகத்தில் அவர்கள் நினைக்கப்படுவார்கள். இவர்கள் இங்கு இரட்சிக்கப்படவில்லையென்றால், இந்த ஜீவனில் இவர்கள் மறக்கப்பட்டது போன்றே நித்திய ஜீவனிலும் மறக்கப்படுவார்கள். நரகத்திலும் நித்திய காலமாகத் துன்பம் அனுபவிப்பார்கள்.

8. ஜெபம் - நான்கு விண்ணப்பங்கள் - காரணம்

சங் 9:19 எழுந்தருளும் கர்த்தாவே, மனுஷன் பெலன்கொள்ளாதபடி செய்யும்; ஜாதிகள் உம்முடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்படக் கடவர்கள்.

சங் 9:20 ஜாதிகள் தங்களை மனுஷரென்று அறியும்படிக்கு, அவர்களுக்குப் பயமுண்டாக்கும், கர்த்தாவே. (சேலா)

"மனுஷன் பெலன்கொள்ளாதபடி செய்யும்", மனுஷன் தன் சொந்த திட்டங்களை நிறைவேற்றக் கூடாது. தன் செயல்களால் தன்னைத் தானே அழித்துக் கொள்ளக் கூடாது. மனுஷன் தன் பெலத்தினால் தீமையான காரியங்களைச் செய்யும் போது தேவன் அவனை தமது நியாயத் தீர்ப்பின் மூலமாகத் திருத்துகிறார். ஜலப்பிரளயம் (ஆதி 6-8), பாஷைகளின் தாறுமாறு (ஆதி 11), சோதோமின் அழிவு (ஆதி 19)

பெலன்கொள் (prevail) - עָזַז - aw-zaz' - 5810

வினைச்சொல் - அடைத்துவை, பலங்கொள், பெலமாக்கு, பலத்திரு, நாணு, கடினப்படுத்து

மனுஷன் மண்ணானவன். தேவனில்லாமல் அவனால் ஒன்றும் செய்ய முடியாது. இதை மனுஷன் உணர்ந்து தன்னைத் தாழ்த்த வேண்டும். இதற்காக மனுஷருக்கு தெய்வ பயம் தேவை.

10 அதிகாரம்

துன்மார்க்கனின் முதலாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. துன்மார்க்கனைத் தண்டிக்க வேண்டுமென்று கர்த்தரிடம் ஏறெடுக்கப்படும் முதலாவது விண்ணப்பம் - துன்மார்க்கனின் 22 பாவங்கள் - (10:1-11)
2. துன்மார்க்கனைத் தண்டிக்க வேண்டுமென்று கர்த்தரிடம் ஏறெடுக்கப் படும் இரண்டாவது விண்ணப்பம். அத்துடன் நீதிமான் ஒடுக்கப்படும்போது அவனுக்கு உதவிபுரிய வேண்டுமென்று கர்த்தரிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம் - (10:12-18)

1. துன்மார்க்கனைத் தண்டிக்க வேண்டுமென்று கர்த்தரிடம் ஏறெடுக்கப்படும் முதலாவது விண்ணப்பம் - துன்மார்க்கனின் 22 பாவங்கள்

சங் 10:1 கர்த்தாவே, ஏன் தூரத்தில் நிற்கிறீர்? ஆபத்து நேரிடுகிற சமயங்களில் நீர் ஏன் மறைந்திருக்கிறீர்?

சங் 10:2 துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமைப்பட்டவனைக் கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான்; அவர்கள் நினைத்த சதிமோசங்களில் அவர்களே அகப்படுவார்கள்.

சங் 10:3 துன்மார்க்கன் தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி, பொருளை அபகரித்துத் தன்னைத்தான் போற்றி, கர்த்தரை அசட்டைபண்ணுகிறான்.

சங் 10:4 துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்; அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே.

சங் 10:5 அவன் வழிகள் எப்போதும் கேடுள்ளவைகள்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் அவன் பார்வைக்கு எட்டாமல் மிகவும் உயரமாயிருக்கிறது; தன் எதிராளிகளெல்லார்மேலும் சீறுகிறான்.

சங் 10:6 நான் அசைக்கப்படுவதில்லை, தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்.

சங் 10:7 அவன்வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு.

சங் 10:8 கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லுகிறான்; திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக் கொண்டிருக்கிறது.

சங் 10:9 தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போல மறைவில் பதிவிருக்கிறான்; ஏழையைப் பிடிக்க பதிவிருந்து, ஏழையைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடித்துக் கொள்ளுகிறான்.

சங் 10:10 திக்கற்றவர்கள் தன் பலவான்கள் கையில் விழும்படி அவன் பதுங்கிக்கிடக்கிறான்.

சங் 10:11 தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும், தன் இருதயத்திலே சொல்லிக் கொள்ளுகிறான்.

துன்மார்க்கனின் பாவங்கள்

1. பெருமை நிறைந்தவன் (சங் 10:2,4)
2. சிறுமைப்பட்டவனைத் துன்பப் படுத்துகிறான் (சங் 10:2)
3. நீதிமானுக்கு கண்ணிகளை வைக்கிறான்

10 அதிகாரம்

4. நீதிமானுக்கு விரோதமாக தீங்கு நினைக்கிறான்

5. தன் திட்டங்களில் பெருமை பாராட்டுகிறான் (சங் 10:3)

6. பேராசைப்படுகிறான்

7. தேவனை மறுதலிக்கிறான் (சங் 10:4)

8. தேவனுடைய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளமாட்டான் (சங் 10:5)

9. பாவம் செய்ய விரும்புகிறான்

10. தேவனுடைய நியாயத்தீர்ப்புகளுக்கு குருடனாயிருக்கிறான்

11. எதிராளிகள் மீது சீறுகிறான்

12. தான் இச்சித்தது கிடைத்ததினால் பெறுமைப்படுகிறான் (சங் 10:6)

13. தேவதூஷணம் சொல்லுகிறான் (சங் 10:7)

14. மற்றவர்களை வஞ்சிக்கிறான்

15. மற்றவர்களை ஏமாற்றுகிறான்

16. தீவினையும் அக்கிரமும் பேசுகிறான்

17. பிறருக்கு எதிராக சதி செய்கிறான் (சங் 10:8)

18. குற்றமற்றவனைக் கொல்லுகிறான்

19. திக்கற்றவனுக்கு அநியாயம் செய்கிறான்

20. ஏழைக்கு எதிராக சதிபண்ணுகிறான் (சங் 10:9)

21. அக்கிரமம் செய்கிறான் (சங் 10:10)

22. தன் பாவங்களில் நிம்மதியடைகிறான் (சங் 10:11)

"அவன்வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு" - இந்த வசனம் ரோமர் 3:14-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஏழை (poor) - חֵלְכָה - khay-lek-aw' - 2489

பெயர்ச்சொல் - திக்கற்றவன், ஏழை

துன்மார்க்கன் தன் இரைக்காகப் பதுங்கியிருக்கும் சிங்கம் போன்றவன். வலையை விரித்துள்ள வேடன் போன்றவன். தன் இரையைப் பீறித் தின்னும் கொடிய மிருகம் போன்றவன்.

பலவான்கள் - சிங்கத்தின் வலியபற்களும் நகங்களும் என்று பொருள்படும் (சங் 10:9), துன்மார்க்கனின் துன்மார்க்கமான கிரியைகளுக்கு துணைபுரிபவன் என்றும் பொருள்படும்.

துன்மார்க்கனின் தவறான எண்ணங்கள்

1. தேவன் நினைவு கூரமாட்டார், மறந்துவிடுவார் என்று நினைக்கிறான்

2. தேவன் தமது சிருஷ்டிகளில் தீமையைக் காணவிரும்பமாட்டார் என்று நினைக்கிறான்

2. துன்மார்க்கனைத் தண்டிக்க வேண்டுமென்று கர்த்தரிடம் ஏறெடுக்கப்படும் இரண்டாவது விண்ணப்பம். அத்துடன் நீதிமான் ஒடுக்கப்படும்போது அவனுக்கு உதவிபுரிய வேண்டுமென்று கர்த்தரிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம்

சங் 10:12 கர்த்தாவே, எழுந்தருளும்; தேவனே, உம்முடைய கையை உயர்த்தும்; ஏழைகளை மறவாதேயும்.

சங் 10:13 துன்மார்க்கன்தேவனை அசட்டைபண்ணி: நீர் கேட்டு விசாரிப்பதில்லை என்று தன் இருதயத்தில் சொல்லிக் கொள்வானேன்?

10 அதிகாரம்

சங் 10:14 அதைப்பார்த்திருக்கிறீரே! உபத்திரவத்தையும், குரோதத்தையும் கவனித்திருக்கிறீரே; நீர் பதிலளிப்பீர்; ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான்; திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே.

சங் 10:15 துன்மார்க்கனும் பொல்லாதவனுமாயிருக்கிற வனுடைய புயத்தை முறித்துவிடும்; அவனுடைய ஆகாமியம் காணாமற்போகுமட்டும் அதைத்தேடிவிசாரியும்.

சங் 10:16 கர்த்தர் சதாகாலங் களுக்கும் ராஜாவாயிருக்கிறார்; புறஜாதியார் அவருடைய தேசத்திலிருந்து அழிந்து போவார்கள்.

சங் 10:17 கர்த்தாவே, சிறுமைப் பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர்; அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்.

சங் 10:18 மண்ணான மனுஷன் இனிப் பலவந்தஞ்செய்யத் தொடராதபடிக்கு, தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப் பட்டவர்களுக்கும் நீதிசெய்ய உம்முடைய செவிகளைச் சாய்த்துக் கேட்டருளுவீர்.

"கர்த்தாவே, எழுந்தருளும்", என்று ஏறெடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள்

1. என் தேவனே என்னை இரட்சியும் (சங் 3:7)
2. உம்முடைய கோபத்தில் எழுந்திரும் (சங் 7:6)
3. மனுஷன் பெலன் கொள்ளாதபடி செய்யும் (சங் 9:19)
4. உம்முடைய கையை உயர்த்தும் (சங் 10:12)
5. துன்மார்க்கனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும் (சங் 17:13)
6. எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும் (சங் 44:23)
7. உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும் (சங் 44:26)
8. உமக்காக நீரே வழக்காடும் (சங் 74:22)
9. பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும் (சங் 82:8)
10. உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும் (சங் 132:8; 1நாளா 6:41)

மீட்பிற்காகக் கர்த்தரிடம் ஏறெடுக்கப் பட்டுள்ள விண்ணப்பங்கள்

1. கர்த்தாவே எழுந்தருளும்
2. உம்முடைய கையை உயர்த்தும்
3. ஏழைகளை மறவாதேயும்
4. துன்மார்க்கனும் பொல்லாத வனுமாயிருக்கிற வனுடைய புயத்தை முறித்து விடும் (சங் 10:15)
5. அவனுடைய ஆகாமியம் காணாமற்போகு மட்டும் அதைத் தேடி விசாரியும் (சங் 10:15)

ஜெபத்திற்கு தேவன் ஏன் பதிலளிக்க வேண்டும் என்பதற்கு காரணங்கள்

1. துன்மார்க்கன் தேவனை அசட்டை பண்ணுகிறான்
2. தேவன் பாவத்தை விசாரிப்பதில்லை என்று துன்மார்க்கன் நினைக்கிறான்
3. தேவன் பாவத்தைப் பார்க்கிறார் (சங் 10:14)
4. எல்லா உபத்திரவங்களையும் குரோதங்களையும் தேவன் கவனித்திருக்கிறார்
5. தேவன் எல்லோருக்கும் நீதி செய்வார்
6. ஏழையானவன் கர்த்தரைச் சார்ந்திருக்கிறான்
7. திக்கற்ற பிள்ளைகளுக்கு கர்த்தரே சகாயர்

சங்கீதம் - தொகுப்புரை

10 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 6

"துன்மார்க்கனும் பொல்லாதவனுமாய் இருக்கிறவனுடைய புயத்தை முறித்துவிடும்; அவனுடைய ஆகாமியம் காணாமற் போகுமட்டும் அதைத்தேடிவிசாரியும்............" (சங் 10:15-18) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியிலும் புதிய பூமியிலும் இந்தத் தீர்க்க தரிசனம் நிறைவேறும்.

10 - ஆவது சங்கீதத்தில் முன்னறிவிக்கப் பட்டுள்ள காரியங்கள்

1. ஆயிர வருஷ அரசாட்சியில் துன்மார்க்கனின் புயம் முறிக்கப்படும் (சங் 10; சங் 15; 1கொரி 15:24-28; எபே 1:10)
2. ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் மனுஷர் மத்தியில் துன்மார்க்கம் இராது (சங் 10:15; 1கொரி 15:24-28; வெளி 21:3-7)
3. ஆயிர வருஷ ஆட்சியின் துவக்கத்திலிருந்து கர்த்தர் சதா காலங்களுக்கும் ராஜாவாயிருப்பார் (சங் 10:16; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5)
4. ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் புறஜாதியார் தேசத்திலிருந்து அழிந்து போவார்கள் (சங் 10:16; 1கொரி 15:24-28; வெளி 21:3-7)
5. ஆயிர வருஷ அரசாட்சியிலும் புதிய பூமியிலும் உலக சமாதானத்திற்காகவும், நீதிக்காகவும் சிறுமைப்பட்டவன் செய்த வேண்டுதல் கேட்கப்படும் (சங் 10:17; சங் 37:11; ஏசா 2:2-4; வெளி 21:3-7)
6. திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப் பட்டவர்களுக்கும் நீதி செய்யப்படும் (சங் 10:18; ஏசா 11:3-9; ஏசா 65:20-25; 1கொரி 15:24-28; எபே 1:10)
7. அநீதிமான் இனிமேல் பலவந்தம் செய்யமாட்டான் (சங் 10:18; ஏசா 11:9; ஏசா 65:20-25; வெளி 20).

11 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

முதலாவது நம்பிக்கையின் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரை நம்புவதற்குக் காரணங்கள் - (11:1-3)
2. நீதிமான் சோதிக்கப்படுகிறான் - (11:4-5)
3. துன்மார்க்கன் தண்டிக்கப்படுகிறான், நீதிமான் பாதுகாக்கப்படுகிறான் - (11:6-7)

1. கர்த்தரை நம்புவதற்குக் காரணங்கள்

சங் 11:1 நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன்; பின்னை ஏன் நீங்கள் என் ஆத்துமாவை நோக்கி: பட்சியைப் போல உன் மலைக்குப் பறந்துபோ என்று சொல்லுகிறீர்கள்.

சங் 11:2 இதோ, துன்மார்க்கர் வில்லை வளைத்து, செம்மையான இருதயத்தார் மேல் அந்தகாரத்தில் எய்யும்படி தங்கள் அம்புகளை நாணிலே தொடுக்கிறார்கள்.

சங் 11:3 அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே, நீதிமான் என்ன செய்வான்?

கர்த்தரை நம்புவதனால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. ஏராளமான ஆசீர்வாதங்கள் (சங் 2:12)
2. பாதுகாப்பு (சங் 5:11)
3. தேவனுடைய பிரசன்னம் (சங் 9:10)
4. சத்துருக்களிடமிருந்து விடுதலை (சங் 17:7; சங் 37:40; சங் 91:4-7)
5. கர்த்தர் பரிசையும் கேடகமுமாயிருக்கிறார் (சங் 18:30; சங் 91:4; சங் 115:9-11; நீதி 30:5)
6. தேவனுடைய நன்மை (சங் 31:19)
7. மிகுந்த கனி (சங் 34:22)
8. பாதுகாப்பான வாசஸ்தலம் (சங் 37:3)
9. போஜனம் - அன்றன்றுள்ள ஆகாரம் (சங் 37:3)
10. ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார் (சங் 37:5)
11. பயத்திலிருந்து விடுதலை (சங் 56:11; சங் 91:4-10)
12. தீமையும் வாதையும் அணுகாது (சங் 91:4,10)
13. ஸ்திரத்தன்மை (சங் 125:1)
14. ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் திருப்தியாயிருக்கும் (ஏசா 55:2)
15. பரிபூரண சமாதானம் (ஏசா 26:3)
16. நித்திய வல்லமை (ஏசா 26:4)

"துன்மார்க்கர் வில்லை வளைத்து, செம்மையான இருதயத்தார் மேல் அந்தகாரத்தில் எய்யும்படி தங்கள் அம்புகளை நாணிலே தொடுக்கிறார்கள்" - ஆகையினால் நீதிமான்களுக்கு கர்த்தரே அடைக்கலமாயிருக்க வேண்டும். இல்லையெனில் துன்மார்க்கர் செம்மையான இருதயத்தாரைத் தாக்குவார்கள்.

2. நீதிமான் சோதிக்கப்படுகிறான்

சங் 11:4 கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது; அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது; அவருடைய இமைகள் அவர்களைச் சோதித்தறிகிறது.

11 அதிகாரம்

சங் 11:5 கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்; துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது.

பரலோகம் என்னும் சொல் பரிசுத்த வேதாகமத்தில் 716 தடவைகள் வந்துள்ளது. வானம், மேகம், ஆகாயம், நட்சத்திரம், உயர்ந்த இடம் ஆகியவற்றை இச்சொல் குறிக்கும் (ஆதி 11:4; உபா 1:28), கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்திலிருக்கிறது.

கர்த்தர் மனுபுத்திரரைக் கூர்ந்து கவனிக்கிறார். அவருடைய பார்வையிலிருந்து யாரும் தப்ப முடியாது.

கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார் (ஆதி 22)

"துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ள வனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது" - கர்த்தருக்கு ஒரு உள்ளம், ஆத்துமா உண்டு.

3. துன்மார்க்கன் தண்டிக்கப்படுகிறான், நீதிமான் பாதுகாக்கப்படுகிறான்

சங் 11:6 துன்மார்க்கர்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு.

சங் 11:7 கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 7

"துன்மார்க்கர்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு" (சங் 11:6) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை. துன்மார்க்கர் அனைவரும் எரியும் அக்கினிக் கடலில் போடப்படும் போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் (வெளி 20:11-15; ஏசா 66:22-24)

கர்த்தர் நீதியுள்ளவர். நீதியின் மேல் பிரியப்படுவார். அவருடைய கிரியைகள் அனைத்தும் நீதியானவை. அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது

12 அதிகாரம்

(செமினீத்தென்னும் எண்ணரம்புக் கின்னாரத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

நான்காவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. ஜெபம் - துன்மார்க்கனின் மூன்று பாவங்கள் - (12:1-2)

2. ஐந்துவிதமான நியாயத்தீர்ப்புக்கள் -துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - தேவனுடைய வார்த்தைக்கும் துன்மார்க்கனுக்கும் இடையிலுள்ள ஒப்புமை - (12:3-8)

1. ஜெபம் - துன்மார்க்கனின் மூன்று பாவங்கள்

சங் 12:1 இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்; உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்.

சங் 12:2 அவரவர் தங்கள் தோழரோடே பொய்பேசுகிறார்கள்; இச்சக உதடுகளால் இருமனதாய்ப் பேசுகிறார்கள்.

உதவி செய் (Help) - யஷ் - yaw-shah' - 3467

வினைச்சொல் - இரட்சி, துணைநில், ஒத்தாசைபண்ணு, உதவிசெய், காப்பாற்று, விடுவி, நீங்கலாக்கு, துணை - இரட்சி, பாதுகாப்பு கொடு. "உதவி செய்" என்று 12 தடவைகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது (சங் 12:1; சங் 116:6 ; யாத் 2:16-19; 2சாமு 10:11,19; 2சாமு 14:4; 2சாமு 19:1; 2இராஜா 6:26 - 27; 1நாளா 19:12,19; 2நாளா 20:9)

கர்த்தரிடம் உதவி கேட்பதற்குக் காரணங்கள்

1. பக்தியுள்ளவன் அற்றுப் போகிறான்

2. உண்மையுள்ளவர்கள் குறைந்திருக்கிறார்கள்

3. துன்மார்க்கர் இச்சகம் பேசுகிறார்கள் (சங் 12:2)

4. துன்மார்க்கர் பெருமைகளைப் பேசுகிறார்கள்

5. துன்மார்க்கர் இருமனமாகப் பேசுகிறார்கள்

2. ஐந்துவிதமான நியாயத்தீர்ப்புக்கள் - துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - தேவனுடைய வார்த்தைக்கும் துன்மார்க்கனுக்கும் இடையிலுள்ள ஒப்புமை

சங் 12:3 இச்சகம்பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அற்றுப்போடுவார்.

சங் 12:4 அவர்கள்: எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம், எங்கள் உதடுகள் எங்களுடையது; யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள்.

சங் 12:5 ஏழைகள் பாழாக்கப் பட்டதினிமித்தமும், எளியவர்கள் விடும் பெருமூச்சினிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சங் 12:6 கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது.

சங் 12:7 கர்த்தாவே, நீர் அவர்களைக் காப்பற்றி, அவர்களை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காத்துக் கொள்ளுவீர்.

12 அதிகாரம்

சங் 12:8 மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள்.

கர்த்தர் அற்றுப்போடும் இரண்டு காரியங்கள்

1. இச்சகம் பேசுகிற உதடுகள்

2. பெருமைகளைப் பேசுகிற நாவுகள்

"பெருமைகளைப் பேசுகிற நாவையும்" - யாக் 3:5 இல் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது

பெருமைகள் - வீண் பேச்சு, பொய்நாவு (2பேதுரு 2:18-19)

"எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம், எங்கள் உதடுகள் எங்களுடையது; யார் எங்களுக்கு ஆண்டவன் என்று துன்மார்க்கர் சொல்லுகிறார்கள்" - துன்மார்க்கன் தன் பேச்சாற்றலால் எதையும் சாதிக்கலாம் என்று நினைக்கிறான் (சங் 5:9; சங் 36:2; சங் 55:21; சங் 78:36; நீதி 5:3; நீதி 7:5,21; நீதி 20:19; நீதி 26:28; நீதி 28:23; நீதி 29:5; 1தெச 2:5; யூதா 1:16)

நமது நாவுகள் நம்முடையவை. நமது நாவை நாம் காவாவிட்டால் நமக்கு அழிவு நிச்சயம் (மத் 12:36-37; யாக் 3:1).

கர்த்தர் எழுந்து நியாயந்தீர்க்கப் போகும் காரியங்கள்

1. ஏழைகளைப் பாழாக்குதல்

2. எளியவர்களை பெருமூச்சுவிட வைத்தல்

தீர்க்கதரிசன எண் - 8

"இச்சகம்பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அற்றுப்போடுவார்......................" (சங் 12:3-5) - இந்த தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. நியாயத்தீர்ப்பின் போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் (வெளி 20:11-15)

"கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக் கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது" - கர்த்தருடைய சொற்கள் சுத்தமானவை.

சங்கீதத்தில் கர்த்தருடைய வார்த்தையைப் பற்றி கூறப்பட்டுள்ள காரியங்கள்

1. சுத்தமானது (சங் 12:6; சங் 119:140)

2. புடமிடப்பட்டது (சங் 12:6; சங் 18:30)

3. உத்தமமானது (சங் 33:4)

4. சிருஷ்டிக்கிறது (சங் 33:6)

5. சொஸ்தமாக்குகிறது (சங் 107:20)

6. உயிர்ப்பிக்கிறது (சங் 119:25,50,154)

7. நித்தியமானது (சங் 119:89)

8. நாவுக்கு இனிமையானது, வாய்க்கு தேனிலும் மதுரமானது (சங் 119:103)

9. கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமானது (சங் 119:105)

10. வெளிச்சம் (சங் 119:130)

11. சத்தியம் (சங் 119:160)

12. பருவநிலைகளை ஆளுகை செய்கிறது (சங் 147:18; சங் 148:8)

மண்குகையில் உருக்கி புடமிடப்படும் போது அழுக்கு எல்லாம் அகலும். சுத்தமானது மட்டுமே இருக்கும். கர்த்தருடைய வார்த்தை பரிசுத்தமானது.

12 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 9

"நீர் அவர்களைக் காப்பற்றி, அவர்களை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காத்துக்கொள்ளுவீர்" (சங் 12:7) - இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதிமட்டும் நிறைவேறியுள்ளது. மீதமுள்ள பகுதி நித்திய காலமாகத் தொடர்ந்து நிறைவேறும்.

"மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித் திரிவார்கள்" - சண்டாளர் ஆட்சிபுரியும் போது துன்மார்க்கர் செழித்திருப்பார்கள். மோசமானவர்கள் உயர்ந்திருப்பார்கள்.

13 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

ஐந்தாவது நெருக்கத்தின் ஜெயம்

பொருளடக்கம்

1. தாவீதின் ஐந்து முறையீடுகள் - (13:1-2)
2. மூன்று விண்ணப்பங்கள் - மூன்று காரணங்கள் - (13:3-4)
3. ஜெபத்திற்குப் பதில் பெறுவதற்கு மூன்று இரகசியங்கள் - (13:5-6)

1. தாவீதின் ஐந்து முறையீடுகள்

சங் 13:1 கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர், எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்?

சங் 13:2 என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவில் ஆலோசனை பண்ணிக் கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?

தாவீது நெருக்கப்பட்டான். குற்றம் சுமத்தப்பட்டான். தான் விதைத்ததை அறுத்தான். ஆகையினால் தன் துன்ப வேளையில் கர்த்தரிடம் முறையிடுகிறான். இது மனுஷருடைய பொதுவான குணமே! தாவீது பத்சேபாளுடன் பாவம் செய்து தண்டனை பெற்ற போதோ, அல்லது அப்சலோம் இவனுக்கு எதிராகக் கலகம் பண்ணிய போதோ, தாவீது இந்த சங்கீதத்தை எழுதியிருக்கலாம். (2சாமு 11:1லி18:33). பாபிலோனிய சிறையிருப்பின்போது, இதை எழுதியிருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் பாபிலோனிய சிறையிருப்பு தாவீதுக்குப் பின்பு நீண்டகாலம் சென்ற பிறகு நடைபெற்ற காரியம்.

"எதுவரைக்கும்" என்று தாவீது நான்கு முறை சங் 13:1-2 ஆகிய வசனங்களில் கேட்கிறான்

1. "எதுவரை?" - கர்த்தர் மறக்கமாட்டார்.
2. "எதுவரை?" - பாவம் செய்தவனுக்கு மட்டும், அவன் பாவத்தில் ஜீவிக்கும் வரைக்கும் கர்த்தர் தமது முகத்தை அவனுக்கு மறைப்பார் (கலா 6:7-8). மற்றபடி கர்த்தர் தமது முகத்தை மறைக்க மாட்டார்.
3. "எதுவரை?" - மனுஷன் விரும்புகிற வரையிலும் தன் இருதயத்தில் சஞ்சலத்தோடு இருக்கலாம். அவன் விரும்பினால் இந்த சஞ்சலத்திலிருந்து விடுதலை பெறலாம். (ஏசா 26:3; மத் 6:25-34; பிலி 4:8)
4. "எதுவரை?" - பாவம் செய்தால் சத்துரு உயர்ந்திருப்பான் (1யோவான் 3:8; யோவான் 8:44). செய்த பாவத்திற்கு தண்டனை அனுபவிக்கும் வரையிலும் சத்துரு உயர்ந்திருப்பான் (கலா 6:7-8).

2. மூன்று விண்ணப்பங்கள் - மூன்று காரணங்கள்

சங் 13:3 என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவி கொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்.

சங் 13:4 அவனை மேற்கொண்டேன் என்று என் பகைஞன் சொல்லாதபடிக்கும், நான் தள்ளாடுகிறதினால் என் சத்துருக்கள் களி கூராதபடிக்கும் இப்படிச் செய்தருளும்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என்னை நோக்கிப்பாரும்
2. எனக்கு செவிகொடும்
3. என் கண்களைத் தெளிவாக்கும் (என்னை ஏற்றுக்கொள்ளும்)

சங்கீதம் - தொகுப்புரை

13 அதிகாரம்

தாவீது மரண நித்திரை அடையக்கூடாது என்று விண்ணப்பம் செய்வதற்குக் காரணங்கள்

1. நான் மரிக்கக் கூடாது
2. என் சத்துரு என்னை மேற்கொள்ளக் கூடாது (சங் 13:4)
3. என் சத்துரு என் தோல்வியினால் களிகூரக் கூடாது

3. ஜெபத்திற்குப் பதில் பெறுவதற்கு மூன்று இரகசியங்கள்

சங் 13:5 நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்; உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும்.

சங் 13:6 கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்.

தேவனுடைய கிருபை எல்லா மனுஷருக்கும் நிபந்தனையுடன் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது (யாத் 20:6; யாத் 34:6-7; 2நாளா 30:9; சங் 62:12; ஏசா 55:7; ரோமர் 2:4-10; எபே 2:4; தீத்து 3:5; 1பேதுரு 1:3; 1பேதுரு 2:10) இரக்ககுணம் மனுஷனிடமும் காணப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டில் கிருபை என்பது சாந்தகுணத்தையும் குறிக்கும்.

கர்த்தருடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருப்பதனால் ஏற்படும் விளைவுகள்

1. இரட்சிப்பில் களி கூருதல்
2. கர்த்தரைப் பாடுதல் (சங் 13:6)

14 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

முதலாவது அறிவுறுத்தும் சங்கீதம் - துன்மார்க்கனைக் குறித்து

பொருளடக்கம்

1. மதிகெட்டவனின் வார்த்தைகளும் செயல்களும் - (14:1)
2. கர்த்தர் பூமியில் பக்தியுள்ள மனுஷரைத் தேடுகிறார் - (14:2)
3. தேவனுடைய கண்டுபிடிப்பு - எல்லா மனுஷரும் துன்மார்க்கர் - (14:3-6)
4. தேவனுடைய இறுதி நோக்கம் - பூமியிலுள்ள மனுஷர் நீதிமானாயிருக்க வேண்டும் - (14:7)

1. மதிகெட்டவனின் வார்த்தைகளும் செயல்களும் - (சங் 53:1)

சங் 14:1 தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.

மதிகெட்டவன் (fool) - נָבָל - naw-bawl' - 5036

பெயர்ச்சொல் - மதிகெட்டவன், பயித்தியக்காரி, மதியீனனன், மூடன்

பைத்தியம் (fool) - נָבֵל - naw-bale' - 5034

வினைச்சொல் - பைத்தியமாய் நட, வாடு, உலர்ந்துபோ, உதிர், தொய்ந்துபோ - மதிகெட்டவன் (சங் 14:1; சங் 53:1; 2சாமு 3:33; 2சாமு 13:13; யோபு 30:8; நீதி 17:7,21; நீதி 30:22; எரே 17:11); மதிகெட்டது (உபா 32:6,21; யோபு 2:10; சங் 39:8; சங் 74:13,22; எசே 13:3); மூடன் (ஏசா 32:5-6)

மதிகெட்டவன் கூறும் காரியங்கள்

1. தேவன் இல்லை (சங் 14:1; சங் 53:1)
2. இளைப்பாறு, புசித்துக்குடி, பூரிப்பாயிரு (லூக்கா 12:18-19)

மதிகெட்டவனின் சுபாவங்கள்

1. தேவன் இல்லை என்கிறான்
2. துன்மார்க்கமாக ஜீவிக்கிறான்
3. அருவருப்பான கிரியைகளைச் செய்கிறான்
4. தேவனை அறியவில்லை (சங் 14:2)
5. தேவனைத் தேடுகிற உணர்வு இல்லை
6. நன்மை செய்யவில்லை (சங் 14:1,3)
7. தேவனை விட்டு விலகிப் போனவன் (சங் 14:3)
8. ஜீவியத்தில் கெட்டுப் போனவன்
9. தேவனைப் பற்றிய அறிவு இல்லை (சங் 14:4)
10. தேவ ஜனத்தைப் பட்சிக்கிறான்
11. கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறதில்லை
12. ஏழைகளை ஒடுக்குகிறான் (சங் 14:5)

"நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை" - ரோமர் 3:10-12 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. கர்த்தர் பூமியில் பக்தியுள்ள மனுஷரைத் தேடுகிறார் - (சங் 53:2)

சங் 14:2 தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

"கண்ணோக்கினார்", பரலோகத்திலிருந்து மனுஷரை உற்றுப் பார்த்தார் (சங் 53:2; ஆதி 11:5; ஆதி 18:21; (சங் 14:1,3-6)

14 அதிகாரம்

மனுபுத்திரர் - தேவன் சிருஷ்டித்த ஆதாமின் புத்திரர்.

"தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ" என்பதை மனுஷர் மத்தியில் காண வேண்டுமென்று, தேவன் எப்போதும் மனுஷரைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார் (சங் 33:13-14; சங் 69:20; யோபு 33:27; ஏசா 63:5)

3. தேவனுடைய கண்டுபிடிப்பு - எல்லா மனுஷரும் துன்மார்க்கர் - (சங் 53:3)

சங் 14:3 எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

சங் 14:4 அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவுஇல்லையோ? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறதில்லை.

சங் 14:5 அங்கே அவர்கள் மிகவும் பயந்தார்கள்; தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே.

சங் 14:6 சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் என்று சொல்லி, நீங்கள் அவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணினீர்கள்.

"எல்லோரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டு போனார்கள்", இது சத்தியமான வார்த்தை. மனுக்குலம் தேவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டது. கோணலும் மாறுபாடானதுமான பாதையில் செல்கிறது. தேவன் இல்லை என்று கூறுவது தேவதூஷணம் (ரோமர் 1:21-32)

தேவன் இல்லை என்று சொன்னதினால் மனுஷன் கெட்டுப் போனான்.

"நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" - இது ரோமர் 3:10-18 இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அறிவு" என்பது ஞானத்தின் ஆரம்பமாகிய கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை மெய்யாகப் புரிந்து கொள்ளவதாகும் (சங் 111:10; நீதி 1:7; நீதி 9:10 நீதி 15:33; ஏசா 11:2; 1கொரி 12:8).

"அப்பத்தைப் பட்சிக்கிறது போல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே" எபிரெய மொழியில் அழிவைக் குறிக்கும் வழக்குச் சொல் (எரே 10:25; ஆமோ 8:4; மீகா 3:3; எண் 14:9).

"அவர்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறதில்லை" - கர்த்தரைத் தொழுது கொள்ளாத நிலம், பாவம், அழிவு ஆகிய பயிர்களையே முளைப்பிக்கும் (கலா 6:7-8).

"தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறார்" - ஆகையினால் துன்மார்க்கருக்கு ஆக்கினைத் தீர்ப்பின் பயங்கரம் உண்டு. தேவன் தமது ஜனத்தோடே வாசம் பண்ணி, தமது ஜனத்தை அழிக்க நினைக்கும் துன்மார்க்கரை நியாயந்தீர்க்கிறார் (எபி 10:30-31).

நீதிமானுடைய சந்ததி என்பது நீதிமான்களையே குறிக்கும்

"சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார்" - ஆகையினால் இவர்களுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணக்கூடாது. அலட்சியம் பண்ணுவது மாயையைப் பின்பற்றுவது போன்றதாயிருக்கும்.

4. தேவனுடைய இறுதி நோக்கம் - பூமியிலுள்ள மனுஷர் நீதிமானாயிருக்க வேண்டும் - (சங் 53:6)

சங் 14:7 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும் போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.

14 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 10

"சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்" (சங் 14:7) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. மேசியா சீயோனுக்கு வந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பைக் கொண்டு வருவார். இது தீர்க்க தரிசன அழைப்பு (ஏசா59:20-21; ரோமர் 11:25-29).

15 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

நீதிமானின் இரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மனுஷன் கேட்கும் மிகப்பெரிய கேள்வி - (15:1)
2. தேவனுடைய பதில் - பரிபூரண மனுஷன் - நீதிமானிடமும் பரிபூரண மனுஷனிடமும் காணப்படும் பன்னிரெண்டு குணாதிசயங்கள் - (15:2-5)

1. மனுஷன் கேட்கும் மிகப்பெரிய கேள்வி

சங் 15:1 கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?

"கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?" - கூடாரம், பரிசுத்த பர்வதம் என்பது சீயோன் மலை, தேவனுடைய நகரம், புதிய எருசலேம் என்பதைக் குறிக்கும். தேவன் இங்கு வாசம் பண்ணுகிறார் (எபி 12:22-23; வெளி 14:1). தங்குதல், வாசம் பண்ணுதல் என்பது எப்போதாவது போய் வருதல் என்று பொருள் படாது. தொடர்ந்து தங்குவதைக் குறிக்கும். பக்தியில்லாதவன் கூட தேவாலயத்திற்குப் போகலாம். ஆனால் தேவனுடைய கூடாரத்தில் தங்க வேண்டுமானால் சங் 15:2-5 இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

2. தேவனுடைய பதில் - பரிபூரண மனுஷன் - நீதிமானிடமும் பரிபூரண மனுஷனிடமும் காணப்படும் பன்னிரெண்டு குணாதிசயங்கள்

சங் 15:2 உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.

சங் 15:3 அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.

சங் 15:4 ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.

சங் 15:5 தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப் படுவதில்லை.

தீர்க்கதரிசன எண் - 11

"உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே..............." (சங் 15:2-5) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நீதிமானின் குணாதிசயங்கள்

1. உத்தமனாய் நடப்பான்
2. நீதியை நடப்பிப்பான்
3. மனதார சத்தியத்தைப் பேசுவான்
4. புறங்கூறமாட்டான் (சங் 15:3).
5. தோழனுக்கு தீங்கு செய்யமாட்டான்
6. அயலான் மேல் நிந்தையான பேச்சை எடுக்க மாட்டான்
7. ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன் (சங் 15:4).
8. கர்த்தருக்குப் பயந்தவர்களைக் கனம் பண்ணுவான்
9. தனக்கு நஷ்டம் வந்தாலும் தன் ஆணையில் தவறமாட்டான்

சங்கீதம் - தொகுப்புரை

15 அதிகாரம்

10. மற்றவர்களுடைய கஷ்டத்தில் தன் வசதியைப் பெருக்கிக் கொள்ள மாட்டான் (சங் 15:5).

11. பரிதானம் வாங்கமாட்டான்

12. குற்றமில்லாதவனைப் பாதுகாப்பான்

நாவின் தவறான பயன்பாடுகள்

1. கோள் சொல்லுதல் (உபா 22:13-19)

2. கதை சொல்லுதல் (லேவி 19:16; நீதி 11:13)

3. பொய்ச்சாட்சி கூறுதல் (யாத் 20:16; யாத் 23:7)

4. முணுமுணுத்தல் (ரோமர் 1:29)

5. அவதூறு சொல்லுதல் (1தீமோ. 3:11)

6. தவறாக குற்றஞ்சாட்டுதல் (தீத்து 2:3)

7. வீண் பேச்சு பேசுதல் (தீத்து 1:10)

8. தூஷித்தல் (எரே 20:10)

9. அர்த்தமில்லாமல் பேசுதல் (1தீமோ 5:13)

10. பொய்பேசுதல் (நீதி 6:17; வெளி 21:8; வெளி 22:15)

11. ஏமாற்றுதல் (வெளி 12:9)

12. புறங்கூறுதல் (சங் 15:3; ரோமர் 1:30)

"இப்படிச் செய்கிறவன்" - வசனத்தைக் கேட்டால் மட்டும் போதாது, அதற்குக் கீழ்ப்படிந்து அதன்படி செய்யவும் வேண்டும் (மத் 7:21-29; யோவான் 15:10-14; ரோமர் 8:12-13; யாக் 1:22-27; யாக் 2:10-26; 2பேதுரு 1:4-10).

"என்றென்றைக்கும் அசைக்கப் படுவதில்லை", இவைகளைச் செய்கிறவன் அசைக்கப்படமாட்டான் (சங் 15:2-5; சங் 125:1)

16 அதிகாரம்

(தாவீது எழுதின மிக்தாம் என்னும் பொற்பணதிக்கீதம்.)

மேசியாவைப்பற்றிய மூன்றாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தாவீது பரிசுத்தவான்கள், அப்போஸ்தலர் ஆகியோரைப் பற்றியது - (16:1-4)
2. மேசியாவைப் பற்றியது - (16:5-11)

1. தாவீது பரிசுத்தவான்கள், அப்போஸ்தலர் ஆகியோரைப் பற்றியது

சங் 16:1 தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன்.

சங் 16:2 என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்;

சங் 16:3 பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய்.

சங் 16:4 அந்நியதேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்; அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன், அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்.

தாவீது இவ்வாறு விண்ணப்பம் பண்ணுவதற்குக் காரணங்கள்

1. உம்மை நம்பியிருக்கிறேன்.
2. தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர் (சங் 16:2)
3. "என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராது" - உம்மையல்லாமல் எனக்கு வேறு செல்வமில்லை. என்னுடைய செல்வம் உம்மிடத்திலிருந்தே வந்திருக்கிறது (சங் 16:2).

நம்பு (trust)- חָסָה - khaw-saw' - 2620

வினைச்சொல் - நம்பு, நம்பியிரு, அண்டிக்கொள், ஒதுங்கு, வந்துஅடை, அடைக்கலம்புகு - உம்மிடத்தில் அடைக்கலம் பெற வந்திருக்கிறேன். நம்புகிறேன் (உபா 32:37; நியா 9:15; ரூத் 2:12; 2சாமு 22:3,31; சங் 2:12; சங் 5:11; சங் 7:1; சங் 11:1; சங் 16:1; சங் 17:7; சங் 18:2,30; சங் 25:20; சங் 31:1,19; சங் 34:8,22;சங் 36:7; சங் 37:40; சங் 57:1; சங் 61:4; சங் 64:10; சங் 71:1; சங் 91:4; சங் 118:8-9; சங் 141:8; சங் 144:2; நீதி 30:5; ஏசா 14:32; ஏசா 30:2; ஏசா 57:13; நாகூம் 1:7; செப் 3:12)

பூமியிலுள்ள பரிசுத்தவான்கள் மீது தேவன் பிரியமாயிருக்கிறார்.

அந்நிய தெய்வங்களை நாடி பின்பற்றுவோருக்கு அந்த தெய்வங்களாலேயே வேதனைகள் பெருகும். அந்த தெய்வங்களுக்கு தாவீது இரத்த பானபலி செலுத்த மாட்டான்.

2. மேசியாவைப் பற்றியது - (வசனங்கள்: 8-11;அப் 2:25-28; 13:35)

சங் 16:5 கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்.

சங் 16:6 நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு.

சங் 16:7 எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக் காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்.

16 அதிகாரம்

சங் 16:8 கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

சங் 16:9 ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.

சங் 16:10 என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காண வொட்டீர்.

சங் 16:11 ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

தீர்க்கதரிசன எண் - 12

"கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்................." (சங் 16:5-11) - இயேசு கிறிஸ்துவின் ஜீவியம், மரணம், உயிர்த்தெழுதல், மகிமையடைதல் ஆகியவற்றில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என் சுதந்தரமும் என் பாத்திரமும்" இந்த சங்கீதம் தாவீதையும் மேசியாவையும் குறிக்கிறது. (சங் 16:5-7). சங் 16:8-10 ஆகிய வசனங்கள் மேசியாவை மட்டுமே குறிக்கும். இவை மேசியாவில் நிறைவேறின(அப் 2:25-28; அப் 13:35).

மேசியாவைப் பற்றிய குறிப்புகள்

1. கர்த்தர் என் சுதந்தரம் (சங் 16:5). லேவி கோத்திரத்தாருக்கு வாக்குத்தத்த தேசத்தில் சுதந்தரம் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. கர்த்தரே அவர்களுடைய சுதந்தரம் (உபா 10:9; உபா 18:1-2). இஸ்ரவேல் ஜனம் எல்லோருமே கர்த்தருக்கு ஆசாரிய ராஜ்யமாக இருக்கிறார்கள் (யாத் 19:6; எரே 10:16)
2. கர்த்தர் என் பாத்திரத்தின் பங்கானவர் (சங் 16:5). இது இரட்சிப்பின் அடையாளம் (மத் 20:22)
3. ஜாதிகளின் இரட்சிப்பே மேசியாவின் சுதந்திரம் (எபி 2:9-15)
4. வாக்குத்தத்த தேசம் பங்கு பிரிக்கப் பட்டதைக் குறிக்கிறது(சங் 16:6)
5. மனுக்குலத்தின் மீட்பும் பூலோகத் திலிருக்கிறவைகள் கர்த்தருக்குள் கட்டப்படுவதுமே மேசியாவின் சுதந்தரம் (எபே 1:10; வெளி 21-22)
6. நான் கர்த்தரைத் துதிப்பேன்(சங் 16:7)
7. கர்த்தர் எனக்கு ஆலோசனை தந்தார் (சங் 16:7;ஏசா 50:4;லூக்கா 2:40,52)
8. இராக்காலங்களிலும் என் உள்ளந்திரியங்கள் என்னை உணர்த்தும் (சங் 16:7; சங் 1:2)
9. கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்(சங் 16:8)
10. அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறார். அதனால், அவருடைய பிரசன்னமும், ஆதரவும் தொடர்ந்து எனக்கு கிடைக்கிறது (சங் 16:8)
11. நான் அசைக்கப்படுவதில்லை (சங் 16:8; சங் 125:1)
12. என் இருதயம் பூரித்தது (சங் 16:9; எபி 12:2)
13. என் மகிமை களிகூர்ந்தது (சங் 16:9; அப் 2:26)
14. என் மாம்சம் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். ஏனெனில், அது உயிர்ந்தெழுந்திருக்கும் (சங் 16:9; அப் 2:27)
15. கர்த்தர், என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடமாட்டார்

நரகம்(hell)- שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல்-பாதாளம்,நரகம் (சங் 16:10; மத் 12:40; எபே 4:8-10)

16 அதிகாரம்

16. என்னுடைய சரீரம் பாதாளத்தில் பாடுகளை அனுபவிக்காது (சங் 16:10; அப் 2:25-29).

17. நான் உம்முடைய பரிசுத்தவான் (சங் 16:10). நான் பிதா அல்ல. திருத்துவத்தில் ஒரு நபர்.

18. நித்தியத்திற்காக உயிர்த் தெழுந்தவர்களில் நானே முதலாவது இருப்பேன்(சங் 16:11;1கொரி 15:20-23). இதனால் மற்றவர்களை மரணத்திலிருந்து என்னால் வழி நடத்த முடியும்.

19. தேவனுடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் எனக்கு உண்டு (சங் 16:11; எபி 12:2).

20. தேவனுடைய சமூகத்தில் நித்திய பேரின்பம் எனக்கு உண்டு (சங் 16:11).

"அழிவு" - இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த போது, அவருடைய சரீரம் அழியவில்லை. சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் (யோவான் 21:14).

17 அதிகாரம்

(தாவீதின் விண்ணப்பம்.)

ஆறாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. தேவன் கேட்கவேண்டுமென்று ஏறெடுக்கப்பட்ட எட்டு விண்ணப்பங்கள் - தாவீதின் சோதனையும் நேர்மையும் - (17:1-6)
2. துன்மார்க்கனிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஏறெடுக்கப்பட்ட மூன்று விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - (17:7-12)
3. துன்மார்க்கனிடமிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதற்காக - (17:13-14)
4. தாவீதின் மூன்று விதமான நம்பிக்கை - (17:15)

1. தேவன் கேட்கவேண்டுமென்று ஏறெடுக்கப்பட்ட எட்டு விண்ணப்பங்கள் - தாவீதின் சோதனையும் நேர்மையும்

சங் 17:1 கர்த்தாவே, நியாயத்தைக் கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும்; கபடமில்லாத உதடுகளினின்று பிறக்கும் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடும்.

சங் 17:2 உம்முடைய சந்நிதியிலிருந்து என் நியாயம் வெளிப்படுவதாக; உம்முடைய கண்கள் நியாயமானவைகளை நோக்குவதாக.

சங் 17:3 நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப் பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்; என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன்.

சங் 17:4 மனுஷரின் செய்கைகளைக் குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக்கொள்ளுகிறேன்.

சங் 17:5 என் காலடிகள் வழுவாதபடிக்கு, என் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும்.

சங் 17:6 தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர்; என்னிடத்தில் உம்முடைய செவியைச் சாய்த்து, என் வார்த்தையைக் கேட்டருளும்.

தாவீதைக் குறித்த காரியங்கள்

1. நீதியானவன் (சங் 17:1)
2. ஜெபத்தில் கூப்பிடுகிறவன்
3. கபடமில்லாத உதடுகளுடையவன்
4. பரிசோதிக்கப்பட்டு புடமிடப்பட்டவன் (சங் 17:3)
5. தீங்கொன்றும் காணப்படாதவன்
6. வாய் மீறாதபடிக்கு காத்துக் கொண்டவன்
7. மீறுதல் இல்லாதவன்
8. துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கி தன்னைக் காத்துக் கொண்டவன் (சங் 17:4)
9. தேவன் தன் ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார் என்ற நம்பிக்கையுடையவன் (சங் 17:6)
10. தேவனை நம்புகிறவன் (சங் 17:7)

2. துன்மார்க்கனிடமிருந்து பாதுகாக்கப்படவேண்டும் என்று ஏறெடுக்கப்பட்ட மூன்று விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் -

(7:7; 10:1; 12:1; 35:17; 50:14)

சங் 17:7 உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப் பண்ணும்.

சங் 17:8 கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்.

17 அதிகாரம்

சங் 17:9 என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்து கொள்ளுகிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்.

சங் 17:10 அவர்கள் நிணந்துன்னியிருக்கிறார்கள், தங்கள் வாயினால் வீம்பு பேசுகிறார்கள்.

சங் 17:11 நாங்கள் செல்லும் பாதைகளில் இப்பொழுது எங்களை வளைந்து கொண்டார்கள்; எங்களைத் தரையிலே தள்ளும்படி அவர்கள் கண்கள் எங்களை நோக்கிக்கொண்டிருக்கிறது.

சங் 17:12 பீறுகிறதற்கு ஆவலுள்ள சிங்கத்துக்கும், மறைவிடங்களில் பதிவிருக்கிற பால சிங்கத்துக்கும் ஒப்பாயிருக்கிறார்கள்.

தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதங்கள்

1. அதிசயமான கிருபையை விளங்கப் பண்ணுவார்
2. தீமையினின்று விலக்கிக் காப்பார் (சங் 17:8)
3. தம்முடைய செட்டைகளின் நிழலிலே காப்பாற்றுவார் (சங் 91:1-10)

கிருபை (lovingkindness) - חֶסֶד - kheh'-sed - 2617

ஆண்பால் பெயர்ச்சொல் - கிருபை, தயை, அனுகிரகம், தயவு, இரக்கம், நன்மை, நற்கிரியை, காருண்யம், மகிமை(சங் 17:7;சங் 25:6; சங் 26:3; சங் 36:7,10; சங் 40:10,11; சங் 42:8; சங் 48:9; சங் 51:1; சங் 63:3; சங் 69:16; சங் 88:11; சங் 89:33,49; சங் 92:2; சங் 103:4; சங் 107:43; சங் 119:88, 149,159; சங் 138:2; சங் 143:8;ஏசா 63:7; எரே 9:24; எரே 16:5; எரே 31:3; எரே 32:18; ஓசி 2:19)- தேவனுடைய அதிசயமான கிருபை சத்துருக்களிடமிருந்து நம்மை மீட்கும் (சங் 17:7-14).

வலதுகரம் தேவனுடைய மீட்பைக் குறிக்கும் (சங் 44:3; சங் 98:1; நியா 7:2; ஏசா 59:1)

கண்மணி (apple of the eye) - אִישׁוֹן - ee-shone' - 380

ஆ.பெ.சொ - கண்மணி - (கண்ணின்) மணி - எபிரெய மொழியில் கண்மணியைப் போல பாதுகாப்பது என்பது அதிகக் கவனத்துடன் பாதுகாப்பதைக் குறிக்கும். கண்ணுக்குப் பாதுகாப்பு அவசியம். தேவன் கண்ணை பாதுகாப்பாக சிருஷ்டித்திருக்கிறார். மண்டை ஓட்டிற்குள் இருந்தாலும் கண்களை நமது கரங்களாலும் மூடிப் பாதுகாக்கலாம். கண் இமையும் கண்ணைப் பாதுகாக்கும் (உபா 32:10; நீதி 7:2)

செட்டைகளின் நிழல் என்பது தேவனுடைய பாதுகாப்பை குறிப்பிடும் (சங் 36:7; சங் 57:1; சங் 61:4; சங் 63:7; சங் 91:4; மத் 23:37) செட்டைகளின் நிழல், கண்மணி ஆகிய இரண்டு வர்ணனைகளும் உபா 32:10-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"அவர்கள் நிணந்துன்னியிருக்கிறார்கள்", இது அவர்களுடைய செழுமையையும் (சங் 22:29; சங் 92:14; சங் 119:70; நீதி 11:25; நீதி 13:4; ஏசா 6:10), மந்த நிலைமையையும் குறிப்பிடும்

தாவீதின் விரோதிகள் பீறுகிறதற்கு ஆவலுள்ள சிங்கத்துக்கும், பால சிங்கத்துக்கும் ஒப்பாயிருக்கிறார்கள் (சங் 17:9-11).

3. துன்மார்க்கனிடமிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதற்காக

சங் 17:13 கர்த்தாவே, நீர் எழுந்திருந்து, அவனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும்; கர்த்தாவே, என் ஆத்துமாவைத் துன்மார்க்கனுடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும்.

17 அதிகாரம்

சங் 17:14 மனுஷருடைய கைக்கும், இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலகமக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும்; அவர்கள் வயிற்றை உமது திரவியத்தினால் நிரப்புகிறீர்; அவர்கள் புத்திர பாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள்.

அவனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும் தாவீதை அழிப்பதற்கு வகை தேடிய சவுலை இந்த வசனம் குறிப்பிடுகிறது (சங் 17:7-14; 1சாமு 24:1-22;1சாமு 26:1-25).

உலகப்பிரகாரமான மக்கள் திரவியத்தினால் நிரம்பியிருக்கிறார்கள். இம்மையில் செழிப்பாக இருக்கிறார்கள். மறுமையைப் பற்றிய சிந்தனை அவர்களுக்கு இல்லை.

4. தாவீதின் மூன்று விதமான நம்பிக்கை

சங் 17:15 நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.

தீர்க்கதரிசன எண் - 13

"நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" (சங் 17:15)- இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. உயிர்த்தெழுதலின் போது இது நிறைவேறும். அப்போது நாம் இயேசுவின் சாயலாக ஆவோம் (பிலி 3:21).

18 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம். கர்த்தருடைய தாசனாகிய தாவீது இந்தப் பாட்டின் வார்த்தைகளைக் கர்த்தர் தன்னைத் தன்னுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த நாளிலே பாடினது.)

முதலாவது மீட்பின் சங்கீதம் - (2சாமு 22)

பொருளடக்கம்

1. தாவீதின் தேவன் - தேவனுடைய ஒன்பது காரியங்கள் - (18:1-2)
2. நெருக்கத்தில் தாவீதின் ஜெபம் - (18:3-6)
3. தேவனுடைய பதில் - முப்பத்தைந்து அற்புதமான கிரியைகள் - (18:7-20)
4. சாட்சி - ஐந்து செயல்பாடுகள் - (18:21-24)
5. தேவனுடைய பதினைந்து விதமான சுபாவங்கள் - (18:25-31)
6. தேவனுடைய இருபத்தி ஒன்று ஆசீர்வாதங்கள் - (18:32-50)

1. தாவீதின் தேவன் - தேவனுடைய ஒன்பது காரியங்கள் - (2சாமு 22:1-3)

சங் 18:1 என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன்.

சங் 18:2 கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.

தேவனுடைய குணாதிசயங்கள்

1. கன்மலை - அஸ்திபாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நான்கு முக்கியமான கன்மலைகள்

(1) தேவன் - கன்மலை அல்லது அஸ்திபாரம் (சங் 18:2; சங் 31:3; சங் 40:2; சங் 42:9; சங் 71:3; 2சாமு 22:2)

(2) கிறிஸ்து - ஞானக்கன்மலை (சங் 78:16; எண் 20:8-11; நெகே 9:15; 1கொரி 10:4; சங் 31:2)

(3) கிறிஸ்து - சபையின் அஸ்திபாரம்(மத் 16:18; ரோமர் 9:33; 1கொரி 3:11-15; 1பேதுரு 2:8)

(4) ஏதோமின் தலைநகரம் - சேலா(2இராஜா 14:7; ஏசா 16:1) - அந்தி கிறிஸ்துவிடமிருந்து இஸ்ரவேலர்கள் தப்பித்து இங்கு பாதுகாப்பிற்காக ஓடி வருவார்கள் (வெளி 12:6,14)

2. கோட்டை - பாதுகாப்பு (சங் 18:2; சங் 31:3; சங் 71:3; சங் 91:2; சங் 144:2; எரே 16:19;1சாமு 23:14,19)
3. இரட்சகர் - தப்புவிக்கிறவர் (சங் 18:2; சங் 40:17; சங் 70:5; சங் 144:2)
4. தேவன் - சர்வ வல்லமையுள்ளவர். தமது ஜனத்திற்காக தேவன் எல்லாம் அறிந்தவராகவும், எல்லாவற்றையும் காண்பவராகவும் எல்லாம் செய்பவராகவும் இருக்கிறார்(சங் 57:2)
5. துருகம்
6. கேடகம் (சங் 18:2,30; நீதி 2:7; ஆதி 15:1). தேவன் நமது தலையையும் இருதயத்தையும் மூடுகிறார். இதனால் விரோதிகளிடமிருந்து நாம் பாதுகாக்கப் படுவோம்

18 அதிகாரம்

7. இரட்சணியக்கொம்பு - (சங் 18:2; 2சாமு 22:3) கொம்பு என்பது வல்லமையின் அடையாளம். ஆகவே இது வல்லமையுள்ள இரட்சணியம் என்று பொருள்படும் (லூக்கா 1:69; 1சாமு 2:1, 10; சங் 132:17; எரே 48:25; தானி 7:8-24; தானி 8:3-21;வெளி 5:6;வெளி 12:3; வெளி 13:1, 11; வெளி 17:3, 7, 12)

8. உயர்ந்த கோபுரம் - ஆபத்திற்கு அப்பாற்பட்டது (வெளி 18:2; வெளி 144:2; 1சாமு 22:3)

கன்மலை(rock) - סֶלַע - seh'-lah - 5553

ஆ.பெ.சொ. - கன்மலை, கற்பாறை, சேலா, பாறை, மேடு, கல் (ஏசா 16:1; 2இராஜா 14:7)

வல்லமையுள்ளவர்(Almighty) - אֵל - ale - 410

ஆ. பெ. சொல் - வல்லமை

துருகம்(firmness) - 6697. צוּר - tsoor, tsoor

வினைச்சொல் - கன்மலை, கருங்கல், கற்பாறை, அசூரிம், கருக்கு, ரூபம், கற்கள் - (சங் 18:2; சங் 19:14; சங் 73:26; சங் 144:1; ஏசா 26:4)

உயர்ந்த கோபுரம் (High tower)- מִשְׂגָּב - mis-gawb' - 4869

ஆண்பால் பெயர்ச்சொல் - அடைக்கலம், உயர்ந்த அரண், மிஸ்காப்

"என் இரட்சணியக்கொம்பு" லூக்கா 1:69-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. நெருக்கத்தில் தாவீதின் ஜெபம் - (2சாமு 22:4-7)

சங் 18:3 துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன்.

சங் 18:4 மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது; துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.

சங் 18:5 பாதாளக்கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது; மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது.

சங் 18:6 எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று.

சவுலினால் உண்டான மரணத்தைப் பற்றிய வருத்தம் (1சாமு 20:1-26:25).

கட்டுகள் (sorrows) - חֵבֶל - kheh'-bel, khay'-bel - 2256

ஆண்பால் பெயர்ச்சொல் - கட்டுகள் (1சாமு 20:1-26:25) சவுலின் மூலமாக ஏற்பட்ட மரணக் கட்டுகள்

"துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது" - சவுலின் சேனை துர்ச்சனப்பிரவாகமாக வந்தது. கடல் அலைகளைப் போல வந்தது. தேவன் தாவீதைத் தப்புவித்தார்(1சாமு 24;1சாமு 26).

கண்ணி (snares) - מוֹקֵשׁ - mo-kashe' - 4170

ஆ.பெ.சொ. - கண்ணி, சிக்கிக்கொள்தல், சுருக்கணாங்கயிறு - மனுஷரையும் மிருகங்களையும் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொறி

18 அதிகாரம்

மனுஷரைப் பிடிக்கும் கண்ணிகள்

1. இருதயத்தைக் கடினப்படுத்துதல் (யாத் 10:1,7)
2. விக்கிரகாராதனை (யாத் 23:33; யாத் 34:12; உபா 7:16; நியா 2:3; நியா 8:27; சங் 106:36)
3. பொறாமை (1சாமு 18:6-21)
4. மரணத்திற்கு காரணமானது(சங் 18:5; 2சாமு 22:6; நீதி 13:14; நீதி 14:27)
5. நீதிமானுக்கு எதிராகத் துன்மார்க்கனின் சதி ஆலோசனை (சங் 64:5)
6. பாவம் (சங் 69:22)
7. மதிகேடனின் உதடுகள் (நீதி 18:7)
8. பக்தியில்லாமை (நீதி 20:25)
9. கோபம் (நீதி 22:25)
10. துன்மார்க்கமான கிரியைகள் (நீதி 29:4-8)
11. மனுஷபயம் (நீதி 29:25)
12. கிறிஸ்துவை மறுதலித்தல் (ஏசா 8:14-16)

விழுந்தது (prevented)- קָדַם - kaw-dam' - 6923

வினைச்சொல் - எதிர்கொள், விழு, ஏந்திக்கொள், வா, நட, எழு, விழி, கொடு, ஓடிப்போ, மடங்கடி, எதிரிட்டு வா, நேரிடு, சந்தி - விழுந்தது, எதிர்பார்ப்பது, முன்பாச் செல்வது (சங் 18:5,18; சங் 21:3; சங் 59:10; சங் 79:8; சங் 88:13 சங் 119:147-148; 2சாமு 22:6,19;யோபு 3:12; யோபு 30:27).

நெருக்கத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. கர்த்தரை நோக்கி கூப்பிட வேண்டும்
2. தேவனை நோக்கி அபயமிட வேண்டும்

இப்படிப்பட்ட ஜெபத்தினால் ஏற்படும் விளைவுகள் (சங் 18:6-20).

ஆலயம் (temple) - הֵיכָל - hay-kawl' - 1964

பொதுபெயர்ச்சொல் - ஆலயம், அரமனை, கோவில், சந்நிதி, தேவாலயம் - ஆலயம் - பரலோகத்திலுள்ள ஆலயம். தேவன் தமது சிம்மாசனத்தில் உலகை ஆட்சிபுரியும் இடம். தேவதூதர்கள் தேவனைத் துதிக்கும் இடம் (ஏசா 6:1; வெளி 7:15;வெளி 11:19; வெளி 14:15,17; வெளி 15:5-8; வெளி 16:1,17).

3. தேவனுடைய பதில் - முப்பத்தைந்து அற்புதமான கிரியைகள் - (2சாமு 22:8-21)

சங் 18:7 அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங் கொண்டபடியால் பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது.

சங் 18:8 அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று, அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது; அதனால் தழல் மூண்டது.

சங் 18:9 வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்; அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது.

சங் 18:10 கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார்; காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார்.

சங் 18:11 இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார்; கரும்புனல்களையும், ஆகாயத்துக் கார்மேகங்களையும் தம்மைச் சூழக்கூடாரமாக்கினார்

சங் 18:12 அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று, கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது.

18 அதிகாரம்

சங் 18:13 கர்த்தர் வானங்களிலே குமுறினார், உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்; கல்மழையும் நெருப்புத்தழலும் விழுந்தது.

சங் 18:14 தம்முடைய அம்புகளை எய்து, அவர்களைச் சிதறடித்தார்; மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார்.

சங் 18:15 அப்பொழுது கர்த்தாவே, உம்முடைய கண்டிதத்தினாலும் உம்முடைய நாசியின் சுவாசக் காற்றினாலும் தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது.

சங் 18:16 உயரத்திலிருந்து அவர் கைநீட்டி, என்னைப் பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.

சங் 18:17 என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார்.

சங் 18:18 என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்.

சங் 18:19 அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்மேல் பிரியமாயிருந்தபடியால், என்னைத் தப்புவித்தார்.

சங் 18:20 கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

"அப்பொழுது" - தேவன் என் அபயத்தைக் கேட்ட போது

தேவனுடைய பௌதீகக் கிரியைகள்

1. பூமி அசைந்து அதிர்ந்தது (சங் 18:7)
2. பர்வதங்களின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது
3. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார் (சங் 18:9)
4. காரிருளை மறைவிடமாக்கினார். (சங் 18:9-11)
5. கருமபுனல்களை தம்மைச் சூழக் கூடாரமாக்கினார் (சங் 18:11)
6. மேகங்கள் பறந்து விலகிற்று (சங் 18:12)
7. கல்மழை விழுந்தது (சங் 18:12-13)
8. மின்னல்களைப் பிரயோகித்தார் (சங் 18:12-14)
9. வானங்களிலே குமுறினார் (சங் 18:13)
10. தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது (சங் 18:15)

தேவனுடைய ஆள்தத்துவக் கிரியைகள்

1. கர்த்தர் கோபங்கொண்டார் (சங் 18:7)
2. கர்த்தரின் நாசியிலிருந்து புகை எழும்பிற்று (சங் 74:1; உபா 29:20)
3. அவர் வாயிலிருந்து பட்சிக்கிற அக்கினி புறப்பட்டது (சங் 18:8)
4. அர் அக்கினித் தழலை மூட்டினார். (சங் 18:8)
5. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார் (சங் 18:9)
6. அவர் பாதங்களின் கீழ் காரிருள் இருந்தது
7. கேருபீன்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார் (சங் 18:10; எசே 1:4-24)
8. காற்றின் செட்டைகளைக் கொண்டு பறந்தார்

18 அதிகாரம்

9. இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார் (சங் 18:11)

10. கருமபுனல்களையும், ஆகாயத்து கார்மேகங்களையும் தம்மைச் சூழக் கூடாரமாக்கினார் (நாகூம் 1:3)

11. அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் அவருடைய மேகங்கள் பறந்து விலகிற்று (சங் 18:12)

12. கல்மழையும் நெருப்புத் தழலும் விழப்பண்ணினார் (சங் 18:12-14)

13. கர்த்தர் வானங்களிலே குமுறினார் (சங் 18:13)

14. உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்

15. கர்த்தர் பூதலத்தைக் கண்டித்தார். அஸ்திபாரங்கள் காணப்பட்டது (சங் 18:15)

16. கர்த்தருடைய நாசியின் சுவாசக் காற்றினால் தண்ணீர்களின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டன

17. கர்த்தர் உயரத்திலிருந்து, கைநீட்டி என்னைப் பிடித்துத் தூக்கினார் (சங் 18:16)

18. ஜலப்பிரவாகத்திலிருந்த என்னைத் தூக்கிவிட்டார்

19. என்னுடைய சத்துருக்களிடமிருந்து என்னை விடுவித்தார் (சங் 18:17)

20. என் ஆபத்துநாளில், கர்த்தர் எனக்கு ஆதரவாயிருந்தார் (சங் 18:18)

21. கர்த்தர், என்னை விசாலமான இடத்தில் வைத்தார் (சங் 18:19)

22. என்னைத் தப்புவித்தார்

23. என்மேல் பிரியமாயிருந்தார்

24. கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார் (சங் 18:20)

25. என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிகட்டினார்

தேவனுடைய சரீர அவயவங்கள்

1. நாசி
2. வாய்
3. பாதங்கள் (சங் 18:9)
4. சரீரம் (சங் 18:11-12)
5. சத்தம் (சங் 18:13)
6. சுவாசக்காற்று (சங் 18:15)
7. கைகள் (சங் 18:16)

4. சாட்சி - ஐந்து செயல்பாடுகள் - (2சாமு 22:22-25)

சங் 18:21 கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டுவந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை.

சங் 18:22 அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்; அவருடைய பிரமாணங்களை நான் தள்ளிப்போடவில்லை.

சங் 18:23 அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்.

சங் 18:24 ஆகையால் கர்த்தர் என் நீதிக்கும், தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்திற்கும் தக்கதாக எனக்குப் பலனளித்தார்.

தாவீதின் சாட்சி

1. கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டு வந்தேன்
2. நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை

18 அதிகாரம்

3. அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்

4. கர்த்தருடைய பிரமாணங்களை நான் தள்ளிப்போடவில்லை (சங் 18:22)

5. கர்த்தர் முன்பாக மனவுண்மையாயிருந்தேன்

6. என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன் (சங் 18:23)

தேவபக்தியாக இருப்பதனால் வரும் ஆசீர்வாதங்கள்

1. தேவன் நீதிக்குப் பலனளிப்பார்
2. கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாகப் பலனளிப்பார்

5. தேவனுடைய பதினைந்து விதமான சுபாவங்கள் - (2சாமு 22:26-28)

சங் 18:25 தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்,

சங் 18:26 புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்.

சங் 18:27 தேவரீர் சிறுமைப்பட்ட ஜனத்தை இரட்சிப்பீர்; மேட்டிமையான கண்களைத் தாழ்த்துவீர்.

சங் 18:28 தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்

சங் 18:29 உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

சங் 18:30 தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்.

சங் 18:31 கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்?

மனுஷரின் பிரிவுகள்

1. தயவுள்ளவன் (சங் 18:25; மத் 5:7; லூக்கா 6:36)
2. உத்தமன் (சங் 18:25)
3. புனிதன் (சங் 18:26)
4. மாறுபாடுள்ளவன் (சங் 18:26)
5. சிறுமைப்பட்டவன் (சங் 18:27)
6. மேட்டிமையானவன் (சங் 18:27; ஏசா 2:11; ஏசா 10:12)

உத்தமன் (perfect) - תָּם - tawm - 8535

பெயரடை - குணவாலி, உத்தமன், சன்மார்க்கன்

உத்தமனுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1. இரட்சிப்பு (சங் 7:10; நீதி 28:18)
2. கிருபை (சங் 11:7)
3. வெகுமதிகள் (சங் 18:23-24)
4. தேவனுடைய கிரியைகள் (சங் 18:25)
5. பாதுகாப்பு (சங் 25:21)
6. சந்தோஷம் (சங் 32:11; சங் 64:10; சங் 97:11)
7. கிருபை (சங் 36:10)
8. நித்திய சுதந்தரம் (சங் 37:18)
9. சமாதானம் (சங் 37:37)

18 அதிகாரம்

10. சத்துருவின் மீது ஜெயம் (சங் 49:14)

11. எல்லா நன்மைகள் (சங் 84:11)

12. நீதி (சங் 94:15)

13. வளமை (சங் 112:2; நீதி 14:11; நீதி 28:10)

14. வெளிச்சம் (சங் 112:4)

15. நன்மை (சங் 125:4; மீகா 2:7)

16. தேவனோடு நித்திய வீடு (சங் 15:1-2; சங் 140:13)

17. போதும் என்னும் மனம் (நீதி 28:6)

18. உலக வீடு (நீதி 2:21)

19. பாதுகாப்பு (நீதி 2:7)

20. பெலன் (நீதி 10:29)

21. வழிநடத்துதல் (நீதி 11:3; நீதி 21:29)

22. மீட்பு (நீதி 11:6)

23. மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் (நீதி 11:11)

24. தேவனுடைய பிரியம் (நீதி 11:20)

25. ஜெபத்திற்குப் பதில் (நீதி 15:8)

புனிதமானவை

1. பொன் (யாத் 25:11)

2. ஒலிவ எண்ணெய் (யாத் 27:20; லேவி 24:2)

3. வெள்ளைப்போளம் (யாத் 30:23)

4. சாம்பிராணி (யாத் 30:34; லேவி 24:7)

5. குத்துவிளக்கு (யாத் 31:8; லேவி 24:4)

6. தூபவர்க்கம் (யாத் 37:29; யாத் 39:37)

7. மேஜை (லேவி 24:6)

8. திராட்சரசம் (உபா 32:14)

9. கர்த்தருடைய வார்த்தை (சங் 12:6; சங் 119:140; நீதி 30:5)

10. கர்த்தர் (சங் 18:26)

11. கற்பனைகள் (சங் 19:8)

12. இருதயம் (சங் 24:4; மத் 5:8; 1தீமோ 1:5;2தீமோ 2:22;1பேதுரு 1:22)

13. மனுஷர் (நீதி 15:26; நீதி 21:8; அப் 20:26; 1தீமோ 5:22)

14. பஞ்சு (தானி 7:9)

15. பாஷை (செப் 3:9)

16. காணிக்கை (மல் 1:11)

17. பதார்த்தங்கள் (ரோமர் 14:20; தீத்து 1:15)

18. மனச்சாட்சி (1தீமோ 3:9; 2தீமோ 1:3)

19. ஜலம் (எபி 10:22)

20. மார்க்கம் (யாக் 1:27)

21. ஞானம் (யாக் 3:17)

22. மனது (2பேதுரு 3:1)

23. கிறிஸ்து (1யோவான் 3:3)

24. மெல்லிய வஸ்திரம் - தூதர்கள் (வெளி 15:6; வெளி 19:)

25. ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி 22:1)

மாறுபாடு **(froward) - עִקֵּשׁ - ik-kashe' - 6141**

பெயரடை - மாறுபாடு, கோணலான, மாறுபாடான, விபரீதம், திரிந்த, மாறுபாடுள்ள - மாறுபாடுள்ளவன் தேவனுக்கு அருவருப்பானவன் (நீதி 3:32; நீதி 11:20).

சங்கீதம் - தொகுப்புரை

18 அதிகாரம்

மாறுபாடுள்ளவை

1. சந்ததி (உபா 32:20)
2. இருதயம் (சங் 101:4; நீதி 11:20; நீதி 17:20)
3. பேச்சு (நீதி 2:12; நீதி 10:31)
4. பாதைகள் (நீதி 2:15)
5. வாய் (நீதி 4:24; நீதி 6:12; நீதி 8:13)
6. நாவு (நீதி 10:31)
7. மனுஷர் (நீதி 16:28; நீதி 22:5; 1பேதுரு 2:18)
8. திட்டங்கள் (நீதி 6:14; நீதி 16:30)
9. வழிகள் (நீதி 21:8; ஏசா 57:17)
10. தேவன் - மாறுபாடுள்ளவனுக்கு அவர் மாறுபடுகிறவர் (சங் 18:26)

யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்கள்

1. சிறுமைப்பட்டவர்கள் (சங் 18:27)
2. ஏழை (சங் 72:4,13)
3. தாழ்மையுள்ளவன் (சங் 76:9)
4. துன்மார்க்கன் (எசே 18:27)
5. தேவனுடைய ஜனங்கள் (மத் 1:21)
6. கெட்டுப்போனவர்கள் (மத் 18:11; லூக்கா 19:10)
7. உலகம் (யோவான் 3:16-20; யோவான் 12:47)
8. விசுவாசிக்கிறவர்கள் (1கொரி 1:21)
9. பாவிகள் (1தீமோ 1:15; 1தீமோ 2:4)
10. முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவன் (மத் 10:22;1தீமோ 4:11-16;1பேதுரு 1:9)
11. இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்கள் (எபி 7:25)
12. கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்கள் (அப் 2:21; ரோமர் 10:9-10)

மனுஷரை சிறுமைப்படுத்தும் வழிகள்

1. அடிமைத்தனம்(ஆதி 16:11; யாத் 1:11-12)
2. உபவாசம் (லேவி 23:27-29;ஏசா 58:3)
3. பெரிய பொறுப்பு (எண் 11:11)
4. இழப்பு (ரூத் 1:21)
5. சோதனைகள் (1இராஜா 2:26; சங் 25:16; ஏசா 48:10)
6. யுத்தத்தில் தோல்வி (2இராஜா 17:20; சங் 129:1)
7. சரீரத்தில் வியாதி (யோபு 6:14; யோபு 30:11)
8. கிறிஸ்துவின் பாடுகள் (ஏசா 53:4,7)
9. பசி (ஏசா 58:10)
10. உபத்திரவங்கள் (மாற்கு 4:17)
11. கிறிஸ்துவிற்காகப்பாடுகள்(2கொரி 1:6; 2கொரி 8:2; 2கொரி 11:23-28; எபி 10:32-33; எபி 11:37)
12. மன உளைச்சல் (ஆதி 29:32)
13. நெருக்கம் (ஆதி 41:52)
14. மலடு (1சாமு 1:11)
15. இகழ்ச்சி (2சாமு 16:12)
16. சிறைப்பிடிப்பு (2நாளா 33:12)
17. நம்பிக்கை இல்லாத சூழ்நிலைகள் (யாத் 1:11; யாத் 3:7)
18. சிறைவாசம் (சங் 107:10)

18 அதிகாரம்

19. பாவத்திற்குத் தண்டனை (2சாமு 7:10; 1இராஜா 11:39)

20. பாடும் உபத்திரவமும் (யோபு 5:6-7; பிலி 4:14; 1பேதுரு 5:9)

விளக்கு ஏற்றுதல் - துன்பத்திலிருந்தும் இருளிலிருந்தும் விடுவித்தல்

"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" - தாவீது எபூசியர் மீது பெற்ற வெற்றியை இந்த வசனம் குறிப்பிடுகிறது (2சாமு 5).

பரிபூரண உத்தமத்திற்கு எடுத்துக் காட்டுகள்

1. பிதாவாகிய தேவன் (மத் 5:48)
2. தேவனுடைய கிரியை (உபா 32:4)
3. தேவனுடைய வழி (2சாமு 22:31; சங் 18:30)
4. தேவனுடைய சித்தம் (ரோமர் 12:1-2)
5. தேவனுடைய வரங்கள் (யாக் 1:17)
6. தேவனுடைய வார்த்தை (சங் 19:7; யாக் 1:25)
7. இயேசு கிறிஸ்து (லூக்கா 6:40; எபி 2:10; எபி 5:9)

உத்தமமான ஜனங்களுக்கும் உத்தமமான தூதர்களுக்கும் எடுத்துக்காட்டுகள்

1. லூசிபர் (வீழ்ச்சிக்கு முன்பு) (எசே 28:12-15)
2. தாவீது (1இராஜா 11:4; 1இராஜா 15:3)
3. ஆசா (1இராஜா 15:14; 2நாளா 15:17)
4. யோபு (யோபு 1:1,8; யோபு 2:3)
5. பரலோகத்தில் பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவிகள் (எபி 12:23)

உத்தமனாக இருக்க வேண்டுமென்னும் கட்டளைகள்

1. ஆபிரகாமிற்கு (ஆதி 17:1)
2. இஸ்ரவேலிற்கு (உபா 18:13)
3. சாலொமோனுக்கு (1இராஜா 8:61)
4. கிறிஸ்தவருக்கு (2கொரி 13:11)

நாம் எவற்றில் உத்தமனாக இருக்க முடியும்

1. நமது நடையில் (ஆதி 17:1; கலா 5:16,25)
2. பரிசுத்தத்தில் (2கொரி 7:1; எபி 12:14)
3. நமது வழிகளில் (2சாமு 22:33; சங் 18:32)
4. சமாதானத்தில் (ஏசா 26:3)
5. ஒற்றுமையில் (யோவான் 17:23; 1கொரி 1:10; எபே 4:13)
6. நற்கிரியைகளில் (எபி 13:21; 2தீமோ 3:17)
7. தேவனுடைய சித்தத்தில்(ரோமர் 12:1-2)
8. பொறுமையில் (யாக் 1:4)
9. விசுவாசத்தில் (யாக் 2:22)
10. அன்பில் (1யோவான் 2:5; 1யோவான் 4:17-18)

"கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது" - அக்கினியில் சோதிக்கப்பட்டது. வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும்.

தேவன்(God)- אֱלוֹהַּ - el-o'-ah - 433

ஆ.பெ.சொ.- தேவன்

18 அதிகாரம்

தேவன்(God)-אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர் - "எலோகிம்" - 57 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் ஆராதிக்கும் நபர் அல்லது பொருள். விக்கிரகங்களுக்கு விரோதமான தேவன் (சங் 18:31; உபா 32:15-17; 2நாளா 32:15; ஏசா 44:8; தானி 11:37-39; ஆப 1:11). யோபு புஸ்தகத்தில் மட்டும் இச்சொல் 41 தடவைகளும் மற்ற இடங்களில் 16 தடவைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. தேவனுடைய இருபத்தி ஒன்று ஆசீர்வாதங்கள்- (2சாமு 22:33-51)

சங் 18:32 என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே.

சங் 18:33 அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

சங் 18:34 வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்.

சங் 18:35 உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்; உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது; உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்.

சங் 18:36 என் கால்கள் வழுவாதபடிக்கு, நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்.

சங் 18:37 என் சத்துருக்களைப் பின்தொடர்ந்து, அவர்களைப் பிடிப்பேன்; அவர்களை நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன்.

சங் 18:38 அவர்கள் எழுந்திருக்க மாட்டாதபடிக்கு, என் பாதங்களின்கீழ் விழத்தக்கதாக அவர்களை வெட்டினேன்.

சங் 18:39 யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப் பண்ணினீர்.

சங் 18:40 நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

சங் 18:41 அவர்கள் கூப்பிடுகிறார்கள், அவர்களை இரட்சிப்பார் ஒருவருமில்லை; கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக்கிறதில்லை.

சங் 18:42 நான் அவர்களைக் காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக இடித்து, தெருக்களிலுள்ள சேற்றைப்போல் அவர்களை எறிந்துபோடுகிறேன்.

சங் 18:43 ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்து, ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறீர்; நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள்.

சங் 18:44 அவர்கள் என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்; அந்நியரும் எனக்கு இச்சகம் பேசி அடங்குகிறார்கள்.

சங் 18:45 அந்நியர் முனைவிழுந்துபோய், தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள்.

சங் 18:46 கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக; என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக.

சங் 18:47 அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர்.

18 அதிகாரம்

சங் 18:48 அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர்; எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் மேல் என்னை நீர் உயர்த்தி, கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.

சங் 18:49 இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்.

சங் 18:50 தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார்.

தேவனுடைய ஆசீர்வாதங்கள்

1. பலத்தால் என்னை இடைகட்டுவார் (சங் 18:32)
2. என் வழியைச் செவ்வைப்படுத்துவார்
3. என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் சத்துருக்களிடமிருந்து என்னைத் தப்புவிப்பார் (சங் 18:33)
4. என்னை உயர்தலங்களில் நிறுத்துவார்
5. வெண்கல வில்லும், என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்கு பழக்குவிக்கிறார் (சங் 18:34)
6. இரட்சிப்பின் கேடகத்தை எனக்குத் தந்தார் (சங் 18:35)
7. கர்த்தருடைய வலதுகரம் என்னைத் தாங்கும்
8. கர்த்தருடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்
9. என்னுடைய கால்கள் வழுவாதபடிக்கு வழியை அகலமாக்குவார் (சங் 18:36)
10. என் சத்துருக்களை ஜெயிக்க உதவி புரிவார் (சங் 18:37)
11. சத்துருக்களை பின்தொடர்ந்து பிடிக்க உதவிபுரிவார்
12. அவர்களை நிர்மூலமாக்க உதவிபுரிவார்
13. என் பாதங்களின் கீழ் அவர்களை விழப்பண்ண உதவிபுரிவார் (சங் 18:38)
14. யுத்தத்திற்கு என்னைப் பலத்தால் இடைக்கட்டுவார் (சங் 18:39)
15. சத்துருக்களை என் கீழ் மடங்கப் பண்ணுவார்
16. என் பகைவர்களை உதவி அற்றவர்களாகப் பண்ணுவார் (சங் 18:40)
17. என் சத்துருக்களுக்கு செவிகொடுக்க மாட்டார் (சங் 18:41)
18. என் சத்துருக்களை முழுவதுமாக அழிக்க உதவி புரிவார் (சங் 18:41)
19. என் ஜனங்களின் சண்டைகளுக்கு என்னைத் தப்புவித்தார் (சங் 18:43)
20. ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறார்
21. நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கும் படி செய்தார் (சங் 18:44)
22. என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்கு அவர்கள் கீழ்ப்படியும்படி என்னை எஜமான் ஆக்கினார்
23. அந்நியர் முனைவிழுந்து, அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படப்பண்ணுவார் (சங் 18:45)
24. கர்த்தர் எனக்காகப் பழிக்குப் பழி வாங்குவார் (சங் 18:46-47)

18 அதிகாரம்

25.என் சத்துருக்களை எனக்குக் கீழ்ப்படுத்துவார் (சங் 18:47)

26.என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிப்பார் (சங் 18:48)

27.எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் மேல் என்னை உயர்த்துவார்

28.கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிப்பார்

29.மகத்தான இரட்சிப்பை அளித்தர் (சங் 18:49-50)

30.சதாகாலமும் கிருபை செய்கிறார் (சங் 18:50)

மான்களின் கால்கள் - பெண்மான்களின் கால்கள் - அழகுள்ளவை(சங் 18:33; சங் 29:9; ஆதி 49:21; 2சாமு 22:34; யோபு 39:1; உன் 2:7; உன் 3:5; நீதி 5:19; எரே 14:5; ஆப 3:19).

வெண்கலம் (brass) - נְחוּשָׁה - **nekh-oo-shaw', nekhoo-shaw' - 5154**

பெ.பெ.சொ - வெண்கலம், உருக்கு, செம்பு - தாவீதின் காலத்தில் உருக்கு இல்லை (சங் 18:34; 2சாமு 22:35; யோபு 20:24)

கேடகம் (shield) - מָגֵן - **maw-gane', meg-in-naw' - 4043**

ஆ.பெ.சொ. - கேடகம், பரிசை, ஆயுதம், அதிபதி (சங் 18:35; ஆதி 15:1)

சாந்தம் (gentleness) - עֲנָוָה - **an-vaw' - 6037**

பெ.பெ.சொ. - காருணியம், சாந்தம் (2சாமு 22:36; 2கொரி 10:1; கலா 5:22)

காருணியம் (humility) - עָנָה - **aw-naw' - 6031**

வினைச்சொல் - வருத்தப்படு, காருணியம், தொல்லை, உபத்திரவப்படு, திறமைப் பட்டவர்களாயிரு, துன்பப்படு, தாழ்த்து, நெருக்கப்படு, சிறுமைப்படு, தாழ்மைப் படுத்து, வருத்தப்படு, அவமானப்படு, அருவருப்பாக்கு, ஒடுக்கு, கிலேசப்படுத்து, அநுக்கிரகம் பண்ணு, துக்கம், பலவந்தம் பண்ணு, துயரப்படு, தீட்டுப்படுத்து, ஒடுக்கு, மரணத்திற்குப் பாத்திரவானாயிரு, அக்கிரமம்

சத்துருக்களின் பிடரி - முழுமையான வெற்றி, தோல்வியுள்ளவனுக்குப் பெருத்த அவமானம்

“நான் அவர்களைக் காற்றுமுகத்திலே பறக்கிற தூளாக இடித்து, தெருக்களிலுள்ள சேற்றைப் போல் அவர்களை எறிந்து போடுகிறேன்” - முழுமையாகக் கீழ்ப்படுத்துதல். மோவாபியரைத் தாவீது முழுமையாகக் கீழ்ப்படுத்தினான் (2சாமு 12:31).

ஜனங்களின் சண்டைகள் - தன் ஜனங்கள் மத்தியில் கலகம் - அப்னேர், அப்சலோம் ஆகியோரின் கலகம் (2சாமு 2:8 -4:12; 2சாமு 15:1-18:33).

ஜாதிகளுக்குத் தலைவன் - இஸ்ரவேலைச் சுற்றியுள்ள புறஜாதி தேசத்தார் தாவீதை சேவித்தார்கள் (2சாமு 5:17-25;2சாமு 8:1-18;2சாமு 10:1-19).

கொடுமையான மனுஷன் - சவுல் அல்லது அப்சலோம் (1சாமு 19:1-26:25; 2சாமு 15:1-18:33).

தீர்க்கதரிசன எண் - 14

“தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார்” (சங் 18:50) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தொடர்ந்து நித்திய காலமாக நிறைவேறும்.

சங்கீதம் - தொகுப்புரை

18 அதிகாரம்

தாவீது - தேவன் அபிஷேகம் பண்ணிய ராஜா

தேவன் யாருக்கு கிருபை செய்கிறார்

1. மேசியா - அபிஷேகம் பண்ணப்பட்டவர்
2. தாவீது
3. தாவீதின் சந்ததி (2சாமு 7)

19 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

துதித்து ஜெபிக்கும் இரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. வானங்கள் - ஆறு ஆசீர்வாதங்கள் - (19:1-6)
2. வார்த்தை - ஆறு தலைப்புக்களும் ஆறு ஆசீர்வாதங்களும் - (19:7-11)
3. ஜெபம் - ஐந்து விண்ணப்பங்களும் ஆறு ஆசீர்வாதங்களும் - (19:12-14)

1. வானங்கள் - ஆறு ஆசீர்வாதங்கள்

சங் 19:1 வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.

சங் 19:2 பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.

சங் 19:3 அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை.

சங் 19:4 ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.

சங் 19:5 அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது.

சங் 19:6 அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.

"தேவன் இருக்கிறார்" என்னும் சத்தியத்தை உறுதிபண்ணும் காரியங்கள்

1. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது" - (சங் 19:1; சங் 75:1; யோபு 12:8)
2. "ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" - (சங் 19:1; சங் 111:6; மீகா 6:8)
3. "பகல் வார்த்தைகளைப் பொழிகிறது" - (சங் 19:2; சங் 78:2; சங் 145:7)
4. "இரவு அறிவைத் தெரிவிக்கிறது" - (சங் 19:2; யோபு 15:17; யோபு 32:6,10,17; யோபு 36:2)

வெளிப்படுத்து **(writer)- סָפַר - saw-far' - 5608**

விணைச்சொல் - எண்ணிக்கொள், எண்ணு, எண்ணியிரு, கணக்கிடு, எழுத்தாளர், ஆலோசனைபண்ணு, வேதபாரகன், எழுதுகிறவர், எண்ணப்படு, விவரி, சொல்லு, விவரித்துச் சொல்லு, அறிவி, பிரஸ்தாபப்படுத்து, தெரிவி, தொகையிடு, விவரமாய்ச் சொல், பிரஸ்தாபமாக தெரிவி

அறிவி **(certify) - נָגַד - naw-gad' 5046**

விணைச்சொல் - அறிவி, அறிக்கையிடு, சொல், விடுவி, வெளிப்படுத்து, தெரியப் படுத்து, விளங்கப்பண்ணு, தெரிவி, அறிக்கை பண்ணு, பிரசித்தப்படுத்து, தெரியக் காட்டு, காண்பி, அறிவிக்கப்பட்டு, அறியப்படுத்து, விவரி, பேசு, தெரியப்பண்ணு, தெரிவிக்கப்படு

19 அதிகாரம்

பொழி (belch out) - נָבַע - naw-bah' - 5042

வினைச்சொல் - பாய், பொழி, கக்கு, வெளிப்படுத்து, வாயாடு, பிரஸ்தாபப்படுத்து, தெரிவி, கொப்பளி, போகப்பண்ணு.

தெரிவி (declare) - חָוָה - khaw-vah' - 2331

வினைச்சொல் - வெளிப்படுத்து, தெரிவி, சொல்லிக்காண்பி, தெரியப்பண்ணு

"அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை" - சர்வவல்லமையுள்ள தேவனைப் பற்றிய அவைகளின் செய்தி எல்லோருக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

நூல் (line) - קַו - kav, kawv - 6957

ஆண்பால் பெயர்ச்சொல் - நூல், அளவு, அதிபதி - அவைகளின் சத்தம் (நூல் அளவு) பூமியெங்கும் செல்லுகிறது. "சத்தம்" என்பது "நூல் அளவு" (line) ஆகும் (சங் 19:4; 1இராஜா 7:23; 2இராஜா 21:13; 2நாளா 4:2; யோபு 38:5; ஏசா 28:10,13,17; ஏசா 34:11,17; எரே 31:39; புல 2:8; எசே 47:3; சக 1:16)

அளவு நூலின் பயன்பாடுகள்

1. அளப்பதற்குப்பயன்படும் (1இராஜா 7:23; 2நாளா 4:2; எரே 31:39; எசே 47:3)
2. நியாயம் தீர்ப்பதற்குப் பயன்படும் (2இராஜா 21:13; ஏசா 28:17; புல 2:8; சக 1:16)
3. பூமியின் எல்லையைக் குறிப்பதற்குப் பயன்பட்டது (யோபு 38:5)
4. தேவனுடைய வார்த்தையைக் கொடுப்பதற்குப் பயன்படும் (ஏசா 28:10,13)
5. உலகமெங்கும் செல்லும் சத்தியத்தின் செய்தியைக் குறிக்கப்பயன்படும் - நற்செய்தி, நம்பிக்கை, அவர்களுடைய சப்தம் (ரோமர் 10:18)

"சூரியனுக்கு ஒரு கூடாரம்" - வானங்கள்

"அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்தது" - சூரியன் இரண்டு விதமாகச் சுழலுகிறது. தன் வட்டத்தில் சுழலுகிறது. வானங்களின் வட்டத்திலும் சுற்றுகிறது. (சங் 19:6)

அறை (chamber) - חֻפָּה - khoop-paw' - 2646

பெ.பெ.சொ.- அறை, காவல், மறைவு

"அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது" - சூரியனும் பூமியும் ஆகாய மண்டலத்தில் தங்களுடைய பாதையில் சுற்றுகின்றன. சூரியனின் வேகம் விநாடிக்கு 12 மைல்கள். மணிக்கு 43,200 மைல் வேகத்தில் சூரியன் தன் பாதையில் சுற்றி வருகிறது.

வானங்களிலிருந்து வரும் ஆசீர்வாதங்கள்

1. தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது (சங் 19:1)
2. தேவனுடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது
3. வார்த்தைகளைப் பொழிகிறது (சங் 19:2)
4. அறிவைத் தெரிவிக்கிறது5. அவற்றின் செய்திகள் பூமியெங்கும் செல்லுகிறது (சங் 19:3-4)
6. பூமிக்கு ஜீவனைக் கொடுக்கிறது (சங் 19:5-6)

சூரியனின் உஷ்ணம் (காந்தி). சூரியனின் விழிம்புப்பகுதி = 12 ஆயிரம் F. சூரியனின் மையப்பகுதி = 4 கோடி F

19 அதிகாரம்

2. வார்த்தை - ஆறு தலைப்புக்களும் ஆறு ஆசீர்வாதங்களும்

சங் 19:7 கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறது மாயிருக்கிறது.

சங் 19:8 கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை துய்மையும், கண்களைத் தெளிவிக்கிறது மாயிருக்கிறது.

சங் 19:9 கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறது மாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

சங் 19:10 அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.

சங் 19:11 அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.

கர்த்தருடைய வேதத்தின் பெயர்களும், பண்புகளும், ஆசீர்வாதங்களும்

பரிசுத்த வேதாகமத்தின் பெயர்கள்

1. கர்த்தருடைய வேதம் (சங் 19:7)
2. கர்த்தருடைய சாட்சி
3. கர்த்தருடைய செம்மையான நியாயங்கள் (சங் 19:8)
4. கர்த்தருடைய கற்பனை
5. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் (சங் 19:9)
6. கர்த்தருடைய உண்மையான நியாயங்கள்

கர்த்தனுடைய வேதத்தின் பண்புகள்

1. குறைவற்றது (சங் 19:7)
2. நிச்சயமானது
3. செம்மையானது (சங் 19:8)
4. தூய்மையானது
5. சுத்தமானது (சங் 19:9)
6. நித்தியமானது
7. உண்மையானது
8. அனைத்தும் நீதியானது
9. தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளது (சங் 19:10)

கர்த்தருடைய வேதத்தின் ஆசீர்வாதங்கள்

1. தேவனிடம் திரும்பி வரும் ஆத்துமாக்களை இரட்சிக்கிறது (சங் 19:7)
2. பேதையை ஞானியாக்குகிறது
3. இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது (சங் 19:8)
4. கண்களைத் தெளிவிக்கிறது
5. பரிசுத்தவான்களை எச்சரிக்கிறது (சங் 19:11)
6. வசனங்களுக்கு கீழ்ப்படிந்து அவைகளைக் கைக் கொள்ளுகிறவனுக்கு மிகுந்த பலன் தருகிறது.

19 அதிகாரம்

"அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கது" - தேவனுடையவார் நமக்கு அளவற்ற ஆசீர்வாதங்களைத் தரும்.

3. ஜெபம் - ஐந்து விண்ணப்பங்களும் ஆறு ஆசீர்வாதங்களும்

சங் 19:12 தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.

சங் 19:13 துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.

சங் 19:14 என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

தேவனுடைய வார்த்தையின் மூலமாக மட்டுமே நமது பிழைகளை நாம் உணரமுடியும் (சங் 19:7-11)

நீதிமானின் வாஞ்சைகள்

1. மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்
2. துணிகரமான பாவங்களுக்கு விலக்கிக் காரும் (சங் 19:13)
3. பாவம் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும்
4. வாயின் வார்த்தைகள் தேவனுக்கு பிரீதியாயிருப்பதாக (சங் 19:14).
5. இருதயத்தின் தியானம் தேவனுக்கு பிரீதியாயிருப்பதாக

மறைவான குற்றம் - இரகசிய பாவம். வெளி உலகத்திற்குத் தெரியாத, அவனுக்கு மட்டுமே தெரிந்த பாவம்.

துணிகரமான பாவம் - வேண்டுமென்றே, தெரிந்து பாவம் செய்வது (எபி 3:13). துணிகரமான பாவத்திற்கு மரணமே தண்டனை (எண் 15:30; உபா 29: 19-20; ரோமர் 9:20-21; ரோமர் 11:32). அவர்களுக்கு ஐயோ! (ஏசா 5:18-25; ஏசா 29:15-20).

துணிகரமாகப் பாவம் செய்தவர்கள்

1. லூசிபர் (ஏசா 14:12-14; எசே 28:16)
2. பார்வோன் (யாத் 5:2)
3. மோசே (எண் 11:11-15,22)
4. இஸ்ரவேல் (யாத் 14:11-12; யாத் 17:7; எண் 16:41; 1கொரி 10:9-12)
5. சீரியர் (1இராஜா 20:28)
6. யூதாவின் இராஜாக்கள்(ஏசா28:14-22)
7. சவுல் (1சாமு 13:8-14; 1சாமு 15:3-23)
8. ஐசுவரியமுள்ள மதிகேடன் (லூக்கா 12:18-20)
9. பரிசேயர் (லூக்கா 18:11-14)
10. அசுத்த இச்சைக்காரர் (2பேதுரு 2:10-11)

20 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

இரண்டாவது நம்பிக்கையின் சங்கீதம்

பொருளடக்கம்

1. நாம் நம்பிக்கை வைக்கக்கூடிய ஆறுகாரியங்கள் - அவருடைய நாமம், பரிசுத்த ஸ்தலம், பலி, இரட்சிப்பு, ஜெயம், வல்லமை - (20:1-6)
2. வெவ்வேறு காரியங்களில் நம்பிக்கை வைப்பதும் அதன் விளைவுகளும் - (20:7-9)

1. நாம் நம்பிக்கை வைக்கக்கூடிய ஆறுகாரியங்கள் - அவருடைய நாமம், பரிசுத்த ஸ்தலம், பலி, இரட்சிப்பு, ஜெயம், வல்லமை - (3:3; 61:3; 62:1; 63:1)

சங் 20:1 ஆபத்துநாளிலே கர்த்தர் உமது ஜெபத்தைக் கேட்பாராக; யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக.

சங் 20:2 அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசையனுப்பி, சீயோனிலிருந்து உம்மை ஆதரிப்பாராக.

சங் 20:3 நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக. (சேலா)

சங் 20:4 அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக.

சங் 20:5 நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்; உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக.

சங் 20:6 கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணினவரை இரட்சிக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; தமது வலதுகரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து, தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார்.

உறுதியான நம்பிக்கையின் அறிக்கை

1. ஆபத்து நாளிலே கர்த்தர் ஜெபத்தைக் கேட்பார் (சங் 20:1; சங் 34:15, 17-19; சங் 37:39; சங் 59:16).
2. தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாகும் (சங் 20:1; சங் 82:3).
3. பரிசுத்த ஸ்தலத்திலிருந்து ஒத்தாசை அனுப்புவார் (சங் 20:2; சங் 77:13; சங் 96:6; எபி 8:2).
4. சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பார் (சங் 20:2; சங் 50:2; ஏசா 2:3; ஏசா 59:20).
5. வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவார் (சங் 20:5; சங் 34:9-10; சங் 84:11; மத் 21:22).
6. பரிசுத்த வானத்திலிருந்து ஜெபத்தைக் கேட்பார் (சங் 20:6).
7. தேவனாகிய கர்த்தர் நமது நம்பிக்கையாயிருப்பார் (சங் 20:7; சங் 125:1).

"ஆபத்து நாள்" **(day of trouble)** - (சங் 20:1; சங் 50:15; சங் 59:16; சங் 77:2; சங் 86:7; சங் 102:2; 2இராஜா 19:3; ஏசா 22:5; ஏசா 37:3; எரே 51:2; எசே 7:7; நாகூம் 1:7; ஆப 3:16; செப் 1:15).
"ஆபத்து வேளை" **(time of trouble)** - (நெகே 9:27; யோபு 38:23; சங் 9:9; சங் 10:1; சங் 27:5; சங் 37:39; சங் 41:1; நீதி 25:19; ஏசா 33:2; எரே 2:27-28; எரே 11:12; எரே 14:8; எரே 30:7;தானி 12:1)

20 அதிகாரம்

தேவனுடைய நாமத்தின் ஆசீர்வாதங்கள்

1. அடைக்கலம்
2. கொடி - இதைச்சுற்றி யுத்தம் பண்ணுவோம் (சங் 20:5)
3. நம்பிக்கையும் இரட்சிப்பின் உபாயமும் (சங் 20:7)

"யாக்கோபின் தேவன்" - வேதாகமத்தில் இந்த வாக்கியம் 22 தடவைகள் வந்துள்ளது.(சங் 20:1; சங் 46:7,11; சங் 75:9; சங் 76:6; சங் 81:1,4; சங் 84:8; சங் 94:7; சங் 114:7; சங் 146:5; யாத் 3:6,15; யாத் 4:5; 2சாமு 23:1; ஏசா 2:3; மீகா 4:2; மத் 22:32; மாற்கு 12:26; லூக்கா 20:37;அப் 7:32,46). யாக்கோபு ஒன்றுமில்லாமல் இருந்தபோது, தேவ கோபாக்கினைக்கு பாத்திரவானாக இருந்தபோது, தேவன் அவனை சந்தித்து ஆசீர்வதித்தார். "சகல கிருபையும் பொருந்திய தேவன்"-(1பேதுரு 5:10).

"யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக" - தலைவர்களுடைய பெயர்களை அழைக்கும் போதே, தாங்கள் தீமையிலிருந்து பாதுகாக்கப்படுவதாக ஒரு சிலர் நம்புகிறார்கள். நாம் தேவனுடைய நாமத்தை அழைக்கும்போது அவரே நமது அடைக்கலம்.

இரண்டு விதமான காணிக்கைகள்

1. அன்பின் காணிக்கைகள் - இதில் இரத்தம் சேரவில்லை.
2. சர்வாங்க தகனபலி - இதில் இரத்தம் சேர்ந்துள்ளது.

பிரதான ஆசாரியன், ஜனங்களுக்காகப் பலி செலுத்திய பின்பு, அவர்களைப் பார்த்து, " அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனை களையெல்லாம் நிறைவேற்றுவாராக" என்று கூறி ஆசீர்வதிப்பான் (சங் 20:4-5).

"தாம் அபிஷேகம்பண்ணினவர்" - அவருடைய மேசியா. (சங் 20:6; சங் 2:2; சங் 18:50; சங் 28:8; சங் 45:7; சங் 84:9; சங் 105:15)

"தமது வலதுகரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகள்" - தேவனுடைய சர்வ வல்லமையைக் குறிக்கும்.

2. வெவ்வேறு காரியங்களில் நம்பிக்கை வைப்பதும் அதன் விளைவுகளும்

சங் 20:7 சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்.

சங் 20:8 அவர்கள் முறிந்து விழுந்தார்கள்; நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.

சங் 20:9 கர்த்தாவே, இரட்சியும்; நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக.

மேன்மை பாராட்டும் காரியங்கள்

1. இரதங்கள் (ஏசா 31:1; ஏசா 36:9)
2. குதிரைகள் (சங் 33:17; சங் 147:10)
3. கர்த்தருடைய நாமம்

இரதங்களையும் குதிரைகளையும் நம்புவதற்குப் பதிலாக கர்த்தரை நம்புவதே உத்தமம்.

"ராஜா" - தேவன் நமது ராஜா. இராஜாதி இராஜா. - (சங் 20:9; சங் 5:2; சங் 10:16; சங் 24:7-10; சங் 29:10; சங் 44:4; சங் 47:2-7; சங் 48:2; சங் 68:24; சங் 74:12; சங் 84:3; சங் 89:18; சங் 95:3; சங் 98:6; சங் 145:1; சங் 149:2)

21 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மேசியாவைப் பற்றிய நான்காவது சங்கீதம்

பொருளடக்கம்

1. இராஜாவாக அபிஷேகம் - மேசியாவுக்காக கர்த்தர் செய்துள்ள எட்டு காரியங்கள் - (21:1-7)
2. ஆளுகை - இராஜாவுக்காகக் கர்த்தர் செய்யப் போகும் எட்டு காரியங்கள் - (21:8-13)

1. இராஜாவாக அபிஷேகம் - மேசியாவுக்காக கர்த்தர் செய்துள்ள எட்டு காரியங்கள்

சங் 21:1 கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்; உம்முடைய இரட்சிப்பில் எவ்வளவாய்க் களிகூருகிறார்!

சங் 21:2 அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி, அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர். (சேலா)

சங் 21:3 உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டுவந்து, அவர் சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்.

சங் 21:4 அவர் உம்மிடத்தில் ஆயுசைக்கேட்டார்; நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர்.

சங் 21:5 உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக்கிறது; மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு அருளினீர்.

சங் 21:6 அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்.

சங் 21:7 ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கை யாயிருக்கிறார்; உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்.

தீர்க்கதரிசன எண் - 15

"கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார்; உம்முடைய இரட்சிப்பில் எவ்வளவாய்க் களிகூருகிறார்..................." (சங் 21:1-13) - இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதில் ஒரு பகுதி நிறைவேறியுள்ளது. தாவீதின் குமாரனாகிய மேசியாவில் இந்தத் தீர்க்க தரிசனம் முழுமையாக நிறைவேறும். சங் 20:1-7 - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியுள்ளது. சங் 20:8-13 - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

கடந்த கால ஆசீர்வாதங்கள்

1. மனவிருப்பத்தின்படி தந்தருளினீர். (சங் 21:2)
2. உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர்.
3. உத்தம ஆசீர்வாதங்களை தந்தருளினீர் (சங் 21:3).
4. சிரசில் பொற்கிரீடம் தரிப்பிக்கிறீர்.
5. அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர். (சங் 21:4) - இது மேசியாவுக்கு மட்டுமே பொருந்தும். தாவீதுக்குப் பொருந்தாது. (அப் 2:27-32)
6. மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டினார் (எபி 2:7-18).
7. நித்திய ஆசீர்வாதங்களுள்ள வராக்குவார். (சங் 21:6; எபே 1:21-23; பிலி 2:9-11; 1பேதுரு 3:22).
8. கர்த்தருடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குவார் (சங் 21:6; எபி 12:1-2).

21 அதிகாரம்

2. ஆளுகை - இராஜாவுக்காகக் கர்த்தர் செய்யப் போகும் எட்டு காரியங்கள்

சங் 21:8 உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும்; உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.

சங் 21:9 உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவீர்; கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை அழிப்பார்; அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.

சங் 21:10 அவர்கள் கனியை பூமியிலிராதபடி நீர் அழித்து, அவர்கள் சந்ததியை மனுபுத்திரரிலிராதபடி ஒழியப் பண்ணுவீர்.

சங் 21:11 அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பொல்லாங்கு நினைத்தார்கள்; தீவினையை எத்தனம்பண்ணினார்கள்; ஒன்றும் வாய்க்கமாற்போயிற்று.

சங் 21:12 அவர்களை இலக்காக வைத்து, உம்முடைய அம்புகளை நாணேற்றி, அவர்கள் முகத்திற்கு நேரே விடுகிறீர்.

சங் 21:13 கர்த்தாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்; அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுவோம்.

வருங்கால ஆசீர்வாதங்கள்

1. கர்த்தருடைய கை, சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும் (சங் 21:8).
2. வலதுகரம் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.
3. கர்த்தர் கோபத்திலே, சத்துருக்களை அழிப்பார் (சங் 21:9).
4. சத்துருக்களை அக்கினிச் சூளையாக்கிப் போடுவார்
5. அக்கினி அவர்களைப் பட்சிக்கும்
6. சத்துருக்கள் கனியைப் பூமியிலிராதபடி அழிப்பார் (சங் 21:10).
7. அவர்கள் சந்ததியை மனுபுத்திரரிலிராதபடி ஒழியப் பண்ணுவார்.
8. அவர்களை இலக்காக வைத்து, அம்புகளை நாணேற்றி, அவர்கள் முகத்திற்கு நேரேவிடுவார் (சங் 21:12).

"அக்கினிச் சூளை" - இது நரகத்தின் விளக்கம். கிறிஸ்துவும் நரகத்தை "அக்கினிச் சூளை" என்றே குறிப்பிடுகிறார் (மத் 13:42, 50; மத் 25:41, 46).

விழுங்கு (swallow) - בָּלַע - baw-lah' - 1104

வினைச்சொல் - விழுங்கு, அவமதி, விழுங்கிப்போடு, அழி, அகற்ற, மூடு, நிர்மூலமாக்கு, முழுகிப்போ, நாசமடை (சங் 21:9; சங் 35:25; 2சாமு 20:19,20; பிர 10:12; ஏசா 25:8; ஏசா 28:7; ஏசா 49:19; புல 2:2, 5, 16).

பட்சி (devour) - אָכַל - aw-kal' - 398

வினைச்சொல் -அனுபவி, போஜனம்பண்ணு, இரை, வாயிலேபோடு, உண், ஆகாரம், அசைபோடு, புசி, சாப்பிடு, தின்னு, பட்சி (சங் 21:9; 7; சங் 9:7; நீதி 30:14; ஏசா 9:12; எசே 36:14)

22 அதிகாரம்

(அகிலேத் ஷகார் என்னும் இராகத்தில் பாடி, இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மேசியாவைப் பற்றிய ஐந்தாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மேசியாவின் இருபத்தேழு விதமான பாடுகள் - (22:1-18)
2. மேசியாவின் ஜெபத்தின் ஐந்து அம்சங்கள் - (22:19-21)
3. மேசியாவின் மகிமையும் உயர்த்தப் படுவதும் பற்றிய இருபது அம்சங்கள் - (22:22-31)

1. மேசியாவின் இருபத்தேழு விதமான பாடுகள்

சங் 22:1 என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?

சங் 22:2 என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை.

சங் 22:3 இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்.

சங் 22:4 எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கைவைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.

சங் 22:5 உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்; உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள்.

சங் 22:6 நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.

சங் 22:7 என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி:

சங் 22:8 கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.

சங் 22:9 நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்; என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப் பண்ணினீர்.

சங் 22:10 கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன் நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

சங் 22:11 என்னைவிட்டுத் தூரமாகாதேயும் ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை.

சங் 22:12 அநேகம் காளைகள் என்னை சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டது.

சங் 22:13 பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல், என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.

சங் 22:14 தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று.

சங் 22:15 என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத் தூளிலே போடுகிறீர்.

சங் 22:16 நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.

22 அதிகாரம்

சங் 22:17 என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சங் 22:18 என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் 16

"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்" (சங் 22:1) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (மத் 27:46; மாற்கு 15:34). மத் 27:46; மாற்கு 15:34 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

கதறுதல் (roaring) - שְׁאָגָה - sheh-aw' - 7581

பெ.பெ.சொ. - கதறுதல், கெர்ச்சிப்பு, கதறிச்சொல்லுதல், கர்ச்சித்தல் சிங்கத்தின் கர்ச்சனை (lamentation, moaning) - (யோபு 4:10; ஏசா 5:29; எசே 19:7; சக 11:3). புலம்பலின் கதறுதல் (சங் 22:1; சங் 32:3; யோபு 3:24)

"என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை" சங் 22:2-5 - ஆகியவை தாவீதின் அனுபவங்கள். மேசியாவின் அனுபவமல்ல. கர்த்தர் தாவீதுக்கு உத்தரவு கொடாவிட்டாலும், மேசியாவின் ஜெபத்திற்கு எப்போதும் உத்தரவு கொடுப்பார் (யோவான் 11:42).

"தேவரீரே பரிசுத்தர்" - கர்த்தர் ஜெபத்திற்கு உத்தரவு கொடாவிட்டாலும் அவரே பரிசுத்தர். இதுவே ஜெபத்தின் நல்ல மனப்பாங்கு. ஜெபத்திற்கு உத்தரவு கிடைக்கவில்லை என்றால், அதற்காக யாரையும் குறை கூறக்கூடாது (சங் 66:18; மத் 17:20; யாக் 1:5-8).

"எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்; நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்" - இவை கடந்த காலத்தில் ஏற்பட்ட காரியங்கள். தனது ஜெபத்திற்கு கடந்த கால உத்தரவுகளை தாவீது ஆதாரமாகப் பயன்படுத்துகிறான். (சங் 22:4-5).

தீர்க்கதரிசன எண் - 17

"நானோ ஒரு புழு, மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப் பட்டும் இருக்கிறேன்............" (சங் 22:6-31) சங் 22:6-21 ஆகிய வசனங்கள் கிறிஸ்துவின் முதலாம் வருகையில் நிறைவேறிற்று. சங் 22:22-31 - ஆகிய வசனங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவேறும்.

மேசியாவின் பாடுகள்

1. தேவனால் கைவிடப்பட்டேன் (சங் 22:1)
2. எனக்கு உதவி செய்யாமல் தூரமாயிருக்கிறார்
3. நான் கதறிச்சொல்லும் வார்த்தைகளைக் கேளாமல் தூரமாயிருக்கிறார்
4. நான் ஒரு புழு (சங் 22:6)
5. நான் மனுஷனல்ல (சங் 22:6)
6. மனுஷரால் நிந்திக்கப்பட்டிருக்கிறேன்
7. ஜனங்களால் அவமதிக்கப்பட்டு இருக்கிறேன்
8. என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னை இகழ்கிறார்கள் (சங் 22:7)

22 அதிகாரம்

9. கர்த்தர், இவனை மீட்டுவிடட்டும் என்று பரியாசம் பண்ணுகிறார்கள் (சங் 22:7-8)

10. என்னைக் கர்ப்பத்திலிருந்து பாதுகாத்தவர் (சங் 22:9)

11. என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப் பண்ணினார்

12. கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன் (சங் 22:10)

13. நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்

14. கர்த்தர் என்னை விட்டு தூரமாகவில்லை (சங் 22:11)

15. ஆபத்து கிட்டியிருக்கிறது

16. தேவனே, என் சகாயர்

17. அநேகம் துஷ்டமனுஷர்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறார்கள் (சங் 22:12)

18. பீறிக் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல், என்மேல் மனுஷர் வாயைத் திறக்கிறார்கள் (சங் 22:13)

19. தண்ணீரைப் போல ஊற்றுண்டேன் (சங் 22:14; யோவான் 19:34)

20. என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது

21. என் இருதயம் மெழுகுபோலாகி என் குடல்களின் நடுவே உருகிற்று

22. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது (சங் 22:15)

23. என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது

24. என்னை மரணத்தூளிலே போடுகிறீர்

25. புறஜாதியார் என்னைச் சூழ்ந்திருக்கிறார்கள் (சங் 22:16)

26. பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது

27. என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்

28. என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம். அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (சங் 22:17)

29. என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு கொண்டார்கள் (சங் 22:18)

30. என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்

புழு **(worm)**, இரத்தாம்பரம் **(crimson grub) - תולע - to-law', to-lay-aw', to-lah'-ath, to-lah'-ath - 8438**

ஆ.பெ.சொ. - இரத்தாதம்பரச் சிவப்பு, இரத்தாம்பரம், புழு, பூச்சி **(a maggot, the crimson grub, a coccus worm)** - சிவப்பு நிற சாயம் செய்வதற்கு பயன்படும் புழு (ஏசா 1:18; யாத் 25:4; யாத் 26:1,31,36; யாத் 27:16)

புழுவின் வர்ணனை

1. உணவில் உள்ள பூச்சி (யாத் 16:20; உபா 28:39; யோவான் 4:7)

2. மனுஷனுடைய பாவம் (யோபு 25:6; ஏசா 41:14)

3. நரகத்தில் மனுஷனுடைய ஆத்துமா (ஏசா 14:11; ஏசா 66:24; மாற்கு 9:43-48)

4. கிறிஸ்து மனுஷர் மத்தியில் தாழ்மையான ஸ்தானத்தைத் தெரிந்தெடுத்தார் (சங் 22:6; பிலி 2:5-8; 1பேதுரு 2:24; ஏசா 49:7; ஏசா 52:14; ஏசா 53:1-12)

22 அதிகாரம்

மனுஷன் (man) - איש - eesh - 376

ஆ.பெ.சொ - மனுஷன், புருஷன், ஆண், ஆள், பேர், கோத்திரத்தான், ஜனம் - (சங் 49:12; சங் 62:9; ஏசா 2:9; ஏசா 5:15; ஏசா 31:8; யாத் 15:3; யோசு 5:13; தானி 9:21; தானி 10:5; தானி 12:6-7; சக 1:8). நான் பெரிய மனுஷன் அல்ல. எல்லாரிலும் தாழ்மையானவன்.

"கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்" - மத் 27:43; மாற்கு 15:29; லூக்கா 23:35 - ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

"நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்; என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர்" - கர்த்தருக்கும் மேசியாவிற்கும், கர்ப்பத்திலிருந்து பிதா - குமாரன் உறவு இருந்ததை இந்த வசனம் குறிப்பிடுகிறது (சங் 22:9-10; ஏசா 50:4-6; லூக்கா 2:40,52). கிறிஸ்துவின் மனுஷத்தத்துவத்தையும், தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டதையும் இந்த வசனங்கள் கூறுகின்றன (ஏசா 7:14; மத் 1:23; லூக்கா 1:32-35; லூக்கா 2:40-52; யோவான் 1:1-2,14; ரோமர் 1:1-2; ரோமர் 8:3; ரோமர் 9:5; கலா 4:4; 1தீமோ 3:16).

"சகாயரும் இல்லை" - தேவன் ஒருவராகவே கிரியை செய்கிறவர்

காளைகள் பெலத்தைக் குறிக்கும். பாசான் யோர்தான் நதிக்கு கிழக்கிலுள்ள பிரதேசம். அங்குள்ள காளைகள் கொழுமையாயிருக்கும். "பாசான் தேசத்துப் பலத்த எருதுகள்" - மேசியாவை அழிக்கத் தீர்மானம் பண்ணிய இஸ்ரவேல் தேசத்து அதிபதிகளைக் குறிக்கும் (மத் 27:1-66; அப் 2:36; அப் 3:13-18; அப் 4:10,27).

"தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்" - கிறிஸ்துவின் இரத்தம் தண்ணீரைப் போல ஊற்றப்பட்டது (யோவான் 19:34).

"என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது" கல்வாரி சிலுவையில், இயேசு ஆணிகளால் அறையப்பட்டு தொங்கியபோது, அவருடைய சரீரம் இவ்வாறுதான் இருந்தது (சங் 22:14,16; யோவான் 20:25; கொலோ 2:14).

"என் இருதயம் மெழுகுபோலாகிறது" - முழுமையாகக் கீழ்ப்படிவதன் உருவகம் (யோசு 7:5)

"என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது" - மேசியா மனுஷருக்காகத் தம் ஜீவனையே ஒப்புக் கொடுத்தார்.

"என் நாவு மேல்வாயோடே ஒட்டிக் கொண்டது" - கிறிஸ்துவின் வாய் வறண்டு போயிற்று. தாகமாயிருந்ததினால் அவரால் சரியாகப் பேசக்கூட முடியவில்லை (யோவான் 19:28).

"என்னை மரணத்தூளிலே போடுகிறீர்" - கிறிஸ்து அழிவைக் காணமாட்டார் (சங் 16:10), கிறிஸ்து சிலுவையில் மரித்தார். கர்த்தர் ஜீவ சுவாசத்தை ஆதாமின் நாசியிலே ஊதுவதற்கு முன்பாக அவனுடைய சரீரம் எப்படி இருந்ததோ, அவ்வாறாகவே கிறிஸ்துவின் சரீரம் இருந்தது (ஆதி 2:7).

"நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது" - இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு புறஜாதியார் அவரைச் சூழ்ந்திருந்தார்கள் (மத் 15:26-27; மத் 20:19; அப் 4:27)

"பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது" - (மத் 27:20,24; அப் 2:36; அப் 4:27)

"என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்" - (சக 12:10; மத் 27:35; யோவான் 19:37; யோவான் 20:20-25; வெளி 1:7)

"என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" - இயேசு சிலுவையில் அறையப்பட்டு தொங்கிய காட்சியை இந்த வசனம் அப்படியே சித்தரிக்கிறது.

22 அதிகாரம்

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்" - மத் 27:35; யோவான் 19:23-24; மாற்கு 15:24; லூக்கா 23:34 - ஆகிய வசனங்களில் இது மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

2. மேசியாவின் ஜெபத்தின் ஐந்து அம்சங்கள்

சங் 22:19 ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்; என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக் கொள்ளும்.

சங் 22:20 என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும், எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும்.

சங் 22:21 என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்; நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது எனக்குச் செவி கொடுத்தருளினீர்.

அருமையான (darling), ஒரே (only one) - יָחִיד - yaw-kheed' - 3173

பெயரடை- ஏக, ஒரே, தனித்தது, அருமையானது, தனிமையானது, (சங் 35:17)

எபிரெய மொழியில் "நாய்" என்று ஒருமையில் உள்ளது. இது பிலாத்துவை குறிக்கும். (சங் 22:16)

"என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும்" - (சங் 22:20-21; சங் 35:17) சிங்கம் சாத்தானைக் குறிக்கும். இயேசு கல்வாரி சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக, சாத்தான் அவரைக் கெத்சமனே தோட்டத்தில் கொல்ல முயற்சி பண்ணினான். சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போன்றவன்(2தீமோ 4:17; 1பேதுரு 5:8).

"காண்டாமிருகத்தின் கொம்புகள்" - இது பாசானின் எருதுகளைக் குறிக்கும் (சங் 22:12). மேசியாவை அழிக்க வந்த சத்ருக்களின் மத்தியில் கர்த்தர் மேசியாவின் விண்ணப்பத்திற்கு செவி கொடுத்தார் (சங் 22:21-22).

3. மேசியாவின் மகிமையும் உயர்த்தப்படுவதும் பற்றிய இருபது அம்சங்கள்

சங் 22:22 உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.

சங் 22:23 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.

சங் 22:24 உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாய் எண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.

சங் 22:25 மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்; அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

சங் 22:26 சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்; உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும்.

சங் 22:27 பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும்.

சங் 22:28 ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.

22 அதிகாரம்

சங் 22:29 பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்து கொள்வார்கள்; புழுதியில் இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள்; ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே.

சங் 22:30 ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்.

சங் 22:31 அவர்கள் வந்து; அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்.

"உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்" - எபி 2:12-இல் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது.

ஆயிர வருஷ அரசாட்சியின் ஆசீர்வாதங்கள்

1. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவே உம்மைத் துதிப்பேன் (சங் 22:22; எபி 2:12)
2. புறஜாதியார் கர்த்தரைத் துதிப்பார்கள், அவரைத் துதியுங்கள் (சங் 22:23; சங் 18:49; சங் 117:1; உபா 32:43; ஏசா 11:1,10)
3. இஸ்ரவேலின் வம்சத்தார், அவர்பேரில் பயபக்தியாயிருப்பார்கள்
4. உபத்திரவப்பட்டவனை அற்பமென்று அருவருக்கமாட்டார்கள் (சங் 22:24)
5. உபத்திரவப்பட்டவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்
6. மகா சபையிலே மேசியா கர்த்தரைத் துதிப்பார் (சங் 22:25; சக 14:16-21; வெளி 11:15)
7. அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு மேசியா தம் பொருத்தனைகளைச் செலுத்துவார்
8. சாந்த குணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள் (சங் 22:26; சங் 37:11; ஏசா 11:4; மத் 5:5)
9. கர்த்தரைத் தேடுகிறவர்கள் எல்லோரும், எங்கும் அவரைத் துதிப்பார்கள் (சங் 22:26; மல் 1:11)
10. உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும் (சங் 22:26; ஏசா 65:20-25; மத் 25:46; வெளி 21:3-7)
11. பூமியின் எல்லைகளெல்லாம் நினைவு கூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும் (சங் 22:27; யோவே 2:28-31; ஏசா 2:2-4; ஏசா 52:7; சக 8:23; சக 14:16-21)
12. ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமூகத்தில் தொழுது கொள்ளும் (சங் 22:27; ஏசா 2:2-4; சக 14:16-21)
13. ராஜ்யம் கர்த்தருடையது. அவர் ஜாதிகளை ஆளுகிறவர் (சங் 22:28; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; சக 14:9-21; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:4-10)
14. உலகத்தின் ராஜ்யங்களை, சதா காலங்களிலும் கிறிஸ்து ராஜ்யபாரம் பண்ணுவார் (ஏசா 9:6-7; தானி 7:13-14; சக 14:9-21; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:4-10)
15. பூமியின் செல்வவான்கள் யாவரும் தேவனைப் பணிந்து கொள்வார்கள் (சங் 22:29)
16. சத்துருக்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள் (சங் 22:29; சங் 72:9; ஏசா 2:12-21; ஏசா 11:4-5)
17. தேவனே எல்லோருக்கும் நித்திய ஜீவனின் ஆதாரமாயிருப்பார்
18. ஒரு சந்ததி மேசியாவைச் சேவிக்கும், தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி எனப்படும் (சங் 22:30; ஏசா 59:20-21)

22 அதிகாரம்

19. மேசியாவின் சந்ததி நித்திய சந்ததியாக இருக்கும் (சங் 22:26,30; ஏசா 59:20-21; தானி 2:44-45; தானி 7:13-14)

20. "அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்" - (சங் 22:31; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5)

23 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

மேசியாவைப் பற்றிய ஆறாவது சங்கீதம்

பொருளடக்கம்

ஏழுவிதமான ஊழியம் - மேசியாவின் பதினான்கு ஆசீர்வாதங்கள் - (23:1-6)

ஏழுவிதமான ஊழியம் - மேசியாவின் பதினான்கு ஆசீர்வாதங்கள்

சங் 23:1 கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கி றார்; நான் தாழ்ச்சியடையேன்.

சங் 23:2 அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

சங் 23:3 அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

சங் 23:4 நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

சங் 23:5 என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

சங் 23:6 என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

மேசியா நமது மேய்ப்பராக இருக்கிறார். அவர் நமக்கு பரிபூரண ஜீவனைத் தருகிறார் (சங் 23:1-6; யோவான் 10:1-18)

சங்கீதம் 23-இல் கூறப்பட்டுள்ள பரிபூரணமான காரியங்கள்

1. கர்த்தர் - பரிபூரணமான தேவன் (சங் 23:1)
2. என் மேய்ப்பராயிருக்கிறார் - பரிபூரண பாதுகாப்பாளர்
3. தாழ்ச்சியடையேன் - பரிபூரண திருப்தி
4. அவர் என்னை மேய்க்கிறார் - பரிபூரண வழிநடத்துபவர் (சங் 23:2)
5. அமர்த்துதல் - பரிபூரண ஓய்வு
6. புல்லுள்ள இடங்கள் - பரிபூரண ஆதரிப்பு
7. வழிநடத்துகிறார் - பரிபூரண வழிநடத்துதல் (சங் 23:2-3)
8. அமர்ந்த தண்ணீர் - பரிபூரண சமாதானம்
9. தேற்றுகிறார் - பரிபூரண மீட்பு (சங் 23:3)
10. ஆத்துமா - பரிபூரண சுயம்
11. நீதியின் பாதை - பரிபூரண பரிசுத்தம் (சங் 23:3; எபி 12:14)
12. நாமத்தினிமித்தம் - பரிபூரண நாமம்
13. மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் - பரிபூரண நம்பிக்கை (சங் 23:4)
14. பொல்லாப்புக்குப் பயப்படேன் - பரிபூரண பாதுகாப்பு
15. தேவரீர் என்னோடே கூட இருக்கிறார் - பரிபூரண பங்காளி
16. உமது கோல் - பரிபூரண பாதுகாப்பு
17. உமது தடி - பரிபூரண உதவி
18. என்னைத் தேற்றுபவர் - பரிபூரண ஆறுதல்

23 அதிகாரம்

19. ஆயத்தப்படுத்துவார் - பரிபூரண பராமரிப்பு (சங் 23:5)

20. பந்தி - பரிபூரண போஜனம்

21. எனக்கு முன்பாக - பரிபூரண பிரசன்னம்

22. சத்துருக்களுக்கு முன்பாக - பரிபூரண பாதுகாப்பு

23. என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவார் - பரிபூரண அபிஷேகம்

24. என் பாத்திரம் நிரம்பி வழிகிறது - பரிபூரண சந்தோஷம்

25. நிலைத்திருத்தல் - பரிபூரண உத்திரவாதம்

26. நன்மை - பரிபூரண உதவி

27. கிருபை - பரிபூரண மனதுருக்கம்

28. என் ஜீவனுள்ள நாள் எல்லாம் - பரிபூரண ஜீவன்

29. வாசம் பண்ணுதல் - பரிபூரண வாசஸ்தலம்

30. நீடித்த நாட்களால் கர்த்தருடைய வீட்டில் - பரிபூரண முடிவு

கர்த்தர் (LORD) - **יהוה, יְהֹוָה - yeh-ho-vaw' - 3068**

ஆ.பெ.சொ.-கர்த்தர், ஆண்டவர், யெகோவா - என் மேய்ப்பராகிய கர்த்தர்

மேய்ப்பன் **(Shepherd) - רָעָה - raw-aw' - 7473.**

ஆண்பால் பெயர்ச்சொல் - மேய்ப்பன்

தேவன் இஸ்ரவேலின் மேய்ப்பர் என்றழைக்கப்படுகிறார் (ஆதி 49:24; சங் 80:1; ஏசா 40:9-11). ஒரே மேய்ப்பர். அவர் இஸ்ரவேலுக்கு உண்மையுள்ளவர் (எசே 34:23; எசே 37:24; சக 13:7; மத் 26:31).

"தாழ்ச்சியடையேன்" - கர்த்தர் நமது தேவைகளை சந்திப்பார். இந்தக் கருத்து பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்டிருக்கிறது (சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:9-13; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; யாக் 1:5-8; 1யோவான் 3:20-22; 1யோவான் 5:13-14; 3யோவான் 1:2)

ஆடுகளின் ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர் அவைகளின் மேய்ப்பர் (சங் 23:1)

2. நன்மை குறைவுபடாது (சங் 34:9-10; சங் 84:11)

3. புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார் (சங் 23:2)

4. அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார் (யோவான் 4:14; யோவான் 7:37-39)

5. ஆத்துமாவைத் தேற்றுவார் (சங் 23:3)

6. கர்த்தர், தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துவார்

7. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பாதுகாப்பாக வழிநடத்துவார் (சங் 23:4)

8. நான் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்

9. மேய்ப்பருடைய கோலும், தடியும் என்னைத் தேற்றும்

10. என் சத்துருக்களுக்கு முன்பாக, எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தினார் (சங் 23:5)

சங்கீதம் - தொகுப்புரை

23 அதிகாரம்

11. என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணினார் (சங் 104:15; மத் 26:6-7; மாற்கு 14:8; லூக்கா 7:45-50) பழங்காலத்தில் விருந்துகளில் பங்கு பெறுவதற்கு முன்பு நடைபெறும் காரியம்.

12. என் பாத்திரம் நிரம்பி வழிகிறது

13. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் (சங் 23:6)

14. நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் (யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 13:14; வெளி 21-22)

தீர்க்கதரிசன எண் - 18

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" (சங் 23:6) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டு வருகிறது. கர்த்தரோடு நித்திய காலமாக ஜீவிக்கப் போகிறவர்களிடத்தில், இந்தத் தீர்க்கதரிசனம் பூரணமாக நிறைவேறும் (சங் 23:6; யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 13:14; வெளி 21-22).

சங்கீதம் - தொகுப்புரை

24 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

தேவனுடைய முதலாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. பூமியின் மீது தேவனுடைய உரிமை - (24:1-2)
2. தேவனுடைய ஜனங்களின் சுபாவம் - (24:3-6)
3. பூமியின் வருங்கால ராஜா வெளிப்படுத்தப்படுகிறார் - (24:7-10)

1. பூமியின் மீது தேவனுடைய உரிமை

சங் 24:1 பூமியும் அதின் நிறையும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.

சங் 24:2 அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி, அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார்.

தீர்க்கதரிசன எண் - 19

"பூமியும் அதின் நிறையும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது" (சங் 24:1-10) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

"பூமி கர்த்தருடையது" - தேவன் பூமியை சிருஷ்டித்தார் (ஆதி 1:1). ஆகையினால் நியாயமாக பூமி கர்த்தருக்குரியது. ஆனால் சாத்தானுடைய பிரச்சனையினால் பூமியிலுள்ளவர்கள் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணுகிறார்கள் (2கொரி 4:4; எபே 2:2; 1யோவான் 5:19). தேவன் பரலோகத்திலிருந்து தமது சேனையை அனுப்பி சாத்தானையும் அவனுடைய அந்தகார வல்லமையையும் மேற்கொள்வார்.

இதுவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நோக்கம் (சக 14:1-5,9,14-21; மத் 13:39-50; மத் 24:29-31; மத் 25:31-46; யூதா 1:14; வெளி 19:11-21). தேவனுடைய ராஜ்யத்தைப் பூமியில் மறுபடியும் ஸ்தாபிப்பார் (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 11:15; வெளி 20:1-10). பூமி தேவனுக்குப் பூரணமாக கீழ்ப்படியும். ஆதாம் மூலமாக நிறைவேற்ற வேண்டுமென்று தேவன் நினைத்த காரியங்கள் இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகள் மூலமாக நிறைவேறும் (ஆதி 1:26-31; அப் 3:21; 2பேதுரு 3:10-13; வெளி 21-22; ஏசா 66:22-24).

2. தேவனுடைய ஜனங்களின் சுபாவம்

சங் 24:3 யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

சங் 24:4 கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

சங் 24:5 அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்.

சங் 24:6 இதுவே அவரைத் தேடி விசாரித்து, அவருடைய சமுகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததி. (சேலா.)

"யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?" - பரிசுத்த ஸ்தலம் என்பது கிறிஸ்துவின் தலைநகரத்தையும் (எசே 43:5; எசே 48:1-35), பரலோக நகரத்தையும் (எபி 12:22-23) குறிக்கும்.

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவர்கள் - பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். பூமியில் பலுகிப் பெருகுவார்கள் (சங் 24:4-6; ஆதி 8:22; ஆதி 9:12; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; லூக்கா 1:32-33; 2பேதுரு 3:13; வெளி 21:3-7,21-27; வெளி 22:1-5).

24 அதிகாரம்

இவர்களுடைய தகுதிகள்

1. சுத்தமான கைகள் (சங் 15:1-5)
2. மாசில்லாத இருதயம் (சங் 51:7; மல் 3:2-3; மத் 5:8; யோவான் 15:3)
3. விக்கிரகாராதனை (மாயை) இல்லை (1கொரி 6:9-11; கலா 5:19-21; எபி 12:14)
4. உண்மையுள்ளவன் (வெளி 21:8)

சங் 24:4; சங் 15:1-5; சங் 24:5-6 - ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள தகுதிகளை உடையவன். கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்

சங் 22:30 - இல் கூறப்பட்டுள்ள யாக்கோபின் சந்ததி, புதிய பூமியில் வாசம் பண்ணும் நித்திய ஜனத்தைக் குறிக்கும் (2பேதுரு 3:13; வெளி 21-22; ஏசா 66:22-24)

3. பூமியின் வருங்கால ராஜா வெளிப்படுத்தப்படுகிறார் - (வெளி 22:4-5)

சங் 24:7 வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.

சங் 24:8 யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுமுள்ள கர்த்தராமே.

சங் 24:9 வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதிகதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்.

சங் 24:10 யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா. (சேலா.)

"அநாதி கதவுகள்" - நித்திய ஆலயத்திற்கும் (எசே 43:5), நித்திய நகரத்திற்கும் (வெளி 21:9-27) செல்லும் நுழைவாயில் உள்ள கதவுகள்.

"மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்" - நித்திய பூமியில் நித்திய காலமாக ஆட்சிபுரிபவர் (சங் 24:7-10). தேவன் கிறிஸ்துவிற்குத் தலையானவர் (1கொரி 11:3; 1கொரி 15:24-28). தேவனும் கிறிஸ்துவும் நித்திய காலமாக ஆட்சிபுரிவார்கள் (தானி 2:44-45; தானி 7:13-14; வெளி 11:15; வெளி 22:4-5).

"யார் இந்த மகிமையின் ராஜா?" - இக்கேள்வி இரண்டு முறை கேட்கப்பட்டிருக்கிறது (சங் 24:8,10). கர்த்தரே அவர். சேனைகளின் கர்த்தர், யுத்தத்தில் பராக்கிரமமுள்ளவர் (சங் 24:8,10; யாத் 15:3; சக 14:3).

25 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

ஏழாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. கர்த்தரிடம் ஏறெடுக்கப்பட்ட பன்னிரெண்டு விண்ணப்பங்கள் - (25:1-7)
2. பாவிகளுக்கு ஆறுவிதமான அறிவுரையும் ஜெபமும் - (25:8-11)
3. கர்த்தருக்குப் பயந்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திருந்துவோருக்கு கிடைக்கும் ஆறுவிதமான ஆசீர்வாதங்கள் - (25:12-15)
4. தேவனிடம் கூறப்பட்ட பன்னிரெண்டு விண்ணப்பங்கள் - (25:16-22)

1. கர்த்தரிடம் ஏறெடுக்கப்பட்ட பன்னிரெண்டு விண்ணப்பங்கள்

சங் 25:1 கர்த்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

சங் 25:2 என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்; என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதேயும்.

சங் 25:3 உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்; முகாந்தரமில்லாமல் துரோகம் பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப் போவார்களாக.

சங் 25:4 கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்.

சங் 25:5 உம்முடையசத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.

சங் 25:6 கர்த்தாவே, உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங்களையும் நினைத்தருளும், அவைகள் அநாதிகாலமுதல் இருக்கிறதே.

சங் 25:7 என் இளவயதின் பாவங்களையும், என் மீறுதல்களையும் நினையாதிரும்; கர்த்தாவே, உம்முடைய தயவினிமித்தம் என்னை உமது கிருபையின்படியே நினைத்தருளும்.

"கர்த்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்" - பிதாவாகிய தேவனிடத்தில் நாம் ஜெபிக்க வேண்டும். இதுவே நமக்கு கொடுக்கப்பட்டுள்ள கட்டளை (யோவான் 16:23-26).

தாவீது தேவனிடத்தில் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும் (சங் 25:2)
2. என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதேயும்
3. உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும் (சங் 25:3)
4. முகாந்தரமில்லாமல் துரோகம் பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப் போவார்கள்
5. உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும் (சங் 25:4)
6. உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்
7. சத்தியத்திலே நடத்தும் (சங் 25:5)
8. சத்தியத்தை எனக்குப் போதித்தருளும்
9. உம்முடைய இரக்கங்களை நினைத்தருளும் (சங் 25:6)
10. உம்முடைய காருணியங்களை நினைத்தருளும்

25 அதிகாரம்

11. என் இளவயதின் பாவங்களை நினையாதிரும் (சங் 25:7)

12. உம்முடைய தயவினிமித்தம், என்னை உமது கிருபையின் படியே நினைத்தருளும்

"உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்" - தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாக இருந்தான். இதன் இரகசியம், தாவீது நாள் முழுவதும் தேவனுடைய சமுகத்தில் காத்திருந்ததுதான் (சங் 25:3,5,21; சங் 27:14; சங் 33:20; சங் 37:7,9,34; சங் 40:1; சங் 52:9; சங் 59:9; சங் 61:1; சங் 62:5; சங் 69:6; சங் 130:5-6).

"கர்த்தாவே, உம்முடைய தயவினிமித்தம்" - தேவன் தமது மகிமைக்காகவும் தமது புகழ்ச்சிக்காகவும், தமது சந்தோஷத்திற்காகவும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். ஆயினும் தமது தயவின் மூலமாக தம்மையே வெளிப்படுத்துகிறார் (கொலோ 1:15-18; வெளி 4:11).

2. பாவிகளுக்கு ஆறுவிதமான அறிவுரையும் ஜெபமும்

சங் 25:8 கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்.

சங் 25:9 சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.

சங் 25:10 கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக் கொள்ளுகிறவர்களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்தியமுமானவைகள்.

சங் 25:11 கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்.

கர்த்தர் நல்லவர் என்பதை நிரூபிக்கும் காரியங்கள்

1. பாவிகளுக்கு தம்முடைய வழியைத் தெரிவிக்கிறார்
2. சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்துகிறார் (சங் 25:9)
3. சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்
4. கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக் கொள்ளுகிறவர்களுக்கு, கிருபையையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துகிறார் (சங் 25:10)

சாந்தகுணமுள்ளவர்களின் ஆசீர்வாதங்கள்

1. திருப்தி (சங் 25:26)
2. நியாயத்திலே நடத்தப்படுதல் (சங் 25:9)
3. தேவனுடைய வழியைப் பற்றிய அறிவு (சங் 25:9)
4. பூமியைச் சுதந்தரித்தல் (சங் 37:11; மத் 5:5)
5. இரட்சிப்பு (சங் 76:9; சங் 149:4)
6. தேவனிடமிருந்து உதவி (சங் 147:6)
7. கர்த்தருக்குள் மகிழ்ச்சி (ஏசா 29:19)
8. பரிசுத்த ஆவி (கலா 5:22-23)
9. மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் (கலா 6:1)
10. பொறுமை (2தீமோ 2:24-25)

சாந்த குணமுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டானவர்கள்

1. ஆபிரகாம் (ஆதி 13:8)
2. ஈசாக்கு (ஆதி 26:20-22)
3. மோசே (யாத் 2:13; யாத் 14:13-14; யாத் 15:24; யாத் 16:7-8; யாத் 17:2; எண் 12:3; எண் 16:4-11)
4. கிதியோன் (நியா 8:2-3)

25 அதிகாரம்

5. அன்னாள் (1சாமு 1:13-16)

6. சவுல் (1சாமு 10:27)

7. தாவீது (1சாமு 17:29; 2சாமு 16:9-14; சங் 38:13-14; சங் 120:5-7)

8. பவுல் (அப் 21:20-22; 1தெச 2:7; 2தீமோ 4:16)

9. தெசலோனிக்கேயர் (2தெச 1:4)

10. இயேசுகிறிஸ்து (ஏசா 42:1-4; ஏசா 53:7; மத் 11:28-30; மத் 26:47-54)

“கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்” - பழைய ஏற்பாட்டில் இது தேவனிடம் மன்னிப்பைக் கோறும் ஜெபமாகும் (சங் 25:11). புதிய ஏற்பாட்டிலும் இவ்வாறாகவே ஜெபிக்க வேண்டுமென்பது உபதேசம் (லூக்கா 18:13). இரண்டு ஏற்பாடுகளிலும் இரட்சிப்பிற்கு இம்மாதிரியாகவே ஜெபிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது (சங் 51; ரோமர் 10:9-10; கலா 3:8; எபே 2:8-9; எபி 4:1; 1யோவான் 1:9).

3. கர்த்தருக்குப் பயந்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திருந்துவோருக்கு கிடைக்கும் ஆறுவிதமான ஆசீர்வாதங்கள்

சங் 25:12 கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்.

சங் 25:13 அவன் ஆத்துமா நன்மையில் தங்கும்; அவன் சந்ததி பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும்.

சங் 25:14 கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.

சங் 25:15 என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்.

கர்த்தரை உண்மையாய் தேடும் மனுஷன் அவரைக் கண்டடைவான் (சங் 25:12,14).

கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷனுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர், தம்முடைய வழியைப் போதிப்பார் (சங் 25:12)
2. அவன் ஆத்துமா நன்மையில் தங்கும் (சங் 25:13)
3. அவன் சந்ததி பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளும் (சங் 25:13)
4. கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது (சங் 25:14)
5. அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத்தெரியப்படுத்துவார் (சங் 25:14)

தாவீது செய்த இரண்டு முக்கியமான காரியங்கள்

1. கர்த்தருக்குக் காத்திருந்தான் (சங் 25:3,5,21)
2. அவன் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருந்தன (சங் 25:15)

“அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்” - இது தாவீது தேவன் மீதுவைத்திருந்தஆழமான நம்பிக்கை ஆகும்.

4. தேவனிடம் கூறப்பட்ட பன்னிரெண்டு விண்ணப்பங்கள்

சங் 25:16 என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்; நான் தனித்தவனும் சிறுமைப்படுகிறவனுமாயிருக்கிறேன்.

சங் 25:17 என் இருதயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கிறது; என் இடுக்கண்களுக்கு என்னை நீங்கலாக்கி விடும்.

25 அதிகாரம்

சங் 25:18 என் துன்பத்தையும் என் வருத்தத்தையும் பார்த்து, என் பாவங்களையெல்லாம் மன்னித்தருளும்.

சங் 25:19 என் சத்துருக்களைப் பாரும்; அவர்கள் பெருகியிருந்து, உக்கிரபகையாய் என்னைக் பகைக்கிறார்கள்.

சங் 25:20 என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும்; நான் வெட்கப் பட்டுப்போகாதபடி செய்யும்; உம்மை நம்பியிருக்கிறேன்.

சங் 25:21 உத்தமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது; நான் உமக்குக் காத்திருக்கிறேன்.

சங் 25:22 தேவனே, இஸ்ரவேலை அவனுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி மீட்டுவிடும்.

தாவீது தேவனிடம் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. என்மேல் நோக்கமாயிரும் (சங் 25:16)
2. எனக்கு இரங்கும்
3. என் இடுக்கண்களுக்கு எனக்கு நீங்கலாக்கி விடும் (சங் 25:17)
4. என் துன்பத்தைப் பாரும் (சங் 25:18)
5. என் வருத்தத்தைப் பாரும்
6. என் பாவங்களை மன்னித்தருளும்
7. என் சத்துருக்களைப் பாரும் (சங் 25:19)
8. என் ஆத்துமாவைக் காப்பாற்றும் (சங் 25:20)
9. என்னை விடுவியும்
10. நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்
11. உத்தமமும் நேர்மையும் என்னைக் காத்தருளுவதாக (சங் 25:21)
12. இஸ்ரவேலை அவனுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி மீட்டுவிடும் (சங் 25:22)

26 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

பொருளடக்கம்

1. முதலாவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம் - ஒன்பது விண்ணப்பங்கள், பத்துவிதமான சாட்சிகள், எட்டு விதமான பொறுத்தனைகள் - (26:1-12)

1. முதலாவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம் - ஒன்பது விண்ணப்பங்கள், பத்துவிதமான சாட்சிகள், எட்டு விதமான பொறுத்தனைகள்

சங் 26:1 கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் என் உத்தமத்திலே நடக்கிறேன்; நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், ஆகையால் நான் தள்ளாடுவதில்லை.

சங் 26:2 கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப் பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும்.

சங் 26:3 உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; உம்முடைய சத்தியத்திலே நடந்துகொள்ளுகிறேன்.

சங் 26:4 வீணரோடே நான் உட்காரவில்லை, வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை.

சங் 26:5 பொல்லாதவர்களின் கூட்டத்தைப் பகைக்கிறேன்; துன்மார்க்கரோடே உட்காரேன்.

சங் 26:6 கர்த்தாவே, நான் துதியின் சத்தத்தை தொனிக்கப்பண்ணி, உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக,

சங் 26:7 நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன்.

சங் 26:8 கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்.

சங் 26:9 என் ஆத்துமாவைப் பாவிகளோடும், என் ஜீவனை இரத்தப் பிரியரோடுங்கூட வாரிக் கொள்ளாதேயும்.

சங் 26:10 அவர்கள் கைகளிலே தீவினையிருக்கிறது; அவர்கள் வலதுகை பரிதானங்களால் நிறைந்திருக்கிறது.

சங் 26:11 நானோ என் உத்தமத்திலே நடப்பேன்; என்னை மீட்டுக்கொண்டு என் மேல் இரக்கமாயிரும்.

சங் 26:12 என் கால் செம்மையான இடத்திலே நிற்கிறது; சபைகளிலே நான் கர்த்தரைத் துதிப்பேன்.

தாவீது தேவனிடம் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. என்னை நியாயம் விசாரியும் (சங் 26:1)
2. என்னை பரீட்சியும் (சங் 26:2)
3. என்னைச் சோதித்துப்பாரும்
4. என் உள்ளத்திரியங்களை புடமிட்டுப் பாரும்
5. என் இருதயத்தை புடமிட்டுப்பாரும்
6. என் ஆத்துமாவைப் பாவிகளோடு வாரிக்கொள்ளாதேயும் (சங் 26:9)
7. என் ஜீவனை இரத்தப் பிரியரோடுங் கூட வாரிக்கொள்ளாதேயும்
8. என்னை மீட்டுக்கொள்ளும் (சங் 26:11)
9. என்மேல் இரக்கமாயிரும்

தாவீதின் சாட்சி

1. நான் உத்தமத்திலே நடக்கிறேன் (சங் 26:1)
2. நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன்
3. நான் தள்ளாடுவதில்லை

26 அதிகாரம்

4. உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது (சங் 26:3)

5. உம்முடைய சத்தியத்திலே நடக்கிறேன்

6. வீணரோடே நான் உட்காரவில்லை (சங் 26:4)

7. பொல்லாதவர்களின் கூட்டத்தைப் பகைக்கிறேன் (சங் 26:5)

8. உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தை வாஞ்சிக்கிறேன் (சங் 26:8)

9. உமது மகிமை தங்கிய ஸ்தானத்தை வாஞ்சிக்கிறேன்

10. என் கால் செம்மையான இடத்திலே நிற்கிறது (சங் 26:12)

உள்ளந்திரியங்கள் என்பது சிறுநீரகம். சிறுநீரகமும் இருதயமும் நமது நினைவுகளைக் குறிக்கும் சொற்கள்.

தாவீதின் பொருத்தனைகள்

1. வஞ்சகரிடத்தில் நான் சேருவதில்லை

2. துன்மார்க்கரோடே உட்காரேன் (சங் 26:5)

3. நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன் (சங் 26:6)

4. உம்முடைய பீடத்தைச் சுற்றி வருகிறேன்

5. நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப் பண்ணினேன் (சங் 26:7)

6. உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்

7. நான் என்னுடைய உத்தமத்திலே நடப்பேன் (சங் 26:11)

8. சபைகளிலே நான் கர்த்தரைத் துதிப்பேன் (சங் 26:12)

பீடம் - பலிபீடம். ஆபேலின் காலத்திலும் (ஆதி 4), மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்திலும் (யாத் 27:1-8) பலிபீடம் இருந்தது.

ஆலயம் - தேவாலயமல்ல. சீயோனில் இருந்த தாவீதின் ஆசரிப்புக் கூடாரம். இங்கு தேவனுடைய சாட்சிப் பெட்டி இருந்தது (2சாமு 6).

"உமது மகிமை தங்கிய ஸ்தானத்தை வாஞ்சிக்கிறேன்" - கிருபாசனத்தில் கேருபீன்களிடையே தேவன் வாசம் பண்ணுகிறார் (யாத் 25:10-22). உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் மனுஷர் மத்தியில் தேவனுடைய பிரசன்னம் இருப்பதற்கு அடையாளம் ஆகும்.

பரிதானமும், தீவினையும் துன்மார்க்கரின் இரண்டு கூரான ஆயுதங்கள்.

தீவினை (mischief) - זִמָּה - zim-maw' - 2154

பெண்பால் பெயர்ச்சொல் - முறைகேடு, அக்கிரமம், தீவினை, துர்சிந்தனை **(wicked thought or device)** (சங் 26:10; சங் 119:150; நீதி 10:23).

"நானோ என் உத்தமத்திலே நடப்பேன்" - நான் எனது ஜீவியத்தில் நீதியையும், நியாயத்தையும், இரக்கத்தையும் கடைப்பிடித்து நடப்பேன். என்னை வளப்படுத்துவதற்காக தீவினை செய்ய மாட்டேன். பரிதானம் வாங்கமாட்டேன். (சங் 26:10-11).

நீதிமானைப் போல ஜீவிப்பேன். எப்பக்கத்திலும் திரும்பிப் பார்க்க மாட்டேன்.

27 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

எட்டாவது நெருக்கத்தின் ஜெயம்

பொருளடக்கம்

1. ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பதினால் உண்டாகும் பத்து விதமான நம்பிக்கை - (27:1-3)
2. ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பதினாலும், தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பதனாலும் கிடைக்கும் எட்டு விதமான ஆசீர்வாதங்கள் - (27:4-6)
3. பத்து விண்ணப்பங்கள் - தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் ஐந்து அம்சங்கள் - (27:7-14)

1. ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பதினால் உண்டாகும் பத்து விதமான நம்பிக்கை

சங் 27:1 கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

சங் 27:2 என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள்.

சங் 27:3 எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

தாவீது தேவனிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையின் அம்சங்கள்

1. கர்த்தர் என் வெளிச்சமானவர் (சங் 27:1)
2. என் இரட்சிப்புமானவர்
3. என் நம்பிக்கை
4. என் பெலன்
5. என் ஜீவன்
6. என் நம்பிக்கை
7. சத்துருக்களிடமிருந்து என்னைப் பாதுகாப்பவர் (சங் 27:2)
8. பகைஞர்களிடமிருந்தும் பொல்லாதவர்களிடமிருந்தும் என்னைப் பாதுகாப்பவர்
9. நெருக்கங்களிலிருந்து என்னை மீட்பவர் (சங் 27:3)
10. யுத்தத்தில் எனக்கு உதவிசெய்பவர்

தீர்க்கதரிசன எண் - 20

"என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறி விழுந்தார்கள்" (சங் 27:2) - இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவில் நிறைவேறிற்று (யோவான் 18:6).

2. ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பதினாலும், தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பதனாலும் கிடைக்கும் எட்டு விதமான ஆசீர்வாதங்கள்

சங் 27:4 கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும் படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

சங் 27:5 தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

27 அதிகாரம்

சங் 27:6 இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும்; அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

தாவீதின் வாஞ்சைகள்

1. மரிக்கும் வரையிலும் தேவனுடைய ஆலயத்தில் தங்கவேண்டும்
2. கர்த்தருடைய அழகைக் காணவேண்டும்
3. கர்த்தருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டும்

ஆலயம் (temple) - הֵיכָל - hay-kawl' - 1964

பொதுபெயர்ச்சொல் - ஆலயம், அரமனை, கோவில், சந்நிதி, தேவாலயம் (palace, temple) - ஆலயம் - ஆசரிப்புக் கூடாரத்தின் ஆராதனை (1சாமு 1:9; 1சாமு 3:3; சங் 5:7; சங் 11:4; சங் 18:6; சங் 27:4; சங் 29:9; சங் 48:9; சங் 65:4; சங் 68:29; சங் 79:1; சங் 138:2). எருசலேமிலுள்ள தேவாலயம்(சங் 68:29). பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் (ஏசா 6:1; வெளி 3:12; வெளி 7:15; வெளி 11:19; வெளி 14:15,17; வெளி 15:5-8; வெளி 16:1,17). சாலொமோன் கட்டிய தேவாலயம், அல்லது எருசலேமிலுள்ள பிற்காலத்து தேவாலயம் (1இராஜா 6:3-33; 1இராஜா 7:21,50).

தீங்கு நாளில் கர்த்தர் நமக்குச் செய்யும் காரியங்கள்

1. தீங்கு நாளில் அவருடைய கூடாரத்தில் மறைப்பார்
2. அவருடைய கூடார மறைவில் வைத்துக் காப்பார்
3. என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார்
4. என் தலையை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்துவார் (சங் 27:6)

தேவனுடைய பராமரிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

3. பத்து விண்ணப்பங்கள் - தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் ஐந்து அம்சங்கள்

சங் 27:7 கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்.

சங் 27:8 என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று.

சங் 27:9 உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப் போடாதேயும்; நீரே எனக்குச் சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும்.

சங் 27:10 என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.

சங் 27:11 கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்.

27 அதிகாரம்

சங் 27:12 என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்; பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள்.

சங் 27:13 நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன்.

சங் 27:14 கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

தாவீது தேவனிடம் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. நான் கூப்பிடும்போது என் சத்தத்தைக் கேளும் (சங் 27:7)
2. எனக்கு இரங்கும்
3. எனக்கு உத்தரவு அருளிச் செய்யும்
4. உமது முகத்தை எனக்கு மறையாதேயும் (சங் 27:9)
5. கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப் போடாதேயும்
6. என்னை நெகிழவிடாதேயும்
7. என்னைக் கைவிடாமல் இரும்
8. உமது வழியை எனக்குப் போதியும் (சங் 27:11)
9. செவ்வையான பாதையில் நடத்தும்
10. என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும் (சங் 27:12)

"என் முகத்தைத் தேடுங்கள்" - வேதாகமம் எழுதப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து, தேவன் மனுஷரிடம் கூறும் காரியம் இதுதான் (உபா 4:29; உபா 12:5; 1நாளா 16:11; 2நாளா 14:4; சங் 105:4; ஏசா 55:6; செப் 2:3; மத் 6:33; கொலோ 3:1).

தேவனைத் தேடுவோருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள்

1. கர்த்தரைக் கண்டடைவாய் (உபா 4:29; 1நாளா 28:9; 2நாளா 15:2; எரே 29:13)
2. பரலோகத்திலிருக்கிற கர்த்தர், விண்ணப்பத்தைக் கேட்பார் (2நாளா 7:14)
3. பாவத்தை மன்னிப்பார் (2நாளா 7:14)
4. தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பார் (2நாளா 7:14)
5. தேவனுடைய நன்மை கிடைக்கும் (எஸ்றா 8:22)
6. கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையுங்குறைவுபடாது(சங் 34:9-10)
7. கர்த்தரைத் தேடுகிறவர்கள் இருதயம் வாழும் (சங் 69:32; ஆமோ 5:4-8)
8. கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையும் அறிவார்கள் (நீதி 28:5)
9. கர்த்தர் உங்கள்மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுவார் (ஓசி 10:12)
10. தேவனுடைய ராஜ்யமும், நீதியும் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33)
11. தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் (மத் 7:7-11)
12. தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிப்பார் (எபி 11:6)

"உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே" - தேவனிடம் நமது விண்ணப்பத்தை ஏறெடுக்கும் முன்பு இந்த வாக்கியத்தை அவரிடம் கூற வேண்டும். தேவன் இதையும் கேட்க விரும்புகிறார் (உபா 4:29; எரே 29:13)

சங்கீதம் - தொகுப்புரை

27 அதிகாரம்

தேவனிடம் வைக்க வேண்டிய நம்பிக்கையின் அம்சங்கள்

1. கர்த்தர் என் சகாயர்
2. தேவன் என் இரட்சகர்
3. கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார் (சங் 27:10)
4. கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசிக்கிறேன் (சங் 27:11)
5. கர்த்தர், என் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (சங் 27:14)

"கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்" - கர்த்தர் என்னைச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்வார். தமது மந்தையில் என்னையும் ஒரு ஆடாகச் சேர்த்து, பாதுகாத்து பராமரிப்பார். என்னைக் கைவிடவே மாட்டார்.

"செவ்வையான பாதை" - நீதி, நியாயம், சத்தியம், கிருபை, இரக்கம், அன்பு நிறைந்த பாதை. நான் வழி விலகி கீழே விழ வேண்டுமென்று எதிராளிகள் விரும்புகிறார்கள் (சங் 23:3-6).

நான் அழிய வேண்டுமென்று என் எதிராளிகள் விரும்புகிறார்கள். எனக்கு எதிராக எதிராளிகள் பொய்ச்சாட்சி சொல்லுகிறார்கள். அவர்களை ஒடுக்கும்.

நாம் கர்த்தரை விசுவாசியாவிட்டால் கேடு நமக்கு நிச்சயம்.

"ஜீவனுள்ளோர் தேசம்" **[land of the living]** - (யோபு 28:13; சங் 142:5; ஏசா 38:11; சங் 27:13; எசே 26:20; எசே 32:23-32). மரித்தோரின் தேசம் - நரகம் என்றழைக்கப்படுகிறது.

நாம் ஏன் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. வெட்கப்பட்டுப் போகாதபடி செய்வார் (சங் 25:3)
2. நீதியும் நேர்மையும் நமக்கு அளிப்பார் (சங் 25:21)
3. நம்மைப் பாதுகாப்பார் (சங் 25:21)
4. இருதயத்தை ஸ்திரப்படுத்தி, திடமனதாக்குவார் (சங் 27:14; சங் 31:24; ஏசா 40:31)
5. பஞ்சத்தில் உயிரோடே காப்பார் (சங் 33:19-20)
6. துணையும் கேடகமுமாய் இருப்பார் (சங் 33:20)
7. கிருபை அளிப்பார் (சங் 33:22)
8. பொறுமையைக் கொடுப்பார் (சங் 37:7-9)
9. பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளச் செய்வார் (சங் 37:34)
10. நம்பிக்கையாக இருப்பார் (சங் 39:7-8; சங் 130:5-6; கலா 5:5)
11. நம் கூப்பிடுதலைக் கேட்பார் (சங் 40:1-3)
12. இரட்சிப்பு வரும் (சங் 62:1; ரோமர் 8:25)
13. ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவார் (சங் 104:27-28)
14. ஆலோசனையாளர் (சங் 106:13)
15. தேவனுடைய வெளிப்பாடு (ஏசா 25:9)
16. நியாயத்தீர்ப்பு (ஏசா 26:8-9; ஏசா 30:18)
17. ஆசீர்வாதம் (ஏசா 30:18)
18. நித்தியமானவைகள் (ஏசா 64:4)
19. கர்த்தருடைய நன்மையானவைகள் (புல 3:25)

சங்கீதம் - தொகுப்புரை

27 அதிகாரம்

20. பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் (லூக்கா 24:49; அப் 1:4-8)

21. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (லூக்கா 12:36; 1கொரி 1:7; 1தெச 1:9-10; 2தெச 3:5; 1தீமோ 6:14)

கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டிய வழிமுறைகள்

1. ஜெபத்துடன் (சங் 25:4-5)
2. பொறுமையுடன் (சங் 37:7; சங் 145:15)
3. ஒருமித்த மனதுடன் (சங் 62:5)
4. எதிர்பார்ப்புடன் (சங் 62:5-6; சங் 123:2; மீகா 7:7)
5. நம்பிக்கையோடு (சங் 130:5-6)
6. அமைதியாக (புல 3:26)
7. இடைவிடாமல் (ஓசி 12:6)

கர்த்தருக்குக் காத்திருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. யாக்கோபு (ஆதி 49:18)
2. தாவீது (சங் 25:4-5,21; சங் 33:18-22)
3. ஏசாயா (ஏசா 8:17)
4. எரேமியா (எரே 14:22)
5. மீகா (மீகா 7:7)
6. சிமியோன் (லூக்கா 2:25)
7. அனைத்து சிருஷ்டிகள் (சங் 104:25-28; சங் 145:15-16)

தேவனும் மனுஷருக்குக் காத்திருக்கிறார் (ஏசா 30:18)

கர்த்தர் "திடமனதாயிரு" என்று கூறிய கட்டளைகள்

1. பத்து வேவுகாரர்கள் (எண் 13:20)
2. யோசுவா (யோசு 1:6-9,18)
3. யோசுவாவின் கீழ் இஸ்ரவேல் (உபா 31:6-7; யோசு 10:25; யோசு 23:6)
4. தாவீதின் கீழ் இஸ்ரவேல் (2சாமு 10:12; 1நாளா 19:13)
5. அப்சலோமின் சேவகர்கள் (2சாமு 13:28)
6. சாலொமோன் (1நாளா 22:13; 1நாளா 28:20)
7. எசேக்கியா (2நாளா 32:7)
8. எஸ்றாவின் கீழ் இஸ்ரவேல் (எஸ்றா 10:4)
9. அனைத்து மனிதர்கள் (சங் 27:14; சங் 31:24)
10. ஒருவருக்கொருவர் (ஏசா 41:6)

28 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்புக்காக மூன்றாவது ஜெபம்

பொருளடக்கம்

1. ஜெபத்தைக் கேட்க வேண்டுமென்று தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட இரண்டு விண்ணப்பங்கள் - (28:1-2)

2. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று நான்கு விண்ணப்பங்களும், அதற்கு பத்துவிதமான காரணங்களும் - (28:3-5)

3. கர்த்தர் கொடுத்த ஏழு ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதித்தல் - (28:6-9)

1. ஜெபத்தைக் கேட்க வேண்டுமென்று தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட இரண்டு விண்ணப்பங்கள்

சங் 28:1 என் கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் கேளாதவர்போல மவுனமாயிராதேயும்; நீர் மவுனமாயிருந்தால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாவேன்.

சங் 28:2 நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு, உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கையெடுக்கையில், என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. நீர் கேளாதவர்போல மவுனமாயிராதேயும்

2. என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும் (சங் 28:2)

குழி (pit) - בּוֹר - bore - 953

ஆ.பெ.சொ. - குழி, கிடங்கு, துரவு, கிணறு, பாதாளம், ஊற்று, குகை, கெபி, பள்ளம்

குழி - இதன் எபிரெயச் சொல்லின் பல்வேறு அர்த்தங்கள். குழி (pit) - (ஆதி 37:20-29; யாத் 21:33-34; லேவி 11:36; 1சாமு 13:6; 2சாமு 23:20; 2இராஜா 10:14; 1நாளா. 11:22; சங் 7:15; சக 9:11). குகை (dungeon) (ஆதி 40:15; ஆதி 41:14; யாத் 12:29; எரே 37:16; எரே 38:6-13). ஊற்று (cistern) (2இராஜா 18:31; நீதி 5:15; பிர 12:6; ஏசா 36:16; எரே 2:13). துரவு (well) (உபா 6:11; 1சாமு 19:22; 2சாமு 3:26; 2சாமு 23:15-16; 1நாளா 11:17-18; 2நாளா 26:10; நெகே 9:25). குழியின் ஓரத்தில் கல்லறை தோண்டப்பட்டிருக்கும் (எசே 32:23). பாவத்தின் நிலமை (சங் 40:2; ஏசா 51:1). மரணத்தின் நிலமை (சங் 28:1; சங் 30:3; சங் 88:4,6; சங் 143:7; நீதி 1:12; நீதி 28:17; ஏசா 14:15-19; ஏசா 24:22; ஏசா 38:18; எசே 26:20; எசே 31:14, 16; எசே 32:18,24-30). குழி என்னும் சொல் கல்லறையையோ (grave), நரகத்தையோ(hell) குறிக்காது.

சந்நிதி(oracle) - דְּבִיר - deb-eer' - 1687

ஆ.பெ.சொ. - சந்நிதிஸ்தானம், சந்நிதி, சந்நிதிஸ்தலம் - மகாபரிசுத்த ஸ்தலத்தில் தேவன் பேசும் இடம் (சங் 28:2; 1இராஜா 6:5,16,19-23,31; 1இராஜா 7:49; 1இராஜா 8:6-8; 2நாளா 3:16; 2நாளா 4:20; 2நாளா 5:7-9; அப் 7:38; ரோமர் 3:2; எபி 5:12; 1பேதுரு 4:11). ஆசரிப்புக் கூடாரத்திலும் மகாபரிசுத்த ஸ்தலம் உள்ளது (யாத் 26:33-34; எபி 9:3, 8).

2. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று நான்கு விண்ணப்பங்களும், அதற்கு பத்து விதமான காரணங்களும்

சங் 28:3 அயலானுக்குச் சமாதான வாழ்த்துதலைச் சொல்லியும், தங்கள் இருதயங்களில் பொல்லாப்பை வைத்திருக்கிற துன்மார்க்கரோடும் அக்கிரமக்காரரோடும் என்னை வாரிக் கொள்ளாதேயும்.

28 அதிகாரம்

சங் 28:4 அவர்களுடைய கிரியைகளுக்கும் அவர்களுடைய நடத்தைகளின் பொல்லாங்குக்கும் தக்கதாக அவர்களுக்குச் செய்யும்; அவர்கள் கைகளின் செய்கைக்குத் தக்கதாக அவர்களுக்கு அளியும், அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும்.

சங் 28:5 அவர்கள் கர்த்தருடைய செய்கைகளையும் அவர் கரத்தின் கிரியைகளையும் கவனியாதபடியால், அவர்களை இடித்துப்போடுவார், அவர்களைக்கட்டமாட்டார்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. துன்மார்க்கரோடு என்னை வாரிக் கொள்ளாதேயும் (சங் 28:3-4).

2. அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவர்களுக்குச் செய்யும்

3. அவர்கள் கைகளின் செய்கைக்குத் தக்கதாக அவர்களுக்கு அளியும் (சங் 28:4)

4. அவர்களுக்கு சரிக்குச் சரிக்கட்டும்

3. கர்த்தர் கொடுத்த ஏழு ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதித்தல்

சங் 28:6 கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்.

சங் 28:7 கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.

சங் 28:8 கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்.

சங் 28:9 தேவரீர் உமது ஜனத்தை இரட்சித்து, உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்; அவர்களைப் போஷித்து, அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

தேவனிடமிருந்து நமக்கு வரும் சகாயங்கள்

1. அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார் (சங் 28:6).

2. அவர் என் பெலனாக இருக்கிறார் (சங் 28:7,8).

3. அவர் என்னுடைய கேடகமாயிருக்கிறார் (சங் 28:7)

4. என் சகாயர்

5. என் இரட்சிப்பு (சங் 28:9).

6. அவரே என் ஆசீர்வாதம்

7. அவரே என் போஜனமும் ஆதரவும்

கர்த்தரைத் துதிக்கும் துதியின் அம்சம்

1. தேவனால் சகாயம் பெற்றேன் (சங் 28:6).

2. என் இருதயம் களிகூருகிறது (சங் 28:7).

3. என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.

அபிஷேகம் பண்ணினவர் - மேசியா (சங் 2:2; சங் 18:50)

போஷியும் - ஒரு மேய்ப்பன் தனது ஆடுகளைப் போஷிப்பதுபோல என்னைப் போஷியும். (சங் 23)

29 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

முதலாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் நான்கு கட்டளைகள் - (29:1-2)
2. கர்த்தரைத் துதிப்பதற்கு இருபது காரணங்கள் - கர்த்தருடைய சத்தத்தையும் மகாவல்லமையையும் பற்றிய விளக்கம் - (29:3-11)

1. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் நான்கு கட்டளைகள்

சங் 29:1 பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

சங் 29:2 கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்.

"பலவான்களின் புத்திரரே" - இது தேவனைக் குறிக்கும் (யோபு 1:6; யோபு 2:1; 1இராஜா 22:19; நெகே 9:6). இவர்கள் "தேவ குமாரர்" **(sons of God)** எனவும் அழைக்கப்பட்டார்கள் (ஆதி 6:2,4; யோபு 1:6; யோபு 2:1; யோபு 38:4-7). கிறிஸ்து சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கினார் **(led captivity captive)** (எபே 4:8-10). தேவதூதர்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் விதமாக இரட்சிக்கப்பட்டோர் பரலோகத்தில் இருக்கிறார்கள் (எபி 12:23).

"பரிசுத்த அலங்காரம்" - இந்த வாக்கியம் ஐந்து முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (சங் 29:2; சங் 96:9; சங் 110:3; 1நாளா 16:29; 2நாளா 20:21). விசுவாசிகள் சரீரத்திலும் ஆவியிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் (லூக்கா 1:75; ரோமர் 6:19,22; 2கொரி 7:1; எபே 4:24; 1தெச 3:13; 1தெச 4:7; எபி 12:10-14). கிறிஸ்துவில் பரிசுத்த அலங்காரத்துடனிருப்பது சாத்தியமே (1கொரி 1:30; 2கொரி 5:17-18). தேவன் பரிசுத்த மகத்துவமுள்ளவர்" **(glorious in holiness)** (யாத் 15:11). தேவன் வீற்றிருக்கும் இடம் "பரிசுத்த சிங்காசனம்" (சங் 47:8). தேவன் பரிசுத்த நகரத்தில் வாசம் பண்ணுகிறார் (வெளி 21:2,10; வெளி 22:19). கர்த்தர் பரிசுத்தர், கர்த்தர் பரிசுத்தர் என்று ஜீவன்கள் இரவும் பகலும் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது (ஏசா 6:3; வெளி 4:8). தேவன் பரிசுத்த தூதர்கள் மத்தியிலும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மத்தியிலும் வாசம் பண்ணுகிறார் (வெளி 14:10; வெளி 18:20; வெளி 22:6). தேவன் அனைத்தையும் பரிசுத்தமாகவே சிருஷ்டித்தார். நரகத்தில் தள்ளப்பட்ட கலகக்காரரைத் தவிர, மற்ற அனைவரும் நித்திய காலமாக பரிசுத்தமாகவே இருப்பார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பரிசுத்தமான காரியங்கள்

1. பூமி (யாத் 3:5)
2. தேசம் (யாத் 19:6)
3. பரிசுத்த ஓய்வுநாள் (யாத் 16:23)
4. மனுஷர் (யாத் 22:31)
5. ஸ்தலம் (யாத் 26:33)
6. வஸ்திரங்கள் (யாத் 28:22)
7. காணிக்கைகள் (யாத் 28:38)
8. சபை (யாத் 12:16)
9. பொருட்கள் (யாத் 28:38)
10. கிரீடம் (யாத் 29:6)
11. அபிஷேக தைலம் (யாத் 30:25)
12. பலிபீடம் (யாத் 29:37)

சங்கீதம் - தொகுப்புரை

29 அதிகாரம்

13. நாள் (யாத் 35:2)

14. வழிபடுபவர்கள் (யாத் 29:37)

15. தகனபலி (லேவி 2:3)

16. ஆட்டுக்கடா (லேவி 16:4)

17. ஆசாரிப்புக்கூடாரம் (லேவி 16:33)

18. கர்த்தர் (லேவி 19:2)

19. கனி (லேவி 19:24)

20. கர்த்தருடைய பரிசுத்த நாமம் (லேவி 20:3)

21. ஆசாரியர் (லேவி 21:6)

22. பண்டிகைகள் (லேவி 23:2)

23. முதற்கனி (லேவி 23:20)

24. வருஷம் (லேவி 25:12)

25. மிருகஜீவன் (லேவி 29:9)

26. வீடு (லேவி 27:14)

27. வயல் (லேவி 27:16)

28. நேர்ந்துகொள்ளப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றும் (லேவி 27:28)

29. தசமபாகம் (லேவி 27:30)

30. ஜலம் (எண் 5:17)

31. தட்டுமுட்டுகள் (எண் 31:6)

32. பணிமுட்டுகள் (1இராஜா 8:4)

33. உடன்படிக்கைப் பெட்டி (2நாளா35:3)

34. பட்டணம் (நெகே 11:18)

35. மலை (சங் 2:6)

36. ஆலயம் (சங் 5:7)

37. வானம் (சங் 20:6)

38. சந்நிதி (சங் 28:2)

39. ஆவி (சங் 51:11)

40. பர்வதம் (சங் 87:1 சங் 5:7 ஏசா 11:9)

41. புயம் (சங் 98:1)

42. வாசஸ்தலம் (சங் 68:5)

43. வாக்குத்தத்தம் (சங் 105:42)

44. கிரியை (சங் 145:17)

45. எருசலேம் (ஏசா 4:3)

46. வித்து (ஏசா 6:13)

47. மந்தை (எசே 36:38)

48. அறைவீடு (எசே 42:13)

49. உடன்படிக்கை (தானி 11:28-30)

50. தேவர்கள் (தானி 4:8-9)

51. மாம்சம் (ஆகாய் 2:12)

52. தேசம் (சக 2:12)

53. தூதர்கள் (மத் 25:31)

54. தீர்க்கதரிசிகள் (லூக்கா 1:70; அப் 3:21)

55. இயேசு (அப் 4:27)

56. நியாயப்பிரமாணம் (ரோமர் 7:12)

57. கற்பனை (ரோமர் 7:12; 2பேதுரு 2:21)

58. பிசைந்தமா (ரோமர் 11:16)

59. வேர் (ரோமர் 11:16)

60. முதற்பலன் (ரோமர் 11:16)

61. கிளைகள் (ரோமர் 11:16)

62. பலி (ரோமர் 21:12)

63. முத்தம் (ரோமர் 16:16)

64. சரீரம் (1கொரி 3:17)

65. பிள்ளைகள் (1கொரி 7:14)

29 அதிகாரம்

66. சரீரமும், ஆவியும் (1கொரி 7:34)
67. பரிசுத்தவான்கள் (எபே 1:14; கொலோ 1:22; கொலோ 3:12)
68. அப்போஸ்தலர் (எபே 3:5; வெளி 18:20)
69. சபை (எபே 5:27)
70. சகோதரர் (1தெச 5:27)
71. கைகள் (1தீமோ 2:8)
72. வேதவாக்கியங்கள் (1தீமோ 3:15)
73. அழைப்பு (2தீமோ 1:9)
74. கண்காணி (தீத்து 1:8)
75. ஸ்திரீகள் (1பேதுரு 3:5)
76. கிறிஸ்து (எபி 7:26)
77. ஆசாரியத்துவம் (1பேதுரு 2:5)
78. ஜாதி (1பேதுரு 2:9)
79. பேச்சு (2பேதுரு 3:11)
80. விசுவாசம் (யூதா 1:20)

2. கர்த்தரைத் துதிப்பதற்கு இருபது காரணங்கள் - கர்த்தருடைய சத்தத்தையும் மகா வல்லமையையும் பற்றிய விளக்கம்

சங் 29:3 கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின்மேல் தொனிக்கிறது; மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்; கர்த்தர் திரளான தண்ணீர்களின் மேல் இருக்கிறார்.

சங் 29:4 கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது; கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது

சங் 29:5 கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது; கர்த்தர் லீபனோனின் கேதுருமரங்களை முறிக்கிறார்.

சங் 29:6 அவைகளைக் கன்றுக் குட்டிகளைப் போலவும், லீபனோனையும் சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப் போலவும் துள்ளப் பண்ணுகிறார்.

சங் 29:7 கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும்.

சங் 29:8 கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும்; கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை அதிரப் பண்ணுகிறார்.

சங் 29:9 கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்; அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.

சங் 29:10 கர்த்தர் ஜலப்பிரவாகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார்; கர்த்தர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார்.

சங் 29:11 கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

"கர்த்தருடைய சத்தம்" என்னும் வாக்கியம் இந்த சங்கீதத்தில் ஏழுதடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.(சங்29:3,4,5,7,8,9) வேதாகமத்தில் மொத்தம் 522 தடவைகள் இந்த வாக்கியம் வந்துள்ளது. ஏதேன் தோட்டத்தில் முதல் முதலாக கர்த்தருடைய சத்தத்தைப்பற்றி வாசிக்கிறோம். உலகில் பல்வேறு விதமான சத்தங்கள் உள்ளதாக பவுல் கூறுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் "சத்தம்" என்ற சொல்லின் பயன்பாடுகள்

1. கர்த்தருடைய சத்தம் (ஆதி 3:8-10; சங் 29; வெளி 10:3-4). மனுஷருக்கு கர்த்தருடைய சத்தம் தெளிவாகக் கேட்டது (ஆதி 3:8-10; யாத் 19:19; உபா 4:12; 1இராஜா 19:12-13; ஏசா 6:4-8; எசே 1:24-28; எசே 8:18; எசே 9:1; எசே 10:5; எசே 43:2; தானி 10:6-9; மத் 3:17; மத் 17:5; யோவான் 12:28; அப் 10:13; வெளி 1:10-18; வெளி 10:3-8)

சங்கீதம் - தொகுப்புரை

29 அதிகாரம்

2. உன் மனைவியின் வார்த்தை (ஆதி 3:17)

3. உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் (ஆதி 4:10)

4. எக்காள சத்தம் (யாத் 19:19)

5. ஜெயதொனியின் சத்தம் (யாத் 32:18)

6. அபஜெயதொனியாகிய சத்தம் (யாத் 32:18)

7. ஆணையின் சத்தம் (லேவி 5:1)

8. இஸ்ரவேலின் சத்தம் (எண் 21:3)

9. தகப்பன் சொல் (உபா 21:18)

10. தாயின் சொல் (உபா 21:18)

11. யூதாவின் சத்தம் (உபா 33:7)

12. மனிதனுடைய சொல் (யோசு 10:14)

13. ஒடுக்குகிறவனுடைய சத்தம் (யோபு 3:18)

14. சிங்கத்தின் கெர்ச்சிப்பு (யோபு 4:10)

15. அழுகிறவர்களின் ஓலம் (யோபு 30:31)

16. களிப்பும் துதியுமான சத்தம் (சங் 42:4)

17. தூஷிக்கிறவனுடைய சத்தம் (சங் 44:16)

18. கெம்பீரசத்தம் (சங் 47:1)

19. சத்துருவினுடைய கூக்குரல் (சங் 55:3)

20. பாம்பாட்டிகள் ஊதும் சத்தம் (சங் 58:5)

21. ஜெபத்தின் சத்தம் (சங் 66:19)

22. கீதசத்தம் (சங் 98:5)

23. பெருமூச்சின் சத்தம் (சங் 102:5)

24. வார்த்தையின் சத்தம் (சங் 103:20)

25. குமுறலின் சத்தம் (சங் 104:7)

26. இரட்சிப்பின் கெம்பீரசத்தம் (சங் 118:15)

27. போதகரின் சொல் (நீதி 5:13)

28. குருவியின் சத்தம் (பிர 12:4)

29. காட்டுப்புறாவின் சத்தம் (உன் 2:12)

30. கூக்குரலின் சத்தம் (ஏசா 65:19)

31. பிள்ளை பெறுகிற குமாரத்தியின் சத்தம் (எரே 4:31)

32. களிப்பின் சத்தம் (எரே 7:34)

33. மகிழ்ச்சியின் சத்தம் (எரே 7:34)

34. மணவாளனின் சத்தம் (எரே 7:34)

35. மணவாட்டியின் சத்தம் (எரே 7:34)

36. கர்த்தருடைய நாளின் சத்தம் (செப் 1:14)

37. தீர்க்கதரிசிகளின் சத்தம் (அப் 13:27)

38. பிரதான தூதனுடைய சத்தம் (1தெச 4:16)

39. தூதர்களுடைய சத்தம் (வெளி 5:11)

40. பெரு வெள்ளத்து இரைச்சலைப் போன்ற சத்தம் (வெளி 1:15; வெளி 14:2; வெளி 19:6)

41. பலத்த இடிமுழக்கம் (வெளி 14:2; வெளி 19:6; வெளி 10:3-4)

42. சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசை (வெளி 14:2)

43. பாடகர்களின் சத்தம் (வெளி 14:2)

44. திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரம் (வெளி 19:1)

45. திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் (வெளி 19:6)

சங்கீதம் - தொகுப்புரை

29 அதிகாரம்

தேவனுடைய சப்தத்தைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் காட்டானவர்கள்

1. ஆதாம் (ஆதி 3:8-10)
2. ஆபிரகாம் (ஆதி 18; ஆதி 22:18; ஆதி 26:5)
3. மோசே (யாத் 3; அப் 7:31)
4. இஸ்ரவேல் (யாத் 19:19; உபா 4:12,33,36; (உபா 5:23-28)
5. எலியா (1இராஜா 19:12-13)
6. ஏசாயா (ஏசா 6:4-6)
7. எசேக்கியேல் (எசே 1:24; எசே 8:18; எசே 9:1; எசே 10:5; எசே 43:2)
8. தானியேல் (தானி 10:6-9)
9. பேதுரு (அப் 10:13; 2பேதுரு 1:17-18)
10. யாக்கோபு (மத் 17:5)
11. யோவான் (வெளி 1:10-12; வெளி 4:1; வெளி 10:3-8; வெளி 21:3)
12. பவுல் (அப் 9:3-7)

மனுஷருடைய சத்தத்தைத் தேவன் கேட்டதற்கு எடுத்துக்காட்டுகள்

1. இஸ்மவேல் (ஒரு பிள்ளையின் சத்தத்தையே தேவன் முதன்முதலாகக் கேட்டார்) (ஆதி 21:17)
2. இஸ்ரவேல் (எண் 20:16; எண் 21:3; உபா 26:7)
3. யோசுவா (யோசு 10:14)
4. மனோவா (நியா 13:9)
5. எலியா (1இராஜா 17:22)
6. யோனா (யோனா 2:2)
7. இயேசு (யோவான் 12:28)

"தண்ணீர்" என்னும் சொல்லின் உருவக பயன்பாடுகள்

1. நிலையின்மை அல்லது இருமனம் (ஆதி 49:4)
2. கிறிஸ்துவில் ஆவிக்குரிய வாழ்க்கை (யாத் 17:6; 1கொரி 10:4; வெளி 22:17)
3. பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல் (எண் 8:7; எண் 31:23; எசே 36:25)
4. பாவத்திலிருந்து விடுபடல் (எண் 19:7-21; எண் 31:23)
5. ஆவிக்குரிய வளர்ச்சி (சங் 1:3)
6. இரட்சிப்பு (ஏசா 12:3; யோவான் 4:7-14)
7. தேவனுடைய வார்த்தை (யோவான் 3:5; யோவான் 15:3; எபே 5:26; யாக் 1:18; 1பேதுரு 1:23)
8. ஆவியானவரின் அபிஷேகம் அல்லது உன்னதத்திலிருந்து வரும் பெலன் (லூக்கா 24:49; யோவான் 7:37-39; அப் 1:4-8; அப் 2:16-21,38-39)
9. தண்ணீர் ஞானஸ்நானம். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் அடையாளம் (1பேதுரு 3:21)
10. சேனைகள் (வெளி 12:15; எரே 47:2)
11. அனுதின பராமரிப்பு (சங் 23:2)
12. தொல்லைகள் (சங் 69:1-2,14; சங் 124:5; ஏசா 48:1)
13. பாவம் (நீதி 9:17)
14. மனுஷத்துவம் (பிர 11:1; வெளி 17:1,15)
15. தேவன் (எரே 2:13; எரே 17:13)

"கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது" - இடியின் ஓசையைப் போன்றது சங் (29:3-9). தேவனுடைய சப்தத்தோடு இடியின் ஓசையும் சேர்ந்து ஒலிக்கும் (சங் 29:3; சங் 77:18; சங் 104:7; யோபு 37:4-5; யோபு 40:9; யோவான் 12:29; வெளி 4:5; வெளி 8:5; வெளி 10:3-4; வெளி 16:18).

சங்கீதம் - தொகுப்புரை

29 அதிகாரம்

சீரியோன் (Sirion) - எர்மோன் மலை. லெபனானின் கிழக்கு மலைப் பகுதியின் சிகரம் (உபா 3:9).

காண்டாமிருகம் - காட்டுமிருகம் (யோபு 39:9)

அக்கினி ஜுவாலைகள் - மின்னல்கள்

காதேஸ் (Kadesh) - நப்தலியிலுள்ள காதேஸ். லெபனானிற்கு அருகிலுள்ளது (சங் 29:6). இது காதேஸ் பர்னேயாவைக் குறிக்காது (எண் 32:8).

பயத்தில் பெண்மான்கள் குட்டிகளை ஈனும்.

மரங்கள் பட்டுப் போகும்

பரலோகத்திலுள்ள தேவாலயத்தில் உள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.

ஜலப்பிரவாகம் - (ஆதி 6:17; ஆதி 7:7-17; ஆதி 9:11,15,28; ஆதி 10:1,32; ஆதி 11:10)

30 அதிகாரம்

(கிரகப்பிரதிஷ்டையின் பாட்டாகிய தாவீதின் சங்கீதம்.)

துதித்து ஜெபிக்கும் மூன்றாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிப்பதற்கு ஐந்துவிதமான தனிப்பட்ட காரணங்கள் - (30:1-3)
2. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு கட்டளைகளும், அவரைத் துதிப்பதற்கான இரண்டு காரணங்களும் - (30:4-5)
3. ஜெபம் - ஆசீர்வாதத்தில் நம்பிக்கையும் துன்பத்தில் கலக்கமும் - (30:6-9)
4. ஜெபம் - இரண்டு விண்ணப்பங்களும் மூன்றுவிதமான பதில்களும் - (30:10-11)
5. எல்லா ஜெபங்களுக்கும் பிரதான முடிவு - (30:12)

1. கர்த்தரைத் துதிப்பதற்கு ஐந்து விதமான தனிப்பட்ட காரணங்கள்

சங் 30:1 கர்த்தாவே, என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழ வொட்டாமல், நீர் என்னை கைதூக்கி எடுத்தபடியினால், நான் உம்மைப் போற்றுவேன்.

சங் 30:2 என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்.

சங் 30:3 கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்.

கர்த்தர் தாவீதிற்கு அருளிய ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர் என்னை கைதூக்கி எடுத்தார் (சங் 30:1).
2. என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல் காப்பார்
3. தேவன், என்னை குணமாக்கினார் (சங் 30:2; சங் 103:3)
4. பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணினார் (சங் 30:3)
5. என்னை உயிரோடே காத்தார்
6. கர்த்தரின் தயவு எனக்கு நீடிய வாழ்வு (சங் 30:5).
7. சாயங்காலத்தில் அழுகை தங்கும். விடியற்காலத்திலே களிப்புண்டாகும்
8. தேவன் என்னைப் பராமரிக்கிறார். நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை (சங் 30:6; சங் 1:3-4).
9. சீயோன் பர்வதத்தைப்போல் பாதுகாப்பாக நிலைத்திருப்பேன் (சங் 125:1
10. கர்த்தர், எனக்கு சகாயரும், பெலனுமாயிருப்பார் (சங் 30:7)
11. கர்த்தர், என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினார் (சங் 30:11).
12. என் இரட்டைக் களைந்து போட்டு மகிழ்ச்சியென்னும் கட்டினால் இடை கட்டினார்

பாதாளம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

குழி (pit) - בּוֹר - bore - 953

ஆ.பெ.சொ. - குழி, கிடங்கு, துரவு, கிணறு, பாதாளம், ஊற்று, குகை, கெபி, பள்ளம்

30 அதிகாரம்

2. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு கட்டளைகளும், அவரைத் துதிப்பதற்கான இரண்டு காரணங்களும்

சங் 30:4 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவு கூருதலைக் கொண்டாடுங்கள்.

சங் 30:5 அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.

கர்த்தருடைய கோபம்

1. கர்த்தருடைய கோபத்தை மூட்டலாம். **(It can be kindled)** (யாத் 4:14; எண் 11:10; எண் 12:9 கர்த்தருக்கு கோபம் உண்டாக்கலாம். **(provoke)** (உபா 4:25; உபா 9:18)
2. கோபம் பற்றி எரியும் (யாத் 32:22; உபா 29:24).
3. உக்கிரமான கோபமாயிருக்கும் (எண் 25:4)
4. கர்த்தர் என்றைக்கும் கோபம் கொண்டிரார் (சங் 103:8; சங் 145:8)
5. அவருடைய கோபம் ஒரு நிமிஷம் (சங் 30:5; சங் 103:9)

தேவனுடைய கோபம் இவர்களுக்கு எதிராக இருந்தது, இருக்கிறது

1. மோசே (யாத் 4:14; உபா 1:37; உபா 4:21)
2. இஸ்ரவேல் (உபா 9:8; 2இராஜா 17:18)
3. ஆரோன் (உபா 9:20)
4. சாலொமோன் (1இராஜா 11:9)
5. உசியா (2சாமு 6:7)
6. பாவி (சங் 7:11)

3. ஜெபம் - ஆசீர்வாதத்தில் நம்பிக்கையும் துன்பத்தில் கலக்கமும்

சங் 30:6 நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையென்று, என் வாழ்விலே சொன்னேன்.

சங் 30:7 கர்த்தாவே, உம்முடைய தயவினால் நீர் என் பர்வதத்தைத் திடமாய் நிற்கப்பண்ணியிருந்தீர்; உமது முகத்தை நீர் மறைத்துக் கொண்டபோதோ நான் கலங்கினவனானேன்.

சங் 30:8 நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ?

சங் 30:9 கர்த்தாவே, நீர் எனக்குச் செவி கொடுத்து என்மேல் இரக்கமாயிரும்; கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும் என்று சொல்லி;

சேற்றுப்பள்ளம் (pit) - שַׁחַת - shakh'-ath - 7845

பெ.பெ.சொ. - சேற்றுப்பள்ளம், அழிவு, படுகுழி, பாதாளம் - அழிவின் குழி **(destruction)** (சங் 55:23; சங் 103:4) அழிவு **(corruption)** (சங் 16:10; சங் 49:9; யோபு 17:14)

4. ஜெபம் - இரண்டு விண்ணப்பங்களும் மூன்று விதமான பதில்களும்

சங் 30:10 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்.

சங்கீதம் - தொகுப்புரை

30 அதிகாரம்

சங் 30:11 என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. கர்த்தாவே எனக்குச் செவிகொடும்
2. என்மேல் இரக்கமாயிரும்
3. எனக்குச் சகாயராயிரும்

தேவன் மனுஷனிடம் வெளிப்படுத்தி இருக்கிற தமது சுபாவங்கள்

1. கைதூக்கி எடுக்கிறவர் (சங் 30:1)
2. குணமாக்குபவர் (சங் 30:2)
3. காப்பாளர் (சங் 30:3)
4. பரிசுத்தர் (சங் 30:4)
5. தேற்றரவாளர் (சங் 30:5)
6. கொடுப்பவர் (சங் 30:6)
7. பாதுகாப்பவர் (சங் 30:7)
8. சகாயர் (சங் 30:11)

"நீர் என் இரட்டைக்களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்" - கர்த்தர் தாவீதின் ஜெபத்தைக் கேட்டார். அவனுடைய துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார்.

5. **எல்லா ஜெபங்களுக்கும் பிரதான முடிவு** - (யோவான் 14:13; வெளி 4:11)

சங் 30:12 என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்.

"என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன்" - (சங் 16:9, அப் 2:26)

மனுஷனுடைய பல்வேறு சுபாவங்கள்

1. சத்துருக்கள் மேற்கொள்ளும்போது துன்பம் (சங் 30:1)
2. சத்துருக்களிடமிருந்து விடுவித்ததினால் கர்த்தருக்கு ஆராதனை (சங் 30:1,4,12)
3. சொஸ்தமாக்கப்படுவதற்கு முன்பாக வியாதியும் வேதனையும் (சங் 30:2-3)
4. சுகமாதலும் ஆரோக்கியமும் (சங் 30:2-3)
5. தேவனுடைய பரிசுத்தத்தையும் கிருபையையும் நினைவுகூருதல் (சங் 30:4-7)
6. வருத்தமும் அழுகையும் (சங் 30:5)
7. இரட்சிப்பில் களிப்பு
8. பராமரிப்பும் பாதுகாப்பும் (சங் 30:6)
9. பலமும் விசுவாசமும் (சங் 30:7)
10. கலக்கமும் வேதனையும்
11. விரக்தியும் ஜெபமும் (சங் 30:8-11)
12. பயமும் பிரதிபலிப்பும் (சங் 30:9)
13. புலம்பல் ஆனந்தக்களிப்பாக மாறுதல் (சங் 30:11)
14. தேவனுடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் அவரை என்றென்றைக்கும் துதிப்பது (சங் 30:12)

31 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

ஒன்பதாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. எட்டு விண்ணப்பங்கள் - ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதற்கு எட்டு இரகசியங்கள் - ஜெபிப்போருக்கு கிடைக்கும் பதினாறு ஆசீர்வாதங்கள் - (31:1-8)

2. தாவீது ராஜாவின் பதினைந்து விதமான துன்பங்கள் - (31:9-13)

3. எட்டு விண்ணப்பங்கள் - பதில் கிடைப்பதற்கு எட்டு காரணங்கள் - (31:14-18)

4. ஜெபிப்போருக்கு கிடைக்கும் ஒன்பது பெரிய ஆசீர்வாதங்கள் - இதற்காகக் கர்த்தரைத் துதித்தல் - (31:19-24)

1. எட்டு விண்ணப்பங்கள் - ஜெபத்திற்குப்பதில் கிடைப்பதற்கு எட்டு இரகசியங்கள் - ஜெபிப்போருக்கு கிடைக்கும் பதினாறு ஆசீர்வாதங்கள்

சங் 31:1 கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும்; உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும்.

சங் 31:2 உமது செவியை எனக்குச் சாய்த்து, சீக்கிரமாய் என்னைத் தப்புவியும்; நீர் எனக்குப் பலத்த துருகமும், எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும்.

சங் 31:3 என் கன்மலையும் என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்.

சங் 31:4 அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கி விடும்; தேவரீரே எனக்கு அரண்.

சங் 31:5 உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக் கொண்டீர்.

சங் 31:6 வீண்மாயைகளைப் பற்றிக் கொள்ளுகிறவர்களை நான் வெறுத்து, கர்த்தரையே நம்பியிருக்கிறேன்.

சங் 31:7 உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன்; நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்துமவியாகுலங்களை அறிந்திருக்கிறீர்.

சங் 31:8 சத்துருவின் கையில் என்னை ஒப்புக்கொடாமல், என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினீர்.

தாவீதின் நம்பிக்கை

1. உம்மை நம்பியிருக்கிறேன் (சங் 31:1,6).
2. நீர், என் கன்மலை (சங் 31:3).
3. நீரே என் கோட்டை
4. தேவரீரே எனக்கு அரண் (சங் 31:4).
5. உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (சங் 31:5).
6. சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்
7. உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன் (சங் 31:7).
8. நீர் என் உபத்திரவத்தைப் பார்த்திருக்கிறீர்.
9. என் ஆத்துமவியாகுலங்களை அறிந்திருக்கிறீர்.
10. சத்துருவின் கையில் என்னை ஒப்புக் கொடுக்கமாட்டீர் (சங் 31:8).
11. என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினீர்
12. நான் நெருக்கப்படுகிறேன் (சங் 31:9).
13. துக்கத்தினால் என் கண் கருகிப் போயிற்று.
14. என் ஆத்துமாவும், என் வயிறுங்கூடக் கருகிப்போயிற்று.

சங்கீதம் - தொகுப்புரை

31 அதிகாரம்

15. என் பிராணன் சஞ்சலத்தினால் கழிந்து போயிற்று (சங் 31:10).

16. என் அக்கிரமத்தினாலே என்பெலன் குறைந்தது

17. என் சத்துருக்களாகிய யாவர் நிமித்தமும், நான் என் அயலாருக்கு நிந்தையுமானேன் (சங் 31:11).

18. எனக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானேன்.

19. வீதியிலே என்னைக் கண்டவர்கள் எனக்கு விலகி ஓடிப்போனார்கள்.

20. செத்தவனைப் போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன் (சங் 31:12).

21. உடைந்த பாத்திரத்தைப்போலானேன்.

22. அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன் (சங் 31:13).

23. திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது

24. அநேகர் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்

25. நானோ, கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன் (சங் 31:14).

26. நீரே என் தேவன் என்று சொன்னேன்.

27. என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது (சங் 31:15).

28. கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன் (சங் 31:17).

29. உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது. (சங் 31:19).

30. உம்மை நம்புகிறவர்களுக்கு, நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற நன்மை பெரியது. (சங் 31:20).

31. உமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறீர் (சங் 31:20).

32. மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைக்கிறீர்

33. கர்த்தர், அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப் பண்ணினார் (சங் 31:21).

34. உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நினைத்தேன் (சங் 31:22).

35. என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டீர்

36. பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் கர்த்தரில் அன்பு கூருங்கள். உண்மையானவனைக் கர்த்தர் தற்காப்பார் (சங் 31:23).

37. நீங்களெல்லாரும் திடமாயிருங்கள்

38. கர்த்தர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (சங் 31:24).

தாவீதின் விண்ணப்பங்கள்

1. நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும் (சங் 31:1).
2. உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும்
3. உமது செவியை எனக்குச் சாயும் (சங் 31:2).
4. சீக்கிரமாய் என்னைத் தப்புவியும்
5. நீர், எனக்குப் பலத்த துருகமாயிரும்
6. எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும்
7. உமது நாமத்தினிமித்தம் என்னை நடத்தியருளும் (சங் 31:3).
8. உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டும்
9. துன்மார்க்கர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கி விடும் (சங் 31:4).
10. எனக்கு இரங்கும் கர்த்தாவே (சங் 31:9).

31 அதிகாரம்

11. என் சத்துருக்களின் கைக்கு என்னைத் தப்புவியும் (சங் 31:15).

12. என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கு என்னைத் தப்புவியும்

13. உமது முகத்தை என்மேல் பிரகாசிக்கப் பண்ணும் (சங் 31:16).

14. உமது கிருபையினாலே என்னை இரட்சியும்

15. நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும் (சங் 31:17).

16. துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் போகும்படிச் செய்யும்

17. துன்மார்க்கர் பாதாளத்தில் மவுனமாயிருக்கப்பண்ணும்

18. பொய் உதடுகள் கட்டப்பட்டுப் போகும்படி செய்யும் (சங் 31:18)

கற்பாறை (rock) - צוּר - tsoor, tsoor - 6697

வினைச்சொல் - கன்மலை, கருங்கல், கற்பாறை, அசூரிம், கருக்கு, ரூபம், கற்கள், துருகம் **(a sharp rock, a cliff)** - பாறை - மனுஷருக்கு கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார்

1. தேவன் தமது ஜனத்திற்கு அடைக்கலமும் அஸ்திபாரமுமானவர் (உபா 32:4,30,31; 2சாமு 22:3, 32, 47; 2சாமு 23:3; சங் 18:31, 46; சங் 28:1; சங் 31:2; சங் 61:2; சங் 62:2, 7; சங் 78:35; சங் 89:26; சங் 92:15; சங் 94:22; சங் 95:1; ஏசா 17:10).

2. கிறிஸ்து ஞானக் கன்மலையும் சபையின் அஸ்திபாரமுமாயிருக்கிறார் (யாத் 17:6; உபா 8:15; உபா 32:13,15,18; சங் 78:20; சங் 105:41; சங் 114:8; 1கொரி 3:11; 1கொரி 10:4)

கன்மலை (rock) - 1ץ סֶלַע - seh'-lah - 5553

ஆ.பெ.சொ. - கன்மலை, கற்பாறை, சேலா, பாறை, மேடு, கல்

"உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" - லூக்கா 23:46-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

"வீண்மாயைகள்" இவை விக்கிரகங்களைக் குறிக்கும். தாங்களே உண்மையான தெய்வம் என்று இவை ஜனங்களை வஞ்சிக்கும் (உபா 32:21; 1இராஜா 16:13, 26; எரே 8:19; எரே 10:8; எரே 14:22; யோவான் 2:8; அப் 14:15).

நாம் வாழ்ந்திருக்கும் போதும் நாம் தாழ்ந்திருக்கும்போதும் தேவன் நமது பட்சத்திலிருக்கிறார். நம்முடைய எல்லா சூழ்நிலைகளிலும் அவர் நம்மை அறிவார்.

தேவன் தாவீதை அவனுடைய விரோதிகளின் கைகளில் ஒப்புக்கொடுக்கவில்லை

"விசாலம்" - தாவீதின் தாபர ஸ்தலம் விஸ்தாரமாகிறது (1சாமு 22). யூதாவின் மனுஷரும் (2சாமு 2). பின்பு இஸ்ரவேலர் அனைவரும் (2சாமு 5) தாவீதை இராஜாவாக ஏற்றுக் கொண்டனர்.

2. தாவீது ராஜாவின் பதிஷனைந்து விதமான துன்பங்கள்

சங் 31:9 எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன்; துக்கத்தினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடக் கருகிப்போயிற்று.

சங் 31:10 என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று; என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்து போயிற்று.

சங் 31:11 என் சத்துருக்களாகிய யாவர் நிமித்தமும், நான் என் அயலாருக்கு நிந்தையும், எனக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானேன்; வீதியிலே என்னைக் கண்டவர்கள் எனக்கு விலகி ஓடிப்போனார்கள்.

31 அதிகாரம்

சங் 31:12 செத்தவனைப்போல எல்லாராலும் முழுவதும் மறக்கப்பட்டேன்; உடைந்த பாத்திரத்தைப்போலானேன்.

சங் 31:13 அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன்; எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனை பண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்துகொண்டது; என் பிராணனை வாங்கத்தேடுகிறார்கள்;

தாவீது நெருக்கப்பட்ட சமயங்கள்

1. தாவீது சவுலோடு தங்கி இருந்த சமயம் சவுல் தாவீதை 21 தடவைகள் கொலை பண்ண முயற்சி பண்ணினான் (1சாமு 18:1-26:25).
2. சத்துருக்கள் நடுவே தங்குதல் (1சாமு 27:1-30:31)
3. யுத்தங்கள் (2சாமு 5:1-10:19)
4. பின்மாற்றம் (2சாமு 11:1-12:31)
5. குடும்பப் பிரச்சனைகள் (2சாமு 13-14)
6. அப்சலோமின் கலகம் (2சாமு 15-20)
7. தாவீதின் மற்ற பிரச்சனைகள் (2சாமு 21; 2சாமு 24)

"என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடக் கருகிப்போயிற்று" - இது தாவீதின் தாங்கமுடியாத, விவரிக்க முடியாத துயரத்தைக் குறிப்பிடுகிறது (சங் 31:9-13).

3. எட்டு விண்ணப்பங்கள் - பதில் கிடைப்பதற்கு எட்டு காரணங்கள்

சங் 31:14 நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன்.

சங் 31:15 என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்ருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.

சங் 31:16 நீர் உமது முகத்தை உமது ஊழியக்காரன் மேல் பிரகாசிக்கப்பண்ணி, உமது கிருபையினாலே என்னை இரட்சியும்.

சங் 31:17 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்; துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் மவுனமாயிருக்கட்டும்.

சங் 31:18 நீதிமானுக்கு விரோதமாய்ப் பெருமையோடும் இகழ்ச்சியோடும் கடினமாய்ப் பேசுகிற பொய் உதடுகள் கட்டப்பட்டுப்போவதாக.

கர்த்தரின் குணங்கள்

1. கர்த்தர் பலத்த துருகம்; கன்மலையுமானவர் (சங் 31:2-3)
2. அடைக்கலமான அரண் (சங் 31:2)
3. கோட்டை (சங் 31:3)
4. கர்த்தர் சத்தியபரர் (சங் 31:5)
5. கர்த்தர் (சங் 31:1, 9, 14, 17, 21)

"என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது" (2தீமோ 1:12). பவுலைப் போன்று நாமும் நம்மை கர்த்தரிடத்தில் பூரணமாக ஒப்புக் கொடுத்து ஜீவிக்க வேண்டும்.

பாதாளம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

4. ஜெபிப்போருக்கு கிடைக்கும் ஒன்பது பெரிய ஆசீர்வாதங்கள் - இதற்காகக் கர்த்தரைத் துதித்தல்

சங் 31:19 உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

31 அதிகாரம்

சங் 31:20 மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்.

சங் 31:21 கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணின படியால், அவருக்கு ஸ்தோத்திரம்.

சங் 31:22 உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன்; ஆனாலும் நான் உம்மைநோக்கிக் கூப்பிட்டபோது, என் விண்ணப்பங் களின் சத்தத்தைக் கேட்டீர்.

சங் 31:23 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள்; உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்புசெய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார்.

சங் 31:24 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்க ளெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. (1கொரி 2:9).

மறைத்துவை (hide) - סָתַר - saw-thar' - 5641

வினைச்சொல் - மறைந்துகொள், மறைக்கப்படு, ஒளிந்திரு, ஒளித்துவை, காணக்கூடாதிரு, மறைவாயிரு, மூடிக்கொண்டிரு, ஒளித்து வை, மறைத்தருளு, மறைத்துக்கொண்டிரு **(to hide by covering; conceal)** *(சங் 31:20; சங் 10:11; சங் 13:1; சங் 17:8; சங் 27:5, 9; சங் 30:7; சங் 51:9; சங் 64:2).*

வினைச்சொல் - மறைந்துகொள், மறைக்கப்படு, ஒளிந்திரு, ஒளித்துவை, காணக்கூடாதிரு, மறைவாயிரு, மூடிக்கொண்டிரு, ஒளித்து வை, மறைத்தருளு, மறைத்துக்கொண்டிரு **(to hide by covering; conceal)** *(சங் 31:20; சங் 10:11; சங் 13:1; சங் 17:8; சங் 27:5, 9; சங் 30:7; சங் 51:9; சங் 64:2).*

மறைவு (secret) - סֵתֶר - say'-yher, sith-raw' - 5643

ஆண்பால் பெயர்ச்சொல் - இரகசியம், ஒளிப்பிடம், மறைவான இடம், மறைவு, அந்தரங்கம், புறங்கூறுதல், புகலிடம் **(a covering; hiding place; secret place; protection)** *(சங் 31:20; சங் 18:11; சங் 27:5; சங் 32:7; சங் 81:7; சங் 91:1; சங் 139:15; நீதி 9:17; நீதி 21:14; உன் 2:14; ஏசா 45:19; ஏசா 48:16).*

சமுகம் (presence) - פָּנִים - paw-neem' - 6440

ஆண்பால் பெயர்ச்சொல் - சமுகம், முகம், பிரசன்னம் **(face; countenance; presence)** *(சங் 31:20; சங் 16:11; சங் 17:2; சங் 51:11; சங் 68:2,8; சங் 95:2; சங் 97:5; சங் 114:7; சங் 139:7; சங் 140:13; ஆதி 3:8; ஆதி 4:16).*

மனுஷருடைய அகங்காரம் (pride of man) - רֹכֶס - ro'-kes - 7407

ஆ.பெ.சொ. - அகங்காரம், சதித்திட்டம் **(snares; plottings; entanglements; conspiracies)** *(சங் 31:20).*

ஒளித்துவைத்துக் காப்பாற்று (secretly) - צָפַן - tsaw-fan' - 6845

வினைச்சொல் - மறை, காத்துக்கொள், சேர்த்துவை, அந்தரங்கஸ்தலம், வைத்துவை, அடக்கு, வைத்திரு, ஒளி, நோக்கிக் கொண்டிரு, பதிவிரு, பத்திரப்படுத்து, நிரப்பு **(to hide or protect by covering lurk)** - *(சங் 31:20; நீதி 1:11, 18; யாத் 2:3; யோபு 14:13; சங் 27:5; சங் 56:6; நீதி 27:16).*

சங்கீதம் - தொகுப்புரை

31 அதிகாரம்

கூடாரம் **(pavilion)** - סֻכָּה - **sook-kaw' - 5521**

பெ.பெ.சொ. - கொட்டாரம், கூடாரம், குடிசை, பதிவிருத்தல் - கூடாரம் **(pavilion)** (சங் 31:20; சங் 18:11; 2சாமு 22:12; 1இராஜா 20:12, 16). கூடாரம் **(tabernacle)** (லேவி 23:34; உபா 16:13,16; உபா 31:10). கொட்டாரம் **(booth)** (ஆதி 33:17; லேவி 23:42-43; நெகே 8:14-17). கூடாரம் **(tent)** (2சாமு 11:11). குடிசை **(cottage)** (ஏசா 1:8).

நாவுகளின் சண்டை, வாக்குவாதம் **(strife of tongues)** - רִיב - **reeb, reeb - 7379**

ஆ.பெ.சொ. - வாக்குவாதம், வாதாடு, வழக்காடுதல், கவனித்தல், நியாயம், சண்டை காரியம் **(strifes; contentions; plots)** (சங் 31:20; சங் 55:9; நீதி 15:18; நீதி 17:1; நீதி 26:17). உமது பிரசன்னத்தினால் உமது பிள்ளைகளை மூடி, அவர்களை உமது கூடாரத்தில் பாதுகாப்பாகக் காத்துக் கொள்ளும்.

கர்த்தர் செய்திருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் என்னை மீட்டுக்கொண்டார் (சங் 31:5).
2. என் உபத்திரவத்தை அறிந்திருக்கிறார் (சங் 31:7).
3. என் ஆத்தும வியாகுலங்களை அறிந்திருக்கிறார்
4. சத்துருவின் கையில் என்னை ஒப்புக் கொடுக்காமல் பாதுகாக்கிறார் (சங் 31:8).
5. என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினார்
6. கர்த்தர் நன்மையை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். (சங் 31:19).
7. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு நன்மையை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்
8. கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப் பண்ணினார் (சங் 31:21).

"உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன்" - நாமும் நமக்குப் பிரச்சனைகள் வரும்போது நமது மனக்கலக்கத்திலே நாம் கர்த்தரைக் குறை கூறுகிறோம். இது பாவம். இந்தப் பாவத்திலிருந்து நாம் மனந்திருந்த வேண்டும். யோபு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

கர்த்தரைத் தனது மனக்கலக்கத்திலே தூஷித்த தாவீது, இப்போது அவரை ஸ்தோத்திரம் பண்ணுகிறான். "உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்புசெய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார்" என்று அறிக்கை செய்கிறான் (சங் 31:22).

ஏன் திட மனதாயிருக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர், தமக்கு பயந்தவர்களுக்கு பெரிதான நன்மையை உண்டு பண்ணி வைத்திருக்கிறார்.
2. மனுபுத்திரருக்கு முன்பாக தம்மை நம்புகிறவர்களுக்கு கர்த்தர் நன்மை செய்வார்.
3. மனுஷருடைய அகங்காரத்துக்கு மீட்டு தமது சமுகத்தின் மறைவிலே மறைந்திருக்கிறார். (சங் 31:20)
4. மனுஷருடைய நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, தமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறார்.
5. தமது கிருபையை அதிசயமாய் விளங்கப் பண்ணினார் (சங் 31:21).
6. என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார் (சங் 31:22).
7. உண்மையானவனைக் கர்த்தர் தற்காக்கிறார் (சங் 31:23).

31 அதிகாரம்

கூடாரம் (pavilion) - סֻכָּה - sook-kaw' - 5521

பெ.பெ.சொ. - கொட்டாரம், கூடாரம், குடிசை, பதிவிருத்தல் - கூடாரம் (pavilion) (சங் 31:20; சங் 18:11; 2சாமு 22:12; 1இராஜா 20:12, 16). கூடாரம் (tabernacle) (லேவி 23:34; உபா 16:13,16; உபா 31:10). கொட்டாரம் (booth) (ஆதி 33:17; லேவி 23:42-43; நெகே 8:14-17). கூடாரம் (tent) (2சாமு 11:11). குடிசை (cottage) (ஏசா 1:8).

நாவுகளின் சண்டை, வாக்குவாதம் (strife of tongues) - רִיב - reeb, reeb - 7379

ஆ.பெ.சொ. - வாக்குவாதம், வாதாடு, வழக்காடுதல், கவனித்தல், நியாயம், சண்டை காரியம் (strifes; contentions; plots) (சங் 31:20; சங் 55:9; நீதி 15:18; நீதி 17:1; நீதி 26:17). உமது பிரசன்னத்தினால் உமது பிள்ளைகளை மூடி, அவர்களை உமது கூடாரத்தில் பாதுகாப்பாகக் காத்துக் கொள்ளும்.

கர்த்தர் செய்திருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் என்னை மீட்டுக்கொண்டார் (சங் 31:5).
2. என் உபத்திரவத்தை அறிந்திருக்கிறார் (சங் 31:7).
3. என் ஆத்தும வியாகுலங்களை அறிந்திருக்கிறார்
4. சத்துருவின் கையில் என்னை ஒப்புக் கொடுக்காமல் பாதுகாக்கிறார் (சங் 31:8).
5. என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினார்
6. கர்த்தர் நன்மையை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். (சங் 31:19).
7. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு நன்மையை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்
8. கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப் பண்ணினார் (சங் 31:21).

"உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன்" - நாமும் நமக்குப் பிரச்சனைகள் வரும்போது நமது மனக்கலக்கத்திலே நாம் கர்த்தரைக் குறை கூறுகிறோம். இது பாவம். இந்தப் பாவத்திலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும். யோபு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

கர்த்தரைத் தனது மனக்கலக்கத்திலே தூஷித்த தாவீது, இப்போது அவரை ஸ்தோத்திரம் பண்ணுகிறான். "உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்புசெய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார்" என்று அறிக்கை செய்கிறான் (சங் 31:22).

ஏன் திட மனதாயிருக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர், தமக்கு பயந்தவர்களுக்கு பெரிதான நன்மையை உண்டு பண்ணி வைத்திருக்கிறார்.
2. மனுபுத்திரருக்கு முன்பாக தம்மை நம்புகிறவர்களுக்கு கர்த்தர் நன்மை செய்வார்.
3. மனுஷருடைய அகங்காரத்துக்கு மீட்டு தமது சமுகத்தின் மறைவிலே மறைந்திருக்கிறார். (சங் 31:20)
4. மனுஷருடைய நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, தமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறார்.
5. தமது கிருபையை அதிசயமாய் விளங்கப் பண்ணினார் (சங் 31:21).
6. என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார் (சங் 31:22).
7. உண்மையானவனைக் கர்த்தர் தற்காக்கிறார் (சங் 31:23).
8. இடும்பு செய்கிறவனுக்குப் பூரணமாய்ப் பதிலளிப்பார்
9. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (சங் 31:24).

32 அதிகாரம்

(மஸ்கீல் என்னும் தாவீதின் போதக சங்கீதம்.)

இரண்டாவது போதக சங்கீதம்

பொருளடக்கம்

1. பாக்கியவானிடம் காணப்படும் நான்கு காரியங்கள் - *(32:1-2)*
2. தண்டித்துத் திருத்தப்படுவதற்கு நான்கு அடையாளங்கள் - *(32:3-4)*
3. தண்டித்து திருத்தியதால் ஏற்பட்ட நான்கு விளைவுகள் - *(32:5)*
4. தண்டித்துத் திருத்தப்பட்ட பின்பு நான்கு ஆசீர்வாதங்கள் - *(32:6-7)*
5. போதிப்பதினால் உண்டாகும் நான்கு ஆசீர்வாதங்கள். அறியாமைக்கு எடுத்துக்காட்டு - *(32:8-10)*
6. தண்டித்துத் திருத்தப்பட்டோருக்கு இறுதி உபதேசங்கள் - *(32:11)*

1. பாக்கியவானிடம் காணப்படும் நான்கு காரியங்கள்

சங் 32:1 எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.

சங் 32:2 எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.

பாக்கியவானின் ஆசீர்வாதங்கள்

1. மீறுதல் மன்னிக்கப்படும்
2. பாவம் மூடப்படும்
3. அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருப்பார் *(சங் 32:2)*
4. அவன் ஆவி கபடமில்லாதிருக்கும் *(சங் 32:2; சங் 15:1-5; சங் 24:3-5)*

நமது பாவங்களை நாம் கர்த்தரிடத்தில் அறிக்கையிடும்போது அது மன்னிக்கப்படும் என்று தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். *(2நாளா 7:14; சங் 86:5; எரே 31:34; மத் 12:31-32; லூக்கா 6:37; 1யோவான் 1:9)*

வேதாகமத்தில் பாவ அறிக்கைக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. இஸ்ரவேல் ஜனங்களின் பாவத்தை மன்னியும் (1இராஜா 8:30,34,36,39,50)
2. நான் பாவம் செய்தேன் (யோபு 7:20)
3. நான் நீசன் (யோபு 40:4)
4. நான் என்னை அருவருத்து, தூளிலும், சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் (யோபு 42:6)
5. என் பாவங்களையெல்லாம் மன்னித்தருளும் (சங் 25:18)
6. என்மேல் இரக்கமாயிரும், உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவைக் குணமாக்கும். *(சங் 41:4)*
7. எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும். நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே (லூக்கா 11:4).
8. தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் (லூக்கா 18:13).

மூடு **(covered) - כָּסָה - kaw-saw' - 3680**

வினைச்சொல் - மூடு, அடக்கு, நிரப்பு, மூடி **(to cover; conceal)**

மூடு **(cover) - ἐπικαλύπτω - epikalyptoo** - 1943

வினைச்சொல் - மூடு - காணமுடியாதவாறு மூடுதல், மன்னித்தல் **(to cover over so as not to be seen)** (ரோமர் 4:7)

ஒருவன் தனது பாவத்தை அறிக்கையிட்டு, இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியாகிய திருஇரத்தத்தின் மீது நம்பிக்கை வைக்கும்போது அவனுடைய பாவங்களை இயேசு கிறிஸ்து மன்னிக்கிறார். (மத் 26:28; ரோமர் 3:25-31; ரோமர் 5:1-11; ரோமர் 8:1-3; ரோமர் 10:9-10; எபே 2:8-9; கொலோ 1:20; கொலோ 2:12; 1யோவான் 1:7,9; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18; வெளி 1:5)

32 அதிகாரம்

எண்ணு (accounted) - חָשַׁב - khaw-shab' - 2803

வினைச்சொல் - நினை, எண்ணு, யோசி, சிந்தி, விலக்கு, உண்டுபண்ணு, நினைத்திரு, யூகி, ஆலோசனைபண்ணு, மதியாமலிரு, விசித்திரவேலைகளைசெய், விரோத வேலைகளைச் செய், நிபுணரான தொழிலாளியாயிரு, தியானி, தள்ளு, சுமத்திரு, கணக்குப்பார், கணக்கிடு

எண்ணு (numbered) - λογίζομαι - logizomai - 3049

வினைச்சொல் - ஆலோசனை பண்ணு, எண்ணு, தீர், யோசி, நினை, சிந்தி - எண்ணப்படுதல் (numbered) (மாற்கு 15:28) எண்ணுதல் (accounted) (ரோமர் 8:36; 1கொரி 4:1; கலா 3:6; எபி 11:19) எண்ணுதல் (counted) (ரோமர் 2:26; ரோமர் 4:3,5; ரோமர் 9:8; பிலி 3:13) குற்றம் சுமத்துதல் (laid to their charge) (2தீமோ 4:16) எண்ணப்படுதல் (reckoned) (லூக்கா 22:37; ரோமர் 4:4,9,10; ரோமர் 6:11; ரோமர் 8:18) எண்ணுதல் (நினைத்தல்) (impute) (ரோமர் 4:6,8,11,22-24; 2கொரி 5:19; யாக் 2:23)

ஒருவனுடைய அக்கிரமத்தை எண்ணாதிருத்தல் என்பது ஒருவனை நீதிமானாக எண்ணுதல் (Imputation) என்று பொருள்படும். இயேசு கிறிஸ்துவில் நாம் நீதிமான்களாக எண்ணப்படுகிறோம் (ரோமர் 3:24-31; ரோமர் 4:1-25; 2கொரி 5:14-21; கலா 3:6-9,13-14).

மீட்பைப் பற்றிய உபதேசம்

1. நமதுபாவங்களை கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து விட்டுவிடும் போது, கர்த்தர் நம்மை நீதிமான்களாக எண்ணுகிறார். (ரோமர் 5:13; ரோமர் 6:23; ரோமர் 8:12-13)
2. இரட்சிக்கப்பட்டவன் பாவம் செய்வதை நிறுத்த வேண்டும். திரும்பத்திரும்ப அதே பாவத்தைச் செய்தால், அவன் பாவமன்னிப்பை மறுபடியும் பெறவேண்டும். இல்லையேல், பாவத்தின் சம்பளம் அவனுக்கும் மரணம்தான். (எசே 18:4,20-26; ரோமர் 6:23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; 2தீமோ 2:12)
3. நமது பாவத்தை நாம் அறிக்கை செய்தால்தான், கிறிஸ்து நமது பாவங்களை மன்னிப்பார். அறிக்கை பண்ணாத பாவங்கள் மன்னிக்கப்படாது. (லூக்கா 13:3,5; 1யோவான் 1:9) கிறிஸ்து நமது பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார். (ரோமர் 5:8; கலா 1:4; 1பேதுரு 2:24; 1பேதுரு 3:18; எபி 2:9) மனந்திரும்பாதவனுக்கு இரட்சிப்பு இல்லை. (மாற்கு 16:15-16; லூக்கா 13:3,5; அப் 2:38; அப் 3:19; 1யோவான் 1:7,9)
4. கர்த்தர் எல்லா பாவத்தையும் தண்டிப்பார். பாவமான வார்த்தைகூட கர்த்தருக்கு அருவருப்பானது. (மத் 12:37-39; ரோமர் 2:12-16; 2கொரி 5:10; வெளி 20:11-15).
5. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் பிரகாரம், நாம் தேவனிடம் பாவஅறிக்கை செய்ய வேண்டும். (லூக்கா 13:3,5; 1யோவான் 1:9; யோவான் 3:16; எபே 2:8-9)

தேவன் பாவியை நீதிமானாக்குகிறார். (மாற்கு 16:16; ரோமர் 1:5,16; ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; வெளி 22:17)

தேவனுடைய இரட்சிப்பு எல்லாருக்கும் உரியது. ஆனாலும் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17)

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப் படுவார்கள். (சங் 32:2; ரோமர் 4:3-13,22-25; 2கொரி 5:19)

32 அதிகாரம்

பாவ மன்னிப்பு பெறவில்லையென்றால் அவனுடைய பாவத்தின் சம்பளம் மரணம். (யாத் 32:32; எசே 18:4,20-26; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8; 2தீமோ 2:12; யாக் 5:19-20)

கபடமில்லாத ஆவி - சரீரம் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியும் (ரோமர் 6:6-7,16-23; ரோமர் 8:1-4,12-13; ரோமர் 12:1-2; 1கொரி 3:16-17; 1கொரி 6:19-20; 1கொரி 7:34; 1கொரி 9:27; 2கொரி 4:10; 2கொரி 7:1; எபே 1:4; எபே 4:24; எபே 5:25-27; கொலோ 1:20-23; கொலோ 2:11-13; கொலோ 3:5-12; 1தெச 4:3-7; தீத்து 2:11-13; எபி 12:10-14; 1யோவான் 1:7-9; 1யோவான் 2:1-2,29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18). அது போலவே ஆவியும், ஆத்துமாவும் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியும் (2கொரி 7:1).

2. தண்டித்துத் திருத்தப்படுவதற்கு நான்கு அடையாளங்கள்

சங் 32:3 நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.

சங் 32:4 இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. (சேலா.)

தாவீது தன் பாவங்களை அறிக்கை பண்ணாமல், அடக்கி வைத்த காலம் உண்டு. இதனால் அவன் துன்பத்தையே அனுபவித்தான் (2சாமு 12).

"நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று" - தாவீது தன் பாவங்களை அறிக்கையிடுவதற்கு முன்னால் மிகவும் வியாகுலமடைந்தான்.

3. தண்டித்து திருத்தியதால் ஏற்பட்ட நான்கு விளைவுகள்

சங் 32:5 நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சேலா.)

"தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்" என்று கூறி நாம் விசுவாசத்தோடு பாவ அறிக்கை பண்ண வேண்டும்.

4. தண்டித்துத் திருத்தப்பட்ட பின்பு நான்கு ஆசீர்வாதங்கள்

சங் 32:6 இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.

சங் 32:7 நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். (சேலா.)

தேவன் கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். ஆகையினால் அநுக்கிரக காலத்தில் நாம் கர்த்தரிடத்தில் ஜெபித்து பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (2கொரி 6:2).

"மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது" - துன்பங்கள் நம்மீது வெள்ளம் போல வந்தாலும், அது நம்மை அணுகாது (சங் 32:6,10).

மறைவிடம் (hiding place) - סֵתֶר - say'-yher, sith-raw' - 5643

ஆண்பால் பெயர்ச்சொல் - இரகசியம், ஒளிப்பிடம், மறைவான இடம், மறைவு, அந்தரங்கம், புறங்கூறுதல், புகலிடம் (சங் 31:20).

32 அதிகாரம்

5. போதிப்பதினால் உண்டாகும் நான்கு ஆசீர்வாதங்கள். அறியாமைக்கு எடுத்துக்காட்டு

சங் 32:8 நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

சங் 32:9 வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்க வேண்டாம்.

சங் 32:10 துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்.

குதிரைக்கும் கோவேறு கழுதைக்கும் ஆறறிவு இல்லை. வாரினாலும் கடிவாளத்தினாலும் வாயைக் கட்டித்தான் அவற்றை அடக்க வேண்டும். நாமோ ஆறறிவுடையவர்கள். ஆகையினால், நாமே மனமுவந்து தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (நீதி 26:3).

6. தண்டித்துத் திருத்தப்பட்டோருக்கு இறுதி உபதேசங்கள்

சங் 32:11 நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்தமுழக்கமிடுங்கள்.

நீதிமானின் ஆசீர்வாதங்கள்

1. மீறுதல் மன்னிக்கப்படும் (சங் 32:1,5)
2. பாவம் மூடப்படும் (சங் 32:1)
3. அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருப்பார் (சங் 32:2)
4. ஆவியில் கபடமில்லாதிருக்கும்
5. தேவனிடமிருந்து சகாயங் கிடைக்கும் (சங் 32:6)
6. மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது
7. கர்த்தர், மறைவிடமாயிருப்பார் (சங் 32:7)
8. இக்கட்டுக்கு விலக்கிக் காப்பார்
9. இரட்சணியப் பாடல்கள் சூழ்ந்து கொள்ளும்படி செய்வார்
10. கர்த்தர் நன்மையானவற்றைப் போதிப்பார் (சங் 32:8)
11. கர்த்தர் நல்வழியைக் காட்டுவார்
12. கர்த்தரை நம்பியிருக்கிறவனை கிருபை சூழ்ந்து கொள்ளும் (சங் 32:10)

சங்கீதம் - தொகுப்புரை

33 அதிகாரம்

துதித்து ஜெபிக்கும் நான்காவது சங்கீதம்

பொருளடக்கம்

1. துதிக்கவேண்டுமென்று ஐந்து கட்டளைகள் - *(33:1-3)*
2. துதிப்பதற்கு எட்டு காரணங்கள் - *(33:4-7)*
3. கர்த்தருக்கு பயப்பட வேண்டுமென்று இரண்டு கட்டளைகள் - *(33:8)*
4. கர்த்தருக்கு பயப்படுவதற்கு ஐந்து காரணங்கள் - *(33:9-11)*
5. பாக்கியமுள்ள ஜனத்திடமும் ஜாதியிடமும் காணப்படும் காரியங்கள் - *(33:12)*
6. பாக்கியமுள்ள ஜனத்தின் மீது அருளப்படும் பத்து ஆசீர்வாதங்கள் - *(33:13-17)*
7. கர்த்தருக்கு பயந்தவர் மீது அருளப்படும் நான்கு ஆசீர்வாதங்கள் - *(33:18-19)*
8. நீதிமானின் ஜெபமும் நம்பிக்கையும் - *(33:20-22)*

1. துதிக்கவேண்டுமென்று ஐந்து கட்டளைகள்

சங் 33:1 நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும்.

சங் 33:2 சுரமண்டலத்தினால் கர்த்தரைத்துதித்து, பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.

சங் 33:3 அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; ஆனந்தசத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள்.

இந்த சங்கீதத்திற்குத் தலைப்புரை இல்லை. இதைத் தாவீது எழுதியிருக்கலாம். சங் 33:1 ஆவது வசனம் 32 ஆவது சங்கீதத்தின் கடைசி வசனம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இதற்கு ஆதாரம் எதுவுமில்லை.

தகும் (comely) - נָאוֶה - naw-veh' - 5000

பெயரடை - ஏற்ற, தகுந்த, இன்பமான, அழகான, வடிவமான - தகும், அழகானது **(suitable; beautiful)** *(சங் 33:1; சங் 147:1; உன் 1:5; உன் 2:14; உன் 4:3; உன் 6:4)*. நீதிமான்கள் கர்த்தரைத் துதிக்க வேண்டும். மவுனமாயிருந்துவிடக் கூடாது. நீதிமான்கள் மட்டுமே கர்த்தர் நல்லவர் என்பதை ருசிபார்த்திருக்கிறவர்கள்.

சங்கீதக்காரன் கூறும் ஆலோசனைகள்

1. கர்த்தருக்குள் களிகூருங்கள் *(சங் 33:1)*.
2. சுரமண்டலத்தினால் கர்த்தரைத் துதியுங்கள் *(சங் 33:2)*.
3. கீர்த்தனம் பண்ணுங்கள்.
4. பத்து நரம்பு வீணையினால் கீர்த்தனம் பண்ணுங்கள்
5. கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் *(சங் 33:3)*.
6. ஆனந்த சத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள்.
7. பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக *(சங் 33:8)*.
8. உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக
9. கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே, உமது கிருபை எங்கள் மேல் இருப்பதாக *(சங் 33:22)*.

சுரமண்டலம் (harp) - כִּנּוֹר - kin-nore' - 3658

33 அதிகாரம்

ஆ.பெ.சொ.- கின்னரம், சுரமண்டலம், வீணை - மூன்று முதல் ஐந்து நரம்புகள் கொண்ட நரம்பு வாத்தியம் **(a portable harp or lyre of 3 to 5 strings)**

வீணை **(psaltery) - נֵבֶל - neh'-bel, ney'-bel - 5035**

ஆண்பால் பெயர்ச்சொல் - துருத்தி, பாண்டம், கலம், ஜாடி, தம்புரு, வீணை - (சங் 71:22) பத்து நரம்புகள் கொண்ட நரம்பு வாத்தியம். **(a portable 10-stringed instrument)**

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒன்பது புதுப்பாட்டுக்கள் (சங் 33:3; சங் 40:3; சங் 96:1; சங் 98:1; சங் 144:9; சங் 149:1; ஏசா 42:10; வெளி 5:9; வெளி 14:3).

நேர்த்தியாய் **(skilfully) - טוֹב - tobe - 3190**

வினைச்சொல் - நேசி, அழகானவனாயிரு, நன்றாயிரு, சொஸ்தமாகு, சித்தமாயிரு, மதுரமாயிரு, நலமாயிரு, சாமர்த்தியமாயிரு, பூரிப்பாக்கு, சிறப்பாகசெய், சம்மதியாயிரு **(make well; sound beautiful and with sense)**

நன்மையை நாடு, உபயோகப்படுத்து, செய், பிரபலப்படுத்து, சிங்காரி, நன்றாய்க் காண், மகிழ்ச்சி அடை, நன்மை உண்டாகு, அமைதலாயிரு, நலமாய்த் தோன்று, வாழ்வடைந்திரு, சந்தோஷமடை, நன்றாயிரு, முகமலர்ச்சிதா, ஔஷதம், நயப்படுத்து, சிரேஷ்டம், நன்றாய் வாசி, விநோதம், நேர்த்தி, சீர்ப்படுத்து, சீர்திருத்து, சுகமாய் வாழ்ந்திரு, நலமாகு, மகிழ்ச்சியாயிரு, உகந்த விண்ணப்பமாயிரு, நன்மைசெய், சரியாயிரு, பிரியமாயிரு, நலமாய்த் தோன்று, முற்றிலும் நன்றாயிரு, தயைகிடைத்திரு, தயை பாராட்டு, உத்தமமாயிரு, துலக்கமாயிரு, நன்றாக, சித்தமாகு, நன்றாய்ச் சொல், விளக்கு, இதமியப்படு

சத்தம் **(noise) - תְּרוּעָה - ter-oo-aw' - 8643**

பெ.பெ.சொ. - எக்காளச்சத்தம், முழங்குதல், பெருந்தொனி, ஜயகெம்பீரம், எக்காளமூதுதல், தொனித்தல், ஆரவாரம், ஆர்ப்பரிப்பு, கெம்பீரசத்தம், ஆனந்தம், பேரோசை, கூக்குரல், முழக்கம் - எக்காளச் சத்தம் **(jubilee)** (லேவி 25:9) பெருந்தொனி **(alarm)** (எண் 10:5-6; எரே 4:19; எரே 49:2; செப் 1:6). எக்காளச்சத்தம் (லேவி 23:24; எண் 29:1; எண் 31:6). கெம்பீரச்சத்தம் (யோபு 8:21). ஆனந்தம் (யோபு 33:26; சங் 27:6). ஜயகெம்பீரம் **(shout)** (எண் 23:21; யோசு 6:5,20; 1சாமு 4:5-6; 2சாமு 6:15; 1நாளா 15:28; 2நாளா 15:14; எஸ்றா 3:11-13; யோபு 39:25; சங் 47:5; எரே 20:16; எசே 21:22;ஆமோ 1:14; ஆமோ 2:2).

2. துதிப்பதற்கு எட்டு காரணங்கள்

சங் 33:4 கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமு மாயிருக்கிறது.

சங் 33:5 அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்; பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது.

சங் 33:6 கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.

சங் 33:7 அவர் சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து, ஆழமான ஜலங்களைப் பொக்கிஷவைப்பாக வைக்கிறார்.

கர்த்தரை ஏன் துதிக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தருடைய வார்த்தை உத்தமமானது (சங் 33:4).

சங்கீதம் - தொகுப்புரை

33 அதிகாரம்

2. அவருடைய செய்கையெல்லாம் சத்தியமானவை.

3. கர்த்தர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார் (சங் 33:5).

4. பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது.

5. கர்த்தருடைய வார்த்தையினால் வானங்கள் உண்டாக்கப்பட்டது (சங் 33:6).

6. அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனை உண்டாக்கப் பட்டது (சங் 33:6; ஆதி 2:7).

7. சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்தார் (சங் 33:7; ஆதி 1:10).

8. ஆழமான ஜலங்களைப் பொக்கிஷ வைப்பாக வைக்கிறார்.

ஆழம் (depth) - תְּהוֹם - teh-home' - 8415

ஆ.பெ.சொ. - ஆழம், ஆறு, பாதாளம், விலாசம், ஊற்று, சமுத்திரம், ஆழி (the abyss as the surging mighty waters; the subterranean water supply) - (ஆதி 1:2; ஆதி 7:11; ஆதி 8:2; யாத் 15:5,8; உபா 8:7; சங் 33:7; சங் 42:7; சங் 104:6; சங் 107:26; நீதி 3:20; நீதி 8:24,27).

3. கர்த்தருக்கு பயப்பட வேண்டுமென்று இரண்டு கட்டளைகள்

சங் 33:8 பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.

4. கர்த்தருக்கு பயப்படுவதற்கு ஐந்து காரணங்கள்

சங் 33:9 அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

சங் 33:10 கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்.

சங் 33:11 கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.

ஆலோசனை (council)- עֵצָה - ay-tsaw' - 6098

பெ.பெ.சொ. - யோசனை, ஆலோசி, ஆலோசனை (advice; purpose) - (சங் 33:10-11; சங் 73:24; சங் 107:11; நீதி 1:25,30; நீதி 8:14; நீதி 19:21; ஏசா 46:10).

தலைமுறை தலைமுறை (All generations) என்பது நித்தியத்தைக் குறிக்கும் சொல் ஆகும் - (ஆதி 8:22; ஆதி 9:12,16; ஆதி 17:8; 2சாமு 7; ஏசா 9:6-7).

5. பாக்கியமுள்ள ஜனத்திடமும் ஜாதியிடமும் காணப்படும் காரியங்கள்

சங் 33:12 கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

பாக்கியமுள்ளது (Blessed) - சந்தோஷமுடையது (சங் 144:15).

6. பாக்கியமுள்ள ஜனத்தின் மீது அருளப்படும் பத்து ஆசீர்வாதங்கள்

சங் 33:13 கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப்பார்த்து, எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார்.

33 அதிகாரம்

சங் 33:14 தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து பூமியின் குடிகள் எல்லார் மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார்.

சங் 33:15 அவர்களுடைய இருதயங்களையெல்லாம் அவர் உருவாக்கி, அவர்கள் செய்கைகளை எல்லாம் கவனித்திருக்கிறார்.

சங் 33:16 எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான்; சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான்.

சங் 33:17 இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா; அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது.

"கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப்பார்த்து, எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார்" - இது கர்த்தருடைய பராமரிப்பைக் குறிக்கும் வாக்கியம். எல்லா சிருஷ்டியின் மீதும் கர்த்தருடைய பராமரிப்பு உள்ளது (சங் 33:12-17).

தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து - பரலோகம் - (மத் 6:9-10; 1பேதுரு 3:22)

தேவன் ஆதாமை தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் உண்டாக்கினார் (ஆதி 1:26-28; ஆதி 5:3; 1கொரி 15:45-50). மனுஷனை பாவியாகவோ, வியாதியஸ்தனாகவோ, குறைவுள்ளவனாகவோ சிருஷ்டிக்கவில்லை. மனுஷன் பாவத்தினால் தனது பரிபூரணத்தை இழந்து குறைவுள்ளவனானான் (உபா 32:4).

தேவனுடைய பாதுகாப்பு இல்லையென்றால், ஒரு ராஜா கூட, சாதாரணபோர் வீரனைப்போல மரிப்பான். அதுபோலவே பலவானும் கோழையைப் போல மடிவான். குதிரையால் மனுஷனை இரட்சிக்க முடியாது. தேவனால் மட்டுமே மனுஷனை பாதுகாத்து, அவனுடைய மரணத்திலிருந்து தப்புவிக்க முடியும். (சங் 33:18-19).

7. கர்த்தருக்கு பயந்தவர் மீது அருளப்படும் நான்கு ஆசீர்வாதங்கள்

சங் 33:18 தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்.

சங் 33:19 பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.

8. நீதிமானின் ஜெபமும் நம்பிக்கையும்

சங் 33:20 நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்.

சங் 33:21 அவருடைய பரிசுத்த நாமத்தை நாம் நம்பியிருக்கிறபடியால், நம்முடைய இருதயம் அவருக்குள் களிகூரும்.

சங் 33:22 கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக.

"அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்". வேறு யார் மூலமாகவும் நமக்கு பாதுகாப்பும் இரட்சிப்பும் இல்லை (சங் 33:16-19). ஆகையினால் சங்கீதக்காரன் தனது முழுநம்பிக்கையையும் தேவன் மீது வைப்பதாக அறிக்கை செய்கிறான். (சங் 33:20-22).

34 அதிகாரம்

(தாவீது அபிமெலேக்கு முன்பாக வேஷமாறினபோது அவனால் துரத்தி விடப்படுகையில் பாடின சங்கீதம்.)

இரண்டாவது மீட்பின் சங்கீதம்

பொருளடக்கம்

1. மீட்பிற்காக ஏழுவிதமான ஸ்தோத்திரம் - (34:1-3)
2. ஏழு விதமான மீட்பின் சாட்சி - (34:4-6)
3. ஏழு விதமான மீட்பின் வாக்குத்தத்தம் - (34:7-10)
4. பத்து விதமான மீட்பின் நிபந்தனை - (34:11-14)
5. மீட்பரின் பதினைந்து விதமான ஊழியம் - (34:15-22)

1. மீட்பிற்காக ஏழுவிதமான ஸ்தோத்திரம்

சங் 34:1 கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

சங் 34:2 கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள்.

சங் 34:3 என்னோட கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பது தாவீதின் பழக்கம். நமக்கு கர்த்தர் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நாம் அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும் (சங் 34:9-10; சங் 84:11; யாக் 1:5, 17), (சங் 34:9-10; சங் 84:11; யாக் 1:5,17). மனுஷனுக்கு இதைக் கற்றுக் கொடுப்பதற்காக தேவன் செய்யும் காரியம் அற்புதமானது. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார் (1கொரி 1:25-31).

சிறுமைப்பட்டவன் (humble) - עָנָו - aw-nawv', aw-nawv' - 6035

பெயரடை - சாந்த, சிறுமைப்பட்ட, எளியவன், ஏழை, சிறுமைப் பட்டவர்களுடைய, சாந்தகுணமுள்ள, பயந்த, தாழ்மையுள்ள, தரித்திரன் (poor; afflicted) (சங் 34:2; சங் 9:12; சங் 10:12,17; சங் 69:32).

சங்கீதம் - 34 இல் கூறப்பட்டுள்ள பத்துக் கட்டளைகள்

1. என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப் படுத்துங்கள் (சங் 34:3)
2. நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம்
3. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் (சங் 34:8)
4. கர்த்தருக்குப் பயந்திருங்கள் (சங் 34:9)
5. பிள்ளைகளே, வந்து எனக்குச் செவி கொடுங்கள் (சங் 34:11)
6. உன்நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள் (சங் 34:13)
7. தீமையை விட்டு விலகுங்கள் (சங் 34:14)
8. நன்மை செய்
9. சமாதானத்தைத் தேடு
10. சமாதானத்தைத் தொடர்ந்து கொள்

34 அதிகாரம்

2. ஏழு விதமான மீட்பின் சாட்சி

சங் 34:4 நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்.

சங் 34:5 அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.

சங் 34:6 இந்த ஏழை கூப்பிட்டான்; கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.

கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர் எனக்குச் செவிகொடுத்தார் (சங் 34:4)
2. எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்
3. அவரை நோக்கிப் பார்த்த அவருடைய ஜனங்கள் பிரகாசமடைந்தார்கள் (சங் 34:5)
4. அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை
5. கர்த்தர், இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார் (சங் 34:6-7)
6. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. அவர்களுடைய தேவைகளை எல்லாம் சந்திப்பார். (சங் 34:9-10; சங் 23:1; சங் 84:11; யோவான் 15:7)
7. தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப் போகப்பண்ணுவார் (சங் 34:16)
8. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் (சங் 34:18)
9. கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார் (சங் 34:22)
10. அவரை நம்புகிற ஒருவர் மேலும் குற்றஞ்சுமராது. அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் நம்மை நீங்கலாக்கிவிடும் பயங்கள்

1. மனுஷபயம் (ஆதி 15:1; லூக்கா 12:5; எபி 13:6) - நாம் கர்த்தருக்குப் பயப்பட வேண்டும். மனுஷருக்குப் பயப்படக்கூடாது.
2. மரணம் (ஆதி 21:17; ஆதி 35:17; எபி 2:15)
3. எதிர்காலம் (ஆதி 46:3; ஆதி 50:19-21)
4. ஆபத்து (யாத் 14:13)
5. விக்கிரகங்கள் (நியா 6:10; 2 இராஜா 17:35-38)
6. சொப்பனங்கள் (யோபு 4:14-16)
7. தீமை (சங் 23:4; நீதி 1:33)
8. யுத்தம் (சங் 27:3)
9. தேவையற்ற பயம் (சங் 53:5)
10. சத்துருக்கள் (சங் 118:6)
11. தண்டனை (நீதி 1:26-27)
12. இராக்காலம் (உன் 3:8)
13. பிசாசுகள் (மத் 14:26)
14. பயமுள்ள ஆவி (2 தீமோ 1:6-7)

எப்படி நோக்கிப்பார்ப்பது? அதன் விளைவு என்ன?

1. நம்மையே நோக்கிப் பார்த்தால் துன்பம் உண்டாகும் (சங் 77:1)
2. சுற்றுமுற்றும் பார்த்தால் கவனம் சிதறும் (சங் 73:3)

34 அதிகாரம்

3. கர்த்தரை எதிர்பார்ப்போடு நோக்கிப்பார்த்தால் ஆசீர்வாதம் உண்டாகும் (சங் 34:5; சங் 121:1)

மனுஷனை அவனுடைய இடுக்கண்களிலிருந்து நீங்கலாக்கி இரட்சிப்பது கர்த்தருடைய கிரியை (சங் 34:6,17,19; சங் 25:17; சங் 40:2; சங் 54:7; சங் 81:10; சங் 107:6,13,19,28).

3. ஏழு விதமான மீட்பின் வாக்குத்தத்தம்

சங் 34:7 கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

சங் 34:8 கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

சங் 34:9 கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை.

சங் 34:10 சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.

"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" - என்னும் வாக்கியம் இந்த சங்கீதத்திலும், சங் 35:5-6 இலும் மட்டுமே வந்துள்ளது. மற்ற இடங்களில் கர்த்தர் மனுஷரிடத்தில் செய்யும் கிரியைகள் என்னும் பொருளிலேயே வந்திருக்கிறது.

சங்கீதம் 34-இல் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள்

1. கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார் (சங் 34:7)

2. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை (சங் 34:9; சங் 84:11; லூக்கா 11:9-11)

3. கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங் 34:10; மத் 7:11)

4. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது (சங் 34:10,15,17; யோவான் 15:7)

5. கர்த்தருடைய முகம், தீமை செய்கிறவர்களுக்கு விரோதமாயிருக்கிறது (சங் 34:16)

6. நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார் (சங் 34:17; சங் 34:6)

7. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் (சங் 34:18)

8. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிக்கிறார் (சங் 34:19)

9. தீமை துன்மார்க்கனைக் கொல்லும்; நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள் (சங் 34:21)

10. கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன்மேலும் குற்றஞ்சுமராது (சங் 34:22)

"அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை" - இந்த உபதேசத்தை வேதாகமத்தின் பல பகுதிகளிலும் நாம் வாசிக்கிறோம் (சங் 34:9-10; சங் 23:1; சங் 84:11; சங் 91:1-12; சங் 103:3; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:9-13; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:13-14). அவிசுவாசம் நமது ஜீவியத்தில் குறைவை உண்டாக்கும் (மத் 17:20-21; எபி 11:6; யாக் 1:5-8).

34 அதிகாரம்

4. பத்து விதமான மீட்பின் நிபந்தனை

சங் 34:11 பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

சங் 34:12 நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?

சங் 34:13 உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.

சங் 34:14 தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி, அதைத்தொடர்ந்து கொள்.

நீண்ட ஆயுசின் இரகசியங்கள்

1. பயத்திலிருந்து விடுபடவேண்டும் (சங் 34:4)
2. தேவனை நோக்கிப்பார்த்து பிரகாசமடைதல் (சங் 34:5)
3. நமது முகங்கள் வெட்கப்படக்கூடாது
4. இடுக்கண்களிலிருந்து விடுபடல் (சங் 34:6)
5. தெய்வீக விடுதலை (சங் 34:7)
6. கர்த்தருடைய ஜீவனை ருசிபார்க்க வேண்டும் (சங் 34:8)
7. கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்தல்
8. தேவனுக்கு பயப்படுதல் (சங் 34:7-9)
9. குறைவு இருக்கக்கூடாது (சங் 34:9-10)
10. முதலில் கர்த்தரைத் தேடவேண்டும் (சங் 34:10,15; மத் 6:33)
11. கர்த்தருடைய போதனையைக் கைகொள்ள வேண்டும் (சங் 34:11; 2தீமோ 3:15)
12. நாவைக் கட்டுப்படுத்த வேண்டும் (சங் 34:12-13)
13. தீமையை விட்டு விலகிட வேணடும் (சங் 34:14-16)
14. நன்மை செய்யவேண்டும் (சங் 34:14)
15. சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்து கொள்ளவேண்டும்
16. நொருங்குண்ட இருதயமும் நருங்குண்ட ஆவியும் வேண்டும் (சங் 34:18)
17. ஆத்துமா இரட்சிப்பு பெறவேண்டும் (சங் 34:22)
18. கவலையில்லாமல் ஜீவிக்க வேண்டும்

பொல்லாப்புப் பேசக்கூடாது

1. இதற்கு எதிரான பிரமாணம் (யாத் 22:28; எபே 4:25-31)
2. ஆயுசு காலத்தை சுருக்கிவிடும் (சங் 34:13; 1பேதுரு 3:9-10)
3. நியாயத்தீர்ப்பு வரும் (சங் 12:3-4; மத் 12:36-37; 1கொரி 6:10)

5. மீட்பரின் பதினைந்து விதமான ஊழியம்

சங் 34:15 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

சங் 34:16 தீமைசெய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

சங் 34:17 நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார்.

சங்கீதம் – தொகுப்புரை

34 அதிகாரம்

சங் 34:18 நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.

சங் 34:19 நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

சங் 34:20 அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப் படுவதில்லை.

சங் 34:21 தீமை துன்மார்க்கனைக் கொல்லும்; நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள்.

சங் 34:22 கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன்மேலும் குற்றஞ்சுமராது.

"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது" - (சங் 33:18-19; சங் 121:3-4; ஏசா 3:8)

"அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது" - (சங் 34:15-16)

நொறுங்குண்டது (broken) - שָׁבַר - shaw-bar' - 7665

வினைச்சொல் - முறி, முறித்துப்போடு, பிள, நொறுக்கு, உடைத்துப்போடு, உடை, முறித்துவிடு, அறு (to burst; break to pieces; crush; be shivered or shattered) - (சங் 34:18; சங் 51:17; ஏசா 61:1; லூக்கா 4:18)

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நொறுங்குண்ட காரியங்கள்

1. இருதயம் (சங் 34:18)
2. ஊற்றுக்கண் (ஆதி 7:11)
3. விதை நசுங்கியவன் (லேவி 21:20)
4. கற்பனை (எண் 15:31)
5. கப்பல்கள் (1இராஜா 22:48)
6. கர்த்தருடைய ஆலயம் (2நாளா 24:7)
7. சரீரங்கள் (2நாளா 25:12)
8. பலிபீடம் (2நாளா 34:7)
9. அலங்கம் (நெகே 1:3)
10. பற்கள் (யோபு 4:10)
11. தோல் (யோபு 7:5)
12. சிந்தனைகள் (யோபு 17:11)
13. அக்கிரமம் (யோபு 24:20)
14. புயம் (யோபு 31:22)
15. அம்பு (சங் 18:34)
16. ஆவி (சங் 51:17; நீதி 15:13; நீதி 17:22)
17. உடன்படிக்கைகள் (சங் 55:20)
18. பூமி (சங் 60:2)
19. அடைப்பு (சங் 80:12)
20. கதவுகள் (சங் 107:16)
21. ஆழங்கள் (நீதி 3:20)
22. பாதரட்சை (ஏசா 5:27)
23. தொட்டிகள் (எரே 2:13)
24. பட்டணங்கள் (எரே 4:26)
25. விக்கிரகங்கள் (எரே 50:2)
26. ராஜ்யங்கள் (தானி 2:35,42; தானி 11:4)
27. களஞ்சியங்கள் (யோவே 1:17)
28. துணிக்கைகள் (மத் 15:37)
29. விலங்குகள் (மாற்கு 5:4)

34 அதிகாரம்

30. அப்பம் (அப் 20:11; 2கொரி. 11:24)

31. ஓய்வுநாள் (யோவான் 5:18)

32. நியாயப்பிரமாணம் (யோவான் 7:23)

33. காலெலும்புகள் (யோவான் 19:31)

34. கிளைகள் (ரோமர் 11:17-19)

35. பிரிவினையாகிய நடுச்சுவர் (எபே 2:14)

நருங்குண்ட (contrite) - דַּכָּא - dak-kaw' - 1793

பெயரடை - நருங்குண்ட, நிர்த்தூணியான, நொறுங்குண்ட (crushed like powder; bruised) - (சங் 34:18; சங் 51:17; ஏசா 57:15; ஏசா 66:2).

தீர்க்கதரிசன எண் - 21

"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்" (சங் 34:19-20) - கிறிஸ்துவின் முதலாவது வருகையில் இது நிறைவேறிற்று.

துன்பங்கள் (afflictions) - רַע - rah – 7451

பெயரடை - (bad; evil; adversity; affliction; calamity; grief; sorrow; wretchedness) மனதுருக்கமற்ற, வன்கண்ணான, தொல்லையான, விசனம், துர்ச்செய்கையான, கேடான, அழிந்துபோன, கொடிய, தாழ்வான, கெட்டுப்போன, சஞ்சலமான, துர்க்கிரியை, சங்காரமுமான, பஞ்சமான, மனமடிவான, தீமை, அக்கிரமமான, பொல்லா, தீவினை, பொல்லாப்பு, துஷ்ட பொல்லாங்கு, துரோகம், வியாகுலமான, சஞ்சலமுள்ள, இக்கட்டு, தகாத, துக்கமான, இளப்பமான இடுக்கம், தீயோரான, துன்பம், ஆபத்தான, உபத்திரவமான, விரோதமான, கெட்டதான, கொடிதான, பழுதான, நல்லதல்ல, அவதூறு, அநியாயம், பாவம், துர்க்கருமம், தோஷம், துன்மார்க்கமான, பொல்லாதவனான, ஆகாத, தீங்கான, கேவலமான, தீயோரான - (சங் 34:19; சங் 107:39; எரே 48:16; ஒப 1:13; சக 1:15) துன்பம் ஒரு பாவம் அல்ல. இது பாவத்தினால் ஏற்படும் விளைவு (கலா 6:7-8). வேதத்தில் 180 துன்பங்களைக் குறித்து வாசிக்கிறோம். இவற்றில் 5 மட்டுமே சரீர வியாதியால் வரும் துன்பமாகும்.

துன்பத்தைக் குறித்த சத்தியங்கள்

1. விதைப்பு - அறுப்பு என்ற பிரமாணத்தின் பிரகாரம். கர்த்தர் இதை ஆளுகை செய்கிறார். (லேவி 26; சங் 80:5; ஏசா 9:1)

2. எவ்வளவு காலம் நீடிக்கும் என்று முடிவு செய்கிறார் (ஆதி 15:13-14; எண் 14:33; ஏசா 10:25; எரே 29:10)

3. வேண்டுமென்றே தேவன் அனுப்புவதில்லை (புல 3:33)

4. மனுஷன் துன்பத்தில் பிறந்திருக்கிறான் (யோபு 5:6-7)

5. பரிசுத்தவான்களுக்கு துன்பம் நியமிக்கப் பட்டிருக்கிறது (யோவான் 16:33; அப் 14:22; 1தெச 3:3; 1பேதுரு 5:9)

6. கடினமாக இருக்கும் (உபா 28; வெளி 7:14)

7. வருங்கால மகிமையைப் பார்க்கும்போது இலகுவாயிருக்கும் (அப் 20:23-24; ரோமர் 8:18; 2கொரி 4:17)

8. தற்காலிகமானது (சங் 30:5; சங் 103:9)

9. சிலருடைய இருதயத்தைக் கடினப்படுத்தும் (யாத் 4-12; நெகே 9:28-29)

34 அதிகாரம்

10. ஆசீர்வாதம் உண்டாகும் (சங் 119:71; யாக் 1:12)

11. துன்பத்திற்கு தவறான வியாக்கியானம் கூறப்படும்

12. துன்பத்தில் ஜெபங்கள் (ஆதி 32:11; 2நாளா33:12-13; சங் 6:1-4; சங் 31:1-17; சங் 38:1-10; சங் 51:1-17; ஏசா 38:2-19; அப் 4:29-30)

துன்பம் வருவதற்குக் காரணங்கள்

1. பாவம் (ஆதி 3:16; சங் 25:18; சங் 89:32)
2. வழிதப்புதல் (சங் 119:67)
3. இச்சகம் பேசுதல் நாவு (நீதி 26:28)
4. மனக்கசப்பு (ஆதி 16:4-11)
5. பெருமை (யோபு 33:14-29)
6. மனந்திரும்பாமை (நீதி 1:30-31; வெளி 2:21)
7. வருத்தம் அநுபவிக்கப் பிறத்தல் (யோபு 5:6)
8. மற்றவர்களுக்கு தீங்கு செய்தல் (ஆதி 27, ஆதி 32:11; ஆதி 37, ஆதி 42:21)
9. கடினமான இருதயம் (யாத் 4-12)
10. விக்கிரகாராதனை (நியா 10:6-10; 2இராஜா 17)
11. தேவனை மறத்தல் (1சாமு 12:9-10)
12. மாய்மாலம் (மத் 23)

துன்பம் வருவதன் நோக்கங்கள்

1. நல்ல கிரியை நடைபெறும் (சங் 119:71)
2. மனுஷனிடமுள்ள பெருமை மறையும் (யோபு 33:14-29)
3. தேவனுடைய உண்மை வெளிப்படும் (சங் 119:75)
4. மனுஷனுடைய விசுவாசம் சோதிக்கப்படும் (மாற்கு 4:17; யோபு 1-2; யாக் 5:10-11)
5. மனுஷனைப் புடமிட்டு சுத்தப்படுத்தும் (ஏசா 48:10; யோவான் 15:2; எபி 12:10-11)
6. வல்லமையும் கிருபையும் பெருகும் (ரோமர் 5:1-8; யாக் 1:2-4; யாக் 4:7; 1பேதுரு 5:9)
7. தேவனிடம் திரும்பி வர வழிநடத்தும் (ஓசி 5:15; யோபு 33:14-29)
8. மனுஷனைத் தாழ்மைப்படுத்தி திருத்தும் (2சாமு 12:14; சங் 89:30-32; எபி 12:5-6)
9. மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஆக்கும் (1கொரி 10:5,11)
10. அன்பை வெளிப்படுத்தும் (நீதி 3:11-12; எபி 12:5-10; வெளி. 3:19)
11. வெகுமதி வரும் (ரோமர் 8:17; 2கொரி 4:17; யாக் 1:12; 1பேதுரு 1:7; 1பேதுரு 4:14)
12. கீழ்ப்படிதலையும் சத்தியத்தையும் கற்றுக் கொள்ளும் (சங் 119:71; எபி 5:8; எபி 12:5-10)

துன்ப வேளையில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

1. உபத்திரவத்தை கேட்பார் (யோபு 34:28)
2. அவர்களை இரட்சிப்பார் (சங் 18:27)
3. அவர்களின் மேல் கிருபையாயிருப்பார் (ஏசா 49:13)
4. பயத்திலிருந்து அவர்களை விடுவிப்பார் (சங் 23:4)
5. அவர்களுடைய எல்லா இடுக்கண்களிலிருந்து விடுவிப்பார் (சங் 34:19; சங் 50:15)

34 அதிகாரம்

6. அவர்களை ஆதரிப்பார் (சங் 37:23-33; சங் 55:22)
7. பலன் தருவார் (மத் 5:10-12)
8. அவர்களுக்கு அடைக்கலமாவார் (சங் 9:9-10)
9. மண்ணென்று நினைவு கூருவார் (சங் 103:13)
10. அவர்களை மறைத்து காப்பார் (சங் 27:5)
11. அவர்களின் வியாகுலங்களை அறிந்திருக்கிறார் (சங் 31:7)
12. போதுமான கிருபை அளிப்பார் (2கொரி 12:9)

ஜனங்கள் துன்பப்படும் விதங்கள்

1. அடிமைத்தனம், அடக்குமுறை (ஆதி 15:13; ஆதி 31:50; யாத் 1:11-12; எபி 11:25)
2. பல்வேறு விதமான ஒடுக்கங்கள் (யாத் 22:22-23; யாக் 1:27; எபி 12:6)
3. குடும்பத்தின் இடுக்கண்கள் (ஆதி 16:1-11)
4. மலட்டுத்தன்மை (1சாமு 1:11)
5. சாபம் (2சாமு 16:12)
6. சிறையிலடைத்தல் (சங் 107:10)
7. உபத்திரவம் (மாற்கு 13:19; 2கொரி 2:4; 2கொரி 4:17; 2கொரி 8:2)
8. சிலுவையில் அறைதல் (ஏசா 53:4-7)
9. ஆத்துமாவைத் தாழ்மைப்படுத்தும் உபவாசம் (லேவி 16:29-31; எண் 29:7; எண் 30:13; ஏசா 58:3)
10. யுத்தத்தில் தோற்றுப்போதல் (எண் 24:24; 2இராஜா 17:20; நெகே. 1:3)
11. சரீர வேதனைகள் (நியா 16:5,6,19, 21-31)
12. ஏழ்மை, பசி (ரூத் 1:21; 1இராஜா 22:27; சங் 107:38-41; ஏசா 58:7-10)

துன்பங்களின் வகைகள்

1. ஒருவருக்கொருவர் துன்புறுத்துவார்கள் (ஆதி 15:13; ஆதி 31:42)
2. மனுஷர்கள், விதவைகளை ஒடுக்குவார்கள் (யாத் 22:22-23)
3. மனைவிகளை, கணவன்மார்கள் மோசமாக நடத்துவார்கள் (ஆதி 29:32; ஆதி 31:50)
4. எஜமானர்கள், அடிமைகளை அடக்குவார்கள் (யாத் 1:11-12; யாத் 3:7,17; யாத் 4:31; உபா 26:6-7)
5. ஜெயம் கொண்டவர்கள் தோற்றவர்களை துன்புறுத்துவார்கள் (எண் 24:24; நியா 16:5-31; ஏசா 9:1)
6. உபவாசத்தினால் ஆத்துமாவை துன்புறுத்திக் கொள்ளுவார்கள் (லேவி 16:29-31; ஏசா 58:5; யாக் 4:9)
7. துன்மார்க்கர், அயலகத்தாரை பல்வேறு வழிகளில் உபத்திரவப்படுத்துவார்கள் (சங் 89:22)
8. துன்மார்க்கர் நீதிமானை துன்புறுத்துவார்கள் (சங் 94:5; சங் 143:12; ஆமோ 5:12)
9. யூதர்களை புறஜாதியார் ஒடுக்குவார்கள் (ஏசா 51:23; ஆமோ 6:14; மத் 24:9)
10. அதிகமான பொறுப்புகள் (எண் 11:11)
11. கிறிஸ்துவின் பாடுகள் (ஏசா 53:4)
12. கர்த்தர் மனுஷருக்கு அனுமதிக்கும் கஷ்டங்கள் (யோபு 37:23; 1இராஜா 11:39; 2இராஜா 17:20; 2நாளா 6:26; எரே 31:28; நாகூம் 1:12)

சங்கீதம் – தொகுப்புரை

34 அதிகாரம்

துன்பங்களை அனுபவிப்பதற்கு எடுத்துக்காட்டுகள்

1. கர்த்தர் (ஏசா 63:9)
2. கிறிஸ்து - (ஏசா 53:7; கொலோ 1:24) கிறிஸ்து துன்பங்களை அநுபவித்தார். அவருக்கு சரீரத்தில் வியாதி இல்லை. ஆனாலும் அவருக்கு துன்பங்களும் பாடுகளும் உண்டாயிற்று
3. இஸ்ரவேல் (ஆதி 15:13)
4. ஆகார் (ஆதி 16:11)
5. யாக்கோபு (ஆதி 31:42; ஆதி 41:52)
6. யோசேப்பு (அப் 7:10)
7. யோபு (யோபு 10:15; யோபு 30:16,27; யாக் 5:10)
8. தாவீது (சங் 132:1)
9. மனாசே (2நாளா 33:12)
10. கெட்ட குமாரன் (லூக்கா 15:11-32)
11. பவுல் (2கொரி 1:6; 2தீமோ 3:11)
12. பரிசுத்தவான்கள் (கொலோ 1:24; எபி 11:37; 1பேதுரு 5:9)

நீதிமான்

நீதிமான் (righteous) - צַדִּיק - tsad-deek' - 6662

பெயரடை - நீதிமான், நீதியானவன், நீதிபரன், சன்மார்க்கன், நீதியுள்ளவன், யதார்த்தவான் (just; lawful; righteous)

நீதிமானின் அடையாளங்கள்

1. பாவத்துக்கு மரித்தல் (ரோமர் 6:2-7)
2. பாவத்துக்கு நீங்கி விடுதலை யாக்கப்படுதல் (ரோமர் 6:7,18,22)
3. புதுச்சிருஷ்டி (2கொரி 5:17-18)
4. மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைதல் (கலா 5:24)
5. இயேசு கிறிஸ்துவிலிருந்த சிந்தை (பிலி 2:5; 1யோவான் 2:6)
6. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் (எபே 6:6)
7. நீதிக்கு அடிமைகள் (ரோமர் 6:19)
8. பரிசுத்தமுள்ளவர்கள், குற்ற மில்லாதவர்கள் (எபே 1:4)
9. தயவும், மன உருக்கமுமுள்ளவர்கள் (எபே 4:32)
10. பொறுமையும், நீடிய சாந்தமுமுடையவர்கள் (கொலோ 1:11)
11. ஜெபம் பண்ணுவார்கள் (1தீமோ 2:1-4)
12. மன்னித்தல், இரங்குதல் ஆகிய பண்புடையவர்கள் (எபே 4:32; சங் 37:21)
13. பொய்ப்பேச்சை வெறுப்பார்கள் (நீதி 13:5)
14. துன்மார்க்கத்தை அருவருத்தல் (சங் 101:3-4)
15. தீமை செய்தலை விட்டுவிடுதல் (ஏசா 1:16-17)
16. நீதிக்கென்று விதைத்தல் (ஓசி 10:12; கலா 6:8)
17. நீதியைத் தேடுதல் (மத் 6:33)
18. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் (மத் 5:6)
19. பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள் (எபி 12:14)
20. கிறிஸ்துவை அறிக்கையிடுதல் (ரோமர் 10:9-10)
21. கிறிஸ்தவ கிருபைகளைக் கூட்டுவார்கள் (2பேதுரு 1:5-9)

சங்கீதம் – தொகுப்புரை

34 அதிகாரம்

நீதிமான் ஒப்பிடப்பட்டுள்ள காரியங்கள்

1. சூரியன் (நியா 5:31; மத் 13:43)
2. நட்சத்திரங்கள் (தானி 12:3)
3. வெளிச்சம் (மத் 5:14; பிலி 2:15)
4. சீயோன் பர்வதம் (சங் 125:1-2)
5. ஜீவனுள்ள கற்கள் (1பேதுரு 2:5)
6. மரங்கள் (சங் 1:3; சங் 52:8; சங் 92:12; எரே 17:8; ஓசி 14:6)
7. மலையின் மேல் இருக்கிற பட்டணம் (மத் 5:14)
8. கோதுமை (மத் 3:12; மத் 13:39)
9. உப்பு (மத் 5:13)
10. ஆடு (சங் 95:7; மத் 10:16; யோவான் 10)
11. போர்ச்சேவகன் (2தீமோ 2:3-4)
12. பந்தயச் சாலையில் ஓடுகிறவர்கள் (1கொரி 9:24)
13. மல்யுத்தம் பண்ணுகிறவன் (எபே 6:12; 2தீமோ 2:5)
14. சரீரத்தின் அவயவங்கள் (1கொரி 12:20,27)
15. சம்பத்து (மல் 3:17)
16. பொன் (யோபு 23:10)
17. கீழ்ப்படிகிற பிள்ளைகள் (1பேதுரு 1:14)

நீதிமானைப் பற்றிய பொதுவான சத்தியங்கள்

1. தேவனோடு அதிகாரம் பெற்றிருப்பார்கள் (ஆதி 18:23-33)
2. தேவனால் ஆதரிக்கப்படுவார்கள் (நீதி 2:7-8)
3. கர்த்தருடைய இரகசியம் நீதிமான்களோடே இருக்கிறது (நீதி 3:32)
4. நீதிமானுடைய பேர் புகழ் பெற்று விளங்கும் (நீதி 10:7)
5. நீதியின் பாதையில் கர்த்தர் நடத்துவார் (சங் 23:3)
6. இரட்சிப்பின் வஸ்திரங்களை உடுத்துவார் (ஏசா 61:10)
7. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது (சங் 34:15; 1பேதுரு 2:12)
8. நீதிமான்களுடைய விண்ணப்பங்களை கர்த்தர் கேட்கிறார் (சங் 34:15)
9. நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் (மத் 25:46)
10. எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுபடுவார்கள் (சங் 34:17)
11. சோதனையைத் தாங்கக்கூடிய திராணியையும், அதற்கு தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் (1கொரி 10:13)
12. நீதியின் கிரீடம் வைக்கப்படும் (2தீமோ 4:8)
13. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார் (சங் 1:6)
14. நீதிமானை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார் (சங் 5:12)
15. நீதிமானை சோதித்தறிகிறார் (சங் 11:5)
16. நீதிமான்களைக் கர்த்தர் தாங்குகிறார் (சங் 37:17)
17. நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங் 55:22)
18. கண்ணீரைத் துடைக்கிறார் (ஏசா 25:8; வெளி 21:4)

சங்கீதம் - தொகுப்புரை

34 அதிகாரம்

19. நீதிமானுக்குப் பலன் உண்டு (சங் 58:11)

20. நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் (சங் 37:29)

சங்கீதம் 34-இல் கர்த்தரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள பொதுவான காரியங்கள்

1. கர்த்தர் நோக்கமாயிருக்கிறார் (சங் 34:15)
2. கூப்பிடுதலைக் கேட்கிறார் (சங் 34:15,17)
3. தீமையை அற்றுப்போகப்பண்ணுகிறார் (சங் 34:16)
4. தீமையை நியாயந்தீர்க்கிறார்
5. உபத்திரவங்களிலிருந்து விடுவிக்கிறார் (சங் 34:17,19)
6. சமீபமாயிருக்கிறார் (சங் 34:18)
7. இரட்சிக்கிறார்
8. காப்பாற்றுகிறார் (சங் 34:20)
9. மீட்டுக்கொள்ளுகிறார் (சங் 34:22)
10. ஆசீர்வதிக்கிறார்

"அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" - இந்த வாக்கியம் யோவான் 19:31-33 இல் நிறைவேறிற்று. சங் 34:19 இல் நீதிமான் என்பது "கிறிஸ்து"வையே குறிக்கும் (சங் 34:19-20).

35 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்பிற்காக ஜெபம் பண்ணும் நான்காம் சங்கீதம்

பொருளடக்கம்

1. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று பதினெட்டு விண்ணப்பங்கள் - (35:1-8)
2. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வந்ததற்காக ஸ்தோத்திரம் - (35:9-10)
3. துன்மார்க்கனின் சுபாவங்களும் நீதிமானின் சுபாவங்களும் - துன்மார்க்கனின் பத்து விதமான பாவங்களும் - நீதிமானின் ஆறுவிதமான நற்கிரியைகளும் - (35:11-16)
4. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்றும் நீதிமானை நிலைநிறுத்த வேண்டுமென்றும் பதினாறு விண்ணப்பங்கள் - துன்மார்க்கரின் பத்து விதமான பாவங்கள் - (35:17-26)
5. நீதிமான் செலுத்தும் ஸ்தோத்திரம் - (35:27-28)

1. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று பதினெட்டு விண்ணப்பங்கள்

சங் 35:1 கர்த்தாவே, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி, என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும்.

சங் 35:2 நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்துநில்லும்.

சங் 35:3 என்னைத் துன்பப் படுத்துகிறவர்களோடு எதிர்த்துநின்று, ஈட்டியையோங்கி அவர்களை மறித்து; நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்.

சங் 35:4 என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் வெட்கப்பட்டுக் கலங்குவார்களாக; எனக்குத் தீங்கு செய்ய நினைக்கிறவர்கள் நாணமடைவார்களாக.

சங் 35:5 அவர்கள் காற்றுமுகத்தில் பறக்கும் பதரைப்போலாவார்களாக; கர்த்தருடைய தூதன் அவர்களைத் துரத்துவானாக.

சங் 35:6 அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருப்பதாக; கர்த்தருடைய தூதன் அவர்களைப் பின்தொடருவானாக

சங் 35:7 முகாந்தரமில்லாமல் எனக்காகத் தங்கள் வலையைக் குழியில் ஒளித்து வைத்தார்கள்; முகாந்தரமில்லாமல் என் ஆத்துமாவுக்குப் படுகுழி வெட்டினார்கள்.

சங் 35:8 அவன் நினையாத அழிவு அவனுக்கு வரவும், அவன் மறைவாய் வைத்த வலை அவனையே பிடிக்கவுங் கடவது; அவனே அந்தக் குழியில் விழுந்து அழிவானாக.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. கர்த்தாவே, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடும் (சங் 35:1).
2. எனக்காக யுத்தம் பண்ணும்.
3. கேடகத்தையும், பரிசையையும் பிடித்துக் கொள்ளும் (சங் 35:2).
4. எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும்.
5. ஈட்டியையோங்கி அவர்களை மறியும் (சங் 35:3).

35 அதிகாரம்

6. என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடு எதிர்த்து நில்லும்.

7. நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்

8. என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள் (சங் 35:4).

9. அவர்கள் வெட்கப்பட்டுப்போகும்படி செய்யும்

10. அவர்களை தோற்கடியும்.

11. அவர்கள் கலங்கும்படி செய்யும்.

12. காற்று முகத்தில் பறக்கும் பதரைப் போலாவார்களாக (சங் 35:5).

13. கர்த்தருடைய தூதன் அவர்களைத் துரத்துவானாக.

14. அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருக்கும்படிச் செய்யும் (சங் 35:6).

15. கர்த்தருடைய தூதன் அவர்களைப் பின்தொடருவானாக.

16. அவன் நினையாத அழிவு அவனுக்கு வரட்டும் (சங் 35:8).

17. அவன் வைத்த வலை அவனையே பிடிக்கட்டும்

18. என்னை அழிக்க வெட்டிய குழியில், அவனே விழுந்து அழிவானாக

19. சீக்கிரமாய் என்னை விடுவியும் (சங் 35:17).

20. அவர்களிடமிருந்து என் ஆத்துமாவை தப்புவியும்.

21. எனக்கு அருமையானதைச் சிங்கக் குட்டிகளுக்கு தப்புவியும்.

22. வீணாய் எனக்குச் சத்துருக்களானவர்கள் என்னிமித்தம் சந்தோஷியாமல் செய்யும் (சங் 35:19)

23. முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் கண் சிமிட்டாமல் இருப்பார்களாக.

24. கர்த்தாவே, மவுனமாயிராதேயும் (சங் 35:22)

25. எனக்குத் தூரமாகாதேயும்.

26. எனக்கு நியாயஞ்செய்யும் (சங் 35:23)

27. என் வழக்கைத் தீர்க்க எழுந்தருளும்.

28. விழித்துக்கொண்டு எழுந்தருளும்.

29. கர்த்தாவே நியாயம் விசாரியும் (சங் 35:24)

30. நீதியின் படி என்னை நியாயம் விசாரியும்.

31. என்னைக் குறித்து அவர்களை மகிழவொட்டாதிரும்.

32. அவர்கள் தங்கள் இருதயத்திலே, இதுவே நாங்கள் விரும்பின அழிவு என்று சொல்லாதபடி செய்யும் (சங் 35:25).

33. அவனை விழுங்கிவிட்டோம் என்று பேசாதபடி செய்யும்.

34. அவர்கள் வெட்கி போகும்படி செய்யும் (சங் 35:26).

35. எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச் சந்தோஷிக்கிறவர்கள் நாணும்படி செய்யும்.

36. வெட்கத்தால் அவர்களை மூடும்படி செய்யும்.

37. எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டுகிறவர்கள் வெட்கத்தாலும் இலச்சையாலும் மூடப்படக்கடவர்கள்.

கர்த்தருடைய தூதன் **(angel of the LORD)** - (சங் 34:7)

ஈட்டி **(spear)- חֲנִית - khan-eeth' - 2595**

35 அதிகாரம்

பெ.பெ.சொ. - ஈட்டி **(lance; javelin; spear)** - *(சங் 35:3; சங் 46:9; சங் 57:4; ஏசா 2:4; மீகா 4:3).*

இருள் **(dark)** - חֹשֶׁךְ - **kho-shek'** - **2822**

ஆ.பெ.சொ. - இருள், காரிருள், அந்தகாரம், இருட்டுதல். இரவின் இருள் **(darkness of night)** - *(சங் 35:6; சங் 88:12; யோசு 2:5; யோபு 12:25; யோபு 24:16; ஏசா 45:19; எசே 8:12).* எனக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற வலையில் *(சங் 35:6; எரே 23:12).* என் சத்துருக்கள் இடறிவிழுவார்களாக. *(சங் 35:5-8).*

பின்தொடர் **(pursue)** - רָדַף - **raw-daf'** - **7291**

வினைச்சொல் - பின்தொடர், துரத்து, ஒட்டு, தொடர், தேடு, துன்பப்படுத்து, தரித்திரு, தேடப்போ, தொடர்ந்தவர்களாயிரு, பின்பற்று, வேட்டையாடு, தேடுகிறவர்களாயிரு, திரி, நாடு, பாரஞ்சுமந்திரு - *(சங் 35:3, 6; சங் 7:1,5; சங் 31:15; சங் 69:26; சங் 71:11; சங் 83:15; சங் 109:16; சங் 119:84, 86, 161; சங் 143:3; உபா 30:7; யோபு 19:22, 28; எரே 17:18; புல 3:43, 66).*

படுகுழி **(pit)** - שַׁחַת - **shakh'-ath** - **7845**

பெ.பெ.சொ. - சேற்றுப்பள்ளம், அழிவு, படுகுழி, பாதாளம் **(pit of destruction covered with a net; corruption)** - *(சங் 35:7; சங் 9:15; சங் 30:9; சங் 94:13; யோபு 33:18,24,28,30; நீதி 26:27; ஏசா 38:17; ஏசா 51:14; எசே 19:4, 8; எசே 28:8).*

2. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வந்ததற்காக ஸ்தோத்திரம்

சங் 35:9 என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து, அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.

சங் 35:10 சிறுமைப்பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கொப்பானவர் யார் கர்த்தாவே, என்று என் எலும்புகளெல்லாம் சொல்லும்.

“என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து, அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்”. ஏனெனில் கர்த்தர் என் சத்துருக்களிடமிருந்து என்னை இரட்சித்தார். அவர்களை அழித்தார். *(சங் 35:8-9)*

கர்த்தருக்கு ஒப்பானவர் கீழ்க்கண்ட காரியங்களில் ஒருவருமில்லை

1. மீட்பு *(சங் 35:10).*
2. வல்லமை *(யாத் 9:14; சங் 89:8).*
3. மற்ற தேவர்களுடன் ஒப்பிடுதல் *(யாத் 15:11)*
4. பரிசுத்தம் *(யாத் 15:11; 1சாமு 2:2)*
5. மாட்சிமை *(உபா 33:26)*
6. ஸ்திரத்தன்மை, பெலன் *(1சாமு 2:2)*
7. மகத்துவம் *(2சாமு 7:22)*
8. உடன்படிக்கையையும், கிருபையையும் காத்தல் *(1இராஜா 8:23)*
9. நீதி *(சங் 71:19)*
10. கிரியைகள் *(சங் 86:8)*
11. விசுவாசம் *(சங் 89:8)*
12. வானங்களில் கர்த்தருடைய மகிமை *(சங் 113:4-5)*
13. அனைத்திலும் திட்டம் பண்ணுதல் *(ஏசா 46:5-10)*

35 அதிகாரம்

14. ராஜ்யபாரம் பண்ணுதல் (எரே 10:6-7)

15. மன்னித்தல் (மீகா 7:18)

கர்த்தர் மனுஷனைத் தப்புவிக்கும் பல்மான காரியங்கள்

1. மோசேயின் பிரமாணம் (ரோமர் 3:19-20; ரோமர் 7:1-6; 2கொரி 3:6; கலா 3:10-11)
2. பாவம் (ரோமர் 5:21; ரோமர் 6:7-23; ரோமர் 8:12-13)
3. உலகம் (யோவான் 16:33; ரோமர் 12:1-2)
4. சுயம் (ரோமர் 7:7-24; ரோமர் 8: 1-13)
5. வியாதி (மத் 8:17; யோவான் 10:10; 1பேதுரு 2:24)
6. மரணம் (எபி 2:9-18; 1கொரி 15:35-54)
7. சாத்தான் (கொலோ. 2:14; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:18)

3. துன்மார்க்கனின் சுபாவங்களும் நீதிமானின் சுபாவங்களும் - துன்மார்க்கனின் பத்து விதமான பாவங்களும் - நீதிமானின் ஆறுவிதமான நற்கிரியைகளும்

சங் 35:11 கொடுமையான சாட்சிகள் எழும்பி, நான் அறியாததை என்னிடத்தில் கேட்கிறார்கள்.

சங் 35:12 நான் செய்த நன்மைக்குப் பதிலாகத் தீமைசெய்கிறார்கள்; என் ஆத்துமா திக்கற்றுப்போகப் பார்க்கிறார்கள்.

சங் 35:13 அவர்கள் வியாதியாயிருந்தபோது இரட்டு என் உடுப்பாயிருந்தது; நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரப்படுத்தினேன்; என் ஜெபமும் என் மடியிலே திரும்பவந்தது.

சங் 35:14 நான் அவனை என் சிநேகிதனாகவும் சகோதரனாகவும் பாவித்து நடந்துகொண்டேன்; தாய்க்காகத் துக்கிக்கிறவனைப்போல் துக்கவஸ்திரம் தரித்துத் தலைகவிழ்ந்து நடந்தேன்.

சங் 35:15 ஆனாலும் எனக்கு ஆபத்துண்டானபோது அவர்கள் சந்தோஷப்பட்டுக் கூட்டங்கூடினார்கள்; நீசரும் நான் அறியாதவர்களும் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்.

சங் 35:16 அப்பத்திற்காக இச்சகம்பேசுகிற பரியாசக்காரரோடே சேர்ந்துகொண்டு என்பேரில் பற்கடிக்கிறார்கள்.

துன்மார்க்கரின் பாவங்கள்

1. கொடுமையான சாட்சிகளாக எழும்புவார்கள் (சங் 35:11)
2. மற்றவர்களை தவறாக குற்றஞ்சாட்டுதல்
3. நன்மைக்குப் பதில் தீமை செய்தல் (சங் 35:12)
4. மற்றவர்களை அழிக்க வகைதேடுதல்
5. மற்றவர்களுக்கு ஆபத்துண்டான போது சந்தோஷப்படுதல் (சங் 35:15)
6. பாவம் செய்வதற்கு கூட்டங்கூடுதல்
7. கொலை செய்வதற்கு இரகசியமாக திட்டம் பண்ணுதல்
8. நீதிமானை தாக்குவார்கள் (சங் 35:16)
9. இச்சகம் பேசுகிற பரியாசக்காரரோடே சேர்வார்கள்.
10. அடுத்தவர்களை வெறுத்து அவதூறு சொல்வார்கள்.

நீதிமானின் நற்கிரியைகள்

1. சத்துருக்களுக்கு நன்மையானதை மட்டும் செய்வார்கள் (சங் 35:12).

35 அதிகாரம்

2. வியாதியின் போது இரக்கம் காட்டுவார்கள்(சங் 35:13).

3. வியாதியாயிருக்கிற சத்துருக்களுக்காக உபவாசம் இருப்பார்கள்

4. சத்துருக்களுக்காக ஜெபிப்பார்கள்

5. விரோதம் பாராட்டாமல் சகோதரனாகவும் சிநேகிதனாகவும் பாவித்து நடப்பார்கள் (சங் 35:14).

6. சத்துருக்களுக்காக துக்க வஸ்திரம் தரிப்பார்கள்.

நான் துன்மார்க்கருக்காக ஜெபித்தேன். ஆனால் அவர்களுடைய பாவத்தின் நிமித்தம் தேவன் அவர்களை இரட்சிக்கவில்லை. ஆயினும் நான் அவர்களுக்காக ஜெபித்ததினாலும் அவர்கள் மீது இரக்கமாயிருந்ததாலும் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார்.

நான் அவனை என் சிநேகிதனாகவும் சகோதரனாகவும் பாவித்து நடந்துகொண்டேன். அவன் செய்த தீமைக்குப் பதிலாக அவனுக்கு நன்மை செய்தேன். (ரோமர் 12:14-21)

தீர்க்கதரிசன எண் - 22

"எனக்கு ஆபத்துண்டானபோது அவர்கள் சந்தோஷப்பட்டுக் கூட்டங்கூடினார்கள்; நீசரும் நான் அறியாதவர்களும் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்..............." (சங் 35:15- 21) - இரண்டு முறை இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தாவீது, கிறிஸ்து (சங் 36:8)

"கூட்டங்கூடினார்கள்" - தாவீது (2சாமு 15-20). மேசியா - (அப் 4:27)

நீசர் (abjects) - נָכֶה - nay-keh' - 5222

பெயரடை - நீசர். கொலை செய்வதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட நீசன். (smiters; probably hired assassins) இப்பேர்ப்பட்ட நீசர்கள் தாவீதையும் மேசியாவையும் கொல்லுவதற்கு எல்லா இடங்களிலும் பதிவிருந்தார்கள்.

"ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்". இது மேசியா அனுபவித்த பாடு ஆகும். (சங் 35:15-16; மத் 26:3,4)

"அப்பத்திற்காக இச்சகம்பேசுகிற பரியாசக்காரரோடே சேர்ந்துகொண்டு என்பேரில் பற்கடிக்கிறார்கள்" - ஏரோது இயேசுவைப் பரியாசம் பண்ணியதை இது குறிக்கும் (லூக்கா 23:6-12)

4. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்றும் நீதிமானை நிலைநிறுத்த வேண்டுமென்றும் பதினாறு விண்ணப்பங்கள் - துன்மார்க்கரின் பத்து விதமான பாவங்கள்

சங் 35:17 ஆண்டவரே, எதுவரைக்கும் இதைப் பார்த்துக்கொண்டிருப்பீர்? என் ஆத்துமாவை அழிவுக்கும், எனக்கு அருமையானதைச் சிங்கக்குட்டிகளுக்கும் தப்புவியும்.

சங் 35:18 மகா சபையிலே உம்மைத் துதிப்பேன், திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன்.

சங் 35:19 வீணாய் எனக்குச் சத்துருக்களானவர்கள் என்னிமித்தம் சந்தோஷியாமலும், முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் கண் சிமிட்டாமலும் இருப்பார்களாக.

சங் 35:20 அவர்கள் சமாதானமாய்ப் பேசாமல், தேசத்திலே அமைதலாயிருக்கிறவர்களுக்கு விரோதமாய் வஞ்சகமான காரியங்களைக் கருதுகிறார்கள்.

சங் 35:21 எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரிவாய்த் திறந்து, ஆ ஆ, ஆ ஆ, எங்கள் கண் கண்டது என்கிறார்கள்.

35 அதிகாரம்

சங் 35:22 கர்த்தாவே, நீர் இதைக் கண்டீர், மவுனமாயிராதேயும்; ஆண்டவரே, எனக்குத் தூரமாகாதேயும்.

சங் 35:23 என் தேவனே, என் ஆண்டவரே, எனக்கு நியாயஞ்செய்யவும் என் வழக்கைத் தீர்க்கவும் விழித்துக்கொண்டு எழுந்தருளும்.

சங் 35:24 என் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நீதியின்படி என்னை நியாயம் விசாரியும், என்னைக்குறித்து அவர்களை மகிழவொட்டாதிரும்

சங் 35:25 அவர்கள் தங்கள் இருதயத்திலே: ஆ, ஆ, இதுவே நாங்கள் விரும்பினது என்று சொல்லாதபடிக்கும், அவனை விழுங்கிவிட்டோம் என்று பேசாதபடிக்கும் செய்யும்.

சங் 35:26 எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச் சந்தோஷிக்கிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி, எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டுகிறவர்கள் வெட்கத்தாலும் இலச்சையாலும் மூடப்படக்கடவர்கள்.

“மகா சபையிலே உம்மைத் துதிப்பேன், திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன்” - இது போன்ற வாக்கியம் மேசியாவைக் குறித்தும் கூறப்பட்டிருக்கிறது. (சங் 22:22; எபி 2:12)

“முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள்” - இந்த வாக்கியம் யோவான் 15:25 இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (சங் 35:7; சங் 69:4; சங் 109:3)

“எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரிவாய்த் திறந்து, ஆ, ஆ, ஆ, ஆ, எங்கள் கண் கண்டது என்கிறார்கள்” - இது ஒரு தூஷண வார்த்தை - அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்றுநாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று இயேசுவைத் தூஷித்தார்கள். (மாற்கு 15:29, 30; சங் 40:15; சங் 70:3)

விழித்துக்கொள் (Stir up) - עוּר - oor - 5782

வினைச்சொல் - விழி, விழித்துக்கொள், எழும்பு, விழித்திரு, எழுந்தருளு, ஓங்கு, எழும்பப்பண்ணு, நேரிடு, இடு, ஏவு, எழுப்பு, கலைத்திரு, புறப்படு, உத்தரவு, கொடுக்கிறவனாயிரு **(to awake or stir self up to action)** - (சங் 35:23; சங்78:38; உபா 32:11; 1நாளா 5:26; 1நாளா 21:16; 1நாளா 36:22; எஸ்றா 1:1; உன் 2:7; உன் 3:5; உன் 8:4; ஏசா 13:17; ஏசா 42:13; ஏசா 64:7).

“என் தேவனே, என் ஆண்டவரே” - இது போன்ற வாக்கியம் (யோவான் 20:28).

நியாயம் விசாரி (Judge) - שָׁפַט - shaw-fat' - 8199

வினைச்சொல் - தீர், நியாயம் விசாரி, தீர்ப்பு செய், நியாயந்தீர், நியாயம் பேசு, நீதிசெய், வழக்காடு, நியாயாதிபதி, தீர்க்கதரிசி, மணியக்காரர், வழக்கு, ஆக்கினை **(to act as a magistrate; vindicate)** - தாவீது தான் அநியாயம் செய்யவில்லை என்பதில் உறுதியாக இருந்தான். ஆகையினால் தேவன் தன்னை நீதி விசாரிக்குமாறு கூறுகிறான் (சங் 35:24; சங் 7:8; சங் 26:1; சங் 43:1) (ஆதி 16:5; ஆதி 31:53; யாத் 5:21). “நியாய மண்டபத்தில் வழங்கப்படும் தீர்ப்பு” **(ordinary judgment in courts of justice)** - (யாத் 18:13-26; உபா. 16:18; உபா 25:1; நியா 3:10; நியா 4:4; ஏசா 2:4; ஏசா 11:4; ஏசா 16:5).

“எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச் சந்தோஷிக்கிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணக்கடவர்கள்” சவுலும் அவனுடைய சேனையும் தோல்வியுற்ற போது, இந்த விண்ணப்பம் நிறைவேறிற்று (1சாமு 31).

35 அதிகாரம்

வெட்கத்தாலும் இலச்சையாலும் மூடப்படக் கடவர்கள். (சங் 109:29; சங் 132:18)

துன்மார்க்கரின் பாவங்கள்

1. துன்மார்க்கர்கள், மற்றவர்களின் அழிவைத் தேடுவார்கள் சங் 35:19).
2. நீதிமானுக்கு விரோதியாய் இருப்பார்கள்.
3. முகாந்தரமில்லாமல் பகைப்பார்கள்.
4. யுத்தத்தைப் பற்றியே விடாமல் தொடர்ந்து பேசுவார்கள் (சங் 35:20).
5. விரோதமாய் வஞ்சகமான காரியங்களைக் கருதுவார்கள்.
6. நீதிமானைக் குற்றப்படுத்துவார்கள் (சங் 35:21)
7. நீதிமான் அழிய வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள் (சங் 35:25)
8. நீதிமானை விழுங்கப் பார்க்கிறார்கள்
9. மற்றவர்களுக்கு நேரிடும் ஆபத்துக்காக சந்தோஷப்படுவார்கள் (சங் 35:26)
10. தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு விரோதமாக பெருமை பாராட்டுவார்கள்

5. நீதிமான் செலுத்தும் ஸ்தோத்திரம்

சங் 35:27 என் நீதிவிளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ்ந்து, தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்போதும் சொல்லக்கடவர்கள்.

சங் 35:28 என் நாவு உமது நீதியையும், நாள்முழுவதும் உமது துதியையும் சொல்லிக் கொண்டிருக்கும்.

"தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக" - கர்த்தர் தமது ஊழியக்காரருடைய சுகத்தை விரும்புகிறவர். நீதிமான்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் (சங் 35:27-28) துன்மார்க்கரைத் தண்டிக்க வேண்டும் என்றும் (சங் 35:17-26) தாவீது விண்ணப்பம் செய்கிறான்.

"என் நாவு உமது நீதியையும், நாள்முழுவதும் உமது துதியையும் சொல்லிக்கொண்டிருக்கும்". கர்த்தர் தனது ஜெபத்திற்குப் பதில் கொடுக்கும் போது, அவரை என் நாவு எப்போதும் துதிப்பதாக என்று தாவீது இந்த சங்கீதத்தில் (சங் 35:9) இரண்டு முறை வாக்குப் பண்ணுகிறான்.

36 அதிகாரம்

(கர்த்தருடைய தாசனாகிய தாவீது இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த சங்கீதம்.)

துன்மார்க்கனின் இரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. துன்மார்க்கனின் பத்து பாவங்கள் - (36:1-4)
2. தேவனுடைய பத்து குணாதிசயங்களும் நீதிமானின் மீது ஆசீர்வாதங்களும் - (36:5-9)
3. நீதிமான்களுக்காக நான்கு விண்ணப்பங்கள் - (36:10-11)
4. துன்மார்க்கனின் முடிவு - (36:12)

1. துன்மார்க்கனின் பத்து பாவங்கள்

சங் 36:1 துன்மார்க்கனுடைய துரோகப்பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும்; அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை.

சங் 36:2 அவன், தன் அக்கிரமம் அருவருப்பானதென்று காணப்படுமளவும், தன் பார்வைக்கேற்றபடி தனக்குத்தானே இச்சகம் பேசுகிறான்.

சங் 36:3 அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது; புத்தியாய் நடந்துகொள்வதையும் நன்மை செய்வதையும் விட்டுவிட்டான்.

சங் 36:4 அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசித்து, நல்லதல்லாத வழியிலே நிலைத்து, பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்.

துன்மார்க்கனின் பாவங்கள்

1. துன்மார்க்கன், கர்த்தருடைய பிரமாணத்தை மீறுவான் (சங் 36:1)
2. அவனுடைய கண்களுக்கு முன் தெய்வபயம் இல்லை
3. தனக்குத்தானே இச்சகம் பேசுகிறான் (சங் 36:2)
4. அவன் அக்கிரமம் அருவருப்பானதாக இருக்கும்
5. அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது (சங் 36:3)
6. புத்தியாய் நடந்துகொள்வதை விட்டுவிட்டான்
7. நன்மை செய்வதையும் விட்டுவிட்டான்
8. அவன் அக்கிரமத்தை யோசிக்கிறான் (சங் 36:4)
9. நல்லதல்லாத வழியிலே நிலைக்கிறான்
10. பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான், பாவத்தை விரும்புகிறான்

"துன்மார்க்கனுடைய துரோகப்பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும்" - இது குழப்பமான மொழிபெயர்ப்பு. ஏனெனில் துன்மார்க்கனின் துரோகப் பேச்சு நீதிமானின் இருதயத்திற்குத் தெரியவாய்ப்பில்லை. எனவே, இதை இவ்வாறு மொழி பெயர்க்கலாம். "துன்மார்க்கனுடைய துரோகப் பேச்சு அவனுடைய இருதயத்தில் இருக்கிறது" அல்லது "துன்மார்க்கனின் இருதயம் பாவத்தைக் கர்ப்பம் தரிக்கிறது. ஏனெனில் அவனிடம் தேவ பயமில்லை". (The speech of rebellion to the wicked is in the midst of his heart"; or "The ungodly conceives wickedness in his own heart, for there is no fear of God before his eyes) இருதயத்தின் நினைவை வாய் பேசும் (மாற்கு 7:19-23). பிசாசின் சுபாவமாகிய பாவ ஆவி மனுஷனுக்குள் இருக்கிறது. (யோவான் 8:44; எபே 2:1-3; 1யோவான் 3:8)

சங்கீதம் - தொகுப்புரை

36 அதிகாரம்

"அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை" ரோமர் 3:18-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

இச்சகம்பேசு (flattereth) - חָלַק - khaw-lak' - 2505

வினைச்சொல் - இச்சகம்பேசு, மெல்லியதாயிரு, முகஸ்துதிசெய், பகிரக்கடவாய் **(to make smooth; flatter)** (சங் 36:2; சங் 5:9; நீதி 2:16; நீதி 7:5; நீதி 28:23; நீதி 29:5) - தன்னுடைய அக்கிரமம் அருவருப்பானது என்று துன்மார்க்கன் உணர வேண்டும். அதுவரையிலும் அவனுடைய ஜீவியம் தாறுமாறாகவே இருக்கும்.

"அவன், தன் அக்கிரமம் அருவருப்பானதென்று காணப்படுமளவும்" - தான் ஒரு துன்மார்க்கன் என்று உணரும்போது, தனது அக்கிரமத்தை அவன் வெறுக்க ஆரம்பிப்பான்.

நல்லதல்லாத காரியங்கள்

1. மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல (ஆதி 2:18)
2. அளவுக்கு மீறி செய்கிற காரியம் நல்லதல்ல (யாத் 18:17)
3. பொறுப்பிலிருந்து தவறுதல் (1சாமு 26:16)
4. சிறுமைப்பட்டவர்களை ஒடுக்குதல் (நெகே 5:9)
5. நன்மையானவற்றுக்கு எதிராக அக்கிரமத்தை யோசித்தல் (சங் 36:4)
6. வழக்கிலே நீதிமானைத் தோற்கடித்தல் (நீதி 18:5)
7. ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல (நீதி 19:2)
8. கள்ளத்தராசு நல்லதல்ல (நீதி 20:23)
9. தன்னைத்தானே புகழ்தல், மகிமைப் படுத்துதல் நல்லதல்ல (நீதி 25:21)
10. முகதாட்சிணியம் நல்லதல்ல (நீதி 28:21)

"நன்மை செய்வதையும் விட்டுவிட்டான்" - தனக்கும் நீதிக்கும் இடையிலுள்ள தொடர்பை முற்றிலுமாக அறுத்தெறிந்து விட்டான்.

2. தேவனுடைய பத்து குணாதிசயங்களும் நீதிமானின் மீது ஆசீர்வாதங்களும்

சங் 36:5 கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது.

சங் 36:6 உமது நீதி மகத்தான பர்வதங்கள் போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது; கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர்.

சங் 36:7 தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.

சங் 36:8 உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்.

சங் 36:9 ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.

தேவனுடைய குணாதிசயங்கள்

1. கிருபை - வானங்களை போல உயர்ந்தது (சங் 36:5)
2. சத்தியம் - மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது

36 அதிகாரம்

3. நீதி - பர்வதங்களை போல மகத்தானது (சங் 36:6)
4. நியாயங்கள் - ஆழமானவை
5. காப்பாற்றுதல் - வியாப்பித்திருக்கிறது
6. கிருபை - அருமையானது (சங் 36:7)
7. சம்பூரணம் - முழுமையானது (சங் 36:8)
8. திருப்தி - பேரின்ப நதி (சங் 36:9)
9. ஜீவன் - ஜீவ ஊற்று
10. வெளிச்சம் - சத்தியம்

"உமது செட்டைகளின் நிழலிலே" - பாதுகாப்பிற்கு அடையாளம் (சங் 17:8; சங் 57:1; சங் 61:4; சங் 63:7; சங் 91:4; யாத் 19:4; ரூத் 2:12; மல் 4:2; மத் 23:37)

தீர்க்கதரிசன எண் - 23

"உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவர்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்........." (சங் 36:8-9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பரிசுத்தவான்கள் பரலோகத்தில் நித்தியமாக இருக்கப்போகும் காலத்தை இது குறிக்கும்.

"ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்" - ஜீவனும் வெளிச்சமும் பொதுவாக இணைந்தே கூறப்படுகிறது (சங் 56:13; யோபு 3:20; நீதி 16:15; யோவான் 1:4-9)

3. நீதிமான்களுக்காக நான்கு விண்ணப்பங்கள் - (32:1,7; 33:18; 40:11; 43:1)

சங் 36:10 உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும்.

சங் 36:11 பெருமைக்காரரின் கால் என்மேல் வராமலும், துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக.

நீதிமானுக்காக ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. உம்மை அறிந்தவர்கள் மேல் உமது கிருபையைப் பாராட்டியருளும் (சங் 36:5,6,10)
2. செம்மையான இருதயமுள்ளவர்கள் மேல் உமது நீதியைப் பாராட்டியருளும் (சங் 36:10)
3. பெருமைக்காரரின் கால் என்மேல் வராமல் இருக்கும்படி செய்யும் (சங் 36:11)
4. துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமல் இருக்கட்டும்

4. துன்மார்க்கனின் முடிவு - (மத் 13:40; 25:46)

சங் 36:12 அதோ அக்கிரமக்காரர் விழுந்தார்கள்; எழுந்திருக்கமாட்டாமல் தள்ளுண்டுபோனார்கள்.

"அதோ அக்கிரமக்காரர் விழுந்தார்கள்; எழுந்திருக்கமாட்டாமல் தள்ளுண்டு போனார்கள்" - துன்மார்க்கர் பெருமையில் விழுவார்கள். அவர்களால் அதிலிருந்து எழுந்திருக்க முடியாது சங் 36:11. லூசிபர் தன் பெருமையினால் விழுந்தான் (எசே 28:11-17). மனுஷர் வீழ்ந்து போவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று பெருமையே (எசே 36:12; சங் 31:20; சங் 73:6; நீதி 16:18; மாற்கு 7:22; 1யோவான் 2:16).

37 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

மூன்றாவது போதக சங்கீதம் - ஆசீர்வாதங்கள், சாபங்கள் ஆகியவற்றைப் பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. பதிமூன்று கட்டளைகள் - கீழ்ப் படிதலின் பத்து ஆசீர்வாதங்கள் - (37:1-11)
2. துன்மார்க்கனின் பத்து விதமான விதைப்பும் அறுப்பும் - (37:12-15)
3. நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் இடையே காணப்படும் ஐந்து விதமான வேற்றுமைகள் - (37:16-22)
4. நீதிமானின் ஏழு விதமான ஆசீர்வாதங்கள் - (37:23-26)
5. மூன்று கட்டளைகள் - நீதிமானின் பத்துவிதமான ஆசீர்வாதங்கள் - துன்மார்க்கனின் இரண்டு விதமான பாவங்களும் சாபங்களும் - (37:27-33)
6. நான்கு கட்டளைகள் - நீதிமான், துன்மார்க்கன் ஆகியோரின் முடிவு - (37:34-38)
7. நீதிமானுக்கு அருளப்படும் ஆறு ஆசீர்வாதங்கள் - ஆசீர்வாதங்களுக்கான காரணங்கள் - (37:39-40)

1. பதிமூன்று கட்டளைகள் - கீழ்ப்படிதலின் பத்து ஆசீர்வாதங்கள்

சங் 37:1 பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே.

சங் 37:2 அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும் பூண்டைப் போல் வாடிப்போவார்கள்.

சங் 37:3 கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.

சங் 37:4 கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.

சங் 37:5 உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

சங் 37:6 உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப் பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்.

சங் 37:7 கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு; காரிய சித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.

சங் 37:8 கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.

சங் 37:9 பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

சங் 37:10 இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை.

சங் 37:11 சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மன மகிழ்ச்சியாயிருப்பார்கள்.

எரிச்சலாகு (Fret) - חָרָה - khaw-raw' - 2734

37 அதிகாரம்

வினைச்சொல் - எரிச்சலாகு, கோபமாயிரு, விசனமாயிரு, மூண்டது, ஜாக்கிரதையாயிரு, ஓடு, உலாவு, பற்றியெரி, மூளு, எரி - கோபங்கொள் (ஆதி 30:2; ஆதி 39:19; யாத் 4:14; எண் 11:1, 10, 13), கோபம் மூண்டது **(grew hot)** (யாத் 22:24; யாத் 32:10, 11, 19, 22; நியா 2:14,20; நியா 3:8; நியா 6:39), கோபம் மீள்தல், எரிச்சல் **(wroth)** (ஆதி 4:5,6; ஆதி 31:36; ஆதி 34:7; எண் 16:15; நெகே 4:1,7; சங் 18:7), எரிச்சல் **(incensed)** (ஏசா 41:11; ஏசா 45:24).

சங்கீதம் 37 - இல் கூறப்பட்டுள்ள கட்டளைகள்

1. பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே (சங் 37:1)
2. நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே
3. கர்த்தர் மேல் நம்பிக்கையாயிரு (சங் 37:3,5)
4. நன்மை செய் (சங் 37:3, 27)
5. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு (சங் 37:4)
6. உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடு (சங் 37:5)
7. கர்த்தரை நோக்கி அமர்ந்திரு (சங் 37:7)
8. கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திரு (சங் 37:7,34)
9. காரியசித்தியுள்ளவன் மேல் எரிச்சலாகாதே
10. தீவினைகளைச் செய்கிற மனுஷன் மேல் எரிச்சலாகாதே
11. கோபத்தை நெகிழ்ந்து விடு (சங் 37:8)
12. உக்கிரத்தை விட்டுவிடு
13. பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்
14. தீமையை விட்டு விலகியிரு (சங் 37:27)
15. கர்த்தருடைய வழியைக் கைக்கொள் (சங் 37:34)
16. உத்தமனை நோக்கியிரு (சங் 37:37)
17. செம்மையானவனைப் பார்த்திரு

"அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள்"

தீர்க்கதரிசன எண் - 24

"அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல் வாடிப்போவார்கள்" (சங் 37:2) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஆயிர வருஷ அரசாட்சியில் முழுமையாக நிறைவேறும் (வெளி 20:7-10).

"தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" - சங்கீதம் 37 இல் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்தால், அடுத்து கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் எல்லாம் நமக்குள் நிறைவேறும்.

சங்கீதம் - 37 இல் கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள்

1. நித்திய தேசத்தில் குடியிருப்பாய் (சங் 37:3, 29)
2. சத்தியத்தை மேய்ந்துகொள்வாய் (சங் 37:3)
3. உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார் (சங் 37:4)
4. காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் (சங் 37:5)

37 அதிகாரம்

5. நீதியை வெளிச்சத்தைப் போல விளங்கப்பண்ணுவார் (சங் 37:6)

6. நியாயத்தைப் பட்டப்பகலைப் போல விளங்கப்பண்ணுவார்

7. பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள் (சங் 37:9,20,22,34,38)

8. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (சங் 37:9,11,22,29,34; மத் 5:5)

9. சமாதானம் மிகுதியாயிருக்கும் (சங் 37:11)

10. நீதிமான்களைக் கர்த்தர் தாங்குகிறார் (சங் 37:17,24)

11. அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும் (சங் 37:18)

12. ஆபத்துக் காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருப்பார்கள் (சங் 37:19)

13. பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்

14. விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை (சங் 37:24)

15. கர்த்தர் பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை (சங் 37:28)

16. அவர்கள் என்றைக்கும் காக்கப் படுவார்கள்

17. துன்மார்க்கருடைய சந்ததி அறுப்புண்டு போகும்

18. அவர்கள் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை (சங் 37:31)

19. கர்த்தர், துன்மார்க்கன் கையில் கொடுப்பதில்லை (சங் 37:33)

20. ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில்லை

21. செம்மையானவனுடைய முடிவு சமாதானம் (சங் 37:37)

22. இரட்சிப்பு கர்த்தரால் வரும் (சங் 37:39-40)

23. இக்கட்டுக் காலத்தில் கர்த்தரே நீதிமான்களுடைய அடைக்கலம் (சங் 37:39)

24. கர்த்தரால் உதவி வரும் (சங் 37:40)

25. துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்

ஒப்புவி (**Commit**) **גָּלַל - gaw-lal' - 1556**

வினைச்சொல் - நம்பிக்கையாயிரு, ஒப்புவி, சுருட்டு (**to roll upon, or repose on**) (சங் 37:5; நீதி 16:3)

அமர்ந்திரு (**Rest**) - **דָּמַם - daw-man' - 1826**

வினைச்சொல் - அமர்ந்திரு, நில்லு, மவுனமாயிரு, அசைவற்றிரு, பேசாதிரு, சும்மாயிரு, மௌனமாகு, அமரப்பண்ணு, அமைதியாயிரு - "அமர்ந்து" - அமைதியாக, ஊமையாக (**be silent; still; dumb**) (சங் 37:7; யோபு 30:27) எல்லாவற்றையும் கர்த்தருடைய கரங்களில் ஒப்புக் கொடுத்துவிட்டு தேவ சமூகத்தில் அமைதியாயிருக்க வேண்டும். நமது அதிருப்தி எல்லாம் குணமாகும்.

"அவருக்குக் காத்திரு" - நீ பேசாமலிருந்து, தேவன் பேசுவதைக் கவனமாகக் கேள்.

தீர்க்கதரிசன எண் - 25

"பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்; கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்" (சங் 37:9-11) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ ஆட்சியில் இது நிறைவேறும்.

37 அதிகாரம்

அறுப்புண்டுபோ (cut off) - כָּרַת - kaw-rath' - 3772

வினைச்சொல் - அறு, வெட்டு, துண்டி, அகற்று, சங்காரம் பண்ணு, கத்தரி, சுட்டெரி, ஒழி, அறுப்புண்டுபோ (to be cut down; die) (சங் 37:9, 22, 28, 34, 38; நீதி 2:22) மேசியாவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

"சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்" - மத் 5:5 இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. துன்மார்க்கனின் பத்து விதமான விலதப்பும் அறுப்பும்

சங் 37:12 துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன் பேரில் பற்கடிக்கிறான்.

சங் 37:13 ஆண்டவர் அவனைப்பார்த்து நகைக்கிறார்; அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்.

சங் 37:14 சிறுமையும் எளிமையுமானவனை மடிவிக்கவும், செம்மை மார்க்கத்தாரை விழப்பண்ணவும், துன்மார்க்கர் பட்டயத்தை உருவி, தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள்.

சங் 37:15 ஆனாலும் அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம்; அவர்கள் வில்லுகள் முறியும்.

"ஆண்டவர் அவனைப்பார்த்து நகைக்கிறார்; அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்"-

தீர்க்கதரிசன எண் - 26

"ஆண்டவர் அவனைப்பார்த்து நகைக்கிறார்; அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்" (சங் 37:13) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. துன்மார்க்கர் தங்கள் பாவங்களுக்காகத் தண்டிக்கப்படும் போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (வெளி 20:11-15) தேவன் நகைக்கிறார் (சங் 37:13; சங் 2:4; சங் 59:8; நீதி 1:26).

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு விதமான நாட்கள்

1. கோபத்தின் நாள் (யோபு 20:28; ரோமர் 2:5)
2. சோதனை நாள் (சங் 95:8)
3. ஆபத்து நாள் (சங் 20:1; சங் 102:2)
4. பராக்கிரமத்தின் நாள் (சங் 110:3)
5. ஆபத்துக்காலம் (நீதி 24:10)
6. வாழ்வு காலம் (பிர 7:14)
7. மரண நாள் (பிர 8:8)
8. மனமகிழ்ச்சியின் நாள் (உன் 3:11)
9. கர்த்தருடைய கடுங்கோபத்தின் நாள் (ஏசா 13:13)
10. துன்பப்படும் நாள் (ஏசா 17:11)
11. நீதியைச் சரிகட்டும் நாள் (ஏசா 61:2)
12. நெருக்கப்படுகிற நாள் (எரே 16:19)
13. தீங்கு நாள் (எரே 17:17)
14. ஆபத்தின் நாள் (எரே 18:17)
15. கோபத்தின் காலம் (எசே 22:24)
16. இருளும் அந்தகாரமுமான நாள் (யோவே 2:2)
17. இக்கட்டு நாள் (ஒப 1:14)
18. கர்த்தர் வரும் நாள் (மல் 3:2)

37 அதிகாரம்

19. மனுஷகுமாரன் வெளிப்படும் நாள் (லூக்கா 17:30)
20. இரட்சணிய நாள் (2கொரி 6:2)
21. மீட்கப்படும் நாள் (எபே 4:30)
22. கிறிஸ்துவின் நாள் (பிலி 2:16)
23. கர்த்தருடைய நாள் (1தெச 5:2; செப் 1:14-18)
24. சந்திப்பின் நாள் (1பேதுரு 2:12)
25. கோபாக்கினியின் மகா நாள் (வெளி 6:17)
26. சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாள் (வெளி 16:14)
27. நியாயத்தீர்ப்பு நாள் (2பேதுரு 2:9)
28. தேவனுடைய நாள் (2பேதுரு 3:12)

"துன்மார்க்கர் பட்டயத்தை உருவி, தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள்" - துன்மார்க்கர் எப்போதுமே செம்மை மார்க்கத்தாருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். நீதிமானுக்கு இந்த உலகத்தில் துன்பம் உண்டு. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (2தீமோ 3:12).

"ஆனாலும் அவர்கள் பட்டயம் அவர்களுடைய இருதயத்திற்குள் உருவிப்போம்; அவர்கள் வில்லுகள் முறியும்" - இது விதைப்பதை அறுக்கும் பிரமாணம் ஆகும் (கலா 6:7-8). நீதிமானுக்காக ஏற்படுத்தப்பட்ட கண்ணியில் துன்மார்க்கன் விழுவான் (சங் 9:15; சங் 35:7-8; சங் 141:10).

3. நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் இடையே காணப்படும் ஐந்து விதமான வேற்றுமைகள்

சங் 37:16 அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத் திரட்சியைப் பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது.

சங் 37:17 துன்மார்க்கருடைய புயங்கள் முறியும்; நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார்.

சங் 37:18 உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும்.

சங் 37:19 அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள்.

சங் 37:20 துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள், கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்துபோவார்கள், அவர்கள் புகையாய்ப் புகைந்துபோவார்கள்.

சங் 37:21 துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்; நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான்.

சங் 37:22 அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்; அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டு போவார்கள்.

"அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத் திரட்சியைப்பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது" - நீதிமான் தனக்குள்ளது போதுமென்று திருப்தியுடன் இருப்பான். பரலோகப் பிதா நீதிமானின் கொஞ்சத்தையும் ஆசீர்வதிக்கிறார் (நீதி 15:16; நீதி 16:8; 1கொரி 10:31; 1தெச 5:18).

37 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 27

"துன்மார்க்கருடைய புயங்கள் முறியும்; நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார்........" (சங் 37:17-20) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. சில வசனங்களில் சங் 37:19 ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"துன்மார்க்கருடைய புயங்கள்" - இது துன்மார்க்கத்தின் கருவியையும் அவனுடைய ஆற்றலையும் குறிக்கும் (சங் 10:15; சங் 37:17; 1சாமு 2:31).

"உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்" - கர்த்தர் உத்தமனை எப்போதும் கவனித்து, பாதுகாத்து, அவனுடைய ஜீவியகால முழுவதிலும் அவனைப் பராமரிக்கிறார் (ரோமர் 8:28).

நீதிமான் கர்த்தரையே நம்புவதினால், அவன் ஆபத்துக் காலத்தில் வெட்கமடையமாட்டான். பஞ்ச காலத்திலும் கர்த்தர் அவனைத் திருப்தியாகப் போஷிப்பார்.

துன்மார்க்கன் தன் பாவ குணத்தினால் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவதில்லை. அல்லது அவனிடம் பணம் இல்லாததினால் கடனைச் செலுத்த முடிவதில்லை. நீதிமானோ பிறருக்கு இறங்கி, தேவன் தந்த ஆசீர்வாதங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்கிறான் (சங் 37:21-22,26).

தீர்க்கதரிசன எண் - 28

"அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்; அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டு போவார்கள்" (சங் 37:22) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியில் இது நிறைவேறும் (மத் 25:31-46; வெளி 20:1-10).

"அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டு போவார்கள்" - பின்வாங்கிப் போன தூதர்கள் **(backslidden angels or sons of God)** (ஆதி 6:1-4; யோபு 1:6; யோபு 2:1; யோபு 38:4-7; 2பேதுரு 2:4; யூதா 1:6-7), பின்வாங்கிப் போன ஆவிகள் **(backslidden spirits or demons)** (மத் 8:29; வெளி 9), விழுந்து போன மனுஷர் **(backslidden human beings)** (எபி 6:4-9; எபி 10: 26-29; 2பேதுரு 2:20-22), பாவம் செய்தவன் சபிக்கப்பட்டவன், பாவத்தின் சம்பளம் மரணம் (ஆதி 2:17; யாத் 32:32-33; எசே 18:4, 20-26; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி6:9-11; கலா 5:19-21).

4. நீதிமானின் ஏழு விதமான ஆசீர்வாதங்கள்

சங் 37:23 நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

சங் 37:24 அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.

சங் 37:25 நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.

சங் 37:26 அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்.

மனுஷன் (man) - גֶּבֶר - gheh'-ber - 1397

ஆ.பெ.சொ.-புருஷர், மனுஷன், பேர், தலைவர், ஆண் **(a strong man; mighty man; a conqueror)** - எபிரெய மொழியில் "மனுஷன்" என்றுதான் உள்ளது. "நல்ல" என்றில்லை. பலவானுக்கும் கர்த்தருடைய உதவி தேவை. நீதிமான் விழுந்தாலும் கர்த்தர் அவனைத் தாங்குகிறார்.

37 அதிகாரம்

உறுதிப்படுத்து (ordered) - כּוּן - koon - 3559

வினைச்சொல் - ஸ்திரப்படுத்து, ஆயத்தப்படுத்து, முஸ்திப்பாக்கு, எத்தனப்படுத்து, உறுதிப்படுத்து. **(prepared; established)**

"நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" - நீதிமனைக் கர்த்தர் கைவிடமாட்டார். போஷிப்பார். தாவீதின் சந்ததி ஆசீர்வதிக்கப்படும். நீதிமானிடம் சிறிதளவே இருந்தாலும் அதில் அவன் திருப்தியடைவான். தன்னைக் கர்த்தர் கைவிடவில்லை என்று தனக்குள் உறுதியாயிருப்பான் (சங் 37:25-26; சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; சங் 91:1-12; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:9-13; யோவான் 14:12; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:13-14).

5. மூன்று கட்டளைகள் - நீதிமானின் பத்துவிதமான ஆசீர்வாதங்கள்-துன்மார்க்கனின் இரண்டு விதமான பாவங்களும் சாபங்களும்

சங் 37:27 தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.

சங் 37:28 கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக்கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப் படுவார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்.

சங் 37:29 நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.

சங் 37:30 நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்.

சங் 37:31 அவனுடைய தேவன் அருளியவேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை.

சங் 37:32 துன்மார்க்கன் நீதிமான்மேல் கண்வைத்து, அவனைக் கொல்ல வகைதேடுகிறான்.

சங் 37:33 கர்த்தரோ அவனை இவன் கையில் விடுவதில்லை; அவன் நியாயம் விசாரிக்கப்படுகையில், அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதுமில்லை.

தீர்க்கதரிசன எண் - 29

"தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்............" (சங் 37: 27-34) - இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியிருக்கிறது. ஆயிரவருஷ அரசாட்சியிலும் புதிய பூமியிலும் முழுவதுமாக நிறைவேறும் (வெளி 20-22).

பரிசுத்தவான்கள் (saints) חָסִיד - khaw-seed' - 2623.

பெயரடை - பரிசுத்தமான, தயவுள்ளவரான, பக்தியுள்ளவனான, கிருபையுள்ளவரான - தயவுள்ளவன், கிருபையுள்ளவன் **(kind; pious; holy; favored or gracious ones)** (சங் 37:28; சங் 30:4; சங் 31:23; சங் 50:5; சங் 52:9; சங் 79:2; சங் 85:8; சங் 97:10; சங் 116:15; சங் 132:9, 16; சங் 145:10; சங் 148:14; சங் 149:1, 5,9; 1சாமு 2:9; 2நாளா 6:41; நீதி 2:8). இந்த ஜீவியத்தில் மனுஷரை பரிசுத்தவான்களாக்குகிறார். மரித்த பின்பு யாரும் பரிசுத்தவான்களாக மாறுவதில்லை. இச்சொல் தேவதூதரைக் குறிக்காது. இரட்சிக்கப்பட்டோரையே குறிக்கும்.

சங்கீதம் - தொகுப்புரை

37 அதிகாரம்

பரிசுத்தவான்களிடம் காணப்படும் சுபாவங்கள்

1. பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடைய மாட்டார்கள் (சங் 37:1, 7, 8)
2. நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளமாட்டார்கள் (சங் 37:1)
3. கர்த்தரை முழுமையாக நம்புவார்கள் (சங் 37:3, 5, 40)
4. நன்மை செய்வார்கள் (சங் 37:3)
5. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இருப்பார்கள் (சங் 37:4)
6. தங்கள் வழியைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பார்கள் (சங் 37:5)
7. கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்திருப்பார்கள்
8. கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திருப்பார்கள் (சங் 37:7, 9, 39)
9. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடுவார்கள் (சங் 37:8)
10. தாழ்மையுடனும், பணிவுடனும் இருப்பார்கள் (சங் 37:11)
11. மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாய் இருப்பார்கள்
12. நீதிமான்கள், கொஞ்சத்திலும், பஞ்சக் காலத்திலும் திருப்தியடைவார்கள் (சங் 37:16-19)
13. ஆபத்துக்காலத்தில் வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமாயிருப்பார்கள் (சங் 37:19)
14. நீதிமான், நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான் (சங் 37:21, 26)
15. கர்த்தருடைய வழி நடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து இருப்பார்கள் (சங் 37:23)
16. ஆபத்துக்காலத்தில் விழுந்தாலும் தள்ளுண்டு போகமாட்டார்கள் (சங் 37:24)
17. சந்ததி ஆசீர்வதிக்கப்படும் வீடு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் (சங் 37:26)
18. நீதிமான்கள் நியாயத்திலே உறுதியாயிருப்பார்கள்(சங்37:21,29,30)
19. ஞானமும், நியாயமும் உள்ளவர்கள் (சங் 37:30)
20. தேவன் அருளிய வேதம் அவர்கள் இருதயத்தில் இருக்கும்(சங் 37:31, 34)
21. மனுஷர்களிடையே சத்தியத்தைப் பரப்புவார்கள் (சங் 37:30)
22. உத்தமமும், செம்மையுமானவர்களுமாய் இருப்பார்கள் (சங் 37:37)
23. கர்த்தருடைய இரட்சிப்பை முழுவதுமாக கைக்கொள்ளுவார்கள் (சங் 37:39-40)
24. இக்கட்டுக் காலத்தில், கர்த்தரால் விலக்கிக் காக்கப்படுவார்கள் (சங் 37:39)

“அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்” - பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் மரித்தாலும், அவர்களுடைய ஆவியும் ஆத்துமாவும், அதாவது அவர்களுடைய உள்ளான மனுஷன் காக்கப்படுவார்கள் (1பேதுரு 3:4).

37 அதிகாரம்

பரிசுத்தவான்களைப் பற்றி சிலசெய்திகள்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது பரிசுத்தவான்களும் அவரோடு வருவார்கள் (சக 14:5; யூதா 1:14). அவர்கள் கிறிஸ்துவோடு பூமியை ஆளுகை செய்வார்கள் (வெளி 20:4-10). பரலோகத்திலுள்ள புதிய எருசலேமில் அது புதிய பூமிக்கு வரும் வரையிலும் இருப்பார்கள் (வெளி 21:2, 9-10). ஆயிர வருஷ அரசாட்சியில் பரிசுத்தவான்கள் பூமிக்கும் பரலோகத்திற்கும் போய்க் கொண்டிருப்பார்கள். பின்பு புதிய பூமியில் கர்த்தரோடு நித்திய காலமாயிருப்பார்கள் (வெளி 21-22). பரிசுத்தவான்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள் (சங் 37:9,11, 18, 29, 34; ஆதி 8:22; ஆதி 9:12; ஆதி 17:8; ஆதி 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14, 18, 27; சக 14; மத் 5:5; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5).

"நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்" - நீதிமான்கள் கர்த்தருடைய சத்தியத்தை உலகமெங்கும் அறிவிப்பார்கள் (சங் 37:30-31; ஏசா 52:7; மத் 28:19-20; மாற்கு 16:15-20; 1கொரி 1:18-24).

"அவனுடைய தேவன் அருளியவேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" - பரிசுத்த வேதாகமம் நமது இருதயத்தில் இருக்க வேண்டும். அதுதான் அதற்குரிய இடம் (1யோவான் 1:7; 2பேதுரு 1:4-10).

துன்மார்க்கன் நீதிமானைக் கொல்ல வகை தேடினாலும், கர்த்தர் நீதிமானைப் பாதுகாப்பார். (சங் 37:28, 32-33)

6. நான்கு கட்டளைகள் - நீதிமான், துன்மார்க்கன் ஆகியோரின் முடிவு

சங் 37:34 நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டு போவதை நீ காண்பாய்;

சங் 37:35 கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன் அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சை மரத்தைப் போல் தழைத்தவனாயிருந்தான்.

சங் 37:36 ஆனாலும் அவன் ஒழிந்து போனான்; பாருங்கள், அவன் இல்லை; அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை;

சங் 37:37 நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.

சங் 37:38 அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்; அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு.

பச்சைமரம் (bay tree) - אֶזְרָח - ez-rawkh' - 249

ஆ.பெ. - சுதேசி, தேசத்தில் பிறந்தவர், பச்சைமரம் (native born) - செப்துவஜிந்தில் "பச்சைமரம்" என்பது "கேதுருமரம்" என்றுள்ளது. (cedars of Lebanon)

37 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 30

"நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்........." (சங் 37:37-38) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நிறைவேறிக் கொண்டிருக்கிறது. எல்லா பரிசுத்தவான்களும் நித்திய ஜீவனைப் பெற்றபிறகு எல்லாத் துன்மார்க்கரும் ஆக்கினைத்தீர்ப்பு அடைந்த பிறகு இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவுபெறும்.

உத்தமன் (perfect) - תָּם - tawm - 8535

பெயரடை - குணவாலியானவன், உத்தமன், சன்மார்க்கமானவன் **(complete; pious; gentle; undefiled; upright; plain)** (சங் 37:37; சங் 64:4; யோபு 1:1,8; யோபு 2:3; யோபு 8:20; யோபு 9:20-22).

7. நீதிமானுக்கு அருளப்படும் ஆறு ஆசீர்வாதங்கள் - ஆசீர்வாதங்களுக்கான காரணங்கள்

சங் 37:39 நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.

சங் 37:40 கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களை விடுவிப்பார்; அவர்கள் அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களைத் துன்மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்.

"நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்" - இரட்சிப்பு கர்த்தருடையது. மனுஷருடையது அல்ல (ரோமர் 1:16; எபே 2:8-9; தீத்து 2:11-14; தீத்து 3:5-6).

அடைக்கலம் (strength) - מָעוֹז - maw-oze' - 4581

ஆண்பால் பெயர்ச்சொல் - பெலன், கற்பாறை, பலம், அரண், அடைக்கலம், அரணான கோட்டை, அரணிப்பான கோட்டை, கோட்டை - பெலன் **(strength)** (சங் 37:39; சங் 27:1; சங் 28:8; சங் 31:4; சங் 43:2; சங் 52:7; சங் 60:7; சங் 108:8; 2சாமு 22:33; நெகே 8:10; நீதி 10:29; ஏசா 17:10; ஏசா 23:4, 14; ஏசா 25:4; ஏசா 27:5; ஏசா 30:2-3; எசே 24:25; எசே 30:15; தானி 11:31; யோவே 3:16; நாகூம் 3:11); கோட்டை **(fortress)**(எரே 16:19;தானி 11:7, 10); அரணான கோட்டை **(stronghold)** (ஏசா 23:11; நாகூம் 1:7).

கர்த்தரை நம்புவதினால் வரும் ஆசீர்வாதங்கள்

1. தேவையான வேளையில் தேவனிடமிருந்து உதவி
2. சத்துருக்களிடமிருந்து விடுதலை
3. ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் விடுதலை

சங்கீதம் - தொகுப்புரை

38 அதிகாரம்

(நினைவுகூருதலுக்காக தாவீது பாடின லியாஸ்கர் என்னும் சங்கீதம்.)

பத்தாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. இரண்டு விண்ணப்பங்கள் - பதினெட்டுவிதமான பாவங்களும் சரீரவியாதிகளும் - (38:1-10)
2. பதினெட்டு விதமான பாவங்களும், ஆத்துமாவிலும் ஆவியிலும் பாடுகளும் - (38:11-20)
3. குணப்படுத்தி மன்னிக்க வேண்டுமாறு ஏறெடுத்த மூன்று விண்ணப்பங்கள் - (38:21-22)

1. இரண்டு விண்ணப்பங்கள் - பதினெட்டு விதமான பாவங்களும் சரீரவியாதிகளும்

சங் 38:1 கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்து கொள்ளாதேயும்; உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும்.

சங் 38:2 உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்கிறது; உமது கை என்னை இருத்துகிறது.

சங் 38:3 உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை.

சங் 38:4 என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப்பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று.

சங் 38:5 என் மதிகேட்டினிமித்தம் என்புண்கள் அழுகி நாற்றமெடுத்தது.

சங் 38:6 நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன்; நாள்முழுவதும் துக்கப்பட்டுத்திரிகிறேன்.

சங் 38:7 என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது; என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை.

சங் 38:8 நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன்; என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்.

சங் 38:9 ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை.

சங் 38:10 என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னைவிட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று.

தாவீது கர்த்தரிடம் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்து கொள்ளாதேயும் (சங் 38:1).
2. உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும்.
3. என்னைக் கைவிடாதேயும் (சங் 38:21).
4. எனக்குச் செவிகொடும் (சங் 38:15).
5. எனக்குத் தூரமாயிராதேயும் (சங் 38:21).
6. எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும் (சங் 38:22).

கர்த்தர் நம்மைத் தண்டிப்பதற்கான காரணங்கள்

1. பாவம் (சங் 38:3, 18)
2. அக்கிரமங்கள் (சங் 38:4,18)
3. மதிகேடு (சங் 38:5)
4. கால் தவறுதல் (சங் 38:16)

38 அதிகாரம்

கர்த்தர் நம்மைத் தண்டிக்கும் போது கர்த்தரிடம் நாம் ஏறெடுக்கும் முறையீடுகள்

1. கர்த்தருடைய கோபத்தினால் நான் கடிந்து கொள்ளப்பட்டேன் (சங் 38:1).
2. அவருடைய உக்கிரத்தினால் என்னைத் தண்டிக்கிறார்.
3. உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைக்கிறது (சங் 38:2).
4. உமது கை என்னை இருத்துகிறது
5. என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை (சங் 38:3).
6. என் எலும்புகளில் சவுக்கியமில்லை.
7. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று (சங் 38:4).
8. அக்கிரமங்கள் பாரச்சுமையைப் போல என்னால் தாங்கக் கூடாத பாரமாயிற்று.
9. என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது (சங் 38:5).
10. நான் வேதனைப்படுகிறேன் (சங் 38:6).
11. நான் மிகவும் ஒடுங்கினேன்.
12. நான், நாள்முழுதும் துக்கப்பட்டுத் திரிகிறேன்.
13. என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது (சங் 38:7).
14. என் மாம்சத்தில் ஆரோக்கியம் இல்லை.
15. நான் பெலனற்றுப் போய், மிகவும் நொறுக்கப்பட்டேன் (சங் 38:8).
16. என் இருதயம் கொந்தளிப்பினால் கதறுகிறது.
17. என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை (சங் 38:9)
18. என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது.
19. என் உள்ளம் குழம்பி அலைகிறது (சங் 38:10).
20. என் பெலன் என்னை விட்டு விலகிற்று.
21. என் கண்களின் ஒளி இல்லாமற் போயிற்று.
22. என் சிநேகிதரும் என் தோழரும் என்னைக் கண்டு விலகுகிறார்கள் (சங் 38:11).
23. என் வாதையைக் கண்டு என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்.
24. என் பிராணனை வாங்க வகைத் தேடுகிறார்கள் (சங் 38:12).
25. எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசுகிறார்கள்.
26. அவர்கள் நாள்முழுவதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள்.
27. நான், அவர்கள் சொல்லும் அவதூறுகளைத் தவிர்க்கிறேன்.
28. நான், செவிடனைப் போலக் கேளாதவனாக இருக்கிறேன் (சங் 38:14).
29. நான் பழிக்குப்பழி வாங்காமல் இருக்கிறேன்.
30. என்மேல் பெருமை பாராட்டுவார்கள் (சங் 38:16).
31. என் கால் தவறும்போது என் மேல் பெருமை பாராட்டுவார்கள்.
32. நான் தடுமாறி விழ ஏதுவாயிருக்கிறேன் (சங் 38:17).

38 அதிகாரம்

33. என் துக்கம் எப்பொழுதும் என் முன்பாக இருக்கிறது.

34. என் அக்கிரமத்தை நான் அறிக்கையிட்டேன் (சங் 38:18).

35. என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன்.

36. என் சத்துருக்கள் வாழ்கிறார்கள் (சங் 38:19).

37. அவர்கள் பலத்திருக்கிறார்கள்.

38. அவர்கள் முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறார்கள்.

39. எனக்கு எதிராகப் பெருகியிருக்கிறார்கள்.

40. நன்மைக்குத் தீமை செய்கிறவர்கள் என்னை விரோதிக்கிறார்கள் (சங் 38:20).

அம்பு (arrows) - חֵץ - khayts - 2671

ஆ.பெ.சொ. - அம்பு, ஈட்டி - அம்பு என்பது வில்லில் நாண் ஏற்றி எரியும் அம்பையும், நமக்கு ஏற்படும் வாதைகளையும் குறிக்கும் **(a piercer; an arrow; dart; wound)** (1சாமு 20:20-38; 2இராஜா 13:15-18).

அம்பின் உருவகப் பயன்பாடுகள்

1. காயம் (வேதனை) (சங் 38:2); (யோபு 34:6)
2. பயங்கரங்கள், வாதைகள் (யோபு 6:4; சங் 91:5)
3. கர்த்தர், ஜனங்களின் மீதும், தேசங்களின் மீதும் நியாயம் தீர்ப்பது (எண் 24:8; உபா 32:23,42; சங் 7:13; சங் 45:5; சங் 64:7)
4. மின்னல்கள் (2சாமு 22:15; சங் 18:14)
5. பட்டயம் (சங் 57:4; சங் 64:3; எரே 9:8)
6. அழிவு (நீதி 25:18; நீதி 26:18)
7. பஞ்சம் (எசே 5:16)

"என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப்பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப் போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று" - இந்த வசனத்தை சங் 38:4, 11, 22; சங் 69:1, 2, 8, 13 ஆகிய வசனங்களோடு ஒப்பிட்டு வாசிக்கவும்.

கர்த்தர் நம்மைத் தண்டிப்பதினால் ஏற்படும் நல்ல விளைவுகள்

1. ஒருவனை ஜெபிக்க வைக்கிறது (சங் 38:1, 16, 21, 22).
2. பாவத்தின் புத்தியீனத்தை உணர்ந்து கொள்கிறான் (சங் 38:3, 5)
3. தேவனை வாஞ்சிக்கிறான் (சங் 38:9)
4. உண்மையான நண்பர்களைக் கண்டுபிடிக்கிறான் (சங் 38:11)
5. மற்றவர்களிடம் இரக்கம், மனஉருக்கம் உடையவனாகிறான் (சங் 38:12-14).
6. ஒடுக்குகிறது (சங் 38:6, 8, 17, 18)
7. நம்பிக்கையும் விசுவாசமும் வருகிறது (சங் 38:15)
8. நன்மையைப் பின்பற்றி ஜீவிக்கிறான் (சங் 38:20)

தாவீதின் வியாதி மேக நோயாக (Venereal Disease) இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். அதற்கான காரணங்கள்

1. "என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது". குடல்கள் **(loins)** என்பது கீழ்விலா எலும்பிற்கும் இடுப்பெலும்பிற்கும் இடையிலுள்ள பகுதி. சரீரத்தின் இன உற்பத்தி உறுப்புக்கள் "லோயன்ஸ்" **(loins)** என்று அழைக்கப்படுகிறது (ஆதி 35:11; ஆதி 46:26; யாத் 1:5; 1இராஜா 8:19; 1இராஜா 12:10; 2நாளா 6:9; 2நாளா 10:10).

38 அதிகாரம்

2. "எரிபந்தமாய் எரிகிறது" என்பது இன உற்பத்தி உறுப்புக்களில் ஏற்படும் எரிச்சல் ஆகும்.

3. அம்புகள் (கொடிய வேதனை) தாவீதின் உறுப்புக்களில் உண்டாயிற்று (சங் 38:2).

4. தாவீதின் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை (சங் 38:3, 11). புண்கள் உண்டாகி எலும்புகள் பாதிக்கப்பட்டன.

5. புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. (சங் 38:5, 11). மாமிசம் அழுகிப்போயிற்று

6. தாவீதுக்கு பாவத்தினால் வியாதி வந்தது (சங் 38:3, 5, 18). பத்சேபாளோடு விபச்சாரம் செய்த பாவம் (2சாமு 11:1-12:25).

7. என் ஆத்துமாவும், மாம்சமும் ஆரோக்கியமாயில்லை, அதனால் நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன் (சங் 38:6).

8. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன், என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன் (சங் 38:8).

9. என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற் போயிற்று (சங் 38:10).

10. என் சிநேகிதரும், என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள். என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள் (சங் 38:10; சங் 66:4).

2. பதினெட்டு விதமான பாவங்களும், ஆத்துமாவிலும் ஆவியிலும் பாடுகளும்

சங் 38:11 என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள்; என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்.

சங் 38:12 என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்; எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி, நாள்முழுவதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள்.

சங் 38:13 நானோ செவிடனைப் போலக் கேளாதவனாகவும், ஊமையனைப் போல வாய்திறவாதவனாகவும் இருக்கிறேன்.

சங் 38:14 காதுகேளாதவனும், தன் வாயில் மறு உத்தரவுகள் இல்லாதவனுமாயிருக்கிற மனுஷனைப் போலானேன்.

சங் 38:15 கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன்; என் தேவனாகிய ஆண்டவரே நீர் மறுஉத்தரவு கொடுப்பீர்.

சங் 38:16 அவர்கள் என்னிமித்தம் சந்தோஷப்படாதபடிக்கு இப்படிச் சொன்னேன்; என் கால் தவறும்போது என்மேல் பெருமைபாராட்டுவார்களே.

சங் 38:17 நான் தடுமாறி விழ ஏதுவாயிக்கிறேன்; என் துக்கம் எப்பொழுதும் என் முன்பாக இருக்கிறது.

சங் 38:18 என் அக்கிரமத்தை நான் அறிக்கையிட்டு, என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன்.

சங் 38:19 என் சத்துருக்கள் வாழ்ந்து பலத்திருக்கிறார்கள்; முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் பெருகியிருக்கிறார்கள்.

38 அதிகாரம்

சங் 38:20 நான் நன்மையைப் பின்பற்றுகிறபடியால், நன்மைக்குத் தீமை செய்கிறவர்கள் என்னை விரோதிக்கிறார்கள்.

வாதை (sore) - נֶגַע - neh'-gah - 5061.

ஆண்பால் பெயர்ச்சொல் - வாதை, கடிப்பு,ரோகம், வெண்மை, குஷ்டம், சொறி, படர், வியாதி, தோஷம், குஷ்டதோஷம், கொள்ளைநோய், அடி, காயம்பட்டசேதம், காய்ச்சேதம் - சங் 39:10.

கேடானவைகள் (mischievous) - הַוָּה - hav-vaw' - 1942

பெ.பெ. சொ. - (தீய) ஆசை, (தீய) ஆவல், மிகுந்த துக்கம், துர், பொருள், தீவினை, கட்டு, கேடு பாடு, கேடானவைகள், ஆபத்து, கேடு, பாழ், விக்கினம், கொடும் சஞ்சலம், ஆகாதவைகள் (calamity; ruin; perverse) - (மீகா 7:3).

தாவீது குற்றமுடையவன். அவனுடைய சத்துருக்கள் பேசுவது உண்மையே. ஆகையினால் அவன் செவிடனைப்போலக் கேளாதவனாகவும், ஊமையனைப்போல வாய்திறவாதவனாகவும் இருக்கிறான் (சங் 38:13-14).

"நான் தடுமாறி விழ ஏதுவாயிக்கிறேன்"; ஆண்டவரே நீர் என்னைப் பெலப்படுத்த வில்லையென்றால், என்னால் நீதியின் பாதையில் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது.

"நான் நன்மையைப் பின்பற்றுகிறபடியால்", இதுவே நமது ஜீவனுக்கு பாதுகாப்பான வழி. கர்த்தர் நம்மைத் தண்டிப்பதனால் ஏற்படும் விளைவும் இது தான் (எபி 12:9-11).

3. குணப்படுத்தி மன்னிக்க வேண்டுமாறு ஏறெடுத்த மூன்று விண்ணப்பங்கள்

சங் 38:21 கர்த்தாவே, என்னைக் கைவிடாதேயும்; என் தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்.

சங் 38:22 என் இரட்சிப்பாகிய ஆண்டவரே, எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும்.

சங்கீதம் - தொகுப்புரை

39 அதிகாரம்

(எதுதூன் இடத்தில் ஒப்புவித்த தாவீதின் சங்கீதம்.)

இரண்டாவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம்

பொருளடக்கம்

1. ஏழு விதமான சாட்சி - *(39:1-3)*
2. மூன்று விண்ணப்பங்கள் - மனுஷனின் ஏழு விதமான சாட்சிகள் - *(39:4-7)*
3. மூன்று விண்ணப்பங்கள் - கண்டிக்கப்பட்டு திருத்தப்பட்டதற்கு ஏழு விதமான சாட்சிகள் - *(39:8-11)*
4. பெலனடைவதற்கு நான்கு விண்ணப்பங்கள் - *(39:12-13)*

1. ஏழு விதமான சாட்சி

சங் 39:1 என் நாவினால் பாவஞ் செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பபேன் என்றேன்.

சங் 39:2 நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்; ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது;

சங் 39:3 என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்.

தாவீதின் பொருத்தனைகளும் சாட்சியும்

1. என் நாவினால் பாவம் செய்யாத படிக்கு நான் என் வழிகளைக் காத்து கொள்ளுவேன் *(சங் 39:1)*.
2. துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன்.
3. நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன் *(சங் 39:2; சங் 38:13)*.
4. நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்.
5. என் துக்கம் அதிகரித்தது, ஆனாலும் என் நாவைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருந்தேன்.
6. என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது *(சங் 39:3)*.
7. நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது, அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்.

தாவீதைப் பற்றிய குறிப்புகள்

1. என் வழிகள் *(சங் 39:1)*
2. என் நாவு
3. என் வாய்
4. என் அமைதி *(சங் 39:2)*
5. என் துக்கம்
6. என் இருதயம் *(சங் 39:3)*
7. என் முடிவு *(சங் 39:4)*
8. என் நாட்கள் *(சங் 39:4-5)*
9. என் பலவீனம் *(சங் 39:4)*
10. என் நாட்களின் அளவு *(சங் 39:5)*
11. என் நம்பிக்கை *(சங் 39:7)*
12. என் மீறுதல்கள் *(சங் 39:8)*
13. என் ஜெபம் *(சங் 39:12)*
14. என் கூப்பிடுதல்
15. என் கண்ணீர்
16. என் பிதாக்கள்

39 அதிகாரம்

கடிவாளம் (bridle) - מַחְסוֹם - makh-sohm' - 4269

ஆ.பெ.சொ. - கடிவாளம் (muzzle) நன்மையும் தீமையும் நமக்கு முன்பாக இருக்கும்போது, நாம் நன்மையை மட்டும் தெரிந்தெடுக்க வேண்டும்.

2. மூன்று விண்ணப்பங்கள் - மனுஷனின் ஏழு விதமான சாட்சிகள்

சங் 39:4 கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்.

சங் 39:5 இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். (சேலா.)

சங் 39:6 வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாகவாகவே சஞ்சலப் படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்.

சங் 39:7 இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என் முடிவை அறியும்படி செய்யும் (சங் 39:4).
2. என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதை எனக்குத் தெரிவியும்.
3. நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி செய்யும்.
4. என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும் (சங் 39:8).
5. மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக் கொடாதேயும்.
6. என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத்துப்போடும் (சங் 39:10).
7. கர்த்தாவே! என் ஜெபத்தைக் கேளும் (சங் 39:12).
8. என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்.
9. என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும். என் பிதாக்களெல்லாரையும் போல நானும் உமக்கு முன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்.
10. நான் இனி இராமற்போகுமுன்னே தேறுதலடையும்படி என்னிடத்தில் பொறுமையாயிரும் (சங் 39:13).

"என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்" எனது ஆயுசு நாட்கள் மிகவும் குறுகியது.

"எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்" - மனுஷனுருடைய திட்டம், வழிகள் எல்லாம் மாயையே. மனுஷன் மண்ணிலிருந்து வந்தவன். மண்ணுக்கே திரும்பிவிடுவான். இதுவே சத்தியம்.

வேஷம் (vain shew) - צֶלֶם - tseh'-lem - 6754

ஆண்பால் பெயர்ச்சொல் - சாயல், விக்கிரகம், வேஷம், சுரூபம், சொரூபம் (shadow; image; resemblance; a phantom) - தானி 3:19

3. மூன்று விண்ணப்பங்கள் - கண்டிக்கப்பட்டு திருத்தப் பட்டதற்கு ஏழு விதமான சாட்சிகள்

சங் 39:8 என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும், மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக் கொடாதேயும்.

39 அதிகாரம்

சங் 39:9 நீரே இதைச் செய்தீர் என்று நான் என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன்.

சங் 39:10 என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத்துப்போடும்; உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்து போனேன்.

சங் 39:11 அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிற போது, அவன் வடிவைப் பொட்டரிப்பைப் போல் அழியப்பண்ணுகிறீர்; நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே. (சேலா.)

“மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்” - பாவங்கள் மன்னிக்கப்பட மாட்டாது என்று மூடன் கூறுகிறான். கர்த்தர் நமது மீறுதல்களை மன்னிக்கிறார். மூடனின் பேச்சு பொய்யாகிறது.

அடி **(stroke)** - נֶגַע - neh'-gah - 5061

ஆண்பால் பெயர்ச்சொல் - வாதை, கடிப்பு,ரோகம், வெண்மை, குஷ்டம், சொறி, படர், வியாதி, தோஷம், குஷ்டதோஷம், கொள்ளைநோய், அடி, காயம்பட்டசேதம், காய்ச்சேதம். வாதை **(stroke)** - (சங் 39:10; உபா 17:8; உபா 21:5). குஷ்டம், ரோகம், குஷ்டரோகம், சொறி **(plague)** - (லேவி 13-14). சொறி **(sore)** - (லேவி 13:32, 42-43; 2நாளா 6:28-29; சங் 38:11)

“நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறபோது”, கர்த்தர் மனுஷனைத் தண்டிப்பதற்கு நோக்கமுண்டு. மனுஷனைத் திருத்த வேண்டும். அவனுடைய பெருமையை அகற்ற வேண்டும் (யோபு 33:14-29). அவருடைய பரிசுத்தத்தில் மனுஷனைப் பங்குள்ளவனாக ஆக்க வேண்டும். (எபி 12:5-11) கர்த்தர் மனுஷனைத் தண்டிப்பதற்கு இதுவே நோக்கம்.

4. பெலனடைவதற்கு நான்கு விண்ணப்பங்கள்

சங் 39:12 கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்; என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும்; என் பிதாக்களெல்லாரையும்போல நானும் உமக்குமுன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்.

சங் 39:13 நான் இனி இராமற்போகுமுன்னே, தேறுதலடைம்படி என்னிடத்தில் பொறுமையாயிரும்.

“என்னிடத்தில் பொறுமையாயிரும்”. நான் இரட்சிக்கப்படும் வரையிலும் என்னிடத்தில் பொறுமையாயிரும்.

“நான் இனி இராமற்போகுமுன்னே” என்பது எபிரெய மொழியிலுள்ள வழக்குச்சொல். - “நான் மரிக்கப் போகிறேன்” என்பது இதன் பொருள். மரணம் நமது சரீரத்தின் முடிவு. நமது ஆவியும் ஆத்துமாவும் நித்திய ஜீவனைப் பெறும்.

40 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மேசியாவைப்பற்றிய ஏழாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தருக்காகக் காத்திருப்பதில் ஏழு ஆசீர்வாதங்கள் - (40:1-3)
2. பாக்கியவானின் மூன்று முக்கிய குணாதிசயங்கள் - (40:4)
3. தேவனுடைய இரண்டு நித்தியமான காரியங்கள் - (40:5)
4. மேசியாவின் ஏழு விதமான ஊழியங்கள் - (40:6-10)
5. பன்னிரெண்டு விண்ணப்பங்களும், தேவன் ஜெபத்திற்குப் பதிலளிப்பார் என்பதற்கு பன்னிரெண்டு காரணங்களும் - (40:11-17)

1. கர்த்தருக்காகக் காத்திருப்பதில் ஏழு ஆசீர்வாதங்கள்

சங் 40:1 கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்.

சங் 40:2 பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி,

சங் 40:3 நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்; அநேகர் அதைக்கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள்.

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

1. அவர் என்னிடமாய்ச் சாய்ந்து இருக்கிறார் (சங் 40:1).
2. என் கூப்பிடுதலைக் கேட்டார்.
3. அவர் பயங்கரமான குழியிலிருந்து தூக்கியெடுத்தார் (சங் 40:2).
4. உளையான சேற்றிலுமிருந்து எடுத்தார்.
5. என் கால்களைக் கன்மலையின் மேல் நிறுத்தினார்.
6. என் அடிகளை உறுதிப்படுத்தினார்.
7. தேவனத் துதிக்கும் புதுப்பாட்டை என் வாயிலே கொடுத்தார் (சங் 40:3).

"பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து" - இது ஒரு உருவகப் பயன்பாடு. இது மனுஷனுடைய பாவத்தையும் மரணத்தையும் குறிக்கும். தேவனால் மட்டுமே இதிலிருந்து மனுஷனை இரட்சிக்க முடியும்.

"என் அடிகளை உறுதிப்படுத்தி", அநீதியிலிருந்து நீதிக்கும், பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கும் தேவன் நமது ஜீவியத்தை மாற்றுகிறார் (1யோவான் 1:7).

"நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்". கர்த்தர் காண்பிக்கும் இரக்கங்களுக்காக அவரைத் துதித்துப்பாடும் பாட்டு (சங் 33:3).

2. பாக்கியவானின் மூன்று முக்கிய குணாதிசயங்கள் -(சங் 15:2; 32:1)

சங் 40:4 அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல், கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்.

பாக்கியவான்களின் சுபாவங்கள்

1. கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்திருப்பார்கள்
2. அகங்காரிகளைச் சார்ந்திருக்க மாட்டார்கள்.
3. பொய்யர்களைச் சார்ந்திருக்க மாட்டார்கள்.

40 அதிகாரம்

3. தேவனுடைய இரண்டு நித்தியமான காரியங்கள்

சங் 40:5 என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது; ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச்சொல்லி முடியாது; நான் அவைகளைச்சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்.

தேவனுடைய அற்புதமான காரியங்கள்

1. தேவனுடைய அநேக அதிசயங்கள்
2. தேவனுடைய அநேக யோசனைகள்.

4. மேசியாவின் ஏழு விதமான ஊழியங்கள்

சங் 40:6 பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலி யையும் நீர் கேட்கவில்லை.

சங் 40:7 அப்பொழுது நான்: இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது;

சங் 40:8 என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப் பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.

சங் 40:9 மகா சபையிலே நீதியைப் பிரசங்கித்தேன்; என் உதடுகளை மூடேன், கர்த்தாவே நீர் அதை அறிவீர்.

சங் 40:10 உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்து வைக்கவில்லை; உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையும் சொல்லி யிருக்கிறேன்; உமது கிருபையையும் உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியாதபடிக்கு நான்ஒளித்து வைக்கவில்லை.

தீர்க்கதரிசன எண் - 31

“பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும்நீர் கேட்கவில்லை............” (சங் 40:6-10) - இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது நிறைவேறிற்று.

பலி **(Sacrifice) - זֶבַח - zeh’-bakh - 2077**

ஆண்பால் பெயர்ச்சொல் - பலி, யாகம், தகனபலிகள், கொழுமையான பதார்த்தங்கள் **(any offering slain, to offer what is slain)** - (சங் 40:6; சங் 51:16; ஆதி 31:54; ஆதி 46:1; லேவி 3:1-6; லேவி 4:10,26,31,35; லேவி 7:11-37; ஏசா 1:11; தானி 9:27; ஓசி 3:4)

காணிக்கை **(offering)** சங் 40:6 **מִנְחָה - min-khaw’ - 4503**

பெண்பால் பெயர்ச்சொல் - கப்பம், காணிக்கை, வெகுமதி, பலி, போஜனபலி, தகனபலி, வெகுமானம், பகுதி **(a sacrificial offering; a donation; a gift)** - (சங் 40:6; சங் 20:3; சங் 96:8; ஆதி 4:3-5; எண் 5:18-26; மல் 1:10-13; மல் 2:12-13; மல் 3:3-4).

திற **(opened) - כָּרָה - kaw-raw’ - 3738**

வினைச்சொல் - திற, தோண்டு **(opened by boring or digging)**

சங்கீதம் - தொகுப்புரை

40 அதிகாரம்

திற (opened) - פָּתַח - paw-thakh' - 6605

வினைச்சொல் - திற, உருவு, திறந்திரு, போகவிடு, திறக்கப்படு, திறவுண்டுபோ, வெளிப்படுத்து, பிள, திறந்திருக்கப் பண்ணு, முத்திரை போடாத, உருவப்படு, அவிழ், விடுதலையாக்கு, கொத்து, விடுவி, வா, களைந்துபோடு, அவிழ்த்துபோடு, துளிர், நீக்கிப்போடு, கொத்து வேலைசெய், கட்டவிழ், தீர்ந்திரு, விடுதலைபண்ணு, உரிந்துபோடு, படர், திறப்பு, செய்தி, விடுதலையாக்கு, அவிழ்த்துவிடு. "துளையிட்டுத் திறப்பது" - (சங் 40:6; சங் 7:15; சங் 57:6; சங் 119:85; ஆதி 50:5; எண் 21:18; எரே 18:20-22)

மேசியா தமது செவிகளைக் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு திறந்து வைத்திருப்பார். ஏசா 50:5-இல் பயன்படுத்தப்பட்டுள்ள சொல், ஒரு கதவைத் திறப்பது போல் திறப்பதைக் குறிக்கும். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே. உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். (மத் 13:14-16). அடிமையானவனின் செவிகள் துளையிடப்பட வேண்டும். (யாத் 21:2-6). ஒரு அடிமை தன் எஜமான் சொல்வதைக் கேட்பது போன்று நாம் கர்த்தரின் வார்த்தையைக் கவனித்துக் கேட்க வேண்டும்.

"இதோ, வருகிறேன்", கீழ்ப்படிதலுள்ள ஒரு வேலையாள், எஜமானனின் சேவைக்கு எப்போதும் ஆயத்தமாயிருப்பதை இந்த வார்த்தை குறிக்கும்.

"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்". தேவனுக்கு கீழ்ப்படிவதே இங்கு கூறப்படும் முக்கியமான கருத்து. கிறிஸ்து மனுஷரூபம் எடுத்து தேவனுக்குக் கீழ்ப்படிந்தார் (ஆதி 3:15; ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-23; ரோமர் 8:3-4; எபி 2:9-18; எபி 10:5-9) கிறிஸ்து பலியாக வந்தார். (சங் 40:8; எபி 10:5-9)

உள்ளம் (heart) - מֵעֶה - may-aw' - 4578.

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்ப்பம், வயிறு, குடல், உள்ளம், அங்கம் **(bowels or inward parts)** - (2கொரி 3:3; எபி 8:10; எபி 10:16).

"மகா சபையிலே நீதியைப் பிரசங்கித்தேன்" - இது மேசியாவின் ஊழியம். அவருடைய பிரசங்கம், உபதேசம், சொஸ்தமாக்குதல். (சங் 40:9-10; மத் 4:23-24; மத் 9:35; லூக்கா 4:16-21; அப் 10:38).

"நீதி" - யூதர்களும் புறஜாதிகளும் மீடகப்படுவதற்குத் தேவன் வகுத்த திட்டம் (ரோமர் 3:24-31).

"மகாசபை" - யூதர்களும் புறஜாதியாருமான திரள் கூட்டம். இவர்கள் மேசியாவின் ஊழியத்தினால் ஆசீர்வாதம் பெற்றவர்கள் (யோவான் 3:16; மாற்கு 16:15-20).

சத்தியம் - இயேசு கிறிஸ்துவின் மூலமாக உடன்படிக்கைகளும் வாக்குத்தத்தங்களும் நிறைவேறுதல். கர்த்தருடைய மஹாப் பெரிய இரட்சிப்பு (யோவான் 1:16-17; ரோமர் 3:2; ரோமர் 9:4-5; 2கொரி 1:20).

இரட்சிப்பு - எல்லா மனுஷருக்கும் கிறிஸ்து கர்த்தருடைய இரட்சிப்பாயிருக்கிறார் (மத் 1:21; யோவான் 4:42; அப் 5:31; அப் 13:23).

40 அதிகாரம்

கிருபை - தேவனுடைய கிருபைக் கிறிஸ்து மூலமாகவே வெளிப்படுகிறது (யோவான் 3:16).

சத்தியம் - கிறிஸ்துவே தேவனுடைய சத்தியம் (யோவான் 1:1-2,14; யோவான் 14:6).

5. பன்னிரெண்டு விண்ணப்பங்களும், தேவன் ஜெபத்திற்குப் பதிலளிப்பார் என்பதற்கு பன்னிரெண்டு காரணங்களும்

சங் 40:11 கர்த்தாவே நீர் உம்முடைய இரக்கங்களை எனக்குக் கிடையாமற் போகப்பண்ணாதேயும்; உமது கிருபையும் உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது.

சங் 40:12 எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்து கொண்டது, என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து பிடித்து, நான் நிமிர்ந்து பார்க்கக் கூடாதிருக்கிறது, அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறது, என் இருதயம் சோர்ந்துபோகிறது.

சங் 40:13 கர்த்தாவே, என்னை விடுவித்தருளும்; கர்த்தாவே, எனக்குச் சகாயம் பண்ணத்தீவிரியும்.

சங் 40:14 என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி, எனக்குத் தீங்குசெய்ய விரும்புகிறவர்கள் பின்னிட்டு இலச்சையடைவார்களாக.

சங் 40:15 என்பேரில் ஆ ஆ! ஆ ஆ! என்று சொல்லுகிறவர்கள், தங்கள் வெட்கத்தின் பலனையடைந்து கைவிடப்படுவார்களாக.

சங் 40:16 உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக; உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.

சங் 40:17 நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்; தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்; என் தேவனே, தாமதியாதேயும்.

தாவீது கர்த்தரிடம் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. உம்முடைய இரக்கங்களை எனக்குக் கிடையாமற்போகப் பண்ணாதேயும் (சங் 40:11).
2. உமது கிருபை எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது.
3. உமது உண்மை எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது
4. கர்த்தாவே என்னை விடுவித்தருளும் (சங் 40:13).
5. எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்.
6. என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணிப் போகும்படி செய்யும் (சங் 40:14).
7. எனக்குத் தீங்கு செய்ய, என்னைத் தேடுகிறார்கள்.
8. தீங்கு செய்ய விரும்புகிறவர்கள் பின்னிட்டுப் போகும்படி செய்யும்
9. தீங்கு செய்ய விரும்புகிறவர்கள் இலச்சையடையும்படி செய்யும்.
10. என்பேரில் அவதூறு சொல்லுகிறவர்கள், தங்கள் வெட்கத்தின் பலனையடைந்து கைவிடப்படுவார்கள். (சங் 40:15)
11. உம்மைத் தேடுகிற அனைவரும் உன்க்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்கள் (சங் 40:16).
12. உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று சொல்லுவார்கள்.

40 அதிகாரம்

"என் இருதயம் சோர்ந்துபோகிறது". இதனால் நாம் மரித்துப் போவதில்லை.

இலச்சையடை **(confounded)** சங் 40:14 **חָפֵר - khaw-fare' - 2659**

வினைச்சொல் - வெட்கப்படு, கலங்கு, இலச்சையடை, வெட்டு **(disgraced; ashamed; abashed)** - *(சங் 40:14; சங் 70:2; ஏசா 1:29; ஏசா 24:23; எரே 15:9; மீகா 3:7).*

பிராணன் **(soul)** - **נֶפֶשׁ - neh'-fesh - 5315**

பெண்பால் பெயர்ச்சொல் - ஜந்து, ஜீவன், ஆத்துமா, உயிர், ஜனம், பிராணன், சம்மதி, மனது, மனம், பேர், பிறப்பு, ஆசை, இருதயம், பிராணி, செத்தவன், இறந்து போன பிணம், மனிதன், மிருகத்துக்கு மிருகம், சவம், பிரேதம், யாதொருவர், உள்ளம், இஷ்டம், ஆவல், பசி, உட்கருத்து, ஜீவனுக்கு ஜீவன், சுவாசம், சித்தம், இச்சை, போஜனம், நெஞ்சு, மனுஷர் **(the seat of the emotions, passions, feelings, and desires)** - *(யோபு 6:7; யோபு 12:10; யோபு 14:22; யோபு 16:4)*

நினை **(thinketh)** - **חָשַׁב - khaw-shab' - 2803**

வினைச்சொல் - நினை, எண்ணு, யோசி, சிந்தி, விலக்கு, உண்டுபண்ணு, நினைத்திரு, யூகி, ஆலோசனைபண்ணு, மதியாமலிரு, விசித்திரவேலைகளைசெய், விரோத வேலைகளைச் செய், நிபுணரான தொழிலாளியாயிரு, தியானி, தள்ளு, சுமத்திரு, கணக்குப்பார், கணக்கிடு **(to think; meditate; reckon)** - *(சங் 40:17; ஆதி 38:15; ஆதி 50:20; 1சாமு 1:13; 1சாமு 18:25; 2சாமு 14:13; நெகே 6:2, 6; யோபு 35:2; யோபு 41:32; ஏசா 10:7; எரே 18:8; எரே 23:27; எரே 29:11; எசே 38:10; மல் 3:16).*

41 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மேசியாவைப் பற்றிய எட்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. இரக்ககுணத்தோடு உதவிபுரிபவனுக்கு ஏழு ஆசீர்வாதங்கள் - (41:1-3)
2. இரண்டு விண்ணப்பங்கள் - சத்துருக்கள் சொல்லும் செய்யும் ஏழு காரியங்கள் - (41:4-8)
3. மேசியாவைக் காட்டிக் கொடுத்தல் - (41:9)
4. இரண்டு விண்ணப்பங்கள் - நான்கு ஆசீர்வாதங்கள் - (41:10-13)

1. இரக்ககுணத்தோடு உதவிபுரிபவனுக்கு ஏழு ஆசீர்வாதங்கள்

சங் 41:1 சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன்பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

சங் 41:2 கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.

சங் 41:3 படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப் போடுவீர்.

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தை உள்ளவனுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1. தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார் (சங் 41:1)
2. பாதுகாப்பார் (சங் 41:2)
3. உயிரோடே வைப்பார்
4. பூமியில் அவனை ஆசீர்வதிப்பார்
5. சத்துருக்களிடமிருந்து விடுதலை யாக்குவார்
6. படுக்கையின்மேல்வியாதியாக் கிடக்கிற போது அவனைத் தாங்குவார்

திடப்படுத்து (Strength) סָעַד - saw-ad'- 5582

வினைச்சொல் - நிற்கப்பண்ணு, திடப்படுத்து, தேற்றிக்கொள்ளு, இளைப்பாறு, ஆதரித்தருளு, தாங்கு, ஆதரி, நிலைப்படுத்து (support; refreshing; healing) upon the bed of languishing) - சங் 41:3; யோபு 6:7)

வியாதி (sickness) - 1 דְּוַי - dev-ah'ee - 1741

ஆ.பெ.சொ. - அரோசிகம், வியாதி (sickness; sorrow) (சங் 41:3; யோபு 6:7)

7. நோய் (weakness) - חֳלִי - khol-ee'- 2483

ஆ.பெ.சொ. - நோய், வியாதி, துக்கம், வியாதிப்படுதல் (சங் 41:3; உபா 7:15; உபா 28:59, 61; 1இராஜா 17:17; 2இராஜா 13:14; 2நாளா 21:15,19; பிர 5:17; ஏசா 38:9; ஏசா 53:3).

உயிரோடேவை (keep ... alive) - חָיָה - khaw-yaw' - 2421

வினைச்சொல் - உயிர்பிழை, உயிரோடிரு, பிழை, பிழைத்திரு, பிழைக்கப்பண்ணு, ஜீவனோடிரு, வாழ்க, திரும்பிவா, ஜீவித்திரு, ஜீவனம் பண்ணு, உயிரடை, பழுதுபார், வளர், செழி, நீங்கு, வாழ், உண்டாகு, உயிரோடுவை, ஜீவி, பிராணனைக் காப்பாற்று, உயிர்ப்பி, உயிரோடே காப்பாற்று (to keep alive; restore life, hence, resurrection) (சங் 41:2; சங் 22:29; சங் 30:3; சங் 33:19; ஆதி 6:19-20; ஆதி 7:3; எண் 31:18; யோசு 14:10; 2சாமு 8:2)

41 அதிகாரம்

2. இரண்டு விண்ணப்பங்கள் - சத்துருக்கள் சொல்லும் செய்யும் ஏழு காரியங்கள்

சங் 41:4 கர்த்தாவே, என் மேல் இரக்கமாயிரும்; உமக்குவிரோதமாய்ப் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவைக் குணமாக்கும்என்றுநான் சொன்னேன்.

சங் 41:5 அவன் எப்பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுது அழியும்? என்று என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறார்கள்.

சங் 41:6 ஒருவன் என்னைப் பார்க்கவந்தால் வஞ்சனையாப் பேசுகிறான்;அவன் தன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக் கொண்டு, தெருவிலேபோய், அதைத் தூற்றுகிறான்.

சங் 41:7 என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருந்து, எனக்குப் பொல்லாங்கு நினைத்து,

சங் 41:8 தீராவியாதி அவனைப் பிடித்துக் கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப் பத்தில்லை என்கிறார்கள்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என்மேல் இரக்கமாயிரும் (சங் 41:4)
2. பாவத்திலிருந்து என் ஆத்துமாவைக் குணமாக்கும்
3. எனக்கு இரங்கும் (சங் 41:10)
4. என்னை எழுந்திருக்கப் பண்ணும்

"என் ஆத்துமாவைக் குணமாக்கும்" - ஆத்துமாவைக் குணப்படுத்தும் என்ற விண்ணப்பத்தை இங்கு மட்டுமே வாசிக்கிறோம். மற்ற இடங்களிலெல்லாம் சரீரத்தைக் குணமாக்கும் என்னும் விண்ணப்பமே அதிகமாயுள்ளது.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள குண மாதல்கள்

1. நோய்களைக் குணமாக்குதல் (யாத் 15:26; சங் 103:3; மத் 10:1-8; 5:14-16)
2. ஆத்துமாவைக் குணமாக்குதல் (சங் 41:4)
3. தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுத்தல் (2நாளா 7:14)
4. சீர்கேடுகளைக் குணமாக்குதல் (எரே 3:22; ஓசி 14:4)
5. இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குதல் (சங் 147:3; லூக்கா 4:18)
6. தண்ணீர் (யாத் 15:25;2 இராஜா 2:21-22; எசே 47:8-11)
7. காயம் (எரே6:14; எரே8:11; நாகூம் 3:19)
8. இராஜ்யங்கள் (எரே51:8-9; வெளி 13:3, 12)
9. தேசம் குணமாதல் (ஏசா 30:26)
10. தேசங்கள் குணமாதல் - ஜீவன் காக்கப்படுதல் (வெளி 22:2)

"அவன் எப்பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுது அழியும்?" - இது விரோதிகளிடம் எதிர்பார்க்கப்படும் காரியம் (மத் 5:10-12).

பகைஞனின் வார்த்தைகள்

1. அவன் எப்பொழுது சாவான்? (சங் 41:5)
2. அவன் பேர் எப்பொழுது அழியும்
3. ஒருவன் என்னைப் பார்க்க வந்தால் வஞ்சனையாய் பேசுகிறான் (சங் 41:6)
4. அவன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக் கொள்ளுகிறான்
5. ஒருவன் என்னைப் பொது இடங்களில் வஞ்சனையாய்ப் பேசுகிறான் (சங் 41:6)

41 அதிகாரம்

6. என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருக்கிறார்கள் (சங் 41:7)

7. எனக்குப் பொல்லாங்கு நினைக்கிறார்கள்

8. நான் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள் (சங் 41:8)

3. மேசியாவைக் காட்டிக் கொடுத்தல்

சங் 41:9 என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகியமனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.

தீர்க்கதரிசன எண் - 32

"என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (சங் 41:9) - இந்தத் தீர்க்கதரிசனம் யூதாஸ் ஸ்காரியோத் மூலமாக நிறைவேறிற்று (யோவான் 13:18)

பிராணனன் **(familiar) - שָׁלוֹם - shaw-lome', shaw-lome' - 7965**

ஆ.பெ.சொ. - சமாதானம், சுகமாயிருத்தல், ஷேமம், மங்களம், சுகசெய்தி, சுகம், ஷாலோம், சரி, வினவுதல், பத்திரப்பட்டிருத்தல், சவுக்கியம், செல்வம், வாழ்வு, கடாட்சம், ஒப்புரவு, அனைத்தும், சுகித்திருத்தல், இஷ்டம் **(peace; prosperity; completeness)** (சங் 41:9; எரே 20:10; அப் 1:25).

"என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும்" - கிழக்கத்திய நாடுகளில் "என் வீட்டு உப்பைத் தின்றவன்" என்னும் வாக்கியத்திற்கு இணையானது. "உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேத வாக்கியம்நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம்புசிக்கிறவன்என்மேல்தன் குதிகாலைத் தூக்கினான்". (யோவான் 13:18).

"என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என்பது எனக்கு விரோதமாக எழும்பினான் என்று பொருள்படும் உருவகம்.

4. இரண்டு விண்ணப்பங்கள் - நான்கு ஆசீர்வாதங்கள்

சங் 41:10 கர்த்தாவே, நீர் எனக்கு இரங்கி, நான் அவர்களுக்குச் சரிக்கட்ட என்னை எழுந்திருக்கப் பண்ணும்.

சங் 41:11 என் சத்துரு என்மேல் ஜெயங்கொள்ளாததினால்,நீர் என்மேல் பிரியமாயிக்கிறீரென்று அறிவேன்.

சங் 41:12 நீர் என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்.

சங் 41:13 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஆமென், ஆமென்.

எழுந்திரு **(raise ... up) - קוּם - koom - 6965**

வினைச்சொல் - நிமிர்ந்திரு, வா, எழுந்திரு, உரியதாகு, உறுதியாகு, தூக்கிவிடு, அற்றுப்போ, நில், மங்கலாயிரு, நிலைவரப்படு, எழு, நிர்வாகம்பண்ணு,கட்டு, கூட்டிக்கொள், புறப்படு, உறுதிப்படுத்து, செம்மைப் படுத்து, ஸ்தாபி, பிரயாணப்படு, தோன்று, நிறைவேற்று, ஏறு, பிரகாசமாயிரு, உதித்திரு, ஸ்தாபனப் படுத்து, திடப்படுத்து, ஸ்திரப்படுத்து, நாட்டு, நிலைநிறுத்து, தூக்கிக்கட்டு, ஸ்தாபனம் பண்ணு **(to cause to raise up)**

தாவீது அப்சலோமுக்குப் பயந்து ஓடுகிறான். அகித்தோபேலும் தாவீதை வஞ்சித்து விட்டான். (2சாமு 15:31) தான் சோர்ந்து போயுள்ள இந்தச் சூழ்நிலையில் தன்னை எழுந்திருக்கப் பண்ணுமாறு தாவீது விண்ணப்பம் எண்ணுகிறான்.

41 அதிகாரம்

நிறைவேற்றுதல் (requite) - שָׁלַם - shaw-lam' - 7999

வினைச்சொல் - நிறைவேற்றுதல், முடித்தல் **(to finish; complete; repay)** *(சங் 41:10; நியா 1:7; 2இராஜா 9:26; எரே 51:56).*

"என் சத்துரு என்மேல் ஜெயங் கொள்ளாததினால், நீர் என்மேல் பிரியமாயிக்கிறீரென்று அறிவேன்" - அப்சலோம் கலகம் பண்ணிய போது தாவீது இந்த சங்கீதத்தை இயற்றியிருக்கலாம். *(2சாமு 15-18).*

தீர்க்கதரிசன எண் - 33

"நீர் என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்" *(சங் 41:12)* - நீர் என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர் இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. தாவீது தன்னுடைய முடிவைப் பற்றியும் தேவனிடத்தில்கொண்டிருந்த நம்பிக்கையைப் பற்றியும் இந்த வசனம் குறிப்பிடுகிறது *(சங் 23:6).*

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஆமென், ஆமென்" - 1இராஜா 1:47-48; 1நாளா 16:36; 1நாளா 29:10; லூக்கா 1:68-70.

42 அதிகாரம்

(கோராகின் புத்திரரிலுள்ள இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் தாவீதின் சங்கீதம்.)

நான்காவது போதக சங்கீதம் - நெருக்கப் படும்போது தேவன் செய்யும் உதவிபற்றிய போதகம்

பொருளடக்கம்

1. ஆத்துமாவின் இரண்டுவிதமான தாகம் - (42:1-2)
2. ஆத்துமாவின் ஏழுவிதமான நெருக்கம் - (42:3-4)
3. ஆத்துமாவிற்கு நான்குவிதமான விண்ணப்பம் - (42:5)
4. நெருக்கத்தில் ஏறெடுக்கப்பட்ட பதினான்கு விதமான ஜெபமும் தேவனிடம் முறையிடுவதும் - (42:6-10)
5. ஆத்துமாவிற்கு நான்குவிதமான விண்ணப்பம் - (42:11)

1. ஆத்துமாவின் இரண்டுவிதமான தாகம்

சங் 42:1 மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.

சங் 42:2 என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயி ருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?

கோராகின் புத்திரருக்கு (எண் 16; எண் 26:9; எண் 27:3; யூதா 1:11) பத்து சங்கீதங்கள் எழுதப்பட்டிருக்கிறது. அவற்றுள் இது முதலாவது சங்கீதம் (சங் 42; சங் 44-49; சங் 85; சங் 87; சங் 88). தாவீது நாட்டை விட்டு வெளியேறி சுற்றியலைந்த போது இந்த சங்கீதத்தை இயற்றினான். எருசலேமிற்குத் திரும்பி வர வாஞ்சை யாயிருந்தான்.

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல" - வேடன் மானை வேட்டையாடும் போது, மானானது ஓடி ஓடி களைத்துப் போகும். தாகத்துடன் இருக்கும். தண்ணீருக்காகக் கதறும் (யோவே 1:20).

"தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக்கதறுகிறது" - நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாகமாக இருக்கும் போது, கர்த்தர் ஜீவத் தண்ணீரின் ஆதாரமாக இருக்கிறார் (சங் 36:8-9; ஏசா 12:3; ஏசா 32:2; ஏசா 41:17-18; ஏசா 44:3; யோவான் 4:14; யோவான் 7:37-39).

வாஞ்சித்துக்கதறுவதுஎன்பது மனதிற்குள் மெதுவாகக் கத்துவது என்று பொருள்படாது. பலத்த சத்தமாகக் கதறுதல். தீவிரமான ஆர்வம் என்று பொருள்படும்.

தீவிரமான வாஞ்சையின் அம்சங்கள்

1. என் ஆத்துமா வாஞ்சித்துக் கதறும் (சங் 42:1)
2. நாவு தாகத்தால் வறளும் (ஏசா 41:17-18)
3. பசியாகவும், தாகமாகவும், ஆத்துமா தொய்ந்ததாகவும் அலைந்து திரியும் (சங் 107:5)
4. வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது (சங் 63:1; சங் 143:6).
5. ஜெபத்தில் ஆத்துமாவை ஊற்றும் (சங் 42:4)
6. என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது (சங் 63:8)
7. என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனைப் பற்றிக் கொள்ளும்
8. என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீரசத்தமிடுகிறது (சங் 130:5-6).
9. அழுதுகொண்டு போகும் (சங் 42:3; சங் 126:5-6)
10. புதையல்களைத் தேடுகிறது போல் தேடும் (நீதி 2:3-5)

42 அதிகாரம்

சங்கீதம் 42-இல் கூறப்பட்டுள்ள காரியங்கள்

1. வாஞ்சித்தல் (Panting) (சங் 42:1)
2. உருகுதல் (Pouring) (சங் 42:4)
3. தயங்குதல் (Pouting) (சங் 42:5)
4. துதித்தல் (Praising) (சங் 42:11)

நாம் எதன்மேல் தாகமாயிருக்க வேண்டும்

1. ஜீவனுள்ள தேவன் மேல் (சங் 42:2; சங் 63:1; சங் 143:6)
2. நீதியின் மேல் (மத் 5:6)
3. இரட்சிப்பிற்கான ஜீவத்தண்ணீர் (யோவான் 4:14; யோவான் 6:35; வெளி 22:17; ஏசா 55:1-3)
4. ஞானம், புத்தி (நீதி 2:1-11)
5. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (யோவான் 7:37-39)

2. ஆத்துமாவின் ஏழுவிதமான நெருக்கம்

சங் 42:3 உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று.

சங் 42:4 முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே; இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது.

சங்கீதம் 42-இல் தாவீதைப் பற்றி கூறப்பட்டிருக்கிற தனிப்பட்ட குறிப்புகள்

1. என் ஆத்துமா (சங் 42:1)
2. என் கண்ணீர் (சங் 42:4)
3. என் ஆகாரம்
4. என் தேவன் (சங் 42:6)
5. என் ஜெபம் (சங் 42:8)
6. என் ஜீவன்
7. என் கன்மலை (சங் 42:9)
8. என் எலும்புகள் (சங் 42:10)
9. என் சத்துருக்கள்
10. என் முகம் (சங் 42:11; சங் 43:5; சங் 44:3; சங் 89:15; சங் 90:8)

"பண்டிகை நாள்" (holyday) இஸ்ரவேலின் எல்லா ஆண்களும் வருஷத்திற்கு மூன்று முறை தேவனுடைய சமூகத்தில் வந்து நிற்க வேண்டும் (கொலோ 2:16).

3. ஆத்துமாவிற்கு நான்குவிதமான விண்ணப்பம் - (வசனம். 11; 43:5)

சங் 42:5 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.

4. நெருக்கத்தில் ஏறெடுக்கப்பட்ட பதினான்கு விதமான ஜெபமும் தேவனிடம் முறையிடுவதும்

சங் 42:6 என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது; ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.

42 அதிகாரம்

சங் 42:7 உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது.

சங் 42:8 ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும்பாட்டு என் வாயிலிருக்கிறது; என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன்.

சங் 42:9 நான் என் கன்மலையாகிய தேவனை நோக்கி: ஏன் என்னை மறந்தீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும்என்று சொல்லுகிறேன்.

சங் 42:10 உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி, என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக் குத்துகிறது போல் இருக்கிறது.

கலங்கு (cast down) - שָׁחַח - **shaw-khakh' - 7817**

வினைச்சொல் - கலங்கு, அடங்கு, தலை, கவிழ், ஒடுங்கு, குனி, தணி, தாழ் **(to sink or depress; bend down; humble self)** *(சங் 42:5, 6, 11; சங் 43:5)*

தாவீது அப்சலோமிற்குத் தப்பி ஓடி, யோர்தான் நதியைக் கடந்து, வடக்கேயுள்ள மலைகளை நோக்கி பிரயாணம் பண்ணியபோது இயற்றிய சங்கீதம் *(2சாமு 17:22)*.

நம்பிக்கையிழந்து கலங்கியவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. காயீன் *(ஆதி 4:13-14)*
2. ஆகார் *(ஆதி 21:15-16)*
3. இஸ்ரவேல் *(எண் 17:12-13; உபா 28:65-67)*
4. யோபு *(யோபு 3:1-24; யோபு 17:13-15)*
5. தாவீது *(சங் 42:5-6,11; சங் 43:2)*
6. ஆசாப் *(சங் 77:7-9)*
7. எலியா *(1இராஜா 19:4)*
8. யோனா *(யோனா 4:3-8)*

"எர்மோன் மலைகள்" - லெபனானின் தென்பகுதியிலுள்ள மலைத்தொடர். சிகரத்தின் உயரம் 9,166 அடி. பனிமலை மூடியிருக்கும். பனிமழை போன்று பொழியும் *(சங் 42:6-7; சங் 133:3)*. கப்பல் கட்டுவோர் தங்களுக்குத் தேவையான மரங்களை இந்த மலைக் காடுகளில் வெட்டினார்கள் *(எசே 27:5)*. மிருகங்களை வேட்டையாட சிறந்த மலைப்பகுதி *(உன் 4:8)*.

"சிறுமலை" **(Mizar)** - எர்மோனுக்கும் யோர்தானுக்கும் இடையிலுள்ள சிறுமலை. இதன் மறுபெயர் சீகோன் **(Sion)** *(உபா 4:48)*, சீரியோன் சேனீர் **(Sirion and Shenir)** *(உபா 3:9)*. சிறுமலை வேறு. எர்மோன் மலை வேறு *(1நாளா 5:23; உன் 4:8)*.

ஆழம் (Deep) - תְּהוֹם - **teh-home' - 8415**

ஆ.பெ.சொ. - ஆழம், ஆறு, பாதாளம், விலாசம், ஊற்று, சமுத்திரம், ஆழி **(an abyss, as a surging mass of water; the deep sea or subterranean water supply)** *(சங் 42:7; சங் 36:6; சங் 104:6; சங் 148:7; ஆதி 1:2; ஆதி 7:11; ஆதி 8:2; ஆதி 49:25; உபா 33:13; யோபு 38:30; யோபு 41:32; நீதி 8:28; ஏசா 51:10; ஏசா 63:13; எசே 26:19; எசே 31:4,15; ஆமோ 7:4; ஆப 3:10)*.

மதகுகள் (waterspouts) - צִנּוֹר - **tsin-noor' - 6794**

ஆண்பால் பெயர்ச்சொல் - சாலகம், மதகு, நீர்வீழ்ச்சிகள் **(to be hollow; a gutter; a waterspout)**

சங்கீதம் - தொகுப்புரை

42 அதிகாரம்

வானத்திலிருந்து வரும் சூறாவளிக் காற்று போன்றது. **(similar to tornados)** மத்திய தரைக்கடற்பகுதியில் மேகங்களிலிருந்து இறங்கும் காற்றுப் பகுதியை மதகுகள் போல காணலாம்.

தாவீது தேவனையும் அவருடைய நன்மையையும் நினைத்த போது, அவனுடைய விசுவாசம் புதுப்பிக்கப்பட்டது *(சங் 42:6).*

5. ஆத்துமாவிற்கு நான்குவிதமான விண்ணப்பம் - (வசனம். 5; 43:5)

சங் 42:11 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

இரட்சிப்பு (health) - יְשׁוּעָה - yesh-oo'-aw - 3444

பெ.பெ.சொ. - இரட்சிப்பு, உதவி, சுகவாழ்வு, அடைக்கலம், இரட்சணியம், இரட்சித்தல் **(salvation; safety)** *(சங் 42:11; சங் 43:5).*

43 அதிகாரம்

பதினொன்றாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. நெருக்கத்திலிருந்து தப்புவிக்க வேண்டுமென்று எட்டுவிதமான விண்ணப்பம் - *(43:1-3)*
2. அப்பொழுது - தேவனிடம் கூறும் மூன்றுபொருத்தனைகள் - *(43:4)*
3. ஆத்துமாவிற்கு நான்குவிதமான விண்ணப்பம் - *(43:5)*

1. நெருக்கத்திலிருந்து தப்புவிக்க வேண்டுமென்று எட்டுவிதமான விண்ணப்பம்

சங் 43:1. தேவனே, நீர் என் நியாயத்தை விசாரித்து, பக்தியில்லாத ஜாதியாரோடு எனக்காக வழக்காடி, சூதும் அநியாயமுமான மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்.

சங் 43:2 என் அரணாகிய தேவன் நீர்; ஏன் என்னைத் தள்ளிவிடுகிறீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும்?

சங் 43:3 உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்; அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோவதாக.

தாவீதின் விண்ணப்பம்

1. என்னை நியாயம் விசாரியும் *(சங் 43:1)*.
2. எனக்காக வழக்காடும் *(சங் 43:1)*.
3. சூதுள்ள மனுஷர்களிடமிருந்து என்னைத் தப்புவியும்.
4. அநியாயமான மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்.
5. உமது வெளிச்சத்தை அனுப்பியருளும் *(சங் 43:3)*.
6. உமது சத்தியத்தை அனுப்பியருளும்.
7. அவைகள் (வெளிச்சமும், சத்தியமும்) என்னை வழி நடத்தும்.
8. அவைகள், என்னை உமது பரிசுத்த பர்வதத்திற்கும், உமது வாசஸ்தலங்களுக்கும் கொண்டு போகட்டும்

தாவீதின் தனிப்பட்ட குறிப்புகள்

1. என் வழக்கு *(சங் 43:1)*
2. என் அரண் *(சங் 43:2)*
3. என் ஆனந்த மகிழ்ச்சி *(சங் 43:4)*
4. என் தேவன் *(சங் 43:4, 5)*
5. என் ஆத்துமா *(சங் 43:5)*
6. என்முகம்

இந்த சங்கீதத்தில் 18 பெயர்ச்சுட்டும், 8 விண்ணப்பங்களும், 4 கேள்விகளும், 3 பொருத்தனைகளும் உள்ளன.

"பக்தியில்லாத ஜாதி" - இஸ்ரவேல் ஜாதி தேவன் தெரிந்தெடுத்த ராஜாவான தாவீதிடம் அநீதியாக நடந்து கொண்டது.

சூதும் அநியாயமுமான மனுஷனுக்கு என்னைத் தப்புவியும். அப்சலோமிடமிருந்து தன்னை மீட்குமாறு தாவீதின் விண்ணப்பம் *(2சாமு 15-18)*.

"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்" ஊரிம், தும்மீம் பற்றிய குறிப்பு. வெளிச்சமும் பரிபூரணமும். இரண்டு கற்கள் - இதன் மூலமாக வெளிச்சத்தையும் தேவனுடைய பரிபூரண அறிவையும் பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுத்த பர்வதம் - சீயோன் - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பி ஓடுகிறான். சீயோனை விட்டுப் போய்விட்டான். மறுபடியும் சீயோனுக்கு வர வேண்டுமென்று ஜெபிக்கிறான். இது தேவனுடைய ஆசரிப்புக் கூடாரம் உள்ள இடம். கர்த்தரை ஆராதனை செய்யும் இடம். *(2சாமு 15-18)*

43 அதிகாரம்

2. அப்பொழுது - தேவனிடம் கூறும் மூன்றுபொருத்தனைகள்

சங் 43:4 அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும், எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன். தேவனே, என் தேவனே, உம்மைச் சுரமண்டலத்தால் துதிப்பேன்.

தாவீதின் பொருத்தனைகள்

1. கர்த்தர் என்னைப் பரிசுத்த பர்வதத்திற்கும் வாசஸ்தலங்களுக்கும் கொண்டு போவார். அப்பொழுது தேவனுடைய பீடத் தண்டைக்குப் போவேன் *(சங் 43:3,4)*.
2. எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்குப் பிரவேசிப்பேன் *(சங் 43:4)*.
3. தேவனை சுரமண்டலத்தால் துதிப்பேன் *(2 சாமு 23:1)*.

3. ஆத்துமாவிற்கு நான்குவிதமான விண்ணப்பம் - *(42:5,11)*

சங் 43:5 என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

தாவீது இந்தச் சங்கீதத்தை இயற்றியவன். சங் 42 போலவே இருக்கிறது. ஒப்பிடவும் *(சங் 42:5,11)*

44 அதிகாரம்

(கோராகின் புத்திரரில் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் சங்கீதம்.)

ஐந்தாவது போதக சங்கீதம்

பொருளடக்கம்

1. யோசுவாவின் கீழ் இஸ்ரவேலின் தேவன் செய்த எட்டுவிதமான விடுதலைகள் - (44:1-3)
2. கர்த்தர் இஸ்ரவேலின் மீட்பராயிருக்கிறார் என்னும் எட்டுவிதமான நம்பிக்கை - (44:4-8)
3. இஸ்ரவேல் மீது பதினாறு விதமான நியாயத்தீர்ப்பு - தங்கள் பாடுகளுக்காக தேவனைக் குற்றப் படுத்துதல் - (44:9-16)
4. தேவனை எட்டு விதமாகக் குற்றப் படுத்துதல். தாங்கள் ஒன்றும் அறியாதவர்கள் எனக்கூறுதல் - (44:17-22)
5. நெருக்கத்திலிருந்து விலக்குமாறு எட்டு விதமான ஜெபம் - (44:23-26)

1. யோசுவாவின் கீழ் இஸ்ரவேலின் தேவன் செய்த எட்டுவிதமான விடுதலைகள்

சங் 44:1 தேவனே, எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வ நாட்களில் நீர் நடப்பித்த கிரியைகளை அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள்; அவைகளை எங்கள் காதுகளால் கேட்டோம்.

சங் 44:2 தேவரீர் உம்முடைய கையினாலே ஜாதிகளைத் துரத்தி, இவர்களை நாட்டி; ஜனங்களைத் துன்பப்படுத்தி, இவர்களைப் பரவப் பண்ணினீர்.

சங் 44:3 அவர்கள் தங்கள் பட்டயத்தால் தேசத்தைக் கட்டிக் கொள்ளவில்லை; அவர்கள் புயமும் அவர்களை இரட்சிக்க வில்லை; நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்த படியால், உம்முடைய வலதுகரமும், உம்முடைய புயமும், உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது.

கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட பத்து சங்கீதங்களில் இரண்டாவது சங்கீதம் (சங் 42).

யோசுவாவின் காலத்தில் கர்த்தருடைய கிரியைகள்

1. கர்த்தர், புறஜாதிகளை அவருடைய கையினாலே துரத்தினார் (சங் 44:2)
2. இஸ்ரவேலர்களை நாட்டினர்
3. புறஜாதியினரைத் துன்பப்படுத்தினார்
4. புறஜாதியாரைத் துரத்தினார்
5. கர்த்தர், இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் தேசத்தைக் கொடுத்தார் (சங் 44:3)
6. கர்த்தர், தமது வல்லமையால் இஸ்ரவேலை இரட்சித்தார்
7. கர்த்தர், தமது வலது கரத்தால் இஸ்ரவேலை இரட்சித்தார்
8. தம்முடைய முகத்தின் பிரகாசத்தினால் இஸ்ரவேலை இரட்சித்தார்

பிரியமாயிரு (favour) - רָצָה - raw-tsaw' - 7521

வினைச்சொல் - பிரியம் வை, தயவு, அநுபவி, அருளு, தயைசெய், ஒத்துக்கொள், பிரியமாயிரு, மெச்சிக்கொள், ஒருமித்துப்போ, அங்கீகரி, பிரியமானவன், நிவர்த்தியாகு, ஒப்புரவாகு, வாஞ்சைவை, அங்கீகாரம் பண்ணு, கிருபையாயிரு, ரம்மியப்படு (to be pleased with them)

2. கர்த்தர் இஸ்ரவேலின் மீட்பராயிருக்கிறார் என்னும் எட்டுவிதமான நம்பிக்கை

சங் 44:4 தேவனே, நீர் என் ராஜா; யாக்கோபுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடும்.

44 அதிகாரம்

சங் 44:5 உம்மாலே எங்கள் சத்துருக்களைக் கீழே விழத்தாக்கி, எங்களுக்கு விரோதமாய் எழும்புகிற வர்களை உம்முடைய நாமத்தினால் மிதிப்போம்.

சங் 44:6 என் வில்லை நான் நம்பேன், என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை.

சங் 44:7 நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை இரட்சித்து, எங்களைப் பகைக்கிற வர்களை வெட்கப் படுத்துகிறீர்.

சங் 44:8 தேவனுக்குள் நித்தம் மேன்மை பாராட்டுவோம்; உமது நாமத்தை என்றென்றைக்கும் துதிப்போம்; (சேலா)

தேவனிடத்தில் வைத்துள்ள நம்பிக்கை

1. தேவனே, என் ராஜா (சங் 44:4)
2. இரட்சிப்பைக் கட்டளையிடுவார்
3. எங்கள் சத்துருக்களைக் கீழே விழத் தாக்குவார் (சங் 44:5)
4. எங்களுக்கு விரோதமாய் எழும்புகிற வர்களை உம்முடைய நாமத்தினால் மிதிக்கும்படி எங்களுக்கு உதவிச் செய்வார்
5. என் வில்லை நான் நம்பேன், என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை (சங் 44:6)
6. நீரே எங்கள் சத்துருக்களினின்று எங்களை இரட்சிப்பீர் (சங் 44:7)
7. எங்களை பகைக்கிறவர்களை வெட்கப் படுத்துகிறீர்
8. தேவனுக்குள் நித்தம் மேன்மை பாராட்டுவோம், உமது நாமத்தை என்றென்றைக்கும் துதிப்போம் (சங் 44:8)

3. இஸ்ரவேல் மீது பதினாறு விதமான நியாயத்தீர்ப்பு - தங்கள்பாடுகளுக்காக தேவனைக் குற்றப்படுத்துதல்

சங் 44:9 நீர் எங்களைத் தள்ளிவிட்டு, நாணப்பண்ணுகிறீர்; எங்கள் சேனைகளுடனே செல்லாதிருக்கிறீர்.

சங் 44:10 சத்துருவுக்கு நாங்கள் இடைந்து பின்னிட்டுத் திரும்பிப்போகப் பண்ணுகிறீர்; எங்கள் பகைஞர் தங்களுக்கென்று எங்களைக் கொள்ளையிடுகிறார்கள்.

சங் 44:11 நீர் எங்களை ஆடுகளைப் போல இரையாக ஒப்புக்கொடுத்து, ஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடிக்கிறீர்.

சங் 44:12 நீர் உம்முடைய ஜனங்களை இலவசமாக விற்கிறீர்; அவர்கள் கிரயத்தினால் உமக்கு லாபமில்லையே.

சங் 44:13 எங்கள் அயலாருக்கு எங்களை நிந்தையாகவும், எங்கள் சுற்றுப் புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமாகவும் வைக்கிறீர்.

சங் 44:14 நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கவும், ஜனங்கள் எங்களைக்குறித்துத் தலைதுலுக்கவும் செய்கிறீர்.

சங் 44:15 நிந்தித்துத் தூஷிக்கிற வனுடைய சத்தத்தினிமித்தமும், சத்துருவின் நிமித்தமும், பழி வாங்குகிறவனிமித்தமும்,

சங் 44:16 என் இலச்சை நித்தம் எனக்கு முன்பாக இருக்கிறது; என் முகத்தின் வெட்கம் என்னை மூடுகிறது.

இஸ்ரவேல் மீதும் சங்கீதக்காரன் மீதும் நியாயத்தீர்ப்பு

1. தேவரீர், எங்களைத் தள்ளிவிட்டீர் (சங் 44:9)
2. நாணப்பட்டுப் போகப்பண்ணுகிறீர் (சங் 44:9)
3. எங்கள் சேனைகளுடனே செல்லா திருக்கிறீர்

44 அதிகாரம்

4. சத்துருவுக்கு நாங்கள் இடைந்து பின்னிட்டுத் திரும்பிப்போகப் பண்ணுகிறீர் (சங் 44:10)

5. எங்கள் பகைஞர் தங்களுக்கென்று எங்களைக் கொள்ளையிடுகிறார்கள்

6. நீர் எங்களை ஆடுகளைப் போல இரையாக ஒப்புக் கொடுக்கிறீர் (சங் 44:11)

7. ஜாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடிக்கிறீர்

8. இலவசமாக எங்களை விற்கிறீர் (சங் 44:12)

9. எங்கள் சத்துருக்களுக்கு எங்களை அளிக்கிறீர்

10. எங்கள் அயலார்கள், எங்களை நிந்திக்கிறார்கள் (சங் 44:13)

11. எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமாகவும் வைக்கிறீர்

12. நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கப் பண்ணுகிறீர் (சங் 44:14)

13. ஜனங்கள் எங்களைக் குறித்து தலைதுலுக்குகிறார்கள்

14. என்னை இலச்சையடையச் செய்கிறீர் (சங் 44:15)

15. என்னை வெட்கமடையச் செய்கிறீர்

16. என்னை நிந்தித்துத் தூஷிக்கும் படியாகச் செய்கிறீர் (சங் 44:16)

இஸ்ரவேலின் பாவத்தினால் அதற்கு நியாயத்தீர்ப்பு வந்தது. விதைத்ததை அறுத்தார்கள் (கலா 6:7-8). இதற்குத் தேவனைக் குற்றப்படுத்த முடியாது. பாவம் செய்தால் சாபம் வரும் என்று தேவன் அவர்களை எச்சரித்திருந்தார். தேவன் வாக்கு மாறாதவர் (உபா 28; லேவி 26).

"எங்கள் சேனைகளுடனே செல்லாதிருக்கிறீர்"- தேவன் இஸ்ரவேலுக்கு விரோதமாயிருக்கிறார் (சங் 60:10; யோசு 7:1-9).

"நீர் உம்முடைய ஜனங்களை இலவசமாக விற்கிறீர்; அவர்கள் கிரயத்தினால் உமக்கு லாபமில்லையே" - தேவன் தமது ஜனத்தை சத்துருக்களின் கைகளில் வெகுமதி கொடுப்பது போன்று கொடுத்துவிட்டார்.

"நாங்கள் ஜாதிகளுக்குள்ளே பழமொழியாயிருக்கவும், ஜனங்கள் எங்களைக் குறித்துத் தலைதுலுக்கவும் செய்கிறீர்" - இவை அனைத்தும் இஸ்ரவேலுக்கு எச்சரிப்பாகக் கூறப்பட்டுள்ளது. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி, பிரமாணத்தைக் கைக்கொள்ள வில்லையென்றால் அவர்களுக்கு அழிவு நிச்சயம் வரும் (லேவி 26: 16-45; உபா 28:15-68).

4. தேவனை எட்டு விதமாகக் குற்றப்படுத்துதல் தாங்கள் ஒன்றும் அறியாதவர்கள் எனக்கூறுதல்

சங் 44:17 இவையெல்லாம் எங்கள்மேல் வந்திருந்தும், உம்மை நாங்கள் மறக்கவும் இல்லை, உம்முடைய உடன்படிக்கைக்குத் துரோகம்பண்ணவும் இல்லை.

சங் 44:18 நீர் எங்களை வலுசர்ப்பங்களுள்ள இடத்திலே நொறுக்கி, மரண இருளினாலே எங்களை மூடியிருந்தும்,

சங் 44:19 எங்கள் இருதயம் பின்வாங்கவும் இல்லை, எங்கள் காலடி உம்முடைய பாதையை விட்டு விலகவும் இல்லை.

சங் 44:20 நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறந்து, அந்நியதேவனை நோக்கிக் கையெடுத்திருந்தோமானால்,

சங் 44:21 தேவன் அதை ஆராய்ந்து, விசாரியாதிருப்பாரோ? இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே.

44 அதிகாரம்

சங் 44:22 உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்.

தவறான பெருமைகளும் தவறான குற்றச்சாட்டுகளும்

மனுஷன் தன் ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லை என்றால், அவன் தேவனை குற்றப்படுத்துகிறான். தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று தவறான பெருமை கொள்கிறான்.

தவறான பெருமைகள்

1. தேவனை மறக்கவில்லை (சங் 44:17)
2. உம்முடைய உடன்படிக்கைக்குத் துரோகம் பண்ணவில்ல
3. எங்கள் இருதயம் பின்வாங்கவில்லை
4. எங்கள் காலடி உம்முடைய பாதையை விட்டு விலகவில்லை
5. நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறக்கவில்லை
6. அந்நிய தேவனை நோக்கிக் கையெடுக்கவில்லை

தவறான குற்றச்சாட்டுக்கள்

1. எல்லா சாபங்களும் எங்கள்மேல் வந்திருக்கிறது (சங் 44:9-16)
2. தேவன் எங்களை நொறுக்கிப் போட்டார் (சங் 44:19)
3. மரண இருளிலே எங்களை மூடினார்
4. உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப் படுகிறோம் (சங் 44:22)

மனுஷனைப் பற்றி தேவன் தெரிந்து வைத்திருக்கும் காரியங்கள்

1. அவனுடைய சிந்தனைகள் (உபா 31:21; 1நாளா 28:9; நீதி 6:18; ரோமர் 1:21; 2கொரி 10:5)
2. மனுஷனுடைய இருதயங்கள் (1சாமு 16:7; 1இராஜா 8:39; லூக்கா 16:15; அப் 1:24; அப் 15:8)
3. மனுஷனுடைய வழிகள் (யோபு 31:4; சங் 1:6; நீதி 5:21; மாற்கு 7:19-21; எபி 4:12)
4. இருதயத்தின் அந்தரங்கங்கள் (சங் 44:21)
5. மனுஷனுடைய யோசனைகள் (சங் 94:11)
6. தூரத்திலிருக்கிற நினைவுகள் (சங் 139:2)
7. நாவின் சொல் (சங் 139:4)
8. கிரியைகள், நினைவுகள் (ஏசா 66:18)
9. இருதயத்தின் நினைவுகள், யோசனைகள் (எபி 4:12)
10. திருக்குள்ளதும் மகா கேடுள்ளது மாயிருக்கிற இருதயம் (எரே 17:9)

"உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம்" - ரோமர் 8:35 இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

5. நெருக்கத்திலிருந்து விலக்குமாறு எட்டு விதமான ஜெபம்

சங் 44:23 ஆண்டவரே, விழித்துக் கொள்ளும்; ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும், எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்.

சங்கீதம் - தொகுப்புரை

44 அதிகாரம்

சங் 44:24 ஏன் உம்முடைய முகத்தை மறைத்து, எங்கள் சிறுமையையும் எங்கள் நெருக்கத்தையும் மறந்து விடுகிறீர்?

சங் 44:25 எங்கள் ஆத்துமா புழுதிமட்டும் தாழ்ந்திருக்கிறது; எங்கள் வயிறு தரையோடு ஒட்டியிருக்கிறது.

சங் 44:26 எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும்; உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்.

"எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும்; உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்" - தாவீது தேவன் மீது குற்றம் சுமத்திய பிறகு (சங் 44:23-26), தனக்கு உதவி செய்யுமாறு விண்ணப்பம் பண்ணுகிறான் (சங் 44:9-22).

45 அதிகாரம்

(சோஷனீம் என்னும் வாத்தியத்திலே வாசிக்கக் கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட நேசப்பாட்டாகிய சங்கீதம்.)

மேசியாவைப்பற்றிய ஒன்பதாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. சங்கீதக்காரன் ஏவப்படுகிறான் - (45:1)
2. இராஜாவின் சவுந்தரியம் - உதடுகளில் அருள்பொழிவது தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதம் - (45:2)
3. இராஜாவின் மகிமையும், மகத்துவமும் நீதிநெறிப்பண்பும் - (45:3-5)
4. மேசியாவின் நித்திய ஆளுகையும் ஆறுவிதமான புகழ்மாலையும் - (45:6-7)
5. இராஜாவின் வஸ்திரங்கள் - அவற்றின் சவுந்தரியமும் வாசனையும் - (45:8)
6. ராஜஸ்திரீயும் - அவளுடைய தோழிகளும் - (45:9-16)
7. சங்கீதக்காரன் ஏவப்படுகிறான் - (45:17)

1. சங்கீதக்காரன் ஏவப்படுகிறான்

சங் 45:1 என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; நான் ராஜாவைக் குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன்; என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி.

கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட பத்து சங்கீதங்களில் மூன்றாவது சங்கீதம் (சங் 42)

பொங்கு (inditing) - רָחַשׁ - raw-khash' - 7370
வினைச்சொல் - பொங்கு (bubbling over or up)

ராஜா - சாலொமோன் இராஜா - பார்வோனின் குமாரத்தியைத் திருமணம் செய்தபோது இயற்றப்பட்ட சங்கீதம் (1இராஜா 3; சங் 45:9-16; 1இராஜா 11). மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் அவர்களுடைய நண்பர்கள் வெகுமதி தருகிறார்கள் (சங் 45:2-5, 8; சங் 45:9-16)

2. இராஜாவின் சவுந்தரியம் - உதடுகளில் அருள்பொழிவது தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதம்

சங் 45:2 எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது; ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்.

"எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்". இது சாலொமோன் இராஜாவிற்கு கூறப்பட்ட புகழ்ந்துரை. அவன் சவுந்தரியவான். உன்னதப்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள நேசமான வார்த்தைகளை இங்கும் காணலாம் (உன் 5:2, 10-16, உன் 1:10-11, 15; உன் 4:1-5, 11-16; உன் 6:9-10; உன் 7:1-9).

"உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது". தேவன் சாலொமோன் மீது தெய்வீக ஞானத்தைப் பொழிந்தருளினார் (1இராஜா 3:5-15; 1இராஜா 4:29-34; 1இராஜா 10:1-13).

3. இராஜாவின் மகிமையும், மகத்துவமும் நீதிநெறிப்பண்பும்

சங் 45:3 சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக் கொண்டு,

சங் 45:4 சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும்; உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும்.

45 அதிகாரம்

சங் 45:5 உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள், அவைகள் ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள் பாயும்; ஜனசதளங்கள் உமக்குக் கீழே விழுவார்கள்.

"உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக்கொண்டு", சாலொமோன் இராஜாவின் திருமண விழாவிற்கு வந்தவர்கள் அவனைப் புகழ்ந்து கூறும் வாக்கியம். சாலொமோன் சமாதான மனுஷன். அதே சமயத்தில் கம்பீரமானவன். (சங் 45:3-5)

"சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய", சாலொமோனின் மகிமையும் மகத்துவமும் அனைவரும் அறிந்த விஷயம் (1இராஜா 10:1-10).

"சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும்" சாலொமோன் தேவனை விட்டு விலகி, பல ஸ்திரீகளை விவாகம் பண்ணி, பாவத்தில் விழுவதற்கு முன்பாக அவனுடைய ஆவி சத்தியமுள்ளதாயிருந்தது (2சாமு 12:24; 1இராஜா 3:5-15; 1இராஜா 4:29-34; 1இராஜா 11:1-13).

"உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும்". சுற்றியுள்ள தேசங்களைச் சாலொமோன் வெற்றி பெற்றிருந்தான் (சங் 45:4-5). நாற்பது வருஷங்கள் அவனுடைய ஆளுகை அமைதலாயிருந்தது (1இராஜா 11:42).

4. மேசியாவின் நித்திய ஆளுகையும் ஆறுவிதமான புகழ்மாலையும் - (ஏசா 9:6-7; தானி 7:13-14)

சங் 45:6 தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

சங் 45:7 நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்.

தீர்க்கதரிசன எண் - 34

"தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாய் இருக்கிறது.............." (சங்கீதம் 45:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவில் நிறைவேறிற்று (எபி 1:8-9).

"தேவனே" - இயேசு கிறிஸ்து தேவன் என்பதற்கு இது ஒரு சான்று. திரித்துவத்தில் ஒருவர். (ஏசா 7:14; ஏசா 9:6-7; எரே 23:6; எரே 33:16; மீகா 5:1-2; மத் 1:18-23; யோவான் 1:1-2; எபி 1:1-2; வெளி 1:8, 11; வெளி 21:6; வெளி 22:13).

"என்றைக்குமுள்ளது", - கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின் போது ஸ்தாபிக்கப் போகும் இராஜ்யம் 1000 வருஷத்திற்கு மட்டுமல்லாது, அது என்றென்றைக்குமுள்ளது (ஏசா 9:6-7; எசே 43:7-9; தானி 2:44-45; தானி 7:13-14, 18, 27; லூக்கா 1:32-33; எபி 1:8; எபி 12:28; வெளி 11:15; வெளி 22:4-5). ஆயிர வருஷ ஆட்சியின் முக்கிய நோக்கம் கலகக்காரர்களைப் பூமியிலிருந்து அகற்றுவது (1கொரி 15:24-28; எபே 1:10). இதன் பின்பு கிறிஸ்து புதிய பூமியில் நித்திய காலமாக ஆட்சி புரிவார்.

செங்கோல் (sceptre) சங் 45:6
שֵׁבֶט - shay'-bet - 7626

ஆண்பால் பெயர்ச்சொல் - வம்சம், மிலாறு, வல்லயம், கோல், தடி, தண்டனை, பிரம்பு, தண்டாயுதம், கொடுங்கோல், செங்கோல், கோத்திரம், கோத்திரத்தார் (an ornamental rod or staff used as a symbol of sovereignty and power)- அதிகாரத்திற்கு செங்கோல் ஓர் அடையாளம் (சங் 45:6; ஆதி 49:10; எண் 24:17; ஏசா 14:5; எசே 19:11, 14; ஆமோ 1:5; சக 10:11).

45 அதிகாரம்

நீதி (right) - מִישׁוֹר - mee-shore' - 4334

ஆ.பெ.சொ. - சமம், செம்மை, செவ்வை, நீதி, நியாயம், யதார்த்தம், சமன் - செம்மையான இடம் அல்லது காரியம் **(upright place or thing)** (சங் 45:6; சங் 67:4). கிறிஸ்துவின் செங்கோல் நீதியுள்ளது **(Christ's scepter is one of righteousness)** (சங் 45:6-7; எபி 1:8; ஏசா 11:4-5; ஏசா 16:5; ஏசா 32:1; எரே 23:6; எரே 33:15).

"நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்". இது மேசியாவின் குணாதிசயம் (எபி 1:8-9). பிதாவாகிய தேவன் மேசியாவை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் (அப் 2:36; எபே 1:20-23; பிலி 2:9-11; எபி 1:1-3; எபி 12:1-2; 1பேதுரு 3:22).

ஆனந்த தைலம் - துக்கம், வருத்தம், மரணம் எல்லாம் முடிவு பெறும். ஆதிகாலத்தில், துக்க வேளையில் அபிஷேகம் பண்ணமாட்டார்கள்.

தோழர் (fellows) சங் 45:7 חָבֵר - khaw-bare' - 2270

பெயரடை - ஏகோபித்த, உடனாளி, சேர்ந்த, தோழர், தோழன், கூட்டாளி. தோழர் **(companion)** - (பிர 4:10; ஏசா 44:11; எசே 37:19). மேசியாவின் தோழர் அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களுமே (மத் 10:1-8; அப் 1:1-8, 15-26; எபே 2:19-22).

5. இராஜாவின் வஸ்திரங்கள் - அவற்றின் சவுந்தரியமும் வாசனையும்

சங் 45:8 தந்தத்தினால் செய்த அரமனைகளிலிருந்து புறப்படுகையில், நீர் மகிழும்படி உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம் சந்தனம் லவங்கம் இவைகளின் வாசனை பொருந்தியதாயிருக்கிறது.

"உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப் போளம்". இது சாலொமோன் ராஜாவைக் குறிக்கிறது (சங்45:9; உன் 1:12, 14; உன் 3:6; உன் 4:10-11; உன் 5:5, 13; உன் 6:2).

வெள்ளைப்போளம் - **myrrh** (நீதி 7:17; உன் 3:6; உன் 4:14). பரிசுத்த தைலத்தில் சேர்க்கப்படும் பொருள் (யாத் 30:23).

சந்தனம் - **(aloes)** வஸ்திரங்களையும், படுக்கைகளையும் (நீதி 7:17; உன் 4:14), மரித்தவர்களையும் (யோவான் 19:39), வாசனையடையச் செய்யும்.

லவங்கம் - **(cassia)** இதன்பட்டையையும் பொடியையும் வாசனைத் திரவியம் செய்யவும், பரிசுத்த அபிஷேக தைலம் செய்யவும் பயன்படுத்துவார்கள் (யாத் 30:24).

தந்தத்தினால் செய்த அரமனைகள் - **(ivory palaces)** (1இராஜா 22:39; ஆமோ 3:15), தந்தத்தினாலான சிங்காசனம் **(Ivory thrones)** - (1இராஜா 10:18), வாரிபலகை **(benches)** - (எசே 27:6), தந்தம் **(horns)** - (எசே 27:15), தந்தக் கட்டில் **(beds)** - (ஆமோ 6:4), வஸ்துகள் **(vessels)** - (வெளி 18:12).

6. ராஜஸ்திரீயும் - அவளுடைய தோழிகளும்

சங் 45:9 உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு, ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலது பாரிசத்தில் நிற்கிறாள்.

சங் 45:10 குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள்; உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு.

சங் 45:11 அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்.

சங் 45:12 தீரு குமாரத்தி காணிக்கை கொண்டுவருவாள்; ஜனங்களில் ஐசுவரியவான்களும் உன் தயவை நாடி வணங்குவார்கள்.

45 அதிகாரம்

சங் 45:13 ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள்; அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது.

சங் 45:14 சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்; அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக் கொண்டு வரப்படுவார்கள்.

சங் 45:15 அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்.

சங் 45:16 உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்.

"உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு" - அரசரின் குமாரத்திகளும் சாலொமோனின் மனைவிகளாயிருந்தனர் (1இராஜா 11:1-3).

"ராஜஸ்திரீ ஒப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரிசத்தில் நிற்கிறாள்" - இது கிறிஸ்துவின் மணவாட்டியை அதாவது சபையைக் குறிக்காது.

"உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும்" - ஆதி 24:58; ஆதி 31:14; ஆதி 41:45; ரூத் 1:16.

"அவர் உன் ஆண்டவர்". சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்றழைத்தாள் (1பேதுரு 3:6).

பணிந்து கொள் (**worship**) - הָוָשׁ - **shaw-khaw' - 7812**

வினைச்சொல் - குனி, பணி, ஒடுக்கு, ஆராதனை செய், வணங்கு, வந்தனம் செய், நமஸ்கரி, தொழு. வணங்கு (**bow**) - (ஆதி 27:29; ஆதி 37:10); பணிந்து கொள் (**crouch**) (1சாமு 2:36); பணிந்து கொள் (**fall**) - (சங் 78:11; ஏசா 45:14); பணிந்து கொள் (**humbly**) - (2சாமு 16:4); ஒடுக்கு (**stoop**) - (நீதி 12:25); வணங்கு (**obeisance**) - (ஆதி 37:7-9; ஆதி 43:28); வணங்குதல் (**reverence**) - (2சாமு 9:6; 1இராஜா 1:31; எஸ் 3:2-5) - பணிந்து கொள் (**worship**) (சங் 45:11, சங் 95:6).

"ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்" - இராஜ அரமனையில் அதற்குரிய வஸ்திரமணிந்து பிரவேசிப்பார்கள். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாண விருந்தும் இதுவும் ஒன்றல்ல (வெளி 19).

7. சங்கீதக்காரன் ஏவப்படுகிறான்

சங் 45:17 உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப் படுத்துவேன்,இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் துதிப்பார்கள்.

தீர்க்கதரிசன எண் - 35

"உமது நாமத்தை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப் படுத்துவேன், இதினிமித்தம் ஜனங்கள் உம்மை என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் துதிப்பார்கள்" (சங் 45:17) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. சாலொமோன் ராஜா உலகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஞானி.

46 அதிகாரம்

(அலாமோத்தில் வாசிக்கக் கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட பாட்டு.)

மேசியாவைப்பற்றிய பத்தாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவன் தமது ஜனத்திற்கு எப்படிப்பட்டவர் என்பதைக் குறித்து மூன்று காரியங்கள் - நம்பிக்கையின் ஐந்து அம்சங்கள் - (46:1-3)
2. ஆயிரம் வருஷத்து நதி - (46:4)
3. இஸ்ரவேல் மீது தேவனுடைய பத்து அம்ச ஆளுகையும் மேசியாவின் ஆளுகையும் - (46:5-7)
4. அழைப்பு - தேவனுடைய ஐந்து கிரியைகள் - (46:8-9)
5. கட்டளை - பூமியில் தேவனுடைய இறுதி நோக்கம் - (46:10-11)

1. தேவன் தமது ஜனத்திற்கு எப்படிப்பட்டவர் என்பதைக் குறித்து மூன்று காரியங்கள் - நம்பிக்கையின் ஐந்து அம்சங்கள்

சங் 46:1 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

சங் 46:2 ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,

சங் 46:3 அதின் ஜலங்கள் கொந்தளித்துப்பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். (சேலா)

தேவனுடைய குணாதிசயங்கள்

1. அடைக்கலமானவர் (சங் 46:1,7,11)
2. பெலனானவர் (சங் 46:1)
3. ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர் (சங் 46:1,5)

சனகெரிப்எருசலேமை முற்றுகையிட்டிருந்த போது இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம். தேவன் அடைக்கலமானவர். இது ஜெயசங்கீதம் அல்ல.

நாம் பயப்பட வேண்டாத காரியங்கள்

1. பூமி நிலைமாறினாலும் நாம் பயப்படவேண்டியதில்லை (சங் 46:2)
2. மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும் பயப்பட வேண்டியதில்லை
3. ஜலங்கள் கொந்தளித்து பொங்கினாலும் பயப்பட வேண்டியதில்லை (சங் 46:3)
4. பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்பட வேண்டியதில்லை

2. ஆயிரம் வருஷத்து நதி - (எசே 47:1-12; சக 14:8)

சங் 46:4 ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.

தீர்க்கதரிசன எண் - 36

"ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்............" (சங் 46:4-11) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

46 அதிகாரம்

சந்தோஷிப்பிக்கும் நதி (The River That Makes Glad)

கிறிஸ்துவின் வருகையின் போது, தேவனுடைய ஆலயத்திலிருந்து இது பாய்ந்து ஓடும். தேவாலயத்திலிருந்து, தெற்கு முகமாக, எருசலேம் வழியாக ஓடி, இரண்டாகப் பிரியும். ஒரு ஆறு மத்திய தரைக் கடலுக்கும் மற்றொன்று சவக்கடலுக்கும் பாயும். இதனால் சவக்கடல் குணமாகும். மத்திய தரைக்கடலிலிருந்து திரளான மீன்கள் சவக்கடலுக்கு வரும் (எசே 47:1-12; சக 14:8). புதிய எருசலேம் பூமிக்கு வரும்போது தேவாலயத்திலிருந்து பாயும் நதியாகவும் இந்த நதி இருக்கலாம் (வெளி 22:1-2).

சந்தோஷிப்பிக்கும் நதி வருங்காலத்தில் நிறைவேறும் என்பதற்குக் காரணங்கள்

1. சங் 46:4 இல் கூறப்பட்டுள்ள நதி தற்பொழுது எருசலேமில் இல்லை. மேசியா வரும்போது இருக்கும் (எசே 47:1-12; சக 14:8)
2. இதை நிறைவேற்ற தேவன் இஸ்ரவேல் மத்தியில் இல்லை (சங் 46:5,10-11)
3. வசனம் - 6 இல் கூறப்பட்டுள்ள காரியம் இஸ்ரவேலின் வரலாற்றில் இதுவரையிலும் நடைபெறவில்லை. அர்மெகதோன் யுத்தத்தில் தேவன் தமது சத்தத்தை முழங்கப் பண்ணுவார் (ஏசா 63:1-6; யோவே 2:1-11; யோவே 3:1-21; சக 14; வெளி 19:11-21)
4. சங் 46:8 இல் கூறப்பட்டுள்ள பாழ்க்கடிப்புக்கள் முத்திரைகள், எக்காளங்கள் ஆகியவற்றால் உண்டாகும் (வெளி 6:12-9:21; வெளி 11:15-19; வெளி 16:1-21).
5. யுத்தங்கள் எப்போது ஓயும்? கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும் ஆயிர வருஷ அரசாட்சியிலும் கர்த்தர் யுத்தங்களை ஓயப்பண்ணுவார் (சங் 46:9; ஏசா 2:2-4; சக 14; வெளி 19: 11-21; வெளி 20:1-10)
6. ஆயிரவருஷ அரசாட்சி வரும் வரையிலும் ஆயுதங்கள் அழிக்கப் படுவதில்லை (சங் 46:9; ஏசா 2:2-4; மீகா 4:1-8)
7. மேசியா வரும் வரையிலும் இஸ்ரவேல் தேவனை அறியாது (சங் 46:10; சக 12: 10-13:1; மத் 23:37-39; அப் 15:13-18; ரோமர் 11:25-29)
8. ஆயிரவருஷ அரசாட்சியில் தான் கர்த்தர் ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பார் (சங் 46:10; ஏசா 2:2-4,11-21; ஏசா 11:3-16; எசே37:16-28; எசே 38:16-23; தானி 2:44-45; தானி7:13-14; மத் 25:31-46; 2தெச 1:7-10; வெளி 11:15; வெளி 19:11-20:10)

3. இஸ்ரவேல் மீது தேவனுடைய பத்து அம்ச ஆளுகையும் மேசியாவின் ஆளுகையும் - (ஏசா 2:2-4; 9:6-7; தானி 7:13-14; சக 14; 1கொரி 15:24; வெளி 11:15)

சங் 46:5 தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.

சங் 46:6 ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று.

சங் 46:7 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா)

46 அதிகாரம்

4. அழைப்பு - தேவனுடைய ஐந்து கிரியைகள்

சங் 46:8 பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.

சங் 46:9 அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.

தேவனுடைய கிரியைகள்

1. பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிறார் (வெளி 6:12-17; வெளி 8:7-9:21; வெளி 16: 1-21)
2. யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார் (சங் 46:9; ஏசா 2:2-4)
3. யுத்த ஆயுதங்களை முறிக்கிறார் (சங் 46:9; ஏசா 2:2-4; மீகா 4:1-5)

5. கட்டளை - பூமியில் தேவனுடைய இறுதி நோக்கம்

சங் 46:10 நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.

சங் 46:11 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா)

“ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்” - இதுவே கர்த்தருடைய நோக்கம். இயேசு கிறிஸ்து பரமசேனையோடு பூமிக்கு வந்து, ஆயிரவருஷ ஆட்சிபுரிந்து, துன்மார்க்கர் எல்லோரையும் ஒடுக்குவார் (1கொரி 15:24-28; எபே 1:10; 2தெச 1:7-10; யூதா 1:14; வெளி 11:15; வெளி 19:11-20:10).

கர்த்தர் பூமியில் உயர்ந்திருப்பார். லூசிபரின் கலகத்திற்கு முன்பு இருந்த சூழ்நிலை மறுபடியும் பூமியில் உண்டாகும் (1கொரி 15:24-28).

47 அதிகாரம்

(கோராகின் புத்திரரிலுள்ள இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.)

மேசியாவைப்பற்றிய பதினொன்றாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்கவேண்டுமென்று இரண்டு கட்டளைகள் - துதிப்பதற்கு ஏழுகாரணங்கள் - (47:1-5))
2. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஐந்துகட்டளைகள் - துதிப்பதற்கு ஏழு காரணங்கள் - (47:6-19)

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு கட்டளைகள் - துதிப்பதற்கு ஏழுகாரணங்கள்

சங் 47:1 சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள்;

சங் 47:2 உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின்மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்.

சங் 47:3 ஜனங்களை நமக்கு வசப்படுத்தி, ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார்.

சங் 47:4 தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார். (சேலா)

சங் 47:5 தேவன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார்.

தீர்க்கதரிசன எண் - 37

"சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள்............" (சங் 47:1-9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிரவருஷ அரசாட்சியிலும் அதன் பின்பு நித்திய காலமாகவும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

"கைகொட்டுதல்" - இஸ்ரவேலர் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் முறைமை (2இராஜா 11:12; சங் 98:8; ஏசா 55:12). நித்திய மீட்பிற்காக முழு உலகமும் சந்தோஷமாக இருக்கும் (ரோமர் 8:21-25; ஏசா 35). "கைக்கொட்டு" என்னும் கட்டளையை இந்த வசனத்தில் மட்டுமே காண்கிறோம்.

"தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள்" - கர்த்தர் 13 தடவை இக்கட்டளையை மனுஷனுக்குக் கொடுத்திருக்கிறார் (சங் 46:1; சங் 5:11; சங் 32:11; சங் 35:27; சங் 132:9,16; யோசு 6:5,16; ஏசா 12:6; ஏசா 42:11; ஏசா 44:23; செப் 3:14; செப் 9:9).

கெம்பீரச்சத்தமாய் ஆர்ப்பரித்ததற்கு எடுத்துக்காட்டுகள்

1. இஸ்ரவேலர்கள் பொன் கன்றுக் குட்டியை ஆரவாரம் பண்ணி வாங்கினார்கள் (யாத் 32:17-18)
2. கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டது. இஸ்ரவேலர்கள் அதைக் கண்ட போது ஆரவாரித்தனர் (லேவி 9:24)
3. எரிகோவின் அலங்கம் இடிந்து விழும்போது ஜனங்கள் ஆரவாரித்தார்கள் (யோசு 6)
4. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பாளையத்திலே வருகிறபோது இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத் தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய்ச் சத்தமிட்டார்கள் (1சாமு 4:4-5; 2சாமு 6:15)
5. சவுல், ராஜாவாகத் தெரிந்து கொண்டதும் ஜனங்கள் எல்லாம் ஆர்ப்பரித்தார்கள் (1சாமு 10:24)

47 அதிகாரம்

6. யுத்தத்ததில் யூத மனுஷர்கள் ஆர்ப்பரித்தார்கள் (2நாளா 13:15)

7. ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் மகா கெம்பீரமாய் ஆரவாரித்தார்கள் (எஸ்றா 3:11-13)

கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரித்து கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்பதற்குக் காரணங்கள்

1. சகல ஜனங்களே, கைகொட்டி தேவனுக்கு முன்பாக கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங் 47:1)
2. கர்த்தர் உன்னதமானவர், பயங்கரமானவர் (சங் 47:2)
3. பூமியின் மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார்
4. ஜனங்களை நமக்கு வசப்படுத்தினார் (சங் 47:3)
5. ஜாதிகளை நம்முடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்துவார்
6. சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார் (சங் 47:4)
7. தேவன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார் (சங் 47:5)

2. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஐந்து கட்டளைகள் - துதிப்பதற்கு ஏழு காரணங்கள் - (48:9; 54:4; 56:12; 68:3)

சங் 47:6 தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்; நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.

சங் 47:7 தேவன் பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப்பாடுங்கள்.

சங் 47:8 தேவன் ஜாதிகள்மேல் அரசாளுகிறார்; தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.

சங் 47:9 ஜனங்களின் பிரபுக்கள் ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்; பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்; அவர் மகா உன்னதமானவர்.

"தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்; நம்முடைய ராஜாவைப்போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்" - (சங் 47:6) வசனத்தில் மட்டும் நான்கு முறை தேவனைப் போற்றிப் பாட வேண்டும் என்ற கட்டளை ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் 50 தடவைகள் தேவன் இவ்வாறு நமக்கு கட்டளையிட்டிருக்கிறார் (சங் 47:6,7; சங் 66:2; சங் 68:4,32; சங் 81:1; சங் 96:1-2; சங் 98:1,4-5; சங் 105:2; சங் 135:3; சங் 147:7; சங் 149:1,3,5; யாத் 15:21; எண் 21:17; 1நாளா 16:9,23; ஏசா 12:5; ஏசா 26:19; ஏசா 27:2; ஏசா 42:10-11; ஏசா 44:23; ஏசா 49:13; ஏசா 52:9; ஏசா 54:1; எரே 20:13; எரே 31:7; செப் 3:14; சக 2:10; ரோமர் 15:9; யாக் 5:13).

"தேவன்பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப்பாடுங்கள்" - இந்த வாக்கியம் இன்னும் நிறைவேற வேண்டியிருக்கிறது.

தேவனைப் போற்றிப் பாடுவதற்கு காரணங்கள்

1. தேவன் நம்முடைய ராஜா (சங் 47:6)
2. தேவன் பூமியனைத்திற்கும் ராஜா (சங் 47:7)
3. தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார் (சங் 47:8)
4. தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்

47 அதிகாரம்

5. ஜனங்களின் பிரபுக்கள் தேவனுடைய ஜனங்களாகச் சேர்க்கப்படுகிறார்கள் *(சங் 47:9)*

6. பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்

7. அவர் மகா உன்னதமானவர்

"பூமியின் கேடகங்கள் தேவனுடையவைகள்" - செப்துவஜிந்தில், "பூமியின் பலவான்கள் தேவனுடையவர்கள்" **(the strong ones of the earth)** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பூமியின் அதிகாரிகள், இராஜாக்கள் எல்லோருமே தேவனுடையவர்கள்.

48 அதிகாரம்

(கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதப்பாட்டு.)

மேசியாவைப்பற்றிய பன்னிரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனையும் அவருடைய நகரத்தையும் பற்றிய பதினைந்து அம்ச மகத்துவங்கள் - (48:1-8)
2. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஏழு கட்டளைகள் - துதிப்பதற்கு ஏழுகாரணங்கள் - (48:9-14)

1. தேவனையும் அவருடைய நகரத்தையும் பற்றிய பதினைந்து அம்ச மகத்துவங்கள்

சங் 48:1 கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்.

சங் 48:2 வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்.

சங் 48:3 அதின் அரமனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார்.

சங் 48:4 இதோ, ராஜாக்கள் கூடிக்கொண்டு, ஏகமாய்க் கடந்துவந்தார்கள்.

சங் 48:5 அவர்கள் அதைக் கண்டபோது பிரமித்துக் கலங்கி விரைந்தோடினார்கள்.

சங் 48:6 அங்கே நடுக்கங்கொண்டு, பிரசவ வேதனைப்படுகிற ஸ்திரீயைப்போல வேதனைப் பட்டார்கள்.

சங் 48:7 கீழ்காற்றினால் தர்ஷீசின் கப்பல்களை நீர் உடைக்கிறீர்.

சங் 48:8 நாம் கேள்விப்பட்டபடியே நமது தேவனுடைய நகரமாகிய சேனைகளுடைய கர்த்தரின் நகரத்திலே கண்டோம்; தேவன் அதை என்றென்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். (சேலா.)

தீர்க்கதரிசன எண் - 38

"கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்..............." (சங் 48:1-14) - இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேறியிருக்கிறது. இது தேவனுடைய நித்திய நகரமாகிய எருசலேமைப் பற்றிய விளக்கம் ஆழும் (சங் 48:8,14).

"பரிசுத்தம்" என்னும் சொல் கர்த்தருக்குப் பயன்படுத்தப்படும் முறைமைகள்

1. கர்த்தர் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர் (யாத் 15:11)
2. தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார் (சங் 47:8)
3. கர்த்தர், தமது பரிசுத்த பர்வதத்தில் இருக்கிறார் (சங் 48:1; எரே 31:23)
4. தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார் (சங் 60:6; சங் 108:7)
5. ஒருவிசை தம்முடைய பரிசுத்தத்தின் பேரில் ஆணையிடுவார் (சங் 89:35)
6. கர்த்தரின் பரிசுத்தமானது நித்திய நாளாக அவருடைய ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது (சங் 93:5)
7. உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமும் உள்ளவர்களா யிருப்பார்கள் (சங் 110:3)
8. பெரும் பாதையான வழி இருக்கும். அது பரிசுத்த வழி எனப்படும் (ஏசா 35:8)

48 அதிகாரம்

9. கர்த்தருடைய ஆலயம் பரிசுத்த ஸ்தலத்தின் பிரகாரம் என்றழைக்கப்படும் (ஏசா 62:9)

10. தேவரீரின் வாசஸ்தலம், பரிசுத்தமும் மகிமையுள்ளது மாயிருக்கும் (ஏசா 63:15)

11. கர்த்தர் தெரிந்தெடுத்த ஜனங்கள், பரிசுத்தத்தின் ஜனங்கள் என்றழைக்கப்படுவார்கள் (ஏசா 63:18)

12. கர்த்தருடைய வார்த்தைகள், பரிசுத்தத்தின் வார்த்தைகள் (எரே 23:9)

13. அவருடைய ஆவி, பரிசுத்தமுள்ள ஆவி என்றழைக்கப்படும் (ரோமர் 1:4)

14. பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் (1நாளா 16:29)

கர்த்தருக்குப் பரிசுத்தமானவைகள்

1. ஆசாரியர்கள் (யாத் 28:36; யாத் 39:30)

2. இஸ்ரவேல் (2நாளா 31:18; ஏசா 63:18; எரே 2:3)

3. கர்த்தருடைய ஆலயம் (சங் 93:5)

4. வியாபாரம் (ஏசா 23:18)

5. கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு செல்லும் பெரும்பாதையான வழி (ஏசா 35:8)

6. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் பிரகாரம் (ஏசா 62:9)

7. கர்த்தருடைய வாசஸ்தலம் (ஏசா 63:15)

8. சீயோன் பர்வதம் (ஒப 1:17)

9. குதிரைகள் (சக 14:20)

10. பானைகள் (சக 14:21)

விசுவாசியும் பரிசுத்தமும் பற்றிய சத்தியங்கள்

1. மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக விசுவாசி சிருஷ்டிக்கப்பட்டான் (எபே 4:24)

2. கர்த்தருக்கு முன்பாக, எல்லா நாட்களிலும் பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி அவர்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள் (லூக்கா 1:75; ரோமர் 6:19 எபி 12:14)

3. அவர்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப் பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் அவர்களுக்குக் கிடைக்கும் பலன் (ரோமர் 6:22)

4. பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தவேண்டும் (2கொரி 7:1)

5. பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்த முள்ளவர்களாயிருக்கும் படி அவர்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்த வேண்டும் (1தெச 3:13)

6. தேவன் விசுவாசிகளை பரிசுத்தத்திற்கே அழைக்கிறார் (1தெச 4:7)

7. பரிசுத்தத்தத்தில் நிலை கொண்டிருந்தால் இரட்சிக்கப் படுவார்கள் (1தீமோ 2:15)

8. பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறார்கள் (தீத்து 2:3)

9. பரிசுத்தத்துக்கு விசுவாசிகள் பங்குள்ளவர்கள் (எபி 12:10)

10. பரிசுத்த முள்ளவர்களாயிருப்பதையே நாடவேண்டும்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை (எபி 12:14)

"சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது" - இது ஆயிரவருஷ ஆட்சியிலும் அதன்பின்பு நித்திய காலமும் உண்மையாயிருக்கும். அப்போது சகல ஜாதிகளையும் மேசியா எருசலேமிலிருந்து ஆட்சிபுரிவார் (சங் 48:1; ஏசா 2:2-4; எசே 48; சக 14).

48 அதிகாரம்

சீயோன் பர்வதம் - மோரியா மலையின் தென்பகுதி

"வடதிசையிலுள்ளது" - சீயோன் பர்வதத்திற்கு வடதிசையில் மோரியாவும் தேவாலயமும் உள்ளது.

"இதோ, ராஜாக்கள் கூடிக்கொண்டு, ஏகமாய்க் கடந்துவந்தார்கள்" - இஸ்ரவேல் மீதும், தேவாலயத்து பொக்கிஷங்கள் மீதும் புறஜாதி இராஜாக்கள் ஆசை கொண்டு யுத்தம் பண்ணினார்கள். தேவன் இஸ்ரவேல் மீது நியாயத்தீர்ப்பு அனுப்பும் வரையிலும், புறஜாதிகளுக்கு இஸ்ரவேல் மீது எந்தவித ஆளுகையுமில்லை. வருங்கால மீட்பில் எல்லா ஜாதிகளும் நித்திய தேவாலயத்தின் மகிமையைக் கண்டு தேவனுக்குப் பயப்படுவார்கள் (ஏசா 2:2-4; சக 14:16-21).

"கீழ்காற்றினால் தர்ஷீசின் கப்பல்களை நீர் உடைக்கிறீர்" - (1இராஜா 9:26; 1இராஜா 10:11,22; 1இராஜா 22:48)

2. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஏழு கட்டளைகள் - துதிப்பதற்கு ஏழுகாரணங்கள்

சங் 48:9 தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

சங் 48:10 தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல உமது புகழ்ச்சியும் பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தமும் விளங்குகிறது; உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது.

சங் 48:11 உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் சீயோன் பர்வதம் மகிழ்வதாக, யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்களாக.

சங் 48:12 சீயோனைச் சுற்றி உலாவி, அதின் கொத்தளங்களை எண்ணுங்கள்.

சங் 48:13 பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிப்பதற்காக, அதின் அலங்கத்தைக் கவனித்து, அதின் அரமனைகளை உற்றுப்பாருங்கள்.

சங் 48:14 இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

"ஆலயம்" - ஆலயம் என்னும் சொல் இங்கு பயன்படுத்தப்பட்டிருப்பதினால் இந்த சங்கீதம் எப்போது எழுதப்பட்டது என்று உறுதியாகத் தெரியவில்லை (சங் 27:4).

கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் கட்டளையில் காணப்படும் அம்சங்கள்

1. சீயோன் பர்வதம் மகிழும் (சங் 48:11)
2. யூதாவின் குமாரத்திகள் களிகூருவார்கள்
3. சீயோனைச் சுற்றுங்கள் (சங் 48:12)
4. சீயோனைச் சுற்றி உலாவுங்கள்
5. அதின் கொத்தளங்களை எண்ணுங்கள்
6. அதின் அலங்கத்தைக் கவனியுங்கள் (சங் 48:13)
7. அதின் அரமனைகளை உற்றுப்பாருங்கள்

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. அவருடைய கிருபை (சங் 48:9)
2. ஆலயத்தின் நடுவிலே கர்த்தர் இருக்கிறார்
3. அவருடைய நாமத்தினிமித்தம் (சங் 48:10)
4. அவருடைய வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது
5. அவருடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் (சங் 48:11)
6. அவர், என்றென்றைக்குமுள்ள தேவன் (சங் 48:14)
7. மரணபரியந்தம் நம்மை நடத்துவார்

49 அதிகாரம்

(கோராகின் புத்திரரிலுள்ள இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.)

ஆறாவது போதக சங்கீதம் - ஐசுவரியம், ஞானம், மகிமை ஆகியவற்றைப்பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. கேளுங்கள் என்று எல்லோருக்கும் அழைப்பு - மூன்று கட்டளைகள் - (49:1-4)
2. ஐசுவரியத்தால் ஆத்துமாவை இரட்சிக்க முடியாது, நித்திய ஜீவனையும் தரமுடியாது - (49:5-9)
3. எல்லா மனுஷரும் ஒன்றுபோலவே மரிக்கிறார்கள் - எல்லா சரீரமும் மிருகங்களைப்போல அழிந்துபோகும் - (49:10-13)
4. சரீரத்தின் உயிர்த்தெழுதலும் பாதாளத்திலிருந்து மீட்கப்படுவதும் - (49:14-15)
5. அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கும் ஐசுவரியவானுக்குப் பயப்படக்கூடாது என்று இரண்டு கட்டளைகள் - (49:16-20)

1. கேளுங்கள் என்று எல்லோருக்கும் அழைப்பு - மூன்று கட்டளைகள்

சங் 49:1 ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள்.

சங் 49:2 பூமியின் குடிகளே, சிறியோரும் பெரியோரும் ஐசுவரிய வான்களும் எளியவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்கள்.

சங் 49:3 என் வாய் ஞானத்தைப் பேசும்; என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்.

சங் 49:4 என் செவியை உவமை மொழிக்குச் சாய்த்து, என் மறை பொருளைச் சுரமண்டலத்தின்மேல் வெளிப்படுத்துவேன்.

ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளைகள்

1. இதைக் கேளுங்கள்
2. செவிகொடுங்கள்

கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட பத்து சங்கீதங்களில் இது ஏழாவது சங்கீதம் ஆகும்.

பூமி (world) - חֶלֶד - kheh'-led - **2465**

ஆ.பெ.சொ. - ஆயுசு, உலகம், பூமி, ஜீவன், உலகம் (age; the world as transitory) - சங் 17:14. பூமி (world) - (சங் 49:1; சங் 17:14); ஆயுசு (age) - (யோபு 11:17; சங் 39:5); ஜீவன் (குறுகிய காலம்) (short time) - (சங் 89:47).

"சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய நீங்கள் எல்லாரும்" - என்பது முழு மனுக்குலத்தையும் குறிக்கும். மீட்பின் தேவையை மனுஷர் உணர வேண்டும் (சங் 49:5-15).

சங்கீதக்காரனைப் பற்றிய தனிப்பட்ட குறிப்புகள்

1. என் வாய் ஞானத்தைப் பேசும் (சங் 49:3).
2. என் இருதயம் உணர்வைத் தியானிக்கும்.
3. என் செவி உவமை மொழிக்குச் சாயும் (சங் 49:4).
4. என் மறைபொருளைச் சுரமண்டலத்தின் மேல் வெளிப்படுத்துவேன்.
5. என்னைத் தொடருகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்து கொள்ளும் (சங் 49:5).

49 அதிகாரம்

2. ஐசுவரியத்தால் ஆத்துமாவை இரட்சிக்க முடியாது, நித்திய ஜீவனையும் தரமுடியாது

சங் 49:5 என்னைத் தொடருகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்துகொள்ளுந் தீங்கு நாட்களில், நான் பயப்பட வேண்டியதென்ன?

சங் 49:6 தங்கள் செல்வத்தை நம்பி தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமைபாராட்டுகிற,

சங் 49:7 ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி,

சங் 49:8 எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங் கூடாதே.

சங் 49:9 அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது; அது ஒருபோதும் முடியாது.

நம்பு (trust) - בָּטַח - baw-takh' - 982

வினைச்சொல் - நம்பு - ஐசுவரியத்தை நம்புவதும் அதில் பெருமை பாராட்டுவதும் ஞானமான செய்கையல்ல.

ஐசுவரியத்தால் வாங்க முடியாத காரியங்கள்

1. சகோதரனுடைய ஆத்துமாவிற்கு மீட்கும் பொருள் (சங் 49:7)
2. தன் ஆத்துமாவிற்கு மீட்கும் பொருள்
3. ஆத்துமாவிற்கு நித்திய ஜீவன் (சங் 49:8-9).
4. சரீரத்தின் மரிக்காத தன்மை (சங் 49:9).

மீட்டல் (ransom) - כֹּפֶר - ko'-fer - 3724

ஆண்பால் பெயர்ச்சொல் - கிரயம், கூலி, பணம், மீட்கும் பொருள், பரிதானம், வெகுமதி, மீட்டல் **(to cover; a redemption price that will satisfy the claim; atonement)** - (சங் 49:7; யாத் 30:12; யோபு 33:24; யோபு 36:18; நீதி 6:35; நீதி 13:8; நீதி 21:18; ஏசா 43:3). சங் 49:8-இல் இது ஆத்தும மீட்பையே குறிக்கும். சொத்தின் மீட்பைக் குறிக்காது

அருமையாயிருக்கிறது - (precious) ஆத்துமாவை மீட்பதற்கு தங்கம் வெள்ளி ஆகியவற்றால் கிரயம் செலுத்த முடியாது. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற திரு இரத்தமே ஆத்துமாவை மீட்கும் கிரயம் - (மத் 26:28; கொலோ 1:20; எபி 9:12-28; எபி 10:4-23; எபி 13:12, 20; 1பேதுரு 1:18-23; வெளி 1:5; வெளி 5:8-10; வெளி 7:14; வெளி 12:11).

"அது ஒருபோதும் முடியாது" - மீட்பு ஒரு போதும் அழிந்து போகாது. ஐசுவரியத்தால் ஆத்தும இரட்சிப்பைக் கிரயத்திற்கு வாங்க முடியாது. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மாற்கு 8:36. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

"ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும் படி", (சங் 49:6-9) சங்கீதக்காரன் மீட்பின் சத்தியத்தைக் குறித்துக் கூறுகிறான். (சங் 49:4)

49 அதிகாரம்

3. எல்லா மனுஷரும் ஒன்றுபோலேவே மரிக்கிறார்கள் - எல்லா சரீரமும் மிருகங்களைப் போல அழிந்துபோகும் - (வசனம் 8-9; ஆதி 3:19; பிர 3:19-20; தானி 12:2)

சங் 49:10 ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப்போகிறதைக் காண்கிறான்.

சங் 49:11 தங்கள் வீடுகள் நித்திய காலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம்; அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள்.

சங் 49:12 ஆகிலும் கனம் பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை; அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.

சங் 49:13 இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம்; ஆகிலும் அவர்கள் சந்ததியார் அவர்கள் சொல்லை மெச்சிக்கொள்ளுகிறார்கள். (சேலா.)

"ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து" போவார்கள். அவர்களுடைய சொத்தை மரித்த பின்பு தங்களோடு எடுத்துச் செல்ல முடியாது. அது மற்றவர்களுக்கே உரியது.

"மரித்துப் போதல்" - சரீர மரணம். புறம்பான மனுஷனிலிருந்து உள்ளான மனுஷன் பிரிதல். சரீரத்திலிருந்து ஆத்துமா பிரிதல் (யாக் 2:26).

"அழிதல்" - சரீர மரணம்.

ஐசுவரியவான்களுடைய உள்ளத்தின் அபிப்பிராயங்கள்

1. தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும் இருக்கும்
2. தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்கும்.
3. தங்கள் நிலங்கள் தங்கள் நாமங்களுக்கு ஞாபகச் சின்னமாக இருக்கும்.

"ஆகிலும் கனம்பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை" - அவனுடைய ஐசுவரியம், பேர், புகழ் எல்லாமே அழிந்து போகும் (பிர 3:19-20; யாக் 2:26).

"இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம்" - தங்கள் பேரும், புகழும் நிலைக்கும் என்று நினைப்பதே பைத்தியம். (சங் 49:11)

4. சரீரத்தின் உயிர்த்தெழுதலும் பாதாளத்திலிருந்து மீட்கப்படுவதும் - (1யோவான் 3:2)

சங் 49:14 ஆட்டுமந்தையைப்போல பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்துபோடும்; செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்; அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி, அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும்.

சங் 49:15 ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார் (சேலா.)

தீர்க்கதரிசன எண் 39

"ஆட்டுமந்தையைப்போல பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்துபோடும்; செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டு கொள்வார்கள்............" (சங் 49:14-15) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

49 அதிகாரம்

ஐசுவரியவான்கள் ஆடுகளைப் போலவும், காட்டு மிருகங்களைப் போலவும் மரித்துப் போவார்கள். அவர்கள் பாதாளத்திற்குப் போவார்கள்.

பாதாளம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

"செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் ஜாதிகளை ஆண்டு கொள்வார்கள். (ஆதி 9:12; தானி 7:13-14,18,27; லூக்கா 22:30; 1கொரி 6:2-4; 2தீமோ 2:12; வெளி 1:5-6; வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:4-5).

"ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார் - கிறிஸ்து பாதாளத்திற்கு இறங்கி, நீதிமான்களின் ஆவிகளை விடுவித்து பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். (சங் 16:10; சங் 68:18. கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். (எபே 4:7-10).

பாதாளம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம் (hell) - (சங் 49:14-15).

5. அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கும் ஐசுவரிய வானுக்குப் பயப்படக் கூடாது என்று இரண்டு கட்டளைகள் - (வசனம் 10)

சங் 49:16 ஒருவன் ஐசுவரியவானாகி, அவன் வீட்டின் மகிமை பெருகும்போது, நீ பயப்படாதே.

சங் 49:17 அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லை; அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்வதுமில்லை.

சங் 49:18 அவன் உயிரோடிருக்கையில் தன் ஆத்துமாவை வாழ்த்தினாலும்: நீ உனக்கு நன்மையை நாடினாய் என்று மனுஷர் அவனைப் புகழ்ந்தாலும்,

சங் 49:19 அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாத தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான்.

சங் 49:20 கனம் பொருந்தின வனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.

நாம் பயப்படத் தேவையில்லாதவர்கள்

1. ஐசுவரியவானாகும் மனுஷன்
2. தன் வீட்டின் மகிமை பெருகியிருப்பவன்

துன்மார்க்கமான ஐசுவரியவானுக்குப் பயப்படக்கூடாது என்பதற்கான காரணங்கள்

1. துன்மார்க்கமான ஐசுவரியவான் மரிக்கும்போது ஒன்றும் கொண்டு போவதில்லை.
2. அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்வதுமில்லை.
3. அவர்கள், தங்கள் பிதாக்களின் சந்ததியைச் சேருவார்கள். (சங் 49:19).

49 அதிகாரம்

4. அவர்கள் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாதவர்களாய் இருப்பார்கள்.

5. அறிவில்லாத மனுஷன் அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான் (சங் 49:20). அவர்களுடைய சரீரங்கள் மிருகங்களைப் போல அழியும். (சங் 49:9,12; பிர 3:19-20; யாக் 2:26)

மனுஷர் வாழ்வில் நடைபெறும் பொதுவான காரியங்கள்

1. மனுஷன் தன் ஆயுசு நாள் முழுவதும் தன் ஆத்துமாவை வாழ்த்துவான்.
2. ஒருவன் ஐசுவரியவானாகும்போது மனுஷன் அவனை வாழ்த்துவான்.

"என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாத" - இடம் "இருள்". நரகம் - (மத் 8:12; மத் 25:30; யூதா 1:13).

அழிந்துபோதல் (perish) - 2 דָּמָה - daw-maw' - 1820

வினைச்சொல் - அமைதியாயிரு, நிறுத்தி மவுனமாயிரு, பாழாக்கு, சங்காரம் பண்ணு, அழிந்துபோ, அதமாகு, சங்காரமாகு, சங்கரிக்கப்படு, நிறுத்து (to be cut off) - (சங் 49:12,20)

50 அதிகாரம்

(ஆசாபின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்பின் சங்கீதம்

பொருளடக்கம்

1. நியாயாதிபதி - நியாயத்தீர்ப்பின் பத்து அம்ச கிரியைகள் - (50:1-6)
2. இஸ்ரவேலைப்பற்றிய பதினான்கு அம்ச கடிந்துரை - இரண்டு கட்டளைகள் - (50:7-13)
3. பதில் கொடுக்கப்பட்ட ஜெபத்தில் தேவனுடைய பங்கும் மனுஷனுடைய பங்கும் - (50:14-15)
4. தேவன் துன்மார்க்கனைக் கடிந்துகொள்கிறார் - துன்மார்க்கனின் பன்னிரண்டு பாவங்கள் - (50:16-22)
5. நியாயத்தீர்ப்பிலிருந்து எவ்வாறு தப்புவது - (50:23)

1. நியாயாதிபதி - நியாயத்தீர்ப்பின் பத்து அம்ச கிரியைகள்

சங் 50:1 வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் வசனித்து, சூரியன் உதிக்குந் திசைதொடங்கி அது அஸ்தமிக்குந் திசைவரைக்குமுள்ள பூமியைக் கூப்பிடுகிறார்.

சங் 50:2 பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார்.

சங் 50:3 நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்.

சங் 50:4 அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்.

சங் 50:5 பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்.

சங் 50:6 வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும்; தேவனே நியாயாதிபதி. (சேலா.)

ஆசாப் பெரகியாவின் குமாரன். ஆசரிப்புக் கூடாரத்தில் தாவீது நியமித்த சங்கீத சேவகர்களின் தலைவர்களில் ஒருவன் (1நாளா 15: 16-19; 1நாளா 16:5-7; 1நாளா 25:1-9; 2நாளா 5:12; 2நாளா 35:15; நெகே 12:46). ஆசாபின் 12 சங்கீதங்களில் இது முதலாவது சங்கீதம். ஆசாப் வார்த்தைகளையும் இசையையும் இயற்றினான் (2நாளா 29:30). ஆசாபின் 12 சங்கீதங்கள் - சங் 50, சங் 73-83) - சங் 74, 79 - ஆகிய சங்கீதங்களை ஆசாப்தான் இயற்றினான் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

தீர்க்கதரிசன எண் - 40

"வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் வசனித்து, சூரியன் உதிக்குந் திசைதொடங்கி அது அஸ்தமிக்குந் திசைவரைக்குமுள்ள பூமியைக் கூப்பிடுகிறார்" (சங் 50:1-6) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பிதாவாகிய தேவன் கிறிஸ்துவோடு பூமிக்கு வரும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் (தானி 7; சக 14; தீத்து 2:13).

வல்லமை (mighty) - אֵל - ale - 410

ஆ. பெ. சொல் - வல்லமை

தேவன் (God) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.- தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர் - தேவனாகிய கர்த்தர் (the God of Gods) என்னும் பொருள் இந்த வசனத்திலும், யோசு 22:22 வசனத்திலும் மட்டுமே வருகிறது.

50 அதிகாரம்

சங்கீதம் 50 - பூமியிலுள்ள ஜாதிகளின் நியாயத்தீர்ப்பைக் குறிக்கும். இதற்கான காரணங்கள்

1. கர்த்தர் பூமியைக் கூப்பிடுகிறார் (சங் 50:1; மத் 25:31-32). பூமியிலுள்ள ஜனங்களை, பாதாளத்திலோ, நரகத்திலோ உள்ள ஜனங்களை அல்ல. இது வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பைக் குறிக்காது(வெளி 20:11-15).

2. "சூரியன் உதிக்குந் திசைதொடங்கி அது அஸ்தமிக்குந் திசைவரைக்குமுள்ள" - நியாயத்தீர்ப்பு நடைபெறும் இடம் பூமி. இக்காலத்தில் பூமியில் உயிரோடிருப்பவர் மீது நியாயத்தீர்ப்பு வரும் (சங் 50:1; சங் 113:3; மத் 25:31-46). வெளி 20:11-15 - ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பு பூமியில் நடைபெறாது.

3. "சீயோனிலிருந்து" - ரோமர் 11:26; எபி 12:22-23; வெளி 14:1 - ஆகிய வசனங்களைத் தவிர, மற்ற வசனங்கள் அனைத்தும் பூமியிலுள்ள சீயோனையே குறிக்கும்.

4. "தேவன் வருவார்" - பரலோகத்திலிருந்து பூமிக்கு வருவார் (தானி 7: 9-14,22; மத் 25:31-46). பிதாவாகிய தேவன், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நியாயந்தீர்க்கப் பூமிக்கு வருவார் (தானி 7:9-14,22; சக 14:5; தீத்து 2:13).

5. "மவுனமாயிரார்" - பூமியின் குடிகள் மீது கோபமாயிருப்பார் (ஏசா 61:2; ஏசா 63:1-4; தானி 7:9-14,22; சக 14:1-5). நரகத்திலுள்ளவர்கள் இங்கு குறிப்பிடப் படவில்லை (சக 20:11-15).

6. "அவருக்கு முன் அக்கினிபட்சிக்கும்" - கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, பிதாவாகிய தேவன் பூமிக்கு வரும் முதலாம் வருகையின் போது இது நடைபெறும் (எசே 38:17-21; 2தெச 1:7-10). வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது இது நடைபெறாது (வெளி 20:11-15).

7. "உயர இருக்கும் வானம்" - இந்த நியாயத்தீர்ப்பு பூமியில் நடைபெறும் (சங் 50:4; தானி 7:9-14,22; மத் 25:31-46). வானத்தில் (வெளி 20:11-15) நடைபெறாது.

8. "பூமியை நியாயந்தீர்க்க கூப்பிடுவார்" - இது ஜாதிகளின் நியாயத்தீர்ப்பு (சங் 50:4; தானி 7:9-14,22; மத் 25: 31-46), பரலோகத்தில் நடைபெறும் நியாயத்தீர்ப்பு அல்ல. (வெளி 20:11-15)

9. "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" - யூதர்களைக் குறிக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இஸ்ரவேல் ஜனங்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் (சங் 50:5; ஏசா 11:10-12; எசே 37; மத் 24:29-31; மத் 25:31-46; ரோமர் 11:25-29). வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில் இஸ்ரவேல் ஜனங்கள் கூட்டப்பட மாட்டார்கள். மரித்தோர் நியாயம் விசாரிக்கப்படுவார்கள் (வெளி 20:11-15).

10. "தேவனே நியாயாதிபதி" - (தானி7:9-14,22) கிறிஸ்து நியாயாதிபதியாக இருப்பார். (மத் 25:31-46)

சங் 50:1-6 - இல் கூறப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பு மத் 25:31-46 இல் கூறப்பட்டுள்ள வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பைக் குறிக்காது.

50 அதிகாரம்

சங்கீதம் 50:1-6-இல் கூறப்பட்டிருக்கிறது மத் 25:31-46-இல் கூறப்பட்டுள்ளது போன்று தேசங்களின் நியாயத்தீர்ப்பையே குறிக்கும். வெளி 20-ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கும் வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பைக் குறிக்காது.

பாதாளம் - שְׁאוֹל - **sheh-ole', sheh-ole' - 7585**

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

பாதாளம் - ᾅδης - **hadees** - 86.

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம், இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலியமாகத் தங்கும் இடம்

2. இஸ்ரவேலைப் பற்றிய பதினான்கு அம்ச கடிந்துரை - இரண்டு கட்டளைகள்

சங் 50:7 என் ஜனமே, கேள், நான் பேசுவேன்; இஸ்ரவேலே, உனக்கு விரோதமாய்ச் சாட்சியிடுவேன்; நானே தேவன், உன் தேவனாயிருக்கிறேன்.

சங் 50:8 உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்துகொள்ளேன்; உன் தகனபலிகள் எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறது.

சங் 50:9 உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக் கடாக்களையும் நான் வாங்கிக் கொள்வதில்லை.

சங் 50:10 சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள்.

சங் 50:11 மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவையெல்லாம் என்னுடையவைகள்.

சங் 50:12 நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே.

சங் 50:13 நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ?

தேவனுடைய ஜனத்திற்குக் கட்டளைகள்

1. என் ஜனமே, கேள், நான் பேசுவேன் (சங் 50:7)
2. கேள், உனக்கு விரோதமாய் சாட்சியிடுவேன்
3. தேவனுக்கு ஸ்தோத்திர பலியிடு (சங் 50:14)
4. உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து
5. ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு (சங் 50:15)

தேவனுடைய ஜனங்களுக்கு கட்டளைகள் கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள்

1. ஏனெனில் நான் பேசுவேன் (சங் 50:7)
2. ஏனெனில் நான், உனக்கு எதிராக சாட்சியிடுவேன்
3. நானே சத்தியமுமான தேவன்
4. நான் உன் தேவன்
5. உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்து கொள்ளேன், அவைகள் என்னுடையவைகள் (சங் 50:8-11)
6. நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன் (சங் 50:12)
7. நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக் கடாக்களின் இரத்தம் குடிக்கமாட்டேன் (சங் 50:12-13)
8. நான் தேவனை துதிப்பேன் (சங் 50:14)
9. தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு உன்னத மானவருக்கு பொருத்தனைகளைச் செலுத்துவேன்

50 அதிகாரம்

10. நான் ஆபத்துக்காலத்தில் தேவனைக் கூப்பிடுவேன். அவர் என்னை விடுவிப்பார் (சங் 50:15)

"பசி" - தேவனும், தூதர்களும் புசிப்பது வேதத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது (ஆதி 18:8; யாத் 24:9-11; சங் 78:25; லூக்கா 22:16,18,30; லூக்கா 24:43; வெளி 19:9).

ஆதி 18:7-8 - இல் தேவன் புசித்ததற்கான குறிப்பு உள்ளது. ஆயினும் அவர் ஆகாரத்தைச் சார்ந்து ஜீவிக்கவில்லை.

3. பதில் கொடுக்கப்பட்ட ஜெபத்தில் தேவனுடைய பங்கும் மனுஷனுடைய பங்கும்

சங் 50:14 நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;

சங் 50:15 ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய்.

"நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன்பொருத்தனைகளைச் செலுத்து" - ஸ்தோத்திர பலி தேவனை மகிமைப்படுத்தும் (சங் 50:14-15,23; சங் 40:6; சங் 51:17; எபி 13:15). கர்த்தருக்கு நன்றியில்லாமல் இருப்பது விசுவாசிக்கு ஏற்றதல்ல (2தீமோ 3:2).

"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்" - இது நிபந்தனையுள்ள ஆசீர்வாதம். சங் 50:14 ஆவது வசனத்திற்கு நாம் கீழ்ப்படிந்தால் மட்டுமே சங் 50:15 இல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும்.

4. தேவன் துன்மார்க்கனைக் கடிந்து கொள்கிறார் - துன்மார்க்கனின் பன்னிரண்டு பாவங்கள்

சங் 50:16 தேவன் துன்மார்க்கனை நோக்கி: நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும், உனக்கு என்ன நியாயமுண்டு.

சங் 50:17 சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்.

சங் 50:18 நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப் போகிறாய்; விபசாரரோடும் உனக்குப் பங்குண்டு.

சங் 50:19 உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது.

சங் 50:20 நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன்தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்.

சங் 50:21 இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன்; உன்னைப் போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்.

சங் 50:22 தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை.

துன்மார்க்கருக்கு எதிரான குற்றச்சாட்டு

1. என் பிரமாணங்களை எடுத்துரைக்க வில்லை
2. என் உடன்படிக்கையை முறித்தாய்
3. சிட்சையை நீ பகைத்தாய் (சங் 50:17)

50 அதிகாரம்

4. என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்து போடுகிறாய்

5. நீ திருடனைக் காணும்போது அவனோடு ஒருமித்துப் போகிறாய் *(சங் 50:18)*

6. விபச்சாரரோடும் உனக்குப் பங்குண்டு

7. உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய் *(சங் 50:19)*

8. உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது

9. நீ, உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசுகிறாய் *(சங் 50:20)*

10. உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்

11. இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப் போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய் *(சங் 50:21)*

12. நீ தேவனை மறந்து விட்டாய் *(சங் 50:22)*

"நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன்" - பாவிகள் மீது தேவன் பொறுமையுடன் இருக்கிறார். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். *(2பேதுரு 3:9)*

"உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்" - தேவன் மனுஷருடைய நினைவுகளையெல்லாம் அறிந்திருக்கிறார். தேவன் தங்களைப் போலவே இருப்பார் என்று துன்மார்க்கர் நினைக்கிறார்கள்.

5. நியாயத்தீர்ப்பிலிருந்து எவ்வாறு தப்புவது

சங் 50:23 ஸ்தோத்திர பலி யிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப் படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப் படுத்துவேன் என்று சொல்லுகிறார்.

இரட்சிப்போடுதொடர்புடைய காரியங்கள்

1. தேவனுக்கு ஸ்தோத்திர பலிசெலுத்த வேண்டும்
2. தன் வழியைச் செவ்வைப்படுத்த வேண்டும்

வழி (way) - דֶּרֶךְ - deh'-rek - 1870

ஆண்பால் பெயர்ச்சொல் - வழி, பிரயாணம், பயணம், பாதை, போக்கு, போதல் (course of life)

51 அதிகாரம்

(பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தினபோது பாடி, இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

முதலாவது ஜெப சங்கீதம் - (2சாமு 12)

பொருளடக்கம்

1. தேவன் தன்னை மன்னிக்க வேண்டும் சுத்திகரிக்க வேண்டும் என்று ஏறெடுத்த நான்கு விண்ணப்பங்கள் - (51:1-2)
2. பாவத்தைப்பற்றி அறிக்கையிடுதலின் பத்து அம்சங்கள் - (51:3-6)
3. பதினைந்து விண்ணப்பங்கள் - விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்கும் போது ஏற்படும் இருபத்திரெண்டு விளைவுகள் - (51:7-19)

1. தேவன் தன்னை மன்னிக்க வேண்டும் சுத்திகரிக்க வேண்டும் என்று ஏறெடுத்த நான்கு விண்ணப்பங்கள்

சங் 51:1 தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

சங் 51:2 என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

தாவீது தேவனுடைய இரக்கத்திற்காக ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. என்மேல் இரக்கமாயிரும் (சங் 51:1).
2. உமது கிருபையின் படி எனக்கு இரங்கும்.
3. உமது மிகுந்த இரக்கங்களின்படி, என்மேல் கிருபையாயிரும்.
4. என் மீறுதல்களை நீக்கி விடும்.
5. என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவும்.
6. என் பாவமற என்னைச் சுத்திகரியும் (சங் 51:2).
7. என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் (சங் 51:7).
8. என்னைக் கழுவியருளும்
9. நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும் (சங் 51:8).
10. என் பாவங்களைப் பாராதபடிக்கு உமது முகத்தை மறைத்துக் கொள்ளும்
11. என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும் (சங் 51:9)
12. சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்.
13. நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் (சங் 51:10).
14. உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளிவிடாதேயும்.
15. உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமல் இரும் (சங் 51:11; 1சாமு 16:14).
16. உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தாரும்.
17. உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும் படி செய்யும் (சங் 51:12).

51 அதிகாரம்

18. இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும் (சங் 51:14).

19. என் உதடுகளைத் திறந்தருளும் (சங் 51:15).

20. சீயோனுக்கு உமது பிரியத்தின்படி செய்யும்.

21. எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக (சங் 51:18).

தாவீது தேவனிடம் விண்ணப்பம் செய்ததற்கான காரணங்கள்

1. உமது கிருபையின்படி எனக்கு இரங்கும் (சங் 51:1).

2. உமது மிகுந்த இரக்கங்களின்படி என்னைச் சுத்திகரியும்

3. என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் (சங் 51:3).

4. என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

5. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்தேன் (சங் 51:4).

6. உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்.

7. உம்முடைய நீதி விளங்க அறிக்கையிடுகிறேன்.

8. நியாயந் தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் அறிக்கையிடுகிறேன்.

9. நான் துர்க்குணத்தில் உருவானேன் (சங் 51:5).

10. என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்

11. உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர் (சங் 51:6).

12. அந்தக்கரணத்தில் உம்முடைய ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

13. நான் சுத்தமாவேன், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் (சங் 51:7).

14. நான் மகிழ்ச்சியும் சந்தோஷமும் கேட்கும்படி செய்யும் (சங் 51:8).

15. என் பாவங்கள், அக்கிரமங்களை எல்லாம் நீக்கியருளும் (சங் 51:9).

16. சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டிப்பீராக (சங் 51:10).

17. நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பீராக.

18. நான் தேவனுடைய சமுகத்தை விட்டு செல்லாமல் இருப்பேன் (சங் 51:11).

19. பரிசுத்த ஆவி என்னுள் இருக்கும்.

20. கர்த்தருடைய இரட்சணியத்தின் சந்தோஷம் திரும்பவும் எனக்குக் கிடைக்கும் (சங் 51:12).

21. உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்.

22. பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன் (சங் 51:13).

23. பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்

24. நான் இரட்சிக்கப்படுவேன் (சங் 51:14).

25. உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடுவேன்.

26. நான் உம்முடைய புகழை அறிவிப்பேன் (சங் 51:15).

27. நீர் விரும்புகிற பலியை உமக்குச் செலுத்துவேன் (சங் 51:16).

28. நான் நொறுங்குண்ட ஆவியை பெற்றுள்ளேன் (சங் 51:17)

29. சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும், எருசலேமின் மதில்களைக் கட்டும் (சங் 51:18)

51 அதிகாரம்

30. தகனபலியும், சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகள் உமக்குச் செலுத்தப்படும் (சங் 51:19)

"என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்" - பாவம் செய்தவன், தனது பாவங்களுக்கு மனம் வருந்தி, தேவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும் (சங் 51; ஏசா 1:16-20; ஏசா 55:7; ஏசா 59:1-2; மத் 3:2; மத் 4:17; லூக்கா 13:3,5; லூக்கா 24:47; அப் 2:38-39; அப் 3:19; அப் 26:18; ரோமர் 2:4-7; ரோமர் 3:24-31; ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; 1கொரி 1:18-24; 1கொரி 9:27; 1யோவான் 1:7-9; 1யோவான் 3:5-10; வெளி 2:5). தேவன் நமது பாவங்களை மன்னிப்பதற்கு நாம் அவரிடம் பாவ அறிக்கை செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது (லூக்கா 13:3,5; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9).

2. பாவத்தைப் பற்றி அறிக்கையிடுதலின் பத்து அம்சங்கள்

சங் 51:3 என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

சங் 51:4 தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

சங் 51:5 இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

சங் 51:6 இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

"தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்" - பாவம் தேவனுடைய சமூகத்தில் மிகவும் அருவருப்பானது. சில பாவங்கள் தேவனுக்கு விரோதமாகவும் மனுஷருக்கு விரோதமாகவும் செய்யப்படுகிறது. தாவீது ஊரியா, பத்சேபாள், இஸ்ரவேலர் ஆகிய அனைவருக்கும் எதிராகப் பாவம் செய்தான் (2சாமு 12).

"நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்" - ரோமர் 3:4 இல் இது மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிது.

"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" - வேதாகமத்தில் ஜென்மபாவத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ள வேதபகுதிகளில் இதுவும் ஒன்றாகும். (ஆதி 3:15-19; யோவான் 8:44; ரோமர் 2:12-16; ரோமர் 5:12-21; எபே 2:1-3; 1யோவான் 3:8).

இரட்சிக்கப்பட்டவனுடைய உள்ளத்தில் உண்மையிருக்கும் (1யோவான் 5:17-18), இரட்சிக்கப்படாதவனுடைய உள்ளத்தில் பாவம் இருக்கும் (மாற்கு 7:19-21; ரோமர் 1:18-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 3:5-10).

3. பதினைந்து விண்ணப்பங்கள் - விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்கும்போது ஏற்படும் இருபத்திரெண்டு விளைவுகள்

சங் 51:7 நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

சங் 51:8 நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

51 அதிகாரம்

சங் 51:9 என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

சங் 51:10 தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

சங் 51:11 உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்.

சங் 51:12 உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

சங் 51:13 அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

சங் 51:14 தேவனே, என்னை இரட்சிக்குந்தேவனே, இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்லாக்கிவிடும்; அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப்பாடும்.

சங் 51:15 ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

சங் 51:16 பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.

சங் 51:17 தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

சங் 51:18 சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

சங் 51:19 அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாக நீதியின்பலி களில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

"நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இரத்தப் பலிகளை ஈசோப்பில் தோய்த்து தெளித்தார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசுவின் திரு இரத்தத்தில், விசுவாசத்தினால், எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும். (மத் 26:28; கொலோ 1:20; எபி 9:8-22; எபி 10:1-23; எபி 13:12,20; 1யோவான் 1:7; வெளி 1:5; வெளி 5:8-10; லேவி 14:4-6; எண் 19:6,18; ஏசா 1:16-18).

ஒருபாவி பாவம் செய்து, மனந்திருந்தி, தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுவிட்டு, மறுபடியும் பாவம் செய்து பின்வாங்கிப் போய் விடுகிறான். இந்தப் பின்மாற்ற நிலைமை போக வேண்டுமானால், "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" என்று விண்ணப்பம் பண்ண வேண்டும். (சங் 51:1, 2, 3, 7, 9, 10-14).

ஆவி(spirit)- רוּחַ - roo'-akh - 7307

பொதுப்பெயர்ச்சொல் - ஆவி, குளிர்ச்சி, சுவாசம், காற்று, மனநோவு, மனம், மனமடிவு, தைரியம், சோர்ந்து போதல், கோபம், உயிர், பிரமை, மூச்சு, கடுங்கொந்தளிப்பு, முற்கோபி, உள்ளம், கீறல், திசை, பக்கம், பெருங்காற்று, சாந்தி

ஆவி (spirit)- πνεῦμα - pneuma - ப்னூமா - 4151

பால் வேறுபாடற்ற பெயர் - ஆவி - மனுஷனுடைய ஆவியைக் காண முடியாது. ஞானம், அறிவு, சித்தம், சிந்தை ஆகியவை ஆவியின் கிரியைகள். மனுஷனுடைய ஆவியும் ஆத்துமாவும் மரிப்பதில்லை. ஆத்துமாவையும் ஆவியையும் வேறுபடுத்தி விளக்குவது கடினம். ஆயினும் இவற்றுக்கிடையே வித்தியாசம் உண்டு 1தெச 5:23; எபி 4:12. ஆவி அறிகிறது (1கொரி 2:11), ஆத்துமா உணருகிறது. மனுஷனுடைய உள்ளான மனுஷனில் ஆவியும் ஆத்துமாவும் உள்ளன.

51 அதிகாரம்

"ஆவி" என்னும் சொல்லின் பல்வேறு விதமான பயன்பாடுகள்

1. கர்த்தருடைய ஆவி (சங் 139:7; சங் 143:10; ஏசா 30:1; ஏசா 40:13)
2. பரிசுத்த ஆவி (ஆதி 1:2; ஏசா 48:16; ஏசா 61:1; சக 12:10)
3. தூதர்கள் (சங் 104:4)
4. கேருபீன்கள் (எசே 1:12-21; எசே 10:17)
5. பிசாசுகள் (லேவி 19:31; லேவி 20:6)
6. வேறே ஆவிகள் (சக 6:5)
7. தேவனுடைய பிள்ளையின் புதிய சுபாவம் (1கொரி 6:17)
8. மாம்சமான யாவருடைய ஆவி (எண் 16:22; எண் 27:16; நீதி 18:14; நீதி 20:27; நீதி 25:28; பிர 3:21)
9. தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வியாக்கியானங்கள்
    (1) காற்று (யாத் 15:8; 2இராஜா 19:7; ஏசா 37:7)
    (2) சுவாசம் (ஆதி 6:17; ஆதி 7:15,22; 2சாமு 22:16; சங் 18:15)
    (3) ஆவி (ஏசா 4:4; ஏசா 28:6; ஏசா 34:16)
10. ஆவிக்குரியவர்கள் (ஆதி 41:38; யாத் 28:3; யாத் 31:3; யாத் 35:31; எண் 11:17,25-29; எண் 24:2; எண் 27:18; உபா 34:9; ஏசா 11:2; ஏசா 32:15; ஏசா 42:1; ஏசா 61:1; எசே 2:2; எசே 3:24)
11. உயிர்ப்பிக்கிற ஆவி (1கொரி 15:45)
12. காற்று (எசே 37:9)
13. மனம் (ஆதி 26:35; நீதி 29:11; எசே 11:5; எசே 20:32; தானி 5:20)
14. தைரியம் (யோசு 2:11)
15. கோபம் (நியா 8:3)
16. மனுஷன் (சங் 77:3,6; சங் 106:33; எசே 21:7; தானி 2:1,3; மல் 2:15,16)
17. தட்பவெப்பம் (ஆதி 3:8)
18. புசல்காற்று (எசே 1:4)
19. பெருங்காற்று (சங் 55:8)
20. காற்று (யோபு 41:16)
21. கடுங்கோடை (சங் 11:6)
22. திசை (1நாளா 9:24)

மனுஷனுடைய ஆவியின் சுபாவங்கள்

1. கலக்கம் கொண்டிருத்தல் (ஆதி 41:8)
2. உயிர்த்தெழுதல் (ஆதி 45:27)
3. மனமடிவு (யாத் 6:9)
4. உற்சாகப்படுத்துதல் (யாத் 35:21)
5. எரிச்சல் (எண் 5:14,30)
6. கடினம்
7. மனக்கிலேசம் (1சாமு 1:15)
8. ஏவுதல் (2நாளா 36:22)
9. தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் (சங் 31:5)
10. கபடமில்லாதிருத்தல் (சங் 32:2)
11. நருங்குண்டது (சங் 34:18)
12. நொறுங்குண்டது (சங் 51:17)
13. தொய்ந்து போதல் (சங் 77:3)
14. நிலைத்திருத்தல் (சங் 78:8)
15. விசனப்படுத்துதல் (சங் 106:33)

51 அதிகாரம்

16. முன்கோபித்தல் (நீதி 14:29)

17. அகந்தை (நீதி 16:18)

18. தாழ்மை (நீதி 16:19)

19. ஆளுகை செய்தல் (நீதி 16:32)

20. முறிந்த (ஆவி) (நீதி 18:14)

21. சஞ்சலம் (பிர 1:14)

22. பொறுமை (பிர 7:8)

23. நெருக்குதல் (யோபு 32:18)

24. ஆராய்ச்சி செய்தல் (சங் 77:6)

25. இரகசியத்தைக் காப்பாற்றுதல் (நீதி 11:13)

26. வழுவிப்போதல் (ஏசா 29:24)

27. பெருமை (பிர 7:8)

28. ஒடுங்கின ஆவி (ஏசா 61:3)

29. உணர்வுள்ளது (யோபு 20:3; யோபு 32:8)

30. தேவனுக்குரியதை அறிதல் (1கொரி 2:11)

தள்ளிவிடு (Cast ... away) - שָׁלַךְ - shaw-lak' - 7993

வினைச்சொல் - எறி, வரப்பண்ணு, போடு, விழப்பண்ணு, விடு, அகற்றித்தீர், தூவு, தள்ளிவிடு, எறிந்துபோடு, தள்ளு, கொட்டு, கவிழ்த்துப்போடு, வைத்துவிடு, விலக்கு, வைத்திரு, உதிர்ந்துபோ, பிடுங்கு, அனுப்பு, அளந்துகொடு, விழு, துரத்திவிடு - பின்வாங்கிப் போனவர்கள் தேவனுடைய கிருபையிலிருந்து தள்ளப் படுவார்கள் **(to throw out, down, or away so as to destroy or get rid of)** (ஆதி 37:24; யாத் 1:22; யாத் 22:31). பின்வாங்கிப் போனவர்களிடமிருந்து தேவனால் தமது பரிசுத்த ஆவியை எடுத்துக் கொள்ள முடியும் (1சாமு 10:9-13; 1சாமு 16:14).

தாவீது தேவனுடைய இரட்சணித்தின் சந்தோஷத்தை இழந்து விட்டான். ஆகையினால் அவன் கர்த்தரிடம் இவ்வாறு ஜெபிக்கிறான் "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்".

மனந்திரும்பு (converted) - שׁוּב - shoob - 7725

வினைச்சொல் - திரும்பு, திரும்பப்போ, திரும்பவா, பின்வாங்கு, திருப்பு வா, அளி, மனந்திரும்பு, சாய், மாற்று, ஆறு, மாறு, நீங்கு, வற்றிக்கொள், வற்றிப்போ, தணி, புரள், விலகு, தீர், திரி, மறுபடியும்போ, வடி, திரும்பிச்சேர், அழைத்துக்கொள், திரும்பயனுப்பிவிடு, வை, செல், திரும்பக்கிடை, சீர்ப்படு, திரும்ப சீர்ப்படு, திரும்ப முன் போலிரு, பின்செல், விலகிப்போ, வந்திரு, கொண்டுவா, தள்ளப்படு, சரிக்கட்டு, பின்னிட்டுப்போ, திரும்பிவிடு, தவறு, கிடை, திரும்பவிழு, பின்னிடை, யாகூப், திருப்பப்படு, மாற்றாட்டம் பண்ணு, இன்னமும், திரும்புகிறவர், வரவு, கெடு, நடு, அலையவிடு, பிடுங்கு, தேற்று, திருத்துகிறவன், திரும்பவும் தா, திரும்பப் போடும்படிசெய், அனுப்பிவிடு, திரும்ப அனுப்பு, திரும்பப்பண்ணு, திருப்பிக்கொள், திருப்பிக்கொண்டுவந்தவன், திரும்பவை, செலுத்து, திரும்பச் சேர்த்துக் கொள், பலனளி, நீக்கிவிடு, முடக்கிக்கொள், விலக்கு, கொண்டு போ, பாவநிவர்த்தி செய், கொடுத்துவிடு, சேர், திரும்ப அழைத்துவா, எவ்விதத்திலும், முடக்கு, மறுமொழிசொல், திரும்பத் தன் வசமாக்கிக்கொள், திரும்பஅழை, மறுஉத்தரவுகொடு, திரும்பச்சொல்லு, மறுமொழியாகச் சொல்லு, மறு, திரும்ப எடு, காப்பாற்று, திரும்ப எழுப்பு, திரும்ப போடு, திரும்ப அழைத்துக்கொண்டுவா, தப்புவி, கிடைக்கும்படிசெய், திருப்பிக் கொண்டுவா, கொடு, மறி, திரும்பஒப்புவி, மறுபடியும் அழைத்துப்போ, மறுபடியும் வை, கொண்டுவந்திரு, சரிக்குச் சரிக்கட்டு, தெரிவி, எடுத்துக்கொள், திரும்பப்போகப் பண்ணு, வாங்கு, திரும்ப நிறுத்து, எடு, திரும்பப் பிடி, மறுமொழி, அனுப்பு,

51 அதிகாரம்

தடைபண்ணு, எழுப்பு, மறுஉத்தரவு, கொடுக்க ஏவு, ஒப்புக்கொடு, மறுஉத்தரவு சொல்லு, பிரதியுத்தரம்சொல், மழுக்கிப் போடு, திரும்பச் சீர்ப்படுத்து, மறுபடியும் அழைப்பி, உருட்டு, குளிரப்பண்ணு, தடு, திரும்பக் கட்டளையிடு, திரும்ப நடத்திக் கொண்டுபோ, உத்தரவு சொல், திரும்ப உள்ளேவாங்கிக் கொள், திரும்ப அழைத்துப்போ, ஆறுதல் செய், ஆகப்பண்ணு, திரும்பக்கொண்டு வா, திரும்பப்படு - புதிய ஏற்பாட்டில் மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல், புது சிருஷ்டி, இரட்சிப்பு என்னும் இரட்சிப்பைக் குறித்த காரியங்கள் பழைய ஏற்பாட்டில் பரிசுத்தவான்களுக்கும் தெரிந்திருந்தது (to turn back; retreat; recover; restore; to bring back) (சங் 51:13; சங் 19:7; ஏசா 1:27; ஏசா 6:10; மத் 13:15; மத் 18:3; மாற்கு 4:12;லூக்கா 22:32; யோவான் 12:40; அப் 3:19; அப் 15:3; அப் 28:27; யாக் 5:19-20).

"இரத்தப்பழிகள்" - தாவீது பத்சேபாளின் புருஷனான உரியாவின் மரணத்திற்குக் காரணமானவன் (2சாமு 11:14-21). உரியாவின் இரத்தப்பழி தாவீதின் மீது வந்தது.

"பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல" (சங் 51:16; சங் 40:6) - ஆகிய இரண்டு வசனங்களும் இவ்வாறு கூறுகின்றன. மிருகங்களின் இரத்தம் தாவீதின் பலியை இரட்சிக்காது. இரட்சிக்கவும் முடியாது. தேவனுடைய கிரியையும் இரக்கமுமே தாவீதின் பாவத்தை மன்னிக்கும். இரக்கம் தேவனுடைய கிருபையிலிருந்தே வரும். பிரமாணத்திலிருந்து வராது. பிரமாணம் பாவியைக் கொன்று போடும். தேவகிருபை பாவியை மன்னித்து அவனை வாழ வைக்கும்.

தேவன் ஏற்றுக் கொள்ளும் இரண்டு பலிகள்

1. நொறுங்குண்ட ஆவி
2. நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயம்

நொறுங்குண்டது (broken) - שָׁבַר - shaw-bar' - 7665

வினைச்சொல் - முறி, முறித்துப்போடு, பிள, நொறுக்கு, உடைத்துப்போடு, உடை, முறித்துவிடு, அறு (to shiver; break in pieces; reduce to splinters)

நருங்குண்டது (crumble) - דָּכָה - daw-kaw' - 1794

வினைச்சொல் - நருங்குண்டது, நொறுக்கப்படு (சங் 51:8,17; சங் 38:8; சங் 44:19)

நொறுங்குண்டது (smitten) - נָכֶה - nay-keh' - 5223

பெயரடை - நொறுங்குண்ட, முடமான (to crumble; beat to pieces; bruise; crush; humble) (ஏசா 66:2)

தேவன் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும் உடையவர். ஆகையினால் மனுஷருடைய நொறுங்குண்ட ஆவியையும் நருங்குண்ட இருதயத்தையும் புறக்கணிக்க மாட்டார்.

"சீயோன்" - இது தாவீதின் நகரத்தைக் குறிக்கும். மோரியாமலையின் தென்பகுதியில் உள்ள பட்டணம் (2நாளா 27:3; 2நாளா 33:14; நெகே 3:26-31; நெகே 11:21).

"நீதியின் பலிகள்" (sacrifices of righteousness) - மிருகங்களின் பலிகளும், நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கிற மற்ற பலிகளும் நீதியின் பலிகளாகும். வரப்போகிற இரட்சகர் மீது நம்பிக்கை வைத்து இந்தப்பலிகள் செலுத்தப்பட்டன. கிறிஸ்து பாவநிவாரண பலியாக ஆகும் வரையிலும், மனுஷர் இந்தப் பலிகளைச் செலுத்த வேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை (லூக்கா 24:27,44;எபி 9:1-28; எபி 10:1-23). இப்போது கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பாவநிவாரண பலியாக மரித்துவிட்டார். இனிமேலும் மிருகங்களைப் பலியிடுவது நீதியின் பலிகளாக இருக்காது. "அநீதியின் பலிகளாக"(unrighteous sacrifices) இருக்கும் (ரோமர் 10:4; கலா 3:19-28; கலா 4:21-31; எபி 7:11-10:23).

சங்கீதம் - தொகுப்புரை

52 அதிகாரம்

(தாவீது அபிமெலேக்கின் வீட்டுக்கு வந்தானென்று ஏதோமியனாகிய தோவேக்கு வந்து சவுலுக்கு அறிவித்தபின்பு தாவீதினால் பாடப்பட்டு இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் சங்கீதம்.)

ஏழாவது போதக சங்கீதம் - நீதிமானின் நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றிய உபதேசம் - (1சாமு 21)

பொருளடக்கம்

1. தோவேக்கின் ஆறு அம்ச குணாதிசயங்கள் - (52:1-4)
2. தேவனுடைய நியாத்தீர்ப்பின் மூன்று அம்சங்கள் - (52:5)
3. நியாயப்பிரமாணத்தின் கீழுள்ள நீதிமானுடைய நோக்கத்தின் நான்கு அம்சங்கள் - (52:6-7)
4. நீதிமானுக்குரிய நான்கு ஆசீர்வாதங்கள் - (52:8-9)

1. தோவேக்கின் ஆறு அம்ச குணாதிசயங்கள்- (1சாமு 22:7-23. 2சாமு. 15:1-12,31; சங் 55:12-14)

சங் 52:1 பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமை பாராட்டுகிறாய்? தேவனுடையகிருபை எந்நாளுமுள்ளது.

சங் 52:2 நீ கேடுகளைச் செய்ய எத்தனம் பண்ணுகிறாய், கபடுசெய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போல் இருக்கிறது.

சங் 52:3 நன்மையைப்பார்க்கிலும் தீமையையும், யதார்த்தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய். (சேலா.)

சங் 52:4 கபடமுள்ள நாவே, சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் நீ விரும்புகிறாய்.

தோவேக்கின் குணங்கள் (1சாமு 21:7)

1. பெருமைபாராட்டுதல், ஏமாற்றுதல் (சங் 52:1)
2. பொய்யர், அவதூறு செய்கிறவன் (சங் 52:2)
3. ஏமாற்றுகிறவன்
4. நன்மையைப் பார்க்கிலும் தீமையையே விரும்புகிறான் (சங் 52:3)
5. யதார்த்தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையே விரும்புகிறான்
6. சங்கரிக்கும் சகல வார்த்தைகளையே விரும்புகிறான் (சங் 52:4)

2. தேவனுடைய நியாத்தீர்ப்பின் மூன்று அம்சங்கள்

சங் 52:5 தேவன் உன்னை என்றென்றைக்கும் இராதபடி அழித்துப் போடுவார்; அவர் உன்னைப்பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி, நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூலமாக்குவார். (சேலா.)

தீர்க்கதரிசன எண் - 41

"தேவன் உன்னை என்றென்றைக்கும் இராதபடி அழித்துப் போடுவார்............" (சங் 52:5-7) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தோவேக்கின் மீது நியாயத்தீர்ப்பு வந்தது.

3. நியாயப்பிரமாணத்தின் கீழுள்ள நீதிமானுடைய நோக்கத்தின் நான்கு அம்சங்கள்

சங் 52:6 நீதிமான்கள் அதைக் கண்டு பயந்து, அவனைப்பார்த்து நகைத்து:

சங் 52:7 இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப்பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்.

52 அதிகாரம்

தோவேக்கு ஏற்கனவே ஐசுவரியவான். தாவீதைக் காட்டிக் கொடுத்ததினால் இன்னும் மிகுந்த ஐசுவரியவானாகலாம் என்று நினைத்தான். ஆனால் தாவீதோ "தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்" என்றான்.

4. நீதிமானுக்குரிய நான்கு ஆசீர்வாதங்கள்

சங் 52:8 நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரத்தைப் போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.

சங் 52:9 நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன்; உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது.

தாவீதுக்கும் தோவேக்குக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1. தாவீது தேவனுடைய ஆலயத்தில் பச்சை மரத்தைப் போன்றவன் (சங் 52:8). தோவேக்கு வெளியே எறியப்பட்ட பட்டமரத்தைப் போன்றவன் (சங் 52:5)

2. தாவீது தேவனுடைய இரக்கத்தை நம்பினான் (சங் 52:6). தோவேக்கு தன் செல்வப்பெருக்கை நம்பினான் (சங் 52:7).

3. தாவீது நித்திய காலமாக ஆசீர்வதிக்கப்படுவான் (சங் 52:8); தோவேக்கு நித்திய காலமாக சபிக்கப்படுவான் (சங் 52:5).

4. தேவனுடைய உதவிக்காக தாவீது என்றென்றும் அவரைத் துதிப்பான் (சங் 52:9). தோவேக்கு தேவனுடைய சமூகத்தை விட்டு தூர விலகிப் போவான் (சங் 52:5).

5. தாவீது தேவனுடைய நாமத்திற்குக் காத்திருந்தான்(சங் 52:9). தோவேக்கு தேவனுக்கு காத்திருக்கவில்லை (சங் 52:7)

6. தாவீது தேவனுடைய பரிசுத்தவானுக்கு எடுத்துக்காட்டானவன் (சங் 52:9); தோவேக்கு துன்மார்க்கனுக்கு எடுத்துக்காட்டானவன் (சங் 52:7)

சங்கீதம் - தொகுப்புரை

53 அதிகாரம்

(மகலாத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கப்படும்படி தாவீதினால் பாடப்பட்டு இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மஸ்கீல் என்னும் சங்கீதம்.)

எட்டாவது போதக சங்கீதம் - துன்மார்க்கனைப் பற்றிய போதனை

பொருளடக்கம்

1. மதிகேடனின் வார்த்தைகளும் செயல்களும் - மதிகேடனின் பன்னிரெண்டு காரியங்கள் - தேவனுடைய ஐந்து காரியங்கள் - *(53:1)*

2. பூமியில் தேவபக்தியுள்ளவனைத் தேவன் தேடிப்பார்க்கிறார் - *(53:2)*

3. தேவனுடைய கண்டுபிடிப்பு - எல்லாரும் கெட்டுப்போனார்கள் - *(53:3-5)*

4. தேவனுடைய இறுதியான நோக்கம் - மனுஷன் பூமியில் தேவபக்தியுடனிருக்க வேண்டும் - *(53:6)*

1. மதிகேடனின் வார்த்தைகளும் செயல்களும் - மதிகேடனின் பன்னிரெண்டு காரியங்கள் - தேவனுடைய ஐந்து காரியங்கள் - *(சங் 14:1)*

சங் 53:1 தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்; அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான அக்கிரமங்களைச் செய்து வருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை.

"மகலாத்" என்னும் வாத்தியம் சோக கீதம் பாடும்போது வாசிக்கப்படும். *(சங் 88)*.

மதி கேடன் (fool) - נָבָל - naw-bawl' - 5036

பெயரடை - மதிகெட்டவன், பயித்தியக்காரி, மதியீனன், மூடன், மதிகேடன் (stupid, wicked, vile, impious) - சங் 14இல் மதிகேடனைப் பற்றி மேலும் பல குறிப்புக்கள் உள்ளன.

மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளும் காரியங்கள்

1. தேவன் இல்லை என்பான் *(சங் 53:1; சங் 14:1)*.

2. ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொள்வான். *(லூக்கா 12:19)*.

தேவன் இல்லை என்று கூறும் நாத்திகக் கொள்கை தவறானது. காரணங்கள்

1. அண்ட சராசரங்களின் அமைப்பு முறை

2. மனுஷன் சரீரம், ஆவி, ஆத்துமா ஆகிய மூன்றுமுடையவன்.

3. ஏராளமான சிருஷ்டிகள் - ஒவ்வொன்றும் பரிபூரணமானது

4. தேவனுடைய கிரியைகளின் பண்பு

5. எல்லா சிருஷ்டிகளின் ஆளுகையும் பராமரிப்பும்.

6. நாஸ்திகம் தேவபக்தியற்றவர்களின் ஏளனப் பேச்சு.

7. நாஸ்திகம் எந்த மனுஷனையும் ஆசீர்வதிக்காது.

8. நாஸ்திகத்தினால் துன்மார்க்கம் பெருகுகிறது.

9. நாஸ்திகக் கொள்கை நிரூபிக்கப்படவில்லை.

53 அதிகாரம்

10. நாஸ்திகக் கொள்கையுடையவர்கள், மரிக்குந்தருவாயில் "தேவன் உண்டு, தேவனே என்மீது இரக்கமாயிரும், என்னை மன்னியும்" என்று ஜெபித்திருக்கிறார்கள்.

"நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை" - ரோமர் 3:10-12-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. பூமியில் தேவபக்தியுள்ளவனைத் தேவன் தேடிப்பார்க்கிறார் - (சங் 14:2)

சங் 53:2 தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

மனுஷரையும், அவர்களுடைய துன்மார்க்கமான வழிகளையும் தேவன் பரலோகத்திலிருந்து உற்றுப் பார்த்தார். (சங் 53:2; சங் 14:2; ஆதி 11:3; ஆதி 18:21, சங் 53:1, 3-5)

மனுபுத்திரர் - தேவன் சிருஷ்டித்த ஆதாமின் புத்திரர்.

"தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று" - தேவன் இன்றும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். (சங் 33:13-14; சங் 69:20; யோபு 33:27; ஏசா 63:5).

3. தேவனுடைய கண்டுபிடிப்பு - எல்லாரும் கெட்டுப்போனார்கள் - (சங் 14:3)

சங் 53:3 அவர்கள் எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.

சங் 53:4 அக்கிரமக்காரருக்கு அறிவு இல்லையா? அப்பத்தைப் பட்சிக்கிறது போல் என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே; அவர்கள் தேவனைத் தொழுது கொள்ளுகிறதில்லை.

சங் 53:5 உனக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கினவனுடைய எலும்புகளை தேவன் சிதறப்பண்ணினபடியால், பயமில்லாத இடத்தில் மிகவும் பயந்தார்கள்; தேவன் அவர்களை வெறுத்தபடியினால் நீ அவர்களை வெட்கப்படுத்தினாய்.

"எல்லாரும் வழிவிலகி, போனார்கள்" - ஆம். இதுதான் உண்மை. மனுக்குலம் தேவனை விட்டுப் போய்விட்டது. நேரான பாதையில் செல்வதற்குப் பதிலாக கோணலும் தாறுமாறானதுமான பாதையில் செல்கிறது (ரோமர் 1:21-32). தேவ பக்தியில்லாதவனுடைய ஜீவியம் பாவத்தில் மூழ்கிவிடும்.

மனுஷன் தேவனை மறுதலித்ததினால் கெட்டுப் போனான்.

"நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" - ரோமர் 3:10-18- இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அறிவு" - ஞானத்தின் ஆரம்பமாகிய கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைப் பற்றிய அறிவு (சங் 111:10; நீதி 1:7; நீதி 9:10; நீதி 15:33; ஏசா 11:2; 1கொரி 12:8).

"அப்பத்தைப் பட்சிக்கிறது போல் என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே" - எபிரெய மொழியில் அழிவைக் குறிக்கும் மரபுப் பேச்சு (எரே 10:25; ஆமோ 8:4; மீகா 3:3; எண் 14:9).

"அவர்கள் தேவனைத் தொழுது கொள்ளுகிறதில்லை." - ஜெபமில்லாத தேவபக்தியற்ற நிலம் பாவம், அழிவு ஆகிய பயிரையே முளைப்பிக்கும் (கலா 6:7-8).

"உனக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கினவனுடைய எலும்புகளை தேவன் சிதறப்பண்ணினார்" - இதனால் தான் துன்மார்க்கர் தேவனுடைய நியாயத் தீர்ப்புக்காகப் பயப்படுகிறார்கள் (எபி 10:30-31).

53 அதிகாரம்

4. தேவனுடைய இறுதியான நோக்கம் - மனுஷன் பூமியில் தேவ பக்தியுடனிருக்க வேண்டும் - (சங் 14:7)

சங் 53:6 சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; தேவன் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திரும்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.

தீர்க்கதரிசன எண் - 42

"சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; தேவன் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திரும்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்" (சங் 53:6) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இது நிறைவேறும் (ரோமர் 11:25-29; ஏசா 59:20-21).

"தேவன் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திரும்பும்போது" - இப்படி எழுதப்பட்டிருப்பதனால் இந்த சங்கீதம் சிறையிறுப்பின் காலத்திற்குப் பின்பு எழுதப்பட்டது என்று கூற முடியாது. தாவீது ஆவியானவருடைய ஏவுதலினால் வருங்கால சிறையிருப்பையும் மேசியாவின் கீழ் இஸ்ரவேலர் இறுதியாகக் கூடுவதையும் கூறியிருக்கலாம் (ஏசா 11:10-12; எசே 37; மத் 24:31).

54 அதிகாரம்

(தாவீது தங்களிடத்தில் ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்று சீப்பூரார் வந்து சவுலுக்குச் சொன்னபோது, நெகிநோத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மஸ்கீல் என்னும் சங்கீதம்.)

ஒன்பதாவது போதக சங்கீதம் - ஜெபத்தைப் பற்றியும் ஸ்தோத்திரம் பண்ணுவது பற்றியும் உபதேசம் - (1சாமு 23:19; 26:1)

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் - மூன்று காரணங்கள் - (54:1-3)
2. ஸ்தோத்திரம் - ஆறு காரணங்கள் - (54:4-7)

1. நான்கு விண்ணப்பங்கள் - மூன்று காரணங்கள் - (சங் 55:1; 56:1; 57:1,7; 59:11; 86:1,12; 106:4; 108:5)

சங் 54:1 தேவனே, உமது நாமத்தினிமித்தம் என்னை இரட்சித்து, உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ்செய்யும்.

சங் 54:2 தேவனே, என் விண்ணப்பத்தைக் கேட்டு, என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும்.

சங் 54:3 அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்; கொடியர் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்; தேவனைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்கார்கள். (சேலா)

தாவீதின் விண்ணப்பங்கள்

1. உமது நாமத்தினிமித்தம் என்னை இரட்சியும் (சங் 54:1)
2. உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ்செய்யும்
3. என் விண்ணப்பத்தைக் கேளும் (சங் 54:2)
4. என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும்
5. உமது சத்தியத்தினிமித்தம் சத்துருக்களை நிர்மூலமாக்கும் (சங் 54:5)

தாவீது இவ்வாறு விண்ணப்பம் செய்வதற்கான காரணங்கள் (சங் 54:3)

1. அந்நியர் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்
2. கொடியர் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்
3. தேவனைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்கார்கள்

2. ஸ்தோத்திரம் - ஆறு காரணங்கள்

சங் 54:4 இதோ, தேவன் எனக்குச் சகாயர்; ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார்.

சங் 54:5 அவர் என் சத்துருக்களுக்குத் தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டுவார், உமது சத்தியத்தினிமித்தம் அவர்களை நிர்மூலமாக்கும்.

சங் 54:6 உற்சாகத்துடன் நான் உமக்குப் பலியிடுவேன்; கர்த்தாவே, உமது நாமத்தைத் துதிப்பேன், அது நலமானது.

சங் 54:7 அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார்; என் கண் என் சத்துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக் கண்டது.

தேவனைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. தேவன் எனக்குச் சகாயர் (சங் 54:4)
2. ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார்
3. அவர் என் சத்துருக்களுக்குத் தீமைக்குத் தீமையைச் சரிகட்டுவார்
4. அது நலமானது (சங் 54:6)

54 அதிகாரம்

5. அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார் (சங் 54:7)

6. என் கண் என் சத்துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக் கண்டது

"சத்துருக்கள்" - இது சவுலாகவோ, சீப்புராரோகவோ இருக்கலாம். அல்லது தாவீதின் மறைவிடத்தை சவுலுக்கு அறிவித்த கேயிலாவின் மனுஷராகவோ இருக்கலாம் (1சாமு 23:12).

மனுஷனுக்கு நலமான காரியங்கள்

1. வெளிச்சம் (ஆதி 1:4)
2. வெட்டாந்தரை, சமுத்திரம் (ஆதி 1:10)
3. புல்பூண்டு (ஆதி 1:12)
4. பகல், இரவு (ஆதி 1:18)
5. நீர் வாழும் ஜந்துக்கள் (ஆதி 1:21)
6. நாட்டு, காட்டு மிருகங்கள் (ஆதி 1:25)
7. எல்லா சிருஷ்டிப்புகள் (ஆதி 1:31)
8. மனைவி (ஆதி 2:18; நீதி 18:22)
9. இளைப்பாறுதல் (ஆதி 49:15)
10. தேவனைத் துதித்தல் (சங் 54:6; சங் 92:1)
11. கர்த்தருடைய உருக்கமான இரக்கங்கள் (சங் 69:16)
12. கர்த்தர் (சங் 73:1; சங் 100:5)
13. தேவனை அண்டிக் கொண்டிருப்பது (சங் 73:28; சங் 106:1)
14. உபத்திரவம் (சங் 119:71)
15. தேவனைக் கீர்த்தனம் பண்ணுதல் (சங் 147:1)
16. தேன் (நீதி 24:13)
17. நம்பிக்கை (புல 3:26)
18. நுகம், பொறுப்பு (புல 3:27)
19. உப்பு (மாற்கு 9:50)
20. நியாயப்பிரமாணம் (ரோமர்7:16; 1தீமோ 1:8)
21. தேவனுடைய நன்மை, சித்தம் (ரோமர் 12:2)
22. நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது (கலா 4:18)

55 அதிகாரம்

(நிகநோத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மஸ்கீல் என்னும் சங்கீதம்.)

பத்தாவது போதக சங்கீதம் - நியாயத்தீர்ப்பின் ஜெபத்தைப் பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் - துன்மார்க்கன் மீது எட்டு குற்றச்சாட்டுக்கள் - (55:1-5)

2. துன்மார்க்கனிடமிருந்து தப்பிக்க வேண்டுமென்று நீதிமானின் ஆறு அம்சவிருப்பம் - (55:6-8)

3. இரண்டு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - (55:9-11)

4. மேசியாவை மறுதலித்தல் - (55:12-14)

5. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று இரண்டு விண்ணப்பங்கள் - (55:15)

6. துன்மார்க்கனிடமிருந்து விடுதலை கிடைக்குமென்று ஏழு அம்ச நம்பிக்கை - (55:16-19)

7. துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - (55:20-21)

8. நீதிமானுடைய நம்பிக்கையின் மூன்று அம்சம் - (55:22)

9. துன்மார்க்கனின் முடிவு - (55:23)

1. நான்கு விண்ணப்பங்கள் - துன்மார்க்கன் மீது எட்டு குற்றச்சாட்டுக்கள்

சங் 55:1 தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்; என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்.

சங் 55:2 எனக்குச் செவிகொடுத்து, உத்தரவு அருளிச்செய்யும்; சத்துருவினுடையகூக்குரலினிமித்தமும், துன்மார்க்கர் செய்யும் இடுக்கத்தினிமித்தமும் என் தியானத்தில் முறையிடுகிறேன்.

சங் 55:3 அவர்கள் என்மேல் பழிசாட்டி, குரோதங்கொண்டு, என்னைப் பகைக்கிறார்கள்.

சங் 55:4 என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது; மரணத்திகில் என் மேல் விழுந்தது.

சங் 55:5 பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது; அருக்களிப்பு என்னை மூடிற்று.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என் ஜெபத்தைக் கேட்டருளும் (சங் 55:1).

2. என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்.

3. உத்தரவு அருளிச் செய்யும் (சங் 55:2).

4. எனக்குச் செவி கொடும்.

5. அவர்கள் நாவை அழித்துப் போடும் (சங் 55:9).

6. அவர்கள் பாஷையைப் பிரிந்து போகப் பண்ணும்.

7. மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும்படிச் செய்யும் (சங் 55:15).

8. அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கும்படிச் செய்யும்.

"கூக்குரல்" - துன்மார்க்கரின் கலகக் கூச்சல்

தாவீதின் முறையீட்டுக்குக் காரணங்கள்

1. என் மேல் பழிசாட்டுகிறார்கள் (சங் 55:3).

2. துன்புறுத்துகிறார்கள்.

3. குற்றம்சாட்டுகிறார்கள்.

55 அதிகாரம்

4. குரோதங்கொண்டு பகைக்கிறார்கள்.

5. என் இருதயம் வியாகுலப்படுகிறது (சங் 55:4).

6. மரணத்திகில் என் மேல் விழுந்தது.

7. பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது (சங் 55:5)

8. அருக்களிப்பு என்னை மூடிற்று.

9. பெருங்காற்றும் புசலும் (சங் 55:8).

10. அவர்கள் பாஷைகள் (சங் 55:9)

11. கொடுமையும், சண்டையும்

12. அக்கிரமமும் வாதையும் நடுவில் இருக்கிறது (சங் 55:10).

13. கேடுபாடு அதின் நடுவில் இருக்கிறது (சங் 55:11)

14. கொடுமையும் கபடும் அதின் வீதியை விட்டு விலகிப் போகிறதில்லை.

15. ஏமாற்றி வஞ்சகம் பண்ணுதல் (சங் 55:12-14)

16. வாயின் சொற்கள் வெண்ணெயைப் போல மெதுவானவைகள். அவன் இருதயமோ யுத்தம் (சங் 55:20-21)

17. உடன்படிக்கையை மீறுதல் (சங் 55:20)

18. அவர்களை அழிவின் குழியில் இறங்கப் பண்ணுவீர், இரத்தப் பிரியரும் சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பிழைத்திருக்க மாட்டார்கள் (சங் 55:23).

"மரணத்திகில் என் மேல் விழுந்தது" - நான் எப்பொழுதும் கொலை செய்யப்படலாம்.

மனுஷனுக்கு மரணம் வரும். ஆயினும் தேவ பிள்ளைகளுக்கு மரண பயம் இருக்கக் கூடாது (சங் 55:2-5)

2. துன்மார்க்கனிடமிருந்து தப்பிக்க வேண்டுமென்று நீதிமானின் ஆறு அம்சவிருப்பம்

சங் 55:6 அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்.

சங் 55:7 நான் தூரத்தில் அலைந்து திரிந்து வனாந்தரத்தில் தங்கியிருப்பேன். (சேலா)

சங் 55:8 பெருங்காற்றுக்கும் புசலுக்கும் தப்பத் தீவிரித்துக் கொள்ளுவேன் என்றேன்.

"அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்" - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பி ஓடும் போது இதைக் கூறுகிறான். யோர்தான் நதியைக் கடக்கும்போது, அப்சலோம் தாவீதிற்கு அருகில் வந்துவிட்டான். புறாவைப் போல பறந்தால் தான் தாவீதினால் தப்பிக்க முடியும். (2சாமு 17:22-23)

"பெருங்காற்றுக்கும் புசலுக்கும்" - தாவீது ஒரு பாதுகாப்பான இடத்திற்குப் போவதற்கு முன்பாக அவனுடைய சத்துருக்கள் அவனை அழிக்க முயற்சி செய்தார்கள் (2சாமு 15:6, 12).

3. இரண்டு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள்

சங் 55:9 ஆண்டவரே, அவர்களை அழித்து, அவர்கள் பாஷையைப் பிரிந்து போகப் பண்ணும்; கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்டேன்;

சங் 55:10 அவைகள் இரவும் பகலும் அதின் மதில்கள்மேல் சுற்றித்திரிகிறது; அக்கிரமமும் வாதையும் அதின் நடுவில் இருக்கிறது;

சங் 55:11 கேடுபாடுகள் அதின் நடுவில் இருக்கிறது; கொடுமையும் கபடும் அதின் வீதியை விட்டு விலகிப்போகிறதில்லை.

55 அதிகாரம்

"ஆண்டவரே, அவர்களை அழித்து, அவர்கள் பாஷையைப் பிரிந்துபோகப்பண்ணும்" - இதனால் சத்துருக்களின் ஆலோசனை தாறுமாறாகும். அவர்களுக்குள் பிரிந்திருப்பார்கள். (2சாமு 16:15-17:23).

தாவீதை ஆட்சியிலிருந்து அகற்றி விட்டு, அப்சலோமை ராஜாவாக்க சதியாலோசனை பண்ணுகிறவர்கள் இரவும் பகலும் சுற்றித் திரிகிறார்கள். ஜனங்கள் மத்தியில் பொய்யை விதைக்கிறார்கள்.

4. மேசியாவை மறுதலித்தல் - (சங் 41:9; யோவான் 13:18-19; அப் 1:16)

சங் 55:12 என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல, அப்படியிருந்தால் சகிப்பேன்; எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினவன் என் பகைஞன் அல்ல, அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன்.

சங் 55:13 எனக்குச் சமமான மனுஷனும், என் வழிகாட்டியும், என் தோழனுமாகிய நீயே அவன்.

சங் 55:14 நாம் ஒருமித்து, இன்பமான ஆலோசனைபண்ணி, கூட்டத்தோடே தேவாலயத்துக்குப் போனோம்.

தீர்க்கதரிசன எண் - 43

"என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல, அப்படியிருந்தால் சகிப்பேன்; எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினவன் என் பகைஞன் அல்ல................" (சங் 55:12-14) - இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதிலும் கிறிஸ்துவிலும் நிறைவேறிற்று.

"எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினவன் என் பகைஞன் அல்ல", - இதற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம்.

1. அகித்தோப்பேல் தாவீதின் நண்பன் (2சாமு 16:15-17:23). இவன் பத்சேபாள், உரியா ஆகியோரின் உறவினன். தாவீது இவர்களுக்குச் செய்த பாவத்திற்காக அகித்தோப்பேல் தாவீதைப் பழிவாங்க விரும்பினான் (2சாமு 11-12; 1நாளா 27:33-34).

2. இயேசு கிறிஸ்துவை அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து காட்டிக் கொடுத்தான் (சங் 55:12-14; சங் 41:9; சங் 69:25-28; சங் 109:8; யோவான் 13:18; அப் 1:20-25).

யூதாஸ், அகித்தோப்பேல் ஆகிய இருவரைப் பற்றிய காரியங்கள்

1. அவர்களுடைய எஜமானரின் நண்பர்கள் (சங் 55:12).
2. இருவரும் தங்களுடைய பழைய நண்பர்களை வஞ்சித்து காட்டிக் கொடுத்தார்கள்.
3. இருவரையும் அவர்களுடைய எஜமானர்கள் நேசித்தார்கள்.
4. இருவரும் தங்களுடைய எஜமானருக்கு எதிராகத் தங்களை மேன்மைப் படுத்தினார்கள்.
5. அவர்களை நம்பிய எஜமானரை இருவரும் வஞ்சித்தார்கள்.
6. இருவரும் நம்பிக்கையில் சமமானவர்கள் (சங் 55:13).
7. இருவரும் வழிகாட்டியாகவும் நெருக்கமாகவும் இருந்தார்கள்.
8. இருவரும் தங்கள் எஜமானரிடம் நெருக்கமாக இருந்தார்கள்.
9. இருவரும் தங்கள் எஜமானரிடம் இன்பமான ஐக்கியம் வைத்திருந்தார்கள் (சங் 55:14).
10. இருவரும் தங்கள் எஜமானரை ஆராதித்தார்கள்.

55 அதிகாரம்

5. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டுமென்று இரண்டு விண்ணப்பங்கள்

சங் 55:15 மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக; அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக; அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது.

மரணம் (death) - מָוֶת - maw-veth - 4194

ஆ.பெ.சொ. - சாகுதல், மரித்தல், மரணம், சாவு, இறந்து போதல், சென்று போதல்

உயிரோடிருந்து (alive) (quick) சங் 55:15 חַי - khah'ee - 2416

பெயரடை - உயிரோடிருந்து, உற்பவ காலம், வயதான, ஜீவ, ஜீவனுள்ள, காட்டுமிருகம், பிராணி, ஊற்று, வாழ்கிற, பிழைக்கிற, தண்டு, கூடி, இரண, பச்சை, இம்மை, ஆயுசு, ஆசை, பிராணன் (யாக் 2:26)

ஆவியும், ஆத்துமாவும் நித்தியமானது. (1பேதுரு 3:4) தொடருதல் (quick) (சங் 55:15; சங் 124:3; எண் 16:30) உயிரோடிரு (alive) (ஆதி 43:7,27-28; எண் 16:33)

நரகம் (hell) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

பாதாளம் (hell) - ᾅδης - hadees - ஹாதேஸ் - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம், இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலியமாகத் தங்கும் இடம் - (யாக் 2:26). (1பேதுரு 3:4). (சங் 55:15; சங் 124:3; எண் 16:30); (ஆதி 43:7,27-28; எண் 16:33) - பரிசுத்த ஆவியானவர் மூலமாக, மனுஷர் உயிரோடே பாதாளத்திற்கு சென்றார்கள் என்பதை புரிந்து கொண்டான்.

6. துன்மார்க்கனிடமிருந்து விடுதலை கிடைக்குமென்று ஏழு அம்ச நம்பிக்கை

சங் 55:16 நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்; கர்த்தர் என்னை இரட்சிப்பார்.

சங் 55:17 அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்.

சங் 55:18 திரளான கூட்டமாய்க் கூடி என்னோடு எதிர்த்தார்கள்; அவரோ எனக்கு நேரிட்ட போரை நீக்கி, என் ஆத்துமாவைச் சமாதானத்துடன் மீட்டுவிட்டார்.

சங் 55:19 ஆதிமுதலாய் வீற்றிருக்கிற தேவன் கேட்டு, அவர்களுக்குப் பதிலளிப்பார்; அவர்களுக்கு மாறுதல்கள் நேரிடாததினால், அவர்கள் தேவனுக்குப் பயப்படாமற்போகிறார்கள். (சேலா)

துன்மார்க்கம் பாதாளத்திற்குப் போகும் போது, நான் போகும் இடம்

1. நான் தேவனை நோக்கிக் கூப்பிடுவேன் (சங் 55:16).
2. கர்த்தர் என்னை இரட்சிப்பார்.
3. அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் ஜெபிப்பேன் (சங் 55:17).
4. நான் தியானம் பண்ணி முறையிடுவேன்.
5. கர்த்தர் என் சத்தத்தைக் கேட்பார்.
6. என் ஆத்துமாவைச் சமாதானத்துடன் மீட்டுவிட்டார் (சங் 55:18).

55 அதிகாரம்

அவர்கள் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்துவதில்லை. தேவனுடைய நியாயத் தீர்ப்பு தங்கள் மீது வரும் என்னும் பயம் அவர்களுக்கு இல்லை.

7. துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள்

சங் 55:20 அவன் தன்னோடே சமாதானமாயிருந்தவர்களுக்கு விரோதமாய் தன் கையை நீட்டி, தன் உடன்படிக்கையை மீறி நடந்தான்.

சங் 55:21 அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப் போல மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம்; அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள்; ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்.

ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள்

1. தன்னோடே சமாதானமாயிருந்தவர்களுக்கு விரோதமாயிருத்தல்
2. தன் உடன்படிக்கையை மீறி நடத்தல் (சங் 15:4; 2தீமோ 3:3).
3. பொய் பேசுவான் (சங் 55:21; வெளி 21:8).
4. சமாதானத்தோடே இருப்பவர்களை அழிக்க வகைத் தேடுதல்
5. தன் நாவினால் ஏமாற்றவும், அழிக்கவும் செய்தல் (யாக் 3).

8. நீதிமானுடைய நம்பிக்கையின் மூன்று அம்சம்

சங் 55:22 கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

"கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு", - நாம் செய்ய வேண்டிய காரியம் இதுதான். கர்த்தர் மற்ற காரியங்களைக் கவனித்துக் கொள்வார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களும் வாக்குத் தத்தங்களும் நிபந்தனையுள்ளவை. நாம் செய்ய வேண்டியவற்றை நிறைவேற்றும் போது, கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர்.

"அவர் உன்னை ஆதரிப்பார்" - நமது எல்லா பிரச்சனைகளிலும் கர்த்தர் நமக்கு ஆதரவாயிருப்பார். தாவீதோடு இருந்தவர், நம்மோடும் இருப்பார். நமது பாரத்தையெல்லாம் கர்த்தர் மேல் வைத்து விடுவோம் (சங் 37:1-13; எபி 10:19-23; 1பேதுரு 5:7-8).

"நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" - தேவ பிள்ளைகளுக்கு கர்த்தர் தரும் ஆசீர்வாதமும் வாக்குத்தத்தமும் இதுதான். (சங் 55:22; சங் 15:5; சங் 21:7; நீதி 12:3) நமது ஜீவியத்தில் நாம் இதை நம்ப வேண்டும். (சங் 10:6; சங் 30:6; சங் 62:6).

9. துன்மார்க்கனின் முடிவு - (மத் 13:39-50; 25:46)

சங் 55:23 தேவனே, நீர் அவர்களை அழிவின் குழியில் இறங்கப் பண்ணுவீர்; இரத்தப்பிரியரும் சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதிவரையிலாகிலும் பிழைத்திருக்கமாட்டார்கள்; நானோ உம்மை நம்பியிருக்கிறேன்.

"அழிவின் குழி" - மரணத்தைக் குறிக்கும்.

"இரத்தப்பிரியரும் சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதிவரையிலாகிலும் பிழைத்திருக்க மாட்டார்கள்" - மனுஷனுடைய ஆயுசுநாள் அவனுடைய பாவத்தினால் குறைந்து போகும். எல்லோருமே மரிக்க வேண்டுமென்று தேவன் நியமித்திருக்கிறார். ஆனாலும் பக்திமானுக்கு ஆண்டவர் அவனுடைய ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுப்பார் (சங் 22:26; சங் 34:12-16; சங் 91:1-16; யாத் 20:12; 1இராஜா 3:14; நீதி 3:1-2,16; நீதி 9:11; நீதி 10:27; 1கொரி 11:30; 1பேதுரு 3:10-11).

56 அதிகாரம்

(பெலிஸ்தர் தாவீதைக் காத்தூரில் பிடித்தபோது யோனாத் ஏலம் ரிக்கோகீம் என்னும் வாத்தியத்தில் வாசிக்கும்படி தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்).

பன்னிரெண்டாவது நெருக்கத்தின் ஜெபம் - (1சாமு 21,27)

பொருளடக்கம்

1. இரண்டு விண்ணப்பங்கள் - ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்பதற்குப் பத்து காரணங்கள் - (56:1-7)
2. தேவனிடத்தில் வைத்துள்ள நம்பிக்கையின் எட்டு அம்சம் - (56:8-11)
3. பொருத்தனைகளும் துதிப்பதற்கான காரணங்களும் - (56:12-13)

1. இரண்டு விண்ணப்பங்கள் - ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்பதற்குப் பத்து காரணங்கள் - (சங் 55:1; 56:1; 57:1,7; 59:11; 86:1,12; 106:4; 108:5; 144:1)

சங் 56:1 தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான், நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்.

சங் 56:2 என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப் பார்க்கிறார்கள்; உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர்.

சங் 56:3 நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.

சங் 56:4 தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?

சங் 56:5 நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்; எனக்குத் தீங்கு செய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது.

சங் 56:6 அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள்; என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர்ந்துவருகிறார்கள்.

சங் 56:7 அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ? தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும்.

யோனாத் ஏலம் ரிக்கோகீம் வேதாகமத்தில் காணப்படும் நீளமான வார்த்தைகளுள் ஒன்று. மற்றொன்று மகேர் - சாலால் - அஷ் - பாஸ் (ஏசா 8:1)

தாவீதின் இரண்டு விண்ணப்பங்கள்

1. தேவனே, எனக்கு இரங்கும்
2. என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும் (சங் 56:8)

தாவீதிற்கு தேவனுடைய பதிலுரை ஏன் தேவைப்பட்டது என்பதற்குக் காரணங்கள்

1. மனுஷன் என்னை விழுங்கப் பார்க்கிறான் (சங் 56:1)
2. நாள்தோறும் போர் செய்து என்னை ஒடுக்குகிறான்
3. என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப் பார்க்கிறார்கள் (சங் 56:2)
4. எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர்
5. நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள் (சங் 56:5)
6. எனக்குத் தீங்கு செய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது
7. அவர்கள் ஏகமாய்க்கூடி பதிவிருக்கிறார்கள் (சங் 56:6)

56 அதிகாரம்

விழுங்கு (swallow) - שָׁאַף - shaw-af' - 7602

வினைச்சொல் - விழுங்கு, விழுங்கப்பார், உட்கொள்ளு, வாஞ்சி, வாரிஇறை, தீவிரி - "விழுங்கப்பார்க்கிறான்" - என் இரத்தத்தைக் குடிக்கப்பார்க்கிறான். மிருகங்கள் இறைதேடுவதைப் போன்ற அனுபவம். தேவனுடைய கோபத்தையும் மனுஷனுடைய கோபத்தையும் விளக்கும் சொல்(சங் 56:1-2; சங் 57:3; யோபு 5:5; ஏசா 42:14; எசே 36:3; ஆமோ 8:4).

நாம் பயப்படத் தேவையற்ற காரியங்கள்

1. மாம்சம் (சங் 56:4)
2. ஜனங்கள் (எண் 14:9)
3. விக்கிரகங்கள் (நியா 6:10; 2இராஜா 17:35-39)
4. பொல்லாப்பு (சங் 23:4)
5. யுத்தம் (சங் 27:3)
6. மனுஷன் (மத் 10:28; லூக்கா 12:5)
7. பாடுகள் (வெளி 2:10)

நாம் பயப்பட வேண்டிய காரியங்கள்

1. தேவன் (உபா 6:13,24; மத் 10:28)
2. தாய் தகப்பன் (லேவி 19:3)
3. இராஜாக்கள் (நீதி 24:21)
4. அதிகாரமுள்ளவர்கள் (நீதி 24:21)
5. எஜமான்கள் (1பேதுரு 2:18)

"எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது" - சவுலும் அவனுடைய மனுஷரும் தொடர்ந்து தாவீதுக்கு எதிராக சதி பண்ணினார்கள் (1சாமு 21,1சாமு 27).

2. தேவனிடத்தில் வைத்துள்ள நம்பிக்கையின் எட்டு அம்சம்

சங் 56:8 என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?

சங் 56:9 நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.

சங் 56:10 தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.

சங் 56:11 தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?

எண்ணு (tellest) - סָפַר - saw-far' - 5608

வினைச்சொல் - எண்ணிக்கொள், எண்ணு, எண்ணியிரு, கணக்கிடு, எழுத்தாளர், ஆலோசனைபண்ணு, வேதபாரகன், எழுதுகிறவர், எண்ணப்படு, விவரி, சொல்லு, விவரித்துச் சொல்லு, அறிவி, பிரஸ்தாபப்படுத்து, தெரிவி, தொகையிடு, விவரமாய்ச் சொல், பிரஸ்தாபமாக தெரிவி - எழுது (to write or record) (சங் 56:8; சங் 48:12; ஆதி 15:5; 2நாளா 2:2).

"என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்" - பழங்காலத்தில் ஒருவர் மரிக்கும்போது, அவருக்காக அழுவோரின் கண்ணீரை குப்பிகளில் பிடித்து சேர்த்து வைத்து, மரித்தோரின் கல்லறையில் வைப்பார்கள். பெர்சிய ஆசாரியர்கள் துக்கிப்போரின் கண்ணீரை துணியில் சேர்த்து, குப்பியில் பிழிந்து பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். எந்த மருந்தும் நோயைக் குணப்படுத்தவில்லை என்றாலும், இந்தக் கண்ணீர் துளி மரித்தோரைக் கூட பிழைக்க வைக்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

56 அதிகாரம்

நமது ஜீவியத்தில் எல்லா பகுதியையும் தேவன் கணக்கில் வைப்பதாக தாவீது நம்பினான்.

தாவீதின் நம்பிக்கை (சங் 56:8-11)

1. என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர்
2. என் கண்ணீரைத் தம்முடைய துருத்தியில் வைப்பார்
3. என் கண்ணீர்கள் அவருடைய கணக்கில் இருக்கிறது
4. நான், தேவனை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்
5. தேவன் என் பட்சத்தில் இருக்கிறார்
6. தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்
7. நான், தேவனை நம்பியிருக்கிறேன்
8. நான், மனுஷனுக்குப் பயப்பட மாட்டேன்

3. பொருத்தனைகளும் துதிப்பதற்கான காரணங்களும்

சங் 56:12 தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது; உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன்.

சங் 56:13 நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?

"தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது" - தேவனுக்கு ஊழியக்காரனாக இருக்க வேண்டுமென்பதே தாவீதின் பொருத்தனை. தனது ஜீவனை கர்த்தரிடத்தில் முழுவதுமாக அர்ப்பணித்து அவரைத் துதித்தான்.

"ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே" - உயிர்த்தெழுந்த ஜீவியம். தாவீது இயற்றிய மிக்தாம் என்னம் சங்கீதங்கள் ஆறு (சங் 16; சங் 56-60). இவை அனைத்திலும் மரணம், உயிர்த்தெழுதல், ஆபத்திலிருந்து விடுதலை, ஆகியவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

1. கிறிஸ்துவின் ஆத்துமா பாதாளத்திலிருந்து மீட்கப்படும். அவருடைய சரீரம் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும் (சங் 16:10-11)
2. தாவீது மரணத்திலிருந்து மீட்கப்பட்டு உயிர்த்தெழுந்த ஜீவியத்தில் நடந்தான் (சங் 56:13)
3. தாவீதைத் தேவன் அவனுடைய விரோதிகளிடமிருந்து மீட்டார் (சங் 57:3)
4. கர்த்தர் நீதிமானைத் துன்மார்க்கனின் மோசமான முடிவிலிருந்து பாதுகாக்கிறார் (சங் 58:7-11)
5. தாவீதைத் தேவன் ஆபத்திலும் நெருக்கத்திலும் பாதுகாத்தார் (சங் 59:16)
6. தேவன் இஸ்ரவேலை அந்திகிறிஸ்து விடமிருந்து ஏதோமிலும் மோவாபிலும் 3 1/2 வருஷங்கள் பாதுகாப்பார் (சங் 60:5-12; வெளி 12:6,14).

57 அதிகாரம்

(தாவீது சவுலுக்குத் தப்பியோடி கெபியில் ஒதுங்குகையில் தனக்கு நஷ்டம் நேரிடாதபடி அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்).

பதிமூன்றாவது நெருக்கத்தின் ஜெபம் - (1சாமு 24:3)

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் - நெருக்கத்தின் எட்டு அம்சம் - (57:1-6)
2. தேவனைத் துதிக்க வேண்டும் என்று ஏழு அம்ச தீர்மானம் - இரண்டு காரணங்கள் - இரண்டு விண்ணப்பங்கள் - (57:7-11)

1. நான்கு விண்ணப்பங்கள் - நெருக்கத்தின் எட்டு அம்சம் - (சங் 7:1; 17:1; 19:12; 25:16; 26:1; 27:7; 28:3)

சங் 57:1 எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்; உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது; விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.

சங் 57:2 எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்.

சங் 57:3 என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்; (சேலா.) தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார்.

சங் 57:4 என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது; தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன்; அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது.

சங் 57:5 தேவனே வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக.

சங் 57:6 என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள்; என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று; எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந்தார்கள். (சேலா)

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என்மேல் இரக்கமாயிரும் (சங் 57:1)
2. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும் (சங் 57:5,11)
3. உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக (சங் 57:5,சங் 57:11)

தேவன் தனது விண்ணப்பங்களுக்குப் பதில் கொடுப்பார் என்று தாவீது நம்பியதற்குக் காரணங்கள்

1. என் ஆத்துமா உம்மை அண்டிக் கொள்ளுகிறது (சங் 57:1)
2. நீரே என் அடைக்கலம்
3. உம்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன் (சங் 57:2)
4. நிந்தனையிலிருந்து, தேவன் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி என்னை இரட்சிப்பார் (சங் 57:3)
5. தேவன் தமது கிருபையையும், சத்தியத்தையும் அனுப்புவார்
6. என் ஆத்துமா சத்துருக்களின் நடுவிலிருக்கிறது (சங் 57:4)
7. என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள் (சங் 57:6)
8. என் ஆத்துமா தொய்ந்து போயிற்று
9. உமது கிருபை வான பரியந்தம் எட்டுகிறது (சங் 57:10)

57 அதிகாரம்

10. உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது

விக்கினங்களுக்கான ஆதாரங்கள்

1. விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன் (சங் 57:1)
2. நிந்திக்கிறவர்கள் என்னை விழுங்கப் பார்க்கிறார்கள் (சங் 57:3)
3. தீயை இறைக்கிற மனுபுத்திரர்கள் தங்கள் பற்கள் என்னும் ஈட்டிகளாலும், அம்புகளாலும் என்னைத் துன்புறுத்துகிறார்கள். தங்கள் நாவு என்னும் கருக்கான பட்டயத்தினால் என்னை வெட்டிப் போடுகிறார்கள் (சங் 57:4)
4. என் ஆத்துமாவுக்கு கண்ணி வைக்கிறார்கள் (சங் 57:6)

தீர்க்கதரிசன எண் - 44

"என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்" (சங் 57:3) - இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதின் மீட்புக்களில் நிறைவேறிற்று.

"எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந்தார்கள்" - வனாந்தரத்தில் குழிகளை வெட்டி, அவற்றில் விலங்குகளை விழவைத்து பிடிப்பார்கள். சவுல் தாவீதைப் பிடிக்க வகை பார்த்தான். ஆனால் அவன் தான் வெட்டிய குழியிலேயே சிக்கிக் கொண்டான். என்கேதியிலுள்ள குகையில் சவுல் சிக்கிய போது தேவ மனுஷனாகிய தாவீது அவனைக் கொல்லாமல் அவன் ஜீவனைத் தப்பவிட்டான் (1சாமு 24).

2. தேவனைத் துதிக்க வேண்டும் என்று ஏழு அம்ச தீர்மானம் - இரண்டு காரணங்கள் - இரண்டு விண்ணப்பங்கள்

சங் 57:7 என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம்பண்ணுவேன்.

சங் 57:8 என் மகிமையே, விழி; வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்; அதிகாலையில் விழித்துக்கொள்வேன்.

சங் 57:9 ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்; ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங் 57:10 உமது கிருபை வானபரியந்தமும், உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது.

சங் 57:11 தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக.

தாவீது தேவனைப் பாடி கீர்த்தனம் பண்ணுவதன் அம்சம்

1. என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது (சங் 57:7; சங் 108:1)
2. நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன் (சங் 57:7; சங் 108:1)
3. என் மகிமையே, விழித்தெழு(சங் 57:8; சங் 108:1; சங் 16:9; அப் 2:26)
4. வீணையே, சுரமண்டலமே விழியுங்கள் (சங் 57:8; சங் 103:2)
5. நான் அதிகாலையில் விழித்துக் கொள்வேன் (சங் 57:8; சங் 108:2)
6. ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன் (சங் 57:9; சங் 108:3)

சங்கீதம் - தொகுப்புரை

57 அதிகாரம்

7. ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன் (சங் 57:9; சங் 108:3; சங் 57:7-11; சங் 108:1-5)

"உமது கிருபை வானபரியந்தமும், உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தமும் எட்டுகிறது" - தாவீது தேவனைத் துதிப்பதற்கு இதுதான் காரணம்.

தேவனுடைய அளவற்ற இரக்கமும் ஐசுவரியமும் மனுஷருக்கு பரலோகத்திலிருந்து வருகிறது (சங் 57:3).

"தேவனே, வானங்களுக்குமேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக" - இக்காரியத்தை வலியுறுத்தவதற்காக இந்த வசனம் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது (சங் 57:5,11; சங் 108:5).

சங்கீதம் - தொகுப்புரை

58 அதிகாரம்

(தான் கெட்டுப்போகாதபடிக்கு அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்)

ஐந்தாவது நியாயத்தீர்ப்பின் சங்கீதம்

பொருளடக்கம்

1. ஐந்து விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள் - (58:1-8)
2. துன்மார்க்கனின் வருங்கால நியாயத்தீர்ப்பு - (58:9-11)

1. ஐந்து விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள்

சங் 58:1 மவுனமாயிருக்கிறவர்களே, நீங்கள் மெய்யாய் நீதியைப் பேசுவீர்களோ? மனு புத்திரரே, நியாயமாய்த் தீர்ப்புசெய்வீர்களோ?

சங் 58:2 மனதார நியாயக்கேடு செய்கிறீர்கள்; பூமியிலே உங்கள் கைகளின் கொடுமையை நிறுத்துக் கொடுக்கிறீர்கள்.

சங் 58:3 துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் பேதலிக்கிறார்கள்; தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் பொய் சொல்லி வழிதப்பிப்போகிறார்கள்.

சங் 58:4 சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் அவர்களில் இருக்கிறது.

சங் 58:5 பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாதபடிக்குத் தன் காதை அடைக்கிற செவிட்டு விரியனைப் போல் இருக்கிறார்கள்.

சங் 58:6 தேவனே, அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும்; கர்த்தாவே, பாலசிங்கங்களின் கடைவாய்ப்பற்களை நொறுக்கிப்போடும்.

சங் 58:7 கடந்தோடுகிற தண்ணீரைப் போல் அவர்கள் கழிந்துபோகட்டும்; அவன் தன் அம்புகளைத் தொடுக்கும் போது அவைகள் சின்னபின்னமாய்ப் போகக்கடவது.

சங் 58:8 கரைந்துபோகிற நத்தையைப் போல் ஒழிந்துபோவார்களாக; ஸ்திரீயின் முதிராப் பிண்டத்தைப்போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக.

"அல்தஷ்கேத்" - என்னும் வாத்தியத்தைப் பற்றிய குறிப்பு நான்கு சங்கீதங்களில் வருகிறது(சங் 57; சங் 58; சங் 59; சங் 75).

துன்மார்க்கரின் கிரியைகள்

1. துன்மார்க்கர்கள், மனதார நியாயக்கேடு செய்கிறார்கள்(சங் 58:2)
2. பூமியிலே தங்கள் கைகளின் கொடுமையை நிறுத்துக் கொடுக்கிறார்கள்
3. துன்மார்க்கர்கள் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் பேதலிக்கிறார்கள் (சங் 58:3)
4. அவர்கள், பிறந்தது முதல் வழி தப்பிப்போகிறார்கள்.
5. தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லுகிறார்கள்.6. துன்மார்க்கர்கள், விஷமுள்ள சர்ப்பத்திற்கு ஒப்பானவர்கள்(சங் 58:4)
7. செவிட்டு விரியனைப் போல் இருக்கிறார்கள்

"சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் அவர்களில் இருக்கிறது" - துன்மார்க்கரின் வார்த்தைகள் விஷத்தன்மை உடையவை.

58 அதிகாரம்

தாவீதின் விண்ணப்பங்கள்

1. துன்மார்க்கர் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும்
2. பாலசிங்கங்களின் கடைவாய்ப் பற்களை நொறுக்கிப் போடும்
3. கடந்தோடுகிற தண்ணீரைப்போல் அவர்கள் கழிந்து போகட்டும் (சங் 58:7)
4. அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்னபின்னமாய் போகட்டும்
5. கரைந்து போகிற நத்தையைப் போல் ஒழிந்து போகட்டும் (சங் 58:8)
6. "பாலசிங்கங்களின் கடைவாய்ப்பற்களை நொறுக்கிப்போடும்" - பாலசிங்கங்கள் சவுலையும் அவனுடைய மனுஷரையும் குறிக்கும்.

சத்துருக்களின் அழிவு

1. கடைவாய்ப்பற்கள் நொறுக்கப்பட்ட சிங்கத்தைப் போல், துன்மார்க்கன் வலிமையற்றவனாகி விடுவான் (சங் 58:6)
2. பாலைவன மணலில் உறுஞ்சப்படுகிற தண்ணீரைப்போலவும், சூரிய ஒளியில் ஆவியாகிற தண்ணீரைப் போலவும் ஆகிவிடுவார்கள் (சங் 58:7)
3. தொடுப்பதற்கு பயன்படாத சின்ன பின்னமாய்ப் போன அம்புகளைப் போலிருப்பார்கள்
4. கரைந்து போகிற நத்தையைப் போல் ஒழிந்து போவார்கள் (சங் 58:8)
5. ஸ்திரீயின் முதிராப் பிண்டத்தைப் போல் சூரியனைக் காணாதிருப்பார்கள்

2. துன்மார்க்கனின் வருங்கால நியாயத்தீர்ப்பு

சங் 58:9 முள் நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே பச்சையானதையும் எரிந்துபோனதையும் அவர் சுழல்காற்றினால் அடித்துக் கொண்டு போவார்.

சங் 58:10 பழிவாங்குதலை நீதிமான் காணும் போது மகிழுவான்; அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான்.

சங் 58:11 அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.

தீர்க்கதரிசன எண் - 45

"முள் நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே பச்சையானதையும் எரிந்து போனதையும் அவர் சுழல்காற்றினால் அடித்துக் கொண்டு போவார்............" (சங் 58:9-11) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"முள் நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே" - பாலஸ்தீனத்தில் ஏராளமான முள்மரங்கள் உள்ளன. அவற்றை விறகுகளாகப் பயன்படுத்தி தீ எரித்தார்கள். அவை எளிதில் பற்றிக் கொள்ளும். ஆனால் விரைவில் அணைந்து போகும் (சங் 58:9; சங் 118:12; 2சாமு 23:6-7; பிர 7:6; ஏசா 9:18; ஏசா 10:17; நாகூம் 1:10). துன்மார்க்கரும் இது போலவே விரைவில் அழிந்து போவார்கள் (ஏசா 33:12). தேவன் பூமியில் கலகக்காரர் அனைவரையும் அகற்றிய பிறகு இந்த வசனப் பகுதி நிறைவேறும்.

"அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான்" - அர்மெகதோன் யுத்தத்தில் துன்மார்க்கன் அழிவான். அவன் இரத்தம் ஆறு போல ஓடும் (வெளி 14:18-20; வெளி 16:13-16; வெளி 19:11-21; எசே 38:18-23; எசே 39:17-21). இந்த யுத்தத்தில் நீதிமான் துன்மார்க்கனுடைய இரத்தத்தின் மீது நடக்க வேண்டும்.

58 அதிகாரம்

"அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ் செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்" - அர்மெகதோன் யுத்தத்தில் துன்மார்க்கனுடைய அழிவைக் காண்பவர்கள், தேவன் நீதிபரர் என்றும், நீதிமானுக்குப் பலன் உண்டென்றும் கூறுவார்கள் (மத் 13:39-43; மத் 25:31-46).

59 அதிகாரம்

(சவுல் தாவீதைக் கொல்லுதற்காக ஏவலாட்களை அனுப்பினபோது அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க அவன் பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்.)

ஆறாவது நியாயத்தீர்ப்பின் சங்கீதம் - (1சாமு 19:11)

பொருளடக்கம்

1. நியாயத்தீர்ப்புக்காக ஏழு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனைப்பற்றிய பத்து அம்ச விளக்கம் - (59:1-7)
2. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் ஆறு அம்சம் - (59:8-10)
3. நியாயத்தீர்ப்புக்காக பத்து விண்ணப்பங்கள் - ஆறு காரணங்கள் - (59:11-15)
4. தேவனைத் துதிப்பதின் ஏழு அம்சங்கள் - (59:16-17)

1. நியாயத்தீர்ப்புக்காக ஏழு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனைப்பற்றிய பத்து அம்ச விளக்கம் - (சங் 7:11; 10:1; 17:7; 53:3; 55:1,20; 58:1; 74:3)

சங் 59:1 என் தேவனே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்; என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும்.

சங் 59:2 அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவித்து, இரத்தப்பிரியரான மனுஷருக்கு என்னை விலக்கி இரட்சியும்.

சங் 59:3 இதோ, என் பிராணனுக்குப் பதிவிருக்கிறார்கள்; கர்த்தாவே, என்னிடத்தில் மீறுதலும் பாவமும் இல்லாதிருந்தும், பலவான்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடுகிறார்கள்.

சங் 59:4 என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும், ஓடித்திரிந்து யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள்; எனக்குத் துணை செய்ய விழித்து என்னை நோக்கிப்பாரும்.

சங் 59:5 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலின் தேவனே, நீர் சகல ஜாதிகளையும் விசாரிக்க விழித்தெழும்பும்; வஞ்சகமாய்த் துரோகஞ் செய்கிற ஒருவருக்கும் தயை செய்யாதேயும். (சேலா.)

சங் 59:6 அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.

சங் 59:7 இதோ, தங்கள் வார்த்தைகளைக் கக்குகிறார்கள்; அவர்கள் உதடுகளில் பட்டயங்கள் இருக்கிறது, கேட்கிறவன் யார் என்கிறார்கள்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும் (சங் 59:1)
2. என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கும்
3. அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவியும் (சங் 59:2)
4. இரத்தப்பிரியரான மனுஷருக்கு என்னை விலக்கி இரட்சியும்
5. எனக்குத் துணை செய்ய விழியும் (சங் 59:43)
6. என்னை நோக்கிப் பாரும் (சங் 59:4)
7. சகல ஜாதிகளையும் விசாரிக்க விழித்தெழும்பும் (சங் 59:5)
8. வஞ்சகமாய் துரோகஞ் செய்கிற ஒருவருக்கும் தயை செய்யாதேயும்
9. அவர்களைக் கொன்று போடாதேயும். என் ஜனங்கள் மறந்து போவார்கள் (சங் 59:11)
10. உமது வல்லமையினால் அவர்களைச் சிதறடியும்

59 அதிகாரம்

11. அவர்களைத் தாழ்த்திப்போடும்
12. அவர்கள், தங்கள் பெருமையில் அகப்படுவார்களாக (சங் 59:12)
13. தாங்கள் இட்ட சாபமும், சொல்லிய பொய்யும் ஆகிய இவைகளினிமித்தம் அகப்படுவார்களாக
14. உம்முடைய உக்கிரமத்திலே அவர்களை நிர்மூலமாக்கும் (சங் 59:13)
15. இனி இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும்
16. தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அறியும் பொருட்டு நிர்மூலமாக்கும்
17. அவர்கள் சாயங்காலத்தில் திரும்பி வருவார்களாக (சங் 59:14)
18. அவர்கள், நாய்களைப் போல ஊளையிடுவார்களாக
19. அவர்கள் ஊரைச் சுற்றித் திரிவார்களாக
20. அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து கொண்டிருப்பார்களாக
21. அவர்கள் திருப்தியடையாமல் முறுமுறுத்துக் கொண்டிருப்பார்களாக (சங் 59:15)

"அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்" - இரவு வேளையில் நாய்கள் இறைதேடுவதற்கு ஊரைச் சுற்றித்திரிவது போன்று, துன்மார்க்கரும் ஆதரவற்றவர்களை வஞ்சிப்பதற்கு சுற்றித்திரிகிறார்கள்.

துன்மார்க்கரின் பாவங்கள்

1. நீதிமான்களுக்கு விரோதிகளாய் இருப்பார்கள் (சங் 59:1)
2. நீதிமான்களுக்கு எதிராக யுத்தம் பண்ணுவார்கள்
3. அக்கிரமம் செய்வார்கள் (சங் 59:2)
4. தங்கள் ஆதாயத்திற்காக கொலை செய்வார்கள்
5. மற்றவர்களை அழிப்பதற்குப் பொய் சொல்லி வகை தேடுவார்கள் (சங் 59:3)
6. அப்பாவிகளை அழிப்பார்கள்
7. அப்பாவிகளைக் கொள்ளையிடுவார்கள் (சங் 59:4)
8. சூறையாடி, ஆதாயம் சேர்க்க வகைத்தேடுவார்கள் (சங் 59:6)
9. அவர்கள், தங்கள் வார்த்தைகளைக் கக்குகிறார்கள் (சங் 59:7)
10. அவர்கள் உதடுகளில் பட்டயங்கள் (பாவம்) இருக்கிறது

2. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் ஆறு அம்சம்

சங் 59:8 ஆனாலும் கர்த்தாவே, நீர் அவர்களைப் பார்த்து நகைப்பீர்; புறஜாதிகள் யாவரையும் இகழுவீர்.

சங் 59:9 அவன் வல்லமையை நான் கண்டு, உமக்குக் காத்திருப்பேன்; தேவனே எனக்கு உயர்ந்த அடைக்கலம்.

சங் 59:10 என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார்; தேவன் என் சத்துருக்களுக்குவரும் நீதிசரிக்கட்டுதலை நான் காணும்படி செய்வார்.

தீர்க்கதரிசன எண் - 46

"நீர் அவர்களைப் பார்த்து நகைப்பீர்; புறஜாதிகள் யாவரையும் இகழுவீர்" (சங் 59:8) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. நியாயத்தீர்ப்பு நாளில் துன்மார்க்கரைப் பழிவாங்கும் போது இது நிறைவேறும் (வெளி 20:11-15; நீதி 1:24-27).

59 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 47

"என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார்; தேவன் என் சத்துருக்களுக்குவரும் நீதிசரிக்கட்டுதலை நான் காணும்படி செய்வார்" (சங் 59:10) - தாவீது தன் விரோதிகளைத் தோல்வியுறச் செய்தபோது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

3. நியாயத்தீர்ப்புக்காக பத்து விண்ணப்பங்கள் - ஆறு காரணங்கள்

சங் 59:11 அவர்களைக் கொன்றுபோடாதேயும், என் ஜனங்கள் மறந்துபோவார்களே; எங்கள் கேடகமாகிய ஆண்டவரே, உமது வல்லமையினால் அவர்களைச் சிதறடித்து, அவர்களைத் தாழ்த்திப்போடும்.

சங் 59:12 அவர்கள் உதடுகளின் பேச்சு அவர்கள் வாயின் பாவமாயிருக்கிறது; அவர்கள் இட்ட சாபமும் சொல்லிய பொய்யும் ஆகிய இவைகளினிமித்தம் தங்கள் பெருமையில் அகப்படுவார்களாக.

சங் 59:13 தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அவர்கள் அறியும்பொருட்டு, அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும்; இனி இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும். (சேலா.)

சங் 59:14 அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து, நாய்களைப்போல ஊளையிட்டு, ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.

சங் 59:15 அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து திருப்தியடையாமல், முறுமுறுத்துக்கொண்டிருப்பார்கள்.

"அவர்களைக் கொன்றுபோடாதேயும், என் ஜனங்கள் மறந்துபோவார்களே" - தேவன் துன்மார்க்கரைக் கொஞ்சம் கொஞ்சமாக அழிப்பார். அவர்களுடைய அழிவு ஜனங்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்.

4. தேவனைத் துதிப்பதின் ஏழு அம்சங்கள்

சங் 59:16 நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்.

சங் 59:17 என் பெலனே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்; தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும், கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார்.

தாவீது கர்த்தரைப் புகழ்ந்து கூறும் காரியங்கள் (சங் 59:16-17)

1. நான், உம்முடைய வல்லமையைப் பாடுவேன்
2. காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்
3. நீர் என் தஞ்சம்
4. நெருக்கங்களின் போது நீரே என் அடைக்கலம்
5. என் பெலனே, உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்
6. தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலம்
7. நீரே, என் கிருபையுள்ள தேவன்

60 அதிகாரம்

(தாவீது மெசொபொத்தாமிய தேசத்துச் சீரியரோடும், சோபா தேசத்துச் சீரியரோடும் யுத்தம் பண்ணினபோது, யோவாப் திரும்பி உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பன்னீராயிரம்பேரை வெட்டினபோது, அவன் சாட்சியை விளக்குவிக்கும் ஆறு நரம்புக் கின்னரத்திலே போதிப்பதற்காகப் பாடினதும் இராகத்தலைவனுக்கு ஒப்புவித்ததுமான மிக்தாம் என்னும் சங்கீதம்)

பதினொன்றாவது போதக சங்கீதம் - யுத்தத்தில் தேவனுடைய உதவியைப் பற்றிய உபதேசம் - (2சாமு 8:3-13)

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் - இஸ்ரவேலோடு தேவன் நடப்பித்த எட்டு பழைய காரியங்கள் - (60:1-5)
2. தேவனுடைய பத்து அம்ச பொருத்தனை - உபத்திரவ காலத்தில் இஸ்ரவேலைப் பற்றியும் இஸ்ரவேலின் அண்டை நாடுகள் பற்றியும் தீர்க்கதரிசனம் - (60:6-8)
3. உபத்திரவகாலத்தில் இஸ்ரவேலின் வருங்கால அடைக்கலம் - (60:9-10)
4. இஸ்ரவேலின் வருங்கால ஜெயம் -புறஜாதியார் மீது இறுதி வெற்றி - (60:11-12)

1. நான்கு விண்ணப்பங்கள் - இஸ்ரவேலோடு தேவன் நடப்பித்த எட்டு பழைய காரியங்கள் - (சங் 9:19; 17:13; 28:3; 36:10; 39:12; 54:1; 55:1)

சங் 60:1 தேவனே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களை சிதறடித்தீர், எங்கள் மேல் கோபமாயிருந்தீர்; மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பியருளும்.

சங் 60:2 பூமியை அதிரப்பண்ணி, அதை வெடிப்பாக்கினீர்; அதின் வெடிப்புகளைப் பொருந்தப்பண்ணும்; அது அசைகின்றது.

சங் 60:3 உம்முடைய ஜனங்களுக்குக் கடினமான காரியத்தைக் காண்பித்தீர்; தத்தளிப்பின் மதுபானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்.

சங் 60:4 சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக, உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர் (சேலா).

சங் 60:5 உமது பிரியர் விடுவிக்கப்படும்படி, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எனக்குச் செவி கொடுத்தருளும்.

"ஆறு நரம்புக் கின்னரத்திலே" - இது சாட்சி கூறும் சங்கீதம். எண் 9:5-14 - இல் கூறப்பட்டுள்ள இரண்டாம் பஸ்காவைக் குறிக்கிறது. (2நாளா 30) - இது போன்ற மற்ற சங்கீதம் (சங் 79).

"மொசொபொத்தாமிய தேசத்துச் சீரியரோடும்" **(Aram-naharaim)** - ஐபிராத்து, டைகிரிஸ் ஆகிய இரண்டு நதிகளுக்கு இடையிலுள்ள சீரியா அல்லது ஆராம் நகராயீம் (1நாளா 18:5).

"சோபா தேசத்துச் சீரியரோடும்" **(Aram-zobah)** - காவல்காரரான சீரியர் **(Coelesyria)** (1நாளா 18:3).

பன்னீராயிரம் பேர் - தாவீதும் அபிசாயும் 18,000 பேரை வெட்டினார்கள். (2சாமு 8:13; 1நாளா 18:12) யோவாப் 12,000 பேரை (1இராஜா 11:15-16). தாவீது சீரியரில் 22,000 பேரை வெட்டினான்.

தேவனுடைய கிரியைகள்

1. நீர் எங்களைக் கைவிட்டீர் (சங் 60:1,10)
2. எங்களைச் சிதறடித்தீர் (சங் 60:1)
3. எங்கள் மேல் கோபமாயிருந்தீர்
4. பூமியை அதிரப்பண்ணீர் (சங் 60:2)
5. அதை வெடிப்பாக்கினீர்
6. ஜனங்களுக்குக் கடினமான காரியத்தைக் காண்பித்தீர் (சங் 60:3)

60 அதிகாரம்

7. தத்தளிப்பின் மதுபானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்

8. உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர் (சங் 60:4)

9. பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினீர் (சங் 60:6)

10. சேனைகளோடே புறப்படாமல், எங்களைத் தள்ளிவிட்டீர் (சங் 60:10)

"தேவனே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களைச் சிதறடித்தீர்" - தாவீது வடக்குப் பகுதியில் சீரியரோடு யுத்தம் பண்ணினான். அப்போது ஏதோமியர் தெற்குப் பகுதியில் இஸ்ரவேலை முறிய அடித்தார்கள். இந்த சூழ்நிலையில் "ஏன் எங்களைக் கைவிட்டீர்" என்று பாடுகிறான். தாவீது யோவாபை அனுப்பி ஏதோமியரை அழித்தான். அவன் 12,000 பேரை வெட்டினான் (1இராஜா 11:15-16).

தாவீதின் விண்ணப்பங்கள்

1. மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பியருளும் (சங் 60:1)

2. பூமியின் வெடிப்புக்களைப் பொருந்தப் பண்ணும் (சங் 60:2)

3. உமது வலதுகரத்தினால் இரட்சித்தருளும் (சங் 60:5)

4. எனக்குச் செவிகொடுத்தருளும்

5. இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும் (சங் 60:11)

"தத்தளிப்பின் மதுபானத்தை எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்" - தென்பகுதியில் ஏதோமியர் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணியதை இந்தவசனம் குறிப்பிடுகிறது.

"சத்தியத்தினிமித்தம் ஏற்றும்படியாக, உமக்குப் பயந்து நடக்கிறவர்களுக்கு ஒரு கொடியைக் கொடுத்தீர் (சேலா)" - தாவீது தோல்வியின் அனுபவத்திலிருந்து (சங் 60:1-3) இப்பொழுது வெற்றியின் அனுபவத்திற்கு (சங் 60:4-8) வருகிறான். தோல்வி ஏற்பட்ட இடத்தில் தாவீது வெற்றிக் கொடி பிடிக்க விரும்புகிறான். இதற்காக ஏதோமியரை அழிக்க யோவாபை அனுப்புகிறான். மேசியாவே இஸ்ரவேலரின் ஜெயக்கொடி (ஏசா 11:10-16).

சத்துருக்களிடமிருந்து நம்மை விடுவிப்பதற்காகவே கர்த்தர் நமக்கு ஜெயக் கொடியைக் கொடுத்திருக்கிறார் (சங் 60:4). இஸ்ரவேல் சத்துருக்களிடமிருந்து இரட்சிக்கப்படும். இஸ்ரவேலின் ஜெயக் கொடியாகிய கிறிஸ்து மூலமாக ஜெயம் வரும் (ஏசா 11:10-16; சக 14;வெளி 19:11-21).

2. தேவனுடைய பத்து அம்ச பொருத்தனை - உபத்திரவ காலத்தில் இஸ்ரவேலைப் பற்றியும் இஸ்ரவேலின் அண்டை நாடுகள் பற்றியும் தீர்க்கதரிசனம் - (சங் 108:7-9)

சங் 60:6 தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன்; சீகேமைப் பங்கிட்டு, சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்து கொள்ளுவேன்.

சங் 60:7 கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது, எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்.

சங் 60:8 மோவாப் என் பாதபாத்திரம், ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்துபோடுவேன்; பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரித்துக்கொள்.

60 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 48

"தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன்............" (சங் 60:6-12) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. உபத்திரவக் காலத்தில் நிறைவேறும் (சங் 108:7-13).

தேவன் விளம்பின காரியங்கள்

1. நான் களிகூருவேன் (சங் 60:6)
2. சீகேமைப் பங்கிடுவேன்
3. சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்து கொள்ளுவேன்
4. கீலேயாத் என்னுடையது (சங் 60:7)
5. மனாசேயும் என்னுடையது
6. எப்பிராயீம் என் தலையின் பெலன்
7. யூதா என் நியாயப்பிரமாணிகன்
8. மோவாப் என் பாதபாத்திரம் (சங் 60:8)
9. ஏதோமின் மேல் என் பாதரட்சையை எறிந்து போடுவேன்
10. பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரித்துக்கொள்

"களி கூருவேன்" - கர்த்தர் களிகூருவார். தமது ஜனம் தம்மிடத்தில் திரும்பி வரும்போது, அவர்களுடைய பிதாக்களிடத்தில் தாம் பண்ணிய உடன்படிக்கை நிறைவேறும் போது கர்த்தர் களிகூருவார் (ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 66:7-8; சக 12:10-13:1; சக 14:1-21; ரோமர் 11:25-29).

"சீகேம் - சுக்கோத்" - சீகேம் சமாரியாவிலும், சுக்கோத் யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள கீலேயாத்திலும் உள்ளது. எப்பிராயீமும் யூதாவும் யோர்தான் நதியின் மேற்குப் பகுதியில் உள்ளது (சங் 108:8). ஏதோமும் மோவாபும் சவக்கடலின் தெற்கிலும் கிழக்கிலும் உள்ளன.

அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் இந்த இடங்களெல்லாம் முக்கியமானவை. இஸ்ரவேலர் அந்தி கிறிஸ்துவிற்குத் தப்பி, தங்கள் பாதுகாப்பிற்காக ஏதோமுக்கும் மோவாபுக்கும் ஓடிப் போவார்கள்.

"மோவாப் என் பாதபாத்திரம்" - கால்களைக் கழுவப் பயன்படும், மிகவும் தாழ்மையான பாத்திரம் (சங் 108:9).

"ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிந்துபோடுவேன்" - ஒரு பொருள் கிரயத்திற்கு வாங்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கும் மரபு வழக்கு. விற்பவர் வாங்குபவருக்கு, இஸ்ரவேலின் மூப்பருக்கு முன்பாகத் தன் பாதரட்சையைக் கழற்றித் தருவார். வாங்கியவருக்கே அந்தப் பொருள் உரியது என்பது இதன் அர்த்தம் (சங் 60:8; சங் 108:9; ரூத் 4:7). கர்த்தர் ஏதோமை வாங்கியிருக்கிறார். உபத்திரவக் காலத்தில் தம் ஜனம் அடைக்கலமாக இங்கு வருவார்கள் என்பதற்காக கர்த்தர் ஏதோமை வாங்கியிருக்கிறார்.

உபத்திரவகாலத்தில் இஸ்ரவேலின் வருங்கால அடைக்கலம் - (சங் 108:10)

சங் 60:9 அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டுபோகிறவர் யார்? ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?

சங் 60:10 எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீர் அல்லவோ? எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீர் அல்லவோ?

கற்பாறை(rock) - סֶלַע - seh'-lah - 5553

ஆ.பெ.சொ. - கன்மலை, கற்பாறை, சேலா, பாறை, மேடு, கல்

சங்கீதம் - தொகுப்புரை

60 அதிகாரம்

கற்பாறை(rock) - **πέτρα** - petra - பெட்ரா - 4073

பெண்பால் பெயர்ச்சொல் - கன்மலை, கல், கற்பாறை - "அரணான பட்டணம்" - ஏதோமின் தலைநகரமான சேலாவைக் குறிக்கும் (சங் 108:10; 2இராஜா 14:7; ஏசா 16:1). சேலா என்பதற்கு கற்பாறை என்று பொருள் (நியா 1:36; ஏசா 42:11; எரே 48:28; எரே 49:16; ஒப 1:3). இது போஸ்றா என்றும் அழைக்கப்படுகிறது (ஏசா 34:5-6; ஏசா 63:1-5; எரே 48:24; எரே 49:13,22; ஆமோ 1:12).

உபத்திரவக் காலத்தில் இஸ்ரவேலர்கள் சேலாவிற்கும் ஏதோமுக்கும் ஓடி வருவார்கள். தேவன் இவர்களை இங்கு பாதுகாப்பார் (மத் 24:15-22; வெளி 12:6, 14). இஸ்ரவேலைத் தம்மிடம் திரும்பவும் அழைத்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம் (எசே 20:33-44).

4. இஸ்ரவேலின் வருங்கால ஜெபம் -புறஜாதியார் மீது இறுதி வெற்றி - (சங் 108:11)

சங் 60:11 இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும்; மனுஷனுடைய உதவி விருதா.

சங் 60:12 தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.

61 அதிகாரம்

(நெகினோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

மூன்றாவது நம்பிக்கையின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தாவீதின் மூன்று விண்ணப்பங்கள் - (61:1-2)
2. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் எட்டு அம்சங்கள் - (61:3-6)
3. தாவீதின் ஜெபமும் பொருத்தனைகளும் - (61:7-8)

1. தாவீதின் மூன்று விண்ணப்பங்கள்

சங் 61:1 தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தைக் கவனியும்.

சங் 61:2 என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என் கூப்பிடுதலைக் கேளும் (சங் 61:1).
2. என் விண்ணப்பத்தைக் கவனியும்.
3. எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டு போய் விடும் (சங் 61:2).
4. தயையும், உண்மையும் ராஜாவைக் காக்கக் கட்டளையிடும் (சங் 61:6-7).

தாவீதின் தீர்மானங்கள்

1. என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன் (சங் 61:2)
2. நான் உம்முடைய கூடாரத்தில் சதா காலமும் தங்குவேன் (சங் 61:4)
3. உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன்
4. உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன் (சங் 61:8)

2. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் எட்டு அம்சங்கள் - (3:3; 20:1; 61:3; 63:1)

சங் 61:3 நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர்.

சங் 61:4 நான் உம்முடைய கூடாரத்தில் சதாகாலமும் தங்குவேன்; உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன். (சேலா.)

சங் 61:5 தேவனே, நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர்; உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்.

சங் 61:6 ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்; அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும்.

தேவனுடைய கிரியைகள்

1. நீரே எனக்கு அடைக்கலம் (சங் 61:3).
2. சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகம்.
3. நீர் என் பொருத்தனையைக் கேட்டீர் (சங் 61:5).
4. உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்.

3. தாவீதின் ஜெபமும் பொருத்தனைகளும்

சங் 61:7 அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்; தயையும் உண்மையும் அவரைக் காக்கக் கட்டளையிடும்.

சங் 61:8 இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாக, உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம்பண்ணுவேன்.

62 அதிகாரம்

(எதுதூன் என்னும் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

நான்காவது நம்பிக்கையின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் ஆறு அம்சங்கள் - (62:1-2)
2. துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - அவர்களுடைய அழிவு முற்குறித்துக் கூறப்பட்டுள்ளது - (62:3-4)
3. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் பத்து அம்சங்கள் - (62:5-7)
4. மனுஷருக்குக் கூறப்பட்டுள்ள எச்சரிப்பின் மூன்று அம்சங்கள் - (62:8)
5. மனுஷனுடைய இயற்கையான சுபாவம் - (62:9)
6. நம்பிக்கை வைப்பதில் வேறுபாடுகள் - (62:10-12)

1. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் ஆறு அம்சங்கள்

சங் 62:1 தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்.

சங் 62:2 அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.

தேவன் தாவீதிற்கு எப்பேர்ப்பட்டவர்?

1. இரட்சிப்பு (சங் 62:1-2,6-7)
2. கன்மலை (சங் 62:2, 6)
3. அடைக்கலம் (சங் 62:2, 6)
4. நம்பிக்கை (சங் 62:5)
5. மகிமை (சங் 62:7)
6. பெலனான என் கன்மலை
7. அடைக்கலம் (சங் 62:7-8)

2. துன்மார்க்கனின் ஐந்து பாவங்கள் - அவர்களுடைய அழிவு முற்குறித்துக் கூறப்பட்டுள்ளது

சங் 62:3 நீங்கள் எதுவரைக்கும் ஒரு மனுஷனுக்குத் தீங்கு செய்ய நினைப்பீர்கள், நீங்கள் அனைவமே் கங்கரிக்கப்படுவீர்கள், சாய்ந்தமதிலுக்கும் இடிந்த சுவருக்கும் ஒப்பாவீர்கள்.

சங் 62:4 அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத் தள்ளும்படிக்கே அவர்கள் ஆலோசனைபண்ணி, அபத்தம்பேச விரும்புகிறார்கள்; தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள். (சேலா.)

துன்மார்க்கரின் பாவங்கள்

1. ஜனங்களுக்குத் தீங்கு செய்ய நினைப்பார்கள்.
2. நீதிமானுக்கு விரோதமாக ஆலோசனை பண்ணுகிறார்கள் (சங் 62:4).
3. அபத்தம் பேசுகிறார்கள்.
4. வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள்.

3. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் பத்து அம்சங்கள் - (3:3; 20:1; 61:3; 63:1)

சங் 62:5 என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.

சங் 62:6 அவரே என் கன்மலையும் என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப் படுவதில்லை.

62 அதிகாரம்

சங் 62:7 என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது.

4. மனுஷருக்குக் கூறப்பட்டுள்ள எச்சரிப்பின் மூன்று அம்சங்கள்

சங் 62:8 ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். (சேலா.)

தாவீதின் கட்டளைகள்

1. எக்காலத்திலும் கர்த்தரை நம்புங்கள் (சங் 62:8).
2. அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்.
3. கொடுமையை நம்பாதிருங்கள் (சங் 62:10).
4. கொள்ளையினால் பெருமை பாராட்டாதிருங்கள்.
5. ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.

5. மனுஷனுடைய இயற்கையான சுபாவம் - (சங் 51:5; எபி 2:1-3)

சங் 62:9 கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே; தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் லேசானவர்கள்.

யாரை நம்ப வேண்டும், யாரை நம்பக் கூடாது

1. கீழ்மக்களை நம்பக் கூடாது அவர்களால் நமக்கு உதவி செய்ய முடியாது. அவர்கள் உதவி புரிய விரும்பினாலும் அதற்குரிய ஆற்றல் அவர்களிடமில்லை (சங் 62:9).
2. மேன்மக்களை நம்பக் கூடாது. பக்தியில்லாத ஐசுவரியவான்கள் உதவிபுரிய வாக்குப் பண்ணுவார்கள். ஆனால் ஒன்றும் செய்ய மாட்டார்கள். நம்மை நம்ப வைப்பார்கள். நம்பியவர்களைப் பரியாசம் பண்ணி ஏமாற்றுவார்கள்.
3. கொடுமையையும் கொள்ளையையும் நம்பக் கூடாது (சங் 62:11-12).
4. எக்காலத்திலும் கர்த்தரையே நம்ப வேண்டும் (சங் 62:8).

6. நம்பிக்கை வைப்பதில் வேறுபாடுகள்

சங் 62:10 கொடுமையை நம்பாதிருங்கள்; கொள்ளையினால் பெருமை பாராட்டாதிருங்கள்; ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.

சங் 62:11 தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே.

சங் 62:12 கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்.

தாவீதின் செவிகளினால் கேட்ட காரியங்கள்

1. வல்லமை தேவனுடையது.
2. கிருபை தேவனுடையது. (சங் 62:12).

தேவனே கிருபைக்கும் இரக்கத்திற்கும் ஆதாரமானவர். அவர் சர்வ வல்லவர். ஜாதிகளை நீதியாய் நியாயம் விசாரிப்பவர். துன்மார்க்கனைத் தண்டிப்பவர். நீதிமானை ஆசீர்வதிப்பவர். (மத் 10:40-42; மத் 11:22-24; மத் 16:27; மத் 23:14, 33; ரோமர் 2:6-16; 1கொரி 3:11-15; 2கொரி 5:10; 2தீமோ 4:14; வெளி 2:23; வெளி 20:11-15; வெளி 22:12; யோபு 34:11; நீதி 12:14; நீதி 24:12; ஏசா 59:18; எரே 17:10; எசே 7:3,27; எசே 16:59; எசே 39:24; சக 1:6).

63 அதிகாரம்

(தாவீது யூதாவின் வனாந்தரத்திலிருக்கையில் பாடின சங்கீதம்)

ஐந்தாவது நம்பிக்கையின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் பத்து அம்சங்களும் தேவனைத் துதிப்பதும் - ஐந்து ஆசீர்வாதங்கள் - (63:1-8)
2. துன்மார்க்கனுடைய முடிவின் நான்கு அம்சங்கள் - (63:9-11)

1. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் பத்து அம்சங்களும் தேவனைத் துதிப்பதும் - ஐந்து ஆசீர்வாதங்கள் - (3:3; 20:1; 61:3; 62:1)

சங் 63:1 தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மைவாஞ்சிக்கிறது.

சங் 63:2 இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.

சங் 63:3 ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.

சங் 63:4 என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.

சங் 63:5 நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்.

சங் 63:6 என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச் சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.

சங் 63:7 நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்.

சங் 63:8 என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது; உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.

"என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது" - (யோவான் 7:38)

தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் காண்பது நமக்குக் கிடைத்துள்ள சிலாக்கியம். ஆதி காலத்தில், தமது பரிசுத்த ஸ்தலத்தில், தேவன் தமது மகிமையை எப்படி வெளிப்படுத்தினாரோ, அப்படியே நமது காலத்திலும் வெளிப்படுத்த விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திலும் ஆவியின் வரங்களிலும் தேவன் பூரணமாய் வெளிப்படுகிறார் (மாற்கு 16:17-20; யோவான் 14:12; அப் 1:8; அப் 2:16-21,33-34,38-39; அப் 3:6; அப் 5:15-16; அப் 9:17-18,33-34,40-41; அப் 13:11; அப் 15:4,12; அப் 19:11-20; ரோமர் 15:18-19,29; 1கொரி 12:1-11; எபி 2:3-4).

ஒரு விசுவாசி கர்த்தரைத் துதிக்கும் போது அவனுடைய ஆத்துமா திருப்தியாகும் (சங் 63:5-6).

"உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்" - இது கிருபாசனத்தை மூடியுள்ள கேருபீன்களின் செட்டைகளையோ அல்லது தேவனுடைய பாதுகாப்பையோ குறிக்கலாம்.

2. துன்மார்க்கனுடைய முடிவின் நான்கு அம்சங்கள்

சங் 63:9 என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்களோ, பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள்.

சங் 63:10 அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; நரிகளுக்கு இரையாவார்கள்.

63 அதிகாரம்

சங் 63:11 ராஜாவோ தேவனில் களிகூருவார்; அவர்பேரில் சத்தியம் பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்; பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

பூமியின் தாழ்விடங்கள் **(lower parts of the earth) שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585**

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

பாதாளம் **(lower parts of the earth) - ᾅδης - hadees -** 86.

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம், இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலியமாகத் தங்கும் இடம் (மத் 12:40; எபே 4:8-10).

துன்மார்க்கருக்கு நேரிடும் காரியங்கள்

1. பூமியின் தாழ்விடங்களில் (பாதாளத்தில்) இறங்குவார்கள் (சங் 63:9)
2. அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள் (சங் 63:10)
3. நரிகளுக்கு இரையாவார்கள்
4. பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும் (சங் 63:11; வெளி 21:8; வெளி 22:15)

"நரிகளுக்கு இரையாவார்கள்" - துன்மார்க்கருக்கு அடக்க ஆராதனை கூட நடைபெறாது. நரிகள் அவர்களுடைய சரீரங்களைத் தின்னும்.

64 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

துதித்து ஜெபிக்கும் ஐந்தாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள் - (64:1-6)
2. துன்மார்க்கனுடைய முடிவின் நான்கு அம்சங்கள் - (64:7-8)
3. நீதிமானையும் துன்மார்க்கனையும் பற்றிய ஆறு சத்தியங்கள் - (64:9-10)

1. நான்கு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள்

சங் 64:1 தேவனே, என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும்; சத்துருவால் வரும் பயத்தை நீக்கி, என் பிராணனைக் காத்தருளும்.

சங் 64:2 துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனைக்கும், அக்கிரமக்காரருடைய கலகத்துக்கும் என்னை விலக்கி மறைத்தருளும்.

சங் 64:3 அவர்கள் தங்கள் நாவைப் பட்டயத்தைப்போல் கூர்மையாக்கி,

சங் 64:4 மறைவுகளில் உத்தமன்மேல் எய்யும்பொருட்டுக் கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றுகிறார்கள்; சுற்றும் பயமின்றிச் சடிதியில் அவன்மேல் எய்கிறார்கள்.

சங் 64:5 அவர்கள் பொல்லாத காரியத்தில் தங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, மறைவான கண்ணிகளை வைக்க ஆலோசனைபண்ணி, அவைகளைக் காண்பவன் யார் என்கிறார்கள்.

சங் 64:6 அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்துதேடி, தந்திரமான யோசனை நிறைவேற்றும்படி பிரயத்தனம் பண்ணுகிறார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுடைய உட்கருத்தும் இருதயமும் ஆழமாயிருக்கிறது.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும்
2. சத்துருவால் வரும் பயத்தை நீக்கி, என் பிராணனைக் காத்தருளும்
3. துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனைக்கு என்னை விலக்கி மறைத்தருளும் (சங் 64:2)
4. அக்கிரமக்காரருடைய கலகத்துக்கு என்னை விலக்கி மறைத்தருளும்

துன்மார்க்கனின் பாவங்கள்

1. நீதிமான்களுக்கு பயத்தை உண்டு பண்ணுவார்கள் (சங் 64:1)
2. நீதிமான்களுக்கு எதிராக இரகசிய ஆலோசனை பண்ணுவார்கள் (சங் 64:2)
3. அக்கிரமம் செய்வார்கள்
4. தங்கள் நாவைப் பட்டயத்தைப் போல் கூர்மையாக்குவார்கள் (சங் 64:3)
5. கசப்பான வார்த்தைகளைப் பேசுவார்கள்
6. உத்தமனை அழிக்க வழிதேடுவார்கள் (சங் 64:4)
7. மோசமான பாவ வாழ்க்கை வாழ்கிறார்கள்
8. பாவத்தைச் செய்யத் தூண்டுகிறார்கள் (சங் 64:5)
9. அப்பாவிகள் மீது கசப்பான வார்த்தைகளாகிய அம்புகளை எய்கிறார்கள்
10. நியாயக்கேடுகளை ஆய்ந்து தேடுகிறார்கள் (சங் 64:6)

64 அதிகாரம்

11. பாவத்தைச் செய்வதில், அவர்கள் உட்கருத்தும் இருதயமும் ஆழமாயிருக்கிறது

12. தந்திரமான யோசனை நிறைவேறும்படி பிரயத்தனம் பண்ணுகிறார்கள்

பாவிகள் அனைவரும் தாங்கள் பாவம் செய்யும் போது தங்களைக் காண்பவன் யார் என்று இறுமாப்பாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களைத் தேவன் காண்கிறார். தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை.

“அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்துதேடி, தந்திரமான யோசனை நிறைவேற்றும்படி பிரயத்தனம்பண்ணுகிறார்கள்” - துன்மார்க்கர் பாவங்களை எப்படி தந்திரமாகச் செய்யலாம் என்று புதிய வழிகளை ஆராய்ந்து பார்க்கிறார்கள். தேவன் அவற்றை நிர்மூலம் பண்ணுவார் (சங் 64:6-8).

2. துன்மார்க்கனுடைய முடிவின் நான்கு அம்சங்கள்

சங் 64:7 ஆனாலும் தேவன் அவர்கள் மேல் அம்புகளை எய்வார், சடிதியாய் அவர்கள் காயப்படுவார்கள்.

சங் 64:8 அவர்கள் தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும்; அவர்களைக் காண்கிற யாவரும் ஓடிப்போவார்கள்.

3. நீதிமானையும் துன்மார்க்கனையும் பற்றிய ஆறு சத்தியங்கள்

சங் 64:9 எல்லா மனுஷரும் பயந்து, தேவனுடைய செயலை அறிவித்து, அவர் கிரியையை உணர்ந்துகொள்வார்கள்.

சங் 64:10 நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்; செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்.

துன்மார்க்கனையும் நீதிமானையும் பற்றிய சத்தியங்கள்

1. எல்லா மனுஷரும் துன்மார்க்கனைப் பார்த்துப் பயப்படுவார்கள் (சங் 64:8-9)

2. துன்மார்க்கனுக்கு வரும் பாடுகள் அவனுடைய பாவத்தினால் வந்தது என்று புரிந்து கொள்வார்கள் (சங் 64:9)

3. தங்கள் துன்மார்க்கத்தை நோக்கிப் பார்ப்பார்கள்

4. நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்வான் (சங் 64:10)

5. நீதிமான் கர்த்தரை நம்புவான்

6. செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்

65 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதமாகிய பாட்டு)

இரண்டாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. துதி - நீதிநெறியாக சிருஷ்டிக்கப் பட்டுள்ளவை மீது ஆறு ஆசீர்வாதங்கள் - (65:1-4)

2. துதி - சிருஷ்டிக்கப்பட்டுள்ள பௌதீகப் பொருள்கள் மீது பதினாறு ஆசீர்வாதங்கள் - (65:5-13)

1. துதி - நீதிநெறியாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளவை மீது ஆறு ஆசீர்வாதங்கள்

சங் 65:1 தேவனே, சீயோனில் உமக்காகத்துதியானது அமைந்து காத்திருக்கிறது; பொருத்தனை உமக்குச் செலுத்தப்படும்.

சங் 65:2 ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.

சங் 65:3 அக்கிரம விஷயங்கள் என்மேல் மிஞ்சி வல்லமைகொண்டது; தேவரீரோ எங்கள் மீறுதல்களை நிவிர்த்தியாக்குகிறீர்.

சங் 65:4 உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்து கொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.

சங் - 65இல் ஜனங்கள் கர்த்தரைத் துதிப்பார்கள் என்று கூறிவிட்டு, தாவீது தன் அக்கிரமங்களை நினைவு கூருகிறான் (சங் 65:3).

தேவனுடைய கிரியைகள்

1. கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்கிறார் (சங் 65:2).
2. அவர் பாவங்களை நீக்குவார் (சங் 65:3).
3. அவர் மனுஷர்களைத் தெரிந்து கொண்டார் (சங் 65:4).
4. அவர்களைச் சேர்த்துக் கொள்ளுவார்.
5. அவர்களைத் தமது நன்மையினால் திருப்தியடையச் செய்வார்.
6. நமக்கு நித்திய வீட்டைக் கொடுப்பார்.
7. நீதியுள்ள உத்தரவு அருளுவார் (சங் 65:5).
8. எல்லாரும் நம்பும் நம்பிக்கையாயிருப்பார்.
9. வல்லமையை இடைக்கட்டிக் கொள்வார் (சங் 65:6).
10. சமுத்திரத்தின் அலைகளின் இரைச்சலை அமர்த்துவார் (சங் 65:7).
11. அவர் ஜனங்களின் அமளியை அமர்த்துவார்.
12. அவருடைய அடையாளங்களினிமித்தம் கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்கள் பயப்படும்படிச் செய்வார் (சங் 65:8).
13. தமது சிருஷ்டிகளைக் களிகூரப் பண்ணுவார் (சங் 65:8,13).
14. அவர், வானங்களுக்கும் பூமிக்கும் மத்தியில் உலாவுவார் (சங் 65:9).
15. பூமியை விசாரித்து நீர்ப்பாய்ச்சி, தேவ நதியினால் செழிப்பாக்குவார் (சங் 65:9-10).
16. ஜனங்களுக்கு தானியத்தை விளைவிக்கிறார் (சங் 65:9).

65 அதிகாரம்

17. வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார் (சங் 65:10).

18. பயிரை ஆசீர்வதிக்கிறார்.

19. வருஷத்தை தம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறார் (சங் 65:11).

20. பூமியின்மீது தமது ஆசீர்வாதங்களை அனுப்புகிறார்

21. ஆடுகளுக்கு செழிப்பான மேய்ச்சல் நிலங்களைக் கொடுக்கிறார் (சங் 65:12).

22. பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது (சங் 65:13).

2. துதி - சிருஷ்டிக்கப்பட்டுள்ள பௌதீகப் பொருள்கள் மீது பதினாறு ஆசீர்வாதங்கள்

சங் 65:5 பூமியின் கடையாந்தரங்களிலும் தூரமான சமுத்திரங்களிலு முள்ளவர்கள் எல்லாரும் நம்பும் நம்பிக்கையாயிருக்கிற எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் பயங்கரமான காரியங்களைச் செய்கிறதினால் எங்களுக்கு நீதியுள்ள உத்தரவு அருளுகிறீர்.

சங் 65:6 வல்லமையை இடைகட்டிக் கொண்டு, உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தி,

சங் 65:7 சமுத்திரங்களில் மும்முரத்தையும் அலைகளுடைய அலைகளின் இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர்.

சங் 65:8 கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்களும் உம்முடைய அடையாளங் களினிமித்தம் பயப்படுகிறார்கள்; காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்.

சங் 65:9 தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைக்கிறீர்.

சங் 65:10 அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து, அதை மழைகளால் கரையப்பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர்.

சங் 65:11 வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.

சங் 65:12 வனாந்தர தாபரங்களிலும் பொழிகிறது; மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது.

சங் 65:13 மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது; பள்ளத் தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது; அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது.

66 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதமாகிய பாட்டு)

மூன்றாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. ஒன்பது எச்சரிப்புக்கள் - தேவனுடைய பன்னிரெண்டு கிரியைகள் - (66:1-12)

2. பொருத்தனைகளை நிறைவேற்றுவதின் ஆறுஅம்சங்கள் - (66:13-15)

3. அவருடைய சாட்சியின் எட்டு அம்சங்களைக் கேட்குமாறு எச்சரிப்புரைகள் - (66:16-20)

1. ஒன்பது எச்சரிப்புக்கள் - தேவனுடைய பன்னிரெண்டு கிரியைகள்

சங் 66:1 பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

சங் 66:2 அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள்.

சங் 66:3 தேவனை நோக்கி: உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர்; உமது மகத்துவமான வல்லமையினிமித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள்.

சங் 66:4 பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள். (சேலா).

சங் 66:5 தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்; அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்குங் கிரியையில் பயங்கரமானவர்.

சங் 66:6 கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்; ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம்.

சங் 66:7 அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார்; அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக்கிறது; துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக. (சேலா).

சங் 66:8 ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ் சத்தத்தைக் கேட்கப் பண்ணுங்கள்.

சங் 66:9 அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்.

சங் 66:10 தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர்.

சங் 66:11 எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர்.

சங் 66:12 மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப் பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்.

தாவீதின் கட்டளைகள்

1. தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள் (சங் 66:1).

2. அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள் (சங் 66:2).

3. அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள்.

4. தேவனை நோக்கி, உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரம் உள்ளது என்று சொல்லுங்கள் (சங் 66:3).

5. தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள் (சங் 66:5).

சங்கீதம் - தொகுப்புரை

66 அதிகாரம்

6. துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக (சங் 66:7).

7. ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (சங் 66:8).

8. அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக் கேட்கப் பண்ணுங்கள்.

9. தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள் (சங் 66:16).

"தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்" - இந்த வசனத்தை "வந்து கேளுங்கள்" (சங் 66:16) என்னும் வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

தேவனுடைய கிரியைகள்

1. கடலை உலர்ந்த தரையாக மாற்றினார் (சங் 66:6).

2. அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார் (சங் 66:7).

3. அவருடைய கண்கள் ஜாதிகள் மேல் நோக்கமாயிருக்கிறது.

4. நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார் (சங் 66:9).

5. அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல் செய்கிறார்.

6. நம்மைச் சோதிக்கிறார் (சங் 66:10).

7. வெள்ளியைப் புடமிடுகிறது போல நம்மைப் புடமிடுகிறார்.

8. நம்மை வலையில் அகப்படுத்துகிறார் (சங் 66:11).

9. நம் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றுகிறார்.

10. மனுஷரை நம்முடைய தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணுகிறார் (சங் 66:12).

11. நாம் தீயையும், தண்ணீரையும் கடந்து வரப் பண்ணினார்.

12. நம்மை செழிப்பான இடத்தில் கொண்டு வந்து விட்டார்

"நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்". அவர் நம்முடைய ஆத்துமாவை ஆரோக்கியமான சரீரத்தில் வைத்திருக்கிறார். தேவன் நம்மை ஜீவனுள்ளவர்களாக காத்துக் கொள்கிறார்.

"எங்களை வலையில் அகப்படுத்தினார்" - செங்கடலில் எகிப்தியர்கள் இஸ்ரவேலரை நெருக்கி வந்தார்கள். தேவனுடைய ஜனங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தார்கள். (யாத் 14:3)

எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். எகிப்தில் இஸ்ரவேல் ஜனங்களின் கடின உழைப்பு (யாத் 1).

"மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்". (சங் 66:12) எகிப்தில் இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைகளாக இருந்தார்கள். அவர்களுடைய விரோதிகள் அவர்களை ஆளுகை செய்தார்கள். தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வாக்குத்தத்த தேசத்தில் கொண்டுவந்து விட்டார்.

2. பொருத்தனைகளை நிறைவேற்றுவதின் ஆறு அம்சங்கள்

சங் 66:13 சர்வாங்க தகன பலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்;

சங் 66:14 என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.

சங் 66:15 ஆட்டுக்கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையான வைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன்; காளைகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன். (சேலா.)

66 அதிகாரம்

தாவீதின் தீர்மானங்கள்

1. சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன் (சங் 66:13).
2. என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.
3. என் உதடுகளைத் திறந்து, என் பொருத்தனைகளைச் செலுத்துவேன் (சங் 66:14).
4. என் இக்கட்டில், என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளைச் செலுத்துவேன் (சங் 66:14).
5. ஆட்டுக்கடாக்களின் நிணப் புகையுடனே கொழுமையானவைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன் (சங் 66:15)
6. காளைகளையும், செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன்.

3. அவருடைய சாட்சியின் எட்டு அம்சங்களைக் கேட்குமாறு எச்சரிப்புரைகள்

சங் 66:16 தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள்; அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன்.

சங் 66:17 அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார்.

சங் 66:18 என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

சங் 66:19 மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.

சங் 66:20 என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

தாவீதின் சாட்சி

1. கர்த்தரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன் (சங் 66:17).
2. என் நாவினால் அவர் புகழப்பட்டார்.
3. என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேன் (சங் 66:18).
4. ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.
5. மெய்யாய்த்தேவன் எனக்குச் செவிகொடுத்தார் (சங் 66:19).
6. என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.
7. கர்த்தர் என் ஜெபத்தைத் தள்ளாமலிருந்தார் (சங் 66:20).
8. தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலிருந்தார்.

கர்த்தர் (Lord) - אֲדֹנָי - ad-o-noy' - 136

ஆ.பெ.சொ. - கர்த்தர், ஆண்டவர்

கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார் - "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" - நம்முடைய ஜெபங்களில் பலவற்றிற்கு தேவன் பதில் கொடுப்பதில்லை. இதற்குக் காரணம் நமது இருதயத்திலுள்ள அக்கிரமச் சிந்தைகளே. நமது இருதயத்தில் அக்கிரம சிந்தை இருக்கும்போது தேவனுடைய உதவி நமக்குக் கிடைக்காது. நமது ஆபத்து வேளையில் தேவன் நமக்கு ஆதரவாக வரமாட்டார். (1யோவான் 3:20-22; 1யோவான் 5:14-15)

"மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்" - என்னுடைய இருதயத்தில் அக்கிரமச் சிந்தையில்லை. ஆகையினால் தேவன் எனக்குச் செவிகொடுத்தார். நான் செய்த பாவங்களை என் தேவன் மன்னித்து விட்டார் என்னும் நிச்சயம் எனக்குள் வந்திருக்கிறது. (சங் 66:18-20) பாவம் நமது விசுவாசத்தைத் தடைபண்ணும். விசுவாசம் இல்லையென்றால் ஜெபத்திற்குப் பதில் கிடைக்காது. (ரோமர் 14:23; 1யோவான் 3:20-22; 1யோவான் 5:14-15; எபி 11:6; யாக் 1:5-8)

67 அதிகாரம்

(நெகினோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதப்பாட்டு)

துதித்து ஜெபிக்கும் ஆறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மூன்று விண்ணப்பங்கள் - எல்லா மனுஷருக்கும் இரண்டு ஆசீர்வாதங்கள் - (67:1-2)
2. துதியின் ஆறு அம்சங்கள் - எல்லா மனுஷருக்கும் ஐந்து ஆசீர்வாதங்கள் - (67:3-7)

1. மூன்று விண்ணப்பங்கள் - எல்லா மனுஷருக்கும் இரண்டு ஆசீர்வாதங்கள்

சங் 67:1 தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும் படியாய்,

சங் 67:2 தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும். (சேலா.)

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. எங்கள் மேல் இரங்கும்.
2. எங்களை ஆசீர்வதியும்.
3. உம்முடைய முகத்தை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும்.

நமது ஜெபங்களுக்கு தேவன் பதில் கொடுப்பார் என்பதற்கான காரணங்கள்

1. பூமியில் உம்முடைய வழியை விளங்கும்படியாய்ச் செய்யும்.
2. எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியம் விளங்கும்படிச் செய்யும்.

இரட்சிப்பு (salvation) - יְשׁוּעָה - yesh-oo'-aw- 3444

பெ.பெ.சொ. - இரட்சிப்பு, உதவி, சுகவாழ்வு, அடைக்கலம், இரட்சணியம், இரட்சித்தல் **(deliverance; victory; prosperity; welfare; salvation)** (ஏசா 2:2-4; ஏசா 11:9; ஏசா 52:7; சக 8:23; சக 14:16-21; வெளி 21:3-7)

2. துதியின் ஆறு அம்சங்கள் - எல்லா மனுஷருக்கும் ஐந்து ஆசீர்வாதங்கள்

சங் 67:3 தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

சங் 67:4 தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்; ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள். (சேலா.)

சங் 67:5 தேவனே, ஜனங்கள் உம்மைத்துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

சங் 67:6 பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

சங் 67:7 தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

தேவனைத் துதிக்க வேண்டும் என்னும் ஆலோசனை

1. ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக.
2. சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.
3. ஜாதிகள் சந்தோஷிப்பார்களாக (சங் 67:4).
4. ஜாதிகள் கெம்பீரத்தோடு மகிழக்கடவர்கள்.

சங்கீதம் - தொகுப்புரை

67 அதிகாரம்

5. ஜனங்களை நிதானமாய் நியாயந்தீரும்.

6. பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்

7. ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக (சங் 67:5).

8. சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

"தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக" - இந்த வாக்கியம் இரண்டு முறை கூறப்பட்டிருக்கிறது. (சங் 67:3,5) ஜனங்கள் தேவனைத் துதிக்க வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது.

தீர்க்கதரிசன எண் - 49

"பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்........." (சங் 67:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. புதிய பூமியில் இது நிறைவேறும். (வெளி 21-22)

பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் தேவனைத் துதிக்கும்போது, அவரே ஜாதிகளின் இராஜா என்று எல்லோரும் அங்கீகரிக்கும்போது பூமி தன் பலனைத் தரும். ஆதியிலே தேவன் எந்த நோக்கத்திற்காக பூமியையும், சகல சிருஷ்டிகளையும் சிருஷ்டித்தாரோ அந்த நோக்கம் நிறைவேறும். (ஏசா 45:18; எபே 1:10; எபே 2:7; எபே 3:11; 1கொரி 15:24-28; வெளி 21-22).

68 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் பாட்டாகிய சங்கீதம்)

மேசியாவைப்பற்றிய பதிமூன்றாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய விரோதிகளைக் குறித்து ஐந்து விண்ணப்பங்கள் - (68:1-2)
2. துதியின் ஏழு அம்சங்கள் - காரணங்கள் - (68:3-5)
3. வனாந்தரத்தில் சுற்றியலைந்த போது தேவனுடைய பத்து கிரியைகள் - (68:6-14)
4. தேவனுடைய பரலோகத் தலைமைச் செயலகம் - (68:15-17)
5. மேசியா உன்னதத்திற்கு ஏறுகிறார் - (68:18)
6. தேவ ஜனங்களின் ஆசீர்வாதம் - (68:19-20)
7. மேசியாவின் நாட்களில் சத்துருக்கள் மீது தேவனுடைய வெற்றி - (68:21-31)
8. எல்லா தேசங்களும் தேவனைத் துதிக்க வேண்டுமென்று மூன்று கட்டளைகள் - காரணங்கள் - (68:32-35)

1. தேவனுடைய விரோதிகளைக் குறித்து ஐந்து விண்ணப்பங்கள்

சங் 68:1 தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.

சங் 68:2 புகை பறக்கடிக்கப்படுவது போல அவர்களைப் பறக்கடிப்பீர்; மெழுகு அக்கினிக்குமுன் உருகுவதுபோல துன்மார்க்கர் தேவனுக்குமுன் அழிவார்கள்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. தேவன் எழுந்தருளுவாராக. (சங் 68:1)
2. தேவனுடைய சத்துருக்கள் சிதறுண்டு போவார்களாக (சங் 68:1)
3. அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்களாக
4. புகை பறக்கடிக்கப்படுவது போல அவர்களைப் பறக்கடிப்ீராக (சங் 68:2)
5. மெழுகு அக்கினிக்குமுன் உருகுவது போலத் துன்மார்க்கர் தேவனுக்கு முன் அழிவார்களாக
6. நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்வார்களாக (சங் 68:3)
7. அவர்கள் தேவனுக்கு முன்பாக களிகூருவார்களாக
8. ஆனந்த சந்தோஷமடைவார்களாக

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை இஸ்ரவேல் ஜனங்கள் தூக்கிச் சுமந்தபோது இந்த சங்கீதம் பாடப்பட்டது. (எண் 10:35-36) பாடகர்கள் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாகச் சென்றார்கள்.

2. துதியின் ஏழு அம்சங்கள் - காரணங்கள்

சங் 68:3 நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து, ஆனந்த சந்தோஷமடைவார்கள்.

சங் 68:4 தேவனைப்பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருடைய நாமம் யேகோவா, அவருக்கு முன்பாகக் களிகூருங்கள்.

சங் 68:5 தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்.

சங்கீதம் - தொகுப்புரை

68 அதிகாரம்

தாவீதின் ஆலோசனைகள்

1. தேவனைப் பாடுங்கள்
2. அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள்
3. வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருடைய நாமம் யெகோவா
4. அவருக்கு முன்பாகக் களிகூருங்கள்
5. சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (சங் 68:26)
6. பூமியின் ராஜ்யங்களே, தேவனைப் பாடுங்கள் (சங் 68:32)
7. ஆண்டவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்
8. தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப் படுத்துங்கள் (சங் 68:34)

யெகோவா (Jehovah) יָהּ - yaw - 3050.

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், யெகோவா - தாமாகவே இருக்கிறவர். யெக் (JAH) என்பது யெகோவா (JEHOVAH) என்னும் பெயரின் சுருக்கம்.

3. வனாந்தரத்தில் சுற்றியலைந்த போது தேவனுடைய பத்து கிரியைகள்

சங் 68:6 தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்; துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்.

சங் 68:7 தேவனே, நீர் உம்முடைய ஜனங்களுக்கு முன்னே சென்று, அவாந்தரவெளியிலே நடந்து வருகையில், (சேலா.)

சங் 68:8 பூமி அதிர்ந்தது; தேவனாகிய உமக்கு முன்பாக வானமும் பொழிந்தது; இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற தேவனுக்கு முன்பாகவே இந்தச் சீனாய் மலையும் அசைந்தது.

சங் 68:9 தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்; இளைத்துப் போன உமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர்.

சங் 68:10 உம்முடைய மந்தை அதிலே தங்கியிருந்தது; தேவனே, உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர்.

சங் 68:11 ஆண்டவர் வசனம் தந்தார்; அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி.

சங் 68:12 சேனைகளின் ராஜாக்கள் தத்தளித்து ஓடினார்கள்; வீட்டிலிருந்து ஸ்திரீயானவள் கொள்ளைப் பொருளைப் பங்கிட்டாள்.

சங் 68:13 நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.

சங் 68:14 சர்வவல்லவர் அதில் ராஜாக்களைச் சிதறடித்தபோது, அது சல்மோன் மலையின் உறைந்த மழைபோல் வெண்மையாயிற்று.

தேவனைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் கூறப்பட்டுள்ள சத்தியங்கள்

1. வானங்களில் ஏறி வருகிறார் (சங் 68:4)
2. அவருடைய நாமம் யேகோவா
3. திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன் (சங் 68:5)
4. விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவர்
5. பரிசுத்த வாசஸ்தலத்தில் வாசம் பண்ணுகிறார்

சங்கீதம் - தொகுப்புரை

68 அதிகாரம்

6. தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்துகிறார்

7. கட்டுண்டவர்களை விடுதலை யாக்குகிறார்

8. துரோகிகளை வறண்ட பூமியில் தங்க வைக்கிறார்.

9. தம்முடைய ஜனங்களுக்கு முன்னே சென்று, அவாந்தரவெளியிலே நடந்து வருகிறார் (சங் 68:7)

10. பூமியை அதிரப் பண்ணுகிறார் (சங் 68:8)

11. தேவனாகிய உமக்கு முன்பாக வானம் பொழிகிறது

12. தேவனுக்கு முன்பாகவே சீனாய் மலை அசைந்தது

13. சம்பூரண மழையைப் பெய்யப் பண்ணுவார் (சங் 68:9)

14. இளைத்துப் போன தமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினார்

15. தம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறார் (சங் 68:10)

16. ஆண்டவர் தம்முடைய வசனத்தைத் தந்து, அதைப் பிரசித்தப்படுத்துகிறார் (சங் 68:11)

17. சேனைகளின் ராஜாக்களை முறியடித்து இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் தேசத்தைக் கொடுத்தார் (சங் 68:12-14)

18. தேவன் பர்வதத்தில் வாசமாயிருக்க விரும்பினார். இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார் (சங் 68:15-16)

19. தேவனுடைய இரதங்கள் எண்ணிலடங்காதவை (சங் 68:17; எபி 12:22-23)

20. ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்த வண்ணமாய் தேவதூதர்களுக்குள் இருக்கிறார் (சங் 68:17)

21. தேவரீர் உன்னதத்திற்கு ஏறுகிறார் (சங் 68:18)

22. சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டு போனார் (சங் 68:18; மத் 12:40; எபே 4:8-10)

23. தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொள்ளுகிறார் (சங் 68:18; எபே 4:8-11; வெளி 21:3-7)

24. நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் தேவன் நம்மை இரட்சிக்கிறார் (சங் 68:19)

25. நம்முடைய தேவன் கலகக்காரருக்கும் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார் (சங் 68:18-20)

26. ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு (சங் 68:20; யோவான் 10:10; 1யோவான் 3:8-10; வெளி 1:17)

27. கர்த்தர் சத்துருக்களை முறியடிக்கிறார் (சங் 68:21)

28. தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனைத் தண்டிக்கிறார் (சங் 68:21)

29. தம்முடைய ஜனங்களைச் சமுத்திர ஆழங்களிலிருந்து திரும்ப அழைத்து வருவார் (சங் 68:23)

30. கர்த்தர், அவருடைய எல்லா சத்துருக்களையும் அடக்குவார் (சங் 68:23)

31. கர்த்தர், தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலே தம்மை வெளிப்படுத்துவார் (சங் 68:24)

32. தேவன் தம்முடைய பலத்தை பலவீனமானவர்களுக்கும் ஆதரவு அற்றவர்களுக்கும் கட்டளையிடுவார் (சங் 68:28)

68 அதிகாரம்

33. பூமியிலுள்ள இராஜாக்கள், அவருக்கு காணிக்கைகளைச் செலுத்தி மகிமைப் படுத்துவார்கள் (சங் 68:29)

34. புறஜாதிகள் தேவனை நோக்கிக் கையெடுக்கத் தீவிரிக்கும் (சங் 68:31)

35. தேவன், தமது சத்தத்தைப் பலத்த சத்தமாய் முழங்கப் பண்ணுகிறார் (சங் 68:33-35)

36. தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனை அருளுகிறார் (சங் 68:35)

தனித்த (lonely) יָחִיד - yaw-kheed' - 3173.

பெயரடை - ஏக, ஒரே, தனித்த, தனிமையான

சங் 68:8-ஆவது வசனம் சீனாய் மலையில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டதைக் குறிப்பிடும். (யாத் 19:16-25)

சங் 68:8-14 ஆகிய வசனங்கள் சீனாய் மலையில் இஸ்ரவேலர்கள் இருந்ததையும், கானானை வெற்றி பெற்றதையும் குறிக்கும். சங் 68:15-17 ஆகிய வசனங்கள் தேவனுடைய தலைமை ஸ்தலத்தை குறிப்பிடும்.

சங் 68:18 ஆவது வசனம் பாதாளத்தின்மீது கிறிஸ்துவின் வெற்றியையும் சங் 68:19-20 ஆகிய வசனங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களையும் குறிப்பிடும்.

சங் 68:21-31 ஆகிய வசனங்கள் ஆயிர வருஷ அரசாட்சியில் ஜனங்கள் தேவனை ஆராதிப்பதையும் கடைசி நாட்களில் தேவன் தமது சத்துருக்கள்மீது ஜெயம் பெறுவதையும் குறிப்பிடும்.

சங் 68:32-35 ஆகிய வசனங்கள் ஆயிர வருஷ அரசாட்சியில் ஜனங்களுக்கு ஆலோசனைகளை கூறுகிறது.

"தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப் பண்ணினீர்" - வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் தேவன் தாராளமாக மழையை அனுப்பினார். இதனால் இஸ்ரவேலர்களுக்குதேவையான தானியங்கள் ஏராளமாய் கிடைத்தது. (சங் 68:9-10)

"ஆண்டவர் வசனம் தந்தார்; அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி". சீனாய் மலையில் தேவன் இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர்கள் அதைப் பிரசித்தப் படுத்தினார்கள். யூதர்களுடைய குடும்பத்தில் ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளுக்குதேவனுடைய பிரமாணத்தைக் கற்றுத்தர வேண்டும் (உபா 6:6-9).

"சேனைகளின் ராஜாக்கள் தத்தளித்து ஓடினார்கள்; வீட்டிலிருந்து ஸ்திரீயானவள் கொள்ளைப்பொருளைப் பங்கிட்டாள்" - யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேலர்கள் கானானை வெற்றி பெற்றதை இந்த வசனம் கூறுகிறது. வீட்டில் இருந்தவர்கள்கூட யுத்தத்திற்குப் போனவர்களைப் போல கொள்ளையின் பங்குப்பொருளை பெற்றுக் கொண்டார்கள். (சங் 68:12,14)

தீர்க்கதரிசன எண் - 50

"நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்" (சங் 68:13) - இந்த தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

அடுப்பு (pots) - שְׁפַתַּיִם - shaw-fawth'-ayim - 8240

ஆ.பெ.சொ. - அடுப்பு, சூளை, முளைகள்

"நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்" - இஸ்ரவேல் ஜனங்கள் அடுப்பினடியில் கிடக்கும் ஸ்திரீகளைப் போல எகிப்து தேசத்தில் நம்பிக்கையில்லாமல் அடிமைகளாக இருந்தபோதிலும் தேவன் அவர்களை மீட்டுக்கொள்வார். எல்லா தேசங்களுக்கும் தலைமையான தேசமாக அவர்களை மாற்றுவார்.

68 அதிகாரம்

சல்மோன் மலை சீகேமிற்கு அருகில் உள்ளது. தேவன் இஸ்ரவேலின் எதிரிகளை முறியடிப்பார். அவர்கள் முறிந்து ஓடுவார்கள். பனிமலை புயல் காற்றில் சரிந்து விழுவதுபோன்று இஸ்ரவேலின் விரோதிகள் சரிந்து விழுந்து ஓடுவார்கள். (நியா 9:48)

4. தேவனுடைய பரலோகத் தலைமைச் செயலகம் - (எபி 12:22-24; வெளி 14:1-5)

சங் 68:15 தேவபர்வதம் பாசான் பர்வதம் போலிருக்கிறது; பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது.

சங் 68:16 உயர்ந்த சிகரமுள்ள பர்வதங்களே, ஏன் துள்ளுகிறீர்கள்; இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்க தேவன் விரும்பினார்; ஆம், கர்த்தர் இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்.

சங் 68:17 தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங் களுமாயிருக்கிறது; ஆண்டவர் பரிசுத்தஸ்தலமான சீனாயிலிருந்த வண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 51

"தேவபர்வதம் பாசான் பர்வதம் போலிருக்கிறது; பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது..............." (சங் 68:15-16) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

தேவபர்வதத்தில் தேவன் நித்தியகாலமாக வாசம் பண்ணுவார். (சங் 68:16) இது பரலோகத்திலுள்ள சீயோன் மலையைக் குறிக்கும். (எபி 12:22-23; வெளி 14:1; சங் 24:3) இது பர்வதப்பட்டணமாகிய புதிய எருசலேமையும் குறிக்கும். இதன் உயரம் 1,500 மைல்கள் (வெளி 21:16-17) இந்தப் பர்வதத்தைத் தவிர வேறு எங்கும் தேவன் நித்தியகாலமாக வாசம் பண்ணுவதில்லை.

இந்தப் பூமியிலுள்ள ஒரு மலையில் தேவனுக்கு ஒரு ஆலயம் கட்டப்படும். ஆயினும் தேவன் இந்த ஆலயத்தில் நிரந்தரமாக வாசம்பண்ணமாட்டார். (ஏசா 2:2-4; எசே 43:7; மீகா 4:1-3; சக 8:3) நமது தேவன் பர்வதத்தில் வாசம் பண்ணுகிறவர்.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பர்வதங்களைப் பற்றிய குறிப்பு

1. பூமியில் லூசிபரின் தலைநகரம் (எசே 28:13-16)
2. தேவன் ஒரு பர்வதத்தில் தமது நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார் (யாத் 3:1; யாத் 4:27; யாத் 18:5; யாத் 19:16-25; யாத் 24:9-18; எண் 10:33; 1இராஜா 19:8)
3. தமது ஆலயம் கட்டப்படுவதற்கு தேவன் ஒரு பர்வதத்தைத் தேர்ந்தெடுத்தார் (ஆதி 22:14; 2நாளா 3:1)
4. சபிப்பதற்கும் ஆசீர்வதிப்பதற்கும் தேவன் பர்வதங்களை அடையாளங்களாகத் தெரிந்தெடுத்தார் (உபா 11:29; உபா 27:4-13)
5. மோசேயும் ஆரோனும் பர்வதங்களில் மரிக்குமாறு கட்டளையிட்டார் (உபா 32:49-51)
6. அடைக்கலம் பெறுவதற்கு பர்வதங்களே சிறந்த இடம் (ஆதி 14:10; ஆதி 19:17,30; மத் 24:16; எபி 11:38)
7. இஸ்ரவேலின் தலைநகரமும் ஒரு பர்வதமே (1இராஜா 8:1; 2நாளா 5:2)
8. மிகப்பெரிய சோதனைகளை இயேசு கிறிஸ்து மலையில் மேற்கொண்டார் (மத் 4:8)
9. இயேசு கிறிஸ்து மலையில் பிரசங்கம் பண்ணினார் (மத் 5-7)
10. இயேசு கிறிஸ்து மலையில் ஜெபித்தார் (மத் 14:23; மாற்கு 6:46; மாற்கு 9:2)
11. இயேசு கிறிஸ்து ஒரு மலையிலிருந்து தீர்க்கதரிசனம் கூறினார் (மத் 24-25)

68 அதிகாரம்

12. மிக முக்கியமான வெளிப்பாடுகள் பர்வதங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்டன (யாத் 19; எபி 8:5; வெளி 21:10)

13. கிறிஸ்து ஒரு மலையில் மறுரூபமானார் (மத் 17; 2பேதுரு 1:18)

14. இயேசு கிறிஸ்துவை ஒரு மலையில் சிலுவையில் அறைந்தார்கள் (லூக்கா 23:33; யோவான் 19:17)

15. இயேசு கிறிஸ்து ஒரு மலையிலிருந்து பரலோகத்திற்கு ஏறிச்சென்றார் (மத் 28:16; அப் 1:11-12)

16. கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வரும்போது ஒருமலையில் வந்து இறங்குவார் (சக 14:1-5)

17. இந்தப் பூமியில் கிறிஸ்துவின் தலைநகரம் ஒரு பர்வதத்தில் கட்டப்படும் (ஏசா 2:2-4; ஏசா 11:9; ஏசா 25:6-7; எசே 43:7; மீகா 4:1-7; யோவே 3:17; சக 8:3)

18. பரிசுத்த வேதாகமத்தில் பர்வதம், மலை என்னும் சொல் 577 தடவைகள் வந்துள்ளது இதன் முக்கியத்துவத்தைக் குறிக்குகிறது.

தேவனுடைய இரதங்களைப் பற்றிய குறிப்புக்களை எசே 1; எசே 8; எசே 10 ஆகிய அதிகாரங்களில் நாம் வாசிக்கலாம்.

5. மேசியா உன்னதத்திற்கு ஏறுகிறார் - (எபி 4:8-10; அப் 1:11)

சங் 68:18 தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டு போனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்.

தீர்க்கதரிசன எண் - 52

"தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்" (சங் 68:18) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து பாதாளத்திற்கு இறங்கி அங்கு சிறைப்பட்டிருந்த நீதிமான்களுடைய ஆத்துமாக்களை விடுதலை செய்து தமக்கு சிறையாக்கிக் கொண்டார். பாதாளத்தில் நீதிமான்களின் ஆத்துமாக்களை அவர்களுடைய விருப்பதற்கு மாறாக சாத்தான் காவலில் வைத்திருந்தான். (சங் 16:10; மத் 12:40; எபி 2:14-15) இயேசு கிறிஸ்து பரமேறியபோது இவர்களை சிறையாக்கிக் கொண்டுபோனார். (சங் 68:18; எபே 4:8-10) இனிமேல் விசுவாசிகள் மரிக்கும்போது அவர்களுடைய ஆத்துமாக்கள் பாதாளத்திற்குச் செல்வதில்லை. (லூக்கா 16:19-31; லூக்கா 23:43) பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் உடனடியாக பரலோகத்திற்குச் சென்று தங்களுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11)

"தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்" - மனுஷர்களுக்காக தேவன் பெற்றுக்கொண்ட வரங்கள் பரிசுத்தவான்களுக்காக செய்யப்படும் பல்வேறு ஊழியங்களாகும். (எபே 4:8-11) துரோகிகளுக்காகவும், கர்த்தர் இந்த வரங்களைப் பெற்றுக் கொண்டார். ஆகையினால் துன்மார்க்கரும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டால் தேவனுடைய வரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. தேவ ஜனங்களின் ஆசீர்வாதம்

சங் 68:19 எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே. (சேலா)

சங் 68:20 நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்; ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு.

68 அதிகாரம்

"நம்மேல் பாரஞ்சுமத்தினாலும்" என்று தமிழில் உள்ளது. மூலஎபிரெய பாஷையில் "எந்நாளும் நமக்கு ஆசீர்வாதத்தை நம்மீது சுமத்துகிறவர்" **(who daily loadeth us with benefits)** என்று பொருள்படும் விதமாக உள்ளது. தமது இரட்சிப்பினால் தேவன் நம்மைத் தாங்குகிறார். அநுதினமும் நம்மைப் பராமரிக்கிறார். (சங் 68:19-20)

"மரணத்திற்கு நீங்கும் வழிகள்" - (1கொரி 15:26; எபி 2:14-15; வெளி 1:17)

7. மேசியாவின் நாட்களில் சத்துருக்கள் மீது தேவனுடைய வெற்றி

சங் 68:21 மெய்யாகவே தேவன் தம்முடைய சத்துருக்களின் சிரசையும் தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்.

சங் 68:22 என் கால்கள் சத்துருக்களின் இரத்தத்தில் பதியும்படியாகவும், உன் நாய்களின் நாவு அதை நக்கும்படியாகவும்,

சங் 68:23 என்னுடைய ஜனத்தைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்து வருவேன்; அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்து வருவேன் என்று ஆண்டவர் சொன்னார்.

சங் 68:24 தேவனே, உம்முடைய நடைகளைக் கண்டார்கள்; என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள்.

சங் 68:25 முன்னாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும், சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள்.

சங் 68:26 இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே, சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

சங் 68:27 அங்கே அவர்களை ஆளுகிற சின்ன பென்யமீனும், யூதாவின் பிரபுக்களும், அவர்கள் கூட்டமும், செபுலோனின் பிரபுக்களும், நப்தலியின் பிரபுக்களும் உண்டு.

சங் 68:28 உன் தேவன் உனக்குப் பலத்தைக் கட்டளையிட்டார்; தேவனே, நீர் எங்கள் நிமித்தம் உண்டுபண்ணினதைத் திடப்படுத்தும்.

சங் 68:29 எருசலேமிலுள்ள உம்முடைய ஆலயத்தினிமித்தம், ராஜாக்கள் உமக்குக் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்.

சங் 68:30 நாணலிலுள்ள மிருகக் கூட்டத்தையும், ஜனங்களாகிய கன்றுகளோடு கூட ரிஷப கூட்டத்தையும் அதட்டும்; ஒவ்வொருவனும் வெள்ளிப் பணங்களைக் கொண்டுவந்து பணிந்து கொள்ளுவான்; யுத்தங்களில் பிரியப்படுகிற ஜனங்களைச் சிதறடிப்பார்.

சங் 68:31 பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்; எத்தியோப்பியா தேவனை நோக்கி கையெடுக்கத் தீவிரிக்கும்.

தீர்க்கதரிசன எண் - 53

"மெய்யாகவே தேவன் தம்முடைய சத்துருக்களின் சிரசையும் தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்............" (சங் 68:21-35) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"சத்துருக்களின் சிரசை உடைப்பார்" இது சாத்தானுடைய இறுதியான தோல்வியைக் குறிக்கும். (ஆதி 3:15; ரோமர் 16:20)

"தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவன்" தொடர்ந்து பாவத்தில் விழுந்து கிடக்கும் பாவிகளை தேவன் அழிப்பார். (நீதி 29:1)

68 அதிகாரம்

"என்னுடைய ஜனத்தைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்துவருவேன்; அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்துவருவேன்". இஸ்ரவேலரை தேவன் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்போவதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. ஏற்கனவே மரித்தோர்கூட உயிர்த்தெழுதல் மூலமாக கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூமியின் எல்லா பாகத்திலும் ஜீவிக்கும் யூதர்களை தேவன் கூட்டிச்சேர்ப்பார். (ஏசா 11:10-12; எசே 37; மத் 24:29-31) மரித்த யூதரும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். சமுத்திரத்தின் ஆழத்தில் இருப்பவர்களையும் தேவன் திரும்ப அழைத்து வருவார். சமுத்திரம் மரித்துப்போன துன்மார்க்கரை ஒப்புவிப்பதுபோல (வெளி 20:11-15) மரித்துப்போன நீதிமான்களையும் ஒப்புவிக்கும். (யோவான் 5:28-29; 1தெச 4:16)

"என் கால்கள் சத்துருக்களின் இரத்தத்தில் பதியும்படியாகவும்" மரித்துப்போன நீதிமான்கள் அர்மெகதோனில் நடைபெற்ற யுத்தத்தில் கிறிஸ்துவோடு கூட யுத்தம் பண்ணியவர்கள். இவர்கள் சத்துருக்களின் இரத்தத்தின்மீது நடந்து வருவார்கள். 184 மைலகள் நீளத்திற்கு சத்துருக்களின் இரத்தம் ஆறாக ஓடும். (எசே 39:17-21; யோவே 3; சக 14; மல் 4; வெளி 14:14-21; வெளி 19:11-21)

"உன் நாய்களின் நாவு அதை நக்கும்படியாகவும்," அர்மெகதோனில் சத்துருக்களின் இரத்தத்தை நாய்கள் நக்கும். இந்த காரியம் கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. (எசே 39:17-21; மத் 24:28; லூக்கா 17:34-37; வெளி 19:17-21)

"தேவனே......என் தேவனும் என் ராஜாவும்". மேசியாவின் நாட்களில் தேவனை ஆராதிப்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. (சங் 68:29-35; ஏசா 2:2-24; சக 14:16-21)

"இஸ்ரவேலின் ஊற்று". இஸ்ரவேலின் முற்பிதாவாகிய ஆபிரகாமைக் குறிக்கும் சொல். (ஏசா 48:1; ஏசா 51:2)

"சின்ன பென்யமீனும், யூதாவின் பிரபுக்களும், அவர்கள் கூட்டமும், செபுலோனின் பிரபுக்களும், நப்தலியின் பிரபுக்களும்". இந்த சங்கீதத்தில் இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் குறிப்பிடப்படவில்லை. ஒரு சில கோத்திரத்தார் மட்டுமே இங்கு குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள். பென்யமீனும், யூதாவும்இஸ்ரவேலை ஆளுகை செய்த கோத்திரத்தார். செபுலோனும், நப்தலியும் இஸ்ரவேலைக் காப்பதற்காக தங்கள் ஜீவனையே பணையமாக வைத்தவர்கள். (நியா 5:18)

"எருசலேமிலுள்ள உம்முடைய ஆலயத்தினிமித்தம், ராஜாக்கள் உமக்குக் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்". பூமியிலுள்ள இராஜாக்கள் நித்திய தேவாலயத்திற்கு தங்கள் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள். அங்கு கிறிஸ்து ஆட்சி புரிவார். (எசே 43:7) காணிக்கைகளையும், பகுதிப்பணங்களையும் செலுத்துவதினால் தாங்கள் கிறிஸ்துவிற்கு கீழ்ப்படிகிறவர்கள் என்பதை அவர்கள் அங்கீகாரம் பண்ணுகிறார்கள். (சங் 68:30-31) எத்தியோப்பியாவும், எகிப்துவும் கர்த்தரைச் சேவித்து அந்நாளில் கர்த்தரை ஆராதிப்பார்கள். (சங் 68:31)

8. எல்லா தேசங்களும் தேவனைத் துதிக்கவேண்டுமென்று மூன்று கட்டளைகள் - காரணங்கள்

சங் 68:32 பூமியின் ராஜ்யங்களே, தேவனைப் பாடி, ஆண்டவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். (சேலா.)

சங் 68:33 ஆதிமுதலாயிருக்கிற வானாதிவானங்களின் மேல் எழுந்தருளியிருக்கிறவரைப் பாடுங்கள்; இதோ, தமது சத்தத்தைப் பலத்த சத்தமாய் முழங்கப்பண்ணுகிறார்.

"வானாதி வானங்களின் மேல் எழுந்தருளியிருக்கிறவர்". கர்த்தர் வானங்களின் மேலும் (சங் 68:4,33) மேகங்கள் மேலும் (ஏசா 19:1) கேரூபின்கள் மேலும் (சங் 18:10; 2சாமு 22:11) இரதங்கள்மேலும் (சங் 68:17; எசே 1) எழுந்தருளியிருக்கிறார். இது தவிர மற்ற உபாயங்கள் மூலமாகவும் கர்த்தர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எழுந்தருளினார் (ஆதி 3:8; ஆதி 11:5; ஆதி 18:33).

சங்கீதம் - தொகுப்புரை

68 அதிகாரம்

“அவருடைய வல்லமை மேக மண்டலங்களிலும் உள்ளது”. கர்த்தருடைய வல்லமை மின்னல், இடி ஆகியவற்றின் மூலமாக மேக மண்டலங்களில் பிரசித்தமாயிற்று. *(சங் 29)*

“தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்”. கர்த்தர் தமது ஆலயத்தில் இருக்கும்போது அவருடைய சமூகத்தில் நாம் பயத்தோடும், பக்தியோடும் வரவேண்டும்.

சங்கீதம் - தொகுப்புரை

69 அதிகாரம்

(சோஷனீம் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)

மேசியாவைப்பற்றிய பதினான்காவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மூன்று விண்ணப்பங்கள் - மேசியாவும், தாவீதுடைய நெருக்கத்தின் பன்னிரெண்டு அம்சங்களும் - (69:1-6)
2. மேசியாவும் தாவீதுடைய இகழ்வின் பன்னிரெண்டு அம்சங்களும் - (69:7-12)
3. பதினாறு விண்ணப்பங்கள் - மேசியாவினிடத்தில் இகழ்ந் துரைப்பதன் எட்டு அம்சங்கள் - (69:13-21)
4. யூதாசின் மீது பன்னிரெண்டு அம்ச சாபம் - மேசியாவை சிலுவையில் அறைபவர்கள் - (69:22-28)
5. ஜெபமும் இரட்சிப்புக்காகத் தேவனைத் துதிப்பதும் - (69:29-33)
6. மேசியாவின் கீழ் இஸ்ரவேல் மீட்கப்படுவதற்காகத் துதித்தல் - (69:34-36)

1. மூன்று விண்ணப்பங்கள் - மேசியாவும், தாவீதுடைய நெருக்கத்தின் பன்னிரெண்டு அம்சங்களும்

சங் 69:1 தேவனே, என்னை இரட்சியும்; வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது.

சங் 69:2 ஆழமான உளையில் அமிழ்ந்திருக்கிறேன், நிற்க நிலையில்லை, நிலையாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன்; வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது.

சங் 69:3 நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன்; என் தொண்டை வறண்டு போயிற்று; என் தேவனுக்கு நான் காத்திருக்கையால், என் கண்கள் பூத்துப் போயிற்று.

சங் 69:4 நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்; வீணாக எனக்குச் சத்துருக்களாகி என்னை சங்கரிக்க வேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள்; நான் எடுத்துக் கொள்ளாததை நான் கொடுக்க வேண்டியதாயிற்று.

சங் 69:5 தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்; என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை.

சங் 69:6 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப் போகாதிருப்பார்களாக; இஸ்ரவேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. என்னை இரட்சியும் (சங் 69:1)
2. உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப் போகாதிருப்பார்களாக (சங் 69:6)
3. உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக
4. எனக்குச் செவிகொடுத்தருளும் (சங் 69:13)
5. சேற்றினின்று என்னைத் தூக்கி விடும் (சங் 69:14)
6. நான் அமிழ்ந்துப் போகாதபடிச் செய்யும்
7. என்னைப் பகைக்கிறவர்களின்று நான் நீங்கும்படிச் செய்யும்
8. நிலையாத ஜலத்தினின்றும் நான் நீங்கும்படிச் செய்யும்

69 அதிகாரம்

9. ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரளாமல் இருப்பதாக (சங் 69:15)

10. ஆழம் என்னை விழுங்காமல் இருப்பதாக

11. பாதாளம் என்மேல் தன் வாயை அடைத்துக்கொள்ளாமல் இருப்பதாக

12. என் விண்ணப்பத்தைக் கேட்டருளும் (சங் 69:16)

13. எனக்குத் திரும்பும்

14. உமது முகத்தை எனக்கு மறையாதேயும் (சங் 69:17)

15. எனக்குத் தீவிரமாய்ச் செவி கொடுத்தருளும்

16. நீர் என் ஆத்துமாவினிடத்தில் வாரும் (சங் 69:18)

17. என் ஆத்துமாவை விடுதலை பண்ணும்

18. என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும்

19. அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியாயிருக்கக்கடவது(சங்69:22)

20. அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக் கடவது

21. அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்தகாரப்படக்கடவது (சங் 69:23)

22. அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும்

23. உம்முடைய உக்கிரத்தை அவர்கள் மேல் ஊற்றும் (சங் 69:24)

24. உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக

25. அவர்கள் வாசஸ்தலம் பாழாகக்கடவது (சங் 69:25)

26. அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற்போவதாக

27. அக்கிரமத்தின் மேல் அக்கிரமத்தை அவர்கள் மேல் சுமத்தும் (சங் 69:27)

28. அவர்கள் உமது நீதிக்கு வந்தொட்டாதிருப்பார்களாக

29. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக (சங் 69:28)

30. நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக

31. உம்முடைய இரட்சிப்பு எனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக (சங் 69:29)

தாவீதிற்கு ஏராளமான பிரச்சனைகள் இருந்தன. சவுலைச் சந்தித்த நாளிலிருந்து அவனுடைய மரணம் வரையிலும் தாவீது பல பிரச்சனைகளைச் சந்தித்தான். தன் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனிடம் சமர்ப்பித்து தேவன் தனக்கு உதவி புரிவார் என்று பொறுமையோடு காத்திருந்தான்.

"வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது" என்பது துன்பங்கள் ஏராளமாக வருகிறது என்று பொருள்படும் எபிரெய பாஷையின் மரபு வழக்கு. (சங் 69:1-3,14-15; சங் 18:4,16; சங் 32:6; சங் 42:7)

"ஆழமான உளை" - பாவம், பெரிய பிரச்சனைகள் ஆகியவற்றின் உருவகம் (சங் 69:2,14; யோபு 30:19; யோபு 41:30).

"நிற்க நிலையில்லை" - பாவத்திற்கு அஸ்திபாரம் இல்லை. ஆகையினால் பாவியும், நிலையில்லாமல் தத்தளித்துக் கொண்டே இருப்பான்.

"நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன்; என் தொண்டை வறண்டுபோயிற்று" - நீண்ட நேரம் ஜெபம் பண்ணி, அதிக நாட்களாக உபவாசம் இருந்து ஜெபிக்கும்போது இப்படிப்பட்ட அனுபவம் வரும். (சங் 22:15; சங் 31:9; சங் 38:10; சங் 119:82,123)

69 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 54

"நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்" (சங் 69:4) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யோவான் 15:25-இல் இயேசு கிறிஸ்து இந்த வசனத்தை மேற்கோளாக கூறியிருக்கிறார்.

மேசியா கொடுக்கும் காரியங்கள்

1. கிருபையினால் பரிபூரணமடைதல் (யோவான் 1:16-17)
2. கர்த்தருடன் ஐக்கியமாதல் (எபே 1:10)
3. நித்திய வாழ்வு (யோவான் 3:16; 1யோவான் 5:11)
4. நலமும், குணமாகுதலும் (மத் 8:17; 1பேதுரு 2:24; வெளி 22:1-2)
5. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை (ஏசா 61:1; எபே 4:8-10)
6. கட்டுக்களிலிருந்து விடுதலை (ஏசா 61:1; ரோமர் 8:19-24)
7. இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதல் (ஏசா 61:1)
8. துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்தல் (ஏசா 61:2-3 மத் 5:4)
9. சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தைக் கொடுத்தல் (ஏசா 61:3)
10. துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தைக் கொடுத்தல் (ஏசா 61:3)
11. ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையைக் கொடுத்தல் (ஏசா 61:3)
12. இளைத்தவனை இளைப்பாறப் பண்ணத்தக்க இளைப்பாறுதல் (ஏசா 28:11; மத் 11:28-30)
13. நெருக்கங்களுக்கும், யுத்தத்திற்கும் பதிலாக தேவசமாதானம் (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; பிலி 4:7)
14. பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்து தம்முடைய நீதியைக் காண்பித்தல் (ரோமர் 3:24-31; 2கொரி 5:14-21)
15. கர்த்தருடைய வல்லமையினால் (நாமத்தினால்) பிசாசுகளைத் துரத்துதல் (மாற்கு 16:17-18; யோவான் 14:12; அப் 1:8)
16. பயம், மரணம், மற்றும் எல்லா இடுக்கண்களிலிருந்து விடுதலை (வெளி 21:3-7)
17. மனுஷனுடைய ராஜ்யம் (சங் 8:3-7; அப் 3:21; எபி 2:9)
18. தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார் (1கொரி 15:24-28; வெளி 21-22)

பாவத்தின் விளைவினால் மனுஷன் இழந்து போனதை மேசியா திரும்பவும் கொடுப்பார். நாம் பாவத்திலிருந்து விலகி ஜீவிக்கும்போது தேவனுடைய ஆசீர்வாதம் நமக்கு வரும்.

"தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்; என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை". இது தாவீது தன்னைப் பற்றிக் கூறும் காரியம். மேசியாவைப் பற்றிக் கூறவில்லை. சங் 69:4 கிறிஸ்துவிற்குப் பொருந்தும். ஏனெனில் யோவான் 15:25-இல் கிறிஸ்து இதைப் பயன்படுத்தியிருக்கிறார். தேவன் பாவம் அறியாதவர். (1பேதுரு 2:21-22)

"சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப் போகாதிருப்பார்களாக". இது நீதிமானின் ஜெபம். கிருபையின் கீழும், நியாயப்பிரமாணத்தின் கீழும் உள்ள நீதிமான் இவ்வாறுதான் ஜெபிப்பான்.

"உமதுநிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று" என்னும் இந்த வசனம் தாவீதையும், கிறிஸ்துவையும் குறிக்கும். இருவருமே நிந்தையைச் சகித்தார்கள். இருவருக்குமே அவர்களுடைய விரோதிகள் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும் இலச்சை உண்டாயிற்று.

69 அதிகாரம்

2. மேசியாவும் தாவீதுடைய இகழ்வின் பன்னிரெண்டு அம்சங்களும்

சங் 69:7 உமதுநிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று.

சங் 69:8 என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்.

சங் 69:9 உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது.

சங் 69:10 என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்; அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது.

சங் 69:11 இரட்டை என் உடுப்பாக்கினேன்; அப்பொழுதும் அவர்களுக்குப் பழமொழியானேன்.

சங் 69:12 வாசலில் உட்கார்ந்திருக்கிறவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள்; மதுபானம் பண்ணுகிறவர்களின் பாடலானேன்.

தீர்க்கதரிசன எண் - 55

"என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்..........." (சங் 69:8-9) - இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவில் நிறைவேறிற்று. யோவான் 2:17; ரோமர் 15:3 ஆகிய வசனங்களில் இந்த வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்". மரியாளுடைய வயிற்றில் கிறிஸ்து பிறந்ததற்குப் பின்பு அவளுக்கு மேலும் சில பிள்ளைகள் பிறந்தார்கள். இயேசு கிறிஸ்துவிற்கு சகோதரர்கள் இருந்தார்கள். (லூக்கா 8:19)

"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது". தேவனுடைய மகிமையும், தேவனுடைய ஆலயத்தின் மகிமையுமே தாவீதின் பிரதான வாஞ்சை. யோவான் 2:17-இல் இந்த வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" என்னும் வசனம் ரோமர் 15:3-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

சங் 69:10-12 ஆகிய வசனங்கள் தாவீதின் ஜீவியத்திலும், இயேசு கிறிஸ்துவிலும் நிறைவேறிற்று. தாவீது தனக்கு வந்த துன்பங்களின் மத்தியில் அவன் உபவாசம் பண்ணி ஜெபித்தபோது, இந்தக் காரியங்கள் நடைபெற்றன. (சங் 69:2,14-15,17-20,22-36)

"என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து" - ஜெபமும், உபவாசமும் அவிசுவாசத்தை அகற்றும்.

இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் ஜெபம், உபவாசம் ஆகியவற்றின் வல்லமையை எடுத்துக் கூறினார். (மத் 17:14-21) விசுவாசம் வளர ஜெபிக்க வேண்டும். ஜெபத்தின் தரம் உயர உபவாசிக்க வேண்டும். நாம் ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் உபவாசம் பண்ணும்போது, தேவன் அற்புதங்களைச் செய்வார். இது வேதாகம உபதேசம்.

போஜனம் பண்ணாமல் இருப்பது உபவாசம். மனுஷன் ஆதியிலே தான் விரும்பியதைப் புசித்து, பாவத்தில் விழுந்தான். உபவாசம் ஒரு மனுஷனுடைய ஆத்துமாவை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்துகிறது. (சங் 35:13) ஆத்துமாவைச் சிட்சிக்கிறது. (சங் 69:10) மனுஷனுடைய ஆசைகள் சிலுவையில் அறையப்பட்டு, ஜெபத்தில் முழுக்கவனம் செலுத்தப்படுகிறது. (2சாமு 12:16-23; மத் 4:1-11) உபவாசம் பண்ணும்போது தேவனைக் கீழ்ப்படிதலோடும், வாஞ்சையோடும்தேடுகிறோம். (1கொரி 7:5) நமது சரீரத்திற்கு ஓய்வு கிடைக்கிறது. (மத்6:16-18; மத் 9:15; லூக்கா 5:33) சோதனையிலிருந்து வெற்றியும், சாத்தானுடைய அந்தகார சக்திகளின்மீது வல்லமையும் நமக்கு வருகிறது. (மத் 4:1-11; மத் 17:14-21)

சங்கீதம் - தொகுப்புரை

69 அதிகாரம்

எல்லா விசுவாசிகளும் உபவாசம் பண்ணி ஜெபிக்க வேண்டும். எப்போது என்பதை மனுஷனே தீர்மானிக்க வேண்டும். (மத் 9:14-15; 1கொரி 7:5; அப் 13:1-5) மனுஷன் சிட்சிக்கப்படும்போதும் (2சாமு 12:16-23), நியாயத்தீர்ப்பின்கீழ் வரும்போதும் (1இராஜா 21:27), தேவையில் இருக்கும்போதும் (எஸ்றா 8:21), ஆபத்தில் இருக்கும்போதும் (எஸ் 4), கவலைப்படும்போதும் (தானி 6:18), இக்கட்டில் இருக்கும்போது (அப் 27:9,33), ஆவிக்குரிய யுத்தத்தில் பங்குபெறும்போதும் (மத் 4:1-11), ஜெபத்தில் இருக்கும்போதும் (அப் 9) நாம் உபவாசம் பண்ணவேண்டியது அவசியம்.

பரிசுத்த வேதாகமத்தில் உபவாசம் பண்ணியவர்களைப் பற்றிய குறிப்பு

1. ஆகாப் (1இராஜா 21:27-29)
2. யூதா (2நாளா 20:1-25)
3. யூதா (எஸ்றா 8:21-23)
4. எஸ்றா (எஸ்றா 10:6-17)
5. நினிவே (யோனா 3)
6. நெகேமியா (நெகே 1:4-2:10)
7. யூதர்கள் (எஸ் 4:1-3; எஸ் 9:1-3)
8. தாவீது (சங் 35:13; சங் 69:10; சங் 109:24)
9. யோவானின் சீடர்கள் (மத் 9:14-15)
10. அன்னாள் (லூக்கா 2:37)
11. அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபை (அப் 13:1-5)
12. பவுல் (அப் 27:9-11)
13. கொர்நேலியு (அப் 10)
14. அநேக சபைகள் (அப் 14:23)
15. பவுல் (2கொரி 6:5; 2கொரி 11:27)
16. தாவீது - ஒரு நாள் (2சாமு 3:35)
17. யூதா - ஒருநாள் (நெகே 9:1-4)
18. யூதா - ஒருநாள் (எரே 36:6)
19. தானியேல் - ஒருநாள் (தானி 9:3,20-27)
20. பரிசேயர் - ஒருநாள் (லூக்கா 18:9-14)
21. இஸ்ரவேல் - ஒருநாள் (நியா 20:26-35)
22. இஸ்ரவேல் - ஒருநாள் (1சாமு 7:6-14)
23. தாவீது - ஒருநாள் (2சாமு 1:12)
24. தரியு - ஓர் இரவு (தானி 6:18-24)
25. எஸ்தர், மொர்தெகாய் - மூன்று நாட்கள் (எஸ் 4:13-9:3)
26. ஜனங்கள் அநேகர் - மூன்று நாட்கள் (மத் 15:32-39)
27. பவுல் - மூன்று நாட்கள் (அப் 9:9,17)
28. தாவீது - ஏழு நாட்கள் (2சாமு 12:16-23)
29. இஸ்ரவேல் - ஏழு நாட்கள் (1சாமு 31:13)
30. பவுல், 276 மனுஷர்கள் - பதிநான்கு நாட்கள் (அப் 27:33-34)
31. தானியேல் - இருபத்தோடு நாட்கள் (தானி 10:3-13)
32. மோசே - நாற்பது நாட்கள் (உபா 9:9-10:10)
33. யோசுவா - நாற்பது நாட்கள் (யாத் 24:13-18; யாத் 32:15-17)
34. எலியா - நாற்பது நாட்கள் (1இராஜா 19:7-18)
35. இயேசு - நாற்பது நாட்கள் (மத் 4:1-11)

ஜெபமும் உபவாசமும் வல்லமையுள்ளவை. வேதாகம உபதேசத்திற்கு உட்பட்டவை. தேவனுடைய வல்லமையைப் பெற இது உதவும். பிசாசின் வல்லமையை உபவாசத்தால் ஜெயிக்கலாம்.

69 அதிகாரம்

துயரங்கள்

1. நண்பர்களால் நிராகரிக்கப்படுதல் (சங் 69:7)
2. சகோதரர்களால் கைவிடப்படல் (சங் 69:8)
3. சத்துருக்களால் இகழப்படுதல் (சங் 69:9,18)
4. சிறுமையானவர்கள் நிந்தித்தல் (சங் 69:9-11)
5. உபவாசித்து அழுதல் (சங் 69:10)
6. அடிமைகள் பரிகாசித்தல் (சங் 69:11)
7. மதுபானம் பண்ணுகிறவர்களின் பாடலாகி நிராகரிக்கப்படுதல் (சங் 69:12)
8. சொந்த ஜனங்களால் வெறுக்கப்படுதல் (சங் 69:14-15)
9. இடுக்கண்களால் விழுங்கப்படுதல் (சங் 69:14-15)
10. நிந்தையினால் இருதயம் பிளக்கப்படுதல் (சங் 69:20)

3. பதினாறு விண்ணப்பங்கள் - மேசியாவினிடத்தில் இகழ்ந்துரைப்பதன் எட்டு அம்சங்கள்

சங் 69:13 ஆனாலும் கர்த்தாவே, அநுக்கிரககாலத்திலே உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன்; தேவனே, உமது மிகுந்த கிருபையினாலும், உமது இரட்சிப்பின் சத்தியத்தினாலும் எனக்குச் செவிகொடுத்தருளும்.

சங் 69:14 நான் அமிழ்ந்திப் போகாதபடிக்குச் சேற்றினின்று என்னை தூக்கிவிடும்; என்னைப் பகைக்கிறவர்களினின்றும் நிலையாத ஜலத்தினின்றும் நான் நீங்கும்படி செய்யும்.

சங் 69:15 ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரளாமலும், ஆழம் என்னை விழுங்காமலும், பாதாளம் என்மேல் தன் வாயை அடைத்துக்கொள்ளாமலும் இருப்பதாக.

சங் 69:16 கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், உம்முடைய தயை நலமாயிருக்கிறது; உமது உருக்கமான இரக்கங்களின்படி என்னைக் கடாட்சித்தருளும்.

சங் 69:17 உமது முகத்தை உமது அடியேனுக்கு மறையாதேயும்; நான் வியாகுலப்படுகிறேன், எனக்குத் தீவிரமாய்ச் செவிகொடுத்தருளும்.

சங் 69:18 நீர் என் ஆத்துமாவினிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும்; என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும்.

சங் 69:19 தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர்; என் சத்துருக்கள் எல்லாரும் உமக்கு முன்பாக இருக்கிறார்கள்.

சங் 69:20 நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்.

சங் 69:21 என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.

தயை (lovingkindness) - חֶסֶד - kheh'-sed - 2617

ஆண்பால் பெயர்ச்சொல் - தயை, கிருபை (grace)

கர்ப்பம் (offspring) רַחַם - rakh'-am - 7356

பொதுப்பெயர்ச்சொல் - கர்ப்பம், பெண் - ஒரு தாய் தன் குழந்தையிடம் காண்பிக்கும் அன்பு(tender mercies)

69 அதிகாரம்

வியாகுலத்தை 75 சங்கீதங்கள் விவரிக்கின்றன. அவையாவன சங் 3-10; சங் 15; சங் 18; சங் 25; சங் 27; சங் 30-32; சங் 34; சங் 35; சங் 37-41; சங் 46; சங் 50; சங் 51; சங் 55-59; சங் 61-64; சங் 66; சங் 68-71; சங் 75; சங் 77-79; சங் 81; சங் 84; சங் 86; சங் 88; சங் 90; சங் 91; சங் 94; சங் 101-103; சங் 105; சங் 107; சங் 109; சங் 116; சங் 118; சங் 120; சங் 121; சங் 123-126; சங் 129; சங் 130; சங் 138; சங் 140-147.

"தீவிரமாய்" - கர்த்தர் நமக்கு விரைவாகப் பதில் தர வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் கர்த்தருக்கு விரைவாகக் கீழ்ப்படிகிறோமோ?

தீர்க்கதரிசன எண் - 56

"தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர்; என் சத்துருக்கள் எல்லாரும் உமக்கு முன்பாக இருக்கிறார்கள்........" (சங் 69:19-21) - இந்தத் தீர்க்கதரிசனம் மேசியாவின் பாடுகளில் நிறைவேறிற்று.

மேசியாவின் பாடுகள்

1. நிராகரித்தல், கைவிடப்படல் (சங் 69:19)
2. வெட்கம்
3. அவமானம்
4. சத்துருக்கள்
5. நொருங்குண்ட இருதயம் (சங் 69:20)
6. மிகுந்த வேதனை
7. பரிதபிக்கிறவன் ஒருவனுமில்லை
8. தேற்றுகிறவன் ஒருவனுமில்லை
9. கசப்பான ஆகாரம் (சங் 69:21)
10. காடியைக் குடிக்கக் கொடுத்தல்

கசப்பு (gall) - ראשׁ - roshe, roshe - 7219

ஆண்பால் பெயர்ச்சொல் - பித்து, விஷம், கசப்பு (poisonous herb; venom) - (உபா 29:18; உபா 32:32; எரே 8:14; எரே 9:15; எரே 23:15; புல 3:5,19; ஆமோ 6:12).

காடி - புளித்த திராட்சப் பழத்திலிருந்து உண்டாக்கப்படும் பழரசம். சங் 69:19-20, 21 ஆகிய வசனங்கள் மேசியாவைக் குறிக்கும். புதிய ஏற்பாட்டில் மத் 27:34,48; மாற்கு 15:23,36; லூக்கா 23:36; யோவான் 19:28-30 ஆகிய வசனங்கள் காடியைப் பற்றி கூறுகின்றன.

4. யூதாசின் மீது பன்னிரெண்டு அம்ச சாபம் - மேசியாவை சிலுவையில் அறைபவர்கள்

சங் 69:22 அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும், அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது.

சங் 69:23 அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்தகாரப்படக்கடவது; அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும்.

சங் 69:24 உம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றும்; உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக.

சங் 69:25 அவர்கள் வாசஸ்தலம் பாழாகக் கடவது; அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற் போவதாக.

சங் 69:26 தேவரீர் அடித்தவனை அவர்கள் துன்பப்படுத்தி, நீர் காயப்படுத்தினவர்களை நோகப் பேசுகிறார்களே.

சங் 69:27 அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தை அவர்கள்மேல் சுமத்தும், அவர்கள் உமது நீதிக்கு வந்தெட்டாதிருப்பார்களாக.

சங் 69:28 ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப் போவதாக; நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக.

69 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 57

"அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும், அவர்களுடைய செல்வம் அவர்களுக்குவலையுமாயிருக்கக்கடவது..........." (சங் 69:22-28) - இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசிடத்திலும், மேசியாவைச் சிலுவையில் அறைந்தவர்களிடத்திலும் நிறைவேறிற்று.

யூதாஸ் மீதும் ஆசாரியர் மீதும் வந்த சாபம்

1. அவர்கள் பந்தி அவர்களுக்குக் கண்ணியாயிருக்கிறது
2. அவர்கள் செல்வம், அவர்களுக்கு வலையாயிருக்கிறது
3. அவர்களுடைய கண்கள் அந்தகாரப்பட்டது
4. அவர்கள் காணக் கூடாதவர்களானார்கள்
5. அவர்கள் இடுப்புகள் எப்போதும் தள்ளாடிற்று
6. தேவனுடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றினார்
7. அவர்கள் வாசஸ்தலம் பாழாயிற்று
8. அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற்போயிற்று
9. அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தை அவர்கள் மேல் சுமத்தப்பட்டது
10. கர்த்தருடைய நீதிக்கு வந்தொட்டவில்லை
11. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போயிற்று
12. நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாமற்போயிற்று

"அவர்கள் வாசஸ்தலம் பாழாகக் கடவது; அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற் போவதாக" - அப் 1:20 இல் யூதாஸ் ஸ்காரியோத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. சங் 69:22-28 ஆகிய வசனங்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தவர்களையும் யூதாசையும் குறிக்கும். யூதாசின் பெயர் ஜீவ புஸ்தகத்தில் முதலாவது எழுதப்பட்டிருந்தது. பின்பு அவனுடைய பாவத்தினால் அவனுடைய பெயர் கிறுக்கிப் போடப்பட்டது (யாத் 32:32-33; வெளி 3:5; வெளி 22:18-19; யோவான் 17:2-3,12; அப் 1:20,25).

"தேவரீர் அடித்தவனை அவர்கள் துன்பப்படுத்தினார்கள்" - அவர்கள் மேசியாவைத் துன்பப்படுத்தினார்கள். தேவன் அவரை நொறுக்கினார் (ஏசா 53:4; சக 13:7). இதுவே சங் 69:22-28 ஆவது வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தின் நோக்கம்.

"நீர் காயப்படுத்தினவர்கள்" - இவர்கள் மேசியாவைப் பின்பற்றுவார்கள் (அப் 4:3; அப் 5:40; அப் 7:58; அப் 8:1-4; அப் 9:1; அப் 22:4).

கூட்டப்படும் காரியங்கள்

1. பரிசுத்தமானதைக்குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக. (லேவி 5:15-16)
2. பலாத்காரமாய் பற்றிக் கொண்டதில் ஐந்தில் ஒரு பங்கு (லேவி 6:4-5)
3. தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டதில் ஐந்தில் ஒரு பங்கு (லேவி 6:4)
4. காணாமற்போயிருந்து தான் கண்டெடுத்ததில் ஐந்தில் ஒரு பங்கு (லேவி 6:4)
5. இடுக்கண் செய்து பெற்றுக் கொண்டதில் ஐந்தில் ஒரு பங்கு (லேவி 6:4-5)
6. பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டதை மீட்டுக்கொள்ள மனதாயிருக்கும்போது ஐந்தில் ஒரு பங்கு (லேவி 27:13-29)

69 அதிகாரம்

7. தேவாலய பராமரிப்பு (1நாளா 22:14)

8. ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன் (லேவி 27:27-31)

9. விசுவாசத்தோடே தைரியத்தையும் (2பேதுரு 1:5)

10. தைரியத்தோடே ஞானத்தையும் (2பேதுரு 1:5)

11. ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் (2பேதுரு 1:6)

12. இச்சையடக்கத்தோடே பொறுமையையும் (2பேதுரு 1:6)

13. பொறுமையோடே தேவபக்தியையும் (2பேதுரு 1:6)

14. தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும் (2பேதுரு 1:7)

15. சகோதரசிநேகத்தோடே அன்பையும் (2பேதுரு 1:7)

கூட்டக்கூடாத காரியங்கள்

1. தூகத்தினிமித்தம் வெறிக்கக் குடிக்கக் கூடாது (உபா 29:19)

2. மீறுதல்கள்மீது பாவம் (2நாளா 28:13)

3. அக்கிரமத்தின் மேல் அக்கிரமம் (சங் 69:27; ரோமர் 6:16-23)

4. தேவனுடைய வார்த்தையோடு மனுஷனுடைய வார்த்தையை (உபா 4:2; உபா 12:32; உபா 30:6; வெளி 22:18)

"ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக; நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக" - ஜீவபுஸ்தகத்தில் ஒருவனுடைய பெயர் ஒருமுறை எழுதப்பட்டால், அது கிறுக்கப்படாது என்று நினைக்கிறார்கள். இது தவறான உபதேசம் (யாத் 32:33; யாத் 32:32; வெளி 3:5; வெளி 22:19). ஜீவ புஸ்தகத்தில் நீதிமானின் பெயர் எழுதப்பட்டிருக்கும்.

5. ஜெபமும் இரட்சிப்புக்காகத் தேவனைத் துதிப்பதும்

சங் 69:29 நானோ சிறுமையும் துயரமுமுள்ளவன்; தேவனே, உம்முடைய இரட்சிப்பு எனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக.

சங் 69:30 தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப் படுத்துவேன்.

சங் 69:31 கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப்பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்.

சங் 69:32 சாந்தகுணமுள்ளவர்கள் இதைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்; தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும்.

சங் 69:33 கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார், கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்.

சிறுமைப்பட்டவன் **(poor)** עָנִי - aw-nee' - 6041

பெயரடை - சிறுமைப்பட்டிருக்கிற, எளிய, எளியவர், தரித்திரனான, ஏழை, எளிமையான, துன்மார்க்கன், சிறுமையான,சிறுமைப்பட்டவர்களுடைய உபத்திரவப்பட்டவனுடைய, துயரப் படுகிற, தாழ்மையுள்ள, விசாரிப்பு, சிறுமைப்பட்ட **(oppressed; afflicted)** - (உபா 15:11; உபா 24:14; யோபு 24:14; சங் 37:14; சங் 40:17; சங் 70:5; சங் 74:21; சங் 86:1; சங் 109:16, 22; நீதி 31:9; ஏசா 41:17; எரே 22:16; எசே 16:49; எசே 18:12; எசே 22:29).

69 அதிகாரம்

மிருகங்களைப் பலியிடுவதைவிட மேன்மையான காரியங்கள்

1. தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதிப்பது
2. கர்த்தரை ஸ்தோத்திரிப்பது (சங் 69:30-31)

"தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும்" - (1பேதுரு 3:4; சங் 22:26).

எளியவன் (poor) אֶבְיוֹן - eb-yone' - 34.

பெயரடை - எளியவன், ஏழை, தரித்திரன் (helpless) - (நீதி 6:11).

"கட்டுண்டவர்கள்" - தேவனுக்காகவும் அவருடைய வார்த்தைக்காகவும் சிறையில் அடைக்கப்பட்டவர்கள். யோசேப்பு (ஆதி 39), சிம்சோன் (நியா 16:21), மீகாயா (1இராஜா 22:27).

6. மேசியாவின் கீழ் இஸ்ரவேல் மீட்கப்படுவதற்காகத் துதித்தல்

சங் 69:34 வானமும் பூமியும் சமுத்திரங்களும் அவைகளில் சஞ்சரிக்கிற யாவும் அவரைத் துதிக்கக்கடவது.

சங் 69:35 தேவன் சீயோனை இரட்சித்து, யூதாவின் பட்டணங்களைக் கட்டுவார்; அப்பொழுது அங்கே குடியிருந்து அதைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

சங் 69:36 அவருடைய ஊழியக்காரரின் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்; அவருடையநாமத்தை நேசிக்கிறவர்கள் அதில் வாசமாயிருப்பார்கள்.

தீர்க்கதரிசன எண் - 58

"வானமும் பூமியும் சமுத்திரங்களும் அவைகளில் சஞ்சரிக்கிற யாவும் அவரைத் துதிக்கக்கடவது................" (சங் 69:34-36) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, இஸ்ரவேலர்கள் மீட்கப்பட்டு ஒரு தேசமாக ஒன்று சேரும்போது, இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் (சக 14; அப் 15:13-18).

வருங்காலத்தில் நடைபெறப்போகும் காரியங்கள்

1. வானமும் பூமியும் சமுத்திரங்களும் அவைகளில் சஞ்சரிக்கிற யாவும் அவரைத் துதிக்கும். (சங் 69:34; சக 14:16-21; மல் 1:11)
2. சீயோனின் இரட்சிப்பு (ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29)
3. யூதாவின் பட்டணங்களைக் கட்டுவார் (சங் 69:35; சங் 102:16; ஏசா 58:12; ஏசா 60:10; ஏசா 61:4; ஏசா 65:21; எசே 48)
4. தேசத்தைத் திரும்ப ஒப்படைத்தல் (சங் 69:35; ஏசா 11:10-12; எசே 37; எசே 48; மத் 24:31; அப் 15:13-18)
5. ஊழியக்காரரின் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (சங் 69:36; எசே 37; எசே 48)
6. அவருடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் அதில் வாசமாயிருப்பார்கள் (சங் 69:36; சக 12:1-13:1; ரோமர் 11:25)

70 அதிகாரம்

(நினைப்பூட்டுதலாகப் பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

பதினான்காவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. மீட்கப்பட வேண்டுமென்று ஒன்பது விண்ணப்பங்கள் - (70:1-5)

1. மீட்கப்பட வேண்டுமென்று ஒன்பது விண்ணப்பங்கள்

சங் 70:1 தேவனே, என்னை விடுவியும், கர்த்தாவே, எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும்.

சங் 70:2 என் பிராணனை வாங்கத் தேடுகிறர்கள் வெட்கி நாணுவார்களாக; எனக்குத் தீங்குவரும்படி விரும்புகிறவர்கள் பின்னிட்டுத் திரும்பி இலச்சையடைவார்களாக.

சங் 70:3 ஆ, ஆ, ஆ, ஆ, என்பவர்கள் தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப்போவார்களாக.

சங் 70:4 உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப் படுவார்களாக; உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.

சங் 70:5 நானோ சிறுமையும் எளிமையுமானவன்; தேவனே, என்னிடத்தில் தீவிரமாய் வாரும்; நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர், கர்த்தாவே தாமதியாதேயும்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. தேவனே, என்னை விடுவியும் (சங் 70:1)
2. எனக்குச் சகாயஞ் செய்யத் தீவிரியும்
3. என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் வெட்கி நாணுவார்களாக (சங் 70:2)
4. அவர்கள் பின்னிட்டுத் திரும்புவார்களாக
5. எனக்குத் தீங்கு வரும்படி விரும்புகிறார்கள். பின்னிட்டுத் திரும்பி இலச்சையடைவார்களாக
6. தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப் போவார்களாக (சங் 70:3)
7. உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக (சங் 70:4)
8. உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று சொல்வார்களாக
9. என்னிடத்தில் தீவிரமாய் வாரும் (சங் 70:5)
10. கர்த்தாவே, தாமதியாதேயும்

71 அதிகாரம்

துதித்து ஜெபிக்கும் ஏழாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. பதினைந்து விண்ணப்பங்கள் - தேவனைப்பற்றிய ஏழுகாரியங்கள் - தேவனுடைய ஏழுகிரியைகள் - சத்துருக்களைப்பற்றிய எட்டு காரியங்கள் - (71:1-13)
2. தேவனைத் துதிப்பதின் ஏழு அம்சங்கள் - (71:14-16)
3. முதிர்வயதில் தேவனுடைய ஆதரவுக்காக ஜெபம் - (71:17-19)
4. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையும் வருங்கால ஜீவியமும் - (71:20-21)
5. தேவனைத் துதிப்பதின் ஏழு அம்சங்கள் - (71:22-24)

1. பதினைந்து விண்ணப்பங்கள் - தேவனைப் பற்றிய ஏழுகாரியங்கள் - தேவனுடைய ஏழுகிரியைகள்- சத்துருக்களைப் பற்றிய எட்டு காரியங்கள்

சங் 71:1 கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.

சங் 71:2 உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்; உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.

சங் 71:3 நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.

சங் 71:4 என் தேவனே, துன்மார்க்கனுடைய கைக்கும், நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.

சங் 71:5 கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.

சங் 71:6 நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்; என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.

சங் 71:7 அநேகருக்கு நான் ஒரு புதுமை போலானேன்; நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்.

சங் 71:8 என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.

சங் 71:9 முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.

சங் 71:10 என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி, என் ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணி,

சங் 71:11 தேவன் அவனைக் கைவிட்டார், அவனைத் தொடர்ந்துபிடியுங்கள்; அவனை விடுவிப்பார் இல்லை என்கிறார்கள்.

சங் 71:12 தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்; என் தேவனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

சங் 71:13 என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும், எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவுங்கடவர்கள்.

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும் (சங் 71:1)

71 அதிகாரம்

2. நீதியினிமித்தம் என்னை விடுவியும் (சங் 71:2)
3. என்னைக் காத்தருளும்
4. உமது செவியை எனக்குச் சாயும்
5. என்னை இரட்சியும்
6. நான் எப்பொழுதும் வந்தடையத் தக்க கன்மலையாயிரும் (சங் 71:3)
7. துன்மார்க்கனிடமிருந்து என்னைத் தப்புவியும் (சங் 71:4)
8. என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக (சங் 71:8)
9. முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமல் இரும் (சங் 71:9)
10. என் பெலன் ஒடுங்கும் போது என்னைக் கைவிடாமல் இரும்
11. எனக்குத் தூரமாயிராதேயும் (சங் 71:12)
12. எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்
13. என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியும்படிச் செய்யும் (சங் 71:13)
14. எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படக்கடவர்கள்
15. என்னைக் கைவிடீராக (சங் 71:18)

தேவனுடைய குணாதிசயங்கள்

1. நான் வந்தடையத்தக்க கன்மலை (சங் 71:3)
2. கன்மலை
3. கோட்டை
4. நோக்கம் (சங் 71:5)
5. நம்பிக்கை
6. பலத்த அடைக்கலம் (சங் 71:7)
7. போதிக்கிறவர் (சங் 71:17)

தேவனுடைய கிரியைகள்

1. என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீர் (சங் 71:3)
2. நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன் (சங் 71:6)
3. என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே
4. என் சிறு வயது முதல் எனக்குப் போதித்து வந்தீர் (சங் 71:17)
5. எனக்குப் பெரிதானவைகளை நீர் செய்தீர் (சங் 71:19)
6. அநேக இக்கட்டுகளையும், ஆபத்துக்களையும் காணும்படிச் செய்தீர் (சங் 71:20)
7. என் ஆத்துமாவை மீட்டுக்கொண்டீர் (சங் 71:23)

சத்துருக்களைப் பற்றிய காரியங்கள்

1. அவர்கள் துன்மார்க்கர் (சங் 71:4)
2. நியாயக்கேடுள்ளவர்கள்
3. கொடுமையானவர்கள்
4. எனக்கு எதிராக ஆலோசனை பண்ணுவார்கள் (சங் 71:10-11)
5. என் ஆத்துமாவை அழிக்கக் காத்திருக்கிறார்கள் (சங் 71:10)
6. என் ஆத்துமாவை அழிக்க ஆலோசனை பண்ணுகிறார்கள்
7. அவர்கள் எனக்கு விரோதிகள் (சங் 71:13)
8. எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறார்கள் (சங் 71:13, 24)

71 அதிகாரம்

நமக்கு முதிர்வயது ஆகும்போது கர்த்தர் நம்மை புறம்பே தள்ளிவிட மாட்டார். நம்முடைய பெலன் ஒடுங்கும்போது அவர் நம்மை கைவிடமாட்டார். நமது வாலிபத்தில் தேவன் நமக்குச் செய்த நன்மைகள் நமது முதிர்வயதில் நமக்கு அதிக நம்பிக்கையைக் கொடுக்கும்.

தேவன் நம்மைக் கைவிட்டுவிட்டதாக நமது சத்துருக்கள் நம்மைப் பற்றிக் கூறுகிறார்கள். ஆனால் தேவன் ஒருபோதும் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடவேமாட்டார். (எபி 11; 2கொரி 11)

2. தேவனைத் துதிப்பதின் ஏழு அம்சங்கள்

சங் 71:14 நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

சங் 71:15 என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்; அவைகளின் தொகையை நான் அறியேன்.

சங் 71:16 கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மை பாராட்டுவேன்.

சங்கீதக்காரனின் பொருத்தனைகள்

1. நான் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருப்பேன்
2. நான் மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்
3. என் வாய் நாள்தோறும் உமது நீதியைச் சொல்லும் (சங் 71:15)
4. நாள்தோறும் உமது இரட்சிப்பைச் சொல்வேன்
5. என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும், அவைகளின் தொகையை நான் அறியேன்
6. கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன் (சங் 71:16)
7. உம்முடைய நீதியைப் பற்றியே மேன்மைபாராட்டுவேன்

3. முதிர்வயதில் தேவனுடைய ஆதரவுக்காக ஜெபம் - (சங் 37:25)

சங் 71:17 தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்து வந்தேன்.

சங் 71:18 இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக.

சங் 71:19 தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?

கர்த்தர் நமது சிறுவயது முதல் இன்று வரையிலும் நமக்கு போதித்து வருகிறார். அவர் நமக்கு போதித்து நம்மை வழிநடத்துகிறவர்.

சங்கீதக்காரனின் வாஞ்சைகள்

1. இந்த சந்ததிக்கு உமது வல்லமையை அறிவிக்க வேண்டும்
2. வரப்போகிற சந்ததிக்கு உமது பராக்கிரமத்தை அறிவிக்க வேண்டும்

71 அதிகாரம்

4. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையும் வருங்கால ஜீவியமும் - *(சங் 16:10; 73:24)*

சங் 71:20 அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்.

சங் 71:21 என் மேன்மையைப் பெருகப் பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர்.

தீர்க்கதரிசன எண் - 59

"அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்" *(சங் 71:20)* - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பியும்". நமது சரீரம் உயிர்த்தெழும் என்னும் விசுவாச அறிக்கை - *(1பேதுரு 3:4; தானி 12:2)*

"திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்" இந்த வாக்கியத்தில் "திரும்பவும்" என்னும் சொல் சீயோல் எனப்படும் பாதாளம் பூமியின் ஆழமான பகுதிகளில் உள்ளது என்பதை உறுதி பண்ணுகிறது.

5. தேவனைத் துதிப்பதின் ஏழு அம்சங்கள்

சங் 71:22 என் தேவனே, நான் வீணையைக் கொண்டு உம்மையும் உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்; இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக்கொண்டு உம்மைப் பாடுவேன்.

சங் 71:23 நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மிட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.

சங் 71:24 எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.

சங்கீதக்காரனின் பொருத்தனைகள்

1. நான் வீணையைக் கொண்டு உம்மைத் துதிப்பேன்
2. உம்முடைய சத்தியத்தைத் துதிப்பேன்
3. சுரமண்டலத்தைக் கொண்டு உம்மைப் பாடுவேன்
4. என் உதடுகள், நான் பாடும்போது மகிழும் *(சங் 71:23)*
5. நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமா கெம்பீரித்து மகிழும்
6. நாள்தோறும் என்நாவு உமது நீதியைக் கொண்டாடும் *(சங் 71:24)*

தேவனைத் துதிப்பதற்கான காரணங்கள்

1. என் இரட்சிப்பைக் கட்டளையிட்டீர் *(சங் 71:3)*
2. நீரே, என் கன்மலையும், என் கோட்டையுமாயிருக்கிறீர்
3. நீரே என் நோக்கம் *(சங் 71:5)*
4. நீரே என் நம்பிக்கை
5. நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன் *(சங் 71:6)*
6. என் தாயின் வயிற்றிலிருந்து பாதுகாக்கிறீர்
7. நீரே எனக்குப் பலத்த அடைக்கலமாய் இருக்கிறீர் *(சங் 71:7)*
8. உம்முடைய நீதி உன்னதமானது, பெரிதானவைகளை நீர் செய்தீர் *(சங் 71:19)*
9. எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் இலச்சையடைவார்கள் *(சங் 71:24)*
10. எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கமடைவார்கள்

72 அதிகாரம்

(சாலொமோனைப்பற்றிய சங்கீதம்.)

மேசியாவைப்பற்றிய பதினைந்தாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நியாயத் தீர்ப்புக்காகவும் தேவனிடமிருந்து வரும் நீதிக்காகவும் ஜெபம் - (72:1)

2. மேசியாவின் ஆளுகை - (72:2-17)

   (1) இதன் தன்மையும் ஆசீர்வாதமும் - (72:2-4)

   (2) அவருடைய ஆளுகையின் காலம் - (72:5)

   (3) அவருடைய ஆளுகையின் ஆசீர்வாதங்கள் - (72:6-7)

   (4) அவருடைய ஆளுகையின் விஸ்தீரணம் - (72:8)

   (5) அவருடைய ஆளுகையின் ஜெயம் - (72:9-11)

   (6) அவருடைய ஆளுகையின் தன்மையும் ஆசீர்வாதமும் - (72:12-14)

   (7) அவருடைய ஆளுகையில் ஆராதனை - (72:15)

   (8) அவருடைய ஆளுகையில் விவசாயத்தில் செழிப்பு - (72:16)

   (9) அவருடைய ஆளுகையில் மனுஷரின் நித்திய சந்ததி - (72:17)

3. மேசியாவின் நித்திய ஆளுகைக்காகத் தேவனைத் துதித்தல் - (72:18-20)

1. நியாயத் தீர்ப்புக்காகவும் தேவனிடமிருந்து வரும் நீதிக்காகவும் ஜெபம்

சங் 72:1 தேவனே, ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும், ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும்.

இந்த சங்கீதம் சாலொமோனைப் பற்றியதாக இருந்தாலும், இதில் காணப்படும் பல குறிப்புக்கள் மேசியாவையும், அவருடைய மகிமையான ஆளுகையையும் கூறும் தீர்க்கதரிசனங்களாகும். இதை இயற்றியவர் தாவீது. (சங் 72:1,20) தனது குமாரனுக்கு தேவனுடைய நீதியைக் கொடுத்தருளுமாறு தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறான். (சங் 72:1, 20)

தாவீது சாலொமோனுக்காக ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. உமது பிரமாணத்தின்படி நடக்க உதவி செய்யும்

2. உமது நீதியின்படி நியாயம் விசாரிக்க உதவி செய்யும் (1இராஜா 3:5-9; 1நாளா 28:5-7; 1நாளா 29:19)

2. மேசியாவின் ஆளுகை

(1) இதன் தன்மையும் ஆசீர்வாதமும் - (ஏசா 11:1-9)

சங் 72:2 அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்.

சங் 72:3 பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.

சங் 72:4 ஜனத்தில் சிறுமைப் படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்.

72 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 60

"அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்.........." (சங் 72:2-17) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிர வருஷ அரசாட்சியில் மேசியாவின்கீழ் நிறைவேறும்.

ஆயிர வருஷ அரசாட்சியில் காணப்படும் காரியங்கள்

1. நியாயத்தீர்ப்பு (சங் 72:2; ஏசா 11:4-5)
2. நீதி (சங் 72:2; ஏசா 11:3-5)
3. சமாதானம் (சங் 72:3; ஏசா 2:2-4; ஏசா 9:6-7)
4. நீதி (சங் 72:3; ஏசா 11:4-5)
5. சிறுமைப்படுகிறவர்களை நியாயம் விசாரித்தல் (சங் 72:4)
6. ஏழ்மையிலிருந்து விடுபடுதல்
7. இடுக்கண் செய்கிறவனைத் தண்டித்தல்
8. நித்திய ஆளுகை (சங் 72:5; ஏசா 9:6-7)
9. செழுமை (சங் 72:6-7; மீகா 4:4)
10. ராஜ்யம் (சங் 72:8-11, 17; சக 14:9)
11. சத்துருக்களை அடக்குதல் (சங் 72:9)
12. சேவித்தல் (சங் 72:10-11; தானி 7:13-14)
13. விடுவிக்கப்படுதல் (சங் 72:12; யோவே 2:32)
14. உதவி (சங் 72:12-13; ஏசா 63:1-5)
15. இரட்சிப்பு (சங் 72:13-14; ஏசா 52:7)
16. கொலை செய்பவர்களுக்குத் தண்டனை கொடுத்தல் (சங் 72:14)
17. ஸ்தோத்திரிக்கப்படுதல் (சங் 72:15; ஏசா 2:2-4; சக 14)
18. விளைச்சல் (சங் 72:16; ஏசா 35)
19. பூமியின் பட்டணங்களில் செழுமை (சங் 72:16)
20. கர்த்தருடைய நாமத்தை மகிமைப் படுத்துதல் (சங் 72:17)
21. ஜனங்களை ஆசீர்வதித்தல்

மேசியா செய்யப்போகும் காரியங்கள்

1. ஜனங்களை நீதியிலே நியாயம் விசாரிப்பார் (சங் 72:2)
2. ஏழைகளை நியாயத்தோடு விசாரிப்பார்
3. ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரிப்பார் (சங் 72:4)
4. ஏழையின் பிள்ளைகளை இரட்சிப்பார்
5. இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்
6. சூரியனும் சந்திரனுமுள்ளமட்டும் அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள் (சங் 72:5)
7. புல்லறுப்புண்ட வெளியின் மேல் பெய்யும் மழையைப் போல, மனுஷர்களை ஆசீர்வதிப்பார் (சங் 72:6)
8. அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான் (சங் 72:7)
9. அவருடைய ஆளுகையில் மிகுந்த சமாதானம் இருக்கும் (சங் 72:7; ஏசா 2:2-4; ஏசா 9:6-7)

72 அதிகாரம்

10. ஒரு சமுத்திரந்தொடங்கி, மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார் (சங் 72:8, 11)

11. அவருடைய சத்துருக்களை முழுவதுமாக முறியடிப்பார் (சங் 72:9)

12. தர்ஷீசின் ராஜாக்களும், தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள் (சங் 72:10-11)

13. கூப்பிடுகிற எளியவனை விடுவிப்பார் (சங் 72:12)

14. உதவியற்ற சிறுமையானவனுக்கு உதவி செய்வார்

15. பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்குவார் (சங் 72:13)

16. எளியவர்களின் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார் (சங் 72:13-14)

17. கொலை செய்கிறவர்களைத் தண்டிப்பார் (சங் 72:14)

18. அவர் பிழைத்திருப்பார் (சங் 72:15)

19. ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும்

20. அவருடைய ஜனங்களின் ஜெபங்களைக் கேட்பார்

21. எந்நாளும் ஸ்தோத்தரிக்கப்படுவார்

22. அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும் (சங் 72:17)

23. மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்

24. எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்

(2) அவருடைய ஆளுகையின் காலம் - (ஏசா 9:6-7; தானி 2:44-45; 7:13-14,27; லூக்கா 1:33; வெளி 11:15; 22:5)

சங் 72:5 சூரியனும் சந்திரனுமுள்ள மட்டும், அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள்.

"சூரியனும் சந்திரனுமுள்ளமட்டும்" தாவீதினுடைய இராஜ்ஜியம் மேசியாவின்கீழ் நித்தியகாலமாக நிலைத்திருக்கும். (சங் 72:5, 7, 17; சங் 89:29, 36-37; எரே 31:35-36).

(3) அவருடைய ஆளுகையின் ஆசீர்வாதங்கள் - (ஏசா 2:2-4; 35:1-8)

சங் 72:6 புல்லறுப்புண்ட வெளியின் மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப் போலவும் இறங்குவார்.

சங் 72:7 அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரனுள்ள வரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்.

"புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார்". கர்த்தருடைய ஆசீர்வாதம் அவருடைய பிள்ளைகள்மீது மழையைப் போல தாராளமாக பொழியும் (சங் 72:6-7).

(4) அவருடைய ஆளுகையின் விஸ்தீரணம் - (தானி 7:27; சக 14:9-21)

சங் 72:8 ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்.

72 அதிகாரம்

"ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும்" என்பது எல்லா சமுத்திரங்களுக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பைக் குறிக்கும். மத்திய தரைக்கடலுக்கும், பெர்சிய வளைகுடாவுக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள தேசம்மட்டும் என்று இந்த வசனம் கர்த்தருடைய ஆட்சியின் எல்லையைச் சுருக்கவில்லை. (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14, 27; மீகா 4:1-3; சக 14:9-21; வெளி 11:15; வெளி 20:4-6; வெளி 22:4-5)

"நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும்". இது ஐபிராத்து நதியைக் குறிப்பிடாது. தேவனுடைய தலைநகரமாகிய ஆயிர வருஷ தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வரும் நதியைக் குறிப்பிடும். (எசே 47; சக 14:8)

(5) அவருடைய ஆளுகையின் ஜெயம் - (ஏசா 2:2-4; சக 14:16-21)

சங் 72:9 வனாந்தரத்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள்; அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.

சங் 72:10 தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்; ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டு வருவார்கள்.

சங் 72:11 சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.

"மண்ணை நக்குவார்கள்" என்பது சத்துருக்கள் முழுவதுமாக சரணடைவதைக் குறிக்கிறது. (எண் 22:4; ஏசா 49:23; மீகா 7:16-17)

"....ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள்" சாலொமோனின் ஐசுவரியம் மிகவும் அதிகம். அவனுடைய காலத்தில் கடல் பயணமும் மிகுந்திருந்தது. ஷேபா என்பது தற்காலத்து அரபியா ஆகும்.

சகல இராஜாக்களும் சகல ஜாதிகளும் மேசியாவின் ஆளுகையின்கீழ் வருவார்கள். இந்தப் பூமியைக் குறித்து கர்த்தர் கொண்டிருக்கும் சித்தத்தை அவருடைய விருப்பத்தின் பிரகாரம் எல்லோரும் நிறைவேற்றுவார்கள். ஆதியிலே ஆதாம் பாவம் செய்யாமல் இருந்திருந்தால் அவனும் அவனுடைய பிள்ளைகளும் பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றியிருப்பார்கள் (சங் 72:17).

(6) அவருடைய ஆளுகையின் தன்மையும் ஆசீர்வாதமும் - (வசனங்கள். 2-4; ஏசா 11:1-9; சக 14:16-21)

சங் 72:12 கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.

சங் 72:13 பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.

சங் 72:14 அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்; அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்.

எளியவனைப் (needy) பற்றி பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள காரியங்கள்

1. தேவன் தமது பிரமாணத்தின் பிரகாரமாக எளியவனைப் பராமரிக்கிறார். (உபா 15:11; உபா 24:14)
2. தேவன் எளியவனை எப்போதும் மறந்து போவதில்லை என்று வாக்குப் பண்ணியிருக்கிறார். (சங் 9:18; ஏசா 41:17)

72 அதிகாரம்

3. வரப்போகிற மேசியாவின் ஆளுகையின்கீழ் எளியவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள். (சங் 72:4, 12-13)

4. மனுஷன் எளியவனுக்கு நீதி செய்ய வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார். (சங் 82:3-4; நீதி 31:9)

5. எளியவனை ஒடுக்குகிறவர்களை கர்த்தர் சபிப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். (எசே 18:12-13; எசே 22:28-31; ஆமோ 8:4-14)

6. எளிமையான நிலைமை ஜெபத்திற்கு கர்த்தரிடத்தில் பதில் கிடைக்கும் என்ற விசுவாசத்தைக் கொடுக்கும். (சங் 70:5; சங் 72:12; சங் 86:1; சங் 109:22)

7. எளியவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். (சங் 74:21; சங் 82:3, 4)

உதவியற்ற சிறுமையானவனைப் பற்றி (poor) பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள காரியங்கள்

1. கர்த்தர் தமது பிரமாணத்தின் பிரகாரமாக சிறுமையானவனை ஆசீர்வதிக்கிறார்.

(1) சிறுமைப்பட்டிருக்கிறவனிடத்தில் பணம் கடனாகக் கொடுத்திருந்தால் அவனிடம் வட்டி வாங்கக்கூடாது (யாத் 22:25)

(2) வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பார்க்க வேண்டாம் (யாத் 23:3)

(3) எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்ட வேணடாம் (யாத் 23:6)

(4) ஐசுவரியவான் அரைச்சேக்கலுக்கு குறைவாகத் தரித்திரருக்குக் கொடுக்க வேண்டாம் (யாத் 30:15; லேவி 14:21)

(5) திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமல் அதை எளியவனுக்கும், பரதேசிக்கும் விட்டு விட வேண்டும் (லேவி 19:10; லேவி 23:22)

(6) நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனை ஏழாம் வருஷத்தில், உன் ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்க விட்டுவிட வேண்டும் (யாத் 23:11)

(7 ஏழையும் எளிமையுமான கூலிக் காரனை ஒடுக்கக்கூடாது (உபா 24:12-15)

2. சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான் (சங் 41:1; சங் 112:9)

3. கர்த்தர் தம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறார் (சங் 68:10)

4. கர்த்தர், எளியவர்களுக்கு பண்ணிய வாக்குத்தத்தம்

(1) அவர்களுடைய ஜெபத்தைக் கேட்பார் (சங் 69:33)

(2) சிறுமையானவர்களுக்கு உதவி செய்வார் (சங் 72:12)

(3) பலவீனனுக்கும் எளியவனுக்கும் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார் (சங் 72:13)

(4) ஏழைகளை அப்பத்தினால் திருப்தியாக்குவார் (சங் 132:15)

(5) சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத்தேடி, அவர்கள் நாவு வறளும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களைக் கைவிடமாட்டார் (ஏசா 41:17)

72 அதிகாரம்

(7) அவருடைய ஆளுகையில் ஆராதனை - (ஏசா 2:2; சக 14:16-21; மல் 1:11)

சங் 72:15 அவர் பிழைத்திருப்பார், ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும்; அவர் நிமித்தம் இடைவிடாமல் ஜெபம்பண்ணப்படும், எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார்.

"அவர் பிழைத்திருப்பார்" - மேசியா அவர்களை இரட்சிப்பார். அவர்கள் மறுபடியும் ஜீவிப்பார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்களிடம் இருக்க வேண்டிய காரியங்கள்

1. தாராளமாக காணிக்கை கொடுக்கும் கரங்கள்
2. இடைவிடாமல் ஜெபம்பண்ணும் இருதயம்
3. எந்நாளும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கும் நாவு

(8) அவருடைய ஆளுகையில் விவசாயத்தில் செழிப்பு - (ஏசா 35; 65:20-25; மீகா 4:4)

சங் 72:16 பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப் பட்டிருக்கும்; அதின் விளைவு லீபனோனைப் போல அசையும்; பூமியின் புல்லைப் போல நகரத்தார் செழித் தோங்குவார்கள்.

"ஒரு பிடி தானியம்" - மேசியாவின் ஆளுகையின்போது சிறுக விதைத்தாலும் பெருக அறுக்கலாம். (ஏசா 35) நாம் இப்போது பெருக விதைத்தும், சிறுகவே அறுக்கிறோம். இது நமது பாவத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் சாபமும் நியாயத்தீர்ப்புமாயிருக்கிறது.

"அதின் விளைவு லீபனோனைப் போல அசையும்" - லீபனோன் மலையில் ஏராளமான மரங்கள் உள்ளது. மேசியாவின் காலத்தில் விளையும் தானியத்தின் பயிர்கள்கூட மரங்களைப் போல வலுவுள்ளதாக இருக்கும்.

"பூமியின் புல்லைப் போல நகரத்தார் செழித்தோங்குவார்கள்" - நகரத்தின் ஜனங்கள் பல்வேறு தொழில்களைச் செய்வார்கள். கர்த்தர் அவர்களுடைய கரங்களின் கிரியைகளை ஆசீர்வதிப்பார்.

(9) அவருடைய ஆளுகையில் மனுஷரின் நித்திய சந்ததி - (ஆதி 8:22; 9:12; ஏசா 9:6-7; 59:21; தானி 2:44-45; 7:13-14; 27; மத் 25:31-46; லூக்கா 1:32-33; வெளி 11:15)

சங் 72:17 அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும்; சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும்; மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப் படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்.

"மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப் படுவார்கள்" - மனுஷர் மேசியாவிற்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமின் உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவிற்குள் நிறைவேறும். (ஆதி 12:1-3; ஆதி 18:18; ஆதி 22:18; ஆதி 26:4; ஆதி 28:14; கலா 3:8)

3. மேசியாவின் நித்திய ஆளுகைக்காகத் தேவனைத் துதித்தல்

சங் 72:18 இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.

சங் 72:19 அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திர முண்டாவதாக; பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்.

72 அதிகாரம்

சங் 72:20 ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது.

மேசியாவின் மகிமையான ஆட்சியைத் தாவீது தரிசனமாக காண்கிறான். அதேவேளையில் சாலொமோனுடைய ஆட்சியில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், நீதியையும் காண்கிறான். சாலொமோனின் ஆட்சி மேசியாவின் ஆட்சிக்கு ஒரு முன்னோட்டமான நிழலாயிருக்கிறது.

இதுவே தாவீதின் கடைசி சங்கீதம்.

73 அதிகாரம்

(ஆசாபின் சங்கீதம்.)

பன்னிரண்டாவது போதக சங்கீதம் - துன்மார்க்கன் ஐசுவரியவானாக இருப்பதற்காகப் பொறாமைப் படக்கூடாது

பொருளடக்கம்

1. சுத்த இருதயத்தோடிருக்க வேண்டும் - தேவன் நல்லவராக இருப்பார் - (73:1)
2. மற்றவர்களிடம் பொறாமைப்படுவது - இதன் விளைவு - பின்மாற்றம் - துன்மார்க்கனின் ஐசுவரியம் பெருகுவது பற்றி பதினெட்டு அம்சங்கள் - (73:2-12)
3. மற்றவர் காரியங்களில் தலையிடுவது - இதன் விளைவு - ஏழுவிதமான வருத்தங்கள் - (73:13-16)
4. பரிசுத்த ஸ்தலம் - பின்மாற்றத்தைப் போக்கும் உபாயம் - (73:17)
5. துன்மார்க்கனுக்கு உண்மையாக நடக்கப்போகும் காரியம் - அவர்களுடைய முடிவின் ஏழு அம்சம் - (73:18-20)
6. பின்மாறிப் போனவனுக்கு உண்மையாக நடக்கும் காரியம் - அவனுடைய துயரத்தின் ஐந்து அம்சம் - (73:21-22)
7. தேவனோடு ஐக்கியமாக இருப்பது - எட்டு அம்ச ஆசீர்வாதமும் நீதிமானின் முடிவும் - (73:23-26)
8. தேவனை விட்டு விலகிப் போகிறவர்களின் முடிவு - (73:27)
9. நீதிமான் உண்மையிலேயே செய்யும் காரியம் - (73:28)

1. சுத்த இருதயத்தோடிருக்க வேண்டும் - தேவன் நல்லவராக இருப்பார்

சங் 73:1 சுத்த இருதயமுள்ள வர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்.

பாவங்களிலிருந்து மனந்திரும்பி இரட்சிக்கப் படவேண்டுமென்று விரும்புவர்களுக்கு தேவன் மிகவும் நல்லவராக இருக்கிறார். (ரோமர் 2:4; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9)

2. மற்றவர்களிடம் பொறாமைப் படுவது - இதன் விளைவு - பின்மாற்றம் - துன்மார்க்கனின் ஐசுவரியம் பெருகுவது பற்றி பதினெட்டு அம்சங்கள்

சங் 73:2 ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று.

சங் 73:3 துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமைகொண்டேன்.

சங் 73:4 மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது.

சங் 73:5 நரர் படும் வருத்தத்தில் அகப்பட்டார்கள்; மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்.

சங் 73:6 ஆகையால் பெருமை சரப்பணியைப்போல் அவர்களைச் சுற்றிக் கொள்ளும், கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக்கொள்ளும்.

சங் 73:7 அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது.

73 அதிகாரம்

சங் 73:8 அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்; இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்.

சங் 73:9 தங்கள் வாய் வானமட்டும் எட்டப்பேசுகிறார்கள்; அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது.

சங் 73:10 ஆகையால் அவருடைய ஜனங்கள் இந்த வழியாகவே திரும்புகிறார்கள்; தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்துவரும்.

சங் 73:11 தேவனுக்கு அது எப்படித் தெரியும்? உன்னதமானவருக்கு அதைப்பற்றி அறிவு உண்டோ? என்று சொல்லுகிறார்கள்.

சங் 73:12 இதோ, இவர்கள் துன்மார்க்கர்; இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.

பின்வாங்கிப்போவதற்குக் காரணங்கள் (சங் 73:2-16)

1. துன்மார்க்கரின் வாழ்வைக் காண்கையில் அவர்கள் மேல் பொறாமை கொள்ளுதல் (சங் 73:2-12)
2. நிறைவற்ற செழுமையினால் மனச் சோர்வடைதல் (சங் 73:4-12)
3. தேவனுடைய ஆசீர்வாதம் குறைவுபட்டிருத்தல் (சங் 73:13)
4. ஜீவியத்தில் ஆசீர்வாதம் பெருகுவதினால் இருதயம் கலகம் பண்ணுதல்(சங் 73:14-16;எபி 12:5-13)

துன்மார்க்கருடைய ஐசுவரியத்தின் அம்சங்கள்

1. மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை (சங் 73:4)
2. அவர்களுடைய பெலன் உறுதியாய் இருக்கிறது
3. நரர் படும் வருத்தத்தில் அகப்படமாட்டார்கள் (சங் 73:5)
4. மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்
5. பெருமை சரப்பணியைப் போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும் (சங் 73:6)
6. கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக்கொள்ளும்
7. அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது (சங் 73:7)
8. அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாக நடந்தேறுகிறது
9. அவர்கள் சீர்கெட்டுப் போகிறார்கள் (சங் 73:8)
10. அகந்தையாய் கொடுமை பேசுகிறார்கள்
11. இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்
12. தங்கள் வாய் வானமட்டும் எட்டப் பேசுகிறார்கள் (சங் 73:9)
13. அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது
14. அவருடைய ஜனங்கள் சங் 73:2-3-இல் கூறப்பட்டிருக்கிற இந்த வழியாகவே திரும்புகிறார்கள் (சங் 73:10)
15. தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய்ச் சுரந்து வரும்

73 அதிகாரம்

16. தேவனுக்கு அது எப்படித் தெரியும்? என்று கேட்கிறார்கள் (சங் 73:11)

17. உன்னதமானவருக்கு அதைப் பற்றி அறிவு உண்டோ? என்று கேட்கிறார்கள்.

18. இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப் பண்ணுகிறார்கள் (சங் 73:12)

"ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்" - நமது ஆஸ்தியைப் பெருகப்பண்ணுவதற்காக தேவன் நம்மை சிருஷ்டிக்கவில்லை. இது தேவனுடைய நோக்கமுமல்ல. தம்முடைய பிள்ளைகள் குறைவில்லாமல் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நமது ஆத்துமாவைக் கெடுத்துவிட்டு நமது ஆஸ்தியைப் பெருக்கக்கூடாது. (1யோவான் 2:15-17; 3யோவான் 1:2; சங் 1:3)

3. மற்றவர் காரியங்களில் தலையிடுவது - இதன் விளைவு - ஏழுவிதமான வருத்தங்கள்

சங் 73:13 நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்.

சங் 73:14 நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்.

சங் 73:15 இவ்விதமாய்ப் பேசுவேன் என்று நான் சொன்னேனானால், இதோ, உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத் துரோகியாவேன்.

சங் 73:16 இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன்; நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து,

"நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணினேன்". உலக வாழ்வில் நீதிமான்களுக்கும், துன்மார்க்கருக்கும் வித்தியாசம் உண்டு. பல சமயங்களில் துன்மார்க்கர் ஐசுவரிய செழிப்போடு சம்பூரணமாய் வாழ்கிறார்கள். நீதிமான்களோ வறுமையில் வாடுகிறார்கள். இந்த சூழ்நிலையில் நீதிமான் சங் 73:13-16 ஆகிய வசனங்களைக் கூறி தனக்குள் புலம்புகிறான். இது தவறு. தேவன் தமது பிள்ளைகளை ஒருபோதும் கைவிடமாட்டார். துன்மார்க்கருடைய முடிவு அழிவு. நீதிமானுடைய முடிவோ நித்திய ஜீவன். (சங்73:17-20; சங்73:21-22; சங் 73:23-28; ஏசா 58:2-3)

"குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்". ஒரு காரியத்தில் ஒருவனுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை என்பதைத் தங்கள் கைகளைக் கழுவி உறுதிபண்ணினார்கள் (மத் 27:24).

"நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்". தேவனை ஆராதிப்பதினால் தனக்கு ஒரு நன்மையும் இல்லையென்று சங்கீதக்காரன் நினைக்கிறான். சங்கீதக்காரனுடைய வாழ்வில் அநுதினமும் ஏதாவது பிரச்சனைகள் வந்து கொண்டேயிருந்திருக்கும். உலக நன்மையை அவனால் அனுபவிக்கமுடியவில்லை.

"இவ்விதமாய்ப் பேசுவேன் என்று நான் சொன்னேனானால், இதோ, உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத் துரோகியாவேன்". நியாயாதிபதி ஜனங்களை நீதியாய் நியாயம் விசாரிப்பார் என்று எல்லா பரிசுத்தவான்களும் நம்புகிறார்கள். கர்த்தரை நம்பி அவரைச் சார்ந்திருப்பதற்காக ஒரு விசுவாசி எப்போதும் வருத்தப்படுவதில்லை. நீதிமான்களுக்கு எவ்வளவு சோதனைகள் வந்தாலும் கர்த்தர் அவர்களை அவற்றிலிருந்து விடுவித்து, பாதுகாப்பார் (எபி 11:32-40).

"அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது". தேவன் நீதிமான்களை எப்போதும் பாதுகாத்து பராமரித்து வருகிறார். துன்மார்க்கரை அழித்துப் போடுகிறார். ஆனால் சில சமயங்களில் துன்மார்க்கர் செழித்திருந்து, நீதிமான் குறைவுடன் இருக்கும்போது அது சங்கீதக்காரனுடைய பார்வைக்கு மிகவும் விசனமாக இருந்தது.

73 அதிகாரம்

4. பரிசுத்த ஸ்தலம் - பின்மாற்றத்தைப் போக்கும் உபாயம்

சங் 73:17 அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது.

5. துன்மார்க்கனுக்கு உண்மையாக நடக்கப்போகும் காரியம் - அவர்களுடைய முடிவின் ஏழு அம்சம்

சங் 73:18 நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்.

சங் 73:19 அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்.

சங் 73:20 நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல், ஆண்டவரே, நீர் விழிக்கும்போது, அவர்கள் வேஷத்தை இகழுவீர்.

துன்மார்க்கரின் முடிவு

1. சறுக்கலான இடங்களில் அவர்களை நிறுத்துகிறீர் (சங் 73:18)
2. பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்
3. அவர்களை நிர்மூலமாக்குகிறீர் (சங் 73:19)
4. அவர்களை, ஒரு நிமிஷத்தில் பாழாக்குகிறீர்
5. பயங்கரங்களால் அவர்களை அழிக்கிறீர்
6. நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல், அவர்களுடைய வளமையும் அழியும் (சங் 73:20)
7. துன்மார்க்கனுடைய சொப்பனம் ஒழிவதுபோல், ஆண்டவர், அவர்கள் வேஷத்தை இகழ்வார்

6. பின்மாறிப் போனவனுக்கு உண்மையாக நடக்கும் காரியம் - அவனுடைய துயரத்தின் ஐந்து அம்சம்

சங் 73:21 இப்படியாக என் மனம் கசந்தது, என் உள்ளிந்திரியங்களிலே குத்துண்டேன்.

சங் 73:22 நான் காரியம் அறியாத மூடனானேன்; உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன்.

பின்வாங்கிப்போனவர்களின் காரியங்கள்

1. துன்மார்க்கரின் செழிப்பான வாழ்வைக் காண்கையிலும், நீதிமான்களின் இடறல்களைப் பார்க்கும்போதும், என் மனம் கசந்தது (சங் 73:21)
2. என் உள்ளந்திரியங்களில் குத்துண்டேன் (சங் 73:22)
3. நான் மூடனானேன்
4. நான் காரியம் அறியாதவனானேன்
5. உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன்

7. தேவனோடு ஐக்கியமாக இருப்பது - எட்டு அம்ச ஆசீர்வாதமும் நீதிமானின் முடிவும்

சங் 73:23 ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்.

சங் 73:24 உம்முடைய ஆலோசனையின் படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.

73 அதிகாரம்

சங் 73:25 பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை.

சங் 73:26 என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.

"என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்". நான் கர்த்தரிடம் முறுமுறுத்தாலும் துன்மார்க்கரின் வளமான வாழ்வைக் கண்டு, பொறாமையுற்று இருந்தாலும், நான் இன்னும் கர்த்தருடனேயே இருக்கிறேன். நீர் என் வலதுகையைப் பிடித்து என்னைத் தாங்கி, உமக்குச் சித்தமான பாதையில் வழிநடத்துகிறீர்.

தீர்க்கதரிசன எண் - 61

"உம்முடைய ஆலோசனையின் படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" (சங் 73:24) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" - மத் 22:36-39 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள பிரதான கற்பனையின் முக்கிய அம்சம் இதுதான்.

"தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்". நான் ஒருவேளை சீக்கிரமாக மரிக்கலாம். என்னுடைய சரீரமும் இருதயமும் என்னைக் கைவிட்டுவிடலாம். ஆனால் நாம் நம்பும் தேவன் என்னைக் கைவிடமாட்டார். அவர் எனக்கு நித்தியஜீவனைக் கொடுப்பார்.

8. தேவனை விட்டு விலகிப் போகிறவர்களின் முடிவு

சங் 73:27 இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர்.

நாசமடையும் ஜனங்கள்

1. தேவனை விட்டு தூரமாய்ப் போகிறவர்கள்.
2. தேவனை விட்டு சோரம்போகிறவர்கள் (யாத் 32:32-33; எசே 18:20-24; எசே 33:12-16; லூக்கா 8:13; ரோமர் 1:18-32; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 3:16-17; 1கொரி 6:9-10; 1கொரி 9:27; கலா 1:6-8; கலா 3:1-8; கலா 5:1-4, 19-21; கலா 6:1, 7-8; 2தீமோ 2:12; எபி 6:4-9; எபி 10:26-29; 2பேதுரு 2:20-22; வெளி 2:5; வெளி 3:5; வெளி 22:11) கர்த்தரை விட்டு பின்வாங்கிப் போகிறவர்கள் பாவத்தில் விழுந்து, பாவத்தில் மரிப்பார்கள்.

9. நீதிமான் உண்மையிலேயே செய்யும் காரியம்

சங் 73:28 எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்; நான் உமது கிரியைகளையெல்லாம் சொல்லி வரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன்.

"தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்". நம் எல்லோருக்குமே இதுதான் நலமானது. நாம் கர்த்தரை அண்டிக் கொள்ள வேண்டும்.

74 அதிகாரம்

(மஸ்கீல் என்னும் ஆசாபின் போதக சங்கீதம்.)

பதிமூன்றாவது போதக சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவன் தம்முடைய ஜனத்தைத் தொடர்ந்து நியாயம் தீர்ப்பது தொடர்பாக தேவனிடத்தில் முறையீடு செய்தல் - (74:1)

2. இரக்கத்திற்காக ஜெபம் - இரக்கத்திற்காக மூன்று காரணங்கள் - (74:2)

3. தேவன் தமது சத்துருக்களை நியாயம் தீர்க்காமல் இருப்பதற்காக அவரிடம் கூறப்படும் பதினாறு அம்சமுறையீடு - துன்மார்க்கனின் பத்து பாவங்கள் - (74:3-11)

4. தேவனுடைய மகத்துவத்தின் பன்னிரெண்டு அம்சங்களும் சிருஷ்டிப்பில் தேவனுடைய கிரியைகளும் - (74:12-17)

5. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பும் நீதிமான் மீது இரக்கமும், வரவேண்டும் என்று பத்து விண்ணப்பங்கள் - (74:18-23)

1. தேவன் தம்முடைய ஜனத்தைத் தொடர்ந்து நியாயம் தீர்ப்பது தொடர்பாக தேவனிடத்தில் முறையீடு செய்தல்

சங் 74:1 தேவனே, நீர் எங்களை என்றென்றைக்கும் ஏன் தள்ளிவிடுகிறீர்? உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமது கோபம் ஏன் புகைகிறது?

"தேவனே, நீர் எங்களை என்றென்றைக்கும் ஏன் தள்ளிவிடுகிறீர்? உமது மேய்ச்சலின் ஆடுகள்மேல் உமது கோபம் ஏன் புகைகிறது?" - இதேபோன்ற கேள்விகளையும் இன்னும் ஏராளமான கேள்விகளையும் நாம் கர்த்தரிடத்தில் கேட்கலாம். கர்த்தர் நம்மை காரணமில்லாமல் தள்ளிவிடுவாரா? அப்படியே தள்ளிவிட்டாலும் நம்மை மறந்து விடுவாரா? நம்மை மறுபடியுமாக தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டாரா? நாம் மனந்திரும்பினால் நம்மை இரட்சிக்க மாட்டாரா? தேவன் நம்மீது அன்பாக இருக்கிறார்.

தேவனுடைய கிரியைகள்

1. கர்த்தர் பாவத்திலிருந்து விடுவித்து, நியாயம் விசாரிப்பார் (சங் 74:1).

2. மேய்ச்சலின் ஆடுகள் மேல் கர்த்தர் கோபத்தை வெளிக்காட்டுகிறார்.

3. தம்முடைய ஜனங்களை மீட்டுக் கொள்கிறார் (சங் 74:2).

4. சீயோனில் வாசம் பண்ணுகிறார்.

5. இரட்சிப்பைக் கொடுக்கிறார் (சங் 74:12).

6. சமுத்திரத்தை இரண்டாகப் பிளக்கிறார் (சங் 74:13).

7. வலுசர்ப்பங்களின் தலைகளை உடைக்கிறார்.

8. முதலைகளின் தலைகளை நருக்கிப் போடுகிறார் (சங் 74:14).

9. முதலைகளை வனாந்தரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுக்கிறார்.

10. ஊற்றையும், ஆற்றையும் பிளந்து விடுகிறார் (சங் 74:15).

11. மகாநதிகளை வற்றிப் போகப் பண்ணுகிறார்.

74 அதிகாரம்

12. தேவரீர் பகலையும், இரவையும் படைக்கிறார் (சங் 74:16).

13. சூரியனையும், ஒளியையும் படைக்கிறார்

14. பூமியின் எல்லைகளைத் திட்டம் பண்ணுகிறார் (சங் 74:17; உபா 32:8; அப் 17:26).

15. கோடைக்காலத்தையும், மாரிக் காலத்தையும் உண்டாக்குகிறார்.

2. இரக்கத்திற்காக ஜெபம் - இரக்கத்திற்காக மூன்று காரணங்கள்

சங் 74:2 நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும், நீர் மீட்டுக்கொண்ட உமது சுதந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன்பர்வதத்தையும்நினைத்தருளும்.

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. உமது சபையை நினைத்தருளும் (சங் 74:2).

2. நீர் மீட்டுக் கொண்ட சுதந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும்.

3. பாழாய்க் கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப் பண்ணும் (சங் 74:3).

4. சத்துரு உம்மை நிந்தித்ததை நினைத்துக் கொள்ளும் (சங் 74:18).

5. மதியீன ஜனங்கள் உமது நாமத்தைத் தூஷித்ததை நினைத்துக் கொள்ளும்.

6. துஷ்டருடைய கூட்டத்திற்கு ஒப்புக் கொடாதேயும் (சங் 74:19).

7. ஏழைகளின் கூட்டத்தை என்றைக்கும் மறவாதேயும்.

8. உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும் (சங் 74:20).

9. துன்பப்பட்டவன் வெட்கத்தோடே திரும்ப விடாதிரும் (சங் 74:21).

10. சிறுமையும் எளிமையுமானவன் உமது நாமத்தைத் துதிக்கும்படி செய்யும்.

11. தேவனே, எழுந்தருளும் (சங் 74:22).

12. உமக்காக நீரே வழக்காடும்.

13. மதியீனனாலே நாடோறும் உமக்கு வரும் நிந்தையை நினைத்துக் கொள்ளும்.

14. உம்முடைய சத்துருக்களின் ஆரவாரத்தை மறவாதேயும் (சங் 74:23).

15. உமக்கு விரோதமாய் எழும்பு கிறவர்களின் அமளியை மறவாதிரும்.

3. தேவன் தமது சத்துருக்களை நியாயம் தீர்க்காமல் இருப்பதற்காக அவரிடம் கூறப்படும் பதினாறு அம்ச முறையீடு - துன்மார்க்கனின் பத்து பாவங்கள்

சங் 74:3 நெடுங்காலமாகப் பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப் பண்ணும்; பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப் போட்டான்.

சங் 74:4 உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள்.

சங் 74:5 கோடாரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான்.

74 அதிகாரம்

சங் 74:6 இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுகிறார்கள்.

சங் 74:7 உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி, உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டும் இடித்து, அசுத்தப் படுத்தினார்கள்.

சங் 74:8 அவர்களை ஏகமாய் நிர்த்தூளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப் போட்டார்கள்.

சங் 74:9 எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் காணோம்; தீர்க்கதரிசியும் இல்லை; இது எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடத்தில் இல்லை.

சங் 74:10 தேவனே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்? பகைவன் உமது நாமத்தை எப்பொழுதும் தூஷிப்பானோ?

சங் 74:11 உமது வலதுகரத்தை ஏன் முடக்கிக்கொள்ளுகிறீர்; அதை உமது மடியிலிருந்து எடுத்து ஓங்கி நிர்மூலமாக்கும்.

துன்மார்க்கரின் பாவங்கள்

1. பரிசுத்த ஸ்தலத்திலே பாவம் செய்கிறார்கள். (சங் 74:3).
2. உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சிக் கிறார்கள் (சங் 74:4).
3. தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள்.
4. அவர்கள், தேவனுடைய ஆலயத்தின் சித்திரவேலைகள், முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுகிறார்கள் (சங் 74:6).
5. உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்குகிறார்கள் (சங் 74:7).
6. உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரை மட்டும் இடித்து, அசுத்தப்படுத்தினார்கள்.
7. அவர்கள் ஏகமாய் நிர்த்தூளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறார்கள் (சங் 74:8).
8. தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப் போட்டார்கள்.
9. தேவனையும், அவருடைய ஜனங்களையும் நிந்திப்பார்கள் (சங் 74:10, 22).
10. கர்த்தருடைய நாமத்தை எப்பொழுதும் தூஷிப்பார்கள் (சங் 74:10, 18).
11. நீதிமான்களை ஒடுக்குவார்கள் (சங் 74:21).
12. கர்த்தருக்கு எதிராக அமளி எழுப்புகிறார்கள் (சங் 74:23).

"தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம்". புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலின் ஒவ்வொரு பட்டணத்திலும் ஜெபாலயங்கள் இருந்தது. [synagogues] (அப் 15:23) புதிய ஏற்பாட்டில் இந்தச் சொல் 68 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் பழைய ஏற்பாட்டில் இந்தச் சொல் இந்த வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது.

"எங்களுக்கு இருந்த அடையாளங்கள்" என்பது தேவன் தமது ஜனங்கள் மத்தியிலே செய்த அவருடைய அற்புதமான கிரியைகள் ஆகும். தேவன் ஜனங்கள் மத்தியில் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதற்கு அற்புதங்கள் ஓர் அடையாளம். (மாற்கு 16:17-18; யோவான் 14:12)

74 அதிகாரம்

"உமது வலதுகரத்தை....உமது மடியிலிருந்து எடும்". வலதுகரத்தை மடிக்குள் வைப்பது பொறுமையின் அடையாளம். அதை மடியிலிருந்து வெளியே எடுப்பது, தற்காப்பது, எதிரியை நிர்மூலம்பண்ணுவது ஆகியவற்றின் அடையாளம். (மத் 18:7-9)

4. தேவனுடைய மகத்துவத்தின் பன்னிரெண்டு அம்சங்களும் சிருஷ்டிப்பில் தேவனுடைய கிரியைகளும்

சங் 74:12 பூமியின் நடுவில் இரட்சிப்புகளைச் செய்துவருகிற தேவன் பூர்வகாலமுதல் என்னுடைய ராஜா.

சங் 74:13 தேவரீர் உமது வல்லமையினால் சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து, ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தலைகளை உடைத்தீர்.

சங் 74:14 தேவரீர் முதலைகளின் தலைகளை நருக்கிப்போட்டு, அதை வனாந்தரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுத்தீர்.

சங் 74:15 ஊற்றையும் ஆற்றையும் பிளந்து விட்டீர்; மகா நதிகளையும் வற்றிப்போகப் பண்ணினீர்.

சங் 74:16 பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது; தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர்.

சங் 74:17 பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டப்பண்ணினீர்; கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர்.

வலுசர்ப்பம் (dragons) - תַּנִּין - tan-neen', tan-neem' - 8577

ஆ.பெ.சொ. - மலைப் பாம்பு, வலுசர்ப்பம், முதலை, ஆந்தை, மச்சம், திமிங்கலம்

எகிப்தின் அடையாளம் (சங் 74:13; ஏசா 51:9; எசே 29:3) சாத்தானின் அடையாளம் (ஏசா 27:1; வெளி 12:3-17; வெளி 13:2, 4, 11; வெளி 16:13; வெளி 20:2) செங்கடலில் எகிப்தியர்கள் அழிக்கப்பட்டதைக் கூறும் காரியம் (யாத் 14:23-31; யாத் 15:1, 4-5, 19)

முதலை (leviathan) - לִוְיָתָן - liv-yaw-thawn' - 3882

ஆண்பால் பெயர்ச்சொல் - கடல்மிருகம், முதலை

கடல் சர்ப்பம் - சாத்தானின் அடையாளம் (சங் 74:14; சங் 104:26; யோபு 41:1; ஏசா 27:1) சாத்தானின் வல்லமைகள் தோல்வியுறும் என்பதைக் குறிக்கும் வாக்கியம். தேவன் முதலைகளை அழித்து, ஜனங்களுக்கு உணவாகக் கொடுப்பதுபோல சாத்தானையும் அழித்து வனாந்தரத்தில் தமது ஜனங்களுக்கு ஜெயத்தைக் கொடுப்பார். (யாத் 14-15) வெளி 12:1-17; வெளி 13:2-11; வெளி 16:13-16; வெளி 20:2 ஆகிய வசனங்களில் சாத்தான் ஒரு வலுசர்ப்பமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் இருந்தன.

"ஊற்றையும் ஆற்றையும் பிளந்து விட்டீர்". நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தையும் (ஆதி 7:11) கற்பாறையிலிருந்து தண்ணீர் வந்ததையும் (யாத் 17:6) இந்த வசனம் குறிப்பிடும்.

"மகா நதிகளையும் வற்றிப்போகப் பண்ணினீர்". தேவன் செங்கடலையும், யோர்தான் நதியையும் வற்றிப்போகப் பண்ணினார். (யாத் 14:21-22; யோசு 3:13-17; யோசு 4:23; 2இராஜா 2:8,14), வருங்காலத்தில் ஐபிராத்து நதியையும் (வெளி 16:12) நைல் நதியையும் (ஏசா 11:15) வற்றிப்போகப் பண்ணுவார்.

"தேவன் ஒளியையும் சூரியனையும் படைத்தார்". இவை பரிணாம வளர்ச்சியினால் உண்டாக்கப்படவில்லை. தேவனுடைய கரத்தின் கிரியை. கர்த்தருடைய சிருஷ்டிப்பு. (ஆதி 1:14-18; சங் 74:16; சங் 8:3-8; சங் 19:1)

74 அதிகாரம்

கர்த்தர் கோடைகாலத்தையும் மாரி காலத்தையும் உண்டாக்கினார். பல்வேறு காலங்களை உண்டாக்கியவர் கர்த்தரே. (ஆதி 1:14-18; ஆதி 8:22)

5. துன்மார்க்கன் மீது நியாயத் தீர்ப்பும் நீதிமான் மீது இரக்கமும், வரவேண்டும் என்று பத்து விண்ணப்பங்கள்

சங் 74:18 கர்த்தாவே, சத்துரு உம்மை நிந்தித்ததையும், மதியீன ஜனங்கள் உமது நாமத்தைத் தூஷித்ததையும் நினைத்துக் கொள்ளும்.

சங் 74:19 உமது காட்டுப்புறாவின் ஆத்துமாவைத் துஷ்டருடைய கூட்டத்திற்கு ஒப்புக்கொடாதேயும்; உமது ஏழைகளின் கூட்டத்தை என்றைக்கும் மறவாதேயும்.

சங் 74:20 உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும்; பூமியின் இருளான இடங்கள் கொடுமையுள்ள குடியிருப்புகளால் நிறைந்திருக்கிறதே.

சங் 74:21 துன்பப்பட்டவன் வெட்கத்தோடே திரும்பவிடாதிரும்; சிறுமையும் எளிமையுமானவன் உமது நாமத்தைத் துதிக்கும்படி செய்யும்.

சங் 74:22 தேவனே, எழுந்தருளும், உமக்காக நீரே வழக்காடும்; மதியீனனாலே நாடோறும் உமக்கு வரும் நிந்தையை நினைத்துக்கொள்ளும்.

சங் 74:23 உம்முடைய சத்துருக்களின் ஆரவாரத்தை மறவாதேயும்; உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் அமளி எப்பொழுதும் அதிகரிக்கிறது.

சங்கீதக்காரன் இஸ்ரவேலரை காட்டுப் புறாவிற்கு ஒப்பாகக் கூறுகிறான். துன்மார்க்கரிடமிருந்து கர்த்தர் நம்மைப் பாதுகாப்பார்.

“உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும்”. ஆனால் உண்மையில் நாம்தான் உடன்படிக்கையை மறந்துவிடாமல் நினைத்துக் கொள்ள வேண்டும். தேவன் தாம் பண்ணிய உடன்படிக்கையை ஒருபோதும் மறக்க மாட்டார். பூமியின் இருளான இடங்கள் கொடுமையுள்ள குடியிருப்புகளால் நிறைந்திருக்கிறதற்குக் காரணம் மனுஷனே. (சங் 74:20) மனுஷனுடைய கிரியைகள் துன்மார்க்கமானது. ஆகையினால் அவன் ஒளியைப் பகைத்து, இருளை விரும்புகிறான். (யோவான் 3:16-20) சாத்தானே இவ்வுலகத்தில் இருளுக்கு அதிபதி (2கொரி 4:4; எபே 6:10-18)

75 அதிகாரம்

(அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கும்படி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதமாகிய பாட்டு.)

நான்காம் துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. துதி - காரணம்- மனுஷனோடும், இந்த உலகத்தோடும் தேவனுடைய தொடர்பு - (75:1-8)
2. துதிக்கும் வாக்குத்தத்தம் - காரணங்கள் - (75:9-10)

1. துதி - காரணம்- மனுஷனோடும், இந்த உலகத்தோடும் தேவனுடைய தொடர்பு

சங் 75:1 உம்மைத் துதிக்கிறோம், தேவனே, உம்மைத் துதிக்கிறோம்; உமது நாமம் சமீபமாயிருக்கிறதென்று உமது அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது.

சங் 75:2 நியமிக்கப்பட்ட காலத்திலே, யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன்.

சங் 75:3 பூமியானது அதின் எல்லாக் குடிகளோடும் கரைந்துபோகிறது; அதின் தூண்களை நான் நிலைநிறுத்துகிறேன். (சேலா.)

சங் 75:4 வீம்புக்காரரை நோக்கி, வீம்பு பேசாதேயுங்கள் என்றும்; துன்மார்க்கரை நோக்கி, கொம்பை உயர்த்தாதிருங்கள் என்றும் சொன்னேன்.

சங் 75:5 உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள்; இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள்.

சங் 75:6 கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது.

சங் 75:7 தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.

சங் 75:8 கலங்கிப்பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் கர்த்தருடைய கையிலிருக்கிறது, அதிலிருந்த வார்க்கிறார்; பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள்.

தேவனுடைய கிரியைகள் அவருடைய மகிமையையும், வல்லமையையும் அறிவிக்கிறது. (சங் 19:1-6)

தீர்க்கதரிசன எண் - 02

"நியமிக்கப்பட்ட காலத்திலே, யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன்........" (சங் 75:2-3) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இந்த உலகத்திலுள்ள இராஜ்ஜியங்களை தேவன் எடுத்துக் கொண்டு தமது நித்திய ஆளுகையை ஸ்தாபிக்கும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (சங் 75:2-3; தானி 2:44-45; தானி 7:9-14; வெளி 11:15; வெளி 22:4-5).

பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக தமது சர்வசிருஷ்டிகளையும் நிலைநிறுத்துகிறார். (எபி 1:3)

வீம்பு (fools) - הָלַל - haw-lal' - 1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்பு, பேச்சு, பெருமை, பாராட்டு, வீம்புக்காரர், தொழுதுகொள், மேன்மைப்பாராட்டு, துதி, அல்லேலூயா, வாழ்த்து, ஸ்தோத்திரி, புகழ், பாடு, மூர்க்க, வெறிகொள், உயர்த்து, ஒளிவீசு, கீர்த்தனம்பண்ணு, துதிசெய், மதி மயங்கு, ஒளிகொடு, புகழப்படு

75 அதிகாரம்

ஹலால் (halal) என்னும் எபிரெயச்சொல் பொதுவாக துதி செய்தல், பிரகாசித்தல் போன்ற பொருளையே தரும். சில இடங்களில் எதிர்மறையாக வீம்பு பண்ணுதல், வெறிகொள்ளுதல் என்றும் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"கொம்பு" என்னும் சொல்லின் அடையாளங்கள்

1. கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடா (ஆதி 22:13; யாத் 21:29)
2. பலிபீடத்தின் நாலு மூலைகளிலும் கொம்புகள் (யாத் 27:2)
3. மேசியா (1சாமு 2:1, 10; 2சாமு 22:3; சங் 18:2; சங் 132:17)
4. வல்லமை (சங் 75:4, 5, 10; சங் 89:17; புல 2:17; வெளி 5:6)
5. இராஜாக்கள் (தானி 7:7-8, 11, 20-24; தானி 8:3-9,20-21; சக 1:21; வெளி 12:3; வெளி 13:1, 11; வெளி 17:3, 7, 12, 16)

ஜெயம் கர்த்தரிடமிருந்து மட்டுமே வரும். வனாந்தர திசை என்பது தெற்கு திசையைக் குறிக்கும். பரலோகம் பூமியின் வடதிசையில் உள்ளது (சங் 75:6-7; ஏசா 14:12-14). ஆகையினால் நமக்கு ஜெயம் வேண்டுமென்றால் கிழக்கையும், மேற்கையும், தெற்கையும் நோக்கிப்பார்க்காமல், தேவனுடைய ஸ்தலமாகிய வடதிசையையே நோக்கிப் பார்க்க வேண்டும்.

தீர்க்கதரிசன எண் - 63

"கலங்கிப்பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் கர்த்தருடைய கையிலிருக்கிறது, அதிலிருந்த வார்க்கிறார்.........." (சங் 75:8-10) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

தேவன் துன்மார்க்கருடைய அதிகாரங்களை முறித்துப்போட்டு நீதிமான்களுடைய அதிகாரங்களை உயர்த்தும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

"பாத்திரம்" என்னும் சொல் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கும். (ஏசா 51:17-23; ஆப 2:15-16; எசே 23:31, 34; எரே 25:15, 17, 28; எரே 49:12).

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற பாத்திரங்கள்

1. துன்மார்க்கன் மீதான நியாயத்தீர்ப்பான பாத்திரம் (சங் 11:6; சங் 73:10; சங் 75:8; எரே 49:12)
2. இரட்சிப்பு, ஆசீர்வாதத்தின் பாத்திரம் (சங் 16:5; சங் 23:5; சங் 116:13)
3. தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரம் (ஏசா 51:17-22; எரே 25:15-28; வெளி 14:10; வெளி 16:19)
4. தேற்றரவின் பாத்திரம் (எரே 16:7)
5. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் (எரே 51:7; வெளி 18:6)
6. புறஜாதியர்களால், இஸ்ரவேல் மீதான அடக்குதலான பாத்திரம் (புல 4:21; எசே 23:31-33; ஆப 2:16; சக 12:2)
7. அசுத்தம், ஏமாற்றுதலின் பாத்திரம் (மத் 23:25-26; லூக்கா 11:39)
8. மேசியாவின் பாடுகளாகிய பாத்திரம் (மத் 20:22; மாற்கு 10:38; யோவான் 18:11)
9. மரணமாகிய பாத்திரம் - மேசியா சிலுவையில் மரிப்பதற்கு முன் தோட்டத்தில் இயேசுவை கொல்ல முயற்சி பண்ணினான். (மத் 26:39,42; மாற்கு 14:36; லூக்கா 22:42)

75 அதிகாரம்

10. கிறிஸ்துவின் இரத்தமாகிய போஜன விருந்தின் பாத்திரம் - ஆசீர்வாதத்தின் பாத்திரம் (மத் 26:27-28; மாற்கு 14:23; லூக்கா 22:20; 1கொரி 10:16,21; 1கொரி 11:25-28)

11. பேய்களுடைய பானப்பாத்திரம் - சாபத்தின் பாத்திரம் (1கொரி 10:21)

12. அசுத்தம் நிறைந்த பாத்திரம் (வெளி 17:4)

துன்மார்க்கர் எல்லோரும் தாங்கள் விதைத்ததன் பலனை அனுபவிப்பதற்காக நரகத்திற்குப் போவார்கள். (கலா 6:7-8) பரிசுத்தவான்கள் தங்களுடைய சரீரங்கள் மூலமாக நடப்பித்த கிரியைகளுக்கு கணக்கு ஒப்புவிப்பார்கள். (ரோமர் 14:10; 1கொரி 3:11-15; 2கொரி 5:10)

2. துதிக்கும் வாக்குத்தத்தம் - காரணங்கள்

சங் 75:9 நானோ என்றென்றைக்கும் இதை அறிவித்து, யாக்கோபின் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங் 75:10 துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப் போடுவேன்; நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும்.

"யாக்கோபின் தேவன்" என்னும் சொல் வேதாகமத்தில் 25 தடவைகள் வந்துள்ளன. சங்கீதப்புஸ்தகத்தில் மட்டும் 13 தடவைகள் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யாக்கோபின் தேவன் என்பது கிருபையின் தேவனைக் குறிப்பிடும். யாக்கோபு ஒன்றுமே இல்லாதவனாகவும், தேவகோபாக்கினைக்கு உரியவனாகவும் இருந்தபோது தேவன் அவனைச் சந்தித்தார். அவனையும், அவனுடைய சந்ததியையும் ஆசீர்வதிப்பதாக வாக்குப் பண்ணினார் (ஆதி 28:12-15).

துன்மார்க்கருடைய கொம்புகள், நீதிமானுடைய கொம்புகள் என்பவை இந்தப் பூமியில் அவர்களுடைய வல்லமையையும், அதிகாரத்தையும் குறிப்பிடும். ஒன்று உயர்த்தப்படும், மற்றொன்று வெட்டிப்போடப்படும். (சங் 75:4)

சங்கீதம் - தொகுப்புரை

76 அதிகாரம்

(நெகிநோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதமாகிய பாட்டு.)

பதினான்காவது போதக சங்கீதம் - எருசலேமின் வெற்றியைக் குறித்த உபதேசம்

பொருளடக்கம்

1. தேவன் எபூசியரைத் தோற்கடிக்கிறார் - (76:1-3)
2. பர்வதங்களைப் பார்க்கிலும் தேவன் மகத்துவமுள்ளவர் - (76:4)
3. தேவன் எபூசியரைத் தோற்கடிக்கிறார் - (76:5-6)
4. தேவனுக்குப் பயப்படவேண்டும் - காரணங்கள் - (76:7-9)
5. தேவனைத் துதிக்கவேண்டும் - காரணங்கள் - (76:10-12)

1. தேவன் எபூசியரைத் தோற்கடிக்கிறார்

சங் 76:1 யூதாவில் தேவன் அறியப்பட்டவர்; இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது.

சங் 76:2 சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது.

சங் 76:3 அங்கேயிருந்து வில்லின் அம்புகளையும், கேடகத்தையும், பட்டயத்தையும், யுத்தத்தையும் முறித்தார். (சேலா.)

"யூதாவில் தேவன் அறியப்பட்டவர்". இந்த சங்கீதத்தில் நான்கு இடங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அவையாவன, 1. யூதா 2. இஸ்ரவேல் 3. சாலேம் 4. சீயோன்

1. யூதா - தாவீது யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் யூதா கோத்திரத்தாருக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்ட நிலத்தில் எருசலேம் இருந்தது. யூதா கோத்திரம் ஆட்சி புரியும் கோத்திரம் (ஆதி 49:10) தாவீதின் ஆளுகையின்கீழ் தனிச் சிறப்புடன் விளங்கிற்று.

2. இஸ்ரவேல் - தாவீது சாலேமைக் கைப்பற்றினான். இதன்மூலமாக சமஸ்த இஸ்ரவேலுக்கும் தாவீது இராஜாவானான் (2சாமு 5:1-10).

3. சாலேம் - தாவீது சாலேமைக் கைப்பற்றி, சமஸ்த இஸ்ரவேல் இராஜ்ஜியத்திற்கு அதைத் தலைநகரமாக்கினான். எருசலேம் என்பதன் பழங்கால எபூசிய பெயர் சாலேம் என்பதாகும் (ஆதி 14:18; எபி 7:1-2).

4. சீயோன் - எபூசியரிடமிருந்து சாலேமைக் கைப்பற்றிய பிறகு தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் சீயோனில் அமைக்கப்பட்டது. (சங் 76:2-3; 2சாமு 5:6-10; 2சாமு 6:1-23; 2சாமு 7:1-2). சீயோன் எபூசியரின் அரணான பட்டணமாக இருந்தது. ஆயினும் தாவீது அதைக் கைப்பற்றிய பின்பு அந்தப் பட்டணத்தின்மீது எபூசியரின் செல்வாக்கு திரும்பவும் வரவேயில்லை. தேவன் தாமே தமது வாசஸ்தலமாக சீயோனைத் தெரிந்து கொண்டார் (சங் 132:13).

2. பர்வதங்களைப் பார்க்கிலும் தேவன் மகத்துவமுள்ளவர்

சங் 76:4 மகத்துவமுள்ளவரே, கொள்ளையுள்ள பர்வதங்களைப் பார்க்கிலும் நீர் பிரகாசமுள்ளவர்.

76 அதிகாரம்

"மகத்துவமுள்ளவரே, கொள்ளையுள்ள பர்வதங்களைப் பார்க்கிலும் நீர் பிரகாசமுள்ளவர்". எல்லா சிருஷ்டிகளைப் பார்க்கிலும் தேவனே மகத்துவம் உள்ளவர். தேவனுடைய மகிமையை நாம் அங்கீகரிக்க வேண்டும். சிருஷ்டிகரை ஆராதிக்க வேண்டும். சிருஷ்டியை ஆராதிக்கக்கூடாது. சிருஷ்டியை ஆராதிப்பது விக்கிரகாராதனை. விக்கிரகாராதனை தேவனுடைய சாபத்தைக் கொண்டு வரும். (ரோமர் 1:18-32) தேவன் தமது நாம மகிமைக்காகவும், தமது சந்தோஷத்திற்காகவும், தமது புகழ்ச்சிக்காகவும் சர்வ சிருஷ்டியையும் சிருஷ்டித்தார். நாம் சிருஷ்டியை ஆராதிக்க வேண்டுமென்பதற்காக தேவன் எந்த சிருஷ்டியையும் சிருஷ்டிக்கவில்லை. (வெளி 4:11)

"கொள்ளையுள்ள பர்வதங்கள்" - எபூசியரின் அரணான பர்வதங்களைத் தாவீது கைப்பற்றினான். இவை இஸ்ரவேலருக்கு கொள்ளைப்பொருளாயிற்று. எபூசியர் மறுபடியும் இந்தப் பர்வதங்களைக் கைப்பற்றவில்லை (சங் 76:4-6).

3. தேவன் எபூசியரைத் தோற்கடிக்கிறார்

சங் 76:5 தைரிய நெஞ்சுள்ளவர்கள் கொள்ளையிடப்பட்டு,நித்திரையடைந்து அசர்ந்தார்கள்; வல்லமையுள்ள எல்லா மனுஷருடைய கைகளும் அவர்களுக்கு உதவாமற்போயிற்று.

சங் 76:6 யாக்கோபின் தேவனே, உம்முடைய கண்டிதத்தினால் இரதங்களும் குதிரைகளும் உறங்கி விழுந்தது.

"உம்முடைய கண்டிதத்தினால்" - எபூசியரை வென்றவர் தேவனே. அவர்களுடைய கடின இருதயத்தையும், அரணான கோட்டையையும் தேவன் முறியடித்தார். அவர்களால் தேவனுக்கு எதிராக யுத்தம் செய்ய முடியவில்லை. எபூசியர் தங்களுடைய பாவங்களினால் அழிந்து போனார்கள். அதுபோலவே, கானானின் இராஜாக்களும் அழிந்துபோனார்கள். (உபா 7; உபா 9:4-5) எபூசியர்களின் கைகள் அவர்களுக்கு உதவாமல் போயிற்று. (சங் 76:5-6; சக 14:12-15)

"உறங்கி விழுந்தது" - எபூசியர்கள் மரணமடைந்தார்கள். அவர்களுடைய குதிரைகளும் மாண்டு போயின. (சங் 76:5)

4. தேவனுக்குப் பயப்படவேண்டும் - காரணங்கள்

சங் 76:7 நீர், நீரே, பயங்கரமானவர்; உமது கோபம் மூளும்போது உமக்கு முன்பாக நிற்பவன் யார்?

சங் 76:8 நியாயம் விசாரிக்கவும் பூமியில் சிறுமைப்பட்டவர்கள் யாவரையும் இரட்சிக்கவும், தேவரீர் எழுந்தருளினபோது,

சங் 76:9 வானத்திலிருந்து நியாயத்தீர்ப்புக் கேட்கப் பண்ணினீர்; பூமி பயந்து அமர்ந்தது. (சேலா.)

தேவன் நிர்மூலம் பண்ணாமல் கோபமாயிருந்த வேளைகள்

1. மோசே (யாத் 4:14; உபா 1:37; உபா 4:21)
2. ஆரோன், மீரியாம் (எண் 12: 9-16)
3. பிலேயாம் (எண் 22:22-35)
4. இஸ்ரவேல் (உபா 9:9-21)
5. சாலொமோன் (1இராஜா 11:9)
6. துன்மார்க்கன் (சங் 7:11)
7. நினிவேயின் ஜனங்கள் (யோனா 3:9-10)

"வானத்திலிருந்து நியாயத்தீர்ப்புக் கேட்கப் பண்ணினீர்" - இஸ்ரவேலை இரட்சிப்பதற்காக தேவன் பலமுறை எழுந்தருளியிருக்கிறார். இந்த வசனம் ஒருவேளை தேவன் எபூசியரை முறியடித்ததைக் குறிக்கலாம். (சங் 76:3-6) தேவன் இஸ்ரவேலருக்கு உதவி செய்யவில்லை யென்றால் அவர்களால் சீயோனைக் கைப்பற்றியிருக்க முடியாது.

76 அதிகாரம்

யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு யுத்தத்தில் ஜெயம் தருவார். மோசே, யோசுவா, நியாயாதிபதிகள், இராஜாக்கள் ஆகியோருடைய காலங்களில் கர்த்தர் பலமுறை இஸ்ரவேலரை இரட்சித்திருக்கிறார். அவர் தமது பிள்ளைகளை இன்னும் இரட்சிப்பார். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எருசலேமின் ஜனங்களில் ஏராளமானோர் யுத்தத்தில் பங்கு பெறுவார்கள். (சக 14)

5. தேவனைத் துதிக்கவேண்டும் - காரணங்கள்

சங் 76:10 மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர்.

சங் 76:11 பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்; அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டு வரக்கடவர்கள்.

சங் 76:12 பிரபுக்களின் ஆவியை அடக்குவார்; பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர்.

தீர்க்கதரிசன எண் - 64

"மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர்........" (சங் 76:10-12) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. நீதிமானுக்கு எதிராக எழும்பும் துன்மார்க்கருடைய அக்கிரமங்களை தேவன் தமது நாமமகிமைக்காக அடக்கும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

"மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்" - துன்மார்க்கருடைய அக்கிரமங்கள் அழியும் போது பரிசுத்தவான்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். முழு உலகத்திலும் இரட்சிக்கப்படும் தேவனுடைய பிள்ளைகள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். (1கொரி 15:24-28; எபே 1:10)

"பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்" - கர்த்தருக்கு பொருத்தனை பண்ணவேண்டியது நமது சொந்த மனவிருப்பத்தைப் பொறுத்தது. பொருத்தனை பண்ணிவிட்டால் அதை நிறைவேற்றுவது நமது பொறுப்பு. பண்ணிய பொருத்தனையை நிறைவேற்றாமல் இருப்பது பாவம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருமானால் நாம்தேவனிடம் நமது பாவங்களுக்காக மனம்வருந்தி நமது பாவங்களை மன்னிக்குமாறு விண்ணப்பம் பண்ண வேண்டும். (சங் 15:4; எண் 30:1-16; மத் 12:36-37)

"அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டுவரக்கடவர்கள்" - ஆயிர வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் ஜனங்கள் தேவனுக்குக் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள். (சங் 68:29; சங் 72:10; ஏசா 18:7; வெளி 21:26).

77 அதிகாரம்

(எதுதூன் என்னும் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதம்.)

பதினைந்தாவது போதக சங்கீதம் - நெருக்கங்களிலிருந்து மீட்பது பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. தன் இருதயத்தோடு செய்யும் சம்பாஷணையின் பதினாறு அம்சங்கள் - (77:1-6)

2. இதன் நிச்சயமான முடிவு - கேள்விகளும், துயரங்களும் நிரம்பிய வாழ்வு - (77:7-9)

3. தேவனோடு செய்யும் சம்பாஷணையின் ஆறு அம்சம் - (77:10-12)

4. இதன் நிச்சயமான முடிவுகள் - சந்தோசமான வாழ்வு - தேவனுடைய மகத்துவத்திற்காகவும் கிரியைகளுக்காகவும், தேவனைத் துதிக்கும் துதியின் பதினாறு அம்சம் - (77:13-20)

1. தன் இருதயத்தோடு செய்யும் சம்பாஷணையின் பதினாறு அம்சங்கள்

சங் 77:1 நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன், என் சத்தத்தைத் தேவனிடத்தில் உயர்த்தினேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார்.

சங் 77:2 என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன்; இரவிலும் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது; என் ஆத்துமா ஆறுதலடையாமற் போயிற்று.

சங் 77:3 நான் தேவனை நினைத்தபோது அலறினேன்; நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்துபோயிற்று. (சேலா.)

சங் 77:4 நான் தூங்காதபடி என் கண்ணிமைகளைப் பிடித்திருக்கிறீர்; நான் பேசமாட்டாத படி சஞ்சலப்படுகிறேன்.

சங் 77:5 பூர்வநாட்களையும், ஆதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன்.

சங் 77:6 இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து, என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்ளுகிறேன்; என் ஆவி ஆராய்ச்சி செய்தது.

தேவனிடம் நம்மைப் பற்றி நாம் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. தேவனை நோக்கி கெஞ்சினேன் (சங் 77:1)

2. ஆபத்து நாளில் ஆண்டவரைத் தேடினேன் (சங் 77:2)

3. இரவிலும் என் கை விரிக்கப்பட்டிருந்தது

4. என் கை தளரவில்லை

5. என் ஆத்துமா ஆறுதலடையாமற் போயிற்று

6. நான் தேவனை நினைத்தேன் (சங் 77:3)

7. நான் அலறினேன்

8. நான் தியானித்தேன்

9. என் ஆவி தொய்ந்து போயிற்று

10. நான் தூங்கவில்லை (சங் 77:4)

11. நான் பேசமாட்டாதபடி சஞ்சலப்படுகிறேன்

12. நான் பூர்வநாட்களை சிந்திக்கிறேன் (சங் 77:5)

13. நான் ஆதிகாலத்து வருஷங்களைச் சிந்திக்கிறேன்

14. இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்துக்கொள்வேன் (சங் 77:6)

77 அதிகாரம்

15. என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்கிறேன்

16. என் ஆவி ஆராய்ச்சி செய்தது

17. ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளி விடுவாரோ என்று எண்ணினேன். (சங் 77:7)

18. இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ? என்று நினைத்தேன்.

19. அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? என்று நினைத்தேன். (சங் 77:8)

20. வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்து போயிற்றோ என்று நினைத்தேன்.

21. தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? என்று நினைத்தேன். (சங் 77:9)

22. கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக் கொண்டாரோ? என்று நினைத்தேன்.

23. நான், இது என் பலவீனம், ஆனாலும் உன்னதமானவருடைய வலது கரத்திலுள்ள வருஷங்களை நினைவு கூருவேன் என்றேன். (சங் 77:10)

"அவர் எனக்குச் செவிகொடுத்தார்" - நாம் கர்த்தரை உண்மையோடு தேடும்போது அவர் நமக்குச் செவி கொடுப்பார். தம்மிடத்தில் வருகிறவர்களை அவர் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை. நமது கண்ணீரைக் காண்கிற தேவன். நமது அழுகையைக் கேட்கிற தேவன். நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான ஆவியைத் தேவன் ஆறுதல்படுத்துவார். (எபி 8:6)

"என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன்" - கர்த்தரிடம் ஜெபம் பண்ணுவதற்கு நமக்கு ஆபத்துநாள் வரட்டுமென்று காத்திருக்கக் கூடாது.

ஆபத்துநாளில் நாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போது அவர் நிச்சயமாகவே நமது ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில் கொடுப்பார் (சங் 50:15; சங் 91:15) என்றாலும், தேவனுடைய சமூகத்தில் நாம் அநுதினமும் அமர்ந்திருந்து, அவரைத் துதித்து, அவருடைய சப்தத்தைக் கேட்டு, அவர் வழிநடத்துகிற பிரகாரம் நமது ஜீவியத்தில் நாம் நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆபத்துநாளில் ஆண்டவர் நமது ஜெபத்தைக் கேட்டு பதில் கொடுப்பார் என்பதற்கு வேதாகமத்தில் பல சான்றுகள் உள்ளன. (2 நாளா 15:4; நெகே 9:27; சங் 31:7; சங் 54:7; சங் 107:6,13,19,28)

"என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது" - தேவனுடைய சமூகத்தில் தனது கரங்களை விரித்து சங்கீதக்காரன் ஜெபித்தான். இரவிலும் ஜெபித்தான். ஆனாலும் அவனுடைய கைகள் தளரவில்லை. தேவன் தனது ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில் கொடுக்கும்வரையிலும் சங்கீதக்காரன் தன்னுடைய கைகளை தேவனுடைய சமூகத்திற்கு முன்பாகத் தளராமல் விரித்திருந்தான்.

தளருதல் (sore) יָד - yawd - 3027

பொதுப்பெயர்ச்சொல் - கை, முகாந்தரம், கிரதம், மடங்கு, வசம், பங்கு, எறிதல், போதுமானது, கரம், பாதை, புயம், பட்சம், ஓரம், கிரியை, நிற்றல், திராணி, சுதந்தரித்துக்கொள்தல், அச்சு, துணிகரம், கரைதுறை, பலன், அடையாளம், பக்கம், மூலம், அருகே, இடம், சமூகம், வழி, பாதை, தாளடி, நதியருகு, எல்லை, நதியண்டை, கீழ்ப்படுத்துதல், வல்லமைநிலம், சேவை, இராணுவம், பேர், கூர்மை, விசாரிப்பு, வெட்டுகரம், துஷ்டத்தனம், ஸ்தலம்

"என் ஆவி தொய்ந்துபோயிற்று" - சங்கீதக்காரன் ஏதாவது ஒருவேலையில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தபோது முடிவில் களைத்துப் போய்விட்டான். அவனுடைய ஆவியும் தொய்ந்துபோயிற்று. அவன் எதை ஆசையாய் பின்தொடர்ந்தானோ அதற்கு அடிமையாகி விட்டான். இப்போது தேவனுடைய சமூகத்தில் வந்து விண்ணப்பம் பண்ணுகிறான் (சங் 77:2-9).

77 அதிகாரம்

"நான் தூங்காதபடி என் கண்ணிமைகளைப் பிடித்திருக்கிறீர்; நான் பேசமாட்டாதபடி சஞ்சலப்படுகிறேன்" - தேவன் சங்கீதக்காரனை தூங்கவிடாமல் பண்ணிவிட்டார். அவனைப் பேசமுடியாதபடியும் செய்துவிட்டார். இப்போது அவனுடைய துக்கம் இன்னும் அதிகமாயிற்று. தூங்கவும் முடியவில்லை. பேசவும் முடியவில்லை.

"பூர்வநாட்களையும், ஆதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன்" - சங்கீதக்காரன் தன்னுடைய முன்னோர்களை நினைத்துப் பார்க்கிறான். ஆபத்துக் காலங்களில் கர்த்தர் அவனுடைய முன்னோர்களை இரட்சித்திருக்கிறார். ஆனால் அவர்களை இரட்சித்ததுபோன்று கர்த்தர் சங்கீதக்காரனை இரட்சிக்கவில்லை (சங் 77:5-6).

"இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து" - சங்கீதக்காரன் சந்தோஷமாக இருந்த காலங்கள் உண்டு. அப்போதெல்லாம் கர்த்தரைத் துதித்து இரவு வேளையில் சங்கீதங்களைப் பாடும் வழக்கம் அவனிடம் இருந்தது. இப்போதோ அவனால் பேசவே முடியவில்லை. ஆகையினால் தான் பாடிய பழைய சங்கீதங்களை தன் மனதிற்குள் நினைத்துப் பார்க்கிறான் (சங் 77:2-6).

2. இதன் நிச்சயமான முடிவு - கேள்விகளும், துயரங்களும் நிரம்பிய வாழ்வு

சங் 77:7 ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ? இனி ஒருபோதும் தயைசெய்யாதிருப்பாரோ?

சங் 77:8 அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்து போயிற்றோ?

சங் 77:9 தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக் கொண்டாரோ? என்றேன். (சேலா.)

3. தேவனோடு செய்யும் சம்பாஷணையின் ஆறு அம்சம்

சங் 77:10 அப்பொழுது நான்: இது என் பலவீனம்; ஆனாலும் உன்னதமானவருடைய வலது கரத்திலுள்ள வருஷங்களை நினைவு கூருவேன்.

சங் 77:11 கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவு கூருவேன்;

சங் 77:12 உம்முடைய கிரியைகளை எல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்.

"உன்னதமானவருடைய வலது கரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன்" - இப்போது சங்கீதக்காரனுடைய பலவீனம் அகன்று போயிற்று. கர்த்தரைப் பற்றிக் கொண்டு விட்டான். தனது சொந்த அலுவல்களில் மூழ்கியிருந்து வேதனையடைந்ததற்குப் பதிலாக இப்பொழுது கர்த்தரையே நினைத்துப் பார்க்கிறான். (சங் 77:10-20)

தேவனோடு ஐக்கியமாக இருக்கும்போது நான் செய்யும் காரியங்கள்

1. கர்த்தருடைய செயல்களை நினைவு கூருவேன்
2. உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களை நினைவு கூருவேன் (சங் 77:11)
3. உம்முடைய செயல்களை யோசிப்பேன்
4. உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானிப்பேன் (சங் 77:12)
5. கர்த்தருடைய கிரியைகளைப் பற்றிப் பேசுவேன், அதற்காக ஸ்தோத்திரம் செலுத்துவேன்

77 அதிகாரம்

4. இதன் நிச்சயமான முடிவுகள் - சந்தோசமான வாழ்வு - தேவனுடைய மகத்துவத்திற்காகவும் கிரியைகளுக்காகவும், தேவனைத் துதிக்கும் துதியின் பதினாறு அம்சம்

சங் 77:13 தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது; நம்முடைய தேவனைப் போலப் பெரிய தேவன் யார்?

சங் 77:14 அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே; ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணினீர்.

சங் 77:15 யாக்கோபு யோசேப்பு என்பவர்களின் புத்திராகிய உம்முடைய ஜனங்களை, உமது புயத்தினாலே மீட்டுக்கொண்டீர். (சேலா.)

சங் 77:16 ஜலங்கள் உம்மைக் கண்டது; தேவனே, ஜலங்கள் உம்மைக் கண்டு தத்தளித்தது; ஆழங்களும் கலங்கினது.

சங் 77:17 மேகங்கள் ஜலங்களைப் பொழிந்தது; ஆகாயமண்டலங்கள் முழக்கமிட்டது; உம்முடைய அம்புகளும் தெறிப்புண்டு பறந்தது.

சங் 77:18 உம்முடைய குமுறலின் சத்தம் சுழல்காற்றில் முழங்கினது; மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி குலுங்கி அதிர்ந்தது.

சங் 77:19 உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது; உமது காலடிகள் தெரியப்படாமற்போயிற்று.

சங் 77:20 மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப்போல வழி நடத்தினீர்.

"தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது" - தேவனுடைய ஸ்தலத்தில் தேவன் இஸ்ரவேலரைச் சந்தித்தார். ஆகையினால் அவருடைய வழி பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது. ஆனால் இப்பொழுதோ தேவன் நமக்கு வேறொரு வழியை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். தேவனை ஒரு குறிப்பிட்ட தேவாலயத்தில் சென்றுதான் சந்திக்க முடியும் என்னும் கட்டாயம் இப்பொழுது இல்லை. நாம் கர்த்தரை எங்கும் ஆராதனை செய்யலாம் (யோவான் 4:21-24; எபி 4:14-16; எபி 10:19-23).

தேவனுடைய வல்லமையின் அம்சங்கள்

1. நம்முடைய தேவனைப் போலப் பெரிய தேவன் இல்லை (சங் 77:13)
2. அதிசயங்களைச் செய்கிற தேவன் (சங் 77:14)
3. ஜனங்களுக்குள்ளே தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணுவார்
4. தம்முடைய ஜனங்களை, தம் புயத்தினாலே மீட்டுக் கொள்வார் (சங் 77:15)
5. ஜலங்களை அடக்குவார் (சங் 77:16)
6. ஆழங்களும் அவரைக் கண்டு கலங்கும்
7. பூமியின் மீது மழையைப்பொழியப் பண்ணுவார் (சங் 77:17)
8. ஆகாயமண்டலங்களை இடியினால் முழங்கப்பண்ணுவார்
9. அவருடைய அம்புகள் தெறிப்புண்டு பறந்தது
10. அவருடைய குமுறலின் சத்தம் சுழல்காற்றினால் முழங்கிடப் பண்ணுவார் (சங் 77:18)
11. மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பிக்குமாறு பண்ணுகிறார் (சங் 77:18)
12. பூமி குலுங்கி அதிரப்பண்ணுகிறார்.

77 அதிகாரம்

13. கர்த்தருடைய வழி கடலில் இருந்தது (சங் 77:19)

14. அவருடைய பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது

15. உமது காலடிகள் தெரியபடாமற் போயிற்று

16. தம்முடைய ஜனங்களை ஒரு ஆட்டுமந்தையைப் போல வழி நடத்துவார் (சங் 77:20)

78 அதிகாரம்

(ஆசாப் எழுதின மஸ்கீல் என்னும் போதக சங்கீதம்)

பதினாறாவது போதக சங்கீதம் - தேவலாயத்து ஸ்தலத்தைத் தெரிந்தெடுப்பது பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. மோசேயின் பிரமாணத்தைக் கேட்டு அதற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் கட்டளைகள் - (78:1)
2. மேசியாவின் புதிய வெளிப்பாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (78:2)
3. நியாயப்பிரமாணத்தை மோசே தெரிவித்தார் - (78:3-5)
4. மோசேயினுடைய பிரமாணத்தின் ஏழு அம்ச நோக்கம் - (78:6-8)
5. எப்பிராயீமின் ஐந்து பாவங்கள் - (78:9-11)
6. எகிப்தில் தேவன் செய்த பத்து அற்புதங்கள் - (78:12-16)
7. இஸ்ரவேலின் ஐந்து பாவங்கள் - (78:17-22)
8. வனாந்திரத்தில் தேவன் செய்த பத்து அற்புதங்கள் - (78:23-29)
9. இஸ்ரவேலின் கல்மனமும், ஜனங்கள் மீது தேவனுடைய கோபமும் - (78:30-31)
10. ஜனங்கள் தொடர்ந்து தேவனை விசுவாசியாமல் பாவம் செய்வதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு பெருகுவதும் - (78:32-33)
11. தேவனுடைய இரக்கங்கள் இருந்த போதிலும் ஜனங்களுடைய மாய்மாலமும் ஸ்திரத் தன்மையின்மையும் - (78:34-39)
12. இஸ்ரவேலின் ஐந்து பாவங்கள் - (78:40-42)
13. தேவன் செய்த இருபத்திரெண்டு அற்புதங்கள் - (78:43-55)
14. ஜனங்களுடைய மீறுதல் அதிகரிப்பு - இஸ்ரவேலின் ஏழு பாவங்கள் - (78:56-58)
15. தேவனுடைய கோபத்தின் பதினைந்து அம்சங்கள் - (78:59-66)
16. தேவனுடைய தெரிந்தெடுப்பின் ஏழு அம்சங்கள் - (78:67-72)

1. மோசேயின் பிரமாணத்தைக் கேட்டு அதற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் கட்டளைகள்

சங் 78:1 என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்; என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள்.

"என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்; என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள்" என்னும் இரண்டு கட்டளைகள் இங்கு கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவை இரண்டுமே பழைய ஏற்பாட்டுக் கட்டளைகள். (யாத் 15:26; (உபா 32:1; சங் 17:6; நீதி 2:2; நீதி 4:20) புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இப்பேர்ப்பட்ட கட்டளைகள் எதுவும் காணப்படவில்லை. ஏனெனில் நாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளினால் இரட்சிக்கப்படாமல் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப் படுகிறோம்.

2. மேசியாவின் புதிய வெளிப்பாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (மத் 13:35)

சங் 78:2 என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறை பொருள்களை வெளிப்படுத்துவேன்.

"என் வாயை உவமைகளால் திறப்பேன்" - மத் 13:35 - ஆவது வசனத்தில் இது மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (சங் 49:4)

78 அதிகாரம்

கர்த்தர் தமது கிரியைகளைத் தமது பிள்ளைகள் விளங்கும் பிரகாரம் அவர்களுக்கு அறிவிப்பார். உவமைகளையும், பூர்வகாலத்து மறைபொருள்களையும் கர்த்தர் பயன்படுத்துவார். சங் 78:2; சங் 49:4; எண் 23:7; எண் 24:3; யோபு 27:1; யோபு 29:1; நீதி 26:7,9; எசே 17:2; எசே 20:49; எசே 24:3; மீகா 2:4; ஆப 2:6 ஆகிய வசனங்களில் நாம் உவமைகளைக் காண்கிறோம். சங் 78; சங் 105; சங் 106; சங் 136 ஆகிய சங்கீதங்கள் வரலாற்று சங்கீதங்களாகும். தேவன் தமது மகத்துவங்களை இந்த வரலாற்றுச் சங்கீதங்களில் பூர்வகாலத்து மறை பொருள்களை வெளிப்படுத்தி விளக்குகிறார்.

உவமை (parable) - מָשָׁל - maw-shawl' - 4912

ஆண்பால் பெயர்ச்சொல் - வாக்கியம், பழமொழி, மொழி, நீதிமொழி, சமானம், உவமைமொழி, உபமானம், ஒப்பு, உவமை

மறைபொருள் (proverb) - חִידָה - khee-daw' - 2420

பெபெசொ - பிரத்தியட்சம், விடுகதை, மறைபொருள், கேள்விப்படுதல், சூதான பேச்சு, பழமொழி (a knot; acutely hidden saying; puzzle; proverb; riddle; conundrum) - (சங் 78:2; சங் 49:4; எண் 12:8; நீதி 1:6; தானி 8:23)

3. நியாயப்பிரமாணத்தை மோசே தெரிவித்தார் - (உபா 4:9-10; 6:7)

சங் 78:3 அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம்; எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள்.

சங் 78:4 பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்.

சங் 78:5 அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்.

"அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம்; எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள்" - இஸ்ரவேலின் வரலாற்றில் நடைபெற்ற சம்பவங்களை முன்னோர்கள் உவமைகளாகவும், பூர்வகாலத்து மறைபொருள்களாகவும் தங்களுடைய சந்ததியாருக்கு வாய்மொழியாக கூறிவந்தார்கள். ஆனால் நமக்கோ எல்லா சந்ததிக்கும் விளங்கும் பிரகாரம் கர்த்தர் இவற்றையெல்லாம் எழுதி வைத்திருக்கிறார். (சங் 78:3-5)

"பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல்" - எங்கள் பிள்ளைகளுக்கு விவரிப்போம். இதன் மூலமாக கர்த்தருடைய அதிசயங்களையும் அவருடைய அற்புதங்களையும் எங்களுடைய சந்ததியாரும் தெரிந்து கொள்வார்கள். (சங் 78:4-5)

"அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தினார்" - தேவன் இஸ்ரவேலருக்கே தமது பிரமாணத்தைக் கொடுத்தார். புறஜாதியாருக்கு அவற்றைக் கட்டளையிட வில்லை. (உபா 4:7-13; உபா 5:3; ரோமர் 2:14; 1கொரி 9:21)

"அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்" - (யாத் 10:2; யாத் 12:26-27; யாத் 13:8-15; உபா 4:9; உபா 6:7,20)

78 அதிகாரம்

4. மோசேயினுடைய பிரமாணத்தின் ஏழு அம்ச நோக்கம் - (ரோம 3:9-20; எபி 10)

சங் 78:6 இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்;

சங் 78:7 தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்,

சங் 78:8 இருதயத்தைச் செவ்வைப் படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார்.

பிரமாணத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டியதற்குக் காரணங்கள்

1. இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின் சந்ததியார், கர்த்தருடைய பிரமாணத்தையும், சத்தியத்தையும் அறிந்து கொள்வார்கள். (சங் 78:6).
2. சந்ததியார்கள், கர்த்தருடைய சத்தியத்தின் படியே நடக்கும்படி தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்வார்கள்.
3. தேவன் மேல், தங்கள் நம்பிக்கையை வைப்பார்கள் (சங் 78:7).
4. தேவனுடைய செயல்களை மறவாமல் இருப்பார்கள்.
5. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வார்கள்.
6. இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாமல் இருப்பார்கள். (சங் 78:8; உபா 9:24; உபா 31:27; அப் 7:51-52).

5. எப்பிராயீமின் ஐந்து பாவங்கள் - (வசனம் 17)

சங் 78:9 ஆயுதமணிந்த வில்வீரரான எப்பிராயீம் புத்திரர் யுத்தநாளிலே முதுகுகாட்டினார்கள்.

சங் 78:10 அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளாமலும், அவருடைய கட்டளைகளின்படி நடக்கச் சம்மதியாமலும்,

சங் 78:11 அவருடைய செயல்களையும், அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள்.

இஸ்ரவேலின் பாவங்களும், கலகங்களும்

1. யுத்த நாளிலே முதுகு காட்டினார்கள் (சங் 78:9).
2. தேவனுடைய உடன்படிக்கையைக் கைக் கொள்ளாமலிருந்தார்கள். (சங் 78:10).
3. அவருடைய கட்டளைகளின் படி நடக்கச் சம்மதிக்கவில்லை.
4. அவருடைய செயல்களை மறந்தார்கள் (சங் 78:11).
5. அவர்கள் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களை மறந்தார்கள்.
6. தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்து, பாவத்தின் ஆழத்திற்கே சென்றார்கள் (சங் 78:17).
7. தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள் (சங் 78:18).
8. தேவனுக்கு விரோதமாகப் பேசினார்கள். (சங் 78:19).

78 அதிகாரம்

9. அவர்கள் தேவனை விசுவாசியாமற் போனார்கள் (சங் 78:22).

10. அவருடைய இரட்சிப்பை நம்பாமற் போனார்கள்

11. அவர்கள் தங்கள் இச்சையை வெறுக்கவில்லை (சங் 78:30).

12. அவர்கள் பாவம் செய்வதிலே உறுதியாயிருந்தார்கள் (சங் 78:32).

13. கர்த்தர் செய்த அதிசயங்களை நம்பாமல் இருந்தார்கள்.

14. அவர்கள், தங்கள் வாயினால் தேவனுக்கு இச்சகம் பேசினார்கள் (சங் 78:36).

15. தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய் சொன்னார்கள்.

16. அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை (சங் 78:37).

17. அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை.

18. அவர்கள், தேவனுக்கு கோபம் மூட்டினார்கள் (சங் 78:40).

19. நாற்பது வருஷ காலமாக, அவர்கள் தேவனை விசனப்படுத்தினார்கள் (சங் 78:40; எபி 3:16-18).

20. அவர்கள் திரும்பித் தேவனை பரீட்சை பார்த்தார்கள் (சங் 78:41; எண் 14:22).

21. இஸ்ரவலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்

22. தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்டநாளை நினையாமற் போனார்கள் (சங் 78:42).

23. அவர்கள், கர்த்தர் எகிப்திலே செய்த அடையாளங்களையும், அற்புதங்களையும் மறந்தார்கள் (சங் 78:43).

24. உன்னதமான தேவனைப் பரீட்சை பார்த்து, அவருக்குக் கோபம் மூட்டினார்கள் (சங் 78:56).

25. அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற் போனார்கள்.

26. அவர்கள் வழிவிலகிப் போனார்கள் (சங் 78:57).

27. தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகிப்போனார்கள்

28. அவர்கள் துரோகம்பண்ணி, மோசம் போக்கும் வில்லைப்போல் துவண்டு போகிறார்கள்.

29. அவர்கள் விக்கிரகாராதனை செய்கிறார்கள் (சங் 78:58).

30. அவர்கள் மேடைகளினால் அவருக்குக் கோபம் மூட்டி, தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள்.

6. எகிப்தில் தேவன் செய்த பத்து அற்புதங்கள் - (வசனம் 23)

சங் 78:12 அவர்களுடைய பிதாக்களுக்கு முன்பாக, எகிப்து தேசத்துச் சோவான் வெளியிலே, அவர் அதிசயமானவைகளைச் செய்தார்.

சங் 78:13 கடலைப் பிளந்து, அவர்களைக் கடக்கப்பண்ணி, ஜலத்தைக் குவியலாக நிற்கும்படி செய்தார்.

சங் 78:14 பகலிலே மேகத்தினாலும், இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழிநடத்தினார்.

சங் 78:15 வனாந்தரத்திலே கன்மலைகளைப் பிளந்து, மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்தார்.

சங் 78:16 கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி, தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார்.

78 அதிகாரம்

தேவனுடைய கிரியைகள்

1. அவர் செங்கடலை இரண்டாகப் பிளந்தார் (சங் 78:13; யாத் 14).

2. செங்கடலை இரண்டாகப் பிளந்து உலர்ந்த தரையாக மாற்றி, இஸ்ரவேலைக் கடந்து போகப் பண்ணினார் (சங் 78:13; யாத் 14).

3. தண்ணீரை உறையச் செய்தார்.

4. இஸ்ரவேலர்களைப் பகலிலே மேகத்திலே வழி நடத்தினார் (சங் 78:14).

5. இராமுழுவதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழிநடத்தினார் (சங் 78:14; யாத் 14:19-20; எண் 9:16).

6. வனாந்தரத்திலே கன்மலைகளைப் பிளந்தார் (சங் 78:15).

7. மகா ஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார் (சங் 78:15; யாத் 17).

8. கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணினார் (சங் 78:16; யாத் 17:6).

9. தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார் (சங் 78:16, 20; யாத் 17:6).

10. அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டார் (சங் 78:23).

11. வானத்தின் கதவுகளைத் திறந்து விட்டார்

12. மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப் பண்ணினார் (சங் 78:24).

13. வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.

14. தூதர்களின் அப்பத்தை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்தார் (சங் 78:25).

15. அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார்.

16. ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணினார் (சங் 78:26).

17. அவருடைய வல்லமையினால் தென்றலை வீசச் செய்தார்.

18. மாம்சத்தைத் தூளத்தனையாய் வருஷிக்கப்பண்ணினார் (சங் 78:27).

19. சிறகுள்ள பறவைகளை, கடற்கரை மணலத்தனையாய் வருஷிக்கப் பண்ணினார் (சங் 78:27; யாத் 17; எண் 11).

20. சிறகுள்ள பறவைகளை, அவர்கள் பாளயத்தின் நடுவில் இறங்கப் பண்ணினார் (சங் 78:28).

21. சிறகுள்ள பறவைகளை, கூடாரங்களைச் சுற்றிலும் இறங்கப் பண்ணினார் (சங் 78:28).

22. அவர்கள் அனைவரும் புசித்துத் திருப்தியடையும்படியாய் பறவைகளை அனுப்பினார். (சங் 78:29).

23. அவர்கள் இச்சித்ததை அவர்களுக்குக் கொடுத்தார்.

24. தேவ கோபம் அவர்கள் மேல் எழும்பி, அவர்களில் கொழுத்தவர்களைச் சங்கரித்து, இஸ்ரவேலில் விசேஷித்தவர்களை மடியப் பண்ணினார். (சங் 78:31; எண் 11:33)

25. அவர், அவர்கள் நாட்களை விருதாவில் கழியப் பண்ணினார் (சங் 78:33).

26. அவர்கள் வருஷங்களைப் பயங்கரத்தில் கழியப்பண்ணினார்.

27. அவர்களின் பாவத்தினிமித்தம் அவர்களைக் கொன்றார் (சங் 78:34).

78 அதிகாரம்

28. கர்த்தர் அவர்களை மன்னித்தார் (சங் 78:38).

29. அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டார்.

30. அவர், தமது கோபம் முழுவதையும் எழுப்பாமல் விலக்கிவிட்டார் (சங் 78:38).

31. அநேகந்தரம் தமது உக்கிரத்தை விலக்கி விட்டார்.

32. அவர்கள் மாம்சமென்று நினைவு கூர்ந்தார் சங் 78:39).

33. அவர்கள் திரும்பிவராமல் அகலுகிற காற்றென்றும் நினைவுகூர்ந்தார்.

34. சத்துருக்களிடமிருந்து அவர்களை விலக்கி மீட்டுவிட்டார் (சங் 78:42).

35. கர்த்தர், அவர்களுடைய நதிகளை இரத்தமாக மாற்றினார் (சங் 78:44; யாத் 7:17-24).

36. அவர்களை அழிக்கும்படி வண்டு ஜாதிகளை அனுப்பினார் (சங் 78:45; யாத் 8:20-32).

37. அவர்களைக் கெடுக்கும்படி தவளைகளை அவர்களுக்குள்ளே அனுப்பினார் (சங் 78:45; யாத் 8:1-15)

38. அவர்களுடைய விளைச்சலின் பலனை அழிக்கும்படி வெட்டுக்கிளிகளை அனுப்பினார் (சங் 78:46; யாத் 10:1-7,12-20)

39. அவர்களுடைய திராட்சச் செடிகளை அழிக்க கல்மழையை அனுப்பினார் (சங் 78:47-48).

40. ஆலாங்கட்டியினால் அவர்களுடைய அத்திமரங்களை அழித்தார்

41. அவர்களுடைய ஆடுமாடுகளை இடிகளுக்கு ஒப்புக்கொடுத்தார்.

42. தீங்கு செய்யும் தூதர்களை அவர்களுக்குக்குள்ளே, அனுப்பி அவர்களை அழித்தார் (சங் 78:49).

43. அவர்கள் ஜீவனைக் கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுத்தார் (சங் 78:50; யாத் 9:1-7).

44. எகிப்திலே தலைச்சன்கள் அனைத்தையும் அழித்தார் (சங் 78:51; யாத் 12:23).

45. தம்முடைய ஜனங்களை ஆடுகளைப் போல் புறப்படப்பண்ணினார் (சங் 78:52).

46. அவர்களை வனாந்தரத்திலே மந்தையைப் போல் கூட்டிக் கொண்டு போனார்.

47. அவர்களைக் பத்திரமாய் வழி நடத்தினார் (சங் 78:53).

48. அவர்களை கானானுக்குள் கொண்டு வந்தார் (சங் 78:54).

49. அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்திவிட்டார் (சங் 78:55).

50. அவர்கள் சுதந்தரத்தை நூல் போட்டுப் பங்கிட்டார்

51. அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார்.

52. கர்த்தர் கோபம் கொண்டார் (சங் 78:59).

53. தேவன் உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்தார்

54. சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டு விலகினார் (சங் 78:60).

55. மனுஷர்களுக்குள்ளே கூடாரம் போட்டார்.

56. இஸ்ரவேலைச் சிறையிருப்பிலிருந்து மீட்டார் (சங் 78:61).

78 அதிகாரம்

57. அவர்களைச் சத்துருவின் கைக்கு ஒப்புக் கொடுத்தார்.

58. தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கினார் (சங் 78:62).

59. கர்த்தர், தமது சுதந்தரத்தின் மேல் கோபங்கொண்டார்.

60. அவர்கள் வாலிபரை அக்கினி பட்சித்தது (சங் 78:63).

61. அவர்கள் கன்னியாஸ்திரீகள் வாழ்க்கைப்படாதிருந்தார்கள்.

62. அவர்களுடைய ஆசாரியர்கள் பட்டயத்தால் விழுந்தார்கள் (சங் 78:64).

63. அவர்களுடைய விதவைகள் அழவில்லை.

64. ஆண்டவர் நித்திரை தெளிந்தவனைப் போல விழித்தார் (சங் 78:65).

65. திராட்சரத்தால் கெம்பீரிக்கிற பராக்கிரமசாலியைப் போல விழித்தார்

66. தம்முடைய சத்துருக்களைப் பின்புறமாக அடித்தார் (சங் 78:66).

67. அவர்களுக்கு நித்திய நித்திரையை வரப்பண்ணினார்

68. அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார் (சங் 78:67).

69. எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்து கொள்ளாமல் தவிர்த்தார்.

70. யூதா கோத்திரத்தை அவர் தெரிந்து கொண்டார். (சங் 78:68).

71. தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தைத் தெரிந்து கொண்டார்.

72. தமமுடைய பரிசுத்த ஸ்தலத்தை மலைகளைப் போலக் கட்டினார் (சங் 78:69).

73. என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப்படுத்தின பூமியைப் போல கட்டினார்

74. தம்முடைய தாசனாகத் தாவீதைத் தெரிந்து கொண்டார் (சங் 78:70).

75. ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்துக் கொண்டார்.

76. கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை அழைத்துக் கொண்டு வந்தார் (சங் 78:71).

77. தம்முடைய ஜனமாகிய யாக்கோபை மேய்த்தார்.

78. தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்த்தார்.

79. அவர்களைத் தம் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்தார் (சங் 78:72).

80. தம் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினார்.

" கன்மலையிலிருந்து நீரோட்டங்களைப் புறப்படப்பண்ணி, தண்ணீரை நதிபோல ஓடிவரும்படி செய்தார்". மாசா, மேரிபா (யாத் 17:6-7).

7. இஸ்ரவேலின் ஐந்து பாவங்கள் - (வசனம் 9)

சங் 78:17 என்றாலும், அவர்கள் பின்னும் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, வறண்ட, வெளியிலே உன்னதமானவருக்குக் கோபம் மூட்டினார்கள்.

சங் 78:18 தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.

78 அதிகாரம்

சங் 78:19 அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பேசி: தேவன் வனாந்தரத்திலே போஜனபந்தியை ஆயத்தப்படுத்தக்கூடுமோ?

சங் 78:20 இதோ அவர் கன்மலையை அடித்ததினால் தண்ணீர் புறப்பட்டு, நதிகளாய்ப் புரண்டுவந்தது; அவர் அப்பத்தையும் கொடுக்கக்கூடுமோ? தம்முடைய ஜனத்திற்கு மாம்சத்தையும் ஆயத்தப்படுத்துவாரோ? என்றார்கள்.

சங் 78:21 ஆகையால் கர்த்தர் அதைக்கேட்டுக் கோபங்கொண்டார்; அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை நம்பாமலும் போனதினால்,

சங் 78:22 யாக்கோபுக்கு விரோதமாய் அக்கினி பற்றியெரிந்தது; இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கோபம் மூண்டது.

இஸ்ரவேலர்கள் பாவம் செய்தாலும், தேவன் தமது கிருபையினால் அவர்களுக்கு அற்புதங்களைச் செய்தார். கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்கள் இஸ்ரவேலர்கள் செய்த பாவங்களையும், தேவன் செய்த அற்புதங்களையும் குறிக்கும்.

1. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:9-11); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:12-16);
2. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:17-22); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:23-29)
3. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:30); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:31)
4. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:32); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:33-35)
5. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:36-37); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:38-39)
6. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:40-42); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:43-55)
7. இஸ்ரவேலின் பாவங்கள் (சங் 78:56-58); கர்த்தரின் அற்புதங்கள் (சங் 78:59-72)

"அவர்கள் தேவனை விசுவாசியாமலும், அவருடைய இரட்சிப்பை நம்பாமலும் போனார்கள்" - அவிசுவாசமே பாவத்திற்கு அடிப்படைக்காரணம். சாபங்களுக்குக் காரணமும் அவிசுவாசமே. (ரோமர் 11:20-32; எபி 3:12,19; எபி 4:6,11; யூதா 1:5; வெளி 21:8) ஆகையினால், தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பது மிகவும் அவசியமான காரியம் (மாற்கு 16:16; யோவான் 3:16; எபி 11:6; யாக் 1:5-8)

8. வனாந்திரத்தில் தேவன் செய்த பத்து அற்புதங்கள் - (வசனம் 12)

சங் 78:23 அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு, வானத்தின் கதவுகளைத் திறந்து,

சங் 78:24 மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.

சங் 78:25 தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார்.

சங் 78:26 ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி, தம்முடைய வல்லமையினால் தென்றலையும் வீசச்செய்து,

சங் 78:27 மாம்சத்தைத் தூளத்தனையாயும், சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை மணலத்தனையாயும் வருஷிக்கப் பண்ணி,

சங் 78:28 அவைகளை அவர்கள் பாளயத்தின் நடுவிலும், அவர்கள் கூடாரங்களைச் சுற்றிலும் இறங்கப் பண்ணினார்.

78 அதிகாரம்

சங் 78:29 அவர்கள் புசித்துத் திருப்தியடைந்தார்கள்; அவர்கள் இச்சித்ததை அவர்களுக்குக் கொடுத்தார்.

வானத்திலிருந்து வருஷிக்கப் பண்ணின ஆகாரத்தின் பெயர்கள்:

1. மன்னா (சங் 78:24)
2. வானத்தின் தானியம்
3. தூதர்களின் அப்பம் (சங் 78:25)
4. போஜனம்
5. அப்பம் (யோவான் 6:31-32)

"தூதர்களின் அப்பம்" - இதைத் தேவனும், தூதர்களும் மற்ற ஆவிகளும் புசித்தார்கள். (ஆதி 18:8; யாத் 24:9-11; லூக்கா 22:16,18,30; வெளி 2:7,17; வெளி 22:2)

"அவர்கள் இச்சித்ததை அவர்களுக்குக் கொடுத்தார்" - இது பலவேளைகளில் மனுஷனுக்கு பிரச்சனையாகவே முடியும். ஏனெனில் மனுஷன் தனக்கு கேடுண்டாக பல காரியங்களை இச்சிக்கிறான். (எண் 22; ரோமர் 1:18-32; அப் 21:11-14; எண் 11:33-35)

9. இஸ்ரவேலின் கல்மனமும், ஜனங்கள் மீது தேவனுடைய கோபமும்

சங் 78:30 அவர்கள் தங்கள் இச்சையை வெறுக்கவில்லை; அவர்களுடைய போஜனம் அவர்கள் வாயில் இருக்கும் போதே.

சங் 78:31 தேவகோபம் அவர்கள்மேல் எழும்பி, அவர்களில் கொழுத்தவர்களைச் சங்கரித்து இஸ்ரவேலில் விசேஷித்தவர்களை மடியப்பண்ணிற்று.

10. ஜனங்கள் தொடர்ந்து தேவனை விசுவாசியாமல் பாவம் செய்வதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு பெருகுவதும்

சங் 78:32 இவையெல்லாம் நடந்தும், அவர் செய்த அதிசயங்களை அவர்கள் நம்பாமல், பின்னும் பாவஞ்செய்தார்கள்.

சங் 78:33 ஆதலால் அவர்கள் நாட்களை விருதாவிலும், அவர்கள் வருஷங்களைப் பயங்கரத்திலும் கழியப் பண்ணினார்.

"இவையெல்லாம் நடந்தும், அவர் செய்த அதிசயங்களை அவர்கள் நம்பாமல், பின்னும் பாவஞ்செய்தார்கள்" - இதுதான் மனுஷனின் சுபாவம். தேவன் மனுஷனுக்கு எவ்வளவுதான் அற்புதத்தைச் செய்து காண்பித்தாலும், பாவம் செய்வது மனுஷனுடைய இயல்பாக இருக்கிறது. இதுவும் தேவனுக்கு தெரிந்த காரியமே. (லேவி 26)

11. தேவனுடைய இரக்கங்கள் இருந்த போதிலும் ஜனங்களுடைய மாய்மாலமும் ஸ்திரத் தன்மையின்மையும்

சங் 78:34 அவர்களை அவர் கொல்லும் போது அவரைக்குறித்து விசாரித்து, அவர்கள் திரும்பிவந்து தேவனை அதிகாலமே தேடி;

சங் 78:35 தேவன் தங்கள் கன்மலையென்றும், உன்னதமான தேவன் தங்கள் மீட்பர் என்றும், நினைவு கூர்ந்தார்கள்.

சங் 78:36 ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம்பேசி, தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய்சொன்னார்கள்.

சங் 78:37 அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை; அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை.

சங் 78:38 அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார்; அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப்பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார்.

78 அதிகாரம்

சங் 78:39 அவர்கள் மாம்சமென்றும், திரும்பி வராமல் அகலுகிற காற்றென்றும் நினைவுகூர்ந்தார்.

தேவனுக்கு "உன்னதமான" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்கள்

1. உன்னதமான தேவன் (The Most high God) (ஆதி 14:18-22; சங் 78:56; தானி 3:26; தானி 5:18,21; மாற்கு 5:7; அப் 7:48; எபி 7:1)
2. உன்னதமானவர் (The Most High) (எண் 24:16; உபா 32:8; 2சாமு 22:14; சங் 9:2; சங் 21:7; சங் 46:4; சங் 50:14; சங் 56:2; சங் 57:2; சங் 73:11; சங் 77:10; சங் 78:17; சங் 82:6; சங் 83:18; சங் 91:1,9; சங் 92:8; சங் 107:11; ஏசா 14:14; புல 3:25; தானி 4:4,17,24,32,34; தானி 7:18,22,25,27; ஓசி 7:16; ஓசி 11:7)
3. உன்னதமான தேவன் (The high God) (சங் 78:35; தானி 4:2; மீகா 6:6)
4. மகத்துவமும் உன்னதமுமானவர் (The high and lofty One) (ஏசா 57:15).

"ஆனாலும் அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு இச்சகம்பேசி, தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய்சொன்னார்கள்" - மனுஷன் தேவனைப் பற்றி தவறான காரியங்களைக் கூறுகிறான். தனக்கு சம்பந்தமில்லாத காரியங்களைத் தேவனிடம் பேசுகிறான். தன் உதடுகளினால்மட்டும் தேவனைத் துதிக்கிறான். அவனுடைய இருதயத்திலோ தேவபயம் இல்லை. (ஏசா 29:13; மத் 15:8; மாற்கு 7:6) தேவனிடம் பொருத்தனை பண்ணுகிறான். ஆனால் தான் பண்ணிய பொருத்தனையை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான முயற்சியையும்மனுஷன் மேற்கொள்வதில்லை. (சங் 78: சங் 36-37; சங் 12:2; சங் 15:4)

"அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார்" - (சங் 111:4; சங் 112:4; சங் 145:8; புல 3:22)

தேவன் நினைவுகூரும் காரியங்களும், மனுஷன் நினைவுகூரும் காரியங்களும்

தேவன் நினைவுகூரும் காரியங்கள்

1. அவருடைய உடன்படிக்கைகள் (ஆதி 9:15-16; லேவி 26:42,45; சங் 105:8; எசே 16:60)
2. அவருடைய சத்தியம் (சங் 98:3)
3. அவருடைய கிருபை (சங் 98:3)
4. அவருடைய வாக்குத்தத்தம் (சங் 105:42)
5. வாக்குத்தத்த தேசம் (லேவி 26:42)
6. ஜனங்கள் மாம்சமானவர்கள் (சங் 78:39)
7. நாமெல்லாம் மண் (சங் 103:14)
8. நம்முடைய உருவம் (சங் 103:14)
9. நாமெல்லாம், காற்றைப் போல திரும்பி வராமல் அகலுகிறவர்கள் (சங் 78:39)
10. மனுஷனுடைய பாவம் - அதை நியாயம் தீர்ப்பார் (ஓசி 8:13).

மனுஷன் நினைவுகூரும் காரியங்கள்

1. குற்றம் (ஆதி 41:9)
2. மச்சம் (எண் 11:5)
3. வெள்ளரிக்காய்கள் (எண் 11:5)
4. கொம்மட்டிக்காய்கள் (எண் 11:5)
5. கீரைகள் (எண் 11:5)
6. வெண்காயங்கள் (எண் 11:5)
7. வெள்ளைப்பூண்டுகள் (எண் 11:5)

78 அதிகாரம்

8. இருளின் நாட்கள் (பிர 11:8)

9. தன் சொந்த வழிகள் (எசே 16:63)

10. தன்பேரில் தன் சகோதரனுக்குக் குறை உண்டென்று நினைவு கூருதல் (மத் 5:23)

நாம் நினைவுகூரவேண்டுமென்று தேவன் நமக்கு கட்டளையிட்டுள்ள காரியங்கள்

1. கர்த்தரின் கற்பனைகள் (எண் 15:39-40)

2. கர்த்தர் (உபா 8:18)

3. கர்த்தருடைய அதிசயங்கள், அற்புதங்கள் (1நாளா 16:12)

4. சிருஷ்டிகர் (பிர 12:1)

5. முந்திப் பூர்வ காலத்தில் நடந்தவைகள் (ஏசா 46:9)

6. கர்த்தருடைய வார்த்தை (யோவான் 15:20; யோவான் 16:4; யூதா 1:17)

7. இயேசு கிறிஸ்து (2தீமோ 2:8)

8. கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல் அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள் (எபி 13:3)

9. தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினையுங்கள் (எபி 13:7)

10. நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்துக் கொள் (வெளி 2:5)

தேவன் மறக்கவேண்டுமென்று மனுஷன் விரும்பும் காரியங்கள்

1. இளவயதின் பாவங்கள் (சங் 25:7)

2. பூர்வகாலத்து அக்கிரமங்கள் (சங் 79:8). அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எபி 8:12; எபி 10:17).

12. இஸ்ரவேலின் ஐந்து பாவங்கள் - (வசனம் 9)

சங் 78:40 எத்தனைதரமோ வனாந்தரத்திலே அவருக்குக் கோபம் மூட்டி, அவாந்தரவெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள்.

சங் 78:41 அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்.

சங் 78:42 அவருடைய கரத்தையும், அவர் தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில், இரண்டு வருஷங்களில், பத்து தடவைகள் "வனாந்தரத்திலே அவருக்குக் கோபம் மூட்டி, அவாந்தரவெளியிலே அவரை விசனப் படுத்தினார்கள்". (எண் 14:22)

"அவர்கள் திரும்பினார்கள்" - பின்வாங்கிப்போனதைக் குறிப்பிடும் சொல் (உபா 29:18; எசே 18:24-28; எசே 33:18-24; 2பேதுரு 2:20-22)

"தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்" - இரண்டு வருஷங்களில் பத்து தடவைகள். (எண் 14:22)

"இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப் படுத்தினார்கள்" - இன்றைய தினம் விசுவாசிகளிடம் காணப்படும் மிகப்பெரிய பாவம் இதுதான். தேவனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் வல்லமையையும் விசுவாசிகள் மட்டுப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை மட்டுப்படுத்தியதினால் அழிந்துபோனார்கள். (ரோமர் 11; யூதா 1:5; எண் 14)

78 அதிகாரம்

"இஸ்ரவேலின் பரிசுத்தர்" - என்னும் சொல் சங்கீதப் புஸ்தகத்தில் மூன்று முறை வந்திருக்கிறது. (சங் 71:22; சங் 78:41; சங் 89:18) மற்ற இடங்களில் 28 தடவைகள் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றுள் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் மட்டும் "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்னும் சொல் 25 தடவைகள் வந்துள்ளன.

"அவருடைய கரத்தையும், அவர் தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் நினையாமற்போனார்கள்" - கர்த்தர் மனுஷனை நினைத்துப் பார்க்கிறார். ஆனால் மனுஷனோ தேவனை மறந்து விடுகிறான்.

13. தேவன் செய்த இருபத்திரெண்டு அற்புதங்கள் - (வசனங்கள். 12,23)

சங் 78:43 அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்களையும், சோவான் வெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்தார்.

சங் 78:44 அவர்களுடைய நதிகளை இரத்தமாக மாற்றி, அவர்களுடைய ஆறுகளிலுள்ள ஜலத்தைக் குடிக்கக்கூடாதபடி செய்தார்.

சங் 78:45 அவர்களை அழிக்கும்படி வண்டுஜாதிகளையும், அவர்களைக் கெடுக்கும்படி தவளைகளையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார்.

சங் 78:46 அவர்களுடைய விளைச்சலைப் புழுக்களுக்கும், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை வெட்டுக் கிளிகளுக்கும் கொடுத்தார்.

சங் 78:47 கல்மழையில் அவர்களுடைய திராட்சச் செடிகளையும், ஆலாங் கட்டியினால் அவர்களுடைய அத்தி மரங்களையும் அழித்து,

சங் 78:48 அவர்களுடைய மிருகஜீவன்களைக் கல்மழைக்கும், அவர்களுடைய ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தார்.

சங் 78:49 தமது உக்கிரமான கோபத்தையும், மூர்க்கத்தையும், சினத்தையும், உபத்திரவத்தையும், தீங்கு செய்யும் தூதர்களையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார்.

சங் 78:50 அவர் தம்முடைய கோபத்துக்கு வழிதிறந்து, அவர்கள் ஆத்துமாவை மரணத்துக்கு விலக்கிக் காவாமல், அவர்கள் ஜீவனைக் கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுத்தார்.

சங் 78:51 எகிப்திலே தலைச்சன்கள் அனைத்தையும், காமின் கூடாரங்களிலே அவர்களுடைய பெலனில் முதற்பலனான யாவரையும் அழித்து;

சங் 78:52 தம்முடைய ஜனங்களை ஆடுகளைப்போல் புறப்படப்பண்ணி, அவர்களை வனாந்தரத்திலே மந்தையைப் போல் கூட்டிக் கொண்டுபோய்;

சங் 78:53 அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களைப் பத்திரமாய் வழி நடத்தினார்; அவர்கள் சத்துருக்களைக் கடல் மூடிப்போட்டது.

சங் 78:54 அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும், தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வத மட்டுக்கும் அழைத்துக் கொண்டு வந்து,

சங் 78:55 அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்திவிட்டு, தேசத்தை நூல்போட்டுப் பங்கிட்டு, அவர்களுடைய கூடாரங்களில் இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குடியேற்றினார்.

"அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்களையும், சோவான் வெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்தார்" - எகிப்தில் நடைபெற்ற எல்லா அடையாளங்களையும் இந்த சங்கீதம் கூறவில்லை. இந்த சங்கீதத்தில் கூறப்பட்டுள்ள அடையாளங்கள்

78 அதிகாரம்

முதலாவது அடையாளம் - இரத்தம்

இரண்டாவது அடையாளம் - தவளைகள்

நான்காவது அடையாளம் - வண்டு ஜாதிகள்

ஐந்தாவது அடையாளம் - இடிகள்

ஆறாவது அடையாளம் - கொள்ளை நோய்

ஏழாவது அடையாளம் - கல்மழை

எட்டாவது அடையாளம் - வெட்டுக்கிளிகள்

பத்தாவது அடையாளம் - தலைச்சன்களின் மரணம்

மூன்றாவது அடையாளமான பேன்களும், ஒன்பதாவது அடையாளங்களான காரிருளும் இந்த சங்கீதத்தில் கூறப்படவில்லை. ஆயினும் சங் 78:48-50 ஆகிய வசனங்களில் இவை கூறப்பட்டுள்ளதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

"ஆலாங்கட்டியினால் அவர்களுடைய அத்திமரங்களையும் அழித்தார்" - அத்திமரங்கள் எகிப்தியருக்கு மிகவும் முக்கியமானவை. அத்திமரத்தின் பலகைகளினால் எகிப்தியர் சவப்பெட்டிகளைச் செய்தார்கள். அத்திப்பழங்கள் எகிப்தியருக்கு முக்கியமான உணவு. ஆகையினால் அத்திமரங்களின் அழிவு எகிப்தியருக்கு மிகப்பெரிய இழப்பாக இருந்தது. (ஆமோ 7:14).

"அவர்களுடைய ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தார்" - அவர்களுடைய மிருகஜீவன்களைக் கர்த்தர் மின்னலினால் அழித்தார் (யாத் 9:13-35).

"தீங்கு செய்யும் தூதர்களையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார்" - இவர்கள் யார் என்று வேதம் தெளிவாக கூறவில்லை. எகிப்தியருக்குள்ளே நோய்களையும், வியாதிகளையும் பரப்பிய சாத்தானுடைய ஆவிகளாக இருக்கலாம். (யாத் 9:1-12; அப் 10:38)

"காமின் கூடாரங்கள்" - காம் என்பது எகிப்தியரைக் குறிக்கும் மற்றொரு சொல் (105:23,27; சங் 106:22)

"அவர்கள் சத்துருக்களைக் கடல் மூடிப்போட்டது" - இந்த நிகழ்ச்சியை யாத் 14,15 ஆகிய அதிகாரங்களில் நாம் வாசித்தறியலாம்.

"அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும், தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வதமட்டுக்கும் அழைத்துக் கொண்டுவந்தார்" - சீயோன் மலை வரைக்கும் கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அழைத்து வந்தார். இந்தப் பிரயாணத்திற்கு பல வருஷங்கள் ஆயிற்று. தாவீதின் காலத்தில் தேவனுடைய கூடாரம் இங்கு ஸ்தாபிக்கப்பட்டது. (2சாமு 5)

"தமது பரிசுத்த ஸ்தலம்" - கானான் தேசமே பரிசுத்த ஸ்தலமாகும். தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் கானான் தேசத்தில் இருந்தது. தேவன் பூமியிலே ஜனங்கள் மத்தியில் ஆளுகை செய்வதற்கு கானான் தேசத்தையே தமது தலைமை நிலையமாகத் தெரிந்தெடுத்தார்.

14. ஜனங்களுடைய மீறுதல் அதிகரிப்பு - இஸ்ரவேலின் ஏழு பாவங்கள்

சங் 78:56 ஆனாலும் அவர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சைபார்த்து, அவருக்குக் கோபம் மூட்டி, அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளமாற்போய்,

சங் 78:57 தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகி, துரோகம்பண்ணி, மோசம் போக்கும் வில்லைப்போல் துவண்டு,

சங் 78:58 தங்கள் மேடைகளினால் அவருக்குக்கோபம் மூட்டி, தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள்.

78 அதிகாரம்

"அவர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.... அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளமாற் போனார்கள்" - (எண் 14:22)

"அவர்கள் வழிவிலகினார்கள்" - இது இஸ்ரவேலரின் பின்மாற்றத்தைக் குறிக்கிறது. (உபா 9:12,16; உபா 11:16,28; எரே 2:27; எரே 11:10)

"தங்கள் பிதாக்களைப்போல துரோகம் பண்ணினார்கள்" - (யாத் 5:19, 6:9)

"மோசம்போக்கும் வில்" - இஸ்ரவேலர்கள் நம்ப முடியாத தரமற்ற வில்லைப்போன்றவர்கள். வில்லை நாணேற்றி, கட்டி, அம்பு எய்யும்போது, அது இலக்கை சரியாகச் சென்று தாக்க வேண்டும். வில் தரமற்றதாக இருந்தால் அது எய்பவனின் கையைப் பதம் பார்த்துவிடும். "யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை" (2சாமு 1:22) என்று வாசிக்கிறோம். அதாவது யோனத்தானுடைய வில் நல்ல தரமான வில். அது எய்பவனுடைய கையைப் பின்வாங்கி தாக்காது. ஆனால் இஸ்ரவேலரோ மோசம்போக்கும் வில்லைப்போன்றவர்கள். துவண்டுபோனவர்கள். இவர்களை நம்பமுடியாது. தேவனிடத்தில் சேருவதுபோலச் சேருவார்கள். திடீரென்று தங்களுடைய பழைய பாவ வாழ்க்கைக்குத் திரும்பி விடுவார்கள். (ஓசி 7:16) எரே 9:3-இல் நாவைப் பற்றிக்கூறும்போது இதே அர்த்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"அவருக்குக்கோபம் மூட்டி.....எரிச்சல் உண்டாக்கினார்கள்" - தேவனுடைய கோபத்தைப் பற்றி வேதாகமத்தில் 220 தடவைகளுக்கு மேல் கூறப்பட்டிருக்கிறது. கோபம், எரிச்சல் ஆகிய இரண்டு சொற்களும் சேர்ந்து 45 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவனுக்கு எரிச்சல் மூட்டுவதைப் பற்றி வேதாகமத்தில் 6 இடங்களில் காண்கிறோம். (உபா 32:16; 1இராஜா 14:22; ரோமர் 10:19; ரோமர் 11:11; 1கொரி 10:22)

"விக்கிரகங்கள்" - செதுக்கப்பட்ட, வார்க்கப்பட்ட, கட்டப்பட்ட எல்லா விதமான சொரூபங்களையும் இந்தச் சொல் குறிப்பிடும் (உபா 7:5).

15. தேவனுடைய கோபத்தின் பதினைந்து அம்சங்கள்

சங் 78:59 தேவன் அதைக் கேட்டு உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்து,

சங் 78:60 மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகி,

சங் 78:61 தமது பலத்தைச் சிறையிருப்புக்கும், தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக் கொடுத்து,

சங் 78:62 தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார்.

சங் 78:63 அவர்கள் வாலிபரை அக்கினி பட்சித்தது, அவர்கள் கன்னியாஸ்திரிகள் வாழ்க்கைப்படாதிருந்தார்கள்.

சங் 78:64 அவர்களுடைய ஆசாரியர்கள் பட்டயத்தால் விழுந்தார்கள், அவர்களுடைய விதவைகள் அழவில்லை.

சங் 78:65 அப்பொழுது ஆண்டவர் நித்திரை தெளிந்தவனைப்போலவும், திராட்சரசத்தால் கெம்பீரிக்கிற பராக்கிரமசாலியைப்போலவும் விழித்து,

சங் 78:66 தம்முடைய சத்துருக்களைப் பின்புறமாக அடித்து, அவர்களுக்கு நித்திய நிந்தையை வரப்பண்ணினார்.

"தேவன் உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்தார்" - இஸ்ரவேலர்கள் நீண்டகாலமாக விக்கிரகாராதனை செய்து வந்தார்கள். தேவன் நீடிய பொறுமையுடையவராக இருக்கின்றபோதிலும், இஸ்ரவேலர்களுடைய இந்த பாவத்தினால் அவர்கள்மீது உக்கிரமாகி அவர்களை வெறுத்தார். (நெகே 9:17; சங் 30:5; சங் 145:8; யோவே 2:13)

78 அதிகாரம்

"தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகினார்" - இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியரும் அதிகமாக பாவம் பண்ணணியதினால், தேவன் அவர்களை வெறுத்து, சீலோவிலுள்ள ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து விலகிபோய்விட்டார். மறுபடியும் அங்கு திரும்பிவரவில்லை. ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டியைச் சத்துருக்கள் கைப்பற்றி எடுத்து சென்றுவிட்டார்கள். இதையும் தேவன் அனுமதித்தார். (சங் 78:60-61; 1சாமு 6:1; 2சாமு 6) சீலோ [Shiloh] (நியா 18:1,31; 1சாமு 4:3) எப்பிராயீம் கோத்திரத்திற்கு பகிர்ந்து கொடுக்கப்பட்ட நிலத்தில் இருந்தது. தேவன் எப்பிராயீமை விலக்கி வைத்துவிட்டார் (சங் 78:67). இதன்பின்பு, தேவன் தமது வாசஸ்தலத்தைச் சீயோனுக்கு மாற்றினார் (சங் 78:68). சீலோவிலிருந்த வாசஸ்தலத்திற்கு அதன்பின்பு என்னவாயிற்று என்று தெரியவில்லை.

"தமது பலத்தைச் சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார்" - தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியானது மனுஷர் மத்தியில் தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக இருந்தது. (1சாமு 6) இது "உமது வல்லமை விளங்கும் பெட்டி" (சங் 132:8) என்று அழைக்கப்படுகிறது.

"தமது மகிமையைச் சத்துருவின் கைக்கு ஒப்புக்கொடுத்தார்" - தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி "மகிமை" என்று அழைக்கப்பட்டது. (1சாமு 4:22)

இஸ்ரவேல்மீது வந்த யுத்தங்களும் வாதைகளும்

1. ஆண்பிள்ளைகளைக் கொன்று போடுதல் (யாத் 1)
2. லேவியர்களின் பட்டயத்தால் 3, 000 பேர் மரித்தார்கள். (யாத் 32:28)
3. வாதையினால் (யாத் 32:35)
4. கர்த்தருடைய சந்நிதியிலிருந்து வந்த அக்கினி (லேவி 10:2) - 2பேர்
5. கல்லெறிந்து (லேவி 24:23) - 1பேர்
6. கர்த்தருடைய அக்கினி (எண் 11:1-3)
7. மகாபெரிய வாதை (எண் 11:33-35)
8. மூதாதையர் (600,000 மனுஷர்கள், 600,000 மனைவிமார்கள்) (எண் 11:21; எண் 14:29-33) - 1800000 பேருக்கும் மேல்
9. வாதை (எண் 14:37) 10
10. யுத்தம் (எண் 14:40-45)
11. நிலம் பிளந்தது (எண் 16:27-33) - 12பேர்
12. கர்த்தருடைய சந்நதியிலிருந்து வந்த அக்கினி - 250பேர்
13. வாதை (எண் 16:44-50) - 14,700பேர்கள்
14. கொள்ளிவாய்ச் சர்ப்பம் (எண் 21:7)
15. நியாயாதிபதிகளின் பட்டயம் (எண் 25:5; 2கொரி 10:8) - 23,000பேர்கள்
16. வாதை (எண் 25:9) - 24,000பேர்கள்
17. ஈட்டி (எண் 25:8) - 2பேர்
18. பட்டயம் (யோசு 7:5) - 36பேர்
19. கல்லெறிதல் (யோசு 7:24) - 8பேர்
20. யுத்தங்கள், கானானின் வெற்றி, 31 இராஜாக்கள் தோல்வி (யோசு 6-12)
21. யுத்தங்கள் வெவ்வேறு கோத்திரங்களின் நிறைவுபெறாத ஜெயங்கள் (நியா 1)
22. யுத்தங்கள், இஸ்ரவேல் தோல்வி (நியா 3:8)
23. யுத்தம் - ஜெயம் (நியா 3:10)
24. யுத்தம் - தோல்வி (நியா 3:12-18)

சங்கீதம் - தொகுப்புரை

78 அதிகாரம்

25. யுத்தம் - ஜெயம் (நியா 3:29)

26. யுத்தம் - ஜெயம் (நியா 3:31)

27. யுத்தம் - தோல்வி (நியா 4:1-3)

28. யுத்தம் - ஜெயம் (நியா4:4-5:31)

29. யுத்தம் - தோல்வி (நியா 6:1-10)

30. யுத்தம் - ஜெயம் (நியா 7:17-25)

31. பட்டயம் (நியா 9:5) - 70பேர்கள்

32. கலகம் (நியா 9:44-46)

33. யுத்தம் - தோல்வி (நியா 10:6-18)

34. யுத்தம் - ஜெயம் (நியா 11:32-33)

35. கலகம் (நியா 12:6) - 42, 000பேர்கள்

36. யுத்தம் - ஜெயம் (நியா 14:19; நியா 15:15; நியா 16:23-31)

37. கலகம் (நியா 20) - 91, 000பேர்கள்

38. யுத்தம் - தோல்வி (1சாமு 4:10) - 30, 000பேர்கள்

39. வாதை (1சாமு 6:19) - 50,070 பேர்கள்

40. யுத்தம் - ஜெயம் (1சாமு 11)

41. யுத்தங்கள் - ஜெயங்கள்(1சாமு 14-17)

42. யுத்தம் - ஜெயம் (1சாமு 30:17-19)

43. யுத்தம் - தோல்வி (1சாமு 31)

44. கலகம் (2சாமு 2:12-32) - 380பேர்கள்

45. கலகம் (2சாமு 3:1)

46. யுத்தம் - ஜெயம் (2சாமு 5:6-12)

47. யுத்தம் - ஜெயம் (2சாமு 5:17-25)

48. யுத்தங்கள் - ஜெயங்கள் (2சாமு 8)

49. யுத்தங்கள் - ஜெயங்கள் (2சாமு 10)

50. யுத்தம் - ஜெயம் (2சாமு 12:26-31)

51. கலகம் (2சாமு 15-18)

52. கலகம் (2சாமு 20)

53. யுத்தம் - ஜெயம் (2சாமு 21:15-22)

54. கொள்ளை நோய் (2சாமு 24:13-15) - 70,000பேர்கள்

55. யுத்தம் - தோல்வி (1இராஜா 14:25-30)

56. கலகம் (1இராஜா 14:30; 1இராஜா 15:6)

57. கலகம் (1இராஜா 15:7)

58. கலகம் (1இராஜா 15:16)

59. யுத்தம் - தோல்வி (1இராஜா 15:20)

60. கலகம் (1இராஜா 15:25-31)

61. கலகம் (1இராஜா15:32)

62. கலகம் (1இராஜா 16:8-10)

63. கலகம் (1இராஜா 16:15-20)

64. கலகம் (1இராஜா 16:21-22)

65. யுத்தம் - ஜெயம் (1இராஜா 20:1-22)

66. யுத்தம் - ஜெயம் (1இராஜா 20:23-43)

67. யுத்தம் - தோல்வி (1இராஜா 22:29-39)

68. யுத்தம் - ஜெயம் (2இராஜா 2:1; 2இராஜா 3:4-27)

69. யுத்தம் - ஜெயம் (2இராஜா 6:8-23)

70. யுத்தம் - ஜெயம் (2இராஜா 6:24-7:20)

71. யுத்தம் - ஜெயம் (2இராஜா 8:20-23)

72. யுத்தம் - தோல்வி (2இராஜா 8:25-28)

78 அதிகாரம்

73. பட்டயம் (2இராஜா 9:24-37; 2இராஜா 10:7-25)

74. யுத்தம் - தோல்வி (2இராஜா 10:32-33)

75. பட்டயம் (2இராஜா 11:1-5,16)

76. யுத்தம் - தோல்வி (2இராஜா 12:17-21)

77. பட்டயம் (2இராஜா 12:19-21)

78. கலகம் (2இராஜா 13:12)

79. யுத்தம் - தோல்வி (2இராஜா 13:22)

80. யுத்தம் - ஜெயம் (2இராஜா 13:25)

81. பட்டயம் (2இராஜா 12:21; 2இராஜா 14:5) - 2பேர்

82. யுத்தம் - ஜெயம் (2இராஜா 14:7)

83. கலகம் (2இராஜா 14:8-14)

84. பட்டயம் (2இராஜா 14:19) - 1நபர்

85. யுத்தம் - ஜெயம் (2இராஜா 14:28)

86. பட்டயம் (2இராஜா 15:10) - 1நபர்

87. பட்டயம் (2இராஜா 15:14) - 1நபர்

88. கலகம் (2இராஜா 15:16-18)

89. யுத்தம் -தோல்வி(2இராஜா 15:19-20)

90. பட்டயம் (2இராஜா 15:25) - 1நபர்

91. யுத்தம் - தோல்வி (2இராஜா 15:29)

92. பட்டயம் (2இராஜா 15:30) - 1நபர்

93. கலகம் (2இராஜா 15:37; 2இராஜா 16:5)

94. யுத்தம் - தோல்வி (2இராஜா 16:6)

95. யுத்தம் - தோல்வி (2இராஜா 17:3-23)

96. யுத்தம் - ஜெயம் (2இராஜா 18:7)

97. யுத்தம் - ஜெயம் (2இராஜா 18:8-12)

98. யுத்தம் - ஜெயம் (2இராஜா 18:13-19:37)

99. பட்டயம் (2இராஜா 21:23) - 1நபர்

100. பட்டயம் (2இராஜா 21:24)

101. யுத்தம் - தோல்வி (2இராஜா 23:33-37)

102. யுத்தம் - தோல்வி (2இராஜா 24:1)

103. யுத்தம் - தோல்வி (2இராஜா 24:2-5)

104. யுத்தம் - தோல்வி (2இராஜா 24:11-16)

105. யுத்தம் - தோல்வி (2இராஜா 24:20-25:30)

106. யுத்தம் - ஜெயம் (1நாளா 4:10)

107. யுத்தம் - ஜெயம் (1நாளா 5:10)

108. யுத்தம் - ஜெயம் (1நாளா 5:18-22)

109. யுத்தம் - தோல்வி (1நாளா 5:26)

110. யுத்தம் - ஜெயம் (2நாளா 14:9-15)

111. யுத்தம் - ஜெயம் (2நாளா 20:1-25)

112. யுத்தம் - தோல்வி (2நாளா 21:16-17)

113. யுத்தம் - ஜெயம் (2நாளா 26:6-15)

114. யுத்தம் - தோல்வி (2நாளா 28:16-25)

115. யுத்தம் - தோல்வி (2நாளா 33:11-13)

116. யுத்தம் - ஜெயம் (எஸ் 8-9)

117. பழைய ஏற்பாடு முடிவு பெற்ற காலத்திலிருந்து கிறிஸ்துவின் காலம் வரையிலான யுத்தங்கள்

78 அதிகாரம்

118. யுத்தம் - தோல்வி - 1,447,490 பேர்கள்

119. யுத்தம் - கிபி. 135 - 580,000 பேர்கள்

120. யுத்தங்கள் - துன்பங்கள் மற்ற வகையிலான மரணம்

மேலே கூறப்பட்டுள்ள யுத்தங்களைத் தவிர வருங்காலத்தில் நடைபெறப்போகும் யுத்தங்களிலும் ஏராளமான பேர் மரித்துப் போவார்கள். (எரே 30; தானி 8:8-14,24-25; தானி 9:27; தானி 11:40-45; சக 13:9; சக 14:14; மத் 24:15-22; வெளி 12:6,13-17)

இஸ்ரவேலர்கள் தேவனுடைய பிரமாணங்களை மீறியதினாலும் தொடர்ந்து பாவத்தில் ஜீவித்ததினாலும், தேவனுக்கு எதிராக கலகம் பண்ணியதினாலும், அவர்கள் மீது இவ்வளவு வாதைகள் வந்தன. (லேவி 26; உபா 28)

பலநூற்றாண்டு காலமாக லட்சணக்கான யூதர்கள் யுத்தங்களினாலும், வாதைகளினாலும் மரித்திருக்கிறார்கள். இவர்களில் பலருடைய மரணம் ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இன்னும் ஏராளமானபேருடைய மரணங்களுக்கு எந்தவித ஆவணங்களும் இல்லை. இவை எல்லாவற்றையும் மொத்தமாக கூட்டிப்பார்த்தால், யூத இனத்தில் கோடிக்கணக்கான மக்கள் யுத்தங்களாலும், வாதைகளாலும் மாண்டு போனது தெரியவரும்.

கடைசிநாட்களில் தீர்க்கதரிசனம் நிறைவேறும் பிரகாரமாக இன்னும் லட்சணக்கான யூதர்கள் யுத்தங்களிலும், வாதைகளிலும் கொல்லப்படுவார்கள். வருங்காலத்தில் வரப்போகும் உபத்திரவத்தில் இஸ்ரவேலின் மூன்றில் இரண்டு பங்கு யூதர்கள் கொல்லப்படுவார்கள் என்று வேதம் கூறுகிறது. இவர்கள் தவிர, உலகத்தின் பலபாகங்களில் உள்ளவர்களும் இந்த உபத்திரவத்தினால் மரித்துப் போவார்கள் (சக 13:8-9; ஏசா 2:25-31; ஏசா 3:25-26; எசே 38-39; தானி 8:24; யோவே 3; சக 14:1-5; வெளி 11:1-2; வெளி 12:14).

இதையெல்லாம் மனதில் கொண்டுதான் சங்கீதக்காரன் "தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார்" என்று கூறுகிறான். (சங் 78:62).

"அப்பொழுது ஆண்டவர் நித்திரை தெளிந்தவனைப்போலவும், திராட்சரசத்தால் கெம்பீரிக்கிற பராக்கிரமசாலியைப்போலவும் விழிப்பார்" - சங் 78:62-64 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள நியாயத்தீர்ப்புக்கள் இஸ்ரவேலரின் மீது வந்தபின்பு, அவர்கள் பாடுகளை அனுபவித்து, மனந்திருந்திய பின்பு, கர்த்தர் அவர்களுடைய சத்துருக்களை முறியடிப்பார். தமது வல்லமையை தமது ஜனங்களுக்காக வெளிப்படுத்துவார் (சங் 78:65-66).

16. தேவனுடைய தெரிந்தெடுப்பின் ஏழு அம்சங்கள்

சங் 78:67 அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார்; எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்து கொள்ளாமல்,

சங் 78:68 யூதா கோத்திரத்தையும் தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்துகொண்டார்.

சங் 78:69 தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மலைகளைப் போலவும், என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப் படுத்தின பூமியைப்போலவும் கட்டினார்.

சங் 78:70 தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார்.

சங் 78:71 கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக்கொண்டு வந்தார்.

சங் 78:72 இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின் படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான்.

78 அதிகாரம்

"அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார்; எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்துகொள்ளவில்லை" - மானசேயும், எப்பிராயீமுவும் அவர்களுடைய சுதந்தரத்தை இழந்துபோகவில்லை. ஆனாலும் யூதாவுடைய தகப்பனுடைய புத்திரர் அவன்முன் பணிவார்கள் (சங் 78:67-68; ஆதி 49:9).

"தமக்குப் பிரியமான சீயோன் பர்வதம்" - தேவன் தமது உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோனுக்கு எடுத்துச் சென்றார். தேவன் சீயோன்மீது பிரியமாக இருந்ததை இது உறுதிபண்ணுகிறது (2சாமு 6).

நித்தியமான காரியங்கள்

1. சீயோன் பர்வதம் (சங் 78:69; சங் 87:5; சங் 125:1)
2. பூமி (சங் 78:69; சங் 104:5; பிர 1:4)

"தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார்" - இந்த வசனமே சங்கீதப்புஸ்தகத்தின் முக்கியமான பகுதி. தேவன் தாவீதை இராஜாவாக தெரிந்தெடுத்தார் (1சாமு 16). அவனுடைய ஆட்சி காலம் இந்த சங்கீதத்துடன் முடிவுபெறுகிறது (சங் 78:70-72; 2சாமு 2:1-1இராஜா 2:11).

"கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை....தேவன் அழைத்துக்கொண்டு வந்தார்" - தாவீது ஆடுகளை மேய்த்தவன். சாதாரண வேலை செய்தவன். அவனுடைய ஆரம்பம் மிகவும் அற்பமானது. ஆனாலும்,தேவன் அவனைத் தெரிந்தெடுத்தார். அதற்காக அவர் வெட்கப்படவில்லை. ஆடுகளை மேய்த்த தாவீதைத் தேவன் யாக்கோபை மேய்க்கவும், இஸ்ரவேலை மேய்க்கவும் அழைத்துக் கொண்டு வந்தார். இது தாவீதின் வாழ்க்கையில் அவனுக்குக் கிடைத்த மிகப்பெரிய ஆசீர்வாதம்.

யாக்கோபு ஆபிரகாமின் இயற்கையான வித்து. இஸ்ரவேல் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்து (ஆதி 32:28; ஆதி 45:26,28)

79 அதிகாரம்

(ஆசாபின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்புக்காக ஏழாவது ஜெபம்

பொருளடக்கம்

1. தேவனுடைய சத்துருக்களுக்கு எதிராக ஏழு அம்ச முறையீடுகள் - (79:1-5)
2. நியாயத்தீர்ப்புக்காக நான்கு விண்ணப்பங்கள் - இரக்கத்திற்காக ஏழு விண்ணப்பங்கள் - (79:6-13)

1. தேவனுடைய சத்துருக்களுக்கு எதிராக ஏழு அம்ச முறையீடுகள்

சங் 79:1 தேவனே, புறஜாதியார் உமது சுதந்தரத்தில் வந்து, உமது பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, எருசலேமை மண்மேடுகளாக்கினார்கள்.

சங் 79:2 உமது ஊழியக்காரரின் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும், உமது பரிசுத்தவான்களின் மாம்சத்தைப் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுத்தார்கள்.

சங் 79:3 எருசலேமைச் சுற்றிலும் அவர்களுடைய இரத்தத்தைத் தண்ணீரைப் போலச் சிந்தினார்கள்; அவர்களை அடக்கம் பண்ணுவாருமில்லை.

சங் 79:4 எங்கள் அயலாருக்கு நிந்தையும் எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமானோம்.

சங் 79:5 எதுவரைக்கும் கர்த்தாவே! நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ? உம்முடைய எரிச்சல் அக்கினியைப்போல் எரியுமோ?

சங்கீதக்காரனின் முறையீடுகள்

1. புறஜாதியார் உமது சுதந்தரத்தில் வந்து குடியேறினார்கள் (சங் 79:1)
2. உமது பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப் படுத்தினார்கள்
3. எருசலேமை மண்மேடுகளாக்கினார்கள்
4. உமது ஊழியக்காரர்களை கொலை செய்தார்கள் (சங் 79:2)
5. உமது பரிசுத்தவான்களின் மாம்சத்தைப் பூமியின் மிருகங்களுக்கு இரையாகக் கொடுத்தார்கள்
6. எருசலேமைச் சுற்றிலும் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தைத் தண்ணீரைப் போலச் சிந்தினார்கள். (சங் 79:3,10)
7. பரிசுத்தவான்களுடைய சரீரங்களை அடக்கம் பண்ணுவாருமில்லை (சங் 79:3)
8. உமது ஜனத்தை நிந்தித்தார்கள் (சங் 79:4,10,12)
9. எங்கள் சுற்றுப்புறத்தாருக்கு எங்களைப் பரியாசமும் சக்கந்தமும் ஆக்கினார்கள். (சங் 79:4)
10. நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ? (சங் 79:5)
11. புறஜாதிகள் உம்மை அறியவில்லை (சங் 79:6)
12. உமது நாமத்தை அவர்கள் தொழுது கொள்ளவில்லை
13. அவர்கள், எங்களைப் பட்சிக்கிறார்கள் (சங் 79:7)
14. அவர்கள் குடியிருப்பைப் பாழாக்குகிறார்கள்
15. நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப் போனோம் (சங் 79:8)
16. எங்களை அடிமையாகக் கொண்டு போனார்கள் (சங் 79:11)

79 அதிகாரம்

"எதுவரைக்கும் கர்த்தாவே! நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ? உம்முடைய எரிச்சல் அக்கினியைப்போல் எரியுமோ?" - இஸ்ரவேல் தொடர்ந்து தோல்வியுற்றதினால் சங்கீதக்காரன் இந்தக் கேள்விகளைக் கேட்கிறான். இந்தத் தோல்வி பாபிலோனிய சிறையிருப்பைக் குறிக்காது. ஏனெனில் நேபுகாத்நேச்சாருக்கு முன்பாக இஸ்ரவேல் தேசம் பல இராஜாக்களிடம் தோல்வியடைந்தது. (சங் 79:6-7; எரே 10:25)

2. நியாயத்தீர்ப்புக்காக நான்கு விண்ணப்பங்கள் இரக்கத்திற்காக ஏழு விண்ணப்பங்கள்

சங் 79:6 உம்மை அறியாத ஜாதிகள் மேலும், உமது நாமத்தைத் தொழுது கொள்ளாத ராஜ்யங்கள்மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்.

சங் 79:7 அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவன் குடியிருப்பைப் பாழாக்கினார்களே.

சங் 79:8 பூர்வகாலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும்; உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக; நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போனோம்.

சங் 79:9 எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவிசெய்து, உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்.

சங் 79:10 அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? உமது ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குதல் ஜாதிகளுக்குள்ளே எங்கள் கண்களுக்கு முன்பாக விளங்கும்படி செய்யும்.

சங் 79:11 கட்டுண்டவனுடைய பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும்; கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புயபலத்தினால் உயிரோடே காத்தருளும்.

சங் 79:12 ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை, ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப்பண்ணும்.

சங் 79:13 அப்பொழுது, உம்முடைய ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை என்றென்றைக்கும் புகழுவோம்; தலைமுறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லிவருவோம்.

தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள்

1. புறஜாதிகள் மேல், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும் (சங் 79:6)
2. உமது நாமத்தைத் தொழுது கொள்ளாத ராஜ்யங்கள் மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்
3. பூர்வகாலத்து அக்கிரமங்களை நினையாதேயும் (சங் 79:8)
4. உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக
5. எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவி செய்யும் (சங் 79:9)
6. எங்களை விடுவியும்
7. எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்
8. அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? உமது ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குதல் ஜாதிகளுக்குள்ளே எங்கள் கண்களுக்கு முன்பாக விளங்கும்படி செய்யும் (சங் 79:10).
9. கட்டுண்டவனுடைய பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும் (சங் 79:11)

சங்கீதம் - தொகுப்புரை

79 அதிகாரம்

10. கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புயபலத்தினால் உயிரோடே காத்தருளும்

11. ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை, ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப்பண்ணும் (சங் 79:12)

"நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போனோம்" - இஸ்ரவேல் ஜனங்கள் ஏராளமானோர் மடிந்து விட்டார்கள். நாங்கள் ஒருசிலர் மட்டுமே இஸ்ரவேலில் ஜீவனோடு இருக்கிறோம்.

"எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்" - எங்கள் பாவங்களை மன்னியும். எங்களுக்காக பாவநிவாரணம் செய்யும். எங்களுடைய பாவங்களை மூடும்.

"உமது நாமத்தினிமித்தம்" - பாவங்களை நிவர்த்திபண்ணுவது தேவனுடைய நாமத்தின் நிமித்தமாக மட்டும் நடைபெறுவதில்லை. யாருடைய பாவங்கள் நிவர்த்தியாகிறதோ அவர்கள் நிமித்தமாகவும் பாவநிவர்த்தி நடைபெறுகிறது. (தீத்து 2:11-14)

"புறஜாதிகள் சொல்வானேன்" - தேவனுடைய தண்டனையை விட சில சமயங்களில் மனுஷனுடைய நிந்தனை அதிகமாக இருக்கும். யுத்தத்தில் தோல்வியுற்றால் மனுஷர்கள் அவமானப் படுத்துவார்கள். தோல்வியுற்றவர்களின் தெய்வத்தையும் ஏளனமாகப் பேசுவார்கள்.

"அவர்களுடைய தேவன் எங்கே?" - என்னும் வாக்கியம் சங்கீதப்புஸ்தகத்தில் 4 இடங்களில் வருகிறது. (சங் 42:3,10; சங் 79:10; சங் 115:2)

வேதாகமத்தில் "ஏழத்தனையாக" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்கள்

1. காயீனைக் கொல்லுகிறவன் மேல் ஏழு பழி சுமரும் (ஆதி 4:15,24)

2. ஏழத்தனையாக அயலார்கள் மடியிலே திரும்பப்பண்ணுதல் (சங் 79:12)

3. திருடன், தன் பசியை ஆற்றத் திருடினால், அவனுக்கு ஏழு மடங்கு கொடுக்க வேண்டும் (நீதி 6:31)

4. சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப் போல இருக்கும் (ஏசா 30:26)

இந்த சங்கீதத்தில் சங்கீதக்காரன் ஏராளமான விண்ணப்பங்களைத் தேவனிடம் ஏறெடுக்கிறான். (சங் 79:6) அதற்கான காரணங்களையும் கூறுகிறான். (சங் 79:1) இது கர்த்தரிடம் பேரம்பேசி வியாபாரம் பண்ணுவதுபோல இருக்கிறது. கர்த்தர் தனக்கு பதினொறு காரியங்களைச் செய்தால், தான் கர்த்தருக்காக ஒரு காரியத்தைச் செய்வதாக மனுஷன் கூறுகிறான்.

சங்கீதம் - தொகுப்புரை

80 அதிகாரம்

(சாட்சி விளங்கும்படி சோஷானீம் எடுத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதம்.)

பதினைந்தாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. இஸ்ரவேலின் இரட்சிப்புக்காக ஆறு விண்ணப்பங்கள் - (80:1-3)
2. ஜெபத்தைக் கேட்க தாமதமாவதினால் தேவனிடத்தில் ஐந்து அம்ச முறையீடு - (80:4-6)
3. இரட்சிப்புக்காக இரண்டு விண்ணப்பங்கள் - (80:7)
4. இஸ்ரவேலை ஒரு திராட்சைக்கொடியாக கூறும் பத்து அம்ச விளக்கம் - (80:8-11)
5. இஸ்ரவேலை அழித்ததற்காக தேவனிடத்தில் நான்கு அம்ச முறையீடு - (80:12-13)
6. இஸ்ரவேலின் இரட்சிப்புக்காக எட்டு விண்ணப்பங்கள் - (80:14-19)

1. இஸ்ரவேலின் இரட்சிப்புக்காக ஆறு விண்ணப்பங்கள்

சங் 80:1 இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்; கேருபீன்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறவரே, பிரகாசியும்.

சங் 80:2 எப்பிராயீம் பென்யமீன் மனாசே என்பவர்களுக்கு முன்பாக, நீர் உமது வல்லமையை எழுப்பி, எங்களை இரட்சிக்க வந்தருளும்.

சங் 80:3 தேவனே, எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. இஸ்ரவேலின் மேய்ப்பரே, செவிகொடும் (சங் 80:1)
2. பிரகாசியும்
3. உமது வல்லமையை எழுப்பும் (சங் 80:2)
4. எங்களை இரட்சிக்க வந்தருளும்
5. தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும் (சங் 80:3)
6. உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும்
7. சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும் (சங் 80:7)
8. உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும்
9. சேனைகளின் தேவனே, திரும்பி வாரும் (சங் 80:14)
10. வானத்திலிருந்து கண்ணோக்கிப் பாரும்
11. இந்தத் திராட்சச் செடியை விசாரித்தருளும் (சங் 80:14-15)
12. உமது கரம் உமது வலது பாரிசத்துப் புருஷன் மீது இருப்பதாக (சங் 80:17)
13. உமது கரம் நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன்மீது இருப்பதாக.
14. எங்களை உயிர்ப்பியும் (சங் 80:18)
15. எங்களைத் திருப்பிக் கொண்டு வாரும் (சங் 80:19)
16. உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்

தேவனுடைய கிரியைகள்

1. தம்முடைய ஜனங்களை ஆட்டுமந்தையைப் போல் நடத்துகிறார் (சங் 80:1)
2. கேருபீன்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறார்

80 அதிகாரம்

3. தமக்கு விரோதமாக பாவம் செய்கிற, தமது ஜனங்களின் விண்ணப்பத்துக்கு செவி கொடார் (சங் 80:4)

4. கண்ணீராகிய அப்பத்தை, தம்முடைய ஜனங்களுக்கு போஜனமாகக் கொடுத்தார் (சங் 80:5)

5. எங்கள் அயலாருக்கு எங்களை வழக்காக வைக்கிறார் (சங் 80:6)

6. எகிப்திலிருந்து, இஸ்ரவேலைக் கொண்டுவந்தார் (சங் 80:8)

7. புறஜாதியாரை, வாக்குத்தத்தத் தேசத்திலிருந்து துரத்தினார் (சங் 80:8; யோசு 1-12)

8. இஸ்ரவேலை, வாக்குத்தத்தத் தேசத்திலே நாட்டினார் (சங் 80:8-11; யோசு 13-24)

9. இஸ்ரவேலை, வேரூன்றி, தேசமெங்கும் படரும்படிச் செய்தார் (சங் 80:8-11)

10. இஸ்ரவேலர்களின் பாவங்களினிமித்தம், அவர்களை நியாயந்தீர்த்தார் (சங் 80:12-13)

"கேருபீன்கள் மத்தியில்" - தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியின் மேலியிருக்கும் கிருபாசனத்தைக் குறிக்கும் (யாத் 37:1-9).

மனாசே, எப்பிராயீம், பென்யமீன் ஆகியோர் யோசேப்பின் குமாரர்கள். இஸ்ரவேலருடைய வனாந்தர பிரயாணத்தில் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச் சென்றபோது இவர்கள் பெட்டிக்குப் பின்பாகச் சென்றார்கள் (எண் 2:18-22).

"தேவனே, எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும்...இரட்சிக்கப்படுவோம்" - இஸ்ரவேலர்கள் தேவனை விட்டுவிட்டு பின்மாறிப்போய்விட்டார்கள். இது தேவனுக்கு விசனமாக இருந்தது. (சங் 80:4-6, 12-13,16) ஆகையினால், தங்களை இரட்சிக்குமாறு சங்கீதக்காரன் விண்ணப்பம் பண்ணுகிறான்.

2. ஜெபத்தைக் கேட்க தாமதமாவதினால் தேவனிடத்தில் ஐந்து அம்ச முறையீடு

சங் 80:4 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத்தின் விண்ணப்பத்துக்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர்.

சங் 80:5 கண்ணீராகிய அப்பத்தை அவர்களுக்கு போஜனமாகவும், மிகுதியான கண்ணீரையே அவர்களுக்குப் பானமாகவும் கொடுத்தீர்.

சங் 80:6 எங்கள் அயலாருக்கு எங்களை வழக்காக வைக்கிறீர்; எங்கள் சத்துருக்கள் எங்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

"கண்ணீராகிய அப்பம்" - சங் 80:5-6 ஆகிய வசனங்கள் இஸ்ரவேலின் ஒரு சில தோல்விகளை குறிக்கின்றன. இந்த தோல்விகளினால் இஸ்ரவேல் தேசம் முழுவதுமே பலபாடுகளை அனுபவித்தது.

3. இரட்சிப்புக்காக இரண்டு விண்ணப்பங்கள்

சங் 80:7 சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

4. இஸ்ரவேலை ஒரு திராட்சைக் கொடியாக கூறும் பத்து அம்ச விளக்கம் - (ஏசா 5:1-7; எரே 2:21; எசே 15:6; 17:6; 19:10)

சங் 80:8 நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர்.

சங் 80:9 அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர்; அது வேரூன்றி, தேசமெங்கும் படர்ந்தது.

சங் 80:10 அதின் நிழலால் மலைகளும் அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது.

80 அதிகாரம்

சங் 80:11 அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும், தன் கிளைகளை நதிமட்டாகவும் படரவிட்டது.

"எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடி" - இஸ்ரவேலர்கள் சாதாரண திராட்சைக் கொடியல்ல. இவர்கள் சேனைகளுடைய கர்த்தரின் திராட்சைத் தோட்டம் சங் 80:8-16; உபா 32:32-33; ஏசா 5:1-7; ஏசா 27:2-6; எரே 2:21; எரே 12:10; எசே 17:5-6; ஓசி 10:1; யோவே 1:7; மத் 21:33-46; மாற்கு 12:1-12) இயேசு கிறிஸ்து சபையைப் பற்றி குறிக்கும்போது இந்த உவமையைக் கூறுகிறார். (யோவான் 15:1-8).

திராட்சைக் கொடியைப் பற்றிய சத்தியங்கள்

1. எகிப்திலிருந்து ஒரு திராட்சக் கொடியை நாட்டினார் (சங் 80:8; யாத் 12)

2. ஜாதிகளைத் துரத்திவிட்டு, திராட்சக் கொடிக்கு புது இடத்தை ஆயத்தப் படுத்தினார் (சங் 80:8; யோசு 4-12)

3. திராட்சச் செடியைக் கானானில் நாட்டினார் (சங் 80:8; யோசு 13-24; நியா 1-3)

4. திராட்சச்செடி, நன்கு வேரூன்றி படர, இடத்தை ஆயத்தப்படுத்தினார் (சங் 80:9; உபா 6:10-12; யோசு 1-12)

5. திராட்சச் செடியானது கானானில் வேரூன்றியது (சங் 80:9; உபா 11:13-32)

6. தேசமெங்கும் படர்ந்தது (சங் 80:9; உபா 7:22-24; யோசு 1-12; 2சாமு 8; 1இராஜா 9-11)

7. அதின் நிழலால் மலைகள் மூடப்பட்டது (சங் 80:10; 2சாமு 8; 1இராஜா 4:25)

8. அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது (சங் 80:10; 2சாமு 8)

9. அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும், நதிமட்டாகவும் படரவிட்டது (சங் 80:11; 2சாமு 8)

10. கர்த்தருடைய சொந்த சம்பத்தாயிருப்பதற்காக, திராட்சச் செடியை நாட்டினார் (2சாமு 80:14-15; யாத் 19:5-6)

5. இஸ்ரவேலை அழித்ததற்காக தேவனிடத்தில் நான்கு அம்ச முறையீடு - (வசனம் 8)

சங் 80:12 இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக, அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப் போட்டீர்?

சங் 80:13 காட்டுப்பன்றி அதை உழுது போடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது.

இஸ்ரவேல் தேவனுடைய திராட்சைத் தோட்டம். தேவன் அதை நட்டு, பராமரித்து வளர்த்தார். திராட்சைத்தோட்டம் நன்றாக வளர்ந்தது (சங் 80:12-13,16). இஸ்ரவேல் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தேவனைப் புறக்கணித்துவிட்டு அந்நிய தெய்வங்களை பின்பற்றக்கூடாது. (உபா 4:25-31; உபா 8:10-20; உபா 11:13-32; உபா 12:1-32; உபா 28:1-30:20; லேவி 26) இஸ்ரவேலர்கள் பாவம் செய்தால் "வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக, அதின் அடைப்புகளைத் தேவன் தகர்த்துப்போடுவார்".

"காட்டுப்பன்றி அதை உழுது போடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது" - இஸ்ரவேலரின் சத்துருக்கள் மிருகங்களாக வர்ணிக்கப் படுகிறார்கள். புறஜாதி ஜனங்கள் இஸ்ரவேல்மீது தொடர்ந்து படையெடுத்து வந்தார்கள். காட்டுப்பன்றிகளைப் போல அவர்கள் நிலங்களை அழித்துப் போட்டார்கள். "வெளியின் மிருகங்கள்" என்பது காட்டு மிருகங்களைக் குறிக்கும். யூதர்களுடைய பாரம்பரிய வழக்கில் அவர்கள் இதை "ஆற்றின் மிருகங்கள்" என்று கூறிவந்தார்கள். இஸ்ரவேலர்கள் பாவம் செய்யாமல் இருக்கும்போது அவர்களுடைய விரோதிகள் ஆற்றின் மிருகங்களைப் போல பலவீனமாக இருப்பார்களாம்

80 அதிகாரம்

அவர்கள் பாவம் செய்தபோதோ அவர்களுடைய விரோதிகள் காட்டு மிருகங்களைப் போல பலமுள்ளவர்களாக இருப்பார்களாம். இது யூதர்களின் பாரம்பரிய நம்பிக்கை. வேதாகமத்தில் புறஜாதி இராஜ்ஜியங்கள் காட்டுமிருகங்களாகவும், ஆற்று மிருகங்களாகவும் வாணிக்கப்பட்டுள்ளன.

1. எகிப்து - முதலை (ஏசா 51:9; எசே 29:3)

2. அசீரியா - சிங்கம் (எரே 50:17-18)

3. பாபிலோன் - கழுகின் சிறகுகளும் மனுஷனுடைய இருதயமும் கொண்ட சிங்கம் (தானி 7:4)

4. மேதிய-பெர்சியா - கரடி (தானி 7:5), ஆடு (தானி 8:20)

5. கிரேக்கு - சிவிங்கி, (தானி 7:6) வெள்ளாட்டுக்கடா (தானி 8:21)

6. ரோம் - கொடிய மிருகம் (தானி 7:7)

7. ரோம் - பத்துக் கொம்புகளையுடைய மிருகம் (தானி 7:7-8,19-24)

8. கிரேக்கு - ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் உடைய மிருகம் (வெளி 13; வெளி 17)

9. புறஜாதிகள் - காட்டுப்பன்றியும், வெளியின் மிருகங்களும் (சங் 80:13)

6. இஸ்ரவேலின் இரட்சிப்புக்காக எட்டு விண்ணப்பங்கள்

சங் 80:14 சேனைகளின் தேவனே, திரும்பிவாரும், வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து, இந்தத் திராட்சச் செடியை விசாரித்தருளும்;

சங் 80:15 உம்முடைய வலதுகரம் நாட்டின கொடியையும், உமக்கு நீர் திடப்படுத்தின கிளையையும் கடாட்சித்தருளும்.

சங் 80:16 அது அக்கினியால் சுடப்பட்டும் வெட்டுண்டும் போயிற்று; உம்முடைய முகத்தின் பயமுறுத்தலால் அழிந்து போகிறார்கள்.

சங் 80:17 உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மீதிலும், உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன் மீதிலும் இருப்பதாக.

சங் 80:18 அப்பொழுது உம்மைவிட்டுப் பின்வாங்கமாட்டோம்; எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம்.

சங் 80:19 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும்; உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.

“உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன் மீது உமது கரம் இருப்பதாக” - மனுஷகுமாரன் என்பது மேசியாவைக் குறிக்கும். தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருப்பவர். (ரோமர் 8:34; எபே 1:20; எபி 1:1-3 எசே 2:1; யோவான் 1:51).

81 அதிகாரம்

(கித்தீத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கும்படி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதம்.)

பதினேழாவது போதக சங்கீதம் - இஸ்ரவேலோடு தேவன் நடப்பிக்கும் கிரியைகளைப்பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதித்து ஆராதிக்க வேண்டுமென்று ஏழு அம்ச கட்டளை - (81:1-3)
2. தேவனைத் துதிப்பதற்கு எட்டு காரணம் - (81:4-7)
3. தேவனுடைய சத்தத்தைக் கேட்குமாறு இஸ்ரவேலருக்கு அழைப்பு-காரணம் - (81:8-10)
4. தேவ சத்தத்தைக் கேட்க மறுக்கும் இஸ்ரவேலர் - மீறுதலின் விளைவுகள் - (81:11-12)
5. இஸ்ரவேல் கீழ்ப்படிந்து இருந்தால், தேவன் செய்து இருக்கக்கூடிய ஆறு காரியங்கள் - (81:13-16)

1. தேவனைத் துதித்து ஆராதிக்க வேண்டுமென்று ஏழு அம்ச கட்டளை

சங் 81:1 நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக்குறித்து ஆர்ப்பரியுங்கள்.

சங் 81:2 தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து, சங்கீதம் பாடுங்கள்.

சங் 81:3 மாதப்பிறப்பிலும், நியமித்தகாலத்திலும், நம்முடைய பண்டிகைநாட்களிலும், எக்காளம் ஊதுங்கள்.

இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளைகள்

1. தேவனை நோக்கி கெம்பீரமாய் பாடுங்கள் (சங் 81:1)
2. யாக்கோபின் தேவனைக் குறித்து ஆர்ப்பரியுங்கள்
3. சங்கீதத்தினால், தேவனைத் துதியுங்கள் (சங் 81:2; சங் 105:2; 1கொரி 16:9; யாக் 5:13)
4. தம்புரு வாசித்து, வீணையையும் எடுத்து தேவனைத் துதியுங்கள் (சங் 81:2; தானி 3:5-15)
5. பண்டிகை நாட்களில் எக்காளம் ஊதுங்கள் (சங் 81:3)
6. என் ஜனமே, கேள் (சங் 81:8)
7. உனக்குள் வேறு தேவன் உண்டாயிருக்க வேண்டாம் (சங் 81:9)
8. அந்நிய தேவனை நமஸ்கரிக்க வேண்டாம்

தம்புரு (timbrel) - תֹּף - tofe - 8596

ஆ.பெ.சொ. - மேள தாளம், தம்புரு, கீதவாத்தியம், வீணை, மேளவாத்தியம்

வீணை (harp) כִּנּוֹר - kin-nore' - 3658

ஆ.பெ.சொ. - கின்னரம், வீணை

சுரமண்டலம் (psaltery) נֵבֶל - neh'-bel, ney'-bel - 5035

ஆண்பால் பெயர்ச்சொல் - துருத்தி, பாண்டம், கலம், ஜாடி, சுரமண்டலம்

எக்காளம் (trumpet) - שׁוֹפָר - sho-far', sho-far' - 7782

ஆ.பெ.சொ. - எக்காளம் - (யோசு 6:4-10; நியா 7:8-22).

81 அதிகாரம்

2. தேவனைத் துதிப்பதற்கு எட்டு காரணம்

சங் 81:4 இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது.

சங் 81:5 நாம் அறியாத பாஷையைக் கேட்ட எகிப்துதேசத்தைவிட்டுப் புறப்படுகையில், இதை யோசேப்பிலே சாட்சியாக ஏற்படுத்தினார்.

சங் 81:6 அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன்; அவன் கைகள் கூடைக்கு நீங்கலாக்கப்பட்டது.

சங் 81:7 நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னைத் தப்புவித்தேன்; இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து உனக்கு உத்தரவு அருளினேன்; மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னைச் சோதித்து அறிந்தேன். (சேலா.)

தேவனைத் துதித்து ஆராதிக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. இது இஸ்ரவேலுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற பிரமாணம் (சங் 81:4; லேவி 23:24; எண் 10:10)
2. யாக்கோபின் தேவன் விதித்த நியாயப்பிரமாணம் (சங் 81:4)
3. இது கர்த்தருடைய அதிகாரம் (சங் 81:5)
4. இஸ்ரவேலின் தோள்சுமையை விலக்கினார் (சங் 81:6)
5. அடிமைத்தனத்திலிருந்து அவனை விடுவித்தார்
6. நெருக்கத்திலே கூப்பிட்டதினால், கர்த்தர், அவனை விடுவித்தார் (சங் 81:7)
7. இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து உத்தரவு அருளினார்
8. மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் சோதித்து அறிந்தார்

"நாம் அறியாத பாஷை" - நாம் என்னும் சுட்டுச்சொல் **(personal pronoun)** யோசேப்பைக் குறிக்கும். யோசேப்பு எகிப்தின் வழியாகப் போகும்போது எகிப்தியரின் பாஷை அவனுக்கு புரியவில்லை. அறியாத பாஷை என்பது யோசேப்பு விளங்கிக் கொள்ளாத மற்ற பாஷைகளையும் குறிக்கும்.

"(நான்) அவன் தோளைச் சுமைக்கு விலக்கினேன்" - இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள சுட்டுச்சொல் **(personal pronoun)** தேவனைக் குறிக்கும். தேவன் இஸ்ரவேலரின் தோளைச் சுமைக்கு விலக்கினார். அவர்களுடைய கைகளைக் கூடைக்கு நீங்கலாக்கினார்.

கூடை (pots) - דוד - dood - 1731

ஆ.பெ.சொ. - பானை, கூடை, கொப்பரை, சட்டி - (சங் 81:6; யோபு 41:20)

"இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து உனக்கு உத்தரவு அருளினேன்" - கர்த்தர் பகலில் மேகஸ்தம்பத்தின் நடுவிலுமிருந்தும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தின் நடுவிலுமிருந்தும் அற்புதங்களைச் செய்தார். (யாத் 13:21) கர்த்தர் ஜனங்களுக்கு மறைவிடங்களிலிருந்து உத்தரவு கொடுத்தார். செங்கடலை தமது பிள்ளைகளுக்காக இரண்டாகப் பிளந்து கொடுத்தார். மேரிபாவில் கர்த்தர் தமது ஜனத்தின் தாகத்தைத் தீர்க்க தண்ணீரைக் கொடுத்தார். (யாத் 17:1-7)

"மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னைச் சோதித்து அறிந்தேன்" - இஸ்ரவேல் புத்திரர் சீன் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம் பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள். அங்கே ஜனங்களுக்குக் குடிக்க தண்ணீர் இல்லாதிருந்தது. ஜனங்கள் மோசேயோடு வாதாடினார்கள். இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும், அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிடப்பட்டது (யாத் 17:7).

81 அதிகாரம்

3. தேவனுடைய சத்தத்தைக் கேட்குமாறு இஸ்ரவேலருக்கு அழைப்பு-காரணம்

சங் 81:8 என் ஜனமே கேள், உனக்குச் சாட்சியிட்டுச் சொல்லுவேன்; இஸ்ரவேலே, நீ எனக்குச் செவி கொடுத்தால் நலமாயிருக்கும்.

சங் 81:9 உனக்குள் வேறு தேவன் உண்டாயிருக்கவேண்டாம்; அந்நிய தேவனை நீ நமஸ்கரிக்கவும் வேண்டாம்.

சங் 81:10 உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்.

"வேறுதேவன்" என்பது அந்நிய தெய்வங்களைக் குறிக்கும். அந்நிய தெய்வங்களை ஆராதிக்கக்கூடாது (யாத் 20:4).

"உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே" - இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். கர்த்தர் அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுதலையாக்கி அங்கிருந்து அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு அழைத்துவந்தார்.

" உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன்" - இஸ்ரவேலர்கள் தேவனுக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாக நடந்து கொள்வார்களேயானால் கர்த்தர் அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பார். அவர்களும் திருப்தியடைவார்கள்.

4. தேவ சத்தத்தைக் கேட்க மறுக்கும் இஸ்ரவேலர் - மீறுதலின் விளைவுகள்

சங் 81:11 என் ஜனமோ, என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை.

சங் 81:12 ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்; தங்கள் யோசனைகளின் படியே நடந்தார்கள்.

தேவன் மனுஷரை எதற்கெல்லாம் ஒப்புக்கொடுத்தார்?

1. இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டார் (சங் 81:12)
2. தங்கள் யோசனையின்படியே நடந்தார்கள் (சங் 81:12)
3. பாழாய்ப் போகிறதற்கு ஒப்புக் கொடுத்தார் (2நாளா 30:7)
4. அவர்கள் இச்சித்ததை அவர்களுக்குக் கொடுத்தார் (சங் 78:29)
5. அவர்கள் ஜீவனைக் கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுத்தார் (சங் 78:50)
6. தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கினார் (சங் 78:62)
7. அவர்களை ஜாதிகளுடைய கையில் ஒப்புக்கொடுத்தார் (சங் 106:41)
8. அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார் (ரோமர் 1:24)
9. தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார் (ரோமர் 1:26)
10. தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் (ரோமர் 1:28)

5. இஸ்ரவேல் கீழ்ப்படிந்து இருந்தால், தேவன் செய்து இருக்கக்கூடிய ஆறு காரியங்கள்

சங் 81:13 ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்!

81 அதிகாரம்

சங் 81:14 நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்.

சங் 81:15 அப்பொழுது கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்களுடைய காலம் என்றென்றைக்கும் இருக்கும்.

சங் 81:16 உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்.

தேவன் இஸ்ரவேலுக்குச் செய்திருக்கக் கூடிய காரியங்கள்

1. கர்த்தர், எதிராளிகளைத் தாழ்த்துவார் (சங் 81:13-14)
2. என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவார் (சங் 81:14)
3. கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள் (சங் 81:15)
4. அவர்களுடைய காலம் என்றென்றைக்கும் இருக்கும்
5. உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார் (சங் 81:16)
6. கன்மலையின் தேனினால் அவர்களைத் திருப்தியாக்குவார்

தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமென்றால் தேவன் கூறும் நிபந்தனைகளைக் கைக்கொள்ள வேண்டும். தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர். மனுஷனுடைய ஜீவியத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற மனுஷன் தான் நிறைவேற்ற வேண்டிய காரியத்தை அவசியம் நிறைவேற்றியே ஆகவேண்டும். நாம் கிருபையின் காலத்தில் இருக்கிறபோதிலும், தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் நிபந்தனைகளை நாம் நிறைவேற்றாமல், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது.

82 அதிகாரம்

(ஆசாபின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்புக்காக எட்டாவது ஜெபம்

பொருளடக்கம்

1. தேவனே மகாப்பெரிய நியாயாதிபதி - (82:1)
2. இவ்வுலக நியாயாதிபதிகளைப் பற்றி எட்டு அம்ச குற்றச்சாட்டு - அவர்களுடைய முடிவு - (82:2-7)
3. தேவனே மகாப்பெரிய நியாயாதிபதி - (82:8)

1. தேவனே மகாப்பெரிய நியாயாதிபதி

சங் 82:1 தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்; தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்.

"தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்; தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்" - தேவன் இந்த உலகத்தில் மனுஷருடைய இராஜ்ஜியங்களை ஸ்தாபிப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார். இவர்களுக்கு நீதிமன்றங்கள் உள்ளன. அங்கு நீதிபதிகள் இருக்கிறார்கள். தேவனாகிய கர்த்தர் எல்லா நியாயாதிபதிகளுக்கும் நியாயாதிபதியாய் இருக்கிறவர். "தேவர்களின் நடுவிலே" என்பது நியாயாதிபதிகளின் நடுவிலே என்று பொருள்படும்.

நியாயாதிபதி (gods) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்.

எலோஹிம் என்னும் சொல் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கும் உலகப்பிரகாரமான நியாயாதிபதிகளைக் குறிப்பதற்கு பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சங் 82:1,6; யாத் 7:1; யாத் 21:6; யாத் 22:8,9,28; யோவான் 10:34-35; அப் 23:5)

2. இவ்வுலக நியாயாதிபதிகளைப் பற்றி எட்டு அம்ச குற்றச்சாட்டு - அவர்களுடைய முடிவு

சங் 82:2 எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்புச் செய்து, துன்மார்க்கருக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்கள். (சேலா.)

சங் 82:3 ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப் பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்.

சங் 82:4 பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்.

சங் 82:5 அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்; தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது.

சங் 82:6 நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன்.

சங் 82:7 ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்து போவீர்கள்.

அநீதியான நியாயாதிபதிகள் செய்யும் அநியாயமான தீர்ப்புக்கள்

1. அவர்கள் அநியாயத்தீர்ப்புச் செய்கிறார் (சங் 82:2)
2. துன்மார்க்கருக்கு முகதாட்சிணியம் பண்ணுகிறார்கள்
3. கர்த்தருடைய பிரமாணத்தை அறியாமலிருக்கிறார்கள் (சங் 82:5)
4. கர்த்தருடையப் பிரமாணத்தைப் பற்றி உணராமல் இருக்கிறார்கள்
5. அந்தகாரத்திலே நடக்கிறார்கள்
6. தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது

சங்கீதம் - தொகுப்புரை

82 அதிகாரம்

7. அவர்கள், மனுஷரைப் போல செத்துப் போகிறார்கள் (சங் 82:7)

8. லோகப்பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்து போகிறார்கள்

பூமியில் நியாயாதிபதிகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற கட்டளைகள்

1. ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்யுங்கள் (சங் 82:3)

2. சிறுமைப் பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்

3. பலவீனனையும் எளியவனையும் விடுவியுங்கள் (சங் 82:4)

4. துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்

"தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது" - பூமியிலுள்ள ஒவ்வொரு காரியமும் அசைகிறது. தன் இடத்தை விட்டு வேறு இடத்திற்கு இடம் பெயர்கிறது.

"நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள்" - தேவனுக்காக ஆளுகை செய்யும் நியாயாதிபதிகள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும்.

நியாயாதிபதிகளின் துன்மார்க்கமான சுபாவங்கள் சங் 82:2,5,7 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்டவர்கள் நியாயாதிபதிகளாக இருப்பதற்கோ அல்லது தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதற்கோ தகுதியற்றவர்கள். (1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:18; 2கொரி 5:17-18; கலா 5:24; எபே 4:24; எபி 12:14)

தீர்க்கதரிசன எண் - 65

"நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்து போவீர்கள்........" (சங் 82:7-8) சங் 82:7- இல் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. சங் 82:8-ல் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

3. தேவனே மகாப்பெரிய நியாயாதிபதி

சங் 82:8 தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்; நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்.

"பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்" - ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் கர்த்தர் இந்த பூமியிலே நியாயத்தீர்ப்பு செய்வார் (வெளி 20:11-15).

83 அதிகாரம்

(ஆசாபின் சங்கீதமாகிய பாட்டு)

நியாயத்தீர்ப்புக்காக ஒன்பதாவது ஜெபம்

பொருளடக்கம்

1. மூன்று விண்ணப்பங்கள் - இஸ்ரவேலுக்கு எதிரான சத்துருக்களின் ஏழு அம்ச ஆலோசனை - (83:1-5)
2. இஸ்ரவேலுக்கெதிராக பத்து தேசங்களின் கூட்டணி - (83:6-8)
3. நியாயத்தீர்ப்புக்காக எட்டு விண்ணப்பங்கள் - பதினொரு ஒப்பீடுகள் - (83:9-17)
4. இஸ்ரவேலின் சத்துருக்கள் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டும் என்பதற்கு காரணம் - (83:18)

1. மூன்று விண்ணப்பங்கள் - இஸ்ரவேலுக்கு எதிரான சத்துருக்களின் ஏழு அம்ச ஆலோசனை

சங் 83:1 தேவனே, மவுனமாயிராதேயும், பேசாமலிராதேயும்; தேவனே, சும்மாயிராதேயும்.

சங் 83:2 இதோ, உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து, உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள்.

சங் 83:3 உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள்.

சங் 83:4 அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக, அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள்.

சங் 83:5 இப்படி, ஏதோமின் கூடாரத்தாரும், இஸ்மவேலரும், மோவாபியரும், ஆகாரியரும்,

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. தேவனே, மவுனமாயிராதேயும் (சங் 83:1)
2. பேசாமலிராதேயும்
3. தேவனே சும்மாயிராதேயும்
4. மீதியானியாருக்குச் செய்தது போல, உம்முடைய சத்துருக்குச் செய்யும் (சங் 83:9; நியா 7:19-25)
5. சிசெரா, யாபீன் என்பவர்களுக்குச் செய்தது போல, அவர்களுக்குச் செய்யும் (சங் 83:9; நியா 4:1-24)
6. அவர்களையும், அவர்கள் அதிபதிகளையும் ஒரேபுக்கும் சேபுக்கும், செய்தது போல சமமாக்கும் (சங் 83:11; நியா 7:25)
7. அவர்கள் பிரபுக்களையெல்லாம் சேபாவுக்கும் சல்முனாவுக்கும் சமமாக்கும் (சங் 83:11; நியா 8:5,21)
8. அவர்களைச் சுழல் காற்றின் புழுதிக்கும், காற்று முகத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாக்கும் (சங் 83:13; ஏசா 17:13)
9. நெருப்பு காட்டைக் கொளுத்துவது போலவும், அக்கினி ஜுவாலை மலைகளை எரிப்பது போலவும் அவர்களை அழியும் (சங் 83:13-14)
10. நீர் உமது புசலினாலே அவர்களைத் தொடர்ந்து கஷ்டங்கப்பண்ணும் (சங் 83:15)
11. உமது பெருங்காற்றினாலே அவர்களை கலங்கப்பண்ணும்
12. அவர்கள் உமது நாமத்தைத் தேடும் படிக்கு அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும் (சங் 83:16)

83 அதிகாரம்

13. அவர்கள் என்றைக்கும் வெட்கிக் கலங்கும்படிச் செய்யும் (சங் 83:17)

14. அவர்கள் நாணமடைந்து போவார்களாக

15. அவர்கள் அழிந்து போவார்களாக

தேவனிடம் அறிவிக்கப்படும் செய்திகள்

1. உம்முடைய சத்துருக்கள் கொந்தளிக்கிறார்கள் (சங் 83:2)

2. உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள்

3. உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசிக்கிறார்கள். (சங் 83:3)

4. உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனை பண்ணுகிறார்கள்

5. அவர்கள் இனி ஒரு ஜாதியாராயிராமல் இஸ்ரவேலை அதம்பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள். (சங் 83:4)

6. இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப் படாமல் போவதற்காக, அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள்

7. அவர்கள் ஏகமனநிர்ணயமாய் ஆலோசனை செய்கிறார்கள். (சங் 83:5)

8. அவர்கள் உமக்கு விரோதமாய் ஒப்பந்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்

9. அவர்கள் உமக்கு விரோதமாக ஒன்றுசேர்ந்து லோத்தின் புத்திரருக்கு புயபலமானார்கள். (சங் 83:6-8)

10. தேவனுடைய வாசஸ்தலங்களை எங்களுக்குச் சுதந்தரமாக நாங்கள் கட்டிக்கொள்வோம் என்று சொல்லுகிறார்கள். (சங் 83:12)

"உம்முடைய சத்துருக்கள் கொந்தளிக்கிறார்கள்" - கடலில் உயர எழும்பும் அலைகளைப் போல கொந்தளிக்கிறார்கள். (சங் 46:3)

"உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள்" - எபிரெய பாஷையில் "ஆணவமாக செயல்படுகிறார்கள்" என்பதை கூறும் வழக்குச்சொல். (சங் 3:3; சங் 27:6; நியா 8:28)

"உமது மறைவிலிருக்கிறவர்கள்" - தேவனுடைய பிள்ளைகள் தேவனையே சார்ந்திருப்பார்கள். ஆகையினால் அவர்கள் தேவனுடைய மறைவில் இருக்கிறார்கள். அவர்களை ஒருசேதமும் அணுகாது. (சங் 17:8; சங் 27:5; சங் 31:20; சங் 64:2)

"உமக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்" - இவர்கள் லோத்தின் பிள்ளைகளுக்கு உதவி புரிந்தவர்கள் (சங் 83:5-8).

2. இஸ்ரவேலுக்கெதிராக பத்து தேசங்களின் கூட்டணி

சங் 83:6 கேபாலரும், அம்மோனியரும், அமலேக்கியரும், தீருவின் குடிகளோடு கூடிய பெலிஸ்தரும்,

சங் 83:7 ஏகமனநிர்ணயமாய் ஆலோசனை செய்து, உமக்கு விரோதமாய் ஒப்பந்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

சங் 83:8 அசீரியரும் அவர்களோடேகூடக் கலந்து, லோத்தின் புத்திரருக்குப் புயபலமாக்கினார்கள். (சேலா)

"ஏதோமியர்" **(Edomites)** ஏசாவின் சந்ததியில் வந்த ஏதோமியர் (ஆதி 36:1).

"இஸ்மவேலர்" **[Ishmaelites]** இஸ்மவேலின் சந்ததியார் (ஆதி 25:12-18).

"மோவாபியர்" **(Moabites)** லோத்திற்கும் அவனுடைய மூத்த குமாரத்திக்கும் பிறந்த குமாரனிடத்திலிருந்து வந்த சந்ததியார் (ஆதி 19:37).

83 அதிகாரம்

"ஆகாரியர்" [Hagarenes] ஆகாரின் சந்தரியார்கள். (ஆதி 17:20; 1நாளா 5:10; 1நாளா 27:31).

"கேபாலர்" [Gebal] கேபால் பொனிசியரின் (Phoenicia) பழங்கால பட்டணம். பெய்ரூட் (Beirut) -க்கு 20 மைல் வடக்கில் உள்ளது. இதற்கு பிப்லோஸ் (Byblos) என்னும் மறுபெயர் உள்ளது. (யோசு 13:5; எசே 27:9)

"அம்மோனியர்" (Ammonites) லோத்துவிற்கும் அவனுடைய இளைய குமாரத்திக்கும் பிறந்த குமாரன் மூலமாக வந்த சந்ததியார் (ஆதி 19:38).

"அமலேக்கியர்" (Amalekites) ஏசாவின் சந்ததியிலிருந்து வந்தவர்கள் (ஆதி 36:12; யாத் 17:8,13-16; உபா 25:17).

"பெலிஸ்தர்" [Philistines] காமின் சந்ததியிலிருந்து வந்தவர்கள் (ஆதி 10:14; 1நாளா 1:12).

"தீருவின் குடிகள்" [Tyre] தீரு பொனிசியாவின் பழங்கால பட்டணம். இஸ்ரவேலின் வடக்கு எல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பட்டணம் (யோசு 19:29; எசே 27-28).

"அசீரியர்" [Asshur] சேமின் சந்ததியில் வந்தவர்கள் (ஆதி 10:22).

"லோத்தின் புத்திரர்" [children of Lot] லோத்துவின் இரண்டு குமாரத்திகள் மூலமாக பிறந்த மோவாபும், அம்மோனும் (ஆதி 19:33-38).

3. நியாயத்தீர்ப்புக்காக எட்டு விண்ணப்பங்கள் - பதினொரு ஒப்பீடுகள்

சங் 83:9 மீதியானியருக்குச் செய்தது போலவும், கீசோன் என்னும் ஆற்றண்டை எந்தோரிலே அழிக்கப்பட்டு,

சங் 83:10 நிலத்துக்கு எருவாய்ப்போன கிசெரா, யாபீன் என்பவர்களுக்குச் செய்ததுபோலவும், அவர்களுக்குச் செய்யும்.

சங் 83:11 அவர்களையும் அவர்கள் அதிபதிகளையும் ஓரேபுக்கும் சேபுக்கும், அவர்கள் பிரபுக்களையெல்லாம் சேபாவுக்கும் சல்முனாவுக்கும் சமமாக்கும்.

சங் 83:12 தேவனுடைய வாசஸ்தலங்களை எங்களுக்குச் சுதந்தரமாக நாங்கள் கட்டிக்கொள்வோம் என்று சொல்லுகிறார்களே.

சங் 83:13 என் தேவனே, அவர்களைச் சுழல் காற்றின் புழுதிக்கும், காற்று முகத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாக்கும்.

சங் 83:14 நெருப்பு காட்டைக் கொளுத்துவதுபோலவும், அக்கினி ஜுவாலைகள் மலைகளை எரிப்பது போலவும்,

சங் 83:15 நீர் உமது புசலினாலே அவர்களைத் தொடர்ந்து, உமது பெருங்காற்றினாலே அவர்களைக் கலங்கப்பண்ணும்.

சங் 83:16 கர்த்தாவே, அவர்கள் உமது நாமத்தைத் தேடும்படிக்கு, அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும்.

சங் 83:17 யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி,

'மீதியானியர்" [Midianites] (நியா 7:19-25)

"கீசோன்" [Sisera] (நியா 4:1-24)

"ஓரேப்" [Oreb] (நியா 7:25)

"சேபா" [Zebah] (நியா 8:5,21)

83 அதிகாரம்

வாசஸ்தலம் (houses) - נָוָה - naw-aw' - 4999

பெண்பால் பெயர்ச்சொல் - புல், தாபரம், குடியிருப்பு, வாசஸ்தலம், மேய்ச்சல் (habitation; comely place) - (சங் 83:12; சங் 23:2; சங் 65:12)

உருளை (wheel) - גַּלְגַּל - gal-gal' - 1534

ஆ.பெ.சொ. - சுழல், உருளை, வண்டில், சுழல்காற்று

"என் தேவனே, அவர்களைச் சுழல் காற்றின் புழுதிக்கும், காற்றுமுகத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாக்கும்" - இஸ்ரவேல் நாட்டில் தானியங்களைக் காற்றில் தூவுவார்கள். அப்போது நல்ல தானியம் கீழே விழும். மற்றவை தூசிபோல காற்றில் பறந்து செல்லும். சங்கீதக்காரன் தன்னுடைய விரோதிகளை கர்த்தர் காற்றிலே துரும்பைப் போல பறக்க வைக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறான் (ஏசா 17:13; சங் 83:15-16; சங் 83:17).

4. இஸ்ரவேலின் சத்துருக்கள் மீது நியாயத்தீர்ப்பு வரவேண்டும் என்பதற்கு காரணம்

சங் 83:18 அவர்கள் என்றைக்கும் வெட்கிக் கலங்கி, நாணமடைந்து அழிந்துபோவார்களாக.

"யெகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர்" - உண்மையான தெய்வத்திற்கு வேதாகமத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் பெயர் யெகோவா (JEHOVAH). வேதாகமத்தில் நான்கு இடங்களில் யெகோவா என்னும் பெயரை வாசிக்கிறோம் (சங் 83:18; யாத் 6:3; ஏசா 12:2; ஏசா 26:4). மற்ற இடங்கில் கர்த்தர் (LORD) என்னும் பெயரே உண்மையான தெய்வத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பெயராகும் (யாத் 6:3).

84 அதிகாரம்

(கீத்தீத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.)

நீதிமானின் மூன்றாவது சங்கீதம் - மூன்று ஆசிர்வதிக்கப்பட்ட மனுஷரைக்குறித்து

பொருளடக்கம்

1. தேவனுடைய வீட்டில் வாசமாயிருக்கிறவன் - (84:1-4)
2. தேவனிடத்தில் ஜெபிக்கிறவன் - (84:4-10)
3. தேவனை நம்பியிருக்கிறவன் - (84:11-12)

1. தேவனுடைய வீட்டில் வாசமாய் இருக்கிறவன் - (சங் 23:6; 24:3-10; யோவான் 14:1-2; வெளி 21)

சங் 84:1 சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!

சங் 84:2 என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது.

சங் 84:3 என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே.

சங் 84:4 உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். (சேலா.)

இன்பமானது (amiable) - יָדִיד - yed-eed' - 3039

பெயரடை - பிரியமான, நேச, இன்பமான, பிரியர் (beloved or worthy of love) - (உபா 33:12; சங் 60:5; சங் 108:6; சங் 127:2; எரே 11:15)

வாசஸ்தலம் (tabernacles) - מִשְׁכָּן - mish-kawn' - 4908

ஆண்பால் பெயர்ச்சொல் - வாசஸ்தலம், கூடாரம், குடியிருந்த ஸ்தானம், வாசம்பண்ணுதல்.

"உமது வாசஸ்தலங்கள்" - இந்த வசனத்தில் வாசஸ்தலங்கள் என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய ஆலயத்திலுள்ள பல்வேறு பகுதிகளைக் குறிக்கும். மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், பொன்பலிபீடம், வெண்கல பலிபீடம், தொட்டி. ஆசரிப்புக் கூடாரத்திலும் தேவாலயத்திலுமுள்ள எல்லா பகுதியுமே தேவனுடைய வாசஸ்தலம் தான். இந்த இடங்கள் எல்லாவற்றிலும் ஜனங்கள் கர்த்தரை ஆராதித்தார்கள். ஆகையினால் கர்த்தர் இந்த இடங்களில் எல்லாம் இருக்க வேண்டுமென்று ஜனங்கள் எதிர்பார்த்தார்கள். உண்மையாய் ஆராதிக்கிறவர்கள் கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும். கர்த்தரும் இரண்டுபேர் மூன்றுபேர் தமது நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கெல்லாம் வாசம்பண்ணுகிறவர் (யோவான் 4:24 சங் 139:7-12; எரே 23:24).

சங்கீதக்காரனின் வாஞ்சைகள்

1. என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிரகாரங்களின் மேல் வாஞ்சையாயிருக்கிறது.
2. என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிரப்காரங்களின் மேல் தவனமாயிருக்கிறது
3. என் இருதயம் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது
4. என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது

84 அதிகாரம்

வாஞ்சையாயிரு (longeth) - כָּסַף - kaw-saf' - 3700

வினைச்சொல் - விருப்பம் வை, ஆவலாயிரு, வாஞ்சையாயிரு, விருப்பப்படு (to become pale; to pine after; to long for; to be greedy for) (மத் 22:37)

உலகத்திலுள்ள எந்த பொருளையும்விட கர்த்தரிடத்தில் மட்டுமே வாஞ்சையாயிருப்பது என்பது இதன் உண்மையான பொருளாகும். (மத் 22:37)தவனமாயிரு (fainteth) - כָּלָה - kaw-law' - 3615

வினைச்சொல் - நிறைவேற்று, தீர்மானி, நிச்சயமாய் செய், தீர், செலவழி, நிர்ணயிக்கப்படு, பறந்துபோ, சோர்ந்துபோ, ஒழி, தனி, பூத்துப்பா, கழிந்துபோ, புகைத்துபோ, மாண்டுபோ, தவனமுமாயிரு, அழி, தொய்ந்துபோ, இல்லாமற்போ, அற்றுப்போ, தீரு, முடி, ஒடுங்கு, உருவழி, மடிந்துபோ, செய், சங்காரம் பண்ணு, நீக்கிவிடு, தின்னு, நாசம்பண்ணு, தகர்த்துப்போ, அதமாக்கு, பிரயோகி, துக்கி, வெட்டு, போக்கு, பொல்லப்பு வருகிறது, முற்றிலும் அறு. (to end; cease; consume; expire; faint; waste)

கெம்பீர சத்தமிடு (crieth out) רָנַן - raw-nan' - 7442

வினைச்சொல் - பாடு, சத்தமிடு, கெம்பீரி, கூப்பிடு, ஆர்ப்பரி, மகிழ், களிகூர், முழக்கமிடு, ஆரவாரி, சந்தோஷப்படு, களிகூரப்பண்ணு (to shout; to cry out with a loud cry)

"உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே" - தேவனுடைய பலிபீடத்தின்மீது அடைக்காலன் குருவியும், தகைவிலான் குருவியும் தன்னுடைய கூடுகளைக் கட்டவில்லை. ஏனெனில் தேவனுடைய பலிபீடங்கள் எப்போதும் சுத்தமாக இருக்கும். அங்கு தகனபலி செலுத்தப்படும். அக்கினி எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் குருவிக்கூடுகள் இருக்க முடியாது. சங்கீதக்காரன் தேவனுடைய பலிபீடத்தில் தனக்கு பாதுகாப்பும் சமாதானமும் இருப்பதை இந்த வசனத்தில் கூறுகிறான்.

பாக்கியவான்கள்

1. உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கிய வான்கள்
2. உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கிய வான்கள் (சங் 84:5-10)
3. உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங் 84:11-12)

பாக்கியவானின் குணங்கள்

1. கர்த்தருடைய வாசஸ்தலங்கள் அவர்களுக்கு இன்பமாயிருக்கிறது (சங் 84:1)
2. குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்தது போல் கர்த்தரின் பீடங்களண்டையில் அடைக்கலமான அவர்களுக்கு பாதுகாப்பு கிடைத்தது (சங் 84:2-3)
3. ராஜாவைப் போல ஜீவனுள்ள தேவனைக் கொண்டிருக்கிறார்கள்
4. அவர்கள், கர்த்தருடைய வீட்டில் வாசமாயிருப்பார்கள் (சங் 84:4)
5. அவர்கள் எப்பொழுதும் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருப்பார்கள்
6. அவர்கள், கர்த்தரிலே பெலன் கொள்ளுவார்கள் (சங் 84:5)

84 அதிகாரம்

7. தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறார்கள்

8. அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள் (சங் 84:6)

9. அவர்கள் பலத்தின் மேல் பலம் அடைகிறார்கள் (சங் 84:7)

10. அவர்களுடைய கர்த்தர், யாக்கோபின் தேவன் (சங் 84:8)

11. ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் நாள் நல்லது என்பார்கள் (சங் 84:10)

12. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன் என்பார்கள்.

13. பூமிக்கு சூரியனைப்போல அவர்களுக்கு கர்த்தர் இருக்கிறார். (சங் 84:11)

14. கர்த்தர் அவர்கள் கேடகம் (சங் 84:9,11)

15. கர்த்தர் கிருபையையும், மகிமையையும் அவர்களுக்கு அருளுவார்

16. அவர்களுடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பார்

17. உத்தமத்திலே நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்குவார்

18. அவர்கள் கர்த்தரையே நம்பியிருக்கிறார்கள் (சங் 84:12)

“அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள்” - தேவனுடைய வாசஸ்தலத்தில் இருக்கிறவர்கள் கர்த்தரை இடைவிடாமல் எப்போதும் துதித்துக் கொண்டேயிருப்பார்கள்.

2. தேவனிடத்தில் ஜெபிக்கிறவன்

சங் 84:5 உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.

சங் 84:6 அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும்.

சங் 84:7 அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்.

சங் 84:8 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்; யாக்கோபின் தேவனே, செவிகொடும். (சேலா.)

சங் 84:9 எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும்; நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகத்தைப் பாரும்.

சங் 84:10 ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்.

“உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷன்” - இந்த வாக்கியம் லேவியரையும், ஆசாரியரையும் மட்டும் என்று குறிப்பிடாமல் தேவனுடைய பிள்ளைகள் எல்லோரையும் குறிக்கும்.

“செவ்வையான வழிகள்” - கர்த்தருடைய வழிகள் செவ்வையானவை. செவ்வையான வழிகளை மனுஷன் கைக்கொள்ள வேண்டும். அவனே பாக்கியவானாக இருப்பான்.

84 அதிகாரம்

"அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீருற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்" - அழுகையின் பள்ளத்தாக்கு என்பது போகீமைக் குறிக்கும். போகீம் (Bochim) அழுகையின் இடம். (நியா 2:1-5) தேவனுடைய சமூகத்தில் கண்ணீரோடு அவரைத் தேடுகிறவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய ஊற்றுத் தண்ணீரினால் தாகம்தீர்க்கப் படுவார்கள். அத்தோடு ஆவிக்குரிய தண்ணீரின் குளத்திலே மூழ்கி தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். (ஏசா 43:2; ஏசா 44:3; சக 10:1)

"அவர்கள் பலத்தின்மேல் பலம்அடைவார்கள்" - தேவனுடைய சமூகத்தில் அழுது ஜெபிக்கிறவர்கள் தேவனுடைய பலனை அதிகமாகப் பெற்றுக் கொள்வார்கள்.

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. என் விண்ணப்பத்தைக் கேளும்
2. யாக்கோபின் தேவனே, செவிகொடும்
3. நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகத்தைப் பாரும் (சங் 84:9)

"யாக்கோபின் தேவனே"- இந்த வசனத்தில் கர்த்தர் "இஸ்ரவேலின் தேவன்" என்று அழைக்கப்படாமல் யாக்கோபின் தேவன் என்று அழைக்கப்படுகிறார். யாக்கோபிடத்தில் ஒன்றுமில்லாமல் இருந்தபோது, தேவன் அவனைச் சந்தித்து, அவனுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணினார். யாக்கோபு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவனாக இருந்தபோதிலும், தேவன் தமது கிருபையினால் அவனை ஆசீர்வதிக்க விரும்பினார். ஆகையினால் "யாக்கோபின் தேவன்" என்பது "கிருபையுள்ள தேவன்" என்று பொருள்படும். தேவன் பட்சபாதம் இல்லாதவர். யாக்கோபிற்கு தம்மை கிருபையுள்ளவராக வெளிப் படுத்தியதுபோன்று, தம்முடைய பிள்ளைகள் எல்லோருக்கும் கர்த்தர் அப்படியே தம்மை வெளிப்படுத்த வேண்டுமென்று சங்கீதக்காரன் கூறுகிறான் (எபி 11:6; யாக் 1:5-8).

"நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகம்" - இந்த வசனம் மேசியாவின் முகத்தைக் குறிக்கும். தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக இருக்கிறவர் இயேசு கிறிஸ்து ஒருவரே (1தீமோ 2:5).

"ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" - என்று தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தேவனுடைய சமூகத்தில் முழு மனதோடும், முழு பலத்தோடும், தன் முழு ஆத்துமாவோடும் அறிக்கை பண்ண வேண்டும். (எபி 12:14)

3. தேவனை நம்பியிருக்கிறவன்

> சங் 84:11 தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.
>
> சங் 84:12 சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

"தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்" - சூரியன் ஒளியைத் தருகிறது. உஷ்ணப்படுத்துகிறது. ஜீவனைப் பாதுகாக்கிறது. கேடகம் தன்னைப் பிடித்திருக்கிறவனைப் பாதுகாக்கும். அதுபோலவே கர்த்தரையே நம்பியிருக்கிறவர்களை அவர் கேடகம் காப்பது போன்று பாதுகாப்பார்.

"கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்" - ஆம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு இவ்விரண்டு காரியங்களையும் கொடுப்பார். ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. (ரோமர் 8:29-30) கிருபை ஒரு செடியைப் போன்றது. மகிமை அந்த செடியிலிருந்து வெளிவரும் கனிக்கு ஒப்பானது.

சங்கீதம் - தொகுப்புரை

84 அதிகாரம்

“உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு கர்த்தர் நன்மையை வழங்குவார்” - தேவன் தம்முடைய பிள்ளைகளின் தேவையைச் சந்திப்பார். ஆசைகளை திருப்தியாக்குவார். ஆசைகள் என்பது நல்ல ஆசைகளாக மட்டுமே இருக்க வேண்டும். நமது தீய ஆசைகளை தேவன் நிறைவேற்றமாட்டார் (சங் 34:9).

85 அதிகாரம்

(கோராகின் புத்திரரிலுள்ள இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.)

இரண்டாவது ஜெப சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய ஆறு கிரியைகள் - (85:1-3)
2. எழுப்புதலுக்காக ஏழு விண்ணப்பங்கள் - (85:4-7)
3. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் எட்டு அம்சங்கள் - (85:8-13)

1. தேவனுடைய ஆறு கிரியைகள்

சங் 85:1 கர்த்தாவே, உமது தேசத்தின் மேல் பிரியம் வைத்து, யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர்.

சங் 85:2 உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர். (சேலா.)

சங் 85:3 உமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, உமது கோபத்தின் எரிச்சலைவிட்டுத் திரும்பினீர்.

தேவன் செய்துள்ள காரியங்கள்

1. தம்முடைய தேசத்தின் மேல் பிரியமாயிருக்கிறார் (சங் 85:1).
2. யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினார்.
3. ஜனங்களின் அக்கிரமங்களை மன்னித்தார் (சங் 85:2).
4. அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினார்.
5. தமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டார் (சங் 85:3).
6. தமது கோபத்தின் எரிச்சலைவிட்டுத் திரும்பினார்.

"யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர்" - இந்த வசனம் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வருவதைக் குறிக்காது. தாவீதின் குமாரனாகிய அப்சலோம் தாவீதிற்கு விரோதமாக கலகம் பண்ணினான். தாவீது இந்த கஷ்டமான காலங்களில் கர்த்தரையே நம்பியிருந்தான். கர்த்தர் தாவீதைக் கைவிடவில்லை. தாவீது இழந்ததையெல்லாம் கர்த்தர் மறுபடியும் அவனுக்கு மீட்டுக் கொடுத்தார் (சங் 126:1; யோபு 42:10).

2. எழுப்புதலுக்காக ஏழு விண்ணப்பங்கள்

சங் 85:4 எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், எங்கள்மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும்.

சங் 85:5 என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ? தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப்பண்ணுவீரோ?

சங் 85:6 உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?

சங் 85:7 கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

"எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும்" - ஆண்டவரே, எங்களை இரட்சியும்.

"நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?" - இந்த வசனத்தில் "திரும்ப" என்னும் சொல் தேவன் அவர்களை ஏற்கெனவே உயிர்ப்பித்தார் என்பதை விளக்குகிறது. மறுபடியும் உயிர்ப்பிப்பது என்பது இன்னும் ஒரு விசை எங்களை உயிர்ப்பியும் என்று பொருள்படும் (கலா 4:19).

85 அதிகாரம்

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. எங்களைத் திருப்பிக் கொண்டு வாரும் *(சங் 85:4)*.
2. எங்கள் மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும்.
3. என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் *(சங் 85:5)*.
4. தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடிக்கப் பண்ணாதிரும்.
5. எங்களைத் திரும்ப உயிர்ப்பியும் *(சங் 85:6; கலா 4:19)*.
6. உமது கிருபையை எங்களுக்குக் காண்பியும் *(சங் 85:7)*.
7. உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும்.

3. தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையின் எட்டு அம்சங்கள்

சங் 85:8 கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக.

சங் 85:9 நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.

சங் 85:10 கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.

சங் 85:11 சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும், நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்.

சங் 85:12 கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.

சங் 85:13 நீதி அவருக்கு முன்னாகச் சென்று, அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும்.

"கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்" - சங்கீதக்காரன் ஒரு தீர்க்கதரிசியைப் போன்று செயல்படுகிறான். அவன் தேவனிடத்தில் கேட்டு பெற்றுக் கொண்ட காரியங்களை மனுஷருக்கு அறிவிக்கிறான். கர்த்தர் கூறும் காரியம் பரிசுத்தவான்களுக்கு சமாதானமாக இருக்கும்.

"அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக" - இந்த சங்கீதம் அப்சலோமின் கலகம் அடக்கப்பட்ட பின்பு எழுதப்பட்டது. தாவீதிற்குக்கீழ் உள்ள ஜனங்கள் அவனுக்கு எதிராக மறுபடியும் கலகம் பண்ணக்கூடாது.

"மதிகேட்டுக்குத் திரும்புதல்" - ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின்பு மறுபடியும் பாவம் செய்து கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போவதை இந்த வாக்கியம் குறிக்கும். *(கலா 4:19)*

தீர்க்கதரிசன எண் - 66

"நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாய் இருக்கிறது" *(சங் 85:9-13)* - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

ஆயிர வருஷ அரசாட்சியைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

1. கர்த்தருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது *(சங் 85:9; ஏசா 11:9; ஏசா 52:7)*.
2. தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும் *(சங் 85:9; ஏசா 4:5; ஏசா 60:1-2, 19; ஏசா 62:2)*
3. கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் *(சங் 85:10)*.

85 அதிகாரம்

4. நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும் (சங் 85:10; ஏசா 2:2-4; ஏசா 11:4-9).

5. சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும் (சங் 85:11; ஏசா 2:3; ஏசா 11:9; ஏசா 52:7; சக 8:23).

6. நீதி வானத்திலிருந்து தாழப்பறக்கும் (சங் 85:11; ஏசா 11:4-9).

7. கர்த்தர் நன்மையானதைத் தருவார் (சங் 85:12; ஏசா 35; ஏசா 65:20-25; மீகா 4)

8. தேசம் தன் பலனைக் கொடுக்கும் (சங் 85:12; ஏசா 35; ஏசா 65:20-25)

9. நீதி அவருக்கு முன்னாகச் செல்லும் (சங் 85:13; ஏசா 11:4-9; மீகா 4)

10. அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்துவார் (சங் 85:13; ஏசா 2:2-4)

"கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்" - இந்த வசனம் தேவனுடைய நான்கு குணாதிசயங்களைக் கூறுகிறது. அவை கிருபை, சத்தியம், நீதி, சமாதானம் என்பவையாகும் (சங் 85:10-11). சத்தியம் தேவனுடைய சித்தத்தை அறிவிக்கும். நீதி சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று கூறும். கிருபை மனுஷனுடைய பாவங்களை மன்னிக்கும். இதன் மூலமாக பாவியாக இருந்த மனுஷனுக்கு இப்போது சமாதானம் வருகிறது. மனுஷனுடைய ஆத்துமாவில் சமாதானமும், நீதியும் ஒன்றையொன்று சந்திக்கும்போது அவை ஒன்றையொன்று முத்தஞ்செய்யும் (சங் 85:10-11). கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு இரட்சிப்பைக் கொடுப்பதற்காக தேவனுடைய இந்த நான்கு குணாதிசயங்களும் ஒன்றோடொன்று இணைந்து கிரியை நடப்பிக்கும்(சங் 85:9).

சத்தியத்தைக்குறித்த காரியங்கள்

சத்தியத்தோடு உடன்வருபவை

1. கிருபையும் உண்மையும் (mercy and truth) (2சாமு 15:20; சங் 25:10; சங் 57:3; சங் 61:7; சங் 85:10; சங் 86:15; சங் 89:14; சங் 98:3; சங் 115:1; நீதி 3:3; நீதி 16:6; நீதி 20:28; ஓசி 4:1)

2. கிருபையும் உண்மையும் (kindness and truth) (2சாமு 2:6)

3. உத்தமமும் உண்மையும் (யோசு 24:14; 1கொரி 5:8)

4. நீதியும் உண்மையும் (2நாளா 31:20; சக 8:8; எபே 5:9)

5. சமாதானமும் உண்மையும் (2இராஜா 20:19; எஸ் 9:30; ஏசா 38:3; எரே 33:6; சக 8:19)

6. சாந்தமும் சத்தியமும் (சங் 45:4)

7. சத்தியமும் அன்பும் (சக 8:19; 2யோவான் 1:3)

8. வெளிச்சமும் சத்தியமும் (சங் 43:3)

9. தயையும் சத்தியமும் (யாத் 34:6; எபே 5:9)

10. உண்மையும் செம்மையும் (சங் 111:8)

11. சத்தியமும் உறுதியும் (ஏசா 25:1)

12. சத்தியமும் சமாதானமும் (நியாயம்) (சக 8:16)

13. சத்தியமும் சொஸ்தபுத்தியும் (அப் 26:25)

14. கிருபையும் சத்தியமும் (யோவான்1:14-17)

15. சத்தியமும் ஜீவனும் (யோவான் 14:6)

16. ஆவியும் உண்மையும் (யோவான் 4:23-24)

சங்கீதம் - தொகுப்புரை

85 அதிகாரம்

சத்தியமான காரியங்கள்

1. கர்த்தர் (உபா 32:4; ஏசா 65:16)
2. கிறிஸ்து (யோவான் 14:6)
3. பரிசுத்த ஆவியானவர் (1யோவான் 5:6)
4. வேதவாக்கியம் (தானி 10:21)
5. தேவவசனம் (யோவான் 17:17; 1தெச 2:13)
6. சுவிசேஷம் (கலா 2:5,14)
7. கர்த்தருடைய பிரமாணம் (சங் 119:142)
8. கற்பனைகள் (சங் 119:151)
9. கர்த்தரின் உடன்படிக்கைகள் (மீகா 7:20)
10. சபை (1தீமோ 3:15)

சத்தியத்தின் ஆசீர்வாதங்கள்

1. பரிசையும் கேடகமும் (சங் 91:4)
2. பாவத்திலிருந்து விடுதலை (யோவான் 8:32-36)
3. பரிசுத்தமாகுதல் (யோவான் 17:17,19)
4. இரட்சிப்பு (எபே 1:13; 2தெச 2:13)
5. பெலன், ஸ்திரத்தன்மை (எபே 6:14)
6. புதுப்பிறப்பு (யாக் 1:18; 1பேதுரு 1:23)
7. ஆத்துமாவைச் சுத்தப்படுத்துதல் (1பேதுரு 1:22)
8. காத்தல் (சங் 40:11; நீதி 20:28)
9. வளர்ச்சி (எபே 4:15)
10. அறிவு (1தீமோ 2:4; 2தீமோ 3:7; எபி 10:26)

86 அதிகாரம்

(தாவீதின் விண்ணப்பம்.)

எட்டாவது துதித்து ஜெபிக்கும் சங்கீதம்

பொருளடக்கம்

1. எட்டு விண்ணப்பங்கள் - எட்டு காரணங்கள் - (86:1-7)
2. துதி - தேவன் ஒப்பிடப்படமுடியாதவர் - (86:8-10)
3. இரண்டு விண்ணப்பங்கள் - இரண்டு காரணங்கள் - (86:11)
4. துதி - ஜெபத்திற்கு இரண்டு பதில்கள் - (86:12-13)
5. ஐந்து விண்ணப்பங்கள் - ஐந்து காரணங்கள் - (86:14-17)

1. எட்டு விண்ணப்பங்கள் - எட்டு காரணங்கள்

சங் 86:1 கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; நான் சிறுமையும் எளிமையுமானவன்.

சங் 86:2 என் ஆத்துமாவைக் காத்தருளும், நான் பயபக்தியுள்ளவன்; என் தேவனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியேனை நீர் இரட்சியும்.

சங் 86:3 ஆண்டவரே, எனக்கு இரங்கும், நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

சங் 86:4 உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும்; ஆண்டவரே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

சங் 86:5 ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்.

சங் 86:6 கர்த்தாவே, என் ஜெபத்திற்குச் செவிகொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்.

சங் 86:7 நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; நீர் என்னைக் கேட்டருளுவீர்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. கர்த்தாவே, உமது செவியைச் சாயும் (சங் 86:1)
2. என் விண்ணப்பத்தைக் கேளும்
3. என் ஆத்துமாவைக் காத்தருளும் (சங் 86:2)
4. உமது அடியேனை நீர் இரட்சியும்
5. ஆண்டவரே, எனக்கு இரங்கும் (சங் 86:3)
6. அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும் (சங் 86:4)
7. என் ஜெபத்திற்குச் செவிகொடும் (சங் 86:6)
8. என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்
9. உமது வழியை எனக்குப் போதியும் (சங் 86:11)
10. என்மேல் நோக்கமாயிரும் (சங் 86:16)
11. என்மேல் கிருபையாயிரும்
12. உமது வல்லமையை உமது அடியானுக்கு அருளும்
13. உமது அடியாளின் குமாரனை இரட்சியும்
14. எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும் (சங் 86:17)

சங்கீதம் – தொகுப்புரை

86 அதிகாரம்

தேவன் விண்ணப்பத்திற்குப் பதில் கொடுக்க வேண்டும் என்பதற்கு காரணங்கள்

1. நான் சிறுமையும் எளிமையுமானவன் (சங் 86:1)
2. நான் பக்தியுள்ளவன் (சங் 86:2)
3. உம்மை நம்பியிருக்கிறேன்
4. நாடோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் (சங் 86:3)
5. உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன் (சங் 86:4)
6. நீர் நல்லவர் (சங் 86:5)
7. நீர் மன்னிக்கிறவர்
8. உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்
9. நான் துயரப்படுகிற நாளில் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன் (சங் 86:7)
10. நீர் என்னைக் கேட்டருளும்
11. ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை (சங் 86:8)
12. உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை
13. நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் உம்மைத் துதிப்பார்கள் (சங் 86:9)
14. உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்
15. தேவரீர் மகத்துவமுள்ளவர் (சங் 86:10)
16. அதிசயங்களைச் செய்கிறவர்
17. நீர் ஒருவரே தேவன்
18. நான் உமது சத்தியத்திலே நடப்பேன் (சங் 86:11)
19. நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்
20. உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன் (சங் 86:12)
21. உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்
22. நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது (சங் 86:13)
23. என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்
24. தேவனே, அகங்காரிகள் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள் (சங் 86:14)
25. கொடுமைக்காரராகிய கூட்டத்தார் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்
26. உம்மைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்காதிருக்கிறார்கள்
27. நீர் மனவுருக்கமானவர் (சங் 86:15)
28. நீர் இரக்கம் கொண்டவர்
29. நீடிய பொறுமையானவர்
30. பூரண கிருபையுள்ளவ தேவன்
31. நீர் சத்தியமுமுள்ள தேவன்
32. என்னைத் தேற்றுகிறதை என் பகைஞர் கண்டு வெட்கப்படும்படிச் செய்யும் (சங் 86:17)
33. எனக்குத் துணை செய்யும்
34. என்னைத் தேற்றும்

"நான் பக்தியுள்ளவன்" (I am holy) என்று அறிக்கையிட்ட இருவர்

1. தேவன் (லேவி 19:2; லேவி 20:7,26; லேவி 21:8)
2. தாவீது (சங் 86:2)

86 அதிகாரம்

2. துதி - தேவன் ஒப்பிடப்படமுடியாதவர்

சங் 86:8 ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை; உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை.

சங் 86:9 ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்.

சங் 86:10 தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாய் இருக்கிறீர்; நீர் ஒருவரே தேவன்.

தேவர்கள் (gods) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெசொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்.

எலோஹிம் என்னும் சொல் 213 தடவைகள் "தேவர்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது (சங் 82:1; யாத் 21:6; யாத் 22:8-9).

தீர்க்கதரிசன எண் - 67

"ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்" (சங் 86:9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியிலும் (ஏசா 2:2-4; சக 14:16-21) புதிய பூமியிலும் (ஏசா 66:22-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

3. இரண்டு விண்ணப்பங்கள் - இரண்டு காரணங்கள்

சங் 86:11 கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.

4. துதி - ஜெபத்திற்கு இரண்டு பதில்கள்

சங் 86:12 என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்.

சங் 86:13 நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்.

தீர்க்கதரிசன எண் - 68

"என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்........" (சங் 86:12-13) - சங் 86:12 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. சங் 86:13 இந்தத் தீர்க்கதரிசனம் தாவீதில் நிறைவேறிற்று.

தாழ்ந்த (lowest) - תַּחְתִּי - takh-tee' - 8482

பெயரடை - கீழ், அடிவாரம், தாழ்ந்த, கீழ்ப்புறமான, தாதீம், பள்ளமான, அடி, தாழ்வான, ஆழமான - மிகவும் ஆழமான பகுதி. பேழையின் தாழ்ந்த தளம் (ஆதி 6:16), சீயோலின் ஆழமான பகுதி (உபா 32:22; சங் 86:13), பூமியின் ஆழமான பகுதி (எசே 31:14-18; எசே 32:18,24), பூமியின் தாழ்வான பகுதி (எபே 4:8-10), பூமியின் மையப்பகுதி (மத் 12:40)

5. ஐந்து விண்ணப்பங்கள் - ஐந்து காரணங்கள்

சங் 86:14 தேவனே, அகங்காரிகள் எனக்கு விரோதமாய் எழும்புகிறார்கள், கொடுமைக்காரராகிய கூட்டத்தார் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள், உம்மைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்காதிருக்கிறார்கள்.

சங்கீதம் – தொகுப்புரை

86 அதிகாரம்

சங் 86:15 ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்.

சங் 86:16 என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்; உமது வல்லமையை உமது அடியானுக்கு அருளி, உமது அடியாளின் குமாரனை இரட்சியும்.

சங் 86:17 கர்த்தாவே, நீர் எனக்குத் துணைசெய்து என்னைத் தேற்றுகிறதை என் பகைஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு, எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும்.

தேவனுடைய குணாதிசயங்கள்

1. மனஉருக்கம் உடையவர் (சங் 86:15; சங் 78:38; சங் 111:4; சங் 112:4; சங் 145:8; மத் 9:36; மத் 14:14; மத் 15:32; மத் 20:34)
2. கிருபையுள்ளவர் (சங் 86:15; சங் 103:8; சங் 111:4; சங் 112:4; சங் 116:5; சங் 145:8; யாத் 22:27; யாத் 33:19; யாத் 34:6; 2நாளா 30:9; நெகே 9:17,31; யோவே 2:13)
3. நீடிய பொறுமையுடையவர் (சங் 86:15; யாத் 34:6; எண் 14:18; ரோமர் 2:4; ரோமர் 9:22; கலா 5:22)
4. பூரண கிருபையுள்ளவர் (சங் 86:15; சங் 103:11; சங் 119:64; சங் 145:8; யாத் 20:6; யாத் 34:7)
5. சத்தியமுள்ளவர் (சங் 85:10)

87 அதிகாரம்

(கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட பாட்டாகிய சங்கீதம்.)

சீயோனின் முதலாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவன் சீயோனில் பிரியமாயிருக்கிறார் - (87:1-3)
2. சீயோனின் மகிமை - ஆசீர்வாதங்களின் ஆதாரம் - (87:4-7)

1. தேவன் சீயோனில் பிரியமாயிருக்கிறார்

சங் 87:1 அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது.

சங் 87:2 கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்க ளெல்லாவற்றைப் பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார்.

சங் 87:3 தேவனுடைய நகரமே! உன்னைக் குறித்து மகிமையான விசேஷங்கள் வசனிக்கப்படும். (சேலா)

"அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது" - தேவனுடைய அஸ்திபாரம் சீயோன் பர்வதத்திலும், மோரியா மலையிலும் போடப்பட்டிருக்கிறது (சங் 87:1-2).

"கர்த்தர் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார்" - இஸ்ரவேலில் தமது பிரதான வாசஸ்தலமாக கர்த்தர் சீயோனைத் தெரிந்தெடுத்திருக்கிறார். அவர் அதை நேசிக்கிறார் (சங் 87:2; சங் 2:6; சங் 9:11; சங் 48:2; சங் 50:2; சங் 78:68; ஏசா 8:18).

சீயோனைப் பற்றிக் கூறப்படும் மகிமையான விசேஷங்கள்

1. தாவீதின் நகரம் (1இராஜா 8:1)
2. மேசியாவின் ஆளுகை செய்யும் ஸ்தலம் (சங் 2:6; சங் 69:35; சங் 146:10; ஏசா 4; ஏசா 24:23; ஏசா 52:7; மீகா 4:7)
3. கர்த்தர் வாசம் செய்கிற இடம் (சங் 9:11; சங் 76:2; ஏசா 8:18)
4. சீயோனிலிருந்து இரட்சிப்பு வரும் (சங் 14:7 ; ஏசா 46:13; ஏசா 59:20)
5. சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானம் (சங் 48:2)
6. பூரண வடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார் (சங் 50:2)
7. தமக்கு பிரியமான சீயோன் பர்வதத்தைத் தெரிந்து கொண்டார் (சங் 78:68; சங் 87:2)
8. கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுத்துவார் (சங் 102:16)
9. என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதம் (சங் 125:1)
10. கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொண்டார் (சங் 132:13; சங் 133:3; ஏசா 14:32)
11. சீயோன் நியாயத்தினால் மீட்கப்படும் (ஏசா 1:27; ஏசா 31:4)
12. கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப் படும். சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் (ஏசா 2:2-4; யோவே 3:17-21)
13. சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவுவார் (ஏசா 4:3)
14. கிறிஸ்துவின் வருகையின்போது சீயோனில் தேவனுடைய மகிமை வெளிப்படும் (ஏசா 4:4-5)
15. ஆயிர வருஷ அரசாட்சியில் ஆராதனை நடைபெறும் மைய ஸ்தலம் (ஏசா 35:10; ஏசா 51:11)

சங்கீதம் – தொகுப்புரை

87 அதிகாரம்

16. ஆயிர வருஷ அரசாட்சியில் சுவிசேஷ மைய அலுவலகம் உள்ள ஸ்தலம் (ஏசா 2:2-4; ஏசா 52:7)

17. கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொள்வார் (ஏசா 51:3-16; சக 1:17; சக 8:3)

18. கிறிஸ்து பூமியின்மீது வந்து இறங்கும் இடம் (ஏசா 59:20; யோவே 3:16; சக 14:4)

19. சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர் களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும் (ஏசா 66:7-8; யோவே 2:32)

20. இஸ்ரவேல் ஜனங்களை சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வருவார் (எரே 3:14; எரே 31:6; எரே 50:5)

21. அந்திக்கிறிஸ்துவை, சீயோன் அடக்கும் (சக 9:13; சக 14:14)

2. சீயோனின் மகிமை - ஆசீர்வாதங்களின் ஆதாரம்

சங் 87:4 என்னை அறிந்தவர்களுக்குள்ளே ராகாபையும், பாபிலோனையும் குறித்துப் பேசுவேன்; இதோ, பெலிஸ்தியரிலும், தீரியரிலும், எத்தியோப்பியரிலுங்கூட, இன்னான் அங்கே பிறந்தான் என்றும்;

சங் 87:5 சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்; உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார்.

சங் 87:6 கர்த்தர் ஜனங்களைப் பேரெழுதும்போது, இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார். (சேலா)

சங் 87:7 எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது என்று பாடுவாரும் ஆடுவாரும் ஏகமாய்ச் சொல்லுவார்கள்.

"ராகாப்" என்பது எகிப்தின் சங்கீதப்பெயர். பெருமை என்பது இதன் பொருள். (சங் 89:10; ஏசா 51:9) ராகாப் என்னும் வேசியைக் குறிப்பதற்கு இதே சொல்லே பயன்படுத்தப் பட்டிருக்கிறது (யோசு 2:1-3; யோசு 6:17,23-25).

தீர்க்கதரிசன எண் - 69

"சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்; உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார்............" (சங் 87:5-7) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியில் மனுஷர் மத்தியிலே சீயோன் கிறிஸ்துவின் தலைநகரமாக உயர்த்தப்படும் போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (சங் 2:6; சங் 69:35; சங் 146:10; ஏசா 4; ஏசா 24:23; ஏசா 52:7)

"எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது" - பூமியில் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திற்கு சீயோன் ஆவிக்குரிய தலைநகரமாக இருக்கும். எல்லா ஆசீர்வாதங்களும் சீயோனிலிருந்தே புறப்பட்டு வரும் (ஏசா 2:2-4).

88 அதிகாரம்

(மகலாத்லேயனோத் வாத்தியத்தில் வாசிக்க, கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட எஸ்ராகியனாகிய ஏமானின் போதக சங்கீதம்.)

பதினெட்டாவது போதக சங்கீதம் - வேதனைகளைப் பற்றி உபதேசம்

பொருளடக்கம்

1. இரண்டு விண்ணப்பங்கள் - தனிப்பட்ட வேதனையின் இருபத்தொரு அம்சங்கள் - (88:1-9)
2. வேதனையைப்பற்றி எட்டு கேள்விகள் - (88:10-14)
3. தனிப்பட்ட வேதனையைப்பற்றி எட்டு அம்சங்கள் - (88:15-18)

1. இரண்டு விண்ணப்பங்கள் - தனிப்பட்ட வேதனையின் இருபத்தொரு அம்சங்கள் - (சங் 5:7; 28:1; 30:10; 38:1; 39:4; 41:4,10; 55:9,15; 56:1)

சங் 88:1 என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே, இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

சங் 88:2 என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவதாக; என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்.

சங் 88:3 என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது; என் ஜீவன் பாதாளத்திற்குச் சமீபமாய் வந்திருக்கிறது.

சங் 88:4 நான் குழியில் இறங்குகிறவர்களோடு எண்ணப்பட்டு, பெலனற்ற மனுஷனைப்போலானேன்.

சங் 88:5 மரித்தவர்களில் ஒருவனைப் போல் நெகிழப்பட்டிருக்கிறேன்; நீர் இனி ஒருபோதும் நினையாதபடி, உமது கையால் அறுப்புண்டுபோய்ப் பிரேதக் குழிகளிலே கிடக்கிறவர்களைப் போலானேன்.

சங் 88:6 என்னைப் பாதாளக்குழியிலும் இருளிலும் ஆழங்களிலும் வைத்தீர்.

சங் 88:7 உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது; உம்முடைய அலைகள் எல்லாவற்றினாலும் என்னை வருத்தப்படுத்துகிறீர். (சேலா.)

சங் 88:8 எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத் தூரமாக விலக்கி, அவர்களுக்கு என்னை அருவருப்பாக்கினீர்; நான் வெளியே புறப்படக்கூடாதபடி அடைபட்டிருக்கிறேன்.

சங் 88:9 துக்கத்தினால் என் கண் தொய்ந்து போயிற்று; கர்த்தாவே, அநுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்.

மகலாத் என்பது ஒரு வாத்தியத்தையோ அல்லது துயரகீதம், வியாதியின் கீதம், துன்பத்தின் கீதம், சோகராகத்தையோ குறிக்கும்.

சங்கீதக்காரனின் துயரங்கள்

1. இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்
2. என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவதாக (சங் 88:2).
3. என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்.
4. என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது (சங் 88:3).
5. என் ஜீவன் பாதாளத்திற்குச் சமீபமாய் வந்திருக்கிறது.
6. நான் குழியில் இறங்குகிறவர்களோடு எண்ணப்பட்டேன் (சங் 88:4).

88 அதிகாரம்

7. பெலனற்ற மனுஷனைப் போலானேன்

8. மரித்தவர்களில் ஒருவனைப்போல் நெகிழப்பட்டிருக்கிறேன் *(சங் 88:5).*

9. நீர் இனி ஒருபோதும் நினையாத படியானேன்

10. உமது கையால் அறுப்புண்டு போய்ப் பிரேதக் குழிகளிலே கிடக்கிறவர்களைப் போலானேன்.

11. என்னைப் பாதாளக் குழியில் வைத்தீர் *(சங் 88:6).*

12. நான் இருளில் இருக்கிறேன்.

13. நான் ஆழங்களில் இருக்கிறேன்.

14. உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது *(சங் 88:7).*

15. உம்முடைய அலைகள் எல்லாவற்றினாலும் என்னை வருத்தப்படுத்துகிறீர்.

16. எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு தூரமாக விலகினார்கள் *(சங் 88:8).*

17. அவர்கள் என்னை அருவருப்பாக்கி வெறுக்கிறார்கள்.

18. நான் வெளியே புறப்படக்கூடாதபடி அடைபட்டிருக்கிறேன்.

19. துக்கத்தினால் என் கண் தொய்ந்து போயிற்று *(சங் 88:9).*

20. அநுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

21. உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்.

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. என் விண்ணப்பம் உமது சமுகத்தில் வருவதாக

2. என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்

"துக்கம்" - பாடுகளினாலும், துயரங்களினாலும் வரும் துக்கம். வியாதியினால் வரும் துக்கம் என்று பொருள் கூறஇயலாது. *(சங் 88:3,7,9)*

பாதாளம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம் - ஆத்துமாக்களும், ஆவிகளும் இருக்குமிடம்

"மரித்தவர்களில் ஒருவனைப்போல்" - சங் 88:4-5 ஒரு யுத்த களத்தை வர்ணிக்கிறது. மரித்தவர்களில் ஒருவனைப்போல என்பது யுத்த களத்தில் சங்காரம் பண்ணப்பட்டு மரித்துப் போனவர்களில் ஒருவனைப்போல என்று பொருள்படும்.

பிரேதக்குழி (grave) קֶבֶר - keh'-ber, kib-raw' - 6913

ஆண்பால் பெயர்ச்சொல் - கல்லறை, குகை, பிரேதக்குழி, புதைக்கிற ஸ்தானம் - பூமியில் இறந்த சரீரங்களை அடக்கம் பண்ணும் பிரேதக்குழி அல்லது கல்லறை என்று பொருள்படும்.

"நீர் இனி ஒருபோதும் நினையாதபடி" - பிரேதக்குழியில் மரித்த சரீரம் மறுபடியும் மண்ணுக்குத் திரும்புகிறது. மரித்த சரீரத்தில் இருக்கும் காரியங்களைத் தேவன் நினைவுகூருவதில்லை. உயிர்த்தெழுதலின் போது உயிர்த்தெழுந்த சரீரம் தண்டிக்கப்படவேண்டுமா அல்லது வெகுமதியைப் பெறவேண்டுமா என்பதைத் தேவன் நினைத்துப் பார்ப்பார். *(தானி 12:2; மத் 25:46; யோவான் 5:28-29; வெளி. 20:4-6,11-15)* சரீரம் மரித்தபின்பு அதே சரீரம் உயிர்த்தெழுவதில்லை. *(யோபு 14:12)* உயிர்த்தெழுதலின்போது ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் புதிய சரீரத்தைக் கொடுப்பார். *(1கொரி 15:35-54; 2கொரி 5:1-8; பிலி 3:21)*

"அவர்கள் உமது கையால் அறுப்புண்டு போனார்கள்" - இவர்கள் தேவனுடைய கரத்தினால் சங்காரம்பண்ணப்பட்டு மரித்த சரீரமானவர்கள். தேவனுடைய பாதுகாப்பை இழந்தவர்கள்.

88 அதிகாரம்

"என்னைப் பாதாளக்குழியிலும் இருளிலும் ஆழங்களிலும் வைத்தீர்" - சங்கீதக்காரன் தான் ஏற்கெனவே மரித்துவிட்டதுபோன்று முறையிடுகிறான். தன்னுடைய சரீரம் பாதாளத்தில் இருப்பதாக உணருகிறான். (சங் 88:6-9) தன்னுடைய வேதனைக்கு தேவனே காரணம் என்று சங்கீதக்காரன் தேவனைக் குற்றப்படுத்துகிறான். மனுக்குலத்தில் அநேகர் இப்படித்தான் நினைக்கிறார்கள். ஆனால் சாத்தானாலும், அவனால் மனுக்குலத்திற்கு வந்த பாவத்தினாலுமே மனுஷர் பாடுகளை அனுபவிக்கிறார்கள். தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்பட வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும். (மத் 6:10) இந்த பூமியில் சாபங்கள் அகற்றப்படும்போது இது நிறைவேறும். (வெளி 21:3-7) சாபங்களுக்குத் தேவன் காரணமல்ல. மனுஷனுடைய கலகமும், பாவமும்தான் காரணம். மனுஷன் தான் விதைத்ததை அறுக்கிறான். இது தேவனுடைய பிரமாணம்.

"உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது" - மனுஷன் தேவனால் சபிக்கப்பட்டிருப்பான் என்றால் அவன் மனப்பூர்வமாக பாவம் செய்தவனாக இருப்பான். இதுவே விதைப்பதும், அறுப்பதும் என்னும் பிரமாணம். (கலா 6:7-8) இந்த சங்கீதக்காரன் நீதிமானாக இருப்பான் என்றால் அவன் யோபுவைப் போல தேவனை தவறாகக் குறை கூறுகிறவன். தன்னைத் தேவன் துன்புறுத்துவதாக யோபு குறை கூறினான். ஆனால் உண்மையில் யோபுவைத் தேவன் துன்புறுத்தவில்லை. சாத்தானே துன்புறுத்தினான். (யோபு 1:11-12; யோபு 2:1-6; யோபு 42:10)

தேவனுடைய கிரியைகள் என்று சங்கீதக்காரன் கூறும் காரியங்கள்

1. நீர் இனி ஒருபோதும் நினையாதபடி, மரித்தவர்களில் ஒருவனைப் போல் நெகிழப்பட்டிருக்கிறேன் (சங் 88:5)
2. உமது கையால் அறுப்புண்டுபோய்ப் பிரேதக் குழிகளிலே கிடக்கிறவனைப் போலாக்கினீர்.
3. என்னைப் பாதாளக் குழியிலும் இருளிலும் ஆழங்களிலும் வைத்தீர் (சங் 88:6).
4. உம்முடைய கோபம் என்னை இருத்துகிறது (சங் 88:7,16).
5. உம்முடைய எரிச்சல்கள் என்மேல் புரண்டுபோகிறது.
6. எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத் தூரமாக விலக்கினீர் (சங் 88:8,18).
7. அவர்கள், என்னை அருவருப்பாக்கி வெறுக்கும்படிச்செய்தீர்.
8. என் ஆத்துமாவைத் தள்ளிவிடுகிறீர் (சங் 88:14).
9. உம்முடைய முகத்தை எனக்கு மறைக்கிறீர்.
10. உம்முடைய பயங்கரங்கள் என்னை அதம் பண்ணுகிறது (சங் 88:16)

இந்தக் கிரியைகள் அனைத்தும் தேவனுடையவை என்று கூறமுடியாது. ஏனெனில் மனுஷனுடைய எல்லா பாடுகளுக்கும் மரணத்திற்கும் தேவனே பொறுப்பு என்று கூறக்கூடாது.

2. வேதனையைப்பற்றி எட்டு கேள்விகள்

சங் 88:10 மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ? செத்துப் போனவீரர் எழுந்து உம்மைத் துதிப்பார்களோ? (சேலா.)

சங் 88:11 பிரேதக்குழியில் உமது கிருபையும், அழிவில் உமது உண்மையும் விவரிக்கப்படுமோ?

சங் 88:12 இருளில் உமது அதிசயங்களும், மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ?

சங் 88:13 நானோ கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; காலையிலே என் விண்ணப்பம் உமக்குமுன்பாக வரும்.

88 அதிகாரம்

சங் 88:14 கர்த்தாவே, ஏன் என் ஆத்துமாவைத் தள்ளிவிடுகிறீர்? ஏன் உமது முகத்தை எனக்கு மறைக்கிறீர்?

மரித்தல் (dead) - מות - mooth - 4191

வினைச்சொல் - சரீரத்தில் மரித்துப் போதல், மாண்டுபோ, மரித்துப்போ, இறந்துபோ, மரணமடை, செத்துப்போ, சாவுண்டாகு, மரி, கொல்லு, கொலை செய்யப்படு, மடி, மாளு, மடிந்துபோ, மடங்கடி, சாகப்போ, கொல்லப்படு, கொலைசெய், மரணம், இற, ஜீவனைவிடு, பிரேதம், செத்தவன், சாகத்தக்கதாகு, கொன்றுபோடு, ஒழிந்துபோ, செத்துக்கிட, செத்தவர்கள், செத்துப்போனவர்கள், செத்துப் போனவனுடைய பிரேதம், செத்தவனுடைய பிரேதம், இழவு, மரித்தவன், இறந்து போனவன், மரித்துப் போனவர்கள், செத்துக்கிடக்கிறவர்கள், மடிந்துவிடு, சாகப்பண்ணு, அதம்பண்ணு, சங்கரி, நிர்மூலமாக்கு, வெட்டிப்போடு, அழித்துப்போடு, வெட்டு, கொன்றுபோடப் படு, கொலையுண்ணு, கொலையுண்ணப் படு (to die physically)

செத்துப்போனவர் (dead) - רְפָאִים - raw-faw'-iym - 7496

ஆண்பால் பெயர்ச்சொல் - இந்தச்சொல் செத்துப்போன வீரர் (Rephaim) என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அரக்கஇனம். அரக்கர்களுக்கு உயிர்த்தெழுதல் இல்லை. மடிந்தவர், மரித்தவர், செத்தவர், மாண்டிருத்தல், மரித்தல்

"மறதியின் பூமி" (land of forgetfulness) - மனுஷனுடைய பிரேதக்குழி அல்லது கல்லறை மறதியின் பூமியாகும். நரகம் மறதியின் பூமியல்ல. ஏனெனில் நரகத்தில் மனுஷனுடைய பாவங்கள் மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவரப்படும்.

3. தனிப்பட்ட வேதனையைப்பற்றி எட்டு அம்சங்கள்

சங் 88:15 சிறுவயதுமுதல் நான் சிறுமைப் பட்டவனும் மாண்டு போகிறவனுமாய் இருக்கிறேன்; உம்மால் வரும் திகில்கள் என்மேல் சுமந்திருக்கிறது, நான் மனங்கலங்குகிறேன்.

சங் 88:16 உம்முடைய எரிச்சல்கள் என்மேல் புரண்டுபோகிறது; உம்முடைய பயங்கரங்கள் என்னை அதம் பண்ணுகிறது.

சங் 88:17 அவைகள் நாடோறும் தண்ணீரைப்போல் என்னைச் சூழ்ந்து, ஏகமாய் என்னை வளைந்து கொள்ளுகிறது.

சங் 88:18 சிநேகிதனையும் தோழனையும் எனக்குத் தூரமாக விலக்கினீர்; எனக்கு அறிமுகமானவர்கள் மறைந்து போனார்கள்.

89 அதிகாரம்

(எஸ்ராகியனாகிய ஏத்தானின் மஸ்கீல் என்னும் போதக சங்கீதம்.)

மேசியாவைப்பற்றி பதினாறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய இரக்கத்திற்கும், உண்மைக்கும் சதாக்காலங்களிலும் துதிப்பது - (89:1-2)
2. தாவீதின் உடன்படிக்கை - (89:3-4)
3. துதி - தேவனுடைய மகத்துவத்தின் இருபது அம்சங்கள் - (89:5-14)
4. நீதிமானின் எட்டு ஆசீர்வாதங்கள் - (89:15-18)
5. தாவீதுக்கும் மேசியாவுக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையின் நாற்பது அம்சங்கள் - (89:19-37)
6. தேவன் உடன்படிக்கையை முறித்து விட்டார் என்று பதினாறு அம்ச முறையீடு - (89:38-46)
7. ஜெபம் - தேவன் தமது உடன்படிக்கையை நினைவு கூரவேண்டுமென்று இரண்டு விண்ணப்பங்கள் - (89:47-52)

1. தேவனுடைய இரக்கத்திற்கும், உண்மைக்கும் சதாக்காலங்களிலும் துதிப்பது

சங் 89:1 கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்; உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என்வாயினால் அறிவிப்பேன்.

சங் 89:2 கிருபை என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும்; உமது உண்மையை வானங்களிலே ஸ்தாபிப்பீர் என்றேன்.

"ஏத்தான்" [Ethan] வேதாகமத்தில் இவன் ஏமானோடு (Heman) குறிப்பிடப் பட்டிருக்கிறான். (1இராஜா 4:31; 1நாளா 6:44; 1நாளா 15:17) இவனுக்கு எதித்தூன் (Jeduthun) என்று மறுபெயரும் உண்டு. (1நாளா. 25:1-6; 1நாளா 16:41-42) சங்கீதப் புஸ்தகத்தில் இந்த சங்கீதம் மட்டுமே ஏத்தானின் சங்கீதமாகும். 88 ஆவது சங்கீதம் மட்டுமே ஏமானின் சங்கீதம்.

தீர்க்கதரிசன எண் - 70

"கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்; உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என்வாயினால் அறிவிப்பேன்................" (சங் 89:1-2) - இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியிருக்கிறது, நிறைவேறிக் கொண்டிருக்கிறது, இன்னும் தொடர்ந்து நித்தியகாலமாக நிறைவேறும்.

ஏத்தானின் பொருத்தனைகள்

1. கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன்
2. உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என்வாயினால் அறிவிப்பேன்

ஏத்தான் கூறிய காரியங்கள்

1. கிருபை என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும்
2. உமது உண்மையை வானங்களிலே ஸ்தாபிப்பீர்.

2. தாவீதின் உடன்படிக்கை - (2சாமு 7)

சங் 89:3 என்னால் தெரிந்து கொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கை பண்ணி, என் தாசனாகிய தாவீதை நோக்கி:

சங் 89:4 என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன் என்றீர். (சேலா.)

89 அதிகாரம்

"என்னால் தெரிந்து கொள்ளப்பட்டவனோடே உடன்படிக்கை பண்ணினீர்" - இது தாவீதின் உடன்படிக்கையைக் குறிப்பிடும்.

தீர்க்கதரிசனம் எண் - 71

"என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன்................." (சங் 89:4-5) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

3. துதி - தேவனுடைய மகத்துவத்தின் இருபது அம்சங்கள்

சங் 89:5 கர்த்தாவே, வானங்கள் உம்முடைய அதிசயங்களைத் துதிக்கும், பரிசுத்தவான்களின் சபையிலே உம்முடைய உண்மையும் விளங்கும்.

சங் 89:6 ஆகாயமண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்? பலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்?

சங் 89:7 தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர், தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்.

சங் 89:8 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது.

சங் 89:9 தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறவர்; அதின் அலைகள் எழும்பும்போது அவைகளை அடங்கப்பண்ணுகிறீர்.

சங் 89:10 நீர் ராகாபை வெட்டுண்ட ஒருவனைப்போல் நொறுக்கினீர்; உமது வல்லமையான புயத்தினால் உம்முடைய சத்துருக்களைச் சிதறடித்தீர்.

சங் 89:11 வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்.

சங் 89:12 வடக்கையும் தெற்கையும் நீர் உண்டாக்கினீர்; தாபோரும் எர்மோனும் உம்முடைய நாமம் விளங்கக் கெம்பீரிக்கும்.

சங் 89:13 உமக்கு வல்லமையுள்ள புயமிருக்கிறது; உம்முடைய கரம் பராக்கிரமமுள்ளது; உம்முடைய வலதுகரம் உன்னதமானது.

சங் 89:14 நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்.

"பலவான்களின் புத்திரர்" - இவர்கள் தேவதூதர்கள் (ஆதி 6:2,4; யோபு 1:6; யோபு 2:1; யோபு 38:7).

தேவனைப் பற்றிய சத்தியங்கள்

1. தாவீதுடன் உடன்படிக்கை செய்து கொண்டார் (சங் 89:3)
2. தாவீதைத் தெரிந்து கொண்டார்
3. தாவீதுக்கு உறுதியளித்தார் (சங் 89:3-4, 22-37)
4. கர்த்தர் அதிசயங்களைச் செய்தார் (சங் 89:5)
5. வானங்களில் அவரைத் துதிப்பார்கள்
6. பரிசுத்தவான்களுக்கு உண்மையுள்ளவராக இருப்பார் (சங் 89:5,8)
7. ஆகாய மண்டலங்களில் அவருக்கு நிகரானவர் யாருமில்லை (சங் 89:6)

89 அதிகாரம்

8. பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர் (சங் 89:7)

9. தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்

10. கர்த்தரைப் போல் வல்லமையுள்ளவர் ஒருவருமில்லை (சங் 89:8)

11. தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறவர் (சங் 89:9)

12. அதின் அலைகள் எழும்பும்போது அவைகளை அடங்கப்பண்ணுவார்

13. ராகாபை (எகிப்தை) வெட்டுண்டவனைப் போல் நொறுக்கினார் (சங் 87:4; சங் 89:10)

14. தமது வல்லமையான புயத்தினால் தம்முடைய சத்துருக்களைச் சிதறடித்தார்

15. வானமும், பூமியும் அவருடையவைகள் (சங் 89:11)

16. பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் கர்த்தர் அஸ்திபாரப்படுத்தினார்

17. வடக்கையும் தெற்கையும் அவரே உண்டாக்கினார் (சங் 89:12)

18. அவருடைய நாமம் கெம்பீரமாய் விளங்கும்

19. கர்த்தர் வல்லமையுள்ள புயத்தைக் கொண்டிருக்கிறார் (சங் 89:13)

20. அவருடைய வலதுகரம் பராக்ரமுள்ளது

21. அவருடைய வலதுகரம் உன்னதமானது

22. நீதியும் நியாயமும் கர்த்தருடைய சிங்காசனத்தின் ஆதாரம் (சங் 89:14)

23. கிருபையும் சத்தியமும் அவருக்கு முன்பாக நடக்கும்

24. கர்த்தரின் கெம்பீரசத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியவான்கள் (சங் 89:15)

25. கர்த்தருடைய முகத்தின் வெளிச்சத்தில், அவர்கள் நடப்பார்கள்

26. கர்த்தருடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து, பரிசுத்தவான்கள் மகிழ்வார்கள் (சங் 89:16)

27. கர்த்தருடைய நீதியால், அவருடைய ஜனங்கள் உயர்ந்திருப்பார்கள்

28. கர்த்தரே, அவர்கள் பலத்தின் மகிமை (சங் 89:17)

29. அவருடைய தயவினால் அவர்களுடைய கொம்பு உயரும்

30. கர்த்தர் அவர்களுக்கு கேடகமுமாய் இருக்கிறார் (சங் 89:18)

31. அவர்களுக்கு இராஜாவாக இருக்கிறார்

32. அவர், தம்முடைய பக்தனுக்குத் தரிசனமாகிப் பேசுகிறார் (சங் 89:19)

33. ச்சகாயஞ்செய்யத்தக்க சக்தியை அளிக்கிறார்

34. ஜனத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவனை உயர்த்துகிறார்

35. தம்முடைய தாசனாகிய தாவீதைக் கண்டுபிடித்தார் (சங் 89:20)

36. பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினார்

37. கர்த்தர், அவனை தனக்கு முதற்பேறானவனாக்கினார் (சங் 89:27)

38. பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்கினார் (சங் 89:27; தானி 7:13-14)

89 அதிகாரம்

"ராகாப்" எகிப்தைக் குறிக்கும் சங்கீதப்பெயர் - பெருமைக்காரன் என்பது இதன் பொருள் (சங் 87:4; ஏசா 51:9).

"வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்" - வானத்தையும் பூமியையும் பூமியில் உள்ளவற்றையும் தேவனே சிருஷ்டித்தார் என்பதற்கும் இவை பரிணாம வளர்ச்சியினால் வளரவில்லை என்பதற்கும் இந்த வசனம் ஒரு சான்றாகும் (சங் 89:11-12).

"வடக்கையும் தெற்கையும் நீர் உண்டாக்கினீர்" - தேவனே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் என்று இந்த வசனம் பொருளுடையது. (சங் 89:11-12; எபே 3:9; கொலோ 1:15-18; வெளி 4:11).

தீர்க்கதரிசன எண் - 72

"நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்......................" (சங் 89:14-37) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

சங்கீதம் 89:14 - இல் முன்னுரைக்கப் பட்டுள்ள காரியங்கள்

1. நீதியும் நியாயமும், கிருபையும் சத்தியமும், மேசியாவின் ஆளுகையில் இருக்கும் (சங் 89:14)
2. ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு, கர்த்தருடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள் (சங் 89:15)
3. கர்த்தருடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து, நீதியாய் உயர்ந்திருப்பார்கள் (சங் 89:16)
4. மேசியாவிடமிருந்து, பலத்தையும் தயவையும் ஜனங்கள் பெற்றுக் கொள்ளுவார்கள் (சங் 89:17)
5. கர்த்தர் கேடகமாக இருந்து ஜனங்களைக் காப்பார். அவரே இராஜாவுமாயிருக்கிறார் (சங் 89:18)
6. மேசியா உயர்த்தப்படுவார் (சங் 89:19)
7. தாவீதுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படும் (சங் 89:20-37)

"நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்" - தேவனுடைய இராஜ்ஜியத்தின் அஸ்திபாரம் நீதி, நியாயம், கிருபை, சத்தியம் என்பவையாகும். தேவன் எது சரியானது என்பதைப் பார்க்கிறார். அறிகிறார். செய்கிறார். தமது பிரமாணத்தை உடைப்பதற்கு யாரையும் தேவன் அனுமதிப்பதில்லை. பிரமாணத்தை மீறுபவர்களுக்கு நிச்சயம் தண்டனை உண்டு. அதுபோலவே நற்கிரியைகளைச் செய்பவர்களுக்கு தேவன் நிச்சயமாகவே வெகுமதி அளிப்பார். பாவம் தண்டிக்கப்படும். நீதிக்கு வெகுமதி அளிக்கப்படும். இதுவே தேவனுடைய பிரமாணம்.

4. நீதிமானின் எட்டு ஆசீர்வாதங்கள்

சங் 89:15 கெம்பீரசத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்; கர்த்தாவே, அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள்.

சங் 89:16 அவர்கள் உம்முடைய நாமத்தில் நாடோறும் களிகூர்ந்து, உம்முடைய நீதியால் உயர்ந்திருப்பார்கள்.

சங் 89:17 நீரே அவர்கள் பலத்தின் மகிமையாயிருக்கிறீர்; உம்முடைய தயவினால் எங்கள் கொம்பு உயரும்.

சங் 89:18 கர்த்தரால் எங்கள் கேடகமும், இஸ்ரவேலின் பரிசுத்தரால் எங்களுடைய ராஜாவும் உண்டு.

"கெம்பீரசத்தம்" - ஆயிர வருஷ அரசாட்சியில் ஜீவிக்கும் ஜனங்கள் பாக்கியவான்கள். அவர்கள் கெம்பீர சத்தத்தைக் கேட்பார்கள். சிறைப்பட்டவர்கள் மீட்கப் பட்டதற்கான அடையாளமாக தொனிக்கப்படும் எக்காள சத்தத்தைக் கேட்பார்கள்.

89 அதிகாரம்

"எங்கள் கொம்பு உயரும்" - வேதாகமத்தில் கொம்புகள் இராஜாக்களைக் குறிக்கும் (தானி 7:7-8,19-24; வெளி 17:12-17). இங்கு கூறப்பட்டிருக்கிற கொம்பு இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீதைக் குறிக்கும். ஆயிர வருஷ அரசாட்சியில் தாவீது உயிர்த்தெழுந்து கிறிஸ்துவோடு இஸ்ரவேலை ஆளுகை செய்வான். (எரே 30:9; எசே 34:23-26; எசே 37:21-25; ஓசி 3:4-5) தேவன் (சங் 89:18), கிறிஸ்து (ஏசா 9:6-7; தானி 7:13-14; வெளி 11:15), அப்போஸ்தலர்கள் (மத் 19:28), எல்லா பரிசுத்தவான்களும் (வெளி 5:10; வெளி 11:15; வெளி 20:4-6; வெளி 22:4-5; தானி 2:44; தானி 7:14,18,27).

5. தாவீதுக்கும் மேசியாவுக்கும் இடையேயுள்ள உடன் படிக்கையின் நாற்பது அம்சங்கள்

சங் 89:19 அப்பொழுது நீர் உம்முடைய பக்தனுக்குத் தரிசனமாகி: சகாயஞ் செய்யத்தக்க சக்தியை ஒரு சவுரியவான் மேல் வைத்து, ஜனத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவனை உயர்த்தினேன்.

சங் 89:20 என் தாசனாகிய தாவீதைக் கண்டுபிடித்தேன்; என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினேன்.

சங் 89:21 என் கை அவனோடே உறுதியாயிருக்கும்; என் புயமும் அவனைப் பலப்படுத்தும்.

சங் 89:22 சத்துரு அவனை நெருக்குவதில்லை; நியாயக்கேட்டின் மகன் அவனை ஒடுக்குவதில்லை.

சங் 89:23 அவன் சத்துருக்களை அவனுக்கு முன்பாக மடங்கடித்து, அவனைப் பகைக்கிறவர்களை வெட்டுவேன்.

சங் 89:24 என் உண்மையும் என் கிருபையும் அவனோடிருக்கும்; என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும்.

சங் 89:25 அவன் கையைச் சமுத்திரத்தின் மேலும், அவன் வலதுகரத்தை ஆறுகள் மேலும் ஆளும்படி வைப்பேன்.

சங் 89:26 அவன் என்னை நோக்கி: நீர் என் பிதா, என் தேவன், என் இரட்சிப்பின் கன்மலையென்று சொல்லுவான்.

சங் 89:27 நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்.

சங் 89:28 என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்; என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.

சங் 89:29 அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கவும், அவன் ராஜாசனம் வானங்களுள்ளமட்டும் நிலைநிற்கவும் செய்வேன்.

சங் 89:30 அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல், என் வேதத்தை விட்டு விலகி;

சங் 89:31 என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், என் நியமங்களை மீறிநடந்தால்;

சங் 89:32 அவர்கள் மீறுதலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன்.

சங் 89:33 ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன்.

சங் 89:34 என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.

சங் 89:35 ஒருவிசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன்.

89 அதிகாரம்

சங் 89:36 அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்; அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்.

சங் 89:37 சந்திரனைப்போல அது என்றென்றைக்கும் உறுதியாயும், ஆகாயமண்டலத்துச் சாட்சியைப்போல உண்மையாயும் இருக்கும் என்று விளம்பினீர் (சேலா.)

"அப்பொழுது நீர் உம்முடைய பக்தனுக்குத் தரிசனமாகி: சகாயஞ்செய்யத்தக்க சக்தியை ஒரு சவுரியவான் மேல் வைத்து, ஜனத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவனை உயர்த்தினேன் என்று விளம்பினீர்" - இந்த வசனம் மேசியாவைக் குறிக்கும். சங் 89:24, 27 ஆகிய வசனங்களும் மேசியாவைக் குறிக்கும். தாவீதின் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை மேசியா நிறைவேற்றுவார் (சங் 89:20-37; 2சாமு 7).

"என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும்" - இந்த வசனமும் மேசியாவைக் குறிக்கும். தாவீதின் காலத்திலிருந்து மேசியாவே இஸ்ரவேலின் இராஜாவாக இருக்கிறவர்.

தாவீது தேவனைப் பற்றிக் கூறும் காரியங்கள்

1. நீர் என் பிதா (சங் 89:26)
2. நீர் என் தேவன்
3. நீர் என் இரட்சிப்பின் கன்மலை

தாவீதின் குமாரனாகிய மேசியா தேவனுடைய முதற்பேறான குமாரனாகவும் இருக்கிறார். அவர் பூமியின் இராஜாக்களைப் பார்க்கிலும், மிகவும் உயர்ந்தவர் (சங் 2:7; தானி 7:13-14; வெளி 11:15).

"என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்; என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்" - சங் 89:27-இல் மேசியாவைப் பற்றி கூறப் பட்டிருக்கிறது. அதன்பின்பு தாவீதைப் பற்றியும் தாவீதின் உடன்படிக்கையைப் பற்றியும் சங்கீதக்காரன் முன்னறிவிக்கிறான். (சங் 89:28-37).

தாவீதின் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்

1. தாவீது, கர்த்தரால் அபிஷேகம் பண்ணப் பட்டான் (சங் 89:20)
2. கர்த்தர், தாவீதைத் தம்முடைய கையினால் உறுதிப்படுத்தினார் (சங் 89:21)
3. கர்த்தருடைய புயம் அவனைப் பலப்படுத்தியது
4. சத்துரு அவனை நெருக்குவதில்லை (சங் 89:22)
5. நியாயக்கேட்டின் மகன் அவனை ஒடுக்குவதில்லை
6. அவனுடைய சத்துருக்கள் மடங்கடிக்கப் படுவார்கள் (சங் 89:23)
7. அவனைப் பகைக்கிறவர்கள் வெட்டுண்டு போவார்கள்
8. கர்த்தருடைய உண்மையும் கிருபையும் அவனோடிருக்கும் (சங் 89:24)
9. மேசியாவாகிய, அவருடைய குமாரன், கர்த்தரால் உயர்த்தப்படுவார்
10. அவன் கையைச் சமுத்திரத்தின் மேலும், வலதுகரத்தை ஆறுகள் மேலும் ஆளும்படி செய்வார் (சங் 89:25)
11. அவன், கர்த்தரை நோக்கி, நீர் என் பிதா, என் தேவன், என் இரட்சிப்பின் கன்மலையென்று சொல்லுவான் (சங் 89:26)
12. கர்த்தர், அவனைத் தனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவார் (சங் 89:27)

89 அதிகாரம்

13. கர்த்தருடைய கிருபை என்றென்றைக்கும் அவனைக் காக்கும் (சங் 89:28)

14. கர்த்தருடைய உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும் (சங் 89:28-29,35-37)

15. அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படிச் செய்வார் (சங் 89:29,36)

16. அவன் ராஜாசனம் வானங்களுள்ள மட்டும் நிலைநிற்கச் செய்வார் (சங் 89:29, 36, 37).

17. அவன் பிள்ளைகள், கர்த்தரின் நியாயங்களின்படி நடவாமல், வேதத்தை விட்டு விலகி, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவருடைய நியமங்களை மீறி நடந்தால், அவர்கள் மீறுதலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பார் (சங் 89:30-32)

18. கர்த்தருடைய கிருபை அவனை விட்டு விலகாமலிருக்கும் (சங் 89:33)

19. கர்த்தர் தம்முடைய உண்மையில் பிசகாமல் இருப்பார்

20. அவருடைய உடன்படிக்கையை மீறாமலும், அவருடைய உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பார் (சங் 89:34-35)

21. ஒருவிசை, தன் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டார். தாவீதுக்கு பொய் சொல்லமாட்டார் (சங் 89:35)

"என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்" - தேவன் பரிசுத்தமானவர். தமது வார்த்தையில் அவர் உண்மையுள்ளவர். தேவனால் பொய் கூறமுடியாது. விசுவாசிகள் தேவனுக்கு பயந்திருக்க வேண்டும். தேவன் எதை பாவம் என்று கூறுகிறாரோ அதை நாமும் எந்தவித தர்க்கமுமில்லாமல் பாவம் என்றே கூறவேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம். தேவனிடத்தில் பட்சபாதமில்லை (எபே 18:4,24-28; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8).

தேவன் ஆணையிட்ட காரியங்கள்

1. ஆபிரகாமின் சந்ததியை, வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருக்குவார் (ஆதி 22:16-17)

2. இஸ்ரவேலர்கள், தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் (ஆதி 22:17)

3. ஆபிரகாமின் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 22:18)

4. அமலேக்கியருடன் கர்த்தருடைய யுத்தம் தலைமுறை தலைமுறையாக நடக்கும் (யாத் 17:16)

5. கானான் தேசமுழுவதையும், ஆபிரகாமின் சந்ததியாருக்கு நித்திய சுதந்தரமாகக் கொடுத்தார் (ஆதி 15:18-21; ஆதி 17:8)

6. வாக்குத்தத்த தேசத்தில் இஸ்ரவேல் பிரவேசிப்பதில்லை (எண் 14:26-35; சங் 95:11)

7. ஏலியின் குடும்பத்தாரின் மீது நியாயத்தீர்ப்பு (1சாமு 3:14)

8. என்றென்றைக்கும், தாவீதின் சந்ததியை நிலைப்படுத்தி, சிங்காசனத்தை ஸ்தாபிப்பார் (சங் 89:3-4,35-37; சங் 132:11; 2சாமு 7)

89 அதிகாரம்

9. கிறிஸ்து என்றென்றைக்கும் ஆசாரியராய் இருக்கிறார் (சங் 110:4)

10. பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படியாகவும், அவரை மகிமைப்படுத்தும்படியாகவும் செய்வார் (ஏசா 45:23; பிலி 2:9-11)

11. நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின் மேல் புரண்டு வருவதில்லை (ஏசா 54:9; ஆதி 8:21; ஆதி 9:11-12)

12. எரேமியாவின் நாளில் எகிப்திலுள்ள யூதர் மரணத்திற்குத் தப்புவதில்லை. (எரே 44:26-27)

13. போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்கும், அதின் பட்டணங்கள் நித்திய வனாந்தரங்களாய் இருக்கும் (ஏசா 34; எரே 49:13)

14. பாபிலோன் தோற்கடிக்கப்படுதல் (எரே 51:14)

15. இஸ்ரவேலின் அடிமைத்தனம் (ஆமோ 4:2; ஆமோ 6:8)

16. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (அப் 2:30)

17. அவிசுவாசிகள், கர்த்தருடைய நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை (எபி 3:11; எபி 4:1-9; சங் 95:11)

6. தேவன் உடன்படிக்கையை முறித்து விட்டார் என்று பதினாறு அம்ச முறையீடு

சங் 89:38 ஆனாலும் நீர் எங்களை வெறுத்துத் தள்ளிவிட்டீர்; நீர் அபிஷேகம் பண்ணுவித்தவன்மேல் உக்கிரமானீர்.

சங் 89:39 உமது அடியானுடன் நீர் பண்ணின உடன்படிக்கையை ஒழித்து விட்டு, அவன் கிரீடத்தைத் தரையிலே தள்ளி அவமானப்படுத்தினீர்.

சங் 89:40 அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப்போட்டு, அவன் அரணான ஸ்தலங்களைப் பாழாக்கினீர்.

சங் 89:41 வழிநடக்கிற யாவரும் அவனைக் கொள்ளையிடுகிறார்கள்; தன் அயலாருக்கு நிந்தையானான்.

சங் 89:42 அவன் சத்துருக்களின் வலது கையை நீர் உயர்த்தி, அவன் விரோதிகள் யாவரும் சந்தோஷிக்கும்படி செய்தீர்.

சங் 89:43 அவன் பட்டயத்தின் கருக்கை மழுக்கிப்போட்டு, அவனை யுத்தத்தில் நிற்காதபடி செய்தீர்.

சங் 89:44 அவன் மகிமையை அற்றுப் போகப்பண்ணி, அவன் சிங்காசனத்தைத் தரையிலே தள்ளினீர்.

சங் 89:45 அவன் வாலிபநாட்களைக் குறுக்கி, அவனை வெட்கத்தால் மூடினீர். (சேலா.)

சங் 89:46 எதுவரைக்கும், கர்த்தாவே! நீர் என்றைக்கும் மறைந்திருப்பீரோ? உமது கோபம் அக்கினியைப்போல எரியுமோ?

தேவனுக்கு எதிரான முறையீடுகள்

1. அவர், எங்களை வெறுத்துத் தள்ளிவிட்டார் (சங் 89:38)

2. அவர் அபிஷேகம் பண்ணுவித்தவன் மேல் உக்கிரமாகயிருக்கிறார்

3. தமது அடியானுடன், பண்ணின உடன்படிக்கையை ஒழித்துவிட்டார் (சங் 89:39)

4. அவன் கிரீடத்தைத் தரையிலே தள்ளி அவமானப்படுத்தினார்

5. அவன் மதில்களையெல்லாம் தகர்த்துப் போட்டார் (சங் 89:40)

6. அவன் அரணான ஸ்தலங்களைப் பாழாக்கினார்

7. வழிநடக்கிற யாவரும் அவனைக் கொள்ளையிடும்படி அனுமதித்தார் (சங் 89:41)

89 அதிகாரம்

8. தன் அயலாருக்கு அவனை நிந்தையாக்கினார்

9. அவன் சத்துருக்களின் வலது கையை உயர்த்தினார் (சங் 89:42)

10. அவன் விரோதிகள் யாவரும் சந்தோஷிக்கும்படி செய்தார்

11. அவன் பட்டயத்தின் கருக்கை மழுங்கப் பண்ணினார் (சங் 89:43)

12. அவனை யுத்தத்தில் நிற்காதபடி செய்தார்

13. அவன் மகிமையை அற்றுப் போகப் பண்ணினார் (சங் 89:44)

14. அவன் சிங்காசனத்தைத் தரையிலே தள்ளினார்

15. அவன் வாலிப நாட்களைக் குறுக்கினார் (சங் 89:45)

16. அவனை வெட்கத்தால் மூடினார்

ஒரு மனுஷனுக்கு பிரச்சனைகளும், சாபங்களும் வரும்போது, அது தான் செய்த பாவத்தினால் ஏற்பட்ட விளைவா? என்பதை மனுஷன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தனது பாடுகளுக்குத் தேவனே காரணமென்று நினைத்து எல்லா வேளையிலும் தேவனைக் குறைகூறக்கூடாது. தேவனுடைய உடன்படிக்கையை மனுஷன் மீறாமல் இருந்தால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவனுக்கு வரும்.

தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களும் உடன்படிக்கைகளும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவையே. (எபி 6:1-12) தேவன் தமது உடன்படிக்கையில் நன்மையான காரியங்களை மட்டும் நமக்கு நிறைவேற்றுவார். நம்மிடமிருந்து ஒன்றும் எதிர்பார்க்க மாட்டார் என்று நாம் இறுமாப்போடு இருக்கக்கூடாது. தமது உடன்படிக்கையை மீறுபவர்களைத் தாம் தண்டிப்பதாகத் தேவன் கூறுகிறார் (சங் 89:30-32). தாம் சொன்ன வார்த்தையில் தேவன் உண்மையாயிருப்பார் என்பது நிச்சயமே.

"எதுவரைக்கும், கர்த்தாவே! நீர் என்றைக்கும் மறைந்திருப்பீரோ? உமது கோபம் அக்கினியைப்போல எரியுமோ?" - சங் 89:46-இல் சங்கீதக்காரன் கேட்கும் கேள்விகளை மனுஷர் எல்லோருமே கேட்கிறார்கள். மனுஷன் தான் பாவம் செய்வதை விட்டுவிட்டு தேவனிடத்திலே முழு இருதயத்தோடு திரும்பி வரவேண்டும். இந்த வசனத்தில் "எதுவரைக்கும்" என்று கேட்கப் பட்டுள்ள கேள்விக்கு இதுவே பதில்.

7. ஜெபம் - தேவன் தமது உடன்படிக்கையை நினைவு கூரவேண்டுமென்று இரண்டு விண்ணப்பங்கள்

சங் 89:47 என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்; மனுபுத்திரர் யாவரையும் வீணாகச் சிருஷ்டிக்க வேண்டியதென்ன?

சங் 89:48 மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கிவிடுகிறவன் யார்? (சேலா)

சங் 89:49 ஆண்டவரே, நீர் தாவீதுக்கும் உம்முடைய உண்மையைக்கொண்டு சத்தியம் பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே?

சங் 89:50 ஆண்டவரே, உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஊழியக்காரரையும், நீர் அபிஷேகம் பண்ணினவனின் காலடிகளையும் நிந்திக்கிறபடியினால்,

சங் 89:51 கர்த்தாவே, உமது அடியார் சுமக்கும் நிந்தையையும், வலுமையான ஜனங்களெல்லாரும் நான் என் மடியில் சுமக்கும் என் நிந்தையையும் நினைத்தருளும்.

சங் 89:52 கர்த்தருக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென், ஆமென்.

தேவனிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும்

89 அதிகாரம்

2. நான் என் மடியில் சுமக்கும் என் நிந்தையையும் நினைத்தருளும் (சங் 89:50-51)

சங்கீதப்புஸ்தகத்தில் ஏராளமான விண்ணப்பங்களை நாம் வாசிக்கிறோம். அவற்றில் ஒருசில விண்ணப்பகளே தேவனுடைய மகிமையையும், தேவனுடைய சித்தத்தையும் குறிப்பவையாகும். மற்ற விண்ணப்பங்கள் எல்லாம் மனுஷனைப்பற்றியவையே. மனுஷன் தனக்கு உண்டான உபத்திரவங்களைப் பற்றியும், அந்த உபத்திரவம் தனக்கு எதுவரையிலும் இருக்கும் என்பது பற்றியும், அந்த உபத்திரவத்திலிருந்து தனக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்பது பற்றியும் தேவனிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். தேவன் உண்மையிலேயே மனுஷனை அவனுக்கு உண்டான பாடுகளிலிருந்து விடுதலை பண்ண விரும்புகிறார். மனுஷன் தான் செய்த பாவங்களிலிருந்து மனந்திருந்தி, தேவனிடத்தில் திரும்பி வரவேண்டும். தேவனிடம் தன்னை முழு இருதயத்தோடு அர்ப்பணிக்க வேண்டும் (மத் 22:37).

"மரணம்" **[death]** இது சரீர மரணத்தைக் குறிக்கும். மனுஷன் பிறக்கும்போதே ஆவிக்குரிய ரீதியாக மரித்தவனாகவே பிறக்கிறான். ஆகையினால் அவன் மறுபடியும் பிறப்பது அவசியமாக இருக்கிறது. மறுபடியும் ஒருவன் பிறப்பதன்மூலமாக அவன் ஆவிக்குரிய பிறப்பை பெற்றுக் கொள்கிறான். நித்திய தண்டனையிலிருந்து விடுதலை பெறுகிறான். (யோவான் 3:16; எபே 2:1-10)

பாதாளம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

"ஆண்டவரே, நீர் தாவீதுக்கு உம்முடைய உண்மையைக்கொண்டு சத்தியம்பண்ணின உமது பூர்வ கிருபைகள் எங்கே?" - மனுஷன் தான் பாவம் செய்வதை நிறுத்திவிட்டு தேவனிடத்தில் திரும்பி வரும்போது, தேவனுடைய பூர்வகிருபைகளைக் கண்டுகொள்வான்.

நிந்தைகளின் வகைகள்

1. கர்த்தருடைய ஊழியக்காரர்களை நிந்தித்தல் (சங் 89:50)
2. பராக்கிரமசாலிகளை நிந்தித்தல்
3. கர்த்தர் அபிஷேகம் பண்ணினவனை நிந்தித்தல் (சங் 89:51)

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நிந்தைகள்

மலடு **(barrenness)** (ஆதி 30:23; ஏசா 4:1); தோல்வி **(defeat** (தானி 9:16; தானி 11:18); விபச்சாரம் **(adultery)** (நீதி 6:32); பாவம் **sin** (நீதி 14:34; 1தீமோ 3:7); பெற்றோரின் அவமதிப்பு **(parental dishonor)** (நீதி 19:26); விதவை **(widowhood)** (ஏசா 54:4); மார்க்கபேதம் **(being different in religion)** (லூக்கா 6:22; 2கொரி 11:21); இயேசுவை ஏற்றுக்கொள்வது **(accepting Christ)** (எபி 11:26).

90 அதிகாரம்

(தேவனுடைய மனிதனாகிய மோசேயின் ஜெபம்)

மூன்றாவது ஜெப சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய நித்தியத்தின் நான்கு அம்சங்கள் - (90:1-2)
2. மனுஷனுடைய நிலையற்ற தன்மையின் பதினைந்து அம்சங்கள் - தேவனுடைய ஆறு கிரியைகள் - (90:3-11)
3. இரக்கத்திற்காக பத்து விண்ணப்பங்கள் - (90:12-17)

1. தேவனுடைய நித்தியத்தின் நான்கு அம்சங்கள்

சங் 90:1 ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்.

சங் 90:2 பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

"தேவனுடைய மனுஷன்" என்று அழைக்கப்பட்டவர்கள்

1. மோசே (உபா 33:1)
2. சாமுவேல் (1சாமு 9:6-10)
3. தாவீது (நெகே 12:24)
4. எலியா (1இராஜா 17:18)
5. எலிசா (2இராஜா 4:7)
6. செமாயா (2நாளா 11:2)
7. இத்தலியா (எரே 35:4)

பெயர் குறிப்பிடப்படாத தேவனுடைய மனுஷர்கள் (1சாமு 2:27; 1இராஜா 13:1; 1இராஜா 20:28; 2நாளா 25:7)

ஆண்டவர் (Lord) - אֲדֹנָי - ad-o-noy' - 136

ஆ.பெ.சொ. - கர்த்தர், ஆண்டவர்

கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார்

தேவன் செய்திருக்கிற காரியங்கள்

1. தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்
2. அவர் பூமியையும், உலகத்தையும் உருவாக்கினார் (சங் 90:2)
3. அவர் மனுஷரை நிர்த்தூளியாக்கினார் (சங் 90:3)
4. கர்த்தர், மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறார்
5. அவர்களை வெள்ளம் போல் வாரிக் கொண்டு போகிறார் (சங் 90:5)
6. எங்கள் அக்கிரமங்களை, அவருக்கு முன்பாக நிறுத்தினார் (சங் 90:8)
7. எங்கள் அந்தரங்க பாவங்களைத் தமது முகத்தின் வெளிச்சத்தில் நிறுத்தினார்

அடைக்கலம் (dwelling) - מָעוֹן - maw-ohn' - 4583

ஆண்பால் பெயர்ச்சொல் - உதவி, வாசஸ்தலம், தாபரம், கோட்டை, அடைக்கலம், தாவு, ஸ்தலம் **(an abode; retreat; habitation)** (சங் 90:1; 2நாளா 30:27; 2நாளா 36:15; எரே 51:37; அப் 17:28)

"நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்" - கர்த்தருக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. அவரே ஆதியும், அந்தமுமாக இருக்கிறார். அநாதிகாலமாக கர்த்தரே தேவன் (மீகா 5:2; எபி 1:8).

90 அதிகாரம்

ஆரம்பம் உள்ள காரியங்கள்

1. பர்வதங்கள்
2. பூமி
3. உலகம் - பூமியில் உள்ளவைகள்

2. மனுஷனுடைய நிலையற்ற தன்மையின் பதினைந்து அம்சங்கள் - தேவனுடைய ஆறு கிரியைகள்

சங் 90:3 நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

சங் 90:4 உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது.

சங் 90:5 அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டு போகிறீர்; நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

சங் 90:6 அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

சங் 90:7 நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப் போகிறோம்.

சங் 90:8 எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

சங் 90:9 எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

சங் 90:10 எங்கள் ஆயுசுநாட்கள் எழுபதுவருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.

சங் 90:11 உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்?

மனுஷன் (man) - אֱנוֹשׁ - en-oshe' - 582

ஆண்பால் பெயர்ச்சொல் - மனுஷர், சகோதரர், ஜனம், ஊரார், ஆட்கள், கூட்டம், புருஷர், ஆண், மனிதர் - மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன் மறுபடியும் மண்ணுக்கே திரும்பி போகிறவன் (ஆதி 2:7; ஆதி 3:19; பிர 3:19-21)

"நிர்த்தூளியாக்குகிறீர்" - தேவன் மனுஷனுடைய சரீரத்தை அழிக்கிறார். உள்ளான மனுஷன் அழிவதில்லை. (1பேதுரு 3:4)

"மனுபுத்திரரே, திரும்புங்கள்" - மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டவர்களே நீங்கள் மண்ணுக்கே திரும்புங்கள் (ஆதி 3:19).

"உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது" - தேவன் நித்தியமானவர். நமது காலக்கணக்கும், தேவனுடைய காலக்கணக்கும், ஒன்றல்ல. கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது. (2பேதுரு 3:8)

ஜீவனுக்கும் மரணத்திற்கும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஒப்புமைகள்

1. வெள்ளத்தைப்போல் விரைவாக கடந்து போதல்
2. இரவின் நித்திரை
3. காலையில் முளைக்கிற புல், காலையில் முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்து போகும் (சங் 90:5-6)

90 அதிகாரம்

ஆரம்பம் உள்ள காரியங்கள்

1. பர்வதங்கள்
2. பூமி
3. உலகம் - பூமியில் உள்ளவைகள்

2. மனுஷனுடைய நிலையற்ற தன்மையின் பதினைந்து அம்சங்கள் - தேவனுடைய ஆறு கிரியைகள்

சங் 90:3 நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

சங் 90:4 உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது.

சங் 90:5 அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டு போகிறீர்; நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

சங் 90:6 அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

சங் 90:7 நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப் போகிறோம்.

சங் 90:8 எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

சங் 90:9 எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

4. நாட்களெல்லாம் கோபத்தால் போய்விடுதல் (சங் 90:9)
5. வருஷங்கள் கதையைப்போல் கழிந்து போதல்
6. சீக்கிரமாய்க் கடந்து போதல் (சங் 90:10)
7. பறந்து போதல்

"நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம்" - இந்த வசனத்தில் "அழிதல்" என்பது சரீரமும், ஆத்துமாவும் அழியும் **(annihilation)** என்று பொருள்படாது. நமது சரீரம் அழிந்தால் நமது ஆவியும், ஆத்துமாவும் உயிரோடு இருக்கும்.

"எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்" - மனுஷனுடைய அந்தரங்க பாவங்களைத் தேவன் எளிதாகக் கண்டுபிடித்து விடுவார். தேவனுடைய முகத்தின் வெளிச்சத்தில் மனுஷனுடைய பாவங்கள் எதுவும் மறைவாக இருக்காது. எல்லாம் வெளியரங்கமாக இருக்கும்.

"எங்கள் ஆயுசுநாட்கள் எழுபதுவருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம்"

மோசேயின் காலத்தில் மனுஷனுடைய ஆயுசுகாலம் எழுபது வருஷமாகவோ, அல்லது எண்பது வருஷமாகவோ இருந்தது. வனாந்தரத்தில் இது குறைக்கப்பட்டது. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் எல்லாரும் மரித்துப்போனார்கள். வனாந்தரத்தில் இந்த சாபம் கூறப்பட்டபோது, 20 வயதாக இருந்தவர்கள் 60 வயதிலேயே மரித்துப் போனார்கள். ஒருவனுக்கு எவ்வளவுதான் பெலன் மிகுந்திருந்தாலும், அவர்களுடைய ஆயுசுநாட்கள் குறைக்கப்பட்டன. (சங் 90:12, சங் 90:9-10)

எழுபது வருஷம் அல்லது எண்பது வருஷம் என்பது மனுஷனுடைய ஆயுசுகாலமாக நியமிக்கப்பட்டுள்ள சட்டமல்ல. வனாந்தரத்தில் கூறப்பட்டுள்ள சாபத்தினால் அவர்களுடைய ஆயுசுநாட்கள் மட்டுப்பட்டது. ஒரு மனுஷன் எப்போது மரிப்பான் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் நிச்சயமாகவே மரிப்பான். மனுஷனுடைய ஆயுசுநாட்கள் எழுபது வருஷத்திற்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். மனுஷனுடைய மரணநாள் எது என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும் (எண் 14:29-36).

90 அதிகாரம்

"அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்" - நாம் மரித்தவுடன் நமது சரீரம் மண்ணுக்குப் போய்விடும். ஆனால் நமது ஆவியோ, நாம் இரட்சிக்கப்பட்டவர்களாக இருந்தால் தேவனோடு இருப்பதற்காக பரலோகத்திற்குச் செல்லும், (2கொரி. 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11) நாம் இரட்சிக்கப் படவில்லையென்றால் நமது ஆவி நரகத்திற்குப் போய்விடும் (சங் 9:17; ஏசா 14:9; லூக்கா 16:19-31).

"உமது கோபத்தின் வல்லமையை" - ஏராளமான தேவதூதர்களும், பிசாசுகளும், மனுஷர்களும் அறிந்துகொள்வார்கள். நரகத்தில் அவியாத அக்கினி பற்றி எரியும் (உபா 32:22).

"உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரம்" - தேவன் மனுஷரிடத்திலே நீதியை எதிர்பார்க்கிறார். துன்மார்க்கர் நீதியாய் ஜீவிக்காமல் துன்மார்க்கமாய் ஜீவிக்கும்போது தேவனுடைய கோபம் பற்றி எரியும். அவருடைய உக்கிரம் நரகத்தில் எரியும்.

3. இரக்கத்திற்காக பத்து விண்ணப்பங்கள்

சங் 90:12 நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

சங் 90:13 கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்? உமது அடியாருக்காகப் பரிதபியும்.

சங் 90:14 நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

சங் 90:15 தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்.

சங் 90:16 உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.

சங் 90:17 எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

மோசேயின் விண்ணப்பங்கள்

1. எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் (சங் 90:12)
2. கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர் (சங் 90:13)
3. உமது அடியாருக்குப் பரிதபியும்
4. காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும் (சங் 90:14)
5. எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கு சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும் (சங் 90:15)
6. நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்
7. உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும் விளங்குவதாக (சங் 90:16)
8. உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக
9. எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக (சங் 90:17)
10. எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்

90 அதிகாரம்

தேவன் பதிலுரைக்க வேண்டுமென்பதற்குக் காரணங்கள்

1. நாங்கள் ஞானஇருதயமுள்ளவர்களாகும்படி எங்களுக்குப் போதித்தருளும் (சங் 90:12)
2. நாங்கள் துன்பப்பட்ட நாட்களை மகிழ்ச்சியாக்கும் (சங் 90:13,15)
3. நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி திருப்தியாக்கும் (சங் 90:14)
4. எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும் (சங் 90:17)

91 அதிகாரம்

பொருளடக்கம்

1. தேவனுடைய வாசஸ்தலம் - நாம் நம்பிக்கை வைக்கவேண்டிய ஐந்து காரியங்கள் - (91:1-2)
2. தேவன் - ஐந்து அம்ச நம்பிக்கை - (91:3-4)
3. அவருடைய பாதுகாப்பின் எட்டு அம்சங்கள் - (91:5-8)
4. அவருடைய வாசஸ்தலத்தின் ஆறு அம்சங்கள் - எட்டு ஆசீர்வாதங்கள் - (91:9-13)
5. அவருடைய பொருத்தனை - எட்டு ஆசீர்வாதங்கள் - (91:14-16)

1. தேவனுடைய வாசஸ்தலம் - நாம் நம்பிக்கை வைக்கவேண்டிய ஐந்து காரியங்கள்

சங் 91:1 உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்.

சங் 91:2 நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

சங்கீதம் 90,91 ஆகியவற்றை மோசே இயற்றினார் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் நாற்பது வருஷம் அலைந்து திரிந்தார்கள். வனாந்தர பிரயாணத்தின் ஆரம்பத்தில் மோசே இந்த சங்கீதத்தை எழுதியிருக்கலாம். சங்கீதப்புஸ்தகத்தின் நான்காவது பிரிவிலுள்ள சங்கீதங்களின் மையக்கருத்து வனாந்தர பிரயாணமாகும். இஸ்ரவேலர்கள் நாற்பது வருஷங்களாக வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணி, பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்து வந்தார்கள். அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் தேவனுடைய பிள்ளைகளுக்கு கர்த்தருடைய பராமரிப்பு நிச்சயமாகவே இருக்கும் என்பதை இந்த சங்கீதம் உறுதிபண்ணுகிறது. சங் 91-ஐ மோசே இயற்றி இருப்பார் என்றால் இயேசு கிறிஸ்து சோதிக்கப்படும்போது அவர் கூறிய வேதவசனங்கள் எல்லாமே மோசேயின் சங்கீதங்களிலிருந்து கூறப்பட்டவையாகும்.

தங்குதல் (dwelleth) - יָשַׁב - yaw-shab' - 3427

வினைச்சொல் - வாசம்பண்ணு, குடியிரு, தங்கு (to sit down; to dwell; to remain; to settle) (சங் 91:1; சங் 80:1; சங் 123:1; உபா 26:1)

மறைவு (secret place) - סֵתֶר - say'-yher, sith-raw' - 5643

ஆண்பால் பெயர்ச்சொல் - இரகசியம், ஒளிப்பிடம், மறைவான இடம், மறைவு, அந்தரங்கம், புறங்கூறுதல், புகலிடம் (a covering; hiding place)

"சர்வவல்லவருடைய நிழல்" - இதுவே உன்னதமானவருடைய மறைவிடம். சர்வ வல்லவருடைய நிழலில் தங்குகிறவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்.

கர்த்தருடைய மறைவிலும், நிழலிலும் இருக்கிறவர்களுக்கு அவருடைய குணாதிசயங்கள்

1. அடைக்கலம் - மறைவிடம்
2. கோட்டை - பாதுகாப்பான இடம்
3. கர்த்தர் - சத்தியமும் விசுவாசமுமானவர்
4. நம்பிக்கை - பாதுகாப்பான இடம்

2. தேவன் - ஐந்து அம்ச நம்பிக்கை

சங் 91:3 அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்.

91 அதிகாரம்

சங் 91:4 அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

கர்த்தருடைய மறைவிலும், நிழலிலும் இருக்கிறவர்களுக்கு அவர் செய்யும் காரியங்கள்

1. வேடனுடைய கண்ணிக்கு தப்புவிப்பார்
2. பாழாக்கும் கொள்ளை நோய்க்குத் தப்புவிப்பார்
3. அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார் (சங் 91:3-4)
4. அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய் (சங் 91:4)
5. அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும் (சங் 91:5)

"வேடனுடைய கண்ணி" - துன்மார்க்கர், வீழ்ந்துபோன தூதர்கள், பிசாசுகள் ஆகியோர் நீதிமான்களுக்கு எதிராக கண்ணியை வைக்கிறார்கள். நீதிமான்களை அழிப்பதே அவர்களுடைய நோக்கம். ஆனாலும், தேவன் நீதிமான்களைத் துன்மார்க்கருடைய கண்ணிகளிலிருந்து தப்புவிப்பார்.

கொள்ளைநோய் **(noisome pestilence)** - הַוָּה - hav-vaw' - 1942

பெபெ. சொ. - (தீய) ஆசை, (தீய) ஆவல் **(rushing calamity; one that sweeps everything before it)**

கர்த்தருடைய சிறகுகளும், செட்டைகளும், அவருடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும்குறிக்கும்வழக்குச்சொல்லாகும். (சங் 17:8; சங் 36:7; சங் 57:1; சங் 61:4; சங் 63:7; யாத் 19:4; ரூத் 2:12; ஏசா 40:31; மல் 4:2; மத் 23:37; லூக்கா 13:34; வெளி 12:14) அடைக்கலம் புகுவாய் (சங் 16:1)

"பரிசையும் கேடகமும்" - இவை சரீரத்தைப் பாதுகாக்கும். சத்துருவின் ஆயுதங்களுக்கு எதிராக ஒரு மனுஷனைப் பாதுகாக்கக்கூடியவை. கர்த்தருடைய சத்தியம் நீதிமான்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

3. அவருடைய பாதுகாப்பின் எட்டு அம்சங்கள்

சங் 91:5 இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,

சங் 91:6 இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

சங் 91:7 உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

சங் 91:8 உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

உன்னதமானவரின் மறைவில் தங்குவதினால் ஏற்படும் விளைவுகள்

1. இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கு பயப்படாதிருங்கள்
2. பகலில் பறக்கும் அம்புக்குப் பயப்படாதிருங்கள்
3. இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கு பயப்படாதிருங்கள் (சங் 91:6)
4. மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்குப் பயப்பாடாதிருங்கள்
5. உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது (சங் 91:7)
6. துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய் (சங் 91:8)

91 அதிகாரம்

"இரவில் உண்டாகும் பயங்கரம்" - இருட்டு நேரங்களில் கொள்ளை, கொலை, துன்மார்க்கமான காரியங்கள், வழிப்பறி, நோய்கள் ஆகியவை உண்டாகும். "பகலில் பறக்கும் அம்பு" - பகல் வேளையில் வரக்கூடிய ஆபத்துக்களை இந்த வாக்கியம் குறிக்கிறது.

"இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்" - கொள்ளைநோய்கள் பெரும்பாலும் இரவு வேளையிலேயே மனுஷரைத் தாக்கும். மற்ற சங்காரங்களெல்லாம் பகல்வேளையில் உண்டாகும். பகல் வேளையாக இருந்தாலும், இரவுவேளையாக இருந்தாலும், கொள்ளைநோயாக இருந்தாலும், வேறு எந்த நோயாக இருந்தாலும், உன்னதமானவருடைய மறைவில் தங்குபவர்களைக் கர்த்தர் பாதுகாத்துக் கொள்வார். அவர்கள் பக்கத்தில் ஆயிரம்பேரும், அவர்கள் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது தேவனுடைய பிள்ளைகளை அணுகாது. அவர்கள் கண்களால் மாத்திரம் அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பார்கள் (சங் 91:5-8).

4. அவருடைய வாசஸ்தலத்தின் ஆறு அம்சங்கள் - எட்டு ஆசீர்வாதங்கள்

சங் 91:9 எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்.

சங் 91:10 ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

சங் 91:11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

சங் 91:12 உன் பாதம் கல்லில் இடறாத படிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்.

சங் 91:13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்.

சங்கீதம் 91-இல் கூறப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிபந்தனைகள்

1. உன்னதமானவரின் மறைவில் வாசம் செய் - சர்வவல்லவருடைய நிழலில் தங்கு (சங் 91:1)
2. கர்த்தரே உன்னுடைய அடைக்கலம் (சங் 91:2)
3. கர்த்தரே உன் கோட்டை
4. கர்த்தரே உன் தேவன்
5. கர்த்தரே உன் நம்பிக்கை (சங் 91:2,4)
6. கர்த்தர், உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார் (சங் 91:3)
7. அவர் உன்னைப் பாதுகாப்பார் (சங் 91:4)
8. அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாக இருக்கும்.
9. பயங்கரத்துக்கும், அம்புக்கும், கொள்ளை நோய்க்கும், சங்காரத்துக்கும் பயப்படாதிருங்கள் (சங் 91:5-6)
10. உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், வாதை உன்னை அணுகாது (சங் 91:7-8)
11. கர்த்தரையே உன் அடைக்கலமாக்கிக் கொள் (சங் 91:9)
12. கர்த்தரை உன் தாபரமாகக்கொள்
13. கர்த்தரிடத்தில் வாஞ்சையாயிரு (சங் 91:14)
14. கர்த்தருடைய நாமத்தை அறிந்து கொள்
15. கர்த்தரை நோக்கிக்கூப்பிடு (சங் 91:15)

சங்கீதம் - தொகுப்புரை

91 அதிகாரம்

சங்கீதம் 91-இல் கூறப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்கள்

1. சர்வவல்லவருடைய நிழலில் தங்குவாய் (சங் 91:1)
2. வேடனுடைய கண்ணிக்கு உன்னை தப்புவிப்பார் (சங் 91:3)
3. பாழாக்கும் கொள்ளை நோய்க்கு தப்புவிப்பார்
4. அவர் தமது சிறகுகளால் உன்னை மூடுவார் (சங் 91:4)
5. அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்
6. இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கு பயப்படாதிருங்கள் (சங் 91:5)
7. பகலில் பறக்கும் அம்புக்கும் பயப்படாதிருங்கள்
8. இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கு பயப்படாதிருங்கள் (சங் 91:6)
9. மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருங்கள்
10. உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது (சங் 91:7)
11. உன் கண்களால் மாத்திரம் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய் (சங் 91:8)
12. பொல்லாப்பு உனக்கு நேரிடாது (சங் 91:10)
13. வாதை உன் கூடாரத்தை அணுகாது
14. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார் (சங் 91:11)
15. உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் (சங் 91:12)
16. சிங்கத்தின் மேலும் விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய் (சங் 91:13)
17. கர்த்தர் உன்னை விடுவிப்பார் (சங் 91:14, 15)
18. உன்னை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பார்
19. அவர் உனக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வார் (சங் 91:15)
20. ஆபத்துக்காலத்தில் அவர் உன்னோடு இருப்பார்
21. அவர், உன்னைத் தப்புவித்து உன்னைக் கனப்படுத்துவார் (சங் 91:16)
22. நீடித்த நாட்களால் உன்னைத் திருப்தியாக்குவார் (சங் 91:16)
23. அவருடைய இரட்சிப்பை உனக்குக் காண்பிப்பார்

இந்த சங்கீதத்தில் கூறப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்கள் பெரும்பாலும் கர்த்தருடையவை. ஒரு மனுஷனுக்கு ஏற்படும் எல்லா ஜீவிய தேவைகளையும், இம்மையிலும் மறுமையிலும் உண்டான மனுஷனுடைய தேவைகளையும் இந்த ஆசீர்வாதங்கள் கூறுகின்றன. பாவம், வியாதி, சாத்தான் ஆகியவற்றோடு மனுஷன் போராடிக் கொண்டிருக்கிறான். மனுஷனுடைய இந்த போராட்டத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவருடைய உதவி நிச்சயம் உண்டு. ஆதாம் பாவம் செய்தபிறகு தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வீழ்ச்சி அடைந்தான். அவன் மூலமாக மனுக்குலமும் பாவத்தில் வீழ்ந்தது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு இவ்வளவு நன்மைகளையும் செய்வதன் முக்கிய நோக்கம், பாவத்தில் வீழ்ந்த தமது பிள்ளைகளை மீட்டு அவர்களை மறுபடியும் தமது ஆசீர்வாதங்களினால் நிரப்பவேண்டும் என்பதே ஆகும்.

91 அதிகாரம்

"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" - இந்த வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் சாத்தான் மேற்கோளாக கூறினான் (மத் 4:6; லூக்கா 4:10). ஆனால் "உன் வழிகளிலெல்லாம்" **(in all thy ways)** என்னும் வாக்கியத்தை அவன் பயன்படுத்தவில்லை. இதனால் சாத்தான் கூறும்போது "எல்லா வேளைகளிலும்" **(at any time)** என்று பொருள்படுகிறது. சாத்தான் வசனத்தைத் திரித்துக் கூறுகிறவன். அதுமட்டுமல்ல, சங் 91:13-ஐயும் சாத்தான் கூறவில்லை. ஏனெனில் அந்த வசனம் சாத்தானுடைய தோல்வியைப் பற்றிக் கூறுகிறது. (ஆதி 3:16; லூக்கா 10:19)

"சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்" - தேவனுடைய பிள்ளைகளுக்குக் கொடிய விலங்குகள்மீதும் சர்ப்பங்கள்மீதும் அதிகாரம் உண்டு. அத்துடன் சாத்தானுடைய சகல அந்தகார சக்திகளின்மீதும் அதிகாரம் உள்ளது (ஆதி 3:15; மாற்கு 16:17-18; லூக்கா 10:19; வெளி 12:9).

5. அவருடைய பொருத்தனை - எட்டு ஆசீர்வாதங்கள்

சங் 91:14 அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன்.

சங் 91:15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

சங் 91:16 நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

92 அதிகாரம்

(ஓய்வுநாளின் பாட்டாகிய சங்கீதம்.)

நீதிமானின் ஐந்தாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனிடத்தில் அவனுக்குள்ள கடமையும், ஏழு அம்சமும் - (92:1-3)
2. நீதிமானின் தேவன் - துதிப்பதற்கு நான்கு காரணங்கள் - (92:4-5)
3. நீதிமானின் அயலகத்தார் - அவர்களுடைய அறியாமையின் ஐந்து அம்சமும், முடிவும் - (92:6-9)
4. நீதிமானின் ஒன்பது அம்ச ஆசீர்வாதம் - (92:10-14)
5. நீதிமான் ஜீவிப்பதின் நோக்கம் - (92:15)

1. தேவனிடத்தில் அவனுக்குள்ள கடமையும், ஏழு அம்சமும்

சங் 92:1 கர்த்தரைத் துதிப்பதும், உன்னதமானவரே, உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவதும்,

சங் 92:2 பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும், தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும்,

சங் 92:3 காலையிலே உமது கிருபையையும், இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்.

நலமாய் இருக்கும் காரியங்கள்

1. கர்த்தரை நோக்கித் துதித்தல் (சங் 92:1)
2. அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுதல்
3. நாள்தோறும் அவருடைய கிருபையை அறிவித்தல் (சங் 92:2)
4. அவருடைய சத்தியத்தையும் நாள்தோறும் அறிவித்தல்
5. பத்து நரம்பு வீணையினால் அவரைக் கீர்த்தனம் பண்ணுதல் (சங் 92:3)
6. தம்புருவினாலும் துதித்தல்
7. தியானத்தோடு வாசிக்கும் சுரமண்டலத்தினாலும் கர்த்தரைப் போற்றுதல்

"பத்துநரம்பு வீணையினாலும், தம்புருவினாலும்" - என்னும் வாக்கியம் 'பத்து நரம்புகளைக் கொண்ட தம்புரு என்னும் இசைக்கருவி' என்று பொருள்படும் (சங் 33:2; சங் 144:9).

தியானம் (solemn sound) - הִגָּיוֹן - hig-gaw-yone' - 1902

ஆண்பால் பெயர்ச்சொல் - தியானம், (meditation) ஆனந்த சத்தம், யோசனை - (சங் 92:3; சங் 9:16; சங் 19:14)

2. நீதிமானின் தேவன் - துதிப்பதற்கு நான்கு காரணங்கள்

சங் 92:4 கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன்.

சங் 92:5 கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. தம்முடைய செய்கைகளினால் என்னை மகிழ்ச்சியாக்கினார்
2. அவருடைய கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்திமிடுவேன்

92 அதிகாரம்

3. அவருடைய கிரியைகள் மகத்துவமானவைகள் (சங் 92:5)

4. அவருடைய யோசனைகள் மகா ஆழமானவைகள் (சங் 36:6; சங் 40:5; சங் 139:17; ரோமர் 11:33)

3. நீதிமானின் அயலகத்தார் - அவர்களுடைய அறியாஷமயின் ஐந்து அம்சமும், முடிவும்

சங் 92:6 மிருககுணமுள்ள மனுஷன் அதை அறியான்; மூடன் அதை உணரான்.

சங் 92:7 துன்மார்க்கர் புல்லைப்போல தழைத்து, அக்கிரமக்காரர் யாவரும் செழிக்கும்போது, அது அவர்கள் என்றென்றைக்கும் அழிந்து போவதற்கே ஏதுவாகும்.

சங் 92:8 கர்த்தாவே, நீர் என்றைன்றைக்கும் உன்னதமானவராய் இருக்கிறீர்.

சங் 92:9 கர்த்தாவே, உமது சத்துருக்கள் அழிவார்கள்; உமது சத்துருக்கள் அழிந்தே போவார்கள்; சகல அக்கிரமக்காரரும் சிதறுண்டு போவார்கள்.

துன்மார்க்கரைப் பற்றிய காரியங்கள்

1. அவர்கள் மிருககுணமுள்ளவர்கள்
2. கர்த்தருடைய சத்தியத்தை அறியாதவர்கள்
3. மூடர்கள்
4. அக்கிரமங்கள் செய்கிறவர்கள் (ரோமர் 92:7-8)
5. அவர்கள் கர்த்தருக்கு சத்துருக்களாய் இருப்பார்கள் (சங் 92:9)
6. அவர்கள் சிதறுண்டுபோவார்கள்
7. துன்மார்க்கர் புல்லைப்போல் தழைத்து, என்றென்றைக்கும் பூமியில் இல்லாமல் அழிந்தே போவார்கள் (சங் 92:7, 9)

அழி (destroyed) - שָׁמַד - shaw-mad' - 8045

வினைச்சொல் - அழி, சங்கரி, நாசப்படுத்து (to be cut off or destroyed from the earth) - (சங் 92:7; சங் 37:38; உபா 28:20, 24, 45, 48, 51, 61)

அழிந்து போ (perish) - אָבַד - aw-bad' - 6

வி.சொ.- அழிந்து போ, நாசமாகு சாவு,பெலனற்றுப்போ, ஒழிந்து போ, மாண்டுபோ, காணாமல் போ, சிதறடி, மிதித்துப்போடு, ஒழியப்பண்ணு நிர்மூலமாக்கு, நிர்த்துளியாக்கு, சங்காரம் பண்ணு, இல்லாமல் போ, மறைந்து போ, மடிந்து போ, தப்பித்துக்கொள், அவமாகு, அசுத்தமாய் போ, அற்றுப் போ, விட்டுப்போ, கெட்டுப்போ (to be lost; perish from off the earth) (சங் 92:9; சங் 10:16; ஏசா 57:1; மீகா 7:2).

4. நீதிமானின் ஒன்பது அம்ச ஆசீர்வாதம்

சங் 92:10 என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன்.

சங் 92:11 என் சத்துருக்களுக்கு நேரிடுவதை என் கண் காணும்; எனக்கு விரோதமாய் எழும்புகிற துன்மார்க்கருக்கு நேரிடுவதை என் காது கேட்கும்.

சங் 92:12 நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான்.

சங் 92:13 கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள்.

92 அதிகாரம்

சங் 92:14 கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப் பண்ணும்படி,

"என் கொம்பை உயர்த்துவீர்" - கொம்பு என்பது இராஜ்ஜியங்களையும் இராஜாவையும் குறிக்கும். (தானி 7:7-8, 19-24; தானி 8:20-23; வெளி 12:3; வெளி 13:1; வெளி 17:12-17) தனி மனிதர்களைப் பற்றி குறிக்கும்போது கொம்பு என்னும் சொல் வல்லமையையும், அதிகாரத்தையும் குறிக்கும். (யோபு 16:15; சங் 75:4-5; சங் 92:10; சங் 112:9; சங் 132:17)

சங்கீதக்காரனைப் பற்றி கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. என் கொம்பு (வல்லமை, அதிகாரம்) (சங் 92:10)
2. என்தலை - புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணுதல்
3. என் கண்கள் (சங் 92:11)
4. என் காது

சங்கீதம் 92-இல் கூறப்பட்டுள்ள நீதிமானுடைய ஆசீர்வாதங்கள்

1. நீதிமான் பனையைப்போல் செழித்து வளருவான். (சங் 92:12) பனைமரம் பலவிதத்திலும் ஜனங்களுக்குப் பயன்படும். தண்ணீர் வசதியில்லாத நிலத்தில்கூட பனைமரம் ஆழமான வேர்விட்டு வளரும். கிழக்கு தேசத்தில் வாழும் ஜனங்களக்கு பனம்பழம் ஒரு முக்கியமான உணவு. பனங்கொட்டைகளை அறைத்து ஒட்டகங்களுக்கு உணவாக தருவார்கள். பனைஓலைகளைக் கூடைகள் பின்னுவதற்கும், கூரை மேய்வதற்கும் பயன்படுத்துவார்கள். பனைமரத்திலிருந்து இறக்கப்படும் பதிநீர் மனுஷருடைய தாகம் தணிக்கும். பனைமரத்தின் நார் கயிறு திரிக்கவும், பனைமரம் கட்டிடம் கட்டுவதற்கும், விறகாக எரிப்பதற்கும் பயன்படும்.
2. நீதிமான் கேதுருவைப்போல் வளருவான். கேதுரு மரம் நீண்டகாலமாக வாழும் தன்மையுடையது. ஒரு சில கேதுரு மரங்கள் ஆயிரம்வருஷம் பழமையானவை. நூறு அடி உயரம்கூட வளரக்கூடியவை. கேதுரு மரத்தின் தண்டுப்பகுதியின் விட்டம் சுமார் 40 அடி வரையிலும்கூட பருமனாக இருக்கும். கேதுரு மரம் ஸ்திரத்தன்மை, நீடிய வாழ்வு, கெம்பீரம் ஆகியவற்றைக் குறிக்கும் சொல்.
3. நீதிமான்கள் கர்த்தருடைய ஆலயத்திலே செழித்திருப்பார்கள் (சங் 92:13)
4. நீதிமான்கள் முதிர்வயதிலும் கனி தருவார்கள் (சங் 92:14)
5. நீதிமான்கள் புஷ்டியும் பசுமையுமாய் இருப்பார்கள்

5. நீதிமான் ஜீவிப்பதின் நோக்கம்

சங் 92:15 அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்.

நீதிமான்கள் ஜனங்களுக்கு விளங்கப் பண்ணும் காரியங்கள்

1. கர்த்தர் உத்தமர் (சங் 92:14)
2. கர்த்தர் கன்மலை (சங் 92:15)
3. கர்த்தரிடத்தில் அநீதியில்லை

கர்த்தர் நீதியுள்ளவர். அவரிடத்தில் அநீதியில்லை. அவர் இரக்கமுள்ளவர். தமது வாக்குத்தத்தைக் காத்துக் கொள்வதில் உண்மையுள்ளவர். கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரைப் பற்றி உலகத்தாருக்கு அறிவிக்கும் போது கர்த்தருடைய குணங்களை ஜனங்களுக்கு விளங்கப்பண்ண வேண்டும்.

93 அதிகாரம்

தேவனுடைய இரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய ஐந்து குணாதிசயங்கள் - (93:1-2)

2. வல்லமையுள்ள நதிகள் - (93:3)

3. வல்லமையுள்ள தேவன் - தேவனுடைய இரண்டு குணாதிசயங்கள் - (93:4-5)

1. தேவனுடைய ஐந்து குணாதிசயங்கள்

சங் 93:1. கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார்; கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்; ஆதலால் பூச்சக்கரம் அசையாதபடி நிலைபெற்றிருக்கிறது.

சங் 93:2 உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அநாதியாயிருக்கிறீர்.

தீர்க்கதரிசன எண் - 73

"கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார்........................" (சங் 93:1-5) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பூமியில் கர்த்தர் தமது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

சங் 93; சங் 97; சங் 99 ஆகிய மூன்று சங்கீதங்களும் "கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்" என்று ஆரம்பமாகிறது.

இந்த சங்கீதங்கள் முடிவுறும்போது கர்த்தருடைய பரிசுத்தத்தை விவரித்துக் கூறுகிறது

1. பரிசுத்தமானது நித்திய நாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது (சங் 93:5)

2. கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள் (சங் 97:12)

3. அவர் நாமம் பரிசுத்தமுள்ளது (சங் 99:3)

4. தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர் (சங் 99:5,9; யாத் 15:11)

5. அவர் வாசம் செய்யும் பர்வதம் பரிசுத்தமுள்ளது (சங் 99:9; சங் 48:1; ஏசா 62:9; ஏசா 63:15)

கர்த்தர் பூமியிலே இராஜ்ஜியபாரம் பண்ணவரும்போது கர்த்தருக்கு பரிசுத்தம் உண்டாயிருக்கும். கர்த்தருடைய பரிசுத்தம் மனுஷருக்கு தெரியவரும். (சக 14:20-21; எரே 2:3; சங் 47:8; ஒப 1:17) பரிசுத்தமில்லாமல் தேவனை ஒருவனாலும் தரிசிக்க முடியாது (எபி 12:14).

சங்கீதம் 93-இல் தேவனைப் பற்றி கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார் (சங் 93:1)

2. மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார்

3. கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து கொண்டிருக்கிறார்

4. அவர், மகத்துவத்தையும், பராக்கிரமத்தையும் கச்சையாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்

5. பூச்சக்கரம் அசையாதபடி நிலைபெறச் செய்கிறார் (சங் 93:1; சங் 104:5; ஆதி 8:22; ஆதி 9:12; பிர 1:4; தானி 2:44-45; தானி 7:13-14, 18, 27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5)

93 அதிகாரம்

6. அவருடைய சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது (சங் 93:2)

7. கர்த்தரே, அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறார் (சங் 93:2; சங் 90:2)

8. தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப் பார்க்கிலும் கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர் (சங் 93:4)

9. அவருடைய சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவைகள் (சங் 93:5)

10. கர்த்தருடைய வாசஸ்தலம் பரிசுத்தமானது (சங் 93:5; சங் 99:9; ஏசா 62:9; ஏசா 63:15)

2. வல்லமையுள்ள நதிகள்

சங் 93:3 கர்த்தாவே, நதிகள் எழும்பின; நதிகள் இரைச்சலிட்டு எழும்பின; நதிகள் அலைதிரண்டு எழும்பின.

"நதிகள் அலைதிரண்டு எழும்பின" - இந்த வாக்கியம் பொதுவாக நதிகளுக்கு பயன்படுத்தப் படும். ஆனால் இங்கு சமுத்திரத்தின் அலைகளுக்கு பயன்படுத்தப் பட்டிருக்கிறது (சங் 93:4; சங் 104:1-9; யோபு 38:11).

3. வல்லமையுள்ள தேவன் - தேவனுடைய இரண்டு குணாதிசயங்கள்

சங் 93:4 திரளான தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப் பார்க்கிலும், கர்த்தர் உன்னிடத்திலே வல்லமையுள்ளவர்.

சங் 93:5 உமது சாட்சிகள் மிகவும் உண்மையுள்ளவைகள்; கர்த்தாவே, பரிசுத்தமானது நித்தியநாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது.

"திரளான தண்ணீர்களின் இரைச்சல்" - தேவனுடைய சப்தத்தை விவரிப்பதற்கு இந்த வாக்கியம் வேதாகமத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (வெளி 1:15; வெளி 14:2; வெளி 19:6).

"சாட்சிகள்" (testimonies) இது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கும். தேவன் வெளிப்படுத்தியிருக்கிற சத்தியங்களைக் குறிக்கும்.

94 அதிகாரம்

நியாயத்தீர்ப்புக்காக பத்தாவது ஜெபம்

பொருளடக்கம்

1. நியாயத்தீர்ப்புக்காக மூன்று விண்ணப்பங்கள் - காரணங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள் - (94:1-7)
2. துன்மார்க்கனைக் கடிந்துரைத்தல் - (94:8-11)
3. நீதிமானின் பத்து ஆசீர்வாதங்கள் - (94:12-19)
4. துன்மார்க்கனின் ஐந்து பாவங்களும், நியாயத்தீர்ப்புகளும் - (94:20-23)

1. நியாயத்தீர்ப்புக்காக மூன்று விண்ணப்பங்கள் - காரணங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள்

சங் 94:1 நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே, நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே, பிரகாசியும்.

சங் 94:2 பூமியின் நியாயாதிபதியே, நீர் எழுந்து, பெருமைக்காரருக்குப் பதிலளியும்.

சங் 94:3 கர்த்தாவே, துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்து, துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்?

சங் 94:4 எதுவரைக்கும் அக்கிரமக்காரர் யாவரும் வாயாடி, கடினமாய்ப் பேசி, பெருமை பாராட்டுவார்கள்?

சங் 94:5 கர்த்தாவே, அவர்கள் உமது ஜனத்தை நொறுக்கி, உமது சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள்.

சங் 94:6 விதவையையும் பரதேசியையும் கொன்று, திக்கற்ற பிள்ளைகளைக் கொலைசெய்து:

சங் 94:7 கர்த்தர் பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள்.

நீதியைச் சரிக்கட்டுகிறது பற்றிய காரியங்கள்

1. பழிவாங்குவதும் பதிலளிப்பதும் கர்த்தருக்கே உரியது (சங் 94:1; உபா 32:35; ரோமர் 12:19; எபி 10:30)
2. கர்த்தர், தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளிப்பார் (ஆதி 4:15; உபா 32:43; நியா 11:36)
3. கர்த்தர், தம்முடைய சத்துருக்களைப் பழிவாங்கி, அவர்களுக்கு பதிலளிப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (உபா 32:41-43; சங் 149:7; ஏசா 34:8)
4. பழிக்குப்பழி வாங்காமலிருங்கள் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். அதைக் கர்த்தருடைய கைகளுக்கு விட்டு விடுங்கள் (லேவி 19:18; ரோமர் 12:19; எபி 10:30)
5. கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நாள், நீதியைச் சரிக்கட்டும் நாளாக இருக்கும் (ஏசா 61:2; ஏசா 63:4; எரே 50:15, 28; எரே 51:6,11; 2தெச 1:8)
6. பாதாளத்தில் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியில் சபிக்கப் பட்டவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடைவார்கள் (மத் 25:41, 46; யூதா 1:6-7)

பிரகாசி(shine) - யஃபா - yaw-fah' - 3313

வினைச்சொல் - பிரகாசி, பிரகாசிக்கப் பண்ணு, கிருபையாய்ப்பார், ஒளி (shine forth) (சங் 94:1; சங் 50:2; சங் 80:1).

துன்மார்க்கரின் பாவங்கள்

1. பெருமை (சங் 94:2)

94 அதிகாரம்

2. வாயாடி, கடினமாய்ப் பேசுதல் (சங் 94:4)

3. அக்கிரமம் செய்தல்

4. தனக்குத்தானே பெருமை பாராட்டுவார்கள்

5. அவர்கள், கர்த்தருடைய ஜனங்களை நொறுக்குகிறார்கள் (சங் 94:5)

6. கர்த்தருடைய ஜனங்களின் சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள்

7. விதவைகளைக் கொலை செய்கிறார்கள் (சங் 94:6)

8. பரதேசிகளைக் கொலை செய்கிறார்கள்

9. திக்கற்ற பிள்ளைகளைக் கொலை செய்கிறார்கள்

10. கர்த்தர் பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள் (சங் 94:7)

"யாக்கோபின் தேவன்" - கிருபையுள்ள தேவன் (ஆதி 28)

2. துன்மார்க்கனைக் கடிந்துரைத்தல்

சங் 94:8 ஜனத்தில் மிருக குண முள்ளவர்களே, உணர்வடையுங்கள்; மூடரே, எப்பொழுது புத்தி மான்களாவீர்கள்?

சங் 94:9 காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?

சங் 94:10 ஜாதிகளைத் தண்டிக்கிறவர் கடிந்து கொள்ளாரோ? மனுஷனுக்கு அறிவைப் போதிக்கிறவர் அறியாரோ?

சங் 94:11 மனுஷனுடைய யோசனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்.

"காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?" - தேவன் இருக்கிறார். அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர். தேவனுடைய சிருஷ்டிப்பு எவ்வளவு உண்மையோ அவ்வளவு அவர் இருக்கிறார் என்பதும் உண்மையே. தேவன் தம்முடைய பிள்ளைகளில் பலருக்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் ஓர் ஆள்தத்துவமுடைய நபராகத் தம்மைப் பலருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆதாம், ஏவாள் (Adam and Eve) (ஆதி 2:7, 19-22); காயீன் (Cain) (ஆதி 4:6, 9, 16); ஆபிரகாம் (Abraham) (ஆதி 17:1-22; ஆதி 18:1, 22; ஆதி 19:1); ஈசாக்கு (Isaac) (ஆதி 26:2-4, 24); யாக்கோபு (Jacob) (ஆதி 28:12-15; ஆதி 32:24-32; ஆதி 35:1); மோசே (Moses) (யாத் 3:1-4; யாத் 24:12-18; யாத் 33:9-11); யோசுவா (Joshua) (யோசு 5:13-15); சாமுவேல் (Samuel) (1சாமு 3:10,21) எலியா (Elijah) (1இராஜா 19:11-18); தாவீது (David) (1நாளா 21:16-17; 2நாளா 3:1); ஏசாயா (Isaiah) (ஏசா 6)

தேவனைப் பற்றிய சத்தியங்கள்

1. ஆள்தத்துவப் பண்புடையவர் (யோபு 13:8; எபி 1:3)

2. ஆவியானவர் (தானி 7:9-14; தானி 10:5-19; ஏசா 6; எசே 1; வெளி 4)

3. ரூபம் (Shape) (யோவான் 5:37)

4. ரூபம் (Form) (பிலி 2:5-7)

5. சாயல், ரூபம் (Image and likeness) (ஆதி 1:26; ஆதி 9:6; 1கொரி 11:7; யாக் 3:9)

6. பின்பக்கம் (யாத் 33:23)

7. இருதயம் (ஆதி 6:6; ஆதி 8:21)

8. கரம் (சங் 102:25-26; எபி 1:10)

94 அதிகாரம்

9. விரல்கள் (சங் 8:3-6; யாத் 31:18)

10. வலதுகரம் (வெளி 5:1-7)

11. வாய் (எண் 12:8; ஏசா 1:20)

12. உதடுகள் (ஏசா 11:4; ஏசா 30:27)

13. நாவு (ஏசா 30:27)

14. பாதம் (யாத் 24:10; எசே 1:27)

15. கண் (சங் 11:4; சங் 18:24; சங் 33:18)

16. காது (சங் 18:6; சங் 34:15)

17. சிரசு (தானி 7:9)

18. சிரசின் மயிர் (தானி 7:9)

19. புயம் (சங் 44:3; யோவான் 12:38)

20. இடுப்பு (எசே 1:26-28; எசே 8:1-4)

21. சத்தம் (சங் 29; வெளி 10:3-4)

22. ஜீவசுவாசம் (ஆதி 2:7)

23. முகம் (சங் 11:7)

24. ஆத்துமா (மத் 12:18; எபி 10:38)

25. மனஸ்தாபம் (ஆதி 6:6)

26. கோபம் (1இராஜா 11:9)

27. விசனப்படுதல் (ஆதி 6:6)

28. எரிச்சல் (யாத் 20:5; யாத் 34:14)

29. வெறுத்தல் (நீதி 6:16)

30. அன்பு (யோவான் 3:16)

31. இரங்குதல் (சங் 103:13)

32. ஐக்கியம் (1யோவான் 1:1-7)

33. விருப்பம், பிரியம் (சங் 147:10)

34. மகிழ்ச்சி (நெகே 8:10; கலா 5:22)

35. சமாதானம் (கலா 5:22)

36. நீடிய பொறுமை (கலா 5:22)

37. தயவு (கலா 5:22)

38. நற்குணம் (கலா 5:22)

39. விசுவாசம் (கலா 5:22)

40. சாந்தம் (கலா 5:23)

41. இச்சையடக்கம் (கலா 5:23)

42. ஆவி (சங் 143:10; ஏசா 30:1)

43. ஆவியின் சிந்தை (ரோமர் 11:34)

44. ஞானம் (ஆதி 1:26; ரோமர் 11:33)

45. சித்தம் (ரோமர் 8:27; ரோமர் 9:19)

46. வல்லமை (எபே 1:19; எபே 3:7,20; எபி 1:3)

47. சத்தியம் (சங் 91:4)

48. விசுவாசம் (ரோமர் 4:17; ரோமர் 12:3)

49. நம்பிக்கை (1கொரி 13:13)

50. நீதி (சங் 45:4)

51. உண்மை (1கொரி 10:13)

52. அறிவு (ஏசா 11:2)

53. ஞானம் (1தீமோ 1:17)

54. வகையறுத்தல் (எபி 4:12)

55. மாறாதது (எபி 6:17)

56. வஸ்திரம் அணிந்திருக்கிறார் (தானி 7:9-14)

57. புசித்தல் (ஆதி 18:1-8; யாத் 24:11)

58. இளைப்பாறுதல் (ஆதி 2:1-4; எபி 4:4)

59. வாசம் பண்ணுதல் (யோவான் 14:1-3)

94 அதிகாரம்

60. சிங்காசனத்தில் வீற்றிருத்தல் (ஏசா 6; தானி 7:9-11)

61. நடத்தல் (ஆதி 3:8; ஆதி 18:1-8, 22, 33)

62. ஏறுதல் (சங் 18:10; சங் 68:17; எபே 1)

3. நீதிமானின் பத்து ஆசீர்வாதங்கள்

சங் 94:12 கர்த்தாவே, துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும் வரைக்கும், நீர் தீங்குநாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி,

சங் 94:13 சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்.

சங் 94:14 கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்.

சங் 94:15 நியாயம் நீதியினிடமாகத் திரும்பும்; செம்மையான இருதயத்தார் யாவரும் அதைப் பின்பற்றுவார்கள்.

சங் 94:16 துன்மார்க்கருக்கு விரோதமாய் என் பட்சத்தில் எழும்புகிறவன் யார்? அக்கிரமக்காரருக்கு விரோதமாய் என் பட்சத்தில் நிற்பவன் யார்?

சங் 94:17 கர்த்தர் எனக்குத் துணையிராவிட்டால், என் ஆத்துமா சீக்கிரமாய் மவுனத்தில் வாசம் பண்ணியிருக்கும்.

சங் 94:18 என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது.

சங் 94:19 என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது.

நீதிமானின் ஆசீர்வாதங்கள்

1. தேவனால் சிட்சிக்கப்படுகிறார்கள். (சங் 94:12; எபி 12:5-11)
2. வேதத்தைக் கொண்டு போதிக்கப் படுகிறான். (சங் 94:12)
3. தீங்கு நாட்களில் கர்த்தர் பாதுகாக்கிறார். (சங் 94:13)
4. ஜீவநாளெல்லாம் அமர்ந்திருக்கப் பண்ணுகிறார்.
5. பாதுகாப்பும், பராமரிப்பும்
6. தேவனுடைய உண்மை (சங் 94:14)
7. நீதி (சங் 94:15)
8. துன்மார்க்கருக்கு விரோதமாகப் பாதுகாக்கிறார் (சங் 94:16)
9. அக்கிரமக்காரருக்கு விரோதமாகப் பாதுகாக்கிறார்
10. எல்லா வேளையிலும் துணையாய் இருக்கிறார் (சங் 94:17)

"கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது" - தேவன் நம்மால் தாங்கிக் கொள்வதற்கு அதிகமாக நம்மைச் சோதிக்க மாட்டார். (1கொரி 10:13) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய உண்மையை விவரிப்பதற்கு இந்த வாக்கியம் பயன்படுத்தப் பட்டது.

"என் உள்ளத்தில் விசாரங்கள்" - (My griefs, sorrows, and perplexities) - (2கொரி 1:5)

ஆறுதல்(comforts) - תַּנְחוּם - tan-khoom', tan-khoom', tan-khoo-maw' - 8575

பெ.பெ.சொ. - ஆறுதல், தேற்றரவு பண்ணுதல் (consolation) - (யோபு 15:11; யோபு 21:2; ஏசா 66:11; எரே 16:7)

94 அதிகாரம்

4. துன்மார்க்கனின் ஐந்து பாவங்களும், நியாயத் தீர்ப்புகளும்

சங் 94:20 தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம் உமக்கு இசைந்திருக்குமோ?

சங் 94:21 அவர்கள் நீதிமானுடைய ஆத்துமாவுக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, குற்றமில்லாத இரத்தத்தைக் குற்றப்படுத்துகிறார்கள்.

சங் 94:22 கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன் மலையுமாயிருக்கிறார்.

சங் 94:23 அவர்களுடைய அக்கிரமத்தை அவர்கள்மேல் திருப்பி, அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களைச் சங்கரிப்பார்; நம்முடைய தேவனாகிய கர்த்தரே அவர்களைச் சங்கரிப்பார்.

"தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம் உமக்கு இசைந்திருக்குமோ?" - துன்மார்க்கமான நியாயாதிபதிகளும், இராஜாக்களும், அதிகாரிகளும் தேவனோடு ஐக்கியமாக இருக்க முடியுமா. இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக தீங்கு நினைக்கிறார்கள். தீங்கு செய்கிறார்கள்.

கொடுமை (mischief) - עָמָל - aw-mawl' - 5999

ஆ.பெ.சொ. - அக்கிரமம், வருத்தம், அநியாயம், சஞ்சலம், அலட்டுண்டாக்குதல், தீவினை, குரோதம், வாதை, பிரயாசம், சிறுமை, தீமை, கொடுமை, தொல்லை (trouble, labor, toil)

துன்மார்க்கர்கள் நீதிமானுடைய ஆத்துமாவுக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, குற்றமில்லாத இரத்தத்தைக் குற்றப் படுத்துகிறார்கள். எங்கெல்லாம் தீமையிருக்கிறதோ அங்கெல்லாம் துன்மார்க்கர் கூட்டம் கூடிவிடுவார்கள். கர்த்தர் துன்மார்க்கரை அவர்களுடைய பொல்லாப்பின் நிமித்தம் சங்கரிப்பார். (சங் 94:23)

துன்மார்க்கரின் பாவங்கள்

1. அவர்கள் அக்கிரமம் பண்ண ஆலோசனை பண்ணுகிறார்கள் (சங் 94:20).
2. நீதிமானுடைய ஆத்துமாவுக்கு விரோதமாகக் கூட்டங்கூடுகிறார்கள் (சங் 94:21).
3. குற்றமில்லாத இரத்தத்தைக் குற்றப்படுத்துகிறார்கள்.

தேவன் நீதிமானுக்கு எப்படியிருக்கிறார்?

1. அடைக்கலம்
2. தேவன்
3. நம்பியிருக்கிற கன்மலை

தேவன் நீதிமான்களுக்கு சாதாரண அடைக்கலமாக மட்டுமல்ல. அவர்களுக்கு ஒரு கன்மலையாக இருக்கிறார். (a strong, rock refuge) (சங் 31:2)

95 அதிகாரம்

ஐந்தாவது துதியின் சங்கீதம் - (எபி 4:5-11)

பொருளடக்கம்

1. உண்மையான ஆராதனையில் அமைதி உள்ளது - எட்டு கடிந்துரைகள் - ஆராதிப்பதற்கு பத்து காரணங்கள் - (95:1-7)
2. அவிசுவாசத்தின் மூலமாக அமைதி இழந்துபோகிறது - (95:8-11)

1. உண்மையான ஆராதனையில் அமைதி உள்ளது - எட்டு கடிந்துரைகள் - ஆராதிப்பதற்கு பத்து காரணங்கள்

சங் 95:1 கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

சங் 95:2 துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

சங் 95:3 கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாய் இருக்கிறார்.

சங் 95:4 பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

சங் 95:5 சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந் தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.

சங் 95:6 நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

சங் 95:7 அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

சங்கீதம் 95-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தரை நோக்கிக் கெம்பீரமாய்ப் பாடக்கடவோம், வாருங்கள் (சங் 95:1).
2. நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணுவோம்.
3. துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வாருங்கள் (சங் 95:2).
4. சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடுவோம்.
5. நம்மை உண்டாக்கின கர்த்தரை ஆராதிப்போம், வாருங்கள் (சங் 95:6).
6. பணிந்து குனிவோம்.
7. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக முழங்காற்படியிடுவோம்.
8. இன்று, அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், உங்கள் இருதயத்தைக் கடினப் படுத்தாதேயுங்கள் (சங் 95:7-8).

சங்கீதம் பாடும்போது நாம் கெம்பீர சத்தத்தோடு பாடவேண்டும். (சங் 95:1-2; சங் 96:1-3)

"இரட்சணியக் கன்மலை" - கர்த்தர் நாம் நம்புகிற கன்மலை மட்டுமல்ல. அவர் நம்முடைய இரட்சணியக் கன்மலையாகவும் இருக்கிறார். அவருடைய இரட்சணியம் வல்லமையுள்ளது. (சங் 31:2; எபி 7:25)

சந்நிதி (presence) - פָּנִים - paw-neem' - 6440

ஆண்பால் பெயர்ச்சொல் - சந்நிதி (face; countenance)

95 அதிகாரம்

தேவனை ஆராதிப்பதற்குக் காரணங்கள்

1. யெகோவா மகாதேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாய் இருக்கிறார் (சங் 95:3).
2. பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது (சங் 95:4).
3. பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.
4. சமுத்திரம் அவருடையது (சங் 95:5).
5. சமுத்திரத்தை அவரே உண்டாக்கினார்.
6. வெட்டாந்தரையும் அவருடையவைகள்.
7. அவர் நம்மை உண்டாக்கினார் (சங் 95:6).
8. அவர் நம்முடைய தேவன் (சங் 95:7).
9. நாம், அவர் மேய்ச்சலின் ஜனங்கள்
10. நாம், அவர் கைக்குள்ளான ஆடுகள்.

தேவர்கள் (gods)- אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர். (சங் 82:1)

"பூமியின் ஆழங்கள்" - கர்த்தர் ஆழங்களுக்கும் தேவன். உயர்ந்த பர்வதங்களும் தேவன்.

"சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று" - சமுத்திரமும் வெட்டாந்தரையும் கர்த்தருடைய சிருஷ்டிப்பு. தேவன் அவற்றை தமது கரத்தினால் உருவாக்கினார். (சங் 95:5; சங் 8:3, 6; சங் 102:25)

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்" - எபி 3:7-11; எபி 4:7 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. அவிசுவாசத்தின் மூலமாக அமைதி இழந்துபோகிறது - (எபி 4:5-11)

சங் 95:8 இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

சங் 95:9 அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.

சங் 95:10 நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

சங் 95:11 என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

"வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல" - இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் தேவனுக்கு கோபமூட்டினார்கள். (யாத் 17:7; எண் 20:13)

"நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்தேன்". (எண் 14:26-35; உபா 1:27-36)

96 அதிகாரம்

ஆறாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டும் என்னும் எச்சரிப்பின் ஏழு அம்சங்கள் - (96:1-3)
2. துதிப்பதற்கான காரணத்தின் ஏழு அம்சங்கள் - (96:4-6)
3. தேவனைத் துதிக்க வேண்டும் என்னும் எச்சரிப்பின் பன்னிரெண்டு அம்சங்கள் - (96:7-12)
4. துதிப்பதற்கான காரணத்தின் நான்கு அம்சங்கள் - (96:13)

1. தேவனைத் துதிக்க வேண்டும் என்னும் எச்சரிப்பின் ஏழு அம்சங்கள்

சங் 96:1 கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்.

சங் 96:2 கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

சங் 96:3 ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.

சங்கீதம் 96-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் (சங் 96:1).
2. பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்.
3. கர்தததரை நோக்கி பாடுங்கள் (சங் 96:2).
4. அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.
5. நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.
6. ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையை அறிவியுங்கள் (சங் 96:3).
7. சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களை விவரித்துச் சொல்லுங்கள்.
8. கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள் (சங் 96:7).
9. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்துங்கள் (சங் 96:8).
10. காணிக்கைகளைக் கொண்டு வாருங்கள்.
11. அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள்.
12. பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் (சங் 96:9)
13. பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்
14. கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள் (சங் 96:10).
15. பூச்சக்கரம் (பூமி) அசையாதபடி உறுதிப் பட்டிருக்கும் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.
16. அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந் தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.
17. வானங்கள் மகிழட்டும் (சங் 96:11).
18. பூமி பூரிப்படையட்டும்.
19. சமுத்திரம் முழங்கட்டும்
20. நாடு களிகூருவதாக (சங் 96:12).
21. நாட்டிலுள்ள யாவும் களிகூருவதாக.

96 அதிகாரம்

"நாளுக்கு நாள்" - தேவன் ஒவ்வொரு நாளும் கிரியை செய்கிறார். வாரத்தில் ஏழு நாட்களும் தேவன் கிரியை நடப்பித்து வருகிறார். தேவனுடைய ஒய்வுநாள் பிரமாணமும், அதன் நோக்கமும் பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குரியது. ஆதாம் பாவம் செய்த நாளிலிருந்து மனுக்குலம் பாவத்தில் விழுந்து விட்டது. அவர்களை மறுபடியும் மீட்டு, தம்முடைய ஆளுகையின்கீழ் கொண்டுவருவதற்காக வாரத்தின் ஏழுநாட்களும் கர்த்தர் நமக்காக கிரியை செய்து வருகிறார்.

அநுதினமும் மனுஷன் செய்ய வேண்டிய காரியங்கள்

1. பொருத்தனைகளைச் செலுத்துங்கள் (சங் 61:8)
2. ஜெபம் பண்ணுங்கள் (சங் 86:3; சங் 88:9; மத் 6:11)
3. கர்த்தரைத் தேடுங்கள் (ஏசா 58:2; லூக்கா 18:1-8)
4. தேவனை ஸ்தோத்திரியுங்கள் (சங் 72:15)
5. தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொள்ளுங்கள் (லூக்கா 9:23).
6. பரிசுத்தத்தில் ஜீவியுங்கள் (லூக்கா 1:75).
7. ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருங்கள் (அப் 2:46).
8. தினம் தினம் நியாயப் பிரமாண புஸ்தகம் வாசியுங்கள் (நெகே 8:18).
9. தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் (அப் 17:11)
10. நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் (எபி 3:13)

"ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்" - நாம் அநுதினமும் கர்த்தருடைய இரட்சிப்பை ஜனங்கள் மத்தியில் அறிவிக்க வேண்டும். சுவிசேஷ பிரபலியத்தின் ஒரு பகுதியே இந்த வசனமாகும். (சங் 96:2- 3)

2. துதிப்பதற்கான காரணத்தின் ஏழு அம்சங்கள்

சங் 96:4 கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே.

சங் 96:5 சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்.

சங் 96:6 மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது, வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது.

கர்த்தருடைய புத்திமதிகளுக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டுமென்பதற்கு காரணங்கள்

1. கர்த்தர் பெரியவர் (சங் 96:4).
2. மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்.
3. எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர்.
4. மற்ற தேவர்கள் அனைத்தும் விக்கிரகங்கள் (சங் 96:5).
5. கர்த்தர் வானங்களை உண்டாக்கினார்.
6. மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது (சங் 96:6).
7. வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது.
8. அவருடைய நாமம் மகிமையானது (சங் 96:8).
9. அவர் பரிசுத்தமானவர் (சங் 96:9).
10. ஜாதிகளை ராஜரிகம் பண்ணுகிறார் (சங் 96:10).

96 அதிகாரம்

11. என்றைக்கும் நிலைத்திருக்கும்படி பூமியை உறுதிப்படுத்துகிறார்

12. நிதானமாய் நியாயந்தீர்ப்பார்.

13. அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார் (சங் 96:13).

14. அவர் பூலோகத்தை நீதியோடு நியாயந்தீர்ப்பார்.

தேவன் (gods) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெசொ. - தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர். (சங் 82:1)

விக்கிரகம் (idols) - אֱלִיל - el-eel' - 457

ஆ.பெசொ.- விக்கிரகம், உதவாதது (nothings; vanities; emptinesses; things of naught) (1கொரி 8:4)

"மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது, வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது" - தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை இஸ்ரவேலர்கள் தங்களுடைய பிரயாணத்தின்போது தங்களோடு தூக்கிச்சென்ற காரியத்தை இந்த வசனம் விளக்குகிறது. (சங் 78:60-61)

3. தேவனைத் துதிக்க வேண்டும் என்னும் எச்சரிப்பின் பன்னிரெண்டு அம்சங்கள்

சங் 96:7 ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

சங் 96:8 கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

சங் 96:9 பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.

சங் 96:10 கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்; அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லுங்கள்.

சங் 96:11 வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக.

சங் 96:12 நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக; அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டுவிருட்சங் களெல்லாம் கெம்பீரிக்கும்.

தீர்க்கதரிசன எண் - 74

"ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்..................." (சங் 96:7-13) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

ஆயிர வருஷ அரசாட்சியில் கர்த்தர் பூமியில் அரசாட்சி செய்யும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். எல்லா தேசமும் கர்த்தருக்கு மகிமையைச் செலுத்த வேண்டும். கர்த்தருடைய பிரகாரத்திலிருந்து அவருடைய நாமத்திற்குரிய காணிக்கைகளைச் செலுத்த வேண்டும். (சங் 96:7-8) துவக்கத்தில் எல்லா ஜாதிகளும் எருசலேமிலுள்ள தமது தேவாலயத்தில் தம்மைத் துதிக்க வேண்டுமென்று கர்த்தர் சித்தம் கொண்டிருந்தார் (மாற்கு 11:17). ஆனால் இஸ்ரவேலரோ தேவனுடைய மகத்துவத்தை புறஜாதியாருக்கு அறிவிக்க தவறிவிட்டார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களைத் தாங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் உணர்வே அவர்களுக்கு இல்லை. ஆபிரகாமின் வித்து பூமியிலுள்ள எல்லா ஜாதியாருக்கும் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும். ஆனால் யூதர்களோ உண்மையான தேவனை மட்டும் ஆராதிப்பதற்குப் பதிலாக புறஜாதி தெய்வங்களையும் ஆராதித்து, தேவனுடைய சித்தத்தில் பங்கற்றுப்போனார்கள் (ஆதி 12:1-3; கலா 3:8). புறஜாதியாரையும் இரட்சிக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தம் (ரோமர் 9:14-33).

96 அதிகாரம்

"பூலோகத்தாரே.... பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்" - இஸ்ரவேலர்கள் மட்டுமே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள் என்றால் பூமியிலுள்ள எல்லா ஜாதிகளும் கர்த்தரை எப்படி தொழுதுகொள்வார்கள்? ஆகையினால் புறஜாதியாரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாக இருந்தது.

"கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்" - மேசியாவின் ஆளுகையின்போது புறஜாதியார் எருசலேமிற்குச் சென்று உண்மையான தேவனை ஆராதனை செய்வார்கள் (ஏசா 2:2-4; சக 14:16-21).

பூச்சக்கரம் (world) - תֵּבֵל - tay-bale' - 8398

பெ.பெ.சொ. - பூமி, பூதலம், பூச்சக்கரம், உலகம், பூலோகம் **(the habitable world or social system He has established forever)** (சங் 96:10; 1சாமு 2:8; 1சாமு 22:16; 1நாளா 16:30; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:20; தானி 2:44-45; தானி 7:13-14, 18, 27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5)

"அவர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார்" - மேசியா பூமியை ஆளுகை செய்யும்போது கர்த்தர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார். இவை தீர்க்கதரிசனமான காரியங்கள். மேசியாவின் ஆளுகையின்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் (ஏசா 11:3-9).

"வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக" - பூமியிலே மேசியாவும், கர்த்தரும் ஆளுகை செய்வதினால் பூமியும், வானங்களும் பூரிப்பாக முழங்கும் என்று சங் 96:11-12 ஆகிய வசனங்கள் கூறுகின்றன (சங் 96:10, 13; சங் 93:1; சங் 96:1; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14, 18, 27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5).

4. துதிப்பதற்கான காரணத்தின் நான்கு அம்சங்கள்

சங் 96:13 அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

"அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிப்பிடுகிறது. இங்கு கூறப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு அல்ல. இது தேசங்களின் நியாயத்தீர்ப்பு ஆகும் (மத் 25:31-46). அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்க்கும் காரியம் கிறிஸ்துவும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் தேசங்களை ஆட்சிபுரியும் போது நடைபெறும் (ஏசா 1:25-31; ஏசா 2:1-4; ஏசா 11:3-9; தானி 7:13-14; சக 14; 1கொரி 6:2-3; வெளி 1:5; வெளி 5:10; வெளி 20:4-6).

97 அதிகாரம்

ஏழாவது துதியின் சங்கீதம் - மனுஷனுடைய ஏழு காரியங்கள்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு எச்சரிப்புகள் - தேவனுடைய மகத்துவத்தின் பத்து அம்சங்கள் - *(97:1-6)*

2. விக்கிரக ஆராதனைக்காரர் மீது சாபம் - தேவனை ஆராதிக்க வேண்டும் என்னும் எச்சரிப்பு - மூன்று காரணங்கள் - *(97:7-9)*

3. பாவத்தை வெறுக்க வேண்டும் என்னும் எச்சரிப்பு - ஐந்து காரணங்கள் - *(97:10-11)*

4. தேவனைத் துதிக்க வேண்டுமென்னும் இரண்டு எச்சரிப்புகள் - காரணம் - *(97:12)*

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு எச்சரிப்புகள் - தேவனுடைய மகத்துவத்தின் பத்து அம்சங்கள்

சங் 97:1 கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது.

சங் 97:2 மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது; நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்.

சங் 97:3 அக்கினி அவருக்கு முன்சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது.

சங் 97:4 அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி அதைக் கண்டு அதிர்ந்தது.

சங் 97:5 கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப் போயிற்று.

சங் 97:6 வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது; சகல ஜனங்களும் அவருடைய மகிமையைக் காண்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 75

"கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக் கடவது......................" *(சங் 97:1-12)* - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பூமியில் கர்த்தரும், கிறிஸ்துவும் ஆளுகை செய்யும்போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும்.

ஆயிர வருஷ அரசாட்சியில் நடைபெறும் காரியங்கள்

1. சகல ஜாதிகளும், கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துகின்றன *(சங் 96:7-8)*.

2. எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்துத் தொழுது கொள்கின்றன *(சங் 96:8-9; ஏசா 2:1-4; சக 14:16-21)*.

3. பூலோகத்தார், அனைவரும் கர்த்தருக்கு முன்பாக நடுங்குகிறார்கள் *(சங் 96:9; ஏசா 2:1-4; ஏசா 52:7; ஏசா 66:19-21; சக 8:23; சக 14:16-21; மத் 24:31; மத் 25:31:46)*.

4. சீயோனில், கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் என்று தூதர்கள் ஜனங்களுக்குள்ளே அறிவிக்கிறார்கள் *(சங் 96:10; ஏசா 2:2-4; ஏசா 52:7; சக 8:23)*.

97 அதிகாரம்

5. யுத்தங்கள், பயங்கரங்கள், எந்த விதமான பயங்களினாலும் பூச்சக்கரம் அசையாத படி, உறுதிப்பட்டிருக்கும் (சங் 96:10; ஏசா 2:2-4; ஏசா 11:3-9; ஏசா 35:1-10; சக 14).

6. ஜனங்கள் சத்தியத்தோடும் நியாயத்தோடும் நியாயந் தீர்க்கப்படுவார்கள் (சங் 96:10, 13; ஏசா 2:2-4; ஏசா 11:3-9; சக 14).

7. வானங்கள் மகிழ்ந்து, அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது. பூமி பூரிப்படைகிறது (சங் 96:11; சங் 97:6; ஏசா 2:2-4; ஏசா 11:3-9; மத் 6:10).

8. மேசியா ராஜரிகம் பண்ணுகிறதினிமித்தம் பூமி பூரிப்பாகி, அதிலுள்ள யாவும் களிகூருகின்றன (சங் 96:11-12; சங் 97:1; ஏசா 2:2-4; ஏசா 11:3-9; ஏசா 35:1-10; ஏசா 65:20-25).

9. நீதியினாலும் சத்தியத்தினாலும் பூலோகம் நிறைந்திருக்கிறது (சங் 96:13; சங் 97:2; ஏசா 2:2-4; ஏசா 11:3-9; ஏசா 35:1-10).

10. சத்துருக்கள் அழிக்கப்படுவார்கள் (சங் 97:3; எசே 38:17-21; மல் 4:1-12; 1கொரி 15:24-28; 2தெச 1:7-10; வெளி 20:7-10).

11. பூமியின் மீது மிக பெரிய மாற்றம் உண்டாகி, ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போகும் (சங் 97:4-5; ஏசா 35; சக 14:4; மத் 24:29-31; வெளி 16:17-21).

12. விக்கிரகங்களை வணங்குபவர்கள் அனைவரும், கர்த்தரைத் தொழுவார்கள் (சங் 97:7; ஏசா 2:2-4; ஏசா 35:8-10; சக 14:16-21; மல் 1:11).

13. புற ஜாதிகளிடமிருந்து, இஸ்ரவேல் மீட்கப்பட்டு, விடுதலையாக்கப்படும். அப்பொழுது கர்த்தருடைய நியாயத் தீர்ப்புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் மகிழ்வார்கள் (சங் 97:8; ஏசா 11:10-12; ஏசா 59:20; ஏசா 66:7-8; எசே 37; மத் 24:29-31; ரோமர் 1:25-29).

14. எல்லாத் தேவர்களிலும் கர்த்தர் மிகவும் உயர்த்தப்படத்தக்கவர் (சங் 97:9; ஏசா 2:2-4; ஏசா 52:7; மல் 1:11).

2. விக்கிரக ஆராதனைக்காரர் மீது சாபம் - தேவனை ஆராதிக்க வேண்டும் என்னும் எச்சரிப்பு - மூன்று காரணங்கள்

சங் 97:7 சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப் பற்றிப் பெருமைப் பாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக; தேவர்களே, நீங்களெல்லாரும் அவரைத் தொழுது கொள்ளுங்கள்.

சங் 97:8 சீயோன் கேட்டு மகிழ்ந்தது; கர்த்தாவே, உம்முடைய நியாயத் தீர்ப்புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள்.

சங் 97:9 கர்த்தாவே, பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர்; எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர்.

விக்கிரகம் (idols) - אֱלִיל - el-eel' - 457

ஆ.பெ.சொ. - விக்கிரகம், உதவாதது (nothings) (சங் 96:5)

தேவர்கள் (gods) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ. - தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர். (சங் 82:1). இந்த வசனத்தில் தேவர்கள் என்பது நியாயாதிபதிகளையும், இராஜாக்களையும் குறிக்கும்.

97 அதிகாரம்

"சீயோன் கேட்டு மகிழ்ந்தது" - தேவனுடைய நியாயத்தீர்ப்புக்களை சீயோன் கேட்டது, மகிழ்ந்தது. இஸ்ரவேலரின் சத்துருக்களுக்கு எதிராக உபத்திரவ காலத்தில் நியாயத்தீர்ப்புக்கள் வரும். அவர்கள் இஸ்ரவேலை அழிக்க முயற்சி செய்ததற்காக தண்டனை பெறுவார்கள். (எரே 30:4-9; சக 14:1-5; தானி 8:9-14, 25; தானி 9:27; தானி 12:1-7) எக்காள சத்தத்தின் நியாயத்தீர்ப்பு உண்டாகும். (வெளி 8-11; 15-16) இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள காரியங்கள் இனிமேல் நிறைவேறும்.

3. பாவத்தை வெறுக்க வேண்டும் என்னும் எச்சரிப்பு - ஐந்து காரணங்கள்

சங் 97:10 கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள்; அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார்.

சங் 97:11 நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது.

"கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள்; அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைக் காப்பாற்றி, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார்." - பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற முக்கியமான கற்பனைகளில் இதுவும் ஒன்று. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் நித்திய ஜீவனையும், தேவனுடைய ஆசீர்வாதங்களையும் இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக் கொள்வோம். நாம் தீமையை வெறுத்தால் நிச்சயமாகத் தீமை செய்யமாட்டோம். (ரோமர் 12:9; 1தெச 5:22; எபி 1:9)

தீமையை ஏன் வெறுக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தரில் அன்பு கூருதல் (சங் 97:10; மத் 6:24)
2. கர்த்தருடைய பாதுகாப்பு (சங் 97:10; ரோமர் 8:28)
3. கர்த்தரின் மீட்பு (சங் 97:10; ரோமர் 1:16)
4. நீதிமானுக்காக வெளிச்சம் (சங் 97:11; 1யோவான் 1:7)
5. செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சி (சங் 97:11; கலா 5:22-23)

4. தேவனைத் துதிக்க வேண்டுமென்னும் இரண்டு எச்சரிப்புகள் - காரணம்

சங் 97:12 நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்.

நீதிமான்களுக்குக் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. தீமையை வெறுத்துவிடுங்கள் (சங் 97:10)
2. கர்த்தருக்குள் மகிழ்ந்திருங்கள் (சங் 97:12)
3. கர்த்தருடைய பரிசுத்தத்தின் நினைவு கூருதலைக் கொண்டாடுங்கள்

98 அதிகாரம்

எட்டாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதித்துப் பாடவேண்டும் என்னும் கட்டளை - ஏழு காரணங்கள் - (98:1-3)
2. சந்தோஷமாக இருக்க வேண்டும் என்னும் கட்டளையின் பன்னிரெண்டு அம்சங்கள் - மூன்று காரணங்கள் - (98:4-9)

1. கர்த்தரைத் துதித்துப் பாடவேண்டும் என்னும் கட்டளை - ஏழு காரணங்கள்

சங் 98:1 கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்; அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது.

சங் 98:2 கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி, தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்.

சங் 98:3 அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார்; பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.

சங்கீதம் 98-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் (சங் 98:1).
2. கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங் 98:4).
3. முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.
4. மகிழ்ந்து, துதியுங்கள்.
5. சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுங்கள் (சங் 98:5).
6. கீதசத்தத்தால் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்.
7. எக்காள சத்தத்தால் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங் 98:6).
8. பூரிகைகளாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.
9. சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்கட்டும் (சங் 98:7).
10. பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்கட்டும்.
11. கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி பாடக்கடவது (சங் 98:8).
12. பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரமாய்ப் பாடக் கடவது.

சங்கீதம் 98-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகளுக்குக் காரணங்கள்

1. கர்த்தர் அதிசயங்களைச் செய்திருக்கிறார் (சங் 98:1).
2. அவருடைய வலதுகரமும், பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்கினது.
3. கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கினார் (சங் 98:2).
4. தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்.
5. அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவு கூர்ந்தார் (சங் 98:3).
6. பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.
7. அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார் (சங் 98:9).
8. பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

98 அதிகாரம்

தேவன் செய்திருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் அதிசயங்களைச் செய்திருக்கிறார் (சங் 98:1).
2. அவருடைய வலதுகரமும், பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்கினது.
3. கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கினார் (சங் 98:2).
4. தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கபண்ணினார்.
5. அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவு கூர்ந்தார் (சங் 98:3).

கர்த்தருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும் அவருடைய சர்வ வல்லமையைக் குறிக்கும். (யாத் 15:16; உபா 4:34; உபா 5:15; உபா 7:19; உபா 9:29; உபா 11:2; உபா 26:8; 1இராஜா 8:42; 2இராஜா 17:36; சங் 44:3; சங் 89:10, 13; சங் 98:1; சங் 136:12; ஏசா 40:10; ஏசா 51:9; ஏசா 52:10; ஏசா 63:5).

"கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கினார்" - புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நாம் இரட்சிப்பைப் பற்றி கூறுவதுபோன்றே பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் இரட்சிப்பு என்னும் சத்தியம் இருந்தது. மீட்பின் பல்வேறு விதமான காரியங்களை விளக்குவதற்கு இரட்சிப்பு என்னும் சொல்லை பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பயன்படுத்தினார்கள்.

தேவனுடைய தனிப்பட்ட ஆள்தத்துவப் பண்பை விளக்கும் காரியங்கள்

1. அவருடைய வலது கரம் (சங் 98:1)
2. அவருடைய பரிசுத்த புயம்
3. அவருடைய ஜெயம்
4. அவருடைய இரட்சிப்பு (சங் 98:2)
5. அவருடைய நீதி
6. அவருடைய கிருபை (சங் 98:3)
7. அவருடைய உண்மை

2. சந்தோஷமாக இருக்க வேண்டும் என்னும் கட்டளையின் பன்னிரெண்டு அம்சங்கள் - மூன்று காரணங்கள்

சங் 98:4 பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்; முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

சங் 98:5 சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுங்கள், சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

சங் 98:6 கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில் பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

சங் 98:7 சமுத்திரமும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக.

சங் 98:8 கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.

சங் 98:9 அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

வேதாகமத்தில் இரண்டு விதமான சப்தங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது

1. ஆனந்தமான ஆர்ப்பரிப்பு (சங் 98:4, 6)
2. கெம்பீரமான முழக்கம் (சங் 98:4)

98 அதிகாரம்

கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவதற்கு பயன்படும் வாத்தியங்கள்

1. சத்தம் (சங் 98:4, 5)
2. சுரமண்டல சத்தம் (சங் 98:5)
3. எக்காளம் (சங் 98:6)
4. பூரிகை
5. சமுத்திரமும் அதின் நிறைவும் (சங் 98:7)
6. பூச்சக்கரமும் அதின் குடிகளும்
7. ஆறுகள் (சங் 98:8)
8. பர்வதங்கள்

"சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்" - வாத்தியக்கருவிகள் பாவமானவையல்ல. வாத்தியக்கருவிகளுடன் கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்பது தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் சரியானது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கர்த்தரைத் துதிக்கும்போது வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரங்கள்

1. தீர்க்கதரிசனம் சொல்லும்போது, தீர்க்கதரிசிகள் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவார்கள் (1சாமு 10:5; 1நாளா 25:1-7).
2. தாவீது சுரமண்டலத்தை எடுத்து வாசித்து, அதினாலே, பொல்லாத ஆவி சவுலை விட்டு நீங்கும்படி செய்தான் (1சாமு 16:16-23).
3. யோபு சுரமண்டலத்தையும் கின்னரத்தையும் பயன்படுத்தினான் (யோபு 30:31).
4. நீதிமான்கள், கர்த்தரைத் துதி செய்வதற்கு சுரமண்டலத்தையும், பத்து நரம்பு வீணைகளையும் பயன்படுத்துமாறு கட்டளையிடப்பட்டார்கள் (சங் 33:1-5; சங் 81:1-5; சங் 98:4-9; சங் 147:7; சங் 149:1-4; சங் 150:1-6).
5. பரிசுத்த மனுஷர்கள், பொருத்தனைகளைச் செலுத்தும்போது இசைக்கருவிகளைப் பயன்படுத்தி தேவனைத் துதிப்பார்கள் (சங் 43:4; சங் 47:7-11; சங் 71:22; சங் 108:1-6).
6. இசைக்கருவிகளைப் பயன்படுத்தி தேவனைத் துதிப்பது, கர்த்தருடைய பிரமாணம் (சங் 81:1-4; 2நாளா 29:25).
7. கர்த்தருடைய கிருபையையும், சத்தியத்தையும் அறிவிக்கும்போது பத்து நரம்பு வீணையையும் தம்புருவையும் பயன்படுத்தவேண்டும் (சங் 92:1-5).
8. கர்த்தருக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதித்தார்கள் (2சாமு 6:1-16; 1நாளா 13:1-14; 1நாளா 15:14-29; 1நாளா 16:1-6; 2நாளா 20:26-29; 2நாளா 30:21; நெகே 12:27).
9. கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணப்பட்டவை பரிசுத்தம் எனப்படும். (எண் 31:6)
10. கர்த்தரின் கீதவாத்தியங்கள் எனப்படும் (1நாளா 16:42, 2நாளா 7:6).
11. கீதவாத்தியங்களைப் பயன்படுத்தி பாடும்பொழுது, கர்த்தருடைய கிருபை நம்மேல் இரங்கும் (2நாளா 5:11-14).
12. மேசியாவின் ஆளுகையில் இவை பயன்படுத்தப்படும் (சங் 87:7)
13. இராகத்தலைவனுக்கு 55 சங்கீதங்கள் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன.

சங்கீதம் – தொகுப்புரை

98 அதிகாரம்

14. பாவம் செய்வதற்காக இஸ்ரவேலர் இவற்றைப் பயன்படுத்தியபோது இதன் பயன்பாடுகள் கடிந்து கொள்ளப்பட்டன. (சங் 132:2; ஆமோ 6:5).

15. பரலோகத்தில் 24 மூப்பர்களும் 4 தேவதூதர்களும் சுரமண்டலங்களை வாசிக்கிறார்கள் (வெளி 5:8).

16. பரலோகத்தில் 144,000 யூதர்கள் சுரமண்டலங்களை வாசிப்பார்கள் (வெளி 14:1-5).

17. உபத்திரவகாலத்துப் பரிசுத்தவான்கள் அனைவரும் சுரமண்டலங்களை வாசிப்பார்கள் (வெளி 15:2).

18. சபையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டுமென்பது புதிய ஏற்பாட்டின் கட்டளை. (எபே 5:19, கொலோ 3:16)

சங்கீதம் (music) - **ψαλμός** - **psalmos** - 5568

ஆண்பால் பெயர்ச்சொல் - சங்கீதம்

பாடு(singing) -**ψάλλω** - **psalloo** - 5567

வினைச்சொல் - பாடு

தீர்க்கதரிசன எண் - 76

"அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்" (சங் 98:9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

ஆயிர வருஷ அரசாட்சியில் நடைபெறப் போகும் காரியங்கள்

1. கர்த்தர் பூமியை நியாயந்தீர்ப்பார்
2. கர்த்தர் பூமியை நீதியாய் நியாயந்தீர்ப்பார் (ஏசா 11:3-9)
3. கர்த்தர் ஜனங்களை நிதானத்தோடு நியாயந்தீர்ப்பார்

99 அதிகாரம்

ஒன்பதாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுக்குப் பயந்து அவரை ஆராதிக்க வேண்டுமென்று மூன்று அறிவுரைகள் - ஏழு காரணங்கள் - *(99:1-4)*

2. தேவனை ஆராதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - ஐந்து காரணங்கள் - *(99:5-8)*

3. தேவனை ஆராதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - ஒரு காரணம் - *(99:9)*

1. தேவனுக்குப் பயந்து அவரை ஆராதிக்க வேண்டுமென்று மூன்று அறிவுரைகள் - ஏழு காரணங்கள்

சங் 99:1 கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக; அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக.

சங் 99:2 கர்த்தர் சீயோனில் பெரியவர், அவர் எல்லா ஜனங்கள்மேலும் உயர்ந்தவர்.

சங் 99:3 மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக; அது பரிசுத்தமுள்ளது.

சங் 99:4 ராஜாவின் வல்லமை நீதியில் பிரியப்படுகிறது, தேவரீர் நியாயத்தை நிலைநிறுத்துகிறீர்; நீர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறீர்.

தீர்க்கதரிசன எண் - 77

"கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக; அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார்........" *(சங் 99:1-4)* - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

கர்த்தர் சீயோனில் இராஜரிகம் பண்ணுகிறார். *(சங் 99:1-2)* கர்த்தர் நியாயத்தை நிலைநிறுத்துகிறார். அவர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறார் *(சங் 99:1-4)* இவை இன்னும் நிறைவேறவில்லை.

சங்கீதம் 99-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. ஜனங்கள் தத்தளிப்பார்கள் *(சங் 99:1)*
2. பூமி அசையும்
3. அவர்கள், கர்த்தருடைய நாமத்தை ஸ்தோத்திரிப்பார்கள் *(சங் 99:2)*
4. தேவனாகிய கர்த்தரை உயர்த்துங்கள் *(சங் 99:5)*
5. அவருடைய பாதபடியிலே பணியுங்கள்
6. தேவனாகிய கர்த்தரை உயர்த்துங்கள் *(சங் 99:9)*
7. அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள்

சங்கீதம் 99-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகளுக்கான காரணங்கள்

1. கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார் *(சங் 99:1)*
2. கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார்
3. கர்த்தர் சீயோனில் பெரியவர் *(சங் 99:2)*

99 அதிகாரம்

4. எல்லா ஜனங்கள் மேலும் உயர்ந்தவர்

5. அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது (சங் 99:3)

6. கர்த்தர், நீதியில் பிரியப்படுகிறார் (சங் 99:4)

7. தேவரீர் நியாயத்தை நிலை நிறுத்துவார்

8. அவர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறார்

9. அவர் பரிசுத்தமுள்ளவர் (சங் 99:5, 9)

10. விண்ணப்பங்களுக்கு மறு உத்தரவு அருளுவார் (சங் 99:6, 8)

11. கர்த்தர் மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார் (சங் 99:7)

12. அவர் சாட்சிப்பிரமாணங்களையும், கட்டளைகளையும் அருளினார்

13. அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருக்கிறார் (சங் 99:8)

14. அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதியைச் சரிக்கட்டுகிறார்

"அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார்" - ஆயிர வருஷ அரசாட்சியில் கர்த்தருடைய நித்திய தேவாலயத்தில் அவருடைய சிங்காசனம் கேருபீன்களுக்கு நடுவில் இருக்குமென்று இந்த வசனம் விளக்குகிறது (எசே 43:7; சக 6:12-14).

"கர்த்தர் சீயோனில் பெரியவர்" - எல்லா தேசங்களையும் கர்த்தர் ஆளுகைசெய்யும்போது அவர் சீயோனில் பெரியவராக இருப்பார் (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; ஏசா 11:3-11; ஏசா 59:20; வெளி 11:15).

"அது பரிசுத்தமுள்ளது" - கர்த்தரும் அவருடைய நாமமும் பரிசுத்தமுள்ளது என்று மூன்று முறை கூறப்பட்டிருக்கிறது (சங் 99:3, 5, 9).

தேவனைப் பற்றியும், இராஜாவின் வல்லமையைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. அவர் நீதியில் பிரியப்படுகிறார்

2. அவர் நியாயத்தை நிலைநிறுத்துகிறார்

3. அவர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறார்

2. தேவனை ஆராதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - ஐந்து காரணங்கள்

சங் 99:5 நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்.

சங் 99:6 அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார்.

சங் 99:7 மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார்; அவர்கள் அவருடைய சாட்சிப்பிரமாணங் களையும் அவர் தங்களுக்குக் கொடுத்த கட்டளையையும் கைக்கொண்டார்கள்.

சங் 99:8 எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர்; நீர் அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதி சரிக்கட்டின போதிலும், அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர்.

"நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்" - இந்த வசனத்தின் கருத்து சங் 99:9-இல் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது.

"அவர் பாதபடி" - சங் 99:9 - இல் கர்த்தருடைய பரிசுத்த பர்வதமே அவருடைய பாதபடி என்று காண்கிறோம்.

99 அதிகாரம்

"அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார்" - லேவியின் கோத்திரத்தில் வந்த மோசே ஆரோனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்தான் *(யாத் 24:6-8)*. மோசே ஆரோனை ஆசாரிய ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணினார் *(யாத் 28)*. ஆகையினால், மோசேயும், ஆரோனும் ஆசாரியர் ஆவார்கள். கர்த்தரிடத்தில் ஜெபித்து அவருடைய மறுஉத்தரவைப் பெற்றுக் கொண்டவர்களில் சாமுவேல் முக்கியமானவர் *(எரே 15:1; எசே 14:14, 20)*.

"மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார்" - இந்த வசனத்தில் "அவர்களோடே" என்பது மோசேயையும், ஆரோனையும் குறிக்கும். *(சங் 99:6)*

தேவன் கடந்தகாலத்தில் செய்திருக்கிற காரியங்கள்

1. ஜெபங்களுக்கு மறுஉத்தரவு அருளினார் *(சங் 99:6, 7)*
2. ஜனங்களுடன், மேகஸ்தம்பத்திலிருந்து பேசினார் *(சங் 99:7)*
3. அவர்களுக்கு சாட்சிப் பிரமாணங்களையும், கட்டளைகளையும் கொடுத்தார்
4. அவர்களை மன்னித்தார் *(சங் 99:8)*
5. அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதியைச் சரிக்கட்டினார்

"கிரியைகளினிமித்தம்" [inventions] - இந்த வசனத்தில் கிரியைகள் என்பது இஸ்ரவேலரின் பாவக்கிரியைகளையும், பாவம் செய்வதற்கான அவர்களுடைய புதிய உபாயங்களையும் குறிக்கும். இதற்காகத் தேவன் அவர்கள்மீது வாதைகளை அனுப்பி, அவர்களை நியாயந்தீர்த்தார் *(எண் 11-25; சங் 106:29, 39)*.

3. தேவனை ஆராதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - ஒரு காரணம்

சங் 99:9 நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர்.

சங்கீதம் - தொகுப்புரை

99 அதிகாரம்

நல்லவர்கள்

1. கர்த்தர்
2. கிறிஸ்து (யோவான் 10:11,14)
3. பரிசுத்த ஆவி (நெகே 9:20; சங் 143:10)
4. மனுஷர்கள் (சங் 37:23; நீதி 2:20; நீதி 12:2; நீதி 13:22; நீதி 14:14; அப் 11:24; தீத்து 1:8)
5. ஊழியக்காரர்கள் (Ministers) (1தீமோ 4:6)
6. உக்கிராணக்காரர் (Stewards) (1பேதுரு 4:10)
7. உண்மையுள்ள ஊழியக்காரர் (Faithful servants) (மத் 25:21-23)

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது - (ஆதி 8:22; ஆதி 9:12)

100 அதிகாரம்

(ஸ்தோத்திர சங்கீதம்.)

பத்தாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று மூன்று அறிவுரைகள் - நான்கு காரணங்கள் - (100:1-3)
2. சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நான்கு அறிவுரைகள் - மூன்று காரணங்கள் - (100:4-5)

1. சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று மூன்று அறிவுரைகள் - நான்கு காரணங்கள்

சங் 100:1 பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

சங் 100:2 மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

சங் 100:3 கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருக்கிறோம்.

சங்கீதம் 110-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள் (சங் 100:1)
2. மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள் (சங் 100:2)
3. ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்
4. கர்த்தரைத் தேவனென்று அறியுங்கள் (சங் 100:3)
5. அவர் நம்மை உண்டாக்கினவர் என்று அறியுங்கள்
6. நம்மை நாமே உண்டாக்கவில்லை என்பதை அறியுங்கள்
7. நாம், அவருடைய ஜனங்கள்
8. நாம், அவர் மேய்ச்சலின் ஆடுகள்
9. அவர் வாசல்களில் துதியோடு பிரவேசியுங்கள் (சங் 100:4)
10. அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடு பிரவேசியுங்கள்
11. அவரைத் துதியுங்கள்
12. அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்

"கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்" - சங்கீதப்புஸ்தகத்தில் இந்த வாக்கியம் ஏழு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (சங் 66:1; சங் 81:1; சங் 95:1,2; சங் 98:4,6; சங் 100:1)

சங்கீதம் 100-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகளுக்கான காரணங்கள்

1. அவர் நம்தேவன் (சங் 100:3)
2. அவர் நம்மை உண்டாக்கினவர்
3. நம்மை நாமே உண்டாக்கவில்லை
4. நாமெல்லாம் அவருடைய ஜனங்கள்
5. நாமெல்லாம் அவருடைய மேய்ச்சலின் ஆடுகள்
6. கர்த்தர் நல்லவர் (சங் 100:5)
7. அவருடைய கிருபை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்
8. அவருடைய உண்மை நித்தியமானது

2. சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நான்கு அறிவுரைகள் - மூன்று காரணங்கள்

சங் 100:4 அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

சங்கீதம் – தொகுப்புரை

100 அதிகாரம்

சங் 100:5 கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

வேதத்தில் கூறப்பட்டிருக்கிற நல்ல காரியங்கள்

1. சிருஷ்டிப்பு (ஆதி 1:4, 10, 12, 18-31)
2. சுகமாயிருத்தல் (ஆதி 43:28)
3. வாய்க்கப்பண்ணுதல் (யோசு 1:8)
4. திடமனதாயிருத்தல் (சங் 27:14; சங் 31:24)
5. தயை (சங் 69:16)
6. தேவனை அண்டிக்கொண்டிருத்தல் (சங் 73:28)
7. துதித்தல் (சங் 92:1)
8. கிருபை (சங் 109:21)
9. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் (சங் 119:39)
10. உபத்திரவம், தண்டனை (சங் 119:71)
11. சகோதரர் ஒருமித்தல் (சங் 133:1)
12. தேவனைக் கீர்த்தனம் பண்ணுதல் (சங் 147:1)
13. உபதேசம் (நீதி 4:2; 1தீமோ 4:6)
14. ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை (நீதி 15:23)
15. மனமகிழ்ச்சி (நீதி 17:22)
16. மனைவியைக் கண்டடைகிறவன், நன்மையானதைக் கண்டடைகிறான் (நீதி 18:22)
17. தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி (நீதி 25:25)
18. கீர்த்தி (பிர 7:1)
19. சத்தியத்தின் நற்செய்தி (ஏசா 40:9; ஏசா 52:7; ஏசா 61:1)
20. ஆறுதலான வார்த்தைகள் (சக 1:13)
21. நற்கிரியைகள் (மத் 5:16; எபே 2:10; தீத்து 2:14)
22. நல்மனச்சாட்சி (அப் 23:1; 1தீமோ 1:5, 19)
23. நியாயப்பிரமாணம் (ரோமர் 7:12,16; 1தீமோ 1:8)
24. நன்மைக்கு ஏதுவாக நடக்கிறவைகள் (ரோமர் 8:28)
25. நல்விஷயத்தில் வைராக்கியம் (கலா 4:18; தீத்து 2:14)
26. நல்நம்பிக்கை (2தெச 2:16)
27. போஜனத்திற்காக தேவன் படைத்தவைகள் நல்லதாயிருக்கிறது (1தீமோ 4:4)
28. தேவனுடைய நல்வார்த்தை (எபி 6:5)
29. வரப்போகிற நன்மைகளின் பொருட்கள் (எபி 9:11; எபி 10:1)
30. உரையாடல் (1பேதுரு 3:16)

நல்லவர் (good)-טוֹב - tobe - 2896

பெயர்ச்சொல் - நல்லவர், நல்லது, நல்ல காரியம் (to be basically good; in the widest sense, goodness and righteousness) வேதாகமத்தில் இருபது முறை தேவன் நல்லவர் என்று கூறப் பட்டிருக்கிறார். (1நாளா 16:34; 2நாளா 5:13; 2நாளா 7:3; 2நாளா 30:18; எஸ்றா 3:11; சங் 25:8; சங் 34:8; சங் 73:1; சங் 86:5; சங் 100:5; சங் 106:1; சங் 107:1; சங் 118:1, 29; சங் 119:68; சங் 135:3; சங் 136:1; சங் 145:9; நாகூம் 1:7; மத் 19:17)

101 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

நீதிமானின் ஆறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நீதிமானின் எட்டு பொருத்தனைகள் - (101:1-4)
2. நீதிமானின் எட்டு தகுதிகள் - (101:5-8)

1. நீதிமானின் எட்டு பொருத்தனைகள்

சங் 101:1 இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்; கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

சங் 101:2 உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன்.

சங் 101:3 தீங்கான காரியத்தை என் கண் முன் வைக்கமாட்டேன்; வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன்; அது என்னைப் பற்றாது.

சங் 101:4 மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகலவேண்டும்; பொல்லாதவனை அறியமாட்டேன்.

தாவீதின் பொருத்தனைகள்

1. இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன் (சங் 101:1)
2. கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவேன்
3. உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன் (சங் 101:2)
4. என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள்ளுவேன்
5. தீங்கான காரியத்தை என்கண்முன் வைக்கமாட்டேன் (சங் 101:3)
6. வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன்
7. வழிவிலகுகிறவர்களின் செய்கை என்னைப் பற்றாது
8. மாறுபாடான இருதயம் என்னை விட்டு அகல வேண்டும் (சங் 101:4)
9. பொல்லாதவனை அறியமாட்டேன்
10. அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன் (சங் 101:5)
11. பெருநெஞ்சுள்ளவனைப் பொறுக்க மாட்டேன்
12. உண்மையானவர்கள்மேல் நோக்கமாய் இருப்பேன் (சங் 101:6)
13. உண்மையானவர்கள் என்னோடே வாசம் பண்ண வைப்பேன்
14. உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்
15. கபடு செய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை (சங் 101:7)
16. பொய்சொல்லுகிறவன் என் கண் முன் நிலைப்பதில்லை
17. அக்கிரமக்காரர் யாவரையும் சங்கரிப்பேன் (சங் 101:8)
18. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டு போக வேண்டும்

உத்தமமான காரியங்கள்

1. உத்தமமான வழி (சங் 101:2,6)
2. உத்தமமான இருதயம் (சங் 101:4)

"வழி விலகுகிறவர்கள்" - பின்வாங்கிப் போனவர்களைக் குறிக்கும் வாக்கியம். இவர்கள் ஒரு காலத்தில் செம்மையான வழியைப் பின்பற்றினார்கள். பின்பு அவர்கள் செம்மையான வழியை விட்டுவிலகி பாவத்தைப் பின்பற்றினார்கள்.

101 அதிகாரம்

இருதயங்களின் வகைகள்

1. செம்மையான இருதயம் (சங் 101:2)
2. மாறுபாடான இருதயம் (சங் 101:4)

2. நீதிமானின் எட்டு தகுதிகள்

சங் 101:5 பிறனை இரகசிமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன்; மேட்டிமைக் கண்ணனையும் பெரு நெஞ்சுள்ளவனையும் பொறுக்க மாட்டேன்.

சங் 101:6 தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்.

சங் 101:7 கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய் சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.

சங் 101:8 அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்.

அவதூறுபண்ணு (slandereth) לָשַׁן - law-shan' - 3960

வினைச்சொல் - அவதூறுபண்ணு, குற்றஞ்சுமத்து (to use the tongue to defame abuse, scandalize, belittle, or blacken the character of another) மற்றவர்களைக் குற்றப் படுவதற்காக நாவைப் பயன்படுத்துதல், மற்றவர்கள்மீது அவதூறு பேசுதல்.

அவதூறு பண்ணுகிறவர்களுக்கு எதிரான கட்டளைகள் (யாத் 23:1; உபா 22:13-18; யாக் 4:11; 1பேதுரு 2:1)

அவதூறு பண்ணுவதற்குக் காரணங்கள்

1. பொல்லாத இருதயம் (லூக்கா 6:45)
2. சோம்பலுள்ளவர்கள் (சங் 109:3)
3. சாத்தானின்வல்லமைகள் (1தீமோ 5:13)

யாரெல்லாம் அவதூறு பண்ணுவார்கள்?

1. துன்மார்க்கன் (சங் 50:16-20)
2. மாயக்காரன் (நீதி 11:9)
3. சாத்தானின் வல்லமைகள் (வெளி 12:10)
4. கபடமுள்ளவன் (சங் 52:4)
5. மதிகேடன் (நீதி 10:18)
6. புறங்கூறுகிறவர்கள் (ரோமர் 1:29-32)
7. அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்ற படி நடக்கிறவர்கள் (2பேதுரு 2:10)

அவதூறு பண்ணுகிறதினால் ஏற்படும் விளைவுகள்

1. பிராண சிநேகிதரை பிரித்தல் (நீதி 16:28; நீதி 17:9)
2. கோள்காரனுடைய வார்த்தைகள் உள்ளத்தைத் தைக்கும் (நீதி 18:8; நீதி 26:22)
3. சண்டை (நீதி 26:20)
4. சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் (நீதி 6:19)
5. கோபம் (நீதி 25:23)
6. பிராணனை வாங்குதல் (சங் 31:13; எசே 22:9)

அவதூறு பண்ணுகிறவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. போத்திபாரின் மனைவி (ஆதி 39:14-18)
2. சீபா (2சாமு 16:3; 2சாமு 19:24-30)

சங்கீதம் - தொகுப்புரை

101 அதிகாரம்

3. தாவீதின் விரோதிகள் (சங் 31:13; சங் 35:21)
4. யேசபேல் (1இராஜ 21:9-14)
5. எரேமியாவின் விரோதிகள் (எரே 18:18)
6. இயேசுவின் விரோதிகள் (மத் 11:19)

அவதூறு பண்ணுகிறதற்குத் தண்டனை (சங் 101:5; ரோமர் 1:29-32; வெளி 21:8)

"மேட்டிமைக் கண்ணனையும் பெரு நெஞ்சுள்ளவனையும் பொறுக்கமாட்டேன்" - கர்த்தர் மேட்டிமையுள்ளவர்களை அழிப்பார் (சங் 12:3; நீதி 6:17; நீதி 15:25; ஏசா 2:12).

"கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை" - பொய் கூறுகிறவர்களுக்கு பரலோகத்தில் இடமில்லை. அவியாத அக்கினியில் தள்ளப்படுவார்கள் (வெளி 21:8; வெளி 22:15).

102 அதிகாரம்

(துயரப்படுகிறவன் துக்கத்தில் மூழ்கி, கர்த்தரிடத்தில் தன் வியாகுலத்தைத் தெரிவித்துச் செய்யும் விண்ணப்பம்.)

மேசியாவைப் பற்றி பதினேழாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. விரைவாக பதில் வேண்டுமென்று நான்கு விண்ணப்பங்கள் - (102:1-2)
2. காரணம் - துன்பத்தின் பதினாறு அம்சமும், வருத்தமும் - (102:3-11)
3. சீயோனுடைய மீட்பின் பதினாறு அம்சம் - மேசியாவின் இரண்டாம் வருகை - (102:12-22)
4. வருத்தமும் ஜெபமும் - (102:23-24)
5. மேசியாவின் சிருஷ்டிப்பும், மீட்பின் கிரியையும் - (102:25-28)

1. விரைவாக பதில் வேண்டுமென்று நான்கு விண்ணப்பங்கள்

சங் 102:1 கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்; என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக.

சங் 102:2 என் ஆபத்துநாளிலே உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; உமது செவியை என்னிடத்தில் சாயும்; நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச்செய்யும்.

சங்கீதம் 102-இல் ஏறெடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள்

1. என் விண்ணப்பத்தைக் கேளும் (சங் 102:1).
2. என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேருவதாக.
3. என் ஆபத்துநாளிலே உமது முகத்தை எனக்கு மறையாதேயும் (சங் 102:2).
4. உமது செவியை என்னிடத்தில் சாயும்.
5. நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச் செய்யும்.
6. என்னுடைய பாதி வயதில் என்னை எடுத்துக் கொள்ளாதேயும்.

2. காரணம் - துன்பத்தின் பதினாறு அம்சமும், வருத்தமும்

சங் 102:3 என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்தது; என் எலும்புகள் ஒரு கொள்ளியைப்போல் எரியுண்டது.

சங் 102:4 என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலர்ந்தது; என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன்.

சங் 102:5 என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது.

சங் 102:6 வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன்.

சங் 102:7 நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன்.

சங் 102:8 நாடோறும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள்; என்மேல் மூர்க்கவெறிகொண்டவர்கள் எனக்கு விரோதமாய்ச் சாபம் இடுகிறார்கள்.

சங் 102:9 நீர் என்னை உயரத் தூக்கி, தாழத்தள்ளினீர், உமது சினத்திற்கும் கடுங்கோபத்திற்கும் உள்ளானேன்.

சங் 102:10 ஆதலால் நான் சாம்பலை அப்பமாகப் புசித்து, என் பானங்களைக் கண்ணீரோடே கலக்கிறேன்.

சங் 102:11 என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப் போலிருக்கிறது; புல்லைப் போல் உலர்ந்து போகிறேன்.

102 அதிகாரம்

கர்த்தர் பிரதியுத்தரம் தரவேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. என் நாட்கள் புகையைப் போல் ஒழிந்தது (சங் 102:3).
2. என் எலும்புகள் ஒரு கொள்ளியைப் போல் எரியுண்டது.
3. என் இருதயம் வெட்டுண்டது (சங் 102:4).
4. என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலர்ந்தது, புல்லைப் போல் உலர்ந்து போகிறேன் (சங் 102:11).
5. என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன் என் இடுக்கண்களினிமித்தம் என் பசி போய்விட்டது.
6. என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக் கொள்ளுகிறது. என் கவலைகளின் நிமித்தம் நான் மெலிந்து போனேன் (சங் 102:5).
7. நான், வனாந்தரத்திலுள்ள நாரைக்கு ஒப்பானேன் (சங் 102:6).
8. பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன்.
9. நான் தப்பிப்பதற்கான வழியைப் பார்க்கிறேன் (சங் 102:7).
10. வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன்.
11. நாடோறும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள் (சங் 102:8).
12. எனக்கு விரோதமாய்ச் சாபம் இடுகிறார்கள்.
13. நான் சாம்பலை அப்பமாகப் புசிக்கிறேன் (சங் 102:9).
14. என் பானங்களைக் கண்ணீரோடே கலக்கிறேன்.
15. உமது சினத்திற்கும் கடுங்கோபத்திற்கும் உள்ளானேன் (சங் 102:10).
16. என்னை உயரத்தூக்கி தாழத்தள்ளினீர்.
17. என் நாட்கள் சாய்ந்து போகிற நிழலைப் போலிருக்கிறது (சங் 102:11).
18. நான் புல்லைப்போல் உலர்ந்து போகிறேன். என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலாந்தது (சங் 102:4).
19. என் பெலனை நீர் ஒடுக்கினீர் (சங் 102:23).
20. என் நாட்களைக் குறுகப்பண்ணினீர்.

தேவனுடைய நாட்களுக்கும், மனுஷனுடைய நாட்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்

1. மனுஷனுடைய நாட்கள் புகையைப் போல ஒழியும். (சங் 102:3) கர்த்தரோ என்றென்றைக்கும் இருக்கிறார். (சங் 102:12)
2. மனுஷனுடைய நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப் போலிருக்கிறது. மனுஷன் புல்லைப்போல உலர்ந்துபோகிறான். (சங் 102:11) கர்த்தருடைய பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும். (சங் 102:12)
3. மனுஷனுடைய நாட்கள் குறுகியிருக்கிறது. (சங் 102:23) கர்த்தருடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. (சங் 102:27)
4. மனுஷனுடைய நாட்கள் பாதி வயதில் எடுத்துக் கொள்ளப்படலாம். கர்த்தருடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும். (சங் 102:24).

துயரத்தினால் அவதியுறும் மனுஷனுடைய பாகங்கள்

1. சத்தம் (சங் 102:1,5)
2. கடுங்கோபம், சினம், பெருமூச்சு (சங் 102:1-2, 5, 9)

102 அதிகாரம்

3. எலும்புகள் (சங் 102:3,5)

4. இருதயம் (சங் 102:4)

5. பசி (சங் 102:4,9)

6. மறத்தல் (சங் 102:4)

7. மாம்சம் (தோல்) (சங் 102:5)

8. கண்கள் (சங் 102:7,9)

9. கண்ணீர் (சங் 102:9)

10. பெலன் (சங் 102:23)

"என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலர்ந்தது" - மனுஷனுடைய ஆயுசுநாட்கள் புல்லுக்கு ஒப்பானது. (சங் 102:3-11)

"என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன்" - மனுஷனுக்கு ஏராளமான பாடுகளும், துயரங்களும் இருப்பதினால் மனுஷனால் அவனுடைய போஜனத்தைக் கூட திருப்தியாக புசிக்க முடியவில்லை. புஷ்டியில்லாமல் மனுஷன் எலும்பும், தோலுமாக இருக்கிறான்.

நாரை (Pelican) קָאַת - kaw-ath' - 6893

பெண்பால் பெயர்ச்சொல் - நாரை

வனாந்தர நாரை

சுத்தமில்லாத பறவை. (சங் 102:6; லேவி 11:18; உபா 14:17) வனாந்தர நாரை தன் குஞ்சுகளுக்காக ஏராளமான மீன்களைத் தன் வாயில் கொத்திக்கொண்டு, கூடுகளிலுள்ள தன் குஞ்சுகளுக்குத் தரும். வனாந்தர நாரை உருவத்தில் பெரிது. பாலஸ்தீன வனாந்தரத்தில் 6 அடி நீளமுள்ள நாரைகள் உள்ளன. அவை இறக்கைகளை விரிக்கும்போது அவற்றின் நீளம் 12 அடி வரையிலும் இருக்கும். சவக்கடலுக்கு அருகில் ஏராளமான நாரைகள் உள்ளன. அவை யோர்தான் நதியில் மீன்களைக் கவ்விப் பிடிக்கும். மத்தியதரைக்கடல் பகுதிக்கு அருகே உள்ள வனாந்தரமான பகுதிகளில் ஏராளமான வனாந்தர நாரைகள் உள்ளன.

நாரைகள் 6 அடி நீளமுள்ள கூடுகளைக் கட்டும். ஒவ்வொரு கூட்டிலும் ஒரு நாரை சுமார் 3 முட்டைகளை இடும். நாரை குஞ்சு பொறித்தபின்பு அவை வளர்ந்து பெரிதாகி, பறக்கும் பக்குவம் அடைவதற்கு பல வாரங்கள் ஆகும். அதுவரையிலும் தாய்ப் பறவை தன் குஞ்சுகளுக்கு கூட்டிற்கு இறைகளைக் கொண்டுவந்து தரும். தாய்ப் பறவை ஏராளமான மீன்களைக் கொத்திக் கொண்டு வரும். இவை அனைத்தையும் குஞ்சுகளால் புசிக்க முடியாது. புசிக்காத மீதமான மீன்கள் கூட்டிலிருந்து கீழே தரையில் விழுந்து விடும். கீழே சிதறிய மீன்கள் வெயிலில் காய்ந்து, கருவாடாகப் போய்விடும். அது துர்நாற்றம் அடிக்கும். மனுஷர் இந்த துர்நாற்றத்தினால் வனாந்தர நாரையின் கூடுகளுக்கு அருகில்கூட செல்லமாட்டார்கள்.

சங்கீதக்காரன் தன்னை வனாந்தர நாரைக்கு ஒப்பானேன் என்று சொல்லும் போதுஅவன் இந்தக் காரியங்களையெல்லாம் மனதில் வைத்துத்தான் சொல்லியிருக்கிறான். மனுஷர் எல்லோரும் அதன் துர்நாற்றத்திற்காக வனாந்தர நாரைகளை வெறுத்தார்கள். அதுபோலவே தன்னையும் வெறுப்பதாக சங்கீதக்காரன் வேதனைப்படுகிறான்.

வனாந்தர நாரையைப் பற்றிய குறிப்பு ஏசா 34:11; செப் 2:14 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. இந்த வசனங்களில் வனாந்தர நாரை "முழுமையான அழிவு" என்று பொருள்படும். 102 ஆவது சங்கீதத்தில் வனாந்தர நாரை என்பது "மனுஷரால் ஒதுக்கித் தள்ளப்படுதல்" என்று பொருள்படும். (சங் 102:3-11)

102 அதிகாரம்

ஆந்தை (owl) - כוס - koce - 3563

பெ.பெ.சொ. - ஆந்தை, பாத்திரம் அல்லது கிண்ணம் போன்ற கண்ணை உடைய பறவை "பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன்" - பாலஸ்தீன தேசத்தில் ஏராளமான ஆந்தைகள் உள்ளன. அவை பலவகைப்படும். 5 அங்குல நீளமுள்ள சிறிய ஆந்தைகளிலிருந்து 2 அடி நீளமுள்ள பெரிய ஆந்தைகள் வரையிலும் பாலஸ்தீன தேசத்தில் உள்ளன. அவைகளின் தலையும், கண்களும் பெரியதாக இருக்கும். இரவில் வேட்டையாடி புசிக்கும். குகைகளிலும், பாழடைந்த கட்டிடங்களிலும், பாலஸ்தீன தேசத்தின் பள்ளத்தாக்குகளிலும் அவை வசிக்கும். ஆந்தைகள் அசுத்தமான பறவை. (லேவி 11:17; உபா 14:16) இங்கு கூறப்பட்டுள்ள ஆந்தை உருவத்தில் சிறியவை, வனாந்தரத்திலும், அசுத்தமான இடங்களிலும் ஜீவிப்பவை.

"நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன்" - குருவி பொதுவாக தனியாக இராது. அது தனியாக இருக்குமென்றால், அதன் துணை மரித்திருக்கும். அல்லது அதன் கூடு அழிக்கப்பட்டிருக்கும். அல்லது அதன் குஞ்சுகள் மாண்டுபோயிருக்கும். குருவி வருத்தமாக இருக்கும்போது மட்டுமே தனித்திருக்கும். சங்கீதக்காரன் தன்னுடைய பரிதாபமான விரக்தியான நிலைமையைக் குறிப்பிடுவதற்காக தன்னைத் தனித்திருக்கும் குருவியாக பாவிக்கிறான்.

"நான் சாம்பலை அப்பமாகப் புசித்து, என் பானங்களைக் கண்ணீரோடே கலக்கிறேன்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் துக்கமாக இருக்கிறவர்கள் சாம்பலில் அமர்ந்திருந்து தங்கள் தலைகளின்மீதும், வஸ்திரங்களின்மீதும் சாம்பலைத் தெளித்துக் கொள்வார்கள். (1இராஜா 20:38-41; எஸ் 4:1-3; யோபு 2:8; யோபு 42:6; எரே 6:26; எரே 25:34; எசே 27:30; தானி 9:3; யோனா 3:6; மத் 11:21; லூக்கா 10:13).

"நீர் என்னை உயரத் தூக்கி, தாழத் தள்ளினீர்" - மனுஷர் பாடுகளை அனுபவிக்கும் போது தேவனே இதற்குக் காரணம் என்று தேவனைத் தூஷிப்பார்கள். நமது பாடுகளுக்கு தேவன் காரணமல்ல. சாத்தானே காரணம். தன் ஆரோக்கியத்தையும், தன் ஐசுவரியத்தையும் சாத்தான் எடுத்துக் கொண்டதாக யோபு கூறுகிறான். (யோபு 1:6-21; யோபு 2:1-13; யோபு 42:10)

"என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப் போலிருக்கிறது; புல்லைப்போல் உலர்ந்து போகிறேன்" - சங்கீதக்காரனுடைய ஆயுட்காலம் ஒரு காலத்தில் காலை நிழலைப்போல வளர்ந்து கொண்டேயிருந்தது. நல்ல நிலைமையில் இருந்தது. ஆனால் இப்பொழுதோ அவனுடைய வயது சாய்ந்துபோகிற மாலை வெயிலைப்போல ஆயிற்று. மாலை வெயிலுக்குப் பின்பு இரவின் இருள் வரும். அதுபோலவே, சங்கீதக்காரன் தன் மரண வேளையை நெருங்கிக் கொண்டிருக்கிறான்.

3. சீயோனுடைய மீட்பின் பதினாறு அம்சம் - மேசியாவின் இரண்டாம் வருகை - (மத் 16:27; 24:29-31; 25:31-46; 2தெச 1:7-10; யூதா 14; வெளி 19:11-21)

சங் 102:12 கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

சங் 102:13 தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர்; அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது.

சங் 102:14 உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள் மேல் வாஞ்சைவைத்து, அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள்.

சங் 102:15 கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்.

சங் 102:16 திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்.

சங்கீதம் - தொகுப்புரை

102 அதிகாரம்

சங் 102:17 அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்.

சங் 102:18 பின்சந்ததிக்காக இது எழுதப்படும்; சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்.

சங் 102:19 கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப் பட்டவர்களை விடுதலையாக்கவும்,

சங் 102:20 தம்முடைய உயர்ந்த பரிசுத்தஸ்தலத்திலிருந்து பார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமானார்.

சங் 102:21 கர்த்தருக்கு ஆராதனை செய்ய, ஜனங்களும் ராஜ்யங்களும் ஏகமாய்க் கூடிக் கொள்ளுகையில்,

சங் 102:22 சீயோனில் கர்த்தருடைய நாமத்தையும், எருசலேமில் அவருடைய துதியையும் பிரஸ்தாபப்படுத்துவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 78

"கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்..........." (சங் 102:12-16) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. தேவனும் அவருடைய பேர் பிரஸ்தாபமும் தலைமுறை தலைமுறையாக நிற்கும். மேசியாவின் இரண்டாம் வருகையின்போது சீயோனை மீட்பார். ஜாதிகள் தேவனையும், அவருடைய மகிமையையும் கண்டு பயப்படுவார்கள் (சங் 102:13-16).

"உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் வாஞ்சைவைத்து, அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள்" - இந்த வசனம் சீயோனை விளக்குகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தாங்கள் நேசிக்கும் சீயோன்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள்.

"ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்" - இந்த வசனம் ஆயிர வருஷ அரசாட்சியில் அதற்குப் பின்பு நித்தியகாலமாக உண்மையாயிருக்கும். (ஏசா 2:2-4; ஏசா11:3-11;தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; வெளி 11:15; வெளி 22:4-5)

"கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்" - சீயோன் மீட்கப்படும்போது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாக கூறப்பட்டிருக்கிற காரியங்களில் இதுவும் ஒன்று. நாம் கடைசி காலத்தில் ஜீவிக்கிறோம். இஸ்ரவேல் தேசம் (சீயோன்) மறுபடியும் ஒரு தேசமாக 1949-ஆம் வருஷத்தில் உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் இஸ்ரவேல் தேசம் வளரும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் இஸ்ரவேல் திரும்ப கட்டப்படுவதை நிறைவேற்றுவார் (ஏசா 2:2-4; ஏசா 9:6-7).

ஜெபத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. திக்கற்றவர்களுடைய ஜெபத்தைத் தேவன் அலட்சியம் பண்ணாமல் கேட்பார்
2. திக்கற்றவர்களுடையவிண்ணப்பத்தைத் தேவன் அங்கீகரிப்பார்

தீர்க்கதரிசன எண் - 79

"சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்.........." (சங் 102:18-22) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பின் சந்ததி என்பது ஆயிர வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் பிறக்கப் போகிறவர்களைக் குறிக்கும். (ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:20; ஏசா 65:20-25; வெளி 21:3-27; வெளி 22:4-5) அப்போது சீயோனில் கர்த்தருக்குத் துதி உண்டாகும். (சங் 102:21) பூமியிலுள்ள எல்லா ஜாதிகளும் கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பார்கள் (சங் 102:22; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; லூக்கா 1:32-33; வெளி11:15;வெளி 20:4-6). "சிருஷ்டிக்கப்படும் ஜனம்" என்னும் வாக்கியம் கிறிஸ்துவில் மனுஷர் மறுபடியும் சிருஷ்டிக்கப்படுவதைக் குறிக்கும் (எபே 2:10; எபே 4:24).

102 அதிகாரம்

"கர்த்தருக்கு ஆராதனைசெய்ய, ஜனங்களும் ராஜ்யங்களும் ஏகமாய்க் கூடிக்கொள்ளுகையில், சீயோனில் கர்த்தருடைய நாமத்தையும், எருசலேமில் அவருடைய துதியையும் பிரஸ்தாபப் படுத்துவார்கள்" (மத் 25:31-46; வெளி 11:15; வெளி 20:4-6).

4. வருத்தமும் ஜெபமும்

சங் 102:23 வழியிலே என் பெலனை அவர் ஒடுக்கி, என் நாட்களைக் குறுகப் பண்ணினார்.

சங் 102:24 அப்பொழுது நான்: என் தேவனே, பாதி வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும்; உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும்.

"வழியிலே என் பெலனை அவர் ஒடுக்கி, என் நாட்களைக் குறுகப்பண்ணினார்" - சங் 102:3-11-இல் கூறப்பட்டிருக்கிற உபத்திரவங்களின் காரியங்களுக்கு சங்கீதக்காரன் சங் 102:23-24 ஆகிய வசனங்களில் மறுபடியும் திரும்பி வருகிறான்.

5. மேசியாவின் சிருஷ்டிப்பும், மீட்பின் கிரியையும்

சங் 102:25 நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது.

சங் 102:26 அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம்; அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம்.

சங் 102:27 நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை;

சங் 102:28 உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள்; அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும் என்று சொன்னேன்.

தீர்க்கதரிசன எண் - 80

"நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப் படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது.........." (சங் 102:25-28) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் வானமும், பூமியும் அக்கினியில் வெந்து உருகிப்போன பின்பு, இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (2பேதுரு 3:10-13) சங் 102:25-27 ஆகிய வசனங்கள் எபி 1:10-12 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. "ஆதியிலே" என்னும் சொல் ஆதிகாலத்தைக் குறிக்கும் (ஆதி 1:1; சங் 93:2; மீகா 5:2).

"நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப் படுத்தினீர்" - ஆதாமின் நாட்களுக்கு முன்பாக தேவன் பூமியைச் சிருஷ்டித்தார். தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்தியபோது தேவதூதர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள் (யோபு 38:4-7)

"வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது" - தேவன் பூமியை சிருஷ்டித்ததுபோல வானத்தையும் அதிலுள்ள நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தார். (சங் 8:3-6; சங் 19:1; சங் 90:2; சங் 95:5; நீதி 26:10; ஏசா 40:12,26; ஏசா 45:12; ஏசா 48:13).

"அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம் போல் பழமையாய்ப்போம்; அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம்" - வானமும் பூமியும் நித்தியமானவை (பிர 1:4; சங் 89:1-2,36-37; சங் 104:5). கர்த்தர் அவற்றை மாற்றுவார். (சங் 102:26-27, எபி 1:10-12, 2பேதுரு 3:10-13) இந்த வசனத்தில் "அழிந்துபோம்" என்பது மங்கிப்போகும் அல்லது பழைமையாய் போகும் என்று பொருள்படும்.

102 அதிகாரம்

பழைய (old) בָּלָה - baw-law' - 1086

வினைச்சொல் - பழையதாய்ப்போ, உலர்ந்து போ, முதிர்வயதுள்ளவனாயிரு, அழுகிப்போ, முற்றலாக்கு, அனுபவி, போக்கு (to fail; decay; become old; waste away) (சங் 102:26; சங் 32:3; உபா 8:4; உபா 29:5; யோசு 9:13; ஏசா 50:9; ஏசா 51:6)

பழைமையாய் போகுதல் என்பது அழிந்துபோவதைக் குறிக்காது. மனுஷனுடைய பாவத்தினால் பூமி தன் ஆதி நிலைமையிலிருந்து மங்கிப்போயிற்று. உலகின் பாவங்கள் அழிக்கப்படும்போது பூமி மறுபடியும் புதுப்பிக்கப்படும். (1கொரி 15:24-28) இதன் பின்பு பூமியிலே ஒரு சாபமும் இராது (ரோமர் 8:21-24; எபி 1:10-12; எபி 12:25-28; வெளி 21:1; வெளி 22:3).

"அவைகளை மாற்றுவீர்" - ஒரு மனுஷன் தன் பழைய வஸ்திரத்தைக் களைந்துபோட்டு, புதிய வஸ்திரம் தரிப்பதுபோல கர்த்தர் வானத்திலும் பூமியிலுமுள்ள சாபத்தை அகற்றிப்போட்டு தேவகுமாரனுடைய மகிமையினால் நிரப்புவார். (அப் 3:21; ரோமர் 8:21-24; எபி 12:25-28; வெளி 21-22)

"நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" - சிருஷ்டிகள் மாறும். ஆனால் கர்த்தர் ஒருபோதும் மாறாதவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

"உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள்" - தேவனுடைய பிள்ளைகளும், அவர்களுடைய சந்ததியாரும் கர்த்தருக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்டிருப்பார்கள். (ஏசா 9:6-7; ஏசா 59:20; ஏசா 66:22-24; தானி 2:44-45; தானி 7:13-14,27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:4-6; வெளி 21:3-7,21-27; வெளி 22:4-5).

103 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

பதினொறாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஐந்து அறிவுரைகள் - (103:1-2)
2. காரணம் - முப்பது ஆதாயங்கள் - (103:3-19)
3. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஐந்து வகுப்பினருக்கு ஐந்து அம்ச அறிவுரை - (103:20-22)

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஐந்து அறிவுரைகள்

சங் 103:1 என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

சங் 103:2 என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

ஸ்தோத்திரி (Bless) - בָּרַךְ - baw-rak' - 1288

வினைச்சொல் - முழங்காற்படியிடு, ஆசீர்வதி, ஸ்தோத்திரக்கப்படு, ஸ்தோத்திரம், உண்டாக்கு, தூஷி, புகழ், பெருமைப்பாராட்டு, வாழ்த்து, சுகசெய்தி, விசாரி **(to kneel; to bless as an act of adoration to God or man)** சங்கீதப்புஸ்கத்தில் மட்டும் "ஸ்தோத்திரி" என்னும் சொல் 75 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இச்சொல் 10 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சங்கீதம் 103-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி (சங் 103:1)
2. என் முழு உள்ளமே, கர்த்தரை ஸ்தோத்திரி
3. அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி
4. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி (சங் 103:2)
5. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே
6. அவருடைய தூதர்களே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் (சங் 103:20)
7. அவருடைய சர்வசேனைகளே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் (சங் 103:21)
8. அவருடைய பணிவிடைக்காரர்களே கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்
9. அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள் (சங் 103:22)
10. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி

கர்த்தரிடமிருந்து வரும் உபகாரங்கள்

1. அக்கிரமங்களையெல்லாம் மன்னிக்கிறார் (சங் 103:3)
2. நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்
3. பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்கிறார் (சங் 103:4)
4. கிருபையினால் முடிசூட்டுகிறார்
5. இரக்கங்களினால் முடிசூட்டுகிறார்
6. நன்மையினால் திருப்தியாக்குகிறார் (சங் 103:5)
7. கழுகுக்குச் சமானமாய், வயதை வாலவயதாக்குகிறார்

சங்கீதம் - தொகுப்புரை

103 அதிகாரம்

8. ஒடுக்கப்படுகிற யாவருக்கும் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார் (சங் 103:6)

9. கர்த்தர், தம்முடைய வழிகளைத் தெரியப் பண்ணுகிறார் (சங் 103:7)

10. தம்முடைய கிரியைகளைத் தெரியப் பண்ணுகிறார்

11. உருக்கமும், இரக்கமுமுள்ளவர் (சங் 103:8)

12. கர்த்தர் நீடிய சாந்தமுள்ளவர்

13. மிகுந்த கிருபையுமுள்ளவர்

14. கர்த்தர் எப்பொழுதும் கடிந்து கொள்ளமாட்டார் (சங் 103:9)

15. கர்த்தர் என்றைக்கும் கோபம் கொள்ளமாட்டார்

16. நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்கு செய்யாமல் இருக்கிறார் (சங் 103:10)

17. நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிகட்டாமல் இருக்கிறார்

18. பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபை பெரிதாயிருக்கிறது (சங் 103:11)

19. நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார் (சங் 103:12)

20. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் (சங் 103:13)

21. நம்முடைய உருவம் இன்னதென்று கர்த்தர் அறிவார் (சங் 103:14; ரோமர் 5:8)

22. நாம் மண்ணென்று கர்த்தர் நினைவு கூருகிறார்

23. மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, காற்று வீசினவுடன் அது இருந்த இடம் தெரியாமல் போய்விடும் (சங் 103:15-16)

24. அநாதியான கிருபை (சங் 103:17)

25. கர்த்தருக்கு பயந்தவர்கள் மேல் அவருடைய கிருபை அநாதியாய் என்றைக்கும் இருக்கும்

26. அநாதியான நீதி

27. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிறவர்கள் மேலும் அவர் கிருபையுள்ளது (சங் 103:18)

28. அவருடைய கட்டளைகளின்படி கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் மேலும் அவருடைய கிருபையும், நீதியும் உள்ளது

29. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார் (சங் 103:19)

30. அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது

2. காரணம் - முப்பது ஆதாயங்கள்

சங் 103:3 அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,

சங் 103:4 உன் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,

சங் 103:5 நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது.

சங் 103:6 ஒடுக்கப்படுகிறயாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.

சங் 103:7 அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப் பண்ணினார்.

103 அதிகாரம்

சங் 103:8 கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடியசாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.

சங் 103:9 அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார்; என்றைக்கும் கோபங் கொண்டிரார்.

சங் 103:10 அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.

சங் 103:11 பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக்கிறது.

சங் 103:12 மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

சங் 103:13 தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்,

சங் 103:14 நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்.

சங் 103:15 மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது; வெளியின் புஷ்பத்தைப் போல் பூக்கிறான்.

சங் 103:16 காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற் போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது.

சங் 103:17 கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.

சங் 103:18 அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது.

சங் 103:19 கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.

சாபங்களும் அதற்குப் பரிகாரமும்

1. அக்கிரமங்களின் மன்னிப்பு (சங் 103:3; சங் 25:18; சங் 32:1; சங் 86:5; சங் 130:4; யாத் 34:7; எண் 14:18; லூக்கா 13:1-5; 1யோவான் 1:7)

2. நோய்கள் குணமாக்கப்படுதல் (சங் 103:3; சங் 30:2; சங் 41:4; சங் 91:1-12; சங் 107:20; யாத் 15:26; உபா 32:39; ஏசா 53:4-5; மத் 8:17; யோவான் 10:10; அப் 10:38; 1பேதுரு 2:24; 5:14-16)

3. பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்பது (சங் 103:4; சங் 34:22; சங் 49:8; சங் 130:7; ரோமர் 3:24-31; 1கொரி 1:30; எபே 1:7; எபி 9:12-15; வெளி 5:8-10)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற நோய்கள்

1. மலடு (ஆதி 16:1; ஆதி 20:1-7)

2. குருட்டுத்தன்மை (ஆதி 27:1-2; ஆதி 48:10; லேவி 21:18; உபா 28:28)

3. கொப்புளம் (யாத் 9:10; உபா 28:27)

103 அதிகாரம்

4. குஷ்டம் (லேவி 14-15; மத் 8:1-4)

5. முடம் (லேவி 21:18)

6. அங்கவீனம் (லேவி 21:18)

7. குறுகின அவயம் (சப்பையான மூக்கு) (லேவி 21:18)

8. எலும்பு முறிதல் - காலொடித்தல் (லேவி 21:19)

9. கூனன் (லேவி 21:20)

10. குள்ளன் (லேவி 21:20)

11. சொறி, சிரங்கு (லேவி 21:20; உபா 28:27)

12. விதை நசுங்கினவன் (லேவி 21:20)

13. சிரங்கு (லேவி 21:21; உபா 28:27)

14. ரோகம் (லேவி 26:16; உபா 28:22-35)

15. காய்ச்சல் (உபா 28:22-27; மத் 8:14)

16. உஷ்ணம் (உபா 28:22)

17. எரிபந்தம் (லேவி 26:16; உபா 28:22)

18. சொறி (உபா 28:27)

19. புத்தி மயக்கம் (உபா 28:28; 1சாமு 21:15)

20. எரிபந்தப் பருக்கள் (உபா 28:27,35)

21. மூலவியாதி (உபா 28:27; 1சாமு 5:6)

22. சூரிய உஷ்ணத்தினால், நரம்பு மண்டலத்தில் ஏற்படும் கடும் வியாதி (2இராஜா 4:19-20)

23. இரத்தபேதி (2நாளா 21:12-19)

24. உடல்மெலிவு (யோபு 33:19-25; சங் 102:5; சக 14:12)

25. புண், ஊமைக்காயம் (சங் 38:5; ஏசா 1:6)

26. கிரந்திநோய் (சங் 38)

27. திமிர்வாதம் (மத் 4:24; மத் 8:6; மத் 9:1-6)

28. வலிப்பு நோய் (மத் 4:24; மத் 17:15)

29. பிசாசு பிடித்தல் (மத் 4:24; மத் 10:1-8)

30. உதிரப்போக்கு (மத் 9:20)

31. ஊமை (மத் 9:32)

32. செவிடு (மத் 11:5)

33. நீர்க்கோவை வியாதி (லூக்கா 14:2)

34. கொன்னைவாய் (மாற்கு 7:32)

35. பருக்கள் (லூக்கா 16:20)

36. பலவீனம் (நெடுநாளைய வியாதி) (யோவான் 5:5)

37. புழுப்புழுத்தல் (அப் 12:23)

இங்கே கூறப்பட்டிருக்கிற வியாதிகளைத் தவிர, இங்கு பேர் கூறப்படாத மேலும் ஏராளமான வியாதிகளையும் தேவன் குணமாக்கினார். கிறிஸ்துவின் தழும்புகளினால் நாம் குணமடைகிறோம். அவர் நமது எல்லா வியாதிகளையும் சொஸ்தமாக்குவார். (மத் 8:17; யோவான் 10:10; யாக் 5:14-16, 1பேதுரு 2:24)

"நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது" - கழுகு நீண்ட நாள் வாழும். அத்துடன் ஒவ்வொரு வருஷமும் அதற்குப் புதிய சிறகுகள் முளைக்கும். சங்கீதக்காரன் ஒருவேளை இஸ்ரவேலர்களின் சிறையிருப்பையும், அவர்கள் மறுபடியும் கட்டப்படுவார்கள் என்பதையும் கூறியிருக்கலாம்.

103 அதிகாரம்

"அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும்,நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்" - நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாகவும், நம்முடைய அக்கிரமங்களுக்கு தக்கதாகவும் தேவன் நம்மை சரிக் கட்டுவதில்லை. நம்மைத் தேவன் தண்டித்திருந்தால் நாம் நிர்மூலமாகியிருப்போம். தேவன் நம்மீது கிருபையாக இருக்கிறார். நாம் செய்த பாவங்களுக்கு மனந்திருந்தி, தேவனிடத்தில் வரும்போது அவர் நம்மைத் தமது கிருபையினால் ஏற்றுக் கொள்கிறார் (சங் 103:10-14; தீத்து 3:5-7).

"மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்" - நம்முடைய பாவங்களை அவர் முற்றிலுமாக விலக்கிவிடுவார் (அப் 3:19; ஏசா 43:25; ஏசா 44:22).

கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு இரங்குவதற்குக் காரணங்கள்

1. நாம் எப்படி உருவானோம் என்பதைக் கர்த்தர் அறிவார் (சங் 103:14; ஆதி 2:7)
2. நாம் மண்ணினால் உருவாக்கப்பட்டவர்கள் என்பதைக் கர்த்தர் நினைவுகூருவார் (சங் 103:14; ஆதி 2:7; ஆதி 3:19; பிர 3:19; பிர 12:7)
3. நாம் புல்லைப்போல் காற்று அடித்தால் இல்லாமற்போய் விடுவோம் என்று கர்த்தர் அறிவார் (சங் 103:15-16; சங் 90:5)

"நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்" - மனுஷன் மறந்துபோனதை (நமது குறைகள்) கர்த்தர் நினைவுகூருகிறார். அதே சமயத்தில் கர்த்தர் மறந்துபோனதை (நமது பாவங்கள்) மனுஷன் நினைவுகூருகிறான்.

தீர்க்கதரிசன எண் - 81

"கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது..........." (சங் 103:17-22) - சங் 103:19 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை. மற்ற வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன, தொடர்ந்து அவை நித்தியகாலமாக நிறைவேறும்.

"அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும்" - மனுக்குலத்தின் எல்லா சந்ததிகளையும் குறிக்கும் வாக்கியம் (ஏசா 59:20-21; தானி 2:44-45; தானி 7:13-14,27; வெளி 11:15; வெளி 21:3-7,21-27; வெளி 22:4-5).

கர்த்தருடைய பிள்ளைகள் என்பதற்குச் சான்றுகள்

1. கர்த்தருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும்
2. கர்த்தருடைய கட்டளைகளின்படி செய்ய வேண்டும்

இவ்விரண்டு காரியங்களையும் செய்கிறவர்கள் சங் 103:17-இல் கூறப்பட்டிருக்கிற தேவனுடைய கிருபையையும், அவருடைய நீதியையும் நித்திய காலத்திற்குப் பெற்றுக் கொள்வார்கள்.

"கர்த்தருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது" - தற்பொழுது கர்த்தர் முழு உலகத்தையும் ஆளுகை செய்யவில்லை. ஆகையினால் இது வருங்காலத்தில் நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனம். கர்த்தர் இயேசு கிறிஸ்துவை பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு அனுப்பி கலகக்காரர்கள் எல்லோரையும் அழிப்பார். அப்போது கர்த்தருடைய இராஜரிகம் சர்வத்தையும் ஆளுகை செய்யும் (1கொரி 15:24-28; எபே 1:10).

103 அதிகாரம்

3. தேவனைத் துதிக்க வேண்டுமென்று ஐந்து வகுப்பினருக்கு ஐந்து அம்ச அறிவுரை

சங் 103:20 கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.

சங் 103:21 கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வ சேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.

சங் 103:22 கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்; என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.

104 அதிகாரம்

பன்னிரெண்டாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய மகத்துவம் அறிவிக்கப்படுகிறது - (104:1)
2. முதலாவது சிருஷ்டிப்பு - எட்டு கிரியைகள் - (104:2-5)
3. ஒழுங்கின்மையான பூமி - முதலாவது கிரியை - (104:6)
4. ஆறு நாட்களில் மறுபடியும் சிருஷ்டிப்பு - (104:7-23)
5. எல்லா சிருஷ்டிக்கும் தேவனுடைய பதினைந்து அம்ச பராமரிப்பு - (104:24-32)
6. நான்கு பொருத்தனைகள் - இரண்டு விண்ணப்பங்கள் - தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - (104:33-35)

1. தேவனுடைய மகத்துவம் அறிவிக்கப்படுகிறது

சங் 104:1 என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்; மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர்.

சங்கீதம் 104-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி (சங் 104:1).
2. பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாக்கப் படுவார்கள் (சங் 104:35).
3. துன்மார்க்கர் இனி இல்லாமற் போவார்கள்.
4. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.
5. அல்லேலூயா - கர்த்தரை ஸ்தோத்திரி.

கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும், கர்த்தருக்கு பயப்படவேண்டும் என்பதற்கு காரணங்கள்

1. தேவனாகிய கர்த்தர் மிகவும் பெரியவர் (சங் 104:1).
2. அவர் மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறார்
3. அவர் ஒளியை வஸ்திரமாகத் தரித்திருக்கிறார்(சங்104:2;1தீமோ6:16).
4. கர்த்தர் வானங்களைத் திரையைப் போல் விரித்திருக்கிறார் (ஏசா 40:22).
5. தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவினார்.
6. மேகங்களைத் தமது இரதமாக்கியுள்ளார்.
7. காற்றினுடைய செட்டைகளின் மேல் செல்லுகிறார்.
8. தம்முடைய தூதர்களைக் காற்றுகளாக்குகிறார் (சங் 104:4).
9. தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகச் செய்கிறார்.
10. பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள் மேல் ஸ்தாபித்தார் (சங் 104:5; பிர 1:4)
11. பூமியை வஸ்திரங்களால் மூடுவது போல ஆழத்தினால், மூடினார், பர்வதங்களின் மேல் தண்ணீர்கள் நின்றது (சங் 104:6; 2பேதுரு 3:5-7
12. தண்ணீர்கள், கர்த்தருடைய கண்டிதத்தால் விலகி, அவருடைய குமுறலின் சத்தத்தால் விரைந்து, மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, அவைகளுக்குகென்று ஏற்படுத்தின இடங்களுக்குச் சென்றது (சங் 104:7-8; ஆதி 1:6-13; ஆதி 7:11).

104 அதிகாரம்

13. தண்ணீர்கள் மீண்டும் பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினார் (சங் 104:9; ஆதி 1:6-13).

14. பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிட்டு, அவைகளை மலைகள் நடுவே ஓடப்பண்ணினார் (சங் 104:10).

15. அவருடைய அனைத்து சிருஷ்டிகளும் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள தண்ணீரைக் கொடுத்தார் (சங் 104:10-12).

16. தம்முடைய மேல் வீடுகளிலிருந்து பர்வதங்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார் அதனால் பூமி திருப்தியாயிருக்கிறது (சங் 104:13).

17. பூமியிலே புல்லை உண்டாக்கி, அவைகளை மிருகங்களுக்கு ஆகாரமாக்கினார் (சங் 104:14).

18. பூமியிலே, உபயோகமான பயிர்வகைகளையும், காய்கள், பழங்களை ஏற்படுத்தி, அவைகளை மனுஷருக்கு ஆகாரமாக அளித்தார் (சங் 104:14-15; ஆதி 1:29; ஆதி 2:16).

19. கேதுரு மரங்களையும், தேவதாரு விருட்சங்களையும் நாட்டி, அவைகளைப் பறவைகளுக்கு குடியிருப்பாக்கினார் (சங் 104:16-17).

20. உயர்ந்த பர்வதங்களையும், கன்மலையையும் ஏற்படுத்தி, அவைகளைப் பல்வேறு மிருகங்களுக்கு அடைக்கலமாக்கினார் (சங் 104:18).

21. சூரியனையும், சந்திரனையும் படைத்து அவைகளைக் காலக் குறிப்புகளாக்கினார் (சங் 104:19).

22. கர்த்தர் இருளைக் கட்டளையிட்டு அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடப் பண்ணினார் (சங் 104:20-21).

23. சூரியனை உருவாக்கி, அது உதிக்கும் போது, மிருகங்கள் தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளுமாறும் அப்பொழுது மனுஷன் அன்றாட வேலைக்கும், பண்ணைக்கும் செல்லுமாறும் கர்த்தர் ஏற்படுத்தினார் (சங் 104:22-23).

24. கர்த்தர், ஜீவனுள்ள அனைத்து சிருஷ்டிகளையும் சிருஷ்டித்தார் (சங் 104:24).

25. கர்த்தர் ஞானமாய்ப் படைத்தவைகளினால் பூமி நிறைந்திருக்கிறது.

26. கர்த்தர், சமுத்திரத்தை உண்டாக்கி, அதிலே சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்களையும் உண்டாக்கினார். அதிலே கப்பல்கள் ஓடும்படியும் செய்தார் (சங் 104:25-26).

27. அவர் சிருஷ்டித்த அனைத்து ஜீவன்களும், தங்கள் ஜீவியத்திற்கு கர்த்தரையே சார்ந்து, ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவார் என்று கர்த்தரை நோக்கிக் காத்திருக்கின்றன (சங் 104:27-29).

28. கர்த்தர் பூமியின் ரூபத்தை புதிதாக்கி, எல்லா ஜீவன்களிலும் சிருஷ்டிக்களிலும் அவருடைய மகிமை விளங்கும்படி செய்வார் (சங் 104:30-31; வெளி 4:11).

29. பூமியை அதிரப் பண்ணுகிறார் (சங் 104:32).

30. அவர் பர்வதங்களைத் தொட அவைகள் புகையும்.

மேல்வீடு (upper room) - עֲלִיָּה - al-ee-yaw' - 5944

பெ.பெ.சொ. - அறைவீடு, மேல்வீடு, நடை மண்டபம் - (சங் 104:3,13).

104 அதிகாரம்

"மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர்" - சர்வ சிருஷ்டியின்மேலும் தேவனுடைய மகத்துவமும், மகிமையும் வெளிப்படுகிறது.

2. முதலாவது சிருஷ்டிப்பு - எட்டு கிரியைகள் - (ஆதி 1:1)

சங் 104:2 ஒளியை வஸ்திரமாகத் தரித்து, வானங்களைத் திரையைப் போல் விரித்திருக்கிறீர்.

சங் 104:3 தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி, மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறார்.

சங் 104:4 தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார்.

சங் 104:5 பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்.

"ஒளியை வஸ்திரமாகத் தரித்து, வானங்களைத் திரையைப்போல் விரித்திருக்கிறீர்" - கர்த்தர் வாசம்பண்ணும் மகா பெரிய ஒளியை இந்த வசனம் குறிப்பிடுகிறது. அந்த ஒளியினிடத்தில் யாரும் சேரமுடியாது, அந்த ஒளியை யாரும் காணவும் முடியாது (1தீமோ 6:16).

"திரை" - என்னும் சொல் வேதாகமத்தில் 57 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சங்கீதப்புஸ்தகத்தில் இந்த சங்கீதத்தில் மட்டுமே திரை என்னும் சொல்லை நாம் வாசிக்கிறோம். ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி விளக்கும் வசனங்களில் திரை என்னும் சொல் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த வசனத்தில் திரை என்பது ஆகாய விரிவைக் குறிப்பிடும். இது தேவனுடைய இரண்டாம் நாளின் சிருஷ்டிப்பு (ஆதி 1:6-8).

மச்சுப்பாவு (beams) - קָרָה - kaw-raw' - 7136

வினைச்சொல் - நேரிடு, எதிராக வா, சம்பவி, நடத்தல், சந்தி, உத்தரம் பாவு, மச்சுப்பாவு, சிந்திக்கப்பண்ணு, தற்செயலாய்கட, கதவு வேலை, நேரிடப்பண்ணு (to cause to meet, referring to the various kinds of clouds of the heavens meeting one another) தேவன் வானத்தில் மேகங்களால் பாவுகிறார். அதாவது வானத்தில் மேகங்களை ஒன்று சேர்க்கிறார் (சங் 104:3,13).

"மேகங்களைத் தமது இரதமாக்குகிறார்" - வானத்திலுள்ள மேகங்கள் தேவனுக்கு இரதமாயிருக்கின்றன. கர்த்தர் மேகங்கள் வழியாய்ப் பிரயாணம் பண்ணுகிறார். (சங் 104:3; நாகூம் 1:3) தேவன் மேகங்கள் வழியாக மட்டும் பிரயாணம் பண்ணுகிறார் என்று கூறமுடியாது. அவருக்கு மேலும் பல்வேறு விதமான இரதங்கள் உள்ளன. அவையாவன: மின்னல்கள், (2இராஜா 2:12; 2இராஜா 6:17; சங் 68:17; எசே 1:1-28; எசே 10:1-14; யோவே 2:5; சக 6) காற்று (சங் 104:3), கேருபீன்கள் (2சாமு 22:11; சங் 18:10). தேவன் மேகங்களில் தோன்றுகிறார். (மத் 17:5) கிறிஸ்துவும் மற்றவர்களும் மேகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள், எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (அப் 1:9; 1தெச 4:17; வெளி 11:12) கிறிஸ்து மேகங்களோடு திரும்பி வருவார். (தானி 7:13; மத் 24:30; மத் 26:64; வெளி 1:7; வெளி 14:14-16)

"தூதர்கள்" [angels spirits] தேவன் ஆவியாயிருக்கிறார். தூதர்களும் ஆவியாய் இருக்கிறார்கள். பிசாசுகளும் அசுத்த ஆவிகளாக இருக்கின்றன. வானத்திலும், பூமியின் கீழும் ஏராளமான ஆவிகள் உள்ளன (பிலி 2:10; வெளி 5:3,13).

104 அதிகாரம்

ஊழியஞ்செய்பவர் (ministers) - שָׁרַת - shaw-rath' - 8334

வினைச்சொல் - பணிவிடை செய், ஊழியஞ்செய், ஆராதனை செய், சேவி, விசாரி, உத்தியோகஸ்தர், வேலைக்காரன், தொண்டர். **(servants, human ministers of God)** (சங் 104: சங் 4; சங் 103:21; எஸ்றா 8:17; ஏசா 61:6; எரே 33:21; எசே 44:11; எசே 45:4-5; எசே 46:24; யோவே 1:9,13; யோவே 2:17). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஊழியக்காரர் என்னும் சொல்லை புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சுவிசேஷகர் என்று அழைக்கிறோம். (லூக்கா 1:2; 1கொரி 3:5; 1கொரி 4:1; 2கொரி 3:6; 2கொரி 6:4; எபி 1:7).

அக்கினிஜுவாலை (flaming fire) - לָהַט - law-hat' - 3857

வினைச்சொல் - தீயை இறை, ஜுவாலை, எரித்துப்போடு, எரி, வேகப்பண்ணு, கொளுத்து, சுட்டெரி.

ஏதேன் தோட்டத்தில் ஜீவவிருட்சத்திற்குப் போகும் பாதையைக் கர்த்தர் கேருபீன்களின் அக்கினி ஜுவாலையினால் பாதுகாத்தார் (ஆதி 3:24). அர்மகெதோன் யுத்தத்தில் துன்மார்க்கர் அக்கினி ஜுவாலையினால் எரிக்கப்படுவார்கள் (மல் 4:1). இஸ்ரவேலின் கலகக்காரர்கள் அக்கினியில் எரிக்கப்படுவார்கள். (சங் 106:18). அக்கினிஜுவாலை விருட்சங்களை எரிக்கும் (சங் 83:14; யோவே 1:19). நரக அக்கினி துன்மார்க்கரைத் தண்டிக்கும் (உபா 32:22). அக்கினி ஜுவாலை போல கோபம் இருக்கும். (சங் 57:4) யுத்தத்தில் கோபம் அக்கினியாய் இருக்கும். (ஏசா 42:25). சாத்தானின் கோபம் அக்கினியைப் போல இருக்கும் (யோபு 41:21).

இந்த வசனங்களையெல்லாம் பார்க்கும்போது கர்த்தருடைய ஊழியக்காரர் அக்கினி ஜுவாலையாக இருப்பார்கள் என்பது அவர்கள் கர்த்தருக்காக வைராக்கியமாக இருப்பார்கள் என்பதையே குறிக்கும். அவர்களுக்கு முன்பாக யாரும் அல்லது எதுவும் நிற்கமுடியாது (யோவான் 2:17). கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் தேவனுடைய அதிகாரம் பெற்றவர்கள். சாத்தானின் கிரியைகள்மீது அவர்களுக்கு அதிகாரம் உண்டு (மத் 18:18; மாற்கு 16:17-18; லூக்கா 10:19; லூக்கா 24:49; யோவான் 14:12-15; அப் 1:4-8; 1கொரி 4:20; 1கொரி 12:4-8). தேவனுடைய ஊழியக்காரர்கள் மனுஷர் மத்தியிலே தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

"பூமியின் ஆதாரங்கள்" **[foundations of the earth]** நட்சத்திரங்களும், தேவதூதர்களும் தேவனைத் துதித்துப் பாடி, ஆரவாரம் செய்தபோது பூமிக்கு அஸ்திபாரம் போடப்பட்டது (யோபு 38:4-7; நீதி 8:29).

"பூமி ஒருபோதும் நிலைபேராது" - தேவன் பூமியைச் சிருஷ்டித்தபோது அது நித்தியகாலமாக இருக்க வேண்டுமென்று சிருஷ்டித்தார் (பிர 1:4; ஏசா 45:18).

3. ஒழுங்கின்மையான பூமி - முதலாவது கிரியை - (ஆதி 1:2)

சங் 104:6 அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்; பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது.

"அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்; பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது" - லூசிபரின் காலத்தில் பூமியின்மீது ஒரு ஜலப்பிரளயம் வந்தது என்று வேதபண்டிதர்கள் சிலர் கருதுகிறார்கள். தங்கள் கருத்துக்கு ஆதாரமாக அவர்கள் இந்த வசனத்தைக் கூறுகிறார்கள் (ஆதி 1:2; எரே 4:23-26; 2பேதுரு 3:5-7). தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பூமி வெட்டாந்தரையாக இருந்தது (ஆதி 1:1,9-10). அதில் ஜீவராசிகள் இருந்தன (ஏசா 45:18). அதன் பின்பு ஜலப்பிரளயம் பூமியை மூடிற்று (ஆதி 1:2; 2பேதுரு 3:5-8). என்று இந்த வேதபண்டிதர்கள் கருத்து கூறுகிறார்கள்.

104 அதிகாரம்

ஆழம்(deep)- תְּהוֹם - teh-home' - 8415

ஆ.பெ.சொ. - ஆழம், ஆறு, பாதாளம், விலாசம், ஊற்று, சமுத்திரம், ஆழி **(the depth of a surging mass of water)** (ஆதி 1:2; ஆதி 7:11; ஆதி 8:2; நீதி 8:28; ஏசா 51:10)

ஒரு சரீரத்தை வஸ்திரத்தால் மூடுவது போன்று கர்த்தர் பூமியை ஆழத்தில் மூடினார். இக்காலத்தில் பர்வதங்களின்மீது தண்ணீர் நிறைந்து நின்றது. ஆகையினால், முழு பூமியுமே தண்ணீரின் ஆழத்திற்குள் மூழ்கியிருக்கும் (சங் 104:6; ஆதி 1:2; 2பேதுரு 3:5-7).

பூமியைத் தண்ணீர் மூடுவது தேவனுடைய சிருஷ்டிப்பு அல்ல. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. நோவாவின் நாட்களில் கர்த்தர் பூமிக்கு ஜலப்பிரளயத்தை நியாயத்தீர்ப்பாக அனுப்பியதுபோன்று, இக்காரியமும் நடைபெற்றது. யாருடைய பாவத்தினால் இந்த நியாயத்தீர்ப்பு உண்டாயிற்று.லூசிபருடைய பாவத்தினாலும், அவனோடு சேர்ந்து தேவனுக்கு எதிராக கலகம்பண்ணியோரின் பாவத்தினாலும் இந்த நியாயத்தீர்ப்பு வந்தது. இது ஆதாமின் காலத்திற்கு முன்பாக நடைபெற்ற காரியம் (ஆதி 1:1-2; ஏசா 14:12-14; எரே 4:23-26; எசே 28:11-17; 2பேதுரு 3:5-7).

4. ஆறு நாட்களில் மறுபடியும் சிருஷ்டிப்பு - (ஆதி 1:3-2:25)

சங் 104:7 அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று.

சங் 104:8 அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது.

சங் 104:9 அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்.

சங் 104:10 அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார்; அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது.

சங் 104:11 அவைகள் வெளியின் ஜீவன்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கும்; அங்கே காட்டுக்கழுதைகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்.

சங் 104:12 அவைகளின் ஓரமாய் ஆகாயத்துப்பறவைகள் சஞ்சரித்து, கிளைகள்மேலிருந்து பாடும்.

சங் 104:13 தம்முடைய மேல் வீடுகளிலிருந்து பர்வதங்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார்; உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது.

சங் 104:14 பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர் வகைகளையும் முளைப்பிக்கிறார்.

சங் 104:15 மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டு பண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்.

சங் 104:16 கர்த்தருடைய விருட்சங்களும், அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்களும் சாரத்தினால் நிறைந்திருக்கும்.

சங் 104:17 அங்கே குருவிகள் கூடுகட்டும்; தேவதாரு விருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு.

சங் 104:18 உயர்ந்த பர்வதங்கள் வரையாடுகளுக்கும், கன்மலைகள் குழிமுசல்களுக்கும் அடைக்கலம்.

சங் 104:19 சந்திரனைக் காலக் குறிப்புகளுக்காகப் படைத்தார்; சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்.

சங் 104:20 நீர் இருளைக் கட்டளையிடுகிறீர், இராக்காலமாகும்; அதிலே சகல காட்டு ஜீவன்களும் நடமாடும்.

104 அதிகாரம்

சங் 104:21 பாலசிங்கங்கள் இரைக்காக கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரம் கிடைக்கும்படித் தேடும்.

சங் 104:22 சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி, தங்கள் தாபரங்களில் படுத்துக்கொள்ளும்.

சங் 104:23 அப்பொழுது மனுஷன் சாயங்காலமட்டும் தன் வேலைக்கும், தன் பண்ணைக்கும் புறப்படுகிறான்.

கண்டித்தல்(rebuke) - גְּעָרָה - gheh-aw-raw - 1606

பெ.பெ.சொ. - கண்டித்தல், பயமுறுத்தல், கடிந்து கொள்ளுதல், மிரட்டுதல், கண்டிதம் (சங் 104:7; சங் 18:15; சங் 76:6; சங் 80:16; 2சாமு 22:16; ஏசா 50:2; ஏசா 51:20; ஏசா 66:15)

கர்த்தர் தண்ணீர்களைக் (ஜலப்பிரளயம்) கண்டித்தார். ஆகையினால் பாவத்தின் நிமித்தம் தேவன் தந்த நியாயத்தீர்ப்பாகவே நாம் இதைக் கருதவேண்டும். நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்திற்கும், ஆதாமின் காலத்திற்கு முன்பு நடைபெற்ற ஜலப்பிரளயத்திற்கும் வித்தியாசம் உண்டு. நோவாவின் காலத்தில் கர்த்தர் தண்ணீர்களைக் கண்டிதம் பண்ணவில்லை. ஆகையினால், 150 நாட்கள் கழித்து, நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தின் தண்ணீர்கள் இயற்கையாகவே வடிந்து வற்றிப்போயிற்று (ஆதி 8:1-5). ஆனால் இங்கோ கர்த்தர் தண்ணீர்களைக் கண்டித்தார். அவை எங்கிருக்க வேண்டுமோ அங்கு மறுபடியும் திரும்பிச்செல்லுமாறு கட்டளையிட்டார். தண்ணீர் மறுபடியும் வானத்திலுள்ள மேகங்களுக்குச் சென்றது.

"உமது குமுறலின் சத்தம்" என்பது இடியைக் குறிக்கும். கர்த்தர் மின்னலினால் தண்ணீர்களைப் பிரித்திருக்கலாம்.

"அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்" - இது சமுத்திரங்களுக்கு நியமிக்கப்பட்ட பிரமாணம். சமுத்திரத்தில் உள்ள தண்ணீர் சமுத்திரத்திற்குள் அடங்கியிருக்கிறது. ஆயினும் கர்த்தர் நியாயத்தீர்ப்பு தரவேண்டுமென்று விரும்பினால், சமுத்திரத்திலுள்ள தண்ணீர்களைப் பூமியிலுள்ள வெட்டாந்தரைக்குக் கொண்டு வந்து மறுபடியும் ஜலப்பிரளயத்தை அவரால் உண்டாக்க முடியும். இந்த வசனத்திலுள்ள காரியங்களுக்குப் பின்பே நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் உண்டாயிற்று என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். நோவாவின் காலத்தில் பூமியை மறுபடியும் ஜலத்தினால் அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் நோவாவோடு வானவில்லின் மூலமாக உடன்படிக்கை பண்ணினார் (ஆதி 9:11-12).

"அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார்; அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது" - பூமியின் அடியில் நீரூற்றுகள் உள்ளன என்பதையே இந்த வசனம் கூறுகிறது (சங் 104:10-15). பூமிக்கு மேலே தண்ணீர் இருப்பதுபோன்று பூமிக்கு உள்ளேயேயும் தண்ணீரை வைத்து தேவன் தமது ஜீவராசிகளைப் பராமரிக்கிறார்.

"கர்த்தருடைய விருட்சங்கள் சாரத்தினால் நிறைந்திருக்கும்" - விருட்சங்கள் கர்த்தருடையவை. தேவன் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிகளுமே கர்த்தருக்கே உரியவை (யோவான் 1:3; எபே 3:9; கொலோ 1:15-18; வெளி 4:11).

"கர்த்தர் நாட்டின லீபனோனின் கேதுருக்கள்" - மனுஷனுக்கும், விலங்குகளுக்கும் ஆண்டவர் பல்வேறு விதமான தங்குமிடங்களைக் கொடுத்திருக்கிறார் என்று சங் 104:16-23 கூறுகிறது.

1. பறவைகளுக்கு விருட்சங்கள் (சங் 104:16-17)
2. வரையாடுகளுக்குப் பர்வதங்கள் (சங் 104:18)
3. குழிமுசல்களுக்குக் கன்மலைகள்

104 அதிகாரம்

4. காட்டு மிருகங்களுக்குக் குகைகள், குழிகள், வனாந்தரங்கள் (சங் 104:19-22)

5. மனுஷனுக்கு முழு பூமியும் (சங் 104:23; ஏசா 45:18)

"சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார்; சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்" - கர்த்தருடைய உடன்படிக்கையின் பிரகாரம் சந்திரனும், சூரியனும் செயல்படுகிறது (ஆதி 1:14-19; ஆதி 8:22; எரே 33:20; தானி 2:21).

5. எல்லா சிருஷ்டிக்கும் தேவனுடைய பதினைந்து அம்ச பராமரிப்பு

சங் 104:24 கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.

சங் 104:25 பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது; அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு.

சங் 104:26 அதிலே கப்பல்கள் ஓடும்; அதிலே விளையாடும்படி நீர் உண்டாக்கின திமிங்கலங்களும் உண்டு.

சங் 104:27 ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும்.

சங் 104:28 நீர்கொடுக்க, அவைகள் வாங்கிக்கொள்ளும்; நீர் உம்முடைய கையைத்திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும்.

சங் 104:29 நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்.

சங் 104:30 நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்.

சங் 104:31 கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும்; கர்த்தர் தம்முடைய கிரியைகளிலே மகிழுவார்.

சங் 104:32 அவர் பூமியை நோக்கிப் பார்க்க, அது அதிரும்; அவர் பர்வதங்களைத்தொட, அவைகள் புகையும்.

"கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்" - தேவனுடைய சிருஷ்டிப்பு மிகவும் அற்புதமானது. தேவன் சிறியவற்றையும், பெரியவற்றையும் தமது ஞானத்தினால் சிருஷ்டித்திருக்கிறார். தேவனுடைய சிருஷ்டியில் அவருடைய ஞானம் விளங்குகிறது (ரோமர் 11:33).

"பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது" - பூமியிலுள்ளவைகள் எல்லாமே கர்த்தருடைய ஐசுவரியங்கள். பூமியிலுள்ள ஒவ்வொரு காரியங்களையும், நாம் பார்க்கும்போது அவை நமக்குரியவை அல்லது நமது சொத்து என்று நினைக்காமல், அவை தேவனுக்குரியவை, தேவனுடைய சொத்து என்று நினைக்க வேண்டும்.

"ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று தேவனுடைய சிருஷ்டிகளெல்லாம் தேவனை நோக்கிக் காத்திருக்கும்" - அன்றாட ஜீவியத்திற்கு எல்லா சிருஷ்டிகளும் தேவனையே சார்ந்திருக்கும். தேவன் தமது சிருஷ்டிகளைச் சிருஷ்டித்ததோடு நிறுத்திவிடாமல், அவற்றைப் பராமரிக்கவும் செய்கிறார். சிருஷ்டித்தவர் தமது சிருஷ்டிகளைப் பராமரிப்பார். சிருஷ்டிகள் தம்மைப் பராமரிக்கும் சிருஷ்டிகருக்குக் காத்திருக்க வேண்டும். தங்களுடைய பராமரிப்பிற்காகச் சிருஷ்டிகருக்கு நன்றி செலுத்த வேண்டும். சிருஷ்டிகரிடம் காத்திருந்து ஜெபித்து, தங்களுக்கு தேவையானவற்றை நன்றி உணர்வோடு பெற்றுக் கொள்ள வேண்டும்.

சங்கீதம் - தொகுப்புரை

104 அதிகாரம்

கர்த்தருக்குக் காத்திருப்பதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. இரட்சிப்பு (ஆதி 49:18; சங் 62:1)
2. அன்றாட தேவைகள் சந்திக்கப்படும் (சங் 104:27-28; சங் 145:14-15)
3. ஆலோசனை (சங் 25:4-5; சங் 106:13)
4. விண்ணப்பங்களுக்கு பதில் (சங் 25:21; சங் 40:1-3)
5. திடமனதாயிருத்தல் (சங் 27:14; சங் 31:24)
6. பாதுகாப்பு, சகாயம் (சங் 33:18-22)
7. சுதந்தரம் (சங் 37:7-9,34)
8. நம்பிக்கை (சங் 130:5-6)
9. நீதி (ஏசா 26:8-9; ஏசா 30:18)
10. புதுபெலன் அடைதல் (ஏசா 40:31)
11. ஆசீர்வாதங்கள் (ஏசா 30:18; ஏசா 64:4)
12. தைரியம் (ஏசா 49:23)
13. கர்த்தரின் நன்மை (புல 3:25)
14. பரிசுத்த ஆவியின் வல்லமை (லூக்கா 24:49; அப் 1:4-8)

"நீர்கொடுக்க, அவைகள் வாங்கிக் கொள்ளும்; நீர் உம்முடைய கையைத்திறக்க, அவைகள் நன்மையால் திருப்தியாகும்" - தேவன் தமது சிருஷ்டிகளைப் பராமரிப்பார் என்று கூறும்போது, தங்களுடைய அன்றாட உணவிற்காக நாம் ஒருவேலையும் செய்ய வேண்டியதில்லை. தேவன் நமக்கு தேவையான எல்லாவற்றையும் நமது கரங்களில் வந்து கொடுப்பார் என்று எண்ணக்கூடாது. தனது அன்றாட அப்பத்திற்காக மனுஷன் தேவனிடம் ஜெபிக்க வேண்டும் (மத் 6:11). அதேசமயத்தில், ஒருவன் வேலை செய்யவில்லையென்றால் அவன் சாப்பிடக்கூடாது என்றும் வேதவசனம் கூறுகிறது (2தெச 3:10; 1தீமோ 5:8). தேவன் சிருஷ்டிகளுக்குத் தேவையான எல்லாவற்றையுமே சிருஷ்டித்திருக்கிறார். சிருஷ்டிகள் சோம்பேறியாக இருக்கக்கூடாது. தங்களுக்கு நியமிக்கப்பட்ட காரியங்களை உண்மையாகவும், உத்தமமாகவும், தேவனுக்கு முன்பாக பணிவாகவும், பயபக்தியாகவும் செய்ய வேண்டும்.

"நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்" - பாவத்தின் சம்பளம் மரணம். தமது சிருஷ்டிகளைத் தேவன் பராமரிக்கிறார். இது அவருடைய பராமரிப்பின் பிரமாணம். பாவத்தின் விளைவினால் மனுக்குலத்திற்குச் சாபம் வந்தது. இந்த சாபத்தினால் மனுஷனுக்கு மரணம் உண்டாயிற்று. இதற்கு யாரும் விலக்கு கிடையாது. பூமியில் பிறந்த எல்லா ஜீவராசிகளும் ஒருநாள் மரித்தே ஆகவேண்டும். இது மரணத்தின் பிரமாணம். தேவன் இயற்கையின் பிரமாணம் ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறார். இதன் வாயிலாக, விதைப்பு, அறுப்பு ஆகிய பிரமாணங்கள் உண்டாயிற்று. ஜீவன், மரணம் ஆகியவைகளும் உண்டாயிற்று. சாத்தான் மனுஷருக்கு மரணத்தைக் கொண்டு வருகிறான் (எபி 2:14-15).

"நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்" - பூமியில் சீதோஷ்ணநிலை மாறிமாறி வருகிறது. கோடைகாலமும், மாரிக்காலமும் ஒவ்வொரு வருஷமும் வந்து பூமியைச் செழிக்க வைக்கிறது.

"அவர் பூமியை நோக்கிப்பார்க்க, அது அதிரும்; அவர் பர்வதங்களைத்தொட, அவைகள் புகையும்" - பூமி அதிர்ச்சிகளும், மின்னல்களும் கர்த்தருடைய கிரியைகள்.

சங்கீதம் - தொகுப்புரை

104 அதிகாரம்

6. நான்கு பொருத்தனைகள் - இரண்டு விண்ணப்பங்கள் - தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள்

சங் 104:33 நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங் 104:34 நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன்.

சங் 104:35 பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி, துன்மார்க்கர் இனி இராமற்போவார்கள். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அல்லேலூயா.

சங்கீதக்காரனின் பொருத்தனைகள்

1. நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைப் பாடுவேன் (சங் 104:33).
2. நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.
3. நான் கர்த்தரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும் (சங் 104:34).
4. நான் கர்த்தருக்குள் மகிழுவேன்.

அல்லேலூயா (Praise) - הָלַל - haw-lal' - 1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்பு, பேச்சு, பெருமை, பாராட்டு, வீம்புக்காரர், தொழுதுகொள், மேன்மைப்பாராட்டு, துதி, அல்லேலூயா, வாழ்த்து, ஸ்தோத்திரி, புகழ், பாடு, மூர்க்க, வெறிகொள், உயர்த்து, ஒளிவீசு, கீர்த்தனம்பண்ணு, துதிசெய், மதி மயங்கு, ஒளிகொடு, புகழப்படு (Praise ye Jah)

பழைய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் தான் முதன்முதலாக அல்லேலூயா என்னும் சொல் வருகிறது. எபிரெய இலக்கியங்களில் கர்த்தர் துன்மார்க்கரை அழிக்கும்போது ஜனங்கள் அல்லேலூயா என்று கூறி தேவனை மகிமைப்படுத்துவார்கள். புதிய ஏற்பாட்டில்கூட துன்மார்க்கர்மீது வரும் நியாயத்தீர்ப்புடன் தொடர்புபடுத்தியே அல்லேலூயா என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (வெளி 19:1-2). சங்கீதப்புஸ்தகத்தில் அல்லேலூயா என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும் மற்ற சங்கீதங்கள் (சங் 105:45; சங் 106:1,48; சங் 111:1; சங் 112:1; சங் 113:1,9; சங் 115:18; சங் 116:19; சங் 117:2; சங் 135:1,21; சங் 146:1,10; சங் 147:1,20; சங் 148:1,14; சங் 149:1,9; சங் 150:1,6).

யெகோவா יָהּ - yaw - 3050

ஆண்பால் பெயர்ச்சொல் - யெகோவா, கர்த்தர்

105 அதிகாரம்

பதிமூன்றாவது துதியின் சங்கீதம் - தேவனுடைய நாற்பத்திரெண்டு கிரியைகள்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று பதினான்கு அறிவுரைகள் - (105:1-6)
2. ஆபிரகாமின் உடன்படிக்கை - (105:7-11)
3. கானானில் அலைந்து திரிதல் - தேவனுடைய மூன்று கிரியைகள் - (105:12-16)
4. எகிப்தில் யோசேப்பின் ஊழியம் - தேவனுடைய இரண்டு கிரியைகள் - (105:17-22)
5. எகிப்தில் அலைந்து திரிதல் - தேவனுடைய மூன்று கிரியைகள் - (105:23-25)
6. ஆரோன், மோசே ஆகியோரின் ஊழியம் - தேவனுடைய ஒன்பது கிரியைகள் - (105:26-36)
7. யாத்திரை - தேவனுடைய பத்து கிரியைகள் - (105:37-45)

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று பதினான்கு அறிவுரைகள் - (1நாளா 16:7-13)

சங் 105:1 கர்த்தரைத்துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்.

சங் 105:2 அவரைப்பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.

சங் 105:3 அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக.

சங் 105:4 கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.

சங் 105:5 அவருடைய தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே! அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய யாக்கோபின் புத்திரரே!

சங் 105:6 அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர்வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவு கூருங்கள்.

சங்கீதம் 105-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தரைத் துதித்து, ஸ்தோத்திரம் செலுத்துங்கள் (சங் 105:1)
2. அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்
3. கர்த்தருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப் படுத்துங்கள்
4. கர்த்தரைப் பாடுங்கள் (சங் 105:2)
5. அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்
6. கர்த்தருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்
7. கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள் (சங் 105:3)
8. கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழட்டும்
9. கர்த்தரைத் தேடுங்கள் (சங் 105:4)
10. கர்த்தருடைய வல்லமையை நாடுங்கள்
11. அவர் சமுகத்தை நித்தமும் நாடுங்கள்
12. கர்த்தர் செய்த அதிசயங்களை நினைவு கூருங்கள் (சங் 105:5)
13. அவருடைய அற்புதங்களை நினைவு கூருங்கள்
14. அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளை நினைவு கூருங்கள் (சங் 105:5)

105 அதிகாரம்

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. இது ஜெபத்தின் சிலாக்கியம் (சங் 105:1,3-4)
2. கர்த்தருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப் படுத்துதல் (சங் 105:1)
3. கர்த்தருடைய அதிசயங்கள், அற்புதங்கள் (சங் 105:2,5)
4. அவருடைய பரிசுத்த நாமம் (சங் 105:3)
5. அவருடைய வல்லமை (சங் 105:4)
6. அவருடைய அதிசயங்கள் (சங் 105:5)
7. பூமியெங்கும் அவருடைய நியாயத்தீர்ப்பு (சங் 105:5,7)
8. அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர். (சங் 105:7)

"அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர்வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்" - கர்த்தருடைய அதிசயங்களும், அற்புதங்களும் எகிப்திலும், வனாந்தரத்திலும் கர்த்தர் செய்தவையாகும். அவருடைய வாக்கின் நியாயத்தீர்ப்புக்கள் என்பது சீனாய்மலையில் மோசேயோடு கர்த்தர் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரமாணமாகும்.

2. ஆபிரகாமின் உடன்படிக்கை - (ஆதி 12:1; 1நாளா 16:14-19)

சங் 105:7 அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர், அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும்.

சங் 105:8 ஆயிரந்தலைமுறைக்கென்று அவர்கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும்,

சங் 105:9 அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார்.

சங் 105:10 அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி:

சங் 105:11 உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 82

"அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர், அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும்........." (சங் 105:7-9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

சங்கீதம் 105-இல் கூறப்பட்டிருக்கிற தேவனுடைய கிரியைகள்

1. கர்த்தர் பூமியெங்கும் நியாயத்தீர்ப்பு வழங்குவார் (சங் 105:7)
2. ஆபிரகாமோடே நித்திய உடன்படிக்கை பண்ணினார் (சங் 105:8-11; ஆதி 12; ஆதி 15; ஆதி 17)
3. நித்திய உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார் (சங் 105:8)
4. அவருடைய நித்திய உடன்படிக்கையைக் கைக் கொள்ளுமாறு கட்டளையிடுகிறார் (சங் 105:8)
5. ஆபிரகாமின் உடன்படிக்கையை ஈசாக்குக்கு இட்ட ஆணையாக உறுதிப்படுத்துகிறார் (சங் 105:9; ஆதி 26:1-5,24)
6. ஆபிரகாமின் உடன்படிக்கையை, யாக்கோபுக்கு பிரமாணமாகவும் உறுதிப் படுத்துகிறார் (சங் 105:10; ஆதி 28:13-15; ஆதி 35:11-12; ஆதி 48:1-4)

105 அதிகாரம்

7. ஆபிரகாமின் உடன்படிக்கையை இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாக உறுதிப் படுத்துகிறார் (சங் 105:10-13; உபா 6:10; உபா 7:12-24)

8. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்ற இஸ்ரவேலர்கள் அனைவரும் பரதேசிகளாய்த் திரிந்த 430 வருடக் காலங்களில் கர்த்தர் அவர்களைப் பாதுகாத்தார் (சங் 105:12-15; ஆதி 13; ஆதி 20; ஆதி 26; ஆதி 31; ஆதி 32; ஆதி 34; ஆதி 46-50; யாத் 1-12)

9. இஸ்ரவேலர்களை ஒடுக்க இடங்கொடாமல் அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்து கொண்டார் (சங் 105:14-15; ஆதி 13; ஆதி 20; ஆதி 26; யாத் 1-12)

10. இஸ்ரவேலை பரீட்சிக்க தேசத்தில் பஞ்சத்தை வருவித்தார் (சங் 105:16; ஆதி 13; ஆதி 26; ஆதி 39-45)

11. பஞ்சத்திலிருந்து இஸ்ரவேலை விடுவிக்க, யோசேப்பை அனுப்பினார் (சங் 105:17-22; ஆதி 37-50)

12. கர்த்தர் யோசேப்பை புடமிட்டார் (சங் 105:19; சங் 37-45)

13. கர்த்தர், தமது வாக்கின்படி இஸ்ரவேலை மிகவும் பலுகப் பண்ணினார் (சங் 105:24; ஆதி 13:16; ஆதி 15:5; யாத் 1:7)

14. எகிப்தியர்களைப் பார்க்கிலும் இஸ்ரவேலர்களைப் பலவான்களாக்கினார் (சங் 105:24; யாத் 1:7-10)

15. இஸ்ரவேலர்களைப் பகைக்கவும், தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும், எகிப்தியர்களின் இருதயத்தை மாற்றினார் (சங் 105:25; யாத் 1:10)

16. எகிப்திலிருந்து, இஸ்ரவேலை வெளியேற்றி, வழிநடத்த மோசேயையும், ஆரோனையும் அனுப்பினார் (சங் 105:26; யாத் 3-12)

17. மோசேயும், ஆரோனும் எகிப்திலே, கர்த்தருடைய அடையாளங்களையும், அற்புதங்களையும்செய்ய அனுமதித்தார் (சங் 105:27; யாத் 4-15)

18. எகிப்திலே இருளை அனுப்பினார் (சங் 105:28; யாத் 10:21-23)

19. தண்ணீர்களை இரத்தமாக மாற்றி, அவர்களுடைய மச்சங்களைச் சாகப் பண்ணினார் (சங் 105:29; யாத் 7:14-25)

20. கர்த்தர் தவளைகளைத் திரளாய் அனுப்பினார் (சங் 105:30; யாத் 8:1-15)

21. வண்டுகளை அவர்களுடைய எல்லைகளிலெங்கும் அனுப்பினார் (சங் 105:31; யாத் 8:20-32)

22. கர்த்தர் பேன்களையும் அனுப்பினார் (சங் 105:31; யாத் 8:16-19)

23. கல்மழையையும் அக்கினியையும் வரப்பண்ணினார் (சங் 105:32-33; யாத் 9:23-35)

24. எண்ணிமுடியாதபடி வெட்டுக்கிளிகளை அனுப்பினார் (சங் 105:34-35; யாத் 10:1-20).

25. தேசத்தின் தலைச்சன்களைச் சங்கரித்தார் (சங் 105:36; யாத் 12)

26. எகிப்திலிருந்து, இஸ்ரவேலை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப் பண்ணினார் (சங் 105:37; யாத் 12:35-36)

27. அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவர்களை குணமாக்கினார் (சங் 105:37-38; சங் 107:20; யாத் 15:26; யாத் 23:25)

28. கர்த்தர் மேகத்தை மறைவுக்காக விரித்து, இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியையும் தந்தார் (சங் 105:39; யாத் 13:21-22)

105 அதிகாரம்

29. காடைகளை வரப்பண்ணி அவர்களுக்கு ஆகாரமாகக் கொடுத்தார் (சங் 105:40; யாத் 16:1-13; எண் 11:4-35)

30. வான அப்பத்தையும் அளித்து அவர்களைத் திருப்தியாக்கினார் (சங் 105:40; யாத் 16:14-22; யோவான் 6:23-59)

31. கன்மலையைத் திறந்து தண்ணீரை ஆறாக ஓடிவரப்பண்ணினார் (சங் 105:41; யாத் 17:5-7; எண் 20:8)

32. ஆபிரகாமையும், அவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தார் (சங் 105:42; ஆதி 12)

33. கர்த்தர், தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலை, எகிப்திலிருந்து களிப்போடு புறப்படப்பண்ணினார் (சங் 105:43; யாத் 14-15)

34. கர்த்தர், தாம் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்தார் (சங் 105:44; யோசு 13-21)

35. கர்த்தர், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிக்கப் பண்ணினார். அங்கு கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களால் நிரம்பிய வீடுகளையும், வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும், நடாத திராட்சத் தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் அளித்தார் (சங் 105:44; உபா 6:10-11)

"ஆயிரந்தலைமுறை" - நித்திய சந்ததி (ஆதி 9:12). இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் உபா 7:9-லும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"நித்திய உடன்படிக்கை" - தேவன் மனுஷனோடு நித்திய உடன்படிக்கை செய்கிறார் என்றால் தேவனைப்போல மனுஷனும் நித்திய ஜீவனை உடையவனாக இருக்க வேண்டும். நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளாத மனுஷனால் இந்த உடன்படிக்கையில் பங்குபெறமுடியாது.

"உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்" - கானான் தேசத்தை ஆபிரகாமின் சந்ததியாருக்கு கர்த்தர் நித்திய சுதந்தரமாகத் தந்தார் (ஆதி 17:8).

3. கானானில் அலைந்து திரிதல் - தேவனுடைய மூன்று கிரியைகள் - (1நாளா 16:20-22)

சங் 105:12 அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகைக்குட்பட்ட சொற்ப ஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள்.

சங் 105:13 அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறு ஜனத் தண்டைக்கும், ஒரு ராஜயத்தை விட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள்.

சங் 105:14 அவர்களை ஒடுக்கும்படி, ஒருவருக்கும் இடங்கொடாமல், அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டு:

சங் 105:15 நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார்.

சங் 105:16 அவர் தேசத்திலே பஞ்சத்தை வருவித்து, ஆகாரமென்னும் ஆதரவு கோலை முற்றிலும் முறித்தார்.

105 அதிகாரம்

"சொற்ப ஜனங்கள்" - மற்ற தேசத்து ஜனங்களைப் பார்க்கும்போது தேவனுடைய ஜனத்தின் தொகை மிகவும் சொற்பமாயிருந்தது. இவர்களே வாக்குத்தத்த தேசத்தில் முதலாவது இருந்தார்கள். லோத்துவைச் சத்துருக்கள் பிடித்துச் சென்றபோது ஆபிரகாமிடம் 318 யுத்த வீரர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் பிள்ளைகளும் சொற்பமான எண்ணிக்கை உடையவர்களே. தேவனுடைய உடன்படிக்கையில் 25 வருஷமாக ஆபிரகாம் மட்டுமே பங்காளியாக இருந்தான். அதன்பின்பு 60 வருஷமாக ஆபிரகாமும், ஈசாக்கும் தேவனோடு பங்காளிகளாக இருந்தார்கள். அதன்பின்பு, 80 வருஷங்களாக ஈசாக்கும், யாக்கோபும் தேவனுடைய உடன்படிக்கையில் பங்காளிகளாக இருந்தார்கள். இதற்குப் பின்பு, யாக்கோபின் 12 குமாரர்களும், அவர்களுடைய குடும்பத்தாரும் வருகிறார்கள். யாக்கோபு எகிப்திற்குச் சென்றபோது அவர்களுடைய மொத்த எண்ணிக்கை 70 பேர். 450 வருஷங்களாக அவர்கள் தங்கியிருந்த காலத்தில் இது 215 வருஷங்களாகும் (ஆதி 46:8-27; அப் 7:14).

"பரதேசிகள்" - ஆபிரகாமின் சந்ததியில் வராதவர்கள் பரதேசிகள் என்று அழைக்கப் பட்டார்கள் (லேவி 17:8-13; எபே 2:12,19). புறஜாதியார் மத்தியில் இஸ்ரவேலர்களையும், பரதேசிகள் என்று அழைத்தார்கள் (ஆதி 15:13; ஆதி 17:8-12; ஆதி 36:7).

"அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறு ஜனத்தண்டைக்கும், ஒரு ராஜயத்தைவிட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள்" - ஆதி 15:18-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற 10 தேசங்களைத் தவிர பெலிஸ்தர் மத்தியிலும் (ஆதி 20) எகிப்தியர் மத்தியிலும் (ஆதி 13;45 - யாத் 12) போனார்கள்.

"அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டார்" - (ஆதி 13; ஆதி 20; ஆதி 26; ஆதி 35)

"நான் அபிஷேகம்பண்ணினவர்கள்" - ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைத் தேவன் அபிஷேகம் பண்ணினார்.

1. ஆபிரகாம் (ஆதி 20:7; ஆதி 22:8; ஆதி 24:7,40)
2. ஈசாக்கு (ஆதி 27:28-29,39-40; ஆதி 28:3-4)
3. யாக்கோபு (ஆதி 48:15-22; ஆதி 49:3-27)

"தேசத்திலே பஞ்சத்தை வருவித்தார்" (ஆதி 13; ஆதி 26; ஆதி 41-47)

4. எகிப்தில் யோசேப்பின் ஊழியம் - தேவனுடைய இரண்டு கிரியைகள்

சங் 105:17 அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார்; யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான்.

சங் 105:18 அவன் கால்களை விலங்கு போட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைப்பட்டிருந்தது.

சங் 105:19 கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது.

சங் 105:20 ராஜா ஆள் அனுப்பி, அவனைக் கட்டவிழ்க்கச்சொன்னான்; ஜனங்களின் அதிபதி அவனை விடுதலை பண்ணினான்.

சங் 105:21 தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டவும், தன் மூப்பர்களை ஞானிகளாக்கவும்,

சங் 105:22 அவனைத் தன் வீட்டுக்கு ஆண்டவனும், தன் ஆஸ்திக்கெல்லாம் அதிபதியுமாக்கினான்.

"யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான்" - ஆதி 37-50 ஆகிய அதிகாரங்களில் இந்த வரலாற்றை நாம் வாசித்து தெரிந்து கொள்ளலாம்.

105 அதிகாரம்

"கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும்" - பார்வோனுடைய சொப்பனங்களை யோசேப்பு அர்த்தம் சொல்லும் வரையிலும். (ஆதி 41)

"அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது" - யோசேப்பு சிறையிலிருந்தான். ஆதி 37:5-11 ஆகிய வசனங்களில் யோசேப்பு சொப்பனம் கண்டதை வாசிக்கிறோம். அவன் கர்த்தருடைய வார்த்தையில் நம்பிக்கை வைத்திருந்தான். அப்போது கர்த்தருடைய வசனம் அவனைப் புடமிட்டது. அவன் விசுவாசத்தை விட்டு விலகவேயில்லை.

அதிபதி (senators) - זָקֵן - zaw-kane' - 2205

பெயரடை - அதிபதி, முதிர்ந்த, கிழவரான, மூத்த, பெரிய, மூப்பரான, முதிர்வயதான, பூரணவயதான, முதியோரான, கிழவியான (elders)

5. எகிப்தில் அலைந்து திரிதல் - தேவனுடைய மூன்று கிரியைகள் - (1நாளா 16:20-22)

சங் 105:23 அப்பொழுது இஸ்ரவேல் எகிப்திற்கு வந்தான்; யாக்கோபு காமின் தேசத்திலே பரதேசியாயிருந்தான்.

சங் 105:24 அவர் தம்முடைய ஜனங்களை மிகவும் பலுகப் பண்ணி, அவர்களுடைய சத்துருக்களைப் பார்க்கிலும் அவர்களைப் பலவான்களாக்கினார்.

சங் 105:25 தம்முடைய ஜனங்களைப் பகைக்கவும், தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும், அவர்களுடைய இருதயத்தை மாற்றினார்.

"யாக்கோபு காமின் தேசத்திலே பரதேசியாயிருந்தான்" - யாக்கோபும் அவனுடைய சந்ததியாரும் எகிப்தில் தங்கியிருந்தார்கள். (யாத் 12:41; கலா 3:17)

1. ஆபிரகாமின் அழைப்பிலிருந்து ஈசாக்கின் பிறப்பு வரையிலும் (ஆதி 12:4; ஆதி 21:5) - 25 வருஷம்
2. ஈசாக்கின் பிறப்பிலிருந்து யாக்கோபின் பிறப்பு வரையிலும் (ஆதி 25:26) - 60 வருஷம்
3. யாக்கோபின் பிறப்பிலிருந்து எகிப்திற்கு போவது வரையிலும் (ஆதி 47:9) - 130 வருஷம்

"அவர் தம்முடைய ஜனங்களை மிகவும் பலுகப்பண்ணி, அவர்களுடைய சத்துருக்களைப் பார்க்கிலும் அவர்களைப் பலவான்களாக்கினார்" - (ஆதி 46:8-27, யாத் 1:7-10)

6. ஆரோன், மோசே ஆகியோரின் ஊழியம் - தேவனுடைய ஒன்பது கிரியைகள்

சங் 105:26 தம்முடைய தாசனாகிய மோசேயையும் தாம் தெரிந்துகொண்ட ஆரோனையும் அனுப்பினார்.

சங் 105:27 இவர்கள் அவர்களுக்குள் அவருடைய அடையாளங்களையும், காமின் தேசத்திலே அற்புதங்களையும் செய்தார்கள்.

சங் 105:28 அவர் இருளை அனுப்பி, அந்தகாரத்தை உண்டாக்கினார்; அவருடைய வார்த்தைகளை எதிர்ப்பாரில்லை.

சங் 105:29 அவர்களுடைய தண்ணீர்களை இரத்தமாக மாற்றி, அவர்களுடைய மச்சங்களைச் சாகப்பண்ணினார்.

சங் 105:30 அவர்களுடைய தேசம் தவளைகளைத் திரளாய்ப் பிறப்பித்தது; அவர்களுடைய ராஜாக்களின் அறைவீடுகளிலும் அவைகள் வந்தது.

சங் 105:31 அவர் கட்டளையிட, அவர்களுடைய எல்லைகளிலெங்கும் வண்டுகளும் பேன்களும் வந்தது.

சங்கீதம் - தொகுப்புரை

105 அதிகாரம்

சங் 105:32 அவர்களுடைய மழைகளைக் கல்மழையாக்கி, அவர்களுடைய தேசத்திலே ஜுவாலிக்கிற அக்கினியை வரப்பண்ணினார்.

சங் 105:33 அவர்களுடைய திராட்சச் செடிகளையும் அத்திமரங்களையும் அழித்து, அவர்களுடைய எல்லைகளிலுள்ள மரங்களையும் முறித்தார்.

சங் 105:34 அவர் கட்டளையிட, எண்ணிமுடியாத வெட்டுக்கிளிகளும் பச்சைப்புழுக்களும் வந்து,

சங் 105:35 அவர்களுடைய தேசத்திலுள்ள சகல பூண்டுகளையும் அரித்து, அவர்களுடைய நிலத்தின் கனியைத் தின்றுபோட்டது.

சங் 105:36 அவர்களுடைய தேசத்திலே தலைச்சன்கள் அனைத்தையும், அவர்களுடைய பெலனில் முதற்பெலனான யாவரையும் சங்கரித்தார்.

"தம்முடைய தாசனாகிய மோசேயையும் தாம் தெரிந்துகொண்ட ஆரோனையும் அனுப்பினார்" - யாத் 4-12 ஆகிய அதிகாரங்களிலும் சங் 105:26-36 ஆகிய வசனங்களிலும் இந்த வரலாற்றை வாசித்து தெரிந்து கொள்ளலாம்.

"காமின் தேசம்" - எகிப்து (சங் 105:23,27; சங் 78:51; சங் 106:22)

"அவருடைய வார்த்தைகளை எதிர்ப்பாரில்லை" - விருத்தசேதனம் பண்ண வேண்டும் என்னும் கட்டளையை இஸ்ரவேலர் எதிர்க்கவில்லை. (யாத் 12:48; யோசு 5:2) மோசேயும், ஆரோனும் எதிர்க்கவில்லை (சங் 105:26-27).

7. யாத்திரை - தேவனுடைய பத்து கிரியைகள்

சங் 105:37 அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்பண்ணினார்; அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை.

சங் 105:38 எகிப்தியர் அவர்களுக்குப் பயந்ததினால், அவர்கள் புறப்பட்டபோது மகிழ்ந்தார்கள்.

சங் 105:39 அவர் மேகத்தை மறைவுக்காக விரித்து, இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியையும் தந்தார்.

சங் 105:40 கேட்டார்கள், அவர் காடைகளை வரப்பண்ணினார்; வான அப்பத்தினாலும் அவர்களைத் திருப்தியாக்கினார்.

சங் 105:41 கன்மலையைத் திறந்தார், தண்ணீர்கள் புறப்பட்டு, வறண்ட வெளிகளில் ஆறாய் ஓடிற்று.

சங் 105:42 அவர் தம்முடைய பரிசுத்த வாக்குத்தத்தையும், தம்முடைய தாசனாகிய ஆபிரகாமையும் நினைத்து,

சங் 105:43 தம்முடைய ஜனத்தைக் களிப்போடும், தாம் தெரிந்து கொண்டவர்களைக் கெம்பீர சத்தத்தோடும் புறப்படப்பண்ணி,

சங் 105:44 தமது கட்டளைகளைக் காத்து நடக்கும்படிக்கும், தமது நியாயப் பிரமாணங்களைக் கைக்கொள்ளும் படிக்கும்,

சங் 105:45 அவர்களுக்குப் புறஜாதிகளுடைய தேசங்களைக் கொடுத்தார்; அந்நிய ஜனங்களுடைய பிரயாசத்தின் பலனைச் சுதந்தரித்துக் கொண்டார்கள். அல்லேலூயா.

105 அதிகாரம்

"அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்பண்ணினார்" - யாத் 12:40-51; யாத் 13:17-14:31 ஆகிய வசனங்களில் இந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

"வெள்ளியோடும் பொன்னோடும்" - இஸ்ரவேலர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள் (யாத் 12:35-36).

"அவர்கள் கோத்திரங்களில் பலவீனப் பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை" - மாராவிலே கர்த்தர் அவர்கள் எல்லோரையும் குணமாக்கினார் (யாத் 15:26; சங் 107:20). தமது உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களை குணமாக்குவது கர்த்தருடைய சித்தம் (எபி 8:6). மோசேயின் உடன்படிக்கையைவிட தற்காலத்தில் கர்த்தர் நம்மிடத்தில் கிருபை மிகுந்தவராக இருக்கிறார். (2கொரி 3:6-15) ஆகையினால் புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையாராகிய நாம் தேவனுடைய வாக்குத்தத்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (மத் 7:7-11; மத் 17:20; மத் 18:18; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:17-18; லூக்கா 11:1-13; லூக்கா 18:1-8; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; அப் 26:18; ரோமர் 12:3-8; ரோமர் 15:29; 1கொரி 1:7; 1கொரி 4:20; 1கொரி 12:4-8; யாக் 5:14-16; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:13-14).

புதிய ஏற்பாட்டு சபை தேவனுடைய ஆசீர்வாதங்களைத் தன்னுடைய அவிசுவாசத்தினாலே பெற்றுக் கொள்ள முடியவில்லை. (லேவி 21:16-24; உபா 28; மத் 17:20; எபி 11:6; யாக் 1:5-8) தேவனுடைய சத்தியத்திற்கு எதிரான உபதேசங்களும் தற்காலத்தில் பெருகிவிட்டன. (1தீமோ 4:18; 2தீமோ 3:5; 2தீமோ 4:1-4) தேவன் தமது வல்லமையில் ஒருபோதும் குறைந்து போவதில்லை. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்.

"எகிப்தியர் அவர்களுக்குப் பயந்ததினால், அவர்கள் புறப்பட்டபோது மகிழ்ந்தார்கள்" - எகிப்தியர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக அவருடைய சித்தத்திற்கு எதிர்த்து நின்றார்கள். இதன் காரணத்தினாலேயே கர்த்தர் அவர்களை அழித்துப்போட்டார். சாபம் தங்களைவிட்டு அகன்றதற்காக எகிப்தியர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

"அவர் மேகத்தை மறைவுக்காக விரித்து, இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியையும் தந்தார்" - (யாத் 13:21-22).

காடைகள் [quails] - (யாத் 16:1-13; எண் 11:4-35)

வான அப்பம் [bread of heaven] - (யாத் 16:14-22; யோவான் 6:23-59)

"கன்மலையைத் திறந்தார், தண்ணீர்கள் புறப்பட்டு, வறண்ட வெளிகளில் ஆறாய் ஓடிற்று" (யாத் 17:5-7; எண் 20:8)

"கர்த்தர் தம்முடைய பரிசுத்த வாக்குத்தத்தத்தையும், தம்முடைய தாசனாகிய ஆபிரகாமையும் நினைத்தார்" (ஆதி 12:1-3; ஆதி 13:14-18; ஆதி 15:18-21; ஆதி 17:1-8).

"தம்முடைய ஜனத்தைக் களிப்போடும், தாம் தெரிந்தகொண்டவர்களைக் கெம்பீர சத்தத்தோடும் புறப்படப்பண்ணினார்" - (யாத் 12:40-51; யாத் 13:17-20:14)

"அவர்களுக்குப் புறஜாதிகளுடைய தேசங்களைக் கொடுத்தார்" (யோசு 13-21)

"அந்நிய ஜனங்களுடைய பிரயாசத்தின் பலனைச் சுதந்தரித்துக்கொண்டார்கள்" - பட்டணங்கள், வீடுகள், திராட்சைத் தோட்டங்கள், துரவுகள் இன்னும் ஏராளமான ஆசீர்வாதங்களையும் அவர்கள் சுதந்தரித்துக் கொண்டார்கள் (உபா 6:10-11).

தேவனுடைய கிரியைகளின் நோக்கம்

1. அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளைக் காத்து நடக்க வேண்டும்.

2. அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிர மாணங்களைக் கைக்கொள்ள வேண்டும்

106 அதிகாரம்

துதித்து ஜெபிக்கும் ஒன்பதாவது சங்கீதம் (தேவனுடைய முப்பது கிரியைகள். இஸ்ரவேலின் முப்பது பாவங்கள்)

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - இரண்டு காரணங்கள் - (106:1-3)
2. இரண்டு விண்ணப்பங்கள் - மூன்று காரணங்கள் - (106:4-5)
3. பாவத்தின் ஆறு அம்சங்களும், பாவ அறிக்கையும் - (106:6-7)
4. ஆனாலும் - இரக்கத்தின் ஆறு கிரியைகள் - (106:8-12)
5. இஸ்ரவேலின் இருபத்தைந்து பாவங்கள் - பிரயாணத்திலும் கானானிலும் தேவனுடைய இருபத்தாறு கிரியைகள் - (106:13-43)
6. ஆனாலும் - இரக்கத்தின் நான்கு கிரியைகள் - (106:44-46)
7. இரண்டு விண்ணப்பங்கள் - இரண்டு காரணங்கள் - (106:47-48)

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - இரண்டு காரணங்கள்

சங் 106:1 அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 106:2 கர்த்தருடைய வல்லமையான செய்கைகளைச் சொல்லி, அவருடைய துதியையெல்லாம் பிரஸ்தாபப்படுத்தத் தக்கவன் யார்?

சங் 106:3 நியாயத்தைக் கைக் கொள்ளுகிறவர்களும் எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்களும் பாக்கியவான்கள்.

சங்கீதம் 106-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் (சங் 106:1; சங் 104:35).
2. கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் - அல்லேலூயா.
3. ஜனங்களெல்லாரும் - ஆமென் என்பார்கள். (சங் 106:48).
4. கர்த்தரைத் துதியுங்கள் - அல்லேலூயா

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் நல்லவர் (சங் 106:1).
2. அவர் கிருபை என்றுமுள்ளது.
3. அவருடைய பரிசுத்த நாமத்தைப் போற்றுங்கள் (சங் 106:47).
4. கர்த்தரைத் துதிக்கிறதில் மேன்மை பாராட்டுங்கள்

பாக்கியவான்களாக இருப்பதற்கு நிபந்தனைகள்

1. நியாயத்தைக் கைக்கொள்ள வேண்டும்.
2. எக்காலத்திலும் நீதியைச்செய்ய வேண்டும்.

2. இரண்டு விண்ணப்பங்கள் - மூன்று காரணங்கள்

சங் 106:4 கர்த்தாவே, நீர் தெரிந்து கொண்டவர்களின் நன்மையை நான் கண்டு, உம்முடைய ஜாதியின் மகிழ்ச்சியால் மகிழ்ந்து, உம்முடைய சுதந்தரத்தோடே மேன்மை பாராட்டும் படிக்கு,

சங் 106:5 உம்முடைய ஜனங்களுக்கு நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை நினைத்து, உம்முடைய இரட்சிப்பினால் என்னைச் சந்தித்தருளும்.

106 அதிகாரம்

சங்கீதக்காரனின் விண்ணப்பங்கள்

1. கிருபையின்படி என்னை நினைத்துக் கொள்ளும்
2. இரட்சிப்பினால் என்னைச் சந்தித்தருளும்.
3. எங்களை இரட்சியும் (சங் 106:47).
4. எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்.

கர்த்தர் விண்ணப்பத்திற்குப் பதில் தரவேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தாவே, நீர் தெரிந்து கொண்டவர்களின் நன்மையை நான் கண்டுகொள்ளும்படி செய்யும்
2. உம்முடைய ஜாதியின் மகிழ்ச்சியால் மகிழும்படி செய்யும்.
3. உம்முடைய சுதந்தரத்தோடே மேன்மை பாராட்டும்படிக்குச் செய்யும்.

3. பாவத்தின் ஆறு அம்சங்களும், பாவ அறிக்கையும்

சங் 106:6 எங்கள் பிதாக்களோடுங்கூட நாங்களும் பாவஞ்செய்து, அக்கிரமம் நடப்பித்து, ஆகாமியம்பண்ணினோம்.

சங் 106:7 எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணராமலும், உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமலும் போய், சிவந்த சமுத்திர ஓரத்திலே கலகம் பண்ணினார்கள்.

இஸ்ரவேலின் பாவமும், பாவஅறிக்கையும்

1. எங்கள் பிதாக்களோடுங்கூட நாங்களும் பாவம் செய்தோம்.
2. நாங்கள் அக்கிரமம் நடப்பித்தோம்.
3. ஆகாமியம் பண்ணினோம்.
4. எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணரவில்லை (சங் 106:7).
5. உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமல் போனார்கள்.
6. சிவந்த சமுத்திர ஓரத்திலே கலகம் பண்ணினார்கள்.

4. ஆனாலும் - இரக்கத்தின் ஆறு கிரியைகள்

சங் 106:8 ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார்.

சங் 106:9 அவர் சிவந்த சமுத்திரத்தை அதட்டினார், அது வற்றிப்போயிற்று; வெட்டாந்தரையில் நடக்கிறதுபோல அவர்களை ஆழங்களில் நடந்து போகப் பண்ணினார்.

சங் 106:10 பகைஞன் கைக்கு அவர்களை விலக்கி இரட்சித்து, சத்துருவின் கைக்கு அவர்களை விலக்கி மீட்டார்.

சங் 106:11 அவர்கள் சத்துருக்களைத் தண்ணீர்கள் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனும் மீந்திருக்கவில்லை.

சங் 106:12 அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவருடைய துதியைப் பாடினார்கள்.

106 அதிகாரம்

"ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார்" - இஸ்ரவேலர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். தேவனுக்குக் கோபம் உண்டாக்கினார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்கள்மீது இரக்கமாக இருந்து, அவர்களை இரட்சித்தார். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன:

1. தம்முடைய நாமத்தினிமித்தம்
2. தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி

சங்கீதம் 106-இல் கூறப்பட்டிருக்கிற தேவனுடைய கிரியைகள்

1. கர்த்தர், தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார் (சங் 106:8; யாத் 12).
2. அவர் சிவந்த சமுத்திரத்தை அதட்டினார் (சங் 106:9; யாத் 14).
3. சிவந்த சமுத்திரத்தை வற்றிப்போகப் பண்ணினார் (சங் 106:9).
4. வெட்டாந்தரையில் நடக்கிறதுபோல தம்முடைய ஜனங்களை ஆழங்களில் நடந்துபோகப் பண்ணினார் (சங் 106:9; யாத் 14:19-31; யாத் 15:8-11).
5. பகைஞர்கள் கைக்கு ஜனங்களை விலக்கி இரட்சித்தார் (சங் 106:10; யாத் 14:23-31; யாத் 15:19).
6. சத்துருவின் கைக்கு அவர்களை விலக்கி மீட்டார் (சங் 106:10; யாத் 1)
7. சத்துருக்களைத் தண்ணீர்களினால் மூடி அழித்தார் (சங் 106:11; யாத் 14-15).
8. அவர்களுக்கு ஆகாரமாகக் காடைகளை வரப்பண்ணிக் கொடுத்தார் (சங் 106:15; யாத் 16:1-25; எண் 11:4-35).
9. அவர்கள் ஆத்துமாக்களில் இளைப்பை அனுப்பினார் (சங் 106:15; யாத் 16:1-25; எண் 11:4-35).
10. தாத்தானையும், அபிராமின் கூட்டத்தையும், சீயோலிலே அடித்தார் (சங் 106:17; எண் 16:29-33).
11. அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரை எரித்தது (சங் 106:18; எண் 16:35).
12. கர்த்தர் எகிப்திலே பெரிய கிரியைகளைச் செய்தார் (சங் 106:21-22; யாத் 4-12).
13. கர்த்தர் சிவந்த சமுத்திரத் தண்டையிலே பயங்கரமானவைகளை செய்தார் (சங் 106:22; யாத் 14-15).
14. அவர்கள் தங்கள் தேவனை, மறந்தார்கள். ஆகையால் ஜனங்களை நாசம்பண்ணுவேன் என்றார் (சங் 106:23; யாத் 32:7-14).
15. கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசேயினிமித்தம், அவர்களை அழிக்காதபடிக்கு, கர்த்தருடைய உக்கிரத்தை ஆற்றினார் (சங் 106:23; யாத் 32:11-14).
16. கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு விரோதமாகத் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை அழித்தார் (சங் 106:26; எண் 14:23-35).
17. ஜனங்களைப் பற்பல தேசங்களிலே சிதறடிக்கப்படவும் செய்தார் (சங் 106:27; 2இராஜா 17:7-34; 2இராஜா 25:1-30).
18. கர்த்தர், ஜனங்களுக்குள்ளே வாதையை அனுப்பினார் (சங் 106:29-30; எண் 25:8-9).
19. கர்த்தர் பினெகாசுடன் உடன்படிக்கை பண்ணினார் (சங் 106:31; எண் 25:10-15).
20. மோசேயைத் தண்டித்தார் (சங் 106:32; எண் 20).

106 அதிகாரம்

21. கர்த்தர், ஜாதிகளை அழிக்க கட்டளையிட்டார் (சங் 106:34; யாத் 23:20-33; உபா 20:17).

22. ஜனத்தின் மேல் கர்த்தர் கோபம் கொண்டார் (சங் 106:40; எண் 11:1; எண் 12:9).

23. கர்த்தர் தம்முடைய ஜனங்களை அருவருத்தார் (சங் 106:40; யாத் 32).

24. கர்த்தர், தம்முடைய ஜனங்களை புறஜாதியார்களுடைய கையில் ஒப்புக் கொடுத்தார் (சங் 106:40; யாத் 32).

25. அநேகந்தரம் அவர்களை விடுவித்தார் (சங் 106:43; நியா 1-16).

26. அவர்களின் பாவங்களினிமித்தம் அவர்களைச் சத்துருக்களின் கையின் கீழ்த் தாழ்த்தினார் (சங் 106:43; நியா 1-16; 1சாமு 1-2சாமு 5).

27. அவர்கள் கூப்பிடுதலைக் கர்த்தர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தைக் கண்ணோக்கினார் (சங் 106:44; நியா 2:16-19).

28. அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார் (சங் 106:45; நியா 2:16-19; சங் 105:8).

29. கர்த்தர் தமது கிருபையின்படி மனஸ்தாபப்பட்டார் (சங் 106:45; நியா 2:16-19).

30. தம்முடைய ஜனங்களைச் சிறைபிடித்த யாவரும், அவர்களுக்காக இரங்கும்படி செய்தார் (சங் 106:46; தானி 1:19-21; தானி 2:19,49; தானி 3:12; தானி 6:2).

"அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவருடைய துதியைப் பாடினார்கள்" - கர்த்தர் அவர்களை நேசிக்கிறார். அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்கிறார் (சங் 106:8-11). இவற்றை தேவன் அவர்களுக்கு நிரூபித்த பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைகளை விசுவாசித்தார்கள். அவருடைய துதியைப் பாடினார்கள். (யாத் 14:31-15:21).

5. இஸ்ரவேலின் இருபத்தைந்து பாவங்கள் - பிரயாணத்திலும் கானானிலும் தேவனுடைய இருபத்தாறு கிரியைகள்

சங் 106:13 ஆனாலும் சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்; அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல்,

சங் 106:14 வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி, அவாந்தர வெளியிலே தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.

சங் 106:15 அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்.

சங் 106:16 பாளயத்தில் அவர்கள் மோசேயின் மேலும், கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோனின்மேலும் பொறாமைகொண்டார்கள்.

சங் 106:17 பூமி பிளந்து தாத்தானை விழுங்கி, அபிராமின் கூட்டத்தை மூடிப்போட்டது.

சங் 106:18 அவர்கள் கூட்டத்தில் அக்கினி பற்றியெரிந்தது; அக்கினி ஜுவாலை துன்மார்க்கரை எரித்துப் போட்டது.

சங் 106:19 அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்.

106 அதிகாரம்

சங் 106:20 தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்.

சங் 106:21 எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின் தேசத்திலே அதிசயங்களையும், சிவந்த சமுத்திரத் தண்டையிலே பயங்கரமானவைகளையும் செய்தவராகிய,

சங் 106:22 தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள்.

சங் 106:23 ஆகையால், அவர்களை நாசம்பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்.

சங் 106:24 அவருடைய வார்த்தையை விசுவாசியாமல், இச்சிக்கப்படத்தக்க தேசத்தை அசட்டைபண்ணினார்கள்.

சங் 106:25 கர்த்தருடைய சத்தத்திற்குச் செவி கொடாமல், தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள்.

சங் 106:26 அப்பொழுது அவர்கள் வனாந்தரத்திலே மடியவும், அவர்கள் சந்ததி ஜாதிகளுக்குள்ளே அழியவும்,

சங் 106:27 அவர்கள் பற்பல தேசங்களிலே சிதறடிக்கப்படவும், அவர்களுக்கு விரோதமாகத் தம்முடைய கையை எடுத்தார்.

சங் 106:28 அவர்கள் பாகால்பேயோரைப் பற்றிக் கொண்டு, ஜீவனில்லாதவைகளுக்கு இட்ட பலிகளைப் புசித்து,

சங் 106:29 தங்கள் கிரியைகளினால் அவருக்குக் கோபம் மூட்டினார்கள்; ஆகையால் வாதை அவர்களுக்குள் புகுந்தது.

சங் 106:30 அப்பொழுது பினெகாஸ் எழுந்து நின்று நியாயஞ்செய்தான்; அதினால் வாதை நிறுத்தப்பட்டது.

சங் 106:31 அது தலைமுறை தலைமுறையாக என்றைக்கும் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

சங் 106:32 மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்குக் கடுங்கோபம் மூட்டினார்கள்; அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்லாப்பு வந்தது.

சங் 106:33 அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினான்.

சங் 106:34 கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடி, அவர்கள் அந்த ஜனங்களை அழிக்கவில்லை.

சங் 106:35 ஜாதிகளுடனே கலந்து, அவர்கள் கிரியைகளைக் கற்று;

சங் 106:36 அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள்; அவைகள் அவர்களுக்குக் கண்ணியாயிற்று.

சங் 106:37 அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்குப் பலியிட்டார்கள்.

சங் 106:38 அவர்கள் கானான்தேசத்து விக்கிரகங்களுக்குப் பலியிட்டு, தங்கள் குமாரர் குமாரத்திகளுடைய குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள்; தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது.

சங் 106:39 அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள்.

சங் 106:40 அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின்மேல் மூண்டது; அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார்.

106 அதிகாரம்

சங் 106:41 அவர்களை ஜாதிகளுடைய கையில் ஒப்புக் கொடுத்தார்; அவர்களுடைய பகைஞர் அவர்களை ஆண்டார்கள்.

சங் 106:42 அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை ஒடுக்கினார்கள்; அவர்களுடைய கையின்கீழ்த் தாழ்த்தப்பட்டார்கள்.

சங் 106:43 அநேகந்தரம் அவர்களை விடுவித்தார்; அவர்களோ தங்கள் யோசனையினால் அவருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி, தங்களுடைய அக்கிரமத்தினால் சிறுமைப்படுத்தப்பட்டார்கள்.

சங்கீதம் 106-இல் கூறப்பட்டிருக்கிற இஸ்ரவேலின் பாவங்கள்

1. அக்கிரமம் நடப்பித்து, தங்கள் பிதாக்களோடுங்கூட பாவம் செய்தார்கள் (சங் 106:6).

2. எகிப்திலே கர்த்தர் செய்த அதிசயங்களை உணராமலிருந்தார்கள் (சங் 106:7).

3. கர்த்தருடைய கிருபைகளின் திரட்சியை நினையாமல் போனார்கள்.

4. சிவந்த சமுத்திரத்திலே ஜனங்கள் கர்த்தருக்கு கோபம் உண்டாக்கினார்கள் (சங் 106:7; யாத் 14:10-15).

5. கர்த்தருடைய கிரியைகளை வெகு சீக்கிரமாய் மறந்தார்கள் (சங் 106:13; யாத் 15:24).

6. கர்த்தருடைய ஆலோசனைக்குக் காத்திருக்கவில்லை (சங் 106:13).

7. இறைச்சியைப் புசிப்பதில் மிகுந்த இச்சையுள்ளவர்களாயிருந்தார்கள் (சங் 106:14; யாத் 16:3; எண் 11:4-6).

8. அவாந்தரவெளியிலே தேவனைப் பரீட்சை பார்த்தார்கள் (சங் 106:14; சங் 78:18,41,56; சங் 98:9; யாத் 17:7; எண் 14:22; உபா 6:16).

9. மோசேயின் மேல் பொறாமை கொண்டார்கள் (சங் 106:16; எண் 12; எண் 16).

10. ஆரோன் மீது பொறாமை கொண்டார்கள் (சங் 106:16; எண் 17).

11. ஓரேபிலே ஒரு பொன்கன்றுக்குட்டியை உருவாக்கினார்கள் (சங் 106:19; யாத் 32).

12. வார்ப்பிக்கப்பட்ட பொன் கன்றுக்குட்டியை நமஸ்கரித்தார்கள் (சங் 106:19).

13. அவர்கள், தேவனுடைய மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள் (சங் 106:20; யாத் 32; ரோமர் 1:23).

14. தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள் (சங் 106:21).

15. அவர்கள் வாக்குப் பண்ணின தேசத்தை அசட்டை பண்ணினார்கள் (சங் 106:24; எண் 14:1-4,11; உபா 1:27).

16. அவர்கள், கர்த்தருடைய வார்த்தையை விசுவாசியாமல் இருந்தார்கள் (சங் 106:24; எண் 14).

17. தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள் (சங் 106:25; உபா 1).

18. கர்த்தருடைய சத்தத்திற்குச் செவி கொடாமல் போனார்கள் (சங் 106:25; எண் 14).

19. அவர்கள் பாகால்பேயோரைப் பற்றிக் கொண்டார்கள் (சங் 106:28; எண் 25:1-9).

20. ஜீவனில்லாதவைகளுக்கு இட்ட பலியைப் புசித்தார்கள் (சங் 106:28; உபா 18:11; ஏசா 8:19).

106 அதிகாரம்

21. தங்கள் கிரியைகளினால் கர்த்தருக்குக் கோபம் மூட்டினார்கள் (சங் 106:29; எண் 11-25).

22. மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் கர்த்தருக்குக் கடுங்கோபம் மூட்டினார்கள் (சங் 106:32; எண் 20:1-13).

23. மோசேயின் ஆவியை விசனப் படுத்தினார்கள் (சங் 106:33; எண் 20).

24. அவர்கள், மோசேயின் ஆவியை விசனப்படுத்தினதாலே, அவன் தன் உதடுகளினால் பதறிப்பேசினான் (சங் 106:33; எண் 20:10-12).

25. கர்த்தர் கட்டளையின்படி, அவர்கள் ஜாதிகளை அழிக்கவில்லை (சங் 106:34; நியா 1-2).

26. புறஜாதியார்களுடனே கலந்தார்கள் (சங் 106:35).

27. புறஜாதியார்களின் கிரியைகளைக் கற்றார்கள்

28. அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள் (சங் 106:36; நியா 2).

29. அவர்கள், தங்கள் குமாரரையும் குமாரத்திகளையும், பிசாசுகளுக்கும், விக்கிரகங்களுக்கும் பலியிட்டார்கள் (சங் 106:37-38; 2இராஜா 17:17, 31; 2இராஜா 21:6; 2இராஜா 23:10; 2நாளா 33:6).

30. அவர்கள் தங்கள் கிரியைகளை அசுத்தமாக்கினார்கள் (சங் 106:39; நியா 2; 2இராஜா 17).

31. தங்கள் செய்கைகளினால் சோரம் போனார்கள் (சங் 106:39; நியா 2; 2இராஜா 17).

32. அவர்கள், தங்கள் யோசனையினால் அவருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள் (சங் 106:43; நியா 1-2; 2இராஜா 17; அப் 7:51).

"தங்கள் மகிமை" **[their glory]** தாங்கள் எந்த தெய்வத்தின்மீது மகிமை பெற்றிருந்தார்களோ அந்த தேவன் (யாத் 32; ரோமர் 1:23).

"அவருடைய வார்த்தையை விசுவாசியாமல், இச்சிக்கப்படத்தக்க தேசத்தை அசட்டை பண்ணினார்கள்" - (எரே 3:19; சக 7:14).

"ஜீவனில்லாதவைகளுக்கு இட்ட பலிகள்" **[sacrifices of the dead]** இது பில்லிசூனியம், மந்திரவாதம் முதலிய பிசாசின் கிரியைகளைக் குறிக்கும். (லூக்கா 12:29) பாவம் செய்வதற்கு அவர்கள் புதிய வழிகளைக் கண்டுபிடித்தார்கள். (சங் 99:8).

"அது தலைமுறை தலைமுறையாக என்றைக்கும் அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டது" - தலைமுறை தலைமுறையாக ஜனங்கள் இருப்பார்கள் என்பதைக் குறிக்கும் பலவேத வசனங்களில் இதுவும் ஒன்று (ஆதி 8:22; ஆதி 9:12; 2சாமு 7; ஏசா 9:6-7; ஏசா 59:20; தானி 2:44-45; தானி 7:13-14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5).

கோபம் மூட்டுதல் **(strife)** - מְרִיבָה - **mer-ee-baw' - 4808**

பெண்பால் பெயர்ச்சொல் - வாக்குவாதம், மேரிபா, கோபம் மூட்டுதல், சண்டை மூட்டுதல். (எண் 20:1-13).

எபிரெய மொழியில் இரண்டு சொற்கள் பிசாசைக் குறிக்கும். அவையாவன:

1. பிசாசு **(devil)** - שֵׁד - **shade - 7700**

ஆ.பெ.சொ. - பேய், பிசாசு **"a spoiler"; "destroyer"; "a malignant, evil spirit"** (உபா 32:17; சங் 106:37)

2. ரோமமுள்ளது **(shaggy)** - שָׂעִיר - **saw-eer', saw-eer' - 8163**

ஆ.பெ.சொ. - ரோமம், மிகுந்தது, ரோமமுள்ளது **"shaggy, hairy one"; "kid"; "goat"; "satyr"; "devil"** (லேவி 17:7; 2நாளா 11:15)

106 அதிகாரம்

அஞ்சனம் பார்க்குதல், குறிசொல்லுதல் ஆகியவை பழைய ஏற்பாட்டுக் காலத்தில் காணப்பட்ட பிசாசின் கிரியைகள் ஆகும் (லேவி 19:31; லேவி 20:6; உபா 18:11; 1சாமு 28:3,9; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; ஏசா 8:19; ஏசா 19:3).

புதி ஏற்பாட்டுக் காலத்தில் பிசாசு பிடித்தல் என்னும் வினைச்சொல் அதிகமாக வழக்கத்தில் இருந்தது. கிரேக்க மொழியில் மூன்று சொற்கள் பிசாசின் கிரியைகளைக் குறிக்கின்றன. அவையாவன:

1. பிசாசு **(demon)** - **δαιμονίζομαι** - **daimonizomai** - 1139

   வினைச்சொல் - பிசாசு பிடித்திரு, பிசாசினால் வேதனைப்படு **(to be possessed by an evil spirit; be demonized)**

2. பிசாசுகள் **(demons)** - **δαιμων** - **daimoon** - 1142

   பெண்பால் பெயர்ச்சொல் - பிசாசுகள், பேய்கள் அல்லது ஆண்பால்

3. அசுத்த ஆவி **(evil spirits)** - **δαιμόνιον** - **daimonion** - 1140

   பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிசாசு, பேய், அசுத்த ஆவி, அந்நிய தேவதை **(evil spirits, demons, or devils)**

கிரேக்க மொழியில் பிசாசு என்னும் சொல் சாத்தானையும் குறிக்கிறது. அவனே பிசாசுகளுக்குத் தலைவன் (மத் 9:34; மத் 12:24). ஏராளமான பிசாசுகள் இருந்தாலும் இவனே பிசாசுகளுக்கெல்லாம் அதிபதி. சாத்தானைக் குறிக்கும் கிரேக்கச் சொல்.

பிசாசு **(devil)** **διάβολος** - **diabolos** - 1228

பெயரடை - பிசாசு, அவதூறு செய்கிறவன் **(adversary, false accuser, slanderer, devil)**

தவறாக குற்றம் சொல்கிறவனையும், வார்த்தைகளை தாறுமாறாக பேசுகிறவனையும் குறிப்பதற்குப் பிசாசு என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1தீமோ 3:11; 2தீமோ 3:3; தீத்து 2:3). யூதாஸ் இயேசு கிறிஸ்துவை காட்டிக்கொடுத்தபோது அவனுக்கும் பிசாசு என்னும் சொல் பயன்படுத்தப்பட்டது (யோவான் 6:70).

"அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள்" - இஸ்ரவேலர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வதற்கு புதிய வழிகளைக் கண்டுபிடித்தார்கள். தங்களுடைய மனச்சாட்சியை வஞ்சித்து, தாங்கள் பாவம் செய்தாலும் தங்களைப் பாவம் செய்யாதவர்கள்போலக் காண்பித்துக் கொண்டார்கள் (சங் 106:29, 39; சங் 99:8).

"அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின்மேல் மூண்டது; அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார்" - உபா 28, லேவி 26 ஆகிய அதிகாரங்கள் நிறைவேறிற்று. இஸ்ரவேலர் பாவம் செய்ததினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்தது. சங் 106:40-42 ஆகிய வசனங்களில் நாம் வாசிப்பவை இஸ்ரவேல்மீது வந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆகும்.

"அநேகந்தரம் அவர்களை விடுவித்தார்; அவர்களோ தங்கள் யோசனையினால் அவருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள்" - தேவன் இஸ்ரவேலரை எகிப்திலும், வனாந்தரத்திலும் , கானானைச் சுதந்தரித்தபோதும், நியாயாதிபதிகளின் ஆட்சி காலத்திலும், இராஜாக்களின் ஆட்சி காலத்திலும் விடுவித்தார். ஆனால் இஸ்ரவேலரோ தேவனுடைய கிருபையை மறந்துவிட்டு, கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஆபத்து வரும்போதெல்லாம் கர்த்தரை நோக்கி கெஞ்சுவார்கள். மனந்திரும்பி, தேவனிடத்தில் திரும்பிவருவார்கள். கர்த்தர் அவர்களுக்கு இரங்கி, அவர்களுடைய விரோதிகளின் கைகளிலிருந்து விடுவித்து பாதுகாப்பார்.

106 அதிகாரம்

இஸ்ரவேலர் கர்த்தருக்குப் பூரணமாக கீழ்ப்படிந்தால், அவர்கள் ஒருபோதும் தோல்வியைச் சந்திக்க மாட்டார்கள். இது கர்த்தர் தமது பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தம் (லேவி 26:3-13; உபா 28:1-14).

தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய பிரமாணங்களுக்குக் கட்டுப்படாமல் தேவனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். தோல்வி, வியாதி, சிறையிருப்பு, சாபம் எல்லாமே இஸ்ரவேல்மீது வரும் (லேவி 26:16-45; உபா 28:15-68).

இஸ்ரவேலர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த போது, 78 தடவைகள் யுத்தங்களில் வெற்றி பெற்றார்கள். அதேவேளையில், அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதபோது 13 முறை அவர்களுக்குள் உள்நாட்டு கலகங்கள் வந்தன.

இஸ்ரவேலின் வெற்றிகள்

1. பாபிலோனியர்கள் (ஆதி 11:31-32; ஆதி 12:1-6)
2. எகிப்தியர்கள் (ஆதி 12:10-20)
3. பாபிலோனியர்கள் (ஆதி 14:1-16)
4. பெலிஸ்தர்கள் (ஆதி 20)
5. பெலிஸ்தர்கள் (ஆதி 26:6-35)
6. சீரியர்கள் (ஆதி 31)
7. ஏதோமியர் (ஆதி 33:1-17)
8. கானானியர் (ஆதி 35:5)
9. எகிப்தியர் (யாத் 4:1-14:31)
10. அமலேக்கியர் (யாத் 17:8-16)
11. கானானியர் (எண் 21:1-4)
12. எமோரியர் (எண் 21:21-32; உபா 2:26-37)
13. பாசானியர்கள் (எண் 21:33-35; உபா 3)
14. மீதியானியர் (எண் 31)
15. எரிகோ (யோசு 6)
16. ஆயி (யோசு 8)
17. கிபியோனின் எதிரிகள் (யோசு 10:1-27)
18. கானானின் 31 இராஜாக்கள் (யோசு 10:28-39; யோசு 11:1-12:24)
19. எபூசியர் (நியா 1:8)
20. கானானியர் (நியா 1:9-20)
21. பெத்தேல் (நியா 1:22-25)
22. கானானியர் (நியா 1:28)
23. மெசொப்பொத்தாமியா (நியா 3:9-11)
24. மோவாபியர் (நியா 3:15-30)
25. பெலிஸ்தர் (நியா 3:31)
26. கானானியர் (நியா 4:4-5:31)
27. மீதியானியர், அமலேக்கியர் (நியா 6:1-7:25)
28. மீதியானியர் (நியா 8:1-32)
29. சீதோனியர் (நியா 10:12)
30. மாகோனியர் (நியா 10:12)
31. அம்மோனியர் (நியா 11)
32. பெலிஸ்தர் (நியா 14:19; நியா 15:14-20; நியா 16:30-31)
33. பெலிஸ்தர் (1சாமு 7:9-14)
34. அம்மோனியர் (1சாமு 11)
35. பெலிஸ்தர் (1சாமு 14:1-46)

சங்கீதம் - தொகுப்புரை

106 அதிகாரம்

36. மோவாபியர் (1சாமு 14:47)

37. ஏதோமியர் (1சாமு 14:47)

38. சோபா (1சாமு 14:47)

39. அமலேக்கியர் (1சாமு 14:48; 1சாமு 15:19)

40. பெலிஸ்தர் (1சாமு 17)

41. பெலிஸ்தர் (1சாமு 18:27)

42. பெலிஸ்தர் (1சாமு 23:1-5)

43. கெசூரியர் (1சாமு 27:8)

44. காசேரியர் (1சாமு 27:8)

45. அமலேக்கியர் (1சாமு 27:8)

46. அமலேக்கியர் (1சாமு 30:1-25)

47. எபூசியர் (2சாமு 5:6-8)

48. பெலிஸ்தர் (2சாமு 5:17-21)

49. பெலிஸ்தர் (2சாமு 5:22-25)

50. பெலிஸ்தர் (2சாமு 8:1)

51. மோவாபியர் (2சாமு 8:2)

52. சோபா (2சாமு 8:3)

53. சீரியர்கள் (2சாமு 8:5)

54. அம்மோனியர் (2சாமு 8:12)

55. அமலேக்கியர் (2சாமு 8:12)

56. சீரியர் (2சாமு 8:13)

57. ஏதோமியர் (2சாமு 8:14)

58. அம்மோனியர் - சீரியர் (2சாமு 10)

59. அம்மோனியர் (2சாமு 12:26-31)

60. சீரியர் (1இராஜா 20:1-21)

61. சீரியர் (1இராஜா 20:22-42)

62. மோவாபியர் (2இராஜா 3:21-27)

63. சீரியர் (2இராஜா 6:16-23)

64. சீரியர் (2இராஜா 6:24-7:20)

65. சீரியர் (2இராஜா 13:19)

66. சீரியர் (2இராஜா 14:28)

67. சீரியர் (2இராஜா 16:5-6)

68. பெலிஸ்தர் (2இராஜா 18:8-12)

69. அசீரியர்கள் (2இராஜா 18:13-19:35)

70. அமலேக்கியர் (1நாளா 4:43)

71. ஆகாரியர் (1நாளா 5:10,20-22)

72. எத்தியோப்பியர் (2நாளா 14:9-15)

73. மோவாபியர் (2நாளா 20:1-15)

74. ஏதோமியர் (2நாளா 25:1-16)

75. பெலிஸ்தர் (2நாளா 26:6)

76. அரபியர் (2நாளா 26:7)

77. அம்மோனியர் (2நாளா 26:8)

78. யாபேஸ்-கிலேயாத் (நியா 21:10-12)

இஸ்ரவேலின் உள்நாட்டு கலகங்கள்

1. கிலெயாத்தியர்-எப்பிராயீமர் (நியா 12)

2. பென்யமீனனுக்கு எதிராக 11 கோத்திரங்கள் (நியா 20)

3. யூதாவுக்கு எதிராக 11 கோத்திரங்கள் : ராஜ்யத்தின் முதலாவது பிரிவு (2சாமு 2:1-11)

4. தாவீதின் வீட்டிற்கும், சவுலின் வீட்டிற்குமிடையே (2சாமு 2:12-3:1)

106 அதிகாரம்

5. அப்சலோமின் கலகம் (2சாமு 15-18)

6. சேபாவின் கலகம் (2சாமு 20)

7. ரெகொபெயாம், யெரொபெயாம், இராஜ்யத்தின் இரண்டாவது பிரிவு (1இராஜா 12; 1இராஜா 14:30)

8. அபியாம், யெரொபெயாம் (1இராஜா 15:7)

9. ஆசா, பாஷா (1இராஜா 15:16-22, 32)

10. சிம்ரி, உம்ரி (1இராஜா 16:8-20)

11. திப்னி, உம்ரி (1இராஜா 16:21-22)

12. யெகூவின் கலகம் (2இராஜா 9:14-10:31)

13. அமத்சியா, யோவாகாஸ் (2இராஜா 14:8-14)

இஸ்ரவேலரின் தோல்வி

1. அமலேக்கியர், கானானியர் (எண் 14:45)

2. எபூசியர் (நியா 1:21)

3. கானானியர் (நியா 1:27-35)

4. மெசொப்பொத்தாமியா (நியா 3:8)

5. மோவாபியர் (நியா 3:12-14)

6. கானானியர் (நியா 4:1-3)

7. மீதியானியர் (நியா 6:1-10)

8. பெலிஸ்தர், அம்மோனியர் (நியா 10:6-8)

9. அம்மோனியர் (நியா 10:9-17)

10. பெலிஸ்தர் (நியா 13:1)

11. பெலிஸ்தர் (1சாமு 4)

12. பெலிஸ்தர் (1சாமு 31)

13. எகிப்தியர் (1இராஜா 14:25-30)

14. சீரியர் (1இராஜா 15:20)

15. சீரியர் (1இராஜா 22:29-39)

16. ஏதோமியர் (2இராஜா 8:20-21)

17. லிப்னா (2இராஜா 8:22-23)

18. சீரியர் (2இராஜா 10:32-33)

19. சீரியர் (2இராஜா 12:17-18)

20. அசீரியர் (2இராஜா 15:19-20)

21. அசீரியர் (2இராஜா 15:27-31)

22. அசீரியர் (2இராஜா 17:3)

23. அசீரியர் (2இராஜா 17:3)

24. பாபிலோனியர் (2இராஜா 17:3)

25. மற்ற தேசங்கள் (2இராஜா 24:2-5)

26. பாபிலோனியர் (2இராஜா 24:11-16)

27. பாபிலோனியர் (2இராஜா 25:1-21)

28. அசீரியர் (1நாளா 5:25-26)

29. பெலிஸ்தர், எத்தியோப்பியர் (2நாளா 21:16-17)

30. சீரியர் (2நாளா 24:23-24)

31. ஏதோமியர் (2நாளா 28:17)

32. பெலிஸ்தர் (2நாளா 28:18)

33. அசீரியர் (2நாளா 28:18)

34. எகிப்தியர் (2நாளா 36:1-5)

"தங்களுடைய அக்கிரமத்தினால் சிறுமைப்படுத்தப்பட்டார்கள்" - இஸ்ரவேலரின் வரலாற்றில் மேதிய-பெர்சியர்கள், கிரேக்கர்கள், சீரியர்கள், எகிப்தியர்கள், ரோமர்கள் ஆகியோர் இஸ்ரவேலரை யுத்தத்தில் வெற்றி பெற்றார்கள். தோல்வியடைந்த இஸ்ரவேலர்கள் பூமியின் எல்லை வரைக்கும் சிதறி ஓடினார்கள்.

106 அதிகாரம்

கிபி. 70-ஆம் ஆண்டிலும் கிபி. 135-ஆம் ஆண்டிலும் இஸ்ரவேலர்கள் உலகம் முழுவதிலும் சிதறி ஓடினார்கள். தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்தை விட்டுவிட்டு உலகம் முழுவதிலும் சென்று பல நூற்றாண்டு காலமாக பரதேசிகளாகச் சஞ்சரித்தார்கள். இப்பொழுது கர்த்தர் அவர்களை மறுபடியுமாக கூட்டிச்சேர்த்து வருகிறார்.

6. ஆனாலும் - இரக்கத்தின் நான்கு கிரியைகள்

சங் 106:44 அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி,

சங் 106:45 அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின் படி மனஸ்தாபப்பட்டு,

சங் 106:46 அவர்களைச் சிறைபிடித்த யாவரும் அவர்களுக்கு இரங்கும்படி செய்தார்.

"அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும் போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கினார்" - இஸ்ரவேலர்கள் தேவனுக்கு கோபம் உண்டாக்கினார்கள். ஆகையினால் தேவன் அவர்களை சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். ஆனாலும் இரக்கத்திற்காக அவர்கள் கெஞ்சியபோதோ கர்த்தர் அவர்களுடைய இடுக்கண்களைக் கண்ணோக்கினார். அவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்டார். அவர்களோடு தாம் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தமது இரக்கங்களினால் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தார் (சங் 106:44-46).

"இடுக்கம்" **[affliction]** இந்த வசனத்தில் இடுக்கம் என்பது சரீர வியாதியைக் குறிக்காது. யுத்தங்களினால் உண்டான தோல்விகளையும், நெருக்கங்களையும், பாடுகளையும் குறிக்கும்.

"அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தாபப்பட்டார்" - தம்முடைய ஜனங்கள் தம்மைக் கோபப்படுத்தினாலும், தமக்கு விரோதமாக கலகம் பண்ணினாலும், கர்த்தர் தமது ஜனத்தின்மீது கிருபையுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தார். தமது உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். இஸ்ரவேலர்கள் மனந்திரும்பி, தேவனிடத்தில் வந்தபோது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து அவர்களை மீட்டுக் கொண்டார் (லேவி 26:3-13; உபா 28:1-14).

மனஸ்தாபமாயிரு (repented) - נָחַם - naw-kham' - 5162

வினைச்சொல் - இது கர்த்தருடைய மனஸ்தாபத்தைக் குறிக்கும். to be sorry (in a favorable sense; to pity; console; repent. The word is used of God) மனஸ்தாபமாயிரு, மனஸ்தாபப்படு, ஆறுதல்அடை, மனம்மாறு, தேற்றப்படு, பொறு, பரிதாபங்கொள், பரிதபி, துக்கம், ஆறு, மனமடி, பிரியப்படு, தேற்று, ஆறுதல்செய், ஆறுதல் சொல்லு, தேற்றரவாயிரு, தேற்றரவுபண்ணு, ஆற்று, ஆறுதலாக இரு, தேற்றரவு, பரிதாபப்படு

கர்த்தர் மனஸ்தாபப்பட்ட காரியங்கள்

1. மனுஷனை சிருஷ்டித்ததற்காக மனஸ்தாபப் பட்டார் (ஆதி 6:6,7).
2. இஸ்ரவேலை அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியதற்காக மனஸ்தாபப் பட்டார் (யாத் 32:12-14).
3. இஸ்ரவேலர் இரக்கத்திற்காக கெஞ்சிய போது அவர்கள்மீது அனுப்பிய வாதைக்காக மனஸ்தாபப்பட்டார் (நியா 2:18; 2சாமு 24:16; 1நாளா 21:15; சங் 106:45; சங் 135:14; எரே 18:8; எரே 26:3,13; ஆமோ 7:3,6; யோவே 2:14).
4. சவுலை இராஜாவாக ஆக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார் (1சாமு 15:11,35).

சங்கீதம் - தொகுப்புரை

106 அதிகாரம்

5. நினிவே மனந்திருந்தியபோது, அதை அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியதற்காக மனஸ்தாபப்பட்டார் (யோனா 3:9-10).

"அவர்களைச் சிறைபிடித்த யாவரும் அவர்களுக்கு இரங்கும்படி செய்தார்" - இஸ்ரவேலை சிறைப்பிடித்தவர்களுடைய கண்களில் அவர்களுக்கு தயவு கிடைத்தது. (2இராஜா 25; தானி 1:19-6:2)

7. இரண்டு விண்ணப்பங்கள் - இரண்டு காரணங்கள் - (41:10; 54:9; 80:7)

சங் 106:47 எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதில் மேன்மைபாராட்டும்படி எங்களை இரட்சித்து, எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்.

சங் 106:48 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப் படத்தக்கவர். ஜனங்களெல்லாரும்: ஆமென், அல்லேலூயா, என்பார்களாக.

கர்த்தர் தங்களை இரட்சிக்க வேண்டுமென்பதற்கு காரணங்கள்

1. நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றுவோம்
2. நாங்கள் உம்மைத் துதிக்கிறதில் மேன்மை பாராட்டுவோம்

107 அதிகாரம்

பதினான்காவது துதியின் சங்கீதம் - தேவனுடைய நாற்பத்தினான்கு கிரியைகள்

பொருளடக்கம்

1. துதி - ஏழு காரணங்கள் - தேவன் தமது ஜனங்களைக் குறைவிலிருந்தும், பசியிலிருந்தும் மீட்கும் கிரியை - (107:1-7)

2. துதி - ஏழு காரணங்கள் - சிறைப்பட்டோரைக் கட்டுகளிலிருந்தும், அந்தகாரத்திலிருந்தும் விடுவிக்கும் தேவனுடைய மீட்பின் கிரியை - (107:8-14)

3. துதி - ஏழு காரணங்கள் - நிர்மூடரை நோய்களிலிருந்து விடுவிக்கும் தேவனுடைய மீட்பின் கிரியை - (107:15-20)

4. துதி - ஏழு காரணங்கள் - கடல் யாத்திரை பண்ணுவோரை கடல் கொந்தளிப்பிலிருந்து விடுவிக்கும் தேவனுடைய மீட்பின் கிரியை - (107:21-30)

5. துதி - பதினெட்டு காரணங்கள் - எளியவனுக்கும், ஐசுவரியவானுக்கும் தேவனுடைய பராமரிப்பின் கிரியை - (107:31-43)

1. துதி - ஏழு காரணங்கள் - தேவன் தமது ஜனங்களைக் குறைவிலிருந்தும், பசியிலிருந்தும் மீட்கும் கிரியை

சங் 107:1 கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 107:2 கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு,

சங் 107:3 கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப் பட்டவர்கள், அப்படிச் சொல்லக் கடவர்கள்.

சங் 107:4 அவர்கள் தாபரிக்கும் ஊரைக் காணாமல், வனாந்தரத்திலே அவாந்தர வழியாய்,

சங் 107:5 பசியாகவும், தாகமாகவும், ஆத்துமா தொய்ந்ததாகவும் அலைந்து திரிந்தார்கள்.

சங் 107:6 தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்.

சங் 107:7 தாபரிக்கும் ஊருக்குப்போய்ச் சேர, அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார்.

சங்கீதம் 107-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தரைத் துதித்து, ஸ்தோத்திரம் செலுத்துங்கள் (சங் 107:1)

2. கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டவர்கள் அப்படிச் சொல்லக்கடவர்கள் (சங் 107:2)

3. கர்த்தர் நன்மையினால் நிரப்புகிறாரென்று அவரைத் துதியுங்கள்

4. மனுபுத்திரருக்கு கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தம் அவரைத் துதியுங்கள் (சங் 107:8)

5. கர்த்தருடைய கிருபையினிமித்தம் அவரைத் துதியுங்கள்

6. மனுபுத்திரருக்கு கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தம் அவரைத் துதியுங்கள் (சங் 107:15)

7. கர்த்தருடைய கிருபையினிமித்தம் அவரைத் துதியுங்கள்

8. மனுபுத்திரருக்கு கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தம் அவரைத் துதியுங்கள் (சங் 107:21)

107 அதிகாரம்

9. ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி கர்த்தரைத் துதியுங்கள் (சங் 107:22)

10. கர்த்தருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரியுங்கள் (சங் 107:22)

11. கர்த்தருடைய கிருபையினிமித்தம் அவரைத் துதியுங்கள்

12. மனுபுத்திரருக்கு கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தம் அவரைத் துதியுங்கள் (சங் 107:31)

13. ஜனங்களின் சபையிலே கர்த்தரை உயர்த்துங்கள் (சங் 107:32)

14. மூப்பர்களின் சங்கத்திலே கர்த்தரைப் போற்றுங்கள் (சங் 107:32)

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் நல்லவர் (சங் 107:1)

2. அவர் கிருபை என்றுமுள்ளது (சங் 107:1)

3. சத்துருக்களிடமிருந்து நீங்கலாக்கி மீட்பார் (சங் 107:2)

4. பல தேசங்களிலுமிருந்து ஜனங்களைச் சேர்ப்பார் (சங் 107:3)

5. இக்கட்டுகளிலிருந்து விடுவிக்கிறார் (சங் 107:6,19)

6. கர்த்தர் செவ்வையான வழியிலே நடத்துவார் (சங் 107:7)

7. அவருடைய கிருபையும், அவர் செய்கிற அதிசயங்களும் (சங் 107:8,15,21,31)

8. தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்குவார். (சங் 107:9)

9. கர்த்தர் இக்கட்டுகளிலிருந்து நீங்கலாக்கி இரட்சிப்பார் (சங் 107:13,28)

10. அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்தும் வெளிப்படப் பண்ணுவார் (சங் 107:14)

11. கர்த்தர் கட்டுகளை அறுத்தெடுக்கிறார் (சங் 107:14,16)

12. கர்த்தர், தமது வசனத்தை அனுப்பி குணமாக்குகிறார் (சங் 107:20; சங் 91:1-12; சங் 103:3; யாத் 15:26; ஏசா 53:4-5; மத் 8:17; யோவான் 10:10; யாக் 5:14-16; 1பேதுரு 2:24)

13. அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங் 107:20)

14. கொந்தளிப்பை அமர்த்துகிறார் (சங் 107:29-30)

15. செழிப்பான தேசத்தை உருவாக்குகிறார் (சங் 107:33-38)

சங்கீதம் 107-இல் கூறப்பட்டிருக்கிற பிரிவினர்கள்

1. மீட்கப்பட்டோர் (சங் 107:1-7)

2. கலகக்காரர் (சங் 107:8-14)

3. மூடர் (சங் 107:15-20)

4. கப்பலோட்டி (சங் 107:21-30)

5. ஐசுவரியன் (சங் 107:31-43)

6. எளியவன் (சங் 107:31-43)

"கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டார்கள்" - மீட்கப்பட்டோருக்கு தேவனுடைய பராமரிப்பு (சங் 107:1-7) சங்கீதக்காரன் இந்த சங்கீதத்தின் முதலாவது பிரிவில் இஸ்ரவேலைப் பற்றிக் குறிப்பிடுகிறான். இஸ்ரவேலின் மீட்பு, எகிப்திலிருந்து கானானுக்கு பிரயாணம் ஆகிய காரியங்களை நாம் இந்த சங்கீதத்தில் பார்க்கிறோம்.

107 அதிகாரம்

மீட்கப்பட்டோருக்குக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர் (சங் 107:1)
2. கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது
3. கர்த்தரால் மீட்கப்படுவோம் என்று சொல்லக்கடவோம் (சங் 107:2)
4. கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்படுவோம் என்று சொல்லுங்கள்
5. பலதேசங்களிலிருந்து சேர்க்கப்பட்டோம் என்று சொல்லுங்கள் (சங் 107:3)
6. வனாந்தரத்திலே அவாந்தர வழியாய் அலைந்து திரிந்தார்கள் (சங் 107:4; எண் 14)
7. அவர்கள் தாபரிக்கும் ஊரைக் காணாமல் அலைந்து திரிந்தார்கள் (சங் 107:4)
8. அவர்கள் பசியாகவும் தாகமாகவும் அலைந்தார்கள் (சங் 107:5)
9. அவர்கள் ஆத்துமா தொய்ந்ததாகவும் அலைந்து திரிந்தார்கள்
10. ஆபத்துக்காலத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்களை இக்கட்டுகளிலிருந்து விடுவித்தார் (சங் 107:6)
11. கர்த்தர், அவர்களை செவ்வையான வழியிலே நடத்தினார் (சங் 107:7)
12. தாங்கள் தாபரிக்கும் ஊருக்குப் போய் சேர்ந்தார்கள்

2. துதி - ஏழு காரணங்கள் - சிறைப் பட்டோரை கட்டுகளிலிருந்தும், அந்த காரத்திலிருந்தும் விடுவிக்கும் தேவனுடைய மீட்பின் கிரியை

சங் 107:8 தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று,

சங் 107:9 அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.

சங் 107:10 தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டை பண்ணினவர்கள்,

சங் 107:11 அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்து, ஒடுக்கத்திலும் இரும்பிலும் கட்டுண்டு கிடந்தார்கள்.

சங் 107:12 அவர்களுடைய இருதயத்தை அவர் வருத்தத்தால் தாழ்த்தினார்; சகாயரில்லாமல் விழுந்துபோனார்கள்.

சங் 107:13 தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்.

சங் 107:14 அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்து அவர்களை வெளிப்படப்பண்ணி, அவர்கள் கட்டுகளை அறுத்தார்.

"அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினி மித்தமும் அவரைத் துதிப்பார்களாக" - இஸ்ரவேலர் கர்த்தரைத் துதிக்க வேண்டும். அதேசமயத்தில் எல்லா மனுஷரும் கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தமும், அவருடைய கிருபையினிமித்தமும் அவரைத் துதிக்க வேண்டும் (சங் 107:8,15,21,31).

சங்கீதம் - தொகுப்புரை

107 அதிகாரம்

"தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டை பண்ணினவர்கள்" - தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணியவர்களுக்கு கர்த்தருடைய பராமரிப்பு (சங் 107:8-14). கலகம் பண்ணியவர்களுடைய நிலைமையும், அவர்கள் மீட்கப்பட்ட விதமும் இந்த சங்கீதப்பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறது.

107-ஆவது சங்கீதத்தில் தேவனைப் பற்றியும், கலகக்காரரைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் செய்த நன்மைகளினிமித்தம் அவரைத் துதிப்பார்கள் (சங் 107:8)
2. கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தம், அவரைத் துதிப்பார்கள்
3. தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்குகிறார் (சங் 107:9)
4. பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்
5. அந்தகாரத்திலும் மரண இருளிலும், வைக்கப்பட்டிருந்து, ஒடுக்கத்திலும் கட்டுண்டு கிடந்தவர்கள் அனைவருக்கும் கர்த்தர் நல்லவர் (சங் 107:10)
6. தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணியவர்கள் கட்டுண்டு போவார்கள் (சங் 107:11)
7. உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டை பண்ணியவர்கள் கட்டுண்டு போவார்கள்
8. கர்த்தர், அவர்களுடைய இருதயத்தை வருத்தத்தால் தாழ்த்தினார் (சங் 107:12)
9. அவர்கள் சகாயரில்லாமல் விழுந்து போனார்கள்
10. தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார் (சங் 107:13)
11. அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்து அவர்களை வெளிப்படப் பண்ணினார் (சங் 107:14)
12. அவர்கள் கட்டுகளை அறுத்தார்

தேவனுடைய பராமரிக்கும் கிரியைகள்

1. கர்த்தர் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்டார் (சங் 107:2)
2. மீட்கப்பட்டவர்களை பல தேசங்களிலிருந்து ஒன்று சேர்த்தார் (சங் 107:3)
3. அவர்களை இக்கட்டுகளிலிருந்து விடுவித்தார் (சங் 107:6)
4. செவ்வையான வழியிலே நடத்தினார் (சங் 107:7)
5. அவர்கள் தாபரிக்கும் ஊருக்குப் போய் சேர்ந்தார்கள்
6. அவர்கள் ஆத்துமாவைத் திருப்தியாக்கினார் (சங் 107:9)
7. அவர்களை நன்மையினால் நிரப்பினார்
8. அவர்களுடைய இருதயத்தை வருத்தத்தால் தாழ்த்தினார் (சங் 107:12)
9. அவர்களை சகாயரில்லாமல் விழுந்துப் போகப்பண்ணினார்
10. இக்கட்டுகளிலிருந்து அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார் (சங் 107:13)
11. அந்தகாரத்திலிருந்து வெளிப்படப் பண்ணினார் (சங் 107:14)
12. மரண இருளிலிருந்து அவர்களை வெளிப்படப்பண்ணினார்

சங்கீதம் - தொகுப்புரை

107 அதிகாரம்

13. அவர்கள் கட்டுகளை அறுத்தார்

14. கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்தார் (சங் 107:16)

15. இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்தார்

16. நிர்மூடர்களை இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார் (சங் 107:19)

17. கர்த்தர், தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கினார் (சங் 107:20)

18. கர்த்தர், அவர்களை அழிவுக்குத் தப்புவித்தார்

19. கர்த்தர், தண்ணீர்களில் அற்புதங்களைச் செய்கிறார் (சங் 107:24)

20. கர்த்தர் கட்டளையிடப் பெருங்காற்று எழும்பியது (சங் 107:25)

21. அவர், அலைகளைக் கொந்தளிக்கப் பண்ணினார்

22. கப்பலோட்டிகளை, அவர்களுடைய இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி விடுவிக்கிறார் (சங் 107:28)

23. கர்த்தர் கொந்தளிப்பை அமர்த்துகிறார் (சங் 107:29)

24. அலைகளை அடக்குகிறார்

25. அவர்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறார் (சங் 107:30)

26. கர்த்தர் ஆறுகளை அவாந்தர வெளியாக்குகிறார் (சங் 107:33)

27. நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாக்குகிறார்

28. செழிப்பான தேசத்தை உவர்நிலமாக மாற்றுகிறார் (சங் 107:34)

29. குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் கர்த்தர் இவ்வாறு செய்கிறார்

30. அவாந்தரவெளியைத் தண்ணீர் தடாகமாக மாற்றினார் (சங் 107:35)

31. வறண்ட நிலத்தை நீரூற்றுகளாக மாற்றினார்

32. பசித்தவர்களைக் குடியேற்றுகிறார் (சங் 107:36)

33. அவர்களுக்குக் குடியிருக்கும் நகரத்தைக் கட்டினார்

34. வயல்களை உண்டாக்கி விதைக்கிறார் (சங் 107:37)

35. திராட்சத் தோட்டங்களை நாட்டுகிறார்

36. வரத்துள்ள பலனைத் தர வைக்கிறார்

37. அவர்களை மிகுதியாகப் பெருகும்படி ஆசீர்வதிக்கிறார் (சங் 107:38)

38. அவர்களுடைய மிருகஜீவன்களை பெருக்குகிறார்

39. அவர்களுடைய பாவங்களினிமித்தம், அவர்களை இடுக்கத்தினாலும் ஆபத்தினாலும் துயரத்தினாலும் குறைவுபட்டுத் தாழ்வடையச் செய்கிறார் (சங் 107:39)

40. பிரபுக்களின் மேல் இகழ்ச்சி வரப்பண்ணுகிறார் (சங் 107:40)

41. அவர்களை வழியில்லாத அவாந்தர வெளியிலே திரியச் செய்கிறார்

42. எளியவனை சிறுமையிலிருந்து எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கிறார் (சங் 107:41)

43. அவன் வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறார்

44. கர்த்தர் இவைகள் அனைத்தையும் செய்து, பாவம் செய்யாதபடிக்கு போதிக்கிறார் (சங் 107:42)

107 அதிகாரம்

தேவன் சர்வ சிருஷ்டிகளையும் சிருஷ்த்து, அவற்றைப் பராமரித்து வருகிறார் (எபி 1:1-3) . சர்வத்தையும் தமது நாம மகிமைக்காகவே அவர் சிருஷ்டித்தார் (வெளி 4:11). சங்கீதம் 107-இல் தேவனுடைய பராமரிப்பின் கிரியைகள் விளக்கப்பட்டிருக்கிறது. தேவன் எல்லா சிருஷ்டிகளையும் தமது தெய்வீக பராமரிப்பினால் ஆளுகை செய்கிறார் என்பதற்கு இவையெல்லாம் சான்றுகளாகும்.

3. துதி - ஏழு காரணங்கள் - நிர்மூடரை நோய்களிலிருந்து விடுவிக்கும் தேவனுடைய மீட்பின் கிரியை

சங் 107:15 கர்த்தர் வெண்கல கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்தாரென்று,

சங் 107:16 அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.

சங் 107:17 நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்.

சங் 107:18 அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள்.

சங் 107:19 தங்கள் ஆபத்திலே கர்த்தரே நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார்.

சங் 107:20 அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

"நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்" - தேவன் நிர்மூடரை பராமரிக்கும்விதம் (சங் 107:15-20). தங்கள் சுய ஞானத்தை சார்ந்திருப்பவர்கள் நிர்மூடர் என்னப்படுகிறார்கள். தேவனுடைய பார்வையில் இது பைத்தியமாக தெரிகிறது (1கொரி 1:20-25; நீதி 1:7; நீதி 12:15; நீதி 14:3,9; நீதி 15:5; நீதி 27:22).

107-ஆவது சங்கீதத்தில் தேவனைப் பற்றியும், நிர்மூடரைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தருடைய கிருபையினிமித்தம் அவரைத் துதிப்பார்கள் (சங் 107:15)
2. கர்த்தர் செய்கிற அதிசயங்களினிமித்தம் அவரைத் துதிப்பார்கள்
3. கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்தார் (சங் 107:16)
4. அவர் இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்தார்
5. நிர்மூடர்கள், தங்கள் பாதகமார்க்கங்களினிமித்தம் உபத்திரவப்பட்டார்கள் (சங் 107:17)
6. பாவங்களினிமித்தம் ஒடுங்கிப் போனார்கள்
7. அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசித்தது (சங் 107:18)
8. அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள்
9. தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள் (சங் 107:19)
10. கர்த்தர், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சிக்கிறார்
11. அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கினார் (சங் 107:20; சங் 91:1-12; சங் 103:3; சங் 105:37; யாத் 15:26)
12. அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்

107 அதிகாரம்

"நிர்மூடரின் பாதகமார்க்கம்" - மனுஷன் பாவத்தினால் தனக்குத்தானே நோயை வருவித்துக் கொள்கிறான். பாவிகள் தாங்கள் விதைத்ததை அறுக்கிறார்கள். விதைப்பும், அறுப்பும் என்னும் பிரமாணத்திற்குக் காரண கர்த்தராக இருப்பவர் தேவனே. இந்த பிரமாணத்தின் பிரகாரமாக கர்த்தர் மனுஷனுடைய நோய்களுக்கும், சாபங்களுக்கும் காரணமே தவிர மற்றபடி மனுஷனுடைய நோய்களுக்கு முழுக்காரணம் மனுஷனே.

"நிர்மூடர் தங்கள் அக்கிரமங்களினால் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்" - வேதாகமத்தில் ஒருசில இடங்களில் மட்டுமே மனுஷனுடைய நோய்க்குக் காரணம் அவனுடைய அக்கிரமம் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் மனுஷனுக்கு வந்திருக்கிற பாடு வியாதி. தேவன் தமது வார்த்தையை அனுப்பி மனுஷனுடைய வியாதிகளைக் குணப்படுத்துகிறார் (சங் 107:20).

"அவர்கள் ஆத்துமா சகல போஜனத்தையும் அரோசிக்கிறது, அவர்கள் மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள்" - மனுஷனுடைய சரீரத்தில் அவன் பாவத்தின் நிமித்தமாக வியாதி வருகிறது. தன் வியாதி மிகுதியாவதினால் மரிக்கும் நிலைமைக்கு மனுஷன் தள்ளப்படுகிறான்.

4. துதி - ஏழு காரணங்கள் - கடல் யாத்திரை பண்ணுவோரை கடல் கொந்தளிப்பிலிருந்து விடுவிக்கும் தேவனுடைய மீட்பின் கிரியை

சங் 107:21 அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து,

சங் 107:22 ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக.

சங் 107:23 கப்பலேறி, கடல்யாத்திரை பண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்களே,

சங் 107:24 அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள்.

சங் 107:25 அவர் கட்டளையிட பெருங்காற்று எழும்பி, அதின் அலைகளைக் கொந்தளிக்கப்பண்ணும்.

சங் 107:26 அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்குகிறார்கள், அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்து போகிறது.

சங் 107:27 வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள்; அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது.

சங் 107:28 அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.

சங் 107:29 கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது.

சங் 107:30 அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்.

"கப்பலேறி, கடல் யாத்திரை பண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறவர்கள்" - இவர்களுக்கு தேவனுடைய பராமரிப்பு உள்ளது. (சங் 107:21-30)

107-ஆவது சங்கீதத்தில் தேவனையும், கப்பலேறி கடல்யாத்திரைபண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறவர்களைப் பற்றியும் கூறப் பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தம் துதித்தார்கள் (சங் 107:21)

107 அதிகாரம்

2. மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தம் கர்த்தரைத் துதித்தார்கள்

3. ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி, கர்த்தரை ஸ்தோத்திரித்தார்கள் (சங் 107:22)

4. கர்த்தருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்கள்

5. கப்பலோட்டிகள், கப்பலேறி கடல் யாத்திரை செய்கிறார்கள் (சங் 107:23)

6. அவர்கள் திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்கள்

7. அவர்கள் கர்த்தருடைய கிரியைகளை காண்கிறார்கள் (சங் 107:24)

8. ஆழத்திலே கர்த்தருடைய அதிசயங்களைக் காண்கிறார்கள்

9. கர்த்தர் கட்டளையிடப் பெருங்காற்று எழும்பி, அதின் அலைகளைக் கொந்தளிக்கப் பண்ணும் (சங் 107:25-26)

10. அவர்களின் இடுக்கண்களினிமித்தம் அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்து போகிறது (சங் 107:26)

11. அவர்கள் வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள் (சங் 107:27)

12. அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப் போகிறது

13. தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள் (சங் 107:28)

14. அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி, கர்த்தர் விடுவிக்கிறார்

15. கர்த்தர் கொந்தளிப்பை அமர்த்துகிறார் (சங் 107:29)

16. அதின் அலைகள் அடங்குகின்றன

17. அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள் (சங் 107:30)

18. தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறார்

5. துதி - பதினெட்டு காரணங்கள் - எளியவனுக்கும், ஐசுவரியவானுக்கும்தேவனுடைய பராமரிப்பின் கிரியை

சங் 107:31 அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து,

சங் 107:32 ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக.

சங் 107:33 அவர் ஆறுகளை அவாந்தரவெளியாகவும், நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாகவும்,

சங் 107:34 குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் செழிப்பான தேசத்தை உவர் நிலமாகவும் மாற்றுகிறார்.

சங் 107:35 அவர் அவாந்தர வெளியைத் தண்ணீர்த்தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி,

சங் 107:36 பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார்; அங்கே அவர்கள் குடியிருக்கும் நகரத்தைக் கட்டி,

சங் 107:37 வயல்களை உண்டாக்கி விதைத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டுகிறார்கள், அவைகள் வரத்துள்ள பலனைத் தரும்.

107 அதிகாரம்

சங் 107:38 அவர்களை ஆசீர்வதிக்கிறார், மிகுதியும் பெருகுகிறார்கள்; அவர்களுடைய மிருக ஜீவன்கள் குறையாதிருக்கப்பண்ணுகிறார்.

சங் 107:39 பின்பு அவர்கள் இடுக்கத்தினாலும், ஆபத்தினாலும், துயரத்தினாலும் குறைவுபட்டுத் தாழ்வடைகிறார்கள்.

சங் 107:40 அவர் பிரபுக்களின்மேல் இகழ்ச்சி வரப்பண்ணி, வழியில்லாத அவாந்தர வெளியிலே அவர்களைத் திரியச்செய்து,

சங் 107:41 எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறார்.

சங் 107:42 உத்தமர்கள் அதைக்கண்டு மகிழுவார்கள்; நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும்.

சங் 107:43 எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்; ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள்.

"ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக" - ஐசுவரியவான்களுக்கும், ஏழைகளுக்கும் தேவனுடைய பராமரிப்பு உள்ளது. (சங் 107:31-43)

107 -ஆவது சங்கீதத்தில் தேவனையும், ஐசுவரியவான்களையும், ஏழைகளையும் பற்றிக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தரை, அவருடைய கிருபையினிமித்தம் துதித்தார்கள் (சங் 107:31)
2. மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தம் கர்த்தரைத் துதித்தார்கள்
3. ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தினார்கள் (சங் 107:32)
4. மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்கள்
5. அவர் ஆறுகளை அவாந்தரவெளியாக மாற்றினார் (சங் 107:33)
6. நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாக்கினார்
7. குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் செழிப்பான தேசத்தை உவர்நிலமாக மாற்றினார் (சங் 107:34)
8. அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த் தடாகமாக மாற்றினார் (சங் 107:35; ஏசா 35)
9. வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றினார்
10. பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார் (சங் 107:36)
11. அவர்கள் குடியிருக்கும் நகரத்தைக் கட்டினார்
12. அங்கே, வயல்களை உண்டாக்கி விதைக்கிறார் (சங் 107:37)
13. கனியின் வரத்தை விருத்தி பண்ணுகிறார்.
14. கர்த்தர், அவர்களை மிகுதியாய் பெருகும்படி ஆசீர்வதிக்கிறார் (சங் 107:38)
15. அவருடைய மிருக ஜீவன்களையும் பெருக்கினார்
16. மறுபடியும் அவர்களுடைய பாவங்களினிமித்தம், அவர்கள் குறைவு பட்டுத் தாழ்வடையச் செய்கிறார் (சங் 107:39)
17. பாவம் செய்த ஜனங்களின் பிரபுக்களின் மேல் இகழ்ச்சி வரப்பண்ணினார் (சங் 107:40)

சங்கீதம் - தொகுப்புரை

107 அதிகாரம்

18. அவர்களுடைய பாவங்களினிமித்தம் அவர்களை வழியில்லாத அவாந்தர வெளியிலே திரியச் செய்தார்

19. எளியவனைச் சிறுமையினின்று எடுத்து, ஆசீர்வதித்தார் (சங் 107:41)

20. அவனுடைய வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறார்

"பின்பு அவர்கள் இடுக்கத்தினாலும், ஆபத்தினாலும், துயரத்தினாலும் குறைவுபட்டுத் தாழ்வடைகிறார்கள்" - இடுக்கம், ஆபத்து, துயரம் ஆகியவை வரும்போது எந்த தேசமும் குறைவுபட்டுத் தாழ்வடையும். பாவம் செய்தவன் எவனும் குறைவுபட்டுத் தாழ்வடைவான் (நீதி 14:34).

அவாந்தார வெளி (wilderness) - תֹּהוּ - to'-hoo - 8414

ஆ.பெ.சொ. - வெறுமை, வீணானது, அந்தரம், வீணர், விருதா, மாயை, வெட்டவெளி, அவாந்தார வெளி, இல்லாமை - (ஆதி 1:2; ஏசா 14:12-14; எரே 4:23; எரே 4:23-26; எசே 28:11-17; 2பேதுரு 3:5-7)

தேவனுடைய பராமரிப்பினால் நாம் கற்றுக் கொள்ளும் காரியங்கள்

1. உத்தமர்கள் மகிழுவார்கள்
2. நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும்.
3. ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள் (சங் 107:43).

108 அதிகாரம்

(தாவீதின் சங்கீதமாகிய பாட்டு)

பத்தொன்பதாவது போதக சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று நான்கு பொருத்தனைகள் - இரண்டு காரணங்கள் - (108:1-4)
2. நான்கு விண்ணப்பங்கள் - காரணம் - (108:5-6)
3. தேவனுடைய பத்து பொருத்தனைகள் - உபத்திரவக் காலத்தில் இஸ்ரவேலரோடும் அதன் அண்டை நாட்டாரோடும் வருங்காலத்தில் தேவன் நடப்பிக்கப்போகும் கிரியைகள் - (108:7-9)
4. அந்திக்கிறிஸ்து வரும்நாளில் இஸ்ரவேலைத் தோற்கடித்தல் - இஸ்ரவேலர் ஏதோமுக்கு ஓடிப்போதல் - (108:10-11)
5. பின்நாளில் இஸ்ரவேலின் ஜெயம் - புறஜாதியார் மீது இறுதி வெற்றி - (108:12-13)

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று நான்கு பொருத்தனைகள் - இரண்டு காரணங்கள்

சங் 108:1 தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம்பண்ணுவேன்; என் மகிமையும் பாடும்.

சங் 108:2 வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன்.

சங் 108:3 கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்; ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங் 108:4 உமது கிருபை வானங்களுக்கு மேலாகவும், உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது.

தாவீதின் பொருத்தனைகள்

1. தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது (சங் 57:7-11; சங் 60:5-12; சங் 108:1)
2. நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்; என் மகிமையும் நாவு பாடும் (சங் 108:1; சங் 57:8; சங் 16:9; அப் 2:26)
3. நான், வீணையுடனும், சுரமண்டலத்துடனும் விழித்திருப்பேன் (சங் 108:2; சங் 57:8)
4. நான் அதிகாலையில் விழிப்பேன்
5. ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன் (சங் 108:3; சங் 57:9)
6. ஜனங்களுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்

தேவனைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தருடைய கிருபை வானபரியந்தமும் எட்டுகிறது (சங் 57:10)
2. அவருடைய சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது (சங் 57:7-11; சங் 108:1-5)

2. நான்கு விண்ணப்பங்கள் - காரணம்

சங் 108:5 தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்திரும்; உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக.

சங் 108:6 உமது பிரியர் விடுவிக்கப்படும் பொருட்டு, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும்.

108 அதிகாரம்

தாவீது கர்த்தரிடம் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும் (சங் 57:5)
2. உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருக்கட்டும்
3. உமது வலதுகரத்தினால் இரட்சியும் (சங் 108:6)
4. என் ஜெபத்தைக் கேட்டருளும்
5. இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும் (சங் 108:12; சங் 60:11)

3. தேவனுடைய பத்து பொருத்தனைகள் - உபத்திரவக் காலத்தில் இஸ்ரவேல்ரோடும் அதன் அண்டை நாட்டாரோடும் வருங்காலத்தில் தேவன் நடப்பிக்கப்போகும் கிரியைகள்

சங் 108:7 தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன்; சீகேமைப் பங்கிட்டு, சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்து கொள்ளுவேன்.

சங் 108:8 கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது; எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்.

சங் 108:9 மோவாப் என் பாதபாத்திரம்; ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிவேன்; பெலிஸ்தியாவின்மேல் ஆர்ப்பரிப்பேன்.

தீர்க்கதரிசன எண் - 83

"தேவன் தமது பரிசுத்தத்தைக் கொண்டு விளம்பினார், ஆகையால் களிகூருவேன்............" (சங் 108:7-13) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. உபத்திரவக் காலத்திலும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். இந்த வசனங்களும் சங் 60:6-12 ஆகிய வசனங்களும் ஒன்றுபோல் உள்ளன.

தேவனுடைய பொருத்தனை

1. நான் களிகூருவேன் (சங் 108:7; சங் 60:6)
2. நான் சீகேமைப் பங்கிடுவேன்
3. சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்து கொள்ளுவேன்
4. கீலேயாத் என்னுடையது (சங் 108:8; சங் 60:7)
5. மனாசேயும் என்னுடையது
6. எப்பிராயீம் என்தலையின் பெலன்
7. யூதா என் நியாயப்பிரமாணிகன்
8. மோவாப் என் பாதபாத்திரம் (சங் 108:9; சங் 60:8)
9. ஏதோமின் மேல் என் பாதரட்சையை எறிவேன்
10. பெலிஸ்தியாவின் மேல் ஆர்ப்பரிப்பேன்

"கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது; எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்" - இஸ்ரவேல் இராஜ்ஜியம் வடக்கு இராஜ்ஜியம், தெற்கு இராஜ்ஜியம் என்று இரண்டாக பிரிந்தது. பிரிந்த இராஜ்ஜியங்களை எப்பிராயீம், யூதா என்னும் பெயர்களால் குறிப்பிட்டார்கள். ரெகொபெயாம், யெரொபெயாம் ஆகியோரின் காலத்திலிருந்து பாபிலோனிய சிறையிருப்பு வரையிலும் இவ்விரண்டு பெயர்களும் வழக்கில் இருந்தது (ஏசா 7:2-17; ஏசா 11:13; ஏசா 17:3). இவ்விரண்டு பெயர்களும் இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரையும் குறிக்கும். (எசே 37:16-22).

108 அதிகாரம்

"மோவாப் என் பாதபாத்திரம்" - கால்களைக் கழுவுவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமற்ற பாத்திரம். (சங் 60:8)

"பெலிஸ்தியாவின்மேல் ஆர்ப்பரிப்பேன்" - பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலரின் பிரதான எதிரிகளின் ஒரு பிரிவினர். இஸ்ரவேலர்கள் மற்ற தேசங்களோடு 112 யுத்தங்களைச் செய்தார்கள். அவற்றில் 20 யுத்தங்கள் பெலிஸ்தரின்மீது நடத்தப்பட்டவையாகும். தற்காலத்தில் இஸ்ரவேல் தேசம் மறுபடியும் உண்டானபின்பு, அங்கு குடியிருந்த அராபியர்கள் பாலஸ்தீன தேசத்திற்கு அகதிகளாக வந்து குடியேறினார்கள். இன்றைய உலகில் இந்தப் பிரதேசம் மிகவும் குழப்பமான பகுதியாக இருக்கிறது. தேவனுடைய முன்னறிவிப்பின் பிரகாரமாக இஸ்ரவேலருக்கு இந்தப் பகுதியில் இன்னும் ஏராளமான பிரச்சனைகள் உண்டாகும்.

4. அந்திக்கிறிஸ்து வரும்நாளில் இஸ்ரவேலை தோற்கடித்தல் - இஸ்ரவேலர் ஏதோமுக்கு ஓடிப் போதல் - (சங் 60:9-10; ஏசா 16:1-5; 26:20; 63:1-5; எரே 30:7; எசே 20:33-38; தானி 8:9-14; 9:27; 11:40-45; ஓசி 2:14-16; மத் 24:15-21; வெளி 12:6,14-17)

சங் 108:10 அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டு போகிறவன் யார்? ஏதோம் மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவன் யார்?

சங் 108:11 எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீரல்லவா? எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீரல்லவா?

சங் 108:12-13 ஆகிய வசனங்கள் இஸ்ரவேலர்கள் தங்கள் உதவிக்காக தேவனையே சார்ந்திருப்பதைக் குறிப்பிடுகிறது. "இக்கட்டு" என்பது உலகிலுள்ள புறஜாதியாருடைய ஆட்சியாளர்களின் நெருக்கங்களையும், அந்திக்கிறிஸ்துவின் உபத்திரவங்களையும் குறிப்பிடும்.

5. பின்நாளில் இஸ்ரவேலின் ஜெபம் - புறஜாதியார் மீது இறுதி வெற்றி - (ஏசா 59:20 - 60:22; 63:1-5; சக 14; வெளி 19:11-21)

சங் 108:12 இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும்; மனுஷனுடைய உதவி விருதா.

சங் 108:13 தேவனாலே பராக்கிரமஞ் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.

109 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

பதினாறாவது நெருக்கத்தின் ஜெயம்

பொருளடக்கம்

1. ஒரு விண்ணப்பம் - எட்டு காரணங்கள் - (109:1-5)
2. துன்மார்க்கன்மீது இருபத்தெட்டு அம்ச சாபம் - எட்டு காரணங்கள் - (109:6-20)
3. எட்டு அம்ச நெருக்கம் - எட்டு காரணங்கள் - (109:21-29)
4. துதியின் இரண்டு அம்சம் - காரணம் - (109:30-31)

1. ஒரு விண்ணப்பம் - எட்டு காரணங்கள்

சங் 109:1 நான் துதிக்கும் தேவனே, மவுனமாயிராதேயும்.

சங் 109:2 துன்மார்க்கனுடைய வாயும், கபட்டுவாயும், எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கிறது; கள்ளநாவினால் என்னோடே பேசுகிறார்கள்.

சங் 109:3 பகையுண்டாகும் வார்த்தைகளால் என்னைச் சூழ்ந்து கொண்டு, முகாந்தரமில்லாமல் என்னோடே போர்செய்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 84

"நான் துதிக்கும் தேவனே, மவுனமாயிராதேயும். துன்மார்க்கனுடைய வாயும், கபட்டுவாயும், எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கிறது; கள்ளநாவினால் என்னோடே பேசுகிறார்கள்..........." (சங் 109:1-31) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

109-ஆவது சங்கீதம் தாவீதிலும், மேசியாவிலும் நிறைவேறியிருக்கிறது. (சங் 109:3, யோவான் 15:25, சங் 109:25 மத் 27:3) மேசியாவும், தாவீதும் சங் 109:1-5, சங் 109:21-31, சங் 109:6-20 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். இயேசுவை யூதாஸ் காரியாத்து காட்டிக் கொடுத்தான். தாவீதை அகிதோப்பேல் காட்டிக்கொடுத்தான். தாவீதிற்கு எதிராக தீய ஆலோசனை சொல்லி முடிவில் நான்றுகொண்டு செத்தான். (2சாமு 17:23) யூதாஸ் காரியாத்தும் நான்றுகொண்டு செத்தான் (சங் 109:8, அப் 1:20).

யூதாசிற்கு எதிரான விண்ணப்பங்கள்

1. தேவனே, மவுனமாயிராதேயும் (சங் 109:1)
2. அவனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும் (சங் 109:6)
3. சாத்தான் அவன் வலது பக்கத்தில் நிற்பானாக
4. அவன் குற்றவாளியாகக்கடவன் (சங் 109:7)
5. அவன் ஜெபம் பாவமாகக்கடவது
6. அவன் நாட்கள் கொஞ்சமாகக் கடவது (சங் 109:8)
7. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன்
8. அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களாகும் படிச் செய்யும் (சங் 109:9)
9. அவன் மனைவி, விதவையாகட்டும்
10. அவன் பிள்ளைகள் அலைந்து திரியட்டும் (சங் 109:10)
11. அவன் பிள்ளைகள் பிச்சையெடுக்கும் படி செய்யும்
12. தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக் கடவர்கள்
13. கடன்கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக் கொள்ளட்டும் (சங் 109:11)

109 அதிகாரம்

14. அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக் கொள்ளக்கடவர்கள்

15. அவனுக்கு ஒருவரும் இரக்கங் காண்பியாமல் போவார்களாக (சங் 109:12)

16. அவனுடைய திக்கற்றப் பிள்ளைக்குத் தயவு செய்யாமல் போவார்களாக

17. அவர்கள் சந்ததியார் நிர்மூலமாகட்டும் (சங் 109:13)

18. இரண்டாந்தலைமுறையில் அவர்கள் பேர் அற்றுப்போவதாக

19. அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படக் கடவது (சங் 109:14)

20. அவன் தாயின் பாவம் நீங்காமலிருக்கட்டும்

21. அவைகள் நித்தமும் கர்த்தருக்கு முன்பாக இருக்கட்டும் (சங் 109:15)

22. அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாகட்டும்

23. அவன் மேல் சாபம் வரும் (சங் 109:17)

24. ஆசீர்வாதம் அவனுக்குத் தூரமாய் விலகிப்போகட்டும்

25. சாபம், தண்ணீரைப்போல் அவன் உள்ளத்தில் பாயும் (சங் 109:18)

26. சாபம், எண்ணெயைப்போல அவன் எலும்புகளில் பாயும்

27. சாபம், அவன் மூடிக்கொள்ளுகிற வஸ்திரமாக இருப்பதாக (சங் 109:19)

28. நித்தமும் கட்டிக்கொள்ளுகிற கச்சையாகவும் அவனுக்குச் சாபம் இருக்கட்டும்

29. இதுதான் என்னை விரோதிக்கிறவர்களுக்குக் கர்த்தரால் வரும் பலன் (சங் 109:20)

30. என் ஆத்துமாவுக்கு விரோதமாய்த் தீங்கு செய்கிறவர்களுக்குக் கர்த்தரால் வரும் பலன் இவைகள் தாம்.

"தேவனே, மவுனமாயிராதேயும்" என்று கூறுவதற்குக் காரணங்கள்

1. துன்மார்க்கனுடைய வாய் எனக்கு விரோதமாய் திறந்திருக்கிறது (சங் 109:2)

2. வஞ்சிக்கிறவனுடைய கபட்டு வாயும் எனக்கு விரோதமாய் திறந்திருக்கிறது

3. எனக்கு விரோதமாய் பொய் பேசுகிறார்கள்

4. பகையுண்டாக்கும் வார்த்தைகளினால் என்னைச் சூழ்ந்து கொண்டுள்ளார்கள் (சங் 109:3)

5. முகாந்தரமில்லாமல் என்னோடே போர் செய்கிறார்கள்

6. அவர்கள், என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள் (சங் 109:4)

7. அவர்கள் நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமை செய்கிறார்கள் (சங் 109:5)

8. என் சிநேகத்துக்குப் பதிலாக என்னைப் பகைக்கிறார்கள்

துன்மார்க்கரின் சுபாவங்கள்

1. அவர்கள் துன்மார்க்கமான வார்த்தைகளைப் பேசுவார்கள் (சங் 109:2)

2. வஞ்சனையானவைகளையே பேசுவார்கள்

3. பொய் பேசுவார்கள்

சங்கீதம் - தொகுப்புரை

109 அதிகாரம்

4. பகையுண்டாக்கும் வார்த்தைகளைப் பேசுவார்கள் (சங் 109:3)

5. முகாந்தரமில்லாமல் போர் செய்வார்கள்

6. சிநேகமில்லாமல் விரோதிப்பார்கள் (சங் 109:4)

7. நன்மைக்குப் பதில் தீமை செய்வார்கள் (சங் 109:5)

8. சிநேகத்திற்குப் பதில் விரோதிப்பார்கள்

9. இவர்கள் சாத்தானின் பிரதிநிதி (சங் 109:6)

10. ஜெயம் பண்ணுகிற மனுஷர்களைப் போல நடிப்பார்கள் (சங் 109:7)

11. அவர்கள் கிருபையற்றவர்கள் (சங் 109:16)

12. சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்துவார்கள்

13. சகாயர் அற்றவர்களையும், மனமுறியுள்ளவர்களையும் கொலை செய்யத் தேடுவார்கள்

14. அவர்கள் சாபத்தையே விரும்புவார்கள் (சங் 109:17-19)

15. அவர்கள் ஆசீர்வாதத்தை விரும்பாமல், அதில் குறைவுள்ளவர்களாயிருப்பார்கள்

16. மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதைப் பற்றி பேசுவார்கள் (சங் 109:20)

17. நீதிமான்களை நிந்திப்பார்கள் (சங் 109:25)

18. அவர்கள் தயவும் இரக்கமும் அற்றவர்கள்

19. நீதிமான்களுக்கு அவர்கள் சத்துருக்கள் (சங் 109:29)

20. எளியவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள் (சங் 109:31)

2. துன்மார்க்கன்மீது இருபத்தெட்டு அம்ச சாபம் - எட்டு காரணங்கள்

சங் 109:6 அவனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும், சாத்தான் அவன் வலதுபக்கத்தில் நிற்பானாக.

சங் 109:7 அவன் நியாயம் விசாரிக்கப் படும்போது குற்றவாளியாகக்கடவன்; அவன் ஜெபம் பாவமாகக்கடவது.

சங் 109:8 அவன் நாட்கள் கொஞ்சமாகக் கடவது; அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன்.

சங் 109:9 அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும், அவன் மனைவி விதவையுமாகக் கடவர்கள்.

சங் 109:10 அவன் பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து, தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக்கடவர்கள்.

சங் 109:11 கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வானாக; அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக்கொள்ளக் கடவர்கள்.

சங் 109:12 அவனுக்கு ஒருவரும் இரக்கங் காண்பியாமலும், அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவுசெய்யாமலும் போவார்களாக.

சங் 109:13 அவன் சந்ததியார் நிர்மூலமாகக் கடவர்கள்; இரண்டாந் தலைமுறையில் அவர்கள் பேர் அற்றுப்போவதாக.

சங் 109:14 அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படக்கடவது, அவன் தாயின் பாவம் நீங்காமலிருப்பதாக.

சங் 109:15 அவைகள் நித்தமும் கர்த்தருக்குமுன்பாக இருக்கக்கடவது; அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாவதாக.

109 அதிகாரம்

சங் 109:16 அவன் தயைசெய்ய நினையாமல், சிறுமையும், எளிமையுமானவனைத் துன்பப்படுத்தி, மனமுறிவுள்ளவனைக் கொலை செய்யும் படி தேடினானே.

சங் 109:17 சாபத்தை விரும்பினான், அது அவனுக்கு வரும்; அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற்போனான், அது அவனுக்குத் தூரமாய் விலகிப்போம்.

சங் 109:18 சாபத்தை அவன் தனக்கு அங்கியாக உடுத்திக்கொண்டான்; அது அவன் உள்ளத்தில் தண்ணீரைப் போலவும், அவன் எலும்புகளில் எண்ணெயைப்போலவும் பாயும்.

சங் 109:19 அது அவன் மூடிக் கொள்ளுகிற வஸ்திரமாகவும், நித்தமும் கட்டிக்கொள்ளுகிற கச்சையாகவும் இருப்பதாக.

சங் 109:20 இதுதான் என்னை விரோதிக்கிறவர்களுக்கும், என் ஆத்துமாவுக்கு விரோதமாய்த் தீங்கு பேசுகிறவர்களுக்கும் கர்த்தரால் வரும் பலன்.

யூதாசைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. துன்மார்க்கனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும் (சங் 109:6)
2. சாத்தான் அவன் வலதுபக்கத்தில் இருப்பான்
3. அவன் நியாயம் விசாரிக்கப்பட்டு, குற்றவாளியாகட்டும்
4. அவனுடைய ஜெபம், பாவமாக மாறும் (சங் 109:7)
5. அவனுடைய நாட்கள் கொஞ்சம் (சங் 109:8)
6. அவன் உத்தியோகஸ்தனாக இருந்தான் (சங் 109:8; மத் 10:1-8,16-20; மாற்கு 6:7-13; லூக்கா 9:1-2,10)
7. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெற்றுக்கொள்ளட்டும் (சங் 109:8; மத் 10:1-3; அப் 1:20,25)
8. அவனுக்கு மனைவி மற்றும் பிள்ளைகளும் உண்டு (சங் 109:9)
9. அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களாகி, நாள்தோறும் அலைந்து திரிந்து பிச்சையெடுக்கிறார்கள் (சங் 109:10)
10. அவர்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணுகிறார்கள்
11. கடன் கொடுத்தவர்கள் அவனிடம் உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக் கொள்ளுகிறார்கள் (சங் 109:11)
12. அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக் கொள்ளுவார்கள்
13. அவனுக்கு ஒருவரும் இரக்கங் காண்பிக்க மாட்டார்கள் (சங் 109:12)
14. அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவு செய்யாமல் போவார்கள்
15. அவனுடைய சந்ததி நிர்மூலமாக்கப்படும் (சங் 109:13)
16. இரண்டாந்தலைமுறையில் அவர்கள் குடும்பத்தின் பேர் அற்றுப்போகும்
17. அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படும் (சங் 109:14)
18. அவனுடைய தாயின் பாவம் நீங்காமல் இருக்கும்
19. அவனுடைய தாய், தகப்பனுடைய பாவங்கள் நித்தமும் கர்த்தருக்கு முன்பாக இருக்கும், அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாக்கப்படும் (சங் 109:15)
20. அவன், கிறிஸ்துவின் மேல் தயை செய்ய நினைக்கவில்லை (சங் 109:16)

109 அதிகாரம்

21. சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்தினான்

22. அவன் மனமுறிவுள்ளவனைக் கொலை செய்யும்படி தேடினான்

23. அவன் சாபத்தை விரும்பி, அதை அறுவடை செய்தான் (சங் 109:17)

24. அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற் போனான், அது அவனுக்குத் தூரமாய் விலகிப்போகும் (சங் 109:17; மத் 10:1-8,16-20; மாற்கு 6:7-13; அப் 1:20,25)

25. அவன், சாபத்தைத் தனக்கு அங்கியாக உடுத்திக் கொண்டான் (சங் 109:18)

26. அவன் அறுவடை செய்த சாபமானது அவன் உள்ளத்தில் தண்ணீரைப் போல் பாயும் (சங் 109:18; அப் 1:18)

27. சாபமானது அவன் எலும்புகளில் எண்ணெயைப் போல பாயும் (சங் 109:18; அப் 1:18)

28. சாபம், அவன் மூடிக்கொள்ளுகிற வஸ்திரமாக இருக்கிறது (சங் 109:19)

29. சாபம், அவன் நித்தமும் கட்டிக் கொள்ளுகிற கச்சையாக இருக்கிறது

30. இவைகள் அனைத்தும் அவனுக்கு கிடைக்கிற பலன் (சங் 109:20)

"அவன் தயைசெய்ய நினையாமல், சிறுமையும், எளிமையுமானவனைத் துன்பப்படுத்தி, மனமுறிவுள்ளவனைக் கொலை செய்யும்படி தேடினானே" - சிறுமையும், எளிமையுமானவன் என்பது மேசியாவைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள் (சங் 109:16,22,25). "மனமுறிவுள்ளவன்" என்னும் வாக்கியமும் மேசியாவைக் குறிக்கும் (சங் 109:16,22, சங் 69:20-21).

"கர்த்தரால் வரும் பலன்" - கர்த்தரை விரோதிக்கிறவர்களுக்கும், அவருக்கு விரோதமாக தீங்கு பேசுகிறவர்களுக்கும் தீய பலன்களே வரும். சாத்தானுக்கும், அவனுடைய பிசாசின் சேனைக்கும் கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பே வந்தது. அதுபோலவே, இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு காரணமாக இருந்த யூதாஸ் காரியாத்திற்கும், யூதர்களுக்கும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு வந்தது.

3. எட்டு அம்ச நெருக்கம் - எட்டு காரணங்கள்

சங் 109:21 ஆண்டவராகிய கர்த்தாவே, நீர் உமது நாமத்தினிமித்தம் என்னை ஆதரித்து, உமது கிருபை நலமானதினால், என்னை விடுவித்தருளும்.

சங் 109:22 நான் சிறுமையும் எளிமையுமானவன், என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது.

சங் 109:23 சாயும் நிழலைப்போல் அகன்று போனேன்; வெட்டுக்கிளியைப் போல் பறக்கடிக்கப்படுகிறேன்.

சங் 109:24 உபவாசத்தினால் என் முழங்கால்கள் தளர்ச்சியடைகிறது; என் மாம்சம் புஷ்டியற்று உலர்ந்துபோகிறது.

சங் 109:25 நான் அவர்களுக்கு நிந்தையானேன்; அவர்கள் என்னைப் பார்த்து, தங்கள் தலையைத் துலுக்குகிறார்கள்.

சங் 109:26 என் தேவனாகிய கர்த்தாவே எனக்குச் சகாயம் பண்ணும்; உமது கிருபையின்படி என்னை இரட்சியும்.

சங் 109:27 இது உமது கரம் என்றும், கர்த்தாவே, தேவரீர் இதைச் செய்தீர் என்றும், அவர்கள் அறிவார்களாக.

சங் 109:28 அவர்கள் சபித்தாலும், நீர் ஆசீர்வதியும்; அவர்கள் எழும்பினாலும் வெட்கப்பட்டுப் போவார்களாக; உமது அடியானோ மகிழக்கடவன்.

109 அதிகாரம்

சங் 109:29 என் விரோதிகள் இலச்சையால் மூடப்பட்டு, தங்கள் வெட்கத்தைச் சால்வையைப்போல் தரித்துக் கொள்ளக்கடவர்கள்.

தாவீது கர்த்தரிடம் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. என்னை விடுவித்தருளும் (சங் 109:21)
2. என் தேவனாகிய கர்த்தாவே, எனக்கு சகாயம் பண்ணும் (சங் 109:26)
3. உமது கிருபையின்படி என்னை இரட்சியும்
4. அவர்கள் சபித்தாலும் நீர் ஆசீர்வதியும் (சங் 109:28)
5. அவர்கள் எழும்பினாலும் வெட்கப்பட்டுப் போகட்டும், உமது அடியானோ மகிழ்வான்
6. என் விரோதிகள் இலச்சையால் மூடப்படுவார்கள் (சங் 109:29)
7. தங்கள் வெட்கத்தைச் சால்வையைப் போல் தரித்துக்கொள்ளுவார்கள்

கர்த்தர் தனது ஜெபத்திற்குப் பதில் தரவேண்டும் என்பதற்கு தாவீது கூறும் காரணங்கள்

1. கர்த்தாவே, உமது நாமத்தினிமித்தம் என்னை ஆதரியும் (சங் 109:21)
2. உம்முடைய கிருபை நலமானது
3. நான் சிறுமையும் எளிமையுமானவன் (சங் 109:22)
4. என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது
5. நான் சாயும் நிழலைப்போல் அகன்று போனேன் (சங் 109:23)
6. நான் வெட்டுக்கிளியைப் போல் மேலும், கீழும் பறக்கடிக்கப்படுகிறேன்
7. உபவாசத்தினால் என் முழங்கால்கள் தளர்ச்சியடைகிறது (சங் 109:24)
8. என் மாம்சம் புஷ்டியற்று உலர்ந்து போகிறது
9. நான் அவர்களுக்கு நிந்தையானேன் (சங் 109:25)
10. அவர்கள் என்னைப் பார்த்து தங்கள் தலையைத் துலுக்குகிறார்கள்
11. அவர்கள், உமது கரத்தின் கிரியைகளைப் பற்றி அறிவார்கள் (சங் 109:27)
12. நீர் என்னை இக்கட்டுகளிலிருந்து விடுவித்து, உயர்த்துவீர் என்பதையும் அவர்கள் அறிவார்கள்

"நான் சிறுமையும் எளிமையுமானவன், என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது" - சங் 69:20-21; சங் 109:16 ஆகிய வசனங்களில் இருதயம் நொறுங்குண்டதற்கு நாம் விளக்கத்தைக் காணலாம்.

4. துதியின் இரண்டு அம்சம் - காரணம்

சங் 109:30 கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதித்து, அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன்.

சங் 109:31 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர் களினின்று எளியவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கும்படி அவர் அவன் வலதுபாரிசத்தில் நிற்பார்.

தாவீதின் பொருத்தனைகள்

1. கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதிப்பேன்
2. அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன் (எபி 2:12)

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர், எளியவனுடைய வலது பாரிசத்தில் நின்று, அவனுக்குச் சகாயம் செய்வார்
2. ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர்களின்று, அவனுடைய ஆத்துமாவை இரட்சிப்பார்

110 அதிகாரம்

தாவீதின் சங்கீதம்.)

மேசியாவின் பதினெட்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மேசியா தேவனும் ராஜாவுமானவர் - (110:1-3)
2. ஆசாரியராக மேசியா - (110:4)
3. நியாயாதிபதியாகவும் வெற்றிப் பெறுபவராகவும் மேசியா - (110:5-7)

1. மேசியா தேவனும் ராஜாவுமானவர் - (ஏசா 9:6-7; தானி 6:13-14; சங் 2; லூக்கா 1:32-33; யோவான் 18:37; வெளி 11:15; 19:11-21; 20:1-10)

சங் 110:1 கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்.

சங் 110:2 கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகைசெய்யும்.

சங் 110:3 உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமும் உள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற் காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்.

தீர்க்கதரிசன எண் - 85

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்............" (சங் 110:1-7) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. சங் 110:1 -இல் "நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" என்னும் பகுதி மட்டும் நிறைவேறியிருக்கிறது.

"கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி" என்னும் வாக்கியம் ஒரு மூலபாஷை பதிப்பில் "கர்த்தர் என் கர்த்தரை நோக்கி" என்றிருக்கிறது. **"Jehovah said unto my Jehovah."**

சங் 110:5-இல் "உம்முடைய வலது பாரிசத்திலிருக்கிற ஆண்டவர்" என்னும் வாக்கியம் மூல எபிரெய பாஷையில் **"Jehovah at thy (Jehovah's) right hand"** என்று பொருள்படுமாறு உள்ளது.

யெகோவா என்னும் நாமத்தில் பழைய ஏற்பாட்டுக் கால ஆசிரியர்கள் மிகுந்த பக்தி கொண்டிருந்ததினால், தங்கள் பதிப்புகளில் யெகோவா என்று எழுதவேண்டிய இடங்களில் அதோனாய் (Adonay) என்று எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு 134 இடங்களில் எழுதப்பட்டிருக்கிறது. அதில் சங் 110:5-ம் ஒன்று. இந்த வசனம் கர்த்தருடைய திரித்துவத்தை விளக்குகிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே தேவன், சம அந்தஸ்த்தில் இருப்பவர்கள்.

புதிய ஏற்பாட்டில் மத் 22:41-45, அப் 2:34-35 ஆகிய வசனங்களில் சங் 110:1 மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க சொல் "கூரியோஸ்" (kurios) என்பதாகும். இந்தச் சொல் பிதாவையும், குமாரனையும் குறிக்கும்.

கர்த்தர் (LORD) - יְהוִֹה, יְהוָֹה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ. - கர்த்தர், ஆண்டவர், யெகோவா

கர்த்தர் (Lord) - אֲדֹנָי - ad-o-noy' - 136

ஆ.பெ.சொ. - கர்த்தர், ஆண்டவர்

சங்கீதம் - தொகுப்புரை

110 அதிகாரம்

கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார்

கர்த்தர் (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர்

மேசியாவைப் பற்றிய சத்தியங்கள்

1. மேசியா மெய்யாகவே தேவன். யெகோவாவையும், பிதாவையும் போல கர்த்தராக இருக்கிறவர். (சங் 110:1; ஏசா 7:14; ஏசா 9:6-7; மீகா 5:2; யோவான் 1:1-2,14; எபி 1:1-3,8; வெளி 1:8)

2. பிதாவின் வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டவர். (சங் 110:1,5; மத் 26:64; மாற்கு 16:19; அப் 2:33-34; அப் 7:55-56; ரோமர் 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 1:1-3,13; எபி 8:1; எபி 10:12; எபி 12:2; 1பேதுரு 3:22)

3. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருப்பார். (1கொரி 15:24-28; எபே 1:10; எபி 10:13)

4. சீயோனிலிருந்து பூமியை ஆட்சி செய்வார். (சங் 110:2; சங் 2:6; சங் 9:11; சங் 20:2; சங் 102:16; ஏசா 2:2-4; ஏசா 59:20; யோவே 3:17-21; மீகா 4:1-7; சக 8:3; சக 14:9,16-21)

5. தம்முடைய விரோதிகளை அழிப்பதற்காக அவர்கள் மத்தியில் ஆட்சி புரிவார். (சங் 110:2; ஏசா 11:3-12; சக 14; 1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20:4-10)

6. மேசியாவின் வல்லமை வெளிப்படும்போது, கலகம் பண்ணிய இஸ்ரவேலர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருக்குக் கீழ்ப்படிவார்கள். (சங் 110:3; ஏசா 66:6-7; சக 12:10-13:1; சக 14:1-21; மத் 23:39; ரோமர் 11:25-29)

7. மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையின் பிரகாரம் இயேசு கிறிஸ்து நித்திய ஆசாரியராக இருக்கிறார். (சங் 110:4; ஆதி 14:18; எபி 5:6,10; எபி 6:20; எபி 7:1-11,15,17,21).

8. அவர் ஆசாரியராகவும், இராஜாவாகவும் இருப்பார். (சங் 110:4; ஆதி 14:18; சக6:13; எபி 7:1-11)

9. தமது கோபத்தின் நாளிலே இராஜாக்களை வெட்டுவார். (சங் 110:5; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; வெளி 17:14; வெளி 19:11-21)

10. புறஜாதியாரை நியாயம் விசாரித்து அரசாளுவார். (சங் 110:6; ஏசா 2:2-4; ஏசா 11:3-12; யோவே 3; சக 14; வெளி 11:15; வெளி 20:4-6).

11. இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது துன்மார்க்கரை சங்காரம் பண்ணி எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார். (சங் 110:6; ஏசா 66:16; எசே 39:2-6, 12, 17-21; யோவே 3:9-17; சக 14; வெளி 19:11-21).

12. விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்களாக இருக்கிறவர்களை நொறுக்கிப் போடுவார். (சங் 110:6; தானி 7:23-27; சக 14; 2தெச 2:8; வெளி 17:14; வெளி 19:11-21)

13. வழியிலே அவர் நதியில் குடிப்பார். தேசங்கள்மீது ஜெயம் பெற்றதினால் கர்த்தர் திருப்தியடைந்து ஆறுதல் அடைவார். (சங் 110:7; ஏசா 53:1-5; யோவே 3; சக 14; 2தெச 1:7-10; வெளி 19:11-21)

110 அதிகாரம்

14. அவர் தமது தலையை எடுப்பார். தேசங்கள்மீது தமது தலையை உயர்த்துவார். (சங் 110:7; ஏசா 2:2-4; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; வெளி 11:15; வெளி 20:4-6)

2. ஆசாரியராக மேசியா - (எபி 5:6; 6:20)

சங் 110:4 நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலிருப்பார்.

3. நியாயாதிபதியாகவும் வெற்றி பெறுபவராகவும் மேசியா - (மத் 25:31-46; வெளி 19:11-21)

சங் 110:5 உம்முடைய வலது பாரிசத்திலிருக்கிற ஆண்டவர், தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார்.

சங் 110:6 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்; எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார்; விஸ்தாரமான தேசங்களின் மேல் தலைவர்களாய் இருக்கிறவர்களை நொறுக்கிப் போடுவார்.

சங் 110:7 வழியிலே அவர் நதியில் குடிப்பார்; ஆகையால் அவர் தமது தலையை எடுப்பார்.

111 அதிகாரம்

தேவனுடைய மூன்றாவது சங்கீதம் - தேவனைப் பற்றிய இருபத்திரெண்டு காரியங்கள் - அவரைத் துதிப்பதற்கு இருபத்திரெண்டு காரணங்கள்

பொருளடக்கம்

1. யெகோவாவைத் துதித்தல் - (111:1)
2. அவருடைய ஏழு அம்ச கிரியைகளும், சுபாவமும் - (111:2-4)
3. தேவனுடைய நான்கு அம்ச பராமரிப்பு - (111:5-6)
4. தேவனுடைய கிரியைகள் வார்த்தை ஆகியவற்றின் நான்கு அம்ச சுபாவம் - (111:7-8)
5. அவருடைய நாமமும் நான்கு அம்ச மீட்பும் - (111:9)
6. ஞானத்தின் ஆதாரம் - (111:10)

1. யெகோவாவைத் துதித்தல்

சங் 111:1 அல்லேலூயா, செம்மையானவர்களுடைய சங்கத்திலும் சபையிலும் கர்த்தரை முழு இருதயத்தோடும் துதிப்பேன்.

கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் பொருத்தனை

1. செம்மையானவர்களுடைய சங்கத்தில் துதிப்பேன்
2. சபையில் கர்த்தரைத் துதிப்பேன்
3. முழு இருதயத்தோடு துதிப்பேன்

2. அவருடைய ஏழு அம்ச கிரியைகளும், சுபாவமும்

சங் 111:2 கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப் படுகிறவைகளுமாயிருக்கிறது.

சங் 111:3 அவருடைய செயல் மகிமையும் மகத்துவமுமுள்ளது, அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.

சங் 111:4 அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார், கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமுமுள்ளவர்.

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தரின் செய்கைகள் பெரியவைகள் (சங் 111:2).
2. அவருடைய செயல் மகத்துவமுமுள்ளது (சங் 111:3).
3. அவருடைய செயல் மகிமையுள்ளது.
4. அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.
5. அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார் (சங் 111:4).
6. கர்த்தர் இரக்கமுள்ளவர்.
7. கர்த்தர் மனஉருக்கமுள்ளவர்.
8. கர்த்தர், தமக்கு பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார் (சங் 111:5).
9. தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார்.
10. தமது கிரியைகளின் பெலத்தை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினார் (சங் 111:6).
11. ஜாதிகளின் சுதந்தரத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுத்தார்.
12. கர்த்தருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள் (சங் 111:7).
13. அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள்.
14. அவருடைய கிரியைகளும், கட்டளைகளும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களுக்கும் உறுதியானவைகள் (சங் 111:8).

111 அதிகாரம்

15. அவைகள் உண்மையாய்ச் செய்யப்பட்டவைகள்.

16. அவைகள் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்.

17. கர்த்தர், தமது ஜனங்களுக்கு மீட்பை அனுப்புகிறார் (சங் 111:9).

18. தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார்.

19. கர்த்தருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது.

20. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (சங் 111:10).

21. அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு.

22. அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

"கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது" - கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் கர்த்தருடைய பெரிய கிரியைகளை சந்தோஷத்தோடு ஆராய்ந்து பார்ப்பார்கள்.

3. தேவனுடைய நான்கு அம்ச பராமரிப்பு

சங் 111:5 தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார்; தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார்;

சங் 111:6 ஜாதிகளின் சுதந்தரத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுத்ததினால், தமது கிரியைகளின் பெலத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

கர்த்தருடைய பராமரிப்பின் கிரியைகள்

1. கர்த்தர் ஆகாரம் கொடுக்கிறார்.

2. தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார்

3. தமது கிரியைகளின் பெலத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார் (சங் 111:6).

4. ஜாதிகளின் சுதந்தரத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுக்கிறார் (சங் 111:6; சங் 37:9, 29; மத் 5:5).

4. தேவனுடைய கிரியைகள் வார்த்தை ஆகியவற்றின் நான்கு அம்ச சுபாவம்

சங் 111:7 அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள்; அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள்.

சங் 111:8 அவைகள் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களுக்கும் உறுதியானவைகள், அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்.

"அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள், அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள்" - கர்த்தருடைய கிரியைகள் நித்தியமானவை. மனுஷனுடைய கண்டு பிடிப்புகளினால் அவற்றை அழிக்க முடியாது (2பேதுரு 3:10-13).

5. அவருடைய நாமமும் நான்கு அம்ச மீட்பும்

சங் 111:9 அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி, தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார்; அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது.

பயங்கரம் (fear) - יָרֵא - yaw-ray' - 3372

வினைச்சொல் - அஞ்சு, பயந்திரு, பயப்படு, பயபக்தியாயிரு, பிரமி, ஐயப்படு, அச்சமுண்டாகு, கெடியாயிரு, பயங்கரம் (fear, afraid, terrible, dread, and reverence)

111 அதிகாரம்

பெற்றோருக்குப் பயப்படுவதையும் (லேவி 19:3), தேவனுக்குப் பயப்படுவதையும் (லேவி 19:14), இந்தச் சொல் குறிப்பிடுகிறது. தேவாலயத்தில் பயபக்தியாக இருப்பதையும் இச்சொல் குறிப்பிடும் (லேவி 19:30; லேவி 26:2).

6. ஞானத்தின் ஆதாரம்

சங் 111:10 கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" - ஞானத்தின் ஆரம்பம் மட்டுமே. இதுமட்டுமே ஞானமாகாது.

111-112 ஆகிய சங்கீதங்களில் கூறப்பட்டிருக்கிற நித்தியமான காரியங்கள்

1. கர்த்தருடைய நீதி (சங் 111:3)
2. அவருடைய உடன்படிக்கையை நினைவு கூருதல் (சங் 111:5)
3. கர்த்தருடைய கிரியைகள் (சங் 111:7-8)
4. உடன்படிக்கையின் நிபந்தனைகள் (சங் 111:9)
5. கர்த்தரின் புகழ்ச்சி (சங் 111:10)
6. நீதிமானின் நீதி என்றைக்கும் நிற்கும் (சங் 112:3, 9)
7. நீதிமான் என்றென்றைக்கும் அசைக்கப் படாதிருப்பான் (சங் 112:6)
8. நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன் (சங் 112:6)

112 அதிகாரம்

நீதிமானின் ஏழாவது சங்கீதம் (நீதிமானின் இருபத்தினான்கு ஆசீர்வாதங்கள்)

பொருளடக்கம்

1. நீதிமானின் நான்கு அம்ச சந்தோஷம் - (112:1-2)
2. நீதிமானின் எட்டு அம்ச ஐசுவரியமும், சுபாவமும் - (112:3-5)
3. நீதிமானின் ஏழு அம்ச நம்பிக்கை - (112:6-8)
4. நீதிமானின் நான்கு அம்ச சுபாவமும், வெகுமதியும் - (112:9)
5. துன்மார்க்கனின் ஐந்து அம்ச பொறாமை - (112:10)

1. நீதிமானின் நான்கு அம்ச சந்தோஷம்

சங் 112:1 அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

சங் 112:2 அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.

பாக்கியவானின் அம்சங்கள்

1. கர்த்தருக்குப் பயப்படுகிறவன் (சங் 111:10)
2. அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிறவன்

சங்கீதம் 112-இல் செம்மையானவர்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. நீதிமானின் சந்ததி பூமியில் பலத்திருக்கும் (சங் 112:2)
2. செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்
3. ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும் (சங் 112:3)
4. அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும் (சங் 112:3, 9)
5. செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும் (சங் 112:4)
6. அவன் இரக்கமுள்ளவன்
7. அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்
8. அவன் நீதியுள்ளவன்
9. மற்றவருக்கு இரங்குவான் (சங் 112:5)
10. தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிப்பான்
11. அவன் என்றென்றைக்கும் அசைக்கப் படாதிருப்பான் (சங் 112:6)
12. நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்
13. துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படமாட்டான் (சங் 112:7)
14. அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்
15. அவன் கர்த்தரில் நம்பிக்கை வைத்துள்ளான்
16. அவன் இருதயம் உறுதியாயிருக்கும்
17. தீமைக்கு அஞ்சமாட்டான்
18. தன் சத்துருக்களின் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான்
19. ஏழைகளுக்கு வாரியிறைத்துக் கொடுத்தான் (சங் 112:9)
20. அவன் மிகுந்த கிருபையுள்ளவன், அவன் நீதி என்றைக்கும் நிற்கும்
21. அவன் கொம்பு உயர்த்தப்படும்

112 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 86

"அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்..........." (சங் 112:2-3) - இந்தத் தீர்கததரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

2. நீதிமானின் எட்டு அம்ச ஐசுவரியமும், சுபாவமும்

சங் 112:3 ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.

சங் 112:4 செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்; அவன் இரக்கமும் மன உருக்கமும் நீதியுமுள்ளவன்.

சங் 112:5 இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.

"ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்" - நீதிமானுக்கு கர்த்தர் ஐசுவரியத்தையும், ஆஸ்தியையும் தருகிறார். ஆகையினால், ஒருவன் ஐசுவரியவானாக இருப்பதினால், அவனை துன்மார்க்கன் என்று முடிவு பண்ணிவிடக்கூடாது. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் நமது செல்வத்தைப் பயன்படுத்தினால் ஐசுவரியம் ஆசீர்வாதமே. எல்லா மனுஷரும் எல்லாவற்றையும் பெற்று, சுகமாக இருக்கவேண்டுமென்பதே தேவனுடைய சித்தம். மேசியா இந்த உலகத்தை ஆளுகை செய்யும்போது எல்லா மனுஷரும் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று சுகமாக இருப்பார்கள் (ஏசா 2:2-4; ஏசா 65:20-25; மீகா 4:1-8).

"அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்" - ஐசுவரியவானாக இருக்கிறவனால் நீதிமானாகவும் இருக்க முடியும் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்றாகும். ஏழ்மை பரிசுத்தத்தின் அடையாளம் என்று கூறமுடியாது (3யோவான் 1:2).

"செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்" - செம்மையானவர்கள் எப்போதும் சத்தியத்தின் ஒளியிலே நடப்பார்கள். அவர்களுடைய பாதை எப்போதும் வெளிச்சமாக இருக்கும். பரிபூரண நாளை நோக்கி நடப்பார்கள் (நீதி 4:18; 1யோவான் 1:7).

"இரங்கிக் கடன்கொடுக்கிறவன்" - உத்தமன் தன் அயலானுக்கு உதவிபுரிவான். மற்றவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தால் அவர்கள்மீது பொறாமைப்படமாட்டான்.

"தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிறவன்" - நீதிமான் தன் காரியங்களை நியாயமானபடி செய்வான். தேவன் தன்னை ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கையோடு அவன் நீதியை நடப்பிப்பான் (ரோமர் 12:9-21).

3. நீதிமானின் ஏழு அம்ச நம்பிக்கை

சங் 112:6 அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்.

சங் 112:7 துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்.

சங் 112:8 அவன் இருதயம் உறுதியாயிருக்கும்; அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணு மட்டும் பயப்படாதிருப்பான்.

தீர்க்கதரிசன எண் - 87

"அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்" (சங் 112:6) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"நீதிமானின் இருதயம் உறுதியாயிருக்கும்; அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான்" - நீதிமானின் குணங்களைப் பற்றி பல்வேறு விதமான காரியங்களைக் கூறுகிறார்கள். அவன் அமைதியாக இருக்க வேண்டும். தன்னுடைய சொந்த உரிமைகளைக் கூட நாடக்கூடாது. தனக்கு எதிராக குற்றம் செய்தவர்களுக்கு ஒன்றும் நிகழக்கூடாது

112 அதிகாரம்

என்று நினைக்க வேண்டும். இவ்வாறெல்லாம் நீதிமானின் குணாதிசயங்களைப் பற்றி கூறுகிறார்கள். ஆனால் கர்த்தர் துன்மார்க்கரைத் தண்டிக்க விரும்புகிறார். ஆகையினால் சத்துருக்களைக் கர்த்தர் தண்டிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமானதே. துன்மார்க்கரின் தண்டனைக்காக ஜெபம் பண்ணி, கர்த்தர் அதை நிறைவேற்ற வேண்டுமென்று காத்திருப்பது பரிசுத்த வேதாகம உபதேசத்தின் பிரகாரம் சரியானது. (2தெச 1:7-10; 2தெச 2:8-12; எபி 10:30-36; வெளி 6:9-11; வெளி 19:1-10)

4. நீதிமானின் நான்கு அம்ச சுபாவமும், வெகுமதியும்

சங் 112:9 வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்.

தீர்க்கதரிசன எண் - 88

"வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்" (சங் 112:9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

5. துன்மார்க்கனின் ஐந்து அம்ச பொறாமை

சங் 112:10 துன்மார்க்கன் அதைக்கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்; துன்மார்க்கருடைய ஆசை அழியும்.

துன்மார்க்கனின் பொறாமை

1. நீதிமான் உயர்த்தப்படுவதை துன்மார்க்கன் காண்பான்
2. துன்மார்க்கன் பொறாமைப்பட்டு மனமடிவாவான்
3. தன் பற்களைக் கடிப்பான்
4. கரைந்துபோவான்
5. துன்மார்க்கருடைய ஆசை அழியும்

113 அதிகாரம்

தேவனுடைய நான்காம் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிக்கவேண்டுமென்று ஐந்து அம்ச உபதேசம் - (113:1-3)
2. தேவனுடைய மகத்துவத்தின் ஏழு அம்சம். அவரைத் துதிப்பதற்கு பத்து காரணங்கள் - (113:4-9)

1. கர்த்தரைத் துதிக்கவேண்டுமென்று ஐந்து அம்ச உபதேசம்

சங் 113:1 அல்லேலூயா, கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள்; கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்.

சங் 113:2 இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப் படக்கடவது.

சங் 113:3 சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

கர்த்தருடைய ஊழியக்காரருக்கு கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் (அல்லேலூயா) (சங் 104:35)
2. கர்த்தருடைய ஊழியக்காரரே, கர்த்தரைத் துதியுங்கள்
3. கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்
4. சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்
5. கர்த்தரைத் துதியுங்கள் (அல்லேலூயா)

தீர்க்கதரிசன எண் - 89

"இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது.........." (சங் 113:2-4) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக" - கர்த்தர் எல்லாவற்றையும் தமது மகிமைக்காகவும், தமது சந்தோஷத்திற்காகவும் சிருஷ்டித்தார் (வெளி 4:11; கொலோ 1:17-18).

2. தேவனுடைய மகத்துவத்தின் ஏழு அம்சம். அவரைத் துதிப்பதற்கு பத்து காரணங்கள்

சங் 113:4 கர்த்தர் எல்லா ஜாதிகள்மேலும் உயர்ந்தவர்; அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது.

சங் 113:5 உன்னதங்களில் வாசம் பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமானமானவர் யார்?

சங் 113:6 அவர் வானத்திலும் பூமியிலுமுள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார்.

சங் 113:7 அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

சங் 113:8 அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார்.

சங் 113:9 மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார். அல்லேலூயா.

கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் எல்லா ஜாதிகள் மேலும் உயர்ந்தவர் (சங் 113:4).
2. அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது.

113 அதிகாரம்

3. சகல தேவர்களைவிட கர்த்தர் உயர்ந்தவர் (சங் 113:5).

4. வானத்திலுள்ள வைகளைப் பார்க்கும்படி அவர், தம்மைத் தாழ்த்துகிறார் (சங் 113:6).

5. பூமியிலுள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார்

6. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து உயர்த்துகிறார் (சங் 113:7).

7. எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

8. சிறியவனையும், எளியவனையும் பிரபுக்களோடு உட்காரும்படி உயர்த்துகிறார் (சங் 113:8).

9. அவர் மலடியை வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார். (சங் 113:9).

10. கர்த்தர் மலடியைப் பிள்ளைத்தாய்ச்சியாக்குகிறார்.

தாழ்த்து (humbleth) சங் 113:6 **שָׁפֵל - shaw-fale' - 8213**

வினைச்சொல் - தாழ்த்து, பணி, தாழ்ச்சியடை **(to lower one's self; to be humbled)** (சங் 113:6; ஏசா 2:9,11; ஏசா 5:15; ஏசா 10:33; எரே 13:18).

கர்த்தர் மகிமையுள்ளவர். மகத்துவமானவர். உயர்ந்தவர். ஆனாலும் வானத்திலும், பூமியிலும் உள்ளவைகளைப் பார்க்கும்படி அவர் தம்மைத் தாழ்த்துவது மிகப்பெரிய அற்புதமே. பூமியிலே தேவனுக்கு எதிராக பாவம் செய்து கலகம் பண்ணிக்கொண்டிருக்கும் மனுக்குலத்தார் இருக்கிறார்கள். கர்த்தர் பாவியான மனுஷனையும் நேசிக்கிறார். மனுஷருக்கு நன்மை செய்கிறார். ஒருவனும் கெட்டுப்போவது கர்த்தருடைய சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறார் (1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

"அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார். மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார்" - சங் 113:7-9 ஆகிய வசனங்கள் கர்த்தர் மனுக்குலத்தின்மீது காண்பிக்கும் அன்பை வெளிப்படுத்துகிறது. ஆதரவற்றவர்களுக்கு உதவிபுரிகிறார். எளியவனை உயர்த்துகிறார். வியாதியஸ்தனைக் குணமாக்குகிறார். மனுஷரை ஒருவரோடொருவர் சந்தோஷமாக இருக்கப்பண்ணுகிறார்.

114 அதிகாரம்

தேவனுடைய ஐந்தாம் சங்கீதம்

பொருளடக்கம்

1. யாத்திரை - (114:1-2)

2. தேவனுடைய ஆறு பெரிய கிரியைகள் - (114:3-8)

1. யாத்திரை - (யாத் 12-19)

சங் 114:1 இஸ்ரவேல் எகிப்திலும், யாக்கோபின் குடும்பம் அந்நிய பாஷைக்காரரான ஜனத்திலுமிருந்து புறப்பட்டபோது,

சங் 114:2 யூதா, அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும், இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று.

சங் 111-118 ஆகிய எட்டு சங்கீதங்களும் அல்லேலூயா சங்கீதங்கள் (Hallel Psalms) என்று அழைக்கப்படுகின்றன. சங் 113-114 ஆகியவை பஸ்கா போஜனத்திற்கு முன்பு பாடப்படும். சங் 115-118 ஆகியவை பஸ்கா போஜனத்திற்கு பின்பு பாடப்படும். மத் 26:30 இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் பஸ்கா போஜனத்தைப் புசித்து முடித்த பின்பு 118-ஆவது சங்கீதத்தைப் பாடியிருக்கலாம்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட வரலாற்றை யாத் 12:40-13:3 ஆகிய வசனங்களில் நாம் வாசித்து அறியலாம்.

அந்நிய பாஷைக்காரர் என்பது எகிப்தியரைக் குறிக்கும். எகிப்தியரின் மொழியும், எபிரெய மொழியும் வெவ்வேறானவை. இரண்டு தேசத்தாரும் தங்கள் பாஷைகளின் மூலமாகப் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாது. (ஆதி 42:23; சங் 81:5)

"யூதா, அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும், இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று" - இந்த வசனத்தில் யூதாவும், இஸ்ரவேலும் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது. தாவீது, சாலொமோன் ஆகியோருடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் சமஸ்த இஸ்ரவேலாக இருந்தது. அதன்பின்பு, இஸ்ரவேல் இராஜ்ஜியம் இரண்டாகப் பிரிந்தது. இந்த சங்கீதம் இஸ்ரவேல் இராஜ்ஜியம் இரண்டாகப் பிரிந்த பின்பு இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

2. தேவனுடைய ஆறு பெரிய கிரியைகள்

சங் 114:3 கடல் கண்டு விலகி ஓடிற்று; யோர்தான் பின்னிட்டுத் திரும்பினது.

சங் 114:4 மலைகள் ஆட்டுக்கடாக்களைப் போலவும், குன்றுகள் ஆட்டுக்குட்டிகளைப் போலவும் துள்ளினது.

சங் 114:5 கடலே, நீ விலகியோடுகிறதற்கும்; யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்புகிறதற்கும்;

சங் 114:6 மலைகளே, நீங்கள் ஆட்டுக்கடாக்களைப் போலவும்; குன்றுகளே, நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப் போலவும் துள்ளுகிறதற்கும், உங்களுக்கு என்ன வந்தது?

சங் 114:7 பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு.

சங் 114:8 அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்.

தேவனுடைய அற்புதமான கிரியைகள்

1. செங்கடல் இரண்டாகப் பிரிந்தது (சங் 114:3; யாத் 14)
2. யோர்தான் நதி பின்னிட்டுத் திரும்பினது (சங் 114:3; யோசு 3:13; 2இராஜா 2:8, 14).

114 அதிகாரம்

தேவனுடைய ஐந்தாம் சங்கீதம்

பொருளடக்கம்

1. யாத்திரை - (114:1-2)
2. தேவனுடைய ஆறு பெரிய கிரியைகள் - (114:3-8)

1. யாத்திரை - (யாத் 12-19)

சங் 114:1 இஸ்ரவேல் எகிப்திலும், யாக்கோபின் குடும்பம் அந்நிய பாஷைக்காரரான ஜனத்திலுமிருந்து புறப்பட்டபோது,

சங் 114:2 யூதா, அவருக்குப் பரிசுத்த ஸ்தானமும், இஸ்ரவேல் அவருக்கு ராஜ்யமுமாயிற்று.

சங் 111-118 ஆகிய எட்டு சங்கீதங்களும் அல்லேலூயா சங்கீதங்கள் (Hallel Psalms) என்று அழைக்கப்படுகின்றன. சங் 113-114 ஆகியவை பஸ்கா போஜனத்திற்கு முன்பு பாடப்படும். சங் 115-118 ஆகியவை பஸ்கா போஜனத்திற்கு பின்பு பாடப்படும். மத் 26:30 இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் பஸ்கா போஜனத்தைப் புசித்து முடித்த பின்பு 118-ஆவது சங்கீதத்தைப் பாடியிருக்கலாம்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட வரலாற்றை யாத் 12:40-13:3 ஆகிய வசனங்களில் நாம் வாசித்து அறியலாம்.

அந்நிய பாஷைக்காரர் என்பது எகிப்தியரைக் குறிக்கும். எகிப்தியரின் மொழியும், எபிரெய மொழியும் வெவ்வேறானவை. இரண்டு தேசத்தாரும் தங்கள் பாஷைகளின் மூலமாகப் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாது. (ஆதி 42:23; சங் 81:5)

3. மலைகள் ஆட்டுக்கடாக்களைப் போலத் துள்ளிற்று (சங் 114:4)
4. குன்றுகள் ஆட்டுக்குட்டிகளைப்போலத் துள்ளிற்று. (சங் 114:4-7)
5. கன்மலை தண்ணீர்தடாகமாக மாறிற்று (சங் 114:8; யாத் 17:6; எண் 20:8-13).
6. கற்பாறை நீரூற்றுக்களாக மாறிற்று (சங் 114:8; எண் 20:8-13)

"பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு" - கடந்த காலத்தில் ஏராளமான பூகம்பங்கள், பூமியை அதிரப்பண்ணிற்று. (யாத் 19:18; 1சாமு 14:15; 1இராஜா 19:11-12; ஆமோ 1:1; சக 14:5; மத் 27:54; மத் 28:2). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பூமியதிர்ச்சி உண்டாகும். (மத் 24:7; வெளி 6:12; வெளி 8:5; வெளி 11:13, 19; வெளி 16:18).

"கர்த்தர் கற்பாறையை நீரூற்றுகளாக மாற்றுகிறார்" - பாலஸ்தீனம், சீரியா, எகிப்து ஆகிய தேசங்களில் சுண்ணாம்பு பாறைகள் உள்ளன. இவற்றின் வெடிப்புகளிலிருந்து கர்த்தர் நீரூற்றுகளைத் தருகிறார். (ஏசா 5:28) கற்பாறை கடினமான தன்மைக்கு அடையாளம். (ஏசா 50:7; எசே 3:9) கற்பாறையிலிருந்து தண்ணீரும், எண்ணெயும் வந்தன. (உபா 8:15; உபா 32:13) கற்பாறையினால் கூரான கத்திகளைச் செய்து அவற்றை யுத்தங்களில் பயன்படுத்தினார்கள் (யாத் 4:25; யோசு 5:2).

115 அதிகாரம்

தேவனுடைய ஆறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நமது தேவன் - அவருடைய வாசஸ்தலம் - (115:1-3)
2. புறஜாதி தெய்வங்கள் - அவைகளுடைய உதவி செய்யமுடியாத தன்மையின் பத்து அம்சம் - (115:4-8)
3. தேவன் நமக்கு துணையும் கேடகமுமாயிருக்கிறார் - (115:9-11)
4. தேவனுடைய ஏழு அம்ச வாக்குத்தத்தம் - (115:12-14)
5. தேவனுடைய சிருஷ்டிப்பும் கிரியைகளும் - (115:15-18)

1. நமது தேவன் - அவருடைய வாசஸ்தலம்

சங் 115:1 எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்.

சங் 115:2 அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?

சங் 115:3 நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமானயாவையும் செய்கிறார்.

கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை வரப்பண்ணவேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. உமது கிருபையினிமித்தம்
2. உமது சத்தியத்தினிமித்தம்

தமக்குச் சித்தமானயாவையும் கர்த்தர் செய்கிறார்.

2. புறஜாதி தெய்வங்கள் - அவைகளுடைய உதவி செய்யமுடியாத தன்மையின் பத்து அம்சம்

சங் 115:4 அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

சங் 115:5 அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.

சங் 115:6 அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது.

சங் 115:7 அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது.

சங் 115:8 அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்.

சங்கீதம் 115-இல் விக்கிரகங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. அவைகள் வெள்ளியும் பொன்னும் (சங் 115:4)
2. அவைகள் மனுஷருடைய கைவேலையாய் இருக்கிறது
3. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது (சங் 115:5)
4. அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது
5. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது (சங் 115:6)
6. அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது
7. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது

115 அதிகாரம்

8. அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது

9. தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது

10. விக்கிரகங்களைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே இருக்கிறார்கள் (சங் 115:8)

விக்கிரகங்களைப் பண்ணுகிறவர்களும், விக்கிரகங்களை நம்புகிறவர்களும் பரிதாபமானவர்கள். விக்கிரகங்களால் அவர்களுக்கு உதவி புரியமுடியாது.

3. தேவன் நமக்கு துணையும் கேடகமுமாயிருக்கிறார்

சங் 115:9 இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

சங் 115:10 ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

சங் 115:11 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

"கர்த்தரை நம்பு" என்னும் வாக்கியம் மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது

1. இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு (எல்லா கோத்திரத்தாரும், சங் 115:9, 12)

2. ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை நம்புங்கள் (ஆசாரியரும், லேவியரும், சங் 115:10, 12)

3. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள் (யூதரும், புறஜாதியாரும், சங் 115:11, 12)

கர்த்தர் தமது ஜனங்களுக்கு உதவி புரியும் விதம்

1. கர்த்தர் அவர்களுக்குத் துணையாக இருக்கிறார். (சங் 115:9-11).

2. கர்த்தர் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார் (சங் 115:9-11)

4. தேவனுடைய ஏழு அம்ச வாக்குத்தத்தம்

சங் 115:12 கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.

சங் 115:13 கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார்.

சங் 115:14 கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார்.

"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்" - சங் 115:9-11 ஆகிய வசனங்களில் கர்த்தர் யாரையெல்லாம் ஆசீர்வதிப்பதாக கூறினாரோ அவர்களை சங் 115:12-14 ஆகிய வசனங்களில் மறுபடியும் ஆசீர்வதிப்பதாகக் கூறுகிறார்.

கர்த்தர் யாரையெல்லாம் ஆசீர்வதிப்பார்

1. நம்மை (சங் 115:12)

2. இஸ்ரவேல் குடும்பத்தாரை (சங் 115:9, 12)

3. ஆரோன் குடும்பத்தாரை (சங் 115:10, 12)

4. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களை (சங் 115:11, 13)

5. பெரியோரையும் சிறியோரையும் (சங் 115:13)

115 அதிகாரம்

6. உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் (சங் 115:14)

7. உங்கள் பிள்ளைகளை (சங் 115:14)

5. தேவனுடைய சிருஷ்டிப்பும் கிரியைகளும்

சங் 115:15 வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

சங் 115:16 வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்.

சங் 115:17 மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்.

சங் 115:18 நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா.

ஜனங்களை ஆசீர்வதிப்பவரின் குணாதிசயங்கள்

1. வானத்தையும் பூமியையும் படைத்தவர் (சங் 115:15)

2. வானங்களுக்கு சொந்தக்காரர் (சங் 115:16)

3. பூமியை மனுபுத்திரருக்குக் கொடுத்தவர்

"மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" - சரீரப்பிரகாரமாக மரித்தவர்களால் கர்த்தரைத் துதிக்க முடியாது. (யாக் 2:26; ஆதி 2:7; ஆதி 3:19; பிர 3:19-21) ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போன விக்கிரகாராதனைக்காரரையும் இந்த வசனம் குறிக்கும். (சங் 115:8) அவர்கள் தாங்கள் உயிரோடு இருக்கும்போதும், தேவனைத் துதிப்பதில்லை. மரித்தபின்பும் அவர்களால் தேவனைத் துதிக்க முடியாது. கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் இந்த ஜீவியத்தில் நாம் கர்த்தருடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த ஜீவியம் முடிந்த பின்பு, நாம் இரட்சிக்கப்படுவதற்கு வேறொரு வாய்ப்பு கொடுக்கப்படாது. மரணத்திற்குப் பின்பு நியாயத்தீர்ப்புதான் நமக்கு வரும் (எபி 9:27).

"மவுனத்தில் இறங்குதல்" **(go down into silence)** - இதுவும் சரீர மரணத்தையே குறிக்கும். ஆவிக்குரிய மரணத்தைக் குறிக்காது. (சங் 94:17)

"நாமோ, இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம்" - மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். மரணத்திற்கு போகும் ஆத்துமா அங்கு அவியாத அக்கினியில் அலறும் (லூக்கா 16:19-31). பரலோகத்திலுள்ள ஆத்துமா கர்த்தரை எக்காலத்திலும் துதிக்கும் (எபி 12:23; வெளி 6:9-11).

116 அதிகாரம்

மூன்றாவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம் - (18:4-6; 116:3)

பொருளடக்கம்

1. தேவனை நேசித்து அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்னும் பொருத்தனை - (116:1-2)
2. நெருக்கத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபத்தின் ஏழு அம்சம் - (116:3-4)
3. தேவனுடைய சுபாவத்தின் மூன்று அம்சம் - (116:5)
4. பொருத்தனையின் பன்னிரெண்டு அம்சமும் சாட்சியும் - (116:6-8)
5. தாவீதின் ஆறு பொருத்தனைகள் - நான்கு காரணங்கள் - (116:9-19)

1. தேவனை நேசித்து அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்னும் பொருத்தனை

சங் 116:1 கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன்.

சங் 116:2 அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால், நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுது கொள்ளுவேன்.

சங்கீதம் 116-இல் தாவீதின் பொருத்தனைகள்

1. நான் கர்த்தரில் அன்பு கூருவேன் (சங் 116:1).
2. நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன் (சங் 116:2).
3. நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன் (சங் 116:9).
4. இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன் (சங் 116:13).
5. நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன் (சங் 116:14, 18).
6. நான் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்துவேன் (சங் 116:17).
7. அவருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.

தாவீதின் பொருத்தனைக்குக் காரணங்கள்

1. கர்த்தர் என் சத்தத்தைக் கேட்டார் (சங் 116:1).
2. அவர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்.
3. அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தார் (சங் 116:2).
4. மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது (சங் 116:3).
5. பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது.
6. நான் இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்.
7. கர்த்தர் கிருபையுள்ளவர் (சங் 116:5).
8. கர்த்தர் நீதியுள்ளவர்.
9. தேவன் மனஉருக்கமானவர்.
10. கர்த்தர் கபடமற்றவர்களைக் காக்கிறார் (சங் 116:6).
11. அவர் என்னை இரட்சித்தார்.
12. கர்த்தர், என்னிடத்தில் தாராளமாயிருக்கிறார் (சங் 116:7).
13. என் ஆத்துமாவை மரணத்துக்குத் தப்புவிக்கிறார் (சங் 116:8).

116 அதிகாரம்

14. என் கண்ணைக் கண்ணீர்களிலிருந்து தப்புவிக்கிறார்

15. என் காலை இடறுதலுக்கு தப்புவிக்கிறார்.

16. கர்த்தர் எனக்கு அநேக உபகாரங்களை அளித்துள்ளார் (சங் 116:12).

17. என் கட்டுகளை அவிழ்த்து விட்டார் (சங் 116:16).

2. நெருக்கத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபத்தின் ஏழு அம்சம்

சங் 116:3 மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்.

சங் 116:4 அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு: கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன்.

"மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது" - நான் மரணத்திற்கு அருகில் சென்று விட்டேன். எந்த நேரத்திலும் எனக்கு மரணம் வரலாம். அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினேன். கர்த்தர் என்னை மரணத்திலிருந்து மீட்டார் (சங் 116:3-4, 6, 8).

"பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்" - தாவீது பின்வாங்கிப்போன காலத்தில் இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம். வருங்கால சந்ததியாருக்கு பாதாளத்தின் இடுக்கண்களையும் மரணத்தின் கட்டுகளையும் வெளிப்படுத்துவதற்காக தாவீது இந்த சங்கீதத்தை இயற்றியிருக்கலாம்.

தாவீதை மரணக்கட்டுக்கள் சுற்றிக் கொண்டபோது அவன் செய்த காரியங்கள்

1. மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது.

2. பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது.

3. நான், இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன் (சங் 116:3).

4. நான் மிகவும் தாழ்ந்து போனேன் (சங் 116:6).

5. மரண அருகிலிருக்கிறது(சங் 116:8,15).

6. என் கண்கள், கண்ணீர்களால் நிறைந்திருக்கிறது (சங் 116:8).

7. என் கால் இடறலடைகிறது (சங் 116:8).

8. நான் மிகுதியும் வருத்தப்பட்டேன் (சங் 116:10).

தாவீதை மரணக்கட்டுக்கள் சூழ்ந்து கொண்டபோது அவன் கர்த்தரிடம் ஜெபித்தான். கர்த்தர் அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விட்டார் (சங் 116:3-16).

3. தேவனுடைய சுபாவத்தின் மூன்று அம்சம்

சங் 116:5 கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்.

"கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர், நம்முடைய தேவன் மனஉருக்கமானவர்" - தாவீது தேவனுடைய குணங்களை அறிக்கையிடுகிறான். தாவீதைக் கர்த்தர் மரணத்திலிருந்தும், பாதாளத்திலிருந்தும் தப்புவித்ததினால் தாம் கிருபையும், நீதியும், மனஉருக்கமுமானவர் என்று நிரூபிக்கிறார் (சங் 116:4, 6, 8).

116 அதிகாரம்

4. பொருத்தனையின் பன்னிரெண்டு அம்சமும் சாட்சியும்

சங் 116:6 கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்; நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார்;

சங் 116:7 என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.

சங் 116:8 என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.

"என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு" - கர்த்தர் தன்னை விடுவித்தபடியினால் தன்னுடைய ஆத்துமாவிடம் பழைய இளைப்பாறுதலுக்கும், சமாதானத்திற்கும் திரும்புமாறு கூறுகிறான் (சங் 116:4-16).

நன்மை செய் **(bountifully)** - גָּמַל - **gaw-mal' - 1580**

வினைச்சொல் - சரிக்கட்டு, செய், நன்மைசெய், பதில்செய், வருவித்துக் கொள், நிறைவேற்று, கைகொள், பதிலளி, உபகாரம் செய் **(to be good to a person)** - (சங் 116:7; சங் 13:6; சங் 119:17; சங் 142:7)

"என் ஆத்துமாவை மரணத்துக்கு தப்புவித்தீர்" - தாவீது கர்த்தரிடம் தனது பாவங்களை மன்னிக்குமாறு விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் மனமிரங்கி, தாவீதை இரட்சித்தார் (சங் 116:1-2,4-7). ஒரு மனுஷன் பாவத்திலிருக்கும்போது அவன் ஆவிக்குரிய ரீதியாக மரித்திருக்கிறான். அவனுக்குக் கிடைக்கும் இரட்சிப்பு அவனை அவனுடைய ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வரச்செய்யும் (எபே 2:1-9).

தாவீது தப்புவிக்கப்பட்ட காரியங்கள்

1. மரணத்திற்கு
2. கண்ணீருக்கு
3. இடறலுக்கு

5. தாவீதின் ஆறு பொருத்தனைகள் - நான்கு காரணங்கள்

சங் 116:9 நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.

சங் 116:10 விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்; நான் மிகுதியும் வருத்தப் பட்டேன்.

சங் 116:11 எந்த மனுஷனும் பொய்யன் என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன்.

சங் 116:12 கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.

சங் 116:13 இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

சங் 116:14 நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்.

சங் 116:15 கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.

சங் 116:16 கர்த்தாவே, நான் உமது அடியேன்; நான் உமது அடியாளின் புத்திரனும், உமது ஊழியக் காரனுமாயிருக்கிறேன்; என் கட்டுகளை அவிழ்த்துவிட்டீர்.

சங் 116:17 நான் உமக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

சங் 116:18 நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும்,

116 அதிகாரம்

சங் 116:19 கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா.

"விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்" - 2கொரி 4:13-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"நான் மிகுதியும் வருத்தப்பட்டேன்" - தாவீதின் வருத்தம் என்ன என்று இந்த சங்கீதத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை. ஒருவேளை தாவீதின் வருத்தம் அவனுடைய சரீர வியாதியாக இருக்கலாம் (சங் 38). அப்சலோம் தாவீதிற்கு எதிராகப் பண்ணிய கலகமாக இருக்கலாம் (2சாமு 15-18). தாவீதின் வருத்தம் அதிகம். இந்த வருத்தத்திலிருந்து கர்த்தர் அவனை விடுவித்தார் (சங் 116:1-8).

"எந்த மனுஷனும் பொய்யன் என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன்" - நமக்கு பிரச்சனைகள் வரும்போது, நாம் கர்த்தரையே நோக்கிப் பார்க்க வேண்டும். மனுஷனை நோக்கிப் பார்க்கக்கூடாது. மனுஷனை நோக்கிப் பார்த்தால், நமது பிரச்சனைகளும், நமது கலக்கங்களும் அதிகரிக்கும். நமது வார்த்தைகளும் இதுபோன்று தாறுமாறாக இருக்கும்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பன்னிரெண்டு விதமான பாத்திரங்கள்

1. துன்மார்க்கன் மீதான நியாயத்தீர்ப்பான பாத்திரம் (சங் 11:6; சங் 73:10; சங் 75:8; எரே 49:12)
2. இரட்சிப்பு, ஆசீர்வாதத்தின் பாத்திரம் (சங் 16:5; சங் 23:5; சங் 116:13)
3. தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரம் (ஏசா 51:17-22; எரே 25:15-28; வெளி 14:10; வெளி 16:19)
4. தேற்றரவின் பாத்திரம் (எரே 16:7)
5. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் (எரே 51:7; வெளி 18:6)
6. புறஜாதியர்களால், இஸ்ரவேல் மீதான அடக்குதலான பாத்திரம் (புல 4:21; எசே 23:31-33; ஆப 2:16; சக 12:2)
7. அசுத்தம், ஏமாற்றுதலின் பாத்திரம் (மத் 23:25-26; லூக்கா 11:39)
8. மேசியாவின் பாடுகளாகிய பாத்திரம் (மத் 20:22; மாற்கு 10:38; யோவான் 18:11)
9. மரணமாகிய பாத்திரம் - மேசியா சிலுவையில் மரிப்பதற்கு முன் தோட்டத்தில் இயேசுவை கொல்ல சாத்தான் முயற்சி பண்ணினான். (மத் 26:39,42; மாற்கு 14:36; லூக்கா 22:42)
10. கிறிஸ்துவின் இரத்தமாகிய போஜன விருந்தின் பாத்திரம் - ஆசீர்வாதத்தின் பாத்திரம் (மத் 26:27-28; மாற்கு 14:23; லூக்கா 22:20; 1கொரி 10:16,21; 1கொரி 11:25-28)
11. பேய்களுடைய பானபாத்திரம் - சாபத்தின் பாத்திரம் (1கொரி 10:21)
12. அசுத்தம் நிறைந்த பாத்திரம் (வெளி 17:4)

இவைதவிர, 21 இடங்களில் சாதாரண பாத்திரங்களைப் பற்றி குறிப்பு உள்ளது. (ஆதி 40:11-21; ஆதி 44:2,12-17; 2சாமு 12:3; 1இராஜா 7:26; 1நாளா 28:17; 2நாளா 4:5; நீதி 23:31; ஏசா 22:24; எரே 35:5; எரே 52:19; மத் 10:42; மாற்கு 7:4-8; மாற்கு 9:41)

"நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்" - தாவீது கர்த்தருக்கு பொருத்தனை செய்திருந்தான். அவற்றையெல்லாம் ஜனங்களுக்கு முன்பாக இப்பொழுது நிறைவேற்றுகிறான் (சங் 116:14, 18). ஆசரிப்புக்கூடாரம் எருசலேமில் இருந்தது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத் ஏதோமிலிருந்து எருசலேமிற்கு கொண்டு வந்திருந்தார்கள் (சங் 116:19; 2சாமு 6).

116 அதிகாரம்

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" - இந்த வசனத்தை வாசிக்கும்பொழுது பரிசுத்தவான்கள் மரிக்கும்போது கர்த்தர் சந்தோஷப்படுவார் என்று தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது. பரிசுத்தவான்களின் ஜீவன் கர்த்தருடைய பார்வைக்கு மிகவும் அருமையானது, முக்கியமானது. பரிசுத்தவான்களின் மரணத்திற்குக் காரணமானவர்களைக் கர்த்தர் நிச்சயமாகவே தண்டிப்பார் (கலா 5:19-21; வெளி 21:8; வெளி 22:15). துன்மார்க்கரின் மரணத்தில்கூட கர்த்தர் பிரியப்படுகிறவர் அல்ல. (எசே 18:23, 32; எசே 33:11) மனுஷன் தன் பாவத்தின் சம்பளமாக மரணத்தைப் பெற்றுக் கொள்கிறான். மரணம் ஒரு சத்துரு. ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் கர்த்தர் மரணத்தை அழித்து ஜெயிப்பார் (1கொரி 15:24-28; வெளி 20:11-15; வெளி 21:3-7; வெளி 22:3).

தாவீதின் தாழ்மை

தாழ்மையுள்ளவனுக்கு தாவீது ஒரு எடுத்துக்காட்டு. தான் ஒரு பாடகன். இசைக்கருவிகளை இசைப்பவன். இராணுவ வீரன். இராஜா, தீர்க்கதரிசி, பராக்கிரமசாலி என்றெல்லாம் தன்னைப் பற்றி தேவனுக்கு முன்பாகப் பெருமையாகக் கூறாமல் "கர்த்தாவே, நான் உமது அடியேன்" என்று மிகுந்த மனத்தாழ்மையோடு கூறுகிறான். தன்னுடைய தாயைப் பற்றிக் கூறும்போது கூட, அவளும் தேவனுடைய அடியாள் என்றே கூறுகிறான் (சங் 116:16). தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு பெருமை இருக்கக்கூடாது. தங்களைப் பற்றி ஜனங்கள் மத்தியில் உயர்த்திப் பேசக்கூடாது. கர்த்தரை மட்டுமே உயர்த்த வேண்டும். அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய வரங்களுக்காகத் தன்னைப் பற்றி உயர்வாக கூறியிருக்கலாம். ஆனால் பவுல் தன்னை உயர்த்தவில்லை. (2கொரி 11:16-28) இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தினார் (யோவான் 16:13-15).

சங் 116:14 மறுபடியுமாக சங்கீதம் 116:18-இல் கூறப்பட்டிருக்கிறது.

"கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன்" - தாவீதின் ஆட்சிக் காலத்தில் ஆசரிப்புக்கூடாரம் எருசலேமில் இருந்தது (2சாமு 6) என்பதற்கு இந்த வசனமும் ஒரு ஆதாரம்.

117 அதிகாரம்

பொருளடக்கம்

1. பதினைந்தாவது துதியின் சங்கீதம் - தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - இரண்டு காரணங்கள்

1. பதினைந்தாவது துதியின் சங்கீதம் - தேவனைத் துதிக்க வேண்டுமென்று இரண்டு அறிவுரைகள் - இரண்டு காரணங்கள்

சங் 117:1 ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்.

சங் 117:2 அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது.
அல்லேலூயா.

"ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்" - ரோமர் 15:11-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் நம்மேல் வைத்த கிருபை பெரியது
2. கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது

118 அதிகாரம்

மேசியாவைப் பற்றிய பத்தொன்பதாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று நான்கு அறிவுரைகள் - (118:1-4)
2. சாட்சியின் இருபது அம்சம் - (118:5-18)
3. ஜெபமும் துதியும் - (118:19-21)
4. மேசியா - புறக்கணிக்கப்படுவதும், ராஜாவாக உயர்த்தப்படுவதும் - (118:22-23)
5. ஜெபமும் துதியும் - (118:24-25)
6. மேசியாவின் முதலாம் வருகையும் இரண்டாம் வருகையும் - (118:26-28)
7. தேவனைத் துதிக்க வேண்டுமென்னும் அறிவுரை - (118:29)

1. தேவனைத் துதிக்க வேண்டுமென்று நான்கு அறிவுரைகள்

சங் 118:1 கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 118:2 அவர் கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொல்வதாக.

சங் 118:3 அவர் கிருபை என்றுமுள்ளதென்று, ஆரோனின் குடும்பத்தார் சொல்வார்களாக.

சங் 118:4 அவர் கிருபை என்றுமுள்ளதென்று, கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக.

சங்கீதம் 118-இல் கூறப்பட்டிருக்கிற புத்திமதிகள்

1. யெகோவாவைத் துதியுங்கள் (சங் 118:1, 29).
2. கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொல்வதாக (சங் 118:2).
3. அவர் கிருபை என்றுமுள்ளதென்று ஆரோனின் குடும்பத்தார் சொல்வதாக.
4. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வதாக (சங் 118:4).

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் நல்லவர் (சங் 118:1, 29).
2. அவர் கிருபை என்றுமுள்ளது (சங் 118:1-4, 29).
3. கர்த்தர் என்னைக் கேட்டருளினார் (சங் 118:5).
4. அவர் என்னை விசாலத்திலே வைத்தார்.
5. கர்த்தர் என் பட்சத்திலிருக்கிறார் (சங் 118:6).
6. கர்த்தர் எனக்கு உதவி செய்தார் (சங் 118:7, 13).
7. அவர் என் பெலன் (சங் 118:14).
8. அவர் என் சங்கீதம்
9. அவர் எனக்கு இரட்சிப்பு (சங் 118:14, 21).
10. அவர், எனக்குச் செவி கொடுத்தார் (சங் 118:21).

2. சாட்சியின் இருபது அம்சம்

சங் 118:5 நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்.

118 அதிகாரம்

சங் 118:6 கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?

சங் 118:7 எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்.

சங் 118:8 மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

சங் 118:9 பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

சங் 118:10 எல்லா ஜாதியாரும் என்னை வளைந்து கொள்ளுகிறார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.

சங் 118:11 என்னைச் சுற்றிலும் வளைந்து கொள்ளுகிறார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.

சங் 118:12 தேனீக்களைப்போல என்னை வளைந்துகொள்ளுகிறார்கள்; முள்ளில் பற்றின நெருப்பைப்போல அணைந்து போவார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்.

சங் 118:13 நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்.

சங் 118:14 கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானார்.

சங் 118:15 நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.

சங் 118:16 கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.

சங் 118:17 நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்.

சங் 118:18 கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

"கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" - எபி 13:6-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்" - எல்லா மனுஷரும், எல்லா செல்வங்களும் நம் பக்கத்தில் இருப்பதற்குப் பதிலாகக் கர்த்தர் நமது பக்கத்தில் இருந்தால் அதுவே நமக்கு மிகப்பெரிய பலன் (சங் 118:6, 7).

சங்கீதப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிற நன்மையான காரியங்கள்

1. அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத் திரட்சியைப்பார்க்கிலும், நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது. (சங் 37:16).
2. ஜீவனைப் பார்க்கிலும் கர்த்தருடைய கிருபை நல்லது (சங் 63:3).
3. பலிகளைச் செலுத்துவதைப் பார்க்கிலும், அவரை பாட்டினால் துதித்து, ஸ்தோத்திரிப்பதே நல்லது (சங் 69:31).
4. ஆயிரம் நாளைப் பார்க்கிலும் கர்த்தருடைய பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது (சங் 84:10).
5. மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் (சங் 118:8).
6. பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் (சங் 118:9).

118 அதிகாரம்

7. அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், வேதமே நலம் (சங் 119:72).

"பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" - "பிரபுக்கள்" - தேவபக்தியுள்ள பிரபுக்கள். வேதாகம வரலாற்றில் தேவபக்தியுள்ள பிரபுக்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். நாம் அவர்களைக்கூட நம்பாமல் தேவனையே நம்பவேண்டும் என்பதுதான் தேவன் நமக்குக் கூறும் ஆலோசனை (சங் 119:23, 161; சங் 146:3).

"எல்லா ஜாதியாரும் என்னை வளைந்து கொள்ளுகிறார்கள்" - தாவீது தன் காலத்தில் தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்காக தன்னைச் சுற்றிலுமுள்ள தேசங்களோடு யுத்தம் பண்ணினான். எல்லா ஜாதியாரும் என்பது தாவீது யுத்தம் பண்ணிய இராஜ்ஜியங்களைக் குறிக்கும் (சங் 118:9-12; 2சாமு 8).

"கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்" - தாவீது கர்த்தர் பெயரில் நம்பிக்கையாக இருந்தான். யுத்தத்தில் தன் சத்துருக்கள்மீது கர்த்தர் தனக்கு ஜெயம் தருவார் என்று நம்பினான். அவன் சிறுவனாக இருந்தபோது, கர்த்தர் அவனை சிங்கத்திடமிருந்தும், கரடியிடமிருந்தும், கோலியாத் என்னும் இராட்சதனிடமிருந்தும் தப்புவித்தார் (சங் 118:10-12; 1சாமு 17:26, 32-37, 45-46). தாவீது கர்த்தரிடத்தில் நம்பிக்கையாக இருந்ததை உறுதிபண்ணும் விதமாக இந்த வாக்கியத்தை மூன்று முறை கூறுவதை நாம் வாசிக்கிறோம் (சங் 118:10-12).

"தேனீக்களைப்போல என்னை வளைந்து கொள்ளுகிறார்கள்; கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன்" - தாவீதைச் சுற்றியிருந்த ஜாதியார் அவனை தேனீக்களைப் போலச் சுற்றிக் கொண்டார்கள். இந்தச் சூழ்நிலையிலும் தாவீது கர்த்தர் பேரிலே நம்பிக்கையாக இருந்தான். கர்த்தர் பேரில் அவர்களைச் சங்கரிப்பேன் என்று உறுதியாகக் கூறினான் (சங் 118:8-9).

"முள்ளில் பற்றின நெருப்பைப்போல அணைந்து போவார்கள்" - நெருப்பு பற்றுவதினால் முட்காடு அழிந்துபோவதைப் போல தாவீதின் விரோதிகளும் அழிந்து போவார்கள்.

"நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்" - என்று தாவீது கூறுவது அவன்மீது யுத்தம் பண்ணிய தேசங்களைப் பற்றியதாகும் (சங் 118:10,13, 14).

கர்த்தர் தாவீதிற்கு எப்பேர்ப்பட்டவராக இருக்கிறார்?

1. விண்ணப்பங்களுக்கு செவி கொடுப்பவர் (சங் 118:5, 21)
2. சகாயர் (சங் 118:6-7,13)
3. நம்பிக்கை (சங் 118:8-9)
4. பெலன் (சங் 118:14)
5. இரட்சிப்பு (சங் 118:14, 21)
6. தேவன் (சங் 118:28)

நீதிமான்களுடைய கூடாரங்களில் உள்ளவை

1. கெம்பீரசத்தம்
2. இரட்சிப்பின் சத்தம்

"கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது" - கர்த்தரின் வலதுகரம் என்பது அவருடைய வல்லமையையும், பராக்கிரமத்தையும் குறிக்கும். (யாத் 15:6; சங் 17:7; சங் 20:6; சங் 44:3).

"நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்" - கர்த்தர் தாவீதின் ஆயுசுநாளைக் கூட்டிக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் தாவீது உடனடியாக மரிக்கப்போவதில்லை. தான் ஜீவிக்கும் இந்தக் காலத்தில் தாவீது கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பதாக கூறுகிறான்.

118 அதிகாரம்

"கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை" - கர்த்தர் தாவீதை அதிகமாகத் தண்டித்தார். கர்த்தருடைய தண்டனையினால் அவருடைய பிள்ளைகள் மரித்துப்போவதில்லை. தமது பிள்ளைகளைத் திருத்துவதற்காகவே கர்த்தர் அவர்களைச் சிட்சிக்கிறார்.

3. ஜெபமும் துதியும்

சங் 118:19 நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன்.

சங் 118:20 கர்த்தரின் வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.

சங் 118:21 நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப்பாயிருந்தபடியால், நான் உம்மைத் துதிப்பேன்.

தாவீதின் விண்ணப்பங்கள்

1. நீதியின் வாசல்களைத் திறவுங்கள்
2. கர்த்தாவே இரட்சியும்
3. கர்த்தாவே காரியத்தை வாய்க்கப்பண்ணும்

"நீதியின் வாசல்கள்" - சங் 118:20 நீதியின் வாசல்களைப் பற்றி விளக்குகிறது. நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.

தாவீதின் பொருத்தனைகள்

1. தேவன் எனக்குத் திறந்திருக்கும் நீதியின் வாசல்கள் வழியாக நான் பிரவேசிப்பேன்
2. கர்த்தரைத் துதிப்பேன்(சங் 118:19, 21).

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் எனக்குச் செவிகொடுத்தார்
2. கர்த்தர் எனக்கு இரட்சிப்பாக இருந்தார்

4. மேசியா - புறக்கணிக்கப் படுவதும், ராஜாவாக உயர்த்தப்படுவதும் - (சங் 2; தானி 7:13-14; சக 14; பிலி 2:5-11; வெளி 11:15; 20:1-10)

சங் 118:22 வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று.

சங் 118:23 அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 90

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று........." (சங் 118:22-23) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 21:42)

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" - மத் 21:42; மாற்கு 12:10-11; லூக்கா 20:17; அப் 4:11; 1பேதுரு 2:4-8 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டும், விளக்கப்பட்டும் இருக்கிறது.

மேசியாவைக் குறிக்கும் கல்

1. இஸ்ரவேலின் கன்மலை (ஆதி 49:24)
2. இடறுதலின் கன்மலை (ஏசா 8:14; ரோமர் 9:33; 1பேதுரு 2:8)
3. அஸ்திபாரமாகிய கல் (ஏசா 28:16; மத் 16:18; 1கொரி 3:11; எபே 2:20)
4. பரீட்சிக்கப்பட்ட கல் (ஏசா 28:16)
5. விலையேறப்பெற்ற மூலைக்கல் (ஏசா 28:16; 1பேதுரு 2:4, 6, 7)

118 அதிகாரம்

6. அஸ்திபாரமுள்ளதுமான கல் (ஏசா 28:16)

7. ஆகாதென்று தள்ளின கல் (மத் 21:42; மாற்கு 12:10-11; லூக்கா 20:17; அப் 4:11; 1பேதுரு 2:4, 7-8)

8. ஜீவனுள்ள கல் (1பேதுரு 2:4)

9. தெரிந்து கொள்ளப்பட்ட விலையேறப் பெற்ற கல் (1பேதுரு 2:4)

10. பிரதான மூலைக்கல் (1பேதுரு 2:6)

11. தெரிந்து கொள்ளப்பட்டகல் (1பேதுரு 2:6)

12. தலைக்கல்(சங் 118:22;1பேதுரு 2:7-8)

5. ஜெபமும் துதியும்

சங் 118:24 இது கர்த்தர் உண்டு பண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.

சங் 118:25 கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப் பண்ணும்.

"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" - தேசங்கள்மீது தாவீது வெற்றியடைந்த நாளை இது குறிக்கும். (சங் 118:10-12) அல்லது கூடாரப்பண்டிகையின் நாளையும் இது குறிக்கலாம். ஏனெனில் இந்தப் பண்டிகையின் போது இஸ்ரவேல் ஜனங்கள் இந்த வாக்கியங்களைப் பாடுவார்கள்.

"கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும்" - கூடாரப் பண்டிகையில் யூதர்கள் இந்த வாக்கியங்களைப் பாடுவார்கள். மரங்களின் பச்சைக்கிளைகளைத் தங்கள் கைகளில் ஏந்தியவாறு யூதர்கள் இந்தப் பாடல்களைப் பாடுவது வழக்கம் (சங் 118:25-26).

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்" கிறிஸ்து எருசலேமிற்குள் பவனியாக வந்தபோது அந்த ஊர் ஜனங்கள் சங் 118:26-ஐப் பாடினார்கள். (மத் 21:9)

6. மேசியாவின் முதலாம் வருகையும் இரண்டாம் வருகையும் - (மத் 21:9; 23:39; லூக்கா 13:35)

சங் 118:26 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

சங் 118:27 கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்; பண்டிகைப்பலியைக் கொண்டுபோய் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள்.

சங் 118:28 நீர் என் தேவன், நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என் தேவன், நான் உம்மை உயர்த்துவேன்.

தீர்க்கதரிசன எண் - 91

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்" (சங் 118:26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மத் 21:9; மத் 23:39; மாற்கு 11:9; லூக்கா 13:35; லூக்கா 19:38; யோவான் 12:13 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப் பட்டிருக்கிறது.

"கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்" - நமது பலிகளை கர்த்தர் அங்கீகரித்ததின் அடையாளமாக அவர் அக்கினியையும், வெளிச்சத்தையும் அனுப்பினார். (யாத் 13:21-22; லேவி 9:24; 1இராஜா 18:24, 38)

பலி (sacrifice) חַג - khawg – 2282

118 அதிகாரம்

ஆ.பெ.சொ. - பண்டிகை, பலி, பண்டிகை நாள், பண்டிகைப்பலி
(a feast or festal sacrifice) - (யாத் 23:18; லேவி 23:39, 41)

"பண்டிகைப்பலியைக் கொண்டுபோய் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள்" - பலிகளை அக்கினியில் வேவிப்பதற்காக கயிறுகளில் கட்டினார்கள். (சங் 2:3; எசே 3:25)

தாவீதின் பொருத்தனைகள்

1. நான் உம்மைத் துதிப்பேன்
2. நான் உம்மை உயர்த்துவேன்

7. தேவனைத் துதிக்க வேண்டுமென்னும் அறிவுரை

சங் 118:29 கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது.

"கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது" - இந்த வாக்கியம் வேதாகமத்தில் 13 தடவைகள் வந்திருக்கிறது (சங் 118:1, 29; சங் 30:4; சங் 97:12; சங் 105:1; சங் 106:1; சங் 107:1; சங் 136:1, 2, 3, 26; 1நாளா 16:8, 34).

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. அவர் நல்லவர்.
2. அவர் கிருபை என்றுமுள்ளது.

அவர் நல்லவர் என்று தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் வாக்கியம் வேதாகமத்தில் 17 தடவைகள் வந்திருக்கிறது (சங் 118:1,29; சங் 34:8; சங் 73:1; சங் 100:5; சங் 106:1; சங் 107:1; சங் 135:3; சங் 136:1; சங் 145:9; 1நாளா 16:34; 2நாளா 5:13; 2நாளா 7:3; எஸ்றா 3:11; எரே 33:11; புல 3:25; நாகூம் 1:7).

அவர் கிருபை என்றுமுள்ளது என்று தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் வாக்கியம் வேதாகமத்தில் 42 தடவைகள் வந்திருக்கிறது. சங்கீதம் 136-இல் மட்டும் இந்த வாக்கியம் 26 தடவைகள் எழுதப்பட்டிருக்கிறது (சங் 118:1-4,29; சங் 100:5; சங் 106:1; சங் 107:1; சங் 136:1-26; சங் 138:8; 1நாளா 16:34, 41; 2நாளா 5:13; 2நாளா 7:3, 6; 2நாளா 20:21; எஸ்றா 3:11; எரே 33:11).

119 அதிகாரம்

முதலாவது பிரிவு - ஆலெப்

தேவனுடைய வார்த்தையின் ஆசீர்வாதங்கள் - (சங் 19:7; ரோம 1:16; 10:17; எபே 5:26; 2தீமோ 2:15; 3:16-17; எபி 8:6; 1பேதுரு 1:23)

பொருளடக்கம்

1. நற்பண்புகளை வெளிப்படுத்துகிறது. ஆசீர்வதிக்கப்பட்ட மனுஷனின் ஆறு அம்ச சுபாவம் - (119:1-3)

2. பொருத்தனை செய்வதைத் தூண்டுகிறது - ஒரு கட்டளை - ஒரு விண்ணப்பம் - இரண்டு பொருத்தனைகள் - (119:4-8)

1. நற்பண்புகளை வெளிப் படுத்துகிறது. ஆசீர்வதிக்கப்பட்ட மனுஷனின் ஆறு அம்ச சுபாவம் - (சங் 1:3; 15:2-4; 32:1; 36:5; 37:39)

சங் 119:1 கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.

சங் 119:2 அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்.

சங் 119:3 அவர்கள் அநியாயம் செய்வதில்லை; அவருடைய வழிகளில் நடக்கிறார்கள்.

பாக்கியவான்களின் குணாதிசயங்கள்

1. பாக்கியவான்கள் உத்தமமான மார்க்கத்திலே நடப்பார்கள் (சங் 119:1)

2. அவர்கள் கர்த்தருடைய வேதத்தின்படி நடப்பார்கள்

3. அவருடைய சாட்சிகளைக் கைக் கொள்ளுவார்கள் (சங் 119:2)

4. முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேடுவார்கள்

5. அவர்கள் அநியாயம் செய்வதில்லை (சங் 119:3)

6. கர்த்தருடைய வழிகளில் நடக்கிறார்கள்

பாக்கியவான்களின் குணாதிசயங்கள் உருவாகும் விதம்

1. மனுஷனுக்குத் தேவனுடைய கட்டளைகள் (சங் 119:4)

2. கீழ்ப்படிய வேண்டுமென்னும் பொறுப்பு (சங் 119:5)

3. முழுமையான கீழ்ப்படிதல் மூலமாக சுத்தமனச்சாட்சி (சங் 119:6)

4. மனுஷனுடைய செம்மையான இருதயம் (சங் 119:7)

5. முழு இருதயத்தோடு தேவனை மனுஷன் துதிக்கும் துதி

6. தேவனுடைய நீதி நியாயங்களை மனுஷன் கற்றுக் கொள்ளுதல்

7. தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் பொருத்தனை (சங் 119:8)

8. தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டும் என்னும் வாஞ்சை

உத்தம (undefiled) - תָּמִים - taw-meem' - 8549

பெயரடை - உத்தமனான, பழுதற்ற, முழுவதுமான, நிறைவேறின, உத்தமமான, உண்மையுமான, தேறினவன், உண்மை, நிதானமாய், பூரணஞானமுள்ள, உண்மையாயிருந்த, செவ்வையான, செம்மையான, முழுமையான, குறையற்றிருந்த (entire; without blemish; without spot; undefiled) (சங் 119:1; எபி 7:26; எபி 13:4; யாக் 1:27; 1பேதுரு 1:4).

119 அதிகாரம்

கர்த்தருடைய வெளிப்பாட்டை விளக்கும் வார்த்தைகள்

1. வழி அல்லது மார்க்கம் (The way)
2. நியாயப்பிரமாணம் (The law)
3. சாட்சி (Testimony)
4. நியாயம் (Precepts)
5. நியமம் (Statutes)
6. கட்டளை (Commandments)
7. தீர்ப்பு (Judgments)
8. வார்த்தைகள் (Words)
9. சத்தியம் (Truth)
10. நீதி (Righteousness)

வழி, மார்க்கம் (way) דֶּרֶךְ - deh'-rek - 1870

ஆண்பால் பெயர்ச்சொல் - வழி, பிரயாணம், பயணம், பாதை, போக்கு, போதல் (to proceed, walk with the feet) இந்த சங்கீதத்தில் இந்த சொல் 13 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (சங் 119:1,3,5,14,26,27,29,30,32,33,37, 59,168) (யோவான் 14:6; ரோமர் 3:12.

1. வழி, மார்க்கம்

(1) உமது பாதை (சங் 119:37; சங் 86:11)

(2) தேவனுடைய வழி (சங் 18:30; சங் 25:9; சங் 37:23,34)

(3) உமது சாட்சிகளின் வழி (சங் 119:14)

(4) உமது கட்டளைகளின் வழி (சங் 119:27)

(5) மெய் வழி (சங் 119:30; 2பேதுரு 2:2)

(6) உமது கற்பனைகளின் வழி (சங் 119:32)

(7) உமது பிரமாணங்களின் வழி (சங் 119:33)

(8) நீதிமான்களின் வழி (சங் 1:6)

(9) நித்திய வழி (சங் 139:24)

(10) பரிசுத்தவான்களின் வழி (நீதி 2:8)

(11) நல்லவர்களின் வழி (நீதி 2:20)

(12) செவ்வையான பாதை (நீதி 4:11)

(13) ஜீவ வழி (நீதி 6:23; நீதி 10:17; எரே 21:8)

(14) நீதியின் வழி (நீதி 8:20; 2பேதுரு 2:21)

(15) புத்தியின் வழி (நீதி 9:6)

(16) கர்த்தரின் வழி (நீதி 10:29; எரே 5:4-5; எசே 18:25,29; எசே 33:17,20; அப் 18:25)

(17) நீதிமானுடைய பாதை (ஏசா 26:7)

(18) உமது நியாயத்தீர்ப்பின் வழி (ஏசா 28:7)

(19) சமாதான வழி (ஏசா 59:8; ரோமர் 3:17)

(20) நல்ல வழி (எரே 6:16)

(21) தேவனுடைய மார்க்கம் (மத் 22:16; அப் 18:26)

(22) இந்த மார்க்கம் (அப் 22:4)

(23) இந்த மார்க்கத்தார் (அப் 22:4; அப் 24:22)

(24) இரட்சிப்பின் வழி (அப் 16:17)

(25) மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கம் (அப் 24:14)

(26) செம்மையான வழி (2பேதுரு 2:15)

119 அதிகாரம்

நியாயப்பிரமாணம் (The law) - תּוֹרָה - to-raw', to-raw' - 8451

பெ.பெ.சொ. - பிரமாணம், நியமப்பிரமாணம், நியாயம், முறைமை, வேதம், கட்டளை, உபதேசம், போதகம், நியாயப்பிரன்ாணம் **(to direct; guide; teach; make straight or even; point forward; that which guides, directs, and instructs in the way of righteousness; that which gives the knowledge of sin)**(ரோமர்3:20; 1யோவான் 3:4) இந்த சங்கீதத்தில் இந்த சொல் 25 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது (சங் 119:1,18,29,34, 44,51,53,55, 61,70,72,77,85,92,97; சங் 119:109,113,126,136,142,150,153,163, 165,174).

உபதேசி (teach) - יָרָה - yaw-raw' - 3384

வினைச்சொல் - விடு, எய், ஊடுருவு, உபதேசி, வில் வீரர்

2. நியாயப்பிரமாணம்

(1) கர்த்தருடைய வேதம் (சங் 119:1; சங் 1:2; சங் 19:7; 1நாளா 16:40; 1நாளா 22:12; 2நாளா 17:9; 2நாளா 31:3-4; 2நாளா 35:26; ஏசா 5:24; ஏசா 30:9; எரே 8:8; ஆமோ 2:4; லூக்கா 2:23,24,39)

(2) உமது வேதம் (சங் 119:18,29,34,51, 53,55,61,70,77,85,92,97,109,113,126; சங் 119:136,142,150,153, 163, 165,174)

(3) நீர் விளம்பின வேதம் (சங் 119:72)

(4) தேவனுடைய நியாயப்பிரமாணம் (யோசு 24:26; நெகே 8:8,18; நெகே 10:28; ரோமர் 7:22,25)

(5) தேவனுடைய நியாயப்பிரமாணம் (நெகே 10:29)

(6) தேவனாகிய கர்த்தரின் நியாயப் பிரமாணம் (2இராஜா 10:31)

(7) பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணம் (எஸ்றா 7:12,21)

(8) என் (கர்த்தர்) நியாயப்பிரமாணம் (சங் 78:1; எரே 9:13; எரே 16:11; எரே 44:10; ஓசி 8:12)

(9) சத்திய வேதம் (மல் 2:6)

(10) யூதருடைய வேதப்பிரன்ாணம் (அப் 25:8)

(11) மோசேயினுடைய பிரமாணம் (எபி 10:28)

(12) அவருடைய வேதம் (சங் 1:2; எரே 44:23)

(13) மோசேயின் நியாயப்பிரமாணம் (யோசு 8:31-32; யோசு 23:6; 1இராஜா 2:3; 2இராஜா 23:25; 2நாளா 23:18; 2நாளா 30:16; எஸ்றா 3:2; எஸ்றா 7:6; நெகே 8:1; லூக்கா 2:22; லூக்கா 24:4; யோவான் 1:17; 7:23; அப் 13:39; அப் 28:23)

சாட்சி (Testimonies) - עֵדָה - ay-daw' - 5713

பெ.பெ.சொ. - சாட்சி **(to turnbackagain; to go over again; to testify)** இந்த சங்கீதத்தில் இந்த சொல் 23 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (சங்119:2,14,22,24,31,36,46,59,79,88,9 5,99;சங்119:111,119,125,129,138,144,146, 152, 157,167,168)

עֵדוּת - ay-dooth - 5715

பெண்பால் பெயர்ச்சொல் - அய்தோத், சாட்சி, விசாரணை

119 அதிகாரம்

3. சாட்சி

(1) அவருடைய சாட்சிகள் (10 தடவைகள்) (சங் 119:2)

(2) உமது சாட்சிகள் (24 தடவைகள்) (சங் 119:14)

(3) என் சாட்சி (சங் 132:12)

(4) உம்முடைய வாக்கின் சாட்சி (சங் 119:88)

(5) கர்த்தருடைய சாட்சி (சங் 19:7)

(6) இஸ்ரவேலுக்குச் சாட்சி (சங் 122:4)

(7) தேவனைப் பற்றிய சாட்சி (1கொரி 2:1)

(8) இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி (1கொரி 1:6; வெளி 1:2,9; வெளி 12:17; வெளி 19:10)

(9) நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சி (2தீமோ 1:8)

(10) எங்கள் மனது சொல்லுஞ் சாட்சி (2கொரி 1:12)

4. நியாயம்

நியாயம் (Precepts) - פִּקּוּדִים - pipqudiym - 6490

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயம், கட்டளை (to take oversight or charge; superintend; hence, mandates enjoined on others in all duties of life and conduct) இந்த சங்கீதத்தில் இந்தச் சொல் 21 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது (சங் 119:4, 15, 27, 40, 45, 56, 63 69, 78, 93, 94 ,100, 104, 110, 128, 134, 141, 159, 168,173). பழைய ஏற்பாட்டின் வேறு 6 இடங்களில் இந்தப் பொருளைக் குறிக்கும் வேறு எபிரெய சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

(நெகே 9:14; ஏசா 28:10,13; ஏசா 29:13; எரே 35:18; தானி 9:5).

நியமம் (Statutes) - חֹק - khoke - 2706

ஆ.பெ.சொ. - மானியம், கட்டளை, நியமம், வேண்டியது, குறித்திருத்தல், எல்லை, திட்டம், படி, தீர்மானம், கொடுக்கப்பட்ட வேலை, முறைமை, கிடைத்தல், பிரமாணம், வழக்கம், நியமித்தபோஜனம், வழங்கி வருதல், காலம், மட்டு (to mark, hew, cut, engrave, or inscribe; to decree or ordain) இந்த சங்கீதத்தில் இந்தச் சொல் 22 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (சங்119:5,8,12,16,23,26,33,48,54,64,68, 71,80,83,112,117,118,124,135,145,155,171)

5. நியமம்

(1) அவருடைய நியமங்கள் (25 தடவைகள்) (யாத் 15:26)

(2) உமது பிரமாணங்கள் (23 தடவைகள்) (சங் 119:5)

(3) என் நியமங்கள் (42 தடவைகள்) (ஆதி 26:5)

(4) கர்த்தருடைய பிரமாணங்கள் (யாத் 18:16)

(5) கர்த்தருடைய நியாயங்கள் (சங் 19:8)

(6) தாவீதின் கட்டளை (1இராஜா 3:3)

(7) இஸ்ரவேலின் தீர்மானம் (2இராஜா 17:19)

கட்டளை (Commandments) - מִצְוָה - mits-vaw' - 4687

பெண்பால் பெயர்ச்சொல் - கற்பனை, கட்டளை, ஆணை, சட்டம், கற்பித்தல், மனுஷ கட்டளை (human Command) (2நாளா 8:14) தெய்வீக கட்டளை (divine Command) (2நாளா 29:25) கட்டளை, ஆணை, சட்டம் (law; ordinance; precept) இந்தச் சங்கீதத்தில் 22 தடவைகள் இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (சங்119:6, 10, 19, 21, 32, 35, 47, 48, 60 ,66, 73, 86, 96 98, 115, 127, 131, 143, 151 ,166, 172, 176)

119 அதிகாரம்

6. கட்டளை

(1) கர்த்தருடைய கட்டளைகள் (18 தடவைகள்) (லேவி 4:2,13,27)

(2) தேவனுடைய கற்பனைகள் (1கொரி 7:19; வெளி 12:17; வெளி 14:12)

(3) சட்டத்திட்டங்களாகிய நியாயப் பிரமாணம் (எபே 2:15)

(4) என் கட்டளைகள் (27 தடவைகள்) (ஆதி 26:5; யாத் 16:28)

(5) அவர் கட்டளைகள் (42 தடவைகள்) (யாத் 15:26; உபா 7:9)

(6) உம்முடைய கற்பனைகள் (சங் 119:6,10)

தீர்ப்பு **(Judgments) - מִשְׁפָּט - mish-pawt' - 4941**

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயம், நீதி, வழக்கம், பிரமாணம், தீர்மானம் பண்ணுதல், நியாய விசாரிப்பு, தீர்ப்பு, நியாய விதி, நியமம், நியாய விசாரணை, முறைமை, நியாயத்தீர்ப்பு, நியாயந்தீர்த்தல், பிரகாரம், போதித்தல், காரியசித்தி, வழக்காடுகிறவர், நிறைகோல், காரியம், குற்றம், ஆக்கினைக்குப்பாத்திரன், வளர்த்தல், பாத்திரம், வழக்காடுதல், தண்டித்தல், தண்டனை உரியது, ஆக்கினை, மாதிரி, சாயல் **(judgment; regulation; order; sentence; verdict)** இந்த சங்கீதத்தில் 18 தடவைகள் இந்த சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (சங்119:7,13,20,30,39,43,52,62,75,102, 106,108,120,137, 156,160,164,175).

7. தீர்ப்பு

(1) கர்த்தருடைய நியாயங்கள் (சங் 19:9)

(2) அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகள் (2நாளா 16:12; சங் 105:5)

(3) உம்முடைய நீதிநியாயங்கள் (சங் 119:7,62,106,160,164)

(4) என்னுடைய நியாயங்கள் (28 தடவைகள்) (லேவி 18:4-5,26; லேவி 19:37; லேவி 20:22)

(5) அவருடைய நியாயங்கள் (28 தடவைகள்) (உபா 8:11; உபா 33:21 ரோமர் 11:33)

(6) அவருடைய நியாயங்கள் (15 தடவைகள்; 14 தடவைகள் சங்கீதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது (உபா 33:10)

வார்த்தைகள் **(Words) - דָּבָר - daw-bawr' - 1697**

ஆ.பெ.சொ. - சொல், பேச்சு, வார்த்தை, காரியம், சங்கதி, இந்தப் பிரகாரம், சொன்னது, செய்தி, நடபடி, சொற்படி, வாக்கு, வஸ்து, சமாசாரம், உத்தரவு, பொருள், ஆலோசனை, உடன்படிக்கை, கற்பனை, நியாயம், விவரம், நினைவு, நியமம், விசேஷம், முகாந்தரம், சம்பந்தம், தீர்மானம், நடக்கை, கவலை, பாரம், புத்தி, வர்த்தமானம், மறுஉத்தரவு, வாக்குத்தத்தம், காணிக்கை, மறுமொழி, கிரியை, கேள்வி, மொழி, திட்டம், தரிசனம், முறை, செயல், யோசனை, விஷயம், பங்கு, வரிசை, புஸ்தகம், பிரபந்தம், செய்கை, வழக்கம், மார்க்கம் **(a spoken word; discourse; communication; elation)** இந்த சங்கீதத்தில் இந்த சொல் 23 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (சங்119:9, 16, 17, 25, 28, 42, 43, 49, 65, 74, 81, 89, 101, 105, 107, 114, 147, 160, 161, 169).

வார்த்தை **(Word) - אִמְרָה - im-raw' – 565**

119 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - வசனம், வார்த்தை, சொல், வாக்கு, சத்தம் **(speech; word)** இந்த சங்கீதத்தில் இந்த சொல் 19 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது (சங்119:11, 38, 41, 50, 58, 67, 76, 82, 103, 116, 123, 133, 140, 148, 154, 158, 162, 170, 172).

8. வார்த்தை

(1) கர்த்தருடைய வார்த்தை - 140 தடவை பழைய ஏற்பாட்டிலும், 13 தடவை புதிய ஏற்பாட்டிலும் உள்ளது (ஆதி 15:1,4; யாத் 9:20)

(2) கர்த்தருடைய வார்த்தைகள் (15 தடவைகள்) (யாத் 4:28; யாத் 24:3,4; சங் 12:6)

(3) தேவனுடைய வசனங்கள் (1சாமு 9:27; மாற்கு 7:13; ரோமர் 10:17; 2கொரி 4:2; எபே 6:17; எபி 4:12; 1பேதுரு 1:23)

(4) தேவன் அருளும் வார்த்தைகள் (எண் 24:4,16; 1நாளா 25:5; எஸ்றா 9:4; சங் 107:11)

(5) ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள் (சங் 107:11; எரே 23:36)

(6) தேவனுடைய வசனங்கள் (யோவான் 8:47)

(7) நீதியின் வார்த்தைகள் (சங் 119:123; எபி 5:13)

(8) இஸ்ரவேலிலுள்ள பரிசுத்தருடைய வசனம் (ஏசா 5:24)

(9) சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தை (ஏசா 39:5)

(10) அவருடைய வாயின் வார்த்தை (எரே 9:20)

(11) என் வாயின் வார்த்தை (எசே 33:7)

(12) அவருடைய கிருபையுள்ள வசனம் (அப் 20:32)

(13) வாக்குத்தத்தமான வார்த்தை (ரோமர் 9:9)

(14) விசுவாசத்தின் வார்த்தை (ரோமர் 10:8)

(15) சத்திய வசனம் (2கொரி 6:7; எபே 1:13; 2தீமோ 2:15; யாக் 1:18)

(16) ஜீவ வசனம் (பிலி 2:16)

(17) சத்திய வசனம் (கொலோ 1:5)

(18) கிறிஸ்துவின் வசனம் (கொலோ 3:16)

(19) தேவனுடைய நல்வார்த்தை (எபி 6:5)

(20) ஆணையோடே விளங்கிய வசனம் (எபி 7:28)

(21) புத்திமதியான வார்த்தை (எபி 13:22)

(22) வல்லமையுள்ளதுமாயிருக்கிற வார்த்தை (யாக் 1:21)

(23) சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் (1பேதுரு 1:25)

(24) பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனம் (வெளி 3:10)

(25) கர்த்தர் கற்பித்த வார்த்தைகள் (யாத் 19:7; உபா 6:6; உபா 12:28; உபா 28:14)

(26) உடன்படிக்கையின் வார்த்தைகள் (யாத் 34:28; உபா 29:1; 2இராஜா 23:3; 2நாளா 34:31)

(27) கர்த்தர் ஆணையிடுவித்துச் சொல்லும் வார்த்தை (உபா 5:22)

119 அதிகாரம்

(28) இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தை (உபா 17:19; உபா 27:3,8; உபா 28:58; உபா 29:29; உபா 31:1,24)

(29) ஆணையுறுதியின் சாப வார்த்தைகள் (உபா 29:19)

(30) இந்தப் பாடலின் வார்த்தைகள் (உபா 31:30; உபா 32:44)

(31) தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் (1இராஜா 22:13; 2நாளா 18:12; எரே 23:16; எரே 27:14-16; சக 8:9; அப் 15:15)

(32) நியாயபிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகள்(2இராஜா 22:11,13,16,18)

(33) உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகள் (2இராஜா 23:2-3; 2நாளா 34:30-31)

(34) நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் (2இராஜா 23:24; 2நாளா 34:19)

(35) ஞானதிருஷ்டிக்காரரின்வார்த்தைகள் (2நாளா 33:18)

(36) கற்பனைகளின் வார்த்தைகள் (எஸ்றா 7:11)

(37) புத்திமதிகளின் வார்த்தை (நீதி 1:2)

(38) ஞானிகளின் வாக்கியங்கள்(நீதி 1:6)

(39) சத்திய வார்த்தைகள் (நீதி 22:21; அப் 26:25)

(40) அறிவின் வார்த்தைகள் (நீதி 23:12)

(41) என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் (எரே 26:5)

(42) புஸ்தகத்திலுள்ள கர்த்தருடைய வார்த்தைகள்(எரே 36:8,11)

(43) நல்வார்த்தைகள், ஆறுதலான வார்த்தைகள் (சக 1:13)

(44) நித்திய ஜீவ வசனங்கள் (யோவான் 6:68)

(45) இந்த ஜீவ வசனங்கள் (அப் 5:20)

(46) நம் இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தை (அப் 20:35; 1தீமோ 6:3)

(47) இந்தத் தீர்க்கதரிசன வசனங்கள் (வெளி 1:3; வெளி 22:18-19)

(48) என் வசனங்கள் (45 தடவைகள்) (ஏசா 55:11; ஏசா 66:2; யோவான் 5:24,47)

(49) அவருடைய வசனங்கள் (35 தடவைகள்) (1இராஜா 8:20; சங் 107:20; யோவான் 5:38)

(50) உம்முடைய வசனம் (60 தடவைகள்) (1இராஜா 8:26; யோவான் 17:6,14,17)

சத்தியம் (Truth) - אֱמוּנָה - em-oo-naw' - 530

பெ.பெ.சொ. - ஒரே நிலை, சத்தியம், உண்மை, மெய், உறுதி, விசுவாசம். **(firmness; security; fidelity; stability; truth)** (சங் 119:30)

நிச்சயம் (certainty) - אֱמֶת - eh'-meth - 571

பெண்பால் பெயர்ச்சொல்-உண்மை, நேர், சத்தியம், மெய், நிச்சயம், உறுதி **(stability; certainty; truth)** (சங் 119:43,142,151)

9. சத்தியம்

(1) கர்த்தரின் வார்த்தை (1இராஜா 17:24)

(2) கர்த்தரின் வேதம் சத்தியம் (சங் 119:142)

(3) உமது கற்பனைகளெல்லாம் உண்மை (சங் 119:151)

(4) கர்த்தருடைய பாதைகளெல்லாம் சத்தியமுமானவைகள் (சங் 25:10)

(5) சத்திய வசனம் (சங் 119:43)

119 அதிகாரம்

(6) சத்திய வார்த்தைகள் (நீதி 22:21)

(7) சத்திய எழுத்து (தானி 10:21)

(8) சத்திய வேதம் (மல் 2:6)

(9) தேவனுடைய மார்க்கம், சத்தியமானது (மத் 22:16; 2பேதுரு 2:2)

(10) சத்தியமார்க்கம் (2பேதுரு 2:2)

(11) அவருடைய சத்தியம் (சங் 91:4; சங் 96:13; சங் 98:3)

(12) உம்முடைய சத்தியம் (16 தடவைகள்) (சங் 25:5; சங் 86:11; சங் 108:4)

(13) சத்தியம் (நீதி 23:23; யோவான் 8:32; யோவான் 14:6)

(14 உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17)

(15) சுவிசேஷத்தின் சத்தியம் (கலா 2:5,14; கொலோ 1:5)

நியாயம் (Righteousness) - צֶדֶק - tseh'-dek - 6664

ஆண்பால் பெயர்ச்சொல் - நீதி, நியாயம், யதார்த்தம்

நீதி (justice) - צְדָקָה - tsed-aw-kaw' - 6666

பெண்பால் பெயர்ச்சொல் - நீதி, நியாயம், பாத்தியம், தக்கபடி (rightness; justice; virtue, to give God and man their dues in that which is right) (சங் 119:40,123,142,144,172).

10. நியாயம்

(1) நீதியின் பாதைகள் (சங் 23:3)

(2) நித்திய நீதி (சங் 119:142)

(3) கர்த்தருடைய நீதி (மீகா 6:5)

(4) நீதிமார்க்கம் (மத் 21:32; 2பேதுரு 2:21)

(5) தேவ நீதி (ரோமர் 1:17; ரோமர் 3:5,21-22; ரோமர் 10:3; யாக் 1:20)

(6) நியாயப்பிரமாணத்துக்கேற்ற நீதி (ரோமர் 2:26; ரோமர் 8:4)

(7) விசுவாசத்தின் நீதி (ரோமர் 4:11,13)

(8) நீதிப்பிரமாணம் (ரோமர் 9:31)

(9) தேவநீதி (ரோமர் 10:3)

(10) நீதியின் வசனம் (எபி 5:13)

(11) என் நீதி (ஏசா 51:5-8)

(12) அவருடைய நீதி (12 தடவைகள்) (சங் 50:6; சங் 97:6; சங் 98:2; சங் 103:17; சங் 111:3)

(13) உம்முடைய நீதி (சங் 5:8; சங் 71:19,24; சங் 119:123)

நாம் நடக்க வேண்டிய வழி

1. நீ எனக்கு முன்பாக நடந்து உத்தமனாயிரு (ஆதி 17:1)
2. என் வழிகள் எல்லாம் (உபா 5:33; உபா 26:17)
3. அவர் வழிகளிலெல்லாம் (உபா 10:12; சங் 119:3)
4. கர்த்தருக்குப் பின்பாக (உபா 13:4; ஓசி 11:10)
5. என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள் (1சாமு 2:30)
6. எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக் கொள்ளல் (1இராஜா 2:4)
7. என் நீதி நியாயங்களில் நடத்தல் (1இராஜா 6:12)

119 அதிகாரம்

8. என் கட்டளைகளின்படி நடத்தல் (1இராஜா 6:12)

9. நல்வழியில் நடத்தல் (1இராஜா 8:36; எரே 6:16)

10. கர்த்தரைப் பின்பற்றி நடத்தல் (2நாளா 34:31)

11. தேவனுக்குப் பயந்து நடத்தல் (நெகே 5:9)

12. உத்தமத்திலே நடத்தல் (சங் 26:11)

13. வெளிச்சத்திலே தேவனுக்கு முன்பாக நடத்தல் (சங் 56:13; சங் 89:15; 1யோவான் 1:7)

14. நேர்மையாக நடத்தல் (சங் 15:2; சங் 84:11; நீதி 2:7)

15. சத்தியத்திலே நடத்தல் (சங் 86:11)

16. ஜீவனுள்ளோர் தேசத்திலே நடத்தல் (சங் 116:9)

17. கர்த்தருடைய வேதத்தின்படி நடத்தல் (சங் 119:1)

18. விசாலத்திலே நடத்தல் (சங் 119:45)

19. நல்லவர்களின் வழியிலே நடத்தல் (நீதி 2:20)

20. தேவனுடைய நாமத்தைப் பற்றிக் கொண்டு நடத்தல் (மீகா 4:5)

21. தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடத்தல் (மீகா 6:8)

22. பகலிலே நடத்தல் (யோவான் 11:9)

23. ஆபிரகாமின் விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடத்தல் (ரோமர் 4:12)

24. புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடத்தல் (ரோமர் 6:4)

25. மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடத்தல் (ரோமர் 8:1,4)

26. பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடத்தல் (ரோமர் 13:13)

27. தந்திரமாய் நடவாமலிருத்தல் (2கொரி 4:2)

28. தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடத்தல் (2கொரி 5:7)

29. ஆவிக்கேற்றபடி நடத்தல் (கலா 5:16,25)

30. நற்கிரியைகளின் படி நடத்தல் (எபே 2:10)

31. அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடத்தல் (எபே 4:1)

32. புறஜாதிகளின் வீணான சிந்தையிலே நடவாமலிருத்தல் (எபே 4:17)

33. அன்பிலே நடத்தல் (எபே 5:2)

34. கர்த்தருக்குள், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடத்தல் (எபே 5:8)

35. ஞானமற்றவர்களைப் போல நடவாமலிருத்தல் (எபே 5:15)

36. ஒழுங்காய் நடத்தல் (பிலி 3:16)

37. கர்த்தருக்குப் பாத்திரராய் நடத்தல் (கொலோ 1:10)

38. அவருக்குள் வேர்கொண்டவர்களாக அவருக்குள் நடத்தல் (கொலோ 2:6)

39. புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடத்தல் (கொலோ 4:5)

40. தேவனுக்குப் பாத்திரராய் நடத்தல் (1தெச 2:12)

41. தேவனுக்குப் பிரியமாய் நடத்தல் (1தெச 4:1)

42. புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடத்தல் (1தெச 4:12)

43. அவர் நடந்தபடியே நடத்தல் (1யோவான் 2:6)

119 அதிகாரம்

44. அவருடைய கற்பனைகளின்படி நடத்தல் (2யோவான் 1:6)

45. சத்தியத்திலே நடத்தல் (3யோவான் 1:4)

பாக்கியவான்களின் குணாதிசயங்கள்

1. உத்தமமார்க்கமாய் நடக்கிறவர்கள் (சங் 119:1).
2. கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிறவர்கள் (சங் 119:1,3).
3. கர்த்தருடைய வசனத்தை கைக் கொள்ளுபவர்கள் (சங் 119:2, 4, 8, 17, 34, 57, 60, 63, 69, 88, 101, 106, 115).
4. கர்த்தரை முழு இருதயத்தோடு தேடுகிறவர்கள் (சங் 119:2, 10).
5. பாக்கியவான்கள் அநியாயம் செய்வதில்லை (சங் 119:3).
6. அவர்கள், இடைவிடாமல் கர்த்தரைத் துதிப்பார்கள் (சங் 119:7,164,171).
7. கர்த்தரின் பிரமாணங்களில் மன மகிழ்ச்சியாயிருப்பார்கள் (சங் 119:14, 16, 111).
8. கர்த்தருடைய வசனத்தை நம்பியிருப்பார்கள் (சங் 119:42).
9. சகல பொல்லாத வழிகளுக்கும் விலகியிருப்பார்கள் (சங் 119:101).
10. கர்த்தருக்குக் கீழ்படிய, தங்கள் இருதயத்தைச் சாய்ப்பார்கள் (சங் 119:112).
11. வீண் சிந்தனைகள் வெறுப்பார்கள் (சங் 119:113).
12. சகல பொய் வழிகளையும் வெறுப்பார்கள் (சங் 119:128).
13. பொய்யைப் பகைத்து அருவருப்பார்கள் (சங் 119:163).
14. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருப்பார்கள் (சங் 119:113, 140).
15. கர்த்தருடைய வார்த்தையில் பிரியமாயிருப்பார்கள் (சங் 119:139).
16. அவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு (சங் 119:165).
17. அவர்கள் இடறலடைய அனுமதிப்பதில்லை (சங் 119:165).
18. கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கிப்பார்கள் (சங் 119:46, 172).
19. கர்த்தரையும், அவருடைய வசனத்தையும் நம்பியிருப்பார்கள் (சங் 119:81,114).
20. தேவனுடைய கட்டளைகளைத் தியானிப்பார்கள் (சங் 119:15, 23, 48, 78, 148).
21. கர்த்தருக்குப் பயப்படுவார்கள் (சங் 119:38, 63, 74, 120).

மேலே கூறப்பட்டிருக்கிற வழிகளில் நடக்கிறவர்கள் "வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்" (வெளி 3:4) என்று கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

"அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு" - என்னும் வாக்கியம் இந்த சங்கீதத்தில் 22 தடவைகள் வந்திருக்கிறது (சங் 119:2,4,5, 8,17,33,34,44,57,60,63,69,88,100,101, 106,115, 129,134,136,145,146).

"அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்" - நாம் கர்த்தரைத் தேடவேண்டும். நமது பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும். ஜெபம் பண்ண வேண்டும். நாம் கிருபையின் காலத்தில் இருந்தாலும் கர்த்தரைத் தேடுவது மிகவும் அவசியம்.

கர்த்தரைத் தேடும் சத்தியம்

1. கர்த்தரால் கட்டளையிடப்பட்டது (உபா 4:29; 1நாளா 16:11; 2நாளா 14:4; ஏசா 55:6; ஆமோ 5:4-14; கொலோ 3:1).

119 அதிகாரம்

2. கர்த்தரைக் கண்டடைவதற்கு இடப்பட்ட கட்டளை (உபா 4:29; 1நாளா 28:9; 2நாளா 7:14; 2நாளா 15:2).

3. தொடர்ந்து கட்டளையிடப்படுகிறது (1நாளா 16:11).

4. ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான ஒரு வழியே கர்த்தரைத் தேடுதல் (எஸ்றா 8:22; சங் 34:9-10; மத் 6:33; மத் 7:7-11).

5. கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் வாழும் (சங் 69:32).

6. கர்த்தரின் சமுகத்தை நித்தமும் தேடுங்கள் (சங் 105:4).

7. கர்த்தரை முழு இருதயத்தோடு தேடுகிறவர்கள் பாக்கியவான்கள் (உபா 4:29; சங் 119:2; எபி 11:6).

2. பொருத்தனை செய்வதை தூண்டுகிறது - ஒரு கட்டளை - ஒரு விண்ணப்பம் - இரண்டு பொருத்தனைகள்

சங் 119:4 உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி நீர் கற்பித்தீர்.

சங் 119:5 உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளும்படி, என் நடைகள் ஸ்திரப்பட்டால் நலமாயிருக்கும்.

சங் 119:6 நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும் போது, வெட்கப்பட்டுப் போவதில்லை.

சங் 119:7 உம்முடைய நீதிநியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது, செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன்.

சங் 119:8 உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன்; முற்றிலும் என்னைக் கைவிடாதேயும்.

கர்த்தர் செய்திருக்கிற காரியங்கள்

1. அவருடைய கட்டளைகளை கைக் கொள்ளும்படி கட்டளையிட்டார் (சங் 119:4).

2. அவர் அகங்காரிகளை கடிந்து கொண்டார் (சங் 119:21).

3. ஜெபங்களுக்குச் செவி கொடுப்பார் (சங் 119:26).

4. அவருடைய வசனத்தை நம்பப் பண்ணுவார் (சங் 119:49).

5. அவர் உயிர்ப்பிக்கப் பண்ணுவார் (சங் 119:50,93).

6. கர்த்தர் தமது வசனத்தின் படி நன்றாய் நடத்துவார் (சங் 119:65,68).

7. அவர், மனுஷனை உண்டாக்கி, உருவாக்கினார் (சங் 119:73).

8. கர்த்தரின் நியாயத்தீர்ப்புகள் நீதியும், உண்மையுமானவைகள், அதன்படி, பாவத்தின் பலனாக உபத்திரவத்தை அனுமதிக்கிறார் (சங் 119:75; சங் 119:67)

9. பூமியை உறுதிப்படுத்தி, என்றைக்கும் நிலைத்திருக்கும்படிச் செய்தார் (சங் 119:90).

10. சத்துருக்களைவிட அதிக ஞான முள்ளவர்களாக்குவார் (சங் 119:90).

11. அவர் மேசியாவுக்குப் போதிக்கிறார் (சங் 119:102).

12. தமது பிரமாணங்களைவிட்டு வழிவிலகுகிற யாவரையும் மிதித்துப் போடுகிறார் (சங் 119:118).

13. அவருடைய நாமத்தை நேசிக்கிறவர்களுக்கு இரங்குவார் (சங் 119:132).

14. மனுஷர்களுக்கு சாட்சிகளைக் கட்டளையிடுகிறார் (சங் 119:138).

15. அவருடைய வசனம் என்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கும்படி செய்வார் (சங் 119:89,152).

119 அதிகாரம்

"நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும்போது, வெட்கப்பட்டுப் போவதில்லை" - நாம் கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும்போது நமது மனசாட்சி ஒருபோதும் வெட்கமடையாது (சங் 119:5-6).

சங்கீதக்காரனின் பொருத்தனைகள்

1. கர்த்தரை செம்மையான இருதயத்தால் துதிப்பேன் (சங் 119:7).
2. அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்வேன் (சங் 119:7).
3. அவருடைய கட்டளைகளைத் தியானிப்பேன் (சங் 119:15, 78).
4. அவருடைய வழிகளைக் கண்ணோக்குவேன் (சங் 119:15).
5. அவருடைய பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருப்பேன் (சங் 119:16).
6. அவருடைய வசனத்தை மறவாமலிருப்பேன் (சங் 119:16).
7. அவர் செய்த அதிசயங்களைத் தியானிப்பேன் (சங் 119:27).
8. அவருடைய கற்பனைகளின் வழியாக ஓடுவேன் (சங் 119:32).
9. பிரமாணங்களின் முடிவுபரியந்தத்தைக் காத்துக் கொள்ளுவேன் (சங் 119:33).
10. அவருடைய வேதத்தைப் பற்றிக் கொள்ளுவேன் (சங் 119:34).
11. வேதத்தை முழு இருதயத்தோடு கைக்கொள்ளுவேன் (சங் 119:34).
12. என்றைக்கும் அவருடைய வேதத்தைக் காத்துக் கொள்ளுவேன் (சங் 119:44).
13. விசாலத்திலே நடப்பேன் (சங் 119:45).
14. ராஜாக்களுக்கு முன்பாக, அவருடைய சாட்சிகளைக் குறித்துப் பேசுவேன் (சங் 119:46).
15. ராஜாக்களுக்கு முன்பாக பேசும்போது வெட்கப்படாதிருப்பேன் (சங் 119:46).
16. அவருடைய கற்பனைகளின்பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன் (சங் 119:47).
17. கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து கையெடுப்பேன் (சங் 119:48).
18. அவருடைய பிரமாணங்களைத் தியானிப்பேன் (சங் 119:48).
19. அவருடைய வசனங்களைக் கைக்கொள்ளுவேன் (சங் 119:57).
20. கர்த்தருடைய நீதியான நியாயத் தீர்ப்புகளினிமித்தம், அவரைத் துதிப்பேன் (சங் 119:62).
21. முழு இருதயத்தோடு, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன் (சங் 119:69,134).
22. ஒருபோதும் அவருடைய கட்டளைகளை மறவாமலிருப்பேன் (சங் 119:93).
23. கர்த்தருடைய சாட்சிகளைச் சந்திப்பேன் (சங் 119:95).
24. நான் இட்ட ஆணையைக் காத்துக் கொள்ளுவேன் (சங் 119:106).
25. அவருடைய நீதி நியாயங்களைக் காத்து நடப்பேன் (சங் 119:106)
26. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவேன் (சங் 119:115)
27. அவருடைய பிரமாணங்களின் பேரில் நோக்கமாயிருப்பேன் (சங் 119:117)
28. அவருடைய சாட்சிகளைக் காத்துக் கொள்ளுவேன் (சங் 119:146)
29. என் உதடுகள், அவருடைய துதியைப் பிரஸ்தாபப்படுத்தும் (சங் 119:171)
30. என் நாவு, அவருடைய வசனத்தை விவரித்துச் சொல்லும் (சங் 119:172)

119 அதிகாரம்

சங்கீதம் 119-இல் ஏறெடுக்கப்பட்டிருக்கிற விண்ணப்பங்கள்

1. முற்றிலும் என்னைக் கைவிடாதேயும் (சங் 119:8)
2. என்னை உமது கற்பனைகளை விட்டு வழிதப்பவிடாதேயும் (சங் 119:10)
3. உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்(சங் 119:12,26,64,68,124,135)
4. உமது அடியேனுக்கு அனுகூலமாயிரும் (சங் 119:17)
5. என் கண்களைத் திறந்தருளும் (சங் 119:18)
6. உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும் (சங் 119:19)
7. நிந்தையை என்னை விட்டகற்றும் (சங் 119:22)
8. அவமானத்தை என்னை விட்டகற்றும் (சங் 119:22)
9. உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் (சங் 119:25,107,154)
10. உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும் (சங் 119:27)
11. உமது வசனத்தின் படி என்னை எடுத்து நிறுத்தும் (சங் 119:28)
12. பொய் வழியை என்னை விட்டு விலக்கியருளும் (சங் 119:29)
13. உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யும் (சங் 119:29)
14. என்னை வெட்கத்திற்குட்படப் பண்ணாதேயும் (சங் 119:31)
15. உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும் (சங் 119:33)
16. எனக்கு உணர்வைத் தாரும் (சங் 119:34,73,125,144)
17. உமது கற்பனைகளின் பாதயில் என்னை நடத்தும் (சங் 119:35)
18. என் இருதயம், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும் (சங் 119:36)
19. பொருளாசைக்குச் சாராமல் இருக்கும்படி செய்யும் (சங் 119:36)
20. மாயையைப் பாராதபடி என் கண்களை விலக்கிவிடும் (சங் 119:37)
21. உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும் (சங் 119:37)
22. உமது வாக்கை, எனக்கு உறுதிப்படுத்தும் (சங் 119:38)
23. நான் அஞ்சுகிற நிந்தையை விலக்கியருளும் (சங் 119:39)
24. உமது நீதியால் என்னை உயிர்ப்பியும் (சங் 119:40)
25. உம்முடைய வாக்கின்படி, உமது தயவும் உமது இரட்சிப்பும் எனக்கு வருவதாக (சங் 119:41)
26. சத்தியவசனம் முற்றிலும் என் வாயினின்று நீங்க விடாதேயும் (சங் 119:43)
27. என்னை நம்பப்பண்ணின வசனத்தை எனக்காக நினைத்தருளும் (சங் 119:49)
28. உமது வாக்கின்படி எனக்கு இரங்கும் (சங் 119:58,132)
29. உத்தம நிதானிப்பை எனக்குப் போதித்தருளும் (சங் 119:66)
30. அறிவை எனக்குப் போதித்தருளும் (சங் 119:66)
31. உமது வாக்கின்படி, உமது கிருபை என்னைத் தேற்றுவதாக (சங் 119:76)

சங்கீதம் - தொகுப்புரை

119 அதிகாரம்

32. உமது இரக்கங்கள் எனக்குக் கிடைப்பதாக (சங் 119:77)

33. அகங்காரிகள் வெட்கப்பட்டுப் போவார்களாக (சங் 119:78)

34. உமக்குப் பயந்திருப்பவர்கள் என்னண்டைக்குத் திரும்புவார்களாக (சங் 119:79)

35. உமது சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள் என்னண்டைக்குத் திரும்புவார்களாக (சங் 119:79)

36. என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாயிருக்கக்கடவது (சங் 119:80)

37. என்னுடைய நாட்களை எனக்குச் சொல்லும் (சங் 119:84)

38. என்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு எப்பொழுது நியாயத்தீர்ப்பு செய்வீர் என்பதைச் சொல்லும் (சங் 119:84)

39. எனக்குச் சகாயம் பண்ணும் (சங் 119:86)

40. உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும் (சங் 119:88,159)

41. என்னை இரட்சியும் (சங் 119:94,146)

42. என் வாயின் உற்சாக பலிகளை அங்கீகரியும் (சங் 119:108)

43. உமது நியாயங்களை எனக்குப் போதித்தருளும் (சங் 119:108)

44. பொல்லாதவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள் (சங் 119:115)

45. உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும் (சங் 119:116)

46. என் நம்பிக்கை விருதாவாய்ப் போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும் (சங் 119:116)

47. என்னை ஆதரித்தருளும் (சங் 119:117)

48. என்னை ஒடுக்குகிறவர்களுக்கு என்னை ஒப்புக்கொடாதேயும் (சங் 119:121)

49. எனக்கு நன்மையாகத் துணையாக நில்லும் (சங் 119:122)

50. அகங்காரிகள் என்னையொடுக்க ஒட்டாதேயும் (சங் 119:122)

51. உமது கிருபையின்படியே நடத்தி உமது பிரமாணங்களை எனக்குப் போதியும் (சங் 119:124)

52. என்னை நோக்கிப்பாரும் (சங் 119:132)

53. உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தும் (சங் 119:133)

54. ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும் (சங் 119:133)

55. இடுக்கத்திற்கு என்னை விலக்கி விடுவித்தருளும் (சங் 119:134)

56. உமது முகத்தை என்மேல் பிரகாசிக்கப் பண்ணும் (சங் 119:135)

57. என் ஜெபத்தைக் கேளும் (சங் 119:145)

58. உம்முடைய கிருபையின்படி என் சத்தத்தைக் கேளும் (சங் 119:149)

59. உம்முடைய நியாயத்தின்படி என்னை உயிர்ப்பியும் (சங் 119:149,156)

60. என் உபத்திரவத்தைப் பாரும் (சங் 119:153)

61. என்னைவிடுவியும்(சங் 119:153,154,170)

62. எனக்காக வழக்காடி, என்னை மீட்டுக்கொள்ளும் (சங் 119:154)

63. இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன் (சங் 119:159)

64. என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக (சங் 119:169)

119 அதிகாரம்

65. உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும் (சங் 119:169)

66. என் விண்ணப்பம் உமது சந்நிதியில் வருவதாக (சங் 119:170)

67. உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக (சங் 119:173)

68. என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது (சங் 119:175)

69. உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாயிருப்பதாக (சங் 119:175)

இரண்டாவது பிரிவு - பேத்

தேவனுடைய வார்த்தையினால் சுத்தம் பண்ணுதல் - (எபே 5:26)

பொருளடக்கம்

1. சுத்திகரிக்கும் வல்லமை - (119:9)
2. சுத்திகரிப்பதின் ஐந்து இரகசியங்கள் - இரண்டு விண்ணப்பங்கள் - (119:10-14)
3. தேவனிடத்தில் பொருத்தனை செய்வதின் நான்கு அம்சம் - (119:15-16)

1. சுத்திகரிக்கும் வல்லமை

சங் 119:9 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே.

பாவத்தின்மீது ஜெயம் பெறுவதின் இரகசியங்கள்

1. கர்த்தருடைய வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் (சங் 119:9)
2. முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேட வேண்டும் (சங் 119:10)
3. கர்த்தருடைய வாக்கை இருதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் (சங் 119:11)
4. வேதத்திலுள்ள சத்தியங்களைப் பார்க்கும் படிக்கு கண்களைத் திறக்க வேண்டும் (சங் 119:18)
5. பொய் வழியை விட்டு விலகிட வேண்டும் (சங் 119:29)
6. இரட்சிப்பைப் பெற வேண்டும் (சங் 119:41)
7. கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (சங் 119:60)
8. கர்த்தருடைய வேதம் மன மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் (சங் 119:77,143)
9. கர்த்தருடைய வேதத்தைத் தியானிக்க வேண்டும் (சங் 119:97,99)
10. சகல பொல்லாத வழிகளுக்கும் கால்களை விலக்க வேண்டும் (சங் 119:101)
11. எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்க வேண்டும்
12. முடிவு பரியந்தம் இடைவிடாமல் கர்த்தருடைய பிரமாணங்களின்படி செய்ய இருதயத்தைச் சாய்க்க வேண்டும் (சங் 119:112)
13. வீண் சிந்தனைகளை வெறுக்க வேண்டும் (சங் 119:113)
14. பொய்யைப் பகைத்து அருவருக்க வேண்டும் (சங் 119:163)
15. கர்த்தருடைய வேதத்தை நேசிக்க வேண்டும் (சங் 119:163,165)
16. கர்த்தரைத் துதிக்க வேண்டும் (சங் 119:164)
17. இடறுவதற்கு எதையும் அனுமதிக்கக் கூடாது. (சங் 119:165; எபி 12:15)

119 அதிகாரம்

18. கர்த்தருடைய இரட்சிப்பிற்குக் காத்திருக்க வேண்டும் (சங் 119:166; ரோமர் 8:24)

2. சுத்திகரிப்பதின் ஐந்து இரகசியங்கள் - இரண்டு விண்ணப்பங்கள்

சங் 119:10 என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளைவிட்டு வழி தப்பவிடாதேயும்.

சங் 119:11 நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.

சங் 119:12 கர்த்தாவே, நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்.

சங் 119:13 உம்முடைய வாக்கின் நியாயத்தீர்ப்புகளையெல்லாம் என் உதடுகளால் விவரித்திருக்கிறேன்.

சங் 119:14 திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்.

முழு இருதயத்தோடு செய்ய வேண்டிய காரியங்கள்

1. கர்த்தரைத் தேடுதல் (சங் 119:2; 2நாளா 15:15)
2. கர்த்தரை முழு இருதயத்தோடு துதித்தல் (சங் 9:1; சங் 111:1)
3. சத்தியத்தைக் கைக்கொள்ளுதல் (சங் 119:34)
4. கர்த்தருடையத் தயவுக்காகக் கெஞ்சுதல் (சங் 119:58)
5. கட்டளைகளைக் கைக்கொள்ளுதல் (சங் 119:69)
6. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுதல் (சங் 119:145)
7. வழிவிலகிப் போனதிலிருந்து மீண்டு கர்த்தரிடம் திரும்புதல் (எரே 24:7)

சங்கீதக்காரரின் சாட்சி

1. என் முழு இருதயத்தோடு உம்மைத் தேடுகிறேன் (சங் 119:10)
2. உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்திருக்கிறேன் (சங் 119:11)
3. உம்முடைய நியாயத்தீர்ப்புகளையெல்லாம் விவரித்திருக்கிறேன் (சங் 119:13)
4. திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன் (சங் 119:14)
5. உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன் (சங் 119:15)
6. நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன் (சங் 119:22, 167-168)
7. பிரபுக்கள், எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள் (சங் 119:23)
8. உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன் (சங் 119:23)
9. என்வழியை நான் உமக்கு விவரிக்கிறேன் (சங் 119:26)
10. மெய் வழியை நான் தெரிந்து கொண்டேன் (சங் 119:30)
11. உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன் (சங் 119:30)
12. உமது சாட்சிகள் மேல் பற்றுதலாயிருக்கிறேன் (சங் 119:31)
13. உம்முடைய கட்டளைகளின் மேல் வாஞ்சையாயிருக்கிறேன் (சங் 119:40)
14. உம்முடைய நியாயத்தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறேன் (சங் 119:43)

சங்கீதம் - தொகுப்புரை

119 அதிகாரம்

15. உமது கற்பனைகளின் பேரில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன் (சங் 119:47-48)

16. நான் உமது வேதத்தை விட்டு விலகினதில்லை (சங் 119:51)

17. உமது நியாயத்தீர்ப்புகளை நான் நினைக்கிறேன் (சங் 119:52)

18. நான், என்னைத் தேற்றுகிறேன் (சங் 119:52)

19. உமது வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர் நிமித்தம் நடுக்கம் என்னைப் பிடித்தது (சங் 119:53)

20. உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின (சங் 119:54)

21. உமது நாமத்தை நினைக்கிறேன் (சங் 119:55)

22. உமது வேதத்தைக் கைக் கொள்ளுகிறேன் (சங் 119:55)

23. நான் உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன் (சங் 119:56,168)

24. நான், உமது வசனங்களை கைக் கொள்ளுவேன் (சங் 119:57)

25. உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன் (சங் 119:58)

26. என் வழிகளைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் (சங் 119:59)

27. என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன் (சங் 119:59)

28. உமது கற்பனைகளைக் கைக்கொள்ள நான் தாமதியாமல் தீவிரித்தேன் (சங் 119:60)

29. துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டன (சங் 119:61)

30. உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை (சங் 119:61,109)

31. உம்முடைய கற்பனைகளின் பேரில் நான் விசுவாசமாயிருக்கிறேன் (சங் 119:66)

32. உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன் (சங் 119:67)

33. அகங்காரிகள் எனக்கு விரோதமாய்ப் பொய்களைப் பிணைக்கிறார்கள் (சங் 119:69)

34. நான் உபத்திரவப்பட்டேன் (சங் 119:71)

35. உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி, என்னை உருவாக்கிற்று (சங் 119:73)

36. நான் உம்முடைய வசனத்திற்குக் காத்திருக்கிறேன் (சங் 119:74,81)

37. உம்முடைய நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்று அறிவேன் (சங் 119:75)

38. உண்மையின்படி என்னை உபத்திரவப் படுத்தினீரென்று அறிவேன் (சங் 119:75)

39. உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி (சங் 119:77)

40. உம்முடைய வேதத்திற்கு விரோதமாக அகங்காரிகள் எனக்குக் குழிகளை வெட்டினார்கள் (சங் 119:85)

41. நான், உமது கட்டளைகளை விட்டுவிடவில்லை (சங் 119:87)

42. உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன் (சங் 119:94)

43. சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன் (சங் 119:96)

44. உம்முடைய நீதிநியாயங்களைக் காத்து நடப்பேன் (சங் 119:106)

45. துன்மார்க்கர் எனக்குக் கண்ணி வைக்கிறார்கள் (சங் 119:110)

46. நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழி தவறேன் (சங் 119:110)

119 அதிகாரம்

47. உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக்கிறேன் (சங் 119:111)

48. உம்முடைய பிரமாணங்களின்படி செய்ய என் இருதயத்தைச் சாய்த்தேன் (சங் 119:112)

49. நியாயமும் நீதியும் செய்கிறேன் (சங் 119:121)

50. என் பக்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது (சங் 119:139)

51. இக்கட்டும், நெருக்கமும் என்னைப் பிடித்தது (சங் 119:143)

52. உம்முடைய சாட்சிகளை என்றென்றைக்கும் நிற்க ஸ்தாபித்தீர் என்பதை, அவைகளால் நான் நெடுநாளாய் அறிந்திருக்கிறேன் (சங் 119:152)

53. பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள் (சங் 119:161)

54. நான், உம்முடைய வேதத்தை நேசிக்கிறதினால், எனக்கு மிகுந்த சமாதானமுண்டு (சங் 119:165)

55. கர்த்தாவே, நான் உம்முடைய இரட்சிப்புக்கு காத்திருக்கிறேன் (சங் 119:166)

56. உம்முடைய கற்பனைகளின்படி செய்கிறேன் (சங் 119:166)

57. நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்து கொண்டேன் (சங் 119:173)

58. உம்முடைய இரட்சிப்பின் மேல் ஆவலாயிருக்கிறேன் (சங் 119:174)

59. காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப் போனேன் (சங் 119:176)

சங்கீதக்காரனின் பொருத்தனைகளுக்கும், விண்ணப்பங்களுக்கும் காரணங்கள்

1. நான், பாவஞ்செய்யமாட்டேன் (சங் 119:11)

2. நான் பிழைப்பேன் (சங் 119:17,77,116)

3. உமது வசனத்தைக் கைக்கொள்ளுவேன் (சங் 119:17)

4. உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்ப்பேன் (சங் 119:18)

5. நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுவேன் (சங் 119:22)

6. உமது அதிசயங்களைத் தியானிப்பேன் (சங் 119:27)

7. முடிவு பரியந்தம் வரை, உமது பிரமாணங்களைக் காத்து கொள்ளுவேன் (சங் 119:33-34)

8. உமது கற்பனைகளின் பாதையில் நான் பிரியமாயிருக்கிறேன் (சங் 119:35)

9. உம்முடைய நியாயத்தீர்ப்புகள் நல்லவைகள் (சங் 119:39)

10. உம்முடைய வசனத்தை நம்பியிருக்கிறேன் (சங் 119:42)

11. உம்முடைய நியாயத்தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறேன் (சங் 119:43)

12. என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக் கொள்ளுவேன் (சங் 119:44)

13. நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன் (சங் 119:45)

14. உமது நீதியான நியாயத் தீர்ப்புகளினிமித்தம் உம்மைத் துதிப்பேன் (சங் 119:62,164)

15. உம்முடைய கற்பனைகளின் பேரில் விசுவாசமாயிருக்கிறேன் (சங் 119:66)

16. உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன் (சங் 119:71,73)

119 அதிகாரம்

17. உம்முடைய வேதம் என் மன மகிழ்ச்சி (சங் 119:77)

18. நான் வெட்கப்பட்டுப் போகாதபடிக்கு, உமது பிரமாணங்களில் உத்தமமாயிருப்பேன் (சங் 119:80)

19. நான் உம்முடைய வாக்கின் சாட்சியைக் காத்து நடப்பேன் (சங் 119:88)

20. உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன் (சங் 119:94)

21. என் தேவனுடைய கற்பனைகளை நான் கைக்கொள்ளுவேன் (சங் 119:115)

22. என்னை ஆதரித்தருளும் (சங் 119:117)

23. எக்காலமும் உம்முடைய பிரமாணங்களின் பேரில் நோக்கமாயிருப்பேன் (சங் 119:117)

24. உம்முடைய சாட்சிகளை நான் அறிவேன் (சங் 119:125)

25. நான் உம்முடைய கட்டளைகளைக் காத்துக்கொள்ளுவேன் (சங் 119:134)

26. உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும் (சங் 119:144)

27. உமது வேதத்தை மறவேன் (சங் 119:153)

28. நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்து கொண்டேன் (சங் 119:173)

29. என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கும் (சங் 119:175)

30. உமது கற்பனைகளை நான் மறவேன் (சங் 119:176)

"உமக்கு விரோதமாக" - தேவனுடைய வார்த்தைக்கு மீறுவது தேவனுக்கு விரோதமான பாவம் (1யோவான் 3:4). பாவம் தேவனையும், மனுஷனையும் பிரிக்கிறது. தேவன் மனுஷனை நித்தியகாலமாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று சித்தமுள்ளவராக இருக்கிறார். மனுஷனுடைய பாவம் தேவனுடைய இந்தத் தெய்வீக சித்தத்தைப் பாதிக்கிறது. அத்துடன் மனுஷனுடைய ஆசீர்வாதங்களையும், அழித்துப் போடுகிறது. சிருஷ்டிகளை ஆளுகை செய்யும் அதிகாரத்தைக் கர்த்தர் மனுஷனுக்குக் கொடுத்திருந்தார். மனுஷனுடைய பாவத்தினால் எல்லா சிருஷ்டிகளுமே பாதிக்கப்படுகின்றன (சங் 8).

கர்த்தரை எவ்வாறு ஸ்தோத்தரிப்பது?

119-ஆவது சங்கீதத்தில் 176 வசனங்கள் உள்ளன. இவை 22 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிற்கும் 8 வசனங்கள் உள்ளன. மனுஷன் பாக்கியவானாக இருப்பதுபோல கர்த்தரும் ஸ்தோத்தரிக்கப்பட்டவராக இருக்கிறார். மனுஷன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போதும், கர்த்தருடைய பார்வையில் செம்மையாக நடக்கும்போதும், கர்த்தர் ஸ்தோத்தரிக்கப் படுகிறார். பாவத்தில் வீழ்ந்துபோன மனுஷன் மனந்திரும்பி, இரட்சிக்கப்படும்போது கர்த்தர் சந்தோஷப்படுகிறார்.

கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்பதற்குக் காரணங்கள்

119-ஆவது சங்கீதத்தில் 22 பிரிவுகளையும் தியானிக்கும்போது கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் (சந்தோஷப்படுகிறார்) என்பதற்கு நாம் 22 காரணங்களைக் காண்கிறோம்.

119 அதிகாரம்

இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கிறபடி மனுஷர் நடக்கும்போது கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்

1. சங்கீதம் 119 - 1-ஆவது பிரிவு (சங் 119:1-8) கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிறவர்கள் உத்தம மார்க்கத்தாராக இருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் தேடுவார்கள்.

2. சங்கீதம் 119 - 2-ஆவது பிரிவு (சங் 119:9-16) வாலிபன் கர்த்தருடைய வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளும்போது அவன் தன் வழியைச் சுத்தம் பண்ணுகிறான்.

3. சங்கீதம் 119 - 3-ஆவது பிரிவு (சங் 119:17-24) கர்த்தர் தமது அடியானுக்கு அனுகூலமாக இருக்கும் போது அவன் பிழைத்து அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனுடைய கண்களைத் திறக்கும்போது அவன் கர்த்தருடைய வேதத்திலுள்ள அதிசயங்களை யெல்லாம் பார்ப்பான்.

4. சங்கீதம் 119 - 4-ஆவது பிரிவு (சங் 119:25-32) மனுஷனுடைய ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. கர்த்தருடைய வசனமே மனுஷனை உயிர்ப்பிக்கும்.

5. சங்கீதம் 119 - 5-ஆவது பிரிவு (சங் 119:33-40) தம்முடைய பிரமாணங்களின் வழியை கர்த்தர் மனுஷனுக்குப் போதிக்கும்போது அவன் முடிவுபரியந்தம் அதைக் காத்துக் கொள்வான். அவர் மனுஷனுக்கு உணர்வைத் தரும்பொழுது அவன் கர்த்தருடைய வேதத்தைப் பற்றிக் கொள்வான். தன் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவான்.

6. சங்கீதம் 119 - 6-ஆவது பிரிவு (சங் 119:41-48) மனுஷனுக்கு கர்த்தருடைய தயவும், இரட்சிப்பும் வரும்போது அவன் அவருடைய வசனத்தை நம்புவான்.

7. சங்கீதம் 119 - 7 - ஆவது பிரிவு (சங் 119:49-56) கர்த்தருடைய வசனம் மனுஷனுக்கு ஆறுதலாக இருக்கிறது. அவருடைய வாக்கு மனுஷனை உயிர்ப்பிக்கிறது.

8. சங்கீதம் 119 - 8 - ஆவது பிரிவு (சங் 119:57-64) கர்த்தரே மனுஷனுடைய பங்கு. அவன் கர்த்தருடைய வசனங்களைக் கைக்கொள்ளுகிறான். அவருடைய தயவிற்காக கெஞ்சுகிறான்.

9. சங்கீதம் 119 - 9 - ஆவது பிரிவு (சங் 119:65-72) கர்த்தர் தமது அடியானை தமது வசனத்தின்படி நடத்துகிறார். அவனுக்கு உத்தம நிதானிப்பையும், அறிவையும் போதிக்கிறார். அவன் கர்த்தருடைய கற்பனைகளின் பேரில் விசுவாசமாயிருக்கிறான்.

10. சங்கீதம் 119 - 10 - ஆவது பிரிவு (சங் 119:73-80) கர்த்தருடைய கரங்கள் மனுஷனை உண்டாக்கி, உருவாக்கிற்று. கர்த்தர் மனுஷனை உணர்வுள்ளவனாக்கும்போது அவன் அவருடைய கற்பனைகளைக் கற்றுக் கொள்கிறான்.

11. சங்கீதம் 119 - 11-ஆவது பிரிவு (சங் 119:81-88) கர்த்தருடைய இரட்சிப்பிற்கு மனுஷனுடைய ஆத்துமா தவிக்கிறது. அவருடைய வசனத்திற்காக மனுஷன் காத்திருக்கிறான்.

12. சங்கீதம் 119 - 12 - ஆவது பிரிவு (சங் 119:89-96) கர்த்தருடைய வசனம் வானங்களில் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது. அவருடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கிறது. அவர் பூமியை உறுதிப்படுத்தினார். அது நிலைத்திருக்கிறது.

119 அதிகாரம்

13. சங்கீதம் 119 - 13 - ஆவது பிரிவு (சங் 119:97-104) கர்த்தருடைய வேதத்தில் மனுஷன் பிரியமாயிருக்கிறான். நாள் முழுவதும் அதுவே அவனுடைய தியானம்.

14. சங்கீதம் 119 - 14 - ஆவது பிரிவு (சங் 119:105-112) கர்த்தருடைய வசனம் மனுஷனுடைய கால்களுக்கு தீபமும், அவனுடைய பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

15. சங்கீதம் 119 - 15 - ஆவது பிரிவு (சங் 119:113-120) மனுஷன் கர்த்தருடைய வேதத்தில் பிரியப்படுகிறான். அவருடைய வசனத்திற்குக் காத்திருக்கிறான். கர்த்தரே மனுஷனுடைய மறைவிடமும், கேடகமுமாயிருக்கிறார்.

16. சங்கீதம் 119 - 16 - ஆவது பிரிவு (சங் 119:121-128) மனுஷன் நீதியும், நியாயமும் செய்கிறான். கர்த்தருடைய இரட்சிப்பிற்கும், அவருடைய நீதியின் வார்த்தைக்கும் காத்திருக்கிறான்.

17. சங்கீதம் 119 - 17 - ஆவது பிரிவு (சங் 119:129-136) மனுஷனுடைய ஆத்துமா கர்த்தருடைய சாட்சிகளைக் கைக்கொள்கிறது. அவருடைய கற்பனைகளை மனுஷன் வாஞ்சிக்கிறான். அவைகளுக்காக ஏங்குகிறான்.

18. சங்கீதம் 119 - 18 - ஆவது பிரிவு (சங் 119:137-144) கர்த்தருடைய நியாயத் தீர்ப்புக்கள் செம்மையானவைகள். அவருடைய சாட்சிகள் நீதியும், உண்மையுமானவைகள்.

19. சங்கீதம் 119 - 19 - ஆவது பிரிவு (சங் 119:145-152) மனுஷன் கர்த்தரை முழு இருதயத்தோடு கூப்பிடுகிறான். அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்கிறான். அவருடைய சாட்சிகளைக் காத்துக் கொள்ளுகிறான்.

20. சங்கீதம் 119 - 20 - ஆவது பிரிவு (சங் 119:153-160) மனுஷன் கர்த்தருடைய வேதத்தை மறக்கமாட்டான். தன்னை விடுவிக்குமாறு கர்த்தரிடம் கெஞ்சுகிறான்.

21. சங்கீதம் 119 - 21 - ஆவது பிரிவு (சங் 119:161-168) மனுஷனுடைய இருதயம் கர்த்தருடைய வசனத்திற்காக பயப்படுகிறது. அவருடைய வார்த்தையின் பேரில் மகிழுகிறான்.

22 சங்கீதம் 119 - 22 - ஆவது பிரிவு (சங் 119:169-176) கர்த்தர் தமது வார்த்தையின்படி தன்னை விடுவித்தருளுமாறு விண்ணப்பம் பண்ணுகிறான். கர்த்தருடைய கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள். மனுஷனுடைய நாவு அவருடைய வசனத்தை விவரித்துச்சொல்லும்.

நமக்கு போதிக்குமாறு நாம் விண்ணப்பம் பண்ணவேண்டிய காரியங்கள்

1. நாம் மவுனமாயிருக்க வேண்டும் (யோபு 6:24)
2. கர்த்தருக்கு, நாம் சொல்லத் தக்கதை எங்களுக்குப் போதியும் (யோபு 37:19)
3. உம்முடைய பாதைகள் (சங் 25:4)
4. உம்முடைய சத்தியம் (சங் 25:5)
5. உமது வழி (சங் 27:11; சங் 86:11)
6. எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் (சங் 90:12)
7. உம்முடைய பிரமாணங்கள் (6தடவைகள்)(சங் 119:12, 26, 64, 68, 124, 135)
8. உமது பிரமாணங்களின் வழி (சங் 119:33)
9. நியாயங்கள் (சங் 119:66,108)
10. அறிவு (சங் 119:66)

119 அதிகாரம்

11. உமக்குப் பிரியமானது (சங் 143:10)

12. ஜெபம் பண்ணப் போதியும் (லூக்கா 11:1)

யாருக்குப் போதிப்பதாக கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறார்

1. பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார் (சங் 25:8)
2. சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார் (சங் 25:9)
3. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார் (சங் 25:12)
4. கர்த்தர், நாம் நடக்கவேண்டிய வழியைப் போதிப்பார் (சங் 32:6-8)

யார் போதிக்க வேண்டும்?

1. தாய் தகப்பன் (உபா 4:9-10; உபா 6:7; உபா 11:19)
2. ஆசாரியர்கள் (உபா 24:8)
3. லேவியர்கள் (உபா 24:8)
4. தீர்க்கதரிசிகள் (1சாமு 12:23)
5. சகல கிறிஸ்தவர்கள் (மத் 28:19-20; கொலோ 3:16)
6. பரிசுத்த ஆவியானவர் (லூக்கா 12:12; யோவான் 14:26; 1கொரி 2:13)
7. போதகர்கள், கண்காணியானவன் (1கொரி 12:28-29; எபே 4:11; 1தீமோ 3:2)

"உம்முடைய வாக்கின் நியாயத் தீர்ப்புகளையெல்லாம் என் உதடுகளால் விவரித்திருக்கிறேன்" - இந்த சங்கீதத்தின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. அவர் ஒரு போதகர். கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கூறுகிறவர் என்பது தெளிவு (சங் 119:13,26,46).

"திரளான செல்வத்தில் களிகூருவதுபோல" - சாதாரண மனுஷன் செல்வத்தில் களிகூருவதுபோல சங்கீதக்காரன் கர்த்தருடைய சாட்சியில் களிகூருகிறான். இவனுடைய களிகூருதல் மிகுதியாகவே இருக்கும்.

3. தேவனிடத்தில் பொருத்தனை செய்வதின் நான்கு அம்சம்

சங் 119:15 உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.

சங் 119:16 உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்.

சங்கீதக்காரனையும், வசனத்தையும் பற்றிய காரியங்கள்

1. சங்கீதக்காரன் கர்த்தருடைய வேதத்தின்படி நடப்பான் (சங் 119:1,3)
2. கற்பனைகளைக் கைக்கொள்ளுவான் (சங் 19:22, 55, 56, 60, 67, 158, 166, 167, 168)
3. நியாயங்கள் மேல் வாஞ்சையாய் இருப்பான் (சங் 119:5,20,123,131,157)
4. கர்த்தருடைய வழிகளைக் கண்ணோக்குவான் (சங் 119:6,15)
5. நீதிநியாயங்களைக் கற்றுக் கொள்ளுவான் (சங் 119:7)
6. தன் முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேடுவான் (சங் 119:10,133)
7. அவருடைய வாக்கைத் தன் இருதயத்தில் வைத்திருப்பான் (சங் 119:11)
8. நியாயத் தீர்ப்புகளையெல்லாம் பிரசங்கிப்பான் (சங் 119:13,26,46,172)
9. அவருடைய சாட்சிகளின் வழியில் களிகூருவான் (சங் 119:14,16,24,47, 70,77,92, 111,143, 163,174)
10. கர்த்தருடைய கட்டளைகளைத் தியானிப்பான்(சங் 119:15,23,48,78,148)

சங்கீதம் - தொகுப்புரை

119 அதிகாரம்

11. அவருடைய நியாயத்தீர்ப்புகளை நினைத்திருப்பான் (சங் 119:16,52, 61, 83, 109,141,153,176)

12. கர்த்தருடைய நியாயங்களைத் தனக்கு போதித்தருளுமாறு ஜெபிப்பான் (சங் 119:18, 27, 73, 108, 124, 125, 135,169)

13. அவருடைய சாட்சிகள் அவனுக்கு ஆலோசனைக்காரராயிருக்கும் (சங் 119:24)

14. வசனத்தின்படி தன்னை எடுத்து நிறுத்துமாறு ஜெபிப்பான் (சங் 119:28)

15. மெய்வழியைத் தெரிந்து கொள்கிறான் (சங் 119:30,173)

16. கர்த்தருடைய சாட்சிகள் மேல் பற்றுதலாயிருக்கிறான் (சங் 119:31,51, 87,93, 110,157)

17. அவருடைய நீதிநியாயங்களின்படி நடப்பான் (சங் 119:32-36,59, 69, 106, 112,115,117,134, 145,146)

18. கர்த்தருடைய வழிகளில், தன்னை உயிர்ப்பிக்குமாறு வேண்டுவான் (சங் 119:37,40,50,107,149,154, 156,159)

19. கர்த்தருடைய வாக்கைத், தனக்கு உறுதிப்படுத்தும் என்று வேண்டிக் கொள்ளுவான் (சங் 119:38,175)

20. அவருடைய இரட்சிப்பு வேண்டுமென்று ஜெபிப்பான் (சங் 119:41,170)

21. அவருடைய வசனத்தை நம்பியிருக்கிறான் (சங் 119:42)

22. அவருடைய நியாயத்தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறான் (சங் 119:43,49, 74,81,114,147)

23. அவருடைய கட்டளைகளை ஆராய்கிறான் (சங் 119:45,94)

24. கற்பனைகளின் பேரில் பிரியமாயிருக்கிறான் (சங் 119:47-48, 113,119,127,140,159,163,167)

25. துன்மார்க்கர் நிமித்தம் நடுக்கத்தினால் பிடித்துக் கொள்ளப்பட்டான் (சங் 119:53)

26. கர்த்தருடைய பிரமாணங்கள் கீதங்களாயின (சங் 119:54)

27. அவருடைய தயவுக்காகக் கெஞ்சுகிறான் (சங் 119:58)

28. நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம் அவரைத் துதிப்பான் (சங் 119:62)

29. கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் அவன் தோழன் (சங் 119:63)

30. கர்த்தரின் வசனத்தின்படி நன்றாய் நடத்தினான் என்று சாட்சி சொல்லுவான் (சங் 119:65)

31. கற்பனைகளின் பேரில் விசுவாசமாயிருப்பான் (சங் 119:66)

32. பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளகிறதினிமித்தம் உபத்திரவப் பட்டான் (சங் 119:71)

33. பொன், வெள்ளியைப் பார்க்கிலும் கர்த்தருடைய வேதமே செம்மையானது (சங் 119:14,72,127)

34. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளது (சங் 119:75,128)

35. கர்த்தர், தமது வாக்கின்படி கிருபையினால் தேற்றுகிறார் (சங் 119:76)

36. பிரமாணங்களில் உத்தமமாயிருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறான் (சங் 119:80)

37. கர்த்தருடைய வாக்கின்மேல் நோக்கமாயிருக்கிறான் (சங் 119:82, 123,131)

38. அவருடைய கற்பனைகளெல்லாம் உண்மையாயிருக்கிறது(சங் 119:86,138)

119 அதிகாரம்

39. கர்த்தருடைய வசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது (சங் 119:89,160)

40. கட்டளைகளை மறக்காமல் இருப்பதினால், அவைகள் உயிர்ப்பிக்கும் (சங் 119:93)

41. அவருடைய சாட்சிகளை சிந்தித்துக் கொண்டிருக்கிறான் (சங் 119:95)

42. வசனமானது, கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங் 119:105,130)

43. சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக்கிறான் (சங் 119:111)

44. தான் பிழைப்பதற்கு, கர்த்தருடைய வார்த்தையின்படி ஆதரித்தருளும் என்று வேண்டுகிறான் (சங் 119:116-117)

45. பிரமாணங்களை விட்டு விலகுகிற யாவரையும் கர்த்தர் மிதித்துப்போடுவார் (சங் 119:118,126)

46. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குப் பயப்படுகிறான் (சங் 119:120)

47. கர்த்தருடைய சாட்சிகள் அதிசயமானவைகள் (சங் 119:129)

48. கர்த்தருடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளதாக்கும் (சங் 119:130)

49. வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடி, அவன் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது (சங் 119:136,158)

50. கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள் (சங் 119:137)

51. அவர் கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும், மகா உண்மையுமானவைகள் (சங் 119:138,144,172)

52. கர்த்தருடைய வசனம் சமூலமும் சத்தியம் (சங் 119:160)

53. அவனுடைய சத்துருக்கள் அவனை மறந்தபடியால், அவன் பக்திவைராக்கியம் அவனைப் பட்சிக்கிறது (சங் 119:139)

54. அவருடைய வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது (சங் 119:140)

55. அவருடைய வேதம் சத்தியம் (சங் 119:142,151)

56. பாவிகள் வேதத்திற்குத் தூரமாயிருக்கிறார்கள்(சங் 119:150,155)

57. கர்த்தருடைய சாட்சிகளை நெடுநாளாய் அறிந்திருக்கிறான் (சங் 119:152)

58. கர்த்தருடைய வசனத்திற்கே பயப்படுகிறான் (சங் 119:161)

59. நீதிநியாயங்களினிமித்தம் கர்த்தரைத் துதிக்கிறான் (சங் 119:164,171)

60. கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறதினால் அவனுக்கு மிகுந்த சமாதானமுண்டு (சங் 119:165)

61. கர்த்தருடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறான் (சங் 119:174)

62. நியாயத்தீர்ப்புகள் அவனுக்கு உதவியாயிருக்கும் (சங் 119:175)

மூன்றாவது பிரிவு - கிமெல்

தேவனுடைய வார்த்தை தெளிவுபடுத்துகிறது - (சங் 19:8)

பொருளடக்கம்

1. ஜெபமும் தெளிவடைவதற்கு தாகமும் - நான்கு விண்ணப்பங்கள் - (119:17-22)
2. தெளிவுபெறுவதின் மூன்று இரகசியங்கள் - (119:23-24)

119 அதிகாரம்

1. ஜெபமும் தெளிவடைவதற்கு தாகமும் - நான்கு விண்ணப்பங்கள்

சங் 119:17 உமது அடியேனுக்கு அனுகூலமாயிரும்; அப்பொழுது நான் பிழைத்து, உமது வசனத்தைக் கைக்கொள்ளுவேன்.

சங் 119:18 உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

சங் 119:19 பூமியிலே நான் பரதேசி; உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்.

சங் 119:20 உமது நியாயங்கள்மேல் என் ஆத்துமா எக்காலமும் வைத்திருக்கிற வாஞ்சையினால் தொய்ந்துபோகிறது.

சங் 119:21 உமது கற்பனைகளை விட்டு வழிவிலகின சபிக்கப்பட்ட அகங்காரிகளை நீர் கடிந்துகொள்ளுகிறீர்.

சங் 119:22 நிந்தையையும் அவமானத்தையும் என்னை விட்டகற்றும்; நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன்.

அனுகூலமாயிரு (Deal) - גָּמַל - gaw-mal' - 1580

வினைச்சொல் - சரிக்கட்டு, செய், நன்மைசெய், பதில்செய், வருவித்துக் கொள், நிறைவேற்று, கைகொள், பதிலளி, உபகாரம் செய் **(confer benefit upon)** - *(சங் 119:17; சங் 13:6; சங் 116:7; சங் 142:7)*

திற (Open) - גָּלָה - gaw-law' – 1540

வினைச்சொல் - வெளிப்படுத்து, தோன்று, அற்றுப்போ, நீங்கு, திற, அறிவி, பிரசித்தம்பண்ணு, காண்பி, உரி, விலக்கு, கழற்றிப்போடு, நிர்வாணப்படுத்து, வெறுமையாயிரு, **(unveil; uncover; remove that which hinders sight)** *(சங் 119:18; எண் 22:31; எரே 20:12)*

"பூமியிலே நான் பரதேசி" - இந்த பூமியில் அந்நிய தேசத்தான் ஒருவன் தங்கியிருப்பது போன்று தங்கியிருத்தல்.

"உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்" - கர்த்தர் எப்போதுமே தம்மைப் பற்றிய வெளிப்பாடுகளை எளிமையாக, தெளிவாக வெளிப்படுத்த வேண்டுமென்றே விரும்புகிறார். நாம் புரிந்து கொள்ளும் விதத்தில் தமது கற்பனைகளை நமக்கு எளிமையாக்கவே விரும்புகிறார். தமது கற்பனைகளை அவர் மறைப்பார் என்பது சந்தேகமே. *(ஏசா 28:9,13; மத் 13:15-16; 1கொரி 1:18-31; 1கொரி 2:10-16; 2கொரி 4:4; 2தீமோ 3:15-16; தீத்து 2:11-14)*.

"உமது நியாயங்கள்மேல் என் ஆத்துமா எக்காலமும் வைத்திருக்கிற வாஞ்சையினால் தொய்ந்துபோகிறது" - சங்கீதக்காரன் நீதியின்மேல் வாஞ்சையாக இருக்கிறான். அந்த வாஞ்சை அதிகரிப்பதினால் பல சமயங்களில் அவன் ஏமாற்றமடைந்து மிகுந்த துயரமடைகிறான். அவனுடைய ஆத்துமாகூட பல வேளைகளில் எதிர்பார்ப்பதினால் தொய்ந்து போகிறது. *(மத் 5:6)*

வழிவிலகு (err) சங் 119:21 שָׁגָה - shaw-gaw' - 7686

வினைச்சொல் - தவறு, தப்பிநட, வழிதப்பிப்போ, மதிமயங்கி, மோசம் போக்கு, வழி தப்பச்செய்கிறவன், தப்பிதஞ்செய், மயங்கியிரு, மயங்கிப்போ, சிதறத்திரி, பிழைசெய்தவன், வழிதப்பி விடு, வழிவிலகு, பொல்லாத வழியிலே நடத்து **(erring willfully through passion or wine; to go astray or wander)** *(சங் 119:10, சங் 119:21,118, லேவி 4:13, எண் 15:22, எண் 15:30; சங் 119:21)*.

119 அதிகாரம்

2. தெளிவுப்பெறுவதின் மூன்று இரகசியங்கள்

சங் 119:23 பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோதமாய்ப் பேசிக் கொள்ளுகிறார்கள்; உமது அடியேனோ, உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன்.

சங் 119:24 உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக் காரருமாயிருக்கிறது.

மற்றவர்களோடு சங்கீதக்காரனின் அனுபவங்கள்

1. பிரபுக்கள் காரணமில்லாமல் சங்கீதக்காரனுக்கு விரோதமாகப் பேசி துன்புறுத்துகிறார்கள் (சங் 119:23,161)
2. மற்றவர்களின் நிந்தையினாலும் அவமானப்படுத்துதலாலும் மிகவும் துன்பப்படுகிறான் (சங் 119:22,39,42)
3. ராஜாக்களுக்கு முன்பாக, கர்த்தருடைய சாட்சிகளைக் குறித்துப் பேசுவான் (சங் 119:46)
4. அகந்தைக்காரர் அவனை மிகவும் பரியாசம் பண்ணுகிறார்கள் (சங் 119:51)
5. கர்த்தருடைய வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர் நிமித்தம் நடுக்கம் அவனைப் பிடித்தது (சங் 119:21,53,126,139,150)
6. துன்மார்க்கரின் கூட்டம் அவனைக் கொள்ளையிட்டது (சங் 119:61)
7. கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் அவன் தோழன் (சங் 119:63)
8. அகங்காரிகள் அவனுக்கு விரோதமாய்ப் பொய்யைப் பிணைக்கிறார்கள் (சங் 119:69)
9. கர்த்தருடைய வசனத்திற்குக் காத்திருக்கிற படியால், கர்த்தருக்குப் பயந்தவர்கள் அவனைக் கண்டு சந்தோஷப்படுவார்கள் (சங் 119:74)
10. அகங்காரிகள் அவனைப் பொய்களினால் கெடுக்கப் பார்க்கிறார்கள் (சங் 119:78)
11. அவனைத் துன்பப்படுத்துகிறார்கள் (சங் 119:84)
12. அகங்காரிகள் அவனுக்குக் குழிகளை வெட்டுகிறார்கள் (சங் 119:85)
13. அநியாயமாய் அவனைத் துன்பப்படுத்துகிறார்கள் (சங் 119:86)
14. துன்மார்க்கர்கள், அவனைப் பூமியிலிராமல் நீக்கிவிடச் சற்றே தப்பிற்று (சங் 119:87)
15. துன்மார்க்கர் அவனை அழிக்கக் காத்திருக்கிறார்கள் (சங் 119:95)
16. துன்மார்க்கர் கண்ணி வைக்கிறார்கள் (சங் 119:110)
17. பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் யாவரையும் மிதித்துப்போடுவதைப் பார்க்கிறான் (சங் 119:118)
18. பிரமாணத்தைவிட்டு விலகுகிற அனைவருடைய உபாயம் வெறும் பொய் (சங் 119:118)
19. அகங்காரிகள் அவனை ஒடுக்குகிறார்கள் (சங் 119:121-122,134)
20. இரட்சிப்புக்கு துன்மார்க்கர்கள் தூரமாயிருப்பதைப் பார்க்கிறான் (சங் 119:155)
21. அவனைத் துன்பப்படுத்துகிறவர்களும், விரோதிக்கிறவர்களும் அநேகர் (சங் 119:157)
22. வசனத்தைக் காத்துக்கொள்ளாத துரோகிகளைக் காணும்போது அருவருப்படைகிறான் (சங் 119:158)

ஆலோசனைக்காரர் (counsellors) - אֱנוֹשׁ - en-oshe' – 582

119 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - மனுஷர், சகோதரர், ஜனம், ஊரார், ஆட்கள், கூட்டம், புருஷர், ஆண், மனிதர் (men)

நான்காவது பிரிவு - டாலெத்

தேவனுடைய வார்த்தையின் உறுதிப்படுத்தும் வல்லமை - (சங் 1:2-3)

பொருளடக்கம்

1. தேவனுடைய வார்த்தையைப்பற்றி நான்கு விண்ணப்பங்கள் - (119:25-28)
2. மூன்று விண்ணப்பங்கள் - சாட்சியும் பொருத்தனையும் - (119:29-32)

1. தேவனுடைய வார்த்தையைப் பற்றி நான்கு விண்ணப்பங்கள்

சங் 119:25 என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது; உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்.

சங் 119:26 என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவிகொடுத்தீர்; உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

சங் 119:27 உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும்; அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன்.

சங் 119:28 சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது; உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்.

"என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது" - மிகுந்த மனத் தாழ்மையையும், வருத்தத்தையும் குறிக்கும் எபிரெய வழக்குச் சொல். (1சாமு 2:8; சங் 44:25; சங் 72:9; சங் 113:7; மீகா 7:17). இந்த வாக்கியம் மரணத்தையும் குறிக்கும் வழக்குச் சொல்லாகும். (சங் 18:42; சங் 30:9)

"உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" - என்னை ஜீவனோடு காத்துக்கொள்ளும். மண்ணுக்குத் திரும்பாதவாறு என்னைப் பாதுகாத்துக் கொள்ளும். இந்த சங்கீதத்தில் என்னை உயிர்ப்பியும் என்னும் விண்ணப்பம் 9 முறை ஏறெடுக்கப்பட்டிருக்கிறது. (சங் 119:25,37,40, 88,107,149,154,156,159) இரண்டு முறை இது சத்தியத்தைக் குறித்த சாட்சியாகும். (சங் 119:50,93)

"சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது" - (யோபு 16:20).

2. மூன்று விண்ணப்பங்கள் - சாட்சியும் பொருத்தனையும்

சங் 119:29 பொய்வழியை என்னைவிட்டு விலக்கி, உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யும்.

சங் 119:30 மெய்வழியை நான் தெரிந்து கொண்டு, உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன்.

சங் 119:31 உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன்; கர்த்தாவே, என்னை வெட்கத்திற்குட்படப் பண்ணாதேயும்.

சங் 119:32 நீர் என் இருதயத்தை விசாலமாக்கும்போது, நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன்.

"பொய்வழி" சத்தியத்திற்குப் புறம்பாக எப்போதும் பொய் பேசுவது. மெய்வழிக்கு எதிரானது பொய்வழி (சங் 119:30).

"உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன்" - உமது சாட்சியைப் பற்றிக்கொண்டிருக்கிறேன். உமது சாட்சியில் நான் ஒன்றாகக் கலந்து விட்டேன்.

119 அதிகாரம்

"நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன்" - பொய்வழியை என்னை விட்டு நீக்கி, மெய் வழியை எனக்குள் வைக்கும்போது நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன். என்னுடைய வழிகளில் தடைகள் எதுவும் வராதவாறு காத்தருளும்.

விசாலமாக்கு (enlarge) רָחַב - raw-khab' - 7337

வினைச்சொல் - திறந்திரு, பூரி, அகலம், இடம் உண்டாக்கு, விசாலமுண்டாக்கு, பெருகு, விஸ்தாரமாக்கு, விரிவாக்கு, விரிவாயத்திற, முழு, அகலமாக்கு, முழுமொட்டையாயிரு (to broaden; make room) கர்த்தருடைய சத்தியத்திற்கும் அவருடைய கற்பனைகளுக்கும் இடம் உண்டாக்க வேண்டும்.

ஐந்தாவது பிரிவு - எ

தேவனுடைய வார்த்தையின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபம் - (யோவான் 17:17)

பொருளடக்கம்

1. உதவிக்காக நான்கு விண்ணப்பங்கள், வாத்தைக்குக் கீழ்படியவேண்டுமென்று இரண்டு பொருத்தனைகள் - (119:33-36)

2. மேற்கொள்வதற்கு வல்லமை வேண்டும் என்று ஐந்து விண்ணப்பங்கள் - (119:37-40)

1. உதவிக்காக நான்கு விண்ணப்பங்கள், வாத்தைக்குக் கீழ்படிய வேண்டுமென்று இரண்டு பொருத்தனைகள்

சங் 119:33 கர்த்தாவே, உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும்; முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக்கொள்ளுவேன்.

சங் 119:34 எனக்கு உணர்வைத் தாரும்; அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்.

சங் 119:35 உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்; நான் அதில் பிரியமாயிருக்கிறேன்.

சங் 119:36 என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்.

"முடிவுபரியந்தம்" - சங்கீதக்காரன் தேவனுடைய ஞானத்தைத் தேடுகிறான். நல்ல முடிவை நாடுகிறான். மனுஷனுக்கும் தேவனுக்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளை நேர்த்தியாகச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறான் (சங் 119:33-34).

"என் முழு இருதயத்தோடு" - நமது முழு இருதயத்தோடு நாம் செய்யும் ஆராதனையை மட்டுமே கர்த்தர் அங்கீகரிப்பார் (மத் 22:37).

"என் இருதயம் பொருளாசையைச் சாராமல்" - நாம் பொருளாசையைச் சார்ந்திருக்கக்கூடாது. எல்லா சிருஷ்டிகளுக்கும் தேவன் கொடுக்கும் பராமரிப்பில் நாம் திருப்தியுடன் இருக்க வேண்டும் (லூக்கா 12:15).

2. மேற்கொள்வதற்கு வல்லமை வேண்டும் என்று ஐந்து விண்ணப்பங்கள்

சங் 119:37 மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்.

சங் 119:38 உமக்குப் பயப்படுகிறதற்கு ஏற்ற உமது வாக்கை உமது அடியேனுக்கு உறுதிப்படுத்தும்.

சங் 119:39 நான் அஞ்சுகிற நிந்தையை விலக்கியருளும்; உம்முடைய நியாயத் தீர்ப்புகள் நல்லவைகள்.

சங் 119:40 இதோ, உம்முடைய கட்டளைகள் மேல் வாஞ்சையாயிருக்கிறேன்; உமது நீதியால் என்னை உயிர்ப்பியும்.

119 அதிகாரம்

"மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" - இது சங்கீதக்காரனின் மாதிரி ஜெபம். உலகம் இன்று மாயையைப் பார்க்க விரும்புகிறது. மாயையை நோக்கி தன் கண்களைத் திருப்புகிறது.

நிந்தையின் வாக்கியங்கள்

1. என் ஆத்துமா தொய்ந்து போகிறது (சங் 119:20)
2. நான் நிந்தையினாலும், அவமானத்தினாலும் அவதிப்படுகிறேன் (சங் 119:22)
3. என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது (சங் 119:25)
4. சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்து போகிறது (சங் 119:28)
5. நான் நிந்தைக்கு அஞ்சுகிறேன் (சங் 119:39)
6. நான் மிகவும் பரியாசம் பண்ணப்படுகிறேன் (சங் 119:51)
7. நடுக்கம் என்னைப் பிடித்தது (சங் 119:53)
8. நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன் (சங் 119:67)
9. என் ஆத்துமா தவிக்கிறது (சங் 119:81)
10. என் கண்கள் பூத்துப் போகிறது (சங் 119:82,123)
11. புகையிலுள்ள துருத்தியைப் போலானேன் (சங் 119:83)
12. எனக்குக் குழிகளை வெட்டுகிறார்கள் (சங் 119:85)
13. அநியாயமாய் என்னைத் துன்பப் படுத்துகிறார்கள் (சங் 119:86)
14. என்னைப் பூமியிராமல் நீக்கிவிடச் சற்றே தப்பிற்று (சங் 119:87)
15. துன்மார்க்கர் என்னை அழிக்கக் காத்திருக்கிறார்கள் (சங் 119:95)
16. நான் மிகவும் உபத்திரவப்படுகிறேன் (சங் 119:107)
17. என் உடம்பு சிலிர்க்கிறது (சங் 119:120)
18. நான் பயப்படுகிறேன் (சங் 119:120)
19. என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது (சங் 119:136).
20. நான் சிறியவனும் அசட்டைபண்ணப் பட்டவனுமாயிருக்கிறேன் (சங் 119:141).
21. இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது (சங் 119:143).
22. என் உபத்திரவத்தைப் பாரும் (சங் 119:153).
23. அநேகர், என்னைத் துன்பப்படுத்தி, விரோதிக்கிறார்கள் (சங் 119:157).
24. நான் அருவருப்படைகிறேன் (சங் 119:158).
25. பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள்.

"நான் அஞ்சுகிறேன்" - நான் ஒரு இரகசிய பாவத்தைச் செய்திருக்கிறேன். அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். நான் இரகசியமாக செய்த பாவம் எல்லோருக்கும் தெரிந்தால் அது எனக்கு மிகுந்த அவமானமாக இருக்கும்.

"உமது நீதியால் என்னை உயிர்ப்பியும்" - ஒரு மனுஷன் மறுபடியும் பிறக்கும்போது அவன் நீதியில் உயிர்ப்பிக்கப்படுகிறான். (2கொரி 5:17-18; எபே 4:24; 1யோவான் 2:29; 1யோவான் 3:9; 1யோவான் 5:18)

119 அதிகாரம்

தேவனைப் பற்றியும், அவருடைய நீதியைப் பற்றியும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சத்தியங்கள்

1. கர்த்தர், அவரவர் நீதிக்குத்தக்கதாக பதிலளிப்பார் (1சாமு 26:23; யோபு 33:26; சங் 18:20, 24).
2. கர்த்தர் பூலோகத்தை நீதியோடு நியாயந்தீர்ப்பார் (சங் 9:8; சங் 72:2; சங் 96:13; சங் 98:9; அப் 17:31).
3. கர்த்தர் நீதியை விரும்புகிறார் (சங் 11:7; சங் 33:5; சங் 45:7).
4. கர்த்தர் நீதியின் பாதைகளில் நடத்துகிறார் (சங் 23:3).
5. நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம் (சங் 97:2).
6. கர்த்தர், பூமியிலே நீதியையும் நியாயத்தையும் செய்கிறார் (சங் 99:4; சங் 103:6).
7. அவருடைய நீதி நித்திய நீதி (சங் 119:142).
8. அவருடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்.
9. அவருடைய கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள் (சங் 119:172).
10. கர்த்தர் நமது நீதியாயிருக்கிறார் (எரே 23:6; எரே 33:16).
11. கர்த்தர் நித்திய நீதியை வருவிக்கிறார் (தானி 9:24).
12. தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார் (லூக்கா 1:75).

நீதியின் ஆசீர்வாதங்கள்

1. நீதி வஸ்திரமாக மூடிப்பாதுகாக்கிறது (யோபு 29:14; ஏசா 61:10).
2. நீதி மரணத்துக்குத் தப்புவிக்கும் (நீதி 10:2).
3. நீதி வழியைச் செம்மைப்படுத்தும் (நீதி 11:5).
4. செம்மையானவர்களுடைய நீதி அவர்களைத் தப்புவிக்கும் (நீதி 11:6).
5. நீதி ஜீவனுக்கு ஏதுவாயிருக்கும் (நீதி 11:19; நீதி 12:28).
6. நீதி உத்தம மார்க்கத்தாரைத் தற்காக்கும் (நீதி 13:6).
7. நீதி ஜனத்தை உயர்த்தும் (நீதி 14:34).
8. நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும் (நீதி 16:12).
9. நீதியின் கிரியை சமாதானமும் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம் (ஏசா 32:17).
10. நீதியின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும் (மல் 4:2).

ஆறாவது பிரிவு - வௌ

தேவனுடைய வார்த்தையினால் இரட்சிப்பு - (ரோம 1:16)

பொருளடக்கம்

1. இரண்டு விண்ணப்பங்கள் - காரணங்கள் - (119:41-43)
2. ஏழு பொருத்தனைகள் - இரட்சிப்பின் வெளிப்படையான கிரியை - (119:44-48)

119 அதிகாரம்

1. இரண்டு விண்ணப்பங்கள் - காரணங்கள்

சங் 119:41 கர்த்தாவே, உம்முடைய வாக்கின்படி, உமது தயவும் உமது இரட்சிப்பும் எனக்கு வருவதாக.

சங் 119:42 அப்பொழுது என்னை நிந்திக்கிறவனுக்கு உத்தரவு சொல்லுகிறேன்; உம்முடைய வசனத்தை நம்பியிருக்கிறேன்.

சங் 119:43 சத்திய வசனம் முற்றிலும் என் வாயினின்று நீங்கவிடாதேயும்; உம்முடைய நியாயத்தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறேன்.

"கர்த்தாவே, உம்முடைய வாக்கின்படி, உமது தயவும் உமது இரட்சிப்பும் எனக்கு வருவதாக" - உமது வார்த்தையின் பிரகாரமாக என்னுடைய விண்ணப்பங்களுக்கு விரைவில் பதிலைத் தாரும். அப்போது என்னுடைய சத்துருக்களுக்குக் கூறுவதற்கு என்னிடம் ஒரு பதில் இருக்கும். (சங் 119:4-42)

"சத்திய வசனம் முற்றிலும் என் வாயினின்று நீங்கவிடாதேயும்; உம்முடைய நியாயத் தீர்ப்புகளுக்குக் காத்திருக்கிறேன்" - நான் உம்முடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். உமது வார்த்தையே எனது நம்பிக்கை. ஆகையினால் உமது வார்த்தையை என்னிடத்திலிருந்து நீக்கிவிடாதிரும். (சங் 119:43,49)

2. ஏழு பொருத்தனைகள் - இரட்சிப்பின் வெளிப்படையான கிரியை

சங் 119:44 நான் எப்பொழுதும் என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக் கொள்ளுவேன்.

சங் 119:45 நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே நடப்பேன்.

சங் 119:46 நான் உம்முடைய சாட்சிகளை குறித்து, ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கப்படாமல் பேசுவேன்.

சங் 119:47 நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின்பேரில் மன மகிழ்ச்சியாயிருப்பேன்.

சங் 119:48 நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளுக்குக் கையெடுப்பேன்; உமது பிரமாணங்களைத் தியானிப்பேன்.

"நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே நடப்பேன்" - ஒருவன் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதினால் அவன் கட்டுக் களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறுகிறான். (சங் 119:44-45; யோவான் 8:32-36)

"நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளுக்குக் கையெடுப்பேன்" - கைகளால் ஆணையிடுவார்கள். கையெடுப்பேன் என்பது உமது கற்பனைகளின் பிரகாரம் நான் நடப்பேன் என்று ஆணையிடுகிறேன் என்று பொருள்படும். (ஆதி 14:22; யாத் 6:8; உபா 32:40; எசே 20:5-6; எசே 36:7)

ஏழாவது பிரிவு - சாயீன்

தேவனுடைய வார்த்தையின் ஆறுதல் - (ரோம 15:4)

பொருளடக்கம்

1. ஒரு விண்ணப்பம் - ஆறுதலின் ஆதாரம் - (119:49-50)
2. சாட்சியின் பத்து அம்சம் - (119:51-56)

1. ஒரு விண்ணப்பம் - ஆறுதலின் ஆதாரம்

சங் 119:49 நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும்.

119 அதிகாரம்

சங் 119:50 அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது.

2. சாட்சியின் பத்து அம்சம்

சங் 119:51 அகந்தைக்காரர் என்னை மிகவும் பரியாசம்பண்ணியும், நான் உமது வேதத்தைவிட்டு விலகினதில்லை.

சங் 119:52 கர்த்தாவே, ஆதிமுதலான உமது நியாயத்தீர்ப்புகளை நான் நினைத்து என்னைத் தேற்றுகிறேன்.

சங் 119:53 உமது வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர்நிமித்தம் நடுக்கம் என்னைப் பிடித்தது.

சங் 119:54 நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின.

சங் 119:55 கர்த்தாவே, இராக்காலத்தில் உமது நாமத்தை நினைத்து, உமது வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன்.

சங் 119:56 நான் உமது கட்டளைகளைக் கைக்கொண்டபடியினால், இது எனக்குக் கிடைத்தது.

சங்கீதம் 119-இல் அகந்தைக்காரரைப் பற்றி கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. துன்மார்க்கர்கள் அகங்காரிகள் (சங் 119:21, 69, 78, 85).
2. அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது (சங் 119:70).
3. அவர்களுடைய உபாயம் வெறும் பொய் (சங் 119:118).
4. அவர்கள் மற்றவர்களை ஒடுக்குகிறார்கள் (சங் 119:121-122).
5. அவர்கள் நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்கள் (சங் 119:126).
6. அவர்கள், கர்த்தருடைய வசனங்களை மறந்துவிடுகிறார்கள் (சங் 119:139).
7. தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் (சங் 119:150).
8. கர்த்தருடைய வேதத்திற்கு அவர்கள் தூரமாயிருக்கிறார்கள் (சங் 119:150).
9. இரட்சிப்பு துன்மார்க்கருக்குத் தூரமாயிருக்கிறது (சங் 119:155).
10. அவர்கள் நீதிமான்களுக்கு விரோதிகள் (சங் 119:157, 158, 161).

"என்னைத் தேற்றுகிறேன்" - மற்றவர்கள் நம்மீது இரக்கம் காண்பிக்காமல் இருக்கும்போது நம்மை நாமே தேற்றிக்கொள்ள வேண்டும். இதிலும் நமக்கு ஓரளவு ஆறுதல் கிடைக்கும்.

தேற்றுதலின் ஆதாரங்கள்

1. கர்த்தர் (ஏசா 51:3; 2கொரி 1:3)
2. பரிசுத்த ஆவியானவர் (அப் 9:31)
3. தேவ வசனம் (ரோமர் 15:4; 1தெச 4:18)
4. பிரசங்கித்தல், தீர்க்கதரிசனம் சொல்லுதல் (1கொரி 14:3,31)
5. அன்பு (பிலி 2:1)
6. கர்த்தருடைய கோலும், தடியும் (சங் 23:4)
7. அப்பம், தண்ணீர் (ஆதி 18:5)
8. மற்றவர்கள் (1நாளா 7:22; 1நாளா 19:2; 1தெச 5:11)
9. தன்னைத்தானே (சங் 119:52; யோபு 9:27)

119 அதிகாரம்

"உமது வேதத்தை விட்டு விலகுகிற துன்மார்க்கர்நிமித்தம்" - மனுஷர் பொதுவாக வேதத்தை விட்டு விலகுவதில்லை. ஆனால் பாவம் எப்போதுமே மனுஷனை வஞ்சிக்கிறது. அவனுடைய இருதயத்தைப் பாழ்ப்படுத்துகிறது. அவனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை அழிக்கிறது. பாவமே மனுஷனைத் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக மீறுமாறு மனுஷனை வழிநடத்துகிறது.

"நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின" - நான் தங்கியிருக்கும்பொழுதும், நான் பிரயாணம் பண்ணும்பொழுதும் கீதங்களைப் பாடிக் கொண்டிருப்பேன். தேவனுடைய நீதியும், நியாயமுமே என்னுடைய கீதங்களின் கருப்பொருளாக இருக்கும்.

"நான் பரதேசியாய்த் தங்கும் வீடு" - இந்த சங்கீதத்தை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. சங்கீதக்காரனைப் பற்றி கூறப்பட்டிருக்கும் காரியங்கள் இதைத் தாவீது எழுதியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

சங்கீதம் 119-ஐ தாவீது எழுதியிருக்கலாம் என்பதற்குக் காரணங்கள்

1. சங் 119:1-3-ல் பாக்கியவான்களைப் பற்றி கூறப்பட்டிருக்கும் காரியங்கள் சங்கீதம் 15-இல் கூறப்பட்டிருக்கும் காரியங்களுக்கு ஒத்திருக்கின்றன.
2. இந்த சங்கீதத்தில் "உமது அடியேன்" என்னும் வாக்கியம் 13 தடவைகள் வந்துள்ளது. (சங் 119:17,23,38, 49, 65, 76,84, 122,124, 125,135,140,176) வேதாகமத்தில் உமது அடியேன் என்னும் சொல் தாவீதை மட்டுமே குறிக்கிறது. எசேக்கியா, ஏத்தான், நாத்தான், எஸ்றா போன்ற யாரையும் இச்சொல் குறிக்கவில்லை. 119-ஆவது சங்கீதத்தைத் தவிர மற்ற சங்கீதங்களில் "உமது அடியேன்" என்னும் வாக்கியம் 15 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் இந்த வாக்கியம் தாவீதை மட்டுமே குறிக்கிறது. இதுமட்டுமல்லாமல் கர்த்தரும், தாவீதை "என் அடியான், என் ஊழியக்காரன்" என்று பலமுறை கூறியிருக்கிறார்.
3. "முழு இருதயம்" என்னும் வாக்கியம் 119-ஆவது சங்கீதத்தில் 6 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தாவீது மட்டுமே மற்ற சங்கீதங்களில் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். (சங் 9:1; சங் 111:1).
4. 119-ஆவது சங்கீதத்தில் சங்கீதக்காரன் கூறியிருக்கும் முப்பது பொருத்தனைகளை வாசிக்கிறோம். இவையனைத்தும் தாவீதின் பொருத்தனைகளே. மற்ற சங்கீதங்களில் தாவீது கூறியிருக்கும் பொருத்தனைகளும், இந்த சங்கீதத்தில் நாம் வாசிக்கும் பொருத்தனைகளும், ஒன்றுபோல் உள்ளன.
5. சங்கீதம் 119-இல் சங்கீதக்காரனின் 69 விண்ணப்பங்களைக் குறித்து வாசிக்கிறோம். இவையும் தாவீதின் விண்ணப்பங்களே. மற்ற சங்கீதங்களில் காணப்படும் தாவீதின் விண்ணப்பங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் இது தெளிவாகிறது.
6. சங்கீதம் 119-இல் சங்கீதக்காரனுடைய 59 அம்ச சாட்சியை வாசிக்கிறோம். இவையனைத்தும் தாவீதிற்கு மட்டுமே பொருந்தும்.
7. சங்கீதம் 119-இல் சங்கீதக்காரனின் 22 அனுபவங்களை நாம் வாசிக்கிறோம். இந்த அனுபவங்கள் அனைத்தும் தாவீதிற்கு மட்டுமே பொருந்தும்.
8. இந்த சங்கீதத்தில் கூறப்பட்டிருக்கிற நெருக்கங்கள், துன்பங்கள், துயரங்கள், பாடுகள், வேதனைகள் எல்லாமே தாவீதுடையவை.

இவை தவிர கீழே கூறப்பட்டிருக்கிற காரியங்களும், 119-ஆவது சங்கீதத்தைத் தாவீதுதான் இயற்றினான் என்பதற்கு சான்று பகரும்.

119 அதிகாரம்

(1) நான் உம்முடைய சாட்சிகளை குறித்து, ராஜாக்களுக்கு முன்பாக வெட்கப்படாமல் பேசுவேன். (சங் 119:46)

(2) நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின. (சங் 119:54)

(3) நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். (சங் 119:67)

(4) பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள், ஆனாலும் என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது. (சங் 119:161)

(5) அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப் பார்த்தபடியால் வெட்கப்பட்டுப் போவார்களாக; நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன் (சங் 119:78)

(6) உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். உம்முடைய கற்பனைகளை நான் வஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன் (சங் 119:81,131)

(7) காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப்போனேன்; உமது அடியேனைத் தேடுவீராக; உமது கற்பனைகளை நான் மறவேன். (சங் 119:176)

எட்டாவது பிரிவு - கேத்

தேவனுடைய வார்த்தையினால் திருப்தி - (சங் 19:10)

பொருளடக்கம்

1. திருப்தி - (119:57)
2. திருப்தியின் ஏழு இரகசியங்கள் - இரண்டு விண்ணப்பங்கள் - (119:58-64)

1. திருப்தி

சங் 119:57 கர்த்தாவே, நீரே என் பங்கு; நான் உமது வசனங்களைக் கைக் கொள்ளுவேன் என்றேன்.

2. திருப்தியின் ஏழு இரகசியங்கள் - இரண்டு விண்ணப்பங்கள்

சங் 119:58 முழு இருதயத்தோடும் உம்முடைய தயவுக்காகக் கெஞ்சுகிறேன்; உமது வாக்கின்படி எனக்கு இரங்கும்.

சங் 119:59 என் வழிகளைச் சிந்தித்துக் கொண்டு, என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன்.

சங் 119:60 உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி, நான் தாமதியாமல் தீவிரித்தேன்.

சங் 119:61 துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும், உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை.

சங் 119:62 உமது நீதியான நியாயத்தீர்ப்புகளினிமித்தம், உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன்.

சங் 119:63 உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன்.

சங் 119:64 கர்த்தாவே, பூமி உமது கிருபையினால் நிறைந்திருக்கிறது; உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

119 அதிகாரம்

"என்னைக் கொள்ளையிட்டது" - சங்கீதக் காரனின் ஜீவனைக் கொல்லுவதற்காகவும் அவனுடைய இராஜ்ஜியத்தைப் பரித்துக் கொள்வதற்காகவும், அவனுடைய சத்துருக்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். (1சாமு 21-28; 2சாமு 15-18)

ஒன்பதாவது பிரிவு - தேத்

தேவனுடைய வார்த்தையின் சிட்சிக்கும் வல்லமை - (எபி 4:12)

பொருளடக்கம்

1. சாட்சி - இரண்டு விண்ணப்பங்கள் - (119:65-68)
2. சிட்சையின் நோக்கம் - ஒரு பொருத்தனை - (119:69-72)

1. சாட்சி - இரண்டு விண்ணப்பங்கள்

சங் 119:65 கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர்.

சங் 119:66 உத்தம நிதானிப்பையும் அறிவையும் எனக்குப் போதித்தருளும், உம்முடைய கற்பனைகளின்பேரில் விசுவாசமாயிருக்கிறேன்.

சங் 119:67 நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்.

சங் 119:68 தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர்; உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

"உமது அடியேன்" - இந்த வாக்கியம் பொதுவாகத் தாவீதை மட்டுமே குறிப்பிடும். வேதாகமத்தில் தாவீதைத் தவிர தேவனுடைய தாசர்கள் மேலும் பலர் குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற தேவனுடைய அடியார்கள்

1. ஆபிரகாம் (ஆதி 26:24; சங் 105:6)
2. யாக்கோபு (ஏசா 41:8; ஏசா 48:20)
3. மோசே (எண் 12:7; யோசு 1:1)
4. சாமுவேல் (1சாமு 3:9)
5. தாவீது (2சாமு 7:5-29; 2இராஜா 19:34)
6. அகியா (1இராஜா 14:18; 1இராஜா 15:29)
7. எலியா (2இராஜா 9:36; 2இராஜா 10:10)
8. யோனா (2இராஜா 14:25)
9. எசேக்கியா (2நாளா 32:16)
10. யோபு (யோபு 1:8; யோபு 2:3; யோபு 42:7-8)
11. ஏசாயா (ஏசா 20:3)
12. எலியாக்கீம் (ஏசா 22:20)
13. மேசியா (ஏசா 42:1; ஏசா 43:10; ஏசா 52:13; ஏசா 53:11)
14. நேபுகாத்நேச்சர் (எரே 25:9; எரே 27:6)
15. தானியேல் (தானி 6:20)
16. செருபாபேல் (ஆகாய் 2:23)
17. சிமியோன் (லூக்கா 2:29)
18. பவுல் (ரோமர் 1:1; தீத்து 1:1)
19. எப்பாப்பிரா (கொலோ 4:12)
20. யாக்கோபு (யாக் 1:1)

119 அதிகாரம்

21. பேதுரு (2பேதுரு 1:1)

22. யூதா (யூதா 1)

23. யோவான் (2பேதுரு 1:1)

"நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்" - மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். (கலா 6:7-8)

தேவனுடைய குணாதிசயங்கள்

1. கர்த்தர், மனுஷரின் பங்கு (சங் 119:57)
2. நல்லவர் (சங் 119:68)
3. மறைவிடம் (சங் 119:114; சங் 91:1)
4. கேடகம் (சங் 119:114)
5. நீதிபரர் (சங் 119:137)
6. சமீபமாயிருக்கிறார் (சங் 119:151)

2. சிட்சையின் நோக்கம் - ஒரு பொருத்தனை

சங் 119:69 அகங்காரிகள் எனக்கு விரோதமாய்ப் பொய்களைப் பிணைக்கிறார்கள்; நானோ, முழு இருதயத்தோடும் உம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவேன்.

சங் 119:70 அவர்கள் இருதயம் நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது; நானோ, உம்முடைய வேதத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்.

சங் 119:71 நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்.

சங் 119:72 அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்.

"அகங்காரிகள் எனக்கு விரோதமாய்ப் பொய்களைப் பிணைக்கிறார்கள்" - இந்த சங்கீதத்தைத் தாவீது எழுதினான் என்பதற்கு இந்த வசனமும் சான்று. (2சாமு 15-18)

"நான் உபத்திரவப்பட்டது" - இந்த சங்கீதத்தில் 7 வசனங்களில் உபத்திரவத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (சங் 119:50,67,71, 75,92,107,153) இவையனைத்தும் சரீர வியாதிகளைக் குறிப்பிடவில்லை. இவை பல்வேறு விதமான உபத்திரவங்களைக் கூறுகிறது.

பத்தாவது பிரிவு - யோட்

தேவனுடைய வார்த்தையின் நீதி - (சங் 19:9)

பொருளடக்கம்

1. சாட்சி - ஒரு விண்ணப்பம் - (119:73-75)
2. நியாயத்தீர்ப்புக்காக ஐந்து விண்ணப்பங்கள் - (119:76-80)

1. சாட்சி - ஒரு விண்ணப்பம்

சங் 119:73 உம்முடைய கரங்கள் என்னை உண்டாக்கி, என்னை உருவாக்கிற்று; உம்முடைய கற்பனைகளைக் கற்றுக் கொள்ள என்னை உணர்வுள்ளவனாக்கும்.

சங் 119:74 நான் உம்முடைய வசனத்திற்குக் காத்திருக்கிறபடியால், உமக்குப் பயந்தவர்கள் என்னைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்.

சங்கீதம் - தொகுப்புரை

119 அதிகாரம்

சங் 119:75 கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திரவப் படுத்தினீரென்றும் அறிவேன்.

"நான் உம்முடைய வசனத்திற்குக் காத்திருக்கிறபடியால், உமக்குப் பயந்தவர்கள் என்னைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்" - யோவான் 13:20-இல் இந்த சத்தியத்தின் கருத்து இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. "நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்".

"கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளது" - கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் அறிந்து வைத்திருப்பது ஒரு மனுஷனுக்கு அதிக ஆதாயம் உடையது. திரளான செல்வத்தைப் பார்க்கிலும் இதுவே முக்கியம். (சங் 119:72,75)

"உண்மையின்படி என்னை உபத்திரவப் படுத்தினீர்" - நாம் தாங்கிக் கொள்வதற்கு மேலாக தேவன் நம்மைச் சோதிக்க மாட்டார். (1கொரி 10:13-14) யாரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. தமது வல்லமையினால் தேவன் மனுஷரை இரட்சிக்க விரும்புகிறார். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17) ஒரு மனுஷன் பாவம் செய்து பாவத்தில் விழுந்துபோனால், அதற்கு அவனே பொறுப்பு. அவன் தேவனுடைய மெய்வழியைப் பின்பற்றாமல் பாவத்தின் பொய்வழியைப் பின்பற்றினான். (சங் 119:30,173) மனுஷனை மறுபடியும் இரட்சிப்பதற்காகத் தேவன் சில சமயங்களில் சாத்தான் மூலமாக அவனுக்கு உபத்திரவம் வருவதையும் அனுமதிக்கிறார். (யோபு 33:14-29)

2. நியாயத்தீர்ப்புக்காக ஐந்து விண்ணப்பங்கள்

சங் 119:76 நீர் உமது அடியேனுக்குக் கொடுத்த உமது வாக்கின்படி, உமது கிருபை என்னைத் தேற்றுவதாக.

சங் 119:77 நான் பிழைத்திருக்கும்படிக்கு உமது இரக்கங்கள் எனக்குக் கிடைப்பதாக; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.

சங் 119:78 அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப் பார்த்தபடியால் வெட்கப்பட்டுப் போவார்களாக; நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன்.

சங் 119:79 உமக்குப் பயந்து, உமது சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள் என்னண்டைக்குத் திரும்புவார்களாக.

சங் 119:80 நான் வெட்கப் பட்டுப் போகாதபடிக்கு, என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாய் இருக்கக்கடவது.

கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர், தமது வாக்கின்படி தம்முடைய கிருபையினால் தேற்றுவார் (சங் 119:76)
2. கர்த்தருடைய இரக்கங்கள், கீழ்ப் படிதலினிமித்தம் கிடைக்கும் (சங் 119:77)
3. கர்த்தருடைய கட்டளைகளைத் தியானிப்பதின் மூலம் விரோதிகளை ஜெயங்கொள்ளலாம் (சங் 119:78)
4. கர்த்தருக்குப் பயந்து, அவருடைய சாட்சிகளை அறிந்திருக்கிறவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாவார்கள் (சங் 119:79)
5. கர்த்தருடைய பிரமாணங்களை நாள்தோறும் தியானிப்பதினிமித்தம் இருதயம் உத்தமமாயிருக்கும் (சங் 119:80).

"என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாயிருக்கக்கடவது" - சபையில் நாம் தேவனுடைய வார்த்தையைத் தியானித்து, அவற்றிற்குக் கீழ்ப்படிந்து, உத்தமமாக நடக்க வேண்டும். (நீதி 2:7; நீதி 3:21; 1தீமோ 1:10; 2தீமோ1:13; 2தீமோ 4:3; தீத்து 1:9,13; தீத்து 2:1-2)

119 அதிகாரம்

பதினொறாவது பிரிவு - கப்

நம்பிக்கையின் ஆதாரம் - (ரோம 10:17)

பொருளடக்கம்

1. துன்பத்தின் எட்டு அட்சம் - தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை - (119:81-84)
2. இரண்டு விண்ணப்பங்கள் - நிலைத்திருப்பதற்கு தேவனுடைய வார்த்தையே ஆதாரம் - (119:85-88)

1. துன்பத்தின் எட்டு அட்சம் - தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை

சங் 119:81 உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.

சங் 119:82 எப்பொழுது என்னைத் தேற்றுவீர் என்று, உம்முடைய வாக்கின் மேல் நோக்கமாய் என் கண்கள் பூத்துப் போகிறது.

சங் 119:83 புகையிலுள்ள துருத்தியைப் போலானேன்; உமது பிரமாணங்களையோ மறவேன்.

சங் 119:84 உமது அடியேனுடைய நாட்கள் எம்மாத்திரம்? என்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு நீர் எப்பொழுது நியாயத்தீர்ப்பு செய்வீர்?

"உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது" - தேவனுடைய இரட்சிப்பிற்காக ஏங்கித் தவிக்கும் எந்த மனுஷனையும் கர்த்தர் கைவிடுவதில்லை. அவனுடைய விண்ணப்பங்களைக் கேட்பார். அவனை இரட்சிப்பார். (சங் 119:81-82,131,174; மத் 5:6)

"உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்" - தேவனுடைய வார்த்தையில் ஏராளமான ஆசீர்வாதங்கள், தீர்க்க தரிசனங்கள், வாக்குத்தத்தங்கள் உள்ளன. நாம் இவற்றை நம்பவேண்டும். தேவனுடைய வசனங்கள் நமது ஜீவியத்தில் நிறைவேறுவதற்குக் காத்திருக்க வேண்டும். (ரோமர் 8:24-25)

"புகையிலுள்ள துருத்தியைப் போலானேன்" - கிழக்குதேசங்களில் துருத்தியைத் தோலினால் செய்திருப்பார்கள். இந்தத் துருத்திகள்மீது புகைகள் படும்போது தோல் கடினமாகும். பழையதாய்ப் போகும். சுருங்கும். மனுஷனுடைய சரீரமும் இப்படியே இருக்கிறது. மனுஷனுக்கு தொடர்ந்து பிரச்சனைகளும், இன்னல்களும், இடையூறுகளும் வரும்போது அவன் புகையிலுள்ள துருத்தியைப் போல வாடிப்போவான். (யோபு 30:30)

2. இரண்டு விண்ணப்பங்கள் - நிலைத் திருப்பதற்கு தேவனுடைய வார்த்தையே ஆதாரம்

சங் 119:85 உம்முடைய வேதத்துக்கு விரோதமாய் அகங்காரிகள் எனக்குக் குழிகளை வெட்டினார்கள்.

சங் 119:86 உம்முடைய கற்பனைகளெல்லாம் உண்மையாயிருக்கிறது; அநியாயமாய் என்னைத் துன்பப்படுத்துகிறார்கள்; நீர் எனக்குச் சகாயம்பண்ணும்.

சங் 119:87 அவர்கள் என்னைப் பூமியிலிராமல் நீக்கிவிடச் சற்றே தப்பிற்று; ஆனாலும் நான் உமது கட்டளைகளை விட்டு விடவில்லை.

சங் 119:88 உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும்; அப்பொழுது நான் உம்முடைய வாக்கின் சாட்சியைக் காத்து நடப்பேன்.

"அநியாயமாய் என்னைத் துன்பப்படுத்துகிறார்கள்" - நீதிமான்களுக்கு வரும் உபத்திரவங்களுக்கும், வேதனைகளுக்கும், துன்பங்களுக்கும், இடையூறுகளுக்கும், பாடுகளுக்கும் காரணமேயிருக்காது. (சங் 119:78,86,161)

119 அதிகாரம்

பன்னிரெண்டாவது பிரிவு - ல்ாமேட்

தேவனுடைய வார்த்தையின் நித்தியம் - (1பேதுரு 1:25)

பொருளடக்கம்

1. தேவனுடைய வார்த்தை நித்தியமானது - (119:89-91)
2. எல்லா சந்ததியார்க்கும் தேவனுடைய வார்த்தை உதவியின் ஆதாரமாயிருக்கிறது. இரண்டு பொருத்தனைகள் - இரண்டு விண்ணப்பங்கள் - (119:92-96)

1. தேவனுடைய வார்த்தை நித்தியமானது

சங் 119:89 கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது.

சங் 119:90 உம்முடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கும்; பூமியை உறுதிப்படுத்தினீர், அது நிலைத்திருக்கிறது.

சங் 119:91 உம்முடைய பிரமாணங்களை நிறைவேற்றும்படி அவைகள் இந்நாள்வரைக்கும் நிற்கிறது; சமஸ்தமும் உம்மைச் சேவிக்கும்.

"கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது" - கர்த்தருடைய வசனம் நித்தியமானது. மனுஷனும் நித்திய ஜீவனைப் பெறவேண்டும் என்பதே கர்த்தருடைய வசனத்தின் திட்டம். கர்த்தருடைய வசனம் வானங்களில் நிலைத்திருக்கிறது. (அப் 5:18; எபே 2:7;எபே 3:11,வெளி 20-22)

"வானங்களில் நிலைத்திருக்கிறது" - தேவனுடைய வசனம் மாறாது. தேவனும் மாறுவதில்லை. தேவனும், அவருடைய வசனமும் என்றென்றும் நிலைத்திருக்கிறது. (மத் 24:35; மாற்கு 13:31; லூக்கா 21:33; 1பேதுரு 1:23-25)

தேவனுடைய வரையறைகள்

1. கர்த்தர் தமது சொந்த பிரமாணங்களை மீறமாட்டார். (சங் 119:89)
2. கர்த்தர் பொய் கூறமாட்டார். (எபி 6:17-19)
3. கர்த்தர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார். (2தீமோ 2:13)
4. கர்த்தர் மனுஷர்மீது பட்சபாதம் காண்பிக்க மாட்டார் (ரோமர் 2:11; யாக் 2:9-10)
5. கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமல் அவர் எந்த ஆத்துமாவையும் இரட்சிக்கமாட்டார். (ரோமர் 3:26; யோவான் 3:16)
6. கர்த்தரிடத்தில் அநீதியில்லை. (ரோமர் 9:14)
7. விசுவாசம் இல்லாத மனுஷர்களை ஆசீர்வதிக்கமாட்டார். (எபி 11:6; யாக் 1:5-8)
8. தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்களைக் கர்த்தர் சபிக்க மாட்டார். (1யோவான் 1:9)
9. தம்முடைய நித்திய திட்டத்தை மாற்றவும் மாட்டார் அதைவிட்டு அகலவும் மாட்டார். (அப் 15:18; எபே 2:7; எபே 3:11)
10. தம்முடைய நிபந்தனைகளைக் கைக் கொள்ளாதவர்களையும், தொடர்ந்து கலகம்பண்ணியவர்களையும் கர்த்தர் இரட்சிக்கமாட்டார். (நீதி 1:22-33; நீதி 29:1; மத் 18:3; யோவான் 3:3,5)
11. கர்த்தர் தீமையினால் சோதிக்கப் படமாட்டார். (யாக் 1:13-15)

119 அதிகாரம்

12. மாய்மாலத்தைப் பொறுத்துக்கொள்ள மாட்டார். (ஏசா 1:13)

13. நித்திய நரகத்திற்கு ஆத்துமாக்கள் சென்று விடாதவாறு மனுக்குலத்தை இரட்சிக்கும் ஊழியத்தை நிறுத்தமாட்டார். (மத் 27:42)

14. தம்மிடத்தில் விசுவாசத்தோடு வரும் ஆத்துமாவைப் புறம்பே தள்ளமாட்டார். (யோவான் 6:37)

15. நீதிமானைத் துன்மார்க்கனைப் போன்று நியாயம் தீர்க்கமாட்டார். (ஆதி 19:22; வெளி 20:5-6, 11-15)

16. விசுவாசத்தோடு ஜெபத்தை ஏறெடுக்கும் போது அதற்குப் பதில் கொடுக்காமல் இருக்கமாட்டார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8)

17 ஒருவன் விசுவாசத்தோடு பாவஅறிக்கை செய்யும்போது அவனை மன்னியாமல் இருக்கமாட்டார். (லூக்கா 13:1-5; 1யோவான் 1:9)

18. ஒருவன் தொடர்ந்து பாவத்தில் ஜீவிக்கும்போது கர்த்தர் அவனை இரட்சிக்கமாட்டார். (ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8)

19. மனுஷர் பாவத்தில் தொடர்ந்து ஜீவிக்கும்போது பாவத்தின் சம்பளமான மரணத்தை அவர்களுக்குத் தராமல் அதைத் தள்ளிவைக்கமாட்டார். (எசே 18:4; ரோமர் 16-23; ரோமர் 8:1-13)

20. மனுஷருடைய சுயாதீன சித்தத்திற்கு முக்கியத்துவம் தராமல் மனுஷனை அடக்கி ஆளமாட்டார். (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-21; 1யோவான் 1:7)

21. கர்த்தர் மனுஷனை அடிமைப்படுத்த மாட்டார். இதனால் மனுஷன் விரும்பினால் அவன் மறுபடியும் கர்த்தரைவிட்டுப் பிரிந்து தனது பழைய பாவவாழ்விற்குத் திரும்பிச்செல்லலாம். (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; எபி 6:4-9; எபி 10:26-29; 1யோவான் 1:7)

22. இரட்சிக்கப்படுகிற மனுஷர் முடிவு வரையிலும் நிலைத்திருப்பார்கள் என்று அவர் உத்தரவாதம் தரமாட்டார். (யோவான் 15:1-8; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி3:16-17; 1கொரி 6:19-20; 1கொரி 9:27; கலா 1:6-8; கலா 5:4; யாத் 32:32-33; எசே 33:12-20)

23. இயேசு கிறிஸ்து மட்டுமே தேவனுடைய குமாரன். அந்த அந்தஸ்தை அவர் எந்த மனுஷனுக்கும் தரமாட்டார். (யோவான் 1:18; யோவான் 3:16; ரோமர் 8:14-16)

24. இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம்செய்யும் போது அந்தப் பாவங்களை நோக்கிப் பார்க்காமல் இருக்கமாட்டார். (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8)

25. விதைத்ததை அறுவடை செய்வதற்கு தடைபண்ணமாட்டார். (ரோமர் 8:12-13; கலா 6:7-8)

26. மனுஷனுடைய சொந்த சித்தத்திற்கு எதிராகத் தம்மைச் சேவிக்குமாறு அவர் மனுஷனைக் கட்டாயப் படுத்தமாட்டார். (யோவான் 3:16; யோவான் 7:17; யோவான் 8:34; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; 1யோவான் 1:7; வெளி 22:17)

27. பாவம்செய்து பிசாசைச் சேவிக்கும் ஜனங்களைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளமாட்டார். (மத் 6:24; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; 1கொரி 3:16-17; கலா 5:19-21; 1யோவான் 3:8-10)

119 அதிகாரம்

28. இரட்சிக்கப்பட்டவன் பாவம் செய்ய வேண்டுமென்று தீர்மானம் பண்ணி பாவம் செய்யப்போனால் கர்த்தர் அவனைத் தடைபண்ணமாட்டார். (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; 1கொரி 3:16-17; 1கொரி 6:9-10,19-20; எபி 6:4-9; எபி 10:26-29; யாக் 5:19-20; 1யோவான் 2:1-2; எசே 33:12-20)

29. இரட்சிக்கப்பட்டவன் மறுபடியும் பாவம் செய்யும்போது பாவத்தின் சம்பளமான மரணத்தை அவனுக்குத் தராமல் இருக்கமாட்டார். (யாத் 32:32-33; எசே 18:4; எசே 33:12-20; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-10; கலா 5:19-21; கலா 6:7-8; எபி 6:4-9; எபி 10:26-29; யாக் 5:19-20)

30. பாவம் செய்கிறவர்களுக்குக் கர்த்தர் ஆதரவாக இருக்கமாட்டார். (ஆதி 2:17; எசே 18:4; எசே33:12-20; ரோமர் 1:18-31; ரோமர் 5:12-21; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-21; கலா 6:7-8; யாக் 5:19-20)

"உம்முடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கும்" - தேவனுடைய சத்தியம் எல்லா தலைமுறைகளுக்கும் உரியது. மனுஷருக்கு வரலாறு உண்டு. தலைமுறைகளும் உண்டு. கர்த்தருடைய வசனம் எல்லா தலைமுறைக்கும் பொருந்துமாறு இருக்கிறது. (ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:21; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; லூக்கா 1:32-33; வெளி 11:15;வெளி 21:3-7; வெளி 22:4-5).

"பூமியை உறுதிப்படுத்தினீர், அது நிலைத்திருக்கிறது" - பூமி நித்தியகாலமாக நிலைத்திருக்கும். (சங் 104:5; பிர 1:4; 2பேதுரு 3:13; வெளி 21) இந்த சங்கீதத்தில் நித்தியமான காரியங்களாக நான்கு காரியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன.

1. தேவனுடைய வசனம்

2. வானம்

3. மனுஷனுடைய தலைமுறை

4. பூமி (சங் 119:89)

"உம்முடைய பிரமாணங்களை நிறைவேற்றும்படி அவைகள் இந்நாள்வரைக்கும் நிற்கிறது; சமஸ்தமும் உம்மைச் சேவிக்கும்" - தேவனுடைய பிரமாணத்தில் வானமும், வானத்தில் உள்ளவைகளும், பூமியும், பூமியில் உள்ளவைகளும் அடங்கும். வானமண்டலத்தில் லட்சணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. ஏராளமான கிரகங்களும் உள்ளன. இவையெல்லாமே தேவனுடைய பிரமாணத்தின் பிரகாரமாகச் செயல்படுகின்றன. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவற்றினால் நாம் பகல், இரவு என்னும் வேறுபாட்டையும், கோடைகாலம், மழைகாலம், பனிகாலம் போன்ற காலங்களையும் அனுபவிக்கிறோம். சந்திரனும், சூரியனும் இல்லையென்றால் பூமியிலுள்ள ஜீவராசிகள் அழிந்துபோகும். (ஆதி 1:14-19; ஆதி 8:22)

"சமஸ்தமும் உம்மைச் சேவிக்கும்" - மனுஷன் மட்டுமல்லாது, கர்த்தருடைய சிருஷ்டிகள் எல்லாமே கர்த்தரைச் சேவிக்கும். (தானி 4:35; கொலோ 1:15-18; வெளி 12:12; வெளி 13:6)

2 எல்லா சந்ததியார்க்கும் தேவனுடைய வார்த்தை உதவியின் ஆதாரமாயிருக்கிறது. இரண்டு பொருத்தனைகள் - இரண்டு விண்ணப்பங்கள்

சங் 119:92 உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.

சங் 119:93 நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்.

சங் 119:94 நான் உம்முடையவன், என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன்.

119 அதிகாரம்

சங் 119:95 துன்மார்க்கர் என்னை அழிக்கக்காத்திருக்கிறார்கள்; நான் உமது சாட்சிகளைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

சங் 119:96 சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்; உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம்.

"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்" - விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17) தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதன் மூலமாக அவருடைய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்கிறோம். நம்முடைய துன்பமான நேரங்களில் கர்த்தருடைய வசனம் நமக்கு ஆறுதலாக இருக்கும்.

"நான் உம்முடையவன், என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன்" - கர்த்தருடைய வசனங்களை ஆராய்ந்து, அவற்றிற்குக் கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே கர்த்தருடையவர்கள். (ரோமர் 1:16; எபே 2:8-9; கொலோ 1:20-23; கொலோ 2:12-13; 1யோவான் 1:9)

"துன்மார்க்கர் என்னை அழிக்கக் காத்திருக்கிறார்கள்" - துன்மார்க்கர்கள் மற்றவர்களை விட மிகவும் பொறுமைசாலிகள். மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதற்காகவும், குற்றமற்ற இரத்தங்களைச் சிந்துவதற்காகவும் அவர்கள் பொறுமையோடு காத்திருப்பார்கள்.

"சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்; உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம்" - மனுஷனுடைய பரிபூரணத்திற்கு ஒரு எல்லையுண்டு. அவனுடைய ஐசுவரியத்திற்கும், அவனுடைய கிரியைகளுக்கும் ஒரு எல்லையுண்டு. ஆனால் கர்த்தருடைய வசனமோ எல்லையில்லாதது. (ரோமர் 11:33)

பதிமூன்றாவது பிரிவு - மேம்

ஞானம், அறிவு ஆகியவற்றின் ஆதாரம் - (2தீமோ 3:16-17)

பொருளடக்கம்

1. மேசியா சத்துருக்களைவிட ஞானமுள்ளவர் - காரணம் - (119:97-98)
2. போதிக்கிறவர்களைவிட மேசியா ஞானமுள்ளவர் - காரணம் - (119:99)
3. முதியோர்களை விட மேசியா ஞானமுள்ளவர் - காரணம் - (119:100)
4. மேசியாவினுடைய ஞானத்தின் ஆறு இரகசியங்கள் - (119:101-104)

1. மேசியா சத்துருக்களைவிட ஞானமுள்ளவர் - காரணம்

சங் 119:97 உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்.

சங் 119:98 நீர் உம்முடைய கற்பனைகளைக்கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 92

"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்.........." (சங் 119:97-104) - இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவில் நிறைவேறிற்று.

119 அதிகாரம்

சங் 119:97-104 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர் மேசியாவே என்பதற்கு ஆதாரங்கள்

1. உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. (சங் 119:97-98)

2. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனா யிருக்கிறேன். (சங் 119:99; ஏசா 11:1-2; ஏசா 42:1-5; ஏசா 50:4-6; ஏசா 61:1-2; லூக்கா 2:40,52)

3. உம்முடைய கட்டளைகளை நான் கைக் கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாய் இருக்கிறேன். (சங் 119:100; லூக்கா 2:40,46-52)

4. உம்முடைய வசனத்தை நான்காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன் (சங் 119:101; 1பேதுரு 2:21-22)

5. நீர் எனக்குப் போதித்திருக்கிறபடியால், நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன். (சங் 119:102; 1பேதுரு 2:21-22)

6. உம்முடைய வார்த்தைகள் என்நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். (சங் 119:103; எபி 10:9)

7. உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன். (சங் 119:104; எபி 1:9; 1பேதுரு 2:21-22)

சங் 119:97-104 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்களில் சிலவற்றை எல்லா நீதிமான்களும் நிறைவேற்றுவார்கள். ஆனால் கிறிஸ்துவைத்தவிர மற்ற எல்லோருமே பாவிகள்தான். நாம் எல்லோருமே கிறிஸ்துவில் புது சிருஷ்டி அடையவேண்டும். கிறிஸ்து தமது முழு ஜீவியத்திலும் பாவமில்லாதவராக ஜீவித்தார். (எபி 1:9; 1பேதுரு 2:21-22)

2. போதிக்கிறவர்களைவிட மேசியா ஞானமுள்ளவர் - காரணம்

சங் 119:99 உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்.

3. முதியோர்களை விட மேசியா ஞானமுள்ளவர் - காரணம்

சங் 119:100 உம்முடைய கட்டளைகளை நான் கைக் கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.

4. மேசியாவினுடைய ஞானத்தின் ஆறு இரகசியங்கள்

சங் 119:101 உம்முடைய வசனத்தை நான்காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்.

சங் 119:102 நீர் எனக்குப் போதித்திருக்கிறபடியால், நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன்.

சங் 119:103 உம்முடைய வார்த்தைகள் என்நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்.

சங் 119:104 உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்.

119 அதிகாரம்

மேசியாவின் பாவமில்லாத தன்மையின் இரகசியங்கள்

1. சகல பொல்லாத வழிகளுக்கும் கால்களை விலக்கி நடத்தல் (சங் 119:101)
2. கர்த்தருடைய வசனத்தைக் காத்து நடத்தல்
3. கர்த்தர் போதித்திருக்கிற நியாயங்களை விட்டு விலகாமல் இருத்தல் (சங் 119:102)
4. கர்த்தர் போதித்தவைகள்
5. சத்தியத்தில் பிரியமாயும், மன மகிழ்ச்சியுமாயிருத்தல் (சங் 119:103)
6. எல்லாப் பொல்லாத வழிகளையும் வெறுத்தல் (சங் 119:104)

பதினான்காவது பிரிவு - நூன்

சந்தோஷம், வெளிச்சம் ஆகியவற்றின் ஆதாரம் - (சங் 19:8)

பொருளடக்கம்

1. வெளிச்சத்தின் ஆதாரம் - ஒரு பொருத்தனை - (119:105-106)
2. உதவிக்காக மூன்று விண்ணப்பங்கள் - (119:107-108)
3. சந்தோஷத்தின் ஐந்து இரகசியங்கள் - (119:109-112)

1. வெளிச்சத்தின் ஆதாரம் - ஒரு பொருத்தனை

சங் 119:105 உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

சங் 119:106 உம்முடைய நீதி நியாயங்களைக்காத்து நடப்பேன் என்று ஆணையிட்டேன்; அதை நிறைவேற்றுவேன்.

கர்த்தருடைய வசனத்தின் விளக்கம்

1. கர்த்தருடைய வேதம் (சங் 119:1,18)
2. அவருடைய சாட்சிகளின் அறிக்கை (சங் 119:2, 14, 31, 36)
3. அவருடைய வழிகளின் வெளியிடப்பட்ட இரகசியம் (சங் 119:3,15)
4. அவருடைய கட்டளைகளின் தொகுப்பு (சங் 119:4, 15)
5. அவருடைய பிரமாணங்கள் (சங் 119:5,33)
6. அவருடைய கற்பனைகள் (சங் 119:6,32,35,86)
7. கர்த்தருடைய நீதிநியாயங்கள் (சங் 119:7,13,62,75,106)
8. சுத்தம் பண்ணுவதற்கான ஆதாரம் (சங் 119:9)
9. கர்த்தருடைய வாக்கு (சங் 119:11,16,57)
10. ஆலோசனைக்காரர் (சங் 119:24)
11. ஜீவனுக்கான ஆதாரம் (சங் 119:25, 40, 50, 88)
12. கர்த்தருடைய அதிசயங்களுக்கான விளக்கம் (சங் 119:27)
13. பெலத்திற்கான அரண் (சங் 119:28)
14. சத்தியத்தின் வழி (சங் 119:30,142,151)
15. கர்த்தருடைய வழி (சங் 119:1,37)
16. நீதியின் வழி (சங் 119:40)
17. இரட்சிப்பின் வழி (சங் 119:41)
18. உண்மையான நம்பிக்கை (சங் 119:42)
19. சத்திய வசனம் (சங் 119:43,142,151)

119 அதிகாரம்

20. நம்பிக்கையின் ஆதாரம் (வசனம்) (சங் 119:49,81,114)

21. தேற்றுதலின் ஆதாரம் (சங் 119:52)

22. கீதங்கள் (சங் 119:54)

23. உத்தம நிதானிப்பு, அறிவை அடைவதற்கான வழி (சங் 119:66,130)

24. மனமகிழ்ச்சியின் ஆதாரம் (சங் 119:70,92)

25. ஐசுவரியத்தைவிட நன்மையானது (சங் 119:72)

26. வாக்குப் பண்ணப்பட்ட கிருபையின் புஸ்தகம் (சங் 119:76)

27. அவருடைய வாக்கின் சாட்சி (சங் 119:88)

28. நித்தியமானது (சங் 119:89-91)

29. மறக்கமுடியாத கட்டளைகள் (சங் 119:93)

30. அவருடைய கற்பனை மகா விஸ்தாரமானது (சங் 119:96)

31. ஞானத்தின் ஆதாரம் (சங் 119:98)

32. அறிவின் ஆதாரம் (சங் 119:99,104,130)

33. தேனை விட மதுரமானது (சங் 119:103)

34. கால்களுக்குத் தீபம் (சங் 119:105)

35. பாதைக்கு வெளிச்சம் (சங் 119:105)

36. நித்திய சுதந்தரம் (சங் 119:111)

37. பிரமாணங்களைக் கைக்கொண்டால் மகிழ்ச்சி (சங் 119:111-112)

38. இடுக்கண் காலத்தில் ஆறுதல் (சங் 119:116)

39. நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்படுதல் (சங் 119:120)

40. கர்த்தருடைய நீதியின் வார்த்தை (சங் 119:123)

41. பொன் வெள்ளியைப் பார்க்கிலும் வேதம் நலமானது (சங் 119:127)

42. சாட்சிகள் அதிசயமானவைகள் (சங் 119:129)

43. வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் (சங் 119:130).

44. பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும் (சங் 119:130).

45. நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள் (சங் 119:137).

46. கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும் மகா உண்மையுமானவைகள் (சங் 119:138).

47. கர்த்தருடைய வார்த்தை புடமிடப்பட்டது (சங் 119:140)

48. வசனம் சமூலமும் சத்தியம் (சங் 119:160).

2. உதவிக்காக மூன்று விண்ணப்பங்கள்

சங் 119:107 நான் மிகவும் உபத்திரவப்படுகிறேன்; கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்.

சங் 119:108 கர்த்தாவே, என் வாயின் உற்சாகபலிகளை நீர் அங்கீகரித்து, உமது நியாயங்களை எனக்குப் போதித்தருளும்.

"என் வாயின் உற்சாகபலிகள்" - நாம் எல்லோருமே நமது வாயினால் கர்த்தரைத் துதிக்க வேண்டும். இந்தப் பலியை எல்லோராலும் செலுத்த முடியும். நாம் ஸ்தோத்திர பலி ஏறெடுக்க வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளை. (எபி 13:15)

119 அதிகாரம்

3. சந்தோஷத்தின் ஐந்து இரகசியங்கள்

சங் 119:109 என் பிராணன் எப்பொழுதும் என் கையில் இருக்கிறது; ஆனாலும் உம்முடைய வேதத்தை மறவேன்.

சங் 119:110 துன்மார்க்கர் எனக்குக் கண்ணிவைக்கிறார்கள்; ஆனாலும் நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழிதவறேன்.

சங் 119:111 உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி.

சங் 119:112 முடிவுபரியந்தம் இடைவிடாமல் உம்முடைய பிரமாணங்களின்படிசெய்ய என் இருதயத்தைச் சாய்த்தேன்.

"நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழிதவறேன்" - ஒருவன் கர்த்தரையும், அவருடைய வழிகளையும் விட்டு தவறிப் போவானானால், மரணமே அவனுக்கு வரும் தண்டனை. (எசே 18:4; எசே 33:12-20; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 3:16-17; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8; யாக் 5:19-20)

"உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி" - கர்த்தருடைய வார்த்தைகளை நமக்குச் சுதந்தரமாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது வேதவசனம் நமக்கு நித்திய மகிழ்ச்சியைத் தரும் (சங் 119:111-112)

பதினைந்தாவது பிரிவு - சாமெக்

பாதுகாப்பின் ஆதாரம் - (நீதி 3:2)

பொருளடக்கம்

1. பாதுகாப்பான ஸ்தலம் - (119:113-114)
2. பாதுகாப்புக்காக நான்கு விண்ணப்பங்கள் - (119:115-117)
3. பாதுகாப்பைக் குறித்த சாட்சி - (119:118-120)

1. பாதுகாப்பான ஸ்தலம்

சங் 119:113 வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப் படுகிறேன்.

சங் 119:114 என் மறைவிடமும் என் கேடகமும் நீரே; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.

வெறுக்க வேண்டிய காரியங்கள்

1. வீண் சிந்தனைகள் (சங் 119:113)
2. எல்லாப் பொய்வழி (சங் 119:104,128)
3. பொய் (சங் 119:163)
4. தீமை (சங் 97:10; நீதி 8:13; ஆமோ 5:10)
5. மேட்டிமையான கண் (நீதி 6:17)
6. பொய் நாவு (நீதி 6:16)
7. குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை (நீதி 6:17)
8. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம் (நீதி 6:18)
9. தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால் (நீதி 6:18)
10. பொய்ச்சாட்சி (நீதி 6:19)
11. சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் (நீதி 6:19)
12. அக்கிரமம் (எபி 1:9)

சங்கீதம் - தொகுப்புரை

119 அதிகாரம்

பிரியப்படவேண்டிய காரியங்கள்

1. தேவனாகிய கர்த்தர் (உபா 6:5; உபா 10:12; உபா 11:1; மத் 22:37)
2. அயலகத்தார் (லேவி 19:18; மத் 22:39)
3. அந்நியர் (உபா 10:19)
4. இரட்சிப்பு (சங் 40:16; சங் 70:4)
5. கர்த்தருடைய நாமம் (சங் 69:36; சங் 119:132)
6. கர்த்தருடைய வேதம் (சங் 119:113,119,127)
7. ஞானம் (நீதி 4:6)
8. நன்மை (ஆமோ 5:15)
9. இரகசியம் (மீகா 6:8)
10. சத்தியம் (சக 8:19; 2தெச 2:10)
11. சமாதானம் (சக 8:19)
12. சத்துருக்கள் (மத் 5:44; லூக்கா 6:27,35)
13. பரிசுத்தவான்கள், சகோதரர் (யோவான் 13:34-35; எபே 1:15; 1பேதுரு 3:8)
14. புருஷர்கள் (தீத்து 2:4)
15. மனைவிகள் (எபே 5:25; கொலோ 3:19)
16. பிள்ளைகள் (தீத்து 2:4)

எப்படி, எவ்வளவு பிரியப்படவேண்டும்?

1. முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் முழுச் சிந்தையோடும் அன்புகூர வேண்டும் (மத் 22:37; லூக்கா 10:27)
2. உன்னிடத்தில் அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும் (மத் 22:39)
3. மிகவும் நேசித்தல் (சங் 119:167)
4. கர்த்தர் அன்பாயிருக்கிறது போல (யோவான் 15:12)
5. சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பு (யோவான் 15:13)
6. அன்பு மாயமற்றதாயிருக்க வேண்டும் (ரோமர் 12:9)
7. பரிசுத்த ஆவியினால் (2கொரி 6:6).
8. அன்பின் உண்மையைச் சோதித்தல் (2கொரி 8:8).
9. அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்தல் (கலா 5:13).
10. அன்பினால் ஒருவரையொருவர் தாங்குதல் (எபே 4:2).
11. சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருதல் (1பேதுரு 1:22).
12. சகோதர சிநேகமுள்ளவர்களாயிருத்தல் (ரோமர் 12:9; 1பேதுரு 3:8).
13. நாவினால் மட்டுமல்லாமல் கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூருதல் (1யோவான் 3:18).
14. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும் (1யோவான் 4:18)

சங்கீதப்புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிற நல்ல இடங்கள்

1. கர்த்தரின் மறைவிடம் (சங் 18:11)
2. விசாலமான இடம் (சங் 18:19; சங் 118:5)
3. அவருடைய பரிசுத்த ஸ்தலம் (சங் 24:3; சங் 46:4; சங் 68:17)
4. மகிமை தங்கிய ஸ்தானம் (சங் 26:8)
5. செம்மையான இடம் (சங் 26:12)

119 அதிகாரம்

6. மறைவிடம் (சங் 32:7; சங் 119:114)

7. அவர் வாசமாயிருக்கிற ஸ்தானம் (சங் 33:14; சங் 52:5; சங் 74:7; சங் 76:2; சங் 79:7; சங் 90:1)

8. செழிப்பான இடம் (சங் 66:12)

9. இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடம் (சங் 81:7)

10. உன்னதமானவரின் மறைவிடம் (சங் 91:1)

2. பாதுகாப்புக்காக நான்கு விண்ணப்பங்கள்

சங் 119:115 பொல்லாதவர்களே, என்னை விட்டு அகன்றுபோங்கள்; என் தேவனுடைய கற்பனைகளை நான் கைக்கொள்ளுவேன்.

சங் 119:116 நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும்; என் நம்பிக்கை விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும்.

சங் 119:117 என்னை ஆதரித்தருளும்; அப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டு, எக்காலமும் உம்முடைய பிரமாணங்களின் பேரில் நோக்கமாயிருப்பேன்.

கர்த்தமிடத்தில் நாம் திரும்பும்போது நாம் பெற்றுக் கொள்ளும் காரியங்கள்

1. ஆதரித்தருளுவார் (சங் 119:116-117)

2. பிழைத்திருத்தல் (சங் 119:116)

3. நம்பிக்கை விருதாவாய்ப்போக வெட்கத்திற்கு உட்படுத்தமாட்டார்

4. ஆதரித்து, இரட்சிக்கப்படுதல் (சங் 119:117)

5. கர்த்தருடைய பிரமாணங்களின் பேரில் நோக்கமாயிருத்தல்

3. பாதுகாப்பைக் குறித்த சாட்சி

சங் 119:118 உமது பிரமாணங்களைவிட்டு வழிவிலகுகிற யாவரையும் மிதித்துப் போடுகிறீர்; அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே.

சங் 119:119 பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரையும் களிம்பைப்போல அகற்றி விடுகிறீர்; ஆகையால் உமது சாட்சிகளில் பிரியப்படுகிறேன்.

சங் 119:120 உமக்குப் பயப்படும் பயத்தால் என் உடம்பு சிலிர்க்கிறது; உமது நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்படுகிறேன்.

கர்த்தரைவிட்டு விலகிப்போகிறவர்களைப் பற்றிய காரியங்கள்

1. கர்த்தருடைய பிரமாணங்களை விட்டு மனுஷனால் விலகிப்போக முடியும்.

2. தங்களுடைய பிரமாணங்களை விட்டு மனுஷன் விலகிப்போகும்போது அழிவு அவனுக்கு நிச்சயம்

3. கர்த்தருடைய பிரமாணங்களை விட்டு விலகிப்போகிற மனுஷன் சபிக்கப்படுவான்

"பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரையும் களிம்பைப்போல அகற்றிவிடுகிறீர்" - தேவனை அறியாத துன்மார்க்கரும், தேவனை அறிந்தும் துன்மார்க்கமாக ஜீவித்து வருபவரும் கர்த்தருடைய தண்டனையைப் பெற்றுக் கொள்வார்கள். களிம்பில் உலோகப்பொருள் எதுவுமில்லை. அது எளிதாக அகற்றப்படும். அதுபோலவே துன்மார்க்கரும் அகற்றப் படுவார்கள்.

"உமது நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்படுகிறேன்" - துன்மார்க்கர்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. இதைக் காணும் நீதிமான் தன்னைக் குறித்து மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்க வேண்டும்.

119 அதிகாரம்

பதினாறாவது பிரிவு - ஆயின்

நம்பிக்கையின் ஆதாரம் - (நீதி 3:4)

பொருளடக்கம்

1. உண்மையாக இருப்பது பற்றிய சாட்சி - ஆறு விண்ணப்பங்கள் - (119:121-125)

2. தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை - (119:126-128)

1. உண்மையாக இருப்பது பற்றிய சாட்சி - ஆறு விண்ணப்பங்கள்

சங் 119:121 நியாயமும் நீதியும் செய்கிறேன்; என்னை ஒடுக்குகிறவர்களுக்கு என்னை ஒப்புக் கொடாதேயும்.

சங் 119:122 உமது அடியேனுக்கு நன்மையாகத் துணைநில்லும்; அகங்காரிகள் என்னையொடுக்க வொட்டாதேயும்.

சங் 119:123 உமது இரட்சிப்புக்கும் உமது நீதியின் வார்த்தைக்கும் காத்திருக்கிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது.

சங் 119:124 உமது அடியேனை உமது கிருபையின்படியே நடத்தி, உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

சங் 119:125 நான் உமது அடியேன்; உம்முடைய சாட்சிகளை நான் அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்.

காத்திருக்க வேண்டிய காரியங்கள்

1. இரட்சிப்பு (சங் 119:123)

2. நீதியின் வார்த்தை (சங் 119:123,131)

3. கிருபை (சங் 119:124,132)

4. உணர்வு (சங் 119:125)

5. நீதியைச் செய்யக் கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும் (சங் 119:126).

2. தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை

சங் 119:126 நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளை வந்தது; அவர்கள் உம்முடைய நியாயப் பிரமாணத்தை மீறினார்கள்.

சங் 119:127 ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்.

சங் 119:128 எல்லாவற்றைப்பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய்வழிகளையும் வெறுக்கிறேன்.

பதினேழாவது பிரிவு - பே

தேவனுடைய வார்த்தையால் வழிநடத்தப்படுதல் - (சங் 19:11)

பொருளடக்கம்

1. வார்த்தையின் வழிநடத்துதலில் நம்பிக்கை வைத்தல் - (119:129-130)

2. வழிநடத்துதலுக்காக ஏழு விண்ணப்பங்கள் - (119:131-136)

1. வார்த்தையின் வழிநடத்துதலில் நம்பிக்கை வைத்தல்

சங் 119:129 உம்முடைய சாட்சிகளே அதிசயமானவைகள்; ஆகையால் என் ஆத்துமா அவைகளைக் கைக்கொள்ளும்.

சங் 119:130 உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.

119 அதிகாரம்

2. வழிநடத்துதலுக்காக ஏழு விண்ணப்பங்கள்

சங் 119:131 உம்முடைய கற்பனைகளை நான் வஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்.

சங் 119:132 உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்களுக்கு வழங்கும் நியாயத்தின்படியே என்னை நோக்கிப் பார்த்து, எனக்கு இரங்கும்.

சங் 119:133 உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்.

சங் 119:134 மனுஷர் செய்யும் இடுக்கத்துக்கு என்னை விலக்கி விடுவித்தருளும்; அப்பொழுது நான் உம்முடைய கட்டளைகளைக் காத்துக் கொள்ளுவேன்.

சங் 119:135 உமது அடியேன்மேல் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணி, உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

சங் 119:136 உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது.

நமது ஜீவியத்தில் நாம் ஏறெடுக்க வேண்டிய முக்கியமான விண்ணப்பங்கள்

1. என்னை நோக்கிப் பாரும் (சங் 119:132).
2. எனக்கு இரங்கும்.
3. உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தும் (சங் 119:133).
4. ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்.
5. மனுஷர் செய்யும் இடுக்கத்துக்கு விலக்கி விடுவித்தருளும் (சங் 119:134).
6. என்மீது உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும் (சங் 119:135).
7. உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்.

நியாயம் (judgment) - מִשְׁפָּט - mish-pawt' - 4941

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயம், நீதி, வழக்கம், பிரமாணம், தீர்மாணம் பண்ணுதல், நியாய விசாரிப்பு, தீர்ப்பு, நியாய விதி, நியமம், நியாய விசாரணை, முறைமை, நியாயத்தீர்ப்பு, நியாயந்தீர்த்தல், பிரகாரம், போதித்தல், காரியசித்தி, வழக்காடுகிறவர், நிறைகோல், காரியம், குற்றம், ஆக்கினைக்குப்பாத்திரன், வளர்த்தல், பாத்திரம், வழக்காடுதல், தண்டித்தல், தண்டனை உரியது, ஆக்கினை, மாதிரி, சாயல்

"உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்களுக்கு வழங்கும் நியாயத்தின்படியே என்னை நோக்கிப்பார்த்து, எனக்கு இரங்கும்" - இந்த வசனத்தில் தேவனுடைய வார்த்தை என்னும் சொல் இல்லை. "வழங்கும் நியாயம்" **(usest to do)** என்னும் வாக்கியம் உள்ளது. இதற்கு நியாயத்தீர்ப்பு அல்லது நியாயம் **(judgment)** என்று பொருள்.

"உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்" - என்னுடைய காலடிகளை உறுதிப்படுத்தும். நான் தாறுமாறாக நடக்கக்கூடாது. நிச்சயமற்றவனாக நான் ஓடக்கூடாது. எனது ஜீவியத்தில் ஒரு இலக்கு வேண்டும். உம்மை நோக்கி நான் பொறுமையோடும், உறுதியோடும் நடக்க எனக்கு உதவி புரியும்.

விடுவி (Deliver) சங் 119:134 פָּדָה - paw-daw' – 6299

119 அதிகாரம்

விளைச்சொல் - மீட்டுக்கொள், மீட்டு, இரட்சி, விடுவி, தப்புவி, அகத்தியம், மீட்டுவிடு, விலக்கு, மீட்கப்படு, மீட்டிரு, மீட்கப்பட்டவர் **(to free; redeem)** (சங் 55:18; சங் 69:18; சங் 78:42; யோபு 33:28). இந்தச் சொல்லும் சங் 119:153,154,170 ஆகிய வசனங்களில் "விடுவியும்" என்னும் சொல்லும் வெவ்வேறு பொருளுடையவை.

"உமது அடியேன்மேல் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்" - உமது கிருபையையும், உமது ஆசீர்வாதத்தையும் எனக்கு அருளும்.

பதினெட்டாவது பிரிவு - த்சாடே

தேவனுடைய வார்த்தையின் பண்பு - (சங் 12:6)

பொருளடக்கம்

1. தேவனுடைய பண்புகளும், அவருடைய வார்த்தையின் பண்புகளும் - (119:137-140)
2. நிலை இல்லாத மனுஷருக்குத் தேவனுடைய வார்த்தை தேவை - (119:141-144)

1. தேவனுடைய பண்புகளும், அவருடைய வார்த்தையின் பண்புகளும்

சங் 119:137 கர்த்தாவே, நீர் நீதிபரர், உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள்.

சங் 119:138 நீர் கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும், மகா உண்மையுமானவைகள்.

சங் 119:139 என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால், என் பக்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது.

சங் 119:140 உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது, உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன்.

"கர்த்தாவே, நீர் நீதிபரர், உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள்" - கர்த்தர் நீதிபரர். அவர் செம்மையானவர். அவருடைய சாட்சிகள் நீதியானவை. உண்மையுள்ளவை (சங் 119:138).

பக்தி வைராக்கியத்திற்கு எடுத்துக்காட்டுக்கள்

1. மோசே (யாத் 2:12; யாத் 11:8; யாத் 32:19-20)
2. பினெகாஸ் (எண் 25:7-13)
3. யோசுவா (எண் 11:27-29; யோசு 7:6; யோசு 8:28)
4. கிதியோன் (நியா 6:11-32)
5. சாமுவேல் (1சாமு 12:23; 1சாமு 15:11,35; 1சாமு 16:1)
6. தாவீது (2சாமு 6; 2சாமு 7:2; 2சாமு 8:11-12)
7. யெகூ (2இராஜா 9-10)
8. இயேசு (யோவான் 2:17)
9. பேதுரு (அப் 2:14-40; அப் 3:12-26)
10. பவுல் (அப் 9:20; அப் 18:5-6; ரோமர் 9:3)

"உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது" - கர்த்தருடைய வார்த்தை பரிசுத்தமானது. அது சுத்தப்படுத்தப்பட்ட வார்த்தையல்ல. சுத்தப் படுத்தும் வார்த்தை (யோவான் 15:3; எபே 5:26; 1பேதுரு 1:22-23).

2. நிலை இல்லாத மனுஷருக்கு தேவனுடைய வார்த்தை தேவை

சங் 119:141 நான் சிறியவனும் அசட்டை பண்ணப் பட்டவனுமாயிருக்கிறேன்; ஆனாலும் உமது கட்டளைகளை மறவேன்.

119 அதிகாரம்

சங் 119:142 உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம்.

சங் 119:143 இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது; ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி.

சங் 119:144 உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்; என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்.

சங்கீதம் 119-இல் கூறப்பட்டிருக்கிற நித்தியமான காரியங்கள்

1. கர்த்தருடைய வசனம் (சங் 119:89)
2. கர்த்தருடைய உண்மை (சங் 119:90)
3. பூமி
4. தலைமுறை (வம்சம்)
5. நீதி (சங் 119:142,144)
6. சாட்சிகள் (சங் 119:144,152)
7. நியாயத்தீர்ப்புகள் (சங் 119:160)

"இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது" - என்னுடைய ஜீவியத்தில் இக்கட்டும், நெருக்கமும் வந்தது. ஆனாலும் இவை எதுவும் உம்மை விட்டு என்னைப் பிரிக்கவில்லை.

பத்தொன்பதாவது பிரிவு - கோப்

பெலத்தின் ஆதாரம் - (கொலோ 3:16)

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் இரண்டு பொருத்தனைகள் - (119:145-149)
2. சத்துருக்களுக்கு முன்பாக நம்பிக்கை - (119:150-152)

1. நான்கு விண்ணப்பங்கள் இரண்டு பொருத்தனைகள்

சங் 119:145 முழு இருதயத்தோடும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக்கேளும்; உம்முடைய பிரமாணங்களைக் கைக் கொள்ளுவேன்.

சங் 119:146 உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை இரட்சியும், அப்பொழுது நான் உம்முடைய சாட்சிகளைக் காத்துக்கொள்ளுவேன்.

சங் 119:147 அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன்; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்.

சங் 119:148 உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும்.

சங் 119:149 உம்முடைய கிருபையின்படி என் சத்தத்தைக் கேளும்; கர்த்தாவே, உம்முடைய நியாயத்தின்படி என்னை உயிர்ப்பியும்.

"முழு இருதயத்தோடு கூப்பிட்டேன்" - சங்கீதக்காரன் அதிகாலையில் எழுந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறான். குறித்த ஜாமங்களுக்கு முன்னே கர்த்தரைத் துதிக்கிறான். அவனுடைய வாயில் கர்த்தரைத் துதிக்கும் துதி எப்போதும் இருக்கிறது (சங் 119:145-149).

"உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்குமுன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்" - மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரையிலுள்ள பன்னிரெண்டு மணி நேரம் இரவு வேளை என்று அழைக்கப்படுகிறது. யூதர்கள் இந்தப் 12 மணி நேரத்தை மூன்று ஜாமங்களாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு ஜாமத்திற்கும் 4 மணிகள். ரோமர்கள் இரவு நேரத்தை 4 ஜாமங்களாக பிரித்தார்கள். ஒவ்வொரு ஜாமத்திற்கும் 3 மணிகள்.

119 அதிகாரம்

ஒவ்வொரு ஜாமத்திற்கும் காவல்காரர்களாக ஜாமக்காரர்கள் என்போர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஒரு ஜாமம் முடிந்து, அடுத்த ஜாமம் துவங்கும்போது ஜாம வேளையை அறிவிப்பார்கள். சங்கீதக்காரன் ஒவ்வொரு ஜாமத்திலும் எழுந்திருந்து, கர்த்தருடைய வசனத்தைத் தியானித்தான். (சங் 119:147-148) சங்கீதக்காரன் முதலாவது ஜாமத்திலும், கடைசி ஜாமத்திலும் ஜெபித்திருக்கலாம்.

2. சத்துருக்களுக்கு முன்பாக நம்பிக்கை

சங் 119:150 தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபிக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள்.

சங் 119:151 கர்த்தாவே, நீர் சமீபமாயிருக்கிறீர்; உமது கற்பனைகளெல்லாம் உண்மை.

சங் 119:152 நீர் உம்முடைய சாட்சிகளை என்றென்றைக்கும் நிற்க ஸ்தாபித்தீர் என்பதை, அவைகளால் நான் நெடுநாளாய் அறிந்திருக்கிறேன்.

"தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபிக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள்" - துன்மார்க்கர்கள் தீய நோக்கத்தோடு என்னை அழிக்க வேண்டுமென்று என்னைப் பின்பற்றி வருகிறார்கள். அவர்கள் இப்போது எனக்கு சமீபமாக வந்துவிட்டார்கள். என்னுடைய சத்துருக்கள் கர்த்தருடைய வசனத்தைக் கைக்கொள்வதில்லை. கர்த்தாவே நீர் எனக்கு சமீபமாக வந்து, உதவி புரியும். என் சத்துருக்களிடமிருந்து என்னை மீட்டுக் கொள்ளும் (சங் 119:150-151; சங் 119:23, 51, 85, 157)

இருபதாவது பிரிவு - ரேஷ்

விடுதலையின் ஆதாரம் - (ரோம 1:16)

பொருளடக்கம்

1. தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் உதவி வேண்டுமென்று ஆறு விண்ணப்பங்கள் - (119:153-156)
2. பாவிகள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில்லை - உதவிக்காக இரண்டு விண்ணப்பங்கள் - (119:157-160)

1. தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் உதவி வேண்டுமென்று ஆறு விண்ணப்பங்கள்

சங் 119:153 என் உபத்திரவத்தைப்பார்த்து, என்னை விடுவியும்; உமது வேதத்தை மறவேன்.

சங் 119:154 எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொள்ளும், உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும்.

சங் 119:155 இரட்சிப்பு துன்மார்க்கருக்குத் தூரமாயிருக்கிறது, அவர்கள் உமது பிரமாணங்களைத் தேடார்கள்.

சங் 119:156 கர்த்தாவே, உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது; உமது நியாயங்களின்படி என்னை உயிர்ப்பியும்.

"என் உபத்திரவத்தைப்பாரும்" - சங்கீதக்காரன் பலமுறை கர்த்தரிடத்தில் தன்னுடைய பிரச்சனைகளிலிருந்தும், உபத்திரவங்களிலிருந்தும் தன்னை விடுதலை பண்ணுமாறு விண்ணப்பம் பண்ணுகிறான். அவனுக்குச் சரீர வியாதிகளை விட விரோதிகள் மூலமாக வந்த உபத்திரவம் அதிகமாக இருந்தது. "உபத்திரவத்தைப் பாரும்" என்பது உபத்திரவத்திலிருந்து என்னை விடுவியும், உயிர்ப்பியும் என்று பொருள்படும். (Consider; deliver; plead my cause; quicken) சங் 119:50,51,53; சங் 119:67,69-71; சங் 119:75,78; சங் 119:92, 95; சங் 119:107, 110; சங் 119:153, 154-158)

119 அதிகாரம்

விடுவி (deliver) - חָלַץ - khaw-lats' - 2502

வினைச்சொல் - கழற்று, நீட்டு, விட்டு விலகு, விலக்கு, யுத்தசன்னத்தராயிரு, யுத்தஞ்செய், ஆயுதபாணிகளாயிரு, விடுவி, கொள்ளையிடு, மரண முண்டாக்கு, தப்புவி, நிணமுள்ளதாக்கு

- எபிரெய வேதாகமத்தில் விடுவி என்னும் பொருளை தருவதற்கு 25 எபிரெயச் சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த வசனத்தில் விடுவி என்பதைக் குறிப்பதற்கு பயன்படுத்தப் பட்டுள்ள சொல் "காலாட்ஸ்" (khaw-lats') என்பதாகும். இதற்கு மென்மையான கரத்தினால் விடுதலை செய்யும் என்று பொருள். இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெயச் சொல்லும், சங் 119:134,154,170 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிற எபிரெய சொல்லும் வெவ்வேறானவை.

"எனக்காக நீர் வழக்காடும்" - என்னுடைய சத்துருக்களிடமிருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்ளும். அவர்கள் எனக்கு உபத்திரவத்தைத் தருகிறார்கள். எனக்காக அவர்களிடத்தில் நீர் வழக்காடி, என்னை மீட்டுக்கொள்ளும். (சங் 119:134)

மீட்டுக்கொள் (deliver) - גְּאָלִים - gaw-al' – 1350

பெயர்ச்சொல் - மீட்பு, மீளு, சுதந்தரமாயிரு, தப்பு, உறவினனாயிரு, சுதந்தரவாளி (redeem) இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெயச் சொல்லும், சங் 119:134,153,170 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிற எபிரெய சொல்லும் வெவ்வேறானவை.

"இரட்சிப்பு துன்மார்க்கருக்குத் தூரமாயிருக்கிறது, அவர்கள் உமது பிரமாணங்களைத் தேடார்கள்" - துன்மார்க்கர் தேவனையும், அவருடைய வார்த்தையையும் தேடுவதில்லை. ஆகையினால் இரட்சிப்பு அவர்களுக்கு தூரமாக இருக்கிறது. துன்மார்க்கர் நீதிமான்களைப் போலத் தேவனைத் தேடி, அவருடைய வழிகளில் நடப்பார்கள் என்றால் துன்மார்க்கருக்கும் இரட்சிப்பு சமீபமாயிருக்கும். கர்த்தருடைய வார்த்தை எல்லோருக்கும் சமீபத்தில் இருக்கிறது. (ரோமர் 10:8) ஆனாலும், அவிசுவாசிகளுக்கு கர்த்தருடைய வசனம் பிரயோஜனப்படாது (எபி 4:2).

2. பாவிகள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில்லை - உதவிக்காக இரண்டு விண்ணப்பங்கள்

சங் 119:157 என்னைத் துன்பப் படுத்துகிறவர்களும் என்னை விரோதிக்கிறவர்களும் அநேகர்; ஆனாலும் உம்முடைய சாட்சிகளை விட்டு விலகேன்.

சங் 119:158 உமது வசனத்தைக் காத்துக்கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது, எனக்கு அருவருப்பாயிருந்தது.

சங் 119:159 இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன்; கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும்.

சங் 119:160 உம்முடைய வசனம் சமூலமும் சத்தியமும், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்.

"என்னைத் துன்பப்படுத்துகிறவர்களும் என்னை விரோதிக்கிறவர்களும் அநேகர்; ஆனாலும் உம்முடைய சாட்சிகளை விட்டு விலகேன்" - இந்த சங்கீதத்தைத் தாவீது எழுதினான் என்பதற்கு இந்த வசனமும் ஒரு ஆதாரம். தாவீதைத் துன்பப்படுத்தியவர்கள் ஏராளமான பேர் இருந்தார்கள். அவனைப் பலர் விரோதித்தார்கள்.

துரோகி (traitors) - בָּגַד - baw-gad' – 898

119 அதிகாரம்

வினைச்சொல்- துரோகம் பண்ணு, துரோகி, பாதகர், அக்கிரமஞ்செய், மோசம்பண்ணு **(transgressors, treacherous men; those who deal deceitfully)** *(சங் 119:158; சங் 59:5;நீதி 2:22; நீதி 11:3,6; நீதி 13:2,15; நீதி 21:18; நீதி 22:12; நீதி 23:28)*

சங்கீதக்காரன் தேவனிடம் நினைவு கூருமாறு ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. என் உபத்திரவம் *(சங் 119:153)*
2. உம்முடைய கட்டளைகளை நான் எவ்வளவாய் நேசிக்கிறேன். *(சங் 119:159)*

சமூலம் **(beginning)** - ראש - **roshe - 7218**

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆறு, சிகரம், நுனி, மேல், தலைவர், முகப்பு, உச்சி, குமிழ், முதல், முடி, தொகை, பாகை, முகம், சிரசு, வம்சம், பிரதானம், ஆதிமுதல், முக்காடிடு, தலைமை, முனை, பவுஞ்சு, சேனாதிபதி, அதிபதி, முக்கியம், ஆரம்பம், கொடுமுடி, தலை, பெரியது, சமூகம், ஏழை, ராஜாங்கம், தலைமாட்டு **(head; beginning)**

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஆரம்பங்கள்

1. மாசங்களின் ஆரம்பம் *(யாத் 12:2; எண் 10:10; எண் 28:11; எசே 40:1)*
2. பழிவாங்குதலின் ஆரம்பம் *(உபா 32:42)*
3. நடுஜாமத்தின் ஆரம்பம் *(நியா 7:19)*
4. கர்த்தருடைய வார்த்தையின் ஆரம்பம் *(சங் 119:160)*
5. பூமியின் ஆரம்பம் *(நீதி 8:23; ஏசா 40:21)*
6. சிருஷ்டிப்பின் ஆரம்பம் *(பிர 3:11; ஏசா 41:26; ஏசா 48:16)*
7. மனுஷனின் ஆரம்பம் *(ஏசா 41:4)*
8. ஜாமங்களின் ஆரம்பம் *(புல 2:19)*

இருபத்தொறாவது பிரிவு - ஷீன்

சமாதானத்தின் ஆதாரம் - *(நீதி 3:2)*

பொருளடக்கம்

1. துன்பத்தில் சமாதானம் பற்றிய சாட்சி - *(119:161-164)*
2. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிவது பற்றிய சாட்சி - *(119:165-168)*

1. துன்பத்தில் சமாதானம் பற்றிய சாட்சி

சங் 119:161 பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள், ஆனாலும் என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது.

சங் 119:162 மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டு பிடிக்கிறவன் மகிழுகிறதுபோல, நான் உமது வார்த்தையின்பேரில் மகிழுவேன்.

சங் 119:163 பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன்; உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்.

சங் 119:164 உமது நீதி நியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம்மைத்துதிக்கிறேன்.

பிரபுக்கள் **(Princes)** - שַׂר - **sar - 8269**

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரபு, சேனாபதி, அதிகாரி, அதிபதி, தலைவன், விசாரணைக் காரர், தலைமை, சேர்வைக்காரர், தலைமையானவன், பிரதானமானவர் **(rulers; captains; princes)** *(சங் 119:23,161)* - இஸ்ரவேலின் பிரபுக்களில் அநேகர் அப்சலோமோடு சேர்ந்துகொண்டு தாவீதிற்கு எதிராக கலகம் பண்ணினார்கள்.

(2சாமு 15-18)

119 அதிகாரம்

"காரணமில்லாமல்" - தன் தந்தைக்கு எதிராக கலகம் பண்ணுவதற்கு அப்சலோமிற்கு எந்த காரணமும் இல்லை.அதுபோலவே, அவனோடு சேர்ந்து கலகம் பண்ணியவர்களுக்கும் தாவீதிற்கு எதிராக எந்த காரணமும் அவர்களிடத்தில் இல்லை. ஆகையினால் கர்த்தர் அவர்கள் எல்லோரையும் தமது நீதிக்கு உட்படுத்தினார். (2சாமு 1 5-18)

"மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டு பிடிக்கிறவன் மகிழுகிறதுபோல" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யுத்தம் பண்ணும்போது யுத்தத்தில் ஜெயித்தவர்கள், யுத்தத்தில் தோல்வியுற்றவர்களுடைய ஆயுதங்கள், வஸ்திரங்கள், ஆபரணங்கள், கால்நடைகள் எல்லாவற்றையும் கொள்ளையுடைமையாக தங்கள்தேசத்திற்குக் கொண்டு வந்து விடுவார்கள். இதன் மூலமாக யுத்தத்தில் ஜெயிக்கிறவர்கள் ஐசுவரியம் பெற்று சந்தோஷமாக இருப்பார்கள். (ஆதி 14:11-12; எண் 31:9-10,25-54; உபா 2:35; 1சாமு 15; 1சாமு 30:24; 2நாளா 15:11)

"உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம்மைத்துதிக்கிறேன்" - ஒரு நாளில் நாம் ஏழு தரம் துதிக்க வேண்டுமென்றும், இந்தெந்த நேரங்களில் துதிக்க வேண்டுமென்றும், வேதவசனம் எங்கும் கூறவில்லை. கர்த்தரை நாம் எப்போதும் துதிக்க வேண்டும். அவர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து எல்லா வேளையிலும் அவரைப் போற்றிப் புகழவேண்டும்.

2. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிவது பற்றிய சாட்சி

சங் 119:165 உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.

சங் 119:166 கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்கு நான் காத்திருந்து, உம்முடைய கற்பனைகளின்படி செய்கிறேன்.

சங் 119:167 என் ஆத்துமா உமது சாட்சிகளைக் காக்கும்; அவைகளை நான் மிகவும் நேசிக்கிறேன்.

சங் 119:168 உமது கட்டளைகளையும் உமது சாட்சிகளையும் காத்து நடக்கிறேன்; என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது.

கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் எப்போதும் உண்டு. (பிலி 4:7)

"அவர்களுக்கு இடறலில்லை" - கர்த்தருடைய வார்த்தைக்கு ஒருவன் உண்மையாக கீழ்ப்படியும்போது கர்த்தர் அவனைப் பாதுகாப்பார். அவன் இடறல் அடையமாட்டான். நாம் இடறலடையாமல் ஜீவிக்க வேண்டுமென்பதே கர்த்தருடைய சித்தம். கர்த்தர் ஒருவனையும் இடறலடையச் செய்வது இல்லை. (மத் 5:29-30; மத் 13:41; மத் 18:6-9; யாக் 3:2)

"என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது" - நாம் கர்த்தருடைய சமூகத்தில் நிற்கும்போது அவருக்கு மறைவான காரியம் எதுவும் நம்மிடத்தில் இருக்க முடியாது. அவருடைய வார்த்தையை நாம் உண்மையிலேயே பின்பற்றுகிறோமா, அவருடைய இரட்சிப்பை உண்மையிலேயே நேசிக்கிறோமா, அவருடைய கற்பனையை உண்மையிலேயே கைக்கொள்கிறோமா என்பதையெல்லாம் கர்த்தர் ஆராய்ந்து பார்ப்பார். கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக நம்முடைய காரியங்களெல்லாம் வெளியரங்கமாயிருக்கிறது. (சங் 119:165-168)

இருபத்திரெண்டாவது பிரிவு - தௌ

தேவனுடைய வார்த்தையின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபம் - (யோவான் 17:17)

பொருளடக்கம்

1. ஞானத்திற்காக நான்கு விண்ணப்பங்கள் - தேவனுடைய வார்த்தையிலிருந்து உதவி கோருதல் - இரண்டு விண்ணப்பங்கள் - (119:169-172)

119 அதிகாரம்

2. தேவனுடைய வார்த்தையினால் இரட்சிக்கப்படவேண்டுமென்று நான்கு விண்ணப்பங்கள் - (119:173-176)

1. ஞானத்திற்காக நான்கு விண்ணப்பங்கள் - தேவனுடைய வார்த்தையிலிருந்து உதவி கோருதல் - இரண்டு விண்ணப்பங்கள்

சங் 119:169 கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக; உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும்.

சங் 119:170 என் விண்ணப்பம் உமது சந்நிதியில் வருவதாக; உமது வார்த்தையின்படி என்னை விடுவித்தருளும்.

சங் 119:171 உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும்.

சங் 119:172 உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்; ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச்சொல்லும்.

சங்கீதக்காரன் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள் (சங் 119:169-175)

1. என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக
2. உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும்
3. உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிப்பீராக
4. என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்துவதாக
5. என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச்சொல்லுவதாக
6. உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக
7. உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சியாயிருப்பதாக
8. என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது
9. உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாயிருப்பதாக.

விடுவி (deliver) - נָצַל - naw-tsal' - 5337

வினைச்சொல் - விடுதலைபெற்றிரு, தப்பு, தப்புவி, தப்புவிக்கப்படு, விடுவிக்கப்படு, கொள்ளையிடு, எடு, விடுதலையாக்கு, நீங்கலாக்கு, தப்பப்பண்ணு, விடுவி, திருப்பிக்கொள், தப்பிப்போ, தப்பிவரப் பண்ணு, இரட்சி, தப்புவிக்கப்படு, காத்தல், இரட்சத்தருள், தூக்கிவிடு, நீங்கலாக்கி விடு, தப்பித்திரு, காப்பாற்று, திரும்பு, எடுத்துக்கொள், இரட்சி, விடுவித்தருள், கழற்றிப்போடு, பறிக்கப்படு, நீங்கலாக்கு **(rescue; to pluck out of the hands of the enemy; recover)** இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெயச் சொல்லும், சங் 119:134,153,154 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிற எபிரெய சொல்லும் வெவ்வேறானவை.

"உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும்" - கர்த்தர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு, அவருடைய வார்த்தையை எனக்குள் நிறைவேற்றும்போது என்னுடைய உதடுகள் கர்த்தருடைய துதியைப் பிரஸ்தாபப்படுத்தும். என்னுடைய நாவு கர்த்தருடைய வசனத்தை விவரித்துச் சொல்லும். உமது கற்பனைகளையும், உமது நீதியையும் அறிவிக்கும். (சங் 119:172) துதிப்பது என்பது துதியின் வார்த்தைகளினால் பொங்குவது என்று பொருள்படும். (நீதி 15:2; நீதி 18:4)

119 அதிகாரம்

2. தேவனுடைய வார்த்தையினால் இரட்சிக்கப்பட வேண்டுமென்று நான்கு விண்ணப்பங்கள்

சங் 119:173 நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துகொண்டபடியால், உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக.

சங் 119:174 கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.

சங் 119:175 என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது; உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவியாயிருப்பதாக.

சங் 119:176 காணாமற்போன ஆட்டைப் போல வழிதப்பிப்போனேன்; உமது அடியேனைத் தேடுவீராக; உமது கற்பனைகளை நான் மறவேன்.

"உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக" - கரம் என்னும் சொல் தேவனுடைய வல்லமையைக் குறிக்கும். (சங் 20:6; சங் 21:8; ஏசா 50:2; ஏசா 59:1)

"நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துகொண்டேன்" - தேவனையும், தேவனுடைய வார்த்தையையும், அவருடைய நீதியையும் நாம் சுயாதீனமாகத் தேடி, கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். இல்லையெனில், நாம் பாவத்தில் மூழ்கி, அழிந்து விடுவோம்.

"காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப்போனேன்" - நாம் இரட்சிக்கப் படுவதற்கு முன்பு நாம் காணாமல்போன ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்தோம். (சங் 119:176; ஏசா 53:6) நாம் இரட்சிக்கப்பட்ட போதோ மேய்ப்பனால் தேடி கண்டுபிடிக்கப்பட்ட ஆடுகளைப் போல இருக்கிறோம்.(லூக்கா 15:1-7; 1பேதுரு 2:25)

"உமது அடியேனைத் தேடுவீராக" - இரட்சிக்கப்படாதவர்கள் காணாமற்போன ஆடுகளைப்போல வழிதப்பித் திரிகிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்தை விட்டு, விலகிப் போய்விடுகிறார்கள். (சங் 119:1) இவர்கள் மறுபடியும் கர்த்தரிடம் திரும்பி வரவேண்டும். நமது மேய்ப்பராகிய கர்த்தர்தாமே காணாமற்போன ஆடுகளைப் போல வழிதப்பித்திரியும் இரட்சிக்கப்படாத ஆத்துமாக்களைத் தேடவேண்டும். நாம் இதற்காக ஜெபிக்க வேண்டும்.

வேதாகமத்திலே நாம் கர்த்தரைத் தேடவேண்டும் என்னும் ஆலோசனை ஏராளமாக உள்ளது. கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் கர்த்தரைத் தேடவேண்டும் என்பது நிபந்தனை. (உபா 4:29; 1நாளா 4:39; 1நாளா 16:11; 1நாளா 28:9; 2நாளா 7:14; 2நாளா 15:2; ஏசா 55:6; மத் 6:33; கொலோ 3:1; எபி 11:6) ஆனால் இந்த வசனத்தில் சங்கீதக்காரன் ஆண்டவரிடம் "உமது அடியேனை தேடுவீராக" என்று விண்ணப்பம் பண்ணுகிறான். இயேசு கிறிஸ்து மனுஷனாக அவதரித்து, பூமியில் ஊழியம் செய்தபோது, இந்த விண்ணப்பத்திற்கு கர்த்தர் பதில் கொடுத்தார். இயேசு கிறிஸ்து காணாமற்போன ஆடுகளைத் தேடுவதுபோல பாவிகளைத் தேடி இரட்சிக்க வந்தார் (லூக்கா 15:1-7; லூக்கா 19:10).

"உமது கற்பனைகளை நான் மறவேன்" - இந்த சங்கீதத்தின் முதல் வசனமும், கடைசி வசனமும் தொடர்புடையது. கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் என்று இந்த சங்கீதம் துவங்குகிறது. சங்கீதக்காரன் கர்த்தருடைய கற்பனைகளை மறவாமல் அவருடைய வேதத்தின் பிரகாரம் நடப்பதாக கூறுகிறான் (சங் 119: 176).

120 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

பதினேழாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. நெருக்கத்தின் ஜெபம் - (120:1-2)
2. கபட நாவு - (120:3-4)
3. தேவனிடம் முறையீடு - (120:5-7)

1. நெருக்கத்தின் ஜெபம்

சங் 120:1 என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார்.

சங் 120:2 கர்த்தாவே, பொய் உதடுகளுக்கும் கபடநாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும்.

சங் 120-134 ஆகிய 15 சங்கீதங்களும் ஆரோகண சங்கீதங்களாகும். [A Song of degrees] இதன் பொருள் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை.

ஆரோகண சங்கீதத்திற்குப் பொதுவாக கூறப்படும் விளக்கம்

1. தேவாலயத்தின் படிக்கட்டில் 15 படிகள் உள்ளன. ஒவ்வொரு படியின்மீதும் பாடப்படும் சங்கீதம் ஆரோகண சங்கீதம் எனப்படும்.
2. பாடல் குழுவினரின் தேர்ச்சிபெற்றவர்கள் பாடும் பாடல்கள்
3. உயர்ந்த இடத்திலுள்ள படிக்கட்டில் பாடப்படும் பாடல்கள்
4. இசையும் உச்ச நிலையில் பாடப்படும் பாடல்கள்
5. உடன்படிக்கைப் பெட்டி சீயோனுக்குப் போகும்போது பாடப்படும் பாடல்கள்
6. இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் பண்டிகைகளை ஆசரிக்கப் போகும்போது பாடப்படும் பாடல்கள்
7. பாபிலோனிலிருந்து சென்ற போது பாடிய பாடல்கள்
8. எல்லா தேசங்களிலிருந்தும் வருங்காலத்தில் இஸ்ரவேலர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவதைக் குறிக்கும் பாடல்கள்
9. சபையின் அனுபவங்களைப் பாடும் பாடல்கள்
10. எசேக்கியா இராஜாவிற்கு கர்த்தர் அவனுடைய ஜீவனில் 15 வருஷங்களைக் கூட்டிக் கொடுத்தார். 15 ஆரோகண சங்கீதங்களும் இந்த 15 வருஷங்களைக் குறிக்கும். 15 ஆரோகண சங்கீதங்களில் 10 பாடல்களை இயற்றியவர் எசேக்கியா இராஜா.

இந்த வியாக்கியானங்கள் எல்லாம் சரியானது என்பதற்கு வேதத்தில் எந்த வித ஆதாரமும் இல்லை. 5,7,8,9 ஆகிய பிரிவில் வரும் கருத்துக்கள் வேதவாக்கியங்களுக்கு முரணானவை. பாபிலோனிய சிறையிருப்பிற்கு முன்பாகவே இந்த சங்கீதங்கள் எழுதப்பட்டன.

இஸ்ரவேலர்கள் கூட்டிச் சேர்க்கப் படுவதையும், சபையின் அனுபவங்களையும் இந்த ஆரோகண சங்கீதங்கள் விளக்குவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் தற்கால சபைக்கு ஆயிர வருஷங்களுக்கு முன்பாகவே இந்தப் பாடல்கள் இயற்றப்பட்டன.

ஏசாயா 38:20-இல் நாம் வாசிக்கிற பிரகாரம், இந்த சங்கீதங்களை ஒருவேளை எசேக்கியா இராஜா இயற்றி இருக்கலாம் என்று நாம் நம்பலாம்.

சங் 132:1, 6, 10, 11, 17 ஆகிய வசனங்களை வாசிக்கும்போது 132-ஆவது சங்கீதத்தை இயற்றியது தாவீது என்பது தெளிவாகத் தெரிகிறது.

120 அதிகாரம்

ஆரோகண சங்கீதங்களை யூதர்கள் எந்த சூழ்நிலையில் பயன்படுத்தினார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. வேதத்தில் மற்ற இடங்களிலும், ஆரோகணம் என்னும் சொல் தெளிவாக விளக்கப்படவில்லை. (2இராஜா 20:9-11; 1நாளா 15:18; 1நாளா 17:17; சங் 62:9; ஏசா 38:8; லூக்கா 1:52; 1தீமோ 3:13; யாக் 1:9)

"என் நெருக்கம்" - 15 ஆரோகண சங்கீதங்களை 3 பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பிரிவிற்கும் 5 சங்கீதங்கள். ஒவ்வொரு பிரிவிலுமுள்ள முதல் சங்கீதம் நெருக்கத்தையும், பாடுகளையும் பற்றி கூறுகிறது. (சங் 120, சங் 123, சங் 126, சங் 129, சங் 132) ஒவ்வொரு பிரிவின் இரண்டாம் சங்கீதம் கர்த்தரை நம்புவதையும், அவருடைய இரட்சிப்பையும் கூறுகிறது. (சங் 121, சங் 124, சங் 127, சங் 130, சங் 133) ஒவ்வொரு பிரிவின் மூன்றாம் சங்கீதம் சீயோன்மீது கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் கூறுகிறது. (சங் 122, சங் 125, சங் 128, சங் 131, சங் 134)

சங்கீதக்காரனையும், அவனுடைய ஜெபத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. ஜெபம் பண்ணுதல் - நெருக்கம் (சங் 120:1)
2. ஜெபத்தின் அனுபவம் - நான் கூப்பிட்டேன்
3. ஜெபத்தின் பலன் - அவர் எனக்குச் செவிகொடுத்தார்
4. ஜெபத்தின் கருத்து - மீட்பு (சங் 120:2)
5. ஜெபத்தின் நோக்கம் - ஆத்தும இரட்சிப்பு
6. ஜெபத்தில் கேள்வி (சங் 120:3-4)
7. பதில் பெறுவதற்கு முன்பு ஜெபத்தில் முறையீடுகள்

2. கபட நாவு

சங் 120:3 கபடநாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்?

சங் 120:4 பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்.

"கபடநாவே" - யாருடைய கபடநாவு என்று தெளிவாகக் கூறப்படவில்லை. இது பொதுவான சொல்லாக இருக்கலாம். ராப்சாக்கேயின் நாவாக இருக்கலாம். (2இராஜா 18:19-35; 2இராஜா 19:8-13; 2நாளா 32:10-19; ஏசா 36:4-20; ஏசா 37:8-13) சனகெரிப் எருசலேமை முற்றுகையிட்டபோது ஏற்பட்ட நெருக்கமாக இருக்கலாம். (2இராஜா 19; ஏசா 37) தாவீதின் துயரமாக இருக்கலாம் (1சாமு 24:9; 2சாமு 15-18; சங் 52).

"சூரைச்செடிகளை எரிக்கும் தழல்" - சூரைச்செடிகளை எரிக்கும் தழல் மிகுந்த வெப்பம் உடையது. நீண்ட நேரம் எரியக்கூடியது. கபடநாவு உடையவர்களுக்குக் கர்த்தருடைய தண்டனை அதிகமாக இருக்கும், நீண்டகாலம் நிலைக்கும் என்பதைக் குறிப்பதற்கு இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (வெளி 21:8; வெளி 22:15).

3. தேவனிடம் முறையிடு

சங் 120:5 ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்!

சங் 120:6 சமாதானத்தைப் பகைக்கிறவர்களிடத்தில் என் ஆத்துமா குடியிருந்ததும் போதும்!

சங் 120:7 நான் சமாதானத்தை நாடுகிறேன்; அவர்களோ, நான் பேசும்போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள்.

"மேசேக்கு" பாலஸ்தீனா, சீரியா ஆகிய தேசங்களில் வடக்கு பகுதியில் வசித்த ஜனங்கள் (எசே 27:13; எசே 32:26; எசே 38:2-3; எசே 39:1).

120 அதிகாரம்

"கேதார்" - இஸ்மவேலின் ஜனங்கள் - ஐபிராத்து நதிக்கு நேராக மோவாப், அம்மோன் ஆகிய தேசங்களுக்கு அப்பால் இருந்த ஜனங்கள். (ஆதி 25:13; ஏசா 21:16-17; ஏசா 42:11; ஏசா 60:7; எரே 2:10; எரே 49:28; எசே 27:21).

மேசேக்கின் ஜனங்களும், கேதாரின் ஜனங்களும் சமாதானத்தை வெறுப்பவர்கள். எப்போதும் சண்டை போட விரும்புகிறவர்கள் (சங் 120:5-7).

121 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

தேவனுடைய ஏழாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய உதவி - (121:1-2)
2. உதவியின் பத்து அம்ச வாக்குத் தத்தம் - (121:3-8)

1. தேவனுடைய உதவி

சங் 121:1 எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

சங் 121:2 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங் களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்" - 120-ஆவது சங்கீதம் சங்கீதக்காரனுடைய உபத்திரவங்களையும் பாடுகளையும் விவரித்தது. 121-ஆவது சங்கீதம் கர்த்தரை நம்புவது பற்றியும், ஆபத்துக் காலத்தில் கர்த்தருடைய உதவி பற்றியும் விளக்குகிறது. (சங் 121: 1-8)

"பர்வதங்கள்" - தேவனுடைய ஆசரிப்புக் கூடாரம் இந்த காலத்தில் எருசலேம் பர்வதங்களில் இருந்தது. அது நித்தியகாலமாக இருக்கும். (ஏசா 2:1-4; எசே 43:7)

சங்கீதம் 121-இல் கூறப்பட்டிருக்கிற தேவனிடமிருந்து வரும் உதவிகள்

1. ஆபத்துநாளிலே ஒத்தாசை வரும் (சங் 121:1-2)
2. வானத்தையும் பூமியையும் உண்டாக்குதல் (சங் 121:2)
3. நெருக்கத்திலே நிலைத்திருத்தல் (சங் 121:3)
4. பகலிலும், இரவிலும் கர்த்தர் காப்பார்
5. சத்துருக்களுக்கு எதிராக கர்த்தர் நம்மைக் காக்கிறார் (சங் 121:4)
6. பகலிலே வெயிலிலிருந்து பாதுகாப்பார் (சங் 121:5-6)
7. இரவில் நிலவிலிருந்து பாதுகாப்பார் (சங் 121:6; மத் 17:15)
8. எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார் (சங் 121:7)
9. ஆத்துமாவைக் காப்பார்
10. போக்கிலும் வரத்திலும் என்றைக்குங் காப்பார் (சங் 121:8)

2. உதவியின் பத்து அம்ச வாக்குத்தத்தம்

சங் 121:3 உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

சங் 121:4 இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

சங் 121:5 கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

சங் 121:6 பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

சங் 121:7 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

சங் 121:8 கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

122 அதிகாரம்

(தாவீது பாடின ஆரோகண சங்கீதம்.)

சீயோனின் இரண்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. ஆராதனை நடைபெறும் ஸ்தலம் - (122:1-2)
2. எருசலேம் - (122:3-5)
3. எருசலேமைக் குறித்த அறிவுரையும், ஆசீர்வாதமும் - (122:6-9)

1. ஆராதனை நடைபெறும் ஸ்தலம்

சங் 122:1 கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.

சங் 122:2 எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று.

"கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்" - 15 ஆரோகண சங்கீதங்களில் நான்கு சங்கீதங்களைத் தாவீது எழுதினான். (சங் 22; சங் 124; சங் 131; சங் 133) 124-ஆவது சங்கீதம் ஆரோகண சங்கீதங்களுக்கு நடுவில் உள்ளது. இதை இயற்றியது சாலொமோன். முதல் 7 சங்கீதங்களிலும் இரண்டாவது 7 சங்கீதங்களிலும் யெகோவா **(Jehovah)** **(Lord)** என்னும் பெயர் 24 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"கர்த்தருடைய ஆலயம்" - ஆசரிப்புக் கூடாரத்திற்குத் தாவீது தனது ஜீவியத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தான். மனமகிழ்ச்சியாக ஆலயத்திற்குச் சென்று ஆண்டவரை ஆராதித்தான் (2சாமு 6-7; 1இராஜா 5:5; 1நாளா 15:1-17:27; 1நாளா 21:18-29:19).

2. எருசலேம்

சங் 122:3 எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது.

சங் 122:4 அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும்.

சங் 122:5 அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது.

"கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும்" - வருஷத்தில் மூன்று முறை இஸ்ரவேலின் ஆண்மக்கள் எல்லோரும் ஆராதிப்பதற்காகவும், தேவனுடைய பிரமாணங்களைக் கற்றுக் கொள்வதற்காகவும் கூடி வருவார்கள். (யாத் 23:17; உபா 16:16) திரளான புருஷர்கள் எருசலேமிலுள்ள ஆலயத்திற்குச் சென்று தேவனை ஆராதிப்பதற்கு கூடிவருவதினால் பாதைகளெல்லாம் ஜனங்களால் நிரம்பியிருந்தது.

கர்த்தர் **(LORD)** - יָהּ - **yaw** - **3050**

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர் - சங் 122:1,4,9 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள யெகோவா **(Jehovah)** என்னும் பெயரை இந்த பெயர் குறிக்காது.

"இஸ்ரவேலுக்கு சாட்சி" - உடன்படிக்கைப் பெட்டி (யாத் 26:34; யாத்30:6; யாத் 31:7; யாத் 39:35; யாத் 40:3-21)

"சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள்" - எருசலேமில்ஜனங்களை நியாயம் விசாரிக்கும் நீதிமன்றங்கள் இருந்தன. நியாயப் பிரமாணத்தின் பிரகாரம் எல்லோருக்கும் நீதியாக நியாயம் வழங்கப்பட்டது.

122 அதிகாரம்

3. எருசலேமைக் குறித்த அறிவுரையும், ஆசீர்வாதமும்

சங் 122:6 எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.

சங் 122:7 உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.

சங் 122:8 என் சகோதரர்நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும், உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன்.

சங் 122:9 எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தமும் உனக்குநன்மையுண்டாகத் தேடுவேன்.

"எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக" - இந்த கட்டளைக்கு தற்காலத்தில் உள்ள விசுவாசிகளும் கீழ்ப்படிய வேண்டும். இதற்குக் கீழ்ப்படிகிற அனைவரும் சுகித்திருப்பார்கள்.

"உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக" - சமாதானமும், சுகமும் சேர்ந்திருக்கும். அதுபோல யுத்தமும், பஞ்சமும் சேர்ந்து வரும் (சங் 122:7-9; மாற்கு 24:6-7; வெளி 6:1-8).

123 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

பதினெட்டாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. உதவியின் ஆதாரம் - (123:1-2)

2. உதவிக்காக இரண்டு விண்ணப் பங்கள் - (123:3-4)

1. உதவியின் ஆதாரம்

சங் 123:1 பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.

சங் 123:2 இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் நமக்கு இரக்கம் செய்கிறவர். ஒரு வேலைக்காரன் தன் எஜமானனின் கையைத் தன்னுடைய சம்பளத்திற்காக நோக்கிப் பார்ப்பதைப்போல, நாம் நமது நன்மைக்காக கர்த்தரை நோக்கிப் பார்க்கிறோம். ஒரு வேலைக்காரியின் கண்கள் தன் சம்பளத்திற்காகவும், சலுகைக்காகவும், எஜமாட்டியின் கையை நோக்கிப் பார்ப்பதைப் போல, தேவனுடைய கிருபைக்காகவும், அவருடைய இரக்கத்திற்காகவும் நாம் அவரை நோக்கிப் பார்க்கிறோம் (சங் 123:1-2).

2. உதவிக்காக இரண்டு விண்ணப் பங்கள்

சங் 123:3 எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்; நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக் கிறோம்.

சங் 123:4 சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும், அகங்காரி களுடைய இகழ்ச்சியினாலும், எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது.

"எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்; நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம்" - சங்கீதக்காரன் எங்களுக்கு இரங்கும் என்று விண்ணப்பம் செய்யும் அதே வேளையில் தன்னுடைய நிந்தனையைப் பற்றியும் முறையிடுகிறான் (சங் 123:3-4). தன்னை நிந்திப்பவன் யாரென்று இந்த சங்கீதத்தில் கூறவில்லை.

124 அதிகாரம்

(தாவீது பாடின ஆரோகண சங்கீதம்.)

மீட்பின் மூன்றாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவன் இஸ்ரவேலுக்கு உதவி செய்திராவிட்டால் - (124:1-2)
2. அப்பொழுது - மூன்று அம்ச விளைவு - (124:3-5)
3. மீட்பிற்காக துதித்தல் - (124:6-8)

1. தேவன் இஸ்ரவேலுக்கு உதவி செய்திராவிட்டால்

சங் 124:1. மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்,

சங் 124:2 கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால்,

124-ஆவது சங்கீதம் கர்த்தர்மீது இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் முழு நம்பிக்கையை வைத்து, அவரைச் சார்ந்திருப்பதை விளக்குகிறது. கர்த்தர் இஸ்ரவேலரின் பக்கத்தில் இராவிட்டால் அவர்களுடைய விரோதிகள் இஸ்ரவேலரை உயிரோடே விழுங்கி இருப்பார்கள் (சங் 124:1-5). கர்த்தர் இஸ்ரவேலின் பக்கத்தில் இருந்தார். ஆகையினால் அவர்களுடைய சத்துருக்களினால் அவர்கள் அருகில் வரமுடியவில்லை. உபத்திரவத்தின் தண்ணீர்கள் இஸ்ரவேலர்கள்மீது பாய்ந்து வந்தது. அவர்களுக்கு விரோதமாக வந்த சத்துருக்கள் வெள்ளங்கள்போல அவர்கள் ஆத்துமாவின் மேல் பெருகிவந்தார்கள். அனால் இந்த வெள்ளத்திலும் தண்ணீர்களிலும் இஸ்ரவேலர்களை மூழ்கிப் போகாதவாறு கர்த்தர் காத்துக் கொண்டார் (சங் 124:3-5).

2. அப்பொழுது - மூன்று அம்ச விளைவு

சங் 124:3 அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.

சங் 124:4 அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி,

சங் 124:5 கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின்மேல் புரண்டு போயிருக்கும் என்று இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

தேவன் இஸ்ரவேலின் பக்கத்திலிரா விட்டால் அவர்களுக்கு வந்திருக்கும் உபத்திரவங்கள்

1. அவர்களை உயிரோடே விழுங்கியிருப் பார்கள் (சங் 124:3)
2. கொந்தளிக்கும்ஜலங்கள் (விரோதிகள்) அவர்கள் ஆத்துமாவின்மேல் புரண்டு போயிருக்கும் (சங் 124:4)
3. வெள்ளங்கள் அவர்கள் ஆத்துமாவின் மேல் பெருகியிருக்கும். (சங் 124:5)

3. மீட்பிற்காக துதித்தல்

சங் 124:6 நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக் கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சங் 124:7 வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.

சங் 124:8 நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.

124 அதிகாரம்

"கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" - கர்த்தர் களிகூருவாராக - **(Happy is the Lord)** சங்கீதப் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 14 இடங்களில் வந்திருக்கிறது. (சங் 28:6; சங் 31:21; சங் 41:13; சங் 66:20; சங் 68:19,35; சங் 72:18; சங் 89:52; சங் 106:48; சங் 113:2; சங் 119:12, சங் 124:6; சங் 135:21; சங் 144:1)

"அவர்களுடைய பற்கள்"- சங் 124:2-இல் கூறப்பட்டிருக்கிற மனுஷருடைய பற்கள்

"நம்முடைய ஆத்துமா தப்பிற்று" - நம்முடைய என்பது சங்கீதக்காரன் என்னும் தனிநபரைக் குறிக்காமல், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் குறிக்கிறது (சங் 124:1-2). இந்த சங்கீதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பன்மைச் சுட்டுப் பெயர் இதை உறுதிசெய்கிறது (சங் 124:1-8).

"வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல" - இஸ்ரவேலர்கள் குறிப்பாக எந்தக் கண்ணியிலிருந்து தப்பினார்கள் என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்படவில்லை. கர்த்தர் இஸ்ரவேலரை ஏராளமான ஆபத்துக்களிலிருந்தும், கண்ணிகளிலிருந்தும் மீட்டுக் கொண்டார். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து தேவன் இஸ்ரவேலரை விடுதலை பண்ணினார். இஸ்ரவேலர்கள் விரோதிகளின் கண்ணிகளிலிருந்து தப்பியது மூன்று காரியங்களை தெளிவுபடுத்துகிறது. அவையாவன:

1. இஸ்ரவேலரின் பலவீனம்

2. அவர்களுடைய சத்துருக்களின் பெலன்

3. தேவனுடைய அற்புத வல்லமை

"கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்" - தேவனுடைய பிள்ளைகளுக்குப் பலவிதமான சோதனைகளும், பாடுகளும் வரலாம். இவையெல்லாவற்றிலிருந்து, தப்பித்துக் கொள்ளும்படியான போக்கை கர்த்தர் நமக்குத் தருவார். கர்த்தர் அற்புதமாகத் தம்முடைய பிள்ளைகளை விடுதலை பண்ணுவார் (சங் 91; 1கொரி 10:13-14).

"நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது" - இது சத்தியமான வாக்கியம். இஸ்ரவேலர்கள் இதை விசுவாசித்தார்கள். நாமும் இந்த வாக்கியத்தை விசுவாசிக்க வேண்டும். நம்முடைய பாவம், வியாதி, பாடுகள் ஆகியவற்றிலிருந்து கர்த்தர் நம்மை விடுதலை செய்வார் என்று நம்ப வேண்டும். கர்த்தரே நம்முடைய சகாயர் (சங் 91; மத் 8:17; யோவான் 10:10; யாக் 5:14-16; 1பேதுரு 2:24).

125 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

நம்பிக்கையின் ஆறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நம்புகிறவர்களுக்கு பாதுகாப்பு - (125:1-3)
2. நியாயத்தீர்ப்புக்காக ஜெபம் - (125:4-5)

1. நம்புகிறவர்களுக்கு பாதுகாப்பு

சங் 125:1 கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும்சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்.

சங் 125:2 பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இது முதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்.

சங் 125:3 நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடிக்கு, ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.

கர்த்தரை நம்பினவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. நோவா (ஆதி 6:14-22; எபி 11:7)
2. ஆபிரகாம் (ஆதி 12:1-4; எபி 11:8-19)
3. தாவீது (சங் 11:1; சங் 31:1-15)
4. எசேக்கியா (2இராஜா 18:5)
5. மூன்று எபிரெய வாலிபர்கள் (தானி 3:16-17,28)
6. தானியேல் (தானி 6)
7. கிறிஸ்து (எபி 2:13)

நித்தியமான காரியங்கள்

1. சீயோன் பர்வதம் (சங் 125:1; சங் 104:5; பிர 1:4)
2. கர்த்தரை நம்புகிறவர்கள் (சங் 125:1)
3. எருசலேமைச் சுற்றிலுமிருக்கும் பர்வதங்கள் (சங் 125:2)
4. கர்த்தரும் அவருடைய ஜனமும்

"ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான் களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது" - ஆகாமியத்தின் கொடுங்கோல் என்பது இஸ்ரவேலருடையசத்துருக்களின் ஆட்சியைக் குறிக்கும். நீதிமான்கள்மீது துன்மார்க்கர் நிரந்தரமாக ஆட்சி செய்வதில்லை.

2. நியாயத்தீர்ப்புக்காக ஜெபம்

சங் 125:4 கர்த்தாவே, நல்லவர் களுக்கும் இருதயத்தில் செம்மையான வர்களுக்கும் நன்மைசெய்யும்.

சங் 125:5 தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக் கர்த்தர் அக்கிரமக்காரரோடே போகப் பண்ணுவார். இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு.

"கர்த்தாவே, நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மை செய்யும்"- கர்த்தர் நியாயமாகவே நல்லவர்களுக்கும், இருதயத்தில் செம்மை யானவர்களுக்கும் நன்மை செய்வார். இது தேவனுடைய பிரமாணம். மனுஷன் விதைத் ததை அறுவடை செய்வான். (மத் 10:42; மத் 16:27; கலா 6:7-8) கர்த்தர் தமது பிரமாணத்தை மறக்கமாட்டார். கர்த்தர் நல்லவர்களுக்கு நன்மைசெய்வார் என்பதை மனுஷர் தான் நினைவுகூரவேண்டும். ஏனெனில் மனுஷனுடைய சுபாவமே பாவமும், சுயமும் நிறைந்தது.

'தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக் கர்த்தர் அக்கிரமக்கார ரோடே போகப்பண்ணுவார்" - அவிசுவாசி களையும், கர்த்தரை விட்டு பின்வாங்கிப் போகிறவர்களையும், கர்த்தருடைய மெய் வழியைப் பின்பற்றாமல் பாவத்தின் பொய் வழியைப் பின்பற்றுகிறவர்களையும், கர்த்தர் தண்டிப்பார். இவர்கள் ஒடுக்கமான வாசல் வழியாக பிரவேசியாமல், அகலமான வாசல் வழியாக பிரவேசித்து, தங்கள் அழிவைத் தேடிக் கொள்வார்கள்.

126 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

மீட்பின் நான்காவது சங்கீதம்

பொருளடக்கம்

1. சீயோனின் மீட்பு - விளைவு - (126:1-4)

2. விதைப்பதும், அறுப்பதும் - (126:5-6)

1. சீயோனின் மீட்பு - விளைவு

சங் 126:1 சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது, சொப்பனம் காண்கிறவர்கள்போல் இருந்தோம்.

சங் 126:2 அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது; அப்பொழுது: கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.

சங் 126:3 கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.

சங் 126:4 கர்த்தாவே, தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல, எங்கள் சிறையிருப்பைத் திருப்பும்.

"சீயோனின் சிறையிருப்பு" - இஸ்ரவேல் தேசம் துன்பத்தில் மூழ்கியிருந்தது. அதன்பின்பு கர்த்தர் அவர்களை விடுவித்தார். இஸ்ரவேலர்கள் பலமுறை சிறையிருப்பில் இருந்தார்கள். இந்த சங்கீதம் அவர்களுடைய எந்த சிறையிருப்பைப் பற்றிக் கூறுகிறது என்று தெளிவாகத் தெரியவில்லை. நியாயாதிபதிகள், இராஜாக்கள் ஆகியோர்களின் காலங்களில் சில காலங்கள் இஸ்ரவேலருக்கு சிறையிருப்பு போலவே இருந்தது. (நியா 5:12; 1சாமு 30:2-5;1இராஜா 8:46-50; 2இராஜா 5:2; 2இராஜா 15:29)

பாபிலோனிய சிறையிருப்பு மட்டுமே இஸ்ரவேலரின் சிறையிருப்பு என்று கூறமுடியாது. எருசலேம் பலமுறை யுத்தத்தில் தோல்வியுற்றிருக்கிறது. சத்துருக்கள் அவர்களை ஜெயித்திருக்கிறார்கள். (1இராஜா 14:25-28; 2நாளா 21:16-17)

யூதாவின் பாபிலோனிய சிறையிருப்பை இந்த சங்கீதம் கூறுகிறது என்று தெளிவாகச் சொல்லமுடியாது. இது பாபிலோனிய சிறையிருப்பைப் பற்றிக் கூறுமென்றால் இந்த சங்கீதத்தைத் தாவீதோ அல்லது எசேக்கியாவோ இயற்றியிருக்க முடியாது. ஏனெனில் இவர்கள் இருவருமே பாபிலோனிய சிறையிருப்பிற்கு பல நூறு வருஷங்களுக்கு முன்பு இருந்தவர்கள்.

"சொப்பனம் காண்கிறவர்கள்" - இஸ்ரவேலர்களின் சிறையிருப்பை கர்த்தர் திருப்பியபோது, அவர்கள் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் எதிர்பாராத நல்ல காரியம் அவர்களுக்கு நேரிட்டது. (சங் 126:1-4) தாங்கள் சிறையிருப்பிலிருந்து மீட்கப்பட்ட செய்தி, அவர்களுக்குக் கூறப்பட்டபோது, அந்த செய்தியை அவர்களால் நம்பவே முடியவில்லை. திடீரென்று எதிர்பாராத வேளையில் இப்படி ஒரு செய்தி வந்ததினால் அவர்கள் சொப்பனம் காண்கிறவர்களைப் போல இருந்தார்கள். அந்தச் செய்தி உண்மையானதா, அல்லது சொப்பனமா என்று அவர்களால் நிதானிக்க முடியவில்லை.

"அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது" - நம்முடைய சிறையிருப்புக்களையும், பிரச்சனைகளையும், அடிமைத்தனங்களையும், கண்ணீர்களையும், கவலைகளையும், துக்கங்களையும் கர்த்தர் திருப்பும்போது நமக்கும் சந்தோஷமாக இருக்கும். தேவனைத் துதித்துப் பாடுவோம்.

"நம்முடைய வாய் நகைப்பினால் நிறைந்திருந்தது" - இஸ்ரவேலர்கள் ஏதோ ஒரு இக்கட்டில் இருந்தார்கள். கர்த்தர் அதிலிருந்து அவர்களை விடுவித்தார் என்று கூறமுடியாது (யோபு 42:10; எசே 16:53,55). இந்த வசனத்தையும், இது எழுதப்பட்ட சூழ்நிலையையும் தியானித்துப் பார்க்கும்போது அவர்கள் உண்மையிலேயே சிறையிருப்பில்தான் இருந்தார்கள் என்பது தெளிவாகும். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பைத் திருப்பினார்.

126 அதிகாரம்

"கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்" - இஸ்ரவேலருக்காக கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்து வருகிறார் என்று புறஜாதியார்கள் தங்கள் கண்களினால் கண்டு, அந்தச் சத்தியத்தைத் தங்கள் வாய்களினால் அறிக்கை பண்ணினார்கள்.

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்" - இஸ்ரவேலர்கள் துன்பப்பட்டபோது கர்த்தருடைய நன்மைகளும், இரக்கங்களும் அவர்களைச் சூழ்ந்துகொண்டது. கர்த்தர் அவர்களுக்காகப் பெரிய காரியங்களைச் செய்தார்.

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்" என்று இஸ்ரவேலர்கள் அறிக்கை பண்ணியதுபோலவே "கர்த்தர் இவர்களுக்கு பெரிய காரியங்களைச் செய்தார்" என்று புறஜாதிகளும் அறிக்கை பண்ணினார்கள் (சங் 126:2).

"கர்த்தாவே, தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல, எங்கள் சிறையிருப்பைத் திருப்பும்" - ஆண்டவரே, எங்கள் சிறையிருப்பிலிருந்து எங்களை விரைவாக மீட்டுக்கொள்ளும். தங்கள் பாடுகளிலிருந்து சீக்கிரமாக விடுதலை பெற வேண்டுமென்று விரும்பினார்கள். விடுதலை பெற்ற பிறகு எங்கு போவது என்னும் தெளிவான எண்ணம் இஸ்ரவேலருக்கு இல்லை. அவர்களுடைய பாடுகள் சிறையிருப்பில் அதிகமாக இருந்தபடியினால் "தெற்கத்தி வெள்ளங்களை திருப்புவதுபோல" தங்களை விரைவாக சிறையிருப்பிலிருந்து மீட்கும்படியாக விண்ணப்பம் பண்ணினார்கள். எபிரெய மொழியில் தென்திசையை குறிப்பதற்கு "நேகேப்" **(Negeb)** என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது யூதேயா தேசத்தின் மலைப் பிரதேசம். மழைக்காலங்களில் நேகேப் மலையிலிருந்து காட்டு வெள்ளம் கரைபுரண்டு ஓடிவரும். இதுவே தெற்கத்தி வெள்ளங்கள் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

2. விதைப்பதும், அறுப்பதும்

சங் 126:5 கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

சங் 126:6 அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்.

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" - ஆதி 8:22; கலா 6:7-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற விதைப்பு-அறுப்பு சத்தியத்தை சங் 126:5-6 உறுதிபண்ணுகிறது.

ஒரு விவசாயி தான் விதைத்தது நன்றாக விளையவில்லை என்றால் மிகுந்த துன்பம் அடைவான். மறுபடியும் விதைப்பான். ஆனால் அவனால் சந்தோஷமாக விதைக்க முடியாது. பழைய நஷ்டங்களையும் கஷ்டங்களையும் நினைத்து கண்ணீரோடு விதைப்பான். அவ்வாறு ஜெபத்தோடும், கண்ணீரோடும் விதைக்கும்போது கர்த்தர் அவனைக் கைவிடமாட்டார். கம்பீரத்தோடு அறுவடை செய்வதற்கு உதவி புரிவார்.

தன்னிடத்திலிருந்த ஒரே விதையையும் விதைத்து விட்டான். கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவனுக்குத் திரளான ஆசீர்வாதங்களைத் தருவார் (சங் 126:5-6).

இந்த வசனம் சுவிசேஷத்தை விதைப்பதையும் கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்களை அறுவடை செய்வதையும் குறிக்கும். கர்த்தருடைய வார்த்தையை நாம் விதைக்கும்போது கர்த்தர் விரும்பும் பலனை அது தரும். அப்படியே கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் அவரிடத்திற்குத் திரும்பாமல், அவர் விரும்புகிறதைச் செய்து, அவர் அதை அனுப்பின காரியம் வாய்க்கும்படிச் செய்யும் (ஏசா 55:11; மத் 13:3-8,19-23; ரோமர் 10:17; 2கொரி 4:3-4; 2தீமோ 3:16; 1பேதுரு 1:23).

127 அதிகாரம்

(சாலொமோன் பாடின ஆரோகண சங்கீதம்.)

நம்பிக்கையின் ஏழாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. மனுஷனை நம்புவது விருதா - (127:1-2)

2. தேவனை நம்புவது பலன் தரும் - (127:3-5)

1. மனுஷனை நம்புவது விருதா

சங் 127:1 கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா;

சங் 127:2 கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா.

இந்த சங்கீதம் 15 ஆரோகண சங்கீதங்களில் (சங் 120-134) நடுவில் உள்ளது. இதை சாலொமோன் இயற்றியிருக்கலாம் அல்லது இது சாலொமோனுக்காக இயற்றப்பட்டிருக்கலாம்.

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" - தேவனை ஒதுக்கி வைத்துவிட்டு, மனுஷன் செய்யும் எல்லா காரியமும் விருதா. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரைச் சார்ந்தே செய்ய வேண்டும். அது வீடாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும், வியாபாரமாக இருந்தாலும் நாம் செய்யும் எல்லா காரியங்களிலும் கர்த்தருக்கு முக்கியத்துவம் தரவேண்டும்.

2. தேவனை நம்புவது பலன் தரும்

சங் 127:3 நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.

சங் 127:4 இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.

சங் 127:5 வாலவயதின் குமாரர் பலவான்கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" - ஆதியிலே கர்த்தர் மனுஷனை பலுகிப் பெருகுங்கள் என்றார். (சங் 127:3; ஆதி 1:26-28; ஆதி 8:22;9:12; ஏசா 9:6-7; ஏசா 59:21; தானி 2:44-45; தானி 7:13-14,27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5) இந்த வசனங்களின் பிரகாரமாகவும், வேதாகமத்திலுள்ள இன்னும் ஏராளமான வசனங்களின் பிரகாரமாகவும் பிள்ளைகள் எல்லோரும் கர்த்தரால் வரும் சுதந்தரமாக இருக்கிறார்கள்.

மனுஷன் பாவத்தில் வீழ்ந்ததினால் தேவனுடைய திட்டம் தோல்வியுறவில்லை. அவருடைய திட்டம் நிறைவேறுவதில் சற்று கால தாமதம் ஆயிற்று. (சங் 8; ஏசா 66:22-24; 1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 21:3-7; வெளி 22:3, வெளி 21-22)

"வாலவயதின் குமாரர் பலவான்கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்" - ஒரு பலவானிடத்தில் அதிக எண்ணிக்கையில் அம்புகள் இருந்தால் அவன் அதிகமான சத்துருக்களை வீழ்த்துவான். நமக்கு அதிக பிள்ளைகள் இருந்து அவர்கள் எல்லோருமே இரட்சிக்கப்பட்டால் தேவனுடைய ஊழியத்திற்கு பெரிய உதவியாக இருப்பார்கள். தேவனுடைய சேனையில் சேர்ந்து போரிடுவதற்கு அநேக போர்வீரர்கள் இருப்பார்கள்.

"அம்புகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்" - அநேக பிள்ளைகளைப் பெற்றெடுத்தவன் பாக்கியவான்.

சங்கீதம் - தொகுப்புரை

128 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

நீதிமானின் எட்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நான்கு தனிப்பட்ட ஆசீர்வாதங்கள் - (128:1-2)
2. இரண்டு குடும்ப ஆசீர்வாதங்கள் - (128:3-4)
3. நான்கு தேசீய ஆசீர்வாதங்கள் - (128:5-6)

1. நான்கு தனிப்பட்ட ஆசீர்வாதங்கள்

சங் 128:1 கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

சங் 128:2 உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு ஆசீர்வாதங்கள்

1. தங்கள் கைகளின் பிரயாசத்தை அனுபவிப்பார்கள் (சங் 128:2)
2. அவர்கள் மகிழ்வார்கள்
3. அவர்களுக்கு நன்மை உண்டாகும்
4. அவர்கள் மனைவியர் கனிதரும் கொடியைப் போலிருப்பார்கள் (சங் 128:3)
5. அவர்கள் பிள்ளைகள் ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள்
6. கர்த்தரால் அவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள் (சங் 128:5)
7. அவர்கள் நன்மையானவைகளையே காண்பார்கள்
8. அவர்கள், தங்களுடைய நாளெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவார்கள்
9. அவர்கள், நீடித்த நாட்களாய் ஜீவிப்பார்கள் (சங் 128:6)
10. அவர்கள் சமாதானத்தைக் காண்பார்கள்

2. இரண்டு குடும்ப ஆசீர்வாதங்கள்

சங் 128:3 உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.

சங் 128:4 இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

3. நான்கு தேசீய ஆசீர்வாதங்கள்

சங் 128:5 கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

சங் 128:6 நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் , இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

129 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

நான்காவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம்

பொருளடக்கம்

1. சாட்சி - கடந்த காலத்துன்பங்களும் மீட்பும் - (129:1-4)
2. நியாயத்தீர்ப்புக்காக மூன்று விண்ணங்கள் - (129:5-8)

1. சாட்சி - கடந்த காலத்துன்பங்களும் மீட்பும்

சங் 129:1 என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கினார்கள்.

சங் 129:2 என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கியும், என்னை மேற்கொள்ளாமற் போனார்கள்.

சங் 129:3 உழுகிறவர்கள் என் முதுகின் மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்.

சங் 129:4 கர்த்தரோ நீதியுள்ளவர்; துன்மார்க்கருடைய கயிறுகளை அவர் அறுத்தார் என்று, இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

"என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கினார்கள்" - இஸ்ரவேல் தேசம் இப்பொழுது பூரணவளர்ச்சி பெற்ற ஒரு புருஷனாக வர்ணிக்கப்படுகிறது. இதன் ஆரம்ப காலத்தில் இஸ்ரவேல் தேசம் சிறு வயது பிள்ளையாக இருந்தபோது இதற்கு பல்வேறு உபத்திரவங்கள் வந்தன. கர்த்தர் சிறுவயது முதலே இஸ்ரவேல் தேசத்தைப் பாதுகாத்து வந்திருக்கிறார்.

இஸ்ரவேலின் சிறுவயது என்பது எகிப்து தேசத்தில் அது ஒரு தேசமாக உருவான ஆரம்ப நாட்களைக் குறிப்பிடும்(சங் 129:1-2; எரே 2:2; எசே 16:4; ஓசி 2:15).

"உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்" - இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தார்கள். அவர்களுடைய முதுகில் பாரமான நுகங்களைச் சுமத்தினார்கள். இஸ்ரவேலர்கள் அடிமையாக இருந்ததினால் அவர்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கப்படவில்லை. கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பின் கட்டுக்களை அறுத்தார் (சங் 129:3-4).

2. நியாயத்தீர்ப்புக்காக மூன்று விண்ணங்கள்

சங் 129:5 சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்.

சங் 129:6 வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக; அது வளருமுன் உலர்ந்துபோம்.

சங் 129:7 அறுக்கிறவன் அதினால் தன் கையையும், அரிகளைக் கட்டுகிறவன் தன் மடியையும் நிரப்புவதில்லை.

சங் 129:8 கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாவதாக; கர்த்தரின் நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம் என்று வழிப்போக்கர் சொல்வதுமில்லை.

"சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்" - சத்துருக்கள் யுத்தத்தில் தோல்வியடைய வேண்டும் என்று ஏறெடுக்கப்படும் விண்ணப்பம். உமது சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலே செய்யப்படுவதாக (மத் 6:10) என்று ஜெபிக்கிறோம். இது உடன்படிக்கையின் ஜெபம். இதன் உண்மையான பொருள் தேவனுடைய சத்துருக்கள் தோல்வியடைய வேண்டுமென்பதுதான். இந்த வாக்கியம் நிறைவேறும். (ஏசா 63:1-8; எசே 38:17-21; எசே 39:2,17-21; யோவே 3; சக 14; வெளி 19:11-21).

129 அதிகாரம்

"வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக; அது வளருமுன் உலர்ந்துபோம்" - துன்மார்க்கர் அழியவேண்டும் என்று சங்கீதக்காரன் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். கிழக்குதேசங்களிலுள்ள வீடுகளின் கூரைகள் தட்டையாக இருக்கும். அவற்றில் விழும் விதைகள் இயற்கையாகவே முளைக்கும். ஆனாலும், வளமான மண் இல்லாமலும், உரம் இல்லாமலும், வீட்டின்மேல் முளைக்கும் புல் சரியாக வளரும் முன்பாகவே உலர்ந்துபோகும். இதுபோலவே துன்மார்க்கரும் அழிந்துபோவார்கள்.

"அறுக்கிறவன் அதினால் தன் கையையும், அரிகளைக் கட்டுகிறவன் தன் மடியையும் நிரப்புவதில்லை" - வீட்டின்மேல் முளைக்கும் புல்லினால் யாருக்கும் பயனில்லை. வயலில் புல் அறுத்தால், மாடுகளுக்குத் தீவனமாகப் போடலாம். அறுக்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும் (ரூத் 2:4). ஏனெனில் வயல் வெளிகளில் ஏராளமான புல் முளைத்திருக்கும். ஆனால் வீட்டின் கூரையிலோ புல்லும் அதிகமாக முளைத்திருக்காது, முளைத்த புல்லும் பசுமையாக இராது. காய்ந்து சருகாக இருக்கும். இந்தப் புல்லை அறுப்பதினால் யாருக்கும் பயனில்லை. அதுபோலவே, துன்மார்க்கர் யாருக்கும் பயன்படமாட்டார்கள்.

130 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

பத்தொன்பதாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. நெருக்கத்தின் ஜெபத்தின் ஐந்து அம்சங்கள் - *(130:1-4)*
2. கர்த்தருக்குக் காத்திருப்பது - காரணம் - *(130:5-6)*
3. இஸ்ரவேலுக்கு அறிவுரையும் வாக்குத்தத்தமும் - *(130:7-8)*

1. நெருக்கத்தின் ஜெபத்தின் ஐந்து அம்சங்கள் - *(3:1; 4:1; 6:1; 12:1; 13:1; 17:1; 25:1; 27:1)*

சங் 130:1 கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

சங் 130:2 ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும்; என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக.

சங் 130:3 கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே.

சங் 130:4 உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு.

சங்கீதக்காரனின் பின்வாங்கிப்போன நிலைமை

1. அவனுடைய நிலைமை *(சங் 130:1)*
2. அவனுடைய ஜெபம் *(சங் 130:1-4)*
3. அவனுடைய கேள்வி *(சங் 130:3)*
4. அவனுடைய வாக்குத்தத்தம் *(சங் 130:4,7-8)*
5. அவனுடைய காத்திருப்பு *(சங் 130:5-6)*
6. அவனுடைய நம்பிக்கை *(சங் 130:5,7)*
7. அவனுடைய விசுவாசம்*(சங் 130:4,7-8)*

ஆழம் - מַעֲמַקִּים - mah-am-awk' - 4615

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆழம் **(deep place)** *(ஏசா 51:10; எசே 27:34, சங் 69:2,14)* - பாவத்தின் ஆழத்தைக் குறிக்கிறது. *(சங் 130:3,4,7,8)*

சங்கீதக்காரனின் விண்ணப்பங்கள்

1. என் சத்தத்தைக் கேளும் *(சங் 130:2)*
2. என் விண்ணப்பங்களின் சத்தத்திற்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக
3. இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக *(சங் 130:7)*

"உமது செவிகள் கவனித்திருப்பதாக" - இது உருவகமா அல்லது உண்மையா என்று வெவ்வேறு விதமான கருத்துக்கள் உள்ளன. கர்த்தருக்கு உண்மையிலேயே செவிகள் உண்டு என்று ஒருசிலரும், கர்த்தருடைய செவிகள் என்பது ஒரு உருவகமே **(figurative)** என்று வேறு சிலரும் கூறுகிறார்கள் (ஆதி 1:26-28; ரோமர் 1:20).

"கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே" - கர்த்தர் நமது பாவங்களை நோக்கிப் பார்ப்பார் என்றால், அவர் முன்பாக எந்த மனுஷனாலும் நிற்கமுடியாது. அவர் நமது பாவங்களைத் தமது கிருபையினால் மன்னித்து நம்மைப் பாவம் செய்யாதவர்களைப் போல கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தருடைய பார்வையில் நாம் பரிசுத்தவான்களாகவும், நீதிமான்களாகவும் இருக்கிறோம். *(சங் 32:1-2; ஏசா 1:18-20; மத் 1:21; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; 2கொரி 6:9-11; 1கொரி 7:1; கலா 5: 16-26; கொலோ 3:5-10; எபி 10:1-18; எபி 12:14; 1யோவான் 1:7,9; 1யோவான் 2:1-2,29; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:1-4,18).*

130 அதிகாரம்

"உமக்குப் பயப்படும்படிக்கு" - நம்மிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்க வேண்டும். தேவனுடைய சமூகத்தில் நாம் பயபக்தியோடு வரவேண்டும். கர்த்தர் தமது கிருபையினால் நம்மை மன்னிப்பார்.

2. கர்த்தருக்கு காத்திருப்பது - காரணம்

சங் 130:5 கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன்.

சங் 130:6 எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப்பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது.

காத்திரு (wait) சங் 130:5 קָוָה - kaw-vaw' - 6960

வினைச்சொல் - காத்திரு, சேர், நம்பிக்கைவை, எதிர்பார்த்திரு (சங் 130:5-6)

3. இஸ்ரவேலுக்கு அறிவுரையும் வாக்குத்தத்தமும்

சங் 130:7 இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.

சங் 130:8 அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக் கொள்வார்.

இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருக்கவேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் அக்கிரமங்களைக் கவனிக்க மாட்டார் (சங் 130:3)
2. கர்த்தரிடத்தில் மன்னிப்பு உண்டு (சங் 130:4)
3. கர்த்தரிடத்தில் கிருபை உண்டு (சங் 130:7)
4. அவரிடத்தில் திரளான மீட்பு உண்டு
5. சகல அக்கிரமங்களினின்றும் கர்த்தர் மீட்டுக்கொள்வார் (சங் 130:8)

"கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும்" - கர்த்தர் கிருபை உள்ளவர். மனுஷன் முதன்முதலாக பாவம் செய்து பாவத்தில் விழுந்தபோது அவனை மீட்க வேண்டும் என்று கர்த்தர் தமது கிருபையினாலும், இரக்கத்தினாலும் சித்தம் கொண்டார். (சக 12:10-13:2).

"அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார்" - இஸ்ரவேலை மீட்பதற்காக தேவன் அவர்களுடைய பாவநிவாரண பலியானார். இஸ்ரவேலுக்காக மீட்பின் கிரயத்தைச் செலுத்தினார். முழு உலகத்திலும் உள்ளவர்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையிலே மரித்தார்.

131 அதிகாரம்

(தாவீது பாடின ஆரோகண சங்கீதம்.)

நீதிமானின் ஒன்பதாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. அவனுடைய தாழ்மையும் நம்பிக்கையும் - (131:1)
2. மனுஷன் முன்பாக அவனுடைய நடத்தை - (131:2)
3. தேவனிடத்தில் அவனுடைய நித்திய நம்பிக்கை - (131:3)

1. அவனுடைய தாழ்மையும் நம்பிக்கையும்

சங் 131:1 கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை.

தாவீதின் சாட்சி

1. என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல (சங் 131:1)
2. என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல
3. பெரிய காரியங்களில் நான் தலையிடுவதில்லை
4. எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுவதில்லை
5. நான், பால்மறந்த குழந்தையைப் போலானேன் (சங் 131:2)
6. குழந்தையைப் போல் என் ஆத்துமாவை அடக்கி அமரப்பண்ணினேன்
7. என் ஆத்துமா பால் மறந்த குழந்தையைப் போல் இருக்கிறது

"என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல" - என்னுடைய இருதயத்தில் பெருமையோ இறுமாப்போ இல்லை. என்னுடைய கண்கள் மேட்டிமையாகப் பார்க்காது. மற்றவர்களுக்குரியதை நான் ஆசைப்படமாட்டேன். என்னைவிட ஏழையாக இருப்பவர்களை நான் ஏளனமாகப் பார்க்க மாட்டேன். என்னை மிஞ்சின காரியங்களில் நான் தலையிடுவதில்லை. நான் எளிமையாகவும், தாழ்மையாகவும், குழந்தையைப்போலவும் இருக்க விரும்புகிறேன் (சங் 131:1-2).

2. மனுஷன் முன்பாக அவனுடைய நடத்தை

சங் 131:2 தாயின் பால்மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப் பண்ணினேன்; என் ஆத்துமா பால்மறந்த குழந்தையைப் போல் இருக்கிறது.

"தாயின் பால்மறந்த குழந்தையைப்போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப் பண்ணினேன்; என் ஆத்துமா பால்மறந்த குழந்தையைப் போல் இருக்கிறது" - மற்றவர்கள் மத்தியில் என் ஸ்தானத்தை நான் தெரிந்து வைத்திருக்கிறேன். எனக்கு கட்டுப்பாடும், பயிற்சியும் தேவை. தாயின் பால்மறந்த குழந்தை தன் ஆகாரத்திற்காக அழாது. தன் தாயின் அரவணைப்பில் இருந்தாலே தனக்குப் போதும் என்று நினைக்கும். இதுபோலவே என்னுடைய ஆத்துமாவும் கர்த்தரையே நம்பியிருக்கிறது (சங் 131:2-3).

3. தேவனிடத்தில் அவனுடைய நித்திய நம்பிக்கை

சங் 131:3 இதுமுதல் என்றென்றைக்கும் இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக.

"இதுமுதல் என்றென்றைக்கும் இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக" - திருப்தியடைவதிலும், பால்மறந்த குழந்தை தன் தாயை நம்புவதுபோலவும், இஸ்ரவேல் ஜனங்கள் என் முன்மாதிரியை பின்பற்றுவார்களாக (சங் 130:5-8).

132 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

சீயோனின் மூன்றாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தாவீதின் துன்பமும் ஆணையும் - (132:1-5)
2. தாவீது உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டுபிடித்த இடம் - (132:6-7)
3. தேவனுடைய கிருபைக்காக நான்கு விண்ணங்கள் - (132:8-10)
4. தாவீதுக்குத் தேவன் இட்ட ஆணை - (132:10-12)
5. கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டார் - (132:13-14)
6. சீயோன் மீது கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் - (132:15-18)

1. தாவீதின் துன்பமும் ஆணையும்

சங் 132:1 கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்.

சங் 132:2 அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணு மட்டும்,

சங் 132:3 என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை.

சங் 132:4 என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று,

சங் 132:5 கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனைபண்ணினான்.

132-ஆவது சங்கீதத்தில் சங்கீதக்காரன் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. தாவீதை நினைத்தருளும் (சங் 132:1)
2. தாவீதின் சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்
3. கர்த்தருக்கு, தாவீது எப்படி உறுதியளித்தான் என்பதை நினையும் (சங் 132:2)
4. அவன், கர்த்தருக்கு எவ்வாறு பொருத்தனை பண்ணினான் என்பதை நினைத்தருளும்.
5. அவன் என்னென்ன பொருத்தனை பண்ணினான் என்பதை நினைத்தருளும் (சங் 132:3-7)
6. கர்த்தாவே, உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும் (சங் 132:8)
7. கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் எழுந்தருளும்
8. உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்திருப்பார்களாக (சங் 132:9).
9. உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக
10. நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் முகத்தைப் புறக்கணியாதிரும் (சங் 132:10)

சங்கீதம் 132-ஐ இயற்றியது தாவீது என்பதற்குக் ஆதாரங்கள்

1. சாலொமோன், எசேக்கியா அல்லது வேறு நபர் இந்த சங்கீதத்தை எழுதினார் என்பது நிரூபிக்கப்படவில்லை.
2. இந்த சங்கீதத்தில் தாவீதின் பெயர் நான்கு முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது (சங் 132:1,10,11,17)
3. சங்கீதக்காரன் தன்னை வேறொரு நபர்போலக் காண்பித்துக் கொள்கிறான். அப்போஸ்தலர் பவுலும் தன்னை வேறொரு நபர்போலக் காண்பித்தார் (2கொரி 12:1-10)

132 அதிகாரம்

4. இந்த சங்கீதம் முழுவதுமாக தாவீதைப் பற்றியே விளக்குகிறது.

5. சங்கீதம் 132:1-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பொருத்தனைகளும், உபத்திரவங்களும் தாவீதுடையவை. தாவீதைத் தவிர வேறுயாருக்கும் இந்தக் காரியங்கள் தெளிவாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

6. சங்கீதக்காரன் பெத்லகேமிலுள்ள எப்பிராத்தாவிலே வளர்ந்தவன். இது தாவீதின் சொந்த ஊர் (சங் 132:6; மீகா 5:2)

7. சங்கீதக்காரன் தன்னைப் பற்றி "உமது தாசன்" "நீர் அபிஷேகம் பண்ணுவித்தவன்" என்று கூறுகிறான். இது தாவீதின் பொதுவான வாக்கியம் (சங் 132:10)

8. இந்தச் சங்கீதம் முழுவதுமே தாவீதைப் பற்றிக் கூறுகிறது. தாவீதின் பாடுகள் (சங் 132:1), உடன்படிக்கைப் பெட்டியைத் திரும்பக் கொண்டுவருவதற்காக தாவீதின் பொருத்தனை (சங் 132:1-5), தாவீதின் பிறந்தஇடம் (சங் 132:6), தாவீதின் ஆராதனை (சங் 132:7), உடன்படிக்கைப்பெட்டியை திரும்பக் கொண்டுவருதல் (சங் 132:8-10), தாவீதின் உடன்படிக்கை (சங் 132:11-18).

"அவனுடைய சகல உபத்திரவம்" - தாவீதிற்கு பல உபத்திரவங்கள் இருந்தன. பல வேளைகளில் இதற்காக தாவீது ஜெபம் பண்ணியிருக்கிறான்.

"யாக்கோபின் வல்லவர்" - ஆதி 28-ஆம் அதிகாரத்தில் யாக்கோபின் வல்லவரைக் குறித்து நாம் வாசிக்கிறோம். பஞ்சாகமத்தைத் தவிர இந்த வாக்கியம் சங் 132:2; ஏசா 1:24, ஏசா 49:26, ஏசா 60:16 ஆகிய வசனங்களில் மட்டுமே காணப்படுகிறது.

தாவீதின் பொருத்தனைகள் (சங் 132:2-7)

1. நான், என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதில்லை

2. என் படுக்கையாகிய கட்டிலின் மேல் ஏறுவதில்லை

3. என் கண்களுக்கு நித்திரையை வரவிடுவதில்லை

4. என் இமைகளுக்கு உறக்கத்தை வரவிடுவதில்லை

5. நான், கர்த்தருக்காக ஒரு இடத்தை காணும் வரையிலும்

6. யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தை காணும் வரையிலும்

7. நான், அவருடைய வாசஸ்தலங்களுக்குள் பிரவேசிப்பேன்

8. அவர் பாதபடியில் நான் பணிவேன்

"கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனைபண்ணினான்" - இந்த சங்கீதம் எழுதப்பட்ட காலத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி சீயோனில் இல்லை. இதைச் சீயோனுக்கு கொண்டு வருவதாகவும், அங்கு உடன்படிக்கைப் பெட்டிக்கு ஒரு ஆசரிப்புக்கூடாரம் கட்டுவதாகவும் தாவீது பொருத்தனை பண்ணினான் (2சாமு 6; 2நாளா 13, 1சாமு 4-7).

2. தாவீது உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டுபிடித்த இடம்

சங் 132:6 இதோ, நாம் எப்பிராத்தாவிலே அதின் செய்தியைக் கேட்டு, வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம்.

சங் 132:7 அவருடைய வாசஸ்தலங்களுக்குள் பிரவேசித்து, அவர் பாதபடியில் பணிவோம்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பெத்லகேமிலுள்ள எப்பிராத்தாவிலே இருந்ததாக கேள்விப்பட்டார்கள் (மீகா 5:2).

"வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம்" - கீரியாத்-யாரீமிலுள்ள வயல்வெளியில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை நாங்கள் கண்டோம். (1நாளா 13:5) சீயோனிலே இந்தப் பெட்டிக்காக நாங்கள் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கும் இடத்திற்கு இதைக் கொண்டு போவோம். அவருடைய பாதபடியில் நாங்கள் பணிவோம் (சங் 132:7).

132 அதிகாரம்

வனம் (wood) - יַעַר - yaw-ore' - 3293

ஆ.பெசொ. - காடு, வனம், சோலை, மரம் (a forest) (சங் 132:6; சங் 80:13; சங் 83:14; சங் 96:12; உபா 19:5; யோசு 17:15,18; 1சாமு 14:25-26; 2சாமு 18:6-8,17; 2இராஜா 2:24; 1நாளா 16:33; பிர 2:6; உன் 2:3; ஏசா 7:2; மீகா 7:14)

3. தேவனுடைய கிருபைக்காக நான்கு விண்ணப்பங்கள்

சங் 132:8 கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும்.

சங் 132:9 உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக.

சங் 132:10 நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் முகத்தை உமது தாசனாகிய தாவீதினிமித்தம் புறக்கணியாதிரும்.

"கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் நீர் உமது தாபர ஸ்தலத்திற்குள் எழுந்தருளும்" - கீரியாத்-யாரீமிலிருந்து தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எடுத்து எருசலேமிலுள்ள சீயோனில் நிறுவப்பட்டிருக்கும் புதிய ஆசரிப்புக்கூடாரத்திற்குக் கொண்டு செல்லும்போது தாவீது தேவனிடம் விண்ணப்பம் பண்ணினான் (சங் 132:8-10; 2சாமு 6; 1நாளா 13). இந்த வாக்கியங்கள் சாலொமோன் தேவாலயத்தைப் பிரதிஷ்டை பண்ணியபோது கூறியவை என்று ஒரு சிலர் கூறுகிறார்கள் (2நாளா 6:41-42). ஆகையினால் இந்த சங்கீதத்தை இயற்றியவர் சாலொமோன் என்றும் முடிவு பண்ணுகிறார்கள். சாலொமோன் இதை எழுதியிருப்பானென்றால் அவனுடைய தந்தையாகிய தாவீதின் பெயரை இந்த சங்கீதத்தில் எழுதுவதற்கு வாய்ப்பில்லை.

4. தாவீதுக்குத் தேவன் இட்ட ஆணை

சங் 132:11 உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும்,

சங் 132:12 உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும், காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார்.

தீர்க்கதரிசன எண் - 93

"உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும்..........." (சங் 132:11-18) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியில் நிறைவேறும். தாவீதின் குமாரனாகிய மேசியா யாக்கோபின் வீட்டாரையும், தாவீதின் வீட்டாரையும் நித்தியகாலமாக ஆட்சிபுரிவார் (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33).

"கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்" - சங் 132:11-18 ஆகிய வசனங்களில் தேவனுடைய ஆணையையும், சங் 132:2-7 ஆகிய வசனங்களில் தாவீதின் ஆணைகளையும் நாம் வாசித்தறியலாம்.

சங்கீதம் 132-இல் காணப்படும் தாவீதினுடைய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள்

1. மேசியா தாவீதின் மாம்சமாகவும் இரத்தமாகவும் இருப்பார் (சங் 132:11)
2. தாவீதின் சிங்காசனத்தின் மேல் உட்காருவார்
3. தாவீதின் சந்ததியார் என்றென்றைக்கும், தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் (ஏசா 9:6-7; ஆமோ 9:11; லூக்கா 1:32-33; அப் 15:13-18; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5)

132 அதிகாரம்

4. கர்த்தர் சீயோனைத் தெரிந்தெடுத்தார் (சங் 132:13)

5. அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார் (சங் 132:13-14)

6. சீயோன், என்றென்றைக்கும் அவர் தங்குமிடம் (சங் 132:14; எசே 43:7; எசே 48:35; சக 14)

7. இங்கு, கர்த்தர் வாசம் பண்ணுவார் (சங் 132:14; எசே 43:7; எசே 48:35; சக 14)

8. கர்த்தர், சீயோனின் ஆகாரத்தை ஆசீர்வதிப்பார் (சங் 132:15)

9. அதின் ஏழைகளை அப்பத்தினால் திருப்தியாக்குவார் (சங் 132:15; மீகா 4)

10. அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவார் (சங் 132:16)

11. அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்

12. தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப் பண்ணுவார் (சங் 132:17)

13. என்றைக்கும், தாவீதின் வீட்டில் விளக்கை ஆயத்தம் பண்ணுவார்

14. அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவார் (சங் 132:18)

15. அவன் மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் (சங் 132:18; எரே 30:9; எசே 37:24; ஓசி 3:5)

"உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன்" - அப் 2:30-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும், காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள்" - இக்காலத்தில் நாம் பலவிதமான உபதேசங்களைக் கேள்விப் படுகிறோம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள், உடன்படிக்கைகள், ஆசீர்வாதங்கள் எல்லாமே நிபந்தனையற்றவை என்று நாம் நினைக்கிறோம். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், கர்த்தர் கூறும் நிபந்தனைகளுக்கும் நாம் கட்டுப்பட வேண்டும். தேவன் கிருபையுள்ளவர். அதேசமயத்தில் அவர் நீதிபரர்.

5. கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொண்டார்

சங் 132:13 கர்த்தர் சீயோனைத் தெரிந்து கொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும் படி விரும்பினார்.

சங் 132:14 இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பின படியால், இங்கே வாசம்பண்ணுவேன்.

6. சீயோன் மீது கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்

சங் 132:15 அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன்; அதின் ஏழைகளை நான் அப்பத்தினால் திருப்தியாக்குவேன்.

சங் 132:16 அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்; அதிலுள்ள பரிசுத்தவான்கள் மிகவும் கெம்பீரிப்பார்கள்.

சங் 132:17 அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்; நான் அபிஷேகம் பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம்பண்ணினேன்.

சங் 132:18 அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்; அவன் மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார்.

சங்கீதம் - தொகுப்புரை

132 அதிகாரம்

வேதாகமத்தில் "விளக்கு" என்னும் வார்த்தையின் பயன்பாடுகள்

1. வெளிச்சத்தைத் தரும் விளக்கு (நியா 7:16,20; மத் 25:1-13)
2. சத்தியத்திற்கு அடையாளமான விளக்கு (யாத் 27:20; லேவி 24:2; எபி 10:1)
3. தெய்வீக வெளிப்பாடு (ஆதி 15:17; எசே 1:13; தானி 10:6)
4. தேவனுடைய அடையாளம் (2சாமு 22:29)
5. ஞாபகத்தின் அடையாளம் (1இராஜா 15:4)
6. ஒற்றுமையின் அடையாளம் (யோபு 12:5)
7. தேவனுடைய வார்த்தையின் அடையாளம் (சங் 119:105; நீதி 6:23)
8. ஜீவனின் அடையாளம் (நீதி 13:9; நீதி 20:20)
9. இரட்சிப்பின் அடையாளம் (ஏசா 62:1)
10. சாத்தானின் அடையாளத்தை விளக்குவதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தை (யோபு 41:19,34)
11. கேருபீனை விளக்குவதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தை (எசே 1:13)
12. தேவனுடைய கண்களை விளக்குவதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தை (தானி 10:6)
13. பரிசுத்த ஆவியானவரின் அடையாளம் (வெளி 4:5)
14. மேசியாவின் அடையாளம் - அவர் தாவீதின் விளக்காக இருக்கிறார் (சங் 132:17)
15. நியாயத்தீர்ப்பின் அடையாளம் (வெளி 8:10)

"நான் அபிஷேகம்பண்ணுவித்தவன்" என்பது தாவீதைக் குறிக்கும் (சங் 132:10).

133 அதிகாரம்

(தாவீது பாடின ஆரோகண சங்கீதம்.)

இருபதாவது போதக சங்கீதம் - பரிசுத்தவான்களின் ஒற்றுமை பற்றிய உபதேசம்

பொருளடக்கம்

1. ஒற்றுமை பற்றிய உபதேசம் - (133:1)
2. ஒற்றுமையின் விளக்கம் - (133:2-3)

1. ஒற்றுமை பற்றிய உபதேசம்

சங் 133:1 இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?

ஒருமித்து வாசம்பண்ணுகிறதின் ஆசீர்வாதங்கள்

1. எல்லாம் நன்மையானது
2. எல்லாம் இன்பமானது

ஒருமித்து வாசம்பண்ணுகிறவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆபிரகாம், லோத்து (ஆதி 12:5; ஆதி 13:1-8)
2. ரூத், நாகோமி (ரூத் 1:16-17)
3. யோனத்தான், தாவீது (1சாமு 18:1-4; 1சாமு 19:1-7; 1சாமு 20:4, 35-42)
4. ரேகாபியர் (எரே 35:2-5,18)
5. ஆதித்திருச்சபை (அப் 2:44-45)

ஒருமித்து வாசம்பண்ணாதவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. யோசேப்பு, சகோதரர்கள் (ஆதி 37; ஆதி 42:21-22)
2. சீகேமியர் (நியா 9:1-6,22-52)
3. ஏசா, யாக்கோபு (ஆதி 25, 28)
4. யெகூ, மற்றவர்கள் (2இராஜா 9)
5. கொரிந்தியர் (1கொரி 6:1-8)

2. ஒற்றுமையின் விளக்கம்

சங் 133:2 அது ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,

சங் 133:3 எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.

அபிஷேகம்

அபிஷேகத்தின் வகைகள்

1. எண்ணெய் (ஆதி 28:18; ஆதி 35:14; மாற்கு 6:7-13; யாக் 5:14-16)
2. சுகந்த வர்க்கங்கள் (யாத் 30:22-25)
3. பரிசுத்த ஆவி (சங் 45:7; ஏசா 61:1; லூக்கா 4:18-21; அப் 10:38; எபி 1:9)

அபிஷேகம் பண்ணப்பட்ட நபர்களும், பொருட்களும்

1. கல் (ஆதி 28:18; ஆதி 35:14)
2. ஆசரிப்புக் கூடாரம், தட்டு முட்டுச் சாமான்கள் (யாத் 30:26-27; யாத் 40:9; லேவி 8:10-11; எண் 7:1)
3. சரீரம் (உபா 28:40; ரூத் 3:3; எஸ் 2:12; சங் 92:10; சங் 105:15; மத் 6:17)
4. தீர்க்கதரிசிகள் (1இராஜா 19:16; சங் 105:15)
5. ஆசாரியர்கள் (யாத் 29:7,29; யாத் 40:13; சங் 133:2)

133 அதிகாரம்

6. இராஜாக்கள் (1சாமு 16:3,13; 2சாமு 2:4; 1இராஜா 19:15; 1நாளா 29:22)

7. விருந்தினர் (லூக்கா 7:46)

8. அடிமைகள் (2நாளா 28:15)

9. நோயாளிகள் (மாற்கு 6:13; யாக் 5:14-15)

10. மரித்தவர் (மத் 26:12; மாற்கு 14:8; மாற்கு 16:1)

11. மேசியா (சங் 45:7; ஏசா 61:1; தானி 9:24; லூக்கா 4:18-21; அப் 10:38)

12. பரிசுத்தவான்கள் (2கொரி 1:21; 1யோவான் 2:20,27)

தாடியை நீளமாக வளர்த்திருந்தவர்கள்

1. ஆரோன் (சங் 133:2)

2. சிம்சோன் (நியா 16:17)

3. தாவீது (1சாமு 21:13)

4. தாவீதின் மனுஷர்கள் (2சாமு 10:4)

5. எசேக்கியேல் (எசே 5:1)

எகிப்தியர்கள் தங்கள் தாடிகளைச் சிரைத்து விடுவார்கள் (ஆதி 41:14). துக்க காலத்தில் அவர்கள் தாடிகளைச் சிரைப்பதில்லை (2சாமு 19:24). துன்பமான காலத்தில் தாடியிலுள்ள மயிரைப் பிடுங்குவார்கள் (எஸ்றா 9:3). தாடியின் ஓரங்களை புறஜாதி தெய்வங்களுக்காக இஸ்ரவேலர்கள் சிரைத்துப் போடக்கூடாது. (லேவி 19:27; லேவி 21:5) குஷ்டரோகிகள் தங்கள் தாடி மயிரைச் சிரைக்க வேண்டும் (லேவி 13:29-33; லேவி 14:9).

"அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறது" - (யாத் 29:7; லேவி 8:12; லேவி 21:10).

"எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது" - அபிஷேகம் பண்ணப்பட்டவன்மீது அபிஷேகத்தைலம் ஊற்றப்படும். எர்மோன் பர்வதத்திலும், சீயோன் பர்வதத்திலும் இருந்து பனிஇறங்கும். கோடைகாலத்திலும் பனி இறங்கும். எக்காலத்திலும் அந்தப் பர்வதங்களின் பனி இறங்கிக்கொண்டேயிருக்கும். அது போலவே, கர்த்தருடைய ஆசீர்வாதம் என்றென்றைக்கும் அபிஷேகம் பண்ணப் பட்டவர்கள்மீது தங்கியிருக்கும்.

"அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்" - கர்த்தர் சீயோனிலே நித்திய ஜீவனையும், நித்திய ஐக்கியத்தையும் கட்டளையிடுகிறார். ஜனங்கள் இங்கிருந்து நித்தியகாலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் (சங் 125:1-2; சங் 132:13-14; சங் 134:3; ஏசா 2:2-4; ஏசா 59:20-21; ரோமர் 11:25-29).

சங்கீதம் – தொகுப்புரை

134 அதிகாரம்

(ஆரோகண சங்கீதம்.)

பொருளடக்கம்

1. பதினாறாவது துதியின் சங்கீதம் - (134:1-2)

1. பதினாறாவது துதியின் சங்கீதம்

சங் 134:1 இதோ, இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

சங் 134:2 உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

சங்கீதம் 134 ஆரோகண சங்கீதங்களில் கடைசி சங்கீதமாகும். இந்தச் சங்கீதத்தை இயற்றியவர் யாரென்று தெளிவாகத் தெரியவில்லை. தாவீது இதை எழுதியிருக்கலாம் என்பது பொதுவான கருத்து. 134, 135 ஆகிய இரண்டு சங்கீதங்களையும் எழுதியவர் ஒருவரே. சங் 135:1-3 ஆகிய வசனங்களை ஒப்பிடும்போது இது தெளிவாகும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு கூறப்படும் கட்டளைகள்

1. நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் (சங் 134:1)
2. உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எ ங்கள் (சங் 134:2)

"கர்த்தரின் ஊழியக்காரரே" - கர்த்தருடைய ஊழியக்காரர் என்பது தேவனுடைய ஆலயத்தில் இரவு வேளையில் காவல்புரிந்த ஆசாரியரையும், லேவியரையும் குறிக்கும் (சங் 134:1; சங் 135:1-2). இரவு வேளையில் தேவாலயத்தில் ஆராதனை நடைபெறவில்லை.

கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுப்பதன் பொருள்

1. தெய்வீக வல்லமையின் அடையாளம் (யாத் 9:29)
2. விசுவாசத்தின் கிரியை (யாத் 17:12)
3. ஜெபத்தில் ஒரு வழக்கம் (1இராஜா 8:22,38,54; சங் 28:2; சங் 88:9; ஏசா 1:15)
4. தேவனைத் தேடும் செயல் (சங் 68:31; சங் 143:6)
5. கீழ்ப்படிதலின் கிரியை (சங் 119:48)
6. ஆராதனையின் கிரியை (சங் 134:2; சங் 143:6)
7. நியாயத்தீர்ப்பின் கிரியை (ஏசா 25:11)
8. சிருஷ்டிப்பின் கிரியை (ஏசா 45:12)
9. அழைப்பு (ஏசா 65:2)
10. துன்பமாக இருப்பதை விவரிக்கும் கிரியை (எரே 4:31; புல 1:17)
11. ஆசீர்வாதத்தின் கிரியை (லூக்கா 24:50
12. கொலை தண்டனையை நிறைவேற்றுவதற்கு அங்கீகாரம் (அப் 12:1)

135 அதிகாரம்

பதினேழாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று ஆறு அம்ச அறிவுரை - *(135:1-3)*
2. தேவனுடைய மகத்துவத்தின் பதினாறு அம்சங்கள் - *(135:4-14)*
3. விக்கிரகங்கள், விக்கிரக ஆராதனைக் காரர் ஆகியவை பற்றிய எட்டு அம்ச மாயை - *(135:15-18)*
4. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் ஆறு அம்ச அறிவுரை - *(135:19-21)*

1. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று ஆறு அம்ச அறிவுரை

சங் 135:1 அல்லேலூயா, கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்; கர்த்தரின் ஊழியக்காரரே, துதியுங்கள்.

சங் 135:2 கர்த்தருடைய வீட்டிலும், நமது தேவனுடைய ஆலயப் பிராகாரங்களிலும் நிற்கிறவர்களே, கர்த்தரைத் துதியுங்கள்.

சங் 135:3 கர்த்தர் நல்லவர்; அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அது இன்பமானது.

சங்கீதக்காரன் கூறும் புத்திமதிகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் *(5 தடவைகள், சங் 135:1,3,21)*
2. அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள் *(சங் 135:3).*
3. கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள் *(5 தடவைகள், சங் 135:19-21).*

"கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்" - கர்த்தரையும், அவருடைய நாமத்தையும் துதிக்க வேண்டும். ஸ்தோத்திரம் பண்ண வேண்டும் *(சங் 135:1,3, 19-21).*

"தேவனுடைய ஆலயப்பிராகாரங்களிலும் நிற்கிறவர்களே" - சங் 134:1-ஆவது வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

"தேவனுடைய ஆலயப்பிராகாரங்கள்" - தேவாலயத்தில் இந்தப் பிரகாரம் வரையிலும் பொதுஜனங்கள் வந்து ஆராதிக்கலாம். தேவாலயம் கட்டப்பட்டபோது இந்தப் பிரகாரங்களில் புறஜாதியார் ஆராதிக்கும் இடங்களும், யூதர்கள் ஆராதிக்கும் இடங்களும் வேறுபல மண்டபங்களும் கட்டப்பட்டன.

கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் நல்லவர் *(சங் 135:3)*
2. அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவது இன்பமானது
3. கர்த்தர் யாக்கோபைத் தமக்காகத் தெரிந்து கொண்டார் *(சங் 135:4)*
4. இஸ்ரவேலைத் தமக்குப் பொக்கிஷமாகத் தெரிந்து கொண்டார்
5. கர்த்தர் பெரியவர் *(சங் 135:5)*
6. எல்லா தேவர்களுக்கும் மேலானவர்
7. கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார் *(சங் 135:6)*
8. பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மேகங்களை எழும்பப் பண்ணுவார் *(சங் 135:7)*
9. மழையுடன் மின்னலையும் உண்டாக்குவார்
10. காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து புறப்படப்பண்ணுவார்
11. எகிப்திலே மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும் மிருகத்தின் தலையீற்றுகளையும் அடித்தார் *(சங் 135:8)*

135 அதிகாரம்

12. எகிப்திலே அற்புதங்களைச் செய்தார் (சங் 135:9)

13. அவர் அநேகம் ஜாதிகளை அடித்தார் (சங் 135:10-11)

14. அவர் ராஜாக்களைக் கொன்றார்

15. அவர்கள் தேசத்தைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார் (சங் 135:12)

16. அவருடைய நாமம் என்றைக்குமுள்ளது (சங் 135:13)

17. அவருடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்

18. அவர், தம்முடைய ஜனத்தை நியாயம் விசாரிப்பார் (சங் 135:14)

19. அவர், தம்முடைய ஊழியக்காரர் மேல் பரிதாபப்படுவார்

20. அவர், ஜீவனுள்ள தேவன். ஜீவனில்லாத பொன்னும் வெள்ளியினால் செய்யப்பட்ட தேவன் அல்ல. (சங் 135:15-18)

2. தேவனுடைய மகத்துவத்தின் பதினாறு அம்சங்கள்

சங் 135:4 கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்.

சங் 135:5 கர்த்தர் பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன்.

சங் 135:6 வானத்திலும் பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்.

சங் 135:7 அவர் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடன் மின்னலையும் உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார்.

சங் 135:8 அவர் எகிப்திலே மனுஷருடைய தலைப்பிள்ளைகளையும் மிருகத்தின் தலையீற்றுகளையும் அடித்தார்.

சங் 135:9 எகிப்துதேசமே, உன் நடுவில் பார்வோன்மேலும் அவனுடைய எல்லா ஊழியக்காரர் மேலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் அனுப்பினார்.

சங் 135:10 அவர் அநேகம் ஜாதிகளை அடித்து, பலத்த ராஜாக்களைக் கொன்று;

சங் 135:11 எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும், பாசானின் ராஜாவாகிய ஓகையும், கானானின் சகல ராஜ்யங்களையும் அழித்து,

சங் 135:12 அவர்கள் தேசத்தைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தார்.

சங் 135:13 கர்த்தாவே, உம்முடைய நாமம் என்றைக்குமுள்ளது; கர்த்தாவே, உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்.

சங் 135:14 கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்.

"தமக்குச் சொந்தமாக" **(peculiar treasure)** கர்த்தர் தமக்குச் சொந்தமாக இரண்டு பிரிவினரைத் தெரிந்துகொண்டார். அவர்கள்

1. இஸ்ரவேல் ஜனங்கள் (சங் 135:4; யாத் 19:5; உபா 14:2; உபா 26:18; 1பேதுரு 2:9)
2. இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் (தீத்து 2:14; 1பேதுரு 2:9)

135 அதிகாரம்

தேவர்கள் (gods) אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ. - தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர் - எலோஹிம் (elohiym) என்னும் சொல் உண்மையான மெய் தேவனைக் குறிக்கும்போது திரித்துவத்தைக் குறிக்கும் பன்மை ஒருமைச் சொல்லாக (honorific singular) பயன்படுத்தப்படுகிறது. புறஜாதி தெய்வங்களைக் குறிக்கும்போது இச்சொல் பன்மைப் பொருளைத் (plural) தரும்.

தீர்க்கதரிசன எண் - 94

"கர்த்தாவே, உம்முடைய நாமம் என்றைக்குமுள்ளது; கர்த்தாவே, உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்........." (சங் 135:13-14) சங் 135:13-இல் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. இன்னும் நித்தியகாலமாக நிறைவேறிக் கொண்டிருக்கும்.

"உம்முடைய பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறைக்கும் இருக்கும்" - கர்த்தரும் அவருடைய நாமமும் அவருடைய பிரஸ்தாபமும் தலைமுறை தலைமுறையாக என்றென்றும் நிலைத்திருக்கும். யாத் 3:15-இல் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பிரஸ்தாபங்கள்

1. கர்த்தருடைய நாமம் (சங் 135:13; யாத் 3:15)
2. பஸ்கா பண்டிகை (யாத் 12:11-14)
3. வேதவாக்கியம் அடங்கிய சிறிய பெட்டி (Phylacteries) (யாத் 13:9,16; உபா 6:4-9; உபா 11:18; மத் 23:5)
4. அமலேக்கை யுத்தத்தில் நாசம் பண்ணுதல் (யாத் 17:14)
5. ஏபோத்து, ஞாபகக்குறிக்கல் (யாத் 28:12-29; யாத் 39:7)
6. பாவநிவர்த்தி பணம் (யாத் 30:16)
7. எக்காளச்சத்தம் (லேவி 23:24)
8. காணிக்கை (எண் 5:15)
9. கோராகுவின் தண்டனை (எண் 16:40)
10. யுத்தத்தில் கொள்ளையிட்டது (எண் 31:54)
11. இஸ்ரவேலர் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடும் ஓய்வுநாள் (உபா 5:15)
12. யோர்தானின் நினைப்பூட்டும் அடையாளம் (யோசு 4:7)
13. பூரீம் என்னும் பண்டிகை நாட்கள் (எஸ் 9:28)
14. தேவன் (ஓசி 12:5)
15. ஆலயத்தில் உள்ள கிரீடங்கள் (சக 6:14)
16. இயேசுவின் அபிஷேகம் (மத் 26:13)
17. கிறிஸ்துவின் இராப்போஜனம் (லூக்கா 22:19; 1கொரி 11:24-25)
18. சத்தியம் (1தீமோ 4:6; 2பேதுரு 1:12-15)

"கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நியாயத்தை விசாரித்து, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்" - சபை எடுத்துக் கொள்ளப் பட்டபின்பு கர்த்தர் நீதிமானை நியாயந்தீர்ப்பார். (1கொரி 3:11-15) தம்முடைய ஊழியக்காரர்மீது கர்த்தர் இன்னும் கிருபையுடன் இருந்து அவர்களுக்காக பரிதாபப்படுவார் (அப் 3:21; எபே 1:10; எபே 2:7; எபே 3:11; வெளி 22:4-5).

135 அதிகாரம்

3. விக்கிரகங்கள், விக்கிரக ஆராதனைக்காரர் ஆகியவை பற்றிய எட்டு அம்ச மாலை

சங் 135:15 அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

சங் 135:16 அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.

சங் 135:17 அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை.

சங் 135:18 அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போல் இருக்கிறார்கள்.

விக்கிரங்களைப் பற்றி சங் 135:15-18 கூறப்பட்டிருக்கிற காரியங்கள் சங் 115:4-8-லும் கூறப்பட்டிருக்கிறது. சங் 115-இல் விக்கிரங்களைப் பற்றி விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது.

4. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் ஆறு அம்ச அறிவுரை

சங் 135:19 இஸ்ரவேல் குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்; ஆரோன் குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

சங் 135:20 லேவி குடும்பத்தாரே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்; கர்த்தருக்குப் பயந்தவர்களே, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

சங் 135:21 எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு சீயோனிலிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக. அல்லேலூயா.

கர்த்தரை யாரெல்லாம் ஸ்தோத்தரிக்க வேண்டும்

1. இஸ்ரவேலின் குடும்பம் (சங் 135:19)
2. ஆரோனின் குடும்பம்
3. லேவியின் குடும்பம் (சங் 135:20)
4. கர்த்தருக்குப் பயந்தவர்கள் அனைவரும்
5. எருசலேமில் வாசம் பண்ணுகிறார்கள் (சங் 135:21)

“எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு சீயோனிலிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக” - இந்த வசனத்தை வாசிக்கும்போது 135-ஆவது சங்கீதம் 134-ஆவது சங்கீதத்தின் தொடர்ச்சி போன்று தெரிகிறது. இவ்விரண்டு சங்கீதங்களையும் ஒரே ஆசிரியரே எழுதியிருக்கலாம்.

136 அதிகாரம்

பதினெட்டாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் ஏழு அம்ச அறிவுரை - (136:1-3)
2. தேவனுடைய மகத்துவத்தின் இருபத்திரெண்டு அம்சம் - (136:4-25)
3. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் அறிவுரை - (136:26)

1. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் ஏழு அம்ச அறிவுரை

சங் 136:1 கர்த்தரைத்துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:2 தேவாதி தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:3 கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

"கர்த்தரைத் துதியுங்கள்" என்னும் அறிவுரை இந்த சங்கீதத்தின் 26 வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. அதற்கான காரணங்களையும் நாம் ஒவ்வொரு வசனத்திலும் காணலாம்.

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. அவர் நல்லவர்
2. அவர் கிருபை என்றுமுள்ளது.

இந்த சங்கீதத்தின் 26 வசனங்களிலும் "அவர் கிருபை என்றுமுள்ளது" என்னும் வாக்கியத்தை வாசிக்கிறோம்.

தேவனைப் பற்றிய சத்தியங்கள்

1. அவர் கர்த்தர்
2. கர்த்தர் நல்லவர் (சங் 136:1)
3. அவர் கிருபை என்றுமுள்ளது (சங் 136:1)
4. அவர் தேவாதி தேவன் (சங் 136:2)
5. அவர் கர்த்தாதி கர்த்தர் (சங் 136:3)
6. அவர் பெரிய அதிசயங்களைச் செய்கிறார் (சங் 136:4)
7. அவர் ஞானமாய் வானங்களை உண்டாக்கினார் (சங் 136:5)
8. தண்ணீர்களுக்கு மேலாக பூமியைப் பரப்பினார் (சங் 136:6)
9. அவர் பெரிய சுடர்களை உண்டாக்கினார் (சங் 136:7)
10. அவர் பகலில் ஆளச்சூரியனைப் படைத்தார் (சங் 136:8)
11. இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தார் (சங் 136:9; சங் 1:14-18)
12. எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தார் (சங் 136:10)
13. அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப்பண்ணினார் (சங் 136:11)
14. அவர், தம்முடைய பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், இஸ்ரவேலை வழிநடத்தினார் (சங் 136:12)
15. சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தார் (சங் 136:13)
16. சிவந்த சமுத்திரத்தை உலர் தரையாக்கி, இஸ்ரவேலைக் கடந்து போகப் பண்ணினார் (சங் 136:14)

136 அதிகாரம்

17. பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப் போட்டார் *(சங் 136:15)*

18. தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் வழிநடத்தினார் *(சங் 136:16)*

19. பெரிய இராஜாக்களைச் சங்கரித்தார் *(சங் 136:17)*

20. பிரபலமான இராஜாக்களை அழித்தார் *(சங் 136:18)*

21. எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தார் *(சங் 136:19)*

22. பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தார் *(சங் 136:20)*

23. அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவர் *(சங் 136:21)*

24. தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்கு, அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகவே தந்தார் *(சங் 136:22)*

25. அவர், நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவர் *(சங் 136:23)*

26. சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலை பண்ணினவர் *(சங் 136:24)*

27. மாம்ச தேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவர் *(சங் 136:25)*

28. அவர் பரலோகத்தின் தேவன் *(சங் 136:26)*

கர்த்தர் (LORD) - יהוה, יְהֹוָה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ.- கர்த்தர், ஆண்டவர் யெகோவா

தேவன் (gods) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.- தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்.

கர்த்தர் (Lord) - אָדוֹן - aw-done' - 113

ஆ.பெ.சொ.- ஆண்டவர், எஜமான், தேவன், அத்தோனிபேசேக், அதிபதி, கர்த்தர், கர்த்தாதி கர்த்தர் (Sovereign of sovereigns; Master of masters; and Ruler of rulers) *(சங் 136:3)*

2. தேவனுடைய மகத்துவத்தின் இருபத்திரெண்டு அம்சம்

சங் 136:4 ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:5 வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:6 தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது;

சங் 136:7 பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:8 பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:9 இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது;

சங் 136:10 எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:11 அவர்கள் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படப் பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:12 பலத்த கையினாலும் ஓங்கியபுயத்தினாலும் அதைச் செய்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

136 அதிகாரம்

சங் 136:13.சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:14 அதின் நடுவே இஸ்ரவேலைக் கடந்துபோகப் பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:15 பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப் போட்டவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:16 தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:17 பெரிய ராஜாக்களை சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:18 பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:19 எமோரியரின் ராஜாவாகிய சீகோனை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:20 பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:21 அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:22 அதைத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகவே தந்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:23 நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:24 நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலை பண்ணினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

சங் 136:25 மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

"தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்"

ஆதியிலே பூமி தண்ணீர்களுக்கு மேலே இருக்குமாறு சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் ஆதி 1:2-இல் பூமியானது தண்ணீர்களுக்குக் கீழே இருப்பதாக வாசிக்கிறோம். இதற்கான காரணம் என்ன? லூசிபருடைய பாவமும், கலகமுமே.

ஆதாமிற்கு முந்திய காலத்தில் கர்த்தர் பூமியிலே ஜலப்பிரளயத்தை உண்டாக்கினார் என்று வேதபண்டிதர்களில் சிலர் கருதுகிறார்கள். அந்த பெருவெள்ளத்தில் பூமியிலுள்ள சகல ஜீவராசிகளும் அழிந்து போயிற்று. (ஆதி 1-2; சங் 104:5-9; ஏசா 14:12-14; எரே 4:23-26;2பேதுரு 3:5-7, ஆதி 1:1; சங் 104:5; 2பேதுரு 3:5)

தண்ணீர்களுக்கு மேலாக இருக்குமாறு சிருஷ்டிக்கப்பட்ட பூமி தண்ணீர்களுக்குக்கீழ் வந்துவிட்டாதாக ஆதி 1:2; சங் 104:6; 2பேதுரு 3:6 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிறோம்.

ஆதி 1:3-2:25; சங் 104:7-9; 2பேதுரு 3:7 ஆகிய வசனங்களில் பூமியானது மறுபடியும் ஒழுங்காயிற்று எனவும் ஆதாமின் சந்ததியார் தாபரிக்கக்கூடிய ஸ்தலமாயிற்று என்றும் காண்கிறோம்.

"அப்பொழுது இருந்த உலகம்" **(before the world that now is)** (2பேதுரு 3:6) "இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும்" **(the heavens and the earth, which are now)** (2பேதுரு 3:7) என்று நாம் வேதத்திலே இரண்டு விதமான காலங்களை வாசிக்கிறோம்.

136 அதிகாரம்

தண்ணீர்களுக்குமேல் கர்த்தர் மூன்றுமுறை பூமியை பரப்பினார் என்று வேதபண்டிதர்களில் சிலர் கருத்து கூறுகிறார்கள். அவையாவன.

1. கர்த்தர் பூமியை ஆதியிலே சிருஷ்டித்தபோது (ஆதி 1:1; சங் 104:5-6; சங் 136:6; ஏசா 45:18; 2பேதுரு 3:5)
2. கர்த்தர் பூமியை ஒழுங்காக்கியபோது (ஆதி 1:3-2:25; சங் 104:7-9; 2பேதுரு 3:7)
3. நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்திற்குப் பின்பு (2பேதுரு 3:7, 10-13; எபி 1:10-12; எபி 12:25-28)

"பெரிய சுடர்களை உண்டாக்கினவர்" - கர்த்தர் ஆதியிலே சந்திரனையும், சூரியனையும், நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தார். (சங் 136:7-9; யோபு 38:4-7) (ஆதி 1:2; ஏசா 14:12-14; எரே 4:23-26; சங் 104:5-9; 2பேதுரு 3:5-7)

"அவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்" - கர்த்தர் சீகோன், ஓக் மற்றும் பிரபலமான இராஜாக்களின் தேசங்களைத் தமது பிள்ளைகளுக்குச் சுதந்தரமாக தந்தார் (சங் 136:17-20).

கர்த்தர் இஸ்ரவேலை அவர்களுடைய சத்துருக்களின் கையிலிருந்து விடுதலை பண்ணினார். (சங் 136:15-24)

விடுதலை பண்ணு **(redeemed) - פָּרַק - paw-rak' - 6561**

வினைச்சொல் - முறித்துப்போடு, விடுதலைபண்ணு, மீறு, முறி, விடுவிப்பார், கழற்று, உடைத்துப்போடு, உடை **(to break; rescue)**

3. கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் அறிவுரை

சங் 136:26 பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

"பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" - சங் 135, சங் 136 ஆகிய இரண்டும் இரட்டை சங்கீதங்கள் என்று அழைக்கப்படுகிறது. இவ்விரண்டு சங்கீதங்களிலும் பல ஒற்றுமைகள் உள்ளன. சான்றாக

1. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்னும் ஆலோசனை (சங் 135:1-5 = சங் 136:1-3)
2. சிருஷ்டிக்கும் அற்புதங்கள் (சங் 135:6-7 = சங் 136:4-9)
3. எகிப்திலிருந்து விடுதலை (சங் 135:8-9 = சங் 136:10-15)
4. எகிப்திலிருந்து பிரயாணம் பண்ணியபோது உள்ளவை (சங் 135:10-11 = சங் 136:16-20)
5. தேசத்தைச் சுதந்தரமாகத் தருதல் (சங் 135:12-13 = சங் 136:21-22)
6. தமது ஜனங்களுக்கு தேவனுடைய நன்மை (சங் 135:14 = சங் 136:23-24)
7. விக்கிரகங்கள், பொய்யான தெய்வங்கள் (சங் 135:15-18), மெய்யான தெய்வம் (சங் 136:25)
8. துதி (சங் 135:19-21 = சங் 136:26)

137 அதிகாரம்

ஐந்தாவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம்

பொருளடக்கம்

1. பாபிலோனியச் சிறையிருப்பு பற்றிய சாட்சி - (137:1-6)
2. ஏதோமுக்கு எதிராக ஜெபம் - (137:7)
3. பாபிலோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம் - (137:8-9)

1. பாபிலோனியச் சிறையிருப்பு பற்றிய சாட்சி

சங் 137:1 பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம்.

சங் 137:2 அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்தோம்.

சங் 137:3 எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்களகீதத்தையும் விரும்பி: சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்.

சங் 137:4 கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்திலே நாங்கள் பாடுவதெப்படி?

சங் 137:5 எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக.

சங் 137:6 நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

"பாபிலோன் ஆறுகள் அருகே" - ஐபிராத்து, டைகிரிஸ் நதிகளும் அதன் கிளை நதிகளும். இந்த நதிகளின் கரையோரங்களில் யூதர்கள் தங்கள் மார்க்க சம்பந்தமான கூட்டங்களை நடத்துவது வழக்கம். (அப் 16:13)

பாபிலோனிய சிறையிருப்பின்போது நடைபெற்ற காரியங்கள்

1. நாங்கள் உட்கார்ந்தோம் (சங் 137:1)
2. நாங்கள் அழுதோம்
3. சீயோனை நினைத்தோம்
4. அலரிச்செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்தோம் (சங் 137:2)
5. சிறையிருப்பிலிருக்கும் போது தேவனைப் பற்றிய பாடல்களையும் மங்கள கீதத்தையும் பாடினோம் (சங் 137:3-4)
6. எருசலேமை மறக்க மாட்டோம் என்று பொருத்தனை பண்ணினோம் (சங் 137:5-6)
7. எங்கள் வீழ்ச்சியில் சந்தோஷப் பட்டவர்களைக் கர்த்தர் நீதி செய்ய வேண்டுமென்று ஜெபித்தோம். (சங் 137:7)
8. பாபிலோன் வீழ்ச்சியுறும் என்று எதிர்பார்த்தோம். (சங் 137:8-9)

"சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்" - இஸ்ரவேல் ஜனங்களைப் பாபிலோனியர் சிறைப்பிடித்தார்கள். சிறையிருப்புக் காலத்தில் பாபிலோனியர் இஸ்ரவேல் ஜனங்களிடம் அவர்களுடைய பாடல்களைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார்கள். (சங் 137:1,8)

137 அதிகாரம்

எசேக்கியாவின் காலத்தில் யூதாவின் சில பட்டணங்கள் சிறைப்பிடிக்கப்பட்டது. இந்த வசனம் எழுதப்பட்ட காலம் அசீரியருக்குக்கீழ் இருந்த பாபிலோனியரின் காலமா? (ஏசா 36:1-37:38) அல்லது நேபுகாத்நேச்சாரின் காலமா? (2இராஜா 24-25; 2நாளா 36) என்று தெளிவாகத் தெரியவில்லை. நேபுகாத்நேச்சாரின் காலத்தில் 133 வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் சிறைப்பிடிக்கப்பட்டார்கள்.

இவர்கள் பாபிலோனில் சிறையிருப்பில் இருந்தபோது இந்த சங்கீதத்தைப் பாடியிருக்கலாம் அல்லது சிறையிருப்பிற்குப் பின்பு தங்களுடைய சிறையிருப்பின் அனுபவத்தை நினைத்து இவர்கள் இதைப் பாடியிருக்கலாம்.

"கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்திலே நாங்கள் பாடுவதெப்படி?" - இஸ்ரவேல் ஜனங்கள் சீயோனை நினைத்துக் கொண்டிருக்கும்போது சீயோனைப் பற்றி பாடுவது மிகவும் கடினமான காரியம். ஒரு நாள் முழுவதும் அடிமைகளாக மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தபின்பு இவர்கள் தங்கள் தேவனைத் துதிப்பதற்காகக் கூடிவந்தவர்கள். சீயோனைப் பற்றி இவர்கள் பாட ஆரம்பித்தபோதே அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் புறப்பட்டு வந்தது. தங்களால் சீயோனைப் பற்றிய பாடல்களை முழுமையாகப் பாடமுடியாமல், தங்களுடைய இசைக்கருவிகளை அருகிலுள்ள அலரிச்செடிகளின்மேல் வைத்துவிட்டு, சீயோனைப் பற்றிய தங்கள் பழைய நினைவுகளை நினைத்து, அழுது கொண்டிருந்தார்கள்.

"எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலைமறப்பதாக" - இந்த சங்கீதத்தை இயற்றியவன் இஸ்ரவேலின் பாடகர்களில் ஒருவனாக இருக்க வேண்டும். ஆகையினால், கர்த்தருக்கு முன்பாக தான் இஸ்ரவேலை மறக்க மாட்டேன் என்று பொருத்தனை பண்ணுகிறான். அவ்வாறு தான் மறந்துவிட்டால் கின்னரங்களை இசைக்கூடிய தாலந்துகள் தன்னைவிட்டு எடுக்கப்பட்டுப் போவதாக என்று ஜெபிக்கிறான். அத்துடன் கர்த்தரைத் துதிக்கவில்லையென்றாலும், கர்த்தரை மறந்துவிட்டாலும் அவனுடைய நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக என்றும் ஜெபிக்கிறான் (சங் 137:5-6).

"எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணுவேன்" - சங்கீதக்காரன் தன்னுடைய சொந்த தேசத்தையும், சொந்த நகரத்தையும் பாபிலோன் தேசத்திலே அனுதினமும் நினைத்துப் பார்க்கிறான்.

2. ஏதோமுக்கு எதிராக ஜெபம்

சங் 137:7 கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும்; அவர்கள்: அதை இடித்துப்போடுங்கள், அஸ்திபாரம் மட்டும் இடித்துப்போடுங்கள் என்று சொன்னார்களே.

"கர்த்தாவே, எருசலேமின் நாளில் ஏதோமின் புத்திரரை நினையும்" - ஏதோமின் புத்திரர் எருசலேமின்மீது யுத்தம் பண்ணி, எருசலேமைப் பிடித்துக் கொண்டார்கள். எருசலேம் பட்டணத்தை இடித்துப்போடவேண்டும். அதன் அஸ்திபாரத்தையெல்லாம் அழித்துப்போட வேண்டும் என்று கோபத்தோடு சொன்னார்கள். சங்கீதக்காரன் கர்த்தரிடம் ஏதோமின் ஜனங்களுக்கு எதிராக விண்ணப்பம் பண்ணுகிறான். "ஆண்டவரே நீர் ஏதோமின் புத்திரரை பழிவாங்கவேண்டும்" என்று ஜெபம் பண்ணுகிறான் (எரே 12:6; எரே 25:14; புல 4:21-22; எசே 25:12; ஒப 1:11-14).

3. பாபிலோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம்

சங் 137:8 பாபிலோன் குமாரத்தியே பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான்.

சங் 137:9 உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்.

137 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 95

"பாபிலோன் குமாரத்தியே பாழாய்ப்போகிறவளே, நீ எங்களுக்குச் செய்தபடி உனக்குப் பதில் செய்கிறவன் பாக்கியவான்............" (சங் 137:8-9) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

சங்கீதக்காரன் பாபிலோன் பாழாய்போக வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணுவதோடு அதைப் பாழாக்குகிறவனைக் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் விண்ணப்பம் பண்ணுகிறான் (சங் 137:8-9).

138 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

துதித்து ஜெபிக்கும் பத்தாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்னும் பொருத்தனையின் ஆறு அம்சம் - (138:1-2)
2. பதில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபத்தைப் பற்றிய சாட்சி - (138:3)
3. புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்க வேண்டியதின் முக்கிய காரணம் - (138:4-5)
4. தேவனுடைய உண்மையான சுபாவம் - (138:6)
5. தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியை - (138:7-8)

1. கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்னும் பொருத்தனையின் ஆறு அம்சம் - (26:1; 50:14; 116:14-18; லேவி 27:1-33)

சங் 138:1 உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

சங் 138:2 உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராகநான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.

சங்கீதக்காரனின் பொருத்தனைகள்

1. உம்மை என் முழு இருதயத்தோடு துதிப்பேன் (சங் 138:1)
2. தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்
3. உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து துதிப்பேன் (சங் 138:2)
4. உமது கிருபையினிமித்தம் உமது நாமத்தைத் துதிப்பேன்
5. உமது உண்மையினிமித்தம் உமது நாமத்தைத் துதிப்பேன்

தேவர்கள் (gods) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ. - தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர்

"உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப் படுத்தியிருக்கிறீர்" - கர்த்தருடைய நாமம் உயர்ந்தது. அதேசமயத்தில் அவருடைய வார்த்தை சத்தியமானது. கர்த்தர் தமது பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் தமது வார்த்தையை மகிமைப்படுத்துகிறார். தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதிலே அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார்.

2. பதில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபத்தைப் பற்றிய சாட்சி

சங் 138:3 நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்;

"எனக்கு மறுஉத்தரவு அருளினீர்" - கர்த்தரோடு ஐக்கியமாக இருக்கும்போது கர்த்தர் நமது விண்ணப்பங்களுக்கு மறுஉத்தரவு அருளுவார். தாவீது தனது விண்ணப்பங்களுக்குத் தேவனிடம் மறுஉத்தரவைப் பெற்றுக் கொண்டான். அவன் தேவனோடு பல வருஷங்களாக நெருங்கிய ஐக்கியத்தில் ஜீவித்தான்.

138 அதிகாரம்

கர்த்தர் மறுஉத்தரவு அருளியதற்கு எடுத்துக்காட்டானவர்கள்

1. யாக்கோபு (ஆதி 35:3)
2. மோசே (யாத் 19:19; சங் 99:6)
3. ஆரோன் (சங் 99:6)
4. சாமுவேல் (1சாமு 10:22; சங் 99:6)
5. தாவீது (1சாமு 23:4; 1சாமு 30:8; 2சாமு 21:1; 1நாளா 21:28; சங் 138:3)
6. யோபு (யோபு 40:1)
7. இயேசு (யோவான் 11:41-42)

"என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்" - நமது ஆவிக்குரிய ஜீவியத்திலே நாம் பெலனடைய வேண்டுமென்றால் கர்த்தர் நமது விண்ணப்பங்களுக்கு மறுஉத்தரவு அருள வேண்டும். அவர் நம்மைத் தைரியப்படுத்த வேண்டும் (சங் 138:3).

3. புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்க வேண்டியதின் முக்கிய காரணம்

சங் 138:4 கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்.

சங் 138:5 கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப்பாடுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 96

"கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்........" (சங் 138:4-5) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பூமியில் இயேசு கிறிஸ்து நித்திய காலமாக ஆளுகை செய்யும்போது பூமியின் இராஜாக்கள் எல்லோரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பார்கள். அவரைத் துதிப்பார்கள். அவரைச் சேவிப்பார்கள். (சங் 2:8; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; சக 14; வெளி 11:15;வெளி 22:4-5).

"கர்த்தரின் வாயின் வார்த்தைகள்" - இந்த வசனத்தில் கர்த்தருடைய "வாய்" என்னும் வார்த்தையை வாசிக்கிறோம்.

"கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப்பாடுவார்கள்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் நித்திய காலமாக ஆளுகை செய்ய வரும்போது, பூமியின் இராஜாக்கள் எல்லோரும் கர்த்தருடைய வழிகளைப் பாடுவார்கள் (சங் 138:4-5).

4. தேவனுடைய உண்மையான சுபாவம்

சங் 138:6 கர்த்தர் உயர்ந்த வராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

"கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்" - கர்த்தர் உயர்ந்தவர். ஆயினும் மனுஷனைப் பார்க்கக்கூடாதபடி அவர் தம்மை ஒருபோதும் உயர்த்துவதில்லை. கர்த்தர் நம்மைப் பார்க்க வேண்டுமென்றால் நம்மிடம் மேட்டிமை இருக்கக்கூடாது. நாம் தாழ்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்போது கர்த்தர் நம்மை நோக்கிப் பார்த்து நம்மிடம் ஐக்கியமாக இருப்பார்.

138 அதிகாரம்

"மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" - "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (யாக்கோபு 4:6) நாமும் கர்த்தருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். கர்த்தர் உயர்ந்தவராக இருந்த போதிலும் அவர் எப்படி தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்த்தாரோ அதுபோன்று நாமும் பல ஆசீர்வாதங்களை உடையவர்ளாக இருந்தாலும், தாழ்மையுள்ளவர்களை நோக்கிப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

5. தேவன் மனுஷரோடு நடப்பிக்கும் கிரியை

சங் 138:7 நான் துன்பத்தில் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.

சங் 138:8 கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.

"உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்" - நமக்குப் பிரச்சனைகள் வரலாம். பல சத்துருக்கள் நமக்கு எதிராகப் புறப்பட்டு வரலாம். துன்பம், துயரம் ஆகியவற்றின் நடுவில் நாம் ஜீவிக்கலாம். இவையெல்லாவற்றிற்கு மத்தியிலும் கர்த்தருடைய வலதுகரம் நம்மை இரட்சிக்கும். நாம் அழிந்துபோகாதவாறு தேவன் நம்மை உயிர்ப்பிப்பார்.

"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" - என்னுடைய தேவை என்ன என்பது எனக்கே சரியாகத் தெரியாது. ஆனால் அது கர்த்தருக்குத் தெரியும். என்னுடைய சத்துருக்களிடமிருந்து என்னைக் காக்கும் தேவன், துன்பத்தின் நடுவில் என்னை உயிர்ப்பிக்கும் தேவன், என்னுடைய தேவைகளை எல்லாம் அறிந்திருக்கிறார். எனக்காக அவர் யாவையும் செய்து முடிப்பார்.

"உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக" - 138-ஆவது சங்கீதத்தில் நாம் வாசிக்கும் ஒரே விண்ணப்பம் இதுதான். தாவீதின் சங்கீதங்களில் நாம் ஏராளமான விண்ணப்பங்களை வாசிக்கிறோம். இந்த சங்கீதக்காரன் ஜெயம் பண்ணக் கற்றுக் கொள்கிறானா? அல்லது தன்னுடைய தேவைகளைக் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணாமல் அவரைத் துதிக்கிறானா? அல்லது இவனுக்குப் பிரச்சனைகள் குறைவா? என்பது தெரியவில்லை.

139 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

தேவனுடைய எட்டாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனுடைய சர்வஞானத்தின் பத்து அம்சங்கள் - (139:1-5)
2. கர்த்தரைப் புகழுதல் - (139:6)
3. தேவனுடைய சர்வ வியாபகத்தின் பத்து அம்சங்கள் - (139:7-13)
4. கர்த்தரைப் புகழுதல் - (139:14-18)
5. கர்த்தர் சர்வ வல்லவர் - (139:19-20)
6. கர்த்தரைப் புகழுதல் - (139:21-22)
7. தேவபக்திக்காக நான்கு விண்ணப்பங்கள் - (139:23-24)

1. தேவனுடைய சர்வஞானத்தின் பத்து அம்சங்கள்

சங் 139:1 கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.

சங் 139:2 என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

சங் 139:3 நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.

சங் 139:4 என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.

சங் 139:5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.

சங்கீதம் 139-இல் தேவன் செய்திருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் என்னை ஆராய்ந்திருக்கிறார் (சங் 139:1)
2. அவர் என்னை அறிந்திருக்கிறார்
3. அவர் என் உட்காருதலை அறிந்திருக்கிறார் (சங் 139:2)
4. அவர் என் எழுந்திருக்குதலை அறிந்திருக்கிறார்
5. என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிந்திருக்கிறார்
6. நான் நடக்கும் பாதையெல்லாம் என்னைச் சூழ்ந்திருக்கிறார்(சங் 139:3)
7. நான் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறார் (சங் 139:3)
8. என் வழிகளெல்லாம் அவருக்குத் தெரியும்
9. என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே அவர் அறிந்திருக்கிறார்
10. அவர் என்னை முற்புறத்தில் நெருக்குகிறார் (சங் 139:5)
11. என்னை பிற்புறத்திலும் நெருக்குகிறார்
12. தம்முடைய கரத்தை என்மேல் வைக்கிறார்
13. அவர் என் உள்ளந்திரியங்களைக் கைக் கொண்டிருக்கிறார் (சங் 139:13)
14. என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினார்
15. என் தாயின் கர்ப்பத்திலிருந்து நான் உருவான போதிலிருந்தே அவருடைய கண்கள் என்னைக் கண்டது (சங் 139:15-16)

139 அதிகாரம்

16. என் அவயவங்கள் ஒன்றாகிலும் இல்லாதபோதே, அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் அவருடைய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார் (சங் 139:16)

கர்த்தர் மனுஷனைப் பற்றி பூரணமாக அறிந்து வைத்திருக்கிறார். மனுஷன் உருவாக்கப் பட்ட விதம், அவனுடைய சிந்தனைகள், பல்வேறு சூழ்நிலைகளில் அவனுடைய கிரியைகள் எல்லாவற்றையுமே கர்த்தர் அறிந்து வைத்திருக்கிறார். கர்த்தர் சர்வ ஞானி.

ஆராய்ந்து அறியும் கர்த்தர்

கர்த்தர் நம்மை ஏற்கெனவே தமது சர்வஞானத்தின் பிரகாரமாக அறிந்து வைத்திருக்கிற போதிலும், அவர் நம்மை அநுதினமும் ஆராய்ந்து பார்க்கிறார். கர்த்தர் ஆராய்ந்து அறிவதைக் குறித்து இந்தப் பகுதியில் சில சத்தியங்களைக் காணலாம்.

1. கர்த்தர் இஸ்ரவேலுக்கு முன்பாக சென்று அவர்கள் இளைப்பாறுவதற்கு ஒரு இடத்தை ஆராய்ந்து அறிந்தார். இதுபோலவே கானான் தேசத்தில் இஸ்ரவேலின் வேவுகாரர்கள் அந்த தேசத்தை ஆராய்ந்து பார்க்கப் போனார்கள்.(எண் 10:33; உபா 1:33, எண் 13:2,32; எண் 14:7,36-38).
2. கர்த்தர் மனுஷனுடைய வழிகளை ஆராய்ந்து பார்க்கிறார்.(சங் 44:20-21)
3. என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும். என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும் என்று சங்கீதக்காரன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான். (சங் 139:23-24)
4. கர்த்தரும் தாம் ஆராய்ந்து பார்ப்பதைப் பற்றிக் கூறும்போது எரேமியா 17:10-இல் இவ்வாறு கூறுகிறார். "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும் படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்".
5. கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து பார்க்கிறார். (1நாளா 28:9; ரோமர் 8:27; வெளி 2:23)
6. பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் ஆராய்ந்திருக்கிறார். (1கொரி 2:10)

"என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்" - கர்த்தர் நமது எல்லா அசைவுகளையும் அறிந்திருக்கிறவர்.

சூழ்ந்திருக்கிறீர் (compassest) - זָרָה - zaw-raw' - 2219

வினைச்சொல் - தூற்று, கொட்டிப்போடு, தூவு, எறி, சிதறடி, இறை, சிதறப்பண்ணு, விரி, சிதறடிக்கப்படு, தூற்றிப்போடப்படு, சிதறிப்போகப்பண்ணு, தெளிக்கப்படு (winnow; sift; fan; scrutinize) (சங் 139:3-5)

2. கர்த்தரைப் புகழுதல்

சங் 139:6 இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.

"இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது" - கர்த்தர் நம்மைப் பற்றி அறிந்து வைத்திருக்கிற காரியம் நமக்கு மிகுந்த ஆச்சரியமானது. நம்மால் அதை முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியாது.

139 அதிகாரம்

3. தேவனுடைய சர்வ வியாபகத்தின் பத்து அம்சங்கள்

சங் 139:7 உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?

சங் 139:8 நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.

சங் 139:9 நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,

சங் 139:10 அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.

சங் 139:11 இருள் என்னை மூடிக் கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றிவெளிச்சமாயிருக்கும்.

சங் 139:12 உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

சங் 139:13 நீர் என் உள்ளத்திரியங்களைக் கைக் கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.

சமூகம் **(presence)** - פָּנִים - **paw-neem' - 6440**

ஆண்பால் பெயர்ச்சொல் - முன்னால், சமூகம் **(faces)** (ஆதி 16:12; ஆதி 25:18) இந்த வசனத்தில் சமூகம் என்பதைக் குறிக்கும் எபிரெய வார்த்தை பன்மைச்சொல்லாகும். தேவனுடைய திரித்துவ பண்பைக் குறிப்பதற்காக பன்மைச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

கர்த்தர் கிரியை செய்யும் இடங்கள்

1. வானம் (சங் 139:8)
2. நரகம் (சங் 139:8)
3. பூமி (சங் 139:9-12)

“நீர் அங்கேயும் இருக்கிறீர்” - கர்த்தர் வானத்திலும், பாதாளத்திலும் இருப்பதாக சங்கீதக்காரன் கூறுகிறான். கர்த்தர் பாதாளத்தைச் சிருஷ்டித்தவராக இருந்த போதிலும், அவருடைய சமூகம் பாதாளத்தில் இருப்பதில்லை. (மத் 25:41) இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டிருந்த அந்த மூன்று நாட்களில் அவர் பாதாளத்திற்குச் சென்றார். ஆனாலும், அவருடைய சரீரமோ கல்லறையில் தான் இருந்தது. (சங் 16:10; மத் 12:40; அப் 2:25-32; எபே 4:8-10; 1பேதுரு 3:19). கர்த்தர் சர்வவியாபகர்.

“நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்” -நாம் அதிகாலையிலே எழுந்து கிழக்கு திசையை நோக்கி பிரயாணம் பண்ணினாலும், கர்த்தர் சிருஷ்டித்த சூரியன் என்னைப் பிடிக்கும். (சங் 139:10) நான் மேற்கு திசையில் பிரயாணம் பண்ணி, இருள் என்னை மூடிக் கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றிவெளிச்சமாயிருக்கும் (சங் 139:11-12).

கைக்கொள் - קָנָה - **kaw-naw' - 7069**

வினைச்சொல் - கைக்கொள் **(to acquire; set up; erect)** (சங் 139:13; நீதி 8:22)

“உள்ளந்திரியங்கள்” - சிறுநீரகங்கள் - தாயின் கர்ப்பத்தில் குழந்தை உருவாகும்போது சிறுநீரகங்களே முதலாவது உருவாகும் என்பது எபிரெயர்களின் நம்பிக்கை. உள்ளந்திரியங்களைக் கைக் கொள்ளுதல் என்பது ஒரு குழந்தை தன் தாயின் கர்ப்பத்தில் உருவாக ஆரம்ப காலத்திலிருந்தே அதைக் கைக்கொள்ளுதல் என்று பொருள்படும். தாயின் கர்ப்பத்தில் நாம் உருவாக்கப்பட்டிருக்கும் விதம் மிகவும் அதிசயமானது. இதைச் சங்கீதக்காரன் உணர்ந்து இவ்வாறு கூறுகிறான். “நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப் பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்”. (சங் 139:14)

139 அதிகாரம்

4. கர்த்தரைப் புகழுதல்

சங் 139:14 நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

சங் 139:15 நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை.

சங் 139:16 என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.

சங் 139:17 தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்.

சங் 139:18 அவைகளை நான் எண்ணப் போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்.

"என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை" - என்னுடைய தாயின் கர்ப்பத்திலே நான் உருவாக்கப்பட்டபோது, என்னுடைய எலும்புகள், நரம்புகள், இரத்த நாளங்கள், என் சரீரத்திலுள்ள உறுப்புகள் எதுவும் உமக்கு மறைவாக இருக்கவில்லை.

விசித்திர விநோதமாய் உருவாக்கு **(curiously) - רָקַם - raw-kam' - 7551**

வினைச்சொல் - தையல், விநோதம், விசித்திர விநோதமாய் உருவாக்கு **(to variegate; diversify with colors, i.e., to embroider; fabricate; make curious work)** - சித்திர தையல் வேலைக்காரன் **(embroiderer)** (யாத் 35:35; யாத் 38:23), தையல்வேலை **(needlework)** (யாத் 26:36; யாத் 27:16; யாத் 28:39; யாத் 36:37; யாத் 38:18; யாத் 39:29). இந்த வசனம்மானிட சரீரத்தை அதன் தாயின் கர்ப்பத்தில் எவ்வளவு விசித்திரமாகவும், விநோதமாகவும் கர்த்தர் உருவாக்குகிறார் என்று விளக்குகிறது.

"பூமியின் தாழ்விடங்கள்" - தாயின் கர்ப்பத்தைக் குறிக்கும் சொல். மனுஷ சரீரத்தின் மையப்பகுதி. குழந்தை உருவாக்கப்படும் பகுதி.

"கரு" - தாயின் கர்ப்பத்தில் உருவாகியிருக்கும் கரு. முழுமையான உருவம் இன்னும் அடையவில்லை. ஒரு தாயின் வயிற்றிலிருக்கும் கருவிலுள்ள உறுப்புக்களைக் கூட கர்த்தர் தெரிந்து வைத்திருக்கிறார். அவையனைத்தையும் தமது புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். நமது தலையிலுள்ள முடிகளெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத் 10:30).

புஸ்தகம் **(book) סֵפֶר - say'-fer, sif-raw' - 5612**

ஆண்பால் பெயர்ச்சொல் - வரலாறு, புஸ்தகம், சீட்டு, நூல், நிருபம், கட்டளை, புஸ்தகச்சுருள், எழுதுதல், பத்திரம், சாசனம், எழுத்து, கணக்கு **(book; writing; document; register; scroll)**

139 அதிகாரம்

தேவனுடைய புஸ்தகத்திற்கு வழங்கப்படும் வெவ்வேறு பெயர்கள்

1. புஸ்தகம் (யாத் 32:32; சங் 56:8; சங் 139:16)
2. என் புஸ்தகம் (யாத் 32:33)
3. புஸ்தகம் (தானி 12:1)
4. ஜீவனுடையவர்களின் புஸ்தகம் (The book of the living) (சங் 69:28)
5. ஞாபகப் புஸ்தகம் (மல் 3:16)
6. ஜீவபுஸ்தகம் (பிலி 4:3; வெளி 3:5; வெளி 13:8; வெளி 17:8; வெளி 20:11-15; வெளி 22:19)
7. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகம் (வெளி 21:27)

தேவனுடைய புஸ்தகத்தைப் பற்றிய முக்கியமான சத்தியங்கள்

1. ஒரு மனுஷனுடைய சரீரம், ஆத்துமா, ஆவியைப் பற்றிய எல்லா விஷயங்களையும் இந்த புஸ்தகத்தில் தேவன் எழுதி வைத்திருக்கிறார். (சங் 139:16)
2. நாம் பிறப்பதற்கு முன்பாகவே நம்மைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கர்த்தர் தமது புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். (சங் 139:16)
3. இரட்சிக்கப்பட்டவர்களின் பெயர்களை கர்த்தர் தமது புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். (யாத் 32:32-33; சங் 69:28; தானி 12:1; லூக்கா 10:20; பிலி 4:3; வெளி 3:5; வெளி 13:8; வெளி 17:8; வெளி 20:11-15; வெளி 21:27; வெளி 22:19).
4. ஞாபகப்புஸ்தகம் என்று இந்த புஸ்தகம் அழைக்கப்படுகிறது. (மல் 3:16)
5. பரிசுத்தவான்களின் கண்ணீர்களைக் கர்த்தர் தமது புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். (சங் 56:8)
6. உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில் பெயர்எழுதப்பட்டிராத பூமியின் குடிகள் அழிந்துபோவார்கள். (வெளி 13:8; வெளி 17:8)
7. இரட்சிக்கப்பட்டவன் பாவம் செய்தால் ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய பெயர் கிறுக்கிப்போடப்படும். (யாத் 32:32-33; சங் 69:28; வெளி 3:5; வெளி 22:19)

கர்த்தருடைய ஜீவபுஸ்தகம் என்பது இந்த பூமியில் பிறந்திருக்கிற எல்லா மனுஷரைப் பற்றிய ஆவணம் ஆகும். அவர்கள் தங்கள் சரீரங்கள் மூலமாகச் செய்த கிரியைகள், அவர்களுடைய கண்ணீர்கள், அனுபவங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் தமது புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். கர்த்தர் மனுஷனை நீதியாக நியாயம் விசாரிப்பதற்கு இந்தப் புஸ்தகம் உதவி புரியும் (மத் 16:27; ரோமர் 14:10-12; 2கொரி 5:10; வெளி 20:11-15).

கர்த்தர் வெள்ளைச் சிங்காசனத்தில் அமர்ந்து, ஜனங்களை நியாயம்தீர்க்கும்போது "புஸ்தகங்கள் திறக்கப்பட்டன" (வெளி 20:11-15) என்று வாசிக்கிறோம். ஆகையினால் கர்த்தரிடம் பல்வேறு புஸ்தகங்கள் இருக்கலாம். ஒரு புஸ்தகம், மனுஷருடைய பிறப்பின் ஆவணமாகவும், மற்றொரு புஸ்தகம், மனுஷருடைய கிரியைகளின் ஆவணமாகவும் இருக்கலாம். வெளி 20:11-15 ஆகிய வசனங்களில் புஸ்தகங்கள் என்பது வெவ்வேறு புஸ்தகங்களாகவோ அல்லது நமது வேதாகமத்தைப் போன்று ஒரே புஸ்தகத்திலுள்ள பலபுஸ்தகங்களாகவோ இருக்கலாம்.

"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது" - நமது சரீரம் தாயின் கர்ப்பத்தில் உருவாக்கப்படும் காலத்திலிருந்தே, நமது அவயவங்களில் எதுவும் பூரணமாக உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே கர்த்தர் நம்மைப் பரிபூரணமாக அறிந்து வைத்திருக்கிறார்.

139 அதிகாரம்

"தேவனே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். அவைகளை நான் எண்ணப்போனால், மணலைப்பார்க்கிலும் அதிகமாம்; நான் விழிக்கும்போது இன்னும் உம்மண்டையில் இருக்கிறேன்" - கர்த்தருடைய ஆலோசனைகள் மிகவும் அருமையானவை. அவை எண்ணிலடங்காதவை. உமது கிரியைகளையெல்லாம் நான் தியானித்து விட்டுத்தான் தூங்கச்செல்லுவேன். தூங்கி விழிக்கும்போதோ உமது கிரியைகளை நான் மறந்து விடுவதில்லை. உமது அற்புதமான கிரியைகளுக்காக நான் உம்மை ஸ்தோத்திரம்பண்ணி உமது கிரியைகளை நினைத்துத்தான் ஒவ்வொரு நாளையும் துவங்குவேன் (சங் 139:17-18).

5. கர்த்தர் சர்வ வல்லவர்

சங் 139:19 தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும்; இரத்தப்பிரியரே, நீங்கள் என்னைவிட்டு அகன்றுபோங்கள்.

சங் 139:20 அவர்கள் உம்மைக் குறித்துத் துன்மார்க்கமாய்ப் பேசுகிறார்கள்; உம்முடைய சத்துருக்கள் உமது நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 97

"தேவனே, நீர் துன்மார்க்கனை அழித்தீரானால் நலமாயிருக்கும்; இரத்தப்பிரியரே, நீங்கள் என்னைவிட்டு அகன்றுபோங்கள்" (சங் 139:19) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. கர்த்தர் மனுஷனுக்கு அவனுடைய பாவத்தின் சம்பளமாக மரணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். (எசே 18:4; ரோமர் 1:29-32; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8) இரத்தப்பிரியர் என்பது மரண தண்டனையைப் பெற்றுள்ள குற்றவாளியைக் குறிக்கும்.

துன்மார்க்கரின் சுபாவங்கள்

1. அவர்கள் கர்த்தரைக் குறித்துத் துன்மார்க்கமாய்ப் பேசுகிறார்கள்
2. கர்த்தருடைய சத்துருக்கள் அவருடைய நாமத்தை வீணாய் வழங்குகிறார்கள்.

6. கர்த்தரைப் புகழுதல்

சங் 139:21 கர்த்தாவே, உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமலும் இருப்பேனோ?

சங் 139:22 முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறேன்; அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்.

கர்த்தரைப் பகைக்கிறவர்களும், கர்த்தருக்கு விரோதமாக எழும்புகிறவர்களும், நீதிக்கு சத்துருக்களாக இருக்கிறார்கள்.

7. தேவபக்திக்காக நான்கு விண்ணபங்கள்

சங் 139:23 தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.

சங் 139:24 வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தாவீதின் விண்ணப்பங்கள் (சங் 139:23-24)

1. என்னை ஆராயும்
2. என் இருதயத்தை அறிந்து கொள்ளும்
3. என்னைச் சோதியும்
4. என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்
5. வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பாரும்
6. நித்திய வழியிலே என்னை நடத்தும்

140 அதிகாரம்

(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.)

நியாயத்தீர்ப்பின் பதினொறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. நான்கு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள் - (140:1-5)
2. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வர வேண்டுமென்று ஏழு விண்ணங்கள் - (140:6-11)
3. நீதிமானின் நம்பிக்கை - (140:12-13)

1. நான்கு விண்ணப்பங்கள் - துன்மார்க்கனின் பத்து பாவங்கள்

சங் 140:1 கர்த்தாவே, பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும்; கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்.

சங் 140:2 அவர்கள் தங்கள் இருதயத்தில் பொல்லாப்புகளைச் சிந்தித்து, யுத்தஞ் செய்ய நாள்தோறும் கூட்டங் கூடுகிறார்கள்.

சங் 140:3 சர்ப்பத்தைப்போல் தங்கள் நாவைக் கூர்மையாக்குகிறார்கள்; அவர்கள் உதடுகளின்கீழ் விரியன் பாம்பின்விஷம் இருக்கிறது. (சேலா).

சங் 140:4 கர்த்தாவே, துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கி, கொடியவனுக்கு என்னை விலக்கி இரட்சியும்; அவர்கள் என் நடைகளைக் கவிழ்க்கப்பார்க்கிறார்கள்.

சங் 140:5 அகங்காரிகள் எனக்குக் கண்ணியையும் கயிறுகளையும் மறைவாய் வைக்கிறார்கள்; வழியோரத்திலே வலையை விரித்து, எனக்குச் சுருக்குகளை வைக்கிறார்கள். (சேலா.)

சங்கீதம் 140-இல் கூறப்பட்டிருக்கிற தாவீதின் விண்ணப்பங்கள்

1. பொல்லாத மனுஷருக்கு என்னைத் தப்புவியும் (சங் 140:1).
2. கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும் (சங் 140:1,4).
3. துன்மார்க்கனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்கும் (சங் 140:4).
4. என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும் (சங் 140:6).
5. துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும்.
6. துன்மார்க்கனுடைய யோசனையை நடந்தேறவொட்டாதேயும் (சங் 140:8).
7. துன்மார்க்கனுடைய உதடுகளின் தீவினைகள் அவர்கள் தலைகளையே மூடுவதாக (சங் 140:9).
8. நெருப்புத் தழல் அவர்கள் மேல் விழுவதாக (சங் 140:10).
9. அவர்கள் அக்கினியிலும், அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படுகுழிகளிலும் தள்ளப்படுவார்களாக.
10. பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்படாமல் போவானாக. (சங் 140:11).

துன்மார்க்கரின் பாவங்கள்

1. பொல்லாத மனுஷர்கள் தீமை செய்கிறார்கள் (சங் 140:1).
2. கொடுமை செய்கிறார்கள் (சங் 140:1,4).
3. தங்கள் இருதயத்தில் பொல்லாப்புகளைச் சிந்திக்கிறார்கள் (சங் 140:2).
4. யுத்தஞ்செய்ய நாள்தோறும் கூட்டங் கூடுகிறார்கள்.
5. தங்கள் கூர்மையான நாவினால் பொய் பேசுகிறார்கள் (சங் 140:3).

140 அதிகாரம்

6. விரியன் பாம்பின் விஷம்போல் பேசுகிறார்கள்.

7. நீதிமானின் நடைகளைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் (சங் 140:4).

8. அவர்கள் அகங்காரிகளாயிருக்கிறார்கள் (சங் 140:5).

9. நீதிமான்களுக்கு எதிராக கண்ணிகளை வைக்கிறார்கள்.

10. நீதிமான்களுக்கு கயிறுகளை மறைவாய் வைக்கிறார்கள்.

11. நீதிமான்களின் வழியோரத்தில் வலையை விரிக்கிறார்கள்.

12. நீதிமான்களுக்கு சுருக்குகளை வைக்கிறார்கள்.

13. பொல்லாப்பு செய்ய வகை செய்கிறார்கள் (சங் 140:8).

14. அவர்கள் தீவினைகளையே பேசுகிறார்கள் (சங் 140:9).

15. பொல்லாதவைகளையே பேசுகிறார்கள் (சங் 140:11).

"சர்ப்பத்தைப்போல் தங்கள் நாவை கூர்மையாக்குகிறார்கள்" - ரோமர் 3-13-இல் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

துன்மார்க்கர் கண்ணிகளை வைக்கும் விதம்

1. கண்ணிகள் (சங் 140:5; யோசு 23:13; யோபு 22:10; சங் 11:6; சங் 69:22; சங் 91:3; சங் 119:110; சங் 124:7; சங் 141:9; சங் 142:3; நீதி 7:23; நீதி 22:5; பிர 9:12; ஏசா 24:17-18; எரே 18:22; எரே 48:43-44; ஓசி 5:1; ஓசி 9:8; ஆமோ 3:5)

2. கயிறுகள் (சங் 140:5; யோசு 2:15; எஸ் 1:6; யோபு 36:8; யோபு 41:1; நீதி 5:22; பிர 12:6; ஏசா 5:18; எரே 38:6-13; எசே 27:24; ஓசி 11:4; மீகா 2:5)

3. வலைகள் (சங் 140:5; சங் 9:15; சங் 10:9; சங் 25:15; சங் 31:4; சங் 35:7-8; சங் 57:6; யோபு 18:8; நீதி 1:17; நீதி 29:5; புல 1:13; எசே 12:13; எசே 17:20; எசே 19:8; எசே 32:3; ஓசி 5:1; ஓசி 7:12)

4. சுருக்குகள் (சங் 140:5; சங் 141:9; ஆமோ 3:5)

கண்ணி **(snare) - פַּח - pakh - 6341**

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்ணி **(a spring net)**

கயிறுகள் **(cords)- חֶבֶל - kheh'-bel, khay'-bel - 2256**

ஆண்பால் பெயர்ச்சொல் - கயிறுகள் **(rope; noose)**

வலைகள் **(net)- רֶשֶׁת - reh'-sheth - 7568**

பெண்பால் பெயர்ச்சொல் - வலைப்பின்னல், வலை, கண்ணி, சல்லடை **(a net for catching animals)**

சுருக்கு **(gins)- מוֹקֵשׁ - mo-kashe' - 4170**

ஆ.பெ.சொ. - கண்ணி, சிக்கிக்கொள்தல், மூக்கணாங்கயிறு **(snare; a noose for catching animals; trap)**

கண்ணிகள், கயிறுகள், வலைகள், சுருக்குகள் ஆகியவை துன்மார்க்கர் பயன்படுத்தும் ஆயுதங்கள். இந்த ஆயுதங்களை மறைவாக வைத்திருந்து துன்மார்க்கர் நீதிமான்களை அழிக்கப்பார்க்கிறார்கள்.

2. துன்மார்க்கன் மீது நியாயத்தீர்ப்பு வர வேண்டுமென்று ஏழு விண்ணப்பங்கள்

சங் 140:6 நான் கர்த்தரை நோக்கி: நீர் என் தேவன் என்றேன்; கர்த்தாவே, என் விண்ணப்பங்களின் சத்தத்துக்குச் செவிகொடும்.

140 அதிகாரம்

சங் 140:7 ஆண்டவராகிய கர்த்தாவே, என் இரட்சிப்பின் பெலனே, யுத்தநாளில் என் தலையை மூடினீர்.

சங் 140:8 கர்த்தாவே, துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும்; அவன் தன்னை உயர்த்தாதபடி அவனுடைய யோசனையை நடந்தேற வொட்டாதேயும். (சேலா).

சங் 140:9 என்னை வளைந்து கொள்ளுகிறவனுடைய உதடுகளின் தீவினைகள் அவர்கள் தலைகளையே மூடுவதாக.

சங் 140:10 நெருப்புத்தழல் அவர்கள்மேல் விழுவதாக; அக்கினியிலும், அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படு குழிகளிலும் தள்ளப்படுவார்களாக.

சங் 140:11 பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைப்பதில்லை; கொடுமையான மனுஷனைப் பறக்கடிக்கப் பொல்லாப்பு அவனை வேட்டையாடும்.

"யுத்தநாளில் என் தலையை மூடினீர்" - நான் யுத்தம் பண்ணும்போது எனக்கு மரணம் நேரிடாதவாறு என்னுடைய தலையை மூடி என்னைப் பாதுகாத்துக் கொண்டீர்.

தேவன் விண்ணப்பத்திற்கு பதில் தரவேண்டுமென்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர், தம்முடைய ஜனங்களைத் தப்புவிப்பார் (சங் 140:1).
2. தம்முடைய ஜனங்களை, கொடுமைக்கு விலக்கி இரட்சிப்பார் (சங் 140:1,4).
3. கொடியவனுக்கு விலக்கி இரட்சிப்பார் (சங் 140:4).
4. துன்மார்க்கனுடைய கைகளுக்கு நீங்கலாக்கி விடுவார்.
5. துன்மார்க்கர்கள் வைத்த கண்ணிகளுக்கு விலக்கித் தப்புவிப்பார் (சங் 140:4-5).
6. மனுஷர்களை ஜெயம் பண்ணத் தூண்டுவார் (சங் 140:6).
7. துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்வார் (சங் 140:8).
8. துன்மார்க்கர்கள், தங்களை உயர்த்தாதபடி செய்வார்.
9. துன்மார்க்கனைத் தண்டிப்பார் (சங் 140:10).
10. பொல்லாத நாவுள்ளவன் பூமியிலே நிலைத்திருக்கவிடாமல் செய்வார் (சங் 140:11).
11. துன்மார்க்கர்கள், தாங்கள் விதைத்ததையே அறுவடை செய்யச் செய்வார்.
12. சிறுமையானவனின் வழக்கைக் கர்த்தர் விசாரிப்பார் (சங் 140:12).
13. எளியவர்களின் நியாயத்தையும் விசாரிப்பார்.
14. நீதிமான்கள் கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பார்கள் (சங் 140:13).
15. செம்மையானவர்கள், கர்த்தருடைய சமுகத்தில் வாசம் பண்ணுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 98

"என்னை வளைந்து கொள்ளுகிறவனுடைய உதடுகளின் தீவினைகள் அவர்கள் தலைகளையே மூடுவதாக........"(சங் 140:9-13) சங் 140:9 -இந்தத் தீர்க்கதரிசனம் அப்சலோமும், மற்றவர்களும் தண்டிக்கப்பட்ட போது நிறைவேறிற்று (2சாமு 18; சங் 140:10)

"என்னை வளைந்துகொள்ளுகிறவனுடைய உதடுகளின் தீவினைகள் அவர்கள் தலைகளையே மூடுவதாக". இந்தத் தீர்க்கதரிசனம் இறுதி நியாயத்தீர்ப்பின்போது அக்கினிக் கடலில் நிறைவேறும் (வெளி 20:11-15; சங் 140:11-13). இயேசு கிறிஸ்து இந்த பூமியை நித்திய காலமாக ஆளுகை செய்யும்போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும். (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 21:3-7)

140 அதிகாரம்

நரகத்திற்குப் போவது பற்றிய விளக்கம்

1. துன்மார்க்கர்மீது நெருப்புத்தழல் விழும்.
2. அக்கினியில் துன்மார்க்கர் தள்ளப் படுவார்கள்.
3. துன்மார்க்கர் படு குழிகளில் தள்ளப் படுவார்கள்
4. துன்மார்க்கரால் மறுபடியும் எழுந்திருக்க முடியாது.

மேலே கூறப்பட்டிருக்கும் தண்டனைகள் எல்லாம் துன்மார்க்கருக்கு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பிற்குப் பின்பு நடைபெறப்போகும் காரியங்கள் (வெளி 20:11-15).

3. நீதிமானின் நம்பிக்கை

சங் 140:12 சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன்.

சங் 140:13 நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள்; செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள்.

141 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

நான்காவது ஜெபசங்கீதம்

பொருளடக்கம்

1. ஜெபத்தைக் கேட்க வேண்டும் என்னும் நான்கு விண்ணங்கள் - (141:1-2)
2. பாவத்திலிருந்து விலக்கிப் பாதுகாக்க வேண்டும் என்று நான்கு விண்ணப்பங்கள் - (141:3-4)
3. நீதிமானால் கடிந்து கொள்ளப்பட வேண்டும் என்று இரண்டு விண்ணப்பங்கள் - (141:5)
4. துன்மார்க்கனின் கண்ணிகளுக்கு விலக்கிப் பாதுகாக்க வேண்டுமென்று நான்கு விண்ணப்பங்கள் - (141:6-10)

1. ஜெபத்தைக் கேட்க வேண்டும் என்னும் நான்கு விண்ணங்கள்

சங் 141:1. கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், என்னிடத்திற்கு வரத்தீவிரியும்; நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், என் சத்தத்திற்குச் செவிகொடும்.

சங் 141:2 என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது.

சங்கீதம் 141-இல் தாவீது ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. என்னிடத்திற்கு வரத் தீவிரியும் (சங் 141:1).
2. என் சத்தத்திற்குச் செவிகொடும்.
3. என் விண்ணப்பம் உமக்கு முன்பாக தூபமாக இருக்கக்கடவது (சங் 141:2).
4. என் கையெடுப்பு அந்திப்பலியாக இருக்கக்கடவது.
5. என் வாய்க்குக் காவல் வையும் (சங் 141:3).
6. என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்.
7. என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும் (சங் 141:4).
8. அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்.
9. அவர்களுடைய பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக.
10. நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட்டும். (சங் 141:5).
11. அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன்.
12. என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும் (சங் 141:8).
13. துன்மார்க்கர் எனக்கு வைத்த கண்ணியின் சிக்குகளுக்கு என்னை விலக்கி இரட்சியும் (சங் 141:9).
14. அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கு என்னை விலக்கி இரட்சியும்.
15. துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக; நானோ அதற்குத் தப்பிக் கடந்துபோவேன்.

"தூபம்" - கர்த்தருக்கு முன்பாக தூபம் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும். (யாத் 30:1-9) பலிகள் காலையிலும், மாலையிலும் செலுத்தப்படும். (யாத் 29:39; எண் 28:4) தூபமும், பலிசெலுத்துவதும் ஜெபத்தின் அடையாளங்கள்.

2. பாவத்திலிருந்து விலக்கி பாதுகாக்க வேண்டும் என்று நான்கு விண்ணப்பங்கள்

சங் 141:3 கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.

141 அதிகாரம்

சங் 141:4 அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்க வொட்டாதேயும்; அவர்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் நான் சாப்பிடாமல் இருப்பேனாக.

"கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" - தாவீது தன் நாவைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். வேண்டாத காரியங்களைப் பேசி, அவற்றை அவனுக்கு எதிராக அவனுடைய சத்துருக்கள் பயன்படுத்தக்கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் இருக்கிறான். ஆகையினால் தன் சத்துருக்களுடைய ருசியுள்ள பதார்த்தங்களைக் கூட சாப்பிட மறுத்துவிடுகிறான் (சங் 141:3-4).

3. நீதிமானால் கடிந்து கொள்ளப்பட வேண்டும் என்று இரண்டு விண்ணப்பங்கள்

சங் 141:5 நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்.

"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை" - நீதிமான் அன்புடன் தண்டிப்பான். ஆனால் துன்மார்க்கனோ கோபத்துடன் தண்டிப்பான். நீதிமான் தண்டிக்கும்போது யாரும் அழிந்து போவதில்லை. துன்மார்க்கன் தண்டிக்கும்போது யாரும் பிழைப்பதில்லை.

"அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்" - துன்மார்க்கனுக்கு அவனுடைய துன்மார்க்கத்தின் நிமித்தம் இக்கட்டுக்கள் வரும். அவர்களுடைய இக்கட்டுக் காலங்களில் தாவீது அவர்களுக்காக ஜெபம் பண்ண விரும்புகிறான். நீதிமான்மீது நியாயத்தீர்ப்பு வருவதைத் தாவீது விரும்ப வில்லை. ஒரு மொழிபெயர்ப்பில் "துன்மார்க்கன் என் தலையை அபிஷேகம் பண்ணாமல் இருப்பானாக. ஏனெனில் நான் அவர்களுக்கு எதிராக விண்ணப்பம் பண்ணுகிறேன்" என்று வாசிக்கிறோம். துன்மார்க்கனின் எண்ணெய் அவர்களுடைய நயமான பேச்சுக்கள். சங்கீதக்காரன் துன்மார்க்கனின் நயமான பேச்சைவிட நீதிமானின் கடிந்து கொள்ளுதலையே விரும்புகிறான்.

4. துன்மார்க்கனின் கண்ணிகளுக்கு விலக்கிப் பாதுகாக்க வேண்டுமென்று நான்கு விண்ணப்பங்கள்

சங் 141:6 அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டு போகிறபோது என் வார்த்தைகள் இன்பமானவைகளென்று கேட்பார்கள்.

சங் 141:7 பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல, எங்கள் எலும்புகள் பாதாளவாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது.

சங் 141:8 ஆனாலும் ஆண்டவராகிய கர்த்தாவே, என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது; உம்மை நம்பியிருக்கிறேன்; என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும்.

சங் 141:9 அவர்கள் எனக்கு வைத்த கண்ணியின் சிக்குகளுக்கும், அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும் என்னை விலக்கி இரட்சியும்.

சங் 141:10 துன்மார்க்கர் தங்கள் வலைகளில் அகப்படுவார்களாக; நானோ அதற்குத்தப்பிக் கடந்துபோவேன்.

தீர்க்கதரிசன எண் - 99

"அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டுபோகிறபோது என் வார்த்தைகள் இன்பமானவைகளென்று கேட்பார்கள்" (சங் 141:6) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

141 அதிகாரம்

"அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச் சார்புகளிலிருந்து தள்ளுண்டுபோகிறபோது என் வார்த்தைகள் இன்பமானவைகளென்று கேட்பார்கள்" - துன்மார்க்கரின் கண்ணிகளிலிருந்து கர்த்தர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று தாவீது விண்ணப்பம் பண்ணுகிறான். துன்மார்க்கர் தண்டிக்கப்படும்வேளையைச் சங்கீதக்காரன் எதிர்பார்க்கிறான். (சங் 141:6-10). நியாயாதிபதிகள், அல்லது அதிகாரிங்கள் தங்கள் பதவிகளிலிருந்து தள்ளுண்டு போகிறபொழுது, ஜனங்கள் தாவீதின் வார்த்தைகளைக் கேட்பார்கள். அவைகள் இன்பமானவை என்று புரிந்து கொள்வார்கள்.

"பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல, எங்கள் எலும்புகள் பாதாளவாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப் பட்டிருக்கிறது" - எங்கள் எலும்புகள் என்று இந்த வசனத்தில் நாம் வாசிக்கும் வாக்கியம் ஒரு சில மொழிபெயர்ப்புகளில் "அவர்கள் எலும்புகள்" என்றுள்ளது. அவர்கள் என்பது சங் 141:6-இல் கூறப்பட்டிருக்கும் நியாயாதிபதிகள் ஆவார்கள். அவர்களுடைய எலும்புகள் பாதாளத்தின் வாய்க்கு நேராய் சிதறப்படும்போது அவர்கள் பாதாளத்திற்குத் தானாகவே இறங்கி விடுவார்கள். அப்பொழுது நான் அவர்களுடைய துன்மார்க்கங்களிலிருந்தும் விடுதலையாவேன். (சங் 141:7-10)

பாதாளம் (grave's) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம்

பாதாளத்தின் வாய் என்பது துன்மார்க்கரின் சரீரங்கள், ஆத்துமாக்கள், ஆவிகள் ஆகியவை பூமியின் பாகத்திலிருந்து நரகத்திற்குள் இறங்கும் இடமாகும். ஒருவன் மரத்தை வெட்டும்போது மரத்தின் சிறாக்கள் சிதறிவிழும். அதுபோல துன்மார்க்கரின் எலும்புகள் பூமியின்மீது சிதறிவிழும்.

"ஆனாலும் ஆண்டவராகிய கர்த்தாவே, என் கண்கள் உம்மை நோக்கியிருக்கிறது; உம்மை நம்பியிருக்கிறேன்; என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும்" - நாம் துன்மார்க்கரின் அழிவைக் காணும்போது நமது கண்கள் கர்த்தரையே நோக்கிப் பார்க்க வேண்டும். கர்த்தர் துன்மார்க்கரின் கண்ணிகளிலிருந்து நம்மைக் காத்துக் கொண்டார். நாம் கர்த்தரையே நம்பி ஜீவிக்க வேண்டும். அவர் கண்ணிகளின் சிக்குகளுக்கும், அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும் நம்மைப் பாதுகாக்கிறார் (சங் 141:8-10).

142 அதிகாரம்

(தாவீது கெபியிலிருக்கும்போது பண்ணின விண்ணப்பமாகிய மஸ்கீல் என்னும் சங்கீதம்.)

ஆறாவது ஜெபமும் சாட்சியும் சங்கீதம்

பொருளடக்கம்

1. பத்து அம்ச சாட்சி - (142:1-5)
2. உபத்திரவத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று மூன்று விண்ணப்பங்கள் - (142:6-7)

1. பத்து அம்ச சாட்சி

சங் 142:1 கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன்; கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.

சங் 142:2 அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன்; அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.

சங் 142:3 என் ஆவி என்னில் தியங்கும் போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்; நான் நடக்கிற வழியில் மறைவாக எனக்குக் கண்ணி வைத்தார்கள்.

சங் 142:4 வலதுபுறமாய்க் கண்ணோக்கிப் பாரும்; என்னை அறிவார் ஒருவரும் இல்லை; எனக்கு அடைக்கலமில்லாமற் போயிற்று; என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை.

சங் 142:5 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர் என்றேன்.

தாவீது கெபியில் இருந்தான். இது அதுல்லாமின் கெபியாகவோ (1சாமு 22:1) அல்லது என்கேதியிலுள்ள கெபியாகவோ (1சாமு 24:3) இருக்கலாம். ஆனாலும் தாவீது இந்தச் சங்கீதத்தை இயற்றியபோது அவன் என்கேதியிலுள்ள கெபியிலிருந்து எழுதினான் என்று வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணங்கள்.

1. தாவீது என்கேதியில் இருந்தபோது அவனுடைய நெருக்கங்கள் மிகவும் அதிகமாக இருந்தது. (சங் 141:2-3)
2. தாவீது என்கேதியிலிருந்த போது சவுலும், அவனுடைய சேனையும் தாவீதிற்கு எதிராகக் கண்ணிகளை வைத்தார்கள். (சங் 142:3; 1சாமு 24)
3. தாவீது என்கேதியிலுள்ள குகையில் இருந்தபோது சவுலின் சேனை அவனை முழுவதுமாகச் சூழ்ந்து கொண்டது. (சங் 142:4; 1சாமு 24)
4. தாவீது என்கேதியில் இருந்தபோது தப்பிப்பதற்கே அவனுக்கு வழியில்லை. தேவன் உதவி புரிந்தால் மட்டுமே அவனால் தப்பிக்க முடியும். (சங் 142:4-5; 1சாமு 24)
5. என்கேதியில் தாவீதிற்கு யாருமே அடைக்கலமாக இல்லை.(சங் 142:4; 1சாமு 24) (1சாமு 22).
6. என்கேதியில் கர்த்தர் மட்டுமே தாவீதிற்கு அடைக்கலமாக இருந்தார். (சங் 142:5; 1சாமு 24) (1சாமு 22)
7. என்கேதியில் தாவீது மிகவும் தாழ்த்தப்பட்டான். (சங் 142:6; 1சாமு 24) (1சாமு 22).
8. என்கேதியில் தாவீது தன்னைப் பின்தொடர்கிறவர்களிடமிருந்து தன்னைத் தப்பிக்க வைக்கவேண்டுமாறு கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினான். தாவீதிற்கு தன் விரோதிகளிடமிருந்து தப்பிக்க கர்த்தருடைய உதவியைத் தவிர வேறு வழியில்லை. (சங் 142:6-7) (1சாமு 24) (1சாமு 22).

142 அதிகாரம்

9. சங் 142:6-இல் "பின்தொடர்கிறவர்கள்" என்னும் வாக்கியத்தைக் குறிக்கும் எபிரெயச் சொல் "ரடாப்" **(radaph).** தாவீது என்கேதியிலிருந்த போது அவனுடைய விரோதிகள் அவனைப் பின்தொடர்ந்தார்கள். (1சாமு 24)

10. தன் ஆத்துமாவைக் காவலுக்கு நீக்கிவிடும் என்று தாவீது விண்ணப்பம் பண்ணுகிறான். (சங் 142:7) அவன் என்கேதியிலுள்ள குகையில் சிறையில் அடைக்கப்பட்டவன் போன்று இருக்கிறான். சவுலும், அவனுடைய மனுஷரும் என்கேதியிலுள்ள குகையின் நுழைவாயிலில் இருந்தார்கள். (1சாமு 24) அதுல்லாம் குகையில் இப்படிப்பட்ட சூழ்நிலை தாவீதிற்கு ஏற்படவில்லை. (1சாமு 22)

கெபியில் தாவீது செய்த காரியங்கள்

1. கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன் (சங் 142:1).
2. கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன்.
3. அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன் (சங் 142:2).
4. அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.
5. என்னை அறிந்து, எனக்கு உதவி செய்வார் யாருமில்லை (சங் 142:4).
6. கர்த்தர், என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறார். (சங் 142:5).

"என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை" - என்கேதியிலுள்ள குகையில் தாவீதோடு ஒரு சிலர் மட்டுமே இருந்தார்கள். அவனுடைய ஆத்துமாவை விசாரிப்பதற்குக்கூட அங்கு ஆட்கள் இல்லை. இப்பேர்ப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் தாவீது கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். "நீரே என் அடைக்கலமும், ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர்" என்று விண்ணப்பம் பண்ணினான் (சங் 142:4-5).

2. உபத்திரவத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று மூன்று விண்ணப்பங்கள்

சங் 142:6 என் கூக்குரலுக்குச் செவிகொடும், நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்; என்னைப் பின் தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், அவர்கள் என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்.

சங் 142:7 உமது நாமத்தை நான் துதிக்கும்படி, என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்; எனக்கு நீர் தயவுசெய்யும்போது நீதிமான்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளுவார்கள்.

கெபியில் தாவீது ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. என் கூக்குரலுக்குச் செவிகொடும் (சங் 142:6).
2. என்னைப் பின் தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும் (சங் 142:7).
3. என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும்.

தாவீது இவ்வாறு விண்ணப்பம் பண்ணியதற்குக் காரணங்கள்

1. நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன் (சங் 142:6).
2. என் விரோதிகள், என்னிலும் பலவான்களாயிருக்கிறார்கள்.
3. உமது நாமத்தை நான் துதிக்கும்படி செய்யும் (சங் 142:7).

என்கேதியிலுள்ள குகையிலிருந்து தாவீது விண்ணப்பம் பண்ணும்போது கர்த்தர் தனக்கு பதில் தருவார் என்று விசுவாசித்து இரண்டு விசுவாச அறிக்கைகளைக் கூறுகிறான்.

1. துன்மார்க்கர் என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இனிமேல் நீதிமான்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளுவார்கள். (சங் 142:7)
2. நீர் எனக்குத் தயவு செய்வீர்.

142 அதிகாரம்

நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போது, கர்த்தர் நமது ஜெபத்திற்குப் பதில் தருவார் என்று விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். விசுவாசமில்லாத ஜெபத்தினால் பிரயோஜனம் இல்லை. (மத் 21:22; மாற்கு 11:22லி24; எபி 11:6; யாக் 1:5லி8)

143 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

இருபதாவது நெருக்கத்தின் ஜெபம்

பொருளடக்கம்

1. இரக்கத்திற்காக நான்கு விண்ணப்பங்கள் - (143:1-2)
2. நெருக்கத்தின் எட்டு அம்ச ஜெபம் - (143:3-6)
3. துன்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பதினொறு விண்ணப்பங்கள் - (143:7-12)

1. இரக்கத்திற்காக நான்கு விண்ணப்பங்கள்

சங் 143:1 கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும்; உமது உண்மையின்படியும் உமது நீதியின்படியும் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்.

சங் 143:2 ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்.

சங்கீதம் 143-இல் தாவீது ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. என் ஜெபத்தைக் கேளும் (சங் 143:1).
2. என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும்.
3. உமது உண்மையின்படி எனக்கு உத்தரவு அருளிச் செய்யும்.
4. உமது நீதியின்படி எனக்கு உத்தரவு அருளிச் செய்யும்.
5. என்னை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும் (சங் 143:2).
6. சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும் (சங் 143:7).
7. உமது முகத்தை எனக்கு மறையாதேயும்.
8. அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும் (சங் 143:8).
9. நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்.
10. என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும் (சங் 143:9).
11. உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் (சங் 143:10).
12. என்னைச் செம்மையான வழியிலே நடத்தும்.
13. என்னை உயிர்ப்பியும் (சங் 143:11).
14. என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்.
15. உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழியும் (சங் 143:12).
16. என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்.

சங்கீதம் 143-இல் தாவீது ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்குக் காரணங்கள்

1. ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே என்னை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும் (சங் 143:2).
2. சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்வார்கள் (சங் 143:3).
3. என் பிராணனைத் தரையோடே நசுக்குவார்கள்.
4. என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்.
5. என் ஆவி என்னில் தியங்குகிறது (சங் 143:4).

143 அதிகாரம்

6. என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது

7. என் பூர்வநாட்களை நினைக்கிறேன் (சங் 143:5).

8. உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்.

9. உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.

10. என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன் (சங் 143:6).

11. என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.

12. நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடி செய்யும் (சங் 143:7).

13. நான் உம்மை நம்பியிருக்கிறேன் (சங் 143:8).

14. உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்தும்.

15. உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன் (சங் 143:9).

16. நீரே என் தேவன் (சங் 143:10).

17. உம்முடைய ஆவி, நல்ல ஆவி.

18. உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும் (சங் 143:11).

19. உம்முடைய நீதியின்படி என்னை நீங்கலாக்கிவிடும்.

20. நான் உமது அடியேன் (சங் 143:12).

"ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்ல" - கர்த்தருடைய பார்வையில் ஒருவனும் நீதிமான் அல்ல. எல்லோரும் பாவிகளே. ஆனாலும், கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபையினாலும், நமது விசுவாசத்தினாலும் கர்த்தர் நம்மை நீதிமான்களாக்குகிறார். (லூக்கா 18:14; அப் 13:39; ரோமர் 2:12; ரோமர் 3:24,28; ரோமர் 4:2; ரோமர் 5:1,9; ரோமர் 8:30; 1கொரி 6:11; கலா 2:16-17; கலா 3:24; தீத்து 3:7; யாக் 2:21-25)

2. நெருக்கத்தின் எட்டு அம்ச ஜெபம்

சங் 143:3 சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்கு முன் மரித்தவர்கள் போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்.

சங் 143:4 என் ஆவி என்னில் தியங்குகிறது; என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது.

சங் 143:5 பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளை யெல்லாம் தியானிக்கிறேன்; உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.

சங் 143:6 என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்; வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது (சேலா).

"சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்கு முன் மரித்தவர்கள் போல் என்னை இருளில் இருக்கப்பண்ணுகிறான்" - இந்த வசனத்தில் சத்துரு என்பது சவுலைக் குறிக்கும். தாவீதுடைய குடும்பம், அவனுடைய உற்றார் உறவினர் வசிக்கும் இடம், அவன் ஆராதித்து வந்த இடம், அவனுடைய உடைமைகள் உள்ள இடம் ஆகிய எல்லாவற்றிலிருந்தும் சவுல் தாவீதைத் துரத்திக்கொண்டு போகிறான். இப்போது தாவீது சவுலிடமிருந்து மறைந்து வாழும் இடம், இருளான இடமாக இருக்கிறது. தாவீது இருளில் மறைந்து வாழ்கிறான். மரித்தோரின் சடலங்கள் குழிக்குள் இருப்பதைபோன்று தாவீது கெபிக்குள் இருக்கிறான்.

"என் ஆவி என்னில் தியங்குகிறது; என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது" - தாவீது தன்னுடைய உற்றார், உறவினர், நெருங்கிய நண்பர்கள் எல்லோரையும் விட்டு கெபியில் ஒழிந்து வாழ்வதினால் அவனுடைய இருதயம் சோர்ந்து போய்விட்டது. (சங் 77:3; சங் 107:5; சங் 142:3)

"பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்; உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்" - தனக்குப் பிரச்சனை வந்தபோது தாவீது கர்த்தரையே நோக்கிப் பார்த்தான். கர்த்தரிடத்தில் தான்

143 அதிகாரம்

வைத்திருந்த நம்பிக்கையை குறைத்துப்போடவில்லை. அவன் விசுவாசத்தை இழந்துபோகவில்லை. எல்லா இக் கட்டுக்களிலிருந்தும் கர்த்தர் தன்னை விடுவிப்பார் என்று விசுவாசத்தோடு இருந்தான். கர்த்தர் அவனுடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணினார். கர்த்தர் தாவீதை அவனுடைய சத்துருக்களிடமிருந்து விலக்கிப் பாதுகாத்துக் கொண்டார். *(சங் 18:19; சங் 28:6; சங் 34:4, 6)*

நமக்கு கஷ்டமான வேளைகள் வரும்போது நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. பூர்வநாட்களை நினைக்க வேண்டும். *(சங் 143:5; சங் 34:4-6).*

2. கர்த்தருடைய செய்கைகளையெல்லாம் தியானிக்க வேண்டும்.

3. கர்த்தருடைய கரத்தின் கிரியைகளை யோசிக்க வேண்டும்.

4. நம் கைகளை கர்த்தருக்கு நேராக விரிக்க வேண்டும். *(சங் 143:6).*

5. வறண்ட நிலத்தைப் போல் நம் ஆத்துமா கர்த்தர்மேல் தாகமாயிருக்க வேண்டும்.

6. கர்த்தரிடத்தில் நம் ஆத்துமாவை உயர்த்த வேண்டும். *(சங் 143:8).*

7. கர்த்தரைப் புகலிடமாகக் கொள்ள வேண்டும். *(சங் 143:9).*

"வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது" - வறண்ட நிலத்தின்மீது மழை பெய்யும்போது அது மழைத்தண்ணீர் அனைத்தையும் உறிஞ்சிவிடும். அதுபோலவே, நமது ஆத்துமா கர்த்தர்மேல் தாகமாக இருக்கும்போது கர்த்தரை முழுமையாகப் பற்றிக் கொள்ளும். கர்த்தர் அருளும் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளும்.

3. துன்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பதினொரு விண்ணப்பங்கள்

சங் 143:7 கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும், என் ஆவி தொய்ந்து போகிறது; நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு, உமது முகத்தை எனக்கு மறையாதேயும்.

சங் 143:8 அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

சங் 143:9 கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்; உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன்.

சங் 143:10 உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

சங் 143:11 கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்; உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும்.

சங் 143:12 உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்; நான் உமது அடியேன்.

"உம்முடைய நல்ல ஆவி" - கர்த்தருக்கு ஆவி உண்டு என்று விளக்கும் வசனங்களில் இதுவும் ஒன்று. தூதர்களுக்கும், மனுஷருக்கும் ஆவியுண்டு. கர்த்தருக்கு ஆத்துமா உண்டு. (1கொரி 2:11) (ஏசா 42:1; எபி 10:38). கர்த்தரின் சரீரத்தைப் பற்றி எசே 1:26; தானி 7:9-10; தானி 10:5-6; வெளி 4:3 ஆகிய வசனங்கள் விளக்குகின்றன.

143 அதிகாரம்

"செம்மையான வழி" - மூலபாஷையில் செம்மையான நிலம் **[land of uprightness]** என்றுள்ளது. தாவீது தன் சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பாக இருக்கக்கூடிய நிலம். (சங் 143:9, 12) இது அப்சலோமின் காலத்தைக் குறிக்குமென்றால் தாவீது கர்த்தருடைய வழிநடத்துதலைத் தெரிந்து கொள்வதற்காக அவன் ஜெபம் பண்ணும் இடம் என்றும் பொருள்படும். (2சாமு 15-18)

ஆண்டவரே, என்னுடைய ஆத்துமாவை இடுக்கத்திலிருந்து நீங்கலாக்கிவிடும். என்னுடைய சத்துருக்களை அழித்துப்போடும். உம்முடைய நாமத்தின் நிமித்தம் என்னை உயிர்ப்பியும் என்று தாவீது கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணுகிறான் (சங் 143:11-12).

144 அதிகாரம்

(தாவீதின் சங்கீதம்.)

துதித்து ஜெபிக்கும் பதினொறாவது சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரைத் துதிப்பதற்கு பத்து காரணங்கள் - (144:1-2)
2. மனுஷனின் நான்கு அம்ச மாயை - (144:3-4)
3. சத்துருக்களிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்று எட்டு விண்ணப்பங்கள் - (144:5-8)
4. இரண்டு பொருத்தனைகள் - இரண்டு காரணங்கள் - (144:9-10)
5. இரண்டு விண்ணப்பங்கள் - பத்து காரணங்கள் - (144:11-15)

1. கர்த்தரைத் துதிப்பதற்கு பத்து காரணங்கள்

சங் 144:1 என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

சங் 144:2 அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.

கர்த்தருடைய சுபாவங்கள்

1. என் பெலன் (சங் 144:1)
2. என்னைப் படிப்பிக்கிற என் கன்மலை
3. என் தயாபரர் (சங் 144:2)
4. என் கோட்டை
5. என் உயர்ந்த அடைக்கலம்
6. என்னை விடுவிக்கிறவர்
7. என் கேடகம்
8. என் நம்பிக்கை
9. எனக்கு ஜனங்களைக் கீழ்படுத்துபவர்
10. என் இரட்சிப்பு (சங் 144:10)

"என் ஜனங்களை எனக்குக் கீழ்ப் படுத்துகிறவருமாயிருக்கிறார்" - அப்சலோமின் கலகத்தை அடக்கிய பின்பு, இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். (2சாமு 18) தாவீதின் ஜீவிய காலத்தில் அப்சலோமின் நாளில் மட்டுமே ஜனங்கள் தாவீதிற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள்.

2. மனுஷனின் நான்கு அம்ச மாயை

சங் 144:3 கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும், மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும், அவன் எம்மாத்திரம்?

சங் 144:4 மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்; அவன் நாட்கள் கடந்து போகிற நிழலுக்குச் சமானம்.

"கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும், மனுபுத்திரனை நீர் எண்ணுகிறதற்கும், அவன் எம்மாத்திரம்?" - இதை சங் 8:4-வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

மனுஷனுடைய சுபாவங்கள்

1. மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்
2. மனுஷன் நாட்கள் கடந்து போகிற நிழலுக்குச் சமானம்

3. சத்துருக்களிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்று எட்டு விண்ணப்பங்கள்

சங் 144:5 கர்த்தாவே, நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி, பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும்.

144 அதிகாரம்

சங் 144:6 மின்னல்களை வரவிட்டுச் சத்துருக்களைச் சிதறடியும், உமது அம்புகளை எய்து அவர்களைக் கலங்கடியும்.

சங் 144:7 உயரத்திலிருந்து உமது கரத்தை நீட்டி, ஜலப்பிரவாகத்துக்கு என்னை விலக்கி இரட்சியும்.

சங் 144:8 மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.

சங்கீதம் 144-இல் தாவீது ஏறெடுக்கும் விண்ணப்பங்கள்

1. உமது வானங்களைத் தாழ்த்தும் (சங் 144:10)
2. வானங்களிலிருந்து இறங்கும்.
3. பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும்
4. மின்னல்களை வரச்செய்யும் (சங் 144:6).
5. சத்துருக்களைச் சிதறடியும் (சங் 144:2, 7-8, 11).
6. உமது அம்புகளை எய்யும்.
7. அவர்களைக் கலங்கடியும் (சங் 144:2, 7-8, 11).
8. உயரத்திலிருந்து உமது கரத்தை நீட்டும் (சங் 144:7).
9. சத்துருக்களிடமிருந்து என்னை விடுவியும் (சங் 144:2, 7-8, 11).
10. அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும் (சங் 144:7-8).

"ஜலப்பிரவாகத்துக்கு என்னை விலக்கி இரட்சியும்" - ஜலப்பிரவாகம் என்பது ஜனங்களைக் குறிக்கும். (வெளி 17:15) திரளான ஜலப்பிரவாகம் என்பது திரளான ஜனங்களைக் குறிக்கும்.

மனுஷருடைய பொதுவான பாவங்கள்

1. மாயையைப் பேசுதல் (சங் 144:8, 11).
2. கள்ளத்தனம்

4. இரண்டு பொருத்தனைகள் - இரண்டு காரணங்கள்

சங் 144:9 கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன்; தம்புரினாலும் பத்துநரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங் 144:10 நீரே ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தந்து, உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறவர்.

தாவீதின் பொருத்தனைகள்

1. நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன்
2. தம்புரினாலும் பத்துநரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்

கர்த்தருடைய கிரியைகள்

1. ராஜாக்களுக்கு ஜெயத்தைத் தருகிறீர்
2. உமது ஜனங்களைப் பொல்லாத பட்டயத்திற்குத் தப்புவிக்கிறீர்

5. இரண்டு விண்ணப்பங்கள் - பத்து காரணங்கள்

சங் 144:11 மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்.

144 அதிகாரம்

சங் 144:12 அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக் கன்றுகளைப்போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப்போலவும் இருப்பார்கள்.

சங் 144:13 எங்கள் களஞ்சியங்கள் சகலவிதவஸ்துகளையும் கொடுக்கத்தக்கதாய் நிரம்பியிருக்கும்; எங்கள் கிராமங்களில் எங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும்.

சங் 144:14 எங்கள் எருதுகள் பலத்தவைகளாயிருக்கும்; சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும் இராது; எங்கள் வீதிகளில் கூக்குரலும் உண்டாகாது.

சங் 144:15 இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது; கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.

அந்நிய புத்திரரின் கைக்கு கர்த்தர் நம்மை விலக்கித் தப்புவிக்க வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. எங்கள் குமாரர் இளமையில் ஓங்கி வளருகிறார்கள் (சங் 144:11-12).
2. எங்கள் குமாரத்திகள் சித்திரந் தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப் போலவும் இருப்பார்கள் (சங் 144:12).
3. எங்கள் களஞ்சியங்கள் சகலவித வஸ்துக்களால் நிரம்பியிருக்கும் (சங் 144:13).
4. எங்கள் ஆடுகள் ஆயிரம் பதினாயிரமாய்ப் பலுகும்.
5. எங்கள் எருதுகள் பலத்தவைகளாயிருக்கும் (சங் 144:14).
6. சத்துரு உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் இராது.
7. எங்கள் வீதிகளில் கூக்குரல் உண்டாகாது.

145 அதிகாரம்

(தாவீது பாடின ஸ்தோத்திர சங்கீதம்.)

பத்தொன்பதாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தனிப்பட்ட முறையில் தேவனைத் துதிப்பதின் நான்கு அம்சங்கள் - (145:1-2)
2. தேவனுடைய மகத்துவத்தின் பதினெட்டு அம்சங்கள் - (145:3-7)
3. தேவனுடைய சுபாவத்தின் ஆறு அம்சங்கள் - (145:8-9)
4. நித்திய ராஜ்யத்தின் நிபந்தனைகள் - (145:10-13)
5. தேவனுடைய பதினைந்து அம்ச பராமரிப்பு - (145:14-21)

1. தனிப்பட்ட முறையில் தேவனைத் துதிப்பதின் நான்கு அம்சங்கள்

சங் 145:1 ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்.

சங் 145:2 நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்.

கர்த்தரை ஸ்தோத்தரிக்கும் தாவீதின் பொருத்தனைகள்

1. ராஜாவாகிய என் தேவனே உம்மை உயர்த்துவேன் (சங் 145:1)
2. உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்
3. நாடோறும் உம்மை ஸ்தோத்திரிப்பேன் (சங் 145:2)
4. எப்பொழுதும் என்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்
5. உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தைக் குறித்துப் பேசுவேன் (சங் 145:5)
6. உம்முடைய அதிசயமான கிரியைகளைக் குறித்துப் பேசுவேன்
7. உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன் (சங் 145:6)
8. என் வாயினால் கர்த்தரின் துதியைச் சொல்லுவேன் (சங் 145:21)

2. தேவனுடைய மகத்துவத்தின் பதினெட்டு அம்சங்கள்

சங் 145:3 கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத் தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.

சங் 145:4 தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்.

சங் 145:5 உம்முடைய சிறந்த மகிமைப்பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன்.

சங் 145:6 ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்.

சங் 145:7 அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்.

கர்த்தருடைய மகத்துவங்களின் ஆதாரங்கள்

1. கர்த்தர் பெரியவர் (சங் 145:3)
2. அவர் மிகவும் புகழப்படத்தக்கவர்

சங்கீதம் – தொகுப்புரை

145 அதிகாரம்

3. அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது

4. தலைமுறை தலைமுறையாக அவருடைய கிரியைகளின் புகழ்ச்சி சொல்லப்படும். (சங் 145:4)

5. தலைமுறை தலைமுறையாக அவருடைய வல்லமையுள்ள செய்கைகள் அறிவிக்கப்படும். (சங் 145:4,6)

6. அவருடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தைக் குறித்துப் பேசப்படும். (சங் 145:5)

7. அவருடைய அதிசயமான கிரியைகளைக் குறித்துப் பேசப்படும். (சங் 145:5, 6)

8. ஜனங்கள் கர்த்தருடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள் (சங் 145:6)

9. அவர்கள் கர்த்தருடைய மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்துவார்கள் (சங் 145:7)

10. கர்த்தருடைய நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்

தீர்க்கதரிசன எண் - 100

"தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்" - (சங் 145:4)

தீர்க்கதரிசன எண் - 101

"ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்" - (சங் 145:6)

தீர்க்கதரிசன எண் - 102

"அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்" - (சங் 145:7)

மேலே கூறப்பட்டிருக்கிற மூன்று தீர்க்கதரிசனங்களும் நிறைவேறி வருகின்றன. நித்தியகாலமாக அவை தொடர்ந்து நிறைவேறும்.

3. தேவனுடைய சுபாவத்தின் ஆறு அம்சங்கள்

சங் 145:8 கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.

சங் 145:9 கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது.

சங்கீதம் 145-இல் கர்த்தரைப் பற்றி கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. கர்த்தர் (சங் 145:1)
2. ராஜா
3. பெரியவர் (சங் 145:3)
4. இரக்கம் (சங் 145:8)
5. மனஉருக்கம்
6. நீடிய சாந்தம்
7. மிகுந்த கிருபை
8. எல்லார் மேலும் தயவுள்ளவர் (சங் 145:9)
9. அவருடைய இரக்கங்கள் எல்லா சிருஷ்டிகளின் மேலுள்ளது
10. அவர் வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர் (சங் 145:17)
11. அவருடைய கிரியைகளெல்லாம் பரிசுத்தமானவைகள்

145 அதிகாரம்

12. உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கிறார் (சங் 145:18)

கர்த்தருடைய சுபாவங்கள்

1. இரக்கம் (சங் 145:8)
2. மனஉருக்கம்
3. நீடிய சாந்தம்
4. தயவு (சங் 145:9)
5. நன்மை
6. மிகுந்த கிருபை
7. நீதி (சங் 145:17)
8. பரிசுத்தம்

4. நித்திய ராஜ்யத்தின் நிபந்தனைகள்

சங் 145:10 கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்.

சங் 145:11 மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப் பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு;

சங் 145:12 உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்.

சங் 145:13 உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது.

தீர்க்கதரிசன எண் - 103

"கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்..............." (சங் 145:10-13) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிர வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் நிறைவேறும்.

சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யத்தைப் பற்றிய சத்தியங்கள்

1. உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும் (சங் 145:10)
2. உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்
3. உம்முடைய ராஜ்யத்தின் மகிமையை அறிவிப்பார்கள் (சங் 145:11)
4. உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்
5. மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளைத் தெரிவிப்பார்கள் (சங் 145:12; ஏசா 11:9)
6. உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப் பிரதாபத்தைத் தெரிவிப்பார்கள் (சங் 145:12)
7. உம்முடைய ராஜ்யம் சதா காலங்களிலுமுள்ள ராஜ்யம் (சங் 145:13)
8. உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக உள்ளது (சங் 145:13; ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:21; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 21:4-5)

5. தேவனுடைய பதினைந்து அம்ச பராமரிப்பு

சங் 145:14 கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.

145 அதிகாரம்

சங் 145:15 எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.

சங் 145:16 நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.

சங் 145:17 கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.

சங் 145:18 தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

சங் 145:19 அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.

சங் 145:20 கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.

சங் 145:21 என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக; மாம்சதேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது.

தேவனுடைய பராமரிப்பு

1. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கித் தூக்கி விடுகிறார் (சங் 145:14)
2. மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார்
3. எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது (சங் 145:15)
4. ஏற்ற வேளையிலே கர்த்தர் எல்லா ஜீவன்களுக்கும் ஆகாரங் கொடுக்கிறார்
5. சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறார் (சங் 145:16)
6. கர்த்தர், தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர் (சங் 145:17)
7. தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்
8. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் சமீபமாயிருக்கிறார் (சங் 145:18)
9. உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங் 145:19)
10. தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின் படி செய்கிறார் (சங் 145:19)
11. அவர்கள் கூப்பிடுதலைக் கேட்கிறார்
12. தமக்குப் பயந்தவர்களை இரட்சிக்கிறார்
13. தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுகிறார் (சங் 145:20)
14. துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்

"விழுகிறவர்கள்" - தங்கள் கால்களால் நிற்கமுடியாமல் விழுகிறவர்களைக் கர்த்தர் ஆதரிப்பார். பலவீனமுள்ளவர்களுக்குக் கர்த்தர் துணையாக இருப்பார். தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரைச் சார்ந்திருக்கும்போது எந்த சக்தியும் அவர்களை மேற்கொள்ளாது (1கொரி 10:13).

"ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்" - கர்த்தர் தமது சர்வ சிருஷ்டிகளையும் போஷிக்கிறவர். ஏற்ற வேளையில் மழையையும், வெயிலையும், குளிர்ச்சியையும், பல்வேறு விதமான சீதோஷ்ண நிலைகளையும் தந்து, கர்த்தர் எல்லா ஜீவராசிகளையும் ஆதரிக்கிறார்.

145 அதிகாரம்

"நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்" - கர்த்தர் சர்வ சிருஷ்டிகளையும், பராமரிப்பதோடு நிறுத்தி விடாமல், தம்முடைய ஆசீர்வாதங்களினால் அவைகளின் வாஞ்சைகளைத் திருப்தியாக்குகிறார்.

"கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்" - கர்த்தர் பட்சபாதமுள்ளவர் என்றோ, அநீதியானவர் என்றோ யாரும் கூறமுடியாது. கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர். தமது சிருஷ்டிகளின்மீது அவர் நடப்பிக்கும் எல்லா கிரியைகளும் நீதியானவை. அவர் எல்லா சிருஷ்டிகளின்மீதும் கிருபையுள்ளவராக இருக்கிறார்.

கர்த்தர் யாருக்கெல்லாம் சமீபமாயிருக்கிறார்?

1. தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு சமீபமாயிருக்கிறார் (சங் 145:18)
2. தமக்குப் பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறார் (சங் 85:9)
3. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங் 34:18)
4. தேவனிடத்தில் சேருகிறவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (யாக் 4:8)

மனுஷனுக்கு சமீபமாயிருக்கும் மூன்று முக்கியமான காரியங்கள்

1. தேவன் (உபா 4:7; சங் 145:18)
2. கர்த்தருடைய வார்த்தை (உபா 30:14; ரோமர் 10:8)
3. இரட்சிப்பு (சங் 85:9)

"உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள்" - நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போது செம்மையான மனதுடன் அவரது சமுகத்திலே வரவேண்டும். அவருடைய இரக்கங்களை நாடவேண்டும். நமது இருதயம் உண்மையாய் இருக்க வேண்டும். நம்மிடம் மெய்யான விசுவாசம் இருக்க வேண்டும்.

ஜெபிக்கும் மனுஷருக்கு கர்த்தர் அருளும் காரியங்கள்

1. அவர்களுக்குக் கிருபையுள்ளவர்களாய் இருக்கிறார் (சங் 145:8)
2. அவர்களுக்கு மனஉருக்கம் உள்ளவர்
3. நீடிய சாந்தமாயிருக்கிறார்
4. மிகுந்த கிருபையுள்ளவராயிருக்கிறார்
5. நன்மைகளைச் செய்கிறார் (சங் 145:9)
6. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார் (சங் 145:14)
7. எல்லா ஜீவன்களுக்கும் ஆகாரம் கொடுக்கிறார் (சங் 145:15-16)
8. அவர்கள் விருப்பப்படி திருப்தியாக்குகிறார் (சங் 145:16, 19)
9. எப்பொழுதும் அவர்களுக்கு சமீபமாயிருக்கிறார் (சங் 145:18; யாக் 4:8)
10. அவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்கிறார் (சங் 145:19)
11. அவர்களை இரட்சிக்கிறார்
12. அவர்களைக் காப்பாற்றுகிறார் (சங் 145:20)

கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள்

1. மனந்திரும்ப வேண்டும் - பாவங்களை அறிக்கையிடவேண்டும் (2நாளா 7:14; லூக்கா 13:1-5; 1யோவான் 1:9)

சங்கீதம் - தொகுப்புரை

145 அதிகாரம்

2. கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும் - கர்த்தருடைய கற்பனைகளைக் கைக் கொள்ள வேண்டும் (யாத் 15:26; நீதி 3:1-4; 1யோவான் 3:21-22)

3. கர்த்தருக்குப் பயப்படவேண்டும் (சங் 34:9-20; பிர 12:13)

4. கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டும் (சங் 145:20; மத் 22:37; யோவான் 14:15)

5. செம்மையாய் நடக்கவேண்டும் (சங் 84:11).

6. நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் - அவருடைய வசனம் நமக்குள் நிலைத்திருக்க வேண்டும் (யோவான் 15:7,16; ரோமர் 10:17).

7. கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும் (மத் 21:22; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

தீர்க்கதரிசன எண் - 104

"கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்" (சங் 145:20) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"மாம்சதேகமுள்ள யாவும்" - என்பது எல்லா ஜீவராசிகளையும் குறிக்கும்.

சங்கீதம் - தொகுப்புரை

146 அதிகாரம்

இருபதாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. தேவனைத் துதிப்பதின் நான்கு அம்சம் - (146:1-2)
2. மனுஷன் மறைந்து போவான் - தவறான நம்பிக்கை - (146:3-4)
3. தேவனுடைய மகத்துவத்தின் பதினைந்து அம்சங்கள் - சரியான நம்பிக்கை - (146:5-10)

1. தேவனைத் துதிப்பதின் நான்கு அம்சம்

சங் 146:1 அல்லேலூயா, என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி.

சங் 146:2 நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

சங்கீதம் 146-இல் கூறப்பட்டிருக்கிற ஆலோசனைகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் (சங் 146:1,10).
2. என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதியுங்கள் (சங் 146:1).
3. பிரபுக்களின் மேல் நம்பிக்கை வையாதேயுங்கள் (சங் 146:3).
4. இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனை நம்பாதேயுங்கள் (சங் 146:3-4).

சங்கீதம் 146-இல் கூறப்பட்டிருக்கிற பொருத்தனைகள்

1. நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்
2. நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்

2. மனுஷன் மறைந்து போவான் - தவறான நம்பிக்கை

சங் 146:3 பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள்.

சங் 146:4 அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.

மனுஷனை நம்பக்கூடாது என்பதற்குக் காரணங்கள்

1. எந்த மனுஷனும் இரட்சிக்கத் திராணியில்லாதவன்
2. மனுஷனுடைய ஆவி பிரியும். அவனால் ஒரு உதவியும் செய்ய முடியாது (சங் 146:4).
3. மனுஷனுடைய சரீரம் மண்ணுக்குத் திரும்பும். அவனால் ஒரு உதவியும் செய்ய முடியாது.

"அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" - மனுஷனுடைய யோசனைகள் நித்தியமானவை அல்ல. அவை அழிந்துபோகும். மனுஷன் மரித்தபிறகு அவனால் சிந்திக்க முடியாது. (ஆதி 3:19; பிர 3:19) மனுஷன் மரிக்கும்போது அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் அவனை விட்டுப் பிரியும். (யாக் 2:26) அப்போது அவனுடைய உள்ளான மனுஷன் மரித்துப்போன சரீரத்தைச் சிந்திக்க வைக்கமுடியாது. ஆவியும், ஆத்துமாவும் நித்தியமானவை. ஆகையினால், அவை எக்காலத்திலும் சிந்திக்கும்.

3. தேவனுடைய மகத்துவத்தின் பதினைந்து அம்சங்கள் - சரியான நம்பிக்கை

சங் 146:5 யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்.

சங் 146:6 அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்; அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்.

146 அதிகாரம்

சங் 146:7 அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்கிறார்; பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார்; கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார்.

சங் 146:8 குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார்; மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார்; நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார்.

சங் 146:9 பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்; துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார்.

சங் 146:10 கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார்; சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம் பண்ணுகிறார். அல்லேலூயா.

மனுஷனை பாக்கியவான்களாக்கும் காரியங்கள்

1. எல்லா இடுக்கண்களுக்கும் யாக்கோபின் தேவன் துணையாயிருப்பார் (சங் 146:5)
2. கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கிறவன் பாக்கியவான்.
3. வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினார் (சங் 146:6)
4. அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்
5. அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்கிறார் (சங் 146:7)
6. பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார்.
7. கட்டுண்டவர்களை விடுதலை யாக்குகிறார்
8. குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார் (சங் 146:8).
9. மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார்.
10. நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார்.
11. பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார் (சங் 146:9)
12. அவர் திக்கற்ற பிள்ளையையும், விதவையையும் ஆதரிக்கிறார்.
13. துன்மார்க்கரின் வழியைக் கவிழ்த்துப் போடுகிறார்.
14. கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார் (சங் 146:10)

சங்கீதம் 146-இல் தேவனைப் பற்றி கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. எல்லா நெருக்கங்களிலும் ஜனங்களுக்கு சகாயர் (சங் 146:5).
2. அவர்களின் ஜீவியத்திற்கு கர்த்தரே நம்பிக்கையானவர்
3. அவர் வானத்தை உண்டாக்கினவர் (சங் 146:6).
4. பூமியை சிருஷ்டித்தவர்.
5. சமுத்திரத்தைப் படைத்தவர்.
6. சகல ஜீவராசிகளையும் சிருஷ்டித்தவர்.
7. அவர் உண்மையை என்றென்றைக்கும் காக்கிறவர்.
8. அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்கிறவர் (சங் 146:7).
9. பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார்.
10. கட்டுண்டவர்களை விடுதலை யாக்குகிறார்.

146 அதிகாரம்

11. குருடர்களைக் குணமாக்குகிறார் (சங் 146:8).

12. மடங்கடிக்கப்பட்டவர்களைத் தூக்கி விடுகிறார்

13. நீதிமான்களை நேசிக்கிறார்.

14. பரதேசிகளைக் காப்பாற்றுகிறார் (சங் 146:9).

15. திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார்.

16. துன்மார்க்கனின் வழியைக் கவிழ்க்கிறார்.

17. ராஜ்யங்களைச் சதாகாலங்களிலும் அரசாளுகிறார் (சங் 146:10).

18. சீயோனில் தலைமுறை தலைமுறையாக ராஜரிகம் பண்ணுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 105

"கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார்; சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம் பண்ணுகிறார்" - (சங் 146:10) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

147 அதிகாரம்

இருபத்தொன்றாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. துதித்தல் - தேவனுடைய பத்து கிரியைகள் - (147:1-6)
2. பாடுதல் -தேவனுடைய எட்டு கிரியைகள் - (147:7-11)
3. துதித்தல் - தேவனுடைய பத்து கிரியைகள் - (147:12-20)

1. துதித்தல் - தேவனுடைய பத்து கிரியைகள்

சங் 147:1 கர்த்தரைத் துதியுங்கள்; நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது, துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.

சங் 147:2 கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார்; துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார்.

சங் 147:3 இருதயம் நொறுங் குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.

சங் 147:4 அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்.

சங் 147:5 நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ள வருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது.

சங் 147:6 கர்த்தர் சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகிறார்; துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்.

சங்கீதம் 147-இல் கூறப்பட்டிருக்கிற ஆலோசனைகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் (சங் 104:35) (சங் 147:1,20).
2. தேவனைக் கீர்த்தனம் பண்ணுங்கள் (சங் 147:1).
3. கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள் (சங் 147:7).
4. தேவனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள்.
5. எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி (சங் 147:12).
6. சீயோனே, உன் தேவனைத் துதி.

துதி (Praise) - הָלַל - haw-lal' -1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்பு, பேச்சு, பெருமை, பாராட்டு, வீம்புக்காரர், தொழுதுகொள், மேன்மைப்பாராட்டு, துதி, அல்லேலூயா, வாழ்த்து, ஸ்தோத்திரி, புகழ், பாடு, மூர்க்க, வெறிகொள், உயர்த்து, ஒளிவீசு, கீர்த்தனம்பண்ணு, துதிசெய், மதி மயங்கு, ஒளிகொடு, புகழப்படு

சங்கீதம் 147-இல் கர்த்தரைத் துதிக்குமாறு கூறப்பட்டிருப்பதற்குக் காரணங்கள்

1. துதித்தல் நல்லது (சங் 147:1).
2. துதித்தல் இன்பமானது.
3. துதித்தலே ஏற்றது.
4. அவருடைய கிரியைகளினிமித்தம் துதியுங்கள் (சங் 147:2-3,6,16-17).
5. ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார், அவருடைய அறிவு அளவில்லாதது (சங் 147:4-5).
6. அவர், சகலத்திற்கும் ஆகாரங் கொடுக்கிறார் (சங் 147:8-9).
7. அவர் பிரியமாயிருக்கிறார். (சங் 147:10-11).
8. இஸ்ரவேலை ஆசீர்வதிக் கிறதினிமித்தம் (சங் 147:12-14).

147 அதிகாரம்

9. அவருடைய வார்த்தையினிமித்தம் (சங் 147:15,18-19).

10. இஸ்ரவேலை தெரிந் தெடுப்பதினிமித்தம் (சங் 147:20).

சங்கீதம் 147-இல் தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள்

1. எருசலேமைக் கட்டுகிறார் (சங் 147:2).
2. துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார் (சங் 147:2; ஏசா 11:10-12; எசே 37; மத் 24:31).
3. இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார் (சங் 147:3; ஏசா 61:1-2; லூக்கா 4:18-21).
4. அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.
5. அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணுகிறார் (சங் 147:4).
6. நட்சத்திரங்களைப் பேரிட்டு அழைக்கிறார்.
7. சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார் (சங் 147:6).
8. துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்.
9. வானத்தை மேகங்களால் மூடுகிறார் (சங் 147:6).
10. பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்துகிறார்.
11. மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்.
12. மிருகங்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார் (சங் 147:9).
13. காக்கைக் குஞ்சுகளுக்கு ஆகாரங் கொடுக்கிறார்.
14. அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார் (சங் 147:10).
15. வீரனுடைய கால்களில் பிரியப்படார்.
16. தமக்குப் பயந்திருக்கிறவர்களுக்குப் பிரியமாயிருக்கிறார் (சங் 147:11).
17. தமது கிருபைக்குப் காத்திருக்கிறவர்கள் மேல் பிரியமாயிருக்கிறார்.
18. எருசலேம், சீயோன்களின் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்துகிறார் (சங் 147:12-13).
19. இஸ்ரவேலின் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் (சங் 147:13).
20. இஸ்ரவேலின் எல்லைகளைச் சமாதானமுள்ளவர்களாக்குகிறார் (சங் 147:14).
21. உசிதமான கோதுமையினால் திருப்தியாக்குகிறார்.
22. பூமியின் மீது தமது வார்த்தையை அனுப்புகிறார் (சங் 147:15).
23. அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது.
24. பஞ்சைப் போல உறைந்த மழையைத் தருகிறார் (சங் 147:16).
25. சாம்பலைப் போல உறைந்த பனியைத் தூவுகிறார்.
26. அவர், கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார் (சங் 147:17).
27. குளிரையும் அனுப்புகிறார்.
28. அவர், தமது வார்த்தையை அனுப்பி, அவைகளை உருகப் பண்ணுகிறார் (சங் 147:18).
29. கர்த்தர், காற்றை வீசும்படி செய்கிறார்.
30. தண்ணீர்களை ஓடும்படி செய்கிறார்.

147 அதிகாரம்

31. யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களை அறிவிக்கிறார் (சங் 147:19).

32. இஸ்ரவேலுக்குத் தம்முடைய பிரமாணங்களை அறிவிக்கிறார்.

33. இஸ்ரவேலுக்கு மட்டும்தான் கர்த்தர் இவைகளை அறிவிக்கிறார். வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்வதில்லை (சங் 147:20)

34. அவருடைய நியாயங்களை அறிவிக்கிறார்

கர்த்தர் ஆள்தத்துவப் பண்புடையவர் என்பதை 147-ஆவது சங்கீதம் தெளிவாகக் கூறுகிறது. எபி 1:1-3-இல் கர்த்தருடைய இந்த சுபாவத்தை நாம் வாசிக்கிறோம்.

"அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்" - வானத்தில் உள்ள நட்சத்திரங்களைக் கர்த்தர் எண்ணி வைத்திருக்கிறார். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அவர் பெயர் சூட்டியிருக்கிறார். வானவியல் அறிஞர்கள் வானத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளதாகக் கூறுகிறார்கள். நமது சொல்லகராதிகளில் அதிகபட்சம் 5 இலட்சம் சொற்களுக்கு பொருள் கூறப் பட்டிருக்கும். இவ்வளவு பெயர்களையும் பயன்படுத்தினாலும், வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பெயர் சொல்லி அழைப்பதற்குப் போதாது. ஆகையினால் தான் சங்கீதக்காரன் கர்த்தரைப் பற்றிக் கூறும்போது "நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது" என்று போற்றிப் புகழுகிறான்.

வேதாகமத்தில் ஒரு சில நட்சத்திரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவையாவன:

அறுமீன் **(Orion)** (யோபு 9:9; யோபு 38:31; ஆமோ 5:8), துருவச்சக்கர நட்சத்திரம் **(Arcturus)** (யோபு 9:9; யோபு 38:32), மிருகசீரிஷம் **(Pleiades)** (யோபு 9:9; யோபு 38:31), துருவ சக்கரத்தைச் சார்ந்த நட்சத்திரங்கள் **(Mazzaroth)** (யோபு 38:32).

2. பாடுதல் -தேவனுடைய எட்டு கிரியைகள்

சங் 147:7 கர்த்தரைத் துதியுடன் பாடிக்கொண்டாடுங்கள்; நம்முடைய தேவனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள்.

சங் 147:8 அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்.

சங் 147:9 அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்.

சங் 147:10 அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார்; வீரனுடைய கால்களில் பிரியப்படார்.

சங் 147:11 தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக்காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

"கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள்; நம்முடைய தேவனைச் சுரமண்ட லத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள்" - சங்கீதப்புஸ்தகத்தில் 6 இடங்களில் இதுபோன்ற கட்டளையை நாம் வாசிக்கிறோம். (சங் 33:2; சங் 57:8; சங் 98:5; சங் 147:7; சங் 149:3; சங் 150:3) இவை தவிர,

1. கர்த்தரைத் தம்புரோடு துதிக்க வேண்டும். **(timbrels)** (சங் 81:2; சங் 149:3; சங் 150:4),

2. எக்காளம் ஊதித் துதிக்க வேண்டும். **(trumpets)** (சங் 81:3; சங் 150:3),

3. வீணையோடு துதிக்க வேண்டும். **(psalteries)** (சங் 33:2; சங் 57:8; சங் 81:2; சங் 108:2; சங் 150:3),

147 அதிகாரம்

4. கர்த்தரை யாழோடு துதிக்க வேண்டும். **(stringed instruments)** (சங் 150:4),

5. தீங்குழலோடு துதிக்க வேண்டும் **(organs)** (சங் 150:4),

6. கர்த்தரைக் கைத்தாளங்களோடு துதிக்க வேண்டும் **(loud cymbals)** (சங் 150:5).

"அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்" - சங் 147:8-9 ஆகிய வசனங்கள் கர்த்தர் பூமியைப் பராமரிக்கும் காரியத்தை விளக்குகிறது. கர்த்தருடைய பிரமாணத்தின் பிரகாரமாக பூமி பராமரிக்கப்படுகிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்கு சில சமயங்களில் சாத்தான் எதிர்த்து நிற்பான். (யோபு 1:6-22; எபே 2:2)

"மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார்" - செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் "மனுஷனுக்கு ஆகாரமாக பசுமையான கீரைகளை முளைப்பிக்கிறார்" **(and green herb for the service of men)** என்று வாசிக்கிறோம்.

"குதிரைகள்" - குதிரைகள் தங்கள் அழகினாலும், வலிமையினாலும், ஓடும் வேகத்தினாலும் மனுஷனைப் பிரியப் படுத்துகிறது. (யோபு 39:19; நீதி 21:31; ஆமோ 2:15) கர்த்தர் குதிரைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். (சக 1:8-11; சக 6:1-6) (2இராஜா 2:11-12; 2இராஜா 6:17; வெளி 19:11-21) குதிரைகள் யுத்தம், பஞ்சம், மரணம், நரகம் ஆகியவற்றின் அடையாளம். (வெளி 6:1-8)

"வீரனுடைய கால்கள்" - மனுஷனுடைய கால்கள் தான் ஏற்கெனவே நடந்து வந்த பாதையை நம்பும். புதிய பாதைகளில் செல்ல யோசிக்கும். (1சாமு 11:3-9; 1சாமு 16:19; 1சாமு 19:11-21; 2சாமு 2:5; 2சாமு 5:11; தானி 3:4; ஏசா 52:7)

குதிரைகளையும், மனுஷனுடைய கால்களையும் சிருஷ்டித்தவர் கர்த்தரே. ஆனாலும் இவற்றின்மீது கர்த்தருக்குப் பிரியமில்லை. "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்".

147-ஆவது சங்கீதத்தில் சில பதிப்புக்களில் 11 வசனங்கள் மட்டுமே இருக்கும். 147:12-ஆவது வசனம் 148 ஆவது சங்கீதத்தின் துவக்க வசனமாகச் சேர்க்கப்பட்டிருக்கும்.

3. துதித்தல் - தேவனுடைய பதினாறு கிரியைகள்

சங் 147:12 எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி; சீயோனே, உன் தேவனைத் துதி.

சங் 147:13 அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.

சங் 147:14 அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவை களாக்கி, உசிதமான கோதுமை யினால் உன்னைத் திருப்தி யாக்குகிறார்.

சங் 147:15 அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது.

சங் 147:16 பஞ்சைப்போல் உறைந்த மழையைத் தருகிறார்; சாம்பலைப்போல உறைந்த பனியைத் தூவுகிறார்.

சங் 147:17 அவர் தமது கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார்; அவருடைய குளிருக்கு முன்பாக நிற்பவன் யார்?

சங் 147:18 அவர் தமது வார்த்தையை அனுப்பி, அவைகளை உருகப் பண்ணுகிறார்; தமது காற்றை வீசும்படி செய்ய, தண்ணீர்கள் ஓடும்.

147 அதிகாரம்

சங் 147:19 யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத்தமது பிரமாணங் களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார்.

சங் 147:20 அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை; அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள். அல்லேலூயா.

எருசலேமும், சீயோனும் இந்த சங்கீதம் எழுதப்பட்ட காலத்தில் சிறப்போடு இருந்தன. ஆகையினால், பாபிலோனிய சிறையிருப்பிற்கு முன்பாகவே இந்தச் சங்கீதம் எழுதப்பட்டிருக்க வேண்டும். தாவீது, சாலொமோன் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் சமாதானமாகவும், வளமாகவும் இருந்தது (சங் 147:13-20).

"அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்" - இஸ்ரவேலின் எல்லா எல்லைகளிலும், சமாதானம் உண்டாயிருக்கும். இஸ்ரவேலுக்குத் தாராளமான ஆசீர்வாதம் வரும்.

"அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது" - இஸ்ரவேல் தேசத்தில் சமாதானமும், ஆசீர்வாதமும் இருந்தது. கர்த்தருடைய வார்த்தை ஜனங்களிடத்தில் தடையில்லாமல் பரவிற்று (சங் 147:15-20; லேவி 26; உபா 28).

"அவருடைய குளிருக்கு முன்பாக நிற்பவன் யார்?" - யூதேயா தேசத்திலே குளிர்காலத்தில் குளிர் மிகவும் அதிகமாக இருக்கும் (மத் 24:20). பூமியின்மீது குளிர்காலமும் தேவை. கோடைகாலமும் தேவை. கர்த்தர் நமக்கு எல்லாக் காலங்களையும் தந்து ஆசீர்வதிக்கிறார் (ஆதி 8:22).

"யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார்" - இஸ்ரவேல் தேசத்தைப் போல வேறு எந்த தேசமும் தேவனுடைய வெளிப்பாட்டைப் பரிபூரணமாக பெற்றுக் கொள்ளவில்லை. (உபா 4:8; ரோமர் 3:2; ரோமர் 9:4-5) கர்த்தருடைய வசனம் இஸ்ரவேல் மூலமாக மனுக்குலத்திற்கு வருகிறது. (சங் 147:19-20; ரோமர் 9:4-5) புறஜாதியாரிடம் நியாயப்பிரமாணம் இல்லை. (ரோமர் 2:12-16) யூதர்கள் சிதறடிக்கப்பட்டபின்பு கர்த்தருடைய சுவிசேஷம் உலகம் முழுவதும் பரவிற்று. புறஜாதியாரும், தேவனுடைய வாக்குத் தத்தங்களிலும் உடன்படிக்கைகளிலும் பங்குபெறுகிறார்கள் (மத் 21:33-45; ரோமர் 11).

சங்கீதம் - தொகுப்புரை

148 அதிகாரம்

இருபத்திரெண்டாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. உன்னதங்களிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் ஒன்பது காரியங்கள் - காரணங்கள் - (148:1-6)

2. பூமியிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் இருபத்தி மூன்று காரியங்கள் - காரணங்கள் - (148:7-14)

1. உன்னதங்களிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் ஒன்பது காரியங்கள் - காரணங்கள்

சங் 148:1 அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்.

சங் 148:2 அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்.

சங் 148:3 சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்; பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள்.

சங் 148:4 வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள்; ஆகாய மண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்.

சங் 148:5 அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப் பட்டது.

சங் 148:6 அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்; மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்.

துதி (Praise) - הָלַל - haw-lal' - 1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்பு, பேச்சு, பெருமை, பாராட்டு, வீம்புக்காரர், தொழுதுகொள், மேன்மைப்பாராட்டு, துதி, அல்லேலூயா, வாழ்த்து, ஸ்தோத்திரி, புகழ், பாடு, மூர்க்க, வெறிகொள், உயர்த்து, ஒளிவீசு, கீர்த்தனம்பண்ணு, துதிசெய், மதி மயங்கு, ஒளிகொடு, புகழப்படு

கர்த்தர் (LORD) - יָהּ - yaw - 3050

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், யெகோவா

சங்கீதம் 148-இல் கூறப்பட்டிருக்கிற ஆலோசனைகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் (சங் 148:1)
2. வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்
3. உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்
4. அவருடைய தூதர்களே, அவரைத் துதியுங்கள் (சங் 148:2)
5. சேனைகளே, அவரைத் துதியுங்கள்
6. சூரியனே, அவரைத் துதியுங்கள் (சங் 148:3)
7. சந்திரரே, அவரைத் துதியுங்கள்
8. பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே அவரைத் துதியுங்கள்
9. வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள் (சங் 148:4)
10. ஆகாயமண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்
11. அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக் கடவது (சங் 148:5)

148 அதிகாரம்

வானாதி வானங்கள் கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் கட்டளையிட, சகலமானவைகளும் சிருஷ்டிக்கப் பட்டது (சங் 148:5)

2. அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார் (சங் 148:6)

3. மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்

"அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்; மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார்" - வானங்கள், ஆகாயங்கள், தேவதூதர்கள், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், எல்லாமே சதா காலங்களிலும் நிலைத்திருப்பவை (சங் 148:1-6). பூமியில் உள்ளவைகளையும் இது குறிக்கும் (148:7-14).

2. பூமியிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் இருபத்தி மூன்று காரியங்கள் - காரணங்கள்

சங் 148:7 பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; மகாமச்சங்களே, சகல ஆழங்களே,

சங் 148:8 அக்கினியே, கல்மழையே, உறைந்தமழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே,

சங் 148:9 மலைகளே, சகல மேடுகளே, கனிமரங்களே, சகல கேதுருகளே,

சங் 148:10 காட்டு மிருகங்களே, சகல நாட்டுமிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே,

சங் 148:11 பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ளசகல நியாயாதிபதிகளே,

சங் 148:12 வாலிபரே, கன்னிகைகளே, முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்.

சங் 148:13 அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது.

சங் 148:14 அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.

கர்த்தரைத் துதிக்க வேண்டியவைகள்

1. பூமியிலுள்ளவைகள் (சங் 148:7)
2. மகா மச்சங்கள்
3. சமுத்திரத்தின் சகல ஆழங்கள்
4. அக்கினி (சங் 148:8)
5. கல்மழை
6. உறைந்த மழை
7. மூடுபனி
8. பெருங்காற்று
9. மலைகள் (சங் 148:9)
10. சகலமேடுகள்
11. கனிமரங்கள்
12. சகல கேதுருக்கள்
13. காட்டு மிருகங்கள் (சங் 148:10)
14. சகல நாட்டு மிருகங்கள்
15. ஊரும் பிராணிகள்
16. இறகுள்ள பறவைகள்
17. பூமியின் இராஜாக்கள் (சங் 148:11)
18. சகல ஜனங்கள்

சங்கீதம் - தொகுப்புரை

148 அதிகாரம்

19. பூமியின் பிரபுக்கள்

20. பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகள்

21. பூமியிலுள்ள சகல வாலிபர்கள் (சங் 148:12)

22. பூமியிலுள்ள சகல கன்னிகைகள்

23. பூமியிலுள்ள சகல முதிர்வயதுள்ளவர்கள்

24. பிள்ளைகள்

25. அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக் கடவர்கள் (சங் 148:13)

பூமியிலுள்ளவைகள் கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது (சங் 148:13)

2. அவருடைய மகிமை பூமிக்கும் மேலானது

3. அவருடைய மகிமை வானத்திற்கும் மேலானது

4. தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார் (சங் 148:14)

5. தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் துதியானவர்

"தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார்" - ஜனத்தின் கொம்பு என்பது தேவனுடைய ஜனங்களின் இராஜா அல்லது நியாயாதிபதியைக் குறிக்கும் (தானி 7:8,11, 23-24; வெளி 17:12-17).

இஸ்ரவேல் புத்திரர் தேவனைச் சேர்ந்த ஜனம். (ரோமர் 9:4-5; ரோமர் 11:1)

அல்லேலூயா (Praise) - הָלַל - haw-lal' - 1984

விளைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்பு, பேச்சு, பெருமை, பாராட்டு, வீம்புக்காரர், தொழுதுகொள், மேன்மைப்பாராட்டு, துதி, அல்லேலூயா, வாழ்த்து, ஸ்தோத்திரி, புகழ், பாடு, மூர்க்க, வெறிகொள், உயர்த்து, ஒளிவீசு, கீர்த்தனம்பண்ணு, துதிசெய், மதி மயங்கு, ஒளிகொடு, புகழப்படு

கர்த்தர் (LORD) சங் 148:14 יָהּ - yaw - 3050

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், யெகோவா

149 அதிகாரம்

இருபத்தி மூன்றாவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. பூமியிலுள்ள பரிசுத்தவான்கள் கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று ஏழு அம்ச அறிவுரை - காரணங்கள் - (149:1-4)

2. பரிசுத்தவான்கள் மகிமையோடு கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் பத்து அம்ச அறிவுரை - காரணங்கள் - (149:5-9)

1. பூமியிலுள்ள பரிசுத்தவான்கள் கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று ஏழு அம்ச அறிவுரை - காரணங்கள்

சங் 149:1 அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக.

சங் 149:2 இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங் கடவர்கள்.

சங் 149:3 அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள்.

சங் 149:4 கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்; சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

சங்கீதம் 149-இல் கூறப்பட்டிருக்கும் ஆலோசனைகள்

1. கர்த்தரைத் துதியுங்கள் (சங் 149:1,9)

2. கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்

3. பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக

தீர்க்கதரிசன எண் - 106

"இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங் கடவர்கள்..........." (சங் 149:2-9) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

சங் 149:2-9 ஆகிய வசனங்கள் தேவனுடைய ஜனத்திற்காக ஏறெடுக்கப்படும் தீர்க்கதரிசன ஜெபமாகும். மேசியாவோடு ஆளுகை செய்வதைக் குறிக்கும் ஜெபம். பூமியிலுள்ள பரிசுத்தவான்களையும் (இஸ்ரவேல்) மேசியாவின் கீழ் அவர்களுடைய கடமைகளையும் குறித்து நான்கு விண்ணப்பங்கள் ஏறெடுக்கப் படுகின்றன. (சங் 149:2-4) அதன்பின்பு பரலோக பரிசுத்தவான்களைப் பற்றியும் (யூதர்கள், புறஜாதியார்) மேசியாவின்கீழ் அவர்களுடைய கடமைகளைக் குறித்தும் நான்கு விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படுகின்றன (சங் 149:5-9)

இஸ்ரவேலுக்காக ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழ்வார்களாக (சங் 149:2)

2. சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூருவார்களாக (சங் 149:2; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33)

3. அவருடைய நாமத்தை நடனத்தோடே துதிப்பார்களாக. (சங் 149:3)

4. தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுவார்களாக.

149 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனங்கள் மேசியாவை ஆராதிப்பார்கள் என்பதற்குக் காரணங்கள்

1. கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்.

2. சாந்தகுணமுள்ளவர்ளை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்.

2. பரிசுத்தவான்கள் மகிமையோடு கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்னும் பத்து அம்ச அறிவுரை - காரணங்கள்

சங் 149:5 பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல்கெம்பீரிப்பார்கள்.

சங் 149:6 ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களை தண்டிக்கவும்,

சங் 149:7 அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும்,

சங் 149:8 அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.

சங் 149:9 இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா.

உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்காக ஏதெடுக்கப்படும் விண்ணப்பங்கள்

1. பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூருவார்களாக

2. தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்களாக

3. அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும்துதியிருப்பதாக (சங் 149:6).

4. அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருப்பதாக

உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களின் கடமைகள்

1. தேவனுக்கு முன்பாக களிகூருவார்கள் (சங் 149:5; வெளி 5:8-10; வெளி 14:1-5; வெளி 15:2-4)

2. கர்த்தரைத் துதித்து ஆராதனை செய்வார்கள் (சங் 149:6; வெளி 5:8-14; வெளி 19:1-10)

3. தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பு செய்வார்கள். (சங் 149:7; தானி 2:44-45; தானி 7:18, 27; சக 14; யூதா 1:14-15; வெளி 1:5; வெளி 2:27; வெளி 5:10; வெளி 20:4-6)

4. மனுஷர்மீது தண்டனைகளை நிறைவேற்றுவார்கள் (சங் 149:7; ஏசா 1:26; 1கொரி 6:1-2; வெளி 5:10; வெளி 11:15; வெளி 20:4-6; வெளி 22:4-5)

5. பூமியின் இராஜாக்களைச் சங்கிலிகளினால் கட்டுவார்கள் (சங் 149:8; ஏசா 24:21; 1கொரி. 6:2; வெளி 2:27; வெளி 12:5; வெளி 20:4-6)

6. இராஜாக்களின் மேன்மக்களை இருப்பு விலங்குகளினால் கட்டுவார்கள் (சங் 149:8; வெளி 2:27; வெளி 12:5; வெளி 20:4-6)

7. மனுஷர்கள்மீது நியாயத்தீர்ப்பை செலுத்துவார்கள் (சங் 149:9; 1கொரி. 6:2; வெளி 2:27; வெளி 12:5; வெளி 20:4-6)

"இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" - கிறிஸ்துவோடு பரிசுத்தவான்கள் அனைவரும் ஆளுகை செய்வார்கள். பரிசுத்தவான்களில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருசிலர் மட்டுமே கிறிஸ்துவோடு ஆளுகை செய்வார்கள் என்பது தவறான உபதேசம். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் எல்லோரும் தேவனுடைய ஆசாரியர்களாக இருந்து, கிறிஸ்துவோடு ஆளுகை செய்வார்கள். (வெளி 20:4-6) சத்துருக்கள் முழுவதுமாக தோற்கடிக்கப் படுவார்கள் (1கொரி 15:24-28; எபே 1:10).

150 அதிகாரம்

இருபத்தி நான்காவது துதியின் சங்கீதம்

பொருளடக்கம்

1. கர்த்தரை எங்கே துதிக்க வேண்டும்? - (150:1)
2. கர்த்தரை ஏன் துதிக்க வேண்டும்? - (150:2)
3. கர்த்தரை எதனால் துதிக்கவேண்டும் - பத்து காரியங்கள் - (150:3-6)

1. கர்த்தரை எங்கே துதிக்க வேண்டும்?

சங் 150:1 அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள்.

கர்த்தரைத் துதிக்கும் இடங்கள்

1. பூமியில் அவருடைய வாசஸ்தலம் (சங் 150:1; தானி 43:7; சக 6:12-13)
2. ஆகாயவிரிவு (ஆதி 1:8) (சங் 50:1; வெளி 19:1-10)

2. கர்த்தரை ஏன் துதிக்க வேண்டும்?

சங் 150:2 அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்.

கர்த்தரைத் துதிப்பதற்குக் காரணங்கள்

1. அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக
2. மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக

3. கர்த்தரை எதனால் துதிக்கவேண்டும் - பத்து காரியங்கள்

சங் 150:3 எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்.

சங் 150:4 தம்புரோடும் நடனத்தோடும்அவரைத் துதியுங்கள்; யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்.

சங் 150:5 ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்; பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்.

சங் 150:6 சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத்துதிப்பதாக. அல்லேலூயா.

கர்த்தரைத் துதிக்கும்போது பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்

1. எக்காளம் (Trumpet) (சங் 150:3; சங் 47:5; சங் 81:3)
2. வீணை (Psaltery) (சங் 150:3; சங் 33:2; சங் 144:9)
3. சுரமண்டலம் (Harp) (சங் 150:3; சங் 33:2; சங் 57:8; சங் 98:5; சங் 147:7; சங் 149:3)
4. தம்புரா (Timbrel) (சங் 150:4; சங் 81:2; சங் 149:3)
5. நடனம் (Dance) (சங் 150:4; சங் 149:3; யாத் 15)
6. யாழ் (Stringed instruments) (யாத் 150:4)
7. தீங்குழல் (Organs) (சங் 150:4; ஆதி 4:21; யோபு 21:12; யோபு 30:31)
8. ஓசையுள்ள கைத்தாளங்கள் (Loud cymbals) (சங் 150:5)

150 அதிகாரம்

9. பேரொசையுள்ள கைத்தாளங்கள் (High sounding cymbals) (சங் 150:5)

10. சுவாசமுள்ள யாவும் (Every living thing) (சங் 150:6)

எக்காளம் (Trumpet) -שׁוֹפָר - sho-far', sho-far' - 7782

ஆ.பெ.சொ. - எக்காளம்

வீணை (Psaltery) - נֶבֶל - neh'-bel, ney'-bel - 5035

ஆண்பால் பெயர்ச்சொல் - துருத்தி, பாண்டம், கலம், ஜாடி, தம்புரு, வீணை

சுரமண்டலம் (Harp) כִּנּוֹר - kin-nore' - 3658

ஆ.பெ.சொ. - கின்னரம், சுரமண்டலம், வீணை

தம்புரா (Timbrel) - תֹּף - tofe - 8596

ஆ.பெ.சொ. - மேள தாளம், தம்புரா, கீதவாத்தியம், வீணை, மேளவாத்தியம்

நடனம் (Dance) - מָחוֹל - maw-khole' - 4234

ஆ.பெ.சொ. - ஆனந்தக்களிப்பு, நடனம், ஆடல், சந்தோஷம்

தீங்குழல் (zither) - מֵן - mane - 4482

ஆண்பால் பெயர்ச்சொல் - தீங்குழல்

தீங்குழல் (Organs) עוּגָב - oo-gawb' - 5748

ஆண்பால் பெயர்ச்சொல் - தீங்குழல், நாதசுரம், சுரமண்டலம், தம்புரா

கைத்தாளம் (Loud cymbals) - צֶלְצֶל - tsel-aw-tsal' - 6767

ஆண்பால் பெயர்ச்சொல் - கைத்தாளம்

ஸ்தோத்திரி (Praise) - הָלַל - haw-lal' - 1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு, வீம்பு, பேச்சு, பெருமை, பாராட்டு, வீம்புக்காரர், தொழுதுகொள், மேன்மைப்பாராட்டு, துதி, அல்லேலூயா, வாழ்த்து, ஸ்தோத்திரி, புகழ், பாடு, மூர்க்க, வெறிகொள், உயர்த்து, ஒளிவீசு, கீர்த்தனம்பண்ணு, துதிசெய், மதிமயங்கு, ஒளிகொடு, புகழப்படு

கர்த்தர் (LORD) - יָהּ - yaw - 3050

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், யெகோவா

"சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா" - சங்கீதப்புஸ்தகம் அல்லேலூயா என்னும் சொல்லோடு நிறைவுபெறுகிறது. அல்லேலூயா என்னும் சொல்லுக்கு கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று பொருள்.